Koviloor Digital Library

52-4

சுவாமி விவேகானந்தர்

25195
35515
41683

சுவாமிகளின் நூற்றுண்டு விழாப் பதிப்பு

எழுதியவர்
ரா. கணபதி

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 43256

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் :: சென்னை-4.

Koviloor Digital Library

சென்னையில் மயிலாப்பூர் ஸ்ரீ ராமகிருஷ்ண
மடத்துத் தலைவரால் வெளியிடப்பட்டது.

1847-ஆம் ஆண்டுச் சட்டப் பிரிவு XX-ன்படி
உரிமை பதிவு செய்யப்பட்டுள்ளது.

உரிமை பதிப்பாளர்க்கே

I—XXXXXIII—12-63

விலை ரூ. 11.00

அச்சிட்டோர்:
அம்ரா பிரஸ், 97, லாயிட்ஸ் ரோடு, சென்னை-6.

Koviloor Digital Library 524

तव कथामृतं तप्त जीवनं
कविभिरीडितं कल्मपापहम् ।
श्रवणमङ्गलं श्रीमदाततं
भुवि गृणन्ति ते भूरिदा जनाः ॥

—श्रीमद्भागवतम्

உனது அமுதமான சரிதம் வேகும் நெஞ்சங்களை வாழ வைக்கிறது; மாசுகளைக் களைகிறது; கேட்பதற்குப் பரம கலியாணமாக இருக்கிறது; சகல சிரேயஸையும் அளிக்கிறது. ஞானியர் போற்றும் உன் சரிதையைப் புவியெங்கும் வாழும் மாந்தர் ஏத்தித் துதிக்கிறார்கள்.

—ஸ்ரீமத் பாகவதம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

பதிப்பாளர் குறிப்பு

இந்தியா தந்த அருட்பெரும் செல்வருள் தலைசிறந்தவரும் தேசபக்தரும், தத்துவஞானியும் ஆகிய சுவாமி விவேகானந்தரின் வரலாற்றினை விரிவாகவும் அதிகாரபூர்வமாகவும் வெளியிட்டுத் தமிழ்மக்கள் முன் சமர்ப்பிக்கத் திருவருள் கூட்டுவித்துளது.

உலகெங்கும் பரவியுள்ள ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் வெளியீடுகளுக்கெல்லாம் தலைமைபீடமாக விளங்கும் ஸ்ரீராமகிருஷ்ண மடமானது சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை வரலாற்றினை விரிவான முறையில் வெளியிடவேண்டுமென்று எவ்வளவோ முயன்றது. எனினும் இதுவரை இயலவில்லை. இப்போதே இயல்வதாயிற்று. 'கல்கி' பத்திரிகையின் துணையாசிரியரும், புகழ்பெற்றவரும், நவீன தமிழ் எழுத்தாளருள் ஒருவருமாகிய ஸ்ரீ ரா. கணபதி அவர்கள் தம் உளமார்ந்த ஒத்துழைப்பே இதற்குக் காரணம்.

மாபெருந்துறவியாகிய ஸ்ரீ விவேகானந்த சுவாமியின் வரலாற்றை இவ்வளவு பெரிய புத்தக வடிவில் எழுதித்தருமாறு அவரை நாங்கள் கேட்டுக்கொண்டபோது அவர் உடனே அன்புடன் இசைந்தார். அவர் தம் உடல்நலன் குன்றியபோதிலும் உளம் நிறைந்த பக்தியும் ஈடுபாடும்கொண்டு இதனை எழுதி முடித்தார். தமிழ்ப் பெருமக்கள் எம்முடன் சேர்ந்து அவருக்கு என்றும் நன்றியுடனிருப்பார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அவருக்கு எமது நன்றியைத் தெரிவிக்க சொற்கள் போதா. அவருக்கு நீண்ட ஆயுளும், ஆரோக்கியமும், அமைதியும் நல்குமாறு எம்பெருமானை வேண்டுதல் ஒன்றே இயலும். அவர் இதனை அன்புப் பணியாகவே செய்துளார். சுவாமி விவேகானந்தர் மீதும் குருமகராஜ் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர்மீதும் அவர் கொண்டுள்ள பக்தியையே இது குறிக்கின்றது.

சென்ற ஓராண்டு காலமாக சுவாமி விவேகானந்தரைப் பற்றியும் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரைப் பற்றியும் 'கல்கி' பத்திரிகையிலே அவர் தொடர்ந்து எழுதிவந்துளார். அவை மக்களால் பெரிதும் விரும்பப்பட்டன. நடையும், பிறவும் எல்லாருடைய உள்ளத்தையும் கவர்ந்தன. அவர் பெயர் இப்போது எல்லாருடைய வீடுகளிலும் அறியப்பட்டதாகிவிட்டது. அவர் வாழ்நாள் முழுவதும் இத்தகைய உயர் பணி செய்வதற்கு உணர்ச்சி பெறுவாராக! ஸ்ரீ ரா. கணபதி அவர்களின் பொறுப்புக்களைக் குறைத்து இவ்வேலையை முடிக்குமாறு அன்புகூர்ந்து உதவிய 'கல்கி' பத்திரிகையின் மானேஜிங் டைரக்டர்

Koviloor Digital Library

ஸ்ரீ டி. எஸ். சதாசிவம் அவர்களுக்கு நாம் மிகவும் நன்றி தெரிவிக்கின்றோம்.

இவ்வளவு பெரிய புத்தகத்தை வெளியிடும் செலவுக்குப் பொருள் உதவியதற்காக இந்திய அரசாங்கத்துக்கும், சென்னை அரசாங்கத்துக்கும் நன்றி தெரிவிக்கின்றோம். இந்தப் புத்தகத் துக்குக் குறைந்த அளவு பன்னிரண்டு ரூபாயாவது விலை வைத் திருக்கவேண்டும். ஆனால் இந்த இரு அரசாங்கங்களும் செய்த உதவியால் விலை குறைவாக வைக்கப்பட்டுளது. இந்த மதிப் புயர்ந்த அரிய பொக்கிஷத்தை பலரும் பெறவேண்டும் என்பதே அதற்குக் காரணம். எளிய நடையில் எழுதப்பட்டுள்ள இவ் வுயரிய நூல் வாசகர்களுக்கு உணர்ச்சியூட்டும் என்பது உறுதி.

குறைந்த காலத்தில் மிகுந்த கவனத்துடன் இப்புத்தகத்தை அச்சிட்டுத் தந்தமைக்காக அம்ரா அச்சுக்கூடத்தினருக்கு எமது நன்றி.

சுவாமிகளின் நூற்றாண்டுவிழாக் காலத்துக்குள் இந்நூலை வெளியிட விரும்பியதால் வெகு வேகமாக வேலை செய்யவேண்டிய தாயிற்று. அதனால் சில தவறுகள் நேர்ந்துவிட்டன. அவற்றிற் காக வாசகர்கள் பொறுத்துக்கொள்வார்களாக. அடுத்த பதிப்பில் அவை திருத்தப்பெறும் என்று உறுதி கூறுகிறோம்.

சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழாவின்போது இப்புத்தகத்தை வெளியிட்டுத்தருவதற்கு அன்புகூர்ந்து இசைந் தமைக்காக மதிப்புக்குரிய ஸ்ரீ ராஜாஜி அவர்களுக்கு நாம் பெரி தும் கடமைப்பட்டுள்ளோம்.

பெரும் சிந்தனையாளரும், எழுத்தாளரும், சுவாமி விவேகா னந்தருடன் நேர் தொடர்புகொண்டவரும் ஆகிய ஸ்ரீ ராஜாஜி அவர்கள் இந்நூலை வெளியிட்டுப் பொதுமக்களுக்கு அறிமுகம் செய்வதற்கு முற்றும் தகுதி பெற்றவர் ஆவர்.

வாசகர்கள் இந்நூலை ஆர்வத்துடனும், பக்தியுடனும், கவனத்துடனும் ஊன்றிப் படிப்பாராயின் நமது பணி பயன் பெற்றதாகும்.

இந்நூல், ஊன்றிப் படிப்பவர் தம் உள்ளத்திலே நிலையாகப் பதிந்து பல்வேறு வகையிலே அவர்களை உயர்த்தும் என்று வாசகர் களுக்கு உறுதியளிக்கிறோம்.

பொங்கல் திருநாள்
1964

பதிப்பாளர்.

Koviloor Digital Library

பொருளடக்கம்

பக்கம்

1. பிறந்த மண் ... 1
2. அரும்பு ... 10
3. துள்ளித்திரிகிற பிள்ளை ... 27
4. ஆத்மாவின் அழைப்பு ... 39
5. கருணையின் சரிதம் ... 61
6. ஞானப்பட்டறையிலே ... 79
7. இருள் தீர்ந்தது ... 132
8. அற்புத அநுபவங்கள் ... 160
9. ஒளி மறைந்தது ... 191
10. மடாலயத்தின் வித்து ... 237
11. உத்தரதேசத்தின் உத்தமப்பதிகளில் ... 260
12. இமயமலைச் சாரலிலே ... 302
13. ஆண்டிப் பரதேசி ... 320
14. ஒரே ரயிலில் இரு சிம்மங்கள் ... 356
15. தென்னாட்டில் சுவாமிஜி ... 387
16. சில நிகழ்ச்சிகள் ... 412
17. சென்னையில் சுவாமிஜி ... 420
18. ஆழ்கடல் ... 448
19. புதிய உலகம் ... 455
20. சர்வமத மகாசபை ... 468
21. புயல்காற்று ... 496
22. ஆட்சியாளர் நாட்டில் மாட்சி ... 577
23. அமெரிக்கப் பணியை அலர்த்துகிறார் ... 588
24. ஐரோப்பாவில் ... 604

24-A. திக் விஜயம் ... 639

25. வங்க மாதா வரவேற்கிறாள் ... 672
26. பண்புப் பண்ணைக்குப் பிறந்தநாள் ... 698
27. வட இந்தியாவில் ... 703
28. இந்தியர் ஆக்குகிறார் ... 721

Koviloor Digital Library

	பக்கம்
29. சிவசக்தியுடன் சகவாழ்வு	... 749
30. அறத்துக்கோர் ஆலயம்!	... 778
31. நலியும் உடலில் பொலியும் உயிர்	... 787
32. மீண்டும் அமெரிக்கா	... 810
33. ஐரோப்பாவில்	... 833
34. விடுதலை	... 848

Koviloor Digital Library

Koviloor Digital Library



சிகாகோவில் நடைபெற்ற சர்வ சமயப் பேரவையில்
சொற்பொழிவாற்றல் — செப்டம்பர் 1893

Koviloor Digital Library

அத்தியாயம் 1

பிறந்த மண்

பரம்பொருளினின்று பிரபஞ்சத்தை வேறென்றாகப் பிரித்துக் காட்டுபவளும், இந்தப் பிரிவினையை நீக்கிப் பிரபஞ்சத்தைப் பரம்பொருளுடன் இரண்டறக் கூட்டுபவளுமான பரதேவதையின் அருள் விலாசம் சிறப்புறத் துலங்கும் மாநகரம் கல்கத்தா. 'காளிகாட்' என்பதாக, அன்னையை வைத்தே பெயர் கொண்ட நகரம் அது. விரிந்த வானமும், பரந்த கடலும் போலக் கால (கருப்பு) வண்ணம் கொண்டிருப்பதால் தேவி காளி எனப் படுகிறாள். 'காலமாம் வனத்தில் அண்டக் கோலமா மரத்தின் மீது' ரீங்காரமிட்டுலவும் காலரூபிணியானபடியாலும் அன்னையைக் காளி என்கிறோம். காலத்தைக் கடந்த பரமானந்த நிலையைத் தந்தருளுபவளும் அவளே.

காலத்தின் கோலத்தினால் புராதன பாரதப் பண்புகள் பழுதுற்று, சென்ற நூற்றாண்டில் மேனாட்டு வாழ்முறைகள் இந் நாட்டில் வேர் செலுத்தத் தொடங்கியபோது, அந்த வேரினைக் களைந்து, மீண்டும் வேதாந்தத்துக்கு வித்திட்ட வித்தகராம் விவேகானந்த சுவாமிகள் அவதரித்தது இந்தக் காளிமாதாவின் திருத் தலமாகிய கல்கத்தாவில்தான். வேதாந்தச் செல்வத்தின் தனிப்பெரும் வாரிசு என்ற பெருமையினை இவருக்குச் சூட்டிய ஞானபிதாவாகிய பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் அநு தினமும் அநன்யமாக ஆராதித்ததும் அந்தக் காளியையேதான்.

* * *

ஞானபிதாவைப் பற்றிப் பிறகு பார்க்கலாம். சுவாமி விவேகானந்தர் வீரேசுவரனாகப் பிறந்து, நரேந்திரநாத் என்ற பெயரில் வளர்ந்து, பிள்ளைப் பருவத்தைக் கடந்து, வாலிபப் பருவத்திலே யல்லவா இந்த ஞானபிதாவைக் கண்டது? முதலில் விவேகானந்தரின் ஊனுடலுக்கு யார் பிதா என்பதையும், அந்தப் பிதாவின் முன்னோர்கள் பற்றியும் தெரிந்துகொள்வோம். அப் படித் தெரிந்துகொள்வதால், அவர்கள் விவேகானந்தரின் உடலுக்கு மட்டும் பிதிரர் அல்லர்; அவரது உள்ளத்துக்குமே முந்தையர் என்பதும் புரியும்.

* * *

கல்கத்தாவின் வட பகுதியிலுள்ள சிமுலியாவை சிம்லா என்றேதான் பொதுவில் வழங்குவார்கள். சிம்லாவில் காயஸ்த

Koviloor Digital Library

க்ஷத்திரிய குலத்தைச் சேர்ந்த தத்தர் குடும்பம் மிகவும் பிரசித்தி பெற்றது. செல்வம், கல்வி, ஈகை, சுதந்திரமான சிந்தனை எல்லா வற்றுக்குமே தத்தர் குடி நற்பெயர் எடுத்திருந்தது.

இந்தப் பெருங்குடியில் பிறந்த பெருமகனுகிய ராம மோகன தத்தர் ஆங்கில வழக்கறிஞர் ஒருவரின் கூட்டாளியாகப் பணி யாற்றி வந்தார். ஏராளமான செல்வத்தை மட்டுமின்றி, அந்தச் செல்வத்தைக் கொண்டு போஷணை செய்வதற்காக ஏராளமான சுற்றத்தினரையும் தம் குடும்பத்தில் வைத்துப் பரிபாலித்து அமோக மாக வாழ்ந்தவர் ராம மோகனர். கௌர் மோகன் முகர்ஜி தெருவில் இவர் வாழ்ந்து வந்த மாளிகையில்தான் இவரது கொள் பேரராகிய சுவாமி விவேகானந்தர் அவதரித்தார். இடிந்த நிலை யில் இன்றும் அந்த இல்லத்தைக் காணலாம்.

ராம மோகன தத்தருக்கு இரண்டு புத்திரர்கள். ஒருவர் காளி பிரசாத்; மற்றவர் துர்கா சரணர். துர்கா சரண தத்தரின் பேரர்தான் சுவாமி விவேகானந்தர். பாட்டனின் பேரைப் பெறுவதால்தான் 'பேரன்' என்ற பதமே ஏற்பட்ட தாகச் சொல்வார்கள். விவேகானந்தருக்குப் பாட்டனின் பேர் சூட்டப்படவில்லை என்றுலும் அவரது உருவத் தோற்றம், குண நலன்கள் இவற்றைப் பாட்டனுராகிய துர்கா சரணரிடமிருந்தே அவர் பெற்றதாகச் சொல்வதுண்டு. 'இந்து மதம் துறவைப் போதிக்கிறது; எனவே இதுதான் உலக மதம்' என்று முழங்கியவ ரல்லவா விவேகானந்தர்? துறவுக்கு அவர் அளித்த இந்தப் பெருமையும் துர்கா சரணரிடமிருந்து அவர் ரத்தத்தில் தோய்ந்த ஒரு மனேபாவம் என்றே கொள்ளலாம்.

ஆம், துர்கா சரணர் துறவறத்திலேயே மனதைச் செலுத்தி யவர். சம்ஸ்கிருதம், பாரசிகம் இரு மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற அவர், இந்தப் பரம்பரையில் சுவாமிஜி பிறக்கவேண்டு மென்ற ஒரே காரணத்திற்காகத்தான் சில ஆண்டுகளேனும் இல் லற வாழ்வு நடத்தினுர் போலும்! ஓர் ஆண் மகவுக்குத் தந்தை யான பின் தமது இருபத்து ஐந்தாவது பிராயத்திலேயே வீட்டை விட்டு வெளியேறினுர் அவர். பன்னிரண்டாண்டுகளில் தேகத் தின் ஒவ்வோர் அணுவும் மாறுகிறது என்ற கொள்கைப்படி அவர் ஈராறு ஆண்டுகள் பிரம்மசரியத்தைப் பூரணமாகக் காத்துச் சந்நியாசி ஆனவர்.

துர்கா சரணரின் புத்திரனுன விசுவநாதன் வளர்ந்து வந் தான். இல்லற வாழ்வு என்ற மாளிகையின் தலைவாயிலிலேயே தலைவரால் தனித்துவிடப்பட்டாலும் துர்கா சரணரின் மனைவி மனம் கலங்காது மகவை வளர்த்து வந்தாள். விசுவநாதனுக்கு

Koviloor Digital Library

மூன்றாவது வயது நடந்தபோது அவள் காசி விசுவநாதனைத் தரிசிப்பதற்காகக் குழந்தையுடன் வாரணாசி யாத்திரை புறப் பட்டாள். அந்த நாளில் ரயில் ஏது? சுமார் நூற்றைம்பது வருஷத்துக்கு முந்தைய கதையல்லவா இதெல்லாம்? படகில் தான் யாத்திரை நடைபெற்றது. கல்கத்தாவிலிருந்து காசி வரை யிலும் நதி மார்க்கமாகவே நூற்றுக்கணக்கான மைல்களைக் கடந்து சென்றார்கள். குழந்தை விசுவநாதனுடைய கண்களின் முன்னே புதுப்புது நகரங்களும், கிராமங்களும், தோன்றின; மறைந்தன. மக்களும் தோன்றினர்; மறைந்தனர். இவற்றையெல்லாம் கண்டு கும்மாளமிட்ட பாலன் ஒரு நாள் காலை படகிலிருந்து கால் தவறி கங்கைப் பெருக்கில் விழுந்து விட்டான்.

கங்கைப் பிரவாகத்தில் குழந்தை சிக்குண்டான். அதனினும் வலிமை வாய்ந்த அன்புப் பிரவாகத்தில் சிக்குண்ட அன்னை குழந்தையைக் காப்பதற்காகத் தானும் வெள்ளத்தில் பாய்ந் தாள். அவளுக்கு நீந்தத் தெரியாது. உடல் முழுதும் கனத்த ஆடைகள். ஆனால் அன்பு — அதிலும் தாயன்பு — இதையெல் லாம் யோசித்துக் கொண்டிருக்குமா? ஆற்று வெள்ளத்தில் எப் படியோ தேடித் துழாவி தன் அருமைச் செல்வத்தைப் பற்றி எடுத்து அணைத்துக்கொண்டுவிட்டாள் தாய். ஆகா! அது தான் எத்தகைய இறுக்கமான தழுவல்! நீண்ட நாட்களுக்குப் பின்னும் விசுவநாதனிடமிருந்து மறையாத ஒரு தழும்பை நினைவுச்சின்னமாகப் பொறித்தது அந்தத் தழுவல்.

தாயும், தாய் தழுவிய தனயனுமாக அலைகளில் களைத்த போது காக்கும் கையொன்று இருவரையும் சேர்த்துப் பிடித் தது; படகிலே வாரிப் போட்டது. விவேகானந்தரை உலகுக்கு அளிக்கவேண்டிய விசுவநாத தத்தர் அல்பாயுளில் மடிய ஆண்டவன் அநுமதிப்பானா?

புனித காசியும் வந்தது. ஆனந்தமயமாக அங்குள்ள ஆலயங்கள் தோறும் சென்று தொழுதாள் விசுவநாதனின் தாய். காசி நாயகனின் பெயரையே தன் பிள்ளைக்கு இட்டிருந்தவள் அல்லவா அவள்? ஆண்டவனின் சந்நிதியில் அபாக்கியங்களெல் லாம் மறையும் என்பதற்குச் சான்றாக அந்த அபாக்கியவதி வாரணா சியில் தன் குறைகளின் நினைவே இன்றிப் பேரின்பமாக இருந்தாள்.

ஒரு நாள் கங்காநதியில் நீராடிவிட்டு விசுவநாதன் கோவி லுக்குச் சென்றுகொண்டிருந்த அவள் சாலையில் தடுக்கி விழுந்து மயக்கமடைந்து விட்டாள். மயக்கம் தெளிந்தபோது அவள் கண்முன், அவளது முகத்தையே கவலையுடன் நோக்கிக் கொண் டிருந்த ஓர் அன்பு முகத்தைக் கண்டாள்.

Koviloor Digital Library

ஆஹா! அவளுடைய பதி துர்கா சரணர் அல்லவா அது! கணநேரம் கங்கைப் பெருக்கில் அவள் மைந்தனை இழக்கச் செய்து, மீண்டும் சேர்த்துவைத்த விசுவேசுரன், முன்பு அவள் இழந்த கணவனையும் இன்று அவளிடம் மீண்டும் சேர்த்து விட்டானே? அவள் இப்போது கிடப்பதும் கூட ஆலயத்தின் படிகளில்தான். தெருவில் மயங்கிக் கிடந்த அவளை அவளுடைய கணவர்தான் தூக்கிவந்து இங்கே கிடத்தி மயக்கம் தெளிவித்திருக்கிறார். அவரையே ஆர்வமுற நோக்கினாள் அவள்.

'விசுவநாதா, விசுவநாதா' என்று அவளுடைய மனம் கூவிற்று. இது விசுவநாதனின் செயலில்லை என்பது போல 'மாயை, மாயை' என்று இரு முறை முணுமுணுத்தார் துர்கா சரணர். அவளுடைய கண்களில் கொழித்த ஆர்வம் அடங்கிற்று; அமைதி நிறைந்தது. 'அவர் மட்டும் தானா தன்னைத் துறந்து சந்நியாசியாக வாழ்ந்தார்? நானும் அவரைப் பிரிந்து சந்நியாசினியாக வாழ்ந்தேன் அன்றோ? இருவருடைய சந்நியாசமும் இன்று ஏன் குலைய வேண்டும்?' என்று அவளுடைய எண்ணங்கள் ஓடின. அவளிடம் விரக்தி பூரணமாக நிறைந்தது. அவள் தன்பாட்டில் எழுந்திருந்து திருக்கோயிலைப் பிரதட்சிணம் செய்யத் தொடங்கினாள். துர்கா சரணரும் திரும்பிக்கூடப் பாராமல் தன் பரதேசி யாத்திரையை மீண்டும் ஆரம்பித்து விட்டார்.

*　　　*　　　*

எங்கே போகவேண்டும், எங்கே போகிறோம் என்ற யோசனையேயின்றி, கால் போன வழியில் சென்றுகொண்டிருந்த துர்கா சரணர் பல ஆண்டுகளுக்குப் பின் தற்செயலாகக் கல்கத்தாவை அடைந்தார். அங்குள்ள தமது பூர்விகமான பெரு மாளிகையை அவர் நினைந்தாரில்லை. தன் பழைய நண்பரொருவரையே சென்றடைந்தார் அவர். அந்த நண்பர் சும்மாவிருக்கவில்லை. தம்முடைய சந்தோஷ மிகுதியில் துர்கா சரணருடைய இல்லத்தினருக்கு அவருடைய வருகையை அறிவித்துவிட்டார். உடனே அவருடைய உறவினர்கள் வந்து துர்கா சரணரை பலவந்தப்படுத்தித் தங்கள் வீட்டுக்குத் திருப்பி அழைத்து வந்தனர். அவரை ஓர் அறைக்குள் இருக்குமாறு நிர்ப்பந்தம் செய்து, அறையைப் பூட்டியும் விட்டனர். துர்கா சரணரோ இம்மியும் அசைந்து கொடுக்கவில்லை. நன்றாகக் கனிந்த விளாம்பழத்தை ஓட்டுடன் ஒட்டிக்கொள்ளச் செய்யமுடியுமா? ஓட்டுடன் ஒட்டாத விளாங்கனியாகவே இருந்தார் துர்கா சரணர். மூன்று

Koviloor Digital Library

நாட்கள் ஆயின. துர்கா சரணரோ ஒரு பருக்கையைக் கூடக் கையால் தொடவில்லை. உறவினர் பயந்தனர். 'இப்போது இந்தக் குடும்பத்துடன் தொடர்பில்லாவிடினும் அவர் உயிருடன் இருக்கிறார் என்றாவது ஆறுதல் கொள்ளலாம்; அவரை இல்லறத் துக்குத் திருப்ப முயன்றால் அவருடைய உயிருக்கே அல்லவா ஆபத்து நேரிடும் போலிருக்கிறது?' என்று எண்ணினர். அறை யின் பூட்டைத் திறந்து விட்டனர்.

அவ்வளவுதான், கூண்டைத் திறந்தவுடன் பட்சி பறப்பது போல் துர்கா சரணர் வீட்டிலிருந்து புறப்பட்டு விட்டார்.

அதன் பின் அவரைப் பற்றி யாரும், எதுவும் கேள்விப் படவில்லை.

* * *

பெருமை வாய்ந்த தத்தர் குடிக்குப் பெருமையூட்டுபவனாக வளர்ந்தான் விசுவநாதன். 'அப்பா போன போக்குக்குப் பிள்ளை யாவது போகமும் போக்கியமுமாக வாழ வேண்டுமே' என்று சுற்றத்தினர் வேண்டி விரும்பியவாறே ஒரு குறைவுமின்றிக் கல்வி கேள்விகளை முடித்து கல்கத்தா உயர் நீதி மன்றத்தில் வழக் கறிஞரானார் விசுவநாத தத்தர். நீதிமன்றம் நிதிமன்றமுமாக இருந்து அவரிடம் செல்வத்தைக் குவித்தது. கட்சிக்காரர்கள் பல பகுதிகளிலிருந்தும் அவரை வந்தடைந்ததில் ஆச்சரியமில்லை. ஏனெனில் அவர் அறிவாளியாக மட்டுமின்றி மக்களின் மனப் பாங்குகளையும் உள்ளபடி அறிந்து அதற்கேற்ப நடக்கும் ஆற்றல் பெற்றிருந்தார். ஆங்கிலம், பாரசிகம் ஆகிய இரு மொழிகளி லும் நல்ல தேர்ச்சி பெற்றிருந்த விசுவநாத தத்தர் மக்களுடைய மனத்தின் மொழியையும் கற்கப் பயின்றிருந்தார்.

மக்களின் மனநிலைகளை அறியப் பழகியிருந்த விசுவநாத தத்தர் எந்த இழிவான மனநிலையும் தோன்றுவதுகூட சந்தர்ப்பச் சூழ்நிலை காரணமாகத்தான் என்று உணர்ந்து கடையரிடமும் அநுதாபம் காட்டி வந்தார். 'அற்றார் அழிபசி தீர்த்தல்' ஒன்றே தம் கடனாகக் கொண்டொழுகிய விசுவநாத தத்தர் தமது ஈகையைச் சோம்பேறிகளுக்கும் குடிகாரருக்கும் கூடத் தயங்காது காட்டி வந்தார். இதைக் குறித்துப் பின்னர் ஒருபோது அவ ருடைய தவப்புதல்வர் நரேந்திரர் அவரைக் கண்டித்ததும் உண்டு. அதற்கு விசுவநாதர், ''மனித வாழ்க்கையின் ஆழ்ந்த இன்னல்கள் உனக்கு எவ்வாறு புரியும்? அது புரியும் போதுதான் உனக்கு இந்த மக்களிடம் அநுதாபம் ஏற்படும். போதையில் தங்கள் உபாதைகளைத் தற்கால சாந்தியாக இழந்து இன்புறும் பேதையர் அல்லவா அவர்கள்?'' என்றார்.

Koviloor Digital Library

இந்த நரேந்திரர் பிற்காலத்தில் விவேகானந்தரானபோது சகல ஜீவராசிகளுடனும் தம் இதயத்தை இசைய விட்டது உல கறிந்த விஷயமாகும். இந்த உள்ளப்பாங்கு தந்தையிடமிருந்து தனயன் பெற்ற பிதுரார்ஜிதம்தானே?

நரேந்திரருக்கு விசுவநாத தத்தர் பொருட் செல்வம் எதையும் பெரிதாக வைத்துச் செல்லவில்லைதான். அவரின் ஈகை காரண மாக, சம்பாதித்தது அவ்வளவையும் கணக்குப் பாராது செல விட்டவர் விசுவநாத தத்தர். ஆனால் சூட்சுமமான உணர்வுச் சொத்தைத் தனயனுக்கு அளித்துச் சென்றவர் அவர். இந்த சூட்சுமச் சொத்தில் ஒன்று அவர் பகுத்தறிவுக்கு அளித்த முக் கியத்துவமாகும். இந்தப் பகுத்தறிவுக் கண்ணோட்டத்தின் காரணமாகவே விசுவநாத தத்தர் சநாதன பாரத தர்மத்தின் ஆசார அநுஷ்டானங்களை அவ்வளவாகப் பின்பற்றவில்லை. எனி னும் கிறிஸ்துவ வேதமாகிய விவிலிய நூலையும், பாரசீகத்துக் கவி ஹஃபீஸ் என்பவரது பாடல்களையும் அவர் பெரிதும் ரசித்துப் பிறருக்கும் படித்துக் காட்டுவார்.

'யாரோ சொன்னார்கள், ஏதோ நூலில் எழுதி வைத்திருக் கிறது என்றெல்லாம் காரணம் காட்டி எந்தக் கோட்பாட்டை யும் ஏற்காதே. உன் அறிவினால் ஆராய்ந்து பார்த்தே எந்தக் கொள்கையையும் ஏற்றுக்கொள்' என்று விவேகானந்தர் கூறியது, அவரது தந்தையைப் பற்றிக் கூறுகையில் நினைவு வருகிறது.

'இக உலக வாழ்க்கையை ரம்யமாக நடத்த வேண்டும்; தீய நெறியில் செல்லாமல் உலகில் இன்பமாக வாழ வேண்டும்' என்பதுதான் விசுவநாதரின் கொள்கை என நாம் ஊகிக்கலாம். பாரமார்த்திக வாழ்க்கையில் அவர் நாட்டம் காட்டியதாகத் தெரியவில்லை. வாழ்க்கையின் ரம்யமான அம்சங்களில் ஒன்றாகச் சங்கீதத்தை மதித்தவர் விசுவநாதர். நல்ல ரசிகராகிய விசுவ நாத தத்தர் தாமே இனிய சாரீரத்தில் பாடும் திறன் படைத் திருந்தார். ஒருவருக்கும் எந்தவிதமான தீங்கும் செய்யாமல் இன்பம் துய்ப்பது இசை வழியாகவே என்று கருதியவர் அவர். அவர்தான் நரேந்திரருக்கு இசைப் பயிற்சி அளிப்பதற்குக் காரண புருஷர். ஆஹா, நரேந்திரரின் அமுதகானத்தை மாந்தியவர்கள் அதன் இனிப்பையும், உள்ளுருக்கும் உணர்ச்சியையும் பற்றி எவ் வளவு கூறியிருக்கிறார்கள்? முனிபுங்கவரான ஸ்ரீராமகிருஷ்ண தேவரின் இதயத்தை விம்ம வைத்து, அவரது நயன கமலங்களி லிருந்து அன்பு நீரைப் பெருக்க வைத்த அற்புத கானமல்லவா நரேந்திரருடையது? பிறகு அந்த நரேந்திரரே அல்லவா ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸரின் ஞானமயமான மோன அநுபவத்தை

Koviloor Digital Library

மேதினியெல்லாம் புல்லரிக்கப் பாடிய சங்கீதமாக்கி விட்டார்? செவியின் இன்பத்திற்காகத் தந்தை விரும்பிய இசையே, புவியைப் பரம்பொருளுடன் இசைக்கும் மார்க்கமாக மைந்தனிடம் பரிண மித்தது.

ஜாதி மதங்களைக் கடந்த அதிவர்ணுச்ரமியாகிய சுவாமிஜி எல்லாச் சமூகத்தினருடனும் இணைந்து பழகியதை உலகு அறியும். எனினும் முஸ்லீம்களுடன் அவருடைய இணக்கம் வெகு நெருக்க மாக இருந்ததை அவருடைய பரிவ்ராஜக வாழ்க்கையில் தெற் றெனக் காணலாம். இதற்கும் அவருடைய தந்தையின் வாழ்க்கை யில் ஒரு முன்னேடியைக் காண்கிறேம். விசுவநாத தத்தருக்கு இஸ்லாமிய நாகரிகத்தில் ஒரு விசேஷமான பிடிப்பு இருந்தது.

விசுவநாதர் சமையல் கலையில் தேர்ந்திருந்தார். பல அபூர்வமான உணவு வகைகளைத் தயாரித்து அவற்றை நண்பர்கள் புடைசூழ உண்டு மகிழ்வதில் அவருக்கு அலாதிப் பிரியம். நவ பாரதத்தைச் சமைத்த சுவாமிஜியும் உணவு தயாரிப்பதில் ஆற்றல் பெற்றிருந்தார். அறுசுவையுடன் ஏழாம் சுவையாக சிவரஸத் தையும் கலந்து உணவு தயாரித்துத் தாமே அதனைப் பலருக்கும் பரிமாறி ஆனந்திப்பார் சுவாமி விவேகானந்தர்.

* * *

தந்தையிடமிருந்து பெற்றதைவிடத் தாயிடமிருந்து விவேகா னந்தர் பெற்றதே முக்கியமானதாகும்.

ஹிந்து மதத்தின் தனிப் பெரும் காவலர் சுவாமி விவேகா னந்தர். பாரத மக்களின் அத்தியாவசியமான தேவை மத உணர்வுதான் என்று கருதியவர் அவர். சமூகப் புரட்சியாலோ அரசியல் புரட்சியாலோ பாரதத்தை மேம்படுத்த இயலாது. மக்களிடம் உத்தமமான மத உணர்வைத் தூண்டிவிடுவதால்தான் புதிய இந்தியாவை சிருஷ்டிக்கமுடியும் என்று நாளும் பகர்ந்தவர் சுவாமிஜி. பகுத்தறிவின் பெருமையை உணர்ந்திருந்த போதி லும் அதற்கு உரிய இடம் எது என்பதையும் நிர்ணயித்தவர் சுவாமிஜி. உள்ளுணர்ச்சியின் உண்மைப்பாட்டினை அறிந்தவர் அவர். பகுத்தறிவுக்கும் உயர்வானது அந்த உள்ளுணர்ச்சி என் பதை நன்கு அறிந்திருந்தவர். ஆழ்கடலின் அடிவாரம் போன்ற உள்ளுணர்ச்சியை, அலை நுரைபோல மேலெழுந்தவாரியாகக் கிளர்ந்துகாணும் புல்லிய உணர்ச்சியிலிருந்து பகுத்துக் காண முடியாமல் பகுத்தறிவுக்கு 'விடுமுறை' அளிப்பவர்களுக்காகத் தான் அவர் அறிவின் மேன்மையை எடுத்தியம்பினுர். அறிவு உணர்வு இரண்டும் ஒன்ருகும் ஞானுநுபவத்தையே நுகர்ந்தவ ரல்லவா சுவாமிஜி!

Koviloor Digital Library

இந்த ஞானனுபவத்திற்கு இன்றியமையாத பக்தியையும், அந்த பக்தியை முறைசெய்து வைக்கும் சமய நம்பிக்கையையும் தன்னுடைய அன்னை புவனேசுவரியிடமிருந்தே சுவாமிஜி பெற்றிருந்தார் எனக் கூறலாம்.

புவனேசுவரி தேவி பண்டைய மரபுகளைப் பிறழாது பின் பற்றி வந்த மாதரசியாவாள். இராமாயணத்தையும் பாரதத்தையும் பாடல் உருவில் பூரணமாகக் கற்றறிந்தவள் புவனேசுவரி. ஆண்டவனிடம் அளவற்ற பக்தி பூண்டவள். பாமர மக்கள் கூறும் பக்தி அன்று அவளுடையது. நாம் எதையோ நல்லது என்றெண்ணி அதை அருளுமாறு ஆண்டவனிடம் யாசிப்பது போல் யாசிக்கும் 'பக்தி' அவளுடையது அன்று. எது நடந்தாலும் அது நம்முடைய நலனுக்காக ஆண்டவன் நடத்துவிப்பதே என்று உணர்ந்து எப்போதும் சரணுகத உள்ளத்துடன் அமைதியாக வாழ்ந்து வந்தாள் புவனேசுவரி தேவி. புவனேசுவரியின் அமைதி மாமலையின் கம்பீரமான அமைதியைப் போன்றது. ராஜ வம்சத்தின் பெருந்தன்மை குறைவறப் பொருந்தியவள் அவள். உள்ளத்திலும், தோற்றத்திலும் தேஜஸுடன் பொலிந்த புவனேசுவரியை மக்கள் மாதாவாகக் கருதி மரியாதை செலுத்தி வந்தனர். அவள் நல்ல புத்தி சாதுரியம் பெற்றிருந்தபடியால் பலரும் அவளுடைய யோசனைகளைக் கேட்பதுண்டு. ஏழை எளியவர்களுக்குப் புகலிடமாக விளங்கினுள் அவள். மனிதாபிமானம் மிக்கவள் புவனேசுவரி தேவி. தனது காம்பீர்யத்திலேயே எளிமையின் நளினம் இழைந்தோட, உற்ருரும், சுற்றத்தினரும் நிறைந்த பெரிய குடும்பத்தின் பொறுப்புக்களைத் திறம்பட வகித்தாள் அவள். முகம் கோணுமலே வீட்டுக் காரியங்களைச் செய்வாள். தையற்கலையை நன்கு அறிந்தவள் அவள். இராமாயண, பாரதப் பாடல்களைப் பாடியவாறே அவள் காரியங்களில் ஈடுபட்டிருப்பாள். சரித்திர காலத்துக்கு முன்னுலிருந்து இந்திய மக்களின் ரத்தத்தில் தலைமுறை தலைமுறையாகப் பாய்ந்து நமது நாகரிகத்தை உருவாக்கிய இந்த மாபெரும் இதிஹாஸங்களைத் தனது குழந்தைகளுக்கும் போதித்தாள் புவனேசுவரி. ''என் அன்னைக்கு நான் பெரிதும் கடன்பட்டிருக்கிறேன்'' என்று பிற்காலத்தில் சுவாமிஜி பெருமையுடன் மொழிந்ததுண்டு. 'தாயைப் போலப் பிள்ளை; நூலைப் போலச் சேலை' என்ற பழமொழியும் இருக்கிறதே!

* * *

சுவாமி விவேகானந்தரின் முன்னோர்களைப் பற்றித் தெரிந்து கொண்டோம். அவர்களின் இயல்புகள் பல சுவாமிஜியிடம்

Koviloor Digital Library

உறைந்ததாகவும் கூறினோம். சாதாரணமான ஜீவர்கள் கர்ம வினைக்கேற்பப் பிறப்பதுபோல சுவாமிஜியும் பிறந்து தமது மூதாதையரின் குணங்களைப் பெற்ருர் என்று நாம் சொல்வதாக இதனால் எண்ணிவிடலாகாது. தத்தர் குலத்தோன்றலாகிய நரேந்திரரைத் தமது ஞானப் புதல்வராகத் தத்து எடுத்துக் கொண்டு உலகுக்கெல்லாம் தத்தம் செய்த பரமஹம்ஸர், அவரை சாமானிய ஜீவனுகக் காணவில்லை. குருவைப் போலவே சீடர் பலரும் சுவாமிஜியை அவதார புருஷராகவோ, ஆண்டவ னின் தூதராகவோதான் கண்டிருக்கிருர்களேயன்றி கர்ம நியதிக்கு உட்பட்டுப் பிறந்த ஜீவனுகக் காணவில்லை. என்ருலும் சுவாமிஜி தம்மை அவதார புருஷராகவோ ஆண்டவனின் தூதராகவோ கூறிக்கொள்ளவில்லை. குருமஹராஜ் ஸ்ரீராமகிருஷ்ணரின் அவதார விசேஷங்களையும் சுவாமிஜி வற்புறுத்திக் கூறியதில்லை. எல்லா ஜீவராசிகளுமே உண்மையில் குணமற்ற துரிய பரம் பொருள்தான் என்ற பெரும் தத்துவத்தை உன்னி உணர்ந்து உரைத்த விவேகா னந்தர், சகுணமான ஈசுவரனின் அவதாரத்தை விசேஷமாக எண்ணுதிருக்கலாம். என்ருலும் உருவும், பெயருமற்ற பரம் பொருளே இந்தப் பிரபஞ்சத்தை உய்விப்பதற்காக உருவும், பெயரும் பூண்ட திவ்விய மூர்த்திகளாகி, தானே அவதரித்தும், தன்னுடைய அம்ச பூதமான தூதர்களைப் பிறப்பித்தும் தர்மத்தை அவ்வப்போது தழைக்கச் செய்கிறது என்ற கீதா வாக்கியம் நம்பினோருக்குத் தாரகமாக விளங்குகிறது. எனவே விவேகா னந்தரை அவதார புருஷராகவோ, ஈசனின் பிரத்தியேகத் தூதுவ ராகவோ வழிபடுவதில் நமது தளர்ந்த நெஞ்சுக்கு ஓர் ஊன்று கோல் கிடைக்கிறது. லோக உத்தாரணத்திற்கு என்றே பிறந் தாலும் பொதுமக்களைப் போலவே வாழ்ந்து காட்டி, யாரும் அமர வாழ்வை எய்தலாம் என்று நம்பிக்கையூட்டுவதுதான் மகாத்மாக்களின் கருணையாகும். அவ்வாறே விவேகானந்தரும் தாம் பிறந்த குடியின் குணநலன்களைப் பூண்டு சாமானிய மானுடர் போலவே வாழ்ந்ததாக அவருடைய பக்தர்கள் கருதலாம்.

Koviloor Digital Library

அத்தியாயம்—2

அரும்பு

'நடப்பன எல்லாம் நமது நன்மைக்கே' என்ற சரணாகத புத்தியுடன் சாந்தமாக வாழ்ந்தவள்தான் புவனேசுவரி தேவி. எனினும் நாளாவட்டத்தில் அவளுக்குமே ஓர் ஆசை முளைவிட்டு, அந்த முளைக்கு வார்க்க நீர் கிட்டாமல் வாட்டம் ஏற்பட்டது. இரண்டு பெண்களுக்குத் தாயான போதிலும் ஓர் ஆண் மகவு வாய்க்கப்பெறாத வாட்டமே அது. பிள்ளைப் பாசம் முளைத்தது; ஆனால் பிள்ளை மட்டும் பிறக்கவில்லை. பிள்ளை வரம் வேண்டினாள் புவனேசுவரி. எப்போதும் தான் பூஜித்து வந்த காசிநாதனை வேண்டிக்கொண்டாள். இது, காசிநாதனிடம் பக்தி பூண்டொழுகிய மாமியாரிடமிருந்து மருமகளுக்குக் கிடைத்த பிரசாதம் போலும்!

காசியில் உள்ளவர்கள் மூலம் வேண்டுதலை செலுத்துவது வங்காளத்து வழக்கமாகும். புவனேசுவரி தேவியும் காசியில் இருந்த தன் அத்தைக் கிழவி ஒருத்தி மூலம், புத்திர பாக்கியம் பெற காணிக்கை செலுத்தி வந்தாள். தன் பிரார்த்தனைக்கு ஈசுவரன் நிச்சயமாகச் செவி சாய்ப்பான் என்ற நம்பிக்கை அவளுக்குப் பிறந்தது. உபவாஸமும், தியானமுமாகவே காலம் கழிக்கலானாள் அவள். உள்ளத்தால் தானும் வாரணாசி சென்று அத்தைக் கிழவியுடன் விசுவேசுவரனாகிய வீரேசுவர சிவனுக்கு கங்கா ஸ்நானம் செய்தாள்; காணிக்கைகளைச் செலுத்தினாள்.

ஒரு நாள் பகல்பொழுது முழுவதையும் பூஜாக்கிருஹத்திலேயே செலவிட்டு, சித்தமெல்லாம் சிவமாகத் தித்திக்கத் துயில் கொண்டாள் புவனேசுவரி. அது துயில்தானா? அவள் கண்ட காட்சி கனவுதானா?

கனவு என்றே வைத்துக் கொண்டாலும், நனவு என்று நாம் சொல்லும் நடை முறை உலக சம்பவங்களைவிட அன்பும், இன்பமும் அடர்ந்த அதிசயமான அநுபவமல்லவா அது!

அன்பும் இன்பமும் அடர்ந்து உருவான பரமேசுவரனைத் தவ நிலையில் கண்டாள் புவனேசுவரி. யோகத்திலிருந்த அந்த சிவமே மறு விநாடியில் சிசுவாகத் தோன்றிச் சிரித்தது. அந்த சிசுவை எடுத்து அணைக்க வேண்டிய தாய் தானே என்று புவனேசுவரியின் அகத்துக்குள் ஏதோ ஒன்று உணர்த்தியது. குழந்தையை வாரி எடுக்கத் துடித்த புவனேசுவரி துயில் நீங்கினாள். 'இதென்ன ஒளி வெள்ளம், தன்னைச் சுற்றி? இதுவும் கூடவா சொப்பனம்? சிவ சிவா, பரமசிவா!'

Koviloor Digital Library

ஞானத்தின் ஒளியும், கருணை வெள்ளமும்தான் தன்னைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டிருக்கிறது என்று புவனேசுவரி எண்ணி யிருப்பாளா ? அறிவுக் கனலே அருட்புனலாகித் தன்மீது அலை வீசுவதாக எண்ணியிருப்பாளா ?

'சிவ சிவா, பரம சிவா ! உன் அடியார்களின் பிரார்த் தனையை நீ எப்படியெல்லாம் ஈடேற்றிவைக்கிறாய் ?' என்று உவகை பூரித்தெழக் கூவினாள் புவனேசுவரி—ஒளி வெள்ளம் அவளுள் ஊறி உட்புகும் போது.

* * *

ஒளி வெள்ளத்தை என்றும் தான் பாய்ச்சுகிறான் சூரிய நாராயணன். ஆனாலும் மகர சங்க்ராந்தி என்ற புண்ணிய காலத்தில், அந்த ஒளி தனிப் பெருமையல்லவா கொண்டு பூஜை கள் பெறுகிறது ! 1863-ம் ஆண்டு ஜனவரி பன்னிரண்டாம் தேதியன்று நிகழ்ந்த சங்க்ராந்தியன்றும் இப்படித்தான் பூஜைகள் நடைபெற்றன. அறுவடைத் திருவிழாவாகப் பொங்கல் கொண் டாடிய தமிழ் மக்கள் ஞானத்தைப் பொங்கச் செய்யும் ஒரு சூரியன் உதித்ததற்கும் தம்மை அறியாமல் 'பொங்கலோ பொங் கல்' என்று வாழ்த்துக் கூறினார்கள். கங்கா சாகரத்தில் குழுமி யிருந்த ஆயிரமாயிரம் மக்கள், தாங்கள் நடத்தும் வழிபாடு உலகின் வடக்கேயிருந்து தெற்கே திரும்பும் கதிரவனுக்குமட்டு மன்று; மேனாடுகளிலெல்லாம் பாரதத்தின் மாண்பினை நிலை நாட்டப் போகும் அறிவுக் கதிரவனுக்கும் கூறும் நல்வரவு என்று அறிந்திருப்பார்களா ?

அவர்கள் அறிந்திராவிட்டாலும் அந்த அறிவுக் கதிரவன் அன்று உதயமாகிவிட்டான். சூரியோதயமாகிச் சில நிமிஷங் களுக்குப் பின், சரியாகக் காலை 6-49க்கு, புவனேசுவரியின் தவப் பயனாக ஓர் ஆண் மகவு பிறந்துவிட்டது.

சுவாமி விவேகானந்தர் பொங்கல் திருநாளன்று அவதரித்த தில் மிகவும் பொருத்த முண்டு. வேதாந்தமாகிய ஞான தீபத்தை எடுத்துச் சென்று பாரெங்கும் ஆன்ம ஒளி பரப்பியவரல்லவா அவர் ?

விவேகானந்த ஜயந்தி நிகழ்ந்த அன்று திங்கட்கிழமையாகும். ஞான ஒளியுடன், கருணையின் குளிர்ச்சியும் கலந்த மகானின் உதயத்துக்குச் சீதமதியத்தின் தினம் உற்றதே அல்லவா ?

* * *

பாட்டனாராகிய துர்கா சரணரின் சாயலாகவே குழந்தை இருப்பதாக உறவினர்கள் கூறினார்கள். அவரது பெயரையே

Koviloor Digital Library

குழந்தைக்கு இடவேண்டும் என்முர்கள். புவனேசுவரியோ காசி நாதனின் பெயரைச் சூட்டவேண்டும் என்றே விரும்பினுள். விசுவ நாதன் என்பது பதியின் பெயராகையால் வாரணுசி வாழ் பதியின் மற்ருெரு திருநாமமாகிய வீரேசுவரன் என்ற பெயரைப் பிள்ளைக் கனியமுதுக்கு அளித்தாள் அவள். எனினும் குடும்பத்தார் இட்ட நரேந்திரநாத் தத்தா என்ற பெயர்தான், அந்தக் குழந்தை துறவியாகும் வரை நிலைத்தது. துர்கா சரணர் என்று பெயர் பெருவிட்டாலும் துர்கையின் சரணங்களிலேயே அர்ப்பணமான பெருவாழ்வு அந்தக் குழந்தைக்குக் கிட்டியது. 'அம்பிகையின் அடியிணைகளில் அர்ப்பணமாவதற்கே ஒவ்வோர் இந்தியனும் பிறக் கிருன்' என்று பிற்காலத்தில் இந்தக் குழந்தைதான் கூறிற்று. வேதாந்தம் என்பது எதற்கும் அஞ்சாத வீரமேயாகும் என்று தீரத்துடன் கர்ஜித்த விவேகானந்தர், தாம் வீரேசுவரர் என்று செயலில் காட்டிவிட்டார். மாந்தருக்குள் ஒரு மாமன்னராகத் திகழ்ந்ததன் மூலம் நரேந்திரர் என்ற பெயருக்குத் தாம் முற்றி லும் தகுதி பெற்றவர் என்பதையும் நிரூபித்துவிட்டார். பரம ஹம்ஸரோ நர-நாராயணர்களில் ஒருவரான நரனே நரேந்திரன் என்று கருதினுர்.

* * *

நரேந்திரநாத தத்தர் என்ற நீண்ட பெயர் 'நரேன்' என்று செல்லமாகக் குறுகியது.

குழந்தை நரேன் மகா போக்கிரியாக இருந்தான். அவன் செய்த விஷமம் சொல்லில் வராது. அவன் வெறித்தனமாகப் பிடிவாதம் செய்யும்போது அவனை யாராலுமே அடக்க முடியாது. வீட்டிலுள்ளவர்களுக்கு அலுப்பும் எரிச்சலுமே ஏற்பட்டுவிடும். சாம தான பேத தண்டம் எதுவுமே நரேனிடம் பலிக்காது. ஒரு சமயம் அவன் பேய்க்கூச்சலிடும்போது குழந்தையின் தலையில் பச்சைத் தண்ணிரைக் கொட்டி, அதே சமயத்தில் அவன் காது களில் ஈசுவர நாமத்தை ஓதினுள் புவனேசுவரி—மற்ற உபாயம் எதுவும் பயனளிக்காதபடியால். ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக நரேன் அந்த நிமிஷமே அடங்கிவிட்டான். அதன் பின் அவன் அடம் பிடிக்கும் போதெல்லாம் இந்த வழியைத்தான் கையாண் டாள் தாய்—அவன் தலையில் குளிர்ந்த நீரைக் கொட்டுவது, காதில் சிவநாமத்தை உச்சரிப்பது, அல்லது ''நீ இப்படியெல்லாம் முரட்டுத்தனம் செய்தால் பரமசிவன் உன்னைத் தன் கிட்டத்தில் சேர்க்க மாட்டான்'' என்பது. ஒவ்வொரு முறையும் சிவனுக்குக் கட்டுப்பட்டுவிடுவான் சிறுவன்.

Koviloor Digital Library

''பிள்ளை வரம் வேண்டிப் பரமேசனுக்கு நோன்பிருந்தேன்; அவன் தன் பூத கணங்களில் ஒன்றை அனுப்பிவிட்டான்'' என்று தாய் அடிக்கடி சலித்துக்கொள்ளும் அளவுக்கு இம்சை செய்து வந்தான் நரேந்திரநாதன். நரேந்திரனைச் சமாளிப்பதற்காக வென்றே இரண்டு செவிலித்தாய்களை அமர்த்த வேண்டியதாயிற்று.

தன்னுடைய இரண்டு அக்காளிடமும் மிகவும் வாலாட்டு வான் நரேந்திரன். அவர்கள் அவன்மீது பாய வந்தால் கழிவு காலில் போய் நின்றுகொண்டு 'அழகு' காட்டுவான். அந்த அசுத்தமான இடத்துக்கு அவர்கள் அவனைத் தொடர்ந்து வர முடியாதல்லவா?

இப்படியெல்லாம் நரேன் பொறுக்க முடியாத விஷமங்கள் செய்தாலும் பிள்ளைப் பிராயத்திலிருந்தே அவனிடம் இனிய குணங்கள் பலவும் காணப்பட்டன. பறவைகளிடத்திலும், சாது மிருகங்களிடத்திலும் அவனுக்கு அளவற்ற பிரியம். 'காக்கை குருவி எங்கள் ஜாதி . . . நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை' என்ற அன்பு மதத்தைப் போதிக்க வந்தவனல்லவா அவன்? 'வானில் பறக்கின்ற புள்ளெலாம் நான்; மண்ணில் திரியும் விலங்கெலாம் நான்' என்ற அத்வைதத்தைச் சுவைக்கப் பிறந்தவனல்லவா அவன்? நரேந்திரனின் விளையாட்டுத் தோழர்களில் வீட்டுப்பசு, ஒரு குரங்கு, ஆடு, மயில், புறுக்கள், சீமைப் பெருச்சாளி ஒன்று இவ்வளவும் இடம் பெற்றிருந்தன. பட்சிகளிடத்தும், மிருகங்களிடத்தும் விவேகானந்தர் தமது இறுதி நாட்களில் பொழிந்த பரிவு அவரது இளமையின் எதிரொலியே போலும்!

நரேந்திரனின் இன்னொரு நற்குணம் அவனுடைய தர்ம சிந்தனையாகும். இந்தப் பாரம்பரிய இயல்பு குழந்தை நாளிலேயே நரேனிடம் படிந்தது விசேஷமாகும். தனக்குப் பயனில்லாத பண்டங்களையும் கூடப் பிறருக்குத் தாராது தன்னிடமே குவித்துக் கொள்வதல்லவா பொதுவாகக் குழந்தைகளின் இயற்கை? இதற்கு முற்றிலும் மாறாகத் தனக்கு மிகவும் தேவைப்படும் பண்டங்களையும் பிறர்க்கு வழங்கிப் பார்த்து மகிழ்வான் நரேந்திரன். அதிலும் தேசாந்திரிகளாக வரும் சாமியார்களிடம் அவனுக்குத் தனிப்பட்டதொரு பற்று. தன் கையில் கிடைப்பது எதுவாயினும் அதை அவர்களுக்கு அளித்துவிடுவான் நரேன். உலகைத் துறந்த அந்த ஆண்டிகளைக் கண்டாலே அவனுக்கு என்னவோ அவ்வளவு சந்தோஷம்!

ஒரு நாள் இடையில் சுற்றிய ஒரே வஸ்த்திரத்துடன் குழந்தை நரேன் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது ஒரு சந்நியாசி

Koviloor Digital Library

வாசலில் யாசகத்துக்கு வந்தார். நரேன் யோசிக்கவேயில்லே; அவரிடம் ஓடி, தான் அணிந்திருந்த ஒரே ஆடையை அவருக்கு அளித்து விட்டான்.

இப்படிப்பட்ட தயாளம் எந்த லட்சாதிபதியின் வீட்டிலும் கட்டுப்படியாகாதல்லவா? எனவே அதன் பின் ஆண்டிகள் யாரேனும் கண்ணில் பட்டாலே நரேனை ஓர் அறையில் விட்டு மூடிவிடுவது வழக்கமாயிற்று. அப்படியும் அவன் சும்மா இருக்க மாட்டான். தன் கைக்கு அந்த அறையில் என்ன கிடைக்கிறதோ அதை ஜன்னல் கம்பிகளின் வழியே யாசகம் வந்த சாதுவிடம் வீசி எறிவான்.

தியாகச் சிகரமாக விளங்கப் போவதால் துறவிகளிடம் நரேனுக்குத் தானும் அறிந்திரா அன்பு உண்டாகியிருக்கலாம்!

இதே நரேனின் ஈடுபாட்டைப் பெரிதும் ஈர்த்த இன்னொரு சாரார் வண்டி ஓட்டிகள் என்றுல் அது விசித்திரமாக இருக்கும். ஆம், நரேனுக்குக் 'கோச்சுமேன்' களிடம் மிகவும் கவர்ச்சி இருந்தது. பணக்காரர் வீட்டுக் 'கோச்சுமேனு'க் கென்று தனியான உடுப்பு உண்டு அல்லவா? நரேன் வீட்டு வண்டியோட்டியும் இப்படித்தான் கண்ணைப் பறிக்கும் வர்ணத்தில் உடை அணிந்து, தலைப்பாகை வைத்துக்கொண்டு, வாட்ட சாட்டமாக இருப்பான். அவன் கையில் சாட்டை வேறு. 'ஆகா, இருந்தால் இப்படிக் 'கோச்சுமேனு'க அல்லவா 'ஜம்'மென்று இருக்க வேண்டும்?' என்று நரேனின் பிஞ்சு மனசு எண்ணும். வண்டியோட்டியாவதே அவனுடைய இலட்சியமாகயிருந்தது என்று கூடச் சொல்லி விடலாம். கண்ணபிரானே தேரோட்டியாக வந்தபோதுதானே தன்னுடைய மகத்தான உபதேசத்தை மொழிந்தருளினுன்? பாரத நாடு முழுவதையும், ஏன் உலகத்தையே, சநாதன வேதாந்தப் பாதையில் திருப்பிச் செலுத்திய சாரதியாகவே அல்லவா விவேகானந்தர் விளங்கினுர்? உபநிஷதம் விதிப்பது போல, சரீரத்தைத் தேராகவும், மனத்தைக் கடிவாளமாகவும், புத்தியை சாரதியாகவும் கொண்டு சத்திய மார்க்கத்தில் செல்லும் விவேகானந்தராக அல்லவா இந்தப் பாலன் பக்குவமாகப் போகிறுன்?

* * *

அன்னையின் மடியில்தான் விவேகானந்தரின் ஆரம்பக் கல்வி நடை பெற்றது. இராமாயண, மகாபாரதப் பாடல்களே குழந்தைக்கு ஆரம்பப் பாடங்களாயின.

Koviloor Digital Library

இன்பமெனச் சிலகதைகள்—எனக்
கேற்றமென்றும் வெற்றியென்றும் சிலகதைகள்
துன்பமெனச் சிலகதைகள்—கெட்ட
தோல்வியென்றும் வீழ்ச்சியென்றும் சிலகதைகள்
என்பருவம் என்தன் விருப்பம்—எனும்
இவற்றினுக் கிணங்கவென் னுளமறிந்தே
அன்போடவள் சொல்லி வருவாள்;—அதில்
அற்புதமுண் டாய்ப்பர வசமடைவேன்

என்று கண்ணனுகிய தாய் தனக்குக் கதைகள் பல கூறியதாகப் பாரதியார் பாடியிருக்கிருர் அல்லவா? இதே போலத்தான் நரேனின் போக்கறிந்து கதைகள் சொல்லி அவற்றின் மூலம் அவனுக்குக் கல்வி புகட்டினுள் புவனேசுவரி தேவி. இந்தக் கல்வி நரேனின் தசையையும் இரத்த நாளங்களேயும் எலும்புகளேயும் ஊடுருவிக்கொண்டு அவன் இதயத்திலேயே கரைந்து விட்டது. இராமனின் புனிதக் கதையைக் கேட்டுக் கேட்டுக் காவிய நாயகனிடம் அபாரமான பக்தி ஏற்பட்டது நரேனுக்கு. சீதா பிராட்டியிடம் அவனுக்குண்டான பெருமதிப்பை பிற்காலத்தில் அவன் நிகழ்த்திய பல உரைகளில் காணலாம். பாரதப் பெண் களின் இலட்சியமே இதிஹாஸ இலக்கியத்தில் சீதையாக உறைந் தது என்று நம்பியவர் சுவாமிஜி.

சீதா சமேதனுன ஸ்ரீராமச்சந்திரனுடைய மண் பொம்மையை வாங்கி வைத்துக்கொண்டு தன் இளம் உள்ளம் எண்ணிய முறை யில் அதற்குப் புஷ்பமிட்டு, பணியாரங்கள் நிவேதித்துப் பூஜை செய்வான் நரேன். அவனுக்குச் சகாவாகப் பிராமணப் பையன் ஒருவன் கிடைத்தான். ஒரு நாள் தன் மாளிகையில் ஸ்திரிகளின் கட்டுக்கு மேலே அமைந்த ஒதுக்குப்புறமான மாடியறை யொன் றுக்குப் பொம்மையுடன் சென்ருன் நரேன். அந்தணச் சிறுவனும் உடன் சென்ருன். அந்த அறையில் சீதாராமர் 'பிரதிஷ்டை' செய்யப்பட்டார். பிறகு, அறையைத் தாழிட்டுக் கொண்டு இரண்டு பாலர்களுமாக 'நிஷ்டை' செய்யத் தொடங்கினர். 'நிஷ்டை' என்று அதனேக் கேலியாகச் சொல்வதற்கில்லே. ஏனெனில், ஆராதிக்கப்படும் வஸ்துவைத் தவிர வேறெதை யும் ஆராதிப்பவன் அறியமுடியாத ஆனந்த ரஸத்தில் அமிழ்ந்து போகும் உண்மையான நிஷ்டை அநுபவம் பால்மணம் மாருப் பாலகனுக்குக் கிட்டிவிட்டது. இதற்கு என்ன காரணம் காட்ட முடியும்? அவன் விதியின் எழுத்தைக் கிழித்துவிட்டானு? முன் விட்ட குறை வந்து இப்போது அவனேத் தொட்டு விட்டதா?

Koviloor Digital Library

அப்படிக் கொண்டால் முன்பே பிறந்து மடிந்த சாமானிய ஜீவனு நரேன் ? அல்லது, ஆண்டவனின் தூதனுக அந்த ஆண்டவனே அனுப்பிவைத்துப் பூமிக்கு வந்ததால் ஆண்டவனின் பதுமை முன்பு அந்த நினைவு வந்து அதில் லயமானுனு ? இதையெல்லாம் யார் விளக்க இயலும் ?

நரேனைக் காணவில்லையே என்று வீட்டிலுள்ளவர்களெல்லாம் திகில் அடைந்தனர். எல்லா இடத்திலும் தேடிப்பார்த்தனர். ஒருவரும் நாடாத அந்த மாடியறையை அடைந்தனர். அங்கே உட்புறமாகக் கதவு தாழிட்டிருந்ததைக் கண்டு தட்டினர். ஏதும் பயனில்லை. கதவை உலுக்கினர். அதற்கும் உத்தரம் இல்லை. அச்சம் கொண்டவர்களாக அவர்கள் கதவை உடைத்து உள்ளே பிரவேசித்தனர். என்ன ஆச்சரியம் ! அங்கே புஷ்பாலங்கார முன ஸ்ரீராமபிரான் முன்பு நரேன் நிச்சலனமாக நிஷ்டையி லிருந்தான். அவனது தோழனும் அவ்வாறே நிஷ்டையிலிருந் தானு என்பது தெரியவில்லை.

* * *

கதைகளின் மூலம் மட்டுமின்றி எழுத்தாலும், எண்ணுலும் மகனுக்குப் பாடம் புகட்டவும் தொடங்கினுள் புவனேசுவரி. தாய்மொழியாகிய வங்காளி எழுத்துக்களையும், ஆங்கில 'அரிச் சுவடி' யையும் அவனுக்குக் கற்பித்தாள். பிற்காலத்தில் விவேகா னந்தர் ஆங்கிலத்தில் பெரும் பேச்சாளராகச் சுடர் வீசியது உலகறி யும். பேச்சாளராக இருந்ததோடு மட்டுமன்றி ஆங்கிலத்தில் பல அற்புதமான கவிதைகளையும் சுவாமிஜி இயற்றியிருக்கிருர். அதோடு வங்காளியிலும் அவர் நல்ல தேர்ச்சிபெற்று வசன நடை, கவிதை இவ்விரண்டிலுமே தமது புலமையை வெளிப் படுத்தியுள்ளார்.

* * *

நரேன் பேரன்புடன் நடத்திவந்த இராம உபாசனைக்கு ஆபத்து வந்தது ஒரு நாள். இல்லற வாழ்க்கையால் ஏற்படும் இன்னல்களைக் குறித்து யாரோ பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டு விட்டான் நரேன். 'கலியாணம் செய்து கொண்டு குடித்தனம் செய்வது இவ்வளவு தப்பா ? அப்படியானுல் இராமரே தப் பல்லவா செய்திருக்கிருர் ?' என்று சிறுவனின் சிந்தனை படர்ந்தது. 'தப்பு செய்த இராமர் கடவுளாக எப்படியிருப்பார் ?' என்றும் எண்ணம் கவடுவிட்டது. அவ்வளவுதான் ! தான் அவ்வளவு காலம் செலுத்திய பக்தி நெஞ்சை அழுத்தி நோகச் செய்ய, சீதாராமர் பொம்மையைத் தூக்கி எறிந்தே விட்டான் நரேன். பொம்மை சுக்கலாயிற்று.

Koviloor Digital Library

பொம்மைமட்டும் சுக்கலாகவில்லை. நரேனின் சின்னஞ்சிறு நெஞ்சுமே சுக்கலாயிற்று. அம்மாவிடம் ஓடினான். 'ஓ''வென்று கதறி அழுதான். இராமனை வைத்துக் கொள்ளவோ அவனுக்குப் பிடிக்கவில்லை; வைத்துக் கொள்ளாமல் உதறித் தள்ளியதையும் தாள முடியவில்லை. 'உன்னைக் கொள்ளவும் முடியாது; தள்ளவும் முடியாது; நீ ஹேயோபாதேய வர்ஜிதை' என்று அம்பாளை ஸஹஸ்ரநாமம் விளிப்பது வேறொரு விதத்தில் பாலன் நரேனின் அநுபவமாயிற்று.

''அசடே, இதற்கோ அழுவாய்?'' என்று செல்வச் சேயை ஆற்றினாள் அன்னை. ''இராமன் கலியாணம் பண்ணிக்கொண்டதில்தானே உனக்கு வருத்தம்? தப்பு செய்த அவர் சுவாமியாக முடியாது என்று தானே நரேன், நீ நினைக்கிறாய்? இராமன் சுவாமியாக இல்லாவிட்டால் போகட்டுமே! உனக்குக் கலியாணம் செய்து கொள்ளாத சுவாமியை நான் தருகிறேன். உனக்குத்தான் சாமியார் என்றால் ரொம்பப் பிடிக்குமே! சாமியாராக இருக்கும் ஒரு சுவாமியை உனக்குத் தருகிறேன்'' என்று மைந்தனை ஆசுவாஸப்படுத்தினாள். தவயோகிக் கோலத்திலிருக்கும் கைலாஸநாதனின் பதுமை ஒன்றை நரேனுக்குத் தந்தாள் புவனேசுவரி.

பரமேசுவரனை விடப் பெரிய தியாகி உலகில் யார் உண்டு? தியாகராஜன் அல்லவா அவன்? அன்புருவான அம்பாளையும், அழகே உருவான ஆறுமுகனையும், அறிவே உருவான ஆனைமுகனையும் துறந்த அவனுடைய தியாகத்துக்கு இணையாக எதைச் சொல்லமுடியும்? விட்டுப் பிரியக் கூடியவர்களா அவர்கள்?

துறவித் தெய்வத்தின் அருளால் பெற்ற பிள்ளைக்கு அந்தத் துறவித் தெய்வத்தையே அளித்து விட்டாள் புவனேசுவரி. அல்லது பிள்ளையைத்தான் அந்தத் துறவித் தெய்வத்துக்கு அளித்துவிட்டாளோ? எப்படியானாலும் சிறுவனாக சிவபிரானை வழிபடத் தொடங்கிய நரேனின் உள்ளத்தில் தியாகவித்து விழுந்துவிட்டது. அது முளையாகி, செடியாகி, மரமாகி, விழுதுவிட்டுக்கொண்டு விரிந்து வளர்ந்ததுதான் சுவாமி விவேகானந்தரின் வரலாறு. அந்த மரத்தில் பழுத்த பல்லாயிரக் கணக்கான கனிகளில், எதிர்காலத்தில் தியாகத் தோப்பு வளர்வதற்கான பல வித்துக்கள் ஊறிக்கிடந்தன. 'பிறரைக் கடைத்தேற்றுவதற்காக நீ மோக்ஷத்தையும் தியாகம் செய்வாயாக; பிறரைக் கரை யேற்றுவதற்காக நீ நரகத்துக்கும் செல்லத் தயங்காதே' என்ற மகாமந்திரத்தை மனிதகுலத்துக்குத் தந்த மகாத்மா அல்லவா சுவாமிஜி?

Koviloor Digital Library

தன்னுடைய சிறிய மனது கொண்ட அளவுக்கு இராமனிடம் அத்தியந்தப் பிரேமை பூண்ட நரேந்திரன் தன் விருப்பத்துக்கு மாருகவே அந்த மூர்த்தியை நீத்தது அரிய விஷயமாகும். 'விளை யும் பயிர் முளையிலே' என்ற வாசகத்துக்கு இதை அத்தாட்சி யாகக் கொள்ளலாம். நரேனின் உணர்ச்சிகள் இராமன்பால் செறிந்திருந்தன. ஆனுல் அந்தக் குழந்தை அறிவில் உண்மை என்ருல் என்ன என்று பகுத்துப் பார்க்கும்போது, விவாகம் செய்துகொண்ட இராமன் மெய்யான தெய்வமில்லை என்றே தோன்றியது. புத்திக்குத் தன் உணர்ச்சிகளை அடங்கச் செய்து, எல்லையற்ற கிலேசத்தையும் பொருட்படுத்தாது இராமன் பொம் மையை விலக்கிவிட்டான் நரேன். பொதுவாகப் பாலப்பருவத் தில் இத்தகைய உள்ளத் திண்மையைக் காண முடியுமா? அரும் பிட்ட போதே நரேனிடம் எத்தகைய அந்தரங்க சுத்தம்; தான் கண்ட சத்திய தரிசனத்தில் எத்தகைய நம்பிக்கை? 'எவ்வளவு இனிய தளையாயினும் அதனை நீக்கி சுதந்திரமாக வாழுங்கள்' என்று பிற்காலத்தில் போதித்ததற்கு எத்தகைய முன்ளுேடி?

குழந்தைப் போக்கில் இவ்வாறு செய்தாலும் தசரத நந்தனை விவேகானந்தர் மறக்கவில்லை; தாசரதியும் அவரை மறக்காமல் பிற்காலத்தில் அவருக்குப் பேரருள் செய்திருக்கிருன்! சுவாமிஜி உண்ண உணவின்றித் தவித்த ஒரு தருணத்தில், அப்படி அவர் தவிப்பதைக் கண்டு ஒருவன் கெக்கலி கொட்டிய தருணத்தில், ஜானகிநாதன் விவேகானந்தருக்கு அறுசுவை உணவை அனுப்பி அற்புதம் நிகழ்த்தி யிருக்கிருன்! அதெல்லாம் பிறகு வரும் கதை.

* * *

ஆம், மூர்த்தத்தை எறிந்த பின்னும் இராமமூர்த்தியை என்னவோ நரேந்திரனுல் மறக்கத்தான் முடியவில்லை. சுற்றுப் புறத்தில் இராமாயண பாராயணம் எங்கு நடைபெற்ருலும் அங் கெல்லாம் தவருது சென்றுவிடுவான் சிறுவன். இரவு வேளை ஏறிக்கொண்டே போனுலும் வீட்டு நினைப்பின்றி அதில் மூழ்கி விடுவான். வங்காளி இராமாயணத்தில் ஆஞ்சநேய சுவாமி வாழைத் தோட்டங்களில் வசித்ததாக வரும். அநுமத் பிரபா வத்தில் உள்ளத்தைப் பறிகொடுத்த நரேந்திரன் இதைக் கேட் டறிந்ததிலிருந்து, இராமாயணம் முடிந்தபின் நேராக வீட்டுக்கு வருவதில்லை; அருகிலுள்ள ஒரு வாழைக் கொல்லைக்குச் சென்று அநுமந்தன் வருவானே என்று பல யாமங்கள் காத்துப் பார்ப் பான். அடக்கம், பிரம்மசரியம், வீரம் மூன்றுக்கும் உறைவிட

Koviloor Digital Library

மான வாதாத்மஜன்தான் இந்திய இளைஞர்களின் இலட்சிய புருஷன் என்று சுவாமி விவேகானந்தர் கூறியிருக்கிறார்.

*　　　　*　　　　*

நள்ளிரவில் நரேன் கதைகேட்டுத் திரும்பும்வரை அவனைப் பின் தொடர்ந்து விட்டோம். அதன் பின் அவன் எப்படி நித்திரை கொள்வான் என்பதையும் பார்ப்போம். பகலெல்லாம் அவன் வேறெந்தக் குழந்தையும் போலன்றிப் பொழுதைக் கழித்தான் எனில் இரவில் அவன் உறங்குவதும் வேறெந்தக் குழந்தையிடமும் காணமுடியாத விசித்திரமான முறையிலாகும். துயில்வதற்காக அவன் இமைகளை மூடியவுடன் அவனுடைய புருவங்களின் மத்தியில் ஓர் ஒளிப் பந்து தோன்றும். அந்த ஒளியின் வண்ணம் விதவிதமாக மாறும். பிறகு அந்த ஒளிப் பந்து விரிந்து கொண்டே போகும். விரிந்து விரிந்து சென்ற அந்த வட்டம் வெடிக்கும். நரேன், தன் சரீரம் முழுவதையும் வெண்மையான தூய ஒளி முழுக்காட்டுவதாக உணர்வான். இந்த உணர்விலேயே உறக்கம் கொள்வான். நாள்தோறும் இப்படியேதான் நடைபெற்றது. இந்த ஒளி முழுக்கைப் பெறுவதற்காக நரேன் குப்புறப் படுத்துக்கொள்வான். உடனேயே தூக்கம் கண்ணைச் சுற்றும்; கண்களின் மத்தியில் ஒளிப் பந்தும் தோன்றி விடும்; விரியும்; வெடிக்கும்; வெள்ளத்தில் ஆழ்த்திவிடும்.

நித்திரையின் இயற்கையே இதுதான் போலும் என்று நரேன் எண்ணி வந்தான். எல்லாருமே தன்னைப் போலவே ஜோதிப் பிரவாகத்தில் அழுந்தித்தான் தூங்குகிறார்கள் என்றே நினைத்து வந்தான். தன் தோழன் ஒருவனிடம் அகஸ்மாத்தாக இதைப் பற்றிப் பேசி அந்தத் தோழன் வியப்புற்றபோதுதான் இது தன்னுடைய பிரத்தியேக அநுபவமே என்பது நரேனுக்குப் புரிந்தது.

இந்தப் பிரத்தியேக அநுபவத்தையும் நரேன் சொல்லாமலே அறிந்த ஒருவர் இருந்தார். பல ஆண்டுகளுக்குப் பின் நரேந்திரன் அவரை அடைந்த பிறகு அவர், 'என் குழந்தாய், நரேன்! நீ உறக்கம் கொள்ளும்போது ஓர் ஒளியினைக் காண்கிறாயா?'' என்று கேட்டதுண்டு. நரேந்திரனின் நனவுலகு மட்டுமன்றிக் கனவுலகையும் அறிந்திருந்த அவர் யார்? இந்தக் கதையின் பிறிதொரு அத்தியாயத்தில் தக்ஷிணேசுவரம் செல்லும்போது அவரைத் தரிசிப்போம்.

*　　　　*　　　　*

புருவ மத்தியில் ஆக்ஞா சக்கரம் உள்ளதாகவும், அந்த ஸ்தானத்தில் மனதைப் படியச் செய்வதால் எளிதில் ஜகாக்கிரியம்

Koviloor Digital Library

எனப்படும் ஒருமைப்பாடு கிடைக்கும் என்றும் மந்திர, தந்திர சாஸ்திரங்கள் சொல்லும். 'மூலாதாரத்தில் மூண்டெழுகனலை' சிரஸிலுள்ள ஸஹஸ்ராரத்துக்கு ஏற்றி முக்தி நிலைபெறும் தந்திர யோக சாதனையில், புருவ மத்தியில்தான் அம்பாளின் திரு உருவை பரமஹம்ஸர் தரிசித்தார். தேவியின் திவ்விய ரூபத்தை நீத்து, அதற்கும் மேலே உள்ள ஸஹஸ்ராரத்துக்குக் குண்டலினி சக்தியைச் செலுத்தி உருவும், குணமும் அற்ற பரம்பொருளில் கரையவே அவர் தயங்கினாராம். புருவப் பிரதேசத்தில் தேவி இந்திர தனுசு எனப்படும் வானவில்லைப் போல பல்நிறத்தவளாக ஒளிர்வாள் என்பது சாஸ்திரம். நரேன் நானாவித வண்ண பேதங்களைக் கண்டதும் இதே ஸ்தானத்தில்தான் என்பது சிந்தனைக்குரியது.

பரமஹம்ஸ தேவரின் புருவமத்தியில் தோதாபுரி என்ற பரம சந்நியாசி கிறியவுடன் தேவருக்குச் சமாதி கூடிற்று என்பதும் இங்கே குறிப்பிட வேண்டியதாகும். இவற்றிலிருந்து நரேந்திர நாதனின் நூதனமாக நித்திரைக்குப் பலவாறு விளக்கங்கள் செய்து கொள்ளலாம்.

தியானயோகத்தில் காலகாலமாக ஆழ்ந்த அப்பியாசம் பெற்றிருந்த ஒரு புனித ஜீவன் நரேந்திரனாகப் பிறந்ததாகவும், பசி தாகம் இவை போலத் தியானயோகமும் அவனுக்குப் பிறவி உணர்ச்சியாக லபித்ததாகவும் அதுவே விசித்திரமான நித்திரையாக உருவெடுத்ததென்றும் கூறுவோர் உளர். மர்மத்திலும் மர்மமான மகாபுருஷரின் அநுபவங்களை நாம் எப்படி நிர்த்தாரணம் செய்ய இயலும்? நரேன் பெரியவனான பின்பும் இதே முறையில் தான் உறங்கினான். விவேகானந்தரான பிறகும் இந்த அநுபவம் அவருக்கு அவ்வப்போது ஏற்பட்டு வந்தது என்று நாம் அறிகிறோம்.

* * *

'விளையாட்டுக்கு'த் தியானம் செய்ய உட்காருவான் நரேன்; உண்மையாகவே தியானத்தின் மனோலயம் பெற்றுவிடுவான். இப்படித்தான் ஒரு நாள் நரேந்திரனும் அவன் நண்பர்கள் சிலரும் தியான விளையாட்டில் அமர்ந்திருந்தனர். அப்போது நல்லபாம்பு ஒன்று அவர்கள் அருகில் வந்துவிட்டது. தோழர்களெல்லாம் அலறிப் புடைத்துக்கொண்டு சிட்டாகப் பறந்துவிட்டனர். சிதறி ஓடும்போதே நரேந்திரனையும் எச்சரித்தனர். ஆனால் பாம்பு வந்ததையோ, பாலர்கள் எச்சரித்ததையோ, தன்னைத் தனியாக விட்டு அவர்கள் ஓட்டம் பிடித்ததையோ எதையுமே நரேன் அறிந்தானில்லை. அரவம் அவன் அருகில் வந்துவிட்டது. சிறிது நேரம் அவ்வுடைய ஆண்மையை ரசித்துவிட்டுத் தன் வழியே 'சரசர' வென ஊர்ந்து சென்றுவிட்டது.

Koviloor Digital Library

நாம் பழிக்கவும், நிந்திக்கவும் தயங்காத பெரியார்களிடம் நாம் காணாத ஏதோவொரு மகிமையை இதர உயிரினங்கள் காணும் போலும்! நரேந்திரர் பரிவ்ராஜகராகச் சுற்றி அலைந்த போது ஒரு புலிக்கு அவர் இரையாகவிருந்த தருணத்தில் அந்த வியாக்ரம் அவரை ஏதுமே செய்யாமல் சென்றுவிட்டது. பின்னர் இங்கிலாந்தில் அவர் ஒரு நாள் உலவிவரும்போது வெறித்தனமாக அவரை நெருங்கிய ஒரு காளை அவரது சாமீப்பியத்தில் மூர்க்கத் தனம் தணிந்து திரும்பியது.

* * *

நரேந்திரன் ஆறாவது வயதில் பாடசாலைக்குச் செல்லத் தொடங்கினான். எழுதவும், படிக்கவும், கற்றுக் கொண்டான். எண்களை மனனம் செய்தான். பாடம் வந்தது; அதோடு பள்ளிக்கூடத்தில் படித்த சில பிள்ளைகளிடமிருந்து அசங்கியமான சில சொற்களும் நரேனிடம் வந்தன.

அந்த வார்த்தைகளை நரேன் வீட்டில் சொல்லியவுடன் அவனது ஆரம்பப் பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி விழுந்தது. ஓர் உபாத்தியாயரை நியமித்து நரேனுக்கு வீட்டிலேயே கற்பிக்க ஏற்பாடாயிற்று. அண்டையிலுள்ள சில சிறார்களுக்குமாகச் சேர்த்து வீட்டின் பூஜை மன்றத்தில் பாடம் நடைபெற்று வந்தது. நரேனின் அற்புதமான அறிவு சுடர் விசத் தொடங்கியது. மற்ற மாணவர்கள் 'ஆனா ஆவன்னா' வுடன் மல்லுக் கொடுத்துக் கொண்டிருக்கையிலேயே நரேன் விரைவாகப் படிக்கவும் எழுதவும் பயிற்சி பெற்றுவிட்டான். 'ஏக ஸந்த க்ராஹி' என்பதுபோல் ஒரு முறை கேட்டாலே விஷயத்தைப் 'பிடித்து'க் கொண்டான் நரேன். இந்த க்ராஹ்ய சக்திக்கு அநுசரணையாக அவனிடம் தீட்சண்யமான ஞாபக சக்தியும் அமைந்திருந்தது. 'முக்த போதம்' என்ற நெருடலான சம்ஸ்கிருத இலக்கணத்தை ஏழாம் வயதிலேயே நரேன் நெட்டுருவாக்கிக் கொண்டு விட்டான். இராமாயணம், மகாபாரதம் முதலியவற்றிலிருந்து நீண்ட பல பகுதிகளை மனப்பாடமாக ஒப்பிப்பான் சிறுவன் நரேந்திரன். ஒரு சமயம் சில பரதேசிப் பாடகர்கள் நரேன் இல்லத்துக்கு வந்தனர். இராமாயணத்தை அவர்கள் கானம் செய்யும்போது அவர்களை நிறுத்தி, அவர்கள் செய்த பல பிழைகளைத் திருத்தினான் குழந்தை. அவர்கள் ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தனர்.

* * *

நரேந்திரநாதனுடன் பல நண்பர்கள் பாடம் பயின்றதாகக் கண்டோம் அல்லவா? இவர்களுடன் நரேனின் நட்பு நீண்ட காலத்துக்குத் தொடர்ந்தது. இன்று அந்தத் தீராத விளையாட்

Koviloor Digital Library

டுப் பிள்ளையின் தோழராக இருந்த அவர்களில் பலரே பிறகு விவேகானந்தர் நவ பாரதம் நிர்மாணிக்கும் போதும் அவருடன் தோளோடு தோள் நின்றுப் பணி புரிந்தார்கள். அப்போது எப்படி விவேகானந்தர் அவர்களுக்குத் தலைவராக விளங்கினரோ, அதேபோலத்தான் இளமையிலும் அவர்களின் தலைவனாக இருந்தான் நரேன். நரேந்திரன் என்ற பெயருக்கேற்ப மற்ற சிறுவர்களுக்கு ஓர் அரசனாகவே அவன் இருந்து வந்தான்.

நரேனுக்கு மிகவும் பிடித்தமான விளையாட்டே ராஜா விளையாட்டுத்தான். நரேன் தான் ராஜாவாக இருந்து தர்பார் நடத்துவான். மற்றப் பையன்கள் மந்திரி பிரதானிகளாக இருப்பார்கள். முற்றத்திலிருந்து பூஜையறைக்குச் செல்லும் படிக்கட்டுக்களில் உச்சிப்படிதான் அவனது சிம்மாசனம். அதே மட்டத்தில் உட்கார வேறு யாருக்கும் அருகதை கிடையாது. மாமன்னர் தமது பிரதம மந்திரியையும், சேனாதிபதியையும், தமக்குக் கப்பம் செலுத்தும் இதர மன்னர்களையும் 'நியமனம்' செய்வார். அவரவருக்கும் அந்தஸ்தை அநுசரித்துப் படிகளில் மேல், கீழாக ஸ்தானமும் ஒதுக்குவார்.

நரேனின் ராஜகம்பீரம் சொல்லி முடியாது. நெருப்புத் தான். அவன் வார்த்தைக்குக் கட்டுப்படாதவர்களைத் தன் பார்வையாலேயே கதிகலங்கச் செய்துவிடுவான்.

அஞ்சாமை என்ற தத்துவமே உருப்பூண்டு வந்தாற்போல ஜ்வலித்தவர் சுவாமி விவேகானந்தர். ராஜகுலத்தில் பிறந்து, ராஜ யோகத்தைப் பயின்ற அந்த யோகிராஜரிடம் என்றுமே இந்தக் காம்பீரியம்தான் விளக்கமுறப் பொலிந்தது என்பது அவரது சித்திரங்களைக் கண்டாலே தெரியும்.

மகான்களிடம் கருணை அதிகமா, ஞானம் அதிகமா என்று ஆராய நமக்குத் தகுதி கிடையாது. இரண்டுமே இணைந்தவர்கள் அவர்கள். எனினும் சில மகான்கள் தோற்றத்தில் கருணையின் நளினம் அதிகமாக வெளிப்படத் துலங்குவார்கள். சில மகான்களோ ஞானத்தின் அழுத்தம் புலப்பட இலங்குவார்கள். சுவாமிஜியின் உருவத் தோற்றத்தில் பொதுவாக ஞானத்தின் ராஜகம்பீரமே ததும்புவதைக் காண்கிறோம். எனினும் கருணைமயமாகத் தன் தாய்த்திருநாட்டின் ஏழை எளியோரை எண்ணி வாய்விட்டுப் புலம்பி அவர் கதறிய சந்தர்ப்பங்கள் எத்தனை எத்தனையோ.

* * *

எல்லாரையும் அடக்கியாண்ட இந்த நரேனை அடங்கி நடக்கும் படி செய்யத் தந்தை விசுவநாத தத்தர் கையாண்ட உபாயம்

Koviloor Digital Library

புதிதானது. தம் குழந்தைகள் தவறு செய்தால் அவர்களை தத்தர் திட்டவோ அடிக்கவோ மாட்டார். அவர்களுடைய தவற்றைக் கண்டு அவர்களுடைய தோழர்கள் கேலிசெய்யுமாறு செய்து, அவமான உணர்ச்சியாலேயே அவர்கள் அது போன்ற தவற்றை மீண்டும் செய்யாதபடி தடுப்பார். நரேனிடமும் இவ்வாறுதான் நடந்து கொண்டார் அவர். ஒரு நாள் நரேன் புவனேசுவரியிடம் தாறுமாறுகப் பேசி விட்டான். அதற்காக விசுவநாத தத்தர் அவனை அடித்துப் புடைக்கவில்லை. அமைதியாக, நரேன் தன் நண்பர்களை வரவேற்கும் அறையின் கதவில் எழுதினுர்:

நரேன்பாபு இன்று தன் அம்மாவிடம் இப்படியெல்லாம் பேசினுர்:...

நரேன் புவனேசுவரி தேவியிடம் எந்த அசட்டு வார்த்தைகளைக் கூறினுனே அவற்றையே எழுதிவிட்டிருந்தார் விசுவநாத தத்தர். அப்புறம் நரேன் அம்மாவிடம் ஒருபோதாவது அப்படிப் பேசியிருக்க வேண்டுமே!

* * *

விசுவநாத தத்தரின் உயரிய இயல்பு — நயத்தினுல் ஜயம் காணும் இயல்பு — இன்னெரு சம்பவத்திலும் வெளியாகிறது.

''எனக்காக நீங்கள் என்ன அப்பா செய்திருக்கிறீர்கள்?'' என்று ஒரு நாள் அவரைக் கேட்டுவிட்டான் நரேன்.

கேள்வியால் சற்றும் பதற்றமடையாத தத்தர், ''கண்ணுடி எதிரில் போய் நின்று பார்த்துக் கொள்ளேன், தெரியும்.'' என்ருர் சாவதானமாக.

* * *

சிறு குழந்தையாக இருக்கும்போதே எவ்விஷயத்தையும் தானே பரிசோதித்துப் பார்த்துச் செயல்பட்டான் நரேன். வக்கீல் விசுவநாத தத்தரிடம் பல வகுப்புக்களையும் சேர்ந்த கட்சிக்காரர்கள் வருவார்கள். வடநாட்டில், முக்கியமாக வங்காளத்தில், புகையிலைப் புகைபோட்டுக் குழாய் மூலம் அந்தப் புகையைப் பிடிக்கும் வழக்கமுண்டு. ஹுக்கா என்பது இதுவே. ஆசாரமானவர்களும் இப்படிச் செய்வதுண்டு. பரமஹம்ஸரும், பிற்காலத்து விவேகானந்தருமே இவ்வாறு புகை பிடிப்பதுண்டு என்பதைக் காணும்போது இது ஒரு தேசாசாரம் என்றே தோன்றும். தப்பெண்ணம் தோன்ருமல் மேனுட்டில் ஆடவரும் பெண்டிரும் கை குலுக்குகிருர்கள் — ஆனுல் நம் நாட்டில் அந்தச் செய்கை பொருந்தவில்லையல்லவா? இதேபோலத் தவருன போக்கிய எண்ணமின்றியே, உணவு உண்பதுபோல இலையைப் புகைப்பது அந்நாளில் வங்காளத்து வழக்கமாகும். நரேனுடைய வீட்டில்

Koviloor Digital Library

இந்தப் புகைக் குழாய்கள் பல உண்டு. ஒவ்வொரு ஜாதியையும், மதத்தையும் சேர்ந்த கட்சிக்காரர்களுக்கென்று ஒவ்வொரு குழாய் தனிப்பட ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த வகுப்பு வித்தியாசம் நரேனுக்குப் புரிவதேயில்லே. 'ஒரு குலத்தையோ, மதத்தையோ சேர்ந்த ஒருவர் இன்னெரு குலத்தவருடனே, மதஸ்தருடனே சேர்ந்து போஜனம் செய்தால் என்ன வந்துவிடும்? ஏதேனும் விபத்து நேரிட்டு விடுமா? வீடு இடிந்து தலேயில் விழுந்து விடுமா, என்ன?' என்று எண்ணுவான் அவன். இதைத் தானே பரிசோதித்துப் பார்க்கவேண்டும் என்ற துணிவும் அவனுக்கு ஏற்பட்டது. எனவே, தனித்தனியாக ஒவ்வொரு குலத்துக்கு என்று வைத்திருந்த அத்தனே குழாய்களிலும் அவன் புகை பிடித்துப் பார்த்தான். முகம்மதியர்களுக்கு என்று வைத்திருந்த குழாயிலும் கூடப் புகைத்தான். எந்த விபத்தும் உடனடியாக ஏற்பட்டுவிடவில்லே என்று கண்டான். அவன் இவ்வாறு செய்த தற்காக வீட்டுப் பெரியோர்கள் அவனேக் கடிந்து கொண்டபோது, ''எனக்கொன்றும் வித்தியாசம் தெரியவில்லேயே!'' என்றே தைரியமாக விடையளித்தான்.

* * *

விவேகானந்தர் தம் வாழ்வில் வர்ண முறைக் கட்டுப்பாடுகளே அநுஷ்டிக்கத்தான் இல்லே. ஆனல் அவர் அதிவர்ணுச்ரமியான சந்நியாசியானபடியால் தர்ம நூல்களின்படியே இதில் ஏதும் தவறில்லே. எனினும் அவர் ஜாதி முறைகளேயே ஆக்ஷேபித்தார் என்று எண்ணலாகாது. வர்ணமுறை ஓர் அரிய சமூகப் பகுப்பு; எல்லாவித மனநிலேயினரையும் அவரவர் பக்குவத்துக்கேற்ப சமுதாய நிலேயில் இடம் பெறச் செய்து, இறுதியில் அனேவரையுமே அந்தணராக்குவதற்காக அமைத்த ஏற்பாடே அது என்று அவர் பலமுறை கூறியதுண்டு. காலக்கிரமத்தில் இந்த உயரிய சமூகப் பகுப்பில் உயர்வு-தாழ்வு எண்ணங்களும், மூட நம்பிக்கைகளும் புரையோடிவிட்டதாக அவர் கருதினர். சமூகத்தின் கீழ் நிலேயில் உள்ளவர்கள் என்றுமே மேல் வராதபடி அடக்கப்பட்டனர் என்று கொதித்தெழுந்தார்.

சிறு வயதில் அவர் எல்லா ஜாதியினரின் புகைக் குழாய்களேயும் ருசித்ததை அவரது பரிசோதிக்கும் நாட்டத்துக்கும், துணிவுக்கும் எடுத்துக் காட்டாகக் கொள்ளவேண்டும். வீடு இடிந்து மேலே விழுந்தால்தான் நாம் செய்யும் காரியம் தவருனது என்று வைத்துக்கொண்டால், பல அக்கிரமங்கள் நடக்கும்போதும் அவ்வாறு உடனடியாக உற்பாதம் எதுவும் விளேயாததற்கு என்ன சொல்வது? ஆனல் குழந்தை உள்ளத்தில் 'தப்பு நடந்தால்

Koviloor Digital Library

உடனே சுவாமி பயங்கரமாகத் தண்டித்து விடுவார்' என்ற நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. இதுமட்டுமே நமக்கு முக்கியமாகும்.

நரேந்திரரின் வாழ்க்கையைப் பின்தொடரும்போது எந்தெந் தச் சமயத்தில் அவரது உள்ளப்பான்மை எப்படி எப்படி இருந்தது என்பதை மனதில் வாங்கிக்கொண்டு, அதன் அடிப்படையில்தான் அவர் அவ்வப்போது கண்ட முடிவுகளை ஆராய வேண்டும். கல்யாணத்தைப் பற்றிக் குழந்தை நரேன் கொண்ட அபிப் பிராயத்தால் நாமும் அவனைப் போலவே இராமனைத் தெய்வமல்ல என்று கூற முடியாதல்லவா ? தேவ தேவியரின் சேர்க்கை மானுட மான பௌதிகத் தொடர்பல்ல, அது மணியும் ஒளியும் போலப் புனிதமான முறையில் பிரிக்கமுடியாமல் ஏற்பட்ட சேர்க்கை என்று பிற்காலத்தில் நரேன் உணர்ந்ததல்லவா நமக்கு வழி காட்டி ? வாலிபப் பருவத்தில் நரேன் நாஸ்திகக் கொள்கை களைத் தழுவும் அளவுக்குக் கூடச் சென்றதுண்டு. அது நமக்கு வழிகாட்டியாகாதல்லவா ? பரமஹம்ஸர் அவரை எப்படி ஆட் கொண்டு பகுத்தறிவுக்கு அதீதமான உண்மை உண்டு என்பதை உணர்த்தினர் என்பதற்குப் 'புத்திபூர்வமாக' விளக்கம் தர யாராலும் இயலாது. புத்திக்கு மேம்பட்ட அநுபவத்தைப் பொறுத்த விஷயத்தில் புத்தியால் எப்படி விளக்கம் தர இயலும் ? நாம் அறிவால் விளக்க முடியாதெனினும் இது நாம் போற்ற வேண்டிய புனித சம்பவமாகும். எனவே, நரேந்திரரின் பல சிந்தனைகளையும், முடிவுகளையும் அவர் அவ்வப்போது இருந்த கோணத்திலிருந்தேதான் நாமும் பார்த்து அந்த அளவிலேயே ஒப்புக்கொள்ள வேண்டும். எது ஆத்மாவுக்கு உகந்தது, எது உகந்ததன்று என்று பரிசீலனை செய்யும் விவேகத்தில் அவர் சிறப் புற்று விவேகானந்தரான பின்தான் அவரது சொல், சிந்தனை, செயல் எல்லாமே பெரும்பாலும் மந்திரமாகவும், தியானமாகவும், ஆத்ம ஆராதனையாகவும் ஆகி மற்றவர்க்கும் வழிகாட்டியாக அமைந்தன. எனினும் அவரோ அப்போதும்கூடக் கண்மூடித் தனமாகத் தம்மை யாரும் பின்பற்ற வேண்டும் என்று கூறிய தில்லை.

* * *

ஒரு நாள் நரேனுக்கும் அவனுடைய நண்பர்களுக்குமிடையே ஏதோ தகராறு உண்டாயிற்று. அடி, குத்து என்று அது முற்றி விட்டது. சண்டையிட்டபடியே சிறிது சிறிதாக நகர்ந்து கொண் டிருந்த நரேன் பூஜை மன்றத்தின் வராந்தாவிலிருந்து கீழே விழுந்து கல்லில் தலையை முட்டிக்கொண்டுவிட்டான். செழிப் பாக வளர்த்த செல்லக் குழந்தையின் தலையிலிருந்து 'குபு குபு'

Koviloor Digital Library

என்று குருதி பெருக்கெடுத்தது. இறுதிவரையில் இந்தக் காயத்தின் தழும்பு விவேகானந்தரின் வலது கண்ணுக்கு மேலே, நெற்றியில் காணப்பட்டது.

குழந்தைப் பிராயத்தில் நரேனின் இரத்தம் அவ்வளவுக்கு வெளிப்பட்டதே நல்லதற்குத்தான். ''இந்த விபத்தால் நரேனின் சக்திகள் கட்டுப்படுத்தப் பெருதிருந்தால் அவன் இந்த உலகத்தையே தகர்த்து நொறுக்கியிருப்பான்'' என்று தட்சிணேசுவரத்துத் தபஸ்வி கூறினர். ஆன்மீகத்தில் தளர்ந்த உலகை நெருக்கி உருவாக்குமாறு நரேந்திரனை ஞானத்தீயில் உருக்கியவரும் அவரேதான்.

* * *

முரட்டுத்தனம், துடுக்குத்தனம், சண்டை எல்லாவற்றையும் நாம் நரேனின் குழந்தைப் பருவத்தில் காண்கிறோம். ஆனால் இவற்றுக்கிடையே அவனுடைய அந்தரங்கமான வாழ்க்கையொன்றும் இருந்தது. முன்பே நாம் கண்ட தியான விளையாட்டுத்தான் அது. 'தவம் புரிய சித்தர்கள் பலருண்டு. தம்மை மறந்து அவர்கள் பலப்பல ஆண்டுகளுக்குத் தவம் புரியும்போது அவர்களுடைய தாழ்சடை நீண்டு நீண்டு சென்று ஆலவிழுது போலப் பூமியைப் பிளந்துகொண்டு செல்லும்' என்றெல்லாம் நரேந்திரன் கேள்வியுற்றதுண்டு. தானும் அதேபோலக் கண்களை மூடிக்கொண்டு அமர்ந்து, அவ்வப்போது கேசம் வளர்ந்து பூமியை நோக்கிச் செல்கிறதா என்று தொட்டுப் பார்த்துக் கொண்டதுண்டு. இவ்வாறு குழந்தைத்தனமாக எண்ணினுலும், அப்படிக் கண்களை மூடும்போது வாஸ்தவமாகவே அவனுக்குத் தியான யோகம் சித்தித்த சமயங்கள் பல உண்டு. ஒரு முறை தியானத்தின்போது குழந்தை நரேந்திரன் புத்தரைக் கண்டான். தான் கண்டது புத்தர் என்பதை நீண்ட காலத்துக்குப்பின்தான் அவர் உணர்ந்தார்.

வயது வந்த பின் தியான யோகத்திலேயே கரைந்துபோய், கைவல்ய நிலையிலேயே இருக்கவேண்டும் என நரேந்திரர் தம் ஆசானைக் கேட்டுக் கொண்டார். அவரோ தியான யோகத்துக்கும் மேலாகத் தியாக யோகத்தைக் கூறினர். மோக்ஷ அபேக்ஷையையும் தியாகம் செய்து மனிதகுலத்துக்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொள்ளும்படி சீடனைப் பணித்துவிட்டார். அதன் பின் ஞான சிம்மமாக சுவாமிஜி வேதாந்தப்பணி புரிந்ததைப் பார் அறியும். எனினும் அந்த மாபெரும் சேவை புரிந்த சுவாமிஜியிடமும் குழந்தை நரேனின் வெள்ளை உள்ளமும், உத்வேகமும் மாருமல் மங்காமல் விளங்கியதை உலகம் கண்டது.

Koviloor Digital Library

அத்தியாயம் 3

துள்ளித் திரிகிற பிள்ளை

1870-ம் ஆண்டில் பண்டித ஈசுவர சந்திர வித்யா ஸாகரக் கல்வி நிலையத்தில் சேர்ந்தான் நரேன். அவனது நுண்ணறிவு அதிவிரைவிலேயே பிரகாசிக்கத் தொடங்கியது. அதைவிட அதிகமாக அவனது இயல்பான துடிப்பும் வெளிப்படலாயிற்று.

நரேனின் துறுதுறுப்பைச் சொல்லி முடியாது. ஒரு நாளுக்கு ஓர் ஆடை என்ற ரீதியில் துணிமணிகளைக் கிழித்துக் கொண்டு விடுவான். அவனால் வகுப்பறையிலும்கூடப் பொருந்தி உட்கார்ந் திருக்க முடியாது. மாறி மாறி அமர்வதும் எழுந்து நிற்பதுமாக இருப்பான். படிப்பைவிட வெளி விவகாரங்களில்தான் அவன் கவனம் அதிகமாகச் சென்றது. விளையாட்டு என்றால் அதில் அவனுடைய முரட்டுத்தனமே பிரதிபலித்தது. முரட்டுத்தனம் என்பதைவிட ஸ்வாபாவிகமான செயல்துடிப்பு என்றே அதனைக் குறிப்பிடலாம். உறங்கிக்கிடந்த நாட்டைத் தட்டி எழுப்பி உத் வேகம் கொள்ள வைக்கப் போகிறவன் அல்லவா ? அந்த வேகம் தான் இனம் தெரியாத பல விதங்களில் பாலப்பருவத்திலிருந்தே வெளியாகி வந்தது போலும் !

கோலிக்குண்டு, குதித்தோடுதல், குஸ்திச்சண்டை இவை சிறுவன் நரேனுக்கு மிகவும் பிரியமான விளையாட்டுக்கள். இடை வேளையில் வகுப்பு கலைந்ததோ இல்லையோ நரேந்திரன் தான் விளையாட்டு மைதானத்தில் முதன் முதலாக நிற்பான். உணவை அள்ளிப் போட்டுக்கொண்டு விளையாட விரைவான். பழைய விளையாட்டுக்களோடு தானே பல புதுப்புது விளையாட்டுக்களையும் அவன் கண்டுபிடித்திருந்தான். கல்கத்தாவில் புதிதாக எரிவாயு (காஸ்) உற்பத்தியும், சோடா முதலிய பானங்களும் வந்திருந்த சமயம் அது. நரேனும் ஒரு விளையாட்டு காஸ் தொழிற்சாலை யும், சோடாக் கம்பெனியும் வைத்துவிட்டான். குட்டிக் குட்டி ரயில்களும், இயந்திரங்களும் செய்து அவற்றை இயக்கி மகிழ்ந் தான்.

நரேனின் முரட்டுத்தனத்தால் அவனை சகபாடிகள் 'குட்டிப் பிசாசு' என்று மறைமுகமாகப் பெயரிட்டழைத்தது உண்மை தான். 'சிவபெருமானின் பூத கணத்தில் ஒன்று' என்று புவ னேசுவரி சூட்டிய பெயரே இப்படிப் பள்ளிப் பருவத்தில் பரிண மித்தது. இதுவே இன்னும் பிற்காலத்தில் சுவாமி விவேகா னந்தர் மேனாடுகளில் ஞானத் தியாகப் பரவி ஜ்வலித்தபோது

Koviloor Digital Library

அவருக்குச் 'சண்டமாருதம்' என்ற பெயராக மாறி அமைந்தது. சண்டமாருதம் எனினும் அது நோய்க்கிருமிகளைப் பரப்பும் பெரும் காற்றன்று; ஞான அணுக்களை அடித்துக் கொண்டுவரும் அருட் பூங்காற்று என்று மேனாட்டினர் உணர்ந்திருந்தனர். புவனேசுவரி தேவியும் குழந்தை நரேனைப் பிரமதக் கூட்டத்தில் ஒருவன் என்று சொல்லும் போதே அவனுக்குள்ளிருந்த குழைவுமயமான தேவாம் சத்தையும் உணர்ந்திருந்தாள். அதே போல நரேந்திரனின் பள்ளி மாணவர்கள் அவனைக் 'குட்டிப் பிசாசு' என்று சொன்னாலும் அவன் ஒரு நல்ல 'பிசாசு' என்று உணர்ந்திருந்தனர்.

எனவேதான், பள்ளிச்சிறுவர்களுக்குள் ஏதேனும் சண்டைச் சச்சரவு மூளும்போது இரண்டு கட்சிக்காரர்களும் நரேனிடம் மத்தியஸ்தத்துக்கு வருவார்கள். அவன் தீர்ப்பில் அவர்களுக்கு அவ்வளவு நம்பிக்கை. சில சமயம் நரேனுக்குக் குறும்பு புத்தி வந்துவிடும். சமரஸம் செய்துவைப்பதற்குப் பதிலாக அவனே சண்டையை இன்னும் கொஞ்சம் கிண்டிக் கிளறிவிட்டு வேடிக்கை பார்ப்பான். எனினும் தகராறு வலுத்து அடி உதையில் இறங்கி விட்டால் சும்மா விருக்கமாட்டான். சண்டையை விலக்கி விட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பான். இப்படி இரு சண்டைக் கோஷ்டிகளிடையே புகும்போது, தானே பலத்த அடிகளையும் வாங்கிக் கொள்வான். எனினும் சிறு வயதிலேயே குஸ்தி செய்யும் முறைகளை அறிந்திருந்தபடியால் தன்னை நன்கு காத்துக் கொள்ளவும் அவன் பழகியிருந்தான்.

சண்டை சச்சரவுகளுடனும், விளையாட்டு விநோதங்களுடனும் மட்டும் நரேந்திரனின் பள்ளி வாழ்க்கை முடிந்து விடவில்லை. அன்னையின் மடியில் தான் கற்ற அமுதக் கதைகளாகிய இராமாயண மகாபாரதங்களை சகமாணவர்களுக்கு அழகுறக் கூறியும் அவர்களுக்கு ஆனந்தமூட்டுவான் நரேன். இதனால் வகுப்பறையையே நரேனுடைய விளையாட்டிடமாக்கி அவனுடன் மற்ற பாலர்கள் கொட்டமடிப்பார்கள்.

இப்படித்தான் ஒரு நாள் பாடம் நடக்கும்போது நரேனும் நண்பர்களும் தம்பாட்டில் கதை பேசிக்கொண்டிருப்பதை ஆசிரியர் கவனித்துவிட்டார். பாடத்தை நிறுத்திவிட்டு பையன்களைக் கேள்வி கேட்கத் தொடங்கினர். விடை கூற இயலாமல் விழித்தனர். நரேந்திரனின் முறையும் வந்தது. என்ன ஆச்சரியம்! அந்த வம்பர் தலைவன் ஆசிரியர் கேள்விகளுக்கெல்லாம் 'டக்' 'டக்' கென்று மறுமொழி கூறிவிட்டான். ஒரே சமயத்தில் பல விஷயங்களைக் கிரகித்துக் கொள்ளும் அற்புதமான அவதான சக்தி அவனிடம் இருந்தது!

Koviloor Digital Library

நரேந்திரன் பாடத்தின்போது பேசியிருக்கமுடியாது என்றே தீர்மானித்துவிட்டார் ஆசிரியர். விடை கூருத மற்றவர்களை மட்டுமே வகுப்பு முடியும்வரை நிற்குமாறு ஆணையிட்டார். நரேனும் எழுந்து நின்ருன். ''நீ நிற்கவேண்டாம், நரேன்!'' என்ருர் ஆசிரியர். ''இல்லை, நான்தான் அதிகமாகப் பேசியவன்'' என்று கூறி அவனே பிடிவாதமாக நின்றுகொண்டே யிருந்தான்.

* * *

ஆங்கில போதனை ஆரம்பமாயிற்று. நரேனுக்கு முதலில் அந்த மொழி பிடிக்கவே யில்லை. 'அந்நியர்கள் பாஷையல்லவா அது?' என்ருன். நாடு முழுவதும் ஆங்கிலேய மோகம் பிடித்துத் திரிந்த அந்த நாளில் சிறுவன் நரேன் இவ்வாறு கேட்டது அதிசயத்திலும் அதிசயமாகும்.

ஆங்கிலம் கற்குமாறு ஆசிரியர்கள் வற்புறுத்தவே, நரேந்திரன் அழுதுகொண்டே வீட்டுக்கு வந்துவிட்டான். அவனுடைய பெற்ருேர்களும் ஆசிரியர்கள் கூறியதையே சொன்னுர்கள். ஒரு வாருக நிர்ப்பந்தத்தினுல் ஆங்கிலம் படிக்க ஆரம்பித்தான் நரேன்.

ஆகா! அவன் மட்டும் ஆங்கிலம் பயின்றிராவிடின் வேதாந்தச் செல்வத்தை மேல் நாடுகளில் யார் பரப்பியிருக்கமுடியும்? வேதாந்தம் செல்வம்தான். எனினும் செல்வமும் ஒவ்வொரு தேசத்தில் ஒவ்வொரு நாணயமாக இருக்கின்றதேயன்றி, ஒரு நாட்டு நாணயம் இன்னெரு நாட்டில் செல்லுவதில்லையல்லவா? வேதாந்த சிந்தனைச் செல்வங்களை, மேனுட்டில் செல்லுபடியாகும் ஆங்கிலச் சொல் நாணயங்களிலேயே வழங்கவே பிறந்தவர் அன்ருே விவேகானந்தர்? அதோடு அந்நியச் சரக்காயினும் சுவாமிகள் காலத்திலேயே இந்தியாவின் நாலா பகுதிகளிலுமுள்ள அறிவாளிகளை இணைத்த பொது மொழிப் பாலமாக ஆங்கிலம்தான் இருந்தது. ஆங்கிலேய மோகம் மிகுந்த இவர்களுக்குப் பாரதத்தின் தனித்துவத்தை எடுத்துக் கூறவும் ஆங்கில மொழியே அவசியமாக இருந்தது. அம்மொழியில் விவேகானந்தர் பெற்ற புலமை அவரது உரைகளிலெல்லாம் உறைந்து கிடக்கிறது. அன்பு மொழியை அறிந்து, தமக்கு எதுவுமே அந்நியம் கிடையாது என்ற உயர்நிலையைப் பிற்காலத்தில் எய்த விவேகானந்தர் எத்தனையோ பல ஆங்கிலேயர்களையும், அமெரிக்கர்களையும் தமது அத்தியந்த சிஷ்யர்களாகப் பெற்ருர்.

ஆங்கிலம் கற்கத் தொடங்கிய சில நாட்களிலேயே அம்மொழியில் நரேனுக்கு ஒரு பற்றுதல் ஏற்பட்டுவிட்டது. யாரும் வியக்கும் வண்ணம் அவன் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்று வந்தான்.

Koviloor Digital Library

நரேனுக்கு அவனுடைய தந்தையிடமிருந்தும், தாயிடமிருந்தும் இரண்டு அருட் பிரசாதங்கள் கிடைத்தன.

''நான் எப்படியப்பா நடந்து கொள்ள வேண்டும்?'' என்று விசுவநாத தத்தரை வினவினுன் அருமைக் குமாரன்.

''எதைக் கண்டுமே ஆச்சரியம் காட்டாதே?'' என்று உத்தரம் பகர்ந்தார் தத்தர்.

ஆச்சரியத்தை வெளிக் காட்டாமல் இருக்க வேண்டுமெனில் அதற்கு முதற்படியாக ஒருவன் எதிலும் தானே ஆச்சரியம் கொள்ளாமல் இருக்கவேண்டும். விவேகானந்தர்மட்டும் தம் வாழ்க்கையில் ஆச்சரியம் கொள்ளத் தொடங்கியிருந்தால் அப்புறம் வேறெதற்குமே அவருக்குப் பொழுது இருந்திராது. பகுத்தறிவுவாதியான நரேனை பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் ஆட்கொண்டது எப்படி? ஆண்டியாக நாடெங்கும் திரிந்தவரை மன்னர் மன்னரெல்லாம் தொழுதது எப்படி? வங்காளத் துறவியாகிய அவர் அமெரிக்காவுக்கும், ஐரோப்பாவுக்கும் சென்றது எப்படி? தன்னந்தனியாகச் சென்று அந்த அயல் நாடுகளில் ஞானப்புயல் விசி வேதாந்திகள் பலரைத் தோற்றுவித்தது எப்படி? இவற்றையெல்லாம் எண்ணி எவ்வளவு ஆச்சரியப்பட்டாலும் போதாதல்லவா?

ஆச்சரியம் கொள்ளாமலிருப்பதென்பது மனதை அசையா நிலையில் வைப்பதேயாகும். கண்ணன் கூறிய 'ஸ்தித பிரக்ஞை' யைத் தான் வேறு வார்த்தைகளில் மகனுக்குக் கூறிவிட்டார் விசுவநாத தத்தர். மாற்றுத் துணியில்லாமல் ஏழையரோடு ஏழையராகத் திரிந்த காலத்திலும், கோடீசுவரர்களுக்கும் குரு ஸ்தானத்திலிருந்து கும்பிடப் பெற்ற காலத்திலும் எவ்வித உள மாறுபாடும் இன்றி 'வருக வருவதென்றே' தான் வாழ்ந்தார் விவேகானந்தர்.

ஒரு நாள் பள்ளியில் யாரோ செய்த தவறுக்காக நரேந்திரனுக்குத் தண்டனை கிடைத்தது. இது குறித்து அவன் அன்னையிடம் முறையிட்ட போது அவன் வாழ்வு முழுவதற்கும் வழி காட்டும் மற்றொரு அருட்பிரசாதம் கிடைத்தது.

''என் கண்மணி, நீ தப்புச் செய்யவில்லை என்னும்போது வேறெதனையோ எண்ணி நீ ஏன் வருந்த வேண்டும்? நாம் சரியாக நடந்து விட்டால் மற்ற எது எப்படிப்போனால் என்ன? யாரோர் பார்த்துப் பாராட்ட வேண்டும் என்பதற்காக உண்மையைப் பின்பற்றாதே, கண்ணே! உண்மையாக இருக்கவேண்டும் என்பதொன்றுக்காகவே உண்மையைப் பின்பற்று. குழந்தாய், நீ சத்தியத்தைக் கடைப்பிடிப்பதால் பலமுறை அநீதிக்கும், இடர்

Koviloor Digital Library

மலிந்த விளைவுகளுக்கும் ஆளாக நேரிடலாம். அவற்றில் ஒன்று தான் நீ இப்போது கண்டது. அதற்காகச் சத்தியத்தை விட்டு விடாதே. பயனை நினைக்காமல் சத்தியத்தைப் பின்பற்று'' என்ருள் மாதுசிரோமணி புவனேசுவரி.

மகனைப் போருக்கு வீர திலகமிட்டனுப்புவதுபோல் இன்னல் சூழ்ந்த சத்தியப் பாதையில் நரேந்திரனை புவனேசுவரி தேவி ஊக்கி அனுப்பிவைப்பதாகத் தோன்றவில்லையா?

* * *

''எனக்கு என்ன ஞானம் இருக்குமாயினும் அதற்காக நான் என் அன்னைக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறேன்'' என்று விவேகானந்தர் பூரிப்புடன் கூறியதுண்டு.

* * *

சிறுவன் நரேந்திரனின் இரக்கத்தையும், உறுதிப்பாட்டையும், நீதி உணர்ச்சியையும் கூறும் ஒரு நிகழ்ச்சி:

ஈசுவர சந்திர வித்யாஸாகர் கல்வி நிலயத்தைச் சேர்ந்த ஓர் ஆசிரியர் மிகவும் கோபிஷ்டர். எடுத்தற்கெல்லாம் 'பூசை' கொடுப்பார் அவர். ஒரு நாள் ஏதோ தவறு செய்து விட்ட ஒரு பையனைக் 'கண்மண் தெரியாமல்' அவர் பிய்த்து வாங்கி விட்டார். அந்தக் கொடுமையைக் காணவே நரேந்திரனுல் சகிக்கவில்லை. அவனுடைய நரம்புகளெல்லாம் துடிதுடித்தன. அந்த நரம்புத் தளர்ச்சி தாளாமலே அவன் கண்களில் நீர் பொங்க, ''அஹஹ...'' என்று உரக்கச் சிரித்துவிட்டான். உடனே ஆசிரியரின் திருஷ்டி நரேன்மீது விழுந்தது. இனிமேல் அவ்வாறு சிரிப்பதில்லை என்று அவன் மன்னிப்புக்கோர வேண்டும் என்ருர் அவர். அவன் மறுத்துவிட்டான். உடனே ஆசிரியரின் ஆத்திரம் அவ்வளவும் நரேனிடம் திரும்பிவிட்டது. தயா தாட்சண்யமின்றி அவன் காதைப் பிடித்துத் திருகலானுர் அவர். நோன்பு நோற்றுப் பெற்ற அந்த அருமைப்பிள்ளையின் அரும்புக் காதிலிருந்து ரத்தம் அரும்பலாயிற்று. அப்படியும் அவன் மன்னிப்புக் கேட்க மறுத்துவிட்டான். இளம் குரல் ஆத்திரத்திலும் அழுகையிலும் உடைந்து தொனிக்க, ''என் காதை இன்னமும் திருகினீர்களோ, தெரியுமா சேதி? என்னை வதைக்க நீங்கள் யார்? ஜாக்கிரதை, இனிமேல் என்கிட்டே வரக்கூடாது!'' என்று சத்தமிட்டான்.

அந்தச் சமயம் பார்த்து ஈசுவர சந்திர வித்யாஸாகரர் அறைக்குள் வந்தார். விம்மலுக்கும் விசும்பலுக்கும் இடையே நடந்தது அவ்வளவையும் அவரிடம் தைரியமாக எடுத்துக் கூறி

Koviloor Digital Library

ருன் நரேன். பிறகு தன் புத்தகங்களையெல்லாம் திரட்டி எடுத்துக் கொண்டான். ''நான் போகிறேன். இனிமேலே இங்கே வரவே மாட்டேன்'' என்று சொல்லிக்கொண்டு கிளம்பிவிட்டான்.

அன்பு நிறைந்த இதயத்தினராகிய வித்யாஸாகரர் குழந்தையைத் 'தாஜா' செய்து தம் அறைக்கு இட்டுச் சென்றார். அவனுக்கு நிறைய ஆறுதல்கள் சொல்லி வகுப்புக்குச் செல்ல வைத்தார்.

நரேனின் துணிவு காரணமாக அந்தப் பள்ளியின் ஒழுங்குக் கட்டுப்பாட்டு முறைகள் பரிசிலனை செய்யப்பட்டன. இது போன்ற அநாகரிக சம்பவம் இனி நிகழக்கூடாது என்று தலைவர் உத்தரவிட்டார்.

அந்தச் சம்பவத்தை புவனேசுவரி தேவி அவ்வளவு எளிதில் மன்னித்துவிடத் தயாராக இல்லை. 'தான் விரேசுவரனுக்காக நோன்பிருந்து பெற்ற பிள்ளையின் காதையா இப்படி இழைப்பது ?'

பள்ளிக்குப் போகவே வேண்டாம் என்று மகனிடம் கூறி விட்டாள் அவள். ஆனால் அவனோ ஏதும் நடக்காததுபோல், மறுநாளும் வழக்கம் போலவே பள்ளிக்கூடத்துக்குப் புறப்பட்டு விட்டான்.

நரேந்திரநாதனின் காதுப்புண் நீண்ட நாள் வரை ஆற வில்லை.

* * *

'உண்மை எதுவெனத் தானே அநுபவபூர்வமாக நிர்ணயித்துக் கொள்ளவேண்டும். மூடநம்பிக்கைக்கு இடம் தரலாகாது' என்பது சுவாமி விவேகானந்தரின் அபிப்பிராயம். இதை அவரது வாழ்விலேயே இளமை தொட்டு அவர் பின்பற்றி வந்திருக்கிறார்.

நரேந்திரனுடைய நண்பன் ஒருவன் வீட்டில் மலர் மரமொன்று உண்டு. அம்மரத்தின் மீதேறி மலர் கொய்வது நரேந்திரனது வழக்கம். மலருக்காக மட்டும் அவன் மரம் ஏறுவதில்லை. காலை மடித்துத் தொங்க விட்டுத் தலைகீழாக ஒரு கிளையிலிருந்து இன்னொன்றுக்குத் தாவுவது அவனுக்கு மிகவும் பிடித்தமான விளையாட்டாகும். அங்கிருந்து குட்டிக்கரணம் போட்டபடியே நிலத்தில் குதிப்பான். தன்னுடைய அபரிமிதமான சக்தியையும், விம்மி எழும் மனோவேகத்தையும் இப்படியெல்லாம் அவன் செலவிடுவான். நரேந்திரனுடன் நண்பர்களும் சேர்ந்துகொண்டு அமர்க்களப்படுத்துவார்கள்.

இந்தச் சேஷ்டைகள் அந்த இல்லத்தினருக்குத் தொல்லையாகவும், அச்சமாகவும் இருந்தன. பாதி பார்வை போன அந்த

Koviloor Digital Library

வீட்டுப் பாட்டனாரால் இதனைப் பொறுக்க முடியவில்லை. எனவே அவர் அந்த மரத்தில் பிரம்மராட்சதம் ஒன்று வசிப்பதாகவும், மரத்தின் மீதேறுவோரின் கழுத்தை நெரித்து அது கொன்று விடும் என்றும் பயமுறுத்தி வைத்தார். அவருடைய பயமுறுத்தலை மிகவும் பவ்யமாகக் கேட்டுக்கொண்டிருந்தான் நரேன். எனினும் அவர் வீட்டுக்குள் சென்றதுதான் தாமதம், மீண்டும் மரத்துக்கே ஓடி மேலேறத் தொடங்கினான். அவனுடைய நண்பர்கள் தடுத்துப் பார்த்தனர். அவன் செவிசாய்க்கவில்லை. ''என்ன மடக்கழுதைகளடா நீங்கள்! மரத்தில் பிரம்மராட்சதம் இருக்கிறதென்றால் இவ்வளவு நாட்களாக அது என்ன பண்ணியதாம்? நானும்தான் எவ்வளவோ முறை இதன் மேலேறி இருக்கிறேன்! தாத்தா கதைப்படி என் கழுத்தை என்றோ அது நெரித்துப் போட்டிருக்கவேண்டுமே!'' என்றான் அந்த அஞ்சா நெஞ்சன். இந்தப் பாட்டனாரின் பேரன்தான் பிற்காலத்தில் சுவாமி விரஜானந்தரானார்.

* * *

புதிது புதிதாக ஏதேனும் செய்துகொண்டே யிருப்பான் நரேந்திரநாதன். நாடகத்தில் அவனது உள்ளம் பிரவர்த்தித்தது. பையன்களைச் சேர்த்துக்கொண்டான். வீட்டின் பூஜை மன்றத்தில் மேடை எல்லாம் அமர்க்களமாகப் போட்டுவிட்டான். ஒரு சில நாடகங்களும் கூட அரங்கேற்றிவிட்டான். விடே 'அமைச்சூர் நாடகக் குழு' வாகிவிட்டதைக் கண்டு நரேனின் உறவினர் ஒருவர் மேடையைத் தகர்த்து நாடகங்களை முடித்து வைத்துவிட்டார்.

இதனால் நரேன் சோர்ந்துபோய் விடவில்லை. அவனுடைய ஊக்கமும் ஆக்கத்திறனும் தேகப்பயிற்சித் துறையில் திரும்பின. தன் வீட்டு முன்றிலேயே தேகப்பயிற்சிசாலை ஒன்றைத் தொடங்கி விட்டான். அவனுடைய உறவினர் குழந்தையொன்று கையை முறித்துக் கொள்ளும் வரையில் தேகப்பயிற்சிசாலை நன்றாக நடைபெற்றது. அதன்பின், முன்பு நாடகமேடையை உடைத்தெறிந்த புண்ணியவான் தேகப்பயிற்சிசாலைக் கருவிகளையும் உடைத்தெறிந்து அதற்கு மங்களம் பாடி வைத்தார்.

நரேந்திரநாதன், நவகோபால் மித்ரா என்பவரின் உடற்பயிற்சிக் கூடத்தில் சேர்ந்தான். சிலம்பம், கம்பாட்டம், நீச்சல், மல்யுத்தம், படகு செலுத்துதல் முதலிய பல கலைகளையும் கற்றான். ஒரு முறை விளையாட்டுப் போட்டியில் முதல் பரிசைத் தட்டிக் கொண்டான்.

Koviloor Digital Library

இந்த விளையாட்டுக்களில் சளைத்த பொழுதில் படங்களை மாய விளக்கு (Magic Lantern) எனப்படும் லென்ஸ் ஒளி உதவிமூலம் திரையிற் போட்டுக் காட்டிக் களிப்பான் நரேன்.

எல்லாருக்கும் பிரியனாக, தீராத விளையாட்டுப் பிள்ளையாக வளர்ந்து வந்தான் நரேந்திரன். ஏழை-பணக்காரர், உயர்குலத்தவர்-இழிகுலத்தவர், பெரியவர்-சிறியவர், ஆண்-பெண் என்ற எந்த வித்தியாசமும் இன்றி எல்லார் மனையிலும் புகுந்து அவர்கள் மனதிலும் புகுந்தான் நரேன். அவனொத்த வயதினர் யாருக்கேனும் ஏதேனும் துயரம் நேர்ந்தால் ஆறுதல் அளிப்பதில் முன்நிற்பான். தனது விஷமங்களாலும், தான் அறிந்திருந்த நானாதரப்பட்ட விஷயங்களாலும், துடுக்குத்தனத்தாலும், சட்சட்டென்று ஹாஸ்யத்துடன் விடைசொல்லும் சாமர்த்தியத்தாலும் எல்லாரது அன்பையும் குறைவறப் பெற்றான் நரேன். சிடுமூஞ்சிக் கிழங்களைக் கூட அவன் சிரிக்கவைத்த சம்பவங்கள் பல. பெண்களுக்கு அந்த வாண்டுமீது ஒரே உயிர். ‘மாமி’ என்றும் ‘அத்தே’ என்றும் ‘அக்கா’ என்றும் அவரவர் பிராயத்தைப் பார்த்துப் பக்குவமாக உறவு முறை கொண்டாடுவதில் அதி கெட்டிக்காரன் நரேந்திரன். கூச்சமில்லாமல் எல்லாரிடமும் கபடமின்றிப் பழகி வளைய வருவான் அவன்.

அம்மைக்கு நல்லவன், கண்டீர்!—மூளி
அத்தைக்கு நல்லவன், தந்தைக்கும் அஃதே

என்றெல்லாம் கோபாலனைப் பற்றிப் பாரதியார் பாடியிருப்பது நரேந்திரனின் பாலப்பருவத்தை எண்ணும்போது நினைவில் வருகிறது.

* * *

சிறுவன் நரேந்திரனுக்குச் சமைக்கக் கற்றுக்கொள்ளவேண்டும் என்றோர் ஆசை எழுந்தது. சிநேகிதர்களையெல்லாம் பணமாகவும், தானியங்கள், காய்கறிகளாகவும் உதவச் செய்து, தான் செலவில் பெரும்பகுதியை ஏற்று உணவு வகைகள் தயாரித்தான் நரேன். அவன் தலைமையாளாக இருந்து மற்றவர்களை உதவியாளராகப் பணிபுரியச்செய்து சாப்பாடு தயாரித்துப் பின்னர் எல்லாரும் உண்டு மகிழுவர். நரேந்திரன் வெகு ருசியாகத்தான் சமைப்பான். எனினும் மிளகை அதிகமாகப் போட்டு காரத்தைத் தூக்கலாக்கிவிடுவான்.

‘இந்தியாவுக்கு இப்போது ஸாத்விகத்தை விட ராஜஸம் தான் அதிகத் தேவை’ என்று பறையறைந்தவர் சுவாமிஜி. காரமான உணவு ராஜஸமானது என்பது கீதை வாக்கு.

Koviloor Digital Library

ஸர்வக்ஞபீடத்தில் ஆரோகணம் செய்பவர்போல சகல கலைகளையும் கற்றுத்தேர்ந்தவர் விவேகானந்தர். சிலம்பம், சமையல், சித்திரக்கலை, சங்கிதம் முதல் நவீன விஞ்ஞானம் உள்பட அந்த வேதாந்தி அறியாதது எதுவுமில்லை. சநாதன பாரத தர்மம் சிதைவுற்றபோது தோன்றி அதனைப் புனர் நிர்மாணித்ததாலும், அறிவை அடிப்படையாகக் கொண்டு அநுபவத்தின்மூலம் ஆன்ம தத்துவத்தை விளங்கிக்கொள்ள வேண்டும் என்ற நோக்காலும் ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதரை நினைவுறுத்தும் விவேகானந்தர், தமது சகலகலா வல்லபத்தாலும் அந்த மகாஞானியின் ஞாபகத்தை உண்டாக்குகிறார். இதனால்தான் போலும், மகாகவி பாரதியாரும்

வானந்தம் புகழ் மேவி விளங்கிய
மாசில் ஆதி குரவன் அச் சங்கரன்
ஞானம் தங்கும் இந்நாட்டினைப் பின்னரும்
நண்ணினான் எனத் தேசுறும் அவ்விவே
கானந்தப் பெருஞ்சோதி

என்று பாடுகிறார் !

* * *

சகாக்களைக் கல்கத்தாவிலுள்ள முக்கியமான இடங்களுக்கு இட்டுச் செல்வான் நரேந்திரநாதன். மிருகக்காட்சி சாலை, பொருட்காட்சி சாலை, ஆக்டர்லோனி நினைவுச் சின்னம், ஏதேனும் ஒரு பூங்கா—இப்படியாகப் பையன்களின் உல்லாசப் பயணம் நடக்கும். கல்கத்தாவின் சுற்றுப்புறங்களுக்கும் அவர்கள் செல்வதுண்டு. ஒரு நாள் நரேன் தனது கோஷ்டியுடன் மிடியாப் ரஸ்ஸிலுள்ள நவாப் மிருகக்காட்சி சாலைக்குச் சென்று கங்கா நதியில் படகு மார்க்கமாகத் திரும்பிக்கொண்டிருந்தான். திடீரென்று ஒரு பையனுக்கு உடல் நலம் குறைந்துவிட்டது. பையன்களை இறங்கும்படி வற்புறுத்தினர் படகோட்டிகள். இரு மடங்கு கட்டணம் தருவதாகப் படகோட்டிகளிடம் சிறுவர்கள் கெஞ்சினர். ஒருவாறாகப் படகை வலித்து வந்து கட்டத்துக்குக் கொண்டுவிட்ட படகோட்டிகள் சிறுவர்களிடம் மீண்டும் தகராறு செய்தனர். அவர்களைப் படகிலிருந்தே இறங்கக்கூடாதென மிரட்டிச் 'சிறை'ப் படுத்தி விட்டனர். அப்போது நரேன் யாரும் கவனியாதபடி படகிலிருந்து கரையில் குதித்தான். சற்று தூரத்தில் உலவிக் கொண்டிருந்த இரண்டு ஆங்கிலேய சிப்பாய்களை அணுகினான். தனக்குத் தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தில் தனது கோஷ்டிக்கு நேரிட்ட இக்கட்டை அவர்களிடம் கூறினான்.

Koviloor Digital Library

தன்னுடைய சிறு கைகளை வளைத்து அவ்விருவர் கையுடனும் கோத்துக்கொண்டு அவர்களையே படகுநின்ற கட்டத்துக்குத் தள்ளிக்கொண்டு வந்துவிட்டான்! நரேனின் செயலும், சொல்லும் அவர்களின் பரிவைப் பெற்றன. அவர்கள் படகோட்டிகளிடம் அப்பிள்ளைகளை விடுவிக்குமாறு கடிந்து கூறினர். அந்த நாளில் வெள்ளைக்கார சிப்பாயின் உத்தரவு என்றால் சும்மாவா? படகோட்டிகள் மறுபேச்சின்றிப் பையன்களை இறங்கிச் செல்ல விட்டனர்.

நரேனைத் தங்களுடன் ஏதோ களியாட்டம் பார்க்க அழைத்தனர் சிப்பாய்கள்.

''மெத்த நன்றி ஐயா, நான் வருகிறேன்!'' என்று விடை பெற்றுக் கொண்டான் அவன். மிகவும் பெரும் போக்கானவன் நரேந்திரநாதன்.

* * *

நரேந்திரனுக்கு அப்போது பிராயம் பதினொன்று.

ஸிராபிஸ் என்ற ஆங்கிலேயப் போர்க்கப்பல் கல்கத்தா துறைமுகத்துக்கு வந்திருந்தது. ஏழாவது எட்வர்ட் மன்னர் வேல்ஸ் இளவரசராக இந்தியாவுக்கு விஜயம் செய்தபோதுதான் இந்த யுத்தக்கலமும் வந்திருந்தது.

நரேனுடைய தோழர்கள் தாங்கள் எல்லாரும் அந்தக் கப்பலைக் காண்பதற்கு எப்படியேனும் ஓர் அனுமதிச் சீட்டுப் பெறுமாறு அவனிடம் கேட்டுக் கொண்டனர். ஆங்கிலேய அதிகாரி ஒருவரிடமிருந்துதான் இந்தச் சீட்டைப் பெறமுடியும். அவரைக் காண்பதற்காக விண்ணப்பத்தாளும் கையுமாகப் புறப்பட்டான் நரேன். துரையை அவ்வளவு சுலபமாகக் கண்டுவிட முடியுமா? அதுவும் ஓர் இந்தியச் சிறுவன்? துரையின் அலுவலக வாசலில் இருந்த 'நந்திகேசுவரன்' நரேந்திரனை உள்ளே அனுப்பவே மறுத்துவிட்டான்.

'இப்போது என்ன செய்யலாம்? தோல்வியுடன் திரும்பி வழக்கமே இல்லையே!' என்று நரேந்திரன் யோசிக்கலானான். அதிகாரியைப் பார்த்துவிட்டு வருபவர்கள் அந்தக் கட்டிடத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில்தான் அவரைக் கண்டிருக்க முடியும் என்று உத்தேசமாக மாடியில் ஓர் இடத்தை அநுமானம் செய்து கொண்டான் அறிவுக் கூர்மை மிக்க நரேந்திரன். அந்த இடத்துக்குச் செல்ல வேறேதேனும் வழி இருக்குமா என்று துழாவலானான். அதிருஷ்டவசமாகக் கட்டிடத்தின் பின்புறத்தில் ஒரு மாடிப்படிக்கட்டும் இருந்தது. யாரும் அறியாதபடி அதில்

Koviloor Digital Library

பதுங்கிப் பதுங்கி ஏறலானுன் பாலகன். படிக்கட்டு முடியும் இடத்தில் ஒரு திரை.

திரையை விலக்கினுல்....

என்ன விந்தை! நரேந்திரன் தான் காணவிரும்பிய துரையின் அறைக்குள்ளேயே நிற்கிருன்! அவனுக்கு முன்பு இன்னும் சிலர் விண்ணப்பத்தாளுடன் நின்றுகொண்டிருந்தனர். அவர்கள் பின்னே நரேனும் சென்ருன். தன் முறை வந்தபோது விண்ணப்பத்தாளை அதிகாரியின் முன்பு வைத்தான். ஓர் ஆக்ஷேபணையும் எழுப்பாது அவர் அந்த விநாடியே அதில் கையெழுத்திட்டார்.

தன்னுடைய நண்பர்கள் யாவரும் போர்க்கப்பலைக்காண அநுமதி பெற்ற சந்தோஷத்துடன் நரேந்திரன் தைரியமாக வாயில் புறமாகவே வெளியேறினுன். துரையின் அறையிலிருந்து அவன் வெளிவருவதைக் கண்ட 'நந்திகேசுவர' னுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''நீ எப்படித் தம்பி, உள்ளே போனுய்?'' என்று அவன் நரேந்திரனைக் கேட்டான்.

''எப்படியா? நான் ஒரு மந்திரவாதியாக்கும்!'' என்ருன் நரேன்.

* * *

நவகோபால் மித்ராவின் உடற்பயிற்சிக் கூடத்திற்கு நரேந்திரநாதன் செல்வதுண்டு என்று முன்பே கண்டோமல்லவா? மித்ரா அவனுக்குத் தேகப்பயிற்சியிலுள்ள ஈடுபாட்டைக் கண்டு அதன் நிர்வாகப் பொறுப்பு முழுவதையும் அவனிடமே விட்டு விட்டார். ஒரு நாள் நரேனும் அவனது நண்பர்களும் 'ட்ரபீஸ்' என்ற தேகப்பயிற்சி சாதனத்தைக் கூரையில் பொருத்தப் பெறு முயற்சி செய்து கொண்டிருந்தனர். இரண்டு கயிறுகளைக் கூரையில் பொருத்தி, அவற்றில் குறுக்குக் கட்டைகளைத் தொங்கவிட்டு, இந்தக் கட்டைகளைப் பிடித்துக்கொண்டு தேகாப்பியாசம் செய்வதுதான் 'ட்ரபீஸ்' பயிற்சி. பளு மிகுந்த 'ட்ரபீஸை' இந்தப் பிள்ளைகள் பொருத்த முயல்வதைக் காண ஒரு சிறு கூட்டம் சேர்ந்துவிட்டது. அதில் ஓர் ஆங்கிலேய மாலுமியும் இருந்தான்.

சிறுவர்கள் சிறிது சிறிதாக 'ட்ரபீஸை' உயர்த்திக் கொண்டிருந்தார்கள். பளு தாங்கவே முடியவில்லை. அப்படியே அதனை விட்டு விட்டார்கள். தடாலென்று கீழே விழுந்தது 'ட்ரபீஸ்'. அதுவும் குறிபார்த்து அந்த ஆங்கில மாலுமியின் மீதே விழுந்து தொலைத்தது. அவன் அப்படியே பிரக்ஞை இழந்து தரையில் சாய்ந்தான்.

Koviloor Digital Library

கூட்டத்தினர் அவ்வளவு பேரும் சிதறி ஓடிவிட்டனர். ஆங்கிலேயன் ஒருவன் இந்தியாவில், இந்தியர்களின் அஜாக்கிரதையால் சாகப்படுமா ? அந்த அஜாக்கிரதை வியாபாரத்தைப் பார்த்துக் கொண்டிருப்பது கூடப் பயங்கரமான குற்றமல்லவா ? சுவாமி விவேகானந்தர் கொட்டிய அத்தனை வீர முரசொலியும் தேவைப்பட்ட நிலையில் மக்கள் மாக்களாக அடிமை செய்து வந்த காலமாயிற்றே அது ! எனவே மாலுமி மயங்கி விழுந்ததும் அவன் மாண்டே விட்டதாக எண்ணிப் பார்வையாளர்கள் ஓட்டம் பிடித்தனர். நரேந்திரனின் தோழர்களிலும் பலர் அங்கிருந்து 'பிய்த்துக்' கொண்டனர். நரேந்திரனும் ஓரிரு நண்பர்களும் மட்டுமே மூர்ச்சித்து விழுந்த மாலுமியுடன் தனித்து விடப்பட்டனர். நரேந்திரன் மக்களின் செய்கையால் சிறிதேனும் மனம் கலங்கவில்லை. காயமுற்று விழுந்த ஆங்கிலேயனைக் கண்டு தான் இரக்கத்தால் மனது கலங்கினான். எனினும் அவனுக்கே உரித்தான மன உறுதியும், தெளிவும் உடனேயே பிறந்தன. தன் ஆடையைக் கிழித்து மாலுமியின் காயத்தைக் கட்டினான். அவனுடைய முகத்தில் நீர் தெளித்து, மெல்ல விசிறினான்.

மாலுமிக்கு மயக்கம் தெளிந்தது. நரேன் அவனைத் தூக்கலாகப் பிடித்தவாறே அருகிலுள்ள பள்ளி ஒன்றுக்கு இட்டுச் சென்றான். வைத்தியரும் வரவழைக்கப்பட்டார். ஒரு வாரத்தில் ஆங்கிலேயன் சொஸ்தமானான். அவன் பூரண குணமாகிக் கிளம்பும்போது நரேந்திரன் அவனிடம் ஒரு சிறிய பணமுடிப்பை அன்புடன் கொடுத்தான்.

நரேந்திரனே தன் நண்பர்களிடம் சேகரம் செய்து, தன் பங்கையும் செலுத்திய தொகைதான் அது !

* * *

விளையாடித் திரிந்த இந்தப் பருவத்திலும் நரேந்திரனின் துறவற விருப்பம் உள்ளூர விம்மிக் கொண்டேதான் இருந்தது. தன்னுடைய கையிலுள்ள ஒரு ரேகையைக் காட்டி அவன் நண்பர்களிடம் சொல்வான்: ''நான் நிச்சயமாக ஒரு சந்நியாசியாகத்தான் ஆகப்போகிறேன். ரேகை சாஸ்திரி ஒருவர் அப்படிச் சொல்லியிருக்கிறார்''—என்று.

கையில் மட்டும் தானா ரேகை ? அவனுடைய இதயத்திலும் அல்லவா ஏதோ ஒரு ரேகையிருந்தது. அந்த ரேகை மேலும் மேலும் ஆழ்ந்து சென்று, அந்தப் பிளவின் மூலமாக அவனுடைய இரத்தமே மனிதகுலத்துக்காகக் கசிவதற்கல்லவா காத்துக் கொண்டிருந்தது ?

Koviloor Digital Library

அத்தியாயம் 4

ஆத்மாவின் அழைப்பு

சிறுவன் நரேந்திரநாதனின் மீது வாலிபத்தின் சாயை வீசத் தொடங்கியபோது அவனது மனோபாவங்களும் மாறுதல் கண்டன. கடினமான விஷயங்களை விழுந்து விழுந்து படித்தான் அவன். அறிவாராய்ச்சிகளில் அதிகமாக ஈடுபட்டான். இலக்கியத்திலும் சரித்திரத்திலும் தனியானதோர் ஆர்வம் காட்டினான். செய்தித்தாள்களைத் தவறாமல் படித்தான். பொதுக் கூட்டங்களுக்குச் சென்று வரலானான். தான் காண்பதையும் கேட்பதையும் குறித்துப் புதுப் புதுக் கோணங்களில் விமரிசிக்கும் திறனால் தன் சகாக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தினான். வாதிக்கும் சாதுரியம் அப்போதே நரேனிடம் ஓங்கிவிட்டது.

சங்கிதத்தில் நரேந்திரனுக்கு விசேஷமான ஈடுபாடு இருந்தது. ஒரு நாள் அவனுடைய நண்பன் ஒருவன் வித்வான்களின் பாணியில் தடபுடலாகப் பாடினான். அப்போது நரேன், ''கால நிர்ணயம் செய்தும், ராகத்தை மட்டும் மனதில் வாங்கிக் கொண்டும் மட்டும் பாடுவது இசையாகாது. காலப் பிரமாணத்துக்கும், ராகத்துக்கும் கவனம் செலுத்த வேண்டியதுதான். ஆனால் அதுமட்டில் போதாது. பாடுபவன் பாட்டின் பொருளை உணர வேண்டும். அதன் உணர்ச்சி பாடுபவனின் உணர்ச்சியைக் கிளர வேண்டும். பாடுபவன் பொருள் உணர்ந்து, வார்த்தைகளையும் சரிவர உச்சரிக்கவேண்டும். பாடுபவனின் உள்ளத்தில் ஒத்த உணர்ச்சியை ஏற்படுத்தாத பாட்டு இசையாகாது'' என்றான். பாடல்கள் மகோன்னதமான உட்பொருள் உடையனவாக இருக்கவேண்டும் என்பது நரேந்திரன் கருத்து.

* * *

1877-ம் ஆண்டு, அதாவது நரேந்திரனுக்குப் பதினைந்து வயது நடக்கும்போது, அவனுக்கு ஓர் ஆனந்தாதிசய அநுபவம் கிட்டியது.

நரேந்திரன் உயர்தரப் பள்ளியில் மூன்றும் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது விசுவநாத தத்தர் மத்தியப் பிரதேசத்திலுள்ள ராய்ப்பூரில் சில ஆண்டுகள் குடிபெயர்ந்திருக்க நேர்ந்தது. தத்தர் முதலில் ராய்ப்பூர் சென்று விட்டார். பிறகு குடும்பத்தினருடன் நரேனும் கல்கத்தாவை விட்டுக் கிளம்பினான்.

அந்த நாளில் நாகபுரிக்கு அப்பால் ரயில் கிடையாது. எனவே அலஹாபாத், ஜபல்பூர் வழியாகக் கட்டை வண்டிகளி

Koviloor Digital Library

லேயே நீண்ட பயணம் நடைபெற்றது. வழிநெடுக எத்தனையோ வன வனாந்தரங்கள், ஜன சஞ்சாரமற்ற பல பாட்டைகள்! ஆங்காங்கே கிராமங்கள், வயல்கள், நீர் நிலைகள். ஆடி ஆடிக் கொண்டு மாட்டு வண்டியில் சென்ற நரேந்திரன் மாறி மாறி வரும் இயற்கைக் காட்சிகளையும், மக்களையும் ரஸித்துக் கொண்டே சென்றான். அந்த இயற்கை எழிலைக் காணும் போதுதான் அவனுக்கு அற்புத அநுபவம் கை கூடிற்று.

அன்று என்னவோ வானமே கழுவி விட்டதுபோல் 'மொர மொரக்க'ப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. காற்றிலும் ஒரு அதிசயமான தெளிவு இருந்தது. அந்த வானத்தைப் பின்னணியாகக் கொண்டு, காற்றில் மர்ம ஒலி எழுப்பிய மரங்களின் இலைகளிலும், கொத்துக் கொத்தாகப் பூத்திருந்த மலர்களிலும் என்றுமில்லாத ஒரு தூய்மையும், பசுமை ஒளியும் ததும்பின. அவற்றில் கூவும் பட்சியினங்கள் தங்கள் கீதத்தின் எதிரொலி அலைகளை நரேந்திரனின் உள்ளத்தில் எழுப்பி நிரப்பின. இத்தனை அழகுகளுக்கும் எல்லைகட்டி வரையறை செய்தன் சாலையின் இரு புறத்தையும் நெருக்கிய விந்திய பர்வதத்தின் உன்னதமான தொடர்கள். புள்ளினங்களின் நூறு நூறு சப்த ஜாலங்கள். அவற்றின் இறகில் நூறு நூறு வண்ண ஜாலங்கள். அதற்கும் மிஞ்சி மரங்களிலும், கொடிகளிலும் பூத்துக் குலுங்கிய புஷ்பங்கள் எத்தனை எத்தனையோ நிற பேதங்கள். அவற்றைச் சுற்றி 'ஜிவ்' என்று ரிங்காரமிடும் தேனீக்களின் இசையில் எத்தனை எத்தனையோ ஸ்வர பேதங்கள். பரமரஸிகனான நரேந்திரனும் ஒரு தேனீயாகி இந்த இயற்கை எழிலில் ஊறும் தேனை மாந்திக் கொண்டிருந்தான்.

ஆகா, இத்தனை சௌந்தரியங்களுக்கும் சிகரம் வைத்தது போல அதோ அந்த மலைச் சிகரங்களிடையே அதென்ன அற்புதக் காட்சி! ஒரே சிகரம் பிளந்து இரு சிகரங்களாக நிற்பது போன்ற அந்த இடைவெளியில் எத்தனை பெரிய தேன்கூடு! ஆமாம், எத்தனை பெரியது! அவ்வளவு உயரத்தில் இவ்வளவு பெரிய தேன் தேக்கத்தை எழுப்ப எத்தனை காலம் பிடித்திருக்கும்! இவ்வளவு பெரிய கூட்டை நிர்மாணிக்க எத்தனை ஆயிரம், பதினாயிரம் தேனீக்கள் தேவையாயிருக்கும்! இசைச் சுவையும், இன்சுவையுமே வாழ்க்கையான அந்தக் கலை ஜந்துக்கள் அவ்வளவும் இசைந்து எழுப்பிய அற்புதம் அல்லவா, அதோ அந்த மலைச் சிகரத்தில் தொங்கும் பிரம்மாண்டமான தேன்கூடு!

மேலே நிர்மலமான விரிந்து பரந்த ஆகாசம்! அந்த நிர்மலத்தோடு பிரிக்க முடியாத நீலமயமான உன்னத மலை முகடுகள்!

Koviloor Digital Library

மலை முகட்டில் சின்னஞ் சிறிய ஜீவராசிகளின் மகோன்னதமான ஒத்துழைப்பு நிறுவிய தனித் தடாகம். இந்த விரிந்து பரந்த ஆகாயம் எங்கிருந்து வந்தது? அதன் நிர்மலம் எங்கிருந்து வந்தது? இந்த உன்னதமான மலைத்தொடர்கள் எங்கிருந்து வந்தன? அவற்றின் நிர்மலம் எங்கிருந்து வந்தது? லட்சோப லட்சமான அந்தச் சின்னஞ் சிறு தேனீக்கள் எங்கிருந்து வந்தன? அவற்றின் மகோன்னதமான, நிர்மலமான ஒத்துழைப்பு எங்கிருந்து வந்தது?

எங்கிருந்து, எங்கே யிருந்து?

எங்கிருந்து இந்த சுந்தரமயமான பெருமைகள் உதித்தனவோ அங்கேயே ஆழ்ந்து அமிழ்ந்து விட்டான் நரேந்திரன். மலரின் மென்மையும், மணமும், இனிமையும் மரங்களின் பசுமையும், கொடிகளின் நளினமும், வண்டினங்களின் அன்பான உழைப்பும், பட்சிகளின் தேன் ஒலியும், மலைகளின் மௌனமும், வானத்தின் காம்பீர்யமும் எந்த ஒரு மகாமதியின் கற்பனையில் உதித்தனவோ அந்த மகாமதியிலேயே மூழ்கிவிட்டான் நரேன். சிறிய ஒலியைப் பேரொலி அமுக்குவதுபோல், சிறிய ஒளியைப் பேரொளி மங்கச் செய்வதுபோல நரேந்திரன் கண்ட ஒலிமயமான, ஒளிமயமான அதிசயப் பிரபஞ்சத்தை அதிசயமற்றதாக்கும் ஆதார ஒலியில், ஆதார ஒளியில் அவன் மூழ்கிக்கொண்டிருந்தான்!

நரேந்திரன் எவ்வளவுகாலம் சுயநினைவிழந்து கட்டை வண்டியில் கிடந்தானென்று நாம் சொல்ல முடியாது. அநுபவம் செறிந்த அகவாழ்வுக்குக் கடிகாரத்தைக் கொண்டு காலம் கணிக்க முடியுமா, என்ன?

நறும் புனலில் நீராடிவிட்டுத் திரும்பும்போது உடலில் புதுப் பொலிவு காண்பது போல, அழகுப் புனலில் குளித்து உள்ளத்தில் புதுப் பொலிவுடன், சாந்தியுடன், சௌந்தரியத்துடன் நரேந்திரன் கண்விழித்தபோது கட்டை வண்டி ஆடி அசைந்து கொண்டே பல கல்கள் கடந்துவிட்டன.

இதுவே நரேந்திரனின் முதலாவது பரவச நிலை!

* * *

'அநித்தியமான பொருளைக் கொண்டு நித்தியப் பொருளை அடைந்தேன்' என்று உபநிஷத்தில் வரும். அநித்தியமான எல்லாப் புறத்தோற்றங்களிலும் நித்தியமான அக அழகும், அன்பும், அன்பு என்ற அழகும் இருப்பதால்தான் அவை நித்திய வாழ்வுக்கு வழி கூட்டுகின்றன. இயற்கையிலுள்ள இந்தச் சாகாத அழகையும், உயிர்க்குலத்தில் உள்ள சாகாத அன்பையும் நரேந்

Koviloor Digital Library

திரன் புரிந்துகொண்டுவிட்டான்! அமர ஜீவனத்துக்கு முதற் படி எடுத்து வைத்து விட்டான்!

* * *

சிறுவயதிலிருந்தே நரேந்திரனுக்கு இன்னெரு விசித்திர அநுபவமும் ஏற்படுவதுண்டு. இதைப்பற்றிப் பிற்பாடு சுவாமி விவேகானந்தர் கூறியதையே இங்கு பார்ப்போம்:

''என்னுடைய பாலியத்திலிருந்து நான் ஏதேனும் ஒரு பொருள், மனிதன் அல்லது இடத்துடன் தொடர்பு கொள்ளும் போது அந்தப் பொருளேயோ, மனிதனேயோ, இடத்தையோ முன்பே அறிந்திருந்தது போலச் சில சமயங்களில் தோன்றும். எப்போது அவ்வாறு பரிச்சயம் கொண்டிருந்தோம் என்று எவ்வளவு சிந்தித்தாலும் விடை கிடைக்காது. ஆனுல் அது முன்பே பழக்க மானது என்ற எண்ணம்மட்டும் நீங்காமல் நிற்கும்.

''ஓர் உதாரணம், பாருங்கள். ஒரு நாள் குறிப்பிட்டதோர் இடத்தில் நண்பர்களுடன் பல விஷயங்களே விவாதித்துக்கொண் டிருந்தேன். யாரோ என்னவோ சொன்ஞர்கள். உடனே எனக்குத் திடீரென ஒரு ஞாபகம் எழுந்தது. 'முன் எப்போதோ இதே இடத்தில் இதே நண்பர்களுடன் இதே விஷயங்களேப்பற்றி நான் விவாதித்திருக்கிறேன். இன்று போலவே அன்றும் விவா தத்தின் ஒவ்வொரு படியும் அமைந்திருக்கிறது.'—இப்படி ஓர் எண்ணம் எழுந்தது.

''புனர்ஜன்ம நியதியினுல்தான் இவ்வாறு தோன்றுகிறது என்று பிற்காலத்தில் எனக்குத் தோன்றியது. எனினும் இவ் வாறு தீர்மானமாக முடிவு கட்டுவது இவ்விஷயத்தில் பகுத் தறிவுக்குப் பொருந்திய விளக்கமாகாது என்றும் கருதினேன். எவ்வாறே, நான் பிறப்பெடுக்கும் முன்பே, இந்த ஜன்மத்தில் தொடர்புகொள்ளப்போகும் பொருள்களேயும், மனிதர்களேயும் கண்டிருக்கிறேன் என்பதே என் இப்போதைய நம்பிக்கை. அந்தக் காட்சியின் நினேவே என் வாழ்வு முழுவதும் அவ்வப்போது என் முன் வந்து நிற்கிறது.''

* * *

ராய்ப்பூரில் நரேந்திரன் படிக்கக்கூடிய பள்ளி ஏதுமில்லே. இதனுலும் அவனுக்கு ஒரு லாபம் கிடைத்தது. உயர்மதி படைத்த விச்வநாத தத்தருடன் நெருங்கிப் பழகும் பேறுதான் அது. சுறுசுறுப்புடனும், நிர்க்கமாகவும் சிந்தித்து விடை காண வேண்டிய விஷயங்களேத் தனயனுடன் பரிமாறிக் கொள்வார் தந்தை. பிள்ளேயின்மீது எந்தக் கருத்தையும் திணிக்காமல் அவ னுக்குப் பூரணமான சிந்தனு சுதந்திரம் அளித்திருந்தார் விசுவ

Koviloor Digital Library

நாதர். எந்த ஒரு விஷயத்திலும் முக்கியமல்லாத அம்சங்களை விலக்கி அதன் மையக்கருவைக் கிரகித்துக்கொள்வது, அதனின்று கவனம் சிதருமல் ஒருமுகப்படுத்துவது, உண்மையைத் தெளிவாகப் பிரித்து பலகோணங்களிலிருந்து உறுதிப் படுத்திக் கொள்வது — இவை வழக்கறிஞர் விசுவநாத தத்தரின் விசேஷமான குண நலன்களாகும். இவற்றை அப்படியே தந்தையிடமிருந்து பெற்ருன் நரேந்திரநாதன்.

கல்வியிற் சிறந்த பலர் விசுவநாத தத்தருடன் சம்பாஷிக்க வருவார்கள். அந்தச் சம்பாஷணைகளை ஆர்வத்துடன் கேட்பதுடன், சிற்சில சமயங்களில் தானுமே அவற்றில் கலந்து கொள்வான் நரேன். தன்னுடைய வாதங்களையும் அவர்கள் உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும், சிறுவனின் பேச்சாக எண்ணி அவற்றை புறக்கணிக்கக்கூடாது என்பதில் நரேந்திரன் மிகவும் திவிரமாக இருந்தான். யாராயினும் தனது மதிநுட்பத்துக்கு உரிய அங்கிகாரம் அளித்தேயாகவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தான். தன்னை அலக்ஷியப்படுத்துபவர் அறிவில் எவ்வளவு பெரியவராயினும், தந்தையின் ஆப்த நண்பராயினும் அவன் பொறுத்துக் கொள்ள மாட்டான். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் அவனுக்குக் கன கோபம் வந்துவிடும். தன்னிடம் மன்னிப்புக் கேட்காதவரை எதிராளியைச் சும்மா விடமாட்டான் அவன். புத்திரனின் புத்தி திக்ஷண்யத்தையும் தன்மான உணர்வையும் தத்தர் மனதுக்குள் பாராட்டிக் கொள்வார். எனினும் மூத்தோரிடம் அவன் அவ்வாறு நடந்துகொள்வது விநயமாகாது என்று அவனை வெளிப்படக் கண்டிப்பார்.

* * *

தேக உபாதி எதுவுமின்றிச் செழிப்பாக வளர்ந்து வந்தான் நரேன். காளைப் பருவத்துக்குக் கட்டியம் கூறிய அந்த நாளிலேயே க்ஷத்திரிய குலத்து வீர கம்பீரம் அவன் தோற்றத்தில் தெளிவாக மெருகிட ஆரம்பித்தது. அப்புறம் பிரம்மதேஜஸும் கூடி அவர் துலங்கிய கோலத்தைத்தான் நாம் சித்திரங்களில் காண்கிறோம்.

நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் மிகவும் பாகுபாடு காட்டத் தொடங்கினுன் நரேன். நல்லொழுக்கம் உள்ளவர்களுடன் மட்டும் சிநேகம் பூண்டான்.

* * *

இரண்டாண்டுகள் ராய்ப்பூர் வாசம் ஆயிற்று. 1879-ம் வருஷத்தில் மீண்டும் கல்கத்தாவுக்குத் திரும்பியது தத்தர் குடும்

Koviloor Digital Library

பம். நரேனை மறுபடியும் பள்ளியில் சேர்ப்பதில் ஒரு சிக்கல் ஏற்பட்டது. இரண்டாண்டுகள் படிப்பு முறிவுபட்டதால் அந்த இரு வகுப்புகளுக்கு மேல் அவனை அநுமதிக்க ஆக்ஷேபம் எழுந்தது. எனினும் நரேந்திரனுடைய ஆற்றலை அந்தப் பள்ளியினர் அறிந்திருந்தபடியால் அவன் இரண்டாண்டு இடைக்காலத்துக்குப் பின்பு எந்த வகுப்பில் படிக்கவேண்டுமோ அந்த வகுப்புக்கே அவனை அநுமதித்தனர். அந்த இரண்டாண்டுப் படிப்புடன், தான் சேர்ந்துள்ள மூன்ருவது ஆண்டுப் படிப்பையும் சேர்த்து மூன்று வருஷப் பாடத்தை ஒரே வருஷத்தில் கற்றுத் தேர்ச்சி பெற்ருன் சூரன் நரேன். எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சைக்குச் சமமான சர்வகலா சாலை அநுமதிப் பரீட்சையில் முதல் வகுப்பில் தேறினுன். நரேந்திரனுடைய பள்ளியிலேயே அந்த ஆண்டில் அவனொருவன்தான் அவ்வளவு சிறப்பாகத் தேறியிருந்தான்.

முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற நரேந்திரனுக்குக் கடிகாரம் ஒன்றைப் பரிசளித்தார் விசுவநாத தத்தர்.

* * *

சர்வகலாசாலை அநுமதிப் பரீட்சைக்கு முன்னுல் பள்ளியில் இறுதி வகுப்பில் படித்துக்கொண்டிருந்த நரேந்திரன் ஆங்கில, வங்காளி இலக்கியங்களைத் தணியாத தாகத்துடன் பருகிக் கொண்டிருந்தான். மார்ஷ்மான், எல்பின்ஸ்டன் ஆகியோர் எழுதிய இந்திய சரித்திர நூல்களையும், தனி அக்கறையுடன் படித்து வந்தான். இதனுலெல்லாம் வகுப்புப் பாடங்களில் கவனம் செலுத்துவது அவனுக்கு இயலாமற்போயிற்று. பரீட்சைக்குச் சில தினங்களே இருந்தன. அப்போதுதான் நரேன் பாடப்புத்தகங்களை எடுத்து வைத்துக்கொண்டு உட்கார்ந்தான்.

இன்னும் மூன்றே தினங்கள்தான் இருந்தன பரீட்சைக்கு. க்ஷேத்திர கணிதப் (Geometry) புத்தகத்தைப் பிரித்த நரேனுக்குத் தலையைச் சுற்றியது. அந்தப் புத்தகத்திலிருந்த வட்டங்கள் இடம் பெயர்ந்து வந்து அவன் தலையைச் சுற்றி வருவன போலிருந்தன. நெஞ்சுரம் மிக்கவனல்லவா அவன்? ஒருவாறு தன்னைச் சுதாரித்துக்கொண்டான். அன்று இரவு முழுவதும் க்ஷேத்திர கணித அப்பியாசங்களை அடியிலிருந்து தொடங்கிப் படிக்கலானுன்.

இருபத்துநாலே மணிகளில் இறுதி வரையில் நாலு க்ஷேத்திர கணித நூல்களையும் பயின்று விட்டான். பரீட்சையில் தேர்ச்சி பெற்றுவிட்டான் என்பதைத்தான் முன்பே கண்டோமே!

வரி வரியாகப் படிக்காமலே கருத்தைப் புரிந்துகொள்ளும் திறமை நரேந்திரனுக்கு உண்டாகிவிட்டது. இந்தச் சக்தி தமக்கு வாய்க்கப் பெற்றது பற்றி சுவாமி விவேகானந்தர் கூறுகிருர்:

Koviloor Digital Library

''ஒரு புத்தகத்திலுள்ள ஒவ்வொரு வரியையும் படிக்காமலே ஆசிரியர் என்ன கூறுகிறார் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. இந்தச் சக்தி வளரவளர 'பாரா' 'பாரா' வாகப் படிக்கவேண்டிய அவசியம்கூட எனக்கில்லை எனக் கண்டேன். ஒவ்வொரு பக்கத்திலும் முதல் வரியையும், கடைசி வரியையும் படித்தாலே விஷயத்தைப் பின்பற்ற முடிந்தது. அதுவுமன்றி, ஏதேனும் ஒரு விஷயத்தை ஆசிரியர் விளக்கி விஸ்தரிப்பதற்கு நாலைந்து பக்கங்கள் பிடித்த தென்றால், அந்த நாலைந்து பக்கத்திலும் தொடக்கத்தையும் முடிவையும் படித்தாலே முழுப் போக்கையும் என்னால் கிரகித்துக்கொள்ள முடிந்தது.''

* * *

குழந்தைப் பருவத்தின் கும்மாளமெல்லாம் ஓய்ந்துவிட்டன. பதினேழு பிராயத்து நரேந்திரநாத தத்தா கல்கத்தா மாநிலக் கல்லூரி (Presidency College) யில் சேர்ந்து விட்டான். ஓராண்டுக்குப்பின் ஸ்காட்லாந்தைச் சேர்ந்த மிஷனரிகள் நடத்திவந்த பொதுச்சபை நிலையத்தில் (General Assembly's Institution) சேர்ந்து படிப்பைத் தொடர்ந்தான். (பிறகு இந்த நிலையமே 'ஸ்காட்டிஷ் சர்ச் கல்லூரி' என்று பெயர் பெற்றது.)

கல்லூரியில் சேர்ந்த புதிதில் நரேனுக்கு உடல் நலம் அவ்வளவு செவ்வையாக இல்லை. பரீட்சையின்போது அதிகமாகப் படித்ததாலும், புதிதாக யோக சாதனங்களை அப்பியசிக்கத் தொடங்கி யிருந்ததாலும் அவனுக்கு நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டிருந்தது. இடம் மாறியிருந்தால் நல்லதென்று கயா க்ஷேத்திரத்துக்குச் சென்று வந்தான் அவன்.

1881-ம் ஆண்டு எப்.ஏ. பரீட்சைக்குச் சமமான முதல் கலைப் பரீட்சை (First arts examination)யில் இரண்டாம் வகுப்பில் தேர்வு பெற்றான் நரேந்திரன்.

அந்த ஆண்டுதான் அவனுடைய வாழ்க்கையின் அதி முக்கியமான சம்பவம் நிகழ்ந்தது. அவனுடைய தனி வாழ்க்கையில் மட்டும் முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம் அன்று அது. இந்திய சமய சரித்திரத்திலேயே முக்கியத்துவம் பெற்ற பெரு நிகழ்ச்சி அது. தக்ஷிணேசுவரத்துத் தபோநிதியாகிய ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரை நரேந்திரன் சந்தித்தது அந்த வருஷம் நவம்பர் மாதத்தில்தான்.

ஸ்ரீராமகிருஷ்ண தேவரைப் பற்றி நரேன் கேள்வியுற்றது பொதுச்சபை நிலையத்தின் முதல்வரான பேராசிரியர் வில்லியம் ஹேஸ்டியிடமிருந்து. மாபெரும் கல்விமானாகிய வில்லியம்

Koviloor Digital Library

ஹேஸ்டி நரேந்திரனின் வகுப்புக்கு ஆங்கில இலக்கியம் கற்பித்து வந்தார். வேட்ஸ் வொர்த்தின் 'எக்ஸ்கர்ஷன்' என்ற அற்புதமான கவிதையை மாணவர்களுக்கு விளக்கி வந்தார் ஹேஸ்டி. இயற்கை எழிலை அநுபவித்து வந்த கவி தன் நினைவு மறந்து பரவசமுற்ற நிலை கவிதையில் வந்தது. பரவச அநுபூதி நிலை என்றால் என்ன என்பது மாணவர்களுக்குப் புரியவில்லை. ('மாணவர்களுக்கு' என்பதாக நரேந்திரனையும் சேர்த்துச் சொல்வது தவறாக இருக்கலாம்; ஏனெனில் வேட்ஸ் வொர்த் அநுபவித்த பரவச நிலையை நரேந்திரன் ராய்ப்பூர் பயணத்தின்போது துய்த்திருக்கிறானல்லவா ?)

தன் வயமிழந்து தன் கருத்தைக் கவர்ந்த பொருளின் கருவில் கரைந்திருக்கும் பரவச நிலையைப் பேராசிரியர் எப்படி விளக்க முடியும் ? அவர் கூறினார்: ''அகத்தூய்மையாலும், ஒருமுகப்படுத்திய உணர்வாலும்தான் இந்தப் பரவச நிலையை எய்த முடியும். இந்தக் காலத்தில் இத்தகைய நிலைக்குச் செல்பவர்கள் மிகவும் துர்லபம். எனினும் அப்படிப்பட்ட புனிதமான மனநிலை படைத்த அநுபூதிமான் ஒருவரை நான் கண்டிருக்கிறேன். தக்ஷிணேசுவரத்தில் வாழும் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர்தான் அவர். நீங்களும் அங்கே சென்று அவரைக் கண்டால் 'பரவசம்' என்றால் என்ன என்று தெரிந்துகொள்ளலாம்.''

எங்கோ தூரத்திலிருந்து ஓர் ஒலி எழுந்து நரேந்திரனின் ஆத்மச் செவியில் புகுந்தது.

* * *

பாடத்திட்டத்திலுள்ள புத்தகங்களோடு நரேன் தனது படிப்பை நிறுத்திக் கொள்ளவில்லை. கல்லூரியில் சேர்ந்த முதல் இரண்டாண்டுகளில் மேனாட்டுத் தர்க்க சாஸ்திரம் (Logic) அவ்வளவையும் கரைத்துக் குடித்தான் அவன். பீ.ஏ. படிக்கும்போது மேனாட்டுத் தத்துவ சாஸ்திரங்களையும் புராதன, நவீன சரித்திரங்களையும் விரிவாகப் படித்தான்.

ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றின் வரலாற்றையுமே நரேன் படித்தது உண்மைதான். எனினும் பீ.ஏ. வகுப்பில் அவன் படிக்க வேண்டியிருந்த, கிரின் என்பார் எழுதிய ஆங்கில மக்கள் சரித்திரத்தை மட்டும் அவன் முறையாகப் பயிலவில்லை. பரீட்சைக்கு ஒரு மாதம்தான் இருந்தது. நரேனிடம் புத்தகப் பிரதி கூடக் கிடையாது. அப்போதுதான் புத்தகமே வாங்கினான். அதைப் படித்து முடிக்குமட்டும் தன் அறையை விட்டு வெளியேறுவதில்லை என்று சங்கல்பம் செய்துகொண்டான். மூன்று

Koviloor Digital Library

நாட்கள் அஹோராத்திரம் கிரீன் சரித்திரத்திலேயே ஊறி விட்டான். அத்தனை விஷயங்களும் அவன் உள்ளத்தில் ஊறிவிட்டன.

. இப்படித்தான் அநேக பாடங்களைப் பரீட்சைக்கு முன்பாகவே தொடக்கத்திலிருந்து முதன் முறையாகப் படிப்பான் நரேன். காபியையோ, தேநீரையோ விழுங்கியபடி இராக்கண் விழித்துப் படிப்பான்.

இது போல பீ.ஏ. பரீட்சைக்கு விழுந்து விழுந்து படித்துக் கொண்டிருக்கும்போதுதான் பரீட்சைக்கு முதல் நாள் காலை ஒரு விசித்திர எண்ணம் எழுந்தது அவனுக்கு. 'இந்தக் கல்வியினால் என்ன பயன்? மெய்ப்பொருள் எனப்படும் சத்திய தரிசனத்துக்கு இந்தப் படிப்புச் சிறிதேனும் உதவுமா?' என்ற வினா அவனுடைய உள்ளத்தில் பிறந்தது. நரேனுக்கும் தெரியாமல் அவன் உள் மனதில் முட்டிக்கொண்டிருந்த எண்ணம் அன்று வெளிப்பட்டுவிட்டது.

மானஸிகமான ஏதோ ஓர் உலகுக்குச் சென்றுவிட்டான் நரேன். இதைப் படிப்பவர்களே! 'மானஸிகம்' என்று கூறியவுடனேயே அது நாம் கண்ணால் காணும் இந்தப் பௌதிக உலகத்தைப் போல சத்தியமானதல்லவென்று எண்ணிவிடாதீர்கள். பௌதிக உலகத்தைவிட சத்தியமான மானஸிக உலகமும் உண்டு. பௌதிக உலகத்தை உருவாக்கியுள்ள பூதங்களும் ஒரு பேரறிவின் மானஸிக எண்ணங்கள்தாம் என்பதை மறவாதீர்கள். நம்முடைய அற்ப மனது புனையும் புல்லிய கற்பனைகள் போன்ற பொய்தான் எல்லா மானஸிக உணர்வுகளும் என்றெண்ணி விடாதீர்கள்!

ஸ்தூல உலகைவிட சத்தியமானதொரு சூக்ஷ்ம உலகில் உலவிக் கொண்டிருந்தது நரேந்திரனின் உள்ளம். அவனுடைய கால்கள் கல்லூரி மாணவர் விடுதியில் உலவிக்கொண்டிருந்தன. தன் வயம் இழந்தாற்போன்ற தோற்றமும், கொழுந்துவிட்டெரியும் முகப் பிரகாசமுமாக நண்பன் ஒருவனின் அறை வாயிலில் நின்று கொண்டான் நரேன். அவனுடைய இனிய உணர்வுகள் இனியதொரு பாடலாக வடிந்தன:

மலைகாள், முகில்காள், மலயமாருதங்காள்!
மூலப்பொருள் மகிமை பாடி மகிழுங்கள்!
சூரியர்காள் சந்திரர்காள், சுடர்வீசும் தாரகைகாள்!
சத்தியப் பொருள் பெருமை பாடிமகிழுங்கள்
பாடி மகிழுங்கள், மகிழ்ந்துணர்ந்து பாடுங்கள்

மலையும், முகிலும், மலயமாருதமும், சூரியனும், சந்திரனும்,

Koviloor Digital Library

சுடர்தாரகையும் பாடவேண்டியதையெல்லாம் நரேந்திரனே பாடினான். பாடி மகிழ்ந்தான்; மகிழ்ந்து பாடினான்.

மணி ஒன்பதாயிற்று. நரேந்திரனுக்கோ இவ்வுலகப் பிரக்ஞையே இல்லை. அவனுடைய நண்பன் ஒருவன்தான் அவனது நினைவை இவ்வுலகுக்குத் திருப்பினான். இவ்வுலகில், இந்தியாவில், கல்கத்தாவில் மறுதினம் நடக்கவிருக்கும் பரீட்சைக்கு நரேனுடைய நினைவைத் திருப்பினான். ஆனால் அந்தப் பரீட்சை சமாசாரம் மிகவும் அற்பமாகத்தான் பட்டது நரேந்திரனுக்கு. ஏனோதானோ வென்று மறுநாள் பரீட்சை எழுத அமர்ந்தான். தேறியும் விட்டான்.

* * *

நரேந்திரனின் இன்னிசை பற்றிப் படித்தோம். அவனுக்கு சங்கீதத்தில் ஆழ்ந்ததொரு நாட்டம் இருந்தது. முறைப்படி சங்கீத சிக்ஷை பயின்றவன் அவன். அஹமத் கான், வேணி குப்தா என்ற இரு இசை வல்லுநர்களிடம் அவன் வாய்ப்பாட்டும், வாத்திய இசையும் சம்பிரதாயமான முறையில் நாலைந்து ஆண்டுகள் பயின்றான். முக்கியமாக, ஹிந்தி, உருது, பெர்ஷிய மொழிகளிலுள்ள துதிப்பாடல்கள் பலவற்றை அஹமத்கானிடம் கற்றுக் கொண்டான்.

கல்லூரியில் ஒரு நாள் ஆசிரியர் வகுப்புக்கு வரத் தாமதமாயிற்று. அப்போது மாணவர்கள் வம்பளக்காதபடி நரேந்திரன் பாடலானான். அவனுடைய தேனிசையின் வசியத்தில் மாணவர்கள் கட்டுண்டனர். மாணவர்கள் மட்டுமல்ல; வகுப்புக்குத் தாமதமாக வந்த ஆசிரியரின் காதுகளிலும் மதுரநாதம் புகுந்தது. அவர் வகுப்பின் வெளியிலேயே இருந்து இன்னிசையைப் பருகி விட்டுப் பாட்டு முடிந்தபின்தான் பாடம் தொடங்கினார்.

கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியர்கள், இந்தியப் பேராசிரியர்கள் யாவருடைய போற்றுதலையும் பெற்றான் நரேன். நரேந்திரநாதனைப் பற்றி ஹேஸ்டி கூறியதைப் பாருங்கள்: ''நரேந்திரநாதன் ஒரு மேதை. நான் பலப்பல நாடுகளில் பிரயாணம் செய்திருக்கிறேன். எனினும் நரேந்திரநாதனைப் போல ஆற்றலும், வளரும் திறனும் படைத்த ஒரு வாலிபனை ஜெர்மனி நாட்டு சர்வகலாசாலைகளில் தத்துவசாஸ்திரம் பயிலுபவர்களிடை கூடக் கண்டதில்லை. வாழ்க்கையில் தனது தனித்துவத்தை அவன் நிச்சயமாகப் பொறிக்கப் போகிறான்.''

நரேனுடன் படித்த ஒருவர் பிற்காலத்தில் அவனது மாணவ வாழ்க்கை பற்றிக் கூறும்போது, ''நரேந்திரர் பேசுவதைக் கேட்கவே எங்களுக்குத் தனி ஆனந்தம் உண்டாகும். அவருடைய

Koviloor Digital Library

குரலே கானமாக இருக்கும். அவருடைய பேச்சழகை ரஸிப்ப தற்காகவே நாங்கள் ஏதேனும் ஒரு விஷயத்தைப் பற்றி வாதம் தொடங்குவோம். அவர் மிகவும் ஆகர்ஷணமுள்ளவர். அதோடு தானுகவே புதுக் கருத்துக்களைக் கூறும் ஆற்றல் பெற்றவர். அந்த நாளிலிருந்தே பலவீனத்தை எங்கு கண்டாலும் வெறுத்தார் அவர்.'

வாதத் திறனில் தனிச் சிறப்பு படைத்திருந்தான் நரேந் திரன். வாதமிடும்போது அவன் பேச்சில் தொனித்த அழுத் தமும், ஆவேசமும், திட்சண்யமும் கேட்போரை அயர்ந்துவிடச் செய்யும். கல்லூரி நாட்களில் அவனது நாவன்மையைக் கண்டு தேசத் தலைவரும், சிறந்த பேச்சாளருமாகிய சுரேந்திரநாத் பானர்ஜி மிகவும் பாராட்டியுள்ளார். பகுத்தறிவுக்கு அவன் பிரதானமான இடம் அளித்தான். அந்தப் பகுத்தறிவின் வழியே பகுத்தறிவுக்கு மேம்பட்ட சாசுவத சத்தியத்தை அறியவும் உள் ளூறத் துடித்தான். உடல்நலம் பேணுவதிலும், லௌகிகக் கல்வி யிலும் பெருத்த கவனம் காட்டினுன் எனினும் போகங்களில் அவன் மனது செல்லவில்லை. அக இயற்கை, புற இயற்கை இரண்டின் அந்தரங்கத்தையும் ஊடுருவி ஆதாரத் தத்துவத்தைக் காண அந்த நாளிலேயே அவன் தவித்தான். ''இயற்கையை மீறிக் கொண்டு கிளம்பப் போராடும் மனிதனே மனிதன்'' என்று பிற்காலத்தில் மொழிந்தவர் விவேகானந்த சுவாமி. இயற் கைக்கு விரோதமாகச் செல்லவேண்டும் என்பதன்று அதன் கருத்து. இயற்கைக்கும் மேலாகச் செல்லவேண்டும்; இயற்கை வேகங்களினுல் மனிதன் கட்டுப்பட்டு விடக்கூடாது என்பதே உபதேசப் பொருள்.

நரேந்திரனுக்கு அடிநாளிலிருந்தே தன் எண்ணங்கள் ஏனைய ருடையதைப் போன்றதல்ல என்பது தெரியும்; தான் தனியொரு முறையில் உருவாகப் போகிருேம் என்பதையும் அவன் அறிந் திருந்தான்.

இயற்கை வேகத்தைத் திருத்துவதுதானே பிரம்மசரியம்? எனவே, நரேந்திரனுக்குப் பிரம்மசரியத்தில் ஆழ்ந்த நாட்டம் இருந்ததில் வியப்பில்லை அல்லவா? பிரம்மசரியம் என்பதை வெறும் உடல் தூய்மையாக மட்டும் அவன் கருதவில்லை. சரீ ரத்தைப் போலவே செயல், சொல், சிந்தனை யாவற்றிலும் தூய்மையாக இருப்பதையே நரேந்திரன் பிரம்மசரியம் எனக் கருதினுன். 'பிரம்மமாவதற்கு விரும்புவர்கள் அநுஷ்டிப்பது பிரம்மசரியம்' என்ற மறைமொழிப்படி சத்தியாநுபவத்துக்கு மார்க்கமான பரிசுத்தமே பிரம்மசரியம் என நரேந்திரன் கருதினுன். நரேனின் அன்னை புவனேசுவரி மனே-வாக்-காயங்

Koviloor Digital Library

களின் தூய்மையை மிகவும் முக்கியமாகக் கருதி அநுஷ்டித்தவர். அவருடைய மகனுகிய நரேந்திரனுக்கு எந்தத் தகாத காரியத்திலும் தன்னையும் அறியாத வெறுப்பு உண்டானது பொருத்தம்தானே! இளமையில் ஆளாகக்கூடிய எந்தச் சபலத்துக்கும் இடம் தராது மிகவும் ஜாக்கிரதையாக வாழ்ந்த நரேன், 'ஏதோ ஒன்று' தன்னைத் தவருன மார்க்கத்தில் செல்லவிடாமல் பிடித்திழுத்துக் காத்து வருவதாக உணர்ந்தான். நரேந்திரன் அறியாவிட்டாலும், அவனுக்காகவே காத்திருந்த பரமஹம்ஸ தேவரின் ரக்ஷணசக்தி தானே அது?

நரேந்திரனுக்குக் கலியாணம் செய்துவைத்துக் கண்குளிரக் காணவேண்டும் என்று விசுவநாத தத்தர் விரும்பியபோது அவனது பிரம்மசரியம் அதனை எதிர்த்தது. நல்ல நல்ல வரன்கள் வந்தன. நரேந்திரன் இங்கிலாந்து சென்று ஐ.ஸி.எஸ்ஸுக்குப் படிக்க வசதி தருமளவுக்கு வரதட்சிணை தரக்கூடியவர்களெல்லாம் இந்த அற்புத இளைஞனுக்கு வலை வீசினுர்கள். ஆனுல் கலெக்டர் பதவிக்காக கலியாணத்தை ஒப்புக் கொள்ளக் கூடியவனல்லவே நரேந்திரன்? ஞான சாம்ராஜ்யத்தின் சிம்மாசனமே அல்லவா அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தது? எப்படியோ ஒரு வாருகக் கலியாணப் பேச்சுக்களும் முறிந்தே வந்தன.

வாலிபப் பருவத்தில் நரேந்திரன் துயில்கொள்ளுமுன் அவன் மனக்கண்ணுக்கு முன்னுல் இரண்டு சித்திரங்கள் தோன்றும். சுகபோகமும், செல்வமும், அதிகாரமும், பெயரும், புகழும், பெண்டிரும், பிள்ளையும் சூழ்ந்த வாழ்க்கை ஒன்று. உடைமை எதுவுமே இன்றிப் பெரிய உலகிலே, தன்னந்தனியாளாக, ஒரே உடையுடன் சுற்றி, பரந்த வானத்தையோ நீண்டுயர்ந்த மரக்கிளையையோ கூரையாகக் கொண்ட திறந்த வெளியில் உறங்கி, நீர்நிலை கண்ட இடத்தில் ஸ்நானமும், கனியோ காயோ கனிந்த உள்ளத்தோடு தாமே பிட்சையிடுவார் கிடைக்கும்போது மட்டிலுமே உண்டு, பரமாத்மாவில் உள்ளத்தைப் பதித்து சஞ்சரிக்கும் சந்நியாச வாழ்க்கை இன்னேர் ஓவியமாக விரியும். இவ்விரு சித்திரங்களையும் நரேந்திரன் கூர்ந்து கவனிக்கக் கவனிக்கப் பின்னதே அவனை ஆகர்ஷிக்கும். முதலில் கண்ட ஓவியத்தின் வண்ணங்கள் மெல்ல மெல்ல மங்கி அடியோடு தேய்ந்து போகும்.

* * *

இயற்கை உந்தல்களை எடுத்த எடுப்பில் அடக்குவது என்பது இயலாத காரியம். ஒரு மடையை அடைத்து இன்னெரு மடையில் நீர்ப்பாய்ச்சுவது போல, வேகங்களையும் ஒரு துறையிலில்லாவிடில் வேருென்றில் செலுத்தினுலொழிய அவை உள்ளேயே பம்பிக்

Koviloor Digital Library

கொண்டு மனிதனைச் சிதிலமாக்கிவிடும். இதனால்தான் சமயமானது மனிதனது வேகங்களையெல்லாம் தெய்வத்தின்பால் திருப்பி அவற்றைப் புனிதமாக்குகின்றது. கண்ணால் தெய்வ மூர்த்தத்தைக் காண்பது, காதால் தெய்வத்தின் கீர்த்தியைக் கேட்பது, நாவால் தெய்வத்தை ஏத்துவது, கையால் தெய்வத்தை அர்ச்சிப்பது, காலால் பிரதட்சிணம் செய்வது, உடலால் வணங்குவது என்றெல்லாம் புலன்களைப் பரம்பொருளிடம் திருப்பி விடுகிறது. இந்த நிலையில் வேகங்கள் எல்லாம் பாவனமான முறையில் நிறைவுபெற்று அதன்பின் மலர் மலர்ந்தபின் தானாகவே உதிர்வது போல ஆத்மாவிலிருந்து நழுவிவிடும். பிறகு ஞானக்கனி தோன்ற ஆரம்பிக்கும். கொழுந்து விட்டெரியும் வேகங்களைத் தெய்வம் என்ற தைலத் தடாகத்தில் முக்கினால் அவை முதலில் முன்னிலும் தீவிரமாகும். எனினும் தீயில் வற்றும் தைலமல்ல பரம்பொருள். பிரவாகமாகப் பெருக்கெடுத்து அந்தத் தீயையும் விழுங்கிவிடும் தைலம் அது. தீ அவிந்த பின் கண்ணாலும், காதாலும், நாவாலும், கையாலும், காலாலும், உடலாலும் எந்தப் பொருளைப் புறத்தே வழிபட்டோமோ அதே பொருள் நமக்குள்ளேயே இருக்கிறது என்ற உணர்வு வரும்.

ஒவ்வொரு அங்கத்தையும் இறைவன் பணியில் ஈடுபடுத்தித் 'தலையே நீ வணங்காய், கண்காள் காண்மின்களோ? வாயே வாழ்த்து கண்டாய், நெஞ்சே நீ நினையாய், கைகாள் கூப்பித் தொழீர்' என்றெல்லாம் திரு அங்கமாலை பாடிய திருநாவுக்கரசுப் பெருமான் அப்பதிகத்தின் இறுதியிலேயே, இவ்வாறெல்லாம் வெளியே வழிபட்ட 'தேவனை என்னுளே தேடிக் கண்டு கொண்டேன்' என்று பாடுவது கவனிக்கத்தக்கது. சிவானந்த லஹரியில் இவ்வாறே இந்திரியங்களையெல்லாம் ஈசன் பணியில் திருப்பிவிடும் ஆதி சங்கர குரு அந்த ஈசன் இதய கமலத்திலேயே உறைவதையும் உள்ளங்கை நெல்லிக்கனியாகக் கூறுகிறார். அநித்தியத்தில் ஈடுபடும் புலன்களை நித்தியத்தில் ஈடுபடச் செய்து, அந்த ஈடுபாட்டினாலேயே அவை கரையுமாறு — நிறையுமாறு — செய்வதுதான் சமயம். புலன்களுக்குப் புலனாகும் முறையில் முதலில் பரம்பொருளைக் கிரகித்துக் கொண்டு அதன் பின்னர் புலன்களுக்குப் பிடிபடாத கேவலப் பொருளாக அதனை அநுபவிக்க வழி வகுப்பது இந்து மதம்.

இந்திரியங்களுக்கு அப்பாற்பட்ட நிர்க்குண வஸ்துவாக நம் உள்ளத்தில் இறைவன் உறைவதாக இறுதியில் கண்டாலும், இந்திரியங்களையும் துலக்கிக்கொள்ளும் அழகு மூர்த்தமாக, அன்பு மூர்த்தமாக அவனை முதலில் கண்டு நம் வேகங்களை அவன்

Koviloor Digital Library

பாற்படுத்துவதே அவற்றைச் சிராக்கி, பிறகு அவற்றிலிருந்து விடுபட உபாயம்.

நரேந்திரன் வேகங்களிலிருந்து தப்ப விரும்பினுன். இயற்கையாக அவை வெளிப்படத் தலைப்படும் மார்க்கங்களை அடைத்து விட்டான். எனினும் அவனது தந்தையின் மனுேபாவம் காரணமாகவோ, அவனுகவே பெற்றிருந்த பகுத்தறிவு வாதம் காரணமாகவோ தனது வேகங்களைப் பக்திமயமாக்கி தேவதா ஆராதனம் செய்வதில் அவன் உள்ளம் செல்லவில்லை. எனினும் உருப் படைத்த தெய்வங்களுக்கும் மேலான உருவற்ற பரம்பொருள் தன்னில் இருப்பதையும் அவன் இனம் தெரியாத ஏதோ ஒரு விதத்தில் உணர்ந்திருந்தான். அதனிடத்தே தனது வேகங்களைச் செலுத்தவும் துடித்துக் கொண்டிருந்தான். இதற்கு ஒரு வாய்ப்பாக அவனுக்குக் கிட்டியது பிரம்ம சமாஜம்.

*　　　*　　　*

சென்ற நூற்ருண்டில் ஆங்கிலப் படிப்பின் காரணமாகவும், கிறிஸ்துவ மிஷனரிகளின் பிரசாரம் காரணமாகவும் படித்த இந்துக்களிடையே இந்து மதத்தைப் பற்றிப் பல தவருன கருத்துக்கள் எழுந்தன. எந்த மதத்திலுமே உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட அம்சங்களும், பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்ட அம்சங்களும் பின்னிப் பிணைந்துள்ளது போல இந்து மதத்திலும் உள்ளது. இதில் உணர்ச்சியைத் தள்ளிவிட முடியாது. தள்ளவேண்டிய அவசியமும் கிடையாது. உதாரணமாக அன்பையும், அழகையும் பகுத்தறிவால் எப்படி விளக்க முடியும்? அவை புத்தி பூர்வமான காரணங்களால் நிலைநாட்ட முடியாதவை. ஆனல், புத்தியால் மட்டும்தான் காரணம் காட்ட முடியும் என்பதில்லை. இதயத்தாலும் காரணம் காட்ட முடியும். எந்த வழியில் சென்ருல் இதயம் நிறைவு காண்கிறதோ, அந்த வழிக்கு அநுகூலமாக உள்ள எதுவும் ஏற்று அநுஷ்டிக்கப்பட வேண்டியதே என்பதுதான் இதயம் காட்டும் காரணம். அதாவது பகுத்தறிவு விளக்கப்படி செயல்-விளைவு இவற்றைக் காரணமாகக் கொண்டு செய்யப்படும் செயல்களைப் போலவே, அநுபவ பூர்வமாக ஆனந்தம் கூட்டும் செயல்களையும் மதித்தாகவேண்டும். அன்பையும், அழகையும் இத்தகைய அநுபவ ஆனந்தத்துக்காகத்தான் உலகம் ஏற்றிருக்கிறது; பகுத்தறிவுக்காக அல்லவே அல்ல. இவ்வாறு அநுபவத்துக்கு வழிகோலுவதுதான் உணர்ச்சி. 'உணர்ச்சி' எனும் போதே அதன் சக்தியை நாம் உணர்ந்து, அதாவது அநுபவித்துப் பார்க்கிருேம் என்றும் ஏற்படுகிறதல்லவா?

Koviloor Digital Library

ஆனல் பொதுவாக எல்லா மனக் கிளர்ச்சியுமே உணர்ச்சி என்று எண்ணி விடுகிறேம். அநுபவத்தைக் காரணமாகக் கொண்டு, இதய நிறைவில் முடியும் உணர்ச்சியையும், இவ்வித இதய நிறைவுக்குப் பயன்படாமல் எழும் அற்பமான உள்ளக் கிளர்ச்சியையும் ஒன்று என்றே பலரும் எண்ணி விடுகிருர்கள். இந்தியர்களுக்கு ஆங்கிலம் படிப்பித்த ஆங்கிலேயர்களும், கிறிஸ் துவ சமயப் பிரசாரகர்களும், அவர்களின் படிப்புக்கும் போதனைக் கும் பாத்திரமான இந்தியர்களும் இந்தத் தவறுதான் செய் தார்கள்.

அநுபவத்திஞல் நிரூபணம் பெறும் இந்துமதக் கோட்பாடு களில் எல்லாவற்றுக்குமே புத்தி பூர்வமாக விளக்கம் தருவது இயலாத காரியம். உணர்ச்சிகளின்மீது உருவான பலப்பல தத்து வங்களும் உள்ளடங்கியது பாரதத்தின் சநாதன சமயம். ஞான பக்தர்களின் அறிவாராய்ச்சியாலும், பக்த ஞானிகளின் உணர்ச்சிக ளாலும் இசைவு பெற்றது நம் மதம். ஆனல் ஆயிரம் பல்லா யிரம் ஆண்டுகளாக இம்மதம் கோடாநுகோடி மக்களின் அநுஷ் டானத்தில் இருந்து வந்தது என்பதையும் நாம் மறப்பதற்கில்லை. அந்த ஆயிரம் பல்லாயிரம் ஆண்டுகளில் வாழ்ந்த கோடானு கோடி மக்களும் ஞான பக்தர்களாகவோ, பக்த ஞானிகளாகவோ இருந்திருக்க முடியாது என்பது வெள்ளிடை மலை. எனவே இவர்கள் தங்கள் வேகங்களை ஆண்டவன் வசமாக்க முயலும் போது உணர்ச்சிகள் மட்டுமின்றி, புல்லிய கிளர்ச்சிகளும் நமது மதத்தில் இடம்பெறலாயின. அநுபூதிமான்களின் கற்பனை ஆண்டவனின் கற்பனையைப் போலவே சத்தியமானது. ஆனல் பாமரர்களின் கற்பனையில் சத்தியத்துடன், அசத்தியமும் கலந் திருந்தது. இதனல் அர்த்தமற்ற பழக்க வழக்கங்கள், கட்டுக் கதைகள், மூடநம்பிக்கைகள் இவையும் இந்து சமய விருக்ஷத்தில் புல்லுருவியாகப் பாய்ந்தன.

புல்லுருவிகளை மட்டுமே களைய வேண்டும் என்று எண்ணமல் இந்து மதம் என்ற ஜீவ விருக்ஷத்தையே வெட்டத் துடித்தனர் இங்கு வந்து புகுந்த மேனுட்டினர். அதாவது அவர்களில் பெரும் பான்மையானவர்கள். அவர்கள் சொல்லையே மகா மந்திரமாகக் கொண்டனர் நம் நாட்டுப் படித்த மேதைகள். கிளர்ச்சியோடு, உணர்ச்சியையும் சேர்த்து வேரோடு கெல்ல முயன்ருர்கள். பகுத்தறிவுக்கு மட்டுமே பொருந்தும் மதம் தேவை என்று எண்ண லானுர்கள்.

பகுத்தறிவுக்குமட்டுமே பொருந்தும் மதம் உலகில் எதுவுமே கிடையாது என்று திண்ணமாகக் கூறலாம். மதம் என்ருலே

Koviloor Digital Library

நம்பிக்கை என்றுதான் பொருள். ஆங்கிலத்திலும் religion என்பதை Faith என்றும் சொல்கிறார்கள். பகுத்தறிவு நிரூபணத்தை எதிர்பாராமல் நம்பி ஏற்கும் கோட்பாடுகள் உள்ளபடியால்தான் மதத்துக்கு அப்படிப் பெயர் ஏற்பட்டது. கிறிஸ்துவ மதத்திலும் அநேக கோட்பாடுகளைப் பகுத்தறிவால் விளக்க முடியாது. எனினும் நம் நாட்டின் துர்ப்பாக்கியவசத்தாலும், கிறிஸ்துவப் பிரசாரகர்களின் வாக்கு விசேஷத்தாலும் இந்து மதத்தில் மட்டுமே மூட நம்பிக்கைகள் இருப்பதாகவும், இந்து மதத்தில் மூட நம்பிக்கைகள் மட்டுமே இருப்பதாகவும், கிறிஸ்துவ மதம் முற்றிலும் அறிவுக்குப் பொருந்துவதாகவும் படிப்பாளிகள் மயங்கினர். கிறிஸ்துவ மதத்தில் நம்பிக்கை வைத்தார்களோ இல்லையோ, இந்து மதத்தில் நம்பிக்கை இழக்கலானார்கள். புல்லுருவியைக் களைந்து விருக்ஷத்தைக் காப்பாற்றாமல் புதியதொரு விருக்ஷத்தையே நாடிச் சென்றார்கள். நம் வீட்டிலுள்ள குப்பைகளை அகற்றி அதனை வாழ உகந்ததாகச் செய்யாமல் வீடே குப்பை என்றெண்ணி வேறு வீட்டைத் தேடிச் சென்றனர். நம் தாயிடம் சில தகாத குணங்கள் இருப்பதாக எண்ணி வேறு தாயை நாடிச் சென்றார்கள்.

இந்து மதம் இந்தியர்களின் அன்னை. கிறிஸ்துவ மதம் கிறிஸ்துவர்களின் அன்னை. ஒவ்வொரு மதமுமே அந்தந்த மதத்தினருக்கு ஞானப்பாலூட்டும் அன்னைதான். ஆனால் ஒரு குழந்தையின் அன்னை வேறொருவள் பெற்ற குழந்தைக்கு எப்படி அன்னையன்பைக் காட்ட இயலும்?

ஒவ்வொரு தேசத்துக்கும் என்று எப்படித் தனிப்பட்ட ஒரு சீதோஷ்ணம் உள்ளதோ, அது போல ஒவ்வொரு மக்களுக்கும் என்று ஒவ்வொரு மனோ பாவம் உண்டு. ஒரு சமுதாயத்தினரின் மனோபாவம் நம்பிக்கை கொள்ளும் தத்துவங்களில் இன்னொரு சமுதாயத்தினரால் நம்பிக்கை கொள்ள இயலாது. இப்படித்தான் கிறிஸ்துவ சமயத்தைத் தழுவ முற்பட்ட இந்தியர்களும் நம்பிக்கையற்ற ஒரு சூனிய உணர்ச்சியை உணர்ந்தனர். எனவே இந்து மதத்தையும் கிறிஸ்துவ மதத்தையும் இணைத்துப் புது மதங்கள் நிறுவ நினைத்தனர். இவற்றில் ஒன்றே பிரம்ம சமாஜம்.

* * *

தேச கால எல்லைகளைக் கடந்த அமர உலகப் பிரஜைகள் எல்லா மதங்களையும் மீறியவர்கள். அதனாலேயே அவர்களால் எம் மதத்தையும் பற்றி ஒழுகி அதன் வழியே மெய்ப்பொருளை அடைய முடியும். பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் இவ்வாறுதான்

Koviloor Digital Library

இஸ்லாம், கிறிஸ்துவம் முதலிய எல்லா மதங்களேயும் தாமே பின்பற்றி ஒவ்வொன்றின் வழியாகவும் சத்திய தத்துவத்தை உணர்ந்தார். எல்லா மதங்களும் கடலுக்குக் கொண்டுவிடும் வேறு வேறு நதிகளே என்று கண்டார். ஒரே மலே உச்சிக்குச் செல்லும் பற்பல பாட்டைகளே பற்பல மதங்களும் என்று கூறினர். மலே உச்சிக்குச் சென்று விட்டதால் அவரால் எல்லாப் பாட்டைகளின் முடிவிடத்தையும் காண முடிந்தது. எனவே அவர் அவ்வாறு கூறினர். ஆனல் அவரைப் போல மக்கள் யாவரும் சத்திய சிகரத்தில் ஆரோகணித்தவர் அல்லவே! எந்தப் பாதையில் சென்ருல் உச்சியை அடையலாம் என்று மயங்கித் தேடும் நிலேயில்தானே அவர்கள் இருந்தார்கள்? அவர்களுக்குப் பரமஹம்ஸர் அவரவர் மதம் என்ற பாதையில் செல்லுமாறுதான் உபதேசித்தார். யாரையும் மதம் மாறுமாறு அவர் கூறவில்லே.

* * *

மதம் என்ருல் நம்பிக்கை என்று சொன்னேம். ஆனல் நம்பிக்கைக்கும் மேற்பட்டதாக, நாமே அநுபவித்து ஒப்புக் கொள்ளக்கூடிய ஒப்பற்ற ஒரு மதமும் உண்டு. மதம் என்பதை விட வாழ்முறை என்றே அதனேக் கூறலாம். அதுதான் அத்வைத வேதாந்தம். ஆரம்ப காலத்தில் ஆசாரியரின் உபதேசங்களில் நம்பிக்கை வைத்து அவர் சொல்லும் சாதனேகளேக் கைக்கொண்டால் இறுதியில் இவ்வுலகத்திலேயே இம்மதத்தின் உண்மையை தனக்குத்தானே ஒருவன் அநுபவபூர்வமாக நிரூபித்துக்கொள்ளலாம் என்று உபநிஷத முனிவர்களும், கீதாசாரியனும், ஆசாரிய சங்கரரும் அடித்துக் கூறியிருக்கிருர்கள். அவர்கள் அவ்விதம் சத்தியத்தைக் கண்டு சத்தியமாகவே ஆனபடியால்தான் அவ்வளவு அழுத்தம் திருத்தமாகத் தங்கள் மதத்தின் நிரூபணம் என்ருே எங்கோ இல்லே, சாதகனிடம் இன்றே இங்கேயே உள்ளது என்று கூறினர்கள். 'பரம்பொருள் ஒன்றுதான் நிரந்தரமான சத்தியம். உலகமென எண்ணி நாம் காண்பதும் அந்தப் பரம்பொருளே. பரம்பொருள்தான் இப்படியெல்லாம் தோற்றமளிக்கிறது. இந்தத் தோற்றம் நிரந்தர சத்தியமன்று. சாதனேகளின் மூலம் ஞானம் பிறக்கும்போது இவையெல்லாம் பரம்பொருளாகவே தெரியும். சாதகனும் பரம்பொருளாகவே ஆவான். தானும் பரம்பொருளும் ஒன்றே என்பதை அநுபவிப்பான். இந்த உலகிலேயே அவனுக்கு அந்த அநுபவம் கைகூடும்' என்று வேதாந்தம் கூறுகிறது.

Koviloor Digital Library

'ஞானம் பிறக்கும்போது பரம்பொருளின் தத்துவத்தை சாதகன் உணர்வான்' என்று சொல்வதுகூடச் சரியில்லை. ஏனெனில் ஞானம் வேறு பரம்பொருள் வேறல்ல. சாதகனே ஞானமாகிறான்.

இப்படிப்பட்ட ஞானிகள் எந்த மதத்திலும் தோன்றலாம் என்பது வேதாந்தமே ஒப்புக்கொள்ளும் உண்மை யாகும். எனி னும் இந்து மதம் என்று மேனாட்டினர் பெயர் சூட்டியுள்ள நம்முடைய மதம்தான் எல்லா மதங்களுக்கும் முடிவான வேதாந் தத்துக்கு லக்ஷணமும் விவரணமும் தருகிறது. ஒவ்வொரு சமு தாயத்துக்கு மட்டுமே ஒவ்விய ஆசார, அநுஷ்டானாதிகளுடன் ஒவ்வொரு சமயம் இருப்பது போலவே இந்துக்களுக்கு ஆசார நியமங்களுடனும், அநுஷ்டானக் கிரமங்களுடனும் கூடிய இந்து மதம் இருப்பதோடன்றி அது உலகுக்கெல்லாம் பொதுவாகிய வேதாந்தத்தில் சென்று நிறைவு பெறுகிறது.

எல்லா மதங்களும் பொதுவாகவும், அவற்றுக்கெல்லாம் மேலாகவும் உள்ள வேதாந்தம் பாரத தேசம் உலகுக்களிக்கும் ஈடிணையற்ற ஆன்மிகச் செல்வமாகும். பரம்பொருளுடன் ஒன்றி யிருக்கும் இந்த வேதாந்த லக்ஷியத்தை எய்தியவர் ஸ்ரீராம கிருஷ்ணர். எனவேதான், எல்லாச் சமயங்களின் உண்மையை யும் உணர்ந்த அவர் ஒவ்வொரு மதத்தினரும் தத்தம் மதத்தைப் பின்பற்ற வேண்டுமென்று கூறியபோதிலும் உலகுக்கெல்லாம் பொதுவான வேதாந்தம் எல்லா மதத்தினரிடமும் பரவவேண்டு மென்று திருவுளம் கொண்டார்.

ஒரு சின்னஞ்சிறு ஆலவிதைக்கு நீர் வார்ப்பதால் அது வளர்ந்து எண்ணற்றவருக்கு நிழல் அளிப்பது போல் தகுதி பொருந்திய ஒரே ஒரு சிஷ்யனிடம் தமது ஞானத்தை வார்த்து, அவன் மூலம் உலகுக்கெல்லாம் நிழல் பரப்பக் காத்திருந்தார்.

ஆனால் அந்த சிஷ்யனோ அதனை அறியாமல், பிரம்ம சமாஜத் தில் சேர்ந்திருந்தான். சநாதன இந்து மதத்தில் தன் துடிப்பு தணிந்து சாந்தி கிட்டாதென்றெண்ணி அந்த ஆங்கிலப்படிப்பில் ஊறிய இளைஞன் பிரம்ம சமாஜத்தில் சேர்ந்துவிட்டான்.

* * *

பிரம்ம சமாஜத்தைப் பற்றிச் சிறிது தெரிந்து கொள்வோம். இந்து தர்மத்தின் உத்தமமான அம்சங்களைக் காத்து, அதன் 'குறுகிய மனப்பான்மை' யைப் போக்கடித்து அதனை 'விசால மான' தாக்க வேண்டும் என்பதுதான் பிரம்ம சமாஜத்தின் நோக்கம். உண்மையிலேயே அக்காலத்து சநாதனிகள் மிகவும் இணக்கமற்றவர்களாக இருந்ததாலும், காலத்துக்குச் சரிப்பட்டு

Koviloor Digital Library

வராத சில கொள்கைகளை தீவிரமாகப் பின்பற்றியதாலும்தான் இந்து மதத்துக்கு ஊறு நேர்ந்திருந்தது. படித்தவர்கள் இந்து மதத்தைப் புறக்கணித்ததற்கும், படிக்காதவர்கள் கூட்டம் கூட்டமாகக் கிறிஸ்துவ மதத்தில் சேர்ந்ததற்கும் சநாதனிகளின் விட்டுக் கொடுக்காத மனப்பான்மையே காரணமாக இருந்தது.

நிரந்தர தர்மம் என்றும் யுக தர்மம் என்றும் இந்து சமயக் கோட்பாடுகளை இரண்டு பிரிவாகப் பிரித்து நிரந்தர தர்மங்களையே ஆதாரமாகக் கொண்டு, பூர்வகாலத்துக்குமட்டும் பொருந்திய சமூகப் பகுப்பு நியதிகளான யுகதர்மங்களைக் கைவிட வேண்டும் என்று சீர்திருத்தவாதிகள் கருதினுர்கள்.

இந்து சமயத்தில் வேறு பல மாறுபாடுகளும் செய்யவேண்டும் என பிரம்ம சமாஜத்தினர் கருதினர். பல தெய்வங்களை வழிபடுவது, விக்கிரக ஆராதனை, ஆண்டவன் அவதரிக்கிருன் என்ற நம்பிக்கை, குருமுகமாகவே உபதேசம் பெற வேண்டும் என்ற கோட்பாடு, வேத வாக்கியங்களை மறுக்காது ஏற்பது — இவை யாவற்றையும் பிரம்ம சமாஜத்தினர் எதிர்த்தனர். ஜாதிபேதங்களை ஒழிப்பது, பெண் கல்வி, விவாகப் பருவத்தை உயர்த்துவது, விதவா விவாகம் முதலியன அவர்களது சமூக நிர்மாணத் திட்டத்தின் அம்சங்களாகும். ராஜாராம் மோகன்ராய் தான் பிரம்ம சமாஜத்தின் தோற்றுவாய்க்குக் காரணபுருஷர். பதினெட்டாம் நூற்ருண்டின் பிற்பகுதியிலும், பத்தொன்பதாம் நுற்ருண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த அந்தச் சீர்திருத்தவாதி ''உலகத்தின் காரணமும், காப்புமான நித்திய வஸ்துவை, ஆராயமுடியாத ஆதிப்பொருளை, மாறுதலறியாத மூலப்பொருளை வழிபடுவோம், வணங்குவோம்'' என முழங்கியவுடன் மேனுட்டுக் கல்வி பயின்ற அநேகர் பிரம்ம சமாஜத்தினராயினர். இந்து மதம், இஸ்லாம், பௌத்தம், கிறிஸ்துவம் முதலிய பல மத நூல்களைப் படித்திருந்த ராஜாராம் மோகன்ராய் எல்லாவற்றிலும் சிறிது சிறிதை இணைத்து, முக்கியமாகக் கிறிஸ்துவத்தையும் இந்து மதத்தையும் கலந்து பல கோட்பாடுகளை உருவாக்கினுர்.

கல்வியும், செல்வாக்கும் மிக்க பலர் பிரம்ம சமாஜத்தில் சேர்ந்தார்கள். கவீந்திரராகிய ரவீந்திரநாத தாகூரின் தந்தையாரான தேவேந்திரநாத தாகூர் *(1817—1905)* ராம் மோகன் ராய்க்குப் பின் சமாஜத்தின் முக்கியஸ்தரானுர். உபநிஷதங்களைப் பெரிதும் மதித்து வாழ்ந்த தேவேந்திரநாத தாகூர் 'மகரிஷி' என்றே போற்றப் பெற்றவர். பிரம்ம சமாஜத்தின் பிரதான புருஷராகக் கருதப்பெற்ற கேசவ சந்திர சேனர் *(1838—1884)* கிறிஸ்துவக் கோட்பாடுகளில் மட்டுமின்றி கத்

Koviloor Digital Library

தோலிக்கரது போன்ற சடங்குகளிலும் தனி ஆர்வம் காட்டினுர். கிறிஸ்துவச் சடங்குகளை சமாஜ அநுஷ்டானத்தில் புகுத்த விழைந்தார்.

சடங்குகள் எப்படியாயினும் பகுத்தறிவு மூலமே மத உணர்வைப் பூர்த்திசெய்ய முனைந்த ஒரு ஸ்தாபனம் பிரம்ம சமாஜம். எனவே படித்த இளைஞர்களை அது கவர்ந்ததில் வியப்பேதும் இல்லை.

அநுபவ பூர்வமாக முனிவர்களும், ரிஷிகளும், வேறுபல மகான்களும் உணர்ந்த இந்து வேதாந்த மதத்தின் நிலைக்களனை பரமஹம்ஸர் அந்தக் களத்தில் விதைக்க வேண்டிய வித்தைத் தேடிக்கொண்டிருக்கும்போது, அந்த வித்தாகிய நரேந்திரன், அறிவைக் கொண்டே சத்தியத்தை நிர்ணயிக்கப் புகுந்த பிரம்ம சமாஜத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்தான்; காந்த சக்தியும், சிந்தனுபலமும், ஆழ்ந்த உணர்ச்சியும், அயராத ஊக்கமும் படைத்த கேசவ சந்திர சேனரைப் போலவே தானும் சமாஜத்தின் கொள்கைகளைப் பரப்பவேண்டும் என ஆவல் கொண்டான். இயற்கை வேகத்திலிருந்து எவ்வாறேனும் விடுபடத் துடித்த அவன் பிரம்ம சமாஜம் சமூகக் கட்டுப்பாடுகளிலிருந்தும், சடங்குகளிலிருந்தும் விடுதலை அளித்தது காரணமாகவே அதில் சேர்ந்திருக்கக்கூடும்.

என்ருலும் நாள்பட நாள்பட பிரம்ம சமாஜம் அவனுக்குப் போதவில்லை. உலகுக்கு மூலகாரணமாகிய பரம்பொருள் உலக மாந்தரின் துயர் துடைப்பதற்காக உதவ வரும் என்ற நம்பிக்கை அவனுக்குத் தோன்ற ஆரம்பித்தது. சமாஜத்திலேயே இன்னும் பலருக்கு இவ்விதமான ஒரு நம்பிக்கையிருந்து வந்தது. அவர்கள் அறிவினுல் மட்டும் ஆராய்ச்சி புரியாமல் துதிப்பாடல்களைப் பாடிப் பிரார்த்தனை புரிந்தார்கள். அந்தப் பிரார்த்தனைகளில் கலந்து கொள்ளும்போது நரேந்திரனுடைய உணர்ச்சிகளுக்கும் ஓர் ஆறுதல் கிடைத்தது. எனினும் அதுவும் அவனுக்குப் போதவில்லை.

'அறிவையும் உணர்ச்சியையும் உரியபடி கலந்தாலல்லவா அநுபவம் உண்டாகும்? அப்படிப் பிரம்ம சமாஜம் கலக்கிறதா? கலந்தால் சமாஜிகளில் மெய்ப்பொருளை அநுபவித்த பெரியோர்கள் இருக்கவேண்டுமே! இருக்கிருர்களா?' என்று எண்ணமிடலானுன் நரேந்திரன்.

மெய்ப்பொருளை அநுபவிப்பது என்ருல் அத்வைதம் கூறுவது போல 'நானே பரம்பொருள்' என்ற உணர்ச்சியைப் பெறுவது என்று நரேந்திரன் கருதவில்லை. பிரம்ம சமாஜமும் ஜீவாத்ம பரமாத்ம ஐக்கியத்தை ஒருபோதும் சொல்லவில்லை. 'மெய்ப்

Koviloor Digital Library

பொருள் தனக்காக உள்ளுருகி பக்தி செய்பவனுக்குத் தரிசனம் அளிக்கும். அப்படிக் கடவுளைத் தரிசிப்பதே அநுபவம்' என்று தான் நரேந்திரன் கருதினான்.

சத்தியமாகிய கடவுளை நேருக்கு நேர் தரிசிக்க வேண்டும் என்று பேரார்வம் கொண்ட நரேந்திரன் சமாஜத்தினர் யாரேனும் அவ்வாறு கடவுளைக் கண்டதுண்டா என்றறியத் துடிப்பு கொண்டான். கடவுளைக் காண உதவாத மதம் தனக்குத் தேவையில்லை என்ற எண்ணத்துடன் மகரிஷி தேவேந்திரநாத தாகூரைக் காணப் புறப்பட்டான். முன்பே சில நண்பர்களுடன் தேவேந்திரநாதரை அவன் கண்டதுண்டு. அப்போது அவர் அவனை ஆழ்ந்து தியானிக்கும்படி நல்லுரை கூறியிருக்கிறார். 'அவர் அப்படித் தியானம் செய்து பரம்பொருளைக் கண்டிருப்பாரா?' என்ற வினா எழுந்ததனால்தான் அவரை மீண்டும் நாடினான் நரேந்திரநாதன்.

கங்கைத் துறையிலே, ஒரு படகையே ஆசிரமமாக்கி அதில் வாழ்ந்து வந்தார் தேவேந்திரநாத தாகூர். அவரை ஒரே ஆவேசமயமாக அணுகினான் நரேன்.

'இவர் கூறும் விடையில்தான் தன்னுடைய மதமே இருக்கிறது' என்ற எண்ணம் அவன் உள்ளம் முழுவதையும் அழுத்த, அந்த அழுத்தத்தின் சுமையிலேயே புறப்பட்ட கேள்வி அவன் வாயில் அக்கினிக் கொழுந்தான உச்சாரணமாகப் புறப்பட்டது.

''மஹாசய! தாங்கள் கடவுளைக் கண்டதுண்டா?'' என்று படபடப்புடன் தேவேந்திரநாத தாகூரைக் கேட்ட நரேந்திரனின் நாவில் நின்ற நெருப்பு இப்போது அவன் கண்களில் ஜொலித்தது. அறிவுக் கனலாக ஒளிர்ந்த அந்த அழகிய பெருங்கண்களையே நோக்கினார் தேவேந்திரர். ''என் குழந்தாய்! உனக்கு ஒரு யோகியின் கண்கள் இருக்கின்றன'' என்று மட்டும் கூறி மௌனமானார்.

நரேந்திரனுடைய நம்பிக்கை அடிமட்டமாகச் சரிந்தது. தேவேந்திரரிடம் அவனுடைய கேள்விக்கான விடை இல்லை.

வேறு பல மதத்தலைவர்களிடம் ஓடினான். ஒவ்வொருவரிடமும் அதே அதிசயமான மாபெரும் கேள்வியைக் கேட்டான்; ''நீங்கள் கடவுளைக் கண்டதுண்டா?''

இல்லை, இல்லை, இல்லவே இல்லை.

யாரும் கடவுளைக் கண்டதாக அவனிடம் கூற முடியவில்லை.

சத்தியத்தில் அவனுக்கிருந்த நாட்டம் காரணமாக அவனே சத்தியமயமாகிவிட்டாற் போலப் பிரகாசிக்கும்போது அவனிடத்தில் யார் பொய் சொல்லமுடியும்? தாங்கள் மெய்ப்பொருளைத் தரிசித்ததில்லை என்று ஒவ்வொருவருமே ஒப்புக்கொண்டார்கள்.

Koviloor Digital Library

'ஆகா, அப்படியென்றால் கடவுளைக் காணவே முடியாதா? அதாவது எவ்வளவு பிராத்தனை செய்தாலும் தரிசனம் தராத ஒருவரா கடவுள்? அப்படியும் கடவுள் என்பவர் இருக்க முடியுமா? கடவுள் இருக்கிறார் என்றால் அவர் கருணைமயமாகத் தான் இருக்கவேண்டும். நம்பும் அடியாருக்குத் தரிசனம் தரத் தான் வேண்டும். கடவுளை யாருமே காணவில்லை என்றால் யாருமே அவரை உள்ளன்புடன் நம்பவில்லை என்று பொருளா? அல்லது கடவுள் என்று ஒருவரே....'

வெடிமருந்து ஏதோ உள்ளத்தில் வெடிப்பதுபோல இனம் தெரியாத ஐயங்கள் நரேந்திரனைத் தகர்த்தன. அந்த ஐயங்களைத் தீர்க்கக் கூடியவர் யார்?

திடீரென்று நரேந்திரனுக்கு நினைவு வந்தது. பேராசிரியர் ஹேஸ்டி பரவசத்தைப்பற்றி விளக்கும்போது குறிப்பட்ட ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸர் தன் கேள்விக்கு விடை கூறுவாரா?

ஹேஸ்டி கூறியது மட்டுமன்று. இராமச்சந்திர தத்தர் என்ற அவனது உறவினரும் பரமஹம்ஸ பரமபுருஷரைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறார். கலியாணம் கார்த்திகை எல்லாம் வேண்டாம் என்று நரேந்திரன் மறுத்தபோது அவனிடம் இந்த உறவினர் ''நீ ஆன்மீக வாழ்க்கையை விரும்பினால் தக்ஷிணேசுவரத்து ஸ்ரீராமகிருஷ்ணரைத் தரிசித்துவா'' என்று கூறியிருக்கிறார்.

தக்ஷிணேசுவரம் செல்லாமலே அவரைத் தரிசித்தும் இருக்கிறான் நரேன். 1881-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சுரேந்திர நாத் மித்ரா என்ற பக்தர் இல்லத்துக்குப் பரமஹம்ஸர் விஜயம் செய்தார். மித்ராவுக்கு நரேந்திரன் பழக்கமானவன். எனவே அன்று துதிப்பாடல்கள் பாடுவதற்காக நரேந்திரநாதனையும் தன் வீட்டுக்கு அழைத்திருந்தார் சுரேந்திரநாதர். நரேந்திரனும் அருமையாகப் பாடினான். பாட்டைக் கேட்டு மகிழ்ந்த பரமஹம்ஸர் அவனைப் பாராட்டினார். அவனைப்பற்றி அன்புடன் விசாரித்துவிட்டு அவனைத் தக்ஷிணேசுவரம் வருமாறும் அழைத்தார்.

அந்த அழைப்பு இன்று நரேந்திரன் காதுகளில் மீண்டும் ஒலித்தது.

வழி தெரியாது தவித்த நவீன பாரதத்துக்குப் புராதன பாரதத்தின் அழைப்புக் கேட்டுவிட்டது.

அறிவுக்கனலுக்கு அருட்புனலின் அழைப்புக் கேட்டு விட்டது.

'கடவுளைக் கண்டதுண்டா?' என்ற மகத்தான வினாவைச் சுமந்துகொண்டு நரேந்திரநாதன் தக்ஷிணேசுவரத்துக்குப் புறப் பட்டான்.

Koviloor Digital Library



ஸ்ரீ ராமகிருஷ்ணர்

Koviloor Digital Library



பேலூர் மடத்தில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஆலயம்—சுவாமி விவேகானந்தர் வகுத்த முறைப்படி நிர்மாணிக்கப்பட்டது

Koviloor Digital Library

அத்தியாயம் 5

கருணையின் சரிதம்

தக்ஷிணேசுவரத்தில் வாழ்ந்த தவயோகியின் திவ்விய சரித்தை இங்கு சற்று சுவைப்போம். அவரின் மகிமையால்தான் நரேந்திரன் விவேகானந்தரானுன் என்பதால் விவேகானந்தரின் வரலாறு பரமஹம்ஸரின் வாழ்க்கை வருணனை யின்றி நிறைவு பெருது. பாலை நீரிலிருந்து பிரிப்பது போல அனுத்மாவிலிருந்து ஆத்ம தத்துவங்களைப் பிரித்த ஹம்ஸம் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர். இப்படிப் பிரிப்பதையே **விவேகம்** என்ற பெயரில் சாதனையின் முதற்படியாக வைத்தார் ஆதிசங்கர பகவத்பாதர். அந்த விவேகத்தைப் பெற்று அதிலேயே திளைத்தவர் விவேகானந்தர். எனவே பரமஹம்ஸர், விவேகானந்தர் என்ற பெயர்கள் ஒன்ருேடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. அவ்வாறே அவ்விருவரது பெருமை பொருந்திய சரிதங்களும் பிணைந்துள்ளன. இவற்றைப் பிரிப்பது எந்த ஹம்ஸத்தாலும் முடியாத செயலாகும். இவற்றைப் பிரிக்காமலிருப்பதே விவேகமும் ஆகும். பரம்பொருளின் கருணையையும், ஞானத்தையும் யாரேனும் பிரிக்க முயலுவரோ ?

* * *

1836-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18ந்தேதி வங்காளத்தில், ஹுக்ளி மாவட்டத்திலுள்ள கமார்ப்புகூர் என்ற சின்னஞ்சிறிய கிராமத்தில் ஸ்ரீராமகிருஷ்ணரின் அவதாரம் நிகழ்ந்தது. விவேகானந்தர் பிறந்த கல்கத்தா மாநகருக்கும் கமார்ப்புகூர் கிராமத்துக்கும் எவ்வளவு வித்தியாசமோ அவ்வளவு வித்தியாசம் ஸ்ரீராமகிருஷ்ணர் அவதரித்த குடிக்கும் விவேகானந்தர் பிறந்த குடிக்கும் இடையே உண்டு. எளிமையும், ஏழைமையும் நிறைந்த ஆசாரமான அந்தணக் குடும்பம் ஒன்றில் பிறந்தவர் ஸ்ரீராமகிருஷ்ணர்.

இவ்விரு மகான்களின் பிறப்பிலுமே ஒரு விசேஷம் இருக்கிறது. நகரப்புறத்து பகுத்தறிவு நாட்டத்துக்கு உறைவிடமாக விளங்கியவர் சுவாமிஜி. சிக்கலான சிந்தனைகளில் புகுந்து அவற்றை அலசி ஆராய்ந்து முடிபுகள் கண்டவர். கிராமமக்களின் உள்ளுணர்ச்சியும், நம்பிக்கையும் ஓர் உருவாகத் திகழ்ந்தவர் பரமஹம்ஸர். அது பகுத்தறிவுக்கு முரணுன உள்ளுணர்ச்சி அன்று, பகுத்தறிவுக்கு விரோதமான நம்பிக்கை அன்று; ஆனல் பகுத்தறிவுக்கும் மேம்பட்ட உள்ளுணர்ச்சி, பகுத்தறிவுக்கும் அப்பாற்பட்ட நம்பிக்கை என்று அறியப்பெற்றதாலேயே நரேந்திர

Koviloor Digital Library

நாத தத்தர் விவேகானந்தரானுர். இது பிற்பாடு வரப்போகும் வரலாறு.

கமார்ப்புகூரைச் சேர்ந்த க்ஷுதிராமுக்கும், சந்திரமணிக்கும் வாய்த்த சத்புத்திர பாக்கியம்தான் ஸ்ரீராமகிருஷ்ணர். 'அவர் நாராயணனின் அவதாரம்; கண்ணனின் வாக்குறுதிப்படி, தர்மம் தலை சாய்ந்தபோது அதனை உயிர்ப்பிக்கப் பிறந்தவர்' என்றெல்லாம் பிற்காலத்தில் அவரது மகத்தான அநுபவங்களாலும், செயல்களாலும் போற்றப் பெற்றவர். இதனையே பல சூசகங்களால் அறிந்திருந்த க்ஷுதிராமும், சந்திரமணியும் அந்தக் குழந்தை கயா க்ஷேத்திர நாதனுன நாராயணனின் அருட்பிரசாதம் எனக் கருதி அதற்குக் கதாதரன் என்று பெயரிட்டனர்.

புரளும் குழலும், குழலனைய தீங்குரலுமாகக் குழந்தை கதாதரன் இயற்கை அன்னையின் மடியில் வளர்ந்தான். மாந் தோப்புகளிலும், வயல் வரப்புகளிலும் அவனது பாலப்பருவம் தவழ்ந்து விளையாடிற்று. அம்பிகை உலகெங்கிலும் பரப்பியுள்ள அழகுகளை எல்லாம் அப்போதே கதாதரன் உணரத் தொடங்கினுன். ஆறுவது வயதில் கருமுகில்களின் முன்னணியில் தூய வெண்ணிற நாரைகள் பறப்பதனைக் கண்டபோது தன் உணர்விழந்து அழகு நிலையமாகிய அம்பிகையிலேயே தோய்ந்தான் கதாதரன். நரேந்திரனுக்கும் இத்தகைய பரவசநிலை இயற்கை எழிலை அநுபவிக்கும்போது கைகூடிற்றல்லவா ?

பள்ளிப்படிப்பை விரும்பாத பாலன் கதாதரன் தெய்வீகமான இசையிலும், தெய்வக்கதைகளை விவரிக்கும் நாடகத்திலும் ஈடுபாடு கொண்டிருந்தான். நாடகத்தில் சிவவேஷம் தாங்கிய சிறுவன் தன் நினைவை இழந்து சிவத்திலேயே லயமானுன். சஞ்சரித்துக்கொண்டேயிருக்கும் சாது ஜனங்களின் சங்கத்தில் குதூகலித்தான். தேவ தேவியரைத் தியானிக்கத் தொடங்கிய அளவிலேயே மனது குவிந்துவிடும் உயரிய நிலை கதாதரனுக்கு இரத்தத்தில் ஊறியிருந்தது.

க்ஷுதிராம் காலகதிக்கு இலக்கானுர். குடும்பத்தின் வறுமை பயங்கரமாயிற்று. கல்விகற்று ஏதேனும் ஒரு தொழிலை ஏற்று நடத்தவேண்டிய அவசியம் கதாதரனுக்கு ஏற்பட்டது. கல்கத்தாவில் சம்ஸ்கிருத பாடசாலை நடத்திக்கொண்டிருந்த தனது தமையனுரான இராமகுமாரரைச் சென்றடைந்தான் பதினுறு வயது கதாதரன். அவர் அவனை லௌகிகக் கல்வி கற்குமாறு தூண்டினுர். கதாதரன் சிந்திக்கலானுன்: 'பள்ளிப் படிப்பினுல் நான் மேலும் தூய்மை பெறுவேனு ? அது என் பக்தியை வளர்க்குமா ? கடவுளுக்குப் பயந்து என் தந்தை எளிய வாழ்வு வாழ்ந்

Koviloor Digital Library

தாரே — அது போல நானும் வாழ இந்தக் கல்வி சிறிதேனும் உதவுமா? எல்லாவற்றுக்கும் மேலாக, உலகத்தவரின் அஞ் ஞானத்தையும், போக போக்கில் அபிலாஷையையும் வென்று, பரம்பொருளை நுகர இந்த எழுத்தறிவு உபயோகமாகுமா?'

'ஆகவே ஆகாது' என்ற உறுதியான மறுமொழியையும் கதாதரனின் உள்ளம் அளித்தது. 'அப்படியானல் எழுத்தறி வில்லாவிடினும் கடவுளைக் காணும் பாதையில் செல்வதேயல்லவா சாலச் சிறந்தது?' என்று அவன் மனம் திடசங்கல்பம் பூண்டது.

சகோதரனிடம் கூறினன் கதாதரன்: ''ரொட்டியும், வெண் ணெயும் சம்பாதித்துத் தரும் படிப்பை வைத்துக்கொண்டு நான் என்ன செய்வது? என் இதயத்தில் ஒளியை நிரப்பி, எனக்குத் திருப்தியூட்டும் ஞானம் அல்லவா எனக்குத் தேவைப்படுகிறது?'' இராமகுமார் என்ன விடைகூற முடியும்?

இந்தச் சமயத்தில் ராணி ராஸமணி என்ற கரையர் குலச் சிமாட்டி தக்ஷிணேசுவரத்தில் தேவி காளிக்கு ஓர் ஆலயம் எடுத் தாள். இவ்வாலயத்தின் அர்ச்சகராக இராமகுமாரர் தேர்ந் தெடுக்கப்பட்டார். கதாதரனுடன் இராமகுமாரர் தக்ஷிணே சுவரம் வந்தடைந்தார்.

கதாதரன் எந்த க்ஷேத்திரத்தைப் பாவனமாக்கப் பிறந் தானே, எந்த தேவியின் ஆராதனையில் அகம் உருகப் பிறந்தானே அந்த க்ஷேத்திரத்துக்கே, அந்த பவதாரிணியின் சந்நிதிக்கே வந்து சேர்ந்தான். கரையில் கிடந்த மீன் மீண்டும் சாகரத்தில் சேர்ந்து விட்டது.

இராமகுமாரர் 1856-ம் ஆண்டு காலமானர். கதாதரரே அர்ச்சகரானர். அவரைப் போல ஓர் அர்ச்சகர் கிடைப்பதற்கு அம்பிகை அல்லவா கொடுத்து வைத்திருக்க வேண்டும்?

ஆலயத்தை அணைத்து ஓடும் பாகீரதியின் புனிதம், ஆலயச் சூழலின் அமைதி, அம்பிகையின் அருள்விலாசம் இவையெல்லாம் கதாதரரினுள் ஊறத் தொடங்கின. இளைஞன் பக்தனனர்; பக் தன் துறவியானர்; துறவி முனிவர் ஆனர்; முனிவர் ஞானி ஆனர்; ஞானி அநுபூதிச் செல்வரானர். இவையாவும் ஈராறு ஆண்டுகளில் நிகழ்ந்த அற்புதமாகும். மெய்ப்பொருளின் தன் மையை அநுபவித்து, அதுதானே என்று ஓர்ந்ததும், தானேயான அந்தத் தத்துவத்தைத் தாயாக நேரில் கண்டு, பேசி, பூஜித்து உள்ள நிறைவு கண்டதும் ஸ்ரீராமகிருஷ்ணரின் மகத்தான அநுப வங்களாகும். ஆம், கதாதரர்தான் ஸ்ரீராமகிருஷ்ணராகி விட் டார். 'இராமன் எப்படி நடந்து காட்டினனே அதைப் பின் பற்றுங்கள்; கிருஷ்ணன் என்ன உபதேசித்தானே அதை அநுசரி

Koviloor Digital Library

யுங்கள்' என்று சொல்வதுண்டு. தமது உபதேசம், நடவடிக்கை இரண்டையும் மாந்தர் பின்பற்றும்படி வாழ்ந்த கதாதரர் இராமனும் கிருஷ்ணனும் இணைந்த இராமகிருஷ்ணராகவே பக்தர்களுக்குத் தோன்றினர்.

கதாதரர் இராமகிருஷ்ணராவதற்குள்தான் எத்தனை மோதல்களுக்கும், குமுறல்களுக்கும், கொந்தளிப்புகளுக்கும் ஆளாகியிருப்பார்? பாற்கடலிலிருந்து அமுதம் பெறுவதற்கு முன் அதனை எவ்வளவு வலிவாகக் கடையவேண்டியிருந்தது?

ஆத்மாநுபவம் பெறவேண்டும் என்பதில் கதாதரருக்கு இருந்த துடிப்பையும், அந்த அநுபவத் தடாகத்தில் முழுகுவதற்காக உலக இச்சைகளைப் பாசியைத் தள்ளுவது போலத் தள்ளிய அவரது பக்குவத்தையும், அந்தரங்க சுத்தத்தையும், மன ஒருமைப்பாட்டையும், அவர் உற்ற பரவச பரமானந்த நுகர்ச்சிகளையும் எழுத்தில் கொண்டுவருவது இயலாத காரியமாகும்.

ஆரம்பகாலத்தில் அவர் சமயநூல்களை அறிந்திருக்கவில்லை. நானாவித ஆன்ம சாதனைகளின் நுணுக்கங்களை அறிந்திருக்கவில்லை. அவருக்கு முறைப்படி உபதேசம் கூறி வழி காட்டுபவர்களும் அப்போது இல்லை. எனினும் அவரிடமே அற்புதமான ஏதோ ஒன்று இருந்தது. அம்பிகையைக் காணவேண்டும் என்று அவர் உள்ள அடிவாரத்திலிருந்து பிரவகித்த ஆர்வம்தான் அது. 'அழுதாலுன்னைப் பெறலாமே' என்று மணிவாசகர் கூறியவாறு நெட்டுயிர்த்துக் கதறி அழத் தெரிந்திருந்தார் கதாதரர். சின்னஞ்சிறு குழந்தை தாய்க்காக எப்படி அலறுகிறதோ அப்படியே தெய்வத் தாயின் தரிசனத்துக்காக அலறினர் கதாதரர்.

அதிகாலையின் கோமளமான குளிரொளியில் கங்கைத்தடத்தோடு நடந்து செல்வார் கதாதரர் — தேவியின் நினைவே நிறைந்தபடி. பகலெல்லாம் பூஜையிலும், பஜனையிலும், பிரார்த்தனையிலுமே செல்லும். மாலையின் நளினமான தண்ணொளியில் மீண்டும் கங்காதிரத்தோடே சஞ்சரிப்பார் கதாதரர் — அம்பிகையின் எண்ணமே உள் முழுதும் பூரித்தபடி. அப்புறம் இரவு முழுவதும் தியானம்தான். இப்படி வாழ்க்கையின் ஒவ்வொரு விநாடியும் திவ்விய தரிசனத்துக்காகவே தவமிருந்தார் கதாதரர். அந்த தரிசனம் மட்டும் கிட்டியபாடில்லை. தவத்தின் உக்கிரமும் ஏறியது. 'ஆகா, இன்னும் ஒரு நாள் சென்று விட்டது! அம்மா, நான் உன்னைக் காணவில்லை. என் அல்ப ஆயுளில் மேலும் ஒரு தினம் கழிந்துவிட்டது. நான் சத்தியத்தைத் தரிசிக்கவில்லை. பொழுது வீணுகிறது. ஐயோ, வீணுகிறதே!' என்று அரற்றித் துடியாகத் துடித்தார் கதாதரர்.

Koviloor Digital Library

'நீ அன்னையாக இருந்தால் என்னை இப்படித் தவிக்க விடுவாயா? அப்படியானால் அம்பிகையே கிடையாதா? நீ ஒரு கற்பனைதானா? மதம் என்பது ஒரு மாயம்தானா?' என்றெல்லாம் நீராளமாக நெஞ்சம் உருகக் கேட்பார் கதாதரர். உடனேயே ஞானியர்களும், பக்தர்களும் அவரது மனக்கண்முன் வரிசை வரிசையாக வந்து நிற்பார்கள். சத்தியத்தைத் துய்த்த அந்த அறிவுச் செல்வர்களையும், அம்பிகையைக் கண்ட அந்த அன்புச் செல்வர்களையும் நினைந்தவுடன் அவரது ஐயங்கள் ஒளியின்முன் இருளாக நீங்கும். தவக்கனலை மேலும் விசிறி உக்கிரமாக்குவார்.

ஒரு நாள் அவரால் தாங்கொணாத துயரம் அவரை நெரித்தது. 'கடவுளைக் காணாமல் இதென்ன வாழ்க்கை? தெய்வத்தைப் பாராமலே எதற்காக உயிர் வாழவேண்டும்?' என்ற எண்ணம் கொழுந்துவிட்டெரிந்தது. உடலில் உயிர் தரிக்க முடியாமல் நிலை தடுமாறிய கதாதரர் பவதாரிணியின் சந்நிதிக்கு வந்தார். அங்கு தொங்கிக் கொண்டிருந்த வாளைக் கையில் எடுத்துக் கொண்டார். இன்னும் ஒரு விநாடிதான் இந்தப் பாடு! அப்புறம் அந்த வாள் அவருக்கு அமைதி அளித்துவிடும்.

அந்த ஒரு விநாடிக்குள் மகத்தான சம்பவம் நடந்துவிட்டது. எந்தச் சம்பவத்துக்காகக் கதாதரர் வேக்காட்டில் வெந்து கொண்டிருந்தாரோ அந்த சம்பவம் நிகழ்ந்தே விட்டது!

சந்நிதி முழுவதும் பரமபாவனமானதோர் ஒளி பாய்ந்தது. அந்த ஒளி எங்கிருந்து வந்தது? இதோ, இந்தப் பவதாரிணியிடமிருந்தேதான் வந்தது. ஆம், அங்கு பவதாரிணியின் விக்கிரகம் நிற்கவில்லை, பவதாரிணியே நின்றாள்.

காளி — கறுப்பானவள் — என்றுதான் அவளுக்குப் பெயர். அவளே தன் திவ்வியமான அங்கங்களிலிருந்தெல்லாம் ஒளி பாய, அந்த ஒளியிலேயே அந்த அங்கங்களின் அழகு முழுதும் துலங்க ஆனந்த தரிசனம் அளித்தாள். 'ஞானியின் இருள் அஞ்ஞானியின் ஒளி; அஞ்ஞானியின் இருள் ஞானியின் ஒளி' என்று கண்ணபெருமான் கூறினாரல்லவா! அதற்கேற்ப அஞ்ஞானிகளுக்குக் கறுநிறத்தவளாகத் தோன்றும் காளி மாதா ஞானியான கதாதரருக்கு ஒளிமயமாகக் காட்சி அளித்தாள். எட்ட இருந்து பார்க்கும்போது கடல் நீர் கறுநிறமாகத் தெரிகிறது. கையில் எடுத்தாலோ? நமக்கெல்லாம் எட்ட இருக்கும் அன்னைத் தெய்வம் அப்படித்தான் கதாதரரின் கைக்கருகே வந்துவிட்டாள்!

அவளுடைய மேனியின் ஒளியைச் சொல்வதா? அவள் மேனியில் கொப்புளிக்கும் அருளின் ஒளியைச் சொல்வதா? உலகெல்லாம் பயங்கரியாகக் காணும் காளியைக் கருணாகரியாகவே

Koviloor Digital Library

கண்டார் கதாதரர். தீய சக்திகளை ஒழிப்பதற்கே அல்லவோ அவள் அழிவுத் தெய்வமாகத் தோன்றுவது? பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் மூவரும் குறிப்பிடும் முக்குணங்களையும் கடந்த துரிய வஸ்து அவள் என்பதைக் காட்டவே அம்மூவரையும் அழித்த வளாக அவள் உருத் தரிக்கிருளே அன்றி நாசகாரியல்லள் அவள். அவள் கையிலுள்ள ஆயுதங்களைக் கண்டு நன்மனத்தவர் ஏன் அஞ்சவேண்டும்? ஆயுதங்களால் அவள் எதையும் வெல்லப் போவதில்லை. ஆயுதங்களையும் வென்று, தன் கைக்கு வசமாக்கி அடக்கிவிட்டாள் என்பதைக் காட்டும் அருள் அல்லவா அவள் கண்களில் சுரக்கிறது?

இந்த அருளொளியில்தான் திக்குமுக்காடிப் போனுர் கதா தரர்.

* * *

வாசகர்களே! இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் நம்பிப் படி யுங்கள்! இதயக் கதவுகளை நன்கு திறந்து வைத்துக் கொண்டு, பகுத்தறிவை மூடித்தாழிட்டுவிட்டு இந்தத் தெய்வீகமான காற்றை நிரப்பிக்கொள்ளுங்கள்.

பகுத்தறிவு தாவரத்தைப்போல். பகலில் தாவரம் அதிகப் பிராணவாயுவை வெளிவிடும். அப்போதுதான் அதன் கீழ் தங்க லாம். இரவில் அது கரியமிலவாயுவை அதிகமாக வெளிவிடும். அப்போது அதன் கீழ் தங்குவது உதவாது. பகுத்தறிவின் நிழ லில் எப்போதுமே ஒதுங்குவது நல்லதன்று. பகல் பொழுதைப் போல, பிரத்தியக்ஷ உலக நடைமுறைகள் எப்போது வெளிச்ச மாகத் தெரிகின்றனவோ அப்போது மட்டுமே பகுத்தறிவை நாடுங்கள். பிரத்தியக்ஷமாகப் புலனுகாத ஓர் உலகுக்குச் செல் லும்போது அதை விலக்கி விடுங்கள். பகுத்தறிவு முக்கியமாகப் பகுத்தறிய வேண்டிய உண்மை தன்னுல் எல்லாவற்றையுமே பகுத்துப் பார்த்துவிட முடியாது, தன்னுடைய ஆணைக்கும் ஓர் எல்லை உண்டு என்ற உண்மையைத்தான். வாழ்க்கையின் சுருதி யும் லயமுமாகும் அன்பு, அழகு இவ்விரண்டையும் விளங்கி வைக்க இயலாத பகுத்தறிவை அளவுக்கு மீறி நம்பிவிடாதீர்கள்!

கதாதரரைப் போல நாம் யாரும் தெய்வத்தைக் காணத் துடிக்கவில்லை; கதறவில்லை; உயிரை விடத் துணியவில்லை. அவ்வாறிருக்க அவருக்கு ஏற்பட்ட அநுபவத்தில் நாம் ஐயம் கொள்வது எவ்வளவு மடமையாகும்? எங்கோ ஒரு பரிசோத னுலயத்தில் யாரோ ஒரு விஞ்ஞானி ஜடப்பொருளை வைத்துக் கொண்டு சோதனை நடத்தித் தனது முடிவுகளை வெளியிட்டால் உடனே அவற்றை நாம் ஒப்புக் கொண்டு விடுகிறோம். அந்தச்

Koviloor Digital Library

சோதனைகளை நாமே நடத்திப் பார்க்கவேண்டும் என்று எண்ணுவ தில்லை. ஆனால் தம்மையே பரிசோதனைலயமாகவும், தாமே சோதிக்கப்படும் பொருளாகவும் கொண்டு நம்முடைய ஞானச் செல்வர்கள் புரிந்த சாதனை முடிவுகளை ஏற்கமட்டும் மறுக்கிறோம். சாதனைகளைப் புரிந்துவிட்டுப் பிறகு வேண்டுமானால் மறுப்போமே! விஞ்ஞானிகளில் ஒருவர் கண்ட முடிவு தவறு என்று இன்னொரு காலத்தில் வரும் விஞ்ஞானி கூறுகிறார். நியூடனின் ஆகர்ஷணக் கொள்கை உள்படப் பல மாபெரும் விஞ்ஞான முடிவுகள் இந்தக் கதிக்கு இலக்காகி இருக்கின்றன. ஆனால் ஆயிரம் பல்லாயிரம் ஆண்டுகளாக எல்லா ஞானிகளும் கண்ட முடிவு மட்டும் ஒன் றாகவே இருந்திருக்கிறது. அப்படியும் அவற்றை நம்ப மறுக்கும் நம் பேதைமையை என்னென்பது?

அப்படி ஆயிரம் பல்லாயிரம் ஆண்டுகளாக உலகெங்கிலு முள்ள ஞானிகள் யாவரும் கண்ட முடிவுகள் ஒன்றேதான் என்று நிரூபிக்கவே ஸ்ரீராமகிருஷ்ணரின் அவதாரம் நிகழ்ந்தது. அன்னை யின் தரிசனத்துடன் அவதாரப்பணி மலரத் தொடங்கியது.

* * *

'நோக்கறிய நோக்கும்' 'நுணுக்கறிய நுண்ணுணர்வு' மான தேவி பராசக்தியை பௌதிகக் கண்களால் எவ்வளவு காலம் கண்டு உணர இயலும்? கதாதரர் தம் நினைவிழந்து தரையில் சாய்ந்தார். அப்புறம் அன்று என்ன நடந்தது, மறுநாள் முழு வதும் என்ன நிகழ்ந்தது என்பதேதும் கதாதரருக்குத் தெரியாது. என்றும் அறியாத ஓர் ஆனந்தக்கடல் அவர் அகத்தே மதர்த்துத் திமிர்த்து மங்களநாதத்துடன் அலை வீச, அந்த அலைத் தொட்டிலி லேயே தியானத்துயிலிருந்தார் கதாதரர்.

மக்கள் ஒருவரையொருவர் பார்ப்பதுபோல அம்பிகையை நேருக்கு நேர் கண்டபின் கதாதரர் தெய்விக போதையிலேயே ஆழ்ந்துவிட்டார். தேவியின் தரிசனத்துக்குப் பின் அகண்டமான தோர் அதிசய சாம்ராஜ்யத்துக்குள் பிரவேசித்துவிட்டார் கதா தரர். பரவச நிலையிலும், சர்வசகஜமான நிலையிலும்கூட அவர் கண்டறியாதன காணத் தொடங்கினார். தேவ சக்திகள் உரு வெடுத்து வந்து அவருடன் உறவாடின. அவரும் அவற்றுடன் உரையாடி மகிழ்ந்தார். களிப்புக் கடலில் மூழ்கிக் கிடந்த கதா தரரின் செயல்கள் சுற்றியிருந்தோருக்குச் சற்றும் பொருளாக வில்லை. அவர் ஏன் சிரிக்கிறார், ஏன் அழுகிறார் என்பதெல்லாம் அவர்களுக்குப் புதிராக இருந்தன. அவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதாக முடிவு கட்டிவிட்டார்கள்.

Koviloor Digital Library

இதைப்பற்றியும் கதாதரர் வருத்தப்படவில்லை. அவர் வருந்தியது வேறொன்றுக்காக. தேவியின் தரிசனம் கிடைத்த போதிலும் அது தமக்கு இடையரூமல், அநவரதமும் கிடைக்க வில்லையே என்பதுதான் அவரது வருத்தம். 'நான் அரைமன தாகத்தான் தவமிருந்தேனு? என்னுடைய பக்தி போதாதா?' என்று தம்மையே தாம் குடைந்து கொண்டார். முன்னைவிடத் தீவிரமாக, தீயாக அவரது தரிசன நாட்டம் பற்றியெரிந்தது. தாயின் திருக்கோலமும் நினைத்தபோதெல்லாம் கண்களில் கட்டி நின்றது; இதயத்தில் ஆனந்தத்துக்குக் கரைகட்டி நின்றது.

விக்கிரகத்தில் தேவதையைக் காண்பது நமக்கு எவ்வளவு இயலாதகாரியமோ, அவ்வளவுக்கு விக்கிரகத்தில் தேவியைக் காணுமலிருப்பது கதாதரருக்கு இயலாத காரியமாயிற்று. சாக்ஷாத் சர்வேசுவரியே உயிரும் உடலும் கொண்டு அவர் முன் நின்ருள்; மந்தஹாஸம் புரிந்தாள்; கருணை துளும்பத் துளும்ப நோக்கினுள்; அமிருதமயமாகப் பேசினுள். அவள் கழுத்தில் ஒரு ஹாரத்தை கதாதரர் சரி செய்தாராஞல் அவரது புறங்கையி லுள்ள உரோமங்கள் மெல்ல ஆடும்; ஆம், அந்தப் புறங்கைக்கு அருகேயுள்ள தேவியின் திரு நாசியின் சுவாஸக் காற்றில்தான் அவை ஆடும். அவள் பாதத்தில் அவர் நீண்டநேரம் சிரம் பதித்து வணங்கியிருந்தால் கிண்கிணிநாதம் அவர் செவிகளில் தேன் சொட்டுக்களாக விழும். அம்பிகை தன் சரண கமலங்களை நன்கு பொருத்திக்கொள்ளும்போது அவற்றில் தரித்த நூபுரங்கள் அசைய அவற்றின் முத்துப் பரல்கள் எழுப்பும் இன்னெலிதான் அது.

தெய்வத்துக்கும் மானுடனுக்குமுள்ள தொலைவு குறைந்து கொண்டே வந்து தாய்க்கும் சேய்க்குமுள்ள நெருக்கம் ஏற் பட்டது. கதாதரர் அம்பாளுடனேயே வாழ்ந்தார்; அம்பாளி லேயே வாழ்ந்தார்; அம்பாளாகவே வாழ்ந்தார்.

அம்பாள் என்பது யார்? அன்புதானே? கதாதரர் அன் புருவாகி விட்டார்!

அந்த அன்பின்முன் இக உலக ஆசைகள் யாவும் தீ முன் பஞ்சுப்பொதியாக பஸ்மீகரமாயின. அன்புக்கு ஆண் என்றும் பெண் என்றும் பேதமுண்டா? அன்புமயமான கதாதரரை ஆண், பெண் என்ற பகுப்பு அண்ட முடியுமா? இதைப் பலர் பரிசோதித்தும் பார்த்து கதாதரரின் பரிசுத்தத்தைக் கண்டு மலைத் தனர்.

இராஸமணியின் சமஸ்தானத்தைப் பரிபாலித்து வந்த மதுர நாத விசுவாஸர் கதாதரரைப் பல விதத்தில் பரீட்சித்துப் பார்த்துக் காமமகற்றிய தூயர் அவர் என்று கண்டார். 'எந்த

Koviloor Digital Library

தேவி எல்லா உயிரினங்களிடத்திலும் பெண்மையாகத் திகழ்கிருளோ, அந்த தேவிக்கு வணக்கம், வணக்கம், முக்காலும் வணக்கம்' என்ற ஸப்தசதீ மந்திரத்தை கதாதரர் முற்றிலும் உன்னி உணர்ந்து வாழ்ந்தார். பெண்களெல்லாமே தேவியாகத் தெரிபவரிடம் காமம் எப்படித் தலைகாட்ட முடியும் ?

இப்படிப்பட்டவருக்குத்தான் திருமணம் முடிக்கவேண்டும் என்று தாயார் சந்திரமணி விரும்பினுள். சாதனைகளால் நலிவுற்ற கதாதரரை கமார்ப்புகூர் கிராமத்துக்கே தருவித்த தாயாரும், இதர உறவினர்களும் அவரது உடல் நலம் பெறவேண்டுமெனில் அவருக்கு மணமுடிக்கவேண்டியது அவசியமாகும் எனக் கருதினர்.

கதாதரர் தம் அன்னையின் விருப்பத்தை உலக அன்னையிடம் தெரிவித்தார். அவளும் அவர் அதற்கு இணங்கவேண்டுமென ஆக்ஞாபித்தாள். கரம்பிடித்த பெண்ணை அருகில் வைத்துக் கொண்டே பெண்ணாசை என்பது லவலேசமும் தொடாமல் பிரம்மசரியம் அநுஷ்டிக்கக்கூடிய வைராகிகளும் உலகில் உண்டு என்பதனை நிரூபிப்பதற்காகவேதான் பராசக்தி இவ்வாறு ஆக்ஞாபித்திருக்கக் கூடும்.

கதாதரர் திருமணத்துக்கு ஒப்புதல் அளித்துவிட்டார். ஜயராம்பாடியில்தான் தனது மனைவியாகப் போகிறவள் இருக்கிருள் என்று தெரிவித்து அவளுடைய வீட்டைக்கூடத் தெரிவித்துவிட்டார்.

கமார்ப்புகூரிலிருந்து மூன்றே மைலிலுள்ள ஜயராம்பாடியில் ஐந்து வயதுக் குழந்தையாக விளையாடிக்கொண்டிருந்தாள் சாரதாமணி. பிஞ்சுப் பருவமானுலும் அப்போதே அவளுக்குத் தூய்மையில் தனியார்வம் இருந்தது. மலர்களைக் காணும் தோறும் அந்தக் குழந்தைக்கு அம்மலர்களின் பரிசுத்தம் தனக்குக் கிட்டவேண்டும் என்று ஆண்டவனைப் பிரார்த்திக்கத் தோன்றும். வட்ட மதியத்தைக் காணும் தோறும் அந்த மதியத்திலுள்ள மாசும் கூட இன்றித் தான் தூய ஒளி வீசவேண்டும் என்று பகவானைப் பிரார்த்திப்பாள் சாரதை.

குழந்தை சாரதாமணிக்கும் இருபத்திநாலு பிராயத்து கதாதரருக்கும் 1859-ம் ஆண்டு மே மாதம் விவாகம் நடந்தேறியது.

மீண்டும் தக்ஷிணேசுவரத்துக்கு அர்ச்சகராகத் திரும்பினுர் கதாதரர். அன்னை, மனைவி, இதர உறவினர் ஆகியோரை அடியோடு மறந்தார். சத்தியப் பொருளைத் தவிர வேறெதும் அவரது உள்ளத்தை ஈர்க்கவில்லை.

Koviloor Digital Library

இந்தச் சமயத்தில் தந்திரசாதனையில் தேர்ச்சி பெற்ற பைரவி பிராம்மணி என்ற சந்நியாசினி தக்ஷிணேசுவரத்துக்கு வந்தாள். ஜீவனின் உடலத்தில் மூலாதாரத்தில் உள்ள குண்டலினியாம் பிராண சக்தியை எழுப்பி ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆக்ஞை முதலிய சக்கரங்களைக் கடக்கச் செய்து சிரஸில் ஸஹஸ்ராரத்திலுள்ள சிவத்தில் அதனை ஒன்றச் செய்து முக்தி நிலை பெறச் செய்வது தந்திர சாதனை. உடலத்தில் உள்ள சக்கரங்களாக இவற்றைக் கூறினாலும் பௌதிகமாகக் காணக் கூடியனவல்ல அவை. உடலில் நிச்சயமாக உறையும் உயிரை நாம் பௌதிகமாகக் காண முடியாவிடினும் விஞ்ஞான உபகரணங்கள்மூலம் அதன் இயக்கத்தை அறிய முடிகிறதல்லவா? இதேபோலத்தான் மூலாதாரம் முதலிய சக்கரங்களை பௌதிகமாக அறிய முடியாவிட்டாலும் ஞான உபகரணங்கள்மூலம் அறியலாம். காயத்தைக் கோயிலாகக்கொண்டு அக்கோயிலில் பரமன் உறைவதைக் கூறும் தந்திர சாஸ்திரம்தான் புறத்தே நாம் கோயில்கள் எடுத்து, மூர்த்திகளைப் பிரதிஷ்டித்து ஆராதிப்பதற்குரிய வழிமுறைகளையும் கூறுகிறது. உள்ளும் புறமும் பரம்பொருள் விம்மிக்கொண்டிருப்பதை எடுத்துச்சொல்லி, கட்டுக்கடங்காத அந்த வஸ்துவை அடைவதற்காகக் கட்டுத்திட்டங்களுடன் உபாசனா மார்க்கத்தைக் கூறுவது தந்திர சாஸ்திரமே. நிர்க்குணமான பிரம்மத்தில் லயிக்க உதவுவது போலவே, அந்த உபாசனைக்குத் தேவையான மன ஒருமைப்பாட்டை அளிக்கவல்ல மூர்த்தி ஆராதனைகளுக்கான சடங்குகளையும் விவரிப்பது தந்திர சாஸ்திரம்.

தந்திர சாஸ்திரத்தில் தேர்ந்த பயிற்சி பெற்றவளும், ஒப்பற்ற தூய்மை நிறைந்தவளும், உண்மையான பக்தி கரை புரளுபவளுமான பைரவி பிராம்மணி கதாதரரை அவதார புருஷர் என அறிந்தாள். குழந்தைத்தனம் சற்றும் மாறாத அந்த எளிமை நிறைந்த கதாதரருக்குத் தாய்போலவே தான் இருந்து அவருக்கு தந்திர மார்க்கத்தை உபதேசித்த குருவானாள். நம்ப இயலாத குறுகிய காலத்திலேயே கதாதரர் தந்திர சாதனைமூலம் ஜீவ-பிரம்ம அபேதத்தை உணர்ந்தார். அந்த அபேதத்தை உள்ளபடி அநுபவித்திராத பைரவி பிராம்மணியை அத்வைத சாதனைக்குத் தூண்டி அனுப்பிவைத்தார் கதாதரர்.

பாலராமனைத் தொழும் வைஷ்ணவத் துறவி யொருவர் அதன் பின் தக்ஷிணேசுவரத்துக்கு வந்தார். அவர் கொண்டு வந்த குழந்தை இராமனின் விக்கிரகம் கதாதரரை வசியப்படுத்தி விட்டது. அதோடு குழந்தை இராமனுமே கதாதரருக்கு வசிய

Koviloor Digital Library

மாஞன். அவருடன் மழலை பேசினான்; மகிழ்ந்து விளையாடினான். அவரைச் சிரிக்க வைத்தான்; அழவைத்தான். அவருடைய மனக் கொதிப்பை ஒரு சமயம் நீக்கிக் குளிரவைத்தான்; மற்றொரு சமயம் அவர் ஆத்திரத்தைக் கிளறிவிட்டு அவருடைய வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டான். அவர் முன் நடனமாடினான் ராமலாலா. அவருடைய தோளை 'உப்பு மூட்டை' கட்டிக் கொண்டான். அவர் தன்னைத் தூக்கிவைத்துக் கொள்ள வேண்டும் என்று அடம் செய்தான். அவரிடம் உணவை யாசித்தான்; அவர் கொடுத்த வறட்டு அவலைக் குதப்ப முடியாமல் குதப்பித் திருநாவெல்லாம் குருதி கசிந்தான். ராமலாலா விக்கிரகத்தைக் கொண்டு வந்த பக்தசிகாமணியே, தம்மைவிட கதாதரரிடம் இராமன் இறுக்கமாக 'ஒட்டி'க் கொண்டிருப்பதைக்கண்டு விக்கிரகத்தை கதாதரரிடம் ஒப்படைத்துவிட்டுக் கிளம்பிவிட்டார்.

அன்பு அல்லது பிரேமையின் மூலம் ஆண்டவனை அடைய வழி வகுப்பன வைஷ்ணவ சாதனைகள். இதில் பல பாவங்கள் உண்டு. பரம புருஷனைப் பிதாவாகவும், சகாவாகவும் இப்படியெல்லாம் புத்ரபாவம், மித்ரபாவம் இவற்றிலிருந்து வழிபடுவதுண்டு. மதுரபாவமும் இவற்றிலொன்று. பகவானை நாயகனாகவும் தன்னை நாயகியாகவும் பாவிப்பதே இது.

நாம் நடைமுறையில் காணும் கணவன்-மனைவி என்ற உடல் உறவாக இதனை எண்ணிக் குழப்பிக் கொள்ளவேண்டாம். தன் உடலின் ஒவ்வோர் அணுவையும் பக்தியால் நிரப்பிக்கொண்டு, ஆண்டவனுடைய மூர்த்தியின் ஒவ்வோர் அணுவையும் அருளில் நிறைத்துப் பார்த்து, பக்தியை அருளுடன் இணைப்பதுதான் மதுர பாவம். வெட்கம், நாணம், அவமானம் இவற்றையெல்லாம் உதறிவிட்டு இறைவனிடம் ஸர்வஸங்க பரித்தியாகம் செய்வதே மதுரபாவம். படைப்பு முழுவதையும் இருபாலாகப் பிரித்து, இரண்டுக்குமிடையே கவர்ச்சி வேகத்தை உண்டாக்கியுள்ள பராபரவஸ்து, தான்மட்டுமே புருஷனாக இருந்து சகல ஜீவராசிகளையும் பெண்களாகத் தன்னிடம் அடிமை கொள்வதே மதுரபாவம். இந்த பாவத்தை நம்முடைய ஆழ்வாராதிகளும், நாயன்மார்களும் பலப்பல கோணங்களில் சுவைபட அநுபவித்து, அந்த அநுபவத்தைச் சொற்களிலும் சுவைத்துச் சுவைத்துப் பாடியிருக்கிறார்கள். மனைவி-மக்கள், வீடு-வாசல் எல்லாவற்றையும் துறந்த மகாஞானியர் அவர்கள் என்பதை மனதில் கொண்டால் மதுர பாவத்தின் பரிசுத்தமும் புரியும். ஆண்-பெண் என்ற பேதம் முற்றிலும் அழிந்து, எல்லா உயிரினமும் பரம புருஷனை அடைய வேண்டிய ஸ்திரீகள்தாம் எனக்காணும் உயர் நிலை அது.

Koviloor Digital Library

பரம்பொருளின் எல்லையற்ற மகிமையைக் கண்டு மலைக்காமல், அதன் எல்லையற்ற இனிமையை நுகர்ந்து மகிழ்வதே மதுரபாவம். எல்லாவிதமாகவும் இறைவனை அடையலாம், எந்த விதமாகவும் இறைவனை அடையலாம் என்பதை விளக்கவே பிறந்த கதாதரர் மதுரபாவத்தின் மூலமும் பரம்பொருளை நுகர விரும்பினார். ஆண்-பெண் என்ற பேதம் நீங்கப் பெற்றவர் தம்மைப் பெண்ணாகக் கருதி ஆண்டவனின் பிரேமைக்காக ஏங்கினார். பெண்மை அவரிடம் பரிபூரணமாகக் குடி புகுந்தது.

இதில் விந்தையெதுவும் இல்லை. தேவியை உபாசிப்பவர்கள் யாவரும் தேவியாகவே ஆகிவிடுவார்கள் என்பது சாஸ்திரம். இதற்கேற்ப அம்பிகையை மனம்குவிந்து பூஜிப்பவர்களிடம் பெண்மையின் மென்மை ஸ்வச்சமாகப் பிரகாசிப்பதை இன்னும் நாம் கண்கூடாகப் பார்க்கலாம். காளி மாதாவைப் பக்திபூரித்துப் பூஜித்த கதாதரருக்குப் பெண்மை கூடியதில் ஆச்சரியம் என்ன? ஆண் பெண் இருபாலருக்கும் மோக்ஷ நிலை பொது என்பதைத் தம்மிலேயே நிருபித்துக் கொள்வதற்காக உடை, பேச்சு இவற்றிலெல்லாம் கூடப் பெண்ணாகிச் சிலகாலம் வாழ்ந்தார் கதாதரர். பரம புருஷனைக் கண்டு சாதனையின் நிறைவையும் பெற்றார்.

வேதாந்த சத்தியத்தை உள்ளவாறு அநுபவித்த தோதாபுரி என்ற சந்நியாசி தக்ஷிணேசுவரத்துக்கு வந்து சேர்ந்தார். அவர் தாம் கதாதரருக்கு வேதாந்தத்தைப் போதித்தவர். பரம்பொருளோடு ஒன்றிவிடும் நிர்விகல்ப சமாதி நிலைக்கு எத்தனையோ காலப் பயிற்சி வேண்டும். நாற்பதாண்டுகள் கடும் நியமமும் அநுஷ்டானமுமாக வாழ்ந்து இந்த அத்வைத நிலையை அநுபவித்தவர் தோதாபுரி. அவர் காட்டிய வழியைப் பின்பற்றிய கதாதரரோ ஒரே நாளில் நிர்விகல்ப சமாதி நிலையை அடைந்தார். இந்த உலகத் தோற்றத்துக்குக் காரணமான, ஒன்றேயான மெய்ப்பொருள் தாமே என்பதை அறிந்து, அநுபவித்து விட்டார் கதாதரர்.

கதாதரர் தோதாபுரியிடம் வேதாந்தம் பயின்றதாகச் சொன்னோம். கதாதரருக்கு வேதாந்தம் பயிலவேண்டிய அவசியமே இல்லை. ஏனெனில் அவருடைய இயல்பே வேதாந்தம் தான். எனினும் குருமுகமாக கற்கவேண்டும் என்ற மரபுக்காகவே அவரும் தோதாபுரியைக் குருவாகக் கொண்டார் என்று சொல்ல வேண்டும்.

தோதாபுரியும் சிஷ்யரிடம் கற்றார். பரம்பொருள் நிர்க்குணமாகத்தான் இருக்க முடியும் என்று கருதிய தோதாபுரியை ஸகுணப் பிரம்மமாக தேவதேவியராகவும் பரம்பொருள் இலங்கும்

Koviloor Digital Library

என்பதனை உணரவைத்தவர் கதாதரர்தாம். அம்பிகையின் பெருமையைத் தோதாபுரி பிரத்தியக்ஷமாக அநுபவிக்குமாறு செய்தவர் கதாதரரே.

கதாதரருக்குக் கிரமப்படி சந்நியாசம் அளித்தார் தோதாபுரி. ஆதிசங்கரர் வகுத்த பத்துவிதமான சந்நியாசிகளில் 'புரி' என்பவர்களும் அடங்குவர். அத்வைதத்தை உள்ளங்கை நெல்லிக்கனியாக அநுபவித்த ஸ்ரீராமகிருஷ்ணர், அத்வைதத்தைத் தனிப்பெரும் சமயமாக ஸ்தாபித்த ஆதிசங்கரரின் வழியிலேயே வந்தது மிகமிகப் பொருத்தமல்லவா ?

ஸ்ரீராமகிருஷ்ணர் யார் என்று யோசிக்கவேண்டாம்! கதாதரரேதாம் ஸ்ரீராமகிருஷ்ணராகி விட்டார்.

* * *

மொட்டினைத் தேடி வந்து தீண்டி சூரியகிரணம் அதனை மலர்த்துவதுபோல கதாதரரைத் தேடி வந்து ஸ்ரீராமகிருஷ்ணராக மலர்த்திவிட்டனர் பைரவி பிராம்மணியும், தோதாபுரியும் இன்னும் பல பெரியார்களும். சூரிய கிரணம் படாவிடினும் மொட்டு மலரத்தான் செய்யும் என்பதையும் நாம் மறந்துவிட வேண்டாம்.

எப்படியானாலும் மொட்டினைத்தேடிக் கிரணங்கள் வந்தது போலத் தன்னைத் தேடி வண்டுகள் வரவேண்டுமென்று வாடத் தொடங்கியது மலர்.

* * *

ஸ்ரீராமகிருஷ்ணருடைய 'பைத்தியத்தை'ப்பற்றி அவர் பிறந்த கிராமத்தில் பல கதைகள் உலவலாயின. அதைப்பற்றிய உண்மையை நேரில் கண்டு அறியவேண்டும் என சாரதாமணியே தக்ஷிணேசுவரத்துக்கு வந்தாள். அப்போது அவளுக்கு வயது பதினெட்டு. ஆனால் பதினெட்டு பிராயத்துப் பெண்ணுருத்தியை ஸ்ரீராமகிருஷ்ணர் காணவில்லை. காலம் கடந்த காளி மாதாவையேதான் சாரதாமணியிடமும் கண்டார். ''பெண்ணே, சர்வேசுவரி எல்லா மாதர்களிடத்திலும் தானே உறைவதாக எனக்குக் காட்டி அருளி யிருக்கிறாள். உன்னையும் என் அன்னையாகத்தான் நான் காண இயலும். என்றாலும் நான் உன்னைக் கலியாணம் செய்துகொண்டு விட்டதால் என்னை நீ உலக வாழ்வுக்குத் திருப்ப உரிமை கோரமுடியும். அப்படி நீ உரிமை கோரினால் நான் உன் ஊழியனாக இருக்கிறேன்'' என்றார் ஸ்ரீராமகிருஷ்ணர் சாரதையிடம்.

ஸ்ரீராமகிருஷ்ணர்தான் அப்படிப் பேச முடியும்!

Koviloor Digital Library

அப்போது சாரதாமணிதான் அப்படிப் பேச முடியும் என்று கூறுமாறு அவள் விடையளித்தாள்: ''சுவாமி, உங்களை நான் உலக வாழ்வுக்குத் திருப்ப மாட்டேன். அந்த எண்ணம் எனக்கில்லை. உங்கள் அருகில் இருக்கவேண்டும்; உங்களுக்குப் பணிவிடை புரியவேண்டும்; உங்களிடமிருந்து போதனை பெற வேண்டுமென்பதற்காகத்தான் நான் இங்கு வந்திருக்கிறேன்.'' என்று கூறினாள் அவள்.

மலரின் தூய்மையும், மாசற்ற மதியத்தின் பரிசுத்தமும் தனக்குக் கிடைக்கவேண்டும் என்று அவளது ஐந்தாவது வயதில் பிஞ்சு விட்ட ஆசை பழுத்தே விட்டது.

ஸ்ரீராமகிருஷ்ணரின் 'பைத்தியத்தை'ப்புரிந்து கொண்ட சாரதை மனைவி ஸ்தானத்திலிருந்து விலகி மாணவி ஆனாள். சதி-பதி உறவு குரு-சிஷ்ய உருவான இந்தக் கதையை நினைக்கும் போதெல்லாம் நம் அழுக்கடைந்த உள்ளங்களைக் கழுவிக் கொண்டாற் போன்ற ஒரு புத்தம் புதுப் புனிதம் நிறைகிறது.

*　　　*　　　*

குரு-சிஷ்ய பாவத்துடன் மட்டும் இந்தத் தொடர்பை முடிக்கவில்லை பரமஹம்ஸர்! குருவே பக்தனாகி சிஷ்யையைத் தேவியாகத் தொழுது பார்க்க விரும்பினார் அவர். ஓர் அமாவாசை இரவில் அற்புதமான ஷோடசி ஆராதனையையும் சாரதா மணிக்கு நிகழ்த்தி விட்டார்.

விக்கிரகத்தில் தேவியை ஆவாஹனம் செய்வது போலவே சாரதாமணியின் உடலில் தேவியை ஆவாஹனம் செய்து அவளை சாரதாதேவியாகவும், அவள் விரும்பியபடியே தூய அன்னையாகவும் செய்துவிட்டார் பரமஹம்ஸர். பூஜிக்கப்பட்ட தூய அன்னை, பூஜிக்கும் பரமஹம்ஸர் இருவருமே பரவச நிலை அடைந்தனர். இருவருமே பரம்பொருளில் லயித்திருந்தனர். லயமும் தன்னால் கலந்தது. தாம் வாழ்நாள் முழுதும் புரிந்திருந்த சாதனைகளின் பலனையெல்லாம் தூய அன்னையின் பாதங்களில் அர்ப்பணித்தார் ஸ்ரீராமகிருஷ்ணர். அதற்கடையாளமாகத் தமது ஜபமாலையையும் அவளது சரணத்தில் சமர்ப்பித்தார்.

அநுபவத்தினால் என்றோ முற்றும் கடந்த துறவியாகிவிட்ட ஸ்ரீராமகிருஷ்ணர் இப்போது சாஸ்திரப்படியும் சகலவிதமான கட்டுக்களையும் ஆசார அநுஷ்டானங்களையும் கடந்தவராகிவிட்டார். உலகபந்தங்களில் மிகவும் பலம் பொருந்திய கணவன்—மனைவி உறவை என்று ஒருவன் நீத்து மனைவியைத் தேவியாகப் பார்க்கிறானோ அதன் பின் அவன் காண்பனவற்றையெல்லாம் கடவுளாகவே காண்பான் என்பது சாஸ்திரம். ஸ்ரீராமகிருஷ்-

Koviloor Digital Library

ணரின் கடுமையான அப்பியாசங்களும் ஷோடசி பூஜையுடன் முடிவடிந்தன. முடிவடைந்தன என்பதைவிட நிறைவடைந்தன என்று சொல்வதே யுக்தமாகும்.

* * *

வேதாந்த மார்க்கத்தாலும், பக்தி மார்க்கத்தாலும், ஆணுக இருந்தும், பெண்ணுக இருந்தும் ஆண்டவனைக் கண்ட ஸ்ரீராம கிருஷ்ண முனிவர் இதர மதங்களாலும் இறைவனை அடைய முடியும் என்பதையும் விளக்கலானுர். தாமே இஸ்லாமிய மதக் கோட்பாடுகளைப் பின்பற்றி அதன் மூலமும் மூலப்பொருளை உணர்ந்தார். இயேசு நாதரைக் காணப்பெற்று, கிறிஸ்துவ மதமும் மெய்யிடமே மக்களை இட்டுச் செல்கிறது என்பதை மெய்ப்பித்தார்.

ஒரே இடத்துக்குப் பல பாதைகள் மூலம் செல்வதுபோல ஒன்றேயான கடவுளைப் பல மதங்களாலும் அடைய முடியும் என்பதை நிரூபித்த அவதார வரிஷ்டரானுர் ஸ்ரீராமகிருஷ்ணர்.

* * *

அவதார வரிஷ்டரான ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் தாம் அவதார புருஷர் என்பதையும் அம்பிகையின் மூலம் அறிந்தார். பிறமத மோகத்தாலும், எம்மதத்திலும் பற்றற்ற அவநம்பிக்கையாலும் சீர்கேடுற்று வரும் பாரதத்தில் மீண்டும் சநாதன தர்மத்தைத் தழைக்கச் செய்யப் பிறந்தவர் தாம் என்பதை உணர்ந்தார். தம்மூலம் தேவி புதியதொரு ஆன்மிக ஸ்தாபனத்தை நிறுவப் போகிறுள்; உலகுக்கெல்லாம் பொதுவாக எந்நாட்டவரும் பின்பற்றும் ஸ்தாபனமாக அது விளங்கப்போகிறது என்பதையும் உணர்ந்தார். சம்சாரத்திலிருந்து விடுபடும் வீடு என்ற முக்தி நிலையில் எப்போதுமே உள்ள தாம் உலகைத் துறந்து அந்த முக்தி இன்பத்திலேயே கரையப்போவது கிடையாது; ஆனுல் உலகை உய்விப்பதற்காகத் தமது மோக்ஷத்தைத் துறந்து மீண்டும் மீண்டும் இங்கு பிறக்கப்போகிறேம் என்று உணர்ந்தார்.

புதியதோர் ஆன்மிகப் பண்ணைக்கு உரிமையாளராகிய பரமஹம்ஸர் கண்ட முக்கியமான முடிவுகள் இவைதாம்:

ஒவ்வொரு மதமுமே ஆண்டவனிடம் இட்டுச் செல்லும் ஒரு பாதையாகும்.

இந்து மதத்திலேயே மூன்ருகக் காணும் துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் இவை ஒன்றுக்கொன்று முரணானவையல்ல. ஒன்றை மற்றது பூரணமாக்கும் முறையில் அமைந்தவை அவை.

Koviloor Digital Library

ஆரம்ப நிலையில் ஆண்டவன் வேறு நாம் வேறு என்ற மனோபாவத்தில் பக்தி புரிந்தால் ஆண்டவனுக்குள்ளேயே நாம் இருக்கிறோம் நமக்குள்ளும் ஆண்டவன் உள்ளான் என்ற நிலையைப் பெற்று இறுதியில் ஆண்டவனும் நாமும் ஒன்றே என்ற அத்வைத சத்தியம் அநுபவபூர்வமாக லபிக்கும் என்பது பரமஹம்ஸரின் கருத்து. அத்வைத ப்ரதிஷ்டாபனாசாரியராகிய சங்கரபகவத் பாதர்களும் இதே மனப்பாங்கு காரணமாகத்தான் மூர்த்தி வழிபாடு எனும் ஸகுண உபாஸனைக்கு இடமளித்துள்ளார். அத்வைதத்தை அவலம்பித்த அவரேதான் ஆதித்தன், அம்பிகை, விஷ்ணு, கணநாதன், மஹேசுவரன், குமாரஸ்வாமி ஆகிய தேவதைகளுக்குரிய உபாஸனா மார்க்கங்களாகிய ஷண்மதங்களையும் ஸ்தாபித்தார் என்பது கவனிக்கத்தக்க விஷயமாகும். மிக மிக உயரத்தில் இருப்பவனால் கீழே உள்ள யாவற்றையும் காண இயலும். அடிமட்டத்திலிருப்பவனால் உயர என்ன உள்ளது என்பதைக் காண இயலாது. அத்வைத வேதாந்தத்தைப் பிற மதங்கள் ஒப்புக் கொள்ளாததும், அப் பிற மதங்களையும் அத்வைத நிலைக்கு ஏற உதவும் படிகளாக அத்வைதம் ஒப்புக் கொள்வதும் இதுபோன்றதே.

கர்மம் புரிவது நன்று, நன்றன்று என்பது பற்றிப் பரமஹம்ஸர் கருத்து இதுவே: ஒருவிதமான பற்றுக்களும் தொட முடியாத பூரண சுத்தமானவர்கள் கர்மத்தைக் கடந்தவர்கள். அவர்கள் கர்மத்தில் ஈடுபட ஆண்டவனே அநுமதிக்கமாட்டான். எனினும் சாமானிய மக்கள் தமது கடமைகளைப் பற்றில்லாமல் செய்தே யாகவேண்டும். வேலைக்காரி எப்படி தன் எஜமானனுடைய வீட்டின் சகலவிதமான வேலைகளையும் செய்தாலும் தன் வீடு வேறெங்கோ உள்ளது என்பதை மறக்கவில்லையோ அதே போல மக்களும் தங்களுடைய நிரந்தர ஸ்தானம் பரம்பொருளில் உள்ளது என்பதை மறவாமலே உலகில் சகலவிதமான கடமைகளையும் ஆற்றவேண்டும் என்பது பரமஹம்ஸரின் உபதேசமாகும்.

* * *

உபநிஷதங்களின் உருவகமாகவே அமைந்தவர் ஸ்ரீராமகிருஷ்ண தேவர். உபநிஷதங்கள் கண்ட உண்மைகளைத்தான் மிகவும் எளிதான முறையில் அவர் விளக்கினார். அந்த உண்மைகளை உலகெல்லாம் அறியவே தாம் அவதரித்திருப்பதை உணர்ந்திருந்தார் அவர். அவரிடம் சிஷ்யர்கள் வந்து சேரப் போகிறார்கள்; அவர் சேர்த்து வைத்திருந்த ஆன்மிகச் செல்வத்தை அவர்கள் பாரெங்கும் விநியோகிக்கப் போகிறார்கள் என்று பவதாரிணி கூறியிருந்தாள்.

Koviloor Digital Library

அவர்களை நாள்தோறும் எதிர்பார்த்தே ஏங்கி வந்தார் பரமஹம்ஸர். முட்ட முட்டப் பால் சுரந்து மடி கனக்கும் பசு அந்தப் பாலைப் பருகவேண்டிய கன்றை எதிர்நோக்கி வாடுவது போல ஞானமுதம் நிரம்பப் பெற்ற ஸ்ரீராமகிருஷ்ண முனிவர் அந்த அமுதத்தை அருந்த வேண்டிய அருமை வாரிசுகளுக்காகக் காத்திருந்தார். இந்த ஆர்வத்தைப் பற்றிப் பரமஹம்ஸர் சொல் வார்: ''அப்போது நான் கொண்டிருந்த ஆர்வத்துக்கு ஓர் எல்லையே கிடையாது. பகல் போதில் அந்த ஆர்வத்தை நான் எவ்வாறே கட்டுப்படுத்திக் கொண்டேன். லௌகிக இச்சை மட்டுமே கொண்ட மக்களின் பேச்சு எனக்குக் கசப்பாகக் கசந்தது. என் அன்புக் குழந்தைகள் வரும் நாள் எந்நாளோ என்பதையே ஆர்வமிக எண்ணிப் பார்த்துக் கொண்டிருப்பேன். அவர்களோடு உரையாடியும், என் அநுபவங்களை யெல்லாம் அவர்களுக்கு விளக்கி என் மனச்சுமையை இறக்கிக்கொண்டும்தான் சாந்தி அடையப் போகிறேன் என்று நம்பி வந்தேன். ஒவ்வொரு சிறிய சம்பவமும் எனக்கு அவர்களை நினைவூட்டும். அவர்களில் இன்னின்னருக்கு இன்னின்ன சொல்லவேண்டும் என்றெல்லாம் நானே வரையறைகள் செய்து பார்த்துக்கொள்வேன். பகல்போது முடியும். அதன் பின் என் உணர்ச்சிகளை என்னல் கட்டுப்படுத்தவே முடியாது. 'இன்னமொரு பகல் போச்சு! அவர்கள் வந்தபாடில்லை!' சந்தியாபூஜையின்போது கோவில் சூழலில் மணிநாதமும், சங்கநாதமும் நிரம்பும்போது தோட்டத்திலுள்ள கட்டிடத்தின் கூரைக்கு ஏறிச் செல்வேன் நான். இதய வேதனை என்னை முறுக்கிப் பிழிய என் குரலின் உச்சியில் கதறுவேன்: 'வாருங்கள் என் குழந்தைகாள்! எல்லாரும் எங்கு போனீர்கள்? நீங்களின்றி என்னல் உயிர்தரிக்க முடியவில்லை' என்று. தாய் தனது குழந்தைக்காக அப்படி ஏங்குவதில்லை; நண்பனெருவன் தன்னுடைய நண்பனுக்காக அப்படி ஏங்குவதில்லை; காதலன் தன் காதலிக்காக அப்படி ஏங்குவதில்லை — அப்படி ஏங்கியிருக்கிறேன் நான். ஆஹா அதை வார்த்தைகளில் கூறவே முடியாது.''

பரமஹம்ஸரான ஒரு சந்நியாசிக்கு இவ்வளவு துயரம் ஏற்படலாமா என்றல் அதுதான் கருணை செய்கிற காரியம். ஞானம் நிறைந்தவுடன் அந்த ஞானத்தைப் பிறருக்கும் அளித்தே தீரவேண்டும் என்ற அருளும் பிறந்துவிடும். இதனல்தான் அம்பிகை என்ற அன்பு மடுவில் குளிரக் குளிரத் தனது சிறகுகளைப் பரப்பி நீர்ப்பரப்பின் போக்குப்படி சென்று கொண்டிருந்த பரமஹம்ஸத்துக்கும் இப்படி ஒரு தவிப்பு ஏற்பட்டது. சந்நியாச லக்ஷணம், எதையுமே தனக்கென வைத்துக் கொள்ளாதிருப்பது

Koviloor Digital Library

தானே! ஞானத்தையும் மோக்ஷத்தையும் தமக்கென வைத்துக் கொள்வதுகூட உத்தமத் துறவிகளுக்குச் சுயநலமாகத் தோன்றும் போலும்! பிறருக்குத் தருவதாலும் குறைவுபடாத செல்வம் ஞானமானபடியால் அதனை நிச்சயம் உலகுக்கு வழங்கியே ஆக வேண்டும் என்ற துடிப்பு ஏற்படுவது நியாயம்தானே?

* * *

ஸ்ரீராமகிருஷ்ணரின் முதல் சிஷ்யை தேவி சாரதாமணி. ஆனால் அவளால் உபதேசங்கள் உலகெங்கும் பரவுவதற்கில்லை. அப்படிப் பரப்பக்கூடிய ஆண் சிங்கங்களை நாடித்தான் தவமிருந்தார் ஸ்ரீராமகிருஷ்ணர். குருவுக்காகச் சீடர்கள் தவிப்பதுண்டு. இங்கோ குரு சீடர்களுக்காகத் தவித்தார்.

பக்தர்களைச் சோதனை செய்வதைவிட அந்தச் சோதனையை நீக்குவதில் அதிக சமர்த்தளான சர்வேசுவரி ஸ்ரீராமகிருஷ்ண தேவரின் வெந்துயரையும் துடைக்கலானாள். ஒவ்வொருவராக ஸ்ரீராமகிருஷ்ணர் என்ற ஞான மின்சார நிலையத்துக்கு வந்தார்கள். கௌரி பண்டிதர், பத்மலோசனர், வைஷ்ணவசரணர், சசதர தர்க்க சூடாமணி முதலிய பண்டிதர்களும் சாதகர்களும் அவரிடம் வந்தனர். பிரம்ம சமாஜத் தலைவரான கேசவ சந்திர சேனர், பிரதாப சந்திர மஜூம்தார், விஜய கிருஷ்ண கோஸ்வாமி, நாக மகாசயர் முதலிய அறிஞர்களும், அநுபூதிச் செல்வர்களும் வந்தார்கள். கிறிஸ்துவர், முகம்மதியர், சீக்கியர் இவர்களும் ஹிந்துக்களைப் போலவே நூற்றுக்கணக்கில் தக்ஷிணேசுவரத்தில் குழும ஆரம்பித்தனர்.

ஆனால் இதெல்லாம் ஸ்ரீராமகிருஷ்ணருக்குப் போதவில்லை. மின்சார நிலையத்திலிருந்து தங்களுக்குமட்டும் ஒளிபெற்ற விளக்குகள் இவை. உள்ளே மோதும் மின்சார வேகம் முழுவதையும் தாங்கி சக்தி பெற்றன அல்ல அவை. அவ்வளவு மின்சாரத்தையும் தாங்கித் தேக்கத்திலிருந்து எடுத்துக்கொண்டு உலகம் முழுவதற்கும் ஒளி தரும் கம்பியைத் தேடிக்கொண்டிருந்தார் பரமஹம்ஸர்.

அந்தக் கம்பி அதே போதில் கடவுளைக் கண்டவருக்காகத் தேடி அலைந்து கொண்டிருந்தது. இந்த நாடு செய்த புண்ணியம், அந்தக் கம்பிக்குச் சடேரென மின்தேக்கத்தின் நினைவும் வந்துவிட்டது.

நரேந்திரநாதன் ஸ்ரீராமகிருஷ்ண தேவரை வந்தடைந்து விட்டான்.

லயம் சுருதியை வந்தடைந்து விட்டது!

Koviloor Digital Library

அத்தியாயம் 6

ஞானப் பட்டறையிலே

தக்ஷிணேசுவரத்தில் ஸ்ரீராமகிருஷ்ண முனிவர் வசித்துவந்த அறைக்குள் மேற்கு வாயிலாகப் பிரவேசித்தான் நரேந்திரநாதன். மேல் நாடுகளில் பரமஹம்ஸரின் மேலான தத்துவங்களை அவன் பரப்பப் போகிறான் என்பதற்குத்தான் அது ஒரு சூசகமாக அமைந்ததோ என்னவோ?

சுரேந்திரநாதரும், மற்றும் சில நண்பர்களும் நரேந்திரனுடன் வந்தனர். ஆனால் அவனோ உடன்வந்தவரை, ஏன் தன் உடல், உடை இவை பற்றியே, நினைவில்லாமல் ஒருமுகப்பட்ட மனதோடு உள்ளே பிரவேசித்தான். காந்த சக்தி வாய்ந்த அவனது கண்கள் அவனுக்குள்ளேயே துழாவிக்கொண்டிருந்தன. யாவும் அறியும் ஆற்றல் பெற்றிருந்த பரமஹம்ஸருக்கு அவனுடைய ஆன்மிகநாட்டம் தெளிவாகப் புரிந்தது. லோகாயதம் பரவிவிட்ட கல்கத்தாவிலிருந்து இப்படி யோர் ஆன்மிக நாட்டமுள்ள இளைஞன் வருகிறான் என்று அவருக்கு ஆச்சரியமாகக்கூட ஆகிவிட்டது.

தரையில் பாய் விரிக்கப்பட்டது. வந்தவர்கள் அமர்ந்தனர். ஸ்ரீராமகிருஷ்ணர் விரும்பியவாறு நரேந்திரன் சில வங்காளிப் பாடல்களைப் பாடலானான். பிரம்ம சமாஜத்தினரின் துதிப்பாடல்களில் ஒன்றைத் தன் இதய அடிவாரத்திலிருந்து உணர்ச்சி மீறப் பாடினான்:

மனமே உன் மனைக்கு ஏகு!
மண்ணுலகு உனக்கு அந்நிய மன்றோ
மாறு வேஷ மிட்டேன் மயங்குகிறாய் இங்கே?
பார்க்கும் இப்பார் எல்லாம் பஞ்ச பூதமெல்லாம்
பரமே யன்றோ உனக்கு, மடமனனே!

என்று தொடங்கி மனதைச் சத்திய சிகரத்தின் மீதேறுமாறு அறைகூவிக் கானம் செய்தான் நரேந்திரன்.

சத்திய சிகரத்தில் ஏறுக மனமே
சளைத்து விடாமல் ஏறுக மனமே
சாதுக்கள் சங்கம் சத்தியப் பாதையில்
சாவடியாய் நிற்கும் மடமனமே!
சாவடியில் தங்கு, சோர்வுதனை நீக்கிச்
சாந்தி கொள்வாய் எந்தன் மடமனமே!

Koviloor Digital Library

கடவுள் இருக்கிறரா இல்லையா, கடவுளைக் காண முடியுமா, கடவுளைக் கண்டவர் உண்டா என்றெல்லாம் எண்ணி எண்ணிச் சளைத்துக் களைத்துப்போன நரேந்திரன் தனக்குச் சாவடியான சாதுவிடம் வந்துவிட்டான்! அவருக்கெதிரிலேயேதான் சத்திய சிகரத்துக்குச் செல்லும் சாலையிலுள்ள சாவடியைப் பற்றிப் பாடினன் — அவரே அந்தச் சாவடியாக இருக்கப்போகிருர் என்பது தெரிந்தும் தெரியாத விசித்திர நிலையிலே.

நரேந்திரன் கடவுள் கொள்கையில் எவ்வளவு ஐயம் கொண்டபோதும் அவனுடைய உள்மனது 'கடவுள் இருக்கிருர், அவரைக் கண்டவருண்டு' என்று ஐயமற அறிந்துதான் இருந்தது. பிள்ளைப் பருவத்திலேயே தியானமும் நிஷ்டையும் கைகூடப்பெற்ற அவன் ஆன்மிகத்திலும் ஆஸ்திகத்திலும் எப்படிப் பூரணமாக அவநம்பிக்கை கொள்ளமுடியும்? மேனுட்டுக் கல்வி காரணமாகப் பகுத்தறிவே கதி என்று அவன் எண்ணத் தலைப்பட்ட காலத்தில் அவனுடைய இதய வானில் ஐயமேகங்கள் படரத் தொடங்கின என்பது உண்மையே. எனினும் அந்த மேகங்களுக்குப் பின்னல் சூரியனும் ஒளிர்ந்து கொண்டிருந்தான். சங்கீதத்தில் நரேந்திரன் ஆழ்ந்து விடும்போது, தன்னையும் அறியாமலே மேகங்களைத் துளைத்துக்கொண்டு அவன் கதிரவனைக் கண்டான். பட்டப் பரீட்சைக்கு முதல் நாள் ஆனந்தமயமாக நரேந்திரன் இசைத்த போதும் இப்படித்தான் ஐயங்கள் நீங்கப்பெற்று ஆண்டவனின் எல்லையற்ற பிரபாவத்தை அவன் போற்றினன்! நாதம்தான் முதலில் பரம்பொருளிடமிருந்து உண்டாயிற்று என்று ஹிந்து மதம், கிறிஸ்துவ மதம் இரண்டுமே கருதுவதற்கேற்ப, நமக்குள்ளே ஓர் ஆத்ம நாதம் விம்மிக்கொண்டிருக்கும் போலும்! இந்த நாதத்தைத் தொட்டெழுப்பி நாவில் உலவச் செய்யும்போது, நம்முடைய பகுத்தறிவுக்கு அதுவே தாலாட்டுப் பாட்டாக அமைந்து அதனை உறங்கவைக்க, உள்ளுணர்ச்சிமட்டும் உதய ராகம் கேட்பதுபோல விழிப்படைந்து உண்மையொளியை உள்ள படிக் காணும் போலிருக்கிறது! மெய்யான சங்கீதம் மெய்ப் பொருளின் உணர்வை ஏற்படுத்தவேண்டும் என்பது நரேந்திரன் விஷயத்தில் நிருபணமாயிற்று.

எனினும் இசையிலிருந்து அவன் விலகியவுடன் இறைவனுடன் இசைந்த ஆத்மாவும் அந்த இசையிலிருந்து விலகிவிடும். பகுத்தறிவு விழிப்புற, உள்ளுணர்ச்சி உறங்கத் தொடங்கிவிடும்.

அப்படித்தான் இன்றும் நேர்ந்தது. தன்னுடைய சாவடிக்கு வந்துவிட்டோம் என்பதனை நரேந்திரன் உணரவில்லை. ஆனல் சாவடி உணர்ந்து விட்டது!

Koviloor Digital Library

தன்னிடம் உற்பவமாகும் அநுபவ மின்சாரத்தை உலகெங்கும் எடுத்துப் பாய்ச்சவேண்டிய உபகரணம் தம்மைவந்தடைந்து விட்டது என்று பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் தெரிந்து கொண்டு விட்டார்! நித்திய சத்தியமான சர்வேசுவரி தனக்குக் கூறியதெல்லாம் சத்தியமேதான் — தன் மூலம் வேதாந்தத்தை மீண்டும் நிலைநாட்டத் திருவுளம் கொண்ட அவள் தன்னுடைய தூதர்களில் சிறந்த தூதரை அனுப்பிவைத்துவிட்டாள் என்பதைத் தெரிந்து கொண்டுவிட்டார் பரமஹம்ஸர்.

'இவனுக்காகத் தான் எவ்வளவு காலம் காத்திருந்தோம்? இவனைக் காணுமல், சேயைப் பிரிந்த தாயைவிட, நண்பனைப் பிரிந்த நண்பனை விட, காதலியைப் பிரிந்த காதலனை விட எவ்வளவு துடித்திருந்தோம்?' என்று எண்ணினுர்.

அந்த எண்ணம் உடலின் ஒவ்வோர் அணுவிலும் எதிரொலிக்கத் தமது இருக்கையிலிருந்து எழுந்தார் பரமஹம்ஸர். நரேந்திரனை இறுகப் பற்றினுர். அறைக்கு வடப்புறத்தேயுள்ள முக மண்டபத்துக்கு அவனை இட்டுச் சென்ருர். அவரது கண் மலரிலிருந்து கசிந்த நீர் முகமலரில் பரவியது. மிகவும் கோமளமான குரலில் அவனை விளித்துக் கூறுவார்: ''ஆகா, நீ எவ்வளவு காலம் தாழ்த்தி வந்திருக்கிருய்? என்னை இவ்வளவு காலம் காக்க வைப்பதற்கு உனக்கு எவ்வளவு கொடுமை இருக்கவேண்டும்? இக உலகமே நினைவான மாந்தரின் தூய்மையற்ற வார்த்தைகளைக் கேட்டு என் காது கொப்பளித்துவிட்டது. என்னுடைய அந்தரங்கத்தின் அந்தரங்கம் நுகர்ந்த அநுபவங்களைப் புரிந்து கொள்ளக்கூடிய ஒருவரிடம் அவிழ்த்துக் கொட்டி என் சுமையைக் கழித்துக் கொள்வதற்கு எவ்வளவு துடிக்கிறேன் தெரியுமா?''

ஞான அமுதத்தை நிரப்பிவைத்துக் கொண்டிருந்த ஸ்ரீராம கிருஷ்ண தேவரிடம் அந்த அமுதத்தைத் தவிர மற்ற எதெதையோ நாடி யார் யாரோ வந்தனர். இன்றுதான் அமுதத்தையே நாடி ஒருவன் வந்திருக்கிருன்!

நரேந்திரன் ஞானத்துக்காக வந்தது உண்மைதான். ஆனுல் அந்த ஞானத்தைப் பரமஹம்ஸர் நிச்சயமாக அளிப்பார் என்று அவன் எண்ணவில்லை. எனவே அவர் அமுத கலசத்தைத் திறக்க ஆர்வம் கொண்டபோது கூட 'இவரிடம் அமுதம் இருக்குமா?' என்று கேள்வி கேட்கும் நிலையிலேயே அவன் இருந்தான். பகுத்தறிவு செய்த காரியம் அது!

விம்மலில் வார்த்தைகள் சிக்கிக் கொண்டு ஸ்ரீராமகிருஷ்ணர் பேசியது எதனுல் என்பதை நரேந்திரனுல் புரிந்து கொள்ள முடியவில்லை.

Koviloor Digital Library

அவரோ உணர்ச்சிகள் மேலோங்க மேலும் மேலும் பேசிக் கொண்டே போனர்:

''பிரபோ, நீ மகாமுனிவரான நரன் — நாராயணனின் அவதாரமான நரன் — என்பதை நான் அறிவேன். மனிதகுலத்தின் துயரங்களைத் தீர்க்கவே நீ மீண்டும் பிறந்திருக்கிருய் !''

'நர இந்திரன் என்று விட்டினர் பெயர் சூட்டினர் என்ருல் இவரோ நரநாராயணர்களில் ஒருவரான நரன் நான் என்கிருரே !' பரமஹம்ஸரின் செய்கைகள் நரேந்திரனுக்கு அர்த்தமாகவில்லை. தன்னை நீண்ட காலமாக அறிந்தது போலவும், பின்னர் தான் பிரிந்ததால் ஏங்கியது போலவும் அவர் கூறுவதெல்லாம் அவனுக்குச் சரியான வார்த்தைகளாகவே தோன்றவில்லை. இந்த மனிதருக்கு அசல் பைத்தியம்தான் பிடித்திருக்கிறது என்றே அவன் எண்ணி விட்டான். விசுவநாத தத்தரின் புத்திரனை தன்னை யாரோ என்றெண்ணி ஏதோ உளறுகிருர் அவர் என்றே அவன் நினைத்தான். எனினும் அவர் என்னதான் செய்கிருர் என்று பார்ப்பதற்காகச் சும்மாவே இருந்தான்.

ஸ்ரீராமகிருஷ்ணர் தமது அறைக்குத் திரும்பினர். இனிப்புப் பணியாரங்கள் பலவும், கற்கண்டும், வெண்ணெயும் எடுத்து வந்தார். ஞானமுதத்தைப் புகட்டுமுன் தன் பிரிய சிஷ்யனின் வயிற்றுக்கு அமுது படைக்க விரும்பிய பரமஹம்ஸர் தாம் கொண்டுவந்த உணவுவகைகளைத் தமது கரத்தாலேயே நரேந்திரனுக்கு ஊட்டலானர். ''அந்த இனிப்புப் பணியாரங்களை என்னிடமே கொடுங்கள். நான் என்னுடன் வந்துள்ள நண்பர்களுடன் அவற்றைப் பகிர்ந்து கொள்கிறேன்'' என்று கூறி ஸ்ரீராமகிருஷ்ணரின் செயலை அவன் மறுத்தும் பயனில்லை. ''அவர்களுக்கு வேறு தனியாக வழங்கப்படும்'' என்று கூறி நரேந்திரனே அவ்வளவையும் உண்ணும்படிச் செய்துவிட்டார் பரமஹம்ஸர். அவனுடைய கையைப் பிடித்துக்கொண்டு ''நீ மட்டும் தனியாக விரைவிலேயே ஒரு நாள் வா; அப்படி வருகிறேன் என்று உறுதிமொழி கொடு'' என்ருர். அவர் கெஞ்சின கெஞ்சலைப் பொறுக்கமாட்டாமல் நரேந்திரனும் சம்மதம் தெரிவித்தான்.

இருவருமாக மீண்டும் நண்பர்களிருந்த அறையை அடைந்தனர். அங்கு பலர் கூடியிருந்தனர். வயோதிகர்கள், நடுத்தர வயதினர், நரேனைப் போன்ற வாலிபர்கள் எல்லாரும் இருந்தனர். அவர்கள் யாவரும் ஸ்ரீராமகிருஷ்ணரை மகானுக மதித்து வணங்கினர். ஸ்ரீராமகிருஷ்ணர் அவர்களை நோக்கி, ''நரேனைப் பாருங்கள் ! சரஸ்வதியின் வித்யா ப்ரகாசத்துடன் அவன் எப்படி

Koviloor Digital Library

ஜொலிக்கிறான் பாருங்கள்!'' என்று ஆரவாரம் செய்தார். அவர்கள் நரேந்திரனை அதிசயத்துடன் பார்த்தனர். அதைவிடப் பரமஹம்ஸர் நடந்துகொண்ட விதத்தில் அதிக அதிசயம் அடைந் தனர். 'அவர் ஏன் இப்படி ஆர்ப்பரிக்கிறார்? இந்தப் பிள்ளை யிடத்தில் அப்படி யென்ன ஒளியைக்கண்டுவிட்டார்?'

''பிள்ளாய்! நீ தூங்குமுன் ஓர் ஒளியினைக் காண்கிறாயா?'' எனத் திடீரென நரேனைக் கேட்டார் பரமஹம்ஸர். அவரிடத்தில் ஒளிக்கக்கூடிய வாழ்வு எதுவுமே தனக்குக் கிடையாது என்றறி யாத நரேன் ''ஆம், காண்கிறேன்'' என்றான். ''ஆகா! எவ்வளவு நிஜமாகப் போயிற்று! இவன் ஒரு தியானசித்தன்; பிறப்பிலேயே தியானம் கைகூடியவன்'' என்று நரேந்திரனைக் காட்டிக் கூவினார் ஸ்ரீராமகிருஷ்ணர்.

பிறகு அடியார்களுடன் சம்பாஷிக்கலானார் பரமஹம்ஸர். அவரையே கவனித்துக் கொண்டிருந்தான் நரேந்திரன். அவரது பேச்சிலும், அங்க அசைவுகளிலும், நடத்தையிலும் சித்தப் பிரமைக்கான எந்தச் சின்னமும் தெரியவில்லை. பரவச நிலையில் அவர் பேசுவதும், நடந்து கொள்வதும் தூய துறவிலிருந்தே பிறந்தவை என்று கூட நரேந்திரனுக்குத் தோன்றலாயிற்று. பேசுவதுபோலவே வாழ்ந்து காட்டுபவர் இவர் என்ற எண் ணத்தை அவனிடம் உண்டாக்கிற்று. எனினும் அவர் மிகமிக எளிமையான மொழியில் உரையாடுவதைக் காணும்போது இவர் பெரிய ஆசாரிய புருஷராக இருக்க முடியுமா என்ற ஐயமும் நரேந்திரனுக்கு ஏற்பட்டது. 'சப்தஜாலம் மஹா அரண்யம் சித்த ப்ரமண காரணம்' என்று ஆதி சங்கரர் மொழிந்தது போல வார்த்தைச் சுழலில் அகப்படச் செய்து திணறவைக்கும் மேனாட்டுத் தத்துவ சாஸ்திரங்களைப் படிக்கத் தொடங்கியிருந்த நரேனுக்கு அப்படி ஒரு ஐயம் ஏற்பட்டது நியாயமேயாகும்.

இவர் ஆசாரிய புருஷர்தானா என்று சோதிக்க விரும்பிய நரேந்திரன், தான் இவ்வளவு நாளாகக் கனன்று கொண்டிருந்த மகத்தான வினாவை இவரிடமும் கேட்டுப் பார்த்துவிடுவது என்ற எண்ணத்துடன் அவருக்குச் சமீபமாக நகர்ந்தான். ஆகா, அந்தக் கேள்வியை எத்தனை பேரிடம் கேட்டாயிற்று? யாருமே விடை சொல்லாமல், அவனுள் எழுந்த தீயை மேலும் மேலும் மூண்டெழத்தானே செய்திருக்கிறார்கள்? அந்தக் கேள்விதானே உண்மையாகக் கேள்விக்குறிபோல கொக்கியாக மாறி அவனை நெருக்கி இழுத்து வந்து தக்ஷிணேசுவரத்தில் தள்ளியிருக்கிறது? இன்னமும் தாமதிப்பானேன்?

''மஹாசய, தாங்கள் கடவுளைக் கண்டதுண்டா?'' — கேட்டே விட்டான் நரேந்திரன் தன் வினாவை.

Koviloor Digital Library

பட்டுப்போன்ற குரலில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் விடை பகர்ந்தார்: ''கண்டிருக்கிறேன் பிள்ளாய், கண்டிருக்கிறேன். இதோ உன்னை என் கண்முன்னே காண்கிறேன் அல்லவா, இதே போல அவனையும் கண்டிருக்கிறேன்...இல்லை...இதுபோல் இல்லை.. உன்னை நான் காண்பதைவிட இன்னமும் தெளிவாக, இன்னமும் அடர்த்தியான உணர்வுடன் அவனைக் கண்டிருக்கிறேன்; காண்கிறேன்.''

கடவுளைக் கண்டு விட்டோம் என்ற பெருமிதம் அந்த வார்த்தைகளில் தொனிக்கவில்லை. அன்புருவான ஆண்டவனின் அன்பை உணர்ந்த குளுமைதான் அச்சொற்களில் நிரம்பி யிருந்தது. அந்தக் குளுமையே நீராகி, மற்ற மக்களைப்பற்றி முனிவர் கசிந்துருகிக் கண்ணீர் வடிக்குமாறு செய்தது. கனன்றெழுந்த நரேந்திரநாதனைத் தணிவிக்கும் குரலில் அவர் மேலும் சொல்வார்: ''நான் காண்பது மட்டுமன்று. கடவுளை யாரும் காணலாம்; பரம்பொருளை யாருமே அநுபவிக்கலாம். நான் உன்னோடு உரையாடுவதுபோல அவனுடன் பேசலாம். ஆனால் அதற்கு யார் சிரத்தை கொள்கிறார்கள்? மனைவி மக்களுக்காகவும், சொத்து சுதந்திரங்களுக்காகவும் மக்கள் வெள்ளமாகக் கண்ணீர் பெருக்குகிறார்கள். ஆண்டவனுக்காக அழுபவர் யார் இருக்கிறார்கள்? அவனுக்காக ஒருவன் அந்தரங்க சுத்தத்துடன் கதறி அழுதால் நிச்சயமாக அவன் தரிசனம் தருவான்.''

கடவுளைக் காணவேண்டும் என்று இதயபூர்வமாக அழவில்லை நரேந்திரன். கடவுளைக் காணமுடியுமா என்று புத்திபூர்வமாக அறிவதற்காகக் கனன்றெழுந்தவனே அவன். அறிவில் பிறந்த அந்தக் கனலை விட, அன்பில் பிறந்த கண்ணீரே ஆண்டவனிடம் இட்டுச் செல்லும் என்பதை இந்தச் சந்திப்பின்போதே சொல்லாமல் சொல்லி விட்டார் குரு மகராஜ். அறிவுக் கனலையே அருட்புனலாக்கும் ரஸவாதத்தைத் தாம் செய்யப் போவதற்கு முன்னுரையாகப் பேசிவிட்டார்.

இந்தச் சந்திப்பைப்பற்றி நரேந்திரன் என்ன எண்ணினான் என்பதை சுவாமி விவேகானந்தரின் வாய்மொழியாகவே கேளுங்கள்: ''அவருடைய பேச்சு உடனேயே என் உள்ளத்தில் உண்மையெனப் பதிந்தது. 'கடவுளைக் கண்டிருக்கிறேன்' என்று திரத்துடன் சொல்லக்கூடிய ஒருவரை, 'மதம் என்பது அநுபவ பூர்வமாக உணரவேண்டிய உண்மை; உலகை நாம் அநுபவிப்பதைவிட அநந்தமான மடங்கு ஆழ்ந்த உணர்வுடன் அநுபவிக்க வேண்டிய உண்மை' என்று கூறும் ஒருவரைக் கண்டுவிட்டோம் என்ற எண்ணம் ஏற்பட்டது. இவ்விஷயங்கள் அவருடைய உதட்

Koviloor Digital Library

டிலிருந்து வெளியாகும்போது, சாதாரணமானதொரு சமயப் பிரசாரகரைப்போல அவர் பேசவில்லை என்ற நம்பிக்கை எனக்கு உண்டாயிற்று. தம்முடைய மெய்யான உணர்வுகளின் அடி ஆழத்திலிருந்தே அவர் பேசுகிறுர் என்று உணர்ந்தேன். எனினும் இப்படியெல்லாம் பேசியவர் (சற்றுமுன்) என்னிடம் ஏன் அப்படி விசித்திரமாக நடந்து கொண்டார் என்பதுமட்டும் எனக்குப் பொருத்தமாகப் படவில்லை. ஏதோ ஒரு பொருளிலேயே மனதை செலுத்திப் பித்துப் பிடித்துப் போனவர் அவர் என்றே முடிவு கட்டினேன். என்றுலும் அவருடைய துறவின் மகத்துவத்தை என்னுல் மதித்துப் போற்ருமலிருக்க முடியவில்லை. 'அவர் பித்தராக இருக்கலாம். எனினும் பாக்கியசாலிகளான சிலரே இவ்வளவு துறவுணர்ச்சி பெற்றிருக்க முடியும். சித்தப் பிரமை பிடித்தவர் என்றே வைத்துக் கொண்டாலும் இம் மனிதர் புனிதமானவர்களுக்கெல்லாம் புனிதமானவர், இவர் ஓர் உண்மையான சாது, அதற்காகவே மன்பதையால் பணிவுடன் போற்றத்தக்கவர்' என்று எண்ணமிட்டேன். ஒன்ருேடொன்று போராடும் எண்ணங்களுடன் அவர் முன் தண்டனிட்டேன்; கல்கத்தாவுக்கு நான் திரும்புவதற்கு அநுமதிக்குமாறு கேட்டுக் கொண்டேன்.''

தெய்வம் உண்டா இல்லையா என்று நரேந்திரன் சந்தேகப் பட்டிருக்கலாம். இந்து சமயம் சரியானதுதானு என்று சந்தேகப் பட்டிருக்கலாம். ஸ்ரீராமகிருஷ்ண தேவர் புத்தி ஸ்வாதீனம் படைத்தவர்தானு என்பது பற்றியும் அவன் சந்தேகப்பட்டிருக்கலாம். ஆனுல் காலில் நகம் முளைத்த நாள் முதலாக நரேந்திரன் சந்தேகப்படாமல் ஏற்ற இரண்டு தத்துவங்கள் உண்டு. அவை தூய்மையும் துறவுமேயாகும். தனக்கென்று எதையும் வைத்துக் கொள்ளாமல் பிறருக்காக அவற்றைத் துறக்கும் மனேபாவமும், அந்த மனேபாவத்துடன் தமது பக்தியையும், ஞானத்தையும் உலகுக்கு வாரி வழங்கும் துறவிகளிடம் நாட்டமும், அத்தகைய துறவற வாழ்வே தனது இலட்சியம் என்ற உணர்வும் அடிநாளிலிருந்தே நரேந்திரனின் இதயத்தில் ஊறிப் போயிருந்தன. தனக்கென்று ஒருவர் வைத்துக்கொள்ளும் பொருட்களில்தான் அசுத்தங்கள் பல இருக்கின்றன. அந்த அசுத்தங்களைவிடப் பெரிய அசுத்தம் 'தனக்கென்று வைத்துக்கொள்வது' என்ற சுயநல சிந்தனையேயாகும். இந்த அசுத்தங்களற்றவனே துறவி. எனவே துறவறத்துடன் இணைபிரியாமல் பிணைந்த இயல்பே தூய்மை. நரேந்திரனின் அப்பழுக்கற்ற தன்மையை யாருமே மறுக்கமுடியாது. ஆகையால் துறவறத்தையும், தூய்மையையும் முக்கியமாக

Koviloor Digital Library

வைத்து, அவற்றின்மீது ஸ்ரீராமகிருஷ்ணரின்பால் அவன் கவரப் பட்டதில் வியப்பில்லை அல்லவா? தேனைச் சுவைக்காகப் பருகினுலும் அதன் மருத்துவ குணங்களாலும் பயன் பெறலாமல்லவா? ஸ்ரீராமகிருஷ்ணரை எந்தக் காரணத்தைக்கொண்டு நரேந்திரன் அணுகினுலும் சரி; அவரது பக்தியையும் ஞானத்தையும் எப்படிப் பெருமலிருக்க முடியும்?

* * *

தக்ஷிணேசுவரச் சந்திப்பாகி ஒரு மாதம் வரையிலும் நரேனுக்கு மீண்டும் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் செல்ல இயலவில்லை. எனினும் அந்த ஒரு மாதமும் முதல் சந்திப்பே அவனது மனதில் தொடர்ந்து நிகழ்ந்து வந்தது. அதனை நினைத்து நினைத்து வியந்தான் நரேந்திரன். 'பித்தர் என்று அவரை நான் கருதிய போதிலும் அவருடைய அண்மையில் எவ்வளவு புனிதம் பெற்றேன்?' என்று எண்ணிப் பார்த்தான். 'ஊசி காந்தத்தினை அணுகுதல் போலவே ஓர் உறவும் உன்னி உன்னி' ப் பார்த்தான் நரேந்திரன். 'தக்ஷிணேசுவரத்தில் எல்லாமே எத்தனை விசித்திரம் — ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரிடம் பக்திபூண்ட மக்களின் செய்கைகள், அவரது பரவச நிலை, அந்தச் சுழலில் கமழ்ந்த பாவனம், அவருடைய வாக்கு, அதனை கேட்டுத் தன் ஆத்மா உயரக் கிளம்பியது — இதெல்லாம் என்ன மாயம்?' இத்தனை நடந்தும் நரேந்திரனுல் ஸ்ரீராமகிருஷ்ணரைத் தன் குரு என்று ஒப்ப முடியவில்லை. ஒரு மாத காலமாக மீண்டும் சென்று அவரைப் பார்க்கக்கூட இல்லை.

* * *

இரண்டாம் முறை சென்றபோது, பரமஹம்ஸர் விரும்பிய படித் தனியாகவே சென்முன் நரேந்திரன். வண்டியில் சென்ற அவனுக்குக் கல்கத்தாவிலிருந்து தக்ஷிணேசுவரம் இவ்வளவு தொலைவா என்று ஆச்சரியமாக இருந்தது. சாலை முடிகிற வழியாகவே இல்லை என்று அவன் சலிப்புற்றபோது 'சாதுக்கள் சங்கம் சத்தியப் பாதையில் சாவடியாய் நிற்கும்' என்று பாடியதற்கேற்ப தோட்டமும் துரவும் சூழ்ந்த தக்ஷிணேசுவர ஆலயமும் வந்து சேர்ந்தது.

நேராக ஸ்ரீராமகிருஷ்ணரின் அறைக்குச் சென்முன் நரேந்திரன். தாம் சயனிக்கும் மெத்தையை அடுத்துப் போடப்பட்ட சிறிய மெத்தையில் அவர் அமர்ந்திருந்தார். எப்போதுமே அதில் அமருவதுதான் அவரது வழக்கம். நரேந்திரனைக் கண்டவுடன் அவனை அன்புமிக அழைத்த அவர் தமக்கு அருகிலேயே மெத்தை

Koviloor Digital Library

யில் அமரச் செய்தார். அடுத்த கணமே அவரது உணர்வுகள் ஓங்கி எழுந்தன. நரேந்திரன்மீது பதிந்த நோக்குடன், எதையோ முணுமுணுத்தவாறு அவனை நெருங்கினர் அவர். முன் சந்திப் பின்போது செய்த மாதிரியே அவர் விசித்திரமாக ஏதோ செய்யப் போகிறார் என்று எண்ணலானான் நரேன். ஆனால் அவரோ முன் சந்திப்பு மாதிரி விசித்திரம் நிகழ்த்தவில்லை. அதைவிட அதி விசித்திரத்தை இம்முறை நிகழ்த்தினர். தமது வலது பாதத்தை நரேந்திரனின் உடலில் பதித்தார்.

பொருட் செல்வத்தை நாடாகவும், மனையாகவும், பண மாகவும், பூமியாகவும் பல விதங்களில் வழங்குவது போல பரம ஞானச் செல்வத்தையும் பல விதங்களில் வழங்கமுடியும். அருள் வாக்கால் வழங்கலாம்; திருநோக்கால் வழங்கலாம்; ஸ்பரிசத் தால் வழங்கலாம். இவற்றில் திருவடி தீக்ஷை என்பது மிகமிகப் பவித்திரமானதாகும். ஈசுவரனே தமது திருவடியை சுந்தரர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர் போன்ற பல மெய்யடியார் களின் சிரஸில் பதித்து ஞானதீக்ஷை அளித்திருக்கிறான். 'தாளிணை என் முடி சூட்டி' என்று தாயுமானவர் போன்ற பல அநுபூதிச் செல்வர்கள் பாடியுள்ளனர். உடம்பில் உறு பொருளாகிய ஈசனைக் கண்டு, பொய்யாகிய இம் மெய்யையும் ஞான மின்சார நிலையமாகச் செய்துகொண்டு ஸ்பரிசத்தின் மூலம் அந்த மின் சாரத்தை இன்னொர் உடலில் பாய்ச்சி அநுபூதி தந்தருளவல்ல பல ஞானிகளும் இந்நாட்டில் இருந்திருக்கின்றனர். இப்போது அப்படிப்பட்ட திருவடி தீக்ஷைதான் நரேந்திரனுக்குக் கிடைத்தது. சிரஸில் பாதம் பதித்து அதன்மூலம் சிரம் குறிக்கும் புத்தியை அருளுக்கு ஆட்படுத்தாமல், நரேந்திரனின் கூரிய பகுத்தறிவுக்கு இன்னும் சிறிது வேலை கொடுக்கப் பரமஹம்ஸர் எண்ணினரோ என்னவோ? அதனால்தான் அவனது சிரஸில் அன்றி உடலில் பாதத்தைச் சூட்டினர்.

உடனே ஒரு மகத்தான விந்தை நிகழ்ந்தது. நரேந்திர னுடைய உள்ளத்தில் ஒரு கிளுகிளுப்பு, ஒரு குதுகுதுப்பு ஏற் பட்டது. கண்முன் தெரிந்த சுவர்களும், அந்தச் சுவர்களுக்கு உட்பட்டிருந்த சகலமான பொருட்களும் சுழன்று சுழன்று சூனிய மாகக் கரைந்தன. சுவர்களுக்கு அப்பாற்பட்ட தோட்டம் துர வும், கங்கையும், அந்த கங்கையைத் தொடும் வானும் எல்லாமே சுழன்று சுழன்று சூனியமாகக் கரைந்தன. ஆகா, அவைகளுடன் நரேந்திரனுமே அந்த மகா சூனியத்தில் கரையத் தொடங்கினான்.

'முடியாது, கரைய முடியாது; கூடாது, கரையக் கூடாது' என்று அவன் உள்ளம் அலறியது. பயப்பிராந்தி அடைந்த

Koviloor Digital Library

நரேந்திரன் ''ஐயா, என்னை என்ன செய்கிறீர்கள்? எனக்கு வீடு வாசல் உண்டு; பெற்ருரும் உற்ருரும் உண்டு'' என்று கூவினுன்.

பரமஹம்ஸர் கட கட வென்று சிரித்தார். அவனது மார்பைத் தட்டிக் கொடுத்தபடி ''சரி, இது முடிந்து போகட்டும். உரிய காலத்தில் தானே எல்லாம் நடக்கும்'' என்ருர். அதென்ன மாந்திரிக சக்தியா? அவர் அவ்வாறு கூறியதுதான் தாமதம், நரேந்திரனின் அதிசயமான அநுபவம் அப்படியே மாய்ந்து விட்டது. நரேந்திரன் நரேந்திரனுனுன். அந்தச் சுவர்களும், அவற்றுக்கு உட்பட்டிருந்த சகலமான பொருட்களும் அவை அவை ஆயின. அந்தச் சுவர்களுக்கு அப்பாற்பட்ட தோப்பும் துரவும், கங்கையும், கங்கையைத் தொடும் வானமும் தாமாயின.

இந்தச் சம்பவத்தைப் பிற்காலத்தில் விவரித்த விவேகானந்தர் கூறுவார்: ''நான் இந்த நிகழ்ச்சியை விவரிப்பதற்கு எவ்வளவு போது ஆயிற்ருே அதற்குள்ளாகவே இத்தனையும் நடந்தேறிவிட்டது. அவ்வளவு குறுகிய காலத்தில் நடைபெற்ருலும் அது என் அறிவை ஒரு புரட்டுப் புரட்டி விட்டது. இதற்கென்ன அர்த்தம் என்று நான் ஆச்சரியத்துடன் எண்ணலானேன். 'இத்தனை அற்புதமும் இந்த மனிதர் நினைத்த மாத்திரத்தில் நிகழ்கிறது, இவர் நினைத்த மாத்திரத்தில் நிகழ்கிறது, இவர் நினைத்த மாத்திரத்தில் மறைகிறதே — அதெப்படி? மெஸ்மரிஸம் என்றும் ஹிப்நாடிஸம் என்றும் சொல்லப்படும் மாயாஜால வசிகரணத்தைச் சேர்ந்ததுதாஞ இது?' என்று நான் என்னையே கேட்டுக் கொண்டேன். 'இருக்க முடியாது. இந்த ஜால வித்தைகள் எல்லாம் பலவீனமான மனதுள்ளவர்களைத்தான் மயக்கும். நானே இதற்கு நேர்மாருன மனப்போக்குள்ளவன் என்று பெருமைப்படுபவன் அல்லவா? அப்படியொன்றும் நான் ஸ்ரீராமகிருஷ்ணர் என்ற அம்மனிதர் என்னைவிட சக்தி பொருந்தியவர் என்று எண்ணி அவரிடம் அதுவரை சரண்புகுந்துவிடவும் இல்லை. ஒன்றையே நினைத்து அதிலேயே பித்தேறியவர் அவர் என்றுதான் நினைத்திருக்கிறேன். இவ்வாறிருந்தும் நான் திடீரென இத்தகைய மாறுபட்ட அநுபவத்துக்கு ஆளானேன் என்ருல் அதற்குக் காரணம் என்ன?' என்ருல் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. 'இது ஏதோ ஒரு புதிர்; இதை நான் அவிழ்க்க முயலாதிருப்பதே சிலாக்கியம்' என்று எண்ணினேன். எனினும், நான் என்னை நன்கு கண்காணித்துக் கொள்ள வேண்டும்; மீண்டும் அம் மனிதர் தம் சக்தியை என்மீது பிரயோகிக்க இடமளிக்கக்கூடாது என்று உறுதி பூண்டேன்.

Koviloor Digital Library

''மறு கணமே வேறு சிந்தனை பிறந்தது. சங்கற்ப உறுதியும், வலிவும் பொருந்திய என்னைப் போன்ற ஒருவனின் மனதைத் தூளாகச் சிதற அடித்த இம்மனிதரை வெறும் பித்தர் என்று எப்படி ஒதுக்குவது? என்றாலும் அவர் எங்களது முதல் சந்திப்பின்போது உணர்ச்சி மயமாகப் பொங்கியதை எண்ணினால் யாருமே அப்படித்தான் முடிவு கட்டுவார்கள். இல்லாவிடில், (காரிய காரணங்களால் அலசிப்பார்க்க முடியாத செயல்களைப் புரியும்) ஆண்டவனின் அவதாரமாக அவர் இருக்கவேண்டும் — நிச்சயமாக அப்படியிருக்க முடியாது (என்றே அந்த நாட்களில் நான் கருதினேன்). எனவே, என்னுடைய அதிசய அநுபவம், குழந்தையின் தூய்மையும் எளிமையும் ஸ்வச்சமாகக்கூடிய அந்த அசாதாரண மனிதர் — இரண்டின் உண்மையான இயல்பையும் அறியமாட்டாமல் குழம்பினேன். விஷயங்களின் யதார்த்த நிலையை மதிப்பிடுவதில் நான் அடைந்த தோல்வியில் என்னுடைய பகுத்தறிவு மனப் போக்குக்குச் செம்மையான அடி விழுந்தது.''

நரேந்திரன் இப்படியெல்லாம் உள்ள உளைச்சலுக்கு ஆளான போதும் ஸ்ரீராமகிருஷ்ணரோ சர்வ சகஜமாகவே அவனுடன் பழகத் தொடங்கினார். அன்புடன் முன் முறைபோலவே உபசரணைகள் புரிந்தார். நரேந்திரனிடம் ஒவ்வொரு சிறிய விஷயத்திலும் அவர் காட்டிய அக்கறை அவன் நெஞ்சை அள்ளிற்று. அவர்பால் அவன் இழுக்கப்பட்டான். பகல்போது முடிந்து மாலை வேளை தொடங்கிற்று. வீடுதிரும்ப விடை கேட்டான் நரேந்திரன். ஸ்ரீராமகிருஷ்ணர் முகத்தில் உடனே துயர ரேகைகள் படர்ந்தன. தனக்குச் சௌகரியப்படும் அளவுக்கு எவ்வளவு விரைவில் மீண்டும் தக்ஷிணேசுவரம் வரமுடியுமோ அவ்வளவு விரைவில் வருவதாக நரேந்திரன் வாக்களித்த பின்னரே அவர் பிரியா விடை கொடுத்தார்.

* * *

சில நாட்கள் சென்றன.

மூன்றும் முறையாகத் தக்ஷிணேசுவரத்துக்கு வந்தான் நரேந்திர நாதன்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் மகத்தான சக்திக்குத் தான் ஆட்படலாகாது என்று அவன் எவ்வளவோ 'காபந்து' செய்து கொண்டும் அவரிடம் அது பலிக்கவில்லை. சமுத்திரத்தைப் பேரலைகள் விசாதிருக்குமாறு யார் கட்டளை பிறப்பிக்க முடியும்? அருட்கடலை அலை எறியாதிருக்குமாறு யார் கட்டுப்படுத்த முடியும்? அல்லது தான் அந்த அலையில் அகப்படமுடியாது என்று கடலில் விழுந்த ஒரு துரும்பினால் எதிர்க்கத்தான் முடியுமா?

Koviloor Digital Library

நரேந்திரன் மூன்றுவது முறை வந்தபோது ஸ்ரீராமகிருஷ்ண தேவர், அடுத்திருந்த யதுநாத் மல்லிக் என்பவரின் தோட்டத்துக்கு அவனை அழைத்துச் சென்றார். இருவரும் தோட்டத்தில் உலவினர். பிறகு அங்கிருந்த ஒரு மண்டபத்தில் அமர்ந்தனர்.

சமயம் வந்து விட்டது!

தான் தேடிக் கொண்டிருந்தவன் இந்த நரேந்திரன்தான் என்று ஸ்ரீராமகிருஷ்ணர் ஐயந்திரிபற அறிந்துகொள்ள வேண்டிய தருணம் வந்து விட்டது. நரேந்திரனை அவர் யார் என்று கருதியிருந்தாரோ அது முற்றிலும் உண்மை என்று நரேந்திரன் வாய்மொழியாகவே அறிந்துகொள்ளவேண்டிய காலம் நேர்ந்து விட்டது! 'நரேந்திரனுடைய வாய்மொழி' என்று கூறுவது முற்றிலும் சரியன்றுதான். ஏனெனில் ஸ்ரீராமகிருஷ்ணரின் எண்ணங்களை உறுதிப்படுத்தி பேசியது நரேந்திரனுடைய பௌதிகமான வாய்தான். ஆனால் அந்த வாய் சொன்ன வார்த்தைகளை மொழிந்தது நரேந்திரனல்லன். நரேந்திரன் உண்மையில் யாரோ அவரே அந்த உடலில் தங்கி அந்த வாய் மூலம் பேசினார்.

நரேந்திரன் உண்மையில் யார்? நரேந்திரனை ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் யாரென எண்ணினார்?

முன்பு ஒருமுறை தமக்குச் சமாதி நிலை கூடியபோது......

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் எங்கோ உயர உயர, இன்னும் உயர உயர, அப்பாலும் உயர, அதற்கும் உயரச் சென்று கொண்டிருந்தார். பூமண்டலமும், மேக மண்டலமும், வாயு மண்டலமும் பின்னால் பின்னால் தேய்ந்து போயின. மேலும் மேலும் சென்று கொண்டேயிருந்தார் முனிவர். சந்திர மண்டலத்தையும் கடந்தாயிற்று. சூரியனும், இதோ, எங்கோ அடியில் போய்க் கொண்டே யிருக்கிறான். தாரகைக் கணங்கள் பின் தங்கிப் புள்ளி புள்ளியாகி, அடியோடு மறைகின்றன. தவயோகி மட்டும் இன்னமும் உயர உயரச் சென்று கொண்டேயிருக்கிறார்.

'நாம் காணும் இந்தப் பிரபஞ்ச மெல்லாம் மின் அலைகளே; அந்த மின் அலைகளிலும் கோடானு கோடியில் ஒரு பங்குதான் பொருள் உள்ளது; மற்றவையெல்லாம் சூனியங்களே; இன்னும் ஆழ்ந்து ஆராய்ந்தால் இந்த உலகம் சூனியம் மிகுந்த அலைகள் மட்டும் அல்ல, ஏதோ ஒரு மகா மதியின் எண்ணங்களே இவை எல்லாம் என்று தெரியக்கூடும்' என விஞ்ஞானம் கூறுகிறதல்லவா? ஜடப் பொருள்களெல்லாம் எண்ணத் திவலைகளாகத் தெறிக்கும் அந்த உயரிய பாவத்தில்தான் நீந்திக் கொண்டிருந்தார் பரமஹம்ஸர்.

Koviloor Digital Library

அதற்கும் மேலாக ஓர் அதிசய நிலே. பொருள்கள் யாவும் எண்ணமாக ஓடியதைப்போல, எண்ணங்களெல்லாம் பொருள் களாக உருவத்துடன் கூடி நிற்கும் உலகங்களின் மேலாக ஸ்ரீராம கிருஷ்ண தேவர் சென்றுகொண்டிருந்தார். அன்பு, அழகு, அறிவு இந்தத் தத்துவங்களின் உருவங்களே யெல்லாம் தேவ தேவியராகக் கண்டார் அவர். அதையும் விட சூக்ஷ்மமான பிரதேசங்களில் அவரது பயணம் தொடர்ந்தது. எண்ணம், பொருள் என்ற எல்லா மாயத் தோற்றங்களேயும் பரம்பொருளிட மிருந்து பிரிக்கும் எல்லேக்கோட்டில் சஞ்சரித்துக் கொண்டிருந்தார் குருமஹராஜ். என்ன ஆச்சரியம்! இனி ஒன்றேயான மெய்ப் பொருளேத் தவிர வேறெதுவும் கிடையாது என்று அவர் எண்ணிய அந்தப் பரமானந்த வெளியிலே ஏழு முனிவர்கள் திவ்வியமான குளிர்ந்த ஒளி வீசிக் கொண்டிருந்தார்கள். எத்தகைய அற்புத தரிசனம் அது! ஸப்த ரிஷிகளும் பரப்பிரம்மத்துடன் ஒன்றிய தியான நிலேயில் திளேத்திருக்கிருர்கள். தேவ தேவியருக்கும் மேம்பட்ட உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பவர்கள் அல்லவா அவர் கள்! ஞானத்திலும் தூய்மையிலும் ஒப்புயர்வற்ற அவர்களேப் பக்தியுடன் தரிசித்துக் கொண்டிருந்தார் ஸ்ரீராமகிருஷ்ண பரம ஹம்ஸர்.

அப்போது இவற்றையெல்லாம் விட மகத்தான ஓர் அதிசயம் நிகழ்ந்தது. உருவும், குணமுமற்ற பரம்பொருள் ஆனந்தச் சாறு போல ஒரு தோற்றமிட்டது. சாற்றில் ஒரு பகுதி இறுகியது. கற்கண்டாயிற்று. அந்த விநோதமான கற்கண்டுக்கு எழிலார்ந்த கையும், காலும், உடலும், தலேயும், கண்ணும், மூக்கும் மலர்ந் தன. அந்தத் தெய்விகக் குழந்தை எவ்வாறே ஸப்த ரிஷிகளில் ஒருவரின் மடியில் வந்து விழுந்தது. அங்கிருந்து எழுந்து, துவ ளும் தன் கோமள உடலுடன் அவர் மேனி மீது ஏறிச் சரிந்தது. ஒருவாறு தனது புஷ்பக்கரங்களால் அவருடைய கழுத்தைக் கட்டி அணேத்து, அவருடைய காது உயரத் தன் கனி வாயை உயர்த் தியது. அவருடைய காதில் ஏதோ தேவ இரகசியத்தை — தேவநிலேக்கும் உயர்ந்த பிரம்ம இரகசியத்தை—ஓதிற்று. அந்த இரகசிய ஒலியே மந்திரக் கோலாகி மாமுனிவரின் நிச்சலனமான உள்ளத்தைத் தீண்டியது. அவர் தமது காலம் கடந்த சமாதி நிலே சடேரெனக் கலேயப் பெற்ருர். பாதி திறந்த தமது பழுத்த விழிச் சுளேகளால் அந்தப் பாலனே விழுங்கிவிடுவது போலப் பார்த்தார். அந்தக் குழந்தை ஆனந்தம் கரைபுரளும் குரலில், ''நான் பூமிக்குப் போகிறேன். நீ என்னேடு வர மாட்டாய்?'' என்று கேட்டது. பேரின்ப வீட்டிலிருந்து துன்ப மயமான உல

Koviloor Digital Library

குக்குச் செல்வதிலா இத்தனை ஆனந்தம்? ஆம், அந்தத் துன்ப உலகிலிருந்து இன்ப உலகுக்குப் பலரை இட்டுவரலாம் என்ற கருணையின் ஆனந்தமே அது.

அருள் பூரித்து நிற்கும் திருஷ்டியுடன் குழந்தையைப் பார்த்தார் ரிஷி, 'வருகிறேன்' என்று இணக்கம் தெரிவிக்கும் முறையில் தலையை ஆட்டினார். மறு கணமே நினை விழந்து, நினைவு கடந்த களிப்புக் கடலிலே மூழ்கிப்போய்விட்டார்.

எனினும் அவரிலிருந்து அலை அலையாக ஏதோ பிரிந்து திரண்டது. ஒளி மயமாகிக் கிழ் நோக்கிச் செல்லலாயிற்று. உருண்டு உருண்டு சென்று கொண்டேயிருந்தது. எண்ணங்கள் உருவுத் தரித்துலவிய உலகங்கள், உருவங்கள் எண்ணங்களாகத் திரிந்த உலகங்கள், தாரகைக் கணங்கள், சூரியன், சந்திரன், வாயுமண்டலம், மேகக்குவியல்கள் யாவற்றையும் கடந்து அந்த ஒளி கிழ் நோக்கி 'விர்' ரென்று விரைந்து கொண்டேயிருந்தது. நில உலகமாகிய இந்த நம் உலகத்தில், பாரதத்தில், வங்காளத்தில், கல்கத்தாவில், சிம்லா பகுதியில், கௌர் மோகன் முகர்ஜி தெருவில் உள்ள விசுவநாத தத்தரின் இல்லத்துக்குள் புகுந்தது.

* * *

விசுவநாத தத்தரின் மனைவியாகிய புவனேசுவரி தேவியின் மணிவயிறு வாய்த்த செல்வம்தான் அந்த ரிஷி புங்கவர் என்பதனை ஸ்ரீராமகிருஷ்ணர் தம் உள்ளுணர்ச்சியால் அறிந்தேயிருந்தார். ஏனெனில் அவர் தானே முனிவரை மோனத்திலிருந்து எழுப்பிய ஆனந்தக் குழந்தை? எனினும் அதனை உறுதி செய்து கொள்ளும் சமயம் இன்றுதான் பரமஹம்ஸருக்கு வாய்த்தது.

யது நாத் மல்லிக் பூங்காவில் இருவரும் அமர்ந்தவுடன் ஸ்ரீராமகிருஷ்ணர் பரவச நிலையை அடைந்தார். அந்த நிலையிலேயே அந்தப் பூங்காவிலுள்ள மலர்களை எல்லாம் விட மென்மை வாய்ந்த தம் கரமலரை நரேந்திர நாதனின்மீது வைத்தார். நீர்ச்சுழலில் அகப்பட்ட துரும்பினுல் 'நான் சுழல மாட்டேன்' என்று பிடிவாதம் பிடிக்க முடியுமா? நரேந்திர நாதன் மேலே, மேலே செல்லலானுன். முன் முறை அரைகுறை சுயப் பிரக்ஞை யாவது இருந்ததால் தன்னை அந்நிலையிலிருந்து விடுவிக்கும்படி அலற முடிந்தது.

இம் முறையோ அகண்ட ஆனந்தத்தில் பரிபூரணமாகக் கலந்து விட்டார் நரேந்திர நாதர்.

(யாருக்கும் கிடைக்காத நிலை — அதனினும் உயர்ந்த நிலையில்லாத அத்வைதானுபவநிலை — கைகூடப் பெற்றவரை இனியும் ஒருமையில் குறிப்பிடுவது அபசார மல்லவா?)

Koviloor Digital Library

'சொல்லரிய தன்மையதா யான்று னென்னத் தோன்று தெல்லாம் விழுங்கும் சொரூபமாகிய' மெய்ப் பொருள் நரேந்திரரையும் அப்படியே விழுங்கி விட்டது. மீண்டும் நரேந்திரர் சுய உணர்வு பெறும்போது குருநாதர் அவருடைய மார்பைத் தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

'பலகாலம் தவமிருந்தும், ஜபம் புரிந்தும், யோகம் செய்தும் கூடப் பெற இயலாத உன்னத சமாதி நிலை இவ்வளவு எளிதில் கிட்டவாவது ?' என்று மலைக்கவேண்டாம். மின்சார விசையைப் போடுவதும் அணைப்பதும் எத்தனை எளிய காரியம் ? எனினும் இந்த எளிய செயலைச் செய்தவுடன் பிரம்மாண்டமான இயந்திரங்களெல்லாம் இயங்குகின்றன. அல்லது அளப்பறிய வேகத்துடன் இயங்கிக் கொண்டிருக்கும் பிரம்மாண்டமான இயந்திரங்கள் செயலற்று விடுகின்றன. இதே போலத்தான் ஞான மின்சார நிலைக்களன்களாகிய மகான்களின் ஒரு குளிர்ந்த கடாக்ஷம், ஓர் இன் சொல், அல்லது ஒரு ஸ்பரிசமும் அற்புதங்களை நிகழ்த்தி விடும்.

நரேந்திர நாதர் சமாதி நிலை உறுமுன்னர் பற்பல நிலைகளில் சஞ்சரித்தார். தமது பிறப்புக்கு முன்பு நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் கண்டு கூறும் உயர்நிலை கைவரப் பெற்றிருந்தார். அப்போது தான் ஸ்ரீராமகிருஷ்ணர் தாம் நரேந்திரரைப் பற்றி என்ன எண்ணியிருந்தாரோ அதனைக் கேள்விகள் கேட்டு நிச்சயப்படுத்திக் கொண்டார்.

பரம்பொருள் குழந்தையாகிப் பூவுலகுக்கு வந்து கமார்ப்புகூரில் கதாதரனாகப் பிறந்தது அவருக்குத் தெரியும். தாம் அவதார புருஷர் என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். இப்போது அந்தக் குழந்தையின் வேண்டுகோளுக்கிணங்கி நில உலகில் பிறந்த மஹரிஷி யார் என்பதையும் அவர் தெரிந்துகொண்டு விட்டார் !

பரவச நிலையில் இருவரும் இருக்க, பரமஹம்ஸர் வினாக்கள் வினவியதும், அதற்குத் தம்மை யறியாமலே நரேந்திரர் விடை பகர்ந்ததும் எண்ணி எண்ணி ருசிக்கவேண்டிய நிகழ்ச்சியாகும். மகா சமுத்திரங்கள் இரண்டு பேசிக் கொண்டது போன்ற — உன்னத பர்வதங்கள் இரண்டு உரையாடிக் கொண்டது போன்ற — அந்தச் சம்பவத்தைப் பற்றி சாமானிய மானுடர்களினால் எப்படி உள்ளவாறு எழுத முடியும் ?

இந்நிகழ்ச்சியைப் பற்றி பரமஹம்ஸ தேவர் என்ன கூறினார் என்பதைப் பார்ப்போம்: ''நான் நரேந்திரனிடம் அவனுடைய பூர்வ சரித்திரம் பற்றியும், உலகில் அவன் ஆற்ற வேண்டியிருந்த

Koviloor Digital Library

தெய்வப்பணி குறித்தும், எவ்வளவு காலம் அவன் இந்த உலகில் வாழப் போகிறான் என்றும் கேட்டேன். அவன் தனக்குள்ளேயே ஆழமாக மூழ்கிப் பொருத்தமான விடைகளைக் கூறினான். நானாகவே அவனிடம் என்னென்ன கண்டேனோ, அவனைப் பற்றி என்னென்ன அநுமானங்கள் செய்திருந்தேனோ அவற்றையே அவனது விடைகள் உறுதிப்படுத்தின. அவை இரகசியமாகவேதான் இருக்கும். பூரணத்துவம் பெற்ற ஒரு முனிவர் அவன்; தியான யோகத்தில் தேர்ந்த அப்பியாச முள்ளவன்; தன்னுடைய உண்மையான இயல்பை அவன் என்று உணருகிறானோ அன்றே அவன் தானாகச் சங்கற்பித்து யோக உபாயத்தின் வழியே தன் உடலை உகுத்து விடுவான் — என்பதை யெல்லாம் நான் அறிந்தேன்.''

முன் ஒரு முறை பரமஹம்ஸர் தியானம் புரிகையில் காசியிலிருந்து ஓர் ஒளி தோன்றி வானமார்க்கமாகக் கல்கத்தாவுக்குச் செல்வதைக் கண்டார். ''என் பிரார்த்தனைக்குச் செவி சாய்த்தாகி விட்டது. **என் மனிதன்** என்னை ஒரு நாள் வந்தடைந்தே திருவான்'' என்று அப்போது அவர் பேரானந்தத்தோடு கூவியிருக்கிறார். அன்று செவிசாய்க்கப்பட்ட பிரார்த்தனை இன்று தான் ஈடேறி யிருக்கிறது; தாம் தேடிய வியக்தி தம்மை வந்தடைந்தாயிற்று என்று பரமஹம்ஸர் திண்ணமாக உணர்ந்தார்.

சுவாமி விவேகானந்தரின் சரித்திரத்தை எழுதிய மேற்கத்திய சிஷ்யர்கள் இவ்விடத்தில் கூறுவதாவது: ''நரேந்திரர் தமது பரவச நிலையில் என்ன நிகழ்ந்தது என்று அறிய முடியாததற்குக் காரணம் குரு மஹராஜ் அவர்களின் சங்கற்பமாகத்தான் இருக்க வேண்டும். எல்லாவற்றையும் விட உயர்ந்த நிலையினை அவ்வளவு விரைவில் அடைந்ததைத் தமது சீடர் அறியக் கூடாது என்று அவர் எண்ணியிருக்கக்கூடும். அந்த நிலைக்கு நரேந்திரர் தயாராக இருக்கவில்லை. எனவே அதனைப்பற்றி அறிய அச்சம் கொண்டிருப்பார். நரேந்திரர் சமாதி நிலையிலிருக்கும்போது அவருடைய உள் மனத்திலிருந்த எண்ணங்களை மனோதிதமான மார்க்கத்தில் பலவந்தமாகத் திருப்பிவிட்டார் குருமஹராஜ். இதனால் நரேந்திரரின் மனத்தில் ஒரு மாபெரும் உருமாற்றத்தை உண்டாக்கி விட்டார். இது காரணமாக, ஸ்ரீராமகிருஷ்ணர் பித்தேறியவர் அல்லர்; உலகெங்கும் நிறைந்துள்ள எண்ணற்ற பித்தர்களிடையே இவர் ஒருவர் தான் பித்துப் பிடிக்காமலிருப்பவர் என்று அவர் சிறிது சிறிதாக மதிக்கலானார். குரு மஹராஜ் ஸ்பரிசித்த க்ஷணத்திலிருந்து அவருடைய உரிமைப் பொருளாக ஆகிவிட்டார் நரேந்திரர். எனினும் பிறருக்கு

Koviloor Digital Library

உரிமையாகிவிட்ட இந்த நிலையில்தான் நரேந்திரரின் ஆத்மாவுக்குப் பூரணமான சுதந்திரம் கிடைத்தது.''

என்ன அற்புதமான வாசகங்கள்! 'பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு' என்ற பொய்யா மொழிக் கேற்பப் பற்று என்னும் பந்தங்கள் நீங்கிச் சுதந்திரம் பெறுவதற்காக ஆசாரியனிடம் பற்றுக் கொண்டுவிட்டார் நரேந்திரநாத தத்தர். இதன் காரணமாகவே நரேந்திரர் பல காலமாகக் கடைப்பிடித்துவந்த கொள்கைகளில் பலவற்றை மனமொப்பிக் கைவிட்டார். குரு என்று ஒருவர் அவசியமில்லை என்பது இந்தக் கொள்கைகளில் ஒன்று. குரு என்பவர் என்ன செய்ய முடியும் என்பதை அநுபவபூர்வமாகக் கண்டபின்தான் குரு எவ்வளவு அவசியமானவர் என்பது நரேந்திரருக்குப் புரிந்தது.

இந்து சமயத்தின் எல்லாப் பிரிவினருமே குருவுக்கு முக்கியத்துவம் அளிக்கிருர்கள். சிரத்தையுடன் ஆசாரியனை அணுக வேண்டுமென விதிக்கும் வேதம் ஆசாரியனைத் தெய்வமாகவே கொள்ளவேண்டு மென்கிறது. ஸ்தூலமான செல்வத்தை எப்படித் தந்தை மகன் கையில் ஒப்படைக்க முடியுமோ அதேபோல ஞானச் செல்வத்தை சந்தேகமறத் தம் சிஷ்யனிடம் குரு அளிக்கிருர்; தமது அநுபவங்களை யெல்லாமே அவனுக்கு அளிக்கிருர். 'பருவ மறிந்து நின் அருளான குளிகை கொடு பரிசித்து வேதி செய்து' என்று தாயுமானவர் பாடியது ஆசாரியனுக்கு முற்றிலும் பொருந்தும். ஜகத்குரு என்று போற்றப் பெற்ற ஆதி சங்கரரோ இதற்கும் மேல் ஒருபடி சென்று குருவின் பெருமையை விளக்குகிருர். ஸ்பரிச வேதி என்பது மட்டமான உலோகத்தைப் பொன்னுக்குவது போலச் சிஷ்யனை ஆசாரியர் தங்கமாக்குகிருர் என்பது மெய்தான். ஆனுல் பொன்னுக்கப் பெற்ற உலோகத்தை கொண்டு மற்றப் பொருள்களைப் பொன்னுக்க முடியாது; குருவினுல் உயர்த்தப்பட்ட சீடனே தானும் மற்றவர்களை அதே நிலைக்கு உயர்த்த முடியும்; எனவே ஸ்பரிச வேதியினும் சிறந்தவர் குரு என்கிருர் அவர். சுவாமி விவேகானந்தரின் விஷயத்தில் அந்த அருள்வாக்கு எவ்வளவு அற்புதமாகப் பொருந்துகிறது!

சரித்திரத்தையும், பூகோளத்தையும் போல வாயினுல் கூறி விளங்க வைப்பது அல்ல தத்துவம். அதனை வாழ்ந்து காட்டி நிருபிக்க வேண்டும். அப்படி நிருபிப்பவர்தான் குரு. சக்தியற்ற சாமானிய மானுடனுக்குத் தானும் அப்படி வாழவேண்டு மென்ற சக்தி அளிப்பவரும் குருவே ஆவார்.

இவ்வளவு பிரபாவம் பொருந்தியவர் குரு என்பதை முதலில் அறிந்திருக்கவில்லை நரேந்திரர். கடவுளுக்கும் மனிதனுக்கும்

Koviloor Digital Library

குறுக்கே நிற்பவரே குரு என்று அவர் முதலில் எண்ணி வந்தார். மானுட இச்சைகள் எல்லாம் நீங்கப் பெற்று ஞான ஒளியை உண்மையில் கண்டவரே ஆசாரியர் எனக் கண்டால் அத்தகைய ஆசாரிய லக்ஷணம் பொருந்தியவர் யாருமே இவ்வுலகில் கிடை யாது என்றெண்ணினர் நரேந்திரர். சூரியன் என்று ஒன்று கிடையாது என்று நாம் வாதிக்கலாம். ஆனல் செவ்வொளி வீசி அடிவானத்தில் அவன் உதயமாகிவிட்டாலோ நம் வாதம் என்னவது?

நரேந்திர நாதர் ஸ்ரீராமகிருஷ்ண தேவரை இலேசில் தமது குருவாக மதித்து சரணடையவில்லை. ஐந்து ஆண்டுகள் அவ ருடைய செய்கைகளை அச்சுவேறு ஆணி வேருகப் பகுத்துப் பார்த்தபின்பே அந்த பிரேம சாகரத்தில் கரைந்தார் நரேந்திரர். இதற்குள் அவர் எத்தனேயோ மனச்சஞ்சலங்கள் உற்றிருப்பார். எனினும் ஸ்ரீராமகிருஷ்ண பகவானே இதனல் நரேந்திரரிடம் தமக்குள்ள அன்பை இம்மியும் இழக்கவில்லை. சிஷ்யன் குருவைத் தேடுவது உலக வழக்கு. ஆனல் இந்தக் குருவோ தாமே சிஷ் யனைத் தேடித் தவித்தவரல்லவா? அதே போல, சிஷ்யர்களை குருமார் பரீக்ஷித்துப் பார்ப்பதே வழக்கமாயினும், பரமஹம்ஸரோ தமது சிஷ்யன் தம்மைப் பரிசோதித்துப் பார்ப்பதையும் மகிழ்ச்சி யுடன் வரவேற்ருர். ஏன், அவரே ஒரு முறை கூறினர்: ''பணத் தை மாற்றிக் கொள்பவர்கள் எப்படி ஒவ்வொரு நாணயமும் செல்கிறதா செல்லாதா என்று பார்ப்பார்களோ, அதே போல எனது சகல காரியங்களையும் பரீக்ஷித்துப் பார்த்தே என்னை ஏற்றுக் கொள்'' என்று. இவ்வாறு கூறுவதற்கு எவ்வளவு நிர்மலமான உள்ளம் வேண்டும்? எவ்வளவு எளிய மனேபாவம் வேண்டும்?

* * *

பரமஹம்ஸரின் அமானுஷிகமான அநுபவங்களை ஆரம்ப காலத்தில் நரேந்திரர் நம்பவில்லை. எனினும் அவரது துறவும், தூய்மையும், அவற்றுக்கு மேலாக அவரது கபடமற்ற அன்பும் நரேந்திரரைக் கவர்ந்துவிட்டன. வாரம் இருமுறையேனும் அவர் பரமஹம்ஸரைக் காண வரலானர். இறுதியில் அவரைத் தமது ஆசாரியனுகவும் ஏற்றுக் கொண்டுவிட்டார். முதலில் எவ்வளவு சந்தேகித்தால்தான் என்ன? முடிவில் தமது குருவுக்கே பரி பூரண சரணுகதியாகி விட்டார் விவேகானந்தர்.

பகுத்தறிவால் மட்டும் பரமஹம்ஸரின் அநுபவங்களை உரைத்து உரைத்துப் பார்த்தே நரேந்திரர் அவரிடம் தம்மை அர்ப்பணித்துக் கொண்டதாகச் சொல்ல முடியாது. பகுத்தறி வைப் பாவாகவும், இதயத்தை ஊடாகவும் கொண்டு அவ்வப்

Koviloor Digital Library

போது பகுத்தறிவைத் துளைத்துத்துளைத்து இதயத்தைச் செலுத்தி நெசவு செய்தால்தான் ஆத்மானுபவம் என்ற வஸ்திரம் கிடைக்கும் என்று அவர் அறிந்தார். பகுத்தறிவு மாடிப் படிக்கட்டைப் போல மேலிடத்துக்குச் செல்ல உபாயம் தானே ஒழிய அதுவே மேலிடம் என்ற லட்சியம் அன்று; மாடிப் படிக்கட்டினுல் மச்சின் மீது ஏற முடியாது என்று நரேந்திரர் உணர்ந்தார். அநுபவம் என்ற உச்சி நிலையில் நின்று பார்த்தால்தான் சத்தியத்தின் முழுக் காட்சியும் தெரியும் என்று உணர்ந்தார்.

''உங்களுடைய அறிவுக்குப் பொருந்தாதது எதையும் ஏற்காதீர்கள்; புஸ்தகத்தில் எழுதி வைத்திருக்கிறது, அல்லது வேறு யாரோ சொன்னுர்கள் என்பதற்காக எதையுமே ஒப்புக் கொண்டு விடாதீர்கள்'' என்று கூறியவராயிற்றே சுவாமிஜி என்று வாசகர்கள் எண்ணலாம். பகுத்தறிவுக்கு அடங்கிய விஷயங்களில் வேறு பிரமாணங்களைத் தேடக்கூடாது; எனினும் பகுத்தறிவுக்கும் மேம்பட்டது அநுபவம் என்பதே சுவாமிஜியின் கொள்கை.

பகுத்தறிவைப் பிரதானமாக நரேந்திரர் எண்ணியது இந்தக் காலத்தவர்களின் கண்களைத் திறக்கவேதான். எதனையும் சந்தேகிக்கும் இயல்பு கொண்ட நரேந்திரர் இந்தக் காலத்துக்கு ஒரு சின்னம். அவரே எந்தக் காலத்துக்கும் பொதுவான சத்திய அநுபவத்தின் உறைவிடமான ஸ்ரீராமகிருஷ்ணரிடம் தஞ்சம் புகுந்தார். இன்று நாம் ஐயப்படும் நூறுயிரம் விஷயங்களைப் பற்றி நம்மை விட மிகவும் தீவிரமாக ஐயம் கொண்டு, அந்த ஐயத்திலேயே வெந்து கொண்டிருந்தவர் நரேந்திரர். அப்படிப்பட்டவர் அறிவுக் கனலும் குளிர்ந்து இதயத்திலிருந்து அருட்புனலைப் பெருக்கினுல்தான் உய்யும் வழி பெறலாம் என்று உணர்த்தினுல்தானே உள்ளுணர்ச்சியின் சத்தியத்துவம் நிதரிசனமாகும்? நம்பிக்கையின் மீதே அவர் ஸ்ரீராமகிருஷ்ண தேவரையும், அவர் உருவகித்த தத்துவங்களையும் ஏற்றிருந்தால், சந்தேக மயமான நமக்கு எப்படி அந்தத் தத்துவங்களில் பிடிப்பு ஏற்படும்? நமக்காகவேதான் ஆண்டவன் நரேந்திரரை அனுப்பிவைத்து, அவருடைய உள்ளத்தில் பெரும் போராட்டங்களை நிகழ்த்தினுன். மனித குலத்துக்காக தம்முடைய உள்ளத்தில் எத்தனையோ குமுறல்களைத் தாங்கிய நரேந்திரரின் கருணைக்கு அஞ்சலி செலுத்துவோமாக!

நரேந்திரரின் ஐயம் எப்படித் தீர்ந்தது? கடவுள் உண்டு என்று அவர் எப்படி நம்பினுர்? கடவுளைக் காண முடியும் என்று அவர் எப்படி உணர்ந்தார்? கடவுள் பலப்பல தேவ தேவியராகத் தரிசனம் தர முடியும் என்பதை அவர் எப்படி ஒப்புக் கொண்டார்? பகுத்தறிவுக்கு ஓர் எல்லை உண்டு என்

Koviloor Digital Library

பதை அவர் எப்படி அறிந்தார் ? உள்ளுணர்ச்சியின் பெருமையை அவர் எப்படித் தெரிந்து கொண்டார் ? அநுபவத்தின் சத்தியத் துவத்தை அவர் ஏற்றுக்கொண்டது எப்படி ?

இந்த வினுக்களுக்கெல்லாம் யார் விடை பகரமுடியும் ? 'பகவான் ஸ்ரீராமகிருஷ்ணருக்குத் தெரிந்திருக்கலாம்; ஒருக்கால் விவேகானந்தருக்கும் தெரிந்திருக்கலாம்' என்று சுவாமிஜியின் சரிதத்தை எழுதும் ஒருவர் கூறுகிருர். விவேகானந்தருக்குத் தெரிந்திருந்தால் அவரே ஏன் இந்த அதிசய மாற்றத்தை விண்டு கூறி விளக்கி யிருக்கக் கூடாது என்று எண்ணத் தோன்றும். ஆனுல் இது வார்த்தைகளால் விளக்கக்கூடிய விஷயம் என்று யார் சொன்னது ? 'கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்' என்ற வகையைச் சேர்ந்த விஷயமல்லவா இது ?

ஸ்ரீராமகிருஷ்ணரும், விவேகானந்தரும் சத்திய வஸ்துவை அறிய எவ்வளவு துடிதுடித்தார்களோ, அதற்காக எவ்வளவு கடினமான சாதனைகளை அநுஷ்டித்தார்களோ, அந்த அளவுக்கு நாமும் துடித்துச் சாதனைகளை மேற்கொண்டால் நமக்குமே மதம் என்ற நம்பிக்கை அநுபவ பூர்வமாகச் சுவைக்கக் கூடியதாகும். அந்தத் துடிப்பைப் பெருமல், சாதனைகளையும் செய்யாமலிருக்கும் வரையில் அவர்களது அநுபவத்தை ஆக்ஷேபிக்க நமக்கு அருகதை கிடையாது.

*　　　　*　　　　*

கூட்டுப்புழு வண்ணத்துப் பூச்சியாக உருமாறுவது போல நரேந்திரர் விவேகானந்தராஞர் என்று சுவாமி நிகிலாநந்தா அவர்கள் தாம் எழுதியுள்ள சுவாமிஜியின் சரிதத்தில் அழகுறக் கூறியிருக்கிருர்.

கூட்டுப்புழு வண்ணத்துப் பூச்சியாவது எளிதில் நடைபெறும் காரியமல்லவே ! நரேந்திரர் நரேந்திரராகவேதான் பல நாட்கள் இருந்துவந்தார் !

மெய்ப்பொருளும், ஜீவனும் ஒன்றே என்ற சமாதி நிலைக்குப் பரமஹம்ஸர் அவரை உயர்த்திச் சென்றபோதும்கூட அவருக்கு அது புரியத்தான் இல்லை. ''எனக்கு வீடு-வாசல், தந்தை-தாய் எல்லாம் இருக்கிறதே'' என்று அலறி, தாம் நரேந்திரராகவே இருக்கத்தான் அவர் விரும்பினுர். இதைப்பற்றி குருமஹராஜ் ஒரு முறை வேடிக்கையாகக் கூறினுர்:

''செத்துப் போனபின் ஒருவன் பிசாசாகப் போனுன். அந்தப் பிசாசுக்கு ஒரு சகா வேண்டியிருந்தது. யாரேனும் இறந்து போனதாக அறிந்தால் உடனே அந்த இடத்துக்குச் சென்றுவிடும் பிசாசு. ஆனுல் இறந்து போனவரின் ஆவி பிசா

Koviloor Digital Library

சுடன் கூட்டுச் சேராது. 'நான் நல்ல காரியங்கள் பண்ணியவனு யிற்றே, அதனுல் நான் பிசாசாக அலைய முடியாது' என்று சொல்லி மரணமடைந்த மற்ற ஆவிகள் மேலுலகம் சென்று விடும். அந்தப் பிசாசைப் போலவேதான் நானும் ஒரு சகாவுக் காக ஏங்கினேன். நரேன், உன்னைக் கண்டவுடன் அந்த சகாவைப் பெற்றுவிட்டோம் என்று எண்ணினேன். ஆனுல் நீயும் 'வீடு-வாசல் இருக்கிறது, அப்பா-அம்மா இருக்கிறுர்கள்' என்றுதான் சொல்லி விட்டாய்! கதையில் வருகிற பிசாசுபோல நானும் தனித்தேதான் வாழுகிறேன்.''

பிசாசுக்கும் பரமஹம்ஸருக்கும் எவ்வளவு தொலைவோ அவ் வளவ தொலைவு மற்றவர்களுக்கும் நரேந்திரருக்கும் என்பது போக போகத் தெளிவாயிற்று. தன்னுடைய வீடு-வாசல், தந்தை-தாய்-தமர் யாவும் குருதேவரே என்று நரேந்திரர் உணரும் காலமும் வரத்தான் போகிறது!

பரமஹம்ஸர் விளையாட்டாக இவ்வாறு கூறியபோதிலும் நரேந்திரருக்கும் மற்றவர்களுக்கும் எவ்வளவு தொலைவு என்பதை முதற் பார்வையிலிருந்தே அவர் நன்கு அறிந்துதான் இருந்தார். நரேந்திரரையும் இன்னும் சிலரையும் நித்திய சித்தர்கள்-பிறப்பி லிருந்தே பூரணத்துவம் பெற்றவர்கள் — என்பதாக அவர் கூறி வந்தார். ''அவர்கள் பெறும் பயிற்சிகளெல்லாம் அவர்களுக்காக அல்ல. உலகத்தின் நன்மைக்காகவே அவை'' என்று அவர் சொல்லுவார். உலக மக்களுக்காக அவதார புருஷராகிய நரேந் திரர் ஐயங்கள் கொண்டதாக முன்பே கண்டோமல்லவா? இதைத்தான் வேறு வார்த்தைகளில் விளக்கியிருக்கிறுர் ஸ்ரீராம கிருஷ்ண தேவர்.

சிற்பி தான் சிலை சமைக்கப் போகும் கல்லின் தன்மையை, அதன் அந்தரங்கமான திட்டம் உள்பட எப்படி அறிந்திருப்பானே அது போல ஸ்ரீராமகிருஷ்ணர் தாம் விவேகானந்தராகச் சமைக்க விருக்கும் நரேந்திரரின் இதயக் கருவரையை எடுத்த எடுப்பிலேயே அறிந்திருந்தார். புதிர்க் கதிர் (X-Ray) படமெடுத்து, நோயாளியின் உடலிலுள்ள மர்மங்களை அறிந்தபின்பே வைத்தியர் சிகித்ஸை தொடங்குகிறுர். புதிர்க் கதிர் என்று நாம் கூறுவதை விடப் புதிரான ஞானதிருஷ்டியால் நரேந்திரரின் அகத்திலுள்ள மர்மங்களை அறிந்தே அவரைத் தமது தனிப் பெரும் சிடரெனக் கண்டார் பரமஹம்ஸர்.

அந்த மர்மங்கள் அவருக்கு என்ன தெரிவித்தன? நரேந் திரர் ஸப்த ரிஷிகளில் ஒருவர், நர நாராயணரில் நரர், சிவத்தின் சாயல் அவர் என்றெல்லாம் தெரிவித்தன. இவற்றைப் பரம ஹம்ஸர் வெளிப்படத் தெரிவிக்கவும் தயங்கவில்லை.

Koviloor Digital Library

நரேந்திரரைக் கண்டித்து யாரேனும் ஏதேனும் கூறினுல் அதனை சிவநிந்தை என்பார் ஸ்ரீராமகிருஷ்ணர். நரேந்திரனை யாராலும் எடைபோட முடியாது; அவனை முற்றிலும் அறிவது யாருக்குமே இயலாத காரியம் என்பார். நரேந்திரரின் வாழ்க்கை வரலாற்றை எழுதுபவர்களுக்காகவும், அதனைப் படிப்பவர்களுக்காகவுமே அவர் இவ்வாறு கூறினுரோ என்று தோன்றுகிறது.

சந்தேகாஸ்பதமான நடத்தையுள்ள சிலருடன் நரேந்திரர் பழகுவதாக ஒரு பக்தர் பரமஹம்ஸரிடம் தெரிவித்தார். அவ்வளவுதான்! சினம் அறியாத முனிவரும் சினம் கொண்டார். ''இது முழுப் பொய். நரேன் தீய வழியில் செல்ல முடியாது என்று சர்வேசுவரி என்னிடம் சொல்லியிருக்கிருள். நீ இது போல இனியொரு முறை பேசினுயானுல் உன் முகத்திலேயே விழிக்கமாட்டேன்'' என்றுர்.

நரேந்திரரின் முன்னிலையிலேயே அவரைப் பாராட்டவும் ஸ்ரீராமகிருஷ்ணர் தயங்கவில்லை. இவ்வாறு செய்வதால் பலவீன மனதுள்ளவர்கள் செருக்குறுவார்கள்; ஆனுல் நரேந்திரரை அது தொடாது என்றே அவர் கருதினுர். ஒரு நாள் பிரம்ம சமாஜத்தின் பெருந்தலைவர்களான கேசவ சந்திர சேனரும், விஜயகிருஷ்ண கோஸ்வாமியும் பரமஹம்ஸரைத் தரிசிக்க வந்திருந்தனர். அப்போது நரேந்திர நாதரும் அங்கிருந்தார். உன்னதமான ஒரு நிலையிலிருந்த குருதேவர் அவ்விருவரையும் நோக்கினுர்; நரேந்திரரையும் நோக்கினுர். உடனே நரேந்திரரின் எதிர்காலம் பெரும் சாதனை அவர் அகக்கண்ணில் பளிச்சிட்டது. பிரம்ம சமாஜத் தலைவர்கள் சென்றபின் அவர் கூறினுர்: ''நல்லது, கேசவர் புகழ்பெற்று விளங்குவதற்குக் காரணம் அவர் ஓர் அம்சம் குண நலன்களைப் பெற்றிருப்பது என்றுல், நரேனிடம் அது போலப் பதினெட்டு அம்சங்கள் உள்ளன. கேசவரிடத்திலும், விஜயரிடத்திலும் ஞானப்பிரகாசம் ஒரு மெழுகுவர்த்தி அளவில் ஒளிர்வதாகக் கண்டேன்; நரேனிடமோ அது தகிக்கும் சூரியனுக ஒளி வீசுகிறது. அஞ்ஞானம், மாயை இவற்றின் கடைசிச் சாயை வரை பரவி அவற்றை அழிக்கிறது அந்த ஒளி.''

இவ்வாறு பரமஹம்ஸர் கூறியவுடன் நரேந்திரருக்குக் கர்வம் தலைக்கேறவில்லை. மாறுகக் கோபமே வந்தது. ''ஐயா, நீங்கள் ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்? உங்களை மக்கள் பைத்தியம் என்று எண்ணிக் கொள்வார்கள். உலகப் புகழ் படைத்த கேசவர் எங்கே, ரிஷிகளைப் போன்ற விஜயர் எங்கே, ஒரு முக்கியத்துவமும் இல்லாத மாணுக்கனுகிய நான் எங்கே! என்னை அவர்களோடு நீங்கள் எப்படி ஒப்பிடலாம்? தயவு செய்து இனி இது போலச்

Koviloor Digital Library

செய்யாதீர்கள்'' என்று ஸ்ரீராமகிருஷ்ணரைக் கடிந்து கொண்டார் நரேந்திரர். ஆம், தமது அந்தரங்க சுத்தம் காரணமாக அவர் பல முறை சர்வ சகஜமாகக் குருவைக் கடிந்து கொண்டதுண்டு; கேலி செய்ததும் உண்டு.

உடனே பகவான் கூறினார்: ''நரேன், என்னால் அப்படிச் சொல்லாமல் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. அவை என்னுடைய வார்த்தைகள் என்றா நீ எண்ணுகிறாய்? அன்னை காளி எனக்குச் சில விஷயங்களைக் காட்டி அருளுகிறாள். அதையே நான் திருப்பிக் கூறுகிறேன். அவள் சத்தியம் தவிர வேறெதையும் எனக்குக் காட்டியதில்லை.''

'அம்பிகை சொன்னாள்' என்று அவர் கூறுவதை நரேந்திரரால் ஏற்க முடியவில்லை. உடனே அவர் சற்றும் கள்ளமில்லாமல், ''அம்பிகைதான் சொன்னாளோ, உங்கள் மனசின் கற்பனைதானோ? யார் கண்டது? உங்கள் நிலையில் நான் இருந்தால் இதெல்லாம் கலப்படமற்ற, அப்பட்டமான கற்பனையே என்றுதான் எண்ணுவேன். மேல் நாட்டு விஞ்ஞானமும் தத்துவ சாஸ்திரங்களும் என்ன சொல்கின்றன தெரியுமா? 'நம்முடைய உணர்வுகளே நம்மை ஏமாற்றி விடுகின்றன; அதுவும் ஏதேனும் ஒரு வஸ்துவிடம் மனச் சார்பு இருந்தால் கேட்கவே வேண்டாம்' என்று அவை நிரூபித்திருக்கின்றன. உங்களுக்கு என்மேல் பேர் அன்பு இருக்கிறது. என்னை மிகப் பெரியவனாகக் காண நீங்கள் விரும்புகிறீர்கள். அதனால் உங்கள் மனது இப்படிப்பட்ட கற்பனைகளைப் புனைந்து காண்கிறது'' என்றார்.

வாசகர்களே! பரமஹம்ஸரின் பல அநுபவங்களைப் படிக்கும் போது நமக்கும் கூட இப்படித் தோன்றியிருக்கும். எனினும் நாம் அப்படி எண்ணுவதும் தவறோ என்று சற்றே அஞ்சாமலிருக்க மாட்டோம். தீரர் நரேந்திரரோ அப்படியெல்லாம் அஞ்சவில்லை. நாம் என்ன ஐயப்படுகிறோமோ, அதை ஐயம் திரிபில்லாமல் பரமஹம்ஸரிடமே உடைத்துக் கேட்டிருக்கிறார் அவர். இப்படிக் கேட்டவரே பின்னர் அவருக்குத் தம் உடல், பொருள், ஆவி யாவற்றையும் நிவேதனம் செய்திருக்கிறார். இனியும் நாம் ஏன் மகான்களின் வாழ்க்கையில் நடக்கும் அற்புதங்களை நம்ப மயங்க வேண்டும்?

நரேந்திரர் இவ்வாறு பலமுறை கூறியதுண்டு. பரமஹம்ஸரின் மனநிலை மேலே மேலே சென்று கொண்டிருக்கும் சமயங்களில் அவர் இந்தப் பேச்சை ஒரு பொருட்டாகவே எண்ணமாட்டார். மற்றச் சமயங்களில் அவருக்கு நிலைகுலைந்து விடும். பச்சைக் குழந்தை போலப் பயப்படுவார். எந்த அம்

Koviloor Digital Library

பிகையைப் பற்றிய ஐயத்தை நரேந்திரர் கிளப்பிவிட்டாரோ அதே அம்பிகையிடம் குழந்தையாகச் செல்வார் குழம்பிய பரமஹம்ஸர். ஜகஜ் ஜனனி அந்தக் குழந்தைக்கு ஆறுதல் சொல்வாள்: ''அவன் சொல்வதற்காக நீ ஏன் விசாரப்படுகிறுய்? இன்னும் சில காலத்தில் நீ சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் சத்தியம் என்று அவனே ஒப்புக்கொள்வான்.'' நம் தாய் நம்மிடம் பேசுவது போல, ஸ்ரீராமகிருஷ்ணரிடம் பேசுவாள் பவதாரிணி.

* * *

பின்னுல் சுவாமி விவேகானந்தருக்குத் தமது ஞான சேவை பூரணமாகுமா என்ற ஐயம் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் பல உண்டு. அப்போதெல்லாம் பரமஹம்ஸர் தாம் அடைய விருக்கும் உலகப் புகழைப்பற்றிக் கூறியதுதான் அவருக்கு ஆறுதலையும், நம்பிக்கையையும், உற்சாகத்தையும் ஊட்டியிருக்கிறது.

* * *

நரேந்திரரிடம் பரமஹம்ஸருக்கு இருந்த அன்பை வார்த்தைகளால் வடிக்க இயலாது. இன்று ஸ்ரீராமகிருஷ்ண — விவேகானந்தர் என்று ஒரே வியக்தியாக நாம் பூஜிக்கும் இருவரல்லவா அவர்கள்? ஆத்மாவை நேசிப்பது போலவே நரேந்திரரை நேசித்தார் பரமஹம்ஸர். அவர் நரர் — தாம் நாராயணர்; அவர் ரிஷி புங்கவர் — தாம் சச்சிதானந்த பாலன்; அவர் சிவம் — தாம் சக்தி; அவர் அறிவுக் கனல் — தாம் அருட் புனல்; என்று கருதியே விவேகானந்தரிடம் ஸ்ரீராமகிருஷ்ணர் அன்பு செலுத்தி வந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் துறவுக்காகவும் தூய்மைக்காகவும் அவரை நரேந்திரர் நேசித்தார் எனில், அதைப் போலப் பல மடங்கு நரேந்திரரை நேசித்தார் பரமஹம்ஸர். நரேந்திரரின் சுய நம்பிக்கையும், ஆண்மையும், சத்திய நாட்டமுமே பரமஹம்ஸரை இவ்வாறு ஈர்த்தன என்று சுவாமிஜியின் வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறுர்கள். நரேந்திரரின் தன்னம்பிக்கை என்பதே அவர் தம்மை நம்பிப் பரமஹம்ஸரிடம் விச்ராந்தியாக ஒப்புக் கொடுத்ததில் தான் பிறந்தது; அவரது ஆண்மை எழுச்சியும் பரமஹம்ஸரின் பெண்மைக் கனிவில் பொலிவுறப் போகிறது; சத்தியத்தை நாடிய அவர் அந்தச் சத்தியத்தை அடைந்து, மக்களுக்காகத் தொண்டாற்றப்போகிறுர்!

நரேந்திரரைப் பிடிவாதக்காரர் என வெளி உலகம் கண்ட போது ஸ்ரீராமகிருஷ்ணர் மட்டும் அந்தப் 'பிடிவாதம்' தன்னம்பிக்கையில் பிறந்தது எனக் கண்டார். சுதந்திரமாகச் சிந்திக்கும்

Koviloor Digital Library

நரேந்திரரைத் 'தற்குறி' என்று மற்றவர்கள் எண்ணியபோது ஸ்ரீராமகிருஷ்ணர்மட்டும் அந்தச் சுதந்திர சிந்தனை நரேந்திர னுடைய புலனடக்கத்தில் பிறந்தது எனக் கண்டார். புகழையும் இகழையும் பொருட்படுத்தாத அலட்சியக்காரர் என்று மற்றவர் கள் நரேந்திரரை எண்ணியபோது ஸ்ரீராமகிருஷ்ணரோ அந்த 'அலட்சியம்' அவரது இதய சுத்தத்தில் பிறந்தது என்பதை உணர்ந்திருந்தார். தம்முடைய உள்ளீட்டை நரேந்திரரே ஓரள வுக்கு அறிந்துதான் இருந்தார் என்பதையும் அவருடைய ஆழம் முழுவதையும் கண்ட பரமஹம்ஸர் அறிந்திருந்தார். கனலாக இருந்த நரேந்திரர் கனியவும், கசியவும் உள்ளூர ஏங்கிக்கொண் டிருந்தார் என்பதைப் பரமஹம்ஸர் தெரிந்துகொண்டிருந்தார். இந்தக் கனிவையும், கசிவையும் மக்கள்குலம் முழுவதிடமும் காட்டி அவர்களை நரேந்திரர் நல்வழிப்படுத்த முடியும் என்று உள்ளுணர்ச்சி யால் புரிந்துகொண்டே ஸ்ரீராமகிருஷ்ண தேவர் அவரை வலிய ஆட்கொண்டார்.

* * *

நரேந்திரரைப் பிரிந்திருக்க முடியாதபடி அப்படி ஒரு பிரியம் குருதேவருக்கு அவர்பால் ஏற்பட்டுவிட்டது. மகான்களால்தான் அப்படி ஓர் அன்பு கொள்ள முடியும் போலும். பாமரர்களாகிய நமக்கு அந்த அன்பின் வேகம் புரியக் கூட இல்லை.

நரேந்திரர் சில நாட்கள் தக்ஷிணேசுவரத்துக்கு வராவிட்டால் பரமஹம்ஸரால் தாளமுடியாது. நரேந்திரரால் தமது அநுபவங் கள் உலகுக்குப் பரவும் என்ற காரணத்துக்காக ஸ்ரீராமகிருஷ்ண முனிவர் அவரிடம் நேயம் காட்டினார் என்று சொல்லமுடியாமல், காரணமேயின்றி நரேந்திரரை அவர் விரும்பினார் என்றுதான் இந்தப் பிரிவுத்துயரைக் காணும்போது நமக்குத் தோன்றும்.

காரணத்தோடு செலுத்தும் அன்பை எப்படி அன்பு என்று சொல்லமுடியும்? அது ஒரு கொடுக்கல்-வாங்கல் வியாபாரமே அல்லவா? 'உணர்ச்சிதான் நட்பு ஆம் கிழமை தரும்' என்று பொய்யா மொழிப் பெருந்தகை கூறியதுபோல இதய சக்தியே ஸ்ரீராமகிருஷ்ணரை நரேந்திரருடன் இணைத்தது. இதற்குக் 'காரணம் கிடையாது' என்று கூறும் போது புத்தி பூர்வமாக விளக்கக்கூடிய காரணம் கிடையாது என்றுதான் பொருள். 'இதயத்துக்கென்று ஒரு காரணம் உண்டு; அதைப் புத்தி புரிந்து கொள்ளாது' என்று பாஸ்கல் என்ற பேரறிஞர் கூறியிருப்பது இங்கு நினைவு வருகிறது.

நரேந்திரரைக் கண்டு சில நாட்களாகி விட்டால் ஸ்ரீராம கிருஷ்ணர் 'உலறினேன், அலறினேன், வேசற்றயர்ந்தேன்' என்ற

Koviloor Digital Library

நிலைகளை அடைந்து விடுவார். நரேந்திரரைத் தம்மிடம் கொண்டு வருமாறு அம்பிகையிடம் குழந்தைபோல் முறையிடுவார். அவள் வேறெப்படி ஆறுதல் தந்தாலும் ஆறுதல் அடைய மாட்டேன் என்று குழந்தை போல் பிடிவாதம் செய்வார். இது மற்ற பக்தர்களுக்குப் புரியாததோடு நரேந்திரருக்குமே புரியவில்லை. ஸ்ரீராமகிருஷ்ணரின் பிரேமையைக் கண்டு அவர் பிரமை பிடித்தவர் என்றே சில சமயங்களில் அவர் எண்ணினர். எனினும் இந்த கங்கு கரையற்ற அன்பில் தம்மையுமறியாமல் முழுகத் தொடங்கினர். இது காரணமாகத்தான் பரமஹம்ஸரின் மகிமையைப்பற்றி அவர் பல ஐயங்கள் கொண்டிருந்தாலும், அவரை இடைவிடாது கண்டு வந்தார். ஏதோ ஒன்று தம்மைப் பிடித்து வைத்துக் கொண்டிருப்பது போல உணர்ந்தார் நரேந்திரர். ''அவருடைய அன்புதான் என்னை அவரோடு கட்டிப் போட்டிருக்கிறது'' என்று ஒரு முறை அவர் கூறினர்.

பல நாட்களாகியும் நரேந்திரர் தக்ஷிணேசுவரத்துக்குச் செல்லமுடியாமல் ஒரு சமயம் நேரிட்டது. அன்றைக்கு ராம தயாள், பாபுராம் என்ற இரு பக்தர்கள் பரமஹம்ஸரைக் காண வந்திருந்தார்கள். அவர்களிடம் நரேந்திரரைப் பற்றிக் கேட்ட பரமஹம்ஸர், ''ஹூம், அவன் நீண்ட நாட்களாக இங்கே வரவில்லை. அவனைக் காண நான் ஏங்குகிறேன். அவனை உடனே இங்கு வந்து பார்க்கும்படிச் சொல்வீர்களா? மறக்க மாட்டீர்களே?'' என்று கூறினர். அன்றிரவு அவ்விருவரும் தக்ஷிணேசுவரத்திலேயேதான் தங்கினர்கள். இரவு பதினேரு மணி இருக்கும். எல்லாரும் படுத்தாயிற்று. ஸ்ரீராமகிருஷ்ணர் துணியைச் சுருட்டிக் கக்கத்தில் இடுக்கியபடி அவ்விருவரை அணுகினர். ''தூங்கிப் போனீரா?'' என்று ராமதயாளரைக் கேட்டார் குருதேவர். ''இல்லையே!'' என்றார் அவர். ''நல்லது, இதோ பார்! ஈரத்துணியை முறுக்கிப் பிழிவதுபோல என் இதயத்தை யாரோ முறுக்கிப் பிழிவதாகத் தோன்றுகிறது. இதை நரேனிடம் சொல்லி அவனை இங்கே வரச் செய்'' என்றார் பரமஹம்ஸர். அவருடைய கரங்கள் வஸ்திரத்தை முறுக்கிப் பிழிந்தன. ஸ்ரீராமகிருஷ்ணருடைய குழந்தைத் தனத்தை நன்கு அறிந்த ராமதயாளர் அவருக்குப் பலவாறு ஆறுதல் கூறினர். தாம் நரேந்திரரை எப்படியும் தக்ஷிணேசுவரத்துக்கு அனுப்பி வைப்பதாக உறுதி சொன்னர்.

இதுபோலக் கழிந்த இரவுகள் எத்தனை எத்தனையோ!

நரேந்திரரைக் காணுத இன்னெரு நாள் குருதேவர் எப்படி வெதும்பினர் என்பதுபற்றி வைகுண்டநாத ஸான்யால் கூறுவ

Koviloor Digital Library

தாவது: ''அன்று முழுவதும் குருநாதர் நரேந்திர நாதரைப் புகழ்ந்தபடி இருந்தார். அவரைப் பற்றிப் பேசப் பேச அவரைக் காணவேண்டும் என்ற ஆர்வம் குருநாதருக்கு மிகுந்தது. அவரைத் துக்கம் பற்றிக் கொண்டுவிட்டது. அவரால் தம்மைக் கட்டுப் படுத்திக் கொள்ளவே முடியாமல் போயிற்று. வராந்தாவுக்கு ஓடினுர்: ''சர்வேசுவரியே, அவனைக் காணுமல் என்ருல் உயிர் வாழமுடியவில்லை'' என்று கதறினுர். மீண்டும் அறைக்குத் திரும்பியவர் சோகம் நிறைந்த குரலில், ''எவ்வளவோ அழு தாச்சு; நரேன்தான் வரவில்லை'' என்று புலம்பினுர். ''அவனைக் காணுமல் இதயத்தில் காணும் நோவு — என் இதயத்தைக் கசக்கு வது போல இருக்கிறது. ஆனுல் அவன் இதையெல்லாம் லக்ஷியம் செய்யவே இல்லை'' என்ருர். மீண்டும் வெளியே ஏகினுர். சிறிது போதில் திரும்பியவர், ''வயதான ஒருவன் ஓர் இளம் பிள்ளைக்காக இப்படிப் பிரலாபித்து அழுகிறேன். என்னைப்பற்றி ஜனங்கள் என்ன நினைப்பார்கள்? நீங்களெல்லாம் எனக்குச் சொந்தமான ஜனங்கள். உங்களிடம் உண்மையைப் பகிரங்கப் படுத்த நான் வெட்கப்படவில்லை. ஆனுல் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்? என்ருல் என்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லையே'' என்ருர். நரேந்திரரைக் கண்டபோது இதே அளவுக்குக் குருநாதர் இன்பத்தில் இறும்பூது எய்தினுர்.

பரமஹம்ஸரின் ஜயந்தி கொண்டாடப் பெற்றபோது நரேந் திரர் நடுப்பகல் வரையில் வரவில்லை. பரமஹம்ஸரோ அவரைப் பற்றியே கேட்டுக்கொண்டிருந்தார். கடைசியாக நரேந்திரரும் வந்து சேர்ந்தார். ஸ்ரீராமகிருஷ்ணருக்குத் தண்டனிட்டார். ஸ்ரீராமகிருஷ்ணர் அப்படியே தண்டம்போல அவர் தோள் மீது சாய்ந்தார். தன் நினைவிழந்து சமாதியில் ஆழந்தார். சுயப் பிரக்ஞை வந்தபின் நரேந்திரருக்கு உணவூட்டி அணைத்துக் கொண் டார். நரேனைப் பார்த்த மாத்திரத்திலேயே குருநாதருக்குச் சமாதி கூடிய சந்தர்ப்பங்கள் அநேகம். ஒரு முறை தக்ஷிணேசு வரத்துப் படகுத் துறைக்கே சென்று சீடனை எதிர்கொண் டழைத்தார் குரு. அவருடைய முகத்தைத் தொட்டார். வேதத்திலிருந்து பரமபாவனமான மந்திரங்களை மொழிந்தபடி சமாதி நிலை அடைந்தார்.

* * *

வேத மந்திரங்களை மொழிந்தபடி கார்த்திகேயனின் மூவிரு சிரங்களையும் பரமேசுவரன் மோந்து பார்த்ததாக 'ஸுப்ரம் மண்ய புஜங்கம்' என்ற உத்தமமான துதியில் வரும். உமை தனது கோமள விரல்களால் குமாரஸ்வாமிக்குத் திலகம் இடுவதாக

Koviloor Digital Library

ஜைமினி மகரிஷி பாடுகிறார். ஸ்ரீராமகிருஷ்ணர் நரேந்திரரிடம் அன்பைப் பொழிந்த நிகழ்ச்சிகளைப் படிக்கும்போது ஈசுவரன் — அல்லது அம்பிகை (இருவரும் ஒன்றுதானே ?) ஆறுமுகனிடம் அருமை பாராட்டியதுதான் நினைவில் வருகிறது. 'வயதான வர்கள் ஓர் இளம் பிள்ளைக்காக இப்படி உருகினால் யாராவது என்ன நினைப்பார்கள்?' என்று கேட்டார் பரமஹம்ஸர். வேறெதும் நினைக்காமல் ஜகன்மாதா ஷண்முகனிடம் கொஞ்சி விளையாடுவதைத்தான் எண்ண வேண்டும். 'நீங்கள் எனக்குச் சொந்தமானவர்கள்; மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்?' என்று கேட்டார் முனிவர். அந்த மற்றவர்களாகிய நாமும் புனித உள்ளத்தோடு இந்த பாந்தவ்யத்தைக் கண்டால், 'மற்றவர் களாக' இல்லாமல் ஸ்ரீராமகிருஷ்ணருக்குச் சொந்தமானவர் களாக ஆகலாம்.

* * *

குருநாதரிடம் ஐந்தாண்டுகள் அப்பியாசம் பெற்ற நரேந் திரர் சாதாரணமாக வாரம் இருமுறை தக்ஷிணேசுவரத்துக்கு வருவார் எனினும் வீட்டுக் கஷ்டங்கள் மலை மலையாக வந்த கடைசி ஆண்டுகளில் நீண்ட இடைவெளிகளிலேயே பரமஹம்ஸ ரிடம் வர முடிந்தது. இச்சமயங்களில் ஸ்ரீராமகிருஷ்ணர் தம் மைத் தாமே தேற்றிக்கொள்வதும் உண்டு. ''நரேன் வராம லிருப்பதே நல்லதுதான். ஏனென்றால் அவனைப் பார்த்தால் எனக்கு உணர்ச்சிகள் கொந்தளிக்கத் தொடங்கி விடுகின்றன. அவனுடைய வருகை இங்கே ஏக ரகளையை உண்டாக்கி விடு கிறது'' என்பார்.

* * *

ஒரு சமயம் ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்லியனுப்பியும் நரேந்திர ரால் தக்ஷிணேசுவரத்துக்கு வரமுடியவில்லை. 'இங்கு நம் இல்லங் கள் தோறும் எழுந்தருளி,' என்றும் 'தானே வந்தெம்மைத் தலையளித் தாட் கொண்டருளி' என்றும் இறைவனைக் குறித்து மணிவாசகர் பாடுவதுபோலப் பரமஹம்ஸரே சிஷ்யரைத் தேடிக் கொண்டு புறப்பட்டுவிட்டார். கல்கத்தாவில் பிரம்ம சமாஜத் தினர் சந்தியா ஆராதனை நிகழ்த்தும் இடத்துக்கு வந்து விட்டார் தக்ஷிணேசுவரத்துத் தபஸ்வி. பாதி சுய உணர்வும், பாதி அவசர மாகவும் ஸ்ரீராமகிருஷ்ணர் அங்கு பிரவேசித்தவுடன் பிரசங்கம் புரிந்து கொண்டிருந்தவர் சட்டென்று நிறுத்திக் கொண்டார். கூட்டத்தினர் இனம் விளங்காமல் பரமஹம்ஸரின் விசித்திர நிலை யையே நோக்கலானார்கள். அவரோ தம்மால் நேர்ந்த குழப்

Koviloor Digital Library

பத்தைச் சிறிதும் கவனியாமல் மேடையை நோக்கிச் சென்று சமாதியில் ஆழ்ந்தார். குழப்பம் அதிகமாயிற்று. ஸ்ரீராமகிருஷ்ணர் வேண்டுமென்றே வந்து இவ்வாறு செய்ததாகவும் சிலர் கருதினுர்கள். ஸ்ரீராமகிருஷ்ணரின் பரிசயம் காரணமாகக் கேசவ சந்திர சேனரும், விஜயரும் மூர்த்தி வழிபாட்டில் சிறிது நம்பிக்கை கொண்டு பிரம்ம சமாஜத்திலேயே ஒரு தனி வகுப்பை ஏற்படுத்தியிருந்ததால் சமாஜத்தினர் சிலருக்கு ஸ்ரீராமகிருஷ்ணரைக் குறித்து இப்படித் தகாததொரு சந்தேகம் எழுந்தது. அவர்கள் விளக்குகளை எல்லாம் அணைத்தனர். இதனுல் குழப்பம் குறைவதற்குப் பதில் அதிகமாயிற்று. நரேந்திரர் பரமஹம்ஸரைக் காக்க விரைந்தார். பின் வாயில் வழியாக அவரை வெளியேற்றிக் கொண்டு வந்து தக்ஷிணேசுவரத்தில் சேர்த்தார். தம்மைக் கண்டதால் தான் பரமஹம்ஸர் அப்படி விசித்திரமாக நடந்துகொண்டார் என்பது நரேந்திரருக்குத் தெரியும். பரவசமுற்றதற்காகப் பரமஹம்ஸரை மிகவும் கடிந்து கொண்டார் நரேந்திரர். அவரோ அதைப் பொருட்படுத்தவே இல்லை. பொருட்படுத்தினுல்தான் என்ன பயன் இருந்திருக்கப்போகிறது? ஸ்ரீராமகிருஷ்ணர் தன் நினைவு இழந்தது தாமே செய்த காரியமா, என்ன? தம்மையும் மீறி அல்லவா அவர் சமாதி நிலை உற்ருர்?

* * *

சுவாமி விவேகானந்தர் சொல்வார்: ''அவருக்கு என்னிடமிருந்த கண்மூடித்தனமான அன்புக்காக அவரை நான் கடும் சொற்களால் கண்டிக்கத் தயங்கவில்லை. இப்படி அவர் செய்து வந்தால் என் நிலைக்கே அவரும் வந்து விடுவார் என்று நான் எச்சரிப்பேன். பரத மகாராஜன் தம்முடைய செல்ல மானிடம் வைத்த பிரியம் காரணமாகச் சாகும் தறுவாயில் அதையே நினைந்திருந்ததால் மறுபிறவியில் மானுகப் பிறந்தார் என்று பழைய கதை உண்டல்லவா? அதை நான் அவருக்கு நினைவூட்டினேன். இதைக் கேட்ட குருநாதர் — அவர்தான் எவ்வளவு எளியவராக இருந்தார்? — மிகவும் கலவரமடைந்து விட்டார். 'நீ சொல்வது ரொம்பவும் நிஜம். உன்பிரிவைத் தாங்க முடியாத எனக்கு என்ன நேரிட்டு விடுமோ?' என்று கேட்டார். மனது தளர்ந்து போய் சோக மயமாகக் காளி மாதாவின் சந்நிதிக்கு விரைந்தார். சில நிமிஷங்களுக்குப் பின் அவர் திரும்பியபோது அவர் முகத்தில் புன்னகை பூத்திருந்தது. 'அயோக்கியப் பயலே! இனி உன் பேச்சைக் கேட்கிறேனு, பார்! அம்மா என்ன சொல்கிருள் தெரியுமா? நான் உன்னிடம் ஈசுவரனைக் காண்பதால்தான் இவ்வளவு அன்பு வைத்திருக்கிறேனும். உன்னிடம் ஈசுவரனைக் காண

Koviloor Digital Library

முடியாத ஒரு நாள் வருமானால் அதன் பின் உன்னைக் கண்ணால் காண்பதைக்கூட என்னால் தாங்க முடியாதாம்' என்றார். இந்தச் சிறிய, ஆனால் அழுத்தம் திருத்தமான பேச்சால் நான் அவரிடம் இத்தனை நாட்களாகச் சொல்லியிருந்த அத்தனையையும் பொரு ளற்ற தாக்கிவிட்டார்.''

* * *

'எப் பொருள் எத்தன்மைத் தாயினும் அப் பொருளை மெய்ப் பொருளாகவே' கண்டவர்தான் பரமஹம்ஸர். இருந்த போதிலும் அந்த மெய்ப்பொருளும் அஞ்ஞான மயமான ஜீவர் களாகத் தோன்றி, அந்த அஞ்ஞானம் காரணமாகப் பிறந்து அழியாமல், கர்மவினை பற்றாத அவதாரங்களாகத் தோன்றுவதுண் டல்லவா? இப்படித் தோன்றியவரே நரேந்திரர், கர்மத்துக்கு உட்பட்ட மற்ற ஜீவர்களைப் போலல்ல அவர் என்பதே அம்பிகை அவருக்குக் கூறியிருந்ததில் பொதிந்துள்ள உண்மையாகும்.

* * *

பிரதாப சந்திர ஹஸ்ரா என்பவர் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் கேட்டார்: ''இப்படி உங்கள் சீடப்பிள்ளைகளைப் பற்றியே விசாரப்பட்டுக் கொண்டிருந்தால் பகவானை எப்போது நினைப் பீர்கள்?'' என்று. அப்போது ஸ்ரீராமகிருஷ்ணர் மிகவும் கிலே சம் அடைந்தார். ''ஹஸ்ரா இப்படிக் கேட்கிறாரே, இதெற் கென்ன விடை?'' என்று தேவியைக் கேட்டார். உடனே அன்னை தானே எல்லா உருவங்களிலும் இலங்குவதை அவருக்கு ஸ்பஷ்டமாக உணர்த்தியருளினாள். எல்லா உருவங்களிலும் உறைந்தாலும் நரேந்திரன் போன்ற தூய உள்ளத்தினரில்தான் விளக்கமுறப் பொலிவதாகவும் அவருக்கு உணர்த்தியருளினாள். அதை அறிந்தவுடன் பரமஹம்ஸருக்கு ஹஸ்ரா மீது கோபம்கூட வந்து விட்டது. 'மடையன், என் மனசை எப்படித் தத்தளிக்க வைத்துவிட்டான்!' என்ற எண்ணம் எழுந்தது. உடனேயே, 'அவனை ஏன் பழிக்கவேண்டும்? அவனுக்கெப்படி இதெல்லாம் தெரிய முடியும்?' என்ற தயையும் உண்டாயிற்று.

தமது சிஷ்யப் பிள்ளைகளைப் பற்றி குருமஹராஜ் கூறுவார்: ''இந்தப் பிள்ளைகளை நான் உடல் தரித்து வந்த நாராயணனாகவே கருதுகிறேன். நரேனை நான் முதல் முறை கண்டபோதே அவன் தேகப் பிரக்ஞை இல்லாதவன் என்று புரிந்து கொண்டேன். அவனது இதயப் பிரதேசத்தை நான் ஸ்பரிசித்தவுடனேயே அவன் புற உணர்வுகளை இழந்து விட்டான். அவனை மீண்டும் மீண்டும் காணவேண்டும் என்ற தீவிரமான ஏக்கம் என்னிடம் படிப்படியாக

Koviloor Digital Library

ஏற்பட்டது; என் இதயத்தை நோவால் நிரப்பியது. (காளி மாதா ஆலய அதிகாரியான) போலா நாதரிடம் இதுபற்றிக் கேட்டேன்: ''நான் ஏன் இப்படியெல்லாம் உணர்ச்சிகள் அடைகிறேன்? அதுவும் காயஸ்தர் குலப்பிள்ளை ஒருவனுக்காக?'' என்று வினவினேன். அதற்குப் போலாநாத், ''ஐயா, இதில் தவறேதும் இல்லை. சமாதி அநுபவம் கூடிய ஒருவரின் மனது சாதாரண மட்டத்துக்கு இறங்கி வரும்போது சத்வகுண சம்பன்னர்களாகவும், ஆன்மிக உணர்வு செறிந்தவர்களாகவும் உள்ள மக்களின் சங்கத்திலேயே களிப்படைகிறது என்று மகாபாரதத்தில் விளக்கப்படுகிறது.'' என்ருர். இது எனக்கு ஆறுதல் அளித்தது.''

* * *

ஒரு நாள் நரேந்திரர் மாடியிலிருந்த தமது படிப்பறையில் நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார். 'நரேன், நரேன்' என்ற குரல் ஆர்வமும், ஆதுரமும்மிக அவர்களிடை பாய்ந்தது. எல்லாரும் எழுந்திருந்தார்கள். சில நாட்களாகத் தாம் தக்ஷிணேசுவரம் செல்லாததால் தம்மைத் தேடிக்கொண்டு வந்திருக்கும் குருநாதரைப் படியிறங்கிச் சென்று வரவேற்ருர் நரேந்திரர். குருநாதர் நயனங்களில் நீர் நிறைந்திருந்தது. ''இப்போதெல்லாம் ஏன் நரேன், நீ என்னைப் பார்க்க வருவதே இல்லை?'' என்று சின்னஞ்சிறு குழந்தை போல விசித்துக் கேட்டார் பரமஹம்ஸர். நரேந்திரருக்காகக் கொண்டுவந்திருந்த இனிப்பு வகைகளை அவருக்குத் தமது கரத்தாலேயே ஊட்டினுர். ''வா, நரேன், வா! வந்து உன் பாட்டுக்களைப் பாடிக் காண்பி'' என்று கூறி மாடியறைக்குச் சென்ருர்.

நரேந்திரர் தம்பூராவை மீட்டலானுர் 'ரீம் க்லீம்' என்ற தம்பூராவின் நாதமே தேவியின் பீஜாக்ஷரங்களாக ஒலிக்கலாயின. தேவியைக் குறித்த ஒரு பாடலை உள்ளம் உருகப் பாடலானுர் நரேந்திரர். என்ன விந்தை! கண்களால் தேவியின் பிரதிமையைக் காணும்போதும், காதுகளால் அவளது மகிமையைக் கேட்கும்போதும் சகுணப் பிரம்மம் உண்டா என்று ஐயப்பாடுற்ற நரேந்திரரும் இசை என்று வந்தவுடன் தானுகவே தாயிடம் கசியத் தொடங்கினுர்! இசை என்பது பாடகர் கேட்பவர்களுக்கு எதனையோ புலப்படுத்துவதன்று. பாடகரின் ஆத்மாவே அவருக்கு அற்புத உண்மைகளைப் புலப்படுத்துவதுதான் இசை.

எல்லாரும் மெய்யுருகக் கேட்டுக்கொண்டிருந்தார்களெனில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணருக்குக் கேட்பானேன்? சங்கீதமே அவருக்குச் சமாதி அநுபவத்தை அளித்துவிட்டது!

Koviloor Digital Library

ஏணிவழியே ஏறிச்சென்று அடையக்கூடிய மச்சு அறையில் நரேந்திரரும் அவரது ஒரு நண்பருமாகப் படித்துக் கொண்டிருந்தனர். அன்றும் சீடரைத் தேடிக்கொண்டு அவரது இல்லத்துக்கு எழுந்தருளி விட்டார் குருமஹராஜ். அவருக்கு எப்போதும் குற்றேவல் செய்யும் லாடு என்பாரும் உடன் வந்திருந்தார். பரமஹம்ஸர் ஏணியில் சில படிகள் ஏறியபோதே, மேலே கதவைத் திறந்த நரேந்திரன் முகம் தெரிந்தது. 'என் அன்பான நரேன்!' என்று கூவிய ஸ்ரீராமகிருஷ்ணர் தன்வயமிழந்து விட்டார். லாடுவும், நரேந்திரரும் ஒருவாறாக அவரைத் தாங்கிப் பிடித்து மேலே கொண்டுவந்து விட்டனர். மேலே வந்ததும் பரிபூரண சமாதியில் ஆழ்ந்துவிட்டார் பரமஹம்ஸர். சமாதி, பரவசம் — இவையெல்லாம் என்னவென்றுகூட அறிந்திராத நரேந்திரரின் நண்பருக்கு ஒரே திகைப்பாகி விட்டது.

''யார் இவர்?'' என்று நரேந்திரரைக் கேட்டார் அவர்.

''யாராயிருந்தாலென்ன, அதைப் பொருட்படுத்தாதே'' என்று கூறிய நரேன், ''இந்த மனிதர் ஒரு இடியட். சரி, நீ வீட்டுக்குப் போ'' என்று அந்த நண்பரிடம் கூறினார்.

சிறிது போது சென்றபின் ஸ்ரீராமகிருஷ்ணருக்கு இக உலகப் பிரக்ஞை வந்தது. அப்போதுதான் அப்பாவியான லாடுவுக்கும் நரேந்திரர் கூறியது நினைவு வந்தது.

''இடியட் என்றால் என்ன?'' என்று அவர் கபடமில்லாமல் கேட்டார்.

தாம் சற்றுமுன் கூறியது நினைவில்லாத நரேந்திரர் ''இடியட் என்றால் முட்டாள் என்று அர்த்தம்'' என விளங்க வைத்தார்.

லாடுவுக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது.

''குருமஹராஜை எப்படி ஐயா, இடியட் என்பீர்?'' என்று நரேந்திரரிடம் சண்டைக்குக் கிளம்பினார் அவர்.

நரேந்திரர் அவரைச் சமாதானப் படுத்தினார். ''என் நண்பனுக்கு 'சமாதி' 'கிமாதி' யெல்லாம் விளங்கி வைக்க முடியாத விஷயம். அவனிடம் உண்மையைச் சொன்னால் எத்தனையோ விவரிக்க நேரிடும். இவரோ தன் வயமிழந்திருக்கிறார். ஆகவே அவன் எப்படியோ வீடுபோய்ச் சேர்ந்தால் போதும் என்றுதான் ஒரே வார்த்தையில் அப்படிச் சொன்னேன்'' என்றார் நரேந்திரர்.

* * *

பித்தன் என்று தம்மைச் சுந்தரமூர்த்தி தூஷித்ததையே பூஷித்ததாகக் கருதிய பெருமான், 'பித்தா பிறை சூடி' என்று அவர் தம்மைப் பாடச் செய்தான். ஸ்ரீராமகிருஷ்ணரும் தம்மைப்

Koviloor Digital Library

பித்தராகக் கருதிய நரேந்திரனைத்தான் 'தம்பிரான் தோழ ராகச்' செய்து கொண்டார்.

*　　　*　　　*

நரேந்திரர் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பற்றிப் பேசும்போது 'அந்தக் கிழவர்' என்று குறிப்பிடுவதுண்டு. உண்மையில்ஸ்ரீராம கிருஷ்ணர் மனித உடலில் வாழ்ந்ததே ஐம்பதாண்டுகள்தான் எனினும் காயக்கிலேசம் காரணமாகக் கிழவராகவே தோற்ற மளித்தார். 'பித்தராயினும் அவர் சுத்தர்; கிழவராயினும் பச் சைப் பசும் குழந்தை' என்றறிந்து அவருடைய குழந்தையானர் நரேந்திரர் 'கொண்டு வளர்க்க, குழவியாய்தான் வளர்ந்தது' என்ற ஆழ்வாரின் அருள்மொழிபோல.

''அன்பை உலகத்து மாந்தர்கள் எங்கே கண்டபடி? அவர் களுக்கு அன்பை ஒரு பெரிய காட்சியாக அரங்கேற்றத்தான் தெரியும். குருமஹராஜ் ஒருவர்தாம் உண்மையாக அன்பு செய் பவர்'' என்று நரேந்திரர் கூறியதுண்டு.

இந்த அன்பை அறிந்தே அவரிடம் மிகவும் ஸ்வாதீனமாகப் பழகினர் நரேந்திரர். தமக்குத் தாயாக இருக்கும் பரமஹம் ஸரைக் குழந்தையாக்கிவிடும் காளிமாதாவைப் பற்றிக்கூட அவர் பரமஹம்ஸரிடமே பரிகசிப்பார்.

''என் அன்னையான காளியை ஏற்காத நீ எதற்காக இங்கே வருகிறாய்?'' என்று ஒரு நாள் நரேந்திரரைக் கேட்டுவிட்டார் ஸ்ரீராமகிருஷ்ணர்.

''பேஷ்! இங்கே நான் வருகிறேன் என்ருல் அவளை நான் ஒப்புக்கொள்ள வேண்டுமா, என்ன? நான் இங்கே வருவதற்குக் காரணம்......... உங்கள்மேல் எனக்கு அன்பு இருப்பதுதான்'' என்று தன் இதயத்தில் ஊறும் அமுதத்தை வார்த்தையில் வெளி யிட்டார் நரேந்திரர்.

''ரொம்ப சரி, இன்னும் கொஞ்ச நாளிலேயே நீ அவளை ஏற்கப் போகிருய்; ஏற்பதுமட்டுமல்ல; அவள் பெயரைச் சொன்னலே கதறி அழப் போகிருய்'' என்ருர் முக்காலமும் உணர்ந்த முனிவர்.

மற்றச் சிடர்களை நோக்கிப் பரமஹம்ஸர் கூறுவார்: ''பரம் பொருளின் உருவங்களில் இந்தப் பிள்ளைக்கு நம்பிக்கை இல்லை. அது என் கற்பிதத் தோற்றமே என்கிருன். பிரத்தியக்ஷமாக நிருபணமானல் ஒழிய இவன் எதையும் ஒப்புக்கொள்ள மாட் டான். நிறையப் படித்தவன் இவன் — நன்ருகப் பாகுபாடு செய்து பார்க்கும் திறமையை வளர்த்துக் கொண்டிருக்கிருன். இந்தப் பையனுக்கு நன்ருகச் சீர்தூக்கிப் பார்த்து முடிவுகட்டும் ஆற்றல் உண்டு.''

Koviloor Digital Library

பாகுபாடு செய்து சரியான முடிவுக்கு வருவதுதான் விவேகம் எனப்படும். ஆத்மாவுக்கு உகந்தது எது, உகாதது எது என்று இப்படிப் பகுத்துப் பார்த்து, கொள்ளவேண்டியதைக் கொண்டும், தள்ள வேண்டியதைத் தள்ளியுமே ஜீவ பிரம்ம ஐக்கியம் என்ற சாதனையில் முதற்படி வைக்கிறான் சாதகன் — ஆதி சங்கரர் வகுத்துள்ள நான்கு படிகளில் விவேகமே முதலாவது. இந்த விவேகம் தம்மிடம் இருப்பதாகக் குருநாதன் குறிப்பாகச் சொன்னதை நினைந்தே பிற்காலத்தில் நரேந்திரர் விவேகானந்தர் என்று நாமம் தரித்தார் போலும்!

* * *

ஒவ்வொருவரையும் அவரது மனச் சார்புகளுக்கேற்ற ஒவ்வொரு வழியில் அழைத்துச் செல்லுவதில் மிகவும் தேர்ந்தவர் ஸ்ரீராமகிருஷ்ண முனிவர். பாரதம் தந்த மாமுனிவர்கள் எல்லாரிடமுமே இந்தப் பரந்த மயப்பான்மையைக் காணலாம். வேத — உபநிஷத காலத்திலிருந்து, பிறகு ஸ்ரீமத் பகவத் கீதையிலும், அதன்பின் ஆசாரிய சங்கரரின் நூல்களிலும் பற்பல துறைகளில் நாட்டமுள்ளவர்களுக்கேற்ப கர்மம், பக்தி, ஞானம் மூன்று மார்க்கங்களையும் வகுத்தும் அவற்றில் ஒன்றோடொன்றை இணைத்தும், எல்லாவற்றையுமே இசைத்தும் சத்திய சாக்ஷாத்காரத்துக்கு இட்டுச் செல்லும் பான்மையைக் காண்கிறோம். ஒவ்வொரு வியாதிக்கு ஒவ்வொரு மருந்து உள்ளது. ஒரு நோவுக்கு ஔஷதமாக இருப்பது இன்னொரு நோவுக்கு விஷமாகிறது. இதேபோல உள்ளத்தில் ஒவ்வொரு விதமான ஊனமுள்ளவர்களையும் வெவ்வேறு மார்க்கங்களைக் கொண்டே ஞானமுள்ளவர்களாக்க முடியும். இதனைச் சமீப காலத்தில் நிருபித்தவர் தக்ஷிணேசுவரத்துத் தவ முனிவர். அவர் எல்லாப் பாட்டைகளிலும் சென்று மெய்ப் பொருளை நுகர்ந்தவர். அதைவிட விசேஷம் இயல்பாகவே எடுத்த எடுப்பில் லக்ஷியத்தை அடைந்துவிட்டு அதன்பின் அவ்விடத்தில் வந்து கூடும் எல்லாப் பாட்டைகளையும் கண்டவர். அநுபவங்களை முதலில் பெற்றுவிட்டுப் பிறகு அந்த அநுபவங்களுக்கு வழி சொல்லும் சாஸ்திரங்களால் அதனை உறுதிப்படுத்திய ஸ்ரீராமகிருஷ்ணர், உண்மையில் தமது அநுபவங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவில்லை; அந்த அநுபவத்துக்கு வழி வகுக்கும் சாஸ்திரங்களின் உண்மையே உறுதிப் படுத்தினார். இது சமய சரித்திரத்தில் கண்டிராத அற்புதம். பக்தியும் ஞானமும் சேர்ந்து குழைந்த ஆனந்தமென்ற திரட்டுப்பாலின் ருசியைத் தாமாகவே உணர்ந்தவர் அவர். உணர்ந்த பின்பு அந்த ஆனந்தத்தில் பக்தி என்ற பாலும், ஞானம் என்ற கன்னலும் கலந்

Koviloor Digital Library

திருக்கிறது என்றும், அவையிரண்டையும் கூட்டினால் திரட்டுப் பால் கிடைக்கும் என்பதையும் உறுதிப் படுத்தினார்.

உருவ வழிபாட்டில் சிலருக்கு மனம் செல்லும்; அறிவால் மெய்ப் பொருளை விளங்கிக் கொள்வதில் சிலர் மனம் செல்லும்; இரண்டுமின்றி நற்காரியங்களைஉலகுக்குச் செய்தாலே ஆண்டவனை அடையலாம் என்று கருதுவோரும் உண்டு. செயலில் நாட்ட முடையவர்கள் அச்செயலையே பக்தியுடன் ஈசுவரார்ப்பணமாகச் செய்யவும், ஈச சேவை என்ற பக்தியிலேயே விருப்பமுள்ளவர்கள் மக்களை எல்லாம் நாராயணனைக் கண்டு பொதுத் தொண்டு புரியவும் செய்த அற்புத ஸ்தாபனம் பரமஹம்ஸர். இதன் முடிவில் ஞானமயமான பரம்பொருளுடன் ஒன்றியிருக்க முடியும் என்பதையும் எடுத்துக் காட்டியவர் அவர். மானஸிகமாக அவர் செய்த இந்த பக்தி — ஞான — கர்ம ஐக்கியத்தையே ஸ்தூல மாகச் செய்வித்தவர் சுவாமி விவேகானந்தர். இந்த ஐக்கியத் தின் உருவகங்களாகவே இன்று உலகெங்கிலுமுள்ள ஸ்ரீராம கிருஷ்ண மடங்கள் திகழ்கின்றன.

* * *

எங்கிருந்தோ, எங்கோ வந்து விட்டோமே!

இன்னும் நரேந்திரரே விவேகானந்தர் ஆகவில்லையே! அதன் பின் அல்லவா மடஸ்தாபனம்!

நரேந்திரர் நரேந்திரராக இருந்த நாட்களுக்கே செல்வோம்.

நரனுக்கு முக்கியம் பகுத்தறிவு. (Rational animal) என்பதாகத்தானே மனிதனை விலங்கினங்களிடமிருந்து பிரித்துப் பேசும்போது கூறுகிறார்கள்? இந்தப் பகுத்தறிவுக்கே முக்கியத் துவம் அளித்தவன் நரேந்திரன்.

ஆனால் பரமஹம்ஸரின் எல்லாச் சீடர்களும் அப்படியில்லை. உணர்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டு பக்தி செய்வதில் நாட்டம் கொண்டவர்கள் பலர் அவர்களில் இருந்தார்கள். பிற்காலத்தில் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் முதல் தலைவராக, பிரம்மாநந்தா என்ற திருநாமத்தில் துலங்கப்போகும் மகா புருஷரும் ஆரம்ப நாட்களில் உணர்ச்சிமூலம் இறைவனைக் காணும் வழிக்குத்தான் பக்குவப்பட்டிருந்தார். அப்போது அவருக்கு ராகால் சந்திர கோஷ் என்று பெயர்.

ராகால் போன்றவர்களையும், நரேந்திரர் போன்றவர்களையும் தனித்தனி வழிகளில் அழைத்துச் சென்றார் ஸ்ரீராமகிருஷ்ணர்.

நரேந்திரர் தமது இளமைத் துடிப்பில் மற்றவர்களையும் தம் வழிக்கே திருப்ப முயன்றார். உருவ வழிபாட்டில் நம்பிக்கை கொண்டிருந்த ராகாலை குணங்கள் மட்டும் பொருந்திய, ஆனால்

Koviloor Digital Library

உருவமற்ற, கடவுளைத் தொழும் பிரம்ம சமாஜத்தில் சேருமாறு தூண்டினார் நரேன். எனினும் ராகாலால் பவதாரிணி அன்னை யைக்காணும்போது அவள் முன்பு தண்டனிட்டெழாமல் இருக்க முடியவில்லை. இயல்பாகவே பக்தி மணம் கமழும் அவரது மன மலர் குருநாதரின் சந்நிதியில் தன்னையுமறியாமல் மட லவிழத்தான் செய்தது. ராகால் மூர்த்தி வழிபாடு செய்வதைக் கண்டுவிட்ட நரேந்திரர் அவரைக் கண்டிக்கலானார். ராகால் கோபமறியாத இனிய ஜீவன். எனவே அவர் நரேந்திரரிடம் வாதம் புரியவில்லை; அவரிடமிருந்து பதமாக விலகினார்.

பரமஹம்ஸருக்கு இது எப்படியோ தெரிந்து விட்டது. நரேந்திரரை அழைத்து அவரிடம், ''ராகாலை அச்சுறுத்தாதே! அவன் உன்னிடம் பயந்து கிடக்கிறான். உருவங்கள் தரித்துத் தோன்றும் பரம்பொருளிடம் அவன் நம்பிக்கை கொண்டிருக் கிறான். அவனை நீ எப்படி மாற்ற முடியும்? ஆண்டவனின் உருவமற்ற நிலையை ஆரம்ப காலத்திலேயே உணர்வது எல்லா ருக்கும் சாத்தியமன்று'' என்றார். அதன்பின் நரேந்திரர் ராகா லின் மத உணர்வுகளை மாற்ற முயலவில்லை.

எனினும் அவ்வப்போது நரேந்திரருக்குத் தம் ஒருவரின் கோணமே சரியானது என்ற அபிமானம் உண்டாகிவிடும். அப்போதெல்லாம் ஸ்ரீராமகிருஷ்ண தேவர் அவரைக் கண்டிக்கத் தவறியதில்லை. ''என் பிள்ளாய், சத்தியத்தை எல்லாக் கோணத்திலிருந்தும் பார்க்க முயல்வாயாக'' என்று அடிக்கடி அவர் கூறுவார். அந்த நாளும் வரத்தான் போகிறது!

தம் மனதிற்குச் சரி என்று தோன்றாததை எடுத்துரைக்க நரேந்திரர் தயங்கியதே கிடையாது. ராதா—கிருஷ்ண சரிதம் நரேந்திரருக்கு ஏற்கவில்லை. சரித்திரப் பூர்வமானதல்ல அது என்பது அவரது கருத்து. அதோடு கிருஷ்ணனுக்கும் ராதைக்கு மிடையே இருந்த தொடர்பு நெறி தவறியது, ஆக்ஷேபகரமானது என்றும் அவர் எண்ணினார். பரமஹம்ஸரிடமும் தம் உள்ளத்தில் பட்டதைக் கள்ளமில்லாமல் சொல்லி வந்தார். பரமஹம்ஸரால் எத்தனை முயன்றும் நரேந்திரரிடம் நம்பிக்கை உண்டாக்க முடிய வில்லை. எனவே ஒரு நாள் அவர் சொன்னார்: ''சரி, ராதை என்று ஒருத்தி வாஸ்தவத்தில் இல்லை என்று வைத்துக் கொள். யாரோ ஒரு பக்தர் புனைந்த கற்பனையே ராதா—கிருஷ்ண சரிதம் என்று வைத்துக்கொள். ஆனால் நீ ஏன் ராதையைப்பற்றி எண்ண வேண்டும்? நீ ஏன் உன் மனதை ராதையும், மற்ற கோபிகை களும் கண்ணன்மீது கொண்ட எல்லையற்ற அன்பில் செலுத்தக் கூடாது? வெளிப்படத் தோன்றுவதற்கு ஏன் முக்கியத்துவம்

Koviloor Digital Library

தருகிருய்? அது மானுஷ்யமாகவே இருக்கலாம். ஆனால் ஆண் டவனைக் காணவேண்டும் என்ற ஆர்வமும், தரிசனமும் தெய்வீக மானவையல்லவா ?''

நரேன் 'அடங்காப் பிடாரி' யாக இருப்பதில் ஸ்ரீராம கிருஷ்ணருக்கு உள்ளூற ஒரு திருப்தி. புத்தி பூர்வமாக உழைத்து உழைத்துப் பாடுபட்டு, உண்மையாகத் தோன்றும் ஐயங்களை விளங்கிக் கொள்வதும் ஞானத்துக்கு உதவும் என்று அவர் கருதினர். ஐயம் ஏற்படாமலே, மனது ஒன்றை ஏற்றுக் கொண்ட தானல் ரொம்பசரி; ஆனல் ஐயம் தோன்றிவிட்டால் அதை மூடி மறைப்பது தவறல்லவா? தூய உள்ளத்தினரான நரேந்திரர் அந்தரங்க சுத்தத்தோடு தம் சங்கைகளைத் தெரிவிப்பதில் பரமஹம்ஸர் மகிழ்ச்சியே அடைந்தார். அதோடு இன்றைக்கு நரேந்திரரிடம் இப்படியெல்லாம் எதிர்மறைக் கருத்துக்கள் தோன்றி அவற்றை அவர் தீர்த்துக் கொள்வதால்தான் நாளைக்கு இதே போன்ற 'கூடாரை வெல்லும் சீர்' அவருக்கு ஏற்படும் என்றும் குருமஹராஜ் கருதினர். எவ்வளவு உண்மை! முன்பே பலமுறை கூறியதைத்தான் மீண்டும் கூற வேண்டியிருக்கிறது. இதைப் படிப்பவர்களுக்கு ஏற்படக்கூடிய அத்தனை சந்தேகங் களும் நரேந்திரருக்குமே ஏற்பட்டன. இதைப் படிப்பவர்களை விடத் தீவிரமாக, ஆவேசமாகச் சந்தேகப்பட்டவர் அவர். அப் படிப்பட்ட அந்த ஐயங்களெல்லாம் நீங்கப்பெற்று ஹிந்து சமயத் துக்கு ஈடாக வேறென்று இல்லை என உறுதி பெற்ருர் என்பதே நம் கண்களையும் திறக்க உதவுகிறதல்லவா ?

பரமஹம்ஸருக்கும் சந்தேகங்கள் தோன்றிய காலம் இருந் தது. தமது ஆன்மீக அநுபவங்கள் உண்மைதானு என்றெல்லாம் அவர் ஐயம் கொண்டதுண்டு. ஆனல் இந்த ஐயம் அவருள் ளிருந்து எழுந்ததன்று. மற்றவர்கள் அவரைப் பித்தரென எண்ணியதாலேயே அவருக்கு இந்த ஐயம் எழுந்தது. அந்த ஐயத்துக்கான தீர்வை அவர் வெளியே தேடவில்லை. அம்பிகை இருப்பது உண்மையா, அவள் தன்னிடம் உரையாடுவது உண் மையா என்று ஐயம் எழுந்தால் அதையும் அந்த அம்பிகை யிடமேதான் கேட்பார். எனவே உள் இதயத்தில் தம்மையறி யாமலே அவர் நம்பிக்கை மயமாகத்தான் இருந்தார். பாரதத் தின் மகா முனிவர்கள் கண்ட அநுபவங்களுக்கெல்லாம் நிலைக் களனுக இருந்ததுபோலப் பாரதத்தின் மத நம்பிக்கைகளுக்கெல் லாமும் சின்னமாக விளங்கியவர் பரமஹம்ஸர். நம்பிக்கை யின்மைக்கு ஒரு சின்னமாக இருந்த நரேந்திரர் இவரை அடைந்து, காந்தத்தைப்பற்றிய இரும்பும் காந்த சக்தி பெறுவதுபோலக் குருநாதரிடமிருந்து நம்பிக்கை பெற்ருர்.

Koviloor Digital Library

என்றாலும் சுவாமிஜி பிற்பாடும்கூட அடிக்கடி, 'புத்தகத்தில் இருக்கிறது, யாரோ சொன்னார்கள் என்றெல்லாம் எதையும் நம்பிவிடாதீர்கள்!' என்று அடிக்கடி மொழிந்திருக்கிறார். 'நம்முடைய அற்ப ஆயுளில் எல்லா அநுபவங்களையும் நாமே பெற்று அவற்றின் உண்மையை உணருவது இயலாத காரியமே அல்லவா? முனிபுங்கவர்களும், ஞானிகளும், பக்தர்களும் உண்மையைத்தான் கூறுவார்கள் என்று நம்பி அவர்கள் வாக்கை அப்படியே ஏற்பதில் என்ன தவறு?' என்ற எண்ணம் நமக்கு ஏற்படக்கூடும். இதற்கு விடை, சுவாமி விவேகானந்தர் தம்மைப் பொறுத்த மட்டில் எதையுமே அநுபவ பூர்வமாக உண்மையெனக்கண்டு அங்கிகரித்தவர்; சிறிதளவு நம்பிக்கையும் இல்லாதவர்கூட தாமே நமது மதம் உண்மை என்பதை அநுஷ்டானத்தின் மூலம் அறிந்து கொள்ளமுடியும் என்பதால் அவர் இப்படிக் கூறியிருக்க வேண்டும் என்பதுதான். இன்று நாஸ்திகம் பேசுபவர்கள் யாரேனும், ஆஸ்திக அநுஷ்டானங்களைக் கடைபிடித்துப் பார்க்கிறார்களோ? அவர்களுக்காகவேதான் சுவாமிஜி 'நீங்களே அநுஷ்டித்துப் பாருங்கள்; அநுபவ பூர்வமாகத் தப்பு என்று தெரிந்தால் விட்டு விடுங்கள்' என்று உபதேசிக்க எண்ணி அதனையே வேறு விதத்தில் 'அநுபவபூர்வமாகச் சரி என்று பட்டால் மட்டுமே ஏற்றுக் கொள்ளுங்கள்' என்று கூறியிருக்கலாம்!

மகான்களின் வார்த்தைகளுக்கு யார் முழுப்பொருளும் காண இயலும்? 'நரேந்திரரை யாராலும் பூரணமாகப் புரிந்து கொள்ள முடியாது' என்று பரமஹம்ஸரே கூறியபின் நாம் ஏன் இவ்விஷயத்தில் சிரமப்படவேண்டும்?

பரமஹம்ஸருக்கும் விவேகானந்தருக்கும் ஒரு மாறுபாடு; முன்னவருக்கு அநுபவங்கள் முதலில் கிட்டின; பிறகு அவற்றில் ஐயம் ஏற்பட்டது; அதன்பின் ஐயம் நீங்கிற்று. பின்னவருக்கோ முதலில் ஐயம் ஏற்பட்டது; பின்தான் அநுபவமே கிடைத்தது. அவ்வப்போது தொடக்க காலத்திலேயே குருதேவரின் ஸ்பரிசத்தால் சமாதி அநுபவம் கிடைத்தாலும் அப்போதைக்கப்போதே அந்த அநுபவத்தையும் சந்தேகித்தார் நரேந்திரர்.

* * *

நரேந்திரருடைய சந்தேகங்களுக்குப் பூரண சுதந்திரமளித்த பெருமனத்தவர் பரமஹம்ஸர். தம்மைக் குறித்தே நரேன் சந்தேகித்ததைக்கூட விரும்பி வரவேற்றார் அவர். அவரது தூய்மை காரணமாக அவர், ''ஒவ்வொரு காசையும் செல்லுமா செல்லாதா என்று பார்ப்பதுபோல் என் ஒவ்வொரு சொல்லையும்

Koviloor Digital Library

செயலையும் சோதித்துப் பாருங்கள்'' என்று கூறினாரெனில், விவேகானந்தரோ தமது துணிவு காரணமாக அவ்விதமே அவரைச் சோதித்தார்.

இந்தத் தூய்மைக்கும் துணிவுக்கும் இதோ ஓர் உதாரணம்:

ஒரு நாள் ஸ்ரீராமகிருஷ்ணர் கல்கத்தாவுக்குச் சென்றிருந்த போது நரேந்திரர் தக்ஷிணேசுவரத்துக்கு வந்திருந்தார். குரு நாதர் சொல்லியிருந்த ஒன்று அவருக்கு நினைவு வந்தது. 'பொன்னையும் பொருளையும் என்னால் ஏற்க இயலாது. என்னுடைய உடலம் செல்வத்தைத் தொட்டால் தாங்காது துடிக்கும்' என்று ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியதுண்டு. இது உண்மைதானா என்று பரிசோதிக்கத் தலைப்பட்டார் நரேந்திரர். ஸ்ரீராம கிருஷ்ணருடைய படுக்கையின் அடியே ஒரு நாணயத்தைவைத்தார்.

குருதேவர் திரும்பிவந்தவுடன் படுக்கையில் அமர்ந்தார். உடனே ஏதோ விஷஜந்து தீண்டியது போல அதிலிருந்து துள்ளிக் குதித்தார். நரேந்திரர் பேசாது நிற்க, பணியாள் ஒருவர் படுக்கையை உதறினார். நாணயம் உருண்டோடிற்று. நரேந்திரர் தலைகுனிந்து வெளியேறினார்.

'நரேந்திரன்தான் என்னைப் பரீக்ஷித்திருக்கிறான்' என்று கூறிக் களித்தார் முனிவர்.

* * *

பரமஹம்ஸரும் நரேந்திரரைப் பலமுறை பரிசோதித்த துண்டு. ஒரு நாள் அவர் நரேந்திரரின் உடல் முழுதையும் அணு அணுவாகச் சோதனையிட்டார். உடல், நடை, பேச்சு, சிரிப்பு இவற்றைக் கொண்டே ஒருவரின் உள்ளத்தைப் படிக்கத் தெரிந்திருந்தவர் பரமஹம்ஸர். அவர் நரேந்திரரின் தேகத்தைப் பரீக்ஷை செய்து பார்த்து, ''உன் உடல் அமைப்பு சரியாகவே இருக்கிறது. ஒரேகுறை என்ன வெனில் நீ உறங்கும் போது சற்றே 'புஸ்' 'புஸ்' என மூச்சு விடுகிறாய். இப்படி மூச்சு விடுபவர்கள் அல்பாயுள்காரராக இருப்பார்களென யோகிகள் சொல்லுகிறார்கள்'' என்றார்.

இன்னொருமுறை நரேந்திரருடைய கண்களைக் கூர்ந்து நோக்கிய குருதேவர், ''நீ ஒரு வறட்டு ஞானியில்லை என்பதைக் காட்டுகின்றன உன் கண்கள். ஆழ்ந்த அறிவோடு கோமளமான பக்தியும் உன்னிடம் கலந்திருக்கிறது'' என்றார்.

நரேந்திரரைக் காணாவிட்டால் பரமஹம்ஸர் என்ன பாடு பட்டார் என்பதை நாம் முன்பு கண்டோம். எனினும் ஒரு முறை அவர் நரேந்திரரை எப்படிப் பரிசோதனை செய்தார் பாருங்கள்:

Koviloor Digital Library

ஒரு நாள் நரேந்திரர் தக்ஷிணேசுவரத்துக்கு வந்தபோது அவரைக் கண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை பரமஹம்ஸர். நரேந்திரர் குருநாதரை வணங்கினர். அப்போதும் அலக்ஷிய மாகவே இருந்தார் குரு. அவர் பக்கலில் அமர்ந்தார் சிஷ்யர். அப்படி ஒருவர் அருகில் உட்கார்ந்திருப்பதைக் குருமஹராஜ் கவனித்ததாகவே தெரியவில்லை. அவர் ஏதோ தீர்க்கமாகச் சிந் தித்துக் கொண்டிருக்கிறுர் போலும் என்றெண்ணிய நரேந்திரர் அறைக்கு வெளியே வந்தார். ஹஸ்ராவுடன் பேசிக்கொண்டே புகைத்தார். அப்போது உள்ளே பரமஹம்ஸர் மற்றவர்களுடன் உரையாடிக் கொண்டிருப்பது கேட்டது. உடனே நரேந்திரர் ஆர்வத்துடன் அவரது திருமுன்னர் சென்ருர். என்ன ஆச்சரி யம்! இம்முறை ஸ்ரீராமகிருஷ்ணர் அலக்ஷியம் செய்தது மட்டு மில்லை. நரேந்திரருக்கு எதிர்ப்புறமாக சுவரை நோக்கி முகத் தைத் திருப்பிக் கொண்டுவிட்டார். ஏமாறிய நரேந்திரர் அங் கிருந்து புறப்பட்டார். அப்போதும் பரமஹம்ஸர் போக்கில் மாறுதலில்லை.

ஒரு வாரம் சென்றது. நரேந்திரர் மீண்டும் தக்ஷிணேசு வரத்துக்கு வந்தார். இன்னமும் ஸ்ரீராமகிருஷ்ணரின் அலக்ஷிய மனேபாவம் மாறவில்லை. அன்று முழுவதும் நரேந்திரர் மற்ற வர்களுடனேயே பொழுதைப் போக்கிவிட்டு மாலை மங்கியபின் தான் வீட்டுக்குக் கிளம்பினுர். 'வந்தாயா, போனுயா?' என்ற வார்த்தையே ஆசானிடமிருந்து வரவில்லை.

மூன்றும் முறையாக தக்ஷிணேசுவரத்துக்கு வந்தார் நரேந் திரர். நாலாம் முறையும் வந்தார். அவர் வராத இடைக் காலத்தில் ஸ்ரீராமகிருஷ்ணரும் நரேந்திரரின் சௌக்கியத்தைப் பற்றி கேட்டறிந்து வந்தார். எனினும் அவர் வந்தபோது ஏனே கல்லாகச் சமைந்திருந்தார் குருதேவர்.

இப்படியே ஒரு மாத மாகிவிட்டது. ஸ்ரீராமகிருஷ்ணர் அப்படியேதான் இருந்தார். நரேந்திரரும் முன்போலவே வந்து கொண்டு இருந்தார். குருநாதர் தம்மைப் புறக்கணிப்பதுபற்றி அவர் யாரிடமும் குறை கூறக்கூட இல்லை.

அதற்கு மேலும் பரமஹம்ஸரால் எப்படிப் பொறுக்க முடியும்? சிஷ்யரால் அவரது அலக்ஷியத்தை எவ்வளவு காலம் வேண்டுமானுலும் பொறுத்துக்கொள்ள முடிந்திருக்கும்; ஆனுல் பரமஹம்ஸராலேயே அந்த அலக்ஷியத்தை அதற்குமேல் தாங்க முடியவில்லை.

"நரேன், உன்னேடு நான் ஒரு வார்த்தைகூடப் பேசாம லிருக்கிறேன்; அப்படியும் நீ வந்து கொண்டிருக்கிறுயே! இது எப்படி" என்று சிஷ்யனைக் கேட்டே விட்டார் ஆசான்.

Koviloor Digital Library

''நீங்கள் பேசி நான் கேட்கவேண்டும் என்பதற்காக நான் இங்கே வருவதாகவா எண்ணுகிறீர்கள்? நான் அதற்காக வர வில்லே. எனக்கு உங்களிடம் அன்பு இருக்கிறது. அந்த அன் பினுல் உங்களேக் காண விரும்புகிறேன். அதற்காகவே நான் தக்ஷிணேசுவரத்துக்கு வருகிறேன் என்ருர்'' நரேந்திரர்.

அன்பு தனக்குப் பிரதியாக எதையும் எதிர்பாராது என்பது உண்மைதான். நரேந்திரரின் அன்பு அதற்குப் பிரதியாக குரு தேவரின் அன்பைக்கூட எதிர்பார்க்கவில்லே. 'உங்களுக்குத் தொழிலிங்கே அன்பு செய்தல் கண்டீர்' என்ற கவிவாக்குப்படி எதையும் எதிர்பாராது எவரிடமும் அன்பு செலுத்துவதே நம் கடமையாகக் கொள்ளவேண்டும் என்று முழங்கியவர் சுவாமி விவேகானந்தர். இந்து மதம் அத்தகைய அன்பு மதமே என்று நிரூபித்தவர் அவர்.

* * *

ஸ்ரீராமகிருஷ்ணர் நரேந்திரரை ஒதுக்கினுற் போலச் சோதனே செய்த இந்த நிகழ்ச்சியைப் படிக்கும்போது நமக்கே பரமஹம்ஸர் ஏன் இப்படியெல்லாம் செய்யவேண்டும் என்று அலுப்பும், ஓரளவு ஆத்திரமும்கூட உண்டாகும். நரேந்திரர்தான் விவேகானந்த ராஞர் என்பது நமக்கு நன்கு தெரிந்திருந்தும்கூட, எங்கே மானஸ் தரான அந்தக் காயஸ்த வாலிபர், 'ஸ்ரீராமகிருஷ்ணரும் ஆச்சு, தக்ஷிணேசுவரமும் ஆச்சு' என்று போய் விடுவாரோ என்ற ஆதங்கம் உண்டாகிறது. ஆனுல் அன்பின்முன் மானம் எங்கே? 'மானுபிமானம்' விட்டதல்லவா அன்பு?

கமார்ப்புகூர் கிராமத்தில் பிறந்து, எண்ணும் எழுத்தும் தெரியாமல் எளியரில் எளியராக வாழ்ந்த ஸ்ரீராமகிருஷ்ணரும், கல்கத்தா நகரில் பிறந்து, கல்வி கேள்விகளில் சிறந்த நரேந்திரரும் இவ்வாறு பரிசுத்தமான அன்பில் பரஸ்பரம் இணேந்தது நாம் செய்த பாக்கியம். அந்த அன்பை நினேந்து நினேந்து வழி படுவோம்!

* * *

இன்னெரு நாள் வேருெரு பெரும் சோதனே வைத்தார் பரமஹம்ஸர்.

தக்ஷிணேசுவரத்தில் 'பஞ்சவடி' என்ற தோட்டப்பகுதியில் தான் குருநாதர் தியானம் செய்வது வழக்கம். அமைதியின் முழுமை நிலவும் இடம் அது. அங்கு நரேந்திரரை அழைத்துச் சென்ருர் பரமஹம்ஸர்.

''நான் புரிந்துள்ள பல சாதனேகளின் விளேவாக என்னிடம் பல அமானுஷிகமான சக்திகள் கூடியுள்ளன. அம்பிகையின் அநு

Koviloor Digital Library

மதியுடன் அவற்றையெல்லாம் உனக்கு அளித்துவிடலாமென எண்ணியிருக்கிறேன். அவளுக்காக நீ தான் எவ்வளவோ காரியங்கள் செய்யவேண்டியிருக்கும் என்று அவள் எனக்குத் தெரிவித்திருக்கிறாள். எனவே உனக்கு இந்த சித்திகள் சமயத்தில் பெரும் உதவி அளிக்கக்கூடும். என்ன சொல்கிறாய்?'' என்று நரேந்திரரைக் கேட்டார் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

நரேந்திரருக்கே ஸ்ரீராமகிருஷ்ணர் இத்தகைய சத்திகள் பொருந்தியவர் என்பது தெரிந்த விஷயம்தான். இப்போது அவராகவே சொல்லிவிட்டார்.

நரேந்திரர் ஒரு க்ஷணகாலம் சிந்தித்தார். பிறகு, ''ஐயனே, இந்த சித்திகள் நான் பரம்பொருளை உணருவதற்கு உதவுமா ?'' என்று கேட்டார்.

''உதவாது! ஆனால் பரம்பொருளை நீ உணர்ந்த பிறகு பரம்பொருளுக்காகக் காரியம் செய்யும்போது அவை உதவும்'' என்றார் குருமஹராஜ்.

அதாவது நரேந்திரர் சுவானுபூதி பெற்றபின் வேதாந்தத்தைப் பிரசாரம் செய்ய சித்திகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதாகக் 'கோடி' காட்டினார் பரமஹம்ஸர்.

''அப்படியானால் நான் முதலில் கடவுளை உணரப் பாடுபடுகிறேன். அவரை உணருகிறேன். அதன் பின்புதான் எனக்கு எது வேண்டும், எது வேண்டாம் என்பதே தெரியக்கூடும். இப்போது நான் சித்திகளைப் பெற்றால் அவற்றை ஏதேனும் சுயநல நோக்கத்துக்காகப் பயன் படுத்தி நாச மடைவேன்'' என்று கலக்கமின்றிக் கூறிவிட்டார் நரேந்திரர்.

சோதனையில் தேறியே விட்டார்! ஸ்ரீராமகிருஷ்ணர் மகிழ்ந்தார்!

* * *

ஒருவரின் உள்புகுந்து அவர் தாமே தம்மைத் துலக்கிக் கொள்ளும் வகையில் ஞானப்பிரகாசம் செய்வதுதான் சிலாக்கியமானது. அபூர்வ சக்திகளைக் காட்டி ஒருவரை ஆகர்ஷிப்பதை மகான்கள் விரும்ப மாட்டார்கள். பிரகிருதி நியதி ஈசுவரனின் ஆக்ஞை. அதை மாற்றி அற்புதங்கள் நிகழ்த்துவதில் பெருமை இல்லை. எனினும் மக்களின் நன்மைக்காகவே பெரியோர்கள் எப்போதேனும் அதிசயத்தின் மூலம் அவர்களை நல்வழிப் படுத்தக்கூடும். அற்புதத்தின் மூலம் மட்டுமே எதையும் சாதிக்கலாம் என்றால் அது மனிதகுலம் இயல்பாகத் தன்னைத்தானே திருத்திக் கொள்ள இயலும் என்ற நம்பிக்கையையே பொய்யாக்குவதாகும். இதனை ஆசாரியர்கள் ஒருபோதும் செய்தது கிடையாது.

Koviloor Digital Library

பிறருக்கு ஞானமளிப்பதற்காக அற்புதம் செய்வது ஒரு புறம் இருக்கட்டும். இந்த அற்புத சக்தி இருப்பதால் அந்த சக்தி படைத்தவருக்கே அதனுல் நன்மை கிடையாது. ஞான விசாரத்தில் ஈடுபடுவதைவிடத் தமது சித்திகளை வெளிப்படுத்து வதிலேயே அவரது கவனம் சென்றுவிடும். அதுவும் ஞானசாதனை யில் ஈடுபட்ட புதிதில் சக்திகள் வந்து விட்டாலோ கேட்கவே வேண்டாம்! ஞானத்தில் எண்ணம் போகவே போகாது! இதனை உணர்ந்துதான் சித்திகள் வேண்டவே வேண்டாம் என்று உதறி விட்டார் நரேந்திரநாதர்.

'கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம், கரடி வெம் புலியின் வாயையும் கட்டலாம்' என்றெல்லாம் சித்திகளைப் பற்றிப் பாடிய தாயுமானவர் சிந்தையை அடக்கியே சும்மா விருப்பதுதான் இவற்றுக்கெல்லாம் மேலே என்ருர். நரேந்திரர் ஒருவிதத்தில் சிந்தையை அடக்கியிருந்ததால்தான் இந்த சித்தி களை வேண்டவே வேண்டாம் என்று உதறியது.

* * *

ஒவ்வொரு சிஷ்யரை ஒவ்வொரு விதத்தில் ஸ்ரீராமகிருஷ்ணர் உருவாக்கினுர் என்று முன்பே கண்டோம்; ஒவ்வொரு பயிருக்கு ஒவ்வொரு விதமான பூமியும், உரமும், மழையும், வெய்யிலும் தேவையாக இருப்பதுபோல ஒவ்வோர் உள்ளமும் வளர ஒவ் வொரு வழி உள்ளது என்று கண்டு அதன்படி தம் சிஷ்யர்களைப் 'பருவமதறிந்து தம் அருளான குளிகை கொடு பரிசித்து வேதி செய்த' வர் பரமஹம்ஸர். இவர்களில் நரேந்திர நாதரை அத் வைதாநுபவத்துக்கே உரியவராகக் கருதியவர் பரமஹம்ஸர். சுருங்கச் சொன்னுல், "உருவும், பெயரும், குணங்களுமற்ற பரம்பொருள் ஒன்றே உண்மையானது. மாயை காரணமாக அந்த ஒரே பரம்பொருள் பல ஜீவர்களாகவும் உலகாகவும் தோன்றுகிறது. ஞானமார்க்கத்தில் சென்று மாயையைக் கடந் தால் யாவும் பரம்பொருளே என்பதை அறிந்து அந்தப் பரம் பொருளாகவே ஆகிவிடலாம்" என்பதுதான் அத்வைதம்.

அத்வைதம்தான் இறுதிநிலை என்பது பரமஹம்ஸர் வலி யுறுத்தி வந்த உண்மையாகும். எனினும் அந்த உன்னத தத்து வத்தை எளிதில் விளங்கிக் கொள்ள முடியாதவர்களுக்காக பக்தி, கர்மம், முதலியவற்றை மற்றவர்களுக்கு முக்கியமாகப் பணித் திருந்தார் அவர். 'கடவுளும், ஜீவனும் தனித்தனிதான்; அவை என்றுமே ஒன்ருக முடியாது' என்ற நிலையை அடிப்படியாகவும், 'ஜீவன் கடவுளின் ஓர் அங்கம்' என்பதை இடைப்படியாகவும் வைத்து, 'ஜீவன் பரம்பொருளே' என்பதை இறுதிப்படியாக வைத்திருந்தார் பரமஹம்ஸர்.

Koviloor Digital Library

மாயையோடு கூடியதால் பிரபஞ்சமாகத் தோன்றும் பரம் பொருள், அந்தப் பிரபஞ்சத்தை நல்வழிப்படுத்துவதற்காக அதே மாயையுடன்கூடி உருவம் படைத்த தெய்வமாகவும் வருகிறது என்பதை அத்வைத சாஸ்திரமே ஒப்புக்கொண்டு, சாதகன் ஆரம்ப காலத்தில் தெய்வம்-பக்தன் என்ற துவைதநிலையில் வழி படத் தொடங்கிப் பிறகு அத்வைத ஞானம் அடைய வழிகூறு கிறது. எனினும் எல்லாருக்கும் இந்த இடைநிலைகள் அவசிய மில்லை. சுகரும், வாமதேவரும், சங்கரரும், பரமஹம்ஸரும் எடுத்த எடுப்பிலேயே கடைசிப்படியில் கால்வைக்கும் பெருமை பொருந்தி யிருந்தார்கள். நரேந்திரருக்கும் இடைநிலைகள் தேவை யில்லை என்றே பரமஹம்ஸர் கருதினர்.

ஆனபடியால் தொடக்க காலத்திலிருந்தே அவர் நரேனை அஷ்டாவக்ர ஸம்ஹிதை முதலிய அத்வைத க்ரந்தங்களைத் தாம் படிக்கச் செய்தார். பிரம்ம சமாஜியான நரேந்திரருக்கு அத் வைதம் ஏற்கவேயில்லை. 'நான்தான் கடவுள் என்பது எத்தகைய அபசாரம்?' என்றே எண்ணினர் அவர். 'நான்தான் கடவுள்' என்று ஒருவன் பேசுகிற அல்லது எண்ணுகிற நிலையல்ல அத் வைதம்; தானே கடவுளாகி அதனை அநுபவித்துக்கொண்டு மட்டுமே இருக்கும் மோன நிலை, எண்ணமடங்கிய நிலைதான் அத்வைதம் என்பதை அறியாததால் நரேந்திரர் அத்வைதத்தைப் பலபடியாகக் கேலி செய்வார். ''நானும் பரம்பொருள், நீயும் பரம்பொருள் — காண்கிற பொருளெல்லாம் பரம்பொருள் என்று எழுதிவைத்தார்களே, அந்த ரிஷிகளுக்கெல்லாம் பைத்தியம் பிடித் திருக்க வேண்டும்'' என்று ஒரு நாள் எடுத்தெறிந்து பேசிவிட் டார் நரேந்திரர். அப்போதும் பரமஹம்ஸர் கோபிக்கவில்லை. ''சரி, ரிஷிகள் சொன்னது உனக்குப் பிடிக்கவில்லையானல் ஒப்புப் கொள்ளவேண்டாம்! ஆனல் அவர்களை ஏன் நிந்திக்கிறாய்? சத்தியமான கடவுள் எது என்று நீ நினைக்கிறாயோ அதைப் பிரார்த்தித்து வா. அது உனக்கு எப்படித் தோன்றினலும் அதை அவ்வாறே நம்பிவா'' என்றார் அமைதியாக. ஆனல் உண்மையில் நரேன் அத்வைதம் தவிர வேறு மார்க்கத்தில் செல்ல அவர் விட்டாரா, என்ன?

அதையும் பார்த்து விடுவோம்.

* * *

ஜீவாத்மா, பரமாத்மா இரண்டும் ஒன்றே என்பதைப் பரம ஹம்ஸர் ஒரு நாள் எப்படியெப்படியோ விளக்கிப் பார்த்தார். நரேந்திரருக்கு அர்த்தமாகவில்லை. நரேந்திரர் அறையை விட்டு வெளியேறினர். வெளியே இருந்த பிரதாப சந்திர ஹஸ்ரா

Koviloor Digital Library

விடம் ''இதெப்படிச் சரியாக இருக்க முடியும்? இதோ இந்த ஜாடியிருக்கிறதே இது கடவுளாம், இந்தக் கோப்பை கடவுளாம், அப்புறம் நானும் நீங்களும்கூடக் கடவுள். இதைவிட அபத்த மான ஏதேனும் உண்டோ?'' என்று கேட்டு விழுந்து விழுந்து சிரிக்கலானார்.

அத்வைத நிலைபற்றிப் பேசிக்கொண்டிருந்த பரமஹம்ஸரோ பேச்சில் வராத அந்த அநுபவத்தில் தாமே அமிழ்ந்து கொண் டிருந்தார். நரேந்திரருடைய சிரிப்பு அவருக்கு இக உலகப் பிரக்ஞையை உண்டுபண்ணிற்று. தமது வழக்கப்படித் துணி யைச் சுருட்டி புஜத்துக்குள்ளே சொருகிக்கொண்டு குழந்தை மாதிரி வெளியே வந்தார் குருதேவர். ''என்னப்பா சொல்லிக் கொண்டிருக்கிறாய்?'' என்று மந்தஹாஸத்துடன் நரேந்திரரிடம் கேட்டபடி அவரைத் தொட்டார். தொட்டவாறே பரம்பொரு ளின் இயல்பையும் தொட்டு நினைவிழந்தார்.

தொடப்பட்டவர் என்ன ஆனார்? அதை அவரது வார்த் தையிலே கேட்போம்.

''அன்று குருதேவரின் மந்திர சக்தி வாய்ந்த ஸ்பரிசம் தக்ஷணமே என் மனசில் ஓர் அற்புதமான மாறுதலை உண்டாக் கிற்று. வாஸ்தவமாகவே இந்த விசுவம் எங்கிலும் கடவுளைத் தவிர எதுவும் இல்லை என்று கண்டேன். கண்டு திக்பிரமித்துப் போனேன். இந்த உண்மையை மிகத் தெளிவாகக் கண்ட நான் இக்கருத்து நீடித்து என்னிடம் நிற்குமா என்று காண எண்ணி னேன்.

''அன்று முழுவதும் அந்த எண்ணம் மாறவில்லை. வீடு திரும்பினேன். அங்கும் எல்லாம் பிரம்மமாகவே தெரிந்தன. உணவு உட்கொள்ள அமர்ந்தேன். உணவு, உணவுத்தாலம், உணவு பரிமாறியவர், உணவை உட்கொள்ளும் நான் எல்லாம் அதுவன்றி வேறில்லை என்றே கண்டேன். ''ஏன் வெறுமனே உட்கார்ந்திருக்கிறாய்? சாப்பிட்டு முடி.'' என்று என் அன்னை கூறிய வார்த்தைகள் என்னைத் தட்டி எழுப்பின. மீண்டும் சாப் பிடத் தொடங்கினேன். என்றாலும், சதா, உண்ணும் போதும், படுக்கும் போதும், கல்லூரிக்குச் செல்லும் போதும் அதே அநுப வத்தில் இருந்தேன். ஏதோ ஒருவிதமான கிறக்க நிலையில் என்னை நானே கிடத்திக் கொண்டேன். தெருவில் நடக்கும்போது வண்டி கள் ஓடிக்கொண்டிருப்பதைக் கண்டேன். ஆனால் அவற்றுக்காகத் தெரு வோரத்தில் ஒதுங்க வேண்டும் என்றே தோன்றவில்லை. அந்த வண்டிகளும் நானும் ஒரே பொருளால் ஆனவர்கள் தாமே என்ற உணர்ச்சிதான் இதற்குக் காரணம். என் அங்கங்கள்

Koviloor Digital Library

உணர்வு இழந்து வந்தன. உணவு ருசிக்கவில்லை. நான் உண்பதே வேறு யாரோ உண்பது போலத் தோன்றியது. சில சமயம் நான் சாப்பிடும்போதே தரையில் சாய்ந்தேன். சில நிமிடங்கள் கழித்தே எழுந்தமர்ந்து மீண்டும் உண்பேன். இதனால் சில நாட்களில் நான் மிகவும் அதிகமாகச் சாப்பிட்டிருப்பேன்; எனினும் இது எனக்கு ஒரு கெடுதலையும் உண்டாக்கவில்லை. என் அன்னைக்குக் கிலி ஏற்பட்டுவிட்டது. எனக்கு ஏதோ நேர்ந்துவிட்டது என்றும் நான் அதிக காலம் உயிர் வாழ மாட்டேன் என்றும் அவள் எண்ணிவிட்டாள்.

''இந்த நிலை சிறிதே மாறுபடலாயிற்று. இப்போது உலகமெல்லாம் ஒரு கனவுபோலத் தோன்றலாயிற்று. கார்ன்வாலிஸ் சதுக்கத்தில் நடந்து கொண்டிருப்பேன். அங்கு போட்டிருக்கும் இரும்புக் கிராதிகள் உண்மைதானா அல்லது கனவா என்று காண்பதற்காக அவற்றில் என் தலையை மோதிக் கொள்வேன். இந்த நிலை சில நாட்களுக்குத் தொடர்ந்தது. மீண்டும் நான் சகஜநிலையை அடைந்தபோதுதான் இத்தனை நாட்களாக அத்வைதாநுபவத்தை ஒரு சிறிது நான் கண்டிருக்கவேண்டும் என்று உணர்ந்தேன். இந்து மதப் பிரமாண நூல்களில் கூறியிருப்பது பொய்யல்ல என்று எனக்குப் பட்டது. அதன்பின் அத்வைத தத்துவத்தின் முடிவுகளை என்னால் மறுக்க முடியவில்லை.''

* * *

ஸ்ரீருத்ரத்தில் உலகம் யாவும் பரமேசுவர ஸ்வரூபமாகக் காட்சியளிக்கும் அழகு கூறப்படுகிறதே, அதுதான் நரேந்திரரின் அநுபவத்தைப் படிக்கும்போது நினைவு வருகிறது. முக்கியமாக, சாலையில் செல்லும் தேர்களையும், தேரோட்டுபவர்களையும், தேரில் வீற்றிருப்பவர்களையும் ஈசுவரனாக அதில் வர்ணிப்பது நரேந்திரரின் பிரத்தியக்ஷ அநுபவமாகியிருப்பது ஆச்சரிய மளிக்கிறது.

* * *

நரேந்திரருக்கு அத்வைதத்தில் நம்பிக்கையூட்டப் பரமஹம்ஸர் அற்புத சக்தியைத்தானே உபயோகித்திருக்கிறார் என்ற சங்கை சிலருக்கு ஏற்படலாம். இது அற்புத சக்தி அல்ல — அநுபூதி சக்தி. அறிவை அற்புதத்தால் வெல்லுவதுதான் சரியல்லவே ஒழிய அநுபவத்தால் வெல்லுவதில் முரண் எதுவும் இல்லை. ஏனெனில் அநுபவம் அற்புதத்துக்கும் மேம்பட்டதாகும். நரேந்திரரின் அறிவில் பதிவு செய்ய முடியாத தத்துவத்தை அவருடைய அநுபவத்தில் மெய்ப்பித்துக் காட்டி விட்டார் ஸ்ரீராமகிருஷ்ண தேவர். சர்க்கரை இனிக்குமா இனிக்காதா என்று

Koviloor Digital Library

வாதம் செய்து நிர்ணயிக்க முடியா தென்பதால் வாதித்தவரின் வாயிலேயே பிடி சர்க்கரையைப் போட்டு உண்மையை உணர்த்தி விட்டார். அத்வைதம் எப்படிப் பேசி புரிய வைக்க முடியும்? 'அதுவானால் அதுவாகும்; அதுவே சொல்லும்'.

* * *

சிஷ்யர்களைப் பலவிதங்களில் பகுத்துப் பயிற்சி அளித்தார் ஸ்ரீராமகிருஷ்ணர் என்று பார்த்தோம். நரேந்திரரை அத்வைத ஞானத்துக்கு உரியவராகப் பழக்கினார் என்றும் பார்த்தோம். ஆனால் சில இனங்களில் அவர் நரேந்திரரை சிஷ்யராகவே கருத வில்லை; தனியொரு வகுப்பில் அவரைப் பிரிந்திருந்தார் என்றும் தோன்றுகிறது. சிஷ்யர்களின் முக்கியமான கடமைகளில் ஒன்று ஆசாரியனுக்குப் பணிவிடை புரிவதாகும். ஆனால் 'நரேந்திரர் தமக்கு இவ்விதப் பணிவிடைகள் புரியப் பரமஹம்ஸர் அனுமதித்தது கிடையாது. அவருக்கு ஆசனம் தட்டிப் போடுவது, படுக்கை விரிப்பது, விசிறுவது முதலிய சுசுருஷைகளைச் செய்ய நரேந்திரருக்கு அவர் இடமளித்ததே கிடையாது. இதனை நரேந்திரர் ஒரு நஷ்டமாகவே கருதினர். தாம் குருவுக்குப் பணிவிடை புரிய விழைந்து பிடிவாதம் பிடிப்பார். 'உங்களிடம் எனக்குள்ள அன்புக்காகவும், எனக்கு விநயம் ஏற்படுவதற்காகவும் நான் உங்களுக்கு ஏவல் புரிய அநுமதியுங்கள்' என்று பரமஹம்ஸரிடம் கேட்டுக் கொள்வார். பரமஹம்ஸரோ அசைந்து கொடுக்கமாட்டார். ''உன் வழியே தனி, போ''. என்று ஒரே போடாகப் போட்டுவிடுவார்.

இதே போலத்தான் மற்றவர்களிடம் பலவிதமான ஆசாரக் கட்டுப்பாடுகளை அநுஷ்டித்த பரமஹம்ஸர், அவர்கள் பல ஆசாரக் கட்டுப்பாடுகளை அனுஷ்டிக்கவேண்டும் என்று வற்புறுத்திய பரமஹம்ஸர், நரேந்திரர் விஷயத்தில்மட்டும் தாமும் கட்டுப்பாடுகளைப் பின்பற்றவில்லை; அவருக்கும் கட்டுப்பாடுகள் விதிக்கவில்லை. உண்பது, உறங்குவது, பிரார்த்திப்பது, தியானிப்பது இவற்றிலெல்லாம் மற்றவர்களுக்கிருந்த விதி நிஷேதங்கள் நரேந்திரருக்குக் கிடையாது. ''நரேன் ஒரு நித்திய சித்தன்; நரேன் ஒரு தியான சித்தன். அவனுள் உறுமிக் கொண்டிருக்கும் அறிவுக் கனல் அவன் உண்பதிலுள்ள அசுத்தங்களை எல்லாம் எரித்து விடும். மாயையின் திரைகளை வெட்டி எறிந்து கொண்டிருக்கும் அவனைத் தன் ஆளுகைக்கு உட்படுத்த மாயையால் முடியாது.'' என்றெல்லாம் அவர் கூறுவார்.

தக்ஷிணேசுவரத்துக்கு வருபவர்கள் சமர்ப்பிக்கும் பழங்களையும் பக்ஷணங்களையும் யாவரும் புசிக்கப் பரமஹம்ஸர் அநுமதிக்க

Koviloor Digital Library

மாட்டார். காணிக்கை செலுத்தியவர் நன்னடத்தை உள்ளவர், சுயநல நோக்கமின்றிக் காணிக்கை செலுத்தியிருக்கிறார் என்று தெரிந்தால்தான் தாம் அதை உட்கொள்ளுவார்; மற்றவர் உட்கொள்ளவும் அநுமதிப்பார். ஆனால் நரேந்திரர் மட்டும் யார் அளிக்கும் எந்தப் பொருளையும் உண்ண அவர் அநுமதித்திருந்தார். தமக்கே விதித்துக் கொண்டிருந்த கட்டுப்பாட்டைக்கூட நரேந்திரருக்கு அவர் விதித்திருக்கவில்லை. 'நரேனின் சுத்தமான மனசை உணவிலுள்ள எந்த அசுத்தமும் கெடுக்க முடியாது' என்பார். நரேந்திரர் தக்ஷிணேசுவரத்துக்கு வராத போதுகளில் அவருக்கு இன்சுவைப் பண்டங்களை அனுப்பிவைப்பார் ஸ்ரீராம கிருஷ்ண தேவர்.

சில சமயங்களில் நரேந்திரர் போஜனசாலையில் உண்ண நேரிடும். 'அநாசாரமான உணவைச் சாப்பிடும்படியாகி விட்டது' என்று நரேந்திரர் குருமஹராஜிடம் குறைப்பட்டுக் கொள்வார். "அது உன்னை ஒரு சிறிதும் மாசு படுத்தாது. பன்றி மாமிசமும், மாட்டிறைச்சியும் தின்ற பின்னும் ஒருவன் கடவுளிடம் மனசை நிலைநிறுத்த முடியுமானால் அவனுக்கு அவையும் ஹவிஸுக்குச் சமானமாகிவிடுகின்றன. உலக இன்பத்திலேயே உழன்று கொண்டிருக்கும் ஒருவன் மரக்கறியே உண்டாலும் அவை மாமிசத்துக்குச் சமம்தான். விலக்கப்பட்ட உணவுகளை நீ உண்டாய் என்பது என்னைப் பொறுத்தமட்டில் ஒரு மாறுபாடும் உண்டாக்கவில்லை. ஆனால்...." என்று அவரைத் தேற்றும் குரு மற்ற பக்தர்களைச் சுட்டிக் காட்டிக் கூறுவார்:

"ஆனால் இவர்களில் யாரேனும் அவ்விதம் செய்திருந்தால் அப்படிச் செய்திருந்தவர் என்னைத் தீண்டவே நான் அநுமதிக்க மாட்டேன்."

பரமஹம்ஸர் தமக்குக் கனிவகைகளும், பணியாரங்களும் அளிப்பவர்களின் நடத்தையைத் தாமாகவே அறிந்து அதன்மீது தான் அவற்றைப் புசிக்கலாமா கூடாதா என்று முடிவு செய்வார். அவருக்குத் தாமாகவே எப்படிப் பிறரது மனோபாவங்கள் தெரிய முடியும் என்று நரேந்திரர் சந்தேகித்ததுண்டு. இவ்விஷயத்தில் அக்கறை செலுத்திக் கவனித்த பின்புதான் நரேந்திரருக்குத் தம் குருநாதர் யாருடைய நிவேதனத்தை உள்ளுணர்ச்சியால் ஒதுக்கிறாரோ அவர்கள் உண்மையிலேயே நடத்தை கெட்டவர்கள் என்பது தெரிய வந்தது. 'எத்தகைய அதிசய மனிதர் இவர்! இவருடைய தூய்மை அறிதற்கு அப்பாற்பட்டது. மற்றவர்களின் அந்தரங்கத்தை எவ்வளவு துல்லியமாக இவர் படித்துவிடுகிறார்' என்று குருமஹராஜின் பெருமையை எண்ணி வியப்பார் நரேந்திரநாதர்.

Koviloor Digital Library

நரேந்திரரின் தூய்மையை அறிந்திருந்ததால்தான் பரமஹம்ஸர் அவரைச் சிடருக்குரிய பணிகளினின்று விடுவித்திருந்தார் என்று சுவாமிஜியின் சரிதத்தை எழுதியிருப்பவர்கள் கருதுகிருர்கள். தூய்மையின் உறைவிடம் சிவன். அவன் வெண்ணிறம் படைத்திருப்பது இந்தத் தூய்மையைக் குறிப்பதற்கேயாம். ஸ்படிகலிங்கமாகவும் அவனை வழிபடுவது இது காரணமாகத்தான். சிவாம்சம் நரேந்திரரிடம் பூரித்துத் தளும்பிப் பொலிவதாகக் கருதினுர் குருநாதர். ''நான் சக்தி, நீ சிவன்'' என்று நரேந்திரரிடமே ஒரு நாள் வெளிப்பட உரைத்துமிருக்கிருர். இவ்வாறு சிவமயமாகிய நரேந்திரர் குற்றேவல் புரிவது தகாது என்று பரமஹம்ஸர் கருதியிருக்கக் கூடும் என்று இந்த சரிதத்தை எழுதியவர்கள் கூறுகிருர்கள்.

* * *

இருளிலிருந்து ஒளிக்கும், ஐயத்திலிருந்து ஆனந்தத்துக்கும், அயர்விலிருந்து அமைதிக்கும் நரேந்திரரை மெல்ல மெல்ல இட்டுச் சென்று கொண்டிருந்தார் பரமஹம்ஸர்.

அந்த இருள் நரேந்திரரை எப்படிக் கப்பிக்கொண்டிருந்தது, ஐயம் அவரை எப்படித் துளைத்துத் துன்புறுத்தியது, அயர்வு அவரை எவ்வாறு அல்லலுறச் செய்தது என்பதெல்லாம் அவருக்கு மட்டுமேதான் பூரணமாகத் தெரியும். அதே போலப் பரமஹம்ஸர் அவற்றை எப்படி நீக்கினுர் என்பதும் அவருக்குத்தான் தெரியும்; அல்லது அவருக்கும் தெரியாமல் பரமஹம்ஸருக்கு மட்டும்தான் தெரியுமோ என்னவோ? ரண சிகித்ஸை செய்து கொள்ளும் நோயாளிக்கு அந்த சிகித்ஸை முறை தெரியவேண்டிய அவசியமில்லையல்லயா? மருத்துவருக்குத்தானே வைத்திய முறை தெரிய முடியும்?

ஸ்ரீராமகிருஷ்ணர் நரேந்திரரைப் பாரத தர்மமாகிய வேதாந்தத்துக்கு வென்று அழைத்துச் சென்றது மேல் நாட்டு அறிவாராய்ச்சிகளை இந்தியாவின் அநுபவம் வென்ற அற்புத காவியமாகும். தான் இன்னுர் என்பதை அறியவேண்டும், தன்னையும் தன் போன்ற இன்னும் பல ஜீவர்களையும் வேறு பல பொருட்களையும் கொண்ட இந்தப் பிரபஞ்சத்தின் காரணம் இன்னதென்று அறியவேண்டும் என்பதில் நரேந்திரர் குமைந்த குமைச்சல் நம் எல்லாருக்காகவும் அவர் ஒருவர் பட்ட இன்னலாகும்— மக்கட் குலத்தின் பாபச்சுமையை இயேசுநாதர் ஏற்று அதற்காக அநுபவித்ததாகக் கிறிஸ்துவ சமயத்தில் கூறுவது போல. ஆரம்பத்திலேயே நரேந்திரர் பரமஹம்ஸரை வந்தடையாமல் மேநாட்டின் நானுவிதமான தத்துவ சாஸ்திரங்களைப் படித்துவிட்டு

Koviloor Digital Library

அவற்றில் சாந்தி காணுமல் பின்பே தக்ஷிணேசுவரத்துத் தபஸ்வியை அடைந்து அமைதிபெற்றது நம் எல்லாருக்கும் கண்களைத் திறந்து விடுவதற்குத்தான். ஆசார அநுஷ்டானமுள்ள ஒரு குடும்பத்தில் பிறந்து, பரமஹம்ஸரை நம்பிக்கையுடன் ஆசிரயித்து நரேந்திரர் ஞானம் பெற்றிருந்தாரெனில் மேநாட்டு அறிவாராய்ச்சியின் வழியே செல்பவர்களுக்கு சத்திய மார்க்கம் புலப்பட்டிராது. பிரம்மாநுபவத்துக்குக் கல்வியும் கேள்வியும் அவசியமில்லை என்பதைக் கல்லாத பரமஹம்ஸர் ஒரு விதத்தில் நிருபித்தார் எனில், மெத்தக் கற்ற நரேந்திரர் அந்தக் கல்வியை யெல்லாம் துறந்தபின் தம்மை வாட்டி வதக்கிய வினுவின் விடையை அந்தக் கல்லாதவரிடமிருந்து கற்றுத் தெரிந்ததன் மூலம் வேருெரு விதத்தில் நிருபித்து விட்டார்.

விவேகானந்தருக்குப் பரிசயமில்லாத தத்துவ மார்க்கங்கள் இல்லை. பிளாட்டோ, அரிஸ்டாடில் இவர்களில் தொடங்கி ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் வரையில் அவர் படிக்காத தத்துவ ஆராய்ச்சியாளர் கிடையாது. சுவாமி விவேகானந்தரின் வரலாற்றை ஆங்கிலத்தில் கூறும் நூல்களில் இந்தத் தத்துவங்களைப் பற்றி யெல்லாம் சிறிது சிறிது காணலாம். இந்தத் தமிழ் நூலிலும் அவற்றைப் பற்றிய சுருக்கமான விவரணங்கள் கொடுக்கலாமா என்று முதலில் தோன்றியது. ஆனல் அதனல் ஒரு பயனும் இல்லை என்பது உடனே பளிச்சிட்டது. நானுவிதமான அந்த ஆராய்ச்சிகள் — ஒன்றுக் கொன்று முரண்பட்ட அந்த ஆராய்ச்சிகள் — வாசகர்கள் அறிவைக் குழப்பத்தான் செய்யும். இப்படிக் குழம்பிய நரேந்திரர் பரமஹம்ஸரிடம் தெளிவு பெற்றுர் என்பது உலகறிந்த விஷயம். எனினும் எப்படித் தெளிவு பெற்றுர் என்று யாரும் விண்டுகூறி விளங்கி வைக்க முடியாது. குழம்பிய நரேந்திரரைத் தெளிவிக்க ஸ்ரீராமகிருஷ்ண தேவர் இருந்தார். ஆனல் இன்று குழம்பும் வாசகர்களை யார் தெளிவிப்பது? வார்த்தைகளின் மூலம் விளக்க முடியாதபடி பரமஹம்ஸர் அளித்த தெளிவை இங்கு வார்த்தைகளில் எப்படிக்கூறி வாசகர்கள் சஞ்சலத்தை நீக்க இயலும்?

ஸ்ரீராமகிருஷ்ணர் நரேந்திரரை எப்படி வென்றுர் என்பது குறித்து ஒன்றுமட்டும் சொல்லலாம். மேல் நாட்டுத் தத்துவ ஆராய்ச்சியாளர்கள் அறநெறி, அன்பு, அழகு, அறிவு, உணர்வு இவையாவும் இணைந்த ஆன்மிக வாழ்வு முறையை வகுக்கவில்லை. அது பாரதத்தில்தான் இயல்பாக வந்திருக்கிறது. ஸப்த ஸ்வரங்களும் சேர்ந்து ஒரே இசையாக இருப்பதுபோல இந்த அம்சங்கள் யாவும் இழைந்த, இணைந்த, இசைந்த, ஜீவனமுறை இந்தியாவுக்

Koviloor Digital Library

கென்றே ஏற்பட்டது. எனவே அறம், அன்பு, அழகு, அறிவு, உணர்வு எல்லாவற்றுக்கும் எது மூலகாரணமோ அதனை இவை யெல்லாம் பொருந்திய மார்க்கத்தால்தான் அறிய முடியுமே ஒழிய இவற்றைப் பகுத்துப் பகுத்துப் பார்க்கும் மேல்நாட்டு வாத சாஸ்திரங்களால் முடியாது என்று துணிந்து கூறலாம்.

மேலே சொன்னவற்றுக் கெல்லாம் மேலாக அநுபவம் அநுபவம் என்பதாக ஒன்று உண்டு. பரம்பொருளை அநுபவிக்க வேண்டும் என்று துடித்தவர்கள் பாரத ரிஷிகள்தாம். பரம் பொருளை அநுபவிக்க முடியும் என்று கருதி, அநுபவிக்கவேண்டும் என்று வேட்கை கொண்டு, அநுபவித்துக் காட்டியவர்கள் பாரத ரிஷிகள்தாம். பரம்பொருளை அறிய வேண்டும் என்றே மேல் நாட்டு தத்துவ ஆராய்ச்சியாளர்கள் எண்ணினுர்கள். பரம் பொருள் அறிவுக்கு அப்பாற்பட்டது என்று கண்டார்கள். இது நாஸ்திகர் அல்லாதாரைப் பற்றிய விஷயம். பரம் பொருளே கிடையாது என்றவர்களைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டாம்.

பரம்பொருளை அறிவதற்கு சாதகன் என்ன செய்ய வேண்டும் என்பதாக சாதன மார்க்கத்தை அவர்கள் யாரும் வகுத்துக் கொடுக்கவில்லை. வாதப் பிரதி வாதம் மூலம் மூலப் பொருளைப் பற்றிய உண்மையை நிச்சயிக்கவே அவர்கள் முயன்றுர்கள். இந்த வாதப் பிரதி வாதங்களை வைத்துக்கொண்டு ஆன்ம நாட்டம் மிகுந்த நரேந்திரர் போன்ற ஒருவர் என்ன செய்ய முடியும்? கடவுள் இருக்கிறுரா என்பதைத் தாமே தெரிந்துகொள்வதற்கு அவர்கள் என்ன உதவி செய்திருக்கிறுர்கள்?

பரம்பொருளை அறிய முயல்வது தத்துவத்தின் இலட்சிய மல்ல என்பது பாரதத்தின் துணிபு. (இங்கே 'அறிவது' என் பது 'மனித அறிவைக் கொண்டு நிச்சயப் படுத்திக்கொள்வது' என்ற பொருளில்தான் பயன்படுத்தப் பெற்றிருக்கிறது. அறிவும் உணர்வும் ஒன்ருகி, அறிகிறேம் என்ற உணர்வுமில்லாமல் அறிவு மயமாகும் அத்வைத 'அறிவை'க் குறிக்கவில்லை. அத்வைத அறிவு மூலப்பொருளின் அறிவைக் குறிக்கும். அது ஒன்றேயான அறிவு. ஜீவர்களாகத் தோன்றும் காட்சியில் ஒவ்வொரு ஜீவ னுக்கும் இருப்பதாகக் காணும் தனித்தனி அறிவைக்குறிப்பதல்ல அது.) ஜீவர்களுக்கு இருப்பதாகக் காணும் அறிவுக்கு மூலகாரணம் பரம்பொருள். எனவே இந்த மானுட அறிவால் எப்படித்தன்னைப் படைத்த பேரறிவை அளக்க முடியும்? இதனுல்தான் பரம் பொருளையே ஹெர்ப்பர்ட் ஸ்பென்ஸரும் மற்றும் பலரும் 'unknowable' அறிய வொண்ணுதது என்று கூறுகிறுர்கள். ஆனுல்

Koviloor Digital Library

அது Inexperienceable அல்ல; அநுபவிக்க வொண்ணுதது அல்ல என்று அவர்கள் காணவில்லை. ஏனெனில் பரம்பொருளை அநுபவிக்க வேண்டும் என்ற எண்ணமே அவர்களுக்கு எழவில்லை; அறியத் தான் முயன்ருர்கள் — தோற்றுப் போனுர்கள்.

பாரதத்துப் பக்தர்கள் கடவுளைக் காணவேண்டும் என்று துடியாகத்துடித்து, தவியாகத்தவித்து அலமந்து போனுர்கள்! அப்படி மேநாட்டுத் தத்துவ ஆராய்ச்சியாளர்கள் தவிக்கவும், துடிக்கவும் இல்லையே! அவர்களால் நரேந்திரரை எப்படிக் கடவுளின் காட்சிக்கு இட்டுச் செல்ல முடியும்?

ஆனுலும் ஆரம்பகாலத்தில் அவர்களைத்தான் நம்பினுர் நரேந்திரர்: விசுவநாத தத்தர் ஹிந்து ஆசாரங்களைக் கடைபிடித்தொழுகாததும், அதில் மூடநம்பிக்கைகள் மலிந்திருப்பதாகக் கருதியதுமே நரேந்திரரை மேல்நாட்டு ஆராய்ச்சியாளரிடம் ஒப்படைத்தது. அதுவே நரேந்திரர் பட்ட பாடுகளுக்கெல்லாம் காரணம். நம் பாக்கியமும் அதுவே.

கடல்மீது பறக்கும் பட்சி ஒவ்வொரு பேரலையையும் ஸ்திரமாக எண்ணி அதில் அமரச்சென்று, ஏமாறிப்போய் இறகு வலிக்க வலிக்கப் பரந்த கடல் மீதாக ஒரு தங்குமிடத்தைத் தேடிக் களைத்துச் சளைத்துப் பறந்து செல்வதுபோல இந்த ஆராய்ச்சி நூல்கள் நிரம்பிய வாத சமுத்திரத்திலும் தங்கி அமைதி காண முடியாமல் தத்தளித்தார் நரேந்திரர். டேவிட் ஹ்யூமின் அவநம்பிக்கைச் சித்தாந்தத்தைப் படித்துக் கடவுள் என்று ஒன்று உண்டா என்றே அவர் கலங்கிய காலமும் உண்டு.

இப்படிக் கலங்கிய காலத்திலெல்லாம் கவிதையும், கானமுமே அவருடைய உள்ளப் புண்ணை ஒரு சிறிது ஆற்றி வந்தது. ஷெல்லியின் அழகுத் தத்துவமும், வேட்ஸ்வொர்த்தின் அன்புத் தத்துவமும், அறிவு ஆராய்ச்சிக் கடலில் அயர்ந்த அவருக்கு மிதப்புக் கட்டைகளாக உதவின. எல்லாவற்றையும்விட இசையில் ஈடுபடும்போது அவர் இதயம் தன்னைத் தனக்கே தானறியாமலே திறந்து காட்டிக் கொண்டது. உருவ வழிபாட்டை அவருடைய பகுத்தறிவு எதிர்த்த அதே சமயத்தில் தேவியின்மீது ஒரு பாடலைப் பாடும்போது அவருடைய இதயம் நிரம்பிக் கொண்டது; நிறைவுகண்டது. அந்தப் பகுத்தறிவை நிரந்தரமாக இதயத்துக்குப் படிய வைத்தவர்தாம் பரமஹம்ஸர்.

குரு என்று ஒருவர் அவசியமே இல்லை என்றுதான் நரேன் படித்த நூல்கள் பகுத்தறிவு வாதம் செய்தன. நரேனுடைய பகுத்தறிவும் அதனை ஒப்புக் கொண்டது. ஆனுல் அவருடைய ஆத்மாவோ தத்தளிக்கும் தம்மைக் காக்க ஒரு கை தேவை என்று

Koviloor Digital Library

அலறிப் பரதவித்துக் கொண்டிருந்தது. கை கொடுத்துக் காப் பாற்றினுர் பரமஹம்ஸர்.

'உருவும் பெயரும் குணமுமற்ற ஒன்றுதான் இந்த உலகுக் கெல்லாம் காரணம். காரணம் என்ருல் இந்த உலகையெல்லாம் அது எதைக் கொண்டோ படைத்தது என்று அர்த்தமில்லை. அந்த ஒரே பொருள்தான் இப்படிப் பலவாகத் தோன்றுகிறது. புலன்களை அடக்கி, மனசை சுத்தமாக்கிக்கொண்டு, அந்தப் பொருளைத் தியானித்தால் அதுவே நாம் என்ற உண்மையை உணரலாம். தான் இன்னது என்றும், பிரபஞ்சம் இன்னது என்றும் அறிய நரேந்திரர் துடித்த இரண்டு துடிப்புக்கும் அதுவே தான் விடை. இந்த உருவும் பெயரும் குணமுமற்ற பொருளே, நாம் 'காதலாகிக் கசிந்துருகிக் கண்ணீர் மல்கி'ஞல் உருவம் தரித்து வந்து நம்மை ரக்ஷிக்கும்.' — இதுதான் பரமஹம்ஸர் நரேந்திரருக்கு உணர்த்திய உண்மை.

"............that is all
Ye know on earth, and all ye need to know"

என்று வேருெரு பொருள்பற்றிக் கவி கூறியதுபோல, இதுதான் உலகம் முழுவதிலும் நாம் அறியக்கூடிய உண்மை; அறிய வேண்டிய உண்மை. இந்த உண்மை தெரிந்தால் நமக்குப் போதும்; அதற்குமேல் வேறெதுவும் வேண்டியதில்லை.

Koviloor Digital Library

அத்தியாயம் 7

இருள் தீர்ந்தது

"கடவுளைக் கண்டிருக்கிறேன். உனக்கு அவரைக் காண்பிக்கிறேன்'' என்றும் ''மனிதர்கள் அகமுருகிச் செலுத்தும் பிரார்த்தனைக்கு ஆண்டவன் செவி சாய்க்கிறான். நீ அப்படி இறைஞ்சினாயானால் நிச்சயமாக இறைவனைக் காண முடியும்; என்னை இதோ நீ பார்ப்பதைவிட இன்னும் தெளிவாக அவனைக் காணமுடியும் என்று நான் சத்தியம் செய்கிறேன்'' என்றும் நரேந்திரரிடம் தினையளவும் சந்தேகமின்றி அழுத்தந் திருத்தமாகக் கூறிய பரமஹம்ஸர் மெல்ல மெல்லச் சீடரது கலக்கங்களைத் தீர்த்து வந்தார்.

நரேந்திரர் தம்முடைய கலக்கங்களையும் சரி, அவை திருவதையும் சரி அவ்வளவாக வெளியில் காட்டிக் கொள்ளாமலே கல்லூரி வாழ்க்கையை நடத்தினார். உள்ள ஊசலைச் எவ்வளவோ கண்ட நரேந்திரரின் மாணாக்கப் பிராயத்தைப் பற்றிக் கூறும் டாக்டர் விரஜேந்திரநாத சீலர் நரேந்திரர் ஒரு பொஹிமியனைப் போலவே தோன்றினார் என்று கூறுகிறார். பொஹிமியன் என்றால் உல்லாஸ புருஷன் என்றே கொள்ளலாம்.

சிறுபிள்ளையைப் போல குறும்புகளும், கலைஞனைப் போல கானமும், பண்டிதரைப் போல அறிவாராய்ச்சியிலும், வேதாந்தியாக அந்தரங்கத்திலும் வளர்ந்து வந்தார் நரேந்திரர். 'சங்கல்பத்தின் சுதந்திரத்தால்தான் மனிதன் வளர முடியும். ஆனால் இந்தச் சுதந்திரத்துக்கு ஆதாரமாக நன்னெறிகளில் நாட்டம் ஏற்படவேண்டும். அப்படி ஏற்பட்டால் நெறிகளுக்கு அடிமையாகிவிட்டதுபோல் ஒருவன் எண்ணமாட்டான். அவற்றுக்குத் தான் எஜமானனாகிவிட்டது போன்ற சுதந்திரத்துடன் ஆனந்தமாகவே தர்மத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பான்' என்று கண்டார் நரேந்திரர். இயல்பாகவே நன்னெறிகளில் ஊறியிருந்த உள்ளம் நரேந்திரருடையது. இதனால்தான் அவர் சமய அவநம்பிக்கையில் ஆழ்ந்துகிடந்த நாட்களிலும்கூட புலன் நுகர்ச்சியைப் புல்லியதாக நினைத்து ஒதுக்கினார். அவரது இதயத்தில் குப்பை கூளங்கள் இல்லாததால்தான் அவருக்கு சத்திய வஸ்துவின் தரிசனம் எளிதில் லபிக்கும் என்று கண்டார் ஸ்ரீராமகிருஷ்ணர்.

''தெய்வத் திரு உருவங்கள் பல உண்டு என்பதை நீ நம்பாதுபோனாலும் பரவாயில்லை. அவை வெறும் கற்பனையே என்று எண்ணினாலும் பாதகமில்லை. இறுதியாக ஏதோ ஒரு வஸ்து

Koviloor Digital Library

உண்டு என்று நீ எண்ணிஞயாகில் போதும். பிரபஞ்சத்தை இவ்வளவு ஒழுங்காக இயக்கிக் கொண்டிருக்கும் ஒரு பொருள் உண்டு என நீ எண்ணிஞல் போதும். அந்தப் பரம்பொருளிடம் இப்படிப் பிரார்த்தனை புரிவாயாக: 'கடவுளே, உன்னை நான் அறிந்தேனில்லை. உன்னுடைய உண்மையான இயல்பினை எனக்குக் காட்டக் கருணை கொள்வாய்!' இப்படி நீ அந்தரங்க சுத்தத்துடன் வேண்டிஞல் அவன் உன் வார்த்தையைக் கேட்பான்'' என்ருர் பரமஹம்ஸர். இந்த உபதேசம்தான் நரேந்திரருக்குப் புத்துயிரும், உற்சாகமும் ஊட்டியது. கடவுள் தத்துவ ஆராய்ச்சிக்கு உட்பட்ட விஷயமல்ல; நம் பிரார்த்தனையால் தான் பெறக் கூடியவர் என்ற நம்பிக்கையைப் பெற்று விட்டார் நரேந்திரர். இதைப் பற்றி ஹாமில்டன் என்பவர் கூறியிருப்பதை சுவாமி விவேகானந்தர் பல முறை எடுத்துக் காட்டியதுண்டு. 'கடவுள் என்று ஒரு இறுதி உண்மை உண்டு, அதனுல் தான் பிரபஞ்சம் ஒரு ரீதியில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது — என்பதற்கு மனித அறிவு குறிப்புத்தான் காட்ட முடியும். அந்தக் கடவுளின் இயல்பைக் கூறுவது மனித அறிவுக்கு மீறிய விஷயமாகும். கடவுள் இருக்கிருர் என்று காட்டுவதோடு தத்துவ சாஸ்திரங்களின் எல்லை முடிந்து விடுகிறது; பிறகு சமயத்தின் எல்லை தொடங்குகிறது' என்கிருர் ஹாமில்டன்.

பரமஹம்ஸர் போதித்தவாறே பிரார்த்திக்கவும், தியானிக்கவும் தொடங்கிஞர் நரேந்திரர். உருவற்றவராயும், ஆனுல் குணங்கள் பொருந்தியவராகவும் கடவுளை பாவித்துப் பிரார்த்திப்பது பிரம்ம சாமாஜத்தின் வழக்கம். முன்பு இவ்வாறே பிரார்த்தித்து வந்த நரேந்திரர் இப்போது கடவுளுக்கு எந்த விதமான லக்ஷணத்தையும் தாஞக அளிக்கவில்லை. ''ஹே பகவன்! சத்தியத்தின் உறைவிடமான உனது உண்மையான லக்ஷணம் எதுவோ அதை எனக்கு நீயே காட்டி அருள்வாயாக'' என்று தமது இதயத்தின் அடிவாரத்திலிருந்து வேண்டிக்கொள்ளலாஞர். அந்த வேண்டுதலிலேயே அவர் மனம் முழுவதும் பதிந்து மற்ற எண்ணங்கள் யாவும் விலகிவிடும். பிறகு அந்தப் பிரார்த்தனை எண்ணமுமே மறைந்துவிடும். எண்ணமே எழாத ஆத்ம சாம்ராஜ்யத்துக்குள் ஊடுருவிக்கொண்டு பிரவேசித்துவிடுவார் நரேந்திரர். கால, தேச உணர்வுகளும் தேக உணர்வும் அற்றுப் போய்விடும். தியானநிலை கலைந்த பின்தான் அவ்வளவு நேரமும் தான் இனம் தெரியாததொரு களிப்புக் கடலில் மூழ்கியிருந்தது அவருக்குத் தெரியும். சில சமயங்களில் தியானம் கலைந்தபின்னும் அசைய முடியாமல் ஓர் ஆனந்த போதை அவரை அழுத்தும்.

Koviloor Digital Library

இவ்வாறு ஒரு முறை அமர்ந்திருக்கும்போது புத்தரைக் கண்டார் நரேந்திரர். குழந்தைப் பருவத்தில் ஒருபோது தாம் கண்ட தோற்றமும் புத்தருடையதுதான் என்று அப்போது புரிந்து கொண்டார்.

வீட்டிலுள்ள யாவரும் உறங்கச் சென்ற பின்பே நரேந்திரர் இவ்வாறு பிரார்த்தனையும் தியானமும் புரிந்து வந்தார். என்ன அதிசயமான வாழ்க்கை அது! இக உலக இன்பங்களைத் தேடிச் சென்று கொண்டிருக்கும் பருவத்தில் அதைவிட அதிக ஆர்வத்துடன் சத்தியத்தைத் தேடித் தவமிருக்கலானார் நரேந்திரர்! இந்தத் தவப்பயனாக உலக வாழ்க்கையெல்லாம் அல்பமும் அநர்த்தமுமே என்ற ஞானம் மலரலாயிற்று. உலகுக்கு ஆதாரமான கடவுள் ஒன்றே உண்மை என்பதில் உறுதி கூடலாயிற்று. 'பல கடவுளர் இருப்பதாகச் சொல்வது தவறாக இருக்கலாம்; ஆனால் கடவுள் என்று ஒருவர் இருப்பது நிச்சயம்' என்று திட்டமாகக் கருதலானார் ஐயம் நீங்கப் பெற்ற நரேந்திரர்.

கடவுள் இருக்கிறார் என்ற கருத்து மாறி, கடவுள் இதோ இருக்கிறாரே என்ற காட்சியாக வேண்டும் என்று விரும்பலானார் நரேந்திரர். தெய்வ தரிசனத்துக்காகப் பாடுபடலானார்; பிரார்த்திக்கலானார். கடவுளுடைய காட்சி தனக்கு அநுபவ பூர்வமாகக் கிட்ட வேண்டியதாகும். கடவுள் இருக்கிறார் என்பதை வேண்டுமானால் அறிவால் திடப்படுத்திக் கொள்ளலாம்; இல்லை என்றும் அதே அறிவால் வாதிக்கலாம். ஆனால் கடவுள் தரிசனம் என்பது அறிவைப் பொறுத்த உண்மையன்று; ஆத்மாவைப் பொறுத்த உண்மை அது. ஆத்மா என்கிற தானே காணவேண்டிய அந்த உண்மையை யாரும் வாதத்தால் மறுக்க முடியாது — இத்தகைய அற்புதமான அமுத ஆர்வம் நரேந்திரரின் நனவிலும், நினைவிலும், கனவிலும் இடையறாது அலைமோதிக்கொண்டே யிருந்தது. அந்த அலைகளில் அறிவின் சுவர்கள் தகர்ந்தன; ஆத்மாவின் அந்தரங்க வழியான உள்ளுணர்ச்சி கண்களை மலர்த்திக்கொண்டு விழிப்புற்றது. அருமையான கனவுகள் கண்டார் நரேந்திரர். மானுட வாழ்வில் காணமுடியாத மர்மங்களும், சௌந்திரியங்களும் கனவு வாயிலாக அவருக்கு வாய்த்தன. எங்கோ உயர்நிலையில் ஊஞ்சலாடுவார் அவர். அப்படி ஊஞ்சலாடும் கிளுகிளுப்புடனே காலையில் கண்விழிப்பார். சத்திய வஸ்துவின் இந்தக் கனவுத் தோற்றங்கள் நரேந்திரருக்குச் சகஜமாகிவிட்டன. இந்த உலகமே சத்திய வஸ்துவின் கனவுத் தோற்றம்தானே?

இத்தனைக்கும் காரணமான குருநாதரை எண்ணுவார் நரேந்திரர்.

Koviloor Digital Library

அவரைக் குரு என்று ஏற்றுக் கொள்ளத் தாம் மறுத்ததையும் ''நான் உன்னை இலேசில் விட மாட்டேன். நான் தண்ணீர்ப் பாம்பல்ல; நல்ல பாம்பாக்கும்! உன்னைக் கடித்துவிட்டுத்தான் விடுவேன்'' என்று அவர் கூறியதையும் நினைந்து சிரித்துக் கொள்ளுவார்.

ஸ்ரீராமகிருஷ்ணப் பாம்பு கடித்ததால் நரேந்திரர் உடலில் விஷமா பரவிற்று? அமுதமல்லவா பரவியது? அமுதத்தைக் கக்கும் அதிசய நாகமாக அல்லவா அவர் இருந்தார்?

* * *

நரேந்திர நாதர் குடித்தனமும் குடிவாக்குமாக அமர வேண்டும்; நிறைந்த செல்வத்தை ஈட்ட வேண்டும் என விரும்பினார் விசுவநாத தத்தர். கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த நரேந்திரரை நிமாயி சரண போஸ் என்ற புகழ் படைத்த வழக்கறிஞரிடம் உதவியாளராகப் பயிற்சிக்கு அனுப்பினார். கலியாணத்துக்கும் ஆசை ஆசையாக ஏற்பாடுகள் செய்து வந்தார். நரேந்திரரோ தம் நண்பர்களிடம் ஆண்டிப் பரதேசி வாழ்க்கைபற்றிப் பேசி வந்த சமயம் அது.

அந்த நண்பர்களுக்கு நரேந்திரரின் போக்கு புரியவில்லை. ஏன் உலக வாழ்க்கைபற்றி எந்தத் திட்டமுமின்றி, சாதுவாகச் சஞ்சாரம் செய்வதுபற்றி அவர் பேசுகிறார் என்று வியந்தார்கள். 'வாழ்க்கையில் முன்னேறுவதற்கு உனக்கிருக்கும் வாய்ப்பு கொஞ்சமா, நஞ்சமா? ஏன் இப்படி ஊக்கமில்லாமல் இருக்கிறாய்?' என்று அவரைக் கேட்டார்கள். அந்தப் பேச்சைக் கேட்கவே அருவருத்துத் தோள்களைக் குலுக்கிக் கொண்டார் நரேந்திரர். புகழாம், பதவியாம், பணமாம், பவிஷாமே! யாருக்கு வேண்டியிருந்தது இதெல்லாம்? ''உலக வாழ்க்கை என்பது என்ன? ஒன்றிலிருந்து மற்றொன்றாக மாறி மாறிச் சஞ்சலிப்பதுதானே? சந்நியாசியோ மாறாத ஒரே பொருளில் வாழ்வதை நாடுகிறான். அவனுடைய வாழ்க்கைதான் வாழ்க்கை'' என்றார் நரேந்திரர். வாலிப முறுக்கும் துடிப்பும் நிறைந்த அவருடைய நண்பர்களிடம் அந்தப் பேச்சு எங்கேனும் எடுபடுமா? ''போதாத காலம்! இந்த நரேன் போய் அந்த தக்ஷிணேசுவரத்துக் கிழவரிடம் சிக்கிக் கொண்டுவிட்டான்! அவருக்கு இந்த உலகத்தைப் பற்றி எதுவும் தெரியாது. உலகத்துக்குத் தெரியாத கடவுளைத்தான் தெரியும். அதைப் பற்றிப் பேசிப்பேசி அவர்தான் நரேனுக்கு ஆசை எதுவுமில்லாமல் செய்து விட்டார்! அவனுடைய எதிர்காலத்தையே பாழாக்கி விட்டார்!'' என்று அந்த நண்பர்கள் குற்றம் கூறி வருத்தப்பட்டுக்கொண்டார்கள்.

Koviloor Digital Library

நாட்டின் எதிர்கால மேன்மையை அவர் நரேந்திரரிடம் ஒப்படைத்திருப்பதை அவர்கள் எப்படி அறிந்திருக்க முடியும்? அவர்கள் நல்லெண்ணத்துடனேயே தங்கள் நண்பர் நரேந்திரரிடம் கூறினர்கள்: ''நரேன், போதும் இந்தப் பரமஹம்ஸர் உறவு. உனக்குக் கொஞ்சமேனும் அறிவு இருந்தால் இனி அவரைப் பார்க்கப் போகாதே. உன்னுடைய படிப்பை எல்லாம் அதுதான் பாதிக்கிறது. உன்னுடைய எதிர்காலத்தையும் அது பாதிக்கும். உனக்கு இருக்கும் திறமைக்கு, இந்தத் தொடர்பைமட்டும் அறுத்துக்கொண்டு விட்டாயானல், எவ்வளவோ பேரும், புகழும், பொருளும் பெறுவாய்.''

இப்படி அவர்கள் அடிக்கடி போதிப்பார்கள். அவர்களுக்கு பாரமார்த்திக நாட்டத்தைப்பற்றி நரேந்திரரால் விளக்க முடியவில்லை. ஒரு நாள் அவர்கள் இவ்வாறு கூறியபோது நரேந்திரர் பெருத்த கிலேசத்துடன் கூறினர்: ''நான் என்ன செய்வேன்? உங்களுக்குப் புரியமாட்டேன் என்கிறதே......உங்களுக்கு மட்டும் தானு? நான் ஏன் இப்படிப் பரமஹம்ஸரை நாடுகிறேன் என்பது எனக்குமே புரியவில்லை. ஆமாம், எனக்குமேதான் புரியவில்லை. இருந்தாலும்......நான் அவரை அந்தக் கிழவனுரை, முனிவரை, ஸ்ரீராமகிருஷ்ணரை நேசிக்கிறேன்.''

உலகையெல்லாம் வெறுத்துதறிய ஒரு மகானுக்கும், உலகை விடுத்து ஆண்டியாக ஓட எண்ணிய ஒரு சுத்த ஆத்மாவுக்குமிடையே நிலவிய அந்த நேசத்தைத் தியானிப்போம்; பாசத்தைப் பணிவோம். நம் உள்ளத்துக்கு ஹிதமளிக்க அந்த அன்பைவிடச் சிறந்ததோர் ஔஷதம் கிடையாது.

* * *

விசுவநாத தத்தர் மட்டுமல்ல, புவனேசுவரி தேவிக்கும் விட்டு விளக்காக ஒரு மாற்றுப் பெண் வரவேண்டும் என்ற ஆசை கொள்ளையாக இருந்தது. உறவினர் எல்லாருக்குமே அப்பெருங் குடியின் மூத்த மகன் கிருஹஸ்த தர்மத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற விருப்பமிருந்தது. உலகுக்குக் கட்டுப்பட்டு வாழ நினைப்பவர்களுக்கான தர்மங்கள் உலகைவிட்டுவிட விரும்பியவருக்கு எப்படிப் பொருந்தும்? தூய்மையின் சிகரமாக விளங்க எண்ணியவரை 'மூத்த மகன்' என்பது போன்ற லௌகிக நிர்ப்பந்தங்கள் எப்படித் திருமணத்துக்கு இசையவைக்க முடியும்?

நரேந்திரர் மத நம்பிக்கை பெருமலிருந்தபோதும் இதய அந்தரங்கத்திலிருந்து பரிசுத்தத்தைப் போற்றியவர். அவரால் எப்படி அழுக்கு மயமான தாம்பத்தியத்தில் விழ முடியும்?

Koviloor Digital Library

எதுவும் சொல்ல முடியாமல், மெல்லவும் முடியாமல் தவித்தார். சர்வேசுவரியின் அருளில் தாமாகவே ஒவ்வொரு முறையும் விவாகப் பேச்சுக்கள் முறிந்துகொண்டே வந்தன. எல்லாரையும் தாயாகக் காணவேண்டியவனை இல்லறம் ஏற்கும்படி உலகத்தாய் விட்டு விடுவாளா, என்ன? அப்படி அவள் விடுவதற்கு அவளை விட வில்லை பரமஹம்ஸர். நரேந்திரரை பிரம்மசரியத்தின் பிம்பமாக உருவாக்கிவந்த அவர் திருமணப் பேச்சு நிகழ்ந்தாலே விசனமுற்று விடுவார். எப்படியோ அவருடைய விசனத்தை விநாசம் செய்து வந்தாள் அம்பிகை, தனது மறைந்திருக்கும் மாயா விலாஸத் தால்.

நரேந்திரர் தக்ஷிணேசுவரத்துக்குச் சென்று சிறிது நாட்க ளாகி விட்டால் பரமஹம்ஸரே அவரைத் தேடிக் கல்கத்தாவுக்கு வருவார் என்று முன்பு கண்டோமல்லவா? இப்படி ஒரு முறை நரேந்திரரின் இல்லத்துக்கு வந்த குருதேவருக்கு எங்கே தம் பிரிய சிஷ்யன் உற்றார் உறவினரின் வற்புறுத்தலுக் கிணங்கித் திருமணம் புரிந்து கொள்ளச் சம்மதித்து விடுவானோ என்று ஓர் அச்சம் ஏற்பட்டது.

எனவே அவர் பிரம்மசரியத்தின் மாண்பினை மாணவருக்கு எடுத்துரைக்கலானார்.

''பன்னிரண்டாண்டுகள் ஒருவன் பிரம்மசரியத்தை வழு வாது காத்து வந்தால் அவனுக்கு சூக்ஷ்மமான ஆற்றல்கள் கை கூடும். எதுவும் அவனுக்குப் புரியும். எதையும் அவன் கிர கித்துக் கொள்ளமுடியும். அதோடு எதையும் அவன் மறக்க மாட்டான். எல்லாவற்றுக்கும் மேலாக இந்தத் தூய்மை அவனுக்குப் பிரத்தியக்ஷமான தெய்வதரிசனத்தைத் தரும். ஒரு வரின் வாழ்க்கை பரிபூரணமாகத் தூய்மையாக இருந்தால்தான் பரமஞானமாகிய பரம்பொருளை அவன் அறிய முடியும்'' என் றெல்லாம் நரேந்திரருக்கு உபதேசித்தார் ஸ்ரீராமகிருஷ்ணர்.

இதை நரேந்திரரின் பாட்டியம்மை கேட்டுக் கொண்டிருந்து விட்டாள். மற்றவர்களிடமும் கூறிவிட்டாள். 'தக்ஷிணேசு வரத்துக் கிழவர்' அவர்களை யெல்லாம் பயமுறுத்தி விட்டார். அதுவும் புவனேசுவரி தேவி மிக மிகப் பயந்துவிட்டாள். தாத்தா வைப் போலப் பேரனும் கிளம்பி விடுவானோ என்று கதிகலங்கி னாள். பிள்ளையிடம் இதைப்பற்றி அடிக்கடி பேச்செடுத்தாள். ஆனால் அவரோ பேச்சை நாசூக்காக மழுப்பி மாற்றிவிடுவாரே யன்றி, பிடிகொடுத்து எதுவும் பதில் சொல்ல மாட்டார்.

நரேந்திரரின் காட்டில் மழை பெய்தது. விவாகப் பேச்சுக் கள் எவ்வளவு முற்றினாலும் எப்படியேனும் ஏதேனும் தகராறு

Koviloor Digital Library

நேர்ந்து பேச்சுக்கள் செயலாகாமல் அறுந்து போயே வந்தன. ஐ.ஸி.எஸ். மோகம் ஆரம்பித்திருந்த நாள் அது. இங்கிலாந்தில் சென்று ஐ.ஸி.எஸ். படிப்பது அதிருஷ்டங்களில் முதலாவதாகக் கருதப்பட்டு வந்தது. நரேந்திரருக்குத் தம் பெண்ணைமட்டும் தருவதோடன்றி, அவர் இங்கிலாந்து சென்று ஐ.ஸி.எஸ். படிக்கவும் வசதியாகக் கொழுத்த வரதக்ஷிணை தருவதாக ஒரு செல்வந்தர் முன் வந்தார். ஒருவாறு இந்த சம்பந்தம் ஏற்பட்டுவிடும் போலவே ஆகிவிட்டது. ஆனால் இதுவும் முறிந்துதான் போயிற்று. மிகவும் துயரமான முறையில் இந்த முறிவு ஏற்பட்டது. விசுவநாத தத்தர் திடீரென மாண்டு போனதுதான் இந்த முறிவு ஏற்பட்டதற்குக் காரணமாகும்.

1884-ம் ஆண்டு நரேந்திரர் பீ.ஏ. பரீக்ஷை கொடுத்தார். இன்னும் முடிவுகள் வெளியாகவில்லை. கல்கத்தாவுக்கு அருகேயிருந்த வர நகரம் என்ற இடத்தில் இருந்த சிநேகிதன் ஒருவனைக் காண்பதற்காக நரேந்திரர் ஒரு நாள் மாலை சென்றிருந்தார். இரவாகும் வரையில் இளைஞர்கள் வம்பளந்து கொண்டு பொழுதைக் கழித்தனர். ஆட்டமும் பாட்டமுமாக அமர்க்களப் படுத்திக் கொண்டிருந்தனர். அந்த உற்சாகம் மிகுந்த சமயத்திலே நரேந்திரரின் வீட்டிலிருந்து ஓர் ஆள் வந்தான். விசுவநாத தத்தர் மாரடைப்பால் திடீரெனக் காலமாகிவிட்டார் என்ற மாபெரும் துக்கச் செய்தியை அறிவித்தான். நரேந்திரர் அதிர்ந்து போய் ஸ்தம்பித்து விட்டார். இயந்திரம் போலக் கல்கத்தாவுக்கு ஏகினார்.

அவருக்கு எத்தனையோ சுக சௌக்கியங்களை அளித்த தந்தை, அவரை எப்படி யெல்லாமோ அருமை பெருமை செய்த அன்புத் தந்தை, தந்தையாக மட்டுமின்றித் தோழனாகவும் இருந்து நரேந்திரரது புத்திக்கூர்மையை மேலும் சாணை பிடித்து, அவரது கலை ஞானத்தை மேலும் தூண்டி வைத்த விசுவநாத தத்தரின் உடலம் அதில் குடிகொண்டிருந்த உல்லாஸமும், உற்சாகமும் கொண்ட ஆத்மாவை இழந்து சடலமாகக் கிடந்தது. பக்கத்தில் சர்வ மங்களமும் பொருந்திய புவனேசுவரி பயங்கரமான அமங்கலம் தீண்டி அலறிக் கொண்டிருந்தாள். நரேந்திரரின் மூத்த சோதரிகள் இருவர், இளைய சோதரர்கள் இருவர் எல்லாரையும் காணக் காண நரேந்திரரின் இதயம் குமிறிக் குமிறி எழுந்தது.

எல்லாரும் நரேந்திரருக்காகத்தான் காத்துக் கொண்டிருந்தார்கள். தர்ம தாதாவான விசுவநாத தத்தர் அந்த இல்லத்தை விட்டு நிரந்தரமாகப் புறப்படுவதற்கு — யாரும் தவிர்க்கமுடியாமல் புறப்படுவதற்கு சிலர் காத்திருந்தார்கள். மூத்த மகனாகப்

Koviloor Digital Library

பிறந்த நரேந்திரர் விசுவநாத தத்தருக்கு ஈமச் சடங்குகள் செய்தார்.

* * *

விசுவநாத தத்தர் மறைந்த பின்புதான் அந்தப் பயங்கர உண்மை தெரிந்தது — இத்தனைநாளும் ராஜ போகமாக வாழ்ந்து வந்த அந்தக் குடும்பம் இன்று ஓடேந்தும் நிலையில் உள்ளது என்பதே அந்த உண்மை. விசுவநாதர் இரண்டு கையாலும் சம்பாதித்தது மெய்தான். ஆனால் சம்பாதித்ததையும், சம்பாதித்ததற்கு மேலாகக் கடன் வாங்கியும், அவர் நாலு கைகளால் செலவு செய்திருக்கிறார் என்பது அவர் மறைந்த பின்தான் தெரிந்தது. தம் பிரத்தியேக வாழ்வின் பகட்டினால்மட்டும் அவர் கடனாளியாக இருக்கவில்லை. வீட்டையே அன்ன சத்திரமாக்கி வந்தவருக்கெல்லாம் வாரி வழங்கியதால்தான் இன்று தம் குடும்பத்தை அவல நிலையில் விட்டுச் சென்றுவிட்டார்.

விசுவநாத தத்தரைத் தவிர அந்த வீட்டில் சம்பாத்தியம் உள்ளவர் யாரும் கிடையாது. சொத்து சுதந்திரம் எதுவும் அவர் வைத்துப் போகவில்லை. இனி......இனி ?

கடன் கொடுத்தவர்கள் கதவைப் பிளந்தார்கள். உதவி பெற்றவர்கள் ஓடினார்கள். விசுவநாத தத்தர் கைதூக்கிவிட்ட பல உறவினர்களே இன்று அந்தக் குடும்பத்துக்கு எதிரிகளாக நின்றார்கள். கணக்கில் வராதபடி தாங்கள் பெற்ற லாபங்களை மறந்து அந்த வீட்டில் பாத்தியதை கோரினார்கள். பாத்தியதை மட்டுமன்று; விசுவநாத தத்தரின் மனைவியையும் மக்களையும் அந்த மனையை விட்டே விரட்ட முடிவு செய்து விட்டார்கள். தாவா தொடர்ந்தார்கள்.

ராணியாக வாழ்வாங்கு வாழ்ந்த புவனேசுவரி தேவி கூனிக் குறுகிப் போனாள். வைதவ்யமும், வறுமையும் வந்துற்றது போதாதென்று வழக்கும், வியாஜ்யமும் வேறா ? மானத்துக்குப் பெயர்போன அந்தக் குடும்பத்தின் விஷயங்கள் ஊரறிய நாடறிய நீதி மன்றத்திலா அற்றுபடியாக வேண்டும் ? காசிநாதன் ஏன் இப்படி ஒரேயடியாகக் கைவிட்டுவிட்டான் ? கலங்கிக் குழம்பி வெதும்பினாள் புவனேசுவரி.

வாய்க்கும், வயிற்றுக்கும் வழியில்லாத கோர நிலையில், கல்லூரிப் படிப்போடு 'ஒய்வு' காலத்தில் தொழிலும் தேடிய நரேந்திரர் நீண்ட பல நாட்களுக்கு நீதி மன்றத்திலும் ஏறி, இறங்க வேண்டியதாயிற்று. விசாரணையின்போதுதான் எத்தகைய வினாக்கள் ! மறைந்துபோன தந்தையைப் புரிந்து

Koviloor Digital Library

கொள்ளாதவர்கள் தனயனைக் குத்திக் குடைந்தெடுத்தார்கள். எவ்வாறே நரேந்திரரின் நெஞ்சுரம் அவ்வளவையும் தாங்கிக் கொண்டது. தந்தையைப் போலவே தனயனும் காட்டிய உறுதி தான் புவனேசுவரிக்குச் சிறிதேனும் உயிரூட்டியது.

நன்ருக ஒளி பரவி விளங்கும் பட்டப் பகலில் திடீரென்று கருமேகங்கள் சூழ்ந்து கொண்டாற்போல் அந்த இல்லத்தை துர் பிக்ஷம் பிடித்துவிட்டது. பீ. ஏ. வகுப்புவரை ஒரு குறைவுமின்றி கல்லூரிக்குச் சென்று கொண்டிருந்த நரேந்திரர் பி. எல். படிப்பு தொடங்கியவுடன் கல்லூரியின் ஏழை மாணவர்களில் ஒருவர் ஆனர். செருப்புப் போட்டுக்கொள்வதுகூட டாம்பீகம் என்று எண்ணும் நிலை ஏற்பட்டது. மோட்டாத் துணிகளும், பழை, பாதரட்சையும் அணிந்து, வயிற்றுப் பசிதீரக்கூட உண்ணுமல் கால் நடையாகவே நரேந்திரர் கல்லூரிக்குச் செல்ல வேண்டிய தாயிற்று. அப்போதும் தமது தன்மானத்தை அவர் காப்பாற்றிக் கொண்டது வியக்கத் தக்கதாகும். பசியினுல் தலைசுற்றி மயக்கம் வரும் காலங்களில்கூட மனே திடத்தால் களைத்து விழுந்து விடா மல் காத்துக்கொண்டு நண்பர்களுடன் உரையாடுவார் அவர். அவ்வாறு பேசிக்கொண்டிருக்கும்போது நண்பர்கள் ருசியான உணவு வகைகள் ஏதேனும் தருவித்தால் உடனே நரேந்திரருக்கு வீட்டில் தமது அன்னையும் உடன் பிறந்தோரும் வாடி நிற்பது நினைவு வந்து விடும். ஏதோ அவசர அலுவல் இருப்பதாகச் சொல்லிக்கொண்டு நண்பர்களுடன் உண்ணுமல் கிளம்பிவிடுவார். வீட்டுக்கு வந்தாலோ நண்பர்களுடன் உண்டுவிட்டதாகக் கூறிப் பட்டினி கிடப்பார். தமக்காக ஒதுக்கி வைத்திருந்த உணவை யும் மற்றவர்கள் பகிர்ந்து கொள்வதைக்கண்டு மனது நிரம்பி மகிழ்வார். உடலின் பட்டினியைவிட உள்ளப் பட்டினிதானே பெரியது ?

நரேந்திரர் விவேகானந்தராகிப் பின்பு இந்த உலகிலிருந்து மறைந்த பின்னும் புவனேசுவரி தேவி உயிர் வாழும் துர்த் தசையைப் பெற்றிருந்தார். அப்போது அவர் தமது தவப் புதல்வரை எண்ணும்போதெல்லாம் தங்களுடைய வறுமைக்காலத் தில் நரேந்திரர் செய்த தியாகங்களைத்தான் உருகி உருகிச் சொல்லு வார். நரேன் வெளி யுலகுக்குத் தமது மன வேதனையைக் காட்டிக் கொள்ளாமல் உற்சாகமாகவே யிருப்பது போலவே தோன்றி, மற்றவர்களுக்கும் தைரியமூட்டுவாராம். உல்லாசப் பயணம், அது இது என்று சொல்லிக்கொண்டு பணக்கார வீட்டு இளவட்டங்கள் சாரட்டில் வந்து நரேந்திரரை அழைத்துச் செல்லும் போதெல்லாம், தம்முடைய பழைய — புதிய ஐசுவரிய

Koviloor Digital Library

மாறுபாடுகளைச் சிறிதும் எண்ணுமல் அவர்களுடன் இயற்கையாக இணைந்து நரேந்திரரும் கொண்டாட்ட மடிப்பாராம்.

ஆனால் எத்தனை நாள் இப்படி மனக்குமைச்சலை மூடி மூடி வைக்க முடியும்? விட்டுப் பாடோ பெரும்பாடாகிக்கொண்டு வந்தது. சட்டப்படிப்பு பயின்றுவந்த நரேந்திரர் துணையாக ஒரு உத்தியோகமும் தேடவேண்டிய தாயிற்று. வித்யாஸாகரர் ஸ்தாபனங்களில் ஒன்றில் ஓய்வு நேரத்தில் வேலை பார்க்கலானார். அது சரிப்படவில்லை. வேறு வேலை தேடிக் கல்கத்தா மாநகரத்தில் ஒவ்வோர் அலுவலகமாக ஏறி இறங்கலானார். 'நண்பகலில், வெறும் காலோடு, வயிற்றைப் பசி கிள்ளி எடுக்க எவ்வளவோ அலைந்திருக்கிறேன்' என்று பிற்காலத்தில் விவேகானந்தர் கூறியிருக்கிருர். கால் வலிக்கச் சுற்றியும், கை வலிக்க விண்ணப்பங்கள் எழுதியும் பயனில்லை. சென்ற விடமெல்லாம் கதவை முகத்தில் சாத்தாத குறைதான். 'நம்ம நரேன் தம்பி நம்மிடமே வேலைக்கு வந்து விடட்டுமே' என்று விசுவநாத தத்தரிடம் இனிக்க இனிக்கப் பேசியவர்களெல்லாம் இன்று முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள். விசுவநாத தத்தரிடமிருந்து எவ்வளவோ லாபங்களை அடைந்தவர்களெல்லாம் இன்று அவர் புத்திரனிடம் கை விரித்தனர். உலகம் என்ருல் என்ன என்று நரேந்திரர் அறிந்தார். மண்ணினுடைய தரத்தை அறிந்தால் தானே அதனைக் குயவன் பொம்மையாக உருவாக்க முடியும்? மக்களின் குணத்தை — நற்குணம், தீயகுணம் இரண்டையுமே — உள்ளவாறு அறிந்தால் அன்றி ஓர் ஆசாரிய புருஷனுல் அவர்களை எப்படிச் செவ்வையாக, செம்மையாக உருவாக்க முடியும்? மனித இயல்பின் உள்ளே பொதிந்துள்ள தேவத் தன்மையைப் போலவே அசுரத் தன்மையையும் கண்டு கொண்டார் நரேந்திரர். அந்தத் தேவத்தன்மையையும் இதே சமயத்தில் மேலும் நன்கு உணர்ந்து வந்தார். அன்னை புவனேசுவரியின் தாய்மையிலுள்ள தூய்மையை அப்போதுதான் அவர் உள்ளபடி கண்டு கொண்டார். தனக்காக அவள் செய்யும் தியாகத்தைக் கண்டு தாமும் அவளோடு தியாகப் போட்டியில் இறங்கினுர். அன்னையும் மகனும் முன் எப்போதையும்விட மிக மிக நெருக்கமாக அன்பில் வாழ்ந்தனர். ஆனுல் இந்த அன்பையும், அதிலுள்ள தெய்விகத்தையும், அநுபவித்து வந்த நரேந்திரரோ, எப்படி நம்மிலுள்ள ஆத்மாவை — ஆத்மாவிலுள்ள நம்மை — அறியாமலே நாம் வாழ்கிருேமோ, அதேபோல அன்பின் அற்புத சக்தியை அறியாமலே அநுபவித்து வந்தார். அவர் அப்போது அறிந்தது உலகத்திலுள்ள தீமைகளை மட்டும்தான். வறுமையும், வறுமை காரணமாக ஏற்பட்ட உடல்

Koviloor Digital Library

நலிவும் உள்ளத்து நொய்மையும், வறுமையை நீக்கிக் கொள்வதற்காக யாரை நாடினரோ அவர்களிடம் காணப்பட்ட கடின சித்தமும் உலகத்தைப்பற்றியே நரேந்திரர் நம்பிக்கை இழந்து விடுமாறு செய்துவிட்டன. உலகத்தை அன்புருவான கடவுள் படைத்து நடத்தவில்லை — ஒரு ராக்ஷஸ சக்திதான் இயக்கி வருகிறது என்று எண்ணத் தலைப்பட்டார்.

இருந்தாலும் தம்மையுமறியாமலே காலையில் அவர் எழுந்தவுடன் அவரது நாவு பரம்பொருளைப் பிரார்த்திக்கும். ஆண்டவனை வேண்டிக் கொண்டுதான் அவர் பிரதி தினமும் வேலை வேட்டையைத் தொடங்குவார். ஒரு நாள் அவர் இவ்வாறு பிரார்த்திப்பதைக் கண்ட புவனேசுவரிக்கு — பக்தியே உருவான புவனேசுவரிக்கு — காசி விசுவநாதனை உள்ளும் புறமும் கண்ட புவனேசுவரிக்கு — ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்துவிட்டது. "நரேன், உனக்கு புத்தியில்லை? நிறுத்து இந்த பிரார்த்தனையை. பிறந்த நாளாகத் தொண்டை வறண்டு போகுமளவுக்கு உன் ஆண்டவனிடம் கதறி வந்ததில் என்ன கண்டாய்? உனக்கு அவன் என்ன செய்துவிட்டான்?" என்று படபடத்தாள்.

பிரத்தியக்ஷமாகத் தனது வேண்டுகோளுக்கு விசுவேசுவரன் செவி சாய்த்துப் பிள்ளை வர மளித்ததைக்கண்ட புவனேசுவரியே காலத்தின் கொடுமையால் இப்படிக் கேட்டாள்.

நரேனின் உள்ளத்தில் ஆழத்தைத்து விட்டது அந்த வினு. 'ஆகா, உண்மையில் கடவுள் என்றே ஒருவர் கிடையாதா? இருந்தால் தன் குழந்தைகளை இப்படி வாட்டி வறுத்திப் பார்ப்பாரா அவர்? கிறிஸ்தவ வேதத்தில் அருள்மயமான ஆண்டவன், இருள்மயமான சாத்தான் என்று இரண்டாகச் சொல்கிறுர்களே — அந்தச் சாத்தானிடமேதான் இந்த உலகைக் கடவுள் ஒப்புக் கொடுத்து விட்டாரா? இல்லையென்ருல்....இல்லையென்ருல்.... கருணுமயமான கடவுளையும் கஷ்டமயமான உலக வாழ்க்கையையும் இணைத்துப் பார்க்கவே முடியவில்லையே!'

தக்ஷிணேசுவரத்துத் தபோதனரின் சங்கத்திஞல் சிறிது சிறிதே ஐயம் நீங்கி அகக்கண் சிறிதே மலர்த்தப்பெற்ற நரேந்திரரை இப்போது மீண்டும் ஐயம் நெருங்கிப் பிடித்து விட்டது. அகக்கண்கள் இருட்டிக் கொண்டு வந்தன.

நரேந்திரரின் பக்தி பழுதுபட்டு இடிந்து விழுந்தது. நரேந்திரரால்தான் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேச முடியாதே! எனவே அவர் இப்போதும் தம் மனத்திலிருப்பதையெல்லாம் நண்பர்களிடமும், மற்றவர்களிடமும் ஒளிவு மறைவின்றிக் கூறத் தொடங்கினர். 'கடவுள் என்பது வெறும் கற்

Koviloor Digital Library

பனே. அல்லது கற்பனே இல்லாமல் உண்மையாயினும் அந்தக் கடவுளுக்குக் கருணை என்பது கிடையாது. அவரிடம் பிரார்த்திப் பதில் பயன் ஏதும் கிடையாது' என்றெல்லாம் பேசலானுர். நரேந்திரர் நாஸ்திகராகி விட்டார் என்ற பேச்சு எழத் தொடங் கிற்று. அதோடு மட்டுமின்றி, தெய்வத்திடம் பயம் போய் விட்டதால் அவர் தீய நெறியில் செல்ல ஆரம்பித்துவிட்டார் என்றும் கதைகள் பிறந்தன.

முன்பே நாம் கண்டோம்: தெய்வத்திடம் நம்பிக்கை யில்லாத காலத்தும் நரேந்திரர் தூய்மையிடம் நம்பிக்கை கொண் டிருந்தார்; பிரம்மச்சரியம் அவருடன் பிறவியோடு பிறந்தது — என்று. பரிசுத்தமான அந்த நரேந்திரரைக் குறித்துத்தான் இத் தகைய பயங்கரமான அபவாதம் எழுந்தது. 'பனிக்கட்டியைப் போல புனிதமாக இருந்தாலும் நீங்கள் பழிக்குத் தப்பமுடியாது' என்று ஷேக்ஸ்பியர் கூறியது நரேந்திரர் விஷயத்தில் உண்மை யாயிற்று. ஆங்கிலக் கவி பனிக்கட்டியைத் தூய்மைக்கு உவமித் தார். நாமோ 'நெருப்பைப் போல சுத்தமானவர்' என்கிருேம். கோரமான அநுபவத்துக்கு ஆளான கற்புத் தெய்வம் சீதா பிராட்டி நெருப்பில் இறங்கியே தன் தூய்மையை நிரூபித்தாள். குழந்தைப் பருவத்தில் ஜானகியை வழிபட்டு, இன்று ஜானகி போலவே நிந்திக்கப்பட்ட நரேந்திரரோ தமது தூய்மையை நிரூபிக்க முயலவில்லே. மக்களின் மடமையைக்கண்டு அவருக்கு எரிச்சல்தான் உண்டாயிற்று. வாதத்திறமையில் சிறப்புப் பெற்றிருந்த நரேந்திரர் இப்போது அந்த ஆற்றலே விபரீதமாகப் பயன்படுத்திக் கொண்டார். ''பாழாய்ப்போன இந்தத் துக்க சம்சாரத்தில் ஏதோ சிறிது பொழுது அந்த துக்கங்களே மறந்து ஆனந்தமாயிருக்கலாம் என்று யாரேனும் எண்ணித் தப்பான வழியில் சென்ருல் அது ஒன்றும் அப்படிக் கண்டனத்துக்குரியது அல்ல. இம்மாதிரி இன்பம் கிடைக்கும் என்று எனக்குத் தோன் றினுல் நானும் யாருக்கும் அஞ்சாமல் அந்த மார்க்கத்தில் செல்லுவேன்'' என்று அவர் கூறலானுர். குடிகாரர்களுக்கும், நெறி பிறழ்ந்தவர்களுக்கும் உபசரணே அளித்த விசுவநாத தத்தர் அவர்கள் அவ்வாறு தவறுதல் செய்வதற்குக் காரணம் வாழ்க் கையில் அவர்கள் உற்ற இன்னல்கள்தான் என்று கூறி அவர்களே ஒரு போதும் கைவிடாதிருந்தார் அல்லவா ? இதே கருணே மனப் பான்மையின்மீது நரேந்திரர் கூறிய சொற்கள் அவரைப்பற்றி இல்லாத பொல்லாத அபாண்டங்களெல்லாம் பிறக்க ஏதுவாயின.

புனிதத்தின் புகலிடமான பரமஹம்ஸ தேவரின் செவிகளி லும் இந்த அசங்கியமான செய்திகள் விழுந்தன. அவரது பக்தர்கள்

Koviloor Digital Library

சிலர் கல்கத்தாவுக்கே வந்துவிட்டனர். தாங்கள் கேள்விப்படும் விஷயங்களை ஒருவாறு நரேந்திரரிடம் கூறினார்கள். அவற்றில் சிலவற்றையேனும் தாங்கள் நம்புவதாகவும் குறிப்புக்காட்டினர்.

இதுபற்றி சுவாமி விவேகானந்தர் கூறுவதைக் கேளுங்கள்:

''அவர்கள் என்னைப்பற்றி எவ்வளவு இழிவாக எண்ணுகிறார்கள் என்பது தெரிந்தவுடன் என் தூய்மையைப் பற்றி நான் கொண்டிருந்த பெருமிதம் புண்ணுண்டது. அந்தப் புண்வலி என் இதயத்தை நிரப்பியது. அளவில்லாத தொரு சலிப்பு எனக்கு உண்டாயிற்று. எனவே, தவறாக நடந்தால் நரகத்துக்குச் செல்வோம் என்ற பயத்தின்மீது கடவுளை நம்புவது கோழைத்தனம் என்று அவர்களிடம் தெளிவாகக் கூறினேன். பல மேல்நாட்டுத் தத்துவ விசாரணைகளின் துணைகொண்டு கடவுள் உண்டா, கிடையாதா என்பது குறித்தும் அவர்களுடன் விவாதம் புரியலானேன். விளைவு: திருத்தமுடியாதபடி நான் கெட்டுப் போனேன் என்றே அவர்கள் முடிவு கட்டிவிட்டு என்னிடமிருந்து விடைபெற்றுக் கொண்டார்கள். இதிலும் எனக்கு மகிழ்ச்சியே. ஒரு வேளை ஸ்ரீராமகிருஷ்ணரும்கூட இவர்களைப் போலவே எண்ணி விடுவாரோ என்று ஓர் எண்ணம் எழுந்தது. அந்த எண்ணம் மட்டும் என் கட்டுப்பாட்டை மீறி என்னை உறுத்தியது. 'அதனாலென்ன?' என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன். 'இத்தகைய புல்லிய ஆதாரங்களின்மீது ஒருவரின் நல்ல அபிப்பிராயமோ கெட்ட அபிப்பிராயமோ எழுமானால் அவரைப்பற்றி நான் ஏன் கவலைப்படவேண்டும்?'

''பிறகுதான் குருநாதர் இந்தச் செய்தியை எவ்விதத்தில் ஏற்றுக் கொண்டார் என்பது எனக்குத் தெரிந்தது. அது என்னை அயரவைத்து விட்டது. முதலில் அவர் இப்படியோ, அப்படியோ, எதுவுமே சொல்லாமல் உணர்ச்சியின்றிதான் விஷயத்தைக் கேட்டுக் கொண்டாராம். பிறகு அவரது அபிமான சிஷ்யரான பவ நாதர் கண்ணீர்மல்க, ''சுவாமி, நரேந்திரன் இவ்வளவு தாழ்வாகச் செல்வான் என்று நான் கனவுகூட கண்டதில்லை'' என்று கூறினாராம். உடனே குருதேவருக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்துவிட்டதாம். ''மடையா, நிறுத்து! இது இவ்வாறு இருக்கமுடியாதென்று அன்னை எனக்குச் சொல்லி விட்டார். இதுபோல நீ இன்னொரு முறை பேசினாயானால் நான் உன்னுடன் முகாலாபனம் பண்ண மாட்டேன்'' என்றாராம்.

''இப்படியெல்லாம் நாஸ்திகத்தை நான் என்மீது வற்புறுத்திச் சுமந்து கொண்டாலும், என் இளவயது தொட்டு நான் அநுபவித்த தெய்விகக் காட்சிகளின் பசுமையான நினைவும்,

Koviloor Digital Library

முக்கியமாக ஸ்ரீராமகிருஷ்ணருடன் பரிசய மேற்பட்டபின் எனக்கேற்பட்ட அநுபவங்களும் 'கடவுள் நிச்சயம் இருந்தே யாக வேண்டும்' என்ற எண்ணத்துக்கே என்னை இட்டுச் சென்றன. 'இல்லாவிடில் வாழ்க்கைக்குப் பொருள் ஏது?' என்று எண்ணினேன். 'எல்லா இன்னல்களுக்கும் இடர்ப்பாடுகளுக்கும் இடையே நான் அந்த வழியைக் கண்டு கொள்ளவேண்டும்' என்று எண்ணுவேன். நாட்கள் நகர்ந்தன. மனது ஐயத்துக்கும் உறுதிக்குமாக ஊஞ்சலாடிக் கொண்டிருந்தது. பொருள் தேவையும் அப்படியேதான் இருந்து வந்தது.''

ஒவ்வொரு சமயம் ஐயம் மேலோங்கி நின்றது. ஐயத்துக்கும் மேலேபோய் 'கடவுள் கிடையாது' என்று நிச்சயமாக நினைக்கும் நிலைகூட ஏற்பட்டது. ஒரு நாள் ஆச்டெர்லோனி நினைவுச்சின்ன மைதானத்தில் நரேனும் நண்பர்களும் அமர்ந்திருந்தனர். நரேந்திரருக்கு ஆறுதலாக இருக்கவேண்டும் என்றே தான் போலும், நண்பன் ஒருவன் கடவுளின் கரைபுரளும் கருணையைப்பற்றி ஒரு பாட்டு பாடலானான். நரேந்திரருக்கு அது சகிக்கவே முடியவில்லை. மண்டையில் யாரோ நொக்குவது போலிருந்தது. அளவுகடந்த மனக்கசப்புடன், ''தயவுசெய்து அந்தப் பாட்டை நிறுத்த மாட்டாயா? வீட்டிலே பசியும் பட்டினியுமாக உறவினர்கள் இல்லாமல், பிறக்கும்போதே வாயில் வெள்ளி ஸ்பூனுடன் பிறந்து வாழ்கிறார்களே, அவர்களுக்குத்தான் இந்தக் கற்பனைகளெல்லாம் ரம்யமாக இருக்கும். ஏன், நானே கூட இம்மாதிரி கற்பனை எல்லாம் செய்து கொண்டதுண்டு. ஆனால் இன்று வாழ்க்கையின் அசைந்து கொடுக்காத உண்மைகளின் முன்னால் நிற்கும்போது அதெல்லாம் ஏதோ பயங்கரமான கேலிக்கூத்தாகத்தான் தோன்றுகிறது'' என்றார்.

இப்படி நாஸ்திகத்தின் கோடிக்குச் சென்றவரே ஆஸ்திகத்தின் கோடிக்குச் சென்றதையும் பார்ப்போம்.

நரேந்திரர் எந்தவிதமான தீய செயல்களைச் செய்ததாக அபவாதம் மூண்டதோ அதே தீய செயல்களைப் புரியுமாறு நரேந்திரரை ஊக்கியவர்களும் உண்டு. நரேந்திரருடைய பழைய நாள் சகாக்கள் சிலர் இந்த வியாபாரத்தையே ஜீவனோபாயமாகக் கொண்டிருந்தார்கள். நன்றாகப் பணமும் பண்ணியிருந்தார்கள். அவர்களுக்கு உண்மையாகவே நரேனிடம் அநுதாபம் உண்டாயிற்று. இந்த உலகத்திலுள்ள எத்தனையோ விசித்திரங்களில் இதுவும் ஒன்று. ஆசார சீலர்களாகச் சிறிதுகூட அப்பழுக்கற்ற தூய வாழ்வு வாழும் சிலர் அன்பு என்றால் இன்னதென்றே தெரியாமல் வாழ்கிறார்கள். பாபக் குவியல்களைச் சேமித்து வைத்

Koviloor Digital Library

துள்ள வேறு சிலரிடமோ வேறெங்கும் காணமுடியாத இரக்கத்தையும் தயையையும் காண்கிறோம். நரேந்திரரின் இன்னலைத் தீர்க்க யாரும் முன்வராதபோது நடத்தை பிசகிய நண்பர்கள் இப்படித்தான் அவரிடம் அன்புகாட்டித் தம்முடன் சேர அழைத்தனர். நரேன் மறுத்து விட்டார். பணக்கார மாது ஒருத்தி அவருடைய வறுமையை எல்லாம் தீர்த்துவைப்பதாக வாக்களித்து, இங்கே எழுதுவதற்குக்கூட கூசவேண்டிய செயலுக்காக அழைப்பு விடுத்தாள். இன்னொரு ஸ்திரீயிடமிருந்தும் — ஸ்திரீ என்று சொல்வது பொருத்தம்தானா? — அழைப்பு வந்தது. அப்போதுதான் தம்மையுமறியாமல் ஆஸ்திகத்தில் ஆழ வேரூன்றி நரேந்திரர் சொல்வார்: ''உடல் இன்பத்தை வேண்டி நீங்கள் உங்கள் வாழ்வையே வீணாக்கிக்கொண்டாயிற்று. மரணத்தின் இருண்ட நிழல் உங்கள்முன் விழுந்திருக்கிறது. அதனைத் தைரியமாக எதிர்ப்பட நீங்கள் ஏதேனும் செய்ததுண்டா? இந்த அழுக்கான ஆசைகளை விடுங்கள்; பரமனை மட்டுமே நினைவில் கொள்ளுங்கள்.''

* * *

நரேந்திரநாத தத்தருக்கு நல்ல நண்பன் — நட்பிலும் நல்லவன், நடத்தையிலும் நல்லவன் — ஒருவன் இருந்தான். வெளியில் சாப்பிடுவதாக அன்னையிடமும், வீட்டில் சாப்பிடுவதாக வெளியிடத்திலும் கூறிவந்த நரேன் எத்தகைய தாரித்திரியத்துக்கு இலக்காகியிருக்கிறான் என்பது அந்த நண்பனுக்கு மட்டும்தான் தெரியும். அதனை நீக்கத்தான் ஏதும் உதவிசெய்தாலும் அந்த உதவியை நரேன் வீட்டினர் ஏற்கமாட்டார்கள் என்பது அவனுக்குத் தெரியும். எனவே தன் பெயர் தெரியாமல் மிகவும் நாசூக்காக நரேந்திரரின் வீட்டுக்குப் பலவிதங்களில் அவன் உதவி வந்தான். அவனுடைய பெயரை விவேகானந்தருமே நமக்குத் தெரிவிக்கவில்லை.

மற்ற நண்பர்கள் எல்லாரும் நரேந்திரர் தமது தந்தையின் பிரிவை ஆற்றமாட்டாமல்தான் இளைத்து வருகிறார் என்று எண்ணி வந்தார்கள்.

* * *

இந்தக் காலத்தைக் குறித்து இனி சுவாமிஜியின் வார்த்தைகளையே கேட்போம்:

''கோடைக்காலம் முடிந்தது; மழை தொடங்கியது. வேலை வேட்டை முடியாமல் நடந்து வந்தது.

''அன்று முழுவதும் அன்ன ஆகாரம் கிடையாது. நன்றாக மழையில் நனைந்துகொண்டு அலைந்தாயிற்று. அங்கங்களெல்லாம்

Koviloor Digital Library

களைத்து, உள்ளமும் தளர்ந்துபோய் மாலையில் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தேன். சோர்வு எல்லைமீறிப் போயிற்று. ஓர் அடிகூட எடுத்துவைக்க முடியவில்லை. அந்தத் தெருவிலிருந்த ஒரு வீட்டின் வாசல் தாழ்வாரத்தில் அப்படியே துவண்டேன். சிறிதுபோது எனக்கு ஸ்மரணை இருந்ததா இல்லையா என்றுகூட எனக்கு நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. அப்புறம் நானு விதமான சிந்தனைகள் என் மனதில் திரண்டன. அவற்றை விரட்டியடிக்கவோ, ஏதேனும் ஓர் எண்ணத்தில் உள்ளத்தை ஆழ்ந்து செலுத்தவோ இயலாத பலவீன ஸ்திதியில் இருந்தேன். திடீரென ஓர் உணர்ச்சி, ஏதோ ஒரு தெய்வீக சக்தி என் ஆத்மாவை மூடியிருந்த பல உறைகளை ஒன்றன்பின் ஒன்ருகக் கழற்றி எறிவது போலத் தோன்றியது. '(நீதிப்படி ஜீவர்களைக் கடவுள் தண்டிக்கிருர் என்ருல் அவரைக் கருணை உள்ளவர் என்று சொல்வது எப்படி?) கடவுளிடம் நீதி கருணை இரண்டும் எப்படி இணைந்து வாழமுடியும்? ஆனந்தமயமான கடவுள் எப்படித் துன்பங்களைப் படைத்திருப்பார்? — இப்படி என்னைக் குழப்பிய ஐயங்களெல்லாம் தம்மைத் தாமே தீர்த்துக் கொண்டன. எனக்குள்ளேயே ஆழ்ந்து நோக்கிக் கொண்டதால் இதற்கெல்லாம் எனக்குப் பொருள் புரிந்துவிட்டது. மன நிறைவு பெற்றேன். வீட்டுக்கு மறுபடியும் புறப்பட்டுச் செல்லும்போது உடலில் சோர்வு என்பது சிறிதுகூட இருக்கவில்லை. உள்ளமும் ஓர் அற்புதமான பலமும் அமைதியும்கூடி புத்துணர்ச்சி பெற்றிருந்தது. அப்போது இரவும் முடியும் தறுவாய்.''

* * *

நம்மையெல்லாம் குழப்பும் கேள்விகள் நரேந்திரரையும் குழப்பியிருக்கின்றன.

'தர்மம் என்பது கடவுள் விதித்த நீதி. தர்மத்தை அநுசரிக்காதவர்களை ஆண்டவன் நீதிபதியாக இருந்து தண்டித்தே ஆகவேண்டும். இதைத்தான் கர்மப்பயன் என்கிருேம். இப்போது நாம் நல்லவராக வாழ்ந்தும் சில பல துன்பங்களுக்கு ஆளானுல் அதற்குக் காரணம் சென்றுபோன பிறவியில் நாம் செய்த தீவினைதான்; அதேபோல இன்று நாம் தர்ம வாழ்வு வாழாவிடினும் சுப சௌக்யாதிகளை அடைந்து வருகிருேம் என்ருல் அதற்குக் காரணம் சென்றுபோன பிறவியில் நாம் செய்த நல்வினைதான். வினைக்கு என்று தனியாக உயிர் கிடையாது; எனவே அதுவே தனது விளைவை நிர்ணயித்துக் கொள்ளமுடியாது. ஆனபடியால் எல்லா வினைகளையும் கண்காணித்துக் கணக்கிட்டு அவற்றுக்கேற்பப் பலனளிக்கும் ஒரு சக்தி இருந்தே ஆகவேண்டும்.

Koviloor Digital Library

உலகைப் படைத்த கடவுளேதான் அப்படி நீதி வழங்கி அதனை நடத்தி வைக்கிறார்.' — இதுவே உலகிலுள்ள இன்ப துன்பங்களுக்கு நாம் கூறும்விடை.

'அப்படியானால் நீதிப்படி தீர்ப்பு வழங்கும் ஆண்டவனைக் கருணைக்கடல் என்று சொல்வதேன்? 'என்னிடம் சரண்புகுந்தால் பாபியையும் நான் காப்பேன்' என்று பகவான் எப்படிக் கூறினான்? 'விதியின் எழுத்தைத் துடைப்பவன் அவன் என்றால் அது நீதி முறைக்கு விரோதமாகாதா?' — இப்படி ஒரு குறுக்குக் கேள்வி எழுகிறது.

'கடவுள் வெறும் நியாயாதிபதி என்று வைத்துக் கொண்டால்தான் உலகிலுள்ள துன்பங்களுக்குப் பொருள் உண்டு. கடவுள் அன்பு வடிவினர் என்றால் உலகில் துன்பம் இருக்கக் காரணம் இல்லை. எனவே கடவுளின் இயல்பு என்ன?' என்று யோசிக்கிறோம்.

நரேந்திரரும் இப்படி யோசித்திருக்கிறார். நம்மையெல்லாம்விடத் தீர்க்கமாக யோசித்திருக்கிறார். 'விடை கண்டேன்' என்றும் கூறுகிறார். ஆனால் அதனை ஏனோ நமக்குத் தெரிவிக்கவில்லை.

பகுத்தறிவு வாதியான நரேந்திரரைப் பரமஹம்ஸர் எப்படி இதய சக்தியால் வென்றார் என்பது எழுத்தில் வராத ஊமையின் மகா காவியமாக உள்ளதோ அதே போல கடவுளின் கருணை, நீதி இவைகுறித்த முரணான எண்ணங்களைக் குறித்து நரேந்திரர் கண்ட தீர்வும் மோன கீதமாகவே நிற்கிறது.

இருந்தாலும் பரமஹம்ஸர் நரேந்திரரை எப்படி வென்றார் என்பதை நாம் அனுமானிக்கலாம். கடவுளைக் கண்டதுண்டா என்று கேட்ட நரேந்திரர் தாமே கடவுளைக் காணுமாறு குருநாதர் செய்து விட்டார். பிரத்தியக்ஷ அநுபவத்துக்கு முன்பு பகுத்தறிவு என்ன செய்ய முடியும்?

இதே போல ஆண்டவனின் அன்புக்கும், நீதிக்கும் தோன்றும் முரண்பாட்டினை நரேந்திரர் எப்படித் தீர்த்துக் கொண்டார் என்பதையும்நாம் ஒருவாறு அநுமானித்துத் தெரிந்துகொள்ளலாம்.

நீதிபதியாக இருந்து, அவரவர் கர்மபயனையே அநுபவிக்கும் படித்தான் ஆண்டவன் செய்கிறார். இப்படி அவர் செய்வதே அவரது கருணை காரணமாகத்தான் என்று சொல்லி விடலாம். ஜீவர்கள் கடவுளுடன் ஒன்றுபடவேண்டும் என்பதற்கு வழி வகுப்பதைவிடப் பெரிய கருணை ஏதேனும் உண்டோ? அப்படி ஜீவர்கள் உய்வதற்காகத்தான் கர்ம நியதியை ஆண்டவன் உண்டாக்கியிருக்கிறார். 'அதர்மம் செய்தால் தண்டிக்கப் படுவோம்' என்ற அச்சத்தைவிட மக்களை நன்னெறியில் செலுத்த வேறென்ன உபாய

Koviloor Digital Library

முண்டு? தர்ம வாழ்வின் மூலம்தான் இறுதியில் கர்மத்தைக் கடக்க முடியும். பரம்பொருளை அடைய முடியும். எனவே ஆண்டவனின் நீதியே அவனுடைய கருணையில் பிறந்ததுதான் என்று சொல்லிவிடலாம்.

இரண்டாவதாக,

உலகத்து சக்திகளுக்கு உட்பட்டு நடக்கும் வரையில்தான் கர்மமும் கர்ம பலனும். கடவுளின் சக்திக்கு உட்படும்போது இவை கிடையா. கடவுளின் சக்திக்கு உட்படுவதில் எத்தனையோ வகையுண்டு. உலகத்து சக்திகளையும் உண்மையில் இயக்கி வைப்பவன் ஆண்டவன்தான் என்று கண்டு வாழ்பவர்கள் முமுக்ஷுக்கள். அவர்கள் காற்றுப் போக்கில் செல்லும் பாய் மரம் போலத் தங்களைப் பரிபூரணமாகப் பரமனிடம் சமர்ப் பித்துக் கொண்டவர்கள். நம்மால் அது எண்ணிப் பார்க்கவும் முடியாத நிலையாகும். என்றாலும் உலகத்து சக்திகளுக்கு உட் பட்டு நமக்கு ஒரு இன்னல் நேரும்போது, இந்த சக்திகளுக்கு மேம்பட்ட கடவுளின் சக்தியை நம்பி 'ஆண்டவனே காப்பாற்று' என்று நாம் அந்தரங்க சுத்தமாக வேண்டிக் கொண்டால், அவ் வாறு வேண்டிக்கொள்ளும் சிறிது பொழுதுக்கு உலக சக்திகளுக்கு உட்படாமல் நேராக ஆண்டவனின் சக்திக்கே உட்பட்டு விடுகி றோம். அப்போது, நீதிபதியாக இருக்கும் ஆண்டவனும் கருணா மயனாகிறான். இன்னலைத் தீர்க்கிறான்.

இவ்வாறு இன்னலை நீக்குவதற்கு அவன் வினையின் விளைவை மாற்ற வேண்டும் என்பதுகூட அவசியமில்லை. விளைவு அப்படியே இருக்கலாம். ஆனால், அதனால் ஏற்படும் இன்னலைச் சகித்துக் கொள்ளும் மனோபாவத்தைத் தந்துவிடுவான் ஆண்டவன். அதாவது ஒரே சமயத்தில் நீதிபதியாக இருந்து தண்டனை விதித்து, அதே சமயத்தில் கருணாமூர்த்தியாகவும் இருந்து அந்தத் தண் டனையைப் பெறுபவர்கள் அதைப் பொறுத்துக்கொள்ளும் பக்குவத் தையும் அளித்து விடுகிறான். ஆக, ஜீவன் கர்ம வினையைப் பெறு கிறான்; ஆனால் அதனால் வருந்தாத உள்ளத்தையும் பெறுகிறான்.

மூன்றாவதாக,

வேதாந்தப்படி இந்தக் கர்மம் என்பதே இறுதியில் கிடை யாது. பரம்பொருள் மாயா விலாஸத்தால் இத்தனை உலகப் பொருட்களாகவும் தோன்றுகிறது. அந்தத் தோற்றத்தில் நிகழும் நிழற்காட்சிகள்தான் எல்லாக் கர்மமும். மாயை நீங்கி னால் நாமே பரம்பொருள் என்பது தெரியும். அப்புறம் செய்ய வேண்டிய கர்மம் எதுவுமே கிடையாது. பரம்பொருளோடு லயித்து விடவேண்டியதுதான். எனவே இறுதி நிலையில் இல்லாத

Koviloor Digital Library

இந்தத் தாற்காலிகமான கர்மத்தைப் பற்றியும், அதைக் கடவுள் நீதிப்படி இயக்குகிருரா, கருணைப்படி நடத்துகிருரா என்பது பற்றியும் விவாதிப்பதெல்லாமே பொருளற்றவை என்று நரேந்திரர் கருதியிருக்கக் கூடும்.

அன்புவடிவமான கடவுள் படைப்பில் எப்படித் துன்பங்கள் இருக்க முடியும் என்று நாம் அசட்டுத்தனமாக எண்ணுகிருேம். இதன் தத்துவத்தைப் புரிந்துகொண்ட கவி பாரதியோ

அன்புவடி வாகி நிற்பள்
துன்பமெலாம் அவள் இழைப்பள்

என்றும்

இன்பவடி வாகி நிற்பள்
துன்பமெலாம் அவன் இழைப்பள்

என்றும் உள்ளத்தைத் தொடுமாறு பாடுகிருர். அன்புவடிவான அன்னை ஏன் துன்பங்களைக் கூட்டி வைக்கிருள் என்பதையும் அந்தக் கவி பக்தர் சொல்கிருர்:

இஃதெல்லாம் அவள்புரியும் மாயை—அவள்
ஏது மற்ற மெய்ப் பொருளின் சாயை

ஆம், இந்த உலகத்தில் நாம் காணும் இன்பம் துன்பம் எல்லாமே மாயை. ஆனல் அது மாயை என்பதை நமக்கெப்படித் தெரிவிப்பது? துன்பத்தின் மூலம்தான். துன்பங்களின் மூலம் தான் உலகில் விரக்தி ஏற்பட்டு, லௌகிகமான இன்பங்களும் உண்மையில் துன்பங்களே என்ற விவேகம் ஏற்பட முடியும். மரணத்தின் கோரத்திஞல் வாழ்வின் மாயை புரியும்போதுதான் பிறப்பு என்ற இன்பமும் பொய்யானது என்பது புரிகிறது. இன்பம் துன்பம் ஏதுமற்ற மெய்ப் பொருளுக்கு மனது செல்கிறது. துன்பமேயில்லாமல் இன்பமயமாக நம் வாழ்வு அமைந்தால் ஆண்டவனை நாம் நினைக்கவே மாட்டோம். 'விபத்துக்கள் நிகழ்ந்து கொண்டேயிருக்க நீ அருள்வாய்' என்று கண்ணனைக் குந்தி தேவி பிரார்த்தித்ததும் இதனுல்தான்.

* * *

விவேகானந்தர் இப்படிப்பட்ட விளக்கம் எதுவும் தரவில்லை. இங்கே செய்துள்ள அநுமான விளக்கங்கள் யாவுமே தவருகவும் இருக்கலாம். வார்த்தைகளால் விளக்கமுடியாத — வேதாந்த சாஸ்திரம் மாயை குறித்துச் சொல்லுவதுபோல, அநிர்வசனிய மான — முறையால் ஆண்டவனின் கருணையையும், நீதி முறைமையையும் நரேந்திரர் புரிந்துகொண்டிருப்பாரோ என்னவோ?

அப்படிப் புரிந்து கொண்டபின் நரேந்திரர் என்னவானுர் என்பதை அவர் வார்த்தைகளிலேயே கேளுங்கள்:

Koviloor Digital Library

''அன்றிலிருந்து உலகாயதமான மக்களின் வந்தனை நிந்தனை இரண்டுக்கும் நான் செவி சாய்க்கவில்லை. சாமானிய மக்களைப் போலப் பணம் ஈட்டியும், பெண்டு பிள்ளைகளை வைத்துப் பராமரிக்கவும் நான் பிறக்கவில்லை; புலன் இன்பங்களுக்காகப் பிறக்கவேயில்லை — என்று எனக்கு உறுதி ஏற்பட்டது. என்னுடைய பாட்டனாரைப் போலவே உலகத்தைத் துறக்க நான் ரகசியமாகத் தயாரானேன். துறவியாகக் கிளம்ப ஒரு நாளையும் நிச்சயம் செய்து விட்டேன். அந்த நாளிலேயே குருமஹராஜ் கல்கத்தா வரப் போகிறார் என்றறிந்து மகிழ்ந்தேன். 'என்ன அதிருஷ்டம்! குருவின் ஆசியுடனேயே உலகத்தைத் துறக்கலாம்' என்று எண்ணிக்கொண்டேன். அதே போல நான் குருமஹராஜைக் கண்டேன். அவரோ எடுத்த எடுப்பிலேயே என்னைத் தக்ஷிணேசுவரத்துக்கு வந்து அன்றிரவைக் கழிக்குமாறு வற்புறுத்தினார். நான் ஏதேதோ சாக்குப் போக்குகள் காட்டினேன். பயனில்லை. அவரோடு நான் செல்லவேண்டியதாகவே ஆயிற்று. வண்டியில் போகும்போது அதிகமாக எதுவும் பேசிக் கொள்ளவில்லை. தக்ஷிணேசுவரம் அடைந்தோம். மற்றவர்களுடன் நானும் அவரது அறையில் அமர்ந்தேன். அவர் சமாதியில் ஆழ்ந்தார். அப்படியே என்னை அணுகிவந்தார். மிக மிக மிருதுவாக என்னைத் தீண்டினார். தீண்டியவாறே பாடலானார். அவர் கண்களில் நீர் நிறைந்தது. இவ்வளவுகாலம் நான் என் உணர்ச்சிகளை அமுத்தி வைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் இப்போது அந்த உணர்ச்சிகள் கண்ணீரில் வழிந்தன. பாட்டின் பொருள் மிகவும் வெளிப்படையாகப் புரிந்தது — என் எண்ணங்கள் அவருக்குத் தெரிந்து விட்டன. எங்களிருவரிடையே நடைபெற்ற இந்த உணர்ச்சிப் பரிவர்த்தனையைக்கண்டு, கூடியிருந்தோர் பேராச்சரிய முற்றனர். குருமஹராஜ் சகஜ நிலைக்கு வந்தவுடன் அவர்களில் சிலர் இதற்குக் காரணம் என்ன என்று கேட்டார்கள். அவர் புன்னகை பூத்தவாறே, 'ஓ, அதுவா? அது எனக்கும் அவனுக்குமிடையை மட்டும் ஏதோ ஒன்று' என்று கூறிவிட்டார். இரவு மற்றவர்களுக்கெல்லாம் விடைகொடுத்தனுப்பிய அவர் என்னைத் தம் பக்கலுக்கு அழைத்துக் கொண்டார். ''அம்பிகையின் காரியத்துக்காக நீ வந்திருக்கிறாய் என்று எனக்குத் தெரியும். எனவே உன்னால் இந்த உலகத்தில் பொருந்தியிருக்க முடியாது. என்றாலும் எனக்காக, நான் உயிரோடிருக்குமளவும் நீ இங்கிரு'' என்று கூறினார். மீண்டும் கண்ணீரில் கரையலானார். மறுநாள் அவரது அநுமதியுடன் நான் வீடு திரும்பினேன். வீட்டுப் பராமரிப்பு குறித்து ஓராயிரம் எண்ணங்கள் என்னைத் துளைத்தன.

Koviloor Digital Library

மறுபடியும் வேலை தேடி அலையலானேன். வழக்கறிஞர் ஒருவரின் அலுவலகத்தில் ஒரு வேலை கிடைத்தது. சில புத்தகங்களை மொழி பெயர்த்தேன். இதனால் கைக்கும் வாய்க்கும் ஏதோ உபாய மாகக் கிடைத்தது. ஆனால் இது நிரந்தரமாக இல்லை. என் அன்னையையும், சகோதரர்களையும் வைத்துக் காப்பாற்ற நிரந்தர மான வருமானம் எதுவுமில்லை.

''ஒரு நாள் திடீரென ஓர் எண்ணம் உதித்தது. 'ஆண்டவன்தான் ஸ்ரீராமகிருஷ்ணரின் பிரார்த்தனைகளைக் கேட்கி றானே! நான் ஏன் அவரை எனக்காக என்னுடைய பொரு ளின்மை விலகுமாறு பிரார்த்திக்கச் சொல்லக்கூடாது? நிச்சய மாக எனக்கு இந்த உபகாரம் செய்ய குருநாதர் மறுக்கவே மாட்டார்' என்று எண்ணினேன். தக்ஷிணேசுவரத்துக்கு விரைந் தேன். உண்ண உணவின்றி வாடும் என்னுடைய குடும்பத்தின் சார்பில் அவர் பிரார்த்திக்க வேண்டும்' என்று வலியுறுத்திக் கூறினேன். அவர் சொன்னார்: ''என் குழந்தாய்! இப்படி யெல்லாம் கோரிக்கை விடுக்க என்னால் முடியாது. அது கிடக் கட்டும்; ஏன் நீயே போய் அம்பிகையிடம் பிரார்த்திக்கக் கூடாது? உன்னுடைய துன்பங்களுக்குக் காரணமே நீ அவளை மதிக்காதது தான்'' என்று. ''எனக்கு அம்பிகையைத் தெரியவில்லையே! தயவுசெய்து என்பங்கில் நீங்கள் பேசுங்கள். நீங்கள் பேசித் தானாகவேண்டும்'' என்றேன். ''என் அன்புக் குழந்தாய், நான் திருப்பித் திருப்பி அப்படிச் செய்தாயிற்று. ஆனால் நீ அவளை ஒப்புக்கொள்ளமாட்டேன் என்கிறாயல்லவா? அதனால் அவள் என் பிரார்த்தனைகளை ஈடேற்றுவதில்லை. அதெல்லாம் சரி. இன் றைக்கு மங்கள வாரம். இன்றிரவு காளி ஆலயத்துக்குப் போ, அம்பிகையின் முன்னால் தண்டனிடு. உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள். அது நிறைவேற்றப்படும். அவள் கேவல மான ஞானம், அவளே பிரம்மத்தின் விளக்க வொண்ணாத சக்தி, தனது சங்கல்ப மாத்திரத்தில் இந்த பிரபஞ்சத்தை யெல் லாம் பிறப்பித்தவள் அவள். எதையும் அருளும் ஆற்றல் அவ ளிடம் உள்ளது'' என்றார் ஸ்ரீராமகிருஷ்ணர்.

''அவர் கூறியதின் ஒவ்வொரு வார்த்தையையும் நான் நம்பினேன். இரவுக்காக ஆவலுடன் காத்திருந்தேன். ஒன்பது மணி சுமாருக்குக் குருநாதர் என்னை ஆலயத்துக்குப் போகுமாறு பணித்தார். புறப்பட்டேன். செல்லும்போதே ஏதோ ஒரு தெய்விக போதை என்னுள் நிறைந்தது. கால்கள் தடுமாறின. 'உயிருள்ள தெய்வத் தாயைப் பார்க்கப் போகிறோம்; அவள் பேசிக் கேட்கப் போகிறோம்' என்ற ஆனந்தத்தில் முன்கூட்டியே

Koviloor Digital Library

என் இதயம் துள்ளிற்று. அந்த எண்ணத்திலேயே நிரம்பிப் போனேன். ஆலயத்தை அடைந்தேன். பிரதிமையின் மீது பார்வையைச் செலுத்தினேன். ஜகன்மாதா உயிரோடும் உணர்வு களோடும் விளங்குவதைக் கண்டேன். தெய்வீக அன்பின் வற்ருத ஊற்ருக, தெய்வீக அழகின் வற்ருத ஊற்ருக அவளைக் கண் டேன். பக்தியும், அன்பும் பூரித்தெழ அந்த அன்பின் அலையில் சிக்குண்டேன். ஆனந்த பரவசத்தில் நான் மீண்டும் மீண்டும் அவள் முன் தண்டனிட்டு எழுந்தேன். ''தாயே, எனக்கு விவே கத்தைக் கொடு. தாயே, எனக்குத் துறவற புத்தியைக் கொடு. தாயே, எனக்கு ஞானத்தையும் பக்தியையும் கொடு. உன்னை ஒரு போதும் இடையருமல் தரிசிக்கும் நிலையை எனக்கு அருள் வாய்!'' என்று பிரார்த்தித்துக் கொண்டேன். தூய்மையான தொரு சாந்தி என் ஆத்மாவை ஆட்கொண்டது. உலகம் அடி யோடு மறந்து போயிற்று. ஜகன்மாதா மட்டுமே என் இத யத்தில் பிரகாசித்தாள்.

''குருநாதரிடம் திரும்பினேன். லௌகிகத் தேவைகள் பூர்த்தியாக அம்பிகையிடம் வேண்டிக் கொண்டேனு என்று அவர் என்னைக் கேட்டார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. ''மஹாசய, அதெல்லாம் மறந்தே போய்விட்டேன். இப்போது என்ன பரிகாரம் செய்ய இருக்கிறது?'' என்று வினவினேன். ''ஏன்? மறுபடியும் போய் அவளிடம் குறைகளை முறையிடேன்'' என்ருர் ஸ்ரீராமகிருஷ்ணர். மீண்டும் நான் மந்திரத்துக்குச் சென்றேன். ஆனுல் அன்னையைக் கண்டவுடன் நான் எதற்காகச் சென்றேனே அந்தக்காரியத்தை மறந்துவிட்டேன். பலமுறை அவளை வணங்கிவிட்டு பக்தியையும் ஞானத்தையுமே நல்குமாறு வேண்டிக்கொண்டேன். ''என்ன, இரண்டாம் தடவையாவது செய்ய வேண்டியதைச் செய்தாயா?'' என்று விசாரித்தார் குருநாதர். நான் நடந்ததைச் சொன்னேன். ''என்ன அசட்டுத் தனம்! ஒரு சில வார்த்தைகளில் உன் கஷ்டத்தைச் சொல்லிக் கொள்ளும் அற்ப போதுக்குக்கூடவா உன்னை நீ கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது? நல்லது, இன்னும் இன்னும் ஒரு முறை முயற்சித்துப் பார். வேண்டியதை அவளிடம் கேள். ஜல்தி'' என்ருர் அவர்.

''மூன்ருவது முறை புறப்பட்டேன். சந்நிதியில் பிரவேசிக் கும்போது அதிதமான ஓர் அவமான உணர்ச்சி என்னைப் பற்றிக் கொண்டது. 'அம்பிகையிடம் எத்தகையதோர் அற்ப விஷய மாகப் பிரார்த்திக்க வந்திருக்கிறேன்! கருணைவாய்ந்த ஒரு மா மன்னரிடம் வாழைக்காயும், வெண்டைக்காயும் கேட்பதுபோல

Koviloor Digital Library

அல்லவா இருக்கிறது ! நான் எப்படிப்பட்ட முட்டாள் !' என்று எண்ணினேன். வெட்கத்துடனும் வேதனையுடனும் மிகவும் பணிவாக அவளைக் கும்பிட்டேன். 'அம்மா, ஞானத்தையும் பக்தியையும் தவிர எனக்கு வேறெதுவும் வேண்டாம்' என்று பிரார்த்தித்தேன். கோவிலுக்கு வெளியே வந்தவுடன் எல்லாம் புரிந்துவிட்டது — இத்தனைக்கும் காரணம் குருநாதரின் சித்தம்தான். இல்லாவிடில், ஒரு முறையல்ல, இரு முறையல்ல, மூன்று முறையும் என் லக்ஷியத்தில் நான் தோற்றிருப்பேனு? அவரிடம் சென்று, ''மஹாசய, நீங்கள்தான் என் மனதின்மீது மாயாஜாலம் செய்து என்னை மறக்கடிக்கச் செய்திருக்கிறீர்கள். அதனுல் இப்போது நீங்களே வரம் தாருங்கள். என் வீட்டிலுள்ளோர் வறுமையின் பிடுங்கலிலிருந்து விடுபட வேண்டுமென வரம் தாருங்கள்'' என்றேன். அவர் சொன்னுர்: ''என்னுடைய வாயிலிருந்து அப்படிப்பட்ட வார்த்தைகள் வரமுடியாது. உனக்காக நீயே பிரார்த்தித்துக் கொள்ள வேண்டுமென்றேன். உன்னுல் முடியவில்லை. உலக இன்பங்களுக்கு நீ பிறக்கவில்லை என்றே தோன்றுகிறது. நல்லது, இதற்கு நான் என்ன அப்பனே செய்வது ?'' என்ருர். ஆனுல் நான் அவரை லேசில் விட்டுவிடவில்லை. அவர் வேண்டுகோளை நிறைவேற்றித் தந்தேயாக வேண்டுமெனப் பிடிவாதம் பிடித்தேன். கடைசியில், ''ரொம்ப சரி, ஒரு பிடி அரிசிக்கும் சாதாரணக் கந்தைக்கும் கஷ்டமில்லாமல் உன் குடும்பத்தினர் இருப்பார்கள், போ !'' என்ருர் அவர்.

* * *

இந்த நிகழ்ச்சிகளை நரேந்திரரின் வாய்மொழியிலேயே படிக்கும்போது உடல் புல்லரிக்கிறது; உள்ளம் சிலிர்க்கிறது. பரமஹம்ஸரின் மாயத்தையும், மாயத்தை மறைக்கும் மஹா மாயத்தையும், அப்படி மறைப்பதிலும் கள்ளமோ கபடமோ இல்லாத சுத்தத்தையும் எண்ண எண்ண உள்ளம் உவகைகொள்கிறது. நரேந்திரரின் வளர்ச்சி நெஞ்சைத் தொடுகிறது. அவருடைய அன்பு இதயமும் தெற்றெனத் தெரிகிறது. குருமஹராஜ், சுவாமிஜி இருவருமே எத்தகைய குழந்தை உள்ளம் படைத்திருந்தார்கள் என்பதும் தெரிகிறது. குழந்தையானுல்தானே அன்னையின் அன்பைப் பெற முடியும் ? இந்த இரு மஹா புருஷர்களுக்கும் உலக அன்னையின் தரிசனம் எதனுல் கிடைத்தது என்பது இதிலிருந்து விளங்குகிறது.

பட்டினியில் வாடி மழையில் நனைந்து மயக்கமுற்ற நரேந்திரநாதர் இன்பதுன்பங்களின் உண்மை இயல்பினைக் கண்டுகொண்டார். 'இன்ப துன்பம் சமானமாக வருவதெப்படி' என்பதை

Koviloor Digital Library

யும் கண்டு கொண்டு விட்டார். பிற்பாடு ஸ்ரீராமகிருஷ்ணர் ''நீ உலக இன்பங்களுக்காகப் பிறக்கவில்லை போலிருக்கிறது'' என்று சொன்னாரல்லவா? இதையும் மழையில் நனைந்த அன்றே அறிந்து விட்டார் நரேந்திரர். உறவுகளை விலக்கித் துறவு பூணத் தீர்மானித்து விட்டார். எங்கோ சஞ்சரிக்கும் மின்சார அலைகளைக் கிரகிக்கும் வானொலிப் பெட்டிபோல நரேந்திரரின் இந்த எண்ணங்கள் யாவற்றையும் எப்படியோ கிரகித்துவிட்டார் தக்ஷிணேசுவர முனிவர். 'பரிவிராஜகராக உலகைவிட்டு வனம் சென்று துறவறம் அநுஷ்டிக்க நரேந்திரர் பிறக்கவில்லை; உலகிலிருந்து கொண்டே அவர் துறவறம் அநுஷ்டிக்க வேண்டும்' என்று கூறிவிட்டார். 'கத்தியின் முனையில் நீ நடக்க வேண்டும்' என்று சிஷ்யருக்கு அன்பு கட்டளை இட்டுவிட்டார். 'நான் உள்ள அளவும் நீ இங்கிரு' என்று அப்போதைக்குக் கூறினார். ஆனால் தாம் மறைந்த பின்போ நரேந்திரருக்கு உலக உத்தாரணம் என்ற மாபெரும் பணியை விட்டுச்சென்று அவரை என்றுமே பரிவிராஜகராகக் கிளம்பமுடியாதபடி செய்து விட்டார். மக்கட்குலம் உய்யவேண்டும் என்ற பெருங்கருணை காரணமாகத் தமது ஆருயிர் சீடரின் அமைதியான ஆண்டி வாழ்வுக்கும் தாமே குறுக்கே நின்றார்.

'துறவியாகப் போக நினைத்த நரேந்திரர் உடனேயே ஏன் குடும்பக் கஷ்டத்தைப்பற்றி எண்ணினார்? அந்தக் குறை தீரப் பரமஹம்ஸரிடம் பிரார்த்தித்துக் கொண்டார்?' என்ற சங்கை எழலாம். துறவியாகச் செல்ல எண்ணினாரேயன்றி, அவர் அவ்வாறு செல்லவில்லை. அவர் அவ்வாறு செல்ல குரு அநுமதிக்கவில்லை. எனவே வீட்டுக்குத் திரும்பிவிட்டார் நரேந்திரர். வீட்டிலிருக்குமளவுக்கு, அதனைச் செவ்வையாக நடத்தவேண்டும் என்பதுதானே நியாயமாகும்? ஆசிரம தர்மங்கள் என்று வேதம் விதித்ததெல்லாம் பொய்யா என்ன? எனவே இல்லத்திலிருந்த போது நரேந்திரர் வறுமை தீர விரும்பியதில் தவறேதும் இல்லை.

வேறு விதமாகவும் சொல்லலாம். உலகிலிருந்து கொண்டே துறந்து வாழும் தியாக சிலர்கள் உலகத்தவருக்காக இரங்குவதில் முன் நிற்பவர்கள். இத்தகைய கருணைதான் நரேந்திரரையும் தம் குடும்பத்தினருக்காக வருந்தச் செய்தது என்று கொள்ளலாம். தன் தாய், தன் சோதரர், தன் குடும்பம் என்ற சுயநலக் கலப்பின்றி, உலகத்தினர் யாருக்குமே உரிய கருணையைத் தமது குடும்பத்துக்கும் அவர் காட்டி யிருக்கக்கூடும்.

நரேந்திரர் தமது குடும்பத்துக்காக பரமஹம்ஸரைப் பிரார்த்திக்கச் சொன்னபோது மாயம் புரியலானார் மாமுனிவர். தெய்வத்தின் திரு முன்பு இந்த உலகம் எவ்வளவு துச்சம் என்பதை

Koviloor Digital Library

தமது வாய் வார்த்தையாகக் கூருமல் நரேந்திரரே அநுபவித்துப் பார்க்குமாறு செய்யவே இந்த மாயம். அந்த மாயத்தின் பல ஞக மாயையும், மாயையை மாய்க்கும் ஞானமுமாகிய பர தேவதையின் திவ்விய தரிசனமும் நரேந்திரருக்குக் கிடைத்தன. 'கடவுளைக் காணமுடியுமா?' என்று கேட்டவர் உண்மையாகத் தாமே கடவுளைக் கண்டு விட்டார்! கற்சிலையில் கனிவும் கசிவும் பொருந்திய தெய்வ மாதாவை உயிருள்ள திரு உருவமாகக் கண்டுவிட்டார்! மாவிடர்களைக் காண்பதைவிட அடர்ந்த முறையில், தெளிவான முறையில் தெய்வத்தைக் காண முடியும் என்று பரமஹம்ஸர் கூறியது எவ்வளவு உண்மை என்பதைக் கண்ணுக்கு மெய்யாகக் கண்டு கொண்டார். சர்வேசுவரியின் தரிசனம் கிட்டியவுடன் உலகம் எப்படி மறைந்து விடுகிறது என்பதைத் தெரிந்து கொண்டார். கயிற்றைப் பாம்பென்று தவருக எண்ணலாம்; அல்லது கயிறு என்றே உள்ளபடி தெரிந்து கொள்ளலாம்; ஆனுல் ஒரே சமயத்தில் கயிறு, பாம்பு, இரண்டும் அதுவே என்ற எண்ணத்தைப் பெறமுடியாதல்லவா? அதேபோல உலகத்தை மெய்யென நம்பி ஏமாறலாம்; அல்லது அது அம்பிகையின் மாயை என்று தெரிந்துகொள்ளலாம். ஆனுல் ஒரே சமயத்தில் அது மெய்யென்றும் மாயை என்றும் எப்படி எண்ணமுடியும்? அம்பிகையின் முன்பு உலகம் மாயை என்பது தன்னுல் தெளிவாகும்போது, அது உண்மை என்றும் எண்ணி லோகாயதமான நன்மைகளை எப்படிப் பிரார்த்திக்க முடியும்? குடும்பக் கஷ்டம் திரவேண்டும் என்று நரேந்திரரால் வேண்டிக்கொள்ள முடியவில்லை.

'விவேகம் வேண்டும், பக்தி வேண்டும், ஞானம் வேண்டும், அம்பிகையின் திவ்விய தரிசனம் அனவரதமும் வேண்டும்' என்றே பிரார்த்தித்தார் நரேந்திரர். இதில் அவர் விவேகத்தை முதலில் பிரார்த்தித்தது விசேஷமாகும். விவேகானந்தராகப் போகிறவரல்லவா அவர்?

* * *

பிரம்மம் நிர்க்குணமாகத்தான் இருக்க முடியும் என்று எண்ணிவந்த நரேந்திரர், மூர்த்தி பூஜையை எள்ளி நகையாடியவர், சகுண உபாசனையில் உள்ளம் பதிந்த ராகாலை நிர்க்குண உபாசனைக்குத் திருப்ப முயன்றவர், இன்று தாமே சந்தேகத்துக்கிடமின்றி பிரம்மத்தின் சகுணத் தோற்றத்தைக் கண்டு விட்டார். பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பொருட்களாகவும் தோன்றும் பரம் பொருள், உயிர்க் குலத்தின் பிரார்த்தனைக் கிரங்கி அவர்கள் கிரகிக்கும் வகையில் தானும் ஓர் உரு எடுத்துக் கொள்கிறது என்று அவர் நிதரிசனமாகத் தெரிந்து கொண்டு விட்டார்!

Koviloor Digital Library

'இதவ்வளவும் உண்மையாக நடந்த சம்பவங்கள். எந்தக் காலத்திலோ எந்தத் தேசத்திலோ நடந்ததல்ல. சிரத்தையுள்ள வர்களுக்கு இன்றும் தெய்வ தரிசனம் கிடைக்கும்' என்ற சிந்தனையுடன் மீண்டும் இந்த நிகழ்ச்சிகளைப் படித்துப் பாருங்கள். நமக்கே அம்பிகையைத் தரிசிக்க ஆனந்த அமைதி உண்டாகும்.

'தெய்வ மூர்த்தங்கள் எல்லாம் உருவகம்' என்று வாய் ஓயாமல் கூறும் இன்றைய விநோத பக்தர்களுக்கு விவேகானந்தர் சரிதத்தைவிடத் தெளிவு தரும் நூல் வேறெதுவும் கிடையாது.

* * *

பவதாரிணி உயிரும் உடலும் கொண்டு நரேந்திரருக்குத் தரிசனம் தந்தருளியது அவர் வாழ்க்கையில் ஒரு பெரிய திருப்ப மாக அமைந்தது. கடவுளின் தாய்மையை அதுவரை உணராத வர் இப்போது அதனை அசைக்க முடியாதபடி அநுபவித்துவிட் டார். பரப்பிரம்மம் உருவம் தாங்கி அருள்புரியும் என்பதையும், அந்த உருவத்தைச் சிலையிலும், சித்திரத்திலும் வடித்துப் பூஜை புரிவதின் பெருமையையும் நரேந்திரர் அழுத்தம் திருத்தமாகப் புரிந்துகொண்டுவிட்டார்.

சகுணப் பிரம்மம், மூர்த்தி வழிபாடு இவற்றை நரேந்திரர் ஏற்றுக் கொண்டுவிட்டார் என்பதை சகலமும் அறிந்த ஸ்ரீராம கிருஷ்ணர் அறியாமற் போவாரா? நம்முடைய குழந்தை பரிக்ஷையில் நல்ல அம்சங்கள் வாங்கித் தேர்ச்சி பெற்றால் நாம் எப்படி சந்தோஷிப்போமோ அதேபோல் ஸ்ரீராமகிருஷ்ணர் மகிழ்ச்சி கொண்டார்.

இது பற்றி, இந்த நிகழ்ச்சிக்கு மறுநாள் பகலில் தக்ஷிணேசு வரத்துக்குச் சென்றிருந்த வைகுந்தநாத சன்யால் என்ற பக்தர் என்ன சொல்லுகிறார் என்பதைக் கேளுங்கள்:

'குருமஹராஜ் மட்டுமே தமது அறையில் இருந்தார். நரேந் திரர் வெளியே உறங்கிக் கொண்டிருந்தார். ஸ்ரீராமகிருஷ்ணர் ஆனந்தமான மனநிலையில் இருந்தார். நான் அவரை நமஸ் கரித்தவுடனே அவர் நரேந்திரரை எனக்குச் சுட்டிக்காட்டினார். 'இதோ இவனைப் பார். இந்தப் பயல் ரொம்ப ரொம்ப நல்லவன். இவன் பேர் நரேந்திரன். ஸர்வேசுவரி கிடையாது என்று இத் தனை நாளாக மறுத்து வந்தான் இவன். ஆனால் நேற்றைக்கு ஒப்புக்கொண்டுவிட்டான். பாவம், கொஞ்ச நாளாக இவனை தாரித்திரியம் பிடுங்கித் தின்கிறது. அம்பிகையிடம் அது தீருவ தற்காகப் பிரார்த்தித்துக் கொள்ளச் சொன்னேன். அந்த மாதிரி அவளைக் கேட்கவே அவனுக்கு வெட்கமாகிவிட்டதாம். கோயிலி லிருந்து திரும்பி வந்தவன் 'அம்பிகையின்மீது ஒரு கீதம் சொல்லிக்

Koviloor Digital Library

கொடுங்கள்' என்று என்னைக் கேட்டான். சொல்லிக் கொடுத்தேன். ராத்திரி பூராவும் அந்தப் பாட்டையே பாடிக் கொண்டிருந்தான். அதுதான் இப்படி அசந்து தூங்கிக் கொண்டிருக்கிறான்'' என்றார். பிறகு அந்தரங்க சுத்தமான களிப்போடு, ''நரேந்திரன் என் அம்மாவை ஒப்புக் கொண்டது ரொம்பவும் அற்புதமில்லை ?'' என்று கேட்டார். ''ஆமாம்'' என்றேன். சிறிதுபோது மௌனமாகச் சென்றது. ''நரேன் ஜகன்மாதாவை ஒப்புக்கொண்டது ரொம்ப அற்புதமில்லை ?'' என்று மீண்டும் கேட்டார் குருநாதர். இப்படியே சிறிதுநேரம் கழிந்தது.

''நாலுமணி இருக்கும். கல்கத்தாவுக்குப் புறப்படுமுன் நரேந்திரர் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் வந்தார். அவரைக் கண்டதுதான் தாமதம், குருமஹராஜ் சிறிது சிறிதாக அவரைச் சமீபித்தார். அவருடைய மடியிலேயே அமர்ந்து கொண்டாற்போல அனுகி தன்னையும் நரேந்திரரையும் மாற்றி மாற்றிச் சுட்டிக் காட்டியவாறே, ''நல்லது; என்னை இதாகவும் காண்கிறேன், அதாகவும் காண்கிறேன். வாஸ்தவமாக எனக்கு ஏதும் பேதமே தெரியவில்லை. கங்கையில் மிதந்து கொண்டிருக்கும் ஒரு கழி அதனை இரண்டாகப் பிரிப்பது போலத் தோன்றுகிறதல்லவா ? கங்கை உண்மையில் ஒன்றுதானே ? அதே போலத்தான்......... என்ன, நான் சொல்வது புரிகிறதா ? ஆமாம், அம்பிகையைத் தவிர வேறென்ன இருக்கிறது ? ம், என்ன சொல்கிறாய் ?'' என்று கேட்டார். இதே போல இன்னும் சிறிதுபோது பேசிக் கொண்டிருந்தபின் புகை பிடிக்க வேண்டுமென விரும்புவதாகத் தெரிவித்தார். புகையிலையை நானே தயாரித்து அவரிடம் 'ஹுக்கா' வைக் கொடுத்தேன். ஓர், இரண்டு மூன்று, முறை உறிஞ்சியபின் அவர் குழாயிலிருந்தே புகைபிடிப்பதாகக் கூறினார். அவ்வாறு செய்தபின் குழாயைத் தாம் பிடித்துக்கொண்டு நரேந்திரரை அதிலிருந்து உறிஞ்சச் சொன்னார். நரேந்திரர் தயங்கினார். குருவின் கரத்தில் உதட்டை வைத்துத் திட்டாக்குவதாவது ? ஆனால் ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்னார்: ''உனக்குத் தான் என்ன முட்டாள்தனமான எண்ணங்கள் ! நான் உன்னை விட வேறு என்ன ? இது எப்படி நானோ அதேபோல அதுவும் நான்தான்'' — என்று. தாமே நரேந்திரரின் வாய்க்குக் குழாயை எடுத்துச் சென்றார். அதன்பின் நரேந்திரரால் அவருடைய விருப்பத்துக்கு இணங்காதிருக்க முடியவில்லை. நரேந்திரர் இரண்டு மூன்று முறை புகை உறிஞ்சினார்.

மீண்டும் ஸ்ரீராமகிருஷ்ணர் புகைபிடிக்கச் சென்றபோது நரேந்திரர் பரபரப்புடன் குறுக்கிட்டு, ''முதலில் உங்கள் கையைக்

Koviloor Digital Library

கழுவிக் கொள்ளுங்கள், ஐயா'' என்று கூறினர். இந்தக் குறுக்கீட்டுக்கும் பயன் இல்லே. ''பேதமான எத்தனை மூடக் கருத்துக்களே வைத்திருக்கிருய் நீ'' என்று சொல்லியவாறே குருமஹராஜ் தம் கையைக் கழுவாமல் புகைப்பிடிக்கலானுர். மிகவும் உன்னதமான நிலேயிலிருந்து பேசியவாறே புகைப் பிடித்துக் கொண்டிருந்தார். எனக்குப் பேராச்சரியமாக இருந்தது — தமக்கு முன்பு யாரேனும் உண்டிருந்தால் உணவு முழுவதையும் சேஷமாகக் கருதித் தாம் உண்ணுமலிருந்த ஸ்ரீராமகிருஷ்ணர் நரேந்திரநாதரின் விஷயத்தில் இவ்வளவு தூரத்துக்கு விலக்களித்திருந்ததைக் காண எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவருக்கு நரேந்திரரிடமிருந்த அன்பும், பாந்தவ்யமும் எப்படிப்பட்டவை என்று எனக்கு ஒருவாறு புரிந்தது. எட்டுமணி சுமாருக்கு அவர் சகஜநிலேக்கு வந்தபின் நரேந்திர நாதரும் நானும் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு கல்கத்தாவுக்கு நடந்து சென்ருேம்.

* * *

முன்பே சொன்னதுபோல புகைபிடிப்பது வங்காளத்துத் தேசாசாரத்துக்குத் தவறில்லே. ''பரிசுத்தமானவர் மாட்டிறைச்சி உண்டாலும் குற்றமில்லே'' என்று கூறிய குருமஹராஜ் புகைப் பிடித்ததிலும் ஏதும் அருசியாக எண்ணத் தேவையில்லே. தேக தர்மம் அதன்பாட்டில் நடக்கட்டும் என்று விட்டுவிட்ட மகான்கள் அவர்கள்.

ஸ்ரீராமகிருஷ்ண தேவர் நரேந்திர நாதரின் விஷயத்தில் எச்சில்-துப்பல் எதுவும் பார்க்காததைக் குறித்து நாம் குழப்பிக் கொள்ள வேண்டாம். குருதேவரே தெளிவாகக் கூறிவிட்டார்: 'நானும் அவனும் ஒன்று' என்று. நம்முடைய கையால் நாம் உண்பதில் தவறு இருப்பதாகச் சொல்ல முடியுமா என்ன? நரேந்திரரின் கையே ஸ்ரீராமகிருஷ்ணருக்கும் கையாக இருந்தது. எல்லாம் அன்பின் விசேஷம்தான்!

* * *

''ஸ்ரீராமகிருஷ்ணர் ஒருவர்தான் என்னேக் கண்டநாளாக எப்போதும் ஒரே போல என்னிடம் நம்பிக்கை வைத்தவர். என் தாயும், சகோதரர்களும்கூட அப்படி நம்பியதில்லே. அவருடைய சலனமறியாத நம்பிக்கையும் அன்பும்தான் என்னே அவருடன் சாசுவதமாகப் பந்தப்படுத்திவிட்டன. எப்படி நேசிப்பது என்பதை அறிந்தவர் அவரொருவரே. உலகத்து மக்கள் தங்களுடைய சுய நோக்கங்களுக்காகத்தான் அன்பு காட்டுவதாக நடிக்கிருர்கள்'' என்று சுவாமி விவேகானந்தர் கூறியிருக்கிருர்!

Koviloor Digital Library

அத்தியாயம் 8

அற்புத அநுபவங்கள்

நரேந்திரரின் வாழ்வில் எந்த மையமான சம்பவம் நிகழ வேண்டுமோ அது நிகழ்ந்து விட்டது. 'அம்பிகையின் காரியத்துக் காகப் பிறந்தவன்' என்று பரமஹம்ஸரால் கூறப்பட்டவர் அம்பிகையைக் கண்டாயிற்று. கண்ணுக்கு மெய்யாகக் கண்டதை ஒப்புக் கொள்ளாமலிருக்க முடியுமா? எனவே கடவுளுக்காவது, உருவமாவது என்று கூறிவந்த நரேந்திரர் காளியைப் பரிபூரணமாக ஒப்புக்கொண்டு விட்டார். கடவுளுக்கு உருவம் கிடையாது என்று சொல்பவர்கள், பக்தர்களின் பிரார்த்தனைக்கு இணங்கிக் கடவுளால் உருவம் எடுத்துக்கொள்ள முடியாது என்று சொல்வதாகவே ஏற்படுகிறது. அதாவது கடவுளாலும் முடியாத காரியம் ஒன்று இருப்பதாகக் கூறி, அவருடைய சர்வ சக்தியைத் தாங்கள் மறுக்கிறோம் என்பதை அறியாமலே வாதிடுகிறார்கள் அவர்கள். கடவுளை நம்புவது; ஆனால் கடவுள் உருவம் கொள்ள முடியாது என்று அதே சமயத்தில் வாதிப்பது — இவை ஒன்றுக் கொன்று அறவே முரணானவை. இந்தத் தவறு செய்யாத பக்தி நிலையை நரேந்திரர் பெற்று விட்டார்.

உயிர்களை உண்டாக்குபவளாகவும், சம்ஹரிப்பவளாகவும், நன் மனத்தவருக்கு அன்புருவாகவும், தீய மனத்தவருக்குப் பயங்கரியாகவும் இருக்கும் காளியன்னை பரம்பொருளின் உருவமேதான் என்று தெளிந்து விட்டார் நரேந்திரர்.

தம் அன்னையின் மடியில் இந்துமத உணர்ச்சியை இயல்பாகப் பெற்றவர், பிற்பாடு புத்தி வாதங்களினால் அதை இழந்து, இன்று மீண்டும் அதனைப் பெற்று, உலக அன்னையின் அடிகளுக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்.

பல ஆண்டுகளுக்குப்பின் விவேகானந்த சுவாமி அமெரிக்க மாதொருத்திக்கு எழுதினார்: ''காளிவழிபாடு என்னுடைய விசேஷமான பைத்தியம்'' என்று. எனினும் உலகத்தினர் யாவரும் காளி தத்துவத்தைப் புரிந்து கொள்ளமாட்டார்கள் என்பதால் அதனை விவேகானந்தர் மற்றவர்களிடம் வலியுறுத்தவில்லை.

தத்துவ ரீதியில் பரம்பொருளைக் கிரகிக்க எண்ணிய நரேந்திரரை இதய பூர்வமாகப் பரம்பொருளைக் கிரகிக்கும் பக்தராக்கி விட்டார் பரமஹம்ஸர். எனினும் தத்துவரீதியில் பிரம்மாநுபவம் பெறுவதையே அதிகமாக வலியுறுத்தினார் சுவாமிஜி. இது

Koviloor Digital Library

குறித்து சுவாமி விவேகானந்தர் சொல்வார்: ''ஸ்ரீராமகிருஷ்ணர் வெளிப் பார்வைக்குப் பக்திமயமாக இருந்தார்; ஆனால் உள்ளுக்குள் அவர் ஞானமயமாக இருந்தவர். நான் வெளிப் பார்வைக்கு ஞானியாக இருந்தாலும் என் இதயம் முழுவதும் நிரம்பிக் கிடப்பது பக்திதான்.''

* * *

ஹிந்து சமயம் புனர்வாழ்வு பெற எது நடக்கவேண்டுமோ அது மெல்ல மெல்ல நடக்கலாயிற்று. நரேந்திரர் ஹிந்துவாகிக் கொண்டு வரலானார். வேள்வித்தீயில் ஆஹுதியாவதற்கே உதிர்ந்த தானிய மணிகள் வேறு காரியங்களுக்கு வீணாகிவிடும் போன்றதொரு சூழ்நிலை ஏற்பட்டுப் பிறகு நீங்கியும் விட்டது. தானியம் ஹவிஸ்ஸாகி வேள்வித்தீக்கே வந்து சேர்ந்தது.

உலையில் எவ்வளவு கொதிப்புக்கு ஆளானபின் நெல் ஹவிஸ்ஸாகிறது? நரேந்திரரும் வாழ்க்கையில் அத்தகைய கொதிப்புக்கும் கொந்தளிப்புக்கும் ஆளாகி முடிந்தாயிற்று. தங்கக்கட்டி அழகான ஆபரணமாகித் தளுக்கும், மினுக்குமாக ஜொலிக்க வேண்டுமென்றால் எவ்வளவு இன்னலுக்கு ஆளாக வேண்டியிருக்கிறது? சம்மட்டியால் எத்தனை அடி வாங்குகிறது? தீயில் எவ்வளவு காய்கிறது? ஆத்மா நிறைவு பெறுவதற்காக எவ்வளவு சோதனைகளுக்கு ஆளாக வேண்டியிருக்கிறது என்பதைக் கூறும்போது உபநிஷதம் தங்கக்கட்டி ஆபரணமாவதைத்தான் உதாரணம் காட்டுகிறது. நரேந்திரரின் நெஞ்சில்பட்ட அடிகளும், வறுமையில் அவர் காய்ந்த காய்ச்சலும் கடைசியில் பயனளித்து விட்டன!

* * *

நாலாண்டுகளில் நரேந்திரர் பரிபூரணமாக மாறிவிட்டார். சந்தேகமும் குழப்பமுமாக இருந்தவர் பக்தரானார்; ஆத்ம ஞானியானார்; ஹிந்து வானார். இப்படித் தாம் மறுபிறப்பெடுக்கக் காரணமாக இருந்த பரமஹம்ஸரைத் தமது குரு என்று பரிபூரணமாகப் போற்றினார்.

கடவுளுக்கும் மனிதனுக்குமிடையே குரு என்று குறுக்காக ஒருவர் எதற்கு என்று எண்ணிவந்த நரேந்திரர் பரமஹம்ஸரைத் தமது பரமாசாரியராக மதிக்கத் தொடங்கியது எப்போதிலிருந்து என்று யாரும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. பரமஹம்ஸர் நரேந்திரருடைய இதயத்தை ஸ்பரிசித்து அவரைத் தன்னினைவு இழக்கச் செய்தபோதே அவரைத் தம் உடைமையாக்கிக்கொண்டு விட்டார் என்று கூறலாம். எனினும் நரேந்திரர் அறிவினால்

Koviloor Digital Library

முடிந்த மட்டும் வாதப் பிரதிவாதம் செய்து பிறகு ஹிந்துவாகு மாறும், தம்மைக் குருவாக ஏற்குமாறும் செய்தார் பரமஹம்ஸர். குருவாக ஏற்கவேண்டியவரையே குடைந்து குடைந்து பரீக்ஷிக்கவும் நரேந்திரரை அனுமதித்து அந்தப் பரிசைஷகளில் பெருமை பெருமையாகத் தேறி மகிழ்ந்தார் பரமஹம்ஸர். ஸ்ரீராம கிருஷ்ண தேவரின் அநுபவங்களுடைய உண்மையை நரேந்திரர் பரீக்ஷித்துப் பார்த்து நிச்சய புத்தி பெற்றிராவிடில் நரேந்திரர் விவேகானந்தராகப் பரிணமித்திருக்க முடியாது. மயங்கியவர்களையும், தயங்கியவர்களையும் மயக்கம் தெளிவித்து, தயக்கம் தெளிவித்து வேதாந்தத்தில் சேர்த்த வியக்திதானே விவேகானந்தர்? தாமே அந்த மயக்கத்தையும், தயக்கத்தையும் உற்று, தெளிவு பெற்றதால்தானே பிறர் கலக்கத்தை நீக்குவதில் அவர் அவ்வளவு திறமை பெற முடிந்தது?

* * *

நரேந்திரர் ஏதேதோ தத்துவத் திடல்களில் அலைந்து தமது இல்லமாகிய வேதாந்த மதத்தை வந்தடைந்த அந்த ஆண்டுகள் ஆனந்தமயமானவையாகும். தமது உள்ளத்தின் இல்லத்தை மெல்ல மெல்ல அடைந்து வந்த அவர் அதே போதில் கல்கத்தாவிலிருந்த தம் இல்லத்தை சிறுகச் சிறுகத் துறந்து தக்ஷிணேசுவரத்திலேயே பெரும்பாலும் வாழலானார். அந்நாட்கள் இன்ப நாட்களாகக் கழிந்தன.

'ஸ்ரீராமகிருஷ்ணருடன் இருப்பதே தவம்; அவருடன் இருப்பதே சாதனை' என்று இந்தக் கட்டத்தை வருணிக்கும் மேல்நாட்டுச் சீடர்கள் கூறுகிறார்கள். அந்தத் தவத்தையும், சாதனையையும் புரிந்த பல சிஷ்யர்களில் — கிருஹஸ்தர்களும், பிரம்மசாரிகளுமான சிஷ்யர்களில் — நரேந்திரரும் ஒருவரானார். குருமஹராஜின் சந்நிதானத்தில் உணர்ச்சிகள் ஜாஜ்வல்யமாக ஒளிகாந்தின; ஆத்மீகம் அங்கே பழுத்துக் குலுங்கிற்று.

ஸ்ரீராமகிருஷ்ணர் தமது அன்பு வெள்ளத்தில் அடியார்களை எப்படி முழுக்காட்டினார் தாமும் அவர்களும் ஒன்றே என்ற ஐக்கியப் பான்மையை எப்படியெல்லாம் வெளிப்படுத்தினார் என்பதை அவருடைய பாதார விந்தங்களின் பக்கலில் அமர்ந்திருந்தவர்களே அறிய முடியும். சிஷ்யர்களுக்காகவே காத்திருந்து தமது அநுபவ நிதியத்தை அவர்களுக்கு அளித்த அற்புத குரு அல்லவா அவர்? மதுரத்திலும் அதிமதுரமாக, நளினத்திலும் பரம நளினமாக அவர் சிஷ்யர்களுடன் பழகிய பான்மையை எழுத்திலே எப்படிக் கட்டுப்படுத்திக் காட்ட இயலும்? தெய்வத் தன்மையைச் சூழல் முழுவதும் கமழவைத்த அதே சமயத்தில் அவர் தம்

Koviloor Digital Library

அடியார்கள் தம்மைத் தெய்வமாக மட்டும் கண்டு வணங்காமல் அன்புக்குரிய சகாவாக எண்ணி சகஜமாகவும் பழகச் செய்த அற்புதத்தைத வார்த்தைகளில் எப்படி வடிக்க முடியும்? ஆன்மீகம் அடர்ந்த சூழலில் வேடிக்கை விளையாட்டலைகளும் வீசுமாறு செய்த பரமஹம்ஸரின் எளிமையும், மனிதப் பண்பும் மனதினுல் மட்டுமே கற்பித்துக் காணக்கூடியனவாகும்.

தக்ஷிணேசுவரத்துத் தருக்களின் நிழலில் குருநாதரும் சீடப் பிள்ளைகளும் அமர்ந்து மிகமிக சிநேக பாவத்துடன் தித்திக்கப் பேசிக்கொள்வார்கள். அந்தப் பேச்சிலேயே ஆத்மீகப் பயிற்சியையும் எவ்வாறே அளித்து விடுவார் பரமஹம்ஸர். விவேகானந்தர் கூறுவார்:

''நாங்கள் அறியாமலே வேடிக்கை மூலமும் விளையாட்டு மூலமும் அவர் எங்களுக்கு எப்படிப் பயிற்சி அளித்தார், எங்கள் ஆன்மிக வாழ்வை உருவாக்கினுர் என்பது உண்மையிலேயே புரியவில்லை. புதிதாக மல்யுத்தப் பயிற்சி பெறுபவனிடம் வஸ்தாத் எவ்வளவு ஜாக்கிரதையுடனும் கட்டுப்பாட்டுடனும் பழகுகிருனே — ஒருபோது மிகவும் சிரமப்படுவது போலக்காட்டி மாணுக்களை வென்றும், இன்னெரு போது அவனுக்குச் சுயநம்பிக்கை வருவதற்காக அவனிடம் தோல்வியை ஒப்புக்கொண்டும் பயிலுவிப்பானே — அதே போலத்தான் ஸ்ரீராமகிருஷ்ணர் எங்களுக்குக் கற்பித்தார். அனந்தமான சக்திகளுக்கும் ஆதாரமான ஆத்மா அனைவருள்ளும் உறைகிறது என்பதை அவர் உணர்ந்திருந்தபடியால் அற்பமாகத் தோன்றுவோர் உள்பட ஒவ்வொருவருக்குள்ளும் மறைந்துள்ள பலத்தைக் கண்டார். தருணம் வரும்போது நிறைவு பெறப் போகும் அந்தரங்க ஆன்மிக சக்தியை அவர் முன்னதாகவே ஸ்வச்சமாகக் கண்டார். நம்பிக்கையூட்டும் அந்த எதிர்கால ஓவியத்தை எங்கள் முன் விரித்து, எங்களைப்பற்றி உயர்வாகப் பேசி உற்சாக மளிப்பார்.''

ஆனல் தங்களைப்பற்றித் தாங்களே செருக்கடையாமலும் சிஷ்யர்களைக் காத்து வந்தார் பரமஹம்ஸர். அவர்களுடைய வாழ்க்கையின் நுண்ணிய அம்சங்களையும் கூர்ந்து கவனித்துப் பரிசிலித்து வந்தார். எனினும் அவர்களின் சுதந்திரத்தைக் குலைக்காமலே, அவர்கள் இவர் தலையிடுவதாக எண்ணமுடியாத பக்குவமான முறையிலே இதையெல்லாம் செய்து வந்தார். அவர்களுக்குத் தாம் வழியை மட்டும் காட்டி அவர்களே சுதந்திரமாக, மனமொப்பி அதில் செல்லுமாறு செய்தார். குருவென்ற முறையில் அதட்டி உருட்டியும், அடக்கி மிரட்டியும் அவர்களைச் சாதனை புரியுமாறு நிர்ப்பந்திக்கவில்லை. அவர்களே இக வாழ்வின் நிலையாமையை உணர்ந்து அகவாழ்வில் ஈடுபடுமாறு செய்தார்.

Koviloor Digital Library

சிஷ்யர்களின் சிரமங்களைப் பதமாகக் களைவதில் அவருக்கிருந்த நைபுண்ணியம் அதிசயமானது. மனித இயல்பை அவர் எவ்வளவு ஊடுருவிப் பார்த்தார் என்பதற்கு அது சான்றாகும்.

உதாரணமாக ஒரு முறை நரேந்திரர் தாம் வைகறை வேளையில் தியானம் செய்ய அமரும்போது அருகிலுள்ள சணல் தொழிற்சாலையின் ஊதுகுழலோசை சிந்தனையைச் சிதற அடிப்பதாகப் பரமஹம்ஸரிடம் கூறினார். அப்போது பரமஹம்ஸர் அந்தக் குழலோசையை ஓர் இடையூறாகக் கருதாமல் அதிலேயே மனதைச் செலுத்தினால் விரைவில் ஐகாக்கிரியம் கிடைக்குமென்று நல்லுரை கூறினார். அப்படியே செய்து மனதை எளிதில் ஒருமுகப் படுத்திக் கொண்டார் நரேந்திரர்.

இன்னொருமுறை தமது உடலுணர்வைப் பரிபூரணமாக மறந்து தியானம் செய்ய இயலவில்லை என்று நரேந்திரர் ஸ்ரீராம கிருஷ்ண தேவரிடம் முறையிட்டார். அப்போது இதே சிரமத்தைத் தாம் அநுபவித்தபோது தமது குருவாகிய தோதாபுரி என்ன செய்தாரோ அதையே இப்போது பரமஹம்ஸரும் நரேந்திரருக்குச் செய்தார். அதாவது, நரேந்திரரின் இரண்டு புருவங்களுக்கும் மத்தியில் தமது நகத்தினால் அழுத்திக் கீறினார் பரமஹம்ஸர். 'இப்போது உனக்கு உண்டாகியுள்ள வலியின்மீது மனதைச் செலுத்து' என்றார். என்ன ஆச்சரியம்! அவ்வாறு செய்தவுடன் நரேந்திரர் வெகு லகுவில் உள்ளம் குவிந்து, உடலை மறந்த தியானநுபவம் பெற்றார். உடலில் ஒரு பகுதியில் உண்டான வலி காரணமாக மற்றப் பகுதிகளைப் பற்றிய நினைப்பே அழிந்து, கடைசியில் வலியின் நினைவும் தேய்ந்தது.

மனதின் ஆச்சரியமான காரியக் கிரமம் இதுதான். அது எதில் ஆழ்ந்து பதிகின்றதோ அப்போது தன்னையே இழந்து விடுகின்றது; தனக்குக் காரணமான ஆத்மாவில் கரைந்து விடுகிறது. மனதைப் படைத்துக் கொள்வதால்தான் ஆத்மா இத்தனை சம்சார கட்டுக்களையும் பெறுகிறது. அதே மனதைச் செம்மையாக்கிக் கொண்டு அது தன்னைத்தானே அழித்துக் கொள்ளுமாறு செய்தால் மீண்டும் ஆத்மாநுபவம் உண்டாகிறது. இதைத்தான் 'மனதே மனிதனின் கட்டு, விடுதலை இரண்டுக்கும் காரணம்' என்று ஓர் உபநிஷதம் கூறுகிறது. 'நானென்று, நீயென்று இரண்டில்லை என்னவே நடுவே முளைத்த மனதைக் கட்ட அறியாமல் வாடினேன்' என்று தாயுமான சுவாமிகள் இதனைத்தான் வெகு அழகாகப் பாடுகிறார்.

* * *

தக்ஷிணேசுவரத் தோப்பில் பஞ்சவடி என்ற பகுதி சிஷ்யர்களின் மனதைக் குவிப்பதற்கு ஏற்ற இடமாக அமைந்திருந்தது.

Koviloor Digital Library

அங்குதான் பரமஹம்ஸர் பரமானுபவங்களைப் பெற்றது. அங்கேயே இப்போது நிர்மல இதயத்தினராகிய பல உத்தம சிஷ்யர்களின் அகவாழ்வும் அரும்பு கட்டியது. தியானத்திலும், இதர அப்பியாசத்திலும் மட்டுமின்றி வேடிக்கை விநோதங்களிலும் அவர்களுடைய பொழுது கழியும். ஸ்ரீராமகிருஷ்ணரும் அவற்றில் கலந்து கொள்வார். 'சின்னக் குழந்தைகள் போல் விளையாடிச் சிரித்துக் களித்திடுவான்' என்று கண்ணனைப் பற்றி கவி பாடியதுபோல் பச்சைக் குழந்தையாக இருந்தார் பரம ஞானி. ஓட்டப் பந்தயம், மரங்களில் ஏறுதல், கொடிகளை ஊஞ்சலாக்கி ஆடுவது-இப்படியெல்லாம் கள்ளமறியாத விளையாட்டுக்கள் விளையாடுவார்கள். வனபோஜனமும் நடத்துவார்கள். பிராமணர்கள் சமைத்தது தவிர வேறெதனையும் பரமஹம்ஸர் உண்ண மாட்டார் என்பதை நரேந்திரர் அறிந்திருந்தார். எனவே தாம் சமைத்ததைக் குருநாதர் உண்ணவேண்டாம் என்ற எண்ணத்தில் அவருக்கு மட்டும் ஆலயத்திலேயே உணவு தயாரிக்க ஏற்பாடு செய்திருந்தார். ஆனால் அவரோ நரேந்திரரிடம், ''உன்னைப் போன்றதொரு சுத்தமான ஆத்மா தயாரித்த உணவை உண்பதில் தோஷம் எதுவும் இல்லை !'' என்று கூறி, நரேந்திரர் எவ்வளவு மறுத்தும் கேளாமல் அவர் தயாரித்த உணவு வகைகளைச் சுவைத்துச் சுவைத்துச் சாப்பிட்டார்.

* * *

இளஞ்சிங்கமென தக்ஷிணேசுவரத்தில் சஞ்சரித்தார் நரேந்திரநாதர். அவரைவிட வலுவாய்ந்த ஸிம்ஹமோ ஹம்ஸமாகி, பரமஹம்ஸமாகி அவரைக் கண்காணித்து வந்தது. இவ்வளவு நாள் ஐயத்திலும், துன்பத்திலும் சிக்குண்டு கிடந்த நரேந்திரரின் மனதும், அறிவும் இப்போது விடுதலையடைந்து ஆனந்தத்தில் திளைத்துக்கொண்டிருந்தன. நரேனுடைய ஆத்மா சிறகடித்து உயர உயரப் பறப்பதைக் கண்டு ஸ்ரீராமகிருஷ்ணர் எல்லையற்ற நிம்மதி பெற்றார். நரேந்திரரிடம் இத்தகைய மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதில் நரேந்திரரைவிட அதிக ஆர்வம் காட்டியவரல்லவா பரமஹம்ஸர் ? விருத்தாப்பியமும், அதற்குரிய நெகிழ்ச்சியும் கொண்ட சக்கரவர்த்தியாகப் பரமஹம்ஸர் இருந்தார் எனில் நரேந்திரரோ, துடிப்பும் துணிவும் கொண்ட யுவராஜராக விளங்கினார்.

நரேந்திரருக்குத் தாம் குருவாக இருக்கும்போதே, பரமஹம்ஸர் அந்த குரு ஸ்தானத்தையும் துறந்து, நரேந்திரரின் உள்ளத்தையே அவருக்குக் குருவாக்கி அவரை ஆத்மாவில் வளருமாறு செய்தார். இதயத்தில் உண்மையான ஆர்வம் இருக்கு

Koviloor Digital Library

மாயின் யாரும் தமக்குத்தாமே ஞானசிரியனாக முடியும் என்று கருதினார் ஸ்ரீராமகிருஷ்ண தேவர்.

ஸ்ரீராமகிருஷ்ணர் நரேந்திர நாதரின் அந்தரங்கங்களை எப்படி உள்ளங்கை நெல்லிக் கனியாக அறிந்திருந்தாரோ அதே போல நரேந்திர நாதரும் ஸ்ரீராமகிருஷ்ணரின் பெருமையைப் பூரணமாக அறிந்திருந்தார். மற்ற எல்லா சிஷ்யர்களைக் காட்டிலும் நரேந்திரர் குருமஹராஜைப் பூரணமாகப் புரிந்து கொண்டிருந்தார் என்று அவரது சரிதையைஎழுதியவர்கள்சொல்கிறார்கள்.

நரேந்திரர் ஒருவரே தம் குருவின் அநுபவங்களைக் குறித்து ஐயப்பட்டு, அந்த ஐயங்களைத் தைரியமாக வெளியிடவும் செய்தவர். இந்த ஐயங்கள் நீங்கப்பெற்றதாலேயே அவர் மற்றவர்களைவிட நன்றாகக் குருநாதரைத் தெரிந்துகொள்ள முடிந்தது. இதில் பரமஹம்ஸருக்குமே யன்றோ பெருமை கூடுகிறது! 'கூடாரை வெல்வது' என்றும் 'மாற்றாரை மாற்றழிக்க வல்லானை' என்றும் நாச்சியார் அருளிச் செய்தபடி, வேறுவழி சென்றவரைத் தம்மவராக்கிக் கொள்ளும் வெற்றியின் தனிப் பெருமை பரமஹம்ஸருக்கு உண்டு. தாமாகவே வந்தடைந்தவர்களை அன்பின் ஆட்சியில் ஈடுபடுத்துவதைவிட வேற்று மனிதரை ஒற்றுமைப்படச் செய்வதுதானே பெருமை? பரமஹம்ஸர் நரேந்திரர் இருவருமே பரஸ்பரம் பரீக்ஷைகள் வைத்துக் கொண்டனர். இருவருமே வென்றனர். ஆனால் வென்றதன் பெருமை இன்றி இருவரும் அன்பு ஒன்றையே பெரிதாக வைத்து இணைந்தனர்.

சத்தியத்தை உள்ளவாறு அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் காரணமாக நரேந்திரர் குருக்குக் கேள்விகள் கேட்பதையும், குருவின் பல செய்கைகளையும் சொற்களையும் கண்டிப்பதையும் அந்த குரு ரசித்து மன மகிழ்ந்தார். இதனால் இனி எதிர் காலத்தில் என்றோ பிறக்கப்போகிறவர்கள் ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்களைக் குறித்து ஐயங்கொண்டு அவற்றால் பயனடையாமற் போகும் துர்க்கதி தவிர்க்கப்பட்டது. எல்லா ஐயங்களையும் நரேந்திரரே தமதாக்கிக்கொண்டதால்தான் அவை அப்போதைக்கப்போதே நிவிருத்தியாகி குருமஹராஜின் அப்பழுக்கற்ற சத்தியாநுபவங்களும் நிர்த்தாரணமாகியுள்ளன.

சத்திய நாட்டத்தினால் ஆசாரியனை எதிர்த்துக்கொள்ளும் நரேனின் தீரத்தன்மையைத்தான் பரமஹம்ஸர் அவருடைய 'சிவ-இயல்பு' என்று கூறிவந்தார். நரேந்திரரின் அறிவு, தீரம், தூய்மை இவை காரணமாகவே பரமஹம்ஸர் அவரை சிவாம்சமாக கருதித் தமக்கு அவர் பணிவிடை புரிவதைத் தடுத்து வந்தார். ஒருமுறை நரேந்திரநாதரை மற்றச் சீடர்களுக்குச்

Koviloor Digital Library

சுட்டிக்காட்டிய குருமஹராஜ், ''பாருங்கள்! இதோ இந்த நரேனைப் பாருங்கள்! என்ன தீர்க்க திருஷ்டி அவனுக்கு! கரையறியாத ஓர் ஒளிக்கடல்போல் இருக்கிறான் அவன்! ஜகன் மாதாவான மஹாமாயைகூட அவனுக்குப் பத்தடி தள்ளித்தான் நிற்க வேண்டும். அவனுக்கு அவள் எந்த மாண்பினை அளித் திருக்கிறாளோ அந்த மாண்பினாலேயே அவள் கட்டுண்டிருக் கிறாள்!'' என்றார். இம்மாதிரி கூறிய உடனே அன்னையைப் பிரார்த்திக்கலானார்: ''ஸர்வேசுவரி! உன்னுடைய மாயையில் சிறிதை நரேந்திரனுக்குள் கலந்துவிடு! அப்போதுதான் அவன் உன்னுடைய பணியைச் செய்யமுடியும்''. இல்லாவிடில் நரேந் திரர் உயர உயரச் சென்று ஆத்மாநுபூதி பெற்று முக்தி நிலையி லேயே நின்று விடுவார்; இந்த உலகம் அவரால் அடைய வேண்டியிருந்த லாபத்தைப் பெறாமலே போய்விடும் என்று கரு தினார் பரமஹம்ஸர்.

ஸ்ரீராமகிருஷ்ணர் நரேந்திரரைப் பற்றிக் கூறியதவ்வளவை யும் மற்ற சிஷ்யர்கள் பரிபூரணமாக ஏற்றுக்கொண்டார்கள். காரணம், அவர்கள் ஒவ்வொருவரின் உள்ளத்தின் அடிவாரத்தை யும் பரமஹம்ஸர் கண்டிருந்து, அவர்களில் ஒவ்வொருவருக்கும் ஒரு பாதையை வகுத்துக் கொடுத்திருந்ததுதான். தங்களின் இயல்புகளை உள்ளவாறு அறிந்திருந்த குருநாதர் நரேந்திரருடைய அந்தராத்மாவையும் அவ்வாறே கண்டிருக்கிறார் என்ற திடபுத்தி அவர்களுக்கு இருந்தது. குருமஹராஜின் சிஷ்யர்களிடையே எவ் வித மனவேற்றுமைகளும் இல்லாமலிருந்தது உலகத்தின் பாக் கியம். அதனால்தான் பிற்பாடு விவேகானந்தர் இராமகிருஷ்ண மடங்கள் பலவற்றை நிறுவி ஆத்மிகப் பண்ணைகளை ஆங்காங்கு அமைக்க முடிந்தது. ''நரேனுக்குள்ள பதினெட்டு சக்திகளில் ஓரிரண்டு உள்ளவர்கள்கூட உலகப்புகழ் பெறுவார்கள்'' என்று அவர் கூறும்போது அந்த சிஷ்யர்கள் சுவாமி விவேகானந்தர் பெறப்போகும் கியாதியை ஒருவாறு மனக்கண்ணால் கண்டிருப் பார்களோ?

* * *

ஸ்ரீராமகிருஷ்ணர் தமது உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரையில் ஒவ்வொரு அணுவும் அநுபவம் செறிந்த மகாத்மா. அந்த அநுபவம் அளித்திருந்த உறுதிப்பாட்டுடன் அவர் ஒரு பார்வை பார்த்தாலோ, ஒரு சொல் சொன்னால்கூட அவருடைய சீடர்கள் மணிக்கணக்காக நடத்திக் கொண்டிருந்த விவாதங்களுக்கு விடை கிடைத்துவிடும். அவரது உபதேசங் களின் சாரம் இதுதான்: ''அநுபவம் ஒன்றுதான் லக்ஷியம்.

Koviloor Digital Library

இதயத்துக்குள் அநுபவம் வந்தவுடன் எல்லா வாதங்களும் ஓய்ந்து போகும்; தெய்வீக ஞானம் தன்னால் ஒளிவீசும்.'' 'பேச்சாலோ, மேதையாலோ, கல்வி கேள்வியாலோ ஆத்மாவை அடைய முடியாது' என்று வேத சிரசு கூறுவதுதான் இது.

ஒரு நாள் நரேந்திரரும் மற்ற சிஷ்யர்களும் கடவுள் உருவமா, அருவமா என்பது பற்றியும் கடவுள் அவதாரங்கள் நிகழ்த்துவாரா என்பது பற்றியும் அமர்க்களமாக வாதப் பிரதிவாதங்கள் செய்து கொண்டிருந்தார்கள். ஸ்ரீராமகிருஷ்ணர் அவர்களை நோக்கிச் சென்றார். இனிய மென்குரலில் அவர் பாடலானார்:

> உழலும் மனமே, உந்தன் உழைப்பின் பயனென்ன?
> உண்மைப் பொருளை நீ உணர்ந்து கொண்டாயா?
> இருட்டுச் சிறையில் பட்ட குருட்டு உன்மத்தன் போல
> இடையும் மனமே, உந்தன் இணைப்பின் பயனென்ன?

கானம் தொடர்ந்தது:

> தரிசனம் ஆறிலும், தந்திரம் யாவிலும்
> திருமறை தன்னிலும் தேடினால் வருமா
> அன்பின் மதுரசாரம் ஆத்மனின் ஆகாரம்
> அன்பே அறுபொருளின் அனுபவத்துக் காதாரம்

விவாதம் புரிந்து கொண்டிருந்த சீடர்கள் விடை தெரிந்து கொண்டார்கள். வாயடைத்துப் போனார்கள். பரவசமானார்கள். 'சக ஜீவர்களிடத்தில் அன்பு; அந்த அன்பையே பக்தி என்ற பெயரில் ஆண்டவனிடம் செலுத்துவது' இதைச் செய்தால்தான் ஆண்டவனின் இயல்பு தெரியும். அநுபவ வாயிலாகத் தெரியும். அதை விடுத்து புத்தி யுக்திகளால் ஆண்டவனின் இயல்பையும் அவனது அவதார ரகசியத்தையும் எப்படி அறிய முடியும்?

Metaphysical என்று சொல்லப்படும் பௌதிகாதீதமான தத்துவங்களை குருமஹராஜ் உபதேசித்ததில்லை. குழந்தையாக இருந்து குழந்தையின் மொழியிலேயே மகத்தான உபதேசங்களை அவர் அருளுவார். பிரத்யக்ஷமாகப் பரம்பொருளை உருவத்தில் கண்டவர் அவர். அப்பரம்பொருளை உருவற்றதாகத் தம்மிலேயே அநுபவித்தவர். இவ்விரண்டும் அவர் பக்தி, ஞானம் இவை பற்றிச் சிறிதும் குழப்பமும் கலக்கமுமில்லாமல் எளிய முறையில் தெளிவாக அசைக்கமுடியாதபடி உபதேசிக்கக் காரணமாயிருந்தன. அநாவசிய தர்க்கங்களில் அவர் பொழுதைச் செலவிட்டதே இல்லை. தர்க்கத்தால் விடைகாண முடியாத பொருள் கடவுள். கடவுளைக் காண அல்லது அநுபவிக்க வழி இருக்கிறது. அந்தரங்க சுத்தத்துடன் தரிசனம் கிடைக்கவேண்டுமென்று உள்ளுருகிப்

Koviloor Digital Library

பிரார்த்தித்தால் யாரும் தரிசனம் பெறலாம். பிறகு வாதங்களுக்கும் பயனில்லை. தெய்வத்தை அடைய வழி உள்ளத்தூய்மையும், உண்மையான நாட்டமும்தான். இவைகளைச் சற்றும் பெறமுயலாமல் புத்திமூலம் பிரம்மத்தைப்பற்றி ஆராய்வதால் என்ன காணமுடியும்? 'மழை எப்போது பெய்யும் என்று கண்டிருக்கும் பஞ்சாங்கத்தைப் பிழிந்தால் ஒரு சொட்டு நீரேனும் வருமா? அதுபோலத்தான் கடவுளை அடைய வழிகூறும் நூல்களைப்பற்றி விவாதிப்பதாலேயே அவரை அடையலாம் என்றெண்ணுவது' என்று அழகுற உபதேசிப்பார் பரமஹம்ஸதேவர்.

சாதனைதான் பரம்பொருளை அறிய ஒரே வழி. பரமஹம்ஸர் புரியாத சாதனைகள் இல்லை. முதலிலேயே அவர் பரம்பொருளை அநுபவித்துவிட்டு, அதன்பின் பற்பல சாதனைகளாலும் அதே அநுபூதிகூடப் பெற்றமையால் அந்த சாதனைகளின் உண்மையையும் நிலை நாட்டினவர். புத்தகத்திலும் பேச்சிலும் உள்ளவைகளை வாழ்ந்து காட்டி நிருபித்த மகான் அவர்.

இதனுல் அவர் சிஷ்யர்களைப் படிக்கவும், பேசவும் அநுமதிக்காமலில்லை. ஏனெனில் படிப்பும் பேச்சும் பிரம்மாநுபவத்துக்கு விரோதமாகாது. எப்படி பகுத்தறிவு பரம்பொருளைப்பற்றிய ஞானத்தை தராது எனினும் அதற்கு விரோத மாகாதோ, அதே போலப் படிப்பும் பேச்சும் அநுபவத்துக்குக் கீழ்ப்பட்டவை எனினும் அதற்கு விரோதமாகா. தனது துறைக்கு உட்பட்டுச் செயலாற்றும் வரையில் பகுத்தறிவு சத்திய தரிசனத்துக்கு உதவுவது போலப் படிப்பும் பேச்சும்கூட தமது எல்லையறிந்து செயலாகும்போது உபயோகமாயிருக்கும். இதனுலேயே பரமஹம்ஸர் தம் சீடர்கள் வாசிப்பதையும் வாதிப்பதையும் கண்டு மகிழவும் செய்வார். அவர்கள் வாதிப்பதிலிருந்தே அவர்களுடைய மனநிலைகளையும் புரிந்து கொள்வார். அவருடைய முன்பு அவர்கள் வளருவார்கள் — சூரியனின் முன் வளரும் பயிர்போல. 'ஆத்மாவைப் பயிலுவிக்க அவரது சங்கமே ஒரு பெரிய பள்ளிக்கூடம்' என்கின்றனர் மேல்நாட்டு சிஷ்யர்கள்.

வாதம் முற்றிவிட்டாலோ தவருன பாதையில் சென்ருலோ பரமஹம்ஸர் குறுக்கிடுவார். ஒரு நாள் நரேன் 'குருட்டு நம்பிக்கை' யைக் கண்டித்துப் பேசிக்கொண்டிருந்தார். அப்போது குருநாதர் ''குருட்டு நம்பிக்கை என்கிருயே, அதற்கு என்ன அப்பனே அர்த்தம்? நம்பிக்கை எப்போதுமே குருடுதான். நம்பிக்கைக்குக் கண் உண்டா என்ன? எனவே வெறுமனே நம்பிக்கை என்று சொல்லு; அல்லது ஞானம் என்று

Koviloor Digital Library

சொல்லு. குருட்டு நம்பிக்கை என்றும் பார்வையுள்ள நம்பிக்கை என்றும் இரண்டு இருப்பதாக மட்டும் பேசாதே'' என்றார்.

இந்தப் போதனைகள் நரேந்திரரின் உள்ளத்தில் ஊற ஊற அநுபவ ஞான மொன்றே ஞானம் என்று அவர் உணரலானார். ஆனால் அப்பொழுது ஞானம் என்பதே அறியாமல் அறிவதாகும். 'பாராமல் பார்ப்பது' என்று சொல்வது அதைத்தான். பரம் பொருள் ஒன்றுதான் சத்தியம். நாமும் அந்தப் பரம்பொருளே. மாயையின் காரணமாக இந்த உலகமும் ஜீவர்களும் பரம்பொருளாகத் தோன்றாமல் இப்படி உலகம் போலவும் ஜீவர்கள் போலவும் தோன்றுகின்றன. தோன்றுகிறார்கள் என்ற உண்மையை உன்னி உன்னிப் பார்த்து உணரும்போது பேதமற்ற பரம்பொருளிலேயே லயித்துவிடவேண்டியதுதான். பரம்பொருளை 'அறிவது', 'பார்ப்பது' என்றெல்லாம் சொல்லும்போது பரம்பொருள் வேறு, அதை அறிபவன் வேறு; பரம்பொருள் வேறு, அதைப் பார்ப்பவன் வேறு என்றல்லவா ஆகிறது? ஆனால் பரம்பொருள் தான் தன்னையன்றி வேறு எதுவுமற்ற ஒன்று ஆயிற்றே! இதனால் தான் பரம்பொருளை அறிய விரும்புபவன் பரம்பொருளாகவே ஆகிறானே ஒழிய அதனை அறிந்து பார்க்கும் பிறிதொருவனாக இருக்கமுடியாது. இந்த இரண்டற்ற அத்வைத நிலையைத்தான் நரேன் அறிய வேண்டும்; அவர் அதற்காகத்தான் பிறந்தவர் என்று கருதினார் ஸ்ரீராமகிருஷ்ணர். எனினும் அவர் அந்த நிலையிலேயே வேரூன்றி விடலாகாது, அத்வைத உண்மையை உணர்ந்தபின் அதிலிருந்து விலகித் தாம் கண்ட உண்மையை உலகத்துக்கும் எடுத்துக் கூறவேண்டும் என்ற மகா தியாகத்துக்குப் பிரிய சிஷ்யரைத் தயாராக்கினார்.

'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்றிருக்கும் தியாகிகள் நம் நாட்டு மகான்கள். வையகம் அந்த இன்பத்தைப் பெறவேண்டுமென்பதற்காகத் தாங்கள் இன்பத்தை விட்டவர்கள்.

இவ்வாறு லோக சங்க்ரஹத்துக்காகப் பாடுபடவேண்டியதை ஒரு முறை மயிர்க் கூச்செறியும் விதத்தில் சொல்லாமல் சொல்லி விளக்காமல் விளக்கினார் குருமஹராஜ்.

அன்று பரமஹம்ஸரும் சிஷ்யர்களும் வைஷ்ணவ சித்தாந்தத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். கௌரங்கராகிய சைதன்ய மகாப்ரபுவின் பக்தி மதத்தின் சாராம்சத்தைத் தெளிவு படுத்திக் கொண்டிருந்தார் குருநாதர். வங்காளத்தை ஹரி பஜனை வெள்ளத்தில் முழுக்காட்டிய பக்தசிகாமணி ஸ்ரீகிருஷ்ண சைதன்யர். அவரது சித்தாந்தத்தின் மையக் கோட்பாடுகளைக் கூறிய பரமஹம்ஸர், ''இம்மதம் இதனைப் பின்பற்றுபவர்கள்

Koviloor Digital Library

மூன்று விஷயங்களை அநுசரிக்க வேண்டுமெனக் கூறுகிறது: பகவந் நாமத்தில் ஈடுபாடு, பரமனடியார்களான ஸ்ரீவைஷ்ணவர்களுக்குச் சேவை புரிவது, உயிர்க் குலம் முழுவதற்கும் தயை காட்டுவது — இவையே அம் மூன்று. இந்தக் கொள்கைகளின் உட்பொருள் இதுவே: பகவான் தனது நாமத்தினின்று பிறிதானவன் அல்லன். எனவே அவனது நாமத்தை சங்கிர்த்தனம் செய்யவேண்டும். இதேபோல பகவானும் பக்தர்களும் வேறு வேறல்ல, எனவே வைஷ்ணவர்களுக்குச் செய்யும் பணி விஷ்ணுவுக்கே செய்வதாகும். மூன்றுவதாக இவ்வுலகமெல்லாம் ஸ்ரீகிருஷ்ணனுக்கு உரியது. எனவே சகல ஜீவராசிகளுக்கும் தயை......''

பரமஹம்ஸரால் மேலே பேசமுடியவில்லை. மேலே மேலே சென்று பரவசசமாதியில் நிலைத்து விட்டாரவர். பிறகு அவ்வுலகுக்கும் இவ்வுலகுக்கும் இடையிலுள்ள ஒரு நிலையில் தமக்குத் தாமே கூறிக் கொண்டார்: ''சகல ஜீவராசிகளிடத்தும் தயை! தயை! தயையாவது? அறிவிலியே, உலகத்தில் நெளிந்து சுருளும் அற்பப் புழுவல்லவா நீ! நீ பிறரிடத்தில் தயை காட்டவாவது, தயை? முடியாது. அது மிகப் பெரிய வார்த்தை! நீ தயை காட்ட முடியாது, பணிதான் புரிய முடியும். பகவானின் தோற்றங்களே உயிர்கள் எனக்கண்டு அவர்களுக்கு நீ பணிதான் புரியவேண்டும்.''

ஸ்ரீராமகிருஷ்ணருடைய இதயத்தின் அடி ஆழத்திலிருந்து கனிவு மயமாகத் துளும்பின அந்த வார்த்தைகள். கேட்டவர்களுக்கு ரோமாஞ்சன முண்டாயிற்று. நரேந்திரருக்கு அதன் முழுப் பொருளும் புரிந்தது. இந்த உபதேசத்துக்காகத்தான் அவர் பிறந்திருந்தார்! இந்த உபதேசத்தை உண்மையில் நடத்திக் காட்டத்தான் அவர் ஜனித்திருந்தார். பந்தைப் பிடிப்பதற்காகக் காத்துக் கொண்டிருக்கும் கைகள் போல இந்த உபதேசத்துக்காகத்தான் அவரது ஆத்மா காத்துக்கொண்டிருந்தது. இப்போது நழுவாமல் பிடித்துக்கொண்டு விட்டது. அவரது இதயமலரில் எந்த மகரந்தம் விழுந்து கனியைத் தோற்றுவிக்க வேண்டுமோ அந்த மகரந்தம் விழுந்தே விட்டது.

குருநாதர் கூறியதில் செறிந்திருந்த ஆழ்ந்த தாத்பரியத்தை சக மாணவர்களுக்குக் கூறலானார் நரேந்திரர்:

''குருமஹராஜின் அந்த அற்புதமான வார்த்தைகளில் எத்தகைய அசாதாரண ஒளியை நான் கண்டு கொண்டேன் தெரியுமா? பக்தியின் லக்ஷியத்தையும், வேதாந்தத்தின் ஞானத்தையும் எவ்வளவு பாங்குற அவர் இணைத்துவிட்டார்! வேதாந்தம் மிகவும் கடினமானது, கடுமையானது, மானுட உணர்ச்சிகளை

Koviloor Digital Library

வெறுப்பது என்றல்லவோ பொதுவாகச் சொல்கிருர்கள்? அது தவறு என்பதாக, அதனைப் பக்தியுடன் எவ்வளவு மகத்தான முறையில், இயல்பான முறையில், இனிமையான முறையில் இசைத்து விட்டார்! பொதுவாக, வேதாந்த ஞானம் பெற வேண்டுமெனில் சமூகத்தை பகிஷ்கரித்துவிட வேண்டும், அன்பு, பக்தி, தயை முதலிய கோமளமான உணர்ச்சிகளை வேரோடு கெல்லி எறிந்துவிட வேண்டும் என்றெல்லாம் எண்ணப்படுகிறது. உலகமும் உலகத்திலுள்ள உயிர்களும் ஆத்ம சாதனைக்குத் தடைகள் என்றெண்ணி அவற்றிடம் மாற்ற முடியாத வெறுப்புக் காட்டத் தொடங்குகிருன் சாதகன். ஆனுல் இன்று பரமஹம்ஸர் பரவச நிலையிலிருந்து கூறிய ஞான மொழிகளிலிருந்துதான் உண்மையான வேதாந்த லக்ஷியத்தை நான் புரிந்து கொண்டேன். சமூகத்திலிருந்து வெளியேறிய ஏகாங்கி அப்பியசிக்கும் வேதாந்த லக்ஷியத்தை சமூகத்திலிருந்துகொண்டே அநுஷ்டிக்க முடியும்; நாட்டிலும் வீட்டிலும் நம் இகவாழ்வின் தினசரி நடவடிக்கைகள் சகலத்திலும் அநுஷ்டிக்க முடியும் என்று உணர்ந்து கொண்டேன். ஒருவனின் தொழில் எதுவாக வேண்டுமானுல் இருக்கட்டும். கடவுளேதான் உலகாகவும் உலகிலுள்ள பொருளாகவும் தோன்றுகிருன் என்று அவன் புரிந்து கொண்டால் போதும். கடவுள் எல்லாவற்றுக்குள்ளும் வசிக்கும் அந்தர்யாமி. அவனே எல்லாவற்றுக்கும் வெளியே, பரத்துக்கும் பரமாக பராத்பரனுக இருக்கிருன். நம்முடைய அன்புக்கும், மரியாதைக்கும், தயைக்கும் ஆளாகும் எல்லா ஜீவராசிகளாகவும் இருப்பவன் அவன் தான். அவைகளுக்கு அப்பால் இருப்பவனும் அவனே! இவ்வாறு மன்பதையில் ஈசுவரனைக் காண்பதால் எவ்விதமான உயர்வு-தாழ்வு எண்ணமும் ஏற்பட இடமில்லாமல் போகிறது. பொருமை அழிகிறது. அதே போலப் பரிதாபமும் போகிறது. (அதாவது தம்மை உயர்வாக எண்ணிக் கொண்டு 'ஐயோ, பாவம்' என்று மற்றவர்கள் நம்மைவிடத் தாழ்வாக இருப்பதாக எண்ணி 'தயை' காட்டுகிருேமே, அது போகிறது.) மனிதன் பரமனின் தோற்றமே என்றறிந்து அவனுக்குச் சேவை செய்வதால் இதயம் சுத்தமாகிறது. அந்த க்ஷணமே (க்ஷணகாலம் என்பதுகூட அதிகமாகும்) சாதகன் தானும் ஆண்டவனிலேயே அடக்கமானவன்; ஒரே உண்மையான சத்தும், ஒரே ஞானமாகிய சித்தும், ஒரே இன்பமாகிய ஆனந்தமும் இணைந்துள்ள சச்சிதானந்தப் பரம் பொருளில் தான் இருப்பதை சாதகன் உணர்கிருன்.

"(வேதாந்தத்தில் மட்டுமின்றி) பக்தி மார்க்கத்திலும் ஸ்ரீராமகிருஷ்ணரின் வாக்குகள் ஒரு புத்தொளி பரப்புகின்றன.

Koviloor Digital Library

கடவுள் எல்லாவற்றிலும் பாலில் வெண்ணெய் போல் இருக்கிறுன் என்று சாதகன் உணரும் வரையில் அவன் உண்மையான பக்தியி லிருந்து மிகவும் தள்ளியே நிற்கிறுன். எல்லா ஜீவர்கள் மூலமும், எல்லா ஜீவர்களிலுமே பரமனைக் கண்டு, மக்கள் சேவை வழியே அவனை ஆராதிக்கும்போதுதான் ஒருவன் உண்மையான பக்தியைப் பெறுகிறுன். கர்மம், யோகம் இந்த மார்க்கங்களில் செல்பவர் களும் குருநாதரின் இந்த உபதேசத்தால் பயன் பெறுகிறுர்கள். ஓர் உடலைப் பெற்றுவிட்ட ஜீவனுல் ஒரு கர்மமும் புரியாமல் நிமிஷ நேரம்கூட இருக்க முடியாது. எனவே அவனுடைய கர்மங்கள் யாவும் மன்பதைப் பணிக்குத் திருப்பிவிடப்பட வேண் டும்.**ஆண்டவனின் சங்கல்பம் மட்டும் இருக்குமாயின் இந்த மகோன்னதமான சத்தியத்தை இந்தப் பரந்த உலகுக்கு நான் பிரகடனம் செய்யும்நாள் விரைவிலேயே வரும்.** இந்தச் சத்தியத்தை நான் எல்லாருக்கும் — அறிவாளி — அறிவிலி, தனிகன் — தரித்திரன், பிராமணன் — பறையன் எல்லாருக்கும் பொதுவான சொத்தாக ஆக்குவேன்.''

* * *

அந்த நாளும் வரத்தான் செய்தது. அதை அனவரதமும் நினைப்பூட்டிக் கொண்டிருப்பவையே இன்று உலகெங்கிலுமுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மடங்கள். சமூக சேவை மூலம் ஈசுவரனைத் தொழுவதில் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தினருக்கு இணையாக யாரைச் சொல்ல முடியும்? 'வறட்டு' வேதாந்தம் என்று சொல்வது எவ்வளவு தவறுனது, வேதாந்தத்தைப் போலச் சொட்டச்சொட்ட நனைந்த தத்துவம் வேறெதுவும் கிடையாது என்பதன் விளக்கமே ஸ்ரீராமகிருஷ்ண மடங்கள். அல்லலுற்றவரின் இன்னலைத் தீர்ப் பதில் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தினர் காட்டும் தாய்மைத் துடிப்பு சர்வேசுவரியின் திருக்கோயிலாக விளங்கிய பரமஹம்ஸ பகவான் அவர்களுக்கு அளித்துள்ள அற்புதச் சொத்தாகும்.

* * *

அத்வைத தத்துவத்தை அவலம்பித்த ஆதி சங்கரரும் மக்கட் குலத்துக்குத் தம்மைத் தியாகம் செய்துகொண்ட புண்ணிய மூர்த்தியே யாவார். இல்லாவிடில் அவர் அத்வைதத்தை அவலம் பித்தே இருக்க மாட்டாரல்லவா? தம்மட்டில் அத்வைதத்தை அநுபவித்துக்கொண்டு தமது மோக்ஷத்தை மட்டுமேதான் பெற் றிருப்பார். ஸ்ரீராமகிருஷ்ணர் 'தயை' என்பது பற்றிக் கூறிய மொழிகள் ஆதிசங்கரரின் வரலாற்றைக் கூறும் பிருஹத் சங்கர விஜயத்தில் காணப்படும் ஒரு நிகழ்ச்சியை நினைவுக்குத் தருகிறது.

Koviloor Digital Library

பகவத்பாத சங்கரர் தமது திக்விஜயத்தின்போது கௌசாம்பியில் முகாமிட்டிருந்தார். அங்கு ஒரு தாயும் தந்தையும் தங்களது ஒரே மகனின் சடலத்தின்மீது விழுந்து கதறிக்கொண்டிருந்ததைக் கண்டார். அவருடைய உள்ளம் நெகிழ்ந்தது. இதற்குத் தன்னால் என்ன பரிகாரம் காணமுடியும் என்று அவர் எண்ணினார். 'உண்மையாகப் பரிதாபப்படும்போதுதான் பரிகாரம் காணமுடியும்; அந்தப் பரிதாபம் பிறப்பதற்குக் கருணைதான் மூலச்சரக்கு; கருணை காட்டுவது தன்னால் முடிகிற காரியமா, பகவான் ஒருவனேயல்லவா கருணை என்ற பேருணர்ச்சியைக் காட்டமுடியும் ?' என்று சங்கரர் சிந்தித்தாராம்.

ஸ்ரீராமகிருஷ்ணர் தம்மால் எப்படி தயை காட்டமுடியாது என எண்ணினாரோ, அதாவது ஏனையோரைவிடத் தாம் உயர்ந்த இடத்திலிருப்பதாக எண்ணி அவர்களிடம் 'இரங்க' முடியாது என்று எண்ணினாரோ, அவர்களைத் தம்மிலும் உயர்ந்தோராக, ஆண்டவனாகக் கருதிப் பணி மட்டுமே புரிய இயலும் என்று எண்ணினாரோ — அதே போல ஆதிசங்கரரும் இதர மக்களுக்கு மேலாகத் தம்மை மதித்து அவர்களிடம் 'கருணை' காட்டவொண்ணாது என்று எண்ணியிருக்கிறார். அவ்வளவு விநயத்துடன் அவர் எண்ணியவுடனேயே இறந்து கிடந்த சிறுவன் உயிர்பெற்றுவிட்டானாம்.

'எளியவர்களே பாக்கிய சாலிகள்; ஏனெனில் அவர்கள் உலகையெல்லாம் பெறுவார்கள்' என்பது இயேசுநாதரின் திருவாக்கு.

* * *

ஸ்ரீராமகிருஷ்ணரின் உருவம், எண்ணம், செயல், வாக்கு யாவுமே ஹிந்து மதத்தின் சாரமாகும். ஹிந்து மதத்தின் கர்மம், யோகம், பக்தி, வேதாந்தம், தந்திரம், மந்திரம் எல்லாவற்றையுமே நிரூபித்துக் காட்டியவர் அவர். ஏதோ ஒரு பகுதியில், ஒரு பகுதிக்குரிய குறுகிய புத்தியுடன் அவர் ஹிந்து மதத்தின் பல பிரிவுகளையும் அநுஷ்டித்து அவற்றின் சத்தியத்தை நிரூபித்தார் என்றில்லை. எல்லா மார்க்கங்களுக்கும் ஆதாரமாகவும், பின்னணியாகவும், அவை நிறைவுறும் ஸ்தாபனமாகவும் அத்வைதத்தைக் கொண்டிருந்தவர் பரமஹம்ஸர். துவைதம், விசிஷ்டாத்வைதம் இவற்றை ஆதரித்துப் பேசும்போதுகூட அத்வைதத்தில் பிடிப்பை விடாதவர் அவர். 'நெல்லுக் குத்துபவள் என்னென்ன பேசினாலும், நெல்லுக் குத்தியபடியே குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருந்தாலும் கையில் உலக்கை விழக்கூடாது என்பதில் கவனம் இழக்காமலிருப்பதுபோல் எந்தக் காரியத்தி

Koviloor Digital Library

லிருந்தாலும் பகவானை மறக்கலாகாது' என்று அவர் உபதேசித்தா ரல்லவா? இதையே சற்று மாற்றி எந்தத் தத்துவத்தை அவர் நிரூபித்துக் காட்டினாலும் அத்வைத தத்துவத்தை மறவாமலே அவ்வாறு செய்தார் என்று கூறலாம். பரம்பொருளும் உலகமும் ஒன்று; பரம்பொருளும் உயிர்க்குலமும் ஒன்று என்ற அத்வைத பாவத்துடன் அவர் ஹிந்து மதத்தின் எல்லா சம்பிரதாயங்களை யும் அநுஷ்டித்து, அவையும் அத்வைதமாகிய இறுதி சத்தியத் துக்கு அநுகூலமானவையே என்று காட்டினார். பக்தி, கர்மம் எல்லாமே இப்போது புதுப் பொலிவைப் பெற்றன. பக்தி என் பது எங்கோ உள்ள கடவுளை அடைந்து அவருக்குத் தாஸனாக இருப்பது மட்டுமல்ல; அந்த தாஸத்துவம் மாறி, கடவுள் எங்கோ யிருக்கிறார் என்பதும் மாறி, கடவுளே தானாகி தன்னையே அநுபவித்துக் கொள்ளும் ஞானம்தான் பக்தி என்றாயிற்று. கர்மம் என்பதும் இதய சுத்தத்துக்காகத் தனக்கு விதித்த சமூகக் கடன் களை ஒருவன் புரிவதுதான் என்ற நிலை மாறி, சமூகத்தையும் பிரம்மமாகக் காணும் பாவனையால் இதயத்தில் பரம்பொருளை நுகரும் அத்வைதமாயிற்று. ஹிந்து மதத்துக்கு அத்வைத ஆதாரத் தினால் ஸ்ரீராமகிருஷ்ணர் ஊட்டியிருந்த புதுப் பொருள்தான் நரேந்திரரின் பழைய கருத்துக்களை மாற்றி அவரை வெற்றி கொண்டது. மூட நம்பிக்கைகளும், உயர்வு-தாழ்வு கற்பிப் பதுமே ஹிந்து மதம் என்று எண்ணியிருந்த நரேந்திரர் பிரத்தியக்ஷ அநுபவமும், சமபாவத்துடன் மக்கட் பணி புரிவதுமே உண்மை யான ஹிந்து மதம் என்று கண்டார். சமபாவம் என்னும்போது 'சமம்' என்ற பதமே பிரம்மத்தைத்தான் குறிக்கிறது என்பதை யும் இங்கு குறிப்பிடலாம்.

ஹிந்து மதத்தை எள்ளி நகையாடிய நரேந்திரரே இப்போது அம்மதத்தை உலகுக்கெல்லாம் பரப்பவேண்டும் என்ற ஆர்வத் தைப் பெற்றார். உடையைக் களைந்துவிட்டு, பிறகு அதனை நன் றாகத் துவைத்துச் சுத்தம்செய்து மீண்டும் உடுத்திக் கொள்வது போல், குழந்தைப் பிராயத்தில் தாம் அறிந்திருந்த ஹிந்து மதத்தை நடுவில் சிறிது காலம் கழற்றியிருந்த நரேந்திரர் இப் போது அதனை ஸ்ரீராமகிருஷ்ணரின் மகிமையால் சுத்தப்படுத்தி மீண்டும் தமதாக்கிக் கொண்டார். 'ஹிந்து மதம் புத்தகத்திலும் பேச்சிலும் இல்லை; இதோ கண் முன்னே உயிர் வாழ்கிறது' என்பதைக் கண்டபின் அவருடைய குழப்பங்கள் தீர்ந்தன. பிறப் பால் ஹிந்துவாக இருந்தவர் இப்போது உணர்வாலும், அறி வாலும் ஹிந்து வானார். ஆமாம், 'அறிவாலும்' தான். ஏனெனில் அறிவுக்கு மதத்தில் எம்மட்டும் இடமுண்டோ அது

Koviloor Digital Library

வரை ஹிந்து மதம் அறிவின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது என்பதையும் கண்டுவிட்டார் நரேந்திரர்.

ஹிந்து மதத்தில் நரேந்திரர் ஆழ்ந்த நம்பிக்கை பெற்ற தற்குக் காரணம் பரமஹம்ஸரிடம் அவர் கொண்ட நம்பிக்கையே யாகும். பைத்தியம் என்று அவரை முதலில் எண்ணினர் நரேந் திரர். பிறகுதான் அது எத்தகைய அற்புதமான பைத்தியம் என்பதைத் தெரிந்து கொண்டார். மற்றவர்களின் பைத்தி யத்தை எல்லாம் தெளிவிக்கும் பைத்தியம் அது என்று தெரிந்து கொண்டார். ஸ்ரீராமகிருஷ்ணர் மூட நம்பிக்கைகள் கொண்ட வர் என்று அவர் முதலில் எண்ணினர். பிறகு மற்றவர்களின் மூட நம்பிக்கைகளைக் களையும் அதிசயமான மூட நம்பிக்கை அது என்று புரிந்து கொண்டார். ஜுரமடிப்பவன் வாய்க்கு உணவு கசக்கிறது என்றால் உண்மையில் அந்த உணவா கசப்பாகிவிட்டது? நாவின் கசப்பு உணவில் ஏறுவதுபோல பார்ப்பவர்களின் பைத்திய மும் மூட நம்பிக்கையும்தான் பார்க்கப்பட்ட பரமஹம்ஸரின் பைத்தியமாகவும் மூட நம்பிக்கையாகவும் தெரிந்தன. இவ்வாறு பரமஹம்ஸரைப் புரிந்து கொண்டபின் பாரதத்தின் சநாதன தர்மமும் நரேந்திரருக்குப் புரியலாயிற்று. 'பிரம்ம சமாஜம் அறி வுக்கு சரியாக இருக்கலாம்; ஆனால் ஆத்மீகமாக அதற்கு உயி ரில்லை. அதன் அறிவுக்கு அத்வைதப் பின்னணி இல்லை' என்று கருதலானார் நரேந்திரர். பிரம்ம சமாஜத்தின் தலைவர்கள் தனிப் பட்ட முறையில் ஆத்மீகம் மிகுந்தவர்களாக இருப்பினும் அது மற்ற அங்கத்தினரிடையே அந்த அநுபவத்தை உண்டாக்க இய லாது என்றும், சமூகச் சீர்திருத்த சங்கமாகவே அது பணிபுரிய முடியும் என்றும் எண்ணலானார். 'ஏன், பிரம்ம சமாஜத்தின் தனிப்பெரும் தலைவரும் ஆத்மீகம் நிரம்பியவருமான கேசவ சந்திர சேனரே ஸ்ரீராமகிருஷ்ணரைப் போற்றி வணங்க அல்லவோ செய் கிறார்?'

பிரம்ம சமாஜத்திலிருந்து விலகித் தாயாகிய ஹிந்து மதத் துக்கு வந்து சேர்ந்தார் அந்தத் தாயின் புகழை நானிலமெல்லாம் பரப்பப் பிறந்த அருமைப் புத்திரர். பிரம்ம சமாஜத்திலிருந்து அவர் விலகியதாகச் சொல்வது அவ்வளவு பொருத்தமில்லைதான். ஏனெனில் பிரம்மத்திலேயே ஒருவனை வாழச்செய்யும் வேதாந் தத்தைவிடச் சிறந்த பிரம்ம சமாஜம் ஒன்று உண்டா, என்ன?

* * *

பிரம்ம சமாஜத்தினருக்குரிய ஓர் அச்சம் நரேந்திரருக்கும் இருந்தது. அதாவது தீவிரமாகத் தியானம் புரிவதால் தேகம் சிதறிவிடும், ஒருவிதமான பித்து ஏறிவிடும் என்று ஒரு பயம்

Koviloor Digital Library

நரேந்திரருக்கு ஏற்பட்டது. இதை அருமையான உவமையால் தெளிவித்தார் பரமஹம்ஸர்.

''பாயஸக் கடலாக இருக்கிருன் பரமன்! குழந்தாய் நீ அந்தக் கடலில் முழுக மாட்டாயா? கோப்பையில் பாயஸம் இருப்பதாகவும், நீ ஓர் ஈயாக இருப்பதாகவும் எண்ணிக்கொள், பாயஸத்தை அருந்தவேண்டுமானுல் நீ என்ன செய்வாய்?'' என்று கேட்டார் பரமஹம்ஸர். ''கோப்பையின் விளிம்பில் உட்கார்ந்துகொண்டு பாயஸத்தை ருசி பார்ப்பேன். ஆனுல் பாயஸத்துக்குள்ளேயே விழுந்தால் உயிர் போய்விடுமே என்றும் பயந்து ஜாக்கிரதையாகத்தான் இருப்பேன்'' என்ருர் நரேந்திரர். ''ஆனுல் நீ ஒன்றை மறந்து போனுய் என் பிள்ளாய்! இந்தப் பாயஸம் அமிருதமானது; எனவே இதில் விழுபவர்கள் சாக மாட்டார்கள்; ஆனுல் மிருத்யுவைக் கடந்து அமிருதமாவார்கள் என்பதை மறந்து போனுய். அறிவற்றவர்கள்தான் ஆண்டவனிடம் பக்தி செலுத்தும்போது கட்டுப்பாடு வேண்டும் இல்லாவிட்டால் தீங்கு ஏற்படும் என எண்ணுவார்கள். நான் சொல்கிறேன் குழந்தாய், இந்த அமிருத சாகரத்தில் பயப்படாமல் முழுகு'' என்று மொழிந்தார் ஸ்ரீராமகிருஷ்ண தேவர்.

* * *

இப்படியெல்லாம் பேசி விளக்கும் திறன் பெற்றிருந்த ஸ்ரீராமகிருஷ்ணர் பேசாமல் விளக்குவதிலும் பேராற்றல் படைத்திருந்தார். மோனத்தினுல் பரம ஞானத்தை அவர் விளங்க வைத்த பல சந்தர்ப்பங்களும் உண்டு. சம்பாஷணையின்போது உயிரைச் சிலிர்க்க வைக்கும் முறையில் திடீரென உரையாடும் அந்த உத்தமர் உரையிழந்து உயிரிலேயே உறைந்து போகும் சமயங்களும் உண்டு. மாணவர்கள் காரமாகக் கட்சிப் பிரதிக் கட்சி நடத்திக்கொண்டு, குருநாதர் என்ன சொல்லப் போகிருர் என்று அவரைப் பார்த்தால் அவரோ சமாதிநிலையில் ஆனந்த ஸ்வரூபமாக விளங்குவார். 'பேசிப் புண்ணியமில்லை; இந்த அநுபவத்துக்கல்லவோ பாடுபடவேண்டும்? இந்த அநுபவத்தைப் பெற ஆண்டவனிடம் எல்லையற்ற அன்பு காட்டவேண்டியது ஒன்றே அல்லவோ உபாயம்? அந்த அன்பைப் பயிர் செய்து கொள்வோம்' என்று எண்ணுவார்கள் சீடர்கள்.

* * *

ஹிந்து மதத்தின் எல்லா சம்பிரதாயங்களையும், இஸ்லாம், கிறிஸ்துவ மதம் இவற்றையும் அநுசரித்து அவை ஒவ்வொன்றின் மூலமாகவும் கடவுளைக் கண்ட ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் எந்த சமயத்தையுமே கண்டித்ததில்லை.

Koviloor Digital Library

கடவுளுக்கு உருவம் உண்டு என்னும் மதங்களும் உண்மை; கடவுள் அருவமானவர் என்ற மதங்களும் உண்மையே என்பார். ''அவர் இரண்டுமே யாவார்; இரண்டுக்கும் அப்பாற்பட்டவரு மாவார். ஆத்மாநுபவத்தில் உருவமில்லாமலிருக்கும் அவனே பக்தனின் சந்தோஷத்துக்காக உருவமும் தரித்துக்கொள்கிறான். அவனை வார்த்தைகளால் விளக்க முடியாது. புத்தகத்தின் இரண்டு அட்டைகளுக்குள் புகுத்த முடியாது. கோயிலின் பிர காரங்களுக்குள் கட்டுப்படுத்த முடியாது'' என்பார். இப்படிச் சொன்னவரே காளி மாதாவின் கோயிலுக்குச் சென்று பூஜித்துப் பரவச மடைவார்.

விக்கிரக ஆராதனை சரியா, தப்பா என்று கேட்பதெல்லாமே பைத்தியக்காரத்தனம் என்பார். உலக ஆசைகளை மறந்து, கடவுளை எண்ணுவதற்கு உதவுவது எல்லாமே சரிதான் என்பார். உண்மையான, தீவிரமான ஆர்வம் ஒன்றுதான் பகவத் தரிசனத் துக்குத் தேவையானது என்பார்.

'அந்த ஆர்வத்துடன் எப்படிவேண்டுமானாலும் வழிபடுங் கள்; எந்தப் பிரார்த்தனையை வேண்டுமானாலும் சொல்லுங்கள்; ஈசுவரனுக்கு ஓர் எறும்பு அடி எடுத்து வைக்கும் ஓசை கூடக் கேட்கும்' என்பார். காமத்தையும், பொருளாசையையும் விட்டு உண்மையான ஆர்வத்துடனும் இதய சுத்தத்துடனும் எப்படிப் பிரார்த்தித்தாலும் சர்வ நிச்சயமாகக் கடவுளைக் காணமுடியும் என்று அடித்துச் சொல்வார். பெண்ணாசை, பொன்னாசை இவற்றை விலக்க வேண்டும் என்பதை அடிக்கடி கூறுவார். காமினி, காஞ்சனம் என்று இவற்றை அவர் குறிப்பிடுவார். சீடர்கள் பொருளாசையை விலக்கவேண்டுமென்பதற்காகவே தாம் பொருளைக் கண்டாலே வெறுத்தார். 'ஸ்ரீராமகிருஷ்ணர் அவரறியாமலே பணத்தை ஸ்பரிசித்தாலும்கூட உடல் பதறியது ஏன்? எதனிடமும் விருப்பு, வெறுப்பு பாராட்டக் கூடாத ஜீவன் முக்தருக்குப் பணத்திடம் மட்டும் ஏன் அத்தகைய வெறுப்பு ஏற்பட வேண்டும்?' என்று சிலர் கேட்பதுண்டு. பரமஹம்ஸ ருக்கு விருப்பு-வெறுப்பு கூடாது என்பது தெரியாதா என்ன?

அவரே ஓர் அழகான கதை கூறியிருக்கிறார். வைராக்கிய மடைந்த ஒரு கணவனும்-மனைவியும் செல்லும் வழியில் கணவன் பொன்னைக் கண்டானாம். எங்கே மனைவி அதனைப் பார்த்து ஆசை கொள்வாளோ என்றெண்ணி அதனை மறைத்தானாம். இதையறிந்த அந்த மனைவி, ''ஸ்வாமி, உங்களுக்கு இன்னும் பொன் மண் என்ற பேதமெல்லாம் போகவில்லையா?'' என்று கேட்டாளாம். இந்தக் கதையைக் கூறிய பரமஹம்ஸர் மட்டும்

Koviloor Digital Library

பொன்னையும், பொருளையும் பேத புத்தியுடன் பார்த்திருப்பாரா, என்ன? 'ராகத்வேஷ வியுக்தன்' என்று கீதாசாரியன் கூறியது போல், விருப்பைமட்டுமின்றி வெறுப்பையும் களைந்தவர்தாம் அவர். எனினும் ஸ்ரீராமகிருஷ்ணர் போன்ற ஆசாரிய புருஷர்கள் தங்களுக்காக மட்டும் வாழ்ந்து கொள்ளவில்லை. இன்னும் சொல்லப்போனால் தங்களுக்காக அவர்கள் வாழ்ந்து கொள்ளவேயில்லை. பிறருக்கு வழிகாட்டவேண்டிய பெரிய பொறுப்பு ஆசாரியர்களுக்கு உண்டு. அதனால், தங்களிடம் இல்லாத குறைகளைக் கூடத் தங்கள் மீது அவர்கள் சுமத்திக் கொள்வார்கள். அவர்களின் உச்சமான அநுபவ நிலையிலிருந்து பார்க்கும்போது குறைகளாகத் தோன்றுபவையும் பாமரர்களுக்கு வழிகாட்டியாகும். இவ்வாறு பிறருக்கு வழிகாட்டுவதற்காகத்தான் பரமஹம்ஸர் திரவியத்தைக் கண்டு வெறுத்து, அந்த வெறுப்பைத் தம் உடலின் இயல்பாக்கிக் கொண்டது. முதலில் சாதகன் விருப்பங்களை மட்டும்தான் விடவேண்டும். பிறகுதான் வெறுப்பை விடமுடியும். ஓரளவுக்குமேல் உயரச் சென்றபின்தானே ஆகாய விமானத்தில் தரைமீது ஊர்ந்து செல்லப் பயன்படும் சக்கரங்களும் தூக்கிக் கொள்கின்றன?

விருப்பங்களைக்கூட முதலிலேயே பூரணமாக விடமுடியாது. அவற்றை ஆண்டவன்மீது திருப்பினால்தான் பிறகு எவ்வித விருப்பமுமில்லாமல் போகும்.

''பற்றுக பற்று அற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு''

என்று நாம் திருப்பித் திருப்பிக் கூறும் வள்ளுவர் வாய்மொழி இந்த உண்மையைத்தான் எடுத்தியம்புகிறது.

* * *

வெறுப்பில்லாதவர் வெறுப்பு இருப்பதாகக் காட்டிக் கொண்டது போலவே அதிவர்ணாசிரமியாகிவிட்ட பின்னும் ஸ்ரீராமகிருஷ்ணர் வர்ணமுறையைக் கண்டித்ததில்லை. அதோடு தாம் அந்தணர் பக்குவம் செய்திருந்தாலன்றி வேறெந்த உணவையும் உண்டதில்லை. நரேந்திரர் மட்டும் விதிவிலக்கு என்று முன்பே கண்டோம்.

எனினும் ஸ்ரீராமகிருஷ்ணரைப் போல ஜாதிச் செருக்கு இல்லாதார் வேறு யார் உண்டு? ஜாதியில் தாழ்ந்தவர்களாகக் கருதப்படுபவர்கள் இயற்கைக் கடன் கழிக்கும் இடத்தைக்கூடக் கழுவிச் சுத்தம் செய்த விநய சம்பன்னர் அவர்.

Koviloor Digital Library

எந்தச் சம்பிரதாயத்தையுமே ஸ்ரீராமகிருஷ்ணர் பொய் யெனத் தள்ளியதில்லை. வாமாசாரம் என்ற முறையில் ஸ்திரீ களும் புருஷர்களும் பயங்கரமான விதத்தில் ஒன்று சேர்ந்து புரியும் சாதனையைக்கூட அவர் பொய் யென்று தள்ளியதில்லை. ''வீட்டுக்கு வாசல் வழியாகவும் வரலாம்; புறக்கடைச் சாக்கடை வழியாகவும் வரலாம்; இவர்கள் சாக்கடை வழியாக வருபவர் கள்'' என்றே சொல்வார். அப்படிச் சொல்லும்போதே மாண வர்களை ஜாக்கிரதை செய்து விடுவார். ''மதம் என்ற பெயரில் கீழ்த்தரமான இச்சைகளைப் பூர்த்திசெய்து கொள்ளவும் இந்த மார்க்கம் பயனுகிவிட ஏதுவுண்டு. ஆனால் இதையெல்லாம் பற்றி நாம் ஏன் பேசவேண்டும்? என்னைப் பொறுத்தமட்டில் நான் எந்தப் பெண்ணையும் தாயாகவே காண்கிறேன். இது ஒரு சுத்த மான மனப்பான்மையாகும். இதில் எந்த அபாயமும், பயமும் இல்லை. அல்லது பெண்களை சகோதரியாகவும் காணலாம்; அது வும் தவறில்லை. மற்ற மனோபாவங்கள் எல்லாம் கடினமானவை; ஆபத்தானவை. அவற்றில், லக்ஷியத்தின் தூய்மையை வழுவாது கடைப்பிடிப்பது சிரம சாத்தியமாகும்'' என்பார்.

உயர்ந்ததொரு நிலையில் ஆரோகணித்துக் கூறுவார் பரம ஹம்ஸர்; ''பல கருத்துக்களிருக்கின்றன; பல வழிகளிருக் கின்றன. ... பல வழிகளிலும் செல்லும் சாதகர்கள் ஒருவரோ டொருவர் சச்சரவிட்டுக் கொள்கிறார்கள். நீங்களெல்லோரும் என்னுடைய சொந்த ஜனங்கள். இங்கே வெளி மனிதர் என்று ஒருவருமே கிடையாது. நான் சொல்கிறேன்: அவன் ஒருவனே பூரணன்; நான் அவன் அங்கம் என ஒருபோதில் காண்கிறேன். அவனை எஜமானனுகவும் என்னை அவனது தாஸனுகவும் இன் னொருபோதில் காண்கிறேன். சில சமயங்களில் அவனே நான், நானே அவன் என உணர்கிறேன்.''

துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் எல்லாம் அற் றுப்படியாகிவிட்டன அல்லவா?

* * *

ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசமுறை நரேந்திரரை மிகவும் கவர்ந்தது. தன்னுடைய பழைய கருத்துக்களை எல்லாம் அவர் எத்தனை சொகுசாகத் திருத்துகிறார் என்பதை மிகவும் ரசித்தார் அவர். 'மனிதன் பாபத்தில் பிறந்தவன்' என்ற கிறிஸ்துவ சமயக் கோட்பாட்டை பிரம்ம சமாஜத்தினரும் ஏற்றுக் கொண் டிருந்தார்கள். ஆனால் பரமஹம்ஸரின் ஆத்மிக அகராதியிலோ பாபம் என்ற பதமே கிடையாது. 'மனிதன் ஒரு சில கட்டுப் பாடுகளுடன் பிறந்திருப்பது உண்மைதான். ஆனால் இந்தக்

Koviloor Digital Library

கட்டுப்பாட்டையே எண்ணி, பாபத்தில் பிறந்தோம் என்று துய ருறுவானேன்? எந்தக் கட்டுப்பாடும் அறியாத பூரண சுதந் திரத்தைப்பெற்று ஆனந்தமாகும் உபாயம் ஆத்மாவுக்கு இருக் கிறது. கட்டுப்பாட்டைப்பற்றி எண்ணுவதை மறந்து சுதந்திரத் தை எண்ணி, சுதந்திரத்துக்காகப் பாடுபடலாமே' என்பதுதான் பரமஹம்ஸரின் கருத்து.

* * *

ஸ்ரீராமகிருஷ்ண பகவானின் அநுக்கிரகம் கூட்டிவைக்க, நம் நாடு செய்த நல்வினைப் பயனாக நரேந்திரர் ஹிந்துவாகி சாதனைகளைத் தொடங்கினார். தியானம், பிரார்த்தனை, வேதாந்த விசாரம் என்று காலம் பயனுள்ளதாகக் கழிந்து வந்தது. குருவின் அநுபவங்கள் சிஷ்யருக்குள் பாயத் தொடங்கின.

நரேந்திரருக்கு இப்போது சில விசித்திரமான அநுபவங்கள் கிட்டின. அவர் வீட்டுக்குச் சென்றாலும் அவர் கண் முன் பரமஹம்ஸர் தோன்றிக் கொண்டே யிருப்பார். தியானம் புரி யும்போதெல்லாம் காட்சி தந்த குருநாதர் ஒரு நாள் நரேந்திரரின் கனவிலும் தோன்றினார்.

''வா, வா, உனக்கு நான் ராதா தேவியைக் காட்டு கிறேன்'' என்றார் பரமஹம்ஸர் நரேனிடம்.

நரேந்திரர் அவரைப் பின் தொடர்ந்தார்.

சிறிது தூரம் சென்றவுடன் குருநாதர் அவர் பக்கம் திரும்பி, ''நீ இன்னும் எங்கேயோ ஏன் போக வேண்டும்?'' என்று கேட்டார். கேட்டவாறே, — ஆகா, அதென்ன விந்தை — ஸ்ரீராமகிருஷ்ணரே தெய்வீக சௌந்தரியத்தின் பெட்டகமாகிய ராதா தேவியாக மாறிவிட்டார்!

'ராதை நிஜமா, கிருஷ்ணர் நிஜமா?'' என்றெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த நரேந்திரரின் சஞ்சலம் நீங்கியது. 'ராதை நிஜமானாலும் இல்லாவிட்டாலும் அவளுடைய ஆர்வத்தை நாம் மெய்யாக்கலாமே!' என்று கூறிய குருநாதர் அதை மெய்யாக்கி விட்டார். ஜீவாத்மா பரமாத்மாவிடம் கொள்ளக்கூடிய புனித மான அன்பைப்புரிந்து கொண்டார் நரேந்திரர். பிரம்ம சமா ஜத்தில் உருவமில்லாத கடவுளைப் பற்றியே பாடிவந்த அவர் இப்போது ராதையின் மீது உள்ளமுருகப் பாடினார். ராதையின் உள்ளத்தில் உறைந்த மனமோஹன கிருஷ்ணனை நாவாரப் பாடிக் களித்தார்.

இந்தக் கனவைப்பற்றி மற்ற மாணுக்கர்களிடம் அவர் கூறிய போது அவர்கள் அசந்து போனார்கள். அவர்களில் ஒருவர் ''இந்த ஸ்வப்னத்தின் உட்பொருளை அறிந்தீர்களா?'' என்று

Koviloor Digital Library

நரேந்திரரைக் கேட்டார். நரேந்திரர் ''நிச்சயமாக அறிவேன்'' என்ருர்.

* * *

இன்னெரு விநோத அநுபவம்:

நரேந்திரர் தியானம் புரிகையில் தன்னுடைய அச்சாக இன்னெரு நரேந்திரரும் தியானம் புரிவதாக அவருக்குத் தோன்றும். உயரம், பருமன், நிறம், உடை எல்லாம் தத்ரூபம் நரேந்திரராகவே இருக்கும் அந்த இன்னெருவருக்கு. நரேந்திரருக்கு ஆச்சரியமாக இருக்கும். தியானத்தை நிறுத்திவிட்டு அவர் எந்தச் செய்கை செய்தாலும் அந்த மாற்று 'நரேந்திரர்' உடனே கண்ணுடிக்குள் தெரியும் பிம்பம்போல அதே செய்கைகளைப் புரிவார். சில சமயங்களில் இந்த மாற்று நரேந்திரர் உண்மை நரேந்திரருடன் ஒரு மணி நேரத்துக்கு மேல் இருப்பார்.

இதைப்பற்றி குருமஹராஜிடம் கூறிஞர் நரேந்திரர். அவர் அதைச் சட்டென்று தள்ளிவிட்டார்: ''தியானத்தின் முதிர்ந்த நிலைகளில் நேரும் சம்பவமே அது'' என்று கூறி.

இதன் பொருளை யார் உணர முடியும்? சாதகனுக்கு அந்த மாற்று ஆள் எப்படியோ அதே போலத்தான் பரம்பொருளுக்கும் சாதகன் ஒரு பிரதி பிம்பம் என்பது இதன் பொருளோ?

* * *

நித்யகோபால், மனேமோஹன் முதலிய மற்ற சிஷ்யர்களைப் போலத் தமக்கு எளிதில் ஆவேசமும், பரவசமும் வரவில்லையே என்று ஒரு சமயம் நரேந்திரர் வருந்தியதுண்டு. பகவானுடைய நாமத்தைக் கேட்ட மாத்திரத்திலேயே அவர்கள் தன்வசமிழந்து மயங்கித் தரையில் விழுந்து விடுவார்கள். இத்தகைய அற்புத நிலை தமக்குக் கிட்டாதது குறித்துப் பரமஹம்ஸரிடம் குறைப்பட்டுக் கொண்டார் நரேந்திரர்.

''குழந்தாய், இதற்காகக் கலங்காதே'' என்ருர் பரமஹம்ஸர்.

''இதனல் என்ன கெட்டுப்போச்சு? குட்டை யொன்றில் ஒரு மத்தகஜம் பிரவேசித்தால் குட்டைக் குழம்பி பெரிய அமளி துமளி யாகிறது. ஆனல் அதே கஜம் கங்கா பிரவாகத்தில் புகுந்தால் கங்கை குழம்பிவிடுகிறதா, என்ன? இந்த பக்தர்களெல்லாம் சிறு குட்டை போன்றவர்கள். தெய்விக அன்பு என்ற மகத்தான சக்தியின் ஓர் அம்சம் இவர்களின் மனமென்னும் சிறு எல்லைக்குள் வந்தாலும் அதனை அடித்துப் புரட்டி விடுகிறது. ஆனல் நீ மஹாநதியல்லவா?'' என்று தொடர்ந்து தேற்றினர் கருணை நதி.

Koviloor Digital Library

எல்லாப் பெண்களையும் தாயாகக் காண்பதுபற்றிப் பரமஹம்ஸர் கூறியது நரேந்திரரின் அநுஷ்டானத்தில் படிந்துவிட்டது.

ஒரு நாள் நரேந்திரரின் பணக்கார சிநேகிதர்கள் சிலர் அவரைக் கல்கத்தாவின் புற நகரங்களில் உல்லாஸ உலா வர அழைத்தனர். ''அந்த 'உல்லாஸம்' என்ன என்பதையறியாத அப்பாவி நரேந்திரர் சந்தோஷத்துடன் அழைப்புக்கு இணங்கினர். பயணம் தொடங்கிற்று.

ஏதோ ஒரு மாளிகையின் முன்பு வண்டி நின்றது. எல்லாரும் இறங்கினர்கள். மாளிகைத் தோட்டத்தில் நடைபெற்ற விருந்தில் உண்டார்கள். நரேந்திரரும் உண்டு களித்தார். அங்கே பாட்டு கூத்து கேளிக்கைகள் நடைபெற்றன. அவற்றையும் ரஸித்தார் நரேந்திரர். சிறிது போதானபின் அவருக்கு அலுத்து விட்டது. ஓர் அறைக்குச் சென்று ஓய்வு கொள்ளலானர். அவரைத் தனியாகக் கண்ட நண்பர்கள் ஆட்டக்காரி ஒருத்தியை அவரிடம் அனுப்பி வைத்தனர்.

குழந்தைபோல அவளிடம் பேசலானர் நரேந்திரர். அவளும் அவரிடம் தனது துர்ப்பாக்கியங்களை எல்லாம் எடுத்துரைக்கலானள். மிகவும் அக்கறையுடனும் அநுதாபத்துடனும் அவர் அவற்றைக் கேட்டுக் கொண்டிருந்தார். அந்த அக்கறையையும் அநுதாபத்தையும் அவள் தவருகப் புரிந்து கொண்டுவிட்டாள். தன் இதயத்திலிருந்த இச்சையை அவரிடம் பச்சையாகக் கொட்டி விட்டாள்.

உடனே நரேந்திரரின் மனக்கண் முன்பு குருநாதர் தோன்றினர்; பவதாரிணி தோன்றினள். நடுநடுங்கிப்போன அவர் சட்டென எழுந்தார். ''மன்னித்துக்கொள் அம்மா, நான் அவசரமாக வெளியே போகவேண்டும். உன்னிடத்தில் எனக்கு உண்மையான அநுதாபம் உள்ளது. நீ நன்ருக வாழவேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன். இப்போது நீ வாழுவதுபோல வாழுவது பலவீனமாகும் என்று நீ அறிந்தாயானல், என்ருே ஒரு நாள் அதிலிருந்து நீ விடுபடுவாய்'' என்று அவளிடம் கூறிவிட்டு நடையைக் கட்டினர்.

அந்தப் பெண் நரேந்திரரின் நண்பர்களிடம் திரும்பிச் சென்று, ''ரொம்ப நன்ருயிருக்கிறது உங்கள் தமாஷ்! சந்நியாசி ஒருவரிடம் போய் என்னை அனுப்பி வைத்தீர்களே'' என்று கடிந்து கொண்டாளாம்!

* * *

குருநாதர் தம்மைக் கட்டிக்காத்து ஆதரிக்கத் தொடங்கி விட்டார் என்ற நிச்சய புத்தி நரேந்திரருக்கு உண்டாகிவிட்டது.

Koviloor Digital Library

நரேந்திரரின் எதிர்காலத்தைப் பற்றி குருமஹராஜ் கூறியவை அவருக்கு நம்பிக்கையும் பலமும் அளித்தன. தனது எதிர்காலம் ஏனையோருடையதைப் போலன்றி தனித்தன்மை பெற்று விளங்கும் என்று உள்ளுணர்ச்சியால் முன்பே அறிந்திருந்த நரேந்திரர் இப்போது தமது எதிர்காலப் பெருவாழ்வு பற்றி இன்னும் திடமாக நம்பலானார். ஒரு முறை அவர் தம் நண்பர்களிடம் கூறினாராம்: ''நீங்களெல்லாம் மிஞ்சி மிஞ்சிப் போனால் ஒரு வைத்திய நிபுணராகவோ, வழக்கறிஞராகவோ, நீதிபதியாகவோ போகக்கூடும். எனக்குத் தனி வாழ்வு இருக்கிறது. அத்தகைய தனிப்பாதையையே எனக்காக நான் வகுத்துக் கொள்வேன்''.

பரமஹம்ஸரின் வாக்கில் நரேந்திரர் இவ்வளவு திடநம்பிக்கை பூண்டதற்குக் காரணம் பரமஹம்ஸர் சத்தியம் தவிர வேறெதையும் எண்ணாமலும், செய்யாமலும், பேசாமலும் இருந்ததுதானாகும். இந்தச் சத்தியம் காரணமாகத்தான், எழுத்தறிவு அதிகம் படைத்திராதவரும் எளியவருமான பரமஹம்ஸரிடம் தத்துவ பண்டிதர்களும், பக்திமான்களும், ஆங்கிலக் கல்வியில் தேர்ந்தவர்களும் வந்து பயன் பெற்றனர். 'பொன்னின் ஸ்பரிசம் தமக்குத் தாங்காது' என்று அவர் கூறுவதன் சத்தியத்தை வைத்தியர்களே நேரில் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். தமது அநுபவங்கள் பற்றி அவர் கூறியவற்றிலிருந்த சத்தியம் காரணமாகத்தான் பண்டிதர்களும் அவற்றைக் குறிப்பெடுத்துக் கொண்டனர். தமது குருநாதர் சத்தியமூர்த்தியாகத் திகழ்ந்ததால் தான் நாளாவட்டத்தில் அவரிடம் சத்தியத்துக்காகத் தவமிருந்த நரேந்திரர் பரிபூரணமாகக் கரைந்துவிட்டார்.

யாரைப் பற்றியும் தமது உள்ளம் என்ன நினைக்கிறதோ அதை ஒரு போதும் மறைக்காதவர் பரமஹம்ஸர். ராஜா என்று பட்டம் பெற்ற ஒரு செல்வாக்கு மிகுந்த மனிதரைக் கண்டபோது பரமஹம்ஸர், ''மக்கள் உங்களை ராஜா என்கிறார்கள். என்றால் அப்படிச் சொல்ல முடியாது. அப்படிச் சொன்னால் நான் பொய்யனாவேன்'' என்று தயங்காமல் கூறினார். இப்படி உண்மையே உரைத்தவர் குரு என்பதைக் கண்ட நரேந்திரர் தம்மைப் பற்றி அவர் கூறியதவ்வளவும் உண்மையே என நம்பிக்கை வைத்தது நியாயம்தானே? தங்குதடையின்றி ஸ்ரீராமகிருஷ்ணரை ஆசாரியராக வரித்து வளரலானார் நரேந்திரர்.

* * *

நரேந்திரரின் ஆத்மிக வளர்ச்சி ஒருபுறமிருக்கட்டும். அவரது உடலும் அதனுள் குடிகொள்ளும் உயிருக்கேற்றதாகப் பொலிந்து வளர்ந்து வந்தது. சுவாமிஜியின் வரலாற்றை எழுதிய மேல்

Koviloor Digital Library

நாட்டுச் சிஷ்யர்கள் இங்கு அவரது உருவத் தோற்றத்தை வருணிக்கத் தொடங்குகிறார்கள்.

ஜீவத்துடிப்பு ததும்பும் திருஉருவம் நரேந்திரருடையது. நடுத்தர உயரம் என்பதற்குச் சற்று அதிகமாகவே சொல்லக்கூடிய உயரம். நடுத்தர பருமன் என்று சொல்வதற்குச் சற்று கூடுதலான பருமன். விரிந்த தோள்கள்; பரந்த மார்பு. பரந்து விரிந்த நெற்றி. அந்த நெற்றியின் அழகுக்குக் குறையாத முகம். அந்த முகத்தில் அழுத்தத்தோடு நளினமும் கலந்திருக்கும். பெண்மை என்று சொல்லிவிட முடியாத ஒரு மென்மை அதில் சுகமாகக் கலந்திருக்கும். அவரது நயனங்கள் தனி எழில் பெற்றவை. 'யோகியின் கண்கள்' என்று தேவேந்திரநாத டாகுர் வருணித்த கண்கள் அவை. 'ஸரோஜ தளம்' போன்ற கண்கள் என்று அவற்றைப் பரமஹம்ஸர் கூறுவார். விசாலமான அந்த நேத்திரங்களில் ஞானப்பிரகாசமும், கருணையின் தண்மையும் கலந்து காணும். நரேந்திரரின் உணர்ச்சிகளைப் பளிங்கு போலப் பிரதிபலிக்கும் அந்தக் கண்கள் பரவசத்தில் சொருகிக் கொள்வது ஓர் அழகு எனில் வேடிக்கை விநோதங்களில் குறும்பு கொப்புளிக்க மின்னுவது வேறோர் அழகு. நரேந்திரருடைய அழுத்தமான முகவாய் அவரது திடசங்கல்பத்தைக் காட்டுவதாக அமைந்திருந்தது. நரேந்திரரின் குரல் இனிமை பொருந்தியது. எப்படிப் பேசுவது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு அவர் பேசும் விதம். அவர் ஒருவரிடம் பேசுகிறார் என்றால், அந்த ஒருவரைத் தவிர இந்தப் பிரபஞ்சத்தில் வேறு எதுவுமே அல்லது யாருமே இல்லை என்பதுபோல ஒருமுகப்பட்டுப் பேசுவார். இப்படி அவர் ஐக்கிய மனோபாவத்துடன் உரையாடுவதால், அவரோடு உரையாடுபவர்கள் தங்கள் உள்ளத்திலிருப்பதையெல்லாம் அவரிடம் கொட்டி விடுவார்கள். இதனால் நரேந்திரர் கடற்பஞ்சைப் பிழிவதுபோல எதிராளியின் சரக்கை யெல்லாம் பிழிந்து எடுத்துக் கொண்டு விடுவார் என்று எண்ணிவிடவேண்டாம். அவர் மற்றவரிடமிருந்து எடுத்துக்கொள்வதைவிட அவர்களுக்குக் கொடுப்பதே அதிகம். அவர்களிடமிருந்து தாம் தெரிந்து கொள்வதைவிட அவர்களுக்குத் தெரிவிப்பதே அதிகம். புஷ்பத்தை மலரச் செய்யும் சூரியன் அந்தப் புஷ்பத்தின் சத்தையெல்லாம் உறிஞ்சிக் கொண்டு அதை வாடவைக்கிறான் என்று யாரேனும் சொல்வார்களோ ?

அவருடைய கண்களின் காந்தமும், சொல்லின் காந்தமும், அந்தக் கண்களைப் பார்ப்பவர்களுக்கு அல்லது அந்த சொல்லைக் கேட்பவர்களுக்கு அந்தக் கண்களையோ சொல்லையோ தவிர உல

Koviloor Digital Library

தில் வேறெதுவும் இல்லை என்று எண்ணச்செய்யும். மற்றெல்லாம் மறந்துபோகும். ஏன், வாட்ட சாட்டமான அவரது உடலுமே மறந்து போகும். ஆகா, அந்த உடலில்தான் என்ன காம்பீர்யம் ! என்ன இயல்பான கௌரவம் ! அந்த கௌரவமும் காம்பீர்யமும் சகஜ பாவத்தில் குளித்து அவரது உதடுகளில் அன்புச் சிரிப்பாகத் துவளும்போது குதூகலமும், கருணையும் சேர்ந்து மிளிரும்.

தீர்க்கமான சிந்தனையாளராக ஒரு சமயம் காண்பார் நரேந்திரர். ஆனந்தக் கனவு காணும் கவியாக இன்னொரு சமயம் இருப்பார். குழந்தையின் கும்மாளத்துடன் காண்பார் பிறிதொரு பொழுதில்.

இவரே தமது சகாக்கள் தமக்கு மரியாதை செலுத்திப் பணியும் விதத்தில் சிம்மம் போலவும் ஆகிவிடுவார். சகாக்கள் யாருமே தேவையில்லை என்பதுபோல ஏகாந்தத்தை நாடி ஏகாந்தத்தில் அவர் நிலைக்கும் பொழுதுகளும் உண்டு. வேகமும் பொறுமையின்மையும் கொண்டு பட படக்கும் நரேந்திரர் உச்சி மீது வானிடிந்து விழுகின்ற போதிலும் கலங்காமல் சாந்திமயமாகவும் இருப்பார். வாழ்க்கையில் அவர் சமாளிக்க வேண்டியிருந்த இன்னல்களால் இரும்பாகப் போய்விட்டாற்போலச் சில சமயங்களில் தோன்றும் அவரது இதயம். அது வெண்ணெயாகக் கரைந்து கொண்டே இருந்ததைக் கண்டவர் பலர்.

நரேந்திரர் இன்னரன்ன குணங்கள் பொருந்தியவர் என்று வரையறுத்துப் புரிந்து கொள்வது முடியாத காரியமாகும். அவரே சொல்வார்: ''என்னை யாரும் புரிந்து கொள்ள வேண்டுமென நான் ஏன் எதிர்பார்க்க வேண்டும்? என்னிடம் யாரும் அன்பு கொண்டால் அதுவே போதும். போயும் போயும் நான் யார்? ஸர்வேசுவரிக்குத்தான் தெரியும். அவள் தன் காரியத்தை எப்படியோ செய்து கொள்வாள். நான் ஏதோ இன்றியமையாதவன் என்று ஏன் எண்ணிக்கொள்ள வேண்டும்?''

* * *

நரேந்திரர் — அல்லது விவேகானந்தர் — யாராயிருந்தாலும் அவருடைய தனி விசேஷம் அறிவும் இதயமும் எந்த விகிதாசாரத்தில் ஒருவரிடம் கலக்க வேண்டுமோ அந்த விகிதத்தில் பாங்குற அவரிடம் கலந்திருந்ததுதான். இப்படிப் பாங்குற கலந்தவர்தான் பரமஹம்ஸர். தத்துவத்தை ஆராய வந்தவரைப் பக்தராக்கியவர் அவரே. இதனால் ஸ்ரீராமகிருஷ்ண தேவர் நரேந்திரருடைய உணர்ச்சிகளை மட்டும்தான் பரிமளிக்கச் செய்தாரோ என்று எண்ணிவிடவேண்டாம். நரேந்திரர் மிகமிக உயர்ந்த தத்துவங்களை — தத்-த்வம்: பிரம்மமே ஜீவன் என்பது உள்பட

Koviloor Digital Library

— அறிந்தது குருமஹராஜின் திருவடி நிழலில்தான். அன்பினுல் பதப்பட்ட ஆத்மீகமே நரேந்திரருடையது. அதற்கு அறிவு ஒரு பணியாள்தான். இப்படி அறிவையும் அன்பையும் ஆத்மாநுபவத்துக்கு வழியாக இணைத்துத் தந்தவர் ஸ்ரீராமகிருஷ்ணர்.

அறிவால் மட்டும் வளரமுயன்ற நரேந்திரருக்கு வறுமையின் கொடுமைதான் உணர்ச்சியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தது. நரேந்திரர் வறுமையைக் கண்டிராவிடில் வேறெப்படியோ உருவாகியிருப்பார் என்று பரமஹம்ஸர் கூறுவதுண்டு: "சுகபோகங்களை மட்டுமே அவன் கண்டிருந்தால் அவன் பெரிய தேசத்தலைவனுகவோ, வழக்கறிஞனுகவோ, பிரசங்கியாகவோ, சீர்திருத்தவாதியாகவோ ஆகியிருப்பான். தாரித்திரியம்தான் அவனுக்கு ஏழையரிடம் அநுதாபப்படும் உணர்வை அளித்தது." என்று அவர் சொல்வார். பிரார்த்தனை, தியானம் என்ற இரண்டு இறகுகளைக் கொண்டு நரேந்திரர் ஆத்ம சாம்ராஜ்யத்தில் உயர உயரப் பறக்கச் செய்தவர் பரமஹம்ஸர்.

சிஷ்யரை உயரச் செல்லவைத்தாலும் தாம் அவருக்காக எவ்வளவு கீழே செல்லவும் தயாராக இருந்தார் ஸ்ரீராமகிருஷ்ணர். இதற்குப் பேர்தான் அநுதாபம். வறுமை நரேந்திரருக்குப் பாடம் புகட்டப்போகிறது என்று ஸ்ரீராமகிருஷ்ண முனிவர் அறிந்திருந்த போதே, அந்த வறுமை நீங்காதா என்று வருந்தவும் செய்தார். ஒரு நாள் ஒரு தனிகரான பக்தர் வந்திருந்தார். அப்போது ஸ்ரீராமகிருஷ்ணர் அவருக்கு நரேந்திரரைச் சுட்டிக்காட்டி, "இந்தப் பிள்ளையின் பிதா காலமாகி விட்டார். வீட்டில் எல்லாரும் பட்டினி கிடக்கிருர்கள். இப்போது இவனுக்கு யாரேனும் உதவி செய்தால் நன்ருக இருக்கும்" என்று குழந்தை போலக் கூறி விட்டார். அந்தத் தனவந்தர் சென்றவுடன் நரேந்திரர் தாம் அடக்கிவைத்திருந்த மான உணர்ச்சியை ஆத்திரத்தோடு வெளிப்படுத்திவிட்டார். "எதற்காக நீங்கள் யாரிடமெல்லாமோ என் இல்லாமையைப் பற்றி பேசுகிறீர்கள் ?" என்று அவரைக் கடிந்து கொண்டார். "நரேன், உனக்காக நான் எதையும் செய்வேன் என்பதை நீ அறிவாயா ? உனக்காக நான் வீடு வீடாக ஏறிப் பிச்சை கேட்கக்கூடத் தயார்" என்று கூறிப் 'பொல பொல' வென்று கண்ணீர் பெருக்கினுர் குருமஹராஜ். சுயநலமற்ற அந்த அன்புக்கு அப்படியே அடங்கிவிட்டார் நரேந்திரர்.

வெகுகாலம் கழித்து ஒரு முறை விவேகானந்தர் கூறினுர்: "அவர் தம்முடைய மகத்தான அன்பினுல் என்னைத் தம் அடிமையாக்கிக் கொண்டு விட்டார் என்பது உண்மை."

Koviloor Digital Library

அன்பு செய்தார் என்பதால் ஸ்ரீராமகிருஷ்ணர் நரேந்திரரை ஒருபோதும் கண்டித்ததில்லை எனக் கொள்ளலாகாது. அன்பினுலேயே கண்டிப்பார் அவர். நரேந்திரர் ஒருபோதும் தீய வழியில் செல்ல இயலாது என்று அம்பாள் தம்மிடம் கூறியிருப்பதாகச் சொல்லியிருந்த பரமஹம்ஸரே ஒரு முறை அவர் உலகாயதமான ஒரு பக்தருடன் மிகவும் நெருங்கிப் பழகுவதைக் கண்டித்திருக்கிருர். அந்தப் பக்தர் தமது அசுசியான நடவடிக்கைகளை முற்றிலும் மாற்றிக்கொண்டு விட்டார் என்றும் அவருடன் பழகுவதில் தவறில்லை என்றும் நரேந்திரர் வாதிட்டார். குருநாதர் கூறுவார்: ''பூண்டு வைத்திருந்த பாண்டத்தை எவ்வளவு கழுவினுலும் பூண்டின் நெடி சிறிது இருந்து கொண்டேதானிருக்கும். இங்குள்ள மற்ற குழந்தைகள் எல்லாம் பரிசுத்தமானவர்கள். அவர்கள் பெண்ணுசையாலும் பொன்னுசையாலும் ஒரு சிறிதும் தீண்டப் படாதவர்கள். நீ காகத்தினுல் கொத்தப்பட்ட மாங்கனியைப் பார்த்திருக்கிருய். இந்த மாங்கனியை பகவானுக்கு நிவேதனம் செய்யத்தகாது. உலக சுகங்களைச் சுவைத்த பக்தர்கள் தனியொரு பிரிவைச் சேர்ந்தவர்கள். விதையொன்று போட்டால் சுரை வேறு முளைக்கும் என்று எதிர்பார்க்காதே. லௌகிகமான மக்களுக்குப் பகவானை நினைக்கப் போது கிடையாது. என்ன, நான் அவர்களை வெறுக்கிறேன் என்று நினைக்கிருயா, என்ன? இல்லவே இல்லை. ஒரு போதும் அப்படி இல்லை. ஈசுவரன்தான் எல்லாராகவும் ஆகியிருக்கிருன் என்பதை நான் காண்கிறேன். இருந்தாலும் இவர்கள் வைரம் வேண்டாம், கண்ணுடி மணிதான் வேண்டும் என்று தேடிச் செல்வதைப் பார்க்கிறேன். மனிதன் காமத்திலும் காஞ்சனத்திலும் பிடிபட்டிருக்கிருன். ஆண்டவனைப் பார்த்தவர்களுக்கு இவை ஒரு மதிப்புமில்லாத அற்பங்களே யாகும். யாரோ ராவணனிடம் சொன்ஞர்களாம்: 'எத்தனையோ உருவங்கள் எடுத்துக்கொண்டு சீதையைப் பயமுறுத்தவோ, வசப்படுத்தவோ போகிருயே, ராமனின் உருவத்தை எடுத்துக்கொண்டு செல்லேன். அவள் உன்னை ராமனுக எண்ணிவிடுவாளே' — என்று. அதற்கு ராவணன், 'நான் ராமன் வேஷம் போடவேண்டுமானுல் ராமனைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அப்போது இந்த உலகத்தின் ஆசைகள் எல்லாம் துச்சமாகிவிடுமே'! என்ருனும். அதுபோல, உலக ஆசை சற்றும் இன்றி பகவானை நாடுவதுதான் சரியாகும். இதற்கான ஏகாக்கிர பக்தியை நிர்மல ஹ்ருதயம்தான் அளிக்க முடியும். அசுத்தமான உள்ளத்தில் உண்மையான பக்தி வராது. பொன்னையும் பெண்ணையும் எண்ணும் வரையில் ஒருவனிடம் பக்தியை எதிர்பார்க்கவே முடியாது.......''

Koviloor Digital Library

பேசிக்கொண்டே போன பரமஹம்ஸர் நரேந்திரரை அருளொழுக நோக்கினர்: ''என் அன்பான குழந்தையே! பொன்னேயும் பெண்ணேயும் நீ சிறிது விரும்பினுலும் உன்னுடைய லக்ஷியத்தைப் பெறவே முடியாது'' என்று கூறி முடித்தார்.

* * *

ஐந்து வருஷங்களில், சொல்லவேண்டியதை யெல்லாம் நரேந்திரரிடம் சொல்லிவிட்டார் பரமஹம்ஸர். சொல்லில் வராத வற்றையும் அவரிடம் ஒப்பிவித்து விட்டார். ஆத்மிகக் கடலில் தாம் பற்பல ஆண்டுகளாக முக்குளித்துத் திரட்டிய முத்துக்களே யெல்லாம் நரேந்திரருக்கு அளித்துவிட்டார். ஞான மின்சார நிலேயத்திலுள்ள மின்சாரத்தை உலகுக்கெல்லாம் எடுத்துச் செல்லும் வாய்க்கால் தயாராகிவிட்டது.

'ஹிந்து தர்மங்களே எல்லாம் காத்துக் கொடுப்பதற்காக தர்ம ஸ்வரூபியாக ஸ்ரீபரமஹம்ஸர் தோன்றியிருக்கிருர். அதற்கும் மேலாக எல்லா தர்மங்களுக்கும் பொதுவான மத உணர்ச்சியையும் ஆத்மீகத்தையும் இன்றைய உலகில் மெய்ப்பித்துக் காட்டத் தோன்றியிருக்கிருர். அவர் வாழ்ந்து விட்டார். அந்த வாழ்க்கையைத் தாம் உலகறியச் செய்ய வேண்டும்.' என்று தம் வாழ்வின் குறிக்கோளேத் தெரிந்து கொண்டுவிட்டார் நரேந்திரர். சங்கரரும், புத்தரும், சைதன்யரும், கிறிஸ்துவும் கண்ட உண்மைகளேயெல்லாம் மீண்டும் உண்மையென நிருபித்தவர் பரமஹம்ஸர். அந்த நிருபணத்தை உலகறியச் செய்தவர் விவேகானந்தர்.

இந்த உண்மைகளுக்கெல்லாம் ஜீவநாடி அன்புதான் என்று கண்டார். அந்த அன்பு காரணமாகத்தான் சுயமுக்தியைக் கருதாமல் மக்களிடம் ஞானச்சுடர் விளக்கினே ஏந்தி சஞ்சாரம் செய்தார் அவர். 'மக்களே ஆண்டவனின் தோற்றங்களாகக் கருதி சேவை செய்ய வேண்டும்' என்ற குருநாதரின் வாக்கை மகா மந்திரோபதேசமாகக் கருதி 'இந்த உண்மையைப் பாரெங்கும் பரப்புவேன்' என்று பிரதிக்ஞை செய்து கொண்டார். பிற்காலத்தில் சுவாமிஜி இயற்றிய ஒரு கவிதையின் முடிவு இந்த சத்தியத்தையே உரைக்கிறது:

> உன் ஆண்டவன் இங்கே இருக்கின்ருன்
> அனந்த உருவிலும் இருக்கின்ருன்.
> அனந்த உருவையும் அகற்றி விட்டு
> ஆண்டவனே எங்கு தேடுகின்ருய் ?
> அனந்த உயிர்க்கும் அன்புதனே
> அள்ளி அள்ளி நீ அளித்து விட்டாய்
> ஆண்டவன் சேவை புரிகின்ருய் !
> ஆண்டவன் தரிசனம் பெறுகின்ருய் !

Koviloor Digital Library

சுவாமி நிகிலானந்தர் அவர்கள் தமது விவேகானந்தர் வரலாற்றில் இந்தப் பகுதியை முடிப்பது போலவே நாமும் இங்கு ஸ்ரீபரமஹம்ஸ ராமகிருஷ்ணர் நரேந்திரநாதரைப் பற்றிப் பற்பல சமயங்களில் கூறிய வாக்குக்களோடு இந்த அத்தியாயத்தை முடிக்கலாம்:

''நரேந்திரன் மிகவும் உயர்ந்த ஒரு நிலையைச் சேர்ந்தவன். பரம்பொருளின் பூரணத்துவ எல்லையைச் சேர்ந்தவன். இங்கு பக்தர்கள் பலர் வருகிறார்கள்; ஆனால் அவனைப் போன்றவர் யாரும் கிடையாது.''

''பக்தர்களின் பக்குவம்பற்றி நான் அடிக்கடி கணக்கெடுத்துப் பார்க்கிறேன். சிலர் பத்து இதழ்க் கமலம்போல் இருக்கிறார்கள்; சிலர் நூறிதழ்க் கமலமாக இருக்கிறார்கள்; இந்தப் கமலங்களுக்குள் நரேந்திரன் ஆயிரம் இதழ் பதுமமாக விளங்குகிறான் ?''

''மற்றவர்கள் குட்டைகள் குளங்கள் என்றால் நரேந்திரர் ஹால்தார்புகூரைப்போன்ற* பெரிய நீர்த்தேக்கமானவன்.''

''நரேந்திரன் எந்தக் கட்டுப்பாட்டின் கீழும் இல்லை. பற்றுக்கள் அல்லது புலனின்பங்களுக்கு அவன் கட்டுப்பட்டவனல்ல. எந்த ஒரு சங்கத்திலும் நரேந்திரன் என்னுடன் இருந்தால் எனக்கு அது பெரும் பலமாக இருக்கிறது.''

* ஹால்தார்புகூர்—ஸ்ரீராமகிருஷ்ணருடைய அவதார ஸ்தலமாகிய கமார்ப்புகூருக்கு அருகே உள்ள ஏரி.

Koviloor Digital Library

அத்தியாயம்—9

ஒளி மறைந்தது!

1885-ம் ஆண்டு மத்தியில் ஸ்ரீராமகிருஷ்ணருக்குத் தொண்டையில் நோவு உண்டாயிற்று. சாதாரணப் புண்ணுகவும் வலியாகவும் இருந்தது நாளாக ஆக உக்கிரமாகிக் கொண்டு வந்தது. வைத்தியர் பரீக்ஷித்துப் பார்த்தார். மருந்துகள் சொன்னுர். 'ரொம்பவும் பேசக்கூடாது, பரவசமும் சமாதியும் கூடாது' என்ருர். அது பரமஹம்ஸரால் முடிகிற காரியமா? சிஷ்யர்களிடம் அன்பு கொண்டு உபதேசிப்பதையும், ஆண்டவனிடம் அன்பு கொண்டு உபாஸிப்பதையும் அவரால் எப்படி நிறுத்த இயலும்? உடல் நியதிகளுக்கு உட்படுமா அந்த அன்பு? உடல் தன் நியதிப்படி உபாதிப்பட்டுவிட்டுப் போகட்டும் என்று உதாசீனமாக இருந்து தம் அன்புப் பணியைத் தொடர்ந்து கொண்டிருந்தார் குருமஹராஜ்.

கல்கத்தாவுக்கு அருகிலுள்ள பாணிஹாதியில் ஓர் உற்சவத்துக்குச் சென்ற பரமஹம்ஸர் ஒரு நாள் முழுவதும் பாட்டும், பரவச ஆட்டமும், சமாதியுமாகவே செலவிட்டார். உடம்பு அதனைத் தாளவில்லை. மீண்டும் வைத்தியர்கள் பார்த்தார்கள். பழைய கதையையே திருப்பிச் சொன்னுர்கள். ஆனுல் பகவானைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க ஒரு சமயம் வாய்த்துப் பரவசமுறும் நிலை வந்ததெனில் அதனை ஒருபோதும் குருநாதரால் புறக்கணிக்க முடியவில்லை. அதேபோல துன்புற்று வந்தவர்கள் தேறுதல் தேடி அவரிடம் வந்தபோது அவர்களிடம் நேரம் போவது தெரியாமல் ஹிதமாகப் பேசுவதையும் அவரால் தவிர்க்க முடியவில்லை. உலக அன்னையிடம் குழந்தையாகவும், உலக மக்களிடம் அன்னையாகவும் இல்லாமல் இருப்பது அவரால் இயலாததாயிற்று.

1886-ம் ஆண்டு ஸ்ரீபரமஹம்ஸ ராமகிருஷ்ணரைப் படுத்த படுக்கையாகவே கண்டது. நரேந்திரருக்கு அச்சம் உண்டாயிற்று. நண்பரொருவரிடம் அவர் கூறினுர்: ''நம்முடைய அன்புக்கும், பக்திக்கும் உரியவர் நீண்ட நாள் நம்மிடை இருக்கமாட்டார் என்று அஞ்சுகிறேன். இவருடைய நோயைக் குறித்து நான் சில வைத்திய நூல்களைப் படித்தேன்; மருத்துவ நண்பர்களையும் ஆலோசித்தேன். அதிலிருந்து அவருடைய தொண்டைப்புண் புற்று நோயாகிவிட்டது என்றே பயப்படுகிறேன். புற்றுநோய்க்கு இதுவரை மருந்து கண்டுபிடிக்கவில்லை.''

Koviloor Digital Library

இதயத்தில் அமிருதம், வாக்கிலும் அமிருதம், இதய அமுதத்தை இன்சொல் அமுதமாகப் பொழிந்த பரமஹம்ஸரின் தொண்டையிலா கோரமான புற்று நோய்! முறைப்படி சிகித்ஸை செய்தாக வேண்டுமென்ருர்கள். நடக்கிறபடி நடக்கட்டும் என்று அதற்கும் இணங்கினுர் குருதேவர். முதலில் கல்கத்தாவில் வாடகைக்குப் பார்த்திருந்த வீடு பிடிக்காததால் பக்பஜார் என்ற பகுதியில் பலராம போஸின் வீட்டில் ஒரு வாரம் தங்கி சிகித்ஸை பெற்ருர். அதன்பின் சியாம்புகூரில் செளகரியம் வாய்ந்த ஒரு வீட்டுக்குச் சென்று தங்கினுர். கல்கத்தாவின் பிரபல ஹோமியோபதி நிபுணரான டாக்டர் மஹேந்திரலால் சர்க்கார் வைத்தியம் செய்யலானுர். தூய அன்னையாகிய சாரதா தேவியும் தக்ஷிணேசுவரத்திலிருந்து சியாம்புகூர் வந்து சமையல் வேலையை ஏற்றுக்கொண்டாள். நரேந்திரரின் குருபக்தி ஏனைய சிஷ்யர்களுக்கிருந்த குருபக்திக்கு வலிவூட்டியது. அவர்கள் யாவரும் வீடு, படிப்பு முதலியவற்றை இரண்டாம் பக்ஷமாகக் கருதிக் குருநாதரின் பணிவிடையில் ஈடுபட்டனர். அவர்களுடைய பெற்ருேர்கள் எதிர்த்துப் பார்த்தனர். ஆனுல் நரேந்திரரின் உறுதி — அவர் மற்றவர்களுக்கு அளித்திருந்த உறுதி — காரணமாக அந்த எதிர்ப்பு பிசுபிசுத்துவிட்டது.

என்ருலும்......

குருநாதரைப் பராமரிப்பது — அதாவது அவரது தேக நலத்தைப் பராமரிப்பது — அந்தப் பிள்ளைகளுக்கு சிறிது சங்கடம் உண்டாக்கத்தான் செய்தது. பரமஹம்ஸருடைய கிருஹஸ்த சிஷ்யர்கள் நிதி நிலைமையில் அவ்வளவு பசையாக இல்லை. பெற்ருேரை அண்டி வாழும் இளைஞர்கள் பணத்துக்கு எங்கே போவது? செலவோ ஆகிக்கொண்டே வருகிறது. எப்படிச் சமாளிப்பது என்று கலங்கிய அந்த பிள்ளைகளில் சிலர் வீட்டோடு திரும்பி விடலாமா என்றுகூட லவலேசம் எண்ணிய சந்தர்ப்பங்களுண்டு. அதற்கு அந்தக் கிழவர் விட்டுவிடுவாரா என்ன? இவர்கள் வரவேண்டும் வரவேண்டும் என்றே காத்துக்கொண்டிருந்தவராயிற்றே அவர்? அவர்களால் அம்பிகையின் காரியம் அல்லவா நடக்கவேண்டியிருந்தது? எனவே, தம் உடல் உபாதையைத் தீர்த்துக் கொள்ளக்கூடச் சங்கல்பிக்காத அவர், அந்தத் தூய இளைஞர்களின் மனம் சலிக்கும்போது மட்டும் தமது தெய்வத் தன்மையை ஏதேனும் ஒரு விதத்தில் அவர்களுக்கு அறிவித்து விடுவார். விலக எண்ணியவர்கள் நெருங்கி விடுவார்கள். ''பணத்தேவையைப்பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்? ஸ்ரீராமகிருஷ்ணரே தீர்த்து வைப்பார்'' என்று நம்பிக்கை கொள்வார்

Koviloor Digital Library

கள் சீடர்கள். அப்படியே நடந்தும் வந்தது. தங்களிடம் இருக்கும் பொருளையெல்லாம் குருநாதருக்காகச் சமர்ப்பிக்க கிருஹஸ்த சிஷ்யர்கள் முன்வந்தார்களெனில் பிரம்மசாரி சிஷ்யர்களோ தங்கள் உடலை அவரது பணிக்கே பரிபூரணமாக ஈடுபடுத்த உறுதி பூண்டார்கள். குருமஹராஜின் அந்தக் கொடூரமான நோயே அவரது சிஷ்யர்களை யெல்லாம் ஒன்று சேர்க்கவும் உதவியது.

தமது தெய்வத்தன்மையை அவ்வப்போது குருமஹராஜ் நிரூபித்து வந்தபடியால் அவரது வியாதியைப்பற்றிப் பலப்பல கருத்துக்கள் எழுந்தன. 'அவதார புருஷராகிய ஸ்ரீராமகிருஷ்ணருக்கு ஏன் இத்தகைய பயங்கர வியாதி சம்பவிக்கவேண்டும்?' என்ற கேள்வி எழுந்தது.

எந்த வியாதி வந்தாலும் அது உடலுக்குரியதே எனக்கொண்டு, உள்ளத்தை அது பற்றுது என்பதை நிரூபித்து ஆனந்தம் சற்றும் குன்றுமலிருக்கும் பான்மையை உலகுக்கு நிதரிசனமாக்கவே அவதார புருஷராகிய ஸ்ரீராமகிருஷ்ணர் புற்று நோயை ஏற்றுர்; கர்மவினை காரணமாக வந்த நோயல்ல அது — என்று சிலர் கருதினர்.

பக்தர்களின் பாபத்தைத் தாங்கி அதற்காகத்தான் பரமஹம்ஸர் இந்த நோயைத் தாமாகவே ஏற்றிருக்கிறுர் என்பது வேறு சிலருடைய கருத்து. இயேசுநாதர் சிலுவையில் அறையுண்டதைப் பற்றி கிறிஸ்துவர்கள் கூறவில்லையா, அதுபோல.

நமக்குப் புரியாத ஏதோ முக்கியமான நோக்கத்துக்காக காளிமாதாவேதான் அந்த வியாதியை ஏற்படுத்தியிருக்கிறுள் — என்று சிலர் கருதினர்.

ஆனுல் இன்னமும் ஏனே நரேந்திரரால்மட்டும் ஸ்ரீராமகிருஷ்ணர் ஓர் அவதாரம் என்பதை முழுக்க முழுக்க ஒப்புக்கொள்ள முடியவில்லை. அவருடைய தேக உபாதியையும் தாமாக ஏற்படுத்திக்கொண்டதாகவோ, இயற்கை விதிகளுக்கு மேலாக அம்பிகை ஏற்படுத்தியதாகவோ நரேந்திரர் கருதவில்லை. உடலுக்கு பால்யம், யௌவனம், விருத்தாப்பியம் முதலிய இயற்கை மாற்றங்கள் நிகழவில்லையா? ஸ்ரீராமகிருஷ்ணரும் குழந்தையாகவும், இளைஞனுகவும் இருந்துதானே முதுமை அடைந்தார்? அதேபோல அவருடைய உடம்புக்கும் இயற்கையாக இந்தப் பயங்கர நோய் கண்டிருக்கிறது என்றுதான் நரேந்திரர் அபிப்பிராயப் பட்டார். அவர்போல எண்ணிய வேறு சில சீடர்களும் உண்டு. நோயின் காரணம் எதுவாயினும் சகல சிஷ்யர்களும் குருநாதரின் சுசுருஷைக்காகத் தங்களது கடைசிச் சொட்டு இரத்தம் வரையில் சிந்தத் தயாராக இருந்தார்கள்.

Koviloor Digital Library

மானுடர்களைக் காக்க வேண்டும் என்பதற்காகப் பரம் பொருளே தரித்த வியக்தியா ஸ்ரீராமகிருஷ்ண முனிவர் என்பதில் நரேந்திரருக்குச் சம்சயம் இருந்திருக்கலாம். எனினும், சாதாரண மானுடராகப் பிறந்திருந்தாலும் தெய்வீகத்தைப் பெற்றுவிட்டவர் தமது குருமஹராஜ் என்பதில் அவருக்குச் சம்சயம் இருக்கவில்லை. மானுடப் பண்புகளும், தெய்வீக சக்தி களும் ஒன்றுகச் சேர்ந்தவர் பரமஹம்ஸர் என்பதை அவர் ஒவ்வொரு விநாடியும் கண்டு வந்தார். பரப்பிரம்மத்தை நுகர்ந் தவர் பரமஹம்ஸர் — அதாவது பரம்பொருளே தாம் என்ற அத்வைத அநுபூதிவாய்க்கப் பெற்றவர் — அதே பரப்பிரம்மம் அம்பிகையாகத் தோன்றியபோது அவளுக்கு அடியாராக இருந்து அவளைக் கண்டும், அவளோடு பேசியும், அவள் பேசிக் கேட்டும் ஆனந்தித்தவர். பரமஹம்ஸர் ஞானத்தின் உச்சநிலைக்குச் சென்ற பரமஞானி; பக்தியின் உச்சநிலைக்குச் சென்ற பரம பக்தர். இதையெல்லாம் நிச்சயமாக அறிந்த நரேந்திரர் அவரது அவ தாரக் கொள்கையில் ஏதோ விசேஷம் இருப்பதாகக் கருதவில்லை. மனிதராகவும் தெய்வமாகவும் இருந்த குருமஹராஜை மனிதர் என்றும் ஒரேயடியாகச் சொல்லமுடியாது, தெய்வம் என்றும் ஒரேயடியாகச் சொல்லமுடியாது என்றே நரேந்திரர் கருதினுர்.

இதைப்பற்றி அவர் டாக்டர் மஹேந்திரலால் சர்க்காரிடம் கூறியதாவது: ''ஐயா, நாங்கள் குருமஹராஜைக் கடவுள் போல உள்ள ஒரு மானுடராக எண்ணுகிறேம். தாவரங் கள் — ஜீவராசிகள் இவற்றுக்கிடையே ஓர் இனம் உண்டு. அப்போது ஒன்றினைத் தாவரம் என்பதா, ஜீவராசி என்பதா என்று நிர்ணயிக்க முடியாது. அதேபோல மனித உலகுக்கும் கடவுள் உலகுக்குமிடையே ஏதோ ஒரு ஸ்தானத்தில் ஒருவரைக் கடவுளா, மனிதரா என்று நிர்ணயிக்கமுடியாது.''

மஹேந்திரலால் சர்க்காருக்கு நரேந்திரரிடம் ஒரு பிரியம் உண்டாகத் தொடங்கிற்று. நரேந்திரரின் மதி நுட்பத்தை அவர் வெகுவாக ரஸித்தார். ஒரு நாள் சியாம்புகூரில் நரேன் பாடிக் கேட்ட அவர் பெரிதும் மகிழ்ந்து நரேந்திரரைத் தழுவிக்கொண்டு ஆசி கூறினுர். ''எந்தத் துறையில் இருந்தாலும் பிரகாசிக்கக் கூடிய மணி நரேன்'' என்று அவர் பரமஹம்ஸரிடம் கூறினுர். அதற்கு குருநாதர், ''அத்வைத கோஸ்வாமியின் தீவிரமான பிரார்த்தனை காரணமாகத்தான் ஸ்ரீகௌரங்கர் அவதரித்தார் என்று சொல்வதுண்டு. அதுபோல் நீங்கள் இங்கே பார்ப்பது எல்லா மும் (அதாவது பரமஹம்ஸராகிய தம்முடைய அவதாரமும்) அவனுக்காகத்தான் (நரேந்திரருக்குத்தான்)'' என்றுகூறினுர்.

Koviloor Digital Library

ஸ்ரீராமகிருஷ்ணர் அவதார புருஷர்தானு என்பதில் நரேந்திரர் நிச்சயமாக எதுவும் சொல்லவில்லை. ஆனுல் அந்த ஸ்ரீராமகிருஷ்ணரோ தாம் அவதாரம் என்பதையும் நரேந்திரரை முன்னிட்டே இந்த அவதாரம் நிகழ்ந்ததாயும் கூருமல் கூறிவிட்டார்.

குருமஹராஜின் முக்கியமான சிஷ்யராகிய நரேந்திரர் தமது ஆசாரியர் அவதார புருஷரா என்பதை நிச்சயமாக விளக்காததற்கும் ஒரு காரணம் இருந்திருக்க வேண்டும். பரமஹம்ஸரின் போதனை உலகுக்கெல்லாம் பொருந்தியிருந்தது. உலகமுழுவதும் ஏற்கும் போதனைகளாக அவை இருந்தன. ஆனுல் ஆண்டவனின் அவதார ரகசியம் உலகம் முழுவதற்கும் புரியாத மர்மமாகும். இந்த மர்மத்தைச் சொல்லி, யாவரும் ஏற்கக்கூடிய தத்துவங்களைக் குழப்புவானேன் என்று விவேகானந்தரான நரேந்திரர் எண்ணியிருக்கக்கூடும். எப்படி 'காளி வழிபாடு எனது பைத்தியம்' என்று கூறியவர் உலக மக்களுக்கெல்லாம் காளி தத்துவம் புரியாது என்பதால் அதனை விளக்க வில்லையோ, அதே போல தம்முள் பரமஹம்ஸர் அவதார புருஷர் என அவர் எண்ணியிருப்பினும் கூட அதனை வெளியுலகுக்கு அறிவிக்கவில்லை என்று கொள்ளலாம்.

* * *

அதோடு தத்துவ போதகரை முக்கியமாகக் கருதத் தொடங்கி விட்டால் அவர் கூறிய தத்துவங்களில் கவனம் குறைந்து விடக்கூடும் என்றும் சுவாமி விவேகானந்தர் கருதியிருக்கலாம். உதாரணமாக, புத்தரைத் தெய்வமாக வழிபடத் தொடங்கியபின் எந்த உயிருக்கும் ஹிம்சை இழைக்கலாகாது என்ற அவரது பரமோபதேசம் மாறிப்போய் பௌத்தர்களே புலால் உண்ணத் தொடங்கினுர்களல்லவா ?

தத்துவத்தை மறந்து தத்துவோபதேசகரைத் தொழும் நிலை ஸ்ரீராமகிருஷ்ண முனிவருடைய மற்ற சிஷ்யர்களிடை தோன்றத் தொடங்கியது.

கிரீச சந்திர கோஷ் என்ற புது சிஷ்யர் இதற்குக் காரணமாக அமைந்தார். அவர் ஒரு பிரபல வங்காளி நாடகாசிரியர். குருமஹராஜிடம் அத்யந்தமான பக்தி பூண்டு ஒழுகியவர் அவர். பல அலுவல் காரராகிய அவருக்கு ஆத்ம சாதனைகள் புரிய வசதி இல்லை. எனவே உள்ளன்போடு ஒரு முறையேனும் பகவானை அவர் நினைத்துக் கொண்டால் போதும் என்று பணித்தார் பரமஹம்ஸர். அதுவும்கூட என்னுல் முடியுமோ, முடியாதோ ? என்று வெள்ளையாகக் கூறிக் கசிந்தார் கிரீச சந்திரர். பாதி பாவ முகத்திலிருந்த பரமஹம்ஸர் சட்டென்று, ''அப்படியானுல் ஒருவன் வழக்கு முழுவதையும் வக்கிலிடம் ஒப்பித்து விட்டுத்தான்

Koviloor Digital Library

ஏதும் செய்யாதிருப்பதுபோல உங்கள் பொறுப்பு முழுவதையும் என்னிடம் ஒப்பித்து விடுங்கள்; நானே-நடத்தித் தருகிறேன்'' என்று கருணாவசப்பட்டுக் கூறிவிட்டார்.

'என்னை உபாசிப்பவர்களுடைய யோக க்ஷேமத்தை நானே நடத்திவைக்கிறேன்' என்றும், 'என்னை சரண்புகுந்தால் எல்லா பாபங்களிலிருந்தும் நான் விடுவிக்கிறேன்' என்றும் கீதாசாரியன் கூறியதற்குச் சமானமல்லவா பரமஹம்ஸர் கூறிய மொழி? கிரீச சந்திரருக்குப் பரமஹம்ஸர் ஸர்வேசுவரனின் அவதாரம் என்று உறுதிப்பட்டுவிட்டது. அதை அவர் தயக்கமின்றி வெளியிட்டும் விட்டார். ராமச்சந்திர தத்தர் (நரேந்திரருக்கு ஸ்ரீராமகிருஷ்ண ரைப்பற்றி அடிநாளில் கூறியவர்) இதனை முற்றிலும் ஒப்புக் கொண்டு குருமஹராஜ் ஸ்ரீகிருஷ்ணர், ஸ்ரீகிருஷ்ண சைதன்யர் இவர்களின் அவதாரம் என்று கருதி அவரைத் தொழலானார். அதோடு இந்த முன் அவதாரங்கள் யாராராக இருந்தவர்கள் இப்போது எந்தெந்த சிஷ்யர்களாக மீண்டும் பிறந்திருக்கிறார்கள் என்று ஆராயவும் தொடங்கினார். உணர்ச்சி வசப்பட்டவர்களை உத்தம பக்தர்களாகக் கருதித் தம் முடிவுகளை அவர் வெளி யிட்டார்.

இதனாலெல்லாம் சிஷ்யர்களின் நிதானமும், மனசின் சம நிலையும் மாறின. இவற்றைவிட உணர்ச்சி பரவசமும், அழுகை யும், சிரிப்பும், ஆட்ட பாட்டமுமே சிறந்தவை என்றெண்ணி அவர்கள் மனக்கிளர்ச்சியைப் பயிலலானார்கள். அதாவது உண் மையாகத் தானாகவே பொங்கிவரும் உணர்ச்சிப் பிரவாகத்துக்குப் பதிலாகத் தாங்களாகவே மனக்கிளர்ச்சியை வரவழைத்துக் கொள்ளலானார்கள். 'என்னிடம் பொறுப்பைத் தள்ளிவிட்டு நிம் மதியாயிரு' என்று பரமஹம்ஸர் பூரண சரணாகத புத்தி பெற் றிருந்த கிரீசரிடம் கூறியதைத் தவறாகப் புரிந்து கொண்ட சிஷ்யர் கள் பலர். இவர்கள் தாங்கள் என்ன காரியம் செய்தாலும் தங்களை அது தீண்டாதபடி குருநாதர் ரக்ஷித்து விடுவார் என்று எண்ணுமளவுக்குச் சென்று விட்டனர்.

இதனாலெல்லாம் சாதனையும், துறவற விருப்பமும் ஜீவன் குன்றிவரலாயின. இந்நிலையில்தான் பிரம்ம சமாஜத்தின் முக்கி யஸ்தரில் ஒருவரான விஜயகிருஷ்ண கோஸ்வாமி இந்த உணர்ச்சிக் கொந்தளிப்புக்கு உரமூட்டினார். ஸ்ரீராமகிருஷ்ணரின் சிஷ்யர் அல்ல அவர். எனினும் ஒரு நாள் டாக்காவில் தமது இருக்கை யில் அவர் தியானம் புரிந்து கொண்டிருக்கையில் ஸ்ரீராமகிருஷ்ண தேவரின் உருவெளித் தோற்றத்தைக் கண்டார். உடனே குரு மஹராஜிடம் விரைந்தார் அவர். ''நான் இந்தத் தேசம் முழு

Koviloor Digital Library

தும் சஞ்சாரம் செய்திருக்கிறேன். ஆத்ம ஞானிகளைக் கண்டிருக்கிறேன். ஆனால் உங்களைப் போலொருவரை நான் காணவில்லை. ரூபாயில் பதினாறணாவும் ஆத்ம ஞானமாயிருப்பவர் நீங்களே! மற்ற இடங்களில் ஒரணாவையும் இரண்டணாவையும், மிஞ்சினால் நாலணாவையுமே கண்டேன். தியானத்தின்போது டாக்காவில் உங்கள் தரிசனத்தைக் கண்டேன். நீங்கள் யார் என்பதில் இனி எனக்கு ஐயமே இல்லை. நீங்கள் இவ்வளவு எளிதாக அணுகக்கூடியவராக இருப்பதால்தான் நீங்கள் யார் என்பதை மக்கள் புரிந்து கொள்ளவில்லை. நீங்கள் கல்கத்தாவுக்கு வெகு அருகில் இருக்கிறீர்கள். உங்களைப் பார்க்க வேண்டுமென்று எண்ணினால் நினைத்த மாத்திரத்தில் உங்களிடம் வர முடிகிறது. இதனாலேயே உங்களை எங்களால் உள்ளவாறு மதிப்பிடமுடியாமல் போயிற்று. நீங்கள் எங்கேனும் ஒரு மலையின் உச்சாணிச் சிகரத்தில் வசித்தீர்களெனில், யாத்திரை செய்து அணுகுவதற்குச் சிரம சாத்தியமாக இருக்குமிடத்தில் வசித்தீர்களெனில், உங்களை வேறு விதமாகப் பார்த்திருப்போம்.'' என்றெல்லாம் கடல் மடை திறந்தாற்போல பரமஹம்ஸரிடம் பொழியத் தொடங்கினார் விஜயர்.

விஜயர் சியாம்புகூருக்கு வரத் தொடங்கியதிலிருந்து அங்கு ஒரே அல்லோல கல்லோல மாயிற்று. 'ஸ்ரீராமகிருஷ்ணர் தமது அவதார விசேஷத்தை வெளிப்படுத்துவதற்குத்தான் புற்று நோய் கண்டிருக்கிறது. இந்த நிமிஷமோ, மறு நிமிஷமோ எப்போது வேண்டுமானாலும் தாம் அவதாரம் என்று நிரூபிக்கும் ஓர் அற்புதத்தை அவர் புரியப் போகிறார்' என்று ஆவேசமாகக் காத்திருந்தனர் பக்தர்கள். அலறுவது, மூர்ச்சிப்பது, கூத்தாடுவது இவை சிஷ்யர்களிடம் சகஜமாயிற்று.

ஸ்ரீராமகிருஷ்ணரோ கடவுள்தான் மனிதராக வந்திருக்கிறாரா, மானுடர் ஒருவர்தான் கடவுளாகிக்கொண்டு வருகிறாரா என்று கூற முடியாதபடி இலங்கி வந்தார். மானுடருக்குரிய நோய் அவருக்கு ஏற்பட்டிருந்தது; கடவுளுக்குரிய பொறுமையுடன் அதை அவர் தாங்கி வந்தார். சிஷ்யர்கள் எதிர்பார்த்த அற்புதத்துக்கெல்லாம் மேற்பட்ட அற்புதம் இதுவே.

சிஷ்யர்களின் போக்கு சரியான முறையில் செல்லவில்லை என்று கருதினார் நரேந்திரர். உபாஸனையாலும், துறவாலும், உள்ளுருகிய பக்தியாலும், ஞானானுபவத்தாலும் உறுதிப்பட்ட குருமஹராஜ் பரவசமுறுவதுபோலச் சத்தியமான, சத்திய தரிசனத்துக்கு அநுகூலமான பரவசமல்ல மற்ற சிஷ்யர்களுடையது என்று அவர் கருதினார். வீட்டில் வேண்டுமென்றே ' பரவசத்தை'

Koviloor Digital Library

நடித்துப் பார்த்தவர்கள்கூட அவர்களில் இருக்கிறார்கள் என்று அறிந்தார். எனவே அவர்களுக்கு அன்புடன் உபதேசித்தார்: ''பொன்னாசை பெண்ணாசையை நீக்கி, நம் நடத்தையை மாற்றி, ஆண்டவன் தரிசன நாட்டத்தை இதயத்தில் பெருகிடச் செய்யும் உணர்ச்சிகள்தாம் உண்மையான உணர்ச்சிகள். மற்ற உணர்ச்சிகளுக்கு ஆழம் கிடையாது; ஆத்மீக சாம்ராஜ்யத்தில் அவற்றுக்கு உண்மையான மதிப்பும் கிடையாது. அங்கங்களைச் சேஷ்டை செய்வதும், கண்ணீரும், ரோமாஞ்சனமும், கணப் பொழுதுக்குப் பரவசமாவதும் சரியான உணர்ச்சிகளின் மீதமையா விட்டால் வெறும் நரம்புத் தளர்ச்சியே (ஹிஸ்டீரியா) ஆகும். திட சங்கல்பத்தால் இவற்றை அடக்கவேண்டும். முடியாவிட் டால் புஷ்டியுள்ள உணவாலும், அவசியமானால் மருத்துவ ஆலோசனையாலும் அவற்றை சரி செய்து கொள்ள வேண்டும். ஏனெனில் உங்களை அறியாமலே இந்த உணர்ச்சிகளை நீங்கள் போலியாக நடித்துக் காட்டுகிறீர்கள். மகத்தான ஆத்மிகம் பொருந்திய அசாதாரணமானவர்களிடம்தான், அடக்க முடியாத படிப் பிரவகித்துக் கொண்டு பரவசமாகவும், கண்ணீர்ப் பெருக் காகவும் உணர்ச்சிகள் உண்மையாக வெளிப்படுகின்றன. அறி யாத மக்களோ இந்தப் புற அடையாளங்களே ஆழ்ந்த ஆத்மீக ஆர்வத்தைக் காட்டுவதாகும் என்று எண்ணிவிடுகிறார்கள். அடக்கத்தையும் பக்தியையும், துறவு மனப்பான்மையையும் வளர்ப்பதற்குப் பதில் கிளர்ச்சிகளைப் பயின்று, சிறிய தூண்டுதல் இருந்தாலும் தங்களுடைய பலவீனமுற்ற நரம்புகள் ஒரேயடி யாகத் தூண்டப்பெற்று ஆவேச மடைந்து விடுகிறார்கள். இதற்கு ஒரு தடை இல்லாவிடில் தேகமும் புத்தியும் கோளாறுவதிலேயே முடியும். ஆத்மிக வாழ்க்கையை மேற்கொள்ளும் நூறுபேரில் எண்பது பேர்கள் போலியாகவும், பதினைந்து பேர்கள் பைத்திய மாகவும் ஆகிறார்கள். பாக்கி ஐந்து பேர்களே சத்திய தரிசனத் தைப் பெறும் பாக்கியத்தைப் பெறுகிறார்கள். எனவே, ஜாக் கிரதையாயிருங்கள்.''

* * *

எதிலுமே போலித்தனம் மன்னிக்க முடியாததாகும். மதத் தில் கேட்கவே வேண்டாம். மற்ற போலிகளை மாற்ற உதவும் மத உணர்வில் போலித்தனம் கலந்துவிட்டால் அதைவிடப் பாபம் கிடையாது. நரேந்திரரின் உபதேசம் நமக்கெல்லாம்உபதேசமாகும்.

* * *

வேண்டுமென்றே ஆவேசத்தை நடிக்கப் பழகியவர்கள் அந்த நடிப்பை விட்டார்கள். மற்றவர்களுக்கு நல்ல உணவு அளிக்கப்

Koviloor Digital Library

பட்டு, அவர்களைப் பிராணுயாமம் முதலியவற்றில் பயிலுவித்ததில் அவர்களும் கொந்தளிப்பு அடங்கப் பெற்ருர்கள். உண்மையான துறவு பற்றியும், பக்தி பற்றியும் பாடிப் பாடியே நரேந்திரர் பலருடைய சித்தத்தைத் திருத்திஞர். குருமஹராஜுடைய தீவிரமான சாதனைகளை எடுத்துக்கூறி அவற்றுக்காக அவர் எவ்வளவு அந்தரங்க சுத்தமாகப் பாடுபட்டார் என்றும், அவற்றின் உண்மையான பெருமையையும் மற்றவர்களுக்கு விளக்கிஞர் நரேந்திரர். 'அவருடைய லக்ஷியங்களைத்தான் நாம் பின்பற்ற வேண்டும். அவர் காட்டிய வழியில் செல்வதே நம் கடமை. அவரை உண்மையாகப் போற்றுவது என்பது அவரைக் கடவுளாகத் தொழுது பரவசம் அடைவதல்ல; அவருடைய உபதேசங்களை அநுசரிப்பதே அவருக்குச் செலுத்தும் உண்மையான போற்றுதல். இதயத் தூய்மையையும், உண்மையான பக்தியையும் வளர்த்துக் கொண்டு, உயிர்க்குலமெல்லாம் ஆண்டவனின் பற்பல தோற்றங்களே என்ற பாவனையுடன் மக்களுக்குப் பணி புரிந்து அவர்களும் அந்த உண்மையை உணருமாறு செய்வதே குருநாதருக்குச் செலுத்தும் மெய்யான அஞ்சலி' என்பதை மற்ற சிஷ்யர்கள் ஏற்குமாறு செய்தார் நரேந்திரர்.

* * *

ஆசாரிய புருஷர்களைத் தொழ வேண்டியதுதான். ஆனுல் அவர்களுடைய உபதேசத்தைத் தெரிந்து கொண்டு அதனை அநுசரித்தவாறே அவர்களைத் தொழுவதுதான் முறை. உபதேசத்தை எடுத்துக் கொள்ளாவிடில் ஆசாரியர்களின் அவதாரத்துக்கே பொருளில்லாமல் போகிறது. ஏற்கனவே உள்ள தெய்வ மூர்த்தங்களுடன் புதிதாகத் தம்மையும் ஒன்ருகச் சேர்த்து உலகோர் பூஜிப்பதற்காகவோ ஆசாரியர்கள் தோன்றுகிருர்கள்? மக்கள் பின்பற்ற வேண்டிய உபதேசங்களை அளிப்பதற்கல்லவோ அவர்கள் தோன்றுகிருர்கள்?

அதிகாரி தான் கொடுத்த வேலையை ஊழியன் முறைப்படி செய்தால்தான் திருப்திப்படுவாரே யன்றி, வேலையைச் செய்யாமல் தம்மைப் புகழ்ந்து கொண்டிருக்கும் ஊழியனிடம் திருப்தி பெற மாட்டாரல்லவா? குருமார்களை உண்மையாகத் திருப்தி செய்வது அவர்கள் காட்டிய வழியில் செல்வது தாணுகும்.

எது மெய், எது பொய் என்ற விவேகம் வந்த பின்பே உணர்ச்சிக்கு இடம் கொடுக்கவேண்டும் என்று அழுத்தம் திருத்தமாகக் கூறிஞர் நரேந்திரர். விவேகானந்தர் என்று பெயர் பெறப் போகிறவரல்லவா அவர்?

Koviloor Digital Library

இவ்வாறு நரேந்திரர் மற்ற சிஷ்யர்களை ஒழுங்குக்கு கொண்டு வரும்போது குருதேவரின் உடல் நிலை நாளுக்கு நாள் க்ஷீணித்து வந்தது. மருந்துகளினால் ஒரு பயனும் இல்லை. ஆலைகளும், குடியிருப்பு வீடுகளும் நெரிசலாகயிருந்த கல்கத்தாவின் சூழ்நிலை பரமஹம்ஸருக்கு உகந்ததல்ல என்று கருதினார் மஹேந்திரலால். கல்கத்தாவின் புற நகரங்களில் ஒன்றான காஸிப்பூரில் கோபால சந்திர கோஷ் என்பாருக்குச் சொந்த மாயிருந்த ஒரு வீடு மாதம் எண்பது ரூபாய் வாடகைக்கு அமர்த்தப்பட்டது. சுற்றிலும் தோப்பும் துரவும் சூழ்ந்த அந்த அமைதியான வீட்டுக்கு 1885-ம் ஆண்டு டிசம்பர் 11ந் தேதியன்று குருமஹராஜ் மாற்றப்பட்டார். தனிமையும், இயற்கை எழிலும், புத்துணர்ச்சியூட்டும் மென் காற்றும் கூடிய அந்த வீட்டில் சிறிது ஆசுவாஸம் பெற்றார் குருநாதர்.

* * *

ஆசுவாஸமும், சகிக்க இயலாத நோவும் மாறி மாறி வந்தன. ஒரு நிமிஷம் புற்று நோயின் கொடுமையில் துடிப்பார் குரு மஹராஜ். மறுகணமே அமைதி நிறைந்த ஆனந்தத்தில் மிதப் பார். வேதனையின்போதே ஆனந்தப்படுவார்; ஆனந்தத்திலேயே வேதனை காண்பார். ஆனந்தமா வேதனையா என்று தெரியாத — இரண்டும் அற்றுப்போகும் — அநுபவத்தில் நிலைப்பார்.

'தமது காரியம் பூர்த்தியாகிவிட்டது; தம்மிடம் பழுத்த கனிகளை எடுத்துச்சென்று விநியோகிக்கக் கூடியவர்கள் வந்தாயிற்று' என்ற உணர்ச்சியே ஸ்ரீராமகிருஷ்ணரிடம் மேலோங்கிநின்றது.

புத்தர் கூறிய தர்மத்தைப் பிரசாரம் செய்ய ஓர் ஆனந்தரும், இயேசு நாதரின் உபதேசங்களின் மீது கிறிஸ்துவ சமயத்தை நிலை நாட்ட ஒரு பீடரும், ஸ்ரீகிருஷ்ண சைதன்யரின் பக்தியைப் பரப்ப நித்யானந்தரும் பிறந்தது போல ஸ்ரீராமகிருஷ்ண முனி வரின் அநுபவங்களை உலகுக்குப் பொதுவாக்க நரேந்திரர் பிறந்து, தாம் அடைய வேண்டிய குருவை அடைந்தாயிற்று.

நரேந்திரரை அப்பழுக்கற்ற உத்தம சாதகராகச் செய்ய வேண்டியதுதான் தம் பணியில் எஞ்சியிருப்பது என்று கருதினார் பரமஹம்ஸர். மரணப் படுக்கையிலும் சிஷ்யருக்கு எத்தனையோ உபதேசங்களைப் புகட்டினார்; உத்தரவுகளை இட்டார். பேச முடியாமலே ரகசியக் குரலில் சிரமப்பட்டுப் பேசினார். அதுவும் முடியாதபோது எழுதிக் காட்டினார்.

இதெல்லாம் நரேந்திரரின் அச்சத்தை உறுதிப்படுத்தின.

''நான் போகுமுன் சொல்லவேண்டிய தவ்வளவையும் வெளி யிட்டு விடுவேன்'' என்றும் ''இந்த உடலைப்பற்றி ஏராளமான

Koviloor Digital Library

மக்கள் போற்றி முணமுணக்கத் தொடங்கும்போது அன்னே அதனே எடுத்துக்கொண்டு விடுவாள்'' என்றும் அவர் சொன்னதை நினைந்து நினைந்து வருந்தினர் சிஷ்யர்கள்.

இப்போது அடியார் கூட்டமோ பெருகிக் கொண்டே வந்தது. கருணைவசப்பட்ட பரமஹம்ஸர் அவர்கள் எல்லாரிடமும் ரணம் கண்டு ரத்தம் கசியும் தொண்டையிலிருந்து அமுதம் துளிக்கப் பேசிக் கொண்டேதான் இருந்தார். அந்த ரணம் மேலும் உக்கிர மாயிற்று.

குருநாதரின் உடம்பு எலும்புக் கூடாகி வந்தது. முடிவு விரைவில்தான் என்று நிச்சயம் ஏற்பட்டுவிட்டது. நரேந்திரரின் பக்தியும் ஞானமும் மெருகேற மெருகேற, மெருகேறியவர் உலகி லிருந்து தேயும் தினமும் நெருங்கிக் கொண்டிருந்தது. 'எல்லாக் காரியங்களையும் நடத்துவிக்கும் அன்னை காளியை நரேன் பக்தி பண்ணத் தொடங்கி விட்டான்! இனி விசாரமே இல்லை! உலகைவிட்டு நிம்மதியாகக் கிளம்பலாம்' என்று விச்ராந்தி பெறலானுர் குருமஹராஜ். நரேந்திரர் பக்குவமாக இன்னும் காலம் பிடித்திருந்தால் குருநாதரும் இன்னும் நீண்டநாள் வாழ்ந் திருப்பாரோ என்னவோ? ''என்னை ஜகன் மாதாவிடம் ஒப்பித்த பின்பு அவர் ஆறே மாதங்கள் தாம் தேகபலத்தைக் காத்து வந்தார். மீதி காலத்தில் — அதாவது இரு நீண்ட ஆண்டுகளில் — உபாதைப் பட்டார்.'' என்று சுவாமிஜி கூறியதுண்டு.

இரவு பகல் பாராது சிஷ்யர்கள் காஸிப்பூரிலேயே தங்க நேரிட்டது. அவருடைய வீட்டாரிடமிருந்து முன்னிலும் கடுமை யான எதிர்ப்பு பிறந்தது. அப்போது நரேந்திரர் சட்டப் பரீ க்ஷைக்குப் படித்துக் கொண்டிருந்தார். இந்தச் சமயத்தில்தான் முன்பு நாம் கூறினேமே, அவர்களுடைய வீட்டுக்கு உரிமை கோரி ஒரு பங்காளி வழக்குத் தொடுத்ததாக — அந்த வழக்கும் விசாரணைக்கு வந்திருந்தது. எனவே அவர் கல்கத்தாவுக்குச் செல்லாமலிருக்க முடியவில்லை. இதனுல் காஸிப்பூரிலேயே தமது புத்தகங்களைக் கொண்டுவந்து அவர் படிக்கலானுர்.

சிஷ்யர்கள் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் கொண்டிருந்த பரிசுத்த மான அன்பு ஒவ்வொரு விநாடியிலும் அடர்ந்திருந்த அற்புதமான நாட்கள் அவை. அன்புவடிவான குருதேவருக்கு ஏற்ற அன்பு மயமான சிஷ்யர்கள் அவர்கள். அவர்களுக்கு ஊக்கமும் உற்சாக மும் அளித்தவர் நரேந்திரரே. அவர்கள் தயங்காமல் நரேந் திரரைத் தங்களது தனியொரு தலைவனுகத் தெரிந்து கொண்டு விட்டார்கள். நரேந்திரரைவிட வயதில் பெரியவர்களா யிருந்தாலும் அவருக்குக் கட்டுப்பட்டு நடந்தார்கள். மகா

Koviloor Digital Library

மன்னர் நோய்வாய்ப்பட்டு இளவரசர் ராஜ்ய பாரம் வகிக்கத் தொடங்கினல் மன்னரின் முதிய மந்திரி பிரதானிகளும் இளவரசருக்கு இயற்கையாகவே அநுசரணையுடன் நடக்கவேண்டியது தானே? நரேந்திரர் தாமாகத் தலைமையை ஏற்கவில்லை. அவர்களில் ஒருவராக இருந்தே புத்திமதி கூறிவந்தார். அவர்களோ குருநாதரின் திருஉள்ளத்தை அறிந்திருந்தனர். நரேந்திரர் செயற்கரிய செய்யப் பிறந்தவர் என்று தெரிந்து கொண்டார்கள். அவரைத் தளபதியாகக் கருதினுர்கள். சிறு சிறு வித்யாசங்களுள்ள சீடர்களையும் நரேந்திரரின் அன்புக் கொழுந்தும் அறிவுப் பிழம்பும் ஒரே உடலும் உள்ளமும் உள்ள சங்கமாக இணைத்தன— 'உலோகத் துண்டுகள் உஷ்ணத்தில் ஒன்ருவது போல்' என்பர் மேல்நாட்டுச் சீடர்கள்.

* * *

இந்தச் சங்கத்திலிருந்தவர்கள் பன்னிருவர். நரேந்திரர், ராகால், பாபுராம், நிரஞ்ஜன், யோகின், லாடு, தாரக், மூத்த கோபால், காளி, சசி, சரத், இளைய கோபால் ஆகியோர் இவர்கள். சாரதா என்ற சிஷ்யர் தந்தைக்குப் பயந்து எப்போதேனும் வந்து ஓரிருநாள் தங்கிச் செல்வார். ஹரிஷ் என்ற சிஷ்யர் சிலகாலம் தங்கி யிருந்தார். பிறகு சித்தப்பிரமை உண்டாகி அவர் வீடு திரும்பிவிட்டார். ஹரி, கங்காதரர் என்பவர்கள் விட்டு விட்டு வந்து போய்க் கொண்டிருந்தனர்.

* * *

நரேந்திரரின் உள்ளம் தெய்வ தரிசனத்துக்காகக் கொந்தளிக்கத் தொடங்கியது. தெய்வ தரிசனம் மட்டுமல்ல; தரிசனம் தர முடியாத நிர்க்குணப் பிரம்மத்தில் சற்றேனும் அத்விதியமாகக் கலந்திருக்கவேண்டும் என்ற ஆர்வமும் அவர் உள்ளத்தே கொழுந்துவிட்டெரிந்தது.

ஒரு நாள் இரவு காஸிப்பூரில் தங்கியிருந்த அவருக்கு உறக்கம் கொள்ளவே இல்லை. மறுநாள் கல்கத்தாவுக்குச் சென்று இரண்டொரு தினங்கள் அங்கேயே தங்கியிருந்து சில காரியங்களைக் கவனிக்க வேண்டியிருந்தது. ஆனல் அவர் நித்திரை கொள்ளாமல் செய்தது அந்த வீட்டுவிவகாரமல்ல. அவரது உள்ளத்துக்கு உள்ளே ஏதோ பேரலைகள் புரண்டன; எரிமலைகள் வெடிக்கத் தயாராக இருந்தன. அந்தக் கமுக்கத்தை அவரால் தாங்கவே முடியவில்லை. எனவே தூங்கவும் முடியவில்லை.

சரத்தையும் இளைய கோபாலையும் இன்னும் சிலரையும் கூட்டிக் கொண்டார். "தோட்டத்தில் கொஞ்சம் உலாவலாம்

Koviloor Digital Library

வாருங்கள்'' என்று கூறி அவர்களை அழைத்துச் சென்றார் நரேந்திரர். நடந்தபடியே பேசலானார்: ''குருமஹராஜின் நோய் மிகவும் முற்றிவிட்டது. அவர் உடலை உகுக்க எண்ணி விடாமலிருக்க வேண்டும். எப்படியானாலும் காலமிருக்கும் போதே அவருக்குப் பணி புரிந்தும், பிரார்த்தனை தியானம் இவற்றின் மூலமும் ஆத்ம உயர்வைப் பெற முயல்வோம். இல்லா விடில் அவர் மறைந்துபோனால் அதன்பின், அவரிருக்கும்போது செய்ய வேண்டியதைச் செய்யாமல் போனோமே என்று எல்லை யில்லாமல் பச்சாதாபப் படவேண்டியதாகும். 'கையிலுள்ள இந்த வேலை ஆகட்டும், அந்த வேலை ஆகட்டும்; அதன்பின் ஆண்டவனுக்காகப் பிரார்த்திக்கலாம்' என்ற முட்டாள்தனமான எண்ணத்தில் காலத்தை விரயமாக்கி வருகிறோம். இது மேலும் மேலும் இச்சைச் சங்கிலிகளால் நம்மைப் பிணைத்துக் கொள்வதே யாகும். இச்சைக்கு அர்த்தம் அழிவுதான். அதை இப்போதே வேரோடு பிடுங்கி எறியவேண்டும்.''

அகலைச் சுத்தம் செய்து, தைலத்தைவிட்டு நிரப்பி, திரியை யும் போட்டாகிவிட்டது. இனி தீ நாவு அதைத் தீண்ட வேண்டி யதுதான் பாக்கி. தியானம் செய்யவேண்டும் என்ற ஆர்வம் அத்தனை சிஷ்யர்களின் உள்ளத்திலும் பூரித்தெழுந்தது.

தாராகணங்கள் அள்ளித் தெளித்தாற்போல மயக்க ஒளி சிந்தும் அந்த இரவில், மரமும் செடியும் கொடியும் மண்டிய காஸிப்பூர் தோப்பில் பரிசுத்தமான உள்ளமுடைய வாலிபர்கள் தெய்வத்தைக் காணவேண்டும் என்ற மகோன்னதமான லக்ஷியத் துடன் சென்று கொண்டிருந்தார்கள்.

நக்ஷத்திர ஒளியில் நரேந்திரர் கண்ணுக்கு, அருகே ஏதோ வைக்கோலும், சுள்ளிகளும் கிடப்பது தெரிந்தது. ''இதற்கு அக்கினி மூட்டுவோம்''. இந்த வேளையில்தான் சந்நியாசிகள் 'துனி' என்ற தீ மூட்டுவது வழக்கம். நாமும் தீ மூட்டுவோம். அந்தத் தீயில் நம் ஆசைகளைச் சாம்பராக்குவோம்'' என்றார் நரேந்திரர்.

அக்கினி வளர்க்கப்பட்டது. அதனைச் சுற்றி அந்த் இளம் பிள்ளைகள் வட்டமாக அமர்ந்தனர். உண்மையாகவே தங்கள் ஆசைகளை பஸ்மீகரமாக்குவதாக பாவித்து அக்கினி பகவானை வணங்கினர்.

நாம் அகக்கண்ணால் கண்டு கண்டு உள்ளத்தூய்மை பெற வேண்டிய காட்சி இது. குப்பையும் சத்தையுமான எண்ணங்களை உள்ளம் கொள்ளாமல் நிரப்பிக் கொண்டிருக்கும் நமக்கு சுத்தம் என்றால் என்ன என்று தெரிய இதைவிட ஏது ஒரு சம்பவம்?

Koviloor Digital Library

காகம் தீண்டாத கனிகள் போன்ற யுவர்கள் தங்களின் அகத் தூய்மைக்காகத் தவமிருந்த இந்த அற்புதக் காட்சியை நம் முடைய மனம் மிகவும் அதோகதியில் செல்லும் போதெல்லாம் நினைவு கொண்டால் காப்பாற்றப் படுவோம்.

உடலுயிர் மே லுணர் விலுந் தீ
ஓங்கி விட்டானே ! — இந்நேரம்
கடவுளர் தாம் எம்மை வாழ்த்திக்
கை கொடுத்தாரே

என்று கவிபாடியதுபோல கடவுளர் அந்த அற்புதமான தூய இளைஞர்களுக்குக் கை கொடுத்து விட்டனர்.

* * *

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் குருமுகமாக ஸ்ரீராம மந்திரம் உபதேசிக்கப் பெற்றவர். தம் அருமை நரேந்திரருக்கு ஒரு நன் னாளில் அந்த அமிருத மந்திரத்தை உபதேசித்தார் பரமஹம்ஸர்.

பிள்ளைப் பிராயத்திலே பெற்றிருந்த ராமபிரேமை மீண்டும் பொத்துக்கொண்டு வந்துவிட்டது நரேந்திரருக்கு. அன்னையின் மடியில் ராமகதை கேட்டது; சீதாராமப் பதுமையை பூஜித்தது; பிறகு உடைத்தெறிந்தது; அப்படியும் அன்பு உடையாமல் ராமாயண படனங்களுக்கு தவறாமல் சென்றது — இவ்வளவை யும் பிரம்ம சமாஜக் கொள்கை அடியோடு மறக்கச் செய்ய முடியுமா? மறந்திருந்த ராமனை, அந்த மறதிக்கு ஈடுசெய்வது போன்ற அடர்ந்த அன்புடன் மீண்டும் நினைவு கொண்டார் நரேந்திரர். அதுவும் ஒப்பற்ற பரமஹம்ஸர் மந்திரோபதேசம் செய்தார் என்றால் கல்லும்கூடக் கரைந்து விடாதோ? பரமேசு வரனே தனது அமுதத்திரு வாயால் காசியில் மரிப்பவர்களின் வலது செவியில் கூறும் தாரக மந்திரத்தை நரேந்திரருக்குப் பரமஹம்ஸர் உபதேசித்து விட்டார்.

சம்சாரக் கடலிலிருந்து ஜீவனைக் கடத்துவிக்கும் மகாமந் திரம் ஸ்ரீராம மந்திரம். அஷ்டாக்ஷரியாகிய நாராயண மூல மந்திரத்திலிருந்து ராவும், பஞ்சாக்ஷரியாகிய சிவ மந்திரத்தி லிருந்து ம வும் சேர்ந்து உருவான ஹரி-ஹர-அத்வைத மந்திரம் அது. இப்பேர்ப்பட்ட மகிமை பொருந்திய மந்திரத்தை மகிமை பொருந்திய குருநாதர் ஓதினால் மகிமை பொருந்திய சிஷ்யர் ஏன் ஆவேசமுற மாட்டார்?

மாலையிலிருந்து ஸ்ரீராமனைக் கூவிக்கூவி அழைத்தபடி அந்த வீட்டைச் சுற்றிச்சுற்றிப் பிரதக்ஷிணம் செய்யலானார் நரேந்திரர். 'ராமனாகவும் கிருஷ்ணனாகவும் வந்தவன் இதோ ராமகிருஷ்ணனாக

Koviloor Digital Library

வந்திருக்கிறுன்' என்று குருநாதர் சொல்லப்போவதை முன்ன தாகவே அறிந்து, அந்த வீட்டினுள் வியாதியஸ்தராகப் படுத் திருந்த ராமரைத்தான் அவர் அப்படிப் பிரதக்ஷிணம் செய் தாரோ? அக்கினி ஜ்வாலே ஒன்று அந்த வீட்டைச் சுற்றி வருவதுபோலத்தான் தோன்றியதே ஒழிய ஒரு மானுடலின் செயலாகவே நரேந்திரரின் செயல் தோன்றவில்லே. சூரியனே கிரகங்கள் சுற்றிவருவது இப்படி ஒரு குருவை சிஷ்யர்கள் சுற்றுவது தான் என்று கூருமற் கூறியது அந்த மாளாத, ஓயாத பிர தக்ஷிணம்.

குருநாதருக்கு நரேந்திரரின் கட்டுக்கடங்காத பக்திவெறி — வெறி என்று அதனேச் சொல்வது சரிதானு?—அறிவிக்கப்பட்டது. அவர் கலங்கவில்லே. ''இருக்கட்டுமே! சிறிதுபோதில் சரியா வான்'' என்ருர் குளிர்ந்து.

''ராமா, ராமா'' என்று இதயம் பிளக்கக் கதறியபடி நரேந்திரர் அதிகாலே வரையில் சுற்றிவந்தார். பரமஹம்ஸர் அவரைத் தம் அருகே அழைத்துக் கொண்டார். ''குழந்தாய், கேள்! நீ இப்படிப் பொறுமையிழக்கலாகுமா? இதோ என்னேப் பார் நரேந்திரா! நீ இப்போது படும் பிரிவுத்துயரை நான் பன்னிரண்டாண்டுகள் பட்டிருக்கிறேன். பன்னிரண்டாண்டுகள் என் மனதில் புயல் வீசியிருக்கிறது. பிறகுதான் தெய்வதரிசனம் பெற்றேன். அதை நீ ஓர் இரவில் பெற முடியுமா?'' என்று அன்பொழுகக் கேட்டார்.

நரேந்திரருள் வீசிய புயல் ஓய்ந்தது.

பரமஹம்ஸர் பல்லாண்டுகள் பாடுபட்டிருக்கலாம். நரேந் திரருக்குப் பரமஹம்ஸர்போல், அந்தப் பரமஹம்ஸருக்கு ஒரு கருணேக் குரு இல்லாததால் அவர் அவ்வளவு பரிசிரமப்பட்டார். ஆனுல் நரேந்திரரோ தாம் எதிர்பாராமலே, சில சமயங்களில் தாம் விரும்பாமலும்கூட குருநாதர்கிருபையால் சமாதி உள்ளிட்ட பல உயர் நிலேகளேப் பெற்ருர்.

* * *

எத்தகைய விந்தை! குருவின் கிருபை என்னவெல்லாம் சாதித்து விடுகிறது! ஸகுண உபாஸனே தவருனது என்று கருதிய நரேந்திரரைப் பக்தனுக்கி ராமப் பிரேமையில் தொண்டை வற்று மளவு கூவச் செய்துவிட்டது குரு கிருபை; கால்கள் தொய்ந்து போகுமளவுச் சுற்ற வைத்துவிட்டது குரு கிருபை. ஆம், அந்தப் பக்தி இன்பத்துக்கு தொண்டை வற்றுவதும், கால்கள் தொய் வதும் ஒரு பொருட்டா, என்ன? பொய், போலி, உணர்ச்சிகளே வெறுத்து ஒதுக்கிய நரேந்திரர் நிர்மலமான சத்திய உணர்ச்சி

Koviloor Digital Library

யுடன ஸ்ரீராமனின் பாவன நாமத்தை அந்தச் சூழலெல்லாம் அன்று நிரப்பிவிட்டார். அகச் செவியைச் சற்று திறந்து கொள் வோருக்கெல்லாம் இன்றைக்கும் அந்தக் காளைப் பருவத்து பக்தர் ஆடிப்பாடி எழுப்பிய புனித ஒலி கேட்கும்!

* * *

காஸிப்பூர் தோட்ட மாளிகை கோயிலாக மட்டும் இல்லை. சர்வகலாசாலையாகவும் ஆயிற்று. நானுவித சாஸ்திரங்களை அங்கு மற்ற சிஷ்யர்களுக்குப் பகிர்ந்து தந்தார் நரேந்திரர். தத்துவ நூல்களெல்லாம் அங்கு அற்றுப்படி ஆயின.

இந்த வித்தையும் விசாரணையும் ஆன உடனே துதிப்பாடல் களில் நிரம்பும் அந்த மாளிகை. அறிவும் இதயமும் போட்டி போட்டுக்கொண்டு தங்கள் அழகுகளை மாற்றி மாற்றி வெளிப் படுத்திய நாட்கள் அவை. இரண்டுக்கும் எட்டாத தியானத் துக்கும் குறைச்சலில்லை. இத்தனையும் குருநாதரின் பணிவிடை போகத்தான்.

அப்போது நரேந்திரரின் உள்ளத்தில் குருநாதர் அதிகம் ஊறியிருந்தாரா, அவரது உபதேச பலனுன பக்தியும் ஞானமும் அதிகம் ஊறியிருந்தனவா என்று சொல்வதற்கில்லை.

நரேந்திரரின் உள்ளப்பாங்கு அப்போது எப்படியிருந்தது என்பதைப் புலப்படுத்துகிறது கிழ்க்கண்ட சம்பாஷணை:

நரேந்திரர் மஹேந்திரருடன் சம்பாஷித்துக் கொண்டிருக் கிறுர்.

''சென்ற சனிக்கிழமை (1886-ம் ஆண்டு ஜனவரி 2-ம் தேதி) நான் இங்கு தியானம் செய்துகொண்டிருந்தேன். திடீ ரென்று என் மார்பில் ஏதோ ஒன்று குறுகுறுத்துப் படரும் உணர்ச்சி ஏற்பட்டது'' என்கிறுர் நரேந்திரர். மஹேந்திரர் அது குண்டலினி சக்தியை விழிப்புறச் செய்ததாகவே இருக்க வேண்டும் என்கிறுர். (மூலாதாரத்தில் உள்ள பிராணசக்தியே குண்டலினி. உறங்கும் சர்ப்பம் போலுள்ள அதனை எழுப்பி சிரஸிலுள்ள ஸஹஸ்ராரத்தில் சிவத்திடம் கரைப்பது தந்திர சாதனையாகும்.)

மஹேந்திரர் கூறியதற்கு, ''அப்படித்தான் இருக்கவேண் டும்'' என்கிறுர் நரேந்திரர். ''இடை பிங்கலை என்ற நாடி களையும் நான் தெளிவாக உணர்ந்தேன்'' என்கிறுர் நரேந்திரர். (இவை பௌதிக உடற்கூற்றில் காணமுடியாதனவாகும்.)

தந்திரமார்க்க அநுபவம் தமக்குக் கிட்ட குருமஹராஜ் அநுக்கிரத்து விட்டாரோ என்ற எண்ணம் நரேந்திரருக்குத்

Koviloor Digital Library

தோன்றியது. அதைத் தொடர்ந்து முந்தைய தினம் நடைபெற்ற பொருள் நிறைந்த நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது. அதையும் மஹேந்திரருக்குக் கூறலானார்.

''நேற்று நான் மாடிக்குச்சென்று ஸ்ரீராமகிருஷ்ணரைக் கண்டேன். 'ஒவ்வொருவருக்குமே ஏதோ ஒருவிதமான சித்தி கிடைக்க அருளியிருக்கிறீர்கள். எனக்கும் ஏதோ கொஞ்சம் கிட்ட அருள் செய்யுங்களேன்! எல்லாருக்கும் கிட்டியபின் நான் மட்டும் தனியாக விடப்படலாமா?' என்று அவரைக் கேட்டேன். அவர், 'உன் வீட்டினருக்கு ஏதேனும் ஓர் ஏற்பாட்டைச் செய்து முடி. உனக்கு எல்லாம் கிட்டும். உனக்கு என்ன வேண்டுமென்கிறாய்?' என்று கேட்டார்.

'ஆகாரம் உண்ணுவதற்காகச் சிறிது போது போக மூன்று அல்லது நாலு நாட்களுக்கு நான் சமாதி நிலையிலேயே ஆழ்ந்திருக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.' என்றேன். அதற்கு அவர், 'நீ ஒரு முட்டாள். அதைவிட உயர்ந்த ஒரு நிலை உண்டு. இருப்பது யாவும் நீயே என்று நீ ஒரு பாட்டுப் பாடவில்லை?...... வீட்டுக்கு ஏதாவது ஒரு வழி ஏற்படுத்திவிட்டு வா இங்கே வா. சமாதிக்கு மேற்பட்ட ஒரு நிலையைப் பெறுவாய்' என்றார்.

''இன்றுகாலை நான் வீட்டுக்குப் போனேன். பரீக்ஷைக்கு மும்முரமாகத் தயார் செய்ய வேண்டிய சமயத்தில் படிப்பில் அசிரத்தையாக இருக்கிறேன் என்று எல்லாரும் கடிந்து கொண்டார்கள். படிப்பதற்காக என் பாட்டியின் வீட்டுக்குப் போனேன். படிக்கத் தொடங்கும் சமயத்தில் சொல்லிமுடியாத ஒரு பீதி என்னைக் கவ்விக் கொண்டது. படிப்பதுதான் உலகத்தில் மிகவும் பயங்கரமான காரியம் என்பதுபோலத் தோன்றியது. என் இதயத்தில் ஒரு போர் மூண்டது. அதுபோல் நான் ஒரு நாளும் விம்மி அழுததில்லை. என் புத்தகம், நோட்டு இத்தியாதியை அப்படியே போட்டுவிட்டு இவ்விடம் நோக்கி ஓடலானேன். என் செருப்புக்கள் எங்கோ கழன்று ஓடின. வழியில் ஒரு வைக்கோல் போர். நான் ஓடிய வேகத்தில் வைக்கோல் துண்டுகள் என் மேல் ஒட்டிக் கொண்டன. அப்படியும் ஓடிக் கொண்டே வந்து இவ்விடத்தை அடைந்தேன்'' என்று கூறி முடித்தார் நரேந்திரர்.

* * *

இன்னொரு சமயம் இப்படித்தான் தமக்கு சமாதி அநுபவம் வேண்டும் என்று குருமஹராஜிடம் பிடிவாதம் பிடித்துக் கொண்டிருந்தார் நரேந்திரர். அப்போது பரமஹம்ஸர், ''உனக்கு

Koviloor Digital Library

வெட்கமாயில்லை? இவ்வளவு அற்பமான விஷயத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறாயே! நீ பெரிய ஆல விருக்ஷம் போலிருப்பாய், ஆயிரக்கணக்கானவர்களுக்கு நிழல் அளிப்பாய் என்று நான் நினைத்தேன். நீயோ உன்னுடைய சுய மோக்ஷத்தை மட்டும் நாடுகிறாய் என்று இப்போது காண்கிறேன்'' என்றார்.

பிறருக்கு நிழலளிக்கும் ஆலவிருக்ஷம் தான் வெயிலில் காய வேண்டியதுதானே?

* * *

ஆத்ம சாக்ஷாத்காரத்தையும் — தன் ஒருவனுடைய முத்தியையும் — மக்களை மேம்படுத்துவதற்காகத் தியாகம் செய்வது பிரம்மத்துடன் ஒன்றுவதற்கும் மேம்பட்டது என்று கூறிவிட்டார் பரமஹம்ஸர். பிற்பாடு சுவாமிஜியும் 'பிறரைக் கரைகடத்துவதற்காக நீ நரகத்துக்குச் செல்லவும் தயங்காதே' என்று உபதேசித்திருக்கிறார். 'தியாகத்தினால்தான் அமரத்துவம் கிட்டும்' என்பது வேதம். வெளி உலகுக்காக இந்தத் தியாகத்தைச் செய்வது கடினம் அல்லவா? அதற்கு முதற்படியாகவே நரேந்திரர் தம் வீட்டுக்காகத் தம் சாதனைகளைக் கைவிடவேண்டும் என்று பரமஹம்ஸர் விதித்தார் போலும்! அல்லது தமிழகத்தில் சொல்வார்களே, 'பெற்ற தாய் பிச்சை புகுந்துண்ணும்போது தனயன் உலகுக்கெல்லாம் தானம் செய்துகொண்டிருந்தானும்' என்று — அந்த அபக்யாதி நரேந்திரருக்கு ஏற்படவேண்டாம் என்று குருமஹராஜ் கருதியிருக்கக்கூடும்.

* * *

மஹேந்திரரிடம் நரேந்திரர் பேசிக்கொண்டிருந்த அன்றிரவு ஒன்பது மணியிருக்கும். குருநாதரின் தொண்டை நோவு எல்லை மீறிப் போயிற்று. அப்படியும் அவர் எதையோ நினைத்து ஆனந்தப்பட்டார். ரகசியக் குரலிலும், சைகைகளாலும் நரேந்திரரிடம் ஏதேதோ பேசினார். பிறகு மற்றவர்களைப் பார்த்துக் கூறினார்:

''நரேந்திரனின் அற்புதமான நிலையைப் பாருங்கள். 'கடவுளுக்காவது, உருவமாவது'? என்று ஒரு காலத்தில் அவன் சொல்லிக்கொண்டிருந்தான். இப்போது பாருங்கள், அவன் எப்படி அநுபவத்துக்காகத் துடிக்கிறான் என்று.''

நரேந்திரருடைய மனோரதம் நிறைவேறும் என்பதையும் குருமஹராஜ் அப்போது சுட்டிக்காட்டினார். உலகப் பணியையே அத்வைதாநுபூதியாகக் காணும் நிறைவுதான் அது. குருமஹராஜ், நரேந்திரர் இருவருமே வெற்றிகாணத்தான் போகிறார்கள்.

Koviloor Digital Library

அன்று இரவே நரேந்திரரும் மற்ற சிஷ்யர்களும் தியானம் பயில்வதற்காக தக்ஷிணேசுவரம் சென்ருர்கள்.

* * *

''நரேன், நீ ஏன் உன் படிப்பைத் தொடரக்கூடாது?'' என்று ஒரு நாள் சிஷ்யரைக் கேட்டார் பரமஹம்ஸர். இவ் வுலகில் ஏற்பட்ட வீட்டுக்காக முக்தியாகிய வீட்டையும் அவர் துறக்கவேண்டும் என்பதற்காகப் போலும்!

''படிப்பதா? இத்தனைநாளும் படித்ததையெல்லாம் மறப்ப தற்கு ஒரு குளிகை கிடைக்காதா என்றுதான் ஏங்கிக்கொண் டிருக்கிறேன்'' என்ருர் விழுந்து விழுந்து கல்விகற்ற நரேந்திரர்.

'படிப்பதையெல்லாம் மறக்கவேண்டிய ஒரு காலமுமுண்டு' என்று மஹரிஷி ரமணர் கூறுவதுண்டு. 'கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்' என்று பாடினுர் தாயுமான சுவாமிகள்.

* * *

பற்பல சாதன மார்க்கங்களை நரேந்திரருக்கு உபதேசித்து வந்தார் பரமஹம்ஸர். சுத்தமான ஒருமை மனதோடு அவற்றை அப்பியசித்து வந்த நரேந்திரரும் விரைவில் அவற்றின் பலனைப் பெற்று வந்தார்.

'இளம் துறவிகளின் ஞான பரம்பரையொன்று தோன்ற வேண்டும். அதற்கு நரேந்திரர் தலைமை தாங்க வேண்டும்' என்று ஸ்ரீராமகிருஷ்ணர் திருவுளம் கொண்டுவிட்டார். ஒரு நாள் அவர் நரேந்திரரிடம் தம் அடியார்களையெல்லாம் பார்த்துக் கொள்ளுமாறு கூறினுர். ''அவர்களை உன் மேல்பார்வையில் தான் விட்டுப் போகிறேன். நான் போன பின்பு அவர்கள் சாதனைகள் செய்யுமாறும், வீட்டுக்குத் திரும்பிவிடாத வாறும் பார்த்துக் கொள்'' என்ருர்.

நரேந்திரர் வீட்டுக் காரியங்களை ஒழுங்கு படுத்தவேண்டும் என்று விதித்த அதே பரமஹம்ஸர் மற்றவர்களின் விஷயத்தில் இப்படிக் கூறினுர். சிஷ்யர்களின் உள்ளப்போக்குகளிலிருந்த தாரதம்மியத்தை உணர்ந்திருந்தவர் அல்லவா அவர்? அல்லது 'வீடு வீடு' என்று வீட்டு ஞாபக மூட்டினுல் நரேந்திரர் சபல மடையாதிருக்கிருரா என்று பார்க்கத்தான் அவரை மட்டும் சோதித்தாரோ? 'படகு தண்ணீரில் இருக்கலாம்; ஆனுல் படகில் தண்ணீர் இருக்கக்கூடாது. ஒருவன் இல்லறத்தில் இருக்கலாம்; ஆனுல் இல்லற உணர்வு அவனுள் புகக்கூடாது' என்று கூறிய குருமஹராஜ் அந்தக் கடினமான சாதனையை நரேந்திரர் மட்டுமே சாதிக்க முடியும் என்று எண்ணினுரா?

Koviloor Digital Library

'துறவிகள் சங்கம் ஒன்றைத் தோற்றுவிக்க வேண்டும்' என்ற எண்ணம் குருநாதருக்கு வலுத்து வந்தது. சந்நியாசத்துக்கு முன்னேடியாக ஒரு நாள் அவர் தம் சிஷ்யப் பிள்ளைகளை பிக்ஷை எடுத்துவரச் சொன்னுர். மானுபிமானம் அற்ற அந்த உத்தமச் சிறுவர்கள் உற்சாகத்தோடு பிக்ஷை எடுக்கச் சென்றனர். கல்வியுடன் சேர்ந்து வளர்வது செருக்கு; ஆனபடியால் கல்விகற்கும் போதே அந்தச் செருக்கை தலையெடுக்க வொட்டாமல் செய்யத் தான் குருகுலவாஸத்தில் பிக்ஷை எடுத்துண்ண வேண்டும் என்று விதித்தனர் ஆன்ருேர். 'நாம் இப்படிக் கல்வி கற்கும்போது சுகமாக உண்டு மகிழ்வதற்கு மற்றவர்கள்தான் உதவி புரிகிருர்கள்' என்று உணர்ந்து அந்த மற்றவர்களிடம் பிச்சை எடுக்க வேண்டுமென்று விதித்தனர்.

பகவந் நாமத்தை பஜித்தவாறு சிடப்பிள்ளைகள் பிக்ஷைக்குப் புறப்பட்டனர். நானுவிதமான அநுபவங்கள் அவர்களுக்குக் கிட்டின. படிப்பு என்ற கடமையை விட்டதாகச் சிலர் அவர்களை நிந்தித்தார்கள்; சிலர் அவர்களின் பணிவை மதித்து மனமிரங்கினுர்கள்; அவர்களில் சிலரின் தாய்மாரே தம் பிள்ளைகள் பிச்சை எடுப்பதைக் காண நேர்ந்து கண்ணிர் மல்கினுர்கள்.

தாங்கள் யாசகம் பெற்ற பொருட்களைக் கொண்டு வந்து சமைத்தார்கள் அந்தச் சிடர்கள். காஸிப்பூர் தோட்டத்தில் தான் சமையல் நடைபெற்றது. சமைத்த உணவைப் பெருமையுடனும் மரியாதையுடனும் குருமஹராஜுக்கு நிவேதித்தனர். அவருடைய உள்ளம் உவகை பூத்தது. ஒரே ஒரு பருக்கையை எடுத்து, புண்ணுண்ட தொண்டையால் விழுங்கினுர். ''பேஷாகயிருக்கிறது! இதைப் போன்ற சுத்தமான உணவு வேறுண்டா?'' என்று மகிழ்ந்து கூறினுர். சிஷ்யர்கள் சந்நியாசத்துக்குப் பக்குவமாகி விட்டார்கள் என்று நிச்சயம் பெற்ருர். ஸ்ரீராமகிருஷ்ண மடம் என்ற அருள் கருவூலம் அப்போதே பரமஹம்ஸரின் உள்ளத்தில் பூத்துவிட்டது!

சிஷ்யர்கள் ஒப்பற்ற பரிசுத்தமும், ஒருமுகமான தியானமுமாகப் பண்பட்டு வந்தார்கள். தங்களுள் சங்கை நேர்ந்தால் நரேந்திரரை அணுகி அவர்கள் அவற்றைத் தீர்த்துக்கொள்வதைக் கண்டு பரமஹம்ஸர் திருப்தி அடைந்தார். ஸ்ரீராமகிருஷ்ணரின் நோவுக் காலத்தில் குருநாதரும் சிஷ்யர்களும் மிகமிக நெருங்கி வந்தனர்.

உள்ளத்தால் நெருங்கி வந்தாலும் உடலால் அவரை நெருங்கச் சிலர் அஞ்சினர். அவரது புற்று நோய் தொற்று நோயோ என அரண்டவர்கள் சிலருண்டு. இவர்களது தயக்

Koviloor Digital Library

கத்தைக் கண்ட நரேந்திரர் ஒரு நாள் குருநாதர் ஒரு கோப்பை யில் துப்பியிருந்த கஞ்சி வண்டலை யெல்லாம் தாமே எடுத்துக் கரகரவென்று கடித்து விழுங்கினுர். சிஷ்யர்களின் பயம் தெளிந்தது.

* * *

பண்டித சசிதர தர்க்க சூடாமணி என்பவர் தர்க்கத்திலும், இதர பல வித்தைகளிலும் நன்கு கற்றுத் தேர்ந்தவர். ஸ்ரீராம கிருஷ்ண தேவரிடம் ஈடுபாடு கொண்டவர். அவர் ஒரு நாள் காஸிப்பூருக்கு வந்திருந்தார்.

குருமஹராஜிடம் ஏதேதோ பேசிக்கொண்டிருக்கையில் அவர், ''ஐயனே, தங்களைப் போன்ற நிர்மல ஆத்மாக்கள் இச்சா மாத்திரத்திலேயே தங்கள் உடல் உபாதைகளை நீக்கிக்கொண்டு விடலாம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றனவே! தங்கள் சித்தத் தைச் சிறிதுபோது நோவுண்ட உடற்பகுதியில் செலுத்தினுல் வியாதி சொஸ்தமாகிவிடும்! ஐயனே, தாங்கள் ஏன் இப்படிச் செய்யலாகாது?'' என்று கேட்டார்.

''பண்டிதராகிய நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள்?'' என்று வியந்தார் பரமஹம்ஸர். ''எவ்வளவு அர்த்தமற்ற யோசனை சொல்கிறீர்கள்! என்னுடைய சித்தத்தை ஈசுவரனிடத்திலேயே என்றைக்கும் மீளாமல் வைத்துவிட்டவன் நான். அங்கிருந்து அதனைத் திருப்பி, அழுகிய மாம்ஸமும், ரத்தமும் கொண்ட இந்தக் கூண்டின்மீது எப்படிச் செலுத்த இயலும்?'' என்ருர் சித்தத்தைச் சிவன்பாலே வைத்த சித்தர்.

பண்டிதர் மௌனியானுர்.

அவர் சென்றபின் நரேந்திரரும் மற்ற சிஷ்யர்களும் அவர் விடுத்த அதே வேண்டுகோளைக் குருநாதரிடம் வலியுறுத்தினர்.

''எங்களுக்காகவேனும் நீங்கள் இந்த உபாதையிலிருந்து விடுபட்டுத்தானுக வேண்டும்'' என்று பிடிவாதம் பிடித்தனர்.

''அப்படியானுல் நான் என்ன, வேண்டுமென்றே என் இச்சை யாக இந்த வேதனையைத் தாங்கி வருகிறேன் என்று நினைக்கிறீர் களா? அது சரியாகப் போனுல் எனக்கும் ஆக்ஷேபணை இல்லை. என்ருலும் அது இருந்து வருகிறது. எதுவும் ஸர்வேசுவரியின் மதுரமான சங்கல்பத்தில்தான் இருக்கிறது.'' என்ருர் ஸ்ரீராம கிருஷ்ணர்.

''அப்படியானுல், அம்பிகையிடம் உங்கள் உடலைக் குணப் படுத்துமாறு கேட்டுக்கொள்ளுங்களேன். உங்கள் பிரார்த் தனைக்கு அவளால் செவிசாய்க்காமலிருக்க முடியாது'' என்று விடாப்பிடியாகக் கூறினுர் நரேந்திரர்.

Koviloor Digital Library

''குழந்தாய்! நீ அப்படிச் சுலபமாகப் பேசிவிடலாம். என்றால் இது மாதிரி வேண்டிக்கொள்வது ஒரு நாளும் முடியாது'' என்று மறுதலித்தார் குரு.

''முடியாது என்றால் யார் விட்டார்கள்? எங்கள் பொருட்டு நீங்கள் அம்பாளிடம். தெரிவித்துத்தானாகவேண்டும்'' என்று விம்பு செய்தார் நரேந்திரர்.

''சரி, என்ன செய்யமுடிகிறது என்று பார்க்கிறேன்'' என்று சம்மதித்தார் அருளாளர்.

சிலமணிகளுக்குப் பின் நரேன் குருவிடம் திரும்பி வந்தார். ''அன்னையிடம் கேட்டீர்களா? அவள் என்ன சொன்னாள்?'' என்று ஆவலுடன் கேட்டார். குருநாதர் முகத்தில் சாந்தமும் நாணமும் மாறி மாறித் தோன்றின. ''என் தொண்டையை அவளிடம் சுட்டிக் காட்டினேன். 'இந்த ரணத்தினால்தான் நான் ஏதும் உண்ணமுடியவில்லை. ஏதோ கொஞ்சம் நான் உண்ணவாவது நீ தயை செய்யலாகாதா?' என்று கேட்டேன். உடனே ஸர்வேசுவரி உங்களையெல்லாம் எனக்குக் காட்டினாள். 'ஏன், இவ்வளவு வாய்களால்தான் நீ உண்டு வருகிறாயே!' என்று என்னிடம் பதில் கூறினாள். எனக்கு ஒரே வெட்கமாகப் போச்சு. ஒரு வார்த்தை பேசவில்லை நான்'' என்றார்.

அன்பு என்ற பதத்துக்குப் பரிபூரண லக்ஷணத்தை இங்கு காண்கிறோம்.

> அன்பு வழிய(து) உயிர்நிலை அஃது இலார்க்கு
> என்பு தோல் போர்த்த உடம்பு

என்ற தமிழ் மறைமொழிக்குப் புது விளக்கம் இது. என்பும் தோலுமாக ஆன உடலினராயினும் அன்பினால் எல்லார் உயிராகவும் அல்லவோ ஸ்ரீராமகிருஷ்ண தேவர் வாழ்ந்திருக்கிறார்? 'என்பும் உரியர் பிறர்க்கு' என்று வாழ்ந்தவர் பிறந்து உடல் உயிர் இவற்றைத் தமதாகக்கொண்டு அல்லவோ வாழ்ந்திருக்கிறார்?

* * *

தெய்வ தரிசனத்துக்காகத் தபித்த நரேந்திரர் தெய்வத் தன்மையை ஸ்பரிசித்து விட்டோம் என்றெண்ணி மகிழும் தருணங்கள் வந்தன.

1886-ம் ஆண்டு மார்ச் மாதம். அன்று சிவராத்திரி. அன்று முழுதும் நரேந்திரரும், இதர சீடர்களும் உபவாசமிருந்தனர். வெறும் பட்டினி மட்டும் 'உபவாசம்' ஆகி விடுமா? ஆண்டவனுடன் வசிப்பதல்லவா உண்மையான உப-வாஸம்? வெறும் வயிற்றோடும், நிரம்பிய உள்ளத்தோடும் பிறவாயாக்கைப்

Koviloor Digital Library

பெரியோனுகிய பரமேசுவரனை ஏத்திக் கொண்டிருந்தனர் அந்த யுவர்கள். பிறவாயாக்கை யானுகிய பரமேசுவரன் லிங்கமாக ஆவிர்ப்பவித்து, தான் ஸகுண — நிர்க்குண வஸ்து — உருவம் இருந்த போதிலும் அவயவங்களில்லாததால் அருவத்துக்கும் அடையாளமாக இருக்கும் லிங்கத் திரு உருவு — என்று காட்டி யருளிய பரமபாவனமான சிவராத்திரி இரவில் சிவத்தியானத்தில் பொழுதைக் கழித்தனர்.

காஸிப்பூர் தோட்ட முழுவதிலும் சிவத்தின் சாந்தம் செறிந் திருந்தது. அன்று மாலை பூஞ்சிதறலாக மழை பெய்திருந்த படியால் எங்கும் ஈரமணம் நிரம்பியிருந்தது. வானுலகில் பெரிய தொரு பஞ்சுமலையில் பாலசுப்பிரமணியன் ஏறித் துவைத்து, அதி லிருந்து தும்புகள் கிளம்பிப் பறப்பதுபோல சிறு சிறு மேகக் கும்பல்கள் வானத்தில் சிதறிக் கொண்டிருந்தன. நரேந் திரருக்குத்தான் இயற்கைமூலம் இறை உணர்வு பெறும் பாக்கியம் இருந்ததே! அவருள் ஆத்மீகம் பூரித்து நின்றது.

உயர்ந்த பலவிஷயங்களை எடுத்துரைக்கலானுர் நரேந்திரர். பின்னர் அவரவர் தியானத்துக்குச் சென்றனர். காளி என்ற சிடர் மட்டுமே நரேந்திரருடன் தனித்து விடப்பட்டிருந்தார். நரேந்திரருக்குத் தம்மில் பொங்கும் சிவரஸத்தை வெளிப்படுத்த வேண்டுமென ஓர் ஆசை எழுந்தது. வெளிப்படுத்த முடியுமா என்று பரிசோதித்துப் பார்க்கவும் அவா உண்டாயிற்று. ''சில நிமிஷங்களுக்குப் பின் என்னைத் தொட்டுப்பார்'' என்று காளி யிடம் கூறிவிட்டு அவர் தியானத்தில் ஆழ்ந்தார். காளியும் தியானம் புரியலானுர்.

சில நிமிஷங்களுக்குப்பின் காளி நரேந்திரரின் வலது முழங் காலைத் தொட்டார். ஓரிரு நிமிஷங்கள் சென்றன.

''சரி, என்னைத் தொட்டபோது எப்படி உணர்ந்தாய்?'' என்று காளியைக் கேட்டார் நரேந்திரர்.

''ஏதோ மின்சார 'பாட்டிரி' யைத் தொட்டு 'ஷாக்' அடிப்பது போலிருந்தது'' — என்றுர் காளி.

நரேந்திரரைக் காளி தொட்டதையும் உடனே அவர் கை நடு நடுங்கியதையும் அங்கு அகஸ்மாத்தாக வந்த இன்னெரு சிஷ்யர் கண்டிருந்தார்.

அர்த்தஜாமத்தில் ஈசுவரனுக்கு வழிபாடு நடத்திவிட்டு, இளைஞர்கள் மீண்டும் தியானிக்க அமர்ந்தனர். இம்முறை காளி வெகு எளிதிலேயே உடலுணர்வை மறந்து தியானத்தில் ஆழ்ந்து விட்டார். நரேந்திரரைத் தொட்டதால் இது சாத்தியமாயிற்று என்று எல்லாருக்குமே புரிந்துவிட்டது.

Koviloor Digital Library

பூஜை எல்லாம் முடிந்த பின் குருநாதரைப் பார்க்கக் கிளம்பினர் நரேந்திரர். அவரது அறைக்குள் பிரவேசித்தவுடனே குருநாதரின் கண்டிப்பான குரல் எழுந்தது.

''நரேன், போதிய அளவு சேமித்து வைத்துக் கொள்ளு முன்பே நீ வீண் செலவு செய்யத் தொடங்கிவிட்டாய். நிறைய சேகரித்துக்கொள். அதன்பின்தான் அதை எப்படிச் செலவிடுவது என்பதை அறிவாய். அம்பிகையே அறிவிப்பாள். உன்னுடைய பாவத்தை அந்தப் பையனுக்குள் புகுத்தியதால் நீ அவனுக்கு எவ்வளவு தீங்கு இழைத்திருக்கிறாய் என்பது உனக்குத் தெரியுமா? அவன் ஒரு குறிப்பிட்ட மார்க்கத்தை நீண்டநாளாக அநுசரித்து வந்தான். அதெல்லாம் இப்போது பாழாயிற்று.''

குருநாதரின் கண்டிப்பு இளகிற்று. ''சரி, போனதெல்லாம் போகட்டும். இனி இதுபோல் செய்யாதே. எப்படியானாலும் அந்தப் பையன் அதிருஷ்டக்காரன்தான்'' என்று கூறி முடித்தார்.

அவருக்கு எப்படி அந்தச் சம்பவம் தெரிந்தது?

வேதகால முனிவர்கள் மிகவும் உன்னதமான ஜீவப் பிரம்ம அபேதத்தைக் கூறினாலும், அந்த இலக்கை அடைய பல மனோ பாவங்களுக்கு ஏற்பப் பல மார்க்கங்களை வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். இதை சமீபத்திலும் செய்துகாட்டிய மகான் ஸ்ரீராமகிருஷ்ணர். அவருடைய உபதேசத்தை ஏற்றுக்கொண்ட சுவாமிஜியும் பிற்பாடு இவ்வாறே செய்தார். இப்படிப் பல உள்ளப் பாங்குகளுக் கேற்பப் பற்பல சமயங்களில் அவர் உபதேசம் செய்ததால் சில சமயங்களில் உபதேசங்கள் முரண்படுவதாகவும் தோன்றும். மகான்களுடைய உபதேசங்களைப் படிக்கும்போது அவை யார் பொருட்டுக் கூறப்பட்டன என்பதையும் நினைவில் கொள்ளுவது அவசியமாகும். 'ஒருவருக்கு ஔஷதம்; இன்னொருவருக்கு விஷம்' என்று சொல்வதுண்டல்லவா? அவரவருக்குரிய மருந்துகளைக் கொடுத்து அவரவர் வியாதியையும் தீர்த்தபின் எல்லாருக்கும் அளிக்கும் அமுதமே அத்வைதம்.

* * *

ஸ்ரீராமகிருஷ்ணரின் உடல்நிலை சீர்கேடுற்றுக்கொண்டே வந்தது. வீடு வாசல் எல்லாவற்றையும் மறந்து, எதிர்ப்புக்களை எல்லாம் திருணமாகக் கருதி காஸிப்பூர் தோட்ட மாளிகையிலேயே ஐக்கியமாகி விட்டனர் சீடர்கள். கண்ணை இமை காப்பதுபோலக் குருநாதரைக் காத்து வந்தனர்.

குருநாதருடைய நோக்காடே உயரியதொரு கல்வியை நரேந்திரருக்குப் புகட்டி விட்டது. 'உடம்பு வேறு, அதனுள் உறையும்

Koviloor Digital Library

ஆத்மா வேறு' என்று முறை செய்து பிரித்து, உடம்பை ஒதுக்கி ஆத்மாவில் வாழமுடியும் என்பதைக் கண்ணுக்கு மெய் யாகக் கண்டு வந்தார் நரேந்திரர். சாதன மார்க்கங்கள் யாவற் றையும் அநுசரித்து நமது சாஸ்திரங்கள் கூறுவதெல்லாம் சத் தியம், பரம சத்தியம் என்று மெய்ப்பித்த பரமஹம்ஸர் உடல் — ஆத்மா இவற்றின் தொடர்பை — அதாவது தொடர்பின்மை யைப் — பற்றி சாஸ்திரங்கள் கூறுவதையும் நிதரிசனமாக்கவே இந்தக் கொடு நோயைத் தாங்கியதாகத் தோன்றியது.

ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவாய் ரத்தம் கக்கும்போது சிஷ்யர் கள் பயத்தில் மயிர்க் கூச்சு அடைவார்கள். அவரென்னவோ ஏதும் நடக்காததுபோல விச்ராந்தமாக யிருப்பார். அவர் துடிக் கும் சமயங்கள் உண்டு; அதுவும் எத்தகைய நோவை அவர் அனுபவிக்கிறார் என்பதைப் பிறருக்கு அறிவிப்பதற்குத்தானே என்னவோ? மனிதராக இருக்கும்போது சகிக்கவொண்ணாத அந்த நோவையே தெய்வமாக இருந்து எப்படித் தாங்குவது என்பதையும் காட்டி வந்தார் அவர்.

நோவு பொறுக்கமுடியாமல் பலசமயங்களில் அவர், ''உடலும் நோவும் ஒன்றையொன்று கவனித்துக்கொள்ளட்டும்; மனமே, நீ ஆனந்தத்திலேயே தோய்ந்து வாழ்'' என்பார்.

ஒரு நாள் அவர் மஹேந்திரரிடம், ''நான் இதையெல்லாம் ஏன் சகித்துக் கொள்ளுகிறேன் தெரியுமா? இல்லாது போனால் நீங்களெல்லாரும் கதறுவீர்கள். இப்படி அவஸ்தைப்படுவதை விட இந்த உடல் மாய்வதே சிலாக்கியம் என்று நீங்கள் எல்லாரும் சொன்னால் உடல் போவதையே வரவேற்பேன்.'' என்றார். பிறருக்காக உயிரை விடுவது கடினமென்றால் பிறருக்காக உயிர் வாழ்வதும் அதைவிடக் கடினமான காரியமாவதுண்டு. அதனைத் தான் செய்து கொண்டிருந்தார் ஸ்ரீராமகிருஷ்ணர்.

''வியாதி என்பது உடம்புக்குத்தான். பகவானுக்கு எத் தனையோ உடம்புகள் இருப்பதைக் காண்கிறேன். இது (தமது உடம்பு) அவற்றிலொன்றுதானே?'' என்பார் பரமஹம்ஸர்.

* * *

மார்ச் பதினைந்தாம் தேதி குருநாதருக்கு நோவு சிறிது குறைந்திருந்தது. ரகசியக் குரலிலும், சைகைகளாலும் சிஷ்யர் களுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தார் அவர். இன்னும் எத் தனை நாளில் தங்களது இந்த பாக்கியம் பறிக்கப்பட்டுவிடுமோ என்று சோகாக்ராந்தராக அமர்ந்திருந்தனர் நரேந்திரர், ராகால், மஹேந்திரர் முதலியோர்.

Koviloor Digital Library

''நான் காண்பதென்னவென்று நீங்கள் அறிவீர்களா ?'' என்று தொடங்கினார் குருதேவர். ''அவன் ஒருவன்தான் எல்லாமாகவும் ஆகியிருக்கிறான். மனிதர்களையும், மிருகங்களையும் நான் பார்க்கும்போது அவை சதை என்ற சட்டையணிந்த சட்டகங்களாகத்தான் தோன்றுகின்றன. அவற்றுக்குள் அவன் இருந்து, அவற்றின் கையையும் காலையும் ஆட்டுவதை நான் காண்கிறேன். முன் ஒரு நாள் எனக்கு இப்படி தரிசனம் ஏற்பட்டது: தோட்டம், வீடு, சாலை, அதில் செல்லும் மனிதர் விலங்குகள் எல்லாமே மெழுகு போன்ற ஒரே பண்டத்தினாலானவை என்று கண்டேன்.

''கொலையாளியாக இருப்பவனும் ஆண்டவனே; அவனே தான் கொலை செய்யப்படுபவனும்; கொலை நடக்கும் பீடமும் அவனே என்று நான் காண்கிறேன்.''

இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போதே யாவுமான பரம் பொருளில் கரைந்து நினைவிழந்தார் பரமஹம்ஸர். அந்நிலை அரை குறையாகக் கலையப் பெற்றவர், ''இப்போது எனக்கு எந்த உபாதியும் இல்லை — பரமசுகமாக இருக்கிறேன்'' என்றார்.

''அதோ வாடு உட்கார்ந்திருக்கிறான், தலையைக் கையால் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறான். ஸர்வேசுவரனேதான் அப்படி உட்கார்ந்திருக்கிறான் — தலையைக் கையால் பிடித்துக் கொண்டு லாடுவாக உட்கார்ந்திருக்கிறான் — என்று எனக்குத் தெரிகிறது.''

ஒவ்வொரு சிஷ்யர்கள் மீதாக அவருடைய கோமளமான பார்வை வருடிக்கொண்டு சென்றது. எல்லாரையும் பரப் பிரம்மமாகப் பார்க்கும் பார்வையல்லவா அது? ராகாலையும், நரேனையும் அன்னையைப்போல அணைத்து முத்தமிட்டார் குரு மஹராஜ். மஹேந்திரரைப் பார்த்து, ''இந்த உடல் மட்டும் இன்னும் வெகுகாலம் இருக்க அநுமதிக்கப்பட்டால் மேலும் பலர் ஆத்மிக விழிப்புப் பெறுவார்கள்'' என்று சுய உணர்வு கலக்காமல் தன்னையே புறத்திருந்து பார்த்து மொழிந்தார். சிறிது நேரம் மௌனம் நிலவியது. ''ஆனால் அன்னையின் விருப்பம் அதுவல்ல'' என்று மெல்லக் கூறினார்.

''அன்னையின் விருப்பம் அதுவல்ல'' என்று மீண்டும் கூறியவர் ''அவளுடைய ஆக்ஞை வேறு விதமாக இருக்கிறது. என்னுடைய எளிமையையும், படிப்பின்மையையும் பயன் படுத்திக் கொண்டு மக்கள் தங்களுக்குரியதல்லாத வரங்களை* என்னிடம்

* to bestow upon them rare gifts of spirituality என்றுதான் மூலத்தில் காண்கிறது. அதன் கருத்தை விஸ்தரிப்பதே பொருத்தமாக யிருக்கும் என்று கருதி 'தங்களுக்குரியதல்லாத வரங்களை' என்று எழுதியிருக்கிறேன்.

Koviloor Digital Library

கேட்டுப் பெற்றுக் கொண்டு விடுவார்கள். இது கூடாதென்று என் அன்னை என்னை எடுத்துக்கொண்டு விடுவாள்.''

குருநாதர் உடலை நீத்துவிடுவார் என்பதை ராகாலினல் தாங்க முடியவில்லை. உருகிய குரலில், ''சுவாமி, உங்களுடைய உடம்பு இன்னும் நீண்டகாலம் நீடிக்க வேணுமென்று அம்பிகையைக் கேட்டுக் கொள்ளலாகாதா ?'' என்று கெஞ்சினர் ராகால். ''அது அவள் சங்கல்பத்தைப் பொறுத்ததே'' என்ருர் பரமஹம்ஸர். ''உங்கள் சங்கல்பமும் அம்பிகையின் சங்கல்பமும் தான் ஒன்ருகி விட்டதே'' என்று அவரைப் பிடித்துக் கொண்டார் நரேந்திரர். ''வாஸ்தவம்தான்'' என்று கூறிய பரமஹம்ஸர் ஒரு நிமிஷ மௌனத்துக்குப்பின், ''என் சங்கல்பமெல்லாம் இப்போது அவளுடையதிலேயே பரிபூரணமாகக் கரைந்து விட்டது'' என்ருர்.

அதாவது தம்மால் எதுவும் சங்கல்பிக்கவே முடியாது என்பதைத் தெரிவித்தார். 'செய்பவள் நீயே; அநுபவிப்பவளும் நீயே' என்று ஆதிசங்கரர் தேவி புஜங்கத்தில் கூறும் சரணுகத நிலையில் இருந்து பேசினர் பரமஹம்ஸர். கருவி தானுகவே இயங்க முடியுமா ? அதை இயக்குவிக்கும் சக்தியினல் அல்லவா இயங்குகிறது ? 'அமி யந்த்ர; துமி. யந்த்ரீ' என்று அம்பாளிடம் தாம் கூறிவந்ததை அப்படியே வாழ்ந்து காட்டினர் குருதேவர்.

சிஷ்யர்களை மீண்டும் அன்பு தவழ நோக்கினர் பரமஹம்ஸர். காசிப்பட்டுபோல, சந்தனப் பூச்சுபோல, ஹம்ஸதூளியின் ஸ்பரிசம்போல அந்த நோக்கு சிஷ்யர்களை ஹிதமாகத் தழுவியது.

குருநாதர் பேசுவார்: ''இங்கு (தமக்குள்) இருவர் இருக்கிருர்கள். ஒன்று ஆண்டவன். மற்றது அவனுடைய பக்தன். பின்னவனுக்குத்தான் வியாதி வக்கை யெல்லாம். நான் சொல்வது புரிகிறதோ ?''

யாருக்கு அந்தப் பதங்களின் முழுப்பொருளும் தெரியமுடியும் ? ஜீவாத்மா, பரமாத்மா இருவரும் இரு பக்ஷிகளாக நெருங்கியிருந்தாலும் ஜீவாத்மா மட்டும் கனிகளை உண்பதாகவும், பரமாத்மா அதனை பாராமல் பார்த்துக் கொண்டு வெறுமனே உட்கார்ந்திருப்பதாகவும் கூறும் உபநிஷித மந்திரத்தையே வேறு சாயலில் கூறிவிட்டார் பரமஹம்ஸர். பக்தனுக இருந்தால் எப்படி ஆண்டவனுகவும் ஆகலாம் என்பதைத் தாம் காட்டிவிட்டதையும் உணர்த்தி விட்டார். இன்னும் என்னென்ன கூடமான பொருள்கள் உண்டோ, யார் காணமுடியும் ?

இந்த எண்ணத்தில்தான் போலும், சீடர்களில் யாருமே வாய் திறக்கவில்லை.

Koviloor Digital Library

''ஐயோ! இதை நான் யாரிடம் சொல்வேன்? யார் புரிந்து கொள்வார்கள்?'' என்று அரற்றினர் பரமஹம்ஸர். சற்று நிதானமடைந்து, ''அவன் ஒரு மனிதனுக — அவதார மாக — வருகிறுன். தன் பக்தர்களேயும் அவனே அழைத்துக் கொண்டு வருகிறுன். பக்தர்களும் அவனேடு திரும்பி விடுகிறுர் கள்'' என்று அவர் சொல்லிக்கொண்டிருக்கும்போதே, ''அப்படி யாளுல் நீங்கள் எங்களே விட்டுச் செல்லலாகாது'' என்ருர் சிஷ்ய சிரோமணியாகிய ராகால்.

ஸ்ரீராமகிருஷ்ணர் புன்னகை பூத்தார். அந்தப் புன்னகை குரல் முழுவதும் பரவ, ''தேசாந்தரிப் பாடகர்கள் ஒரு வீட்டுமுன்னுல் திடீரென ஒரு கும்பலாகத் தோன்றுகிருர்கள். பாடி ஆடுகிருர்கள். வந்தது போலவே போயும் விடுகிருர்கள் — அவர்கள் இன்னுர் என்பதைக்கூட யாரும் தெரிந்து கொள்வதில்லே'' என்ருர்.

குழந்தைபோல அவர் பேசியதில் உட்பொருள் அடர்ந்து செறிந்திருந்தது. குருமஹராஜ் மேலும் சொல்வார்:

''உருவம் என்று ஒன்று இருக்கும்வரை துன்பம் தவிர்க்க முடியாதது. எனவே, நான் இனிமேல் உருவமே எடுத்துக்கொள் ளாமலிருக்க நேரிட வேண்டும் என்று சில சமயங்களில் விரும்பு கிறேன். ஆனுல் கேடயத்துக்கு இரண்டு பக்கமல்லவா? இன் ஞெரு பக்கம் அறிவிக்கிறது: 'உடல் இருப்பதால்தானே தெய் விக ஆனந்தத்தைச் சுவைக்க முடிகிறது?' என்று. இல்லாவிடில் எல்லாமே சுவையற்றுப் போகும். பகவான் உருவம் தரிப் பது தன் பக்தர்களுக்காகத்தான்.'' என்ருர்.

'இரண்டற்ற பரம்பொருள் ஏன் பலவான பிரபஞ்சமாகவும், ஜீவர்களாகவும் தோன்ற வேண்டும்? ஜீவர்கள் பிரம்மமாக வேண்டுமென்பதிருக்க, இதற்கு நேர்மாருக அந்தப் பிரம்மம் ஏன் ஜீவர்களாகத் தோன்றுகிறது?' என்ற கேள்விகளுக்குத்தான் பரமஹம்ஸர் விடை கூறிவிட்டாரா? தன்னில்தானே லயித்துத் தானே ஆனந்தமாகயிருக்கும் பரம்பொருள், தன்னே மறந்து ஜீவர்களாகி மீண்டும் தன்னே நினைவு கொண்டு பெறுகிற ஆனந் தத்துக்காகத்தான் இப்படி உலகாகவும், உலக மக்களாகவும் தோன்றுகிறதா? 'தான் இன்னது' என்ற உணர்வும் அற்ற நிலேயிலிருந்து ''தான் இன்னுர்' என்பதை ஒருவாறு ஓர்ந்து பார்க்கும் ஆனந்தத்துக்காகத்தான் இந்த மாயா பிரபஞ்சமா? சர்க்கரை தன்னேத்தானே ருசித்துக்கொள்ள முடியாதல்லவா? அதேபோல் பரம்பொருள் தன் அழகைத்தானே அநுபவிக்க முடியா தல்லவா? இதற்காகவே துவைதப் பிரபஞ்சமாகத் தோன்றி மீண்டும் தன்னிலேயே ஒன்றிக் கொள்கிறதா?

Koviloor Digital Library

நரேந்திரரைப் பரிவுடன் பார்த்த ஸ்ரீராமகிருஷ்ண முனிவர் அவரிடம் ஜீவன் முக்தனுடைய நிலையை விளக்கலானார். "நீ உடம்பா, மனசா, புத்தியா என்று எப்போதும் பகுத்துப் பார்த்து விவேகமடைவாயாக! உன்னுடைய உண்மை இயல்பினை அறிய முயலுக. ஆத்மாவுக்குப் பற்றுக்களே கிடையா. சத்துவம், ரஜஸ், தமஸ், என்ற முக்குணங்களும் அதனைத் தொடா. அது குணாதீதமானது. மாயைக்கு அப்பாற்பட்டது. காமமும், பொருளாசையும் மாயை. ஞானம், துறவு, பக்தி இவையும் மாயையே. ஆனால் இவை மாயையின் தெய்வீகமான அம்சங்கள். நீயும் மற்ற பக்தர்களும் என்னிடம் ஏதோ பற்றுக்கொண்டு என்னைப்பற்றி விசாரப்பட்டாலும் இந்தப் பற்றுக்கள் ஆத்மாவுக்கு பந்தம் ஏற்படுத்த மாட்டா. ஆத்மாநுபவத்துக்கே அது இட்டுச் செல்லும். ஆத்மாநுபவத்துக்குப் பின்னும் சிலர் மாயையின் தொடர்பை நீடிக்கிறார்கள் — அதாவது அதன் தெய்வீகமான அம்சங்களுடன் தொடர்பை நீடிக்கிறார்கள். மனித குலத்துக்குப் போதனை செய்யவும், பரமனுக்கும் பக்தருக்குமுள்ள இனிய உறவின் சுகத்தைச் சுவைக்கவுமே இவ்வாறு செய்கிறார்கள்."

"நான் துறவறத்தின் அவசியத்தைப்பற்றிப் பேசினால் சிலர் என்மீது மன வித்தியாசப் படுகிறார்களே!" என்றார் நரேந்திரர்.

புண்ணுண்ட தொண்டையால் இவ்வளவு காலமும் பேசி வந்த ஆசான் மிகவும் ரகசியக் குரலில், "மனிதன் துறந்தேயாக வேண்டும். ஒரு பொருளை இன்னொரு பொருளின் அடியில் வைத்துவிட்டால் முன்னதை எடுப்பதற்கு முதலில் பின்னதை எடுக்கத்தானே வேண்டும்?" என்றார்.

"ஆமாம்" என்றார் நரேந்திரர்.

ஆத்ம தரிசனம் பெறமுடியாமல் நம்மை வீடு வாசல்களால் மூடிக்கொண்டிருப்பதால் அவற்றை முதலில் களைந்தால்தான் ஆத்மாவைப் பெறலாம் என்பது குருநாதரின் உள்ளுறை பொருள் போலும்!

"எல்லாம் தத் (வேதம் அது என்று கூறும் பரம்பொருள்) என்பதால் பூரித்து நிற்கின்றன என்றறியும்போது அதைத் தவிர வேறென்ன தெரியும்?" என்று கேட்டார் பரமஹம்ஸர்.

இந்தக் கேள்வியை இந்தச் சந்தர்ப்பத்தில் ஏன் கேட்கிறார் என்று புரியாத நரேந்திரர் மீண்டும் துறவைப்பற்றியே கேட்டார்:

"மனிதராகப் பிறந்தவர் துறந்தேதான் ஆகவேண்டுமா?"

"அதுதான் சொன்னேனே! எல்லாம் அதனால் நிரம்பியிருக்கிறது என்று காணும்போது வீடு வாசல் என்றெல்லாம்

Koviloor Digital Library

தனித்தனியாக எவற்றையோ எப்படிக் காணமுடியும் ?'' என்றார் குருமஹராஜ்.

பரமஹம்ஸர் நரேந்திரரை மிருதுவாகப் பார்த்தார். பக்தர்களைப் பார்த்து ''இதோ மூலதனம்'' என்று நரேந்திரரைக் குறிப்பிட்டார். நரேந்திரர் நாணத்துடன் நகைத்தவாறே ''அப்படி யென்றால் என்ன ?'' என்று கேட்டார்.

தாம் போனபின் சிஷ்யர்கள் அகவாழ்வு வாழ நரேந்திரரே மூலதனம் என்பதுதானே பரமஹம்ஸரின் கருத்து? ஆனால் அதைச் சொல்லாமல் ''நீ துறவறத்தை நோக்கி அதிவிரைவாகச் சென்றுகொண்டிருக்கிறாய்'' என்று மட்டுமே கூறினார்.

''இப்போதெல்லாம் நரேந்திரர் உங்களைப் பூரணமாக ஏற்றுக்கொண்டு விட்டார்'' என்று மகிழ்ச்சியுடன் கூறினார் ராகால். மூர்த்தி உபாசனையில் ஈடுபட்டிருந்த ராகாலை பிரம்ம சமாஜத்தின் அருவ வழிபாட்டுக்கு நரேந்திரர் திருப்ப முயன்றதற்காக முன்பு குருநாதர் நரேந்திரரைக் கடிந்து கொண்டிருக்கிறார் அல்லவா ? 'கடவுளுக்கு உருவமும் உண்டு என்பதை நரேந்திரர் எப்போது ஒப்புக் கொள்வார் ? உருவமுள்ள கடவுளை வழிபடும் குருநாதரை என்று முழுவதும் நம்பி ஏற்றுக்கொள்வார் ?' என்று ராகால் உள்ளூற கவலைப்பட்டிருக்க வேண்டும். அந்தக் கவலை தீர்ந்த மகிழ்ச்சியிலேயே இப்போது அவர் பரமஹம்ஸரிடம் இவ்வாறு கூறினார்.

''ரொம்பப் பேர் இப்போதுதான் என்னைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்'' என்றார் குருமஹராஜ். பிறகு எல்லாரையும் நோக்கி, ''எல்லாம் இதிலிருந்துதான் வந்தது என்று இப்போது நான் உணர்கிறேன்'' என்று கூறிவிட்டு, நரேந்திரரைப் பார்த்து, ''எதிலிருந்து ? தெரிகிறதா ?'' என்று கேட்டார்.

''சிருஷ்டிக்கப்பட்ட எல்லாப் பொருள்களும் உங்களிடமிருந்துதான் வந்தது சுவாமி'' என்றார் நரேந்திரர் நாத்தழுதழுக்க.

அவதார உண்மையையும் நரேந்திரர் ஏற்றுக்கொண்டதில் பரம ஹம்ஸர் ஆனந்த மடைந்தார். தம்மை அவதாரம் என்றதற்காக அல்லவே அல்ல; மக்களுக்கு இறங்கிப் பரமன் மக்களில் ஒருவனாக வருவான் என்ற நம்பிக்கையைத் தம் ஆருயிர் சீடர் பெற்றாரே என்றுதான் களி கொண்டார். ராகாலை நோக்கி, ''பார்த்தாயா ? அவன் புரிந்து கொண்டுவிட்டான் !'' என்று கூறி ராகாலையும் மகிழ்ச்சி கொள்ளச் செய்தார்.

* * *

இந்த அற்புதமான சம்பாஷணையை எத்தனைமுறை படித்தாலும் ஒவ்வொரு முறையும் புதியதொரு இன்பம் பிறக்கும்.

Koviloor Digital Library

அத்வைதத்தின் சத்தியம், அத்வைத அநுபூதியையும் துறந்து அத்வைத பாவனையால் உலகை ஆண்டவனுகக் கண்டு மக்கள் பணி புரிவதன் மகிமை, பக்தியின் பெருமை, அவதாரக் கொள் கையின் உண்மை இவற்றையெல்லாம் மிகவும் லளிதமான முறை யில் இந்த உரையாடலின்போது ஸ்ரீராமகிருஷ்ண முனிவர் விளக்கி விட்டார்.

* * *

துறவின் பெருமை பற்றி குருநாதர் பேசியது, அரச போகத்தைத் துறந்த புத்தரது நினைவை நரேந்திரருக்கு ஏற் படுத்தியது. பாலியத்திலிருந்தே நரேந்திரருக்கு புத்தரிடம் ஒரு விசேஷமான பற்றுதல் இருந்து வந்திருக்கிறது. குழந்தைப் பரு வத்தில் தாம் தியானத்தின்போது கண்ட ஒரு துறவி புத்தரே என்று பிற்பாடு நரேந்திரர் தெளிந்திருக்கிறுர்.

வேத கர்மாக்களை விலக்கியதால் புத்தரை சநாதனிகள் பூஜிப்பதில்லை. நரேந்திரர் வேத கர்மாக்களை ஒருபோதும் புறக் கணிக்க வேண்டுமெனக் கூறியதில்லை. ஆனுல் வேத கர்மாக் களைச் செய்த வேதியர்களிடத்தில் புத்தருக்குத் தீவிரமான மனக் கசப்பு இருந்ததெனில் நரேந்திரரிடத்தும் அது ஒரு சிறிய அள வுக்கு இருக்கத்தான் செய்தது. இதைப் 'பிரம்மத்வேஷம்' என்று யாரும் தவருக எண்ணிவிடக்கூடாது. வர்ண முறையில் முதல்வராக மதிக்கப்பெற்ற வேதியர் ஏனையர்களை தாழ்த்தி நடத்தி வந்தனர் — என்பது நரேந்திரரின் கருத்து. புத்தரைப் போல சுவாமி விவேகானந்தர் வர்ண முறையை எதிர்க்கவில்லை. உயர்வு-தாழ்வு உணர்ச்சியின்றி தொழிலை நாலுவிதமாகப் பகுத்து, வம்ச வழியாக அதனை அநுசரிப்பதில் தவறில்லை என்றே சுவாமிஜி எண்ணினுர். எனினும் வேதியர்கள் இந்த உயர்வு-தாழ்வு உணர்ச்சியை நீக்கவில்லை; தாங்களே அதனை மிகைப் படுத்தி ஞர்கள் என்பது அவரது கருத்தாகும். இவ்விஷயத்தில் கருத்து வேற்றுமைக்கு இடமுண்டு. என்ருலும் வேதாந்த மதத்துக்கு உலகின் போற்றுதலைப் பெற்றுத் தந்தவர் சுவாமிஜி என்பதை யாரும் மதித்தே யாகவேண்டும். சுவாமிஜி தோன்றியிராவிடில் இந்தியாவின் படிப்பாளிகளில் பெரும்பான்மையானவர் இதே உயர்வு-தாழ்வு உணர்வு காரணமாக இந்து மதத்தை நீத்துக் கிறிஸ்துவ சமயத்தைத் தழுவியிருப்பார்கள் என்பதையும் மறுப்ப தற்கில்லை. இந்தியாவுக்கு இந்து மதத்தையும், உலகுக்கு வேதாந்த மதத்தையும் காத்துத் தந்தவர் சுவாமி விவேகானந்தரேயாவார்.

க்ஷத்திரிய வம்சத்தில் பிறந்ததிலிருந்து, யௌவனப் பருவத் தில் சத்திய ஞானத்தைப் பெறவேண்டுமென்று துடியாகத்துடித்து நானுவிதமான ஐயங்களால் மொத்துண்டதிலும், துறவற நாட்

Koviloor Digital Library

டத்திலும் புத்தருக்கும் விவேகானந்தருக்கும் பல ஒற்றுமைகள் இருந்தன.

இப்போது புத்தரைப் பற்றிய நினைவுகளிலேயே நீந்திக் கொண்டிருந்தார் நரேந்திரர். புத்தரைப் பற்றிய பேச்சுக்களே காஸிப்பூர் தோட்ட மாளிகையில் நிறைந்தன. புத்தமத கிரந் தங்களை நன்றாகப் படித்திருந்த நரேந்திரர் அந்தக் கோட்பாடு களையும், கதைகளையும் விவகரிப்பார். புத்தரின் சத்திய ஆர்வம், ஒப்பற்ற துறவு, கருணை இதயம், மாதுர்யமும் காம்பீர்யமும் பொருந்திய அவரது உருவம், அவரது நெறிசார்ந்த வாழ்வு, மனித குலத்தோடு தத்துவங்களை ஒட்டிவைத்த சமூக உணர்வு இவற்றையெல்லாம் உற்சாகமாகக் கூறுவார் நரேந்திரர். வேறு எந்த நினைவுமே அவருக்கு அப்போது இல்லாமலிருந்தது.

உபநிஷதங்கள், பகவத்கிதை, ஆதிசங்கரரின் உபதேசங்கள் ஆகியவற்றைப் பயின்றதுபோலவே கிறிஸ்துவ சமய நூல்களையும் மற்ற சிஷ்யர்களுக்கு விளக்கியிருந்தார் நரேந்திரர். இப்போது ஒரே பௌத்த மயமாயிற்று. நரேந்திரரின் ஆர்வம் மற்றவர் களையும் பிடித்துக் கொண்டது. ''என்னுடைய உடல் இந்த இருக்கையிலேயே வற்றிப்போனாலும் சரி, அதிலுள்ள சதையும் எலும்புகளும் அற்றுப்போனாலும் சரி, ஞானத்தைப் பெறுமல் இந்த சரீரம் இங்கிருந்து எழுந்திராது'' என்ற புத்தரின் மொழியையே அந்த இளைஞர்கள் தங்கள் தியான அறைச்சுவரில் பொறித்து வைத்துக் கொண்டார்கள்.

புத்தகயாவிலுள்ள போதி விருக்ஷத்தின்அடியில் அமரும் போதுதான் புத்தர் இவ்வாறு கூறினர். எனவே அந்த போதி விருக்ஷத்தின் அடியிலேயே தாமும் தியானம் புரியவேண்டுமென்ற ஆர்வம் நரேந்திரருக்கு எழுந்தது. இதனை அவர் தாரக், காளி இருவருக்கு மட்டுமே கூறினர். பயணச் செலவுக்குத் தாரக் வகை செய்தார். ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் மூவரும் கங் கையைக் கடந்து பால்லி ரயில் நிலையத்தை அடைந்தார்கள். தங்கள் பிரயாணம் பற்றி அவர்கள் மற்றவரிடத்தில் ஏதும் கூருததால், அவர்கள் பரிவிராஜர்களாக எங்கோ கண்காணுமல் செல்லப் போகிருர்கள் என்றே மற்ற சிஷ்யர்கள் எண்ணினர். பிறகுதான் அவர்கள் துவராடை உடுத்துப் புத்தகயாவில் தியானம் புரியச் சென்றிருக்கிருர்கள் என்பது தெரிந்தது.

கயாவுக்குச் சென்ற மூவரும் ரயில் நிலையத்திலிருந்து ஏழு மைல்கள் நடந்து சென்று புத்தர் ஞானம் பெற்ற இடத்தை அடைந்தனர். அந்த இடம் கிளர்த்திய நினைவுகளும், அதன் சாந்தச் சூழலும் அவர்கள் இதயத்தைக் கிளுகிளுக்கச் செய்தன.

Koviloor Digital Library

ஒரு நிசப்தமான மாலையில் அவர்கள் போதி விருக்ஷத்தின் அடியிலிருந்த கல் ஆசனத்தில் அமர்ந்து தியானம் புரியலானுர்கள். நரேந்திரர் கண்ணீரில் கரைந்தார். தம் பக்கத்தில் அமர்ந்திருந்த தாரக்கை மிகவும் பரிவோடு தழுவிக் கொண்டார். தாரக்குக்கு அதன் காரணம் விளங்கவில்லை. காரணத்தைச் சொன்னுர் நரேந்திரர்: புத்தரின் நேரிய நடத்தையும், உயிர்க்குல அன்பும், அன்பு மொழிகளும், புத்த மதத்தால் இந்தியாவின் சரிதமே மாறியதும் — இவையெல்லாம் வண்ணமடல்களாகத் தம் கண்முன் விரிந்தன என்றும் தம்மால் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த இயலவில்லை என்றும் நரேந்திரர் கூறினுர்.

* * *

காஸிப்பூரில் நரேந்திரர் இல்லாமல் மற்ற சிஷ்யர்களுக்கு இருப்பாகவே இல்லை. நரேந்திரரை ஒரு நாள் காணுவிட்டாலும் கூடத் துடித்த பரமஹம்ஸரோ அமைதியாகவே இருந்தார். ''எதற்காக இப்படி விசாரப்படுகிறீர்கள்? அவன் எங்கே போய் விடுவான்? எவ்வளவு காலம் அவனுல் அங்கெல்லாம் இருக்க முடியும்? தானே வந்து சேருவான்'' என்று கூறி மற்றவர்களையும் நிதானமாக இருக்கப் பணித்தார் பரமஹம்ஸர். சிரித்துக் கொண்டே ''இந்த பூமி முழுவதையும் சுற்றிச் சுற்றிப் பாருங்கள். எங்கேயும் உண்மையான மதத்தைக் காண முடியாது. இந்த உலகத்தில் எவ்வளவு ஆன்மிகம் உள்ளதோ அவ்வளவும் இங்கு தான் (தம் இதயத்தைச் சுட்டிக் காட்டி) இருக்கிறது'' என்று குறும்பு கமழக் கூறினுர் குருநாதர். 'தம் ஒருவனிடம்' என்று அவர் சொன்னுரா, ஒவ்வொருவருக்குமே அவரது இதயத்தில் தான் பூரண ஆத்ம ஞானமும் உள்ளது, வெளியுலகில் சுற்றிப் பயனில்லை என்றுரா? நமக்குள்ளேயே உள்ள மோக்ஷ நிலையை எங்கெங்கோ தேடுவதைப்பற்றி ஆதி சங்கரர் கூறுவதுபோலப் பரமஹம்ஸரும் கூறினுரோ? ஆனுல் நரேந்திரரைப் பொறுத்த மட்டில் அவர் பரமஹம்ஸரையன்றி வேறு யாரையும் குருவாகக் கொள்ள இயலாது என்பதை அந்தப் பரமஹம்ஸர் நன்கு அறிந்திருந்தார். மற்றவர்களை நாடி நரேந்திரர் பெறும் அநுபவங்களும் இதற்கே உறுதுணையாக அமையும் என்பதையும் பரமஹம்ஸர் அறிந்திருந்தார். பாய்மரத்தில் அமர்ந்த பறவை அதனைவிட்டு நடுக்கடலில் எங்கு அலைந்தாலும் அதே பாய்மரத்துக்குத் திரும்பவேண்டியதுதானே?

* * *

அங்கே புத்த கயையில் நரேந்திரரும் அவரது நண்பர்களும் ஆலய மஹந்துவின் விருந்தாளிகளாக மூன்று நான்கு தினங்கள்

Koviloor Digital Library

தங்கியிருந்தனர். அதற்குள் குருமஹராஜின் ஞாபகம் கட்டுமீறி வந்துவிட்டது. புறப்பட்டனர். ரயில் கட்டணத்தின் ஒரு பகுதியை மஹந்து தந்துதவினார். ரயில் நிலையம் இருந்த கயா நகரத்துக்கு வந்தனர். அங்கு நரேந்திரர் தமது தந்தையின் வக்கீல்-நண்பர் ஒருவரைச் சந்தித்தார். அவருடைய அழைப்பின்பேரில் ஒரு நாள் மாலை சிற்றுண்டி உபசாரத்துக்கு நரேன் தமது நண்பர்களோடு சென்றார். நரேன் அப்போது சில கீதங்களை அருமையாக இசைத்தார். இளைஞர்கள் தக்ஷிணேசுவரத்துக்குத் திரும்புவதற்குத் தேவைப்பட்ட பயணச் செலவில் மிகுதியை வக்கில் கொடுத்து உதவினர்.

* * *

நரேந்திரரைக் கண்ட பரமஹம்ஸர் உவகை பெற்றார். பிரயாண விவரம் முழுவதையும் கூறுமாறு குழந்தையின் ஆர்வத்துடன் கேட்டார். நரேந்திரரும் அதைப்பற்றியே சில நாட்களுக்குப் பேசித் தீர்த்தார்.

''நரேன் புத்த கயாவுக்குப் போய்விட்டு வந்திருக்கிறான். உனக்குத் தெரியுமோ?'' என்று ஒரு நாள் மஹேந்திரரைக் கேட்டார் பரமஹம்ஸர்.

''அப்படியா, புத்தரின் சித்தாந்தம் என்னவோ?'' என்று வினவினார் மஹேந்திரர்.

''புத்தருக்குத் தம்முடைய அநுபவத்தை வெளிப்படுத்திக் கூறத் தெரியவில்லை. அதனால்தான் அவரை நாஸ்திகர் என்று மக்கள் கருதுகிறார்கள்'' என்றார் நரேந்திரர், மஹேந்திரரின் மனதிலிருப்பதைப் புரிந்துகொண்டு.

ஸ்ரீராமகிருஷ்ணர் சைகையினாலேயே பேசலானார்: ''புத்தர் ஏன் நாஸ்திகராக இருக்க வேண்டும்? அவர் நாஸ்திகர் அல்ல. தம் அநுபவத்தை அவருக்கு வார்த்தைகளில் சொல்லத் தெரியவில்லை. 'புத்தர்' என்றால் என்ன அர்த்தம் தெரியுமா? அறிவு விளக்கத்தைத் தியானித்துக் கொண்டிருப்பதால் தியானிப்பவரே அறிவு விளக்கமாகி விடுகிறார் என்று அர்த்தம். இதுவும் ஆண்டவனின் லீலையே. ஒரு விநோதமான லீலை. தான் யார் என்பதை ஒருவன் அறியும் நிலையில் அவன் உணர்வுகளுடன் இருக்கிறானா, இல்லையா — அதாவது உலக வழக்கப்படி வாழுகிறானா இல்லையா — என்றே சொல்லமுடியாது.''

''இங்குதான் முரண்பாடுகள் சந்திக்கின்றன'' என்றார் நரேந்திரர் மஹேந்திரரிடம். ''ஆக்ஸிஜனும் ஹைட்ரஜனும் சேர்ந்து நீராகின்றன. அதே ஆக்ஜிஜனும் ஹைட்ரஜனுமே சேர்ந்து ஆக்ஸி-ஹைட்ரஜன் என்ற ஜ்வாலையும் உண்டாகிறது.

Koviloor Digital Library

புத்தராகும் நிலையில் காரியம் செய்வது, செய்யாமலிருப்பது இரண்டுமே சாத்தியமாகிறது. 'காரியம் செய்வது' என்னும் போது தன்னலம் கருதும் காரியத்தை நான் குறிப்பிடவில்லை. புலன்களுக்குக் கட்டுப்பட்டு வாழும் உலகாயத மக்கள் உலகத்தைச் சத்தியம் என்கிறார்கள்; மாயை என்ற சித்தாந்தத்தை நம்பு பவர்கள் உலகம் பொய் என்கிறார்கள். புத்தராகும் நிலை சத்தியமுமன்று; அசத்தியமுமன்று'' என்றார் நரேன்.

''புத்தர் என்ன சொல்கிறார்?'' என்று கேட்டார் குரு.

''அவர் கடவுள் இருக்கிறாரா இல்லையா என்பதுபற்றிப் பேச வில்லை. ஆனால் எல்லாரிடத்தும் கருணை காட்டினார். ராஜாளி ஒன்று ஒரு சிறு பக்ஷியைப் பக்ஷிப்பதற்காகத் துரத்தி வந்தது. அதைக் கண்ட புத்தர் சிறு பறவையைக் காப்பாற்றித் தன் சதையை ராஜாளிக்கு ஈந்தார். எத்தகைய துறவு! ராஜ குமாரனாக இருந்தவர் சகல சௌக்கியங்களையும் துறந்தார். ஓர் உடைமையும் இல்லாதவன் துறவறம் பூணுவதில் என்ன அற்புதம் இருக்கிறது ?

''ஞான உதயம் பெற்று, நிர்வாணத்தை உணர்ந்த பின்னர் புத்தர் தமது பூர்விக ராஜகிருஹத்துக்குச் சென்றார். தம் பூர்வ காலத்துப் பாரியாளையும், புத்திரனையும், ராஜகுடும்பத்தைச் சேர்ந்த மற்றும் பலரையும் பிக்ஷுவாகவும் பிக்ஷுணியாகவும் ஆகுமாறு கேட்டுக்கொண்டார். ஆகா, அதுவல்லவோ துற வுணர்வு! இதையே வேத வியாஸரின் செயலுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் எவ்வளவு மாறுபாடு தோன்றுகிறது! துறவியாகக் கிளம்பிய தமது புத்திரர் சுகதேவரைத் தடுத்தார் வியாஸர். வீட்டிலிருந்தே மதத்தை அநுஷ்டிக்கச் சொன்னார். புத்தர் வேட்கைகளை அழிப்பதுபற்றித்தான் தமது உபதேசம் முழுவதி லும் கூறினர். 'இந்த உடம்பு இங்கேயே வற்றினாலும் சரி, நிர்வாணமடையாமல் இங்கிருந்து எழுந்திருக்க மாட்டேன்' என்று சொல்லி போதி விருக்ஷத்தினடியில் அமர்ந்தவர் அவர். இந்த உடம்பு இருக்கிறதே இது மகா போக்கிரி. இதை அடக்காமல் எதையுமே சாதிக்க முடியாது'' என்றார் நரேந்திரர்.

ஸ்ரீராமகிருஷ்ணர் நரேந்திரரைப் பார்த்தார். ''அதெல் லாம் சரி, நீ இங்கே (தம்மிடம்) எல்லாவற்றையுமே காண்கிறாய் அல்லவா? இது ஒரு பலசரக்குக் கடை. இங்கே திப்பிலியி லிருந்து எல்லாம் இருக்கிறது'' என்றார்.

ஆஹா! இதைவிட அழகாக ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம் ஸரை சுருங்கக் கூறி விளக்க முடியுமா? ''இந்த விவேகானந்தர் செய்ததென்ன என்பதை அறிய இன்னொரு விவேகானந்தர்

Koviloor Digital Library

தேவை'' என்று சுவாமிஜி தாம் மறைந்த தினத்தன்று கூறினர். அதே போல ஸ்ரீராமகிருஷ்ணர் யார் என்று விளக்க ஒரு ஸ்ரீராம கிருஷ்ணராலேயேதான் முடியும் போலும்! வாமாசாரத்தி லிருந்து அத்வைத முக்திவரை எல்லாம் அல்லவோ ஸ்ரீராம கிருஷ்ணரிடம் குடிகொண்டிருந்தன?

''ஆம் மஹா சய!'' என்ருர் நரேந்திரர் இதயத்திலிருந்து. ''எல்லா நிலேகளேயும் அடைந்த நீங்கள் வேண்டுமென்றே ஒரு தாழ்ந்த நிலேயில் இருப்பது போலக் காண்கிறீர்கள்.''

அருகே கிடந்த தமது விசிறியைக் கையிலெடுத்துக் கொண் டார் பரமஹம்ஸர். ''இந்த விசிறியை எப்படிக் கையால் பற்றி எடுக்க முடிகிறதோ அது போல ஈசுவரனே நான் உணர்ந்திருக் கிறேன். மேலும், ஈசுவரனும் இந்த உடலில் இருப்பதும் ஒன்றே என்பதையும் உணர்ந்திருக்கிறேன்'' என்று சத்தியத் திருவாக்கைக் கூறினர்.

''ஆத்ம பூரணத்துவம் பெற்றவர்கள் இங்கேயே முக்தி பெற்று விடுகிருர்கள். எனினும் லோகத்தை ரக்ஷிப்பதற்காக 'நான்' 'எனது' என்ற எண்ணங்களேச் சிறிதே கைக்கொள்ளு கிருர்கள். சுக துக்கங்களே அநுபவிப்பது போலக் காண்கிருர்கள். நாங்கள் கூலிவேலைக்காரனேப் போல் நிர்ப்பந்தத்தின் மீது காரியம் செய்கிறோம். முக்தனே தானுகவே லீலேயாகக் காரியம் செய்கிருன்'' என்று கூறி அந்த உன்னத உரையாடலே நிறைவு செய்தார் நரேந்திரர்.

இதை எழுதி முடிக்கும்போது உபநிஷதங்களேக் கூறியபின் சாந்தி பாடம் சொல்வது போல், சாந்தி பாடம் கூறவேண்டும் எனத் தோன்றுகிறது.

* * *

ஸ்ரீராமகிருஷ்ண மடங்கள் என்ற பெயரில் இன்று உலகெங் கும் அன்புப் பணி புரிந்துவரும் ஸ்தாபனங்களுக்கு வித்திட்ட புனித விழா காஸிப்பூரில்தான் நடைபெற்றது. பெயரிடாமலே அன்று பரமஹம்ஸர் அந்த ஸ்தாபனத்தை நிறுவிவிட்டார்.

மூத்த கோபாலர் ஒரு நாள் சாதுக்களுக்கு விநியோகிப்பதற் கென காஷாய வஸ்திரங்களும், ருத்ராக்ஷங்களும் கொண்டுவந்து பரமஹம்ஸரிடம் அளித்தார்.

''இதோ துறவற உணர்வு நிரம்பிய குழந்தைகள் இருக்கிருர் கள். இவர்களேவிட உயர்ந்த சாதுக்களே நீ எங்கே காணப் போகிருய்? காஷாயத்தையும், ருத்ராக்ஷங்களேயும் இவர்களுக்கே வழங்கி விடலாம்'' என்ருர் பரமஹம்ஸர்.

Koviloor Digital Library

அன்ருெரு நாள் பிச்சையெடுத்து பிக்ஷுகர்களான அந்தச் சிறுவர்களை மாலை வேளையில் தம் அருகே அழைத்தார் அருளாளர். அவர்களுக்குத் தாமே மந்திரோபதேசம் செய்தார். வெளிப்பட இல்லாவிடினும், உள்ளூற அவர்களை சந்நியாசிகளாக்கினுர். இவர்கள்தான் எதிர்காலத்தில் ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசத்தைப் பரப்பி மக்களுக்குத் தொண்டு புரியப் போகிறவர்கள்.

மகத்தான சம்பவங்கள் பல நிறைந்த இந்த வரலாற்றில் அந்த ஒவ்வொரு சம்பவத்தின் மகத்துவத்தையும் விளக்க இயல வில்லை. அவற்றில், குருநாதர் தமது சீடர்களுக்குத் தீக்ஷை அளித்த இந்த நிகழ்ச்சியும் ஒன்ருகும்.

* * *

'அஹம் பிரம்மாஸ்மி' என்று மாமறை முழங்கும் அத்வைத அநுபவத்தைத் தாம் பெற்றேயாகவேண்டும் என்ற துடிப்பு நரேந்திரருக்கு அதிகமாயிற்று. 'உலகம் முழுவதும் உன் பணிக்குக் காத்திருக்க உனது முக்தியை மட்டுமோ நினைந்தாய்?' என்று குருமஹராஜ் நரேந்திரரைக் கடிந்து கொண்டது உண்மைதான். எனினும் உலகத்தை ஒரு வழியாகத் துறந்து முக்தி எனும் அத்வைத நிலையைப் பெற நரேந்திரர் எண்ணவில்லை. முக்தி நிலை இன்னதென்று தாமே அநுபவித்த பின் உலகுக்குப் பணி புரியவேண்டும் — வேதாந்தம் சத்தியமே என்பதை அநுபவபூர்வமாகக் கூறி மாந்தருக்கு நம்பிக்கை யூட்ட வேண்டும் — என்றே அவர் விரும்பினுர். ''தனது விடுதலைக்காகவும், உலகத்தின் நன்மைக்காகவும்'' — ஆத்மனோ மோக்ஷார்த்தம் ஜகத் ஹிதாசய என்பதுதானே ஆப்தர் மொழி?

அத்வைத அநுபவத்தை அநுக்கிரஹிக்க வேண்டும் என்று குருதேவரை எவ்வளவோ நச்சரித்து விட்டார் நரேந்திரர். பல னில்லை. இப்போது அவர் நச்சரிக்காமலே அந்த மகா பாக்கியம் அவருக்குக் கிட்டிவிட்டது. எதைவிட மகத்தான லக்ஷியம் கிடை யாதோ அதனை நரேந்திரர் அடையும் தருணம் வந்துவிட்டது. அவரது வாழ்க்கையில் மிகவும் முக்கியமானதொரு சம்பவம் இது.

ஒரு நாள் மாலை நரேந்திரர் தியானிக்க அமர்ந்தார். திடீ ரென்று தமது தலைக்குப் பின்புறத்தில் ஓர் ஒளி வீசுவதை உணர்ந் தார். முதலில் டார்ச்சு விளக்கின் ஒளி போலத் தோன்றிய அதன் பிரகாசம் சிறிது சிறிதாக அதிகமாயிற்று. அளவிலும் அது பெரிதாகிக் கொண்டே போயிற்று. பிறகு அது வெடிப் பதைப் போலத் தோன்றியது. நரேந்திரரின் மனது அதில் ஒன்றி விட்டது. அதற்குப் பிறகு என்ன நடந்தது என்பதை எப்படிச்

Koviloor Digital Library

சொல்ல முடியும்? பேசா அநுபூதி பிறந்ததுவே என்றுதான் கூறவேண்டும். பரம்பொருளுடன் இரண்டறக் கலந்திருக்கும் நிலையை வார்த்தைகளால் கூற முடியாது ; வாக்கொடு மனமும் அதைக் கிரகிக்க வொண்ணுமல் திரும்பிவிடுகின்றன என்று அநுபூதிச் செல்வர்களான வேதரிஷி புங்கவர்களே கூறும்போது நாம் முயற்சி செய்வது பேதமையே அல்லவா? ''சமாதி ஸ்தோத்திரம்'' என்ற பெயரில் நரேந்திரர் எழுதியுள்ள பாடல்களைப் படித்தால் அவரது உணர்வைப்பற்றிச் சிறிது அறிய முடியும்.

பனிமதியில்லை பரிதியும் இல்லை
வெளிதனில் ஒளிகள் ஒளிந்து ஒழிந்தன ;
அண்டமும் பிண்டமும் அகண்ட வெளியினில்
நிழல்களின் நினைவாய் நீந்திக் கரைந்தன.

உள்முகமாக உள்ள வெளிதனில்
உலக நிழல்கள் உதித்து உலாவின
'நான்' எனும் உணர்வின் ஓட்டம் தனிலே
நானிலம் எல்லாம் நலிந்து ஒடுங்கின.
உலகின் படைப்பும் இருப்பும் இறப்பும்
நிலையில் அலையாய் நெஞ்சில் அடங்கின.

மந்த மந்தமாய் நிழல் மந்தைகள்
மறைந்தன ஆதிக் கருப்பை யதனிலே!
அந்த மடையா அக உணர் வொன்றே
சுந்தரப் பெருக்காய் சுரந்து பரந்தது.

ஆகா, விந்தை, அற்புத விந்தை!
அக உணர்வதுவும் அமுங்கி மறைந்தது!
சுந்தரப் பெருக்கும் அந்தம் அடைந்தது!
வெளி தனில் வெளியது வெளிறி ஒழிந்தது!
அறியவும் பேசவும் அறிய இவ் அற்புதத்தை
உணர்பவன் எவனே உணர்ந்தவன் அவனே!

நரேந்திரருடன் மூத்த கோபாலரும் அப்போது தியானம் புரிந்து கொண்டிருந்தார். மோன அமைதியைக் கலைத்துக் கொண்டு, ''கோபாலா, கோபாலா என் உடம்பு எங்கே?'' என்று நரேந்திரர் கூவுவது கோபாலரின் செவியில் பாய்ந்தது. அத்வைத நிலைக்கு ஒரு படி கீழேயிருந்த நரேந்திரர் தமது சிரஸை மட்டுமே உணர்ந்தார்; உடம்பின் உணர்வையே மறந்துவிட்டிருந்தார். ''இதென்ன நரேன்? இதோ இங்கேயேதான் உங்

Koviloor Digital Library

கள் உடம்பு இருக்கிறது!'' என்ருர் கோபாலர் பதற்றத்துடன். அந்த உடம்பு ஏன் அப்படி விரைத்திருக்கிறது என்று அதிசயத்துப் பயந்தார் கோபாலர். ஸ்ரீராமகிருஷ்ணரிடம் ஓடினுர். அவர் சாந்தமே இறுகிய சத்துவப் பொருளாகக் பொலிந்து கொண் டிருந்தார். நடந்ததெல்லாம் தமக்குத் தெரியும் என்ற பாவம் அவர் முகத்தில் இலங்கியது. ''நரேனேக் காப்பாற்றுங்கள்'' என்று கோபாலர் பீதியுடன் பிரார்த்தித்தபோது அவர், ''எல்லாம் அவன் அப்படியே இருக்கட்டும். இதற்காக அவன் என்னே எவ் வளவு தொணதொணப்பி யிருக்கிருன், தெரியுமா?'' என்று கூறி விஷமம் செய்தார்.

இரவு ஒன்பது மணிக்குத்தான் நரேந்திரர் சுயபிரக்ஞை பெறுகிருர் என்பதற்கு அறிகுறி கண்டது. அவர் பூரணமாக இக உலக உணர்வு பெறும்போது தம்மைச் சுற்றி இதர சீடர்கள் கவலேயுடனும், ஆச்சரியத்துடனும் சூழ்ந்திருப்பதைக் கண்டார். நினேவு திரும்பியது. ஆனந்தவெள்ளத்தின் அலே நுனிகள் தம்மை நக்கிக் கொடுப்பது போன்ற புல்லரிப்பு உண்டாயிற்று நரேந் திரருக்கு. 'அத்வைதக் கடலிலிருந்தே அனந்தமான சம்பிரதாய நதிகளும் பிறந்தன; அதிலேயே அவை சங்கமமும் ஆகின்றன. எல்லாச் சமய நெறிகளேயும் ஒப்புக்கொள்ளும் ஒரு நிரந்தர சத்தியமான சமயம் உண்டெனில் அது அத்வைத வேதாந்தமே' என்பதை உள்ளத்தின் ஒவ்வொரு அணுவாலும் உணர்ந்து விட்டார் நரேந்திரர்.

குருநாதரிடம் சென்று, அவரது அநுக்கிரஹத்தை நினேந்து, விநயமாக நின்ருர் நரேந்திரர். நரேந்திரரின் நளின நயனங்களே, நனேந்த நயனங்களேக் கூர்ந்து கவனித்தார் குருபிரான். சொல் வார்:

''கண்மணி நரேந்திரா! ஜகன்மாதா உனக்கு எல்லா வற்றையும் உணர்த்தி விட்டாள். மிக உயர்ந்த செல்வக்குவியலே பெட்டியில் வைத்துப் பூட்டுவதுபோல் இப்போது நீ பெற்ற அநுபவத்தையும் பூட்டியாக வேண்டும். அதனேத் திறக்கும் திறவு கோல் என்னிடம் இருக்கும். நீ காரியம் பல செய்தாக வேண்டி யிருக்கிறது. என் பணியை நீ செய்து முடித்தவுடன் அநுபூதிப் பெட்டி மீண்டும் திறக்கப்படும். இப்போது போலவே அப்போது நீ யாவும் உணரப் பெறுவாய்; நிரந்தரமாக உணரப் பெறு வாய்!''

* * *

பரமஹம்ஸருக்கு நரேந்திரரிடம் எவ்வளவு அன்பு இருந்தது என்பதைக்கண்டு நாம் அதிசயித்தோம். ஆனுல் நரேந்திரரிடம்

Koviloor Digital Library

வைத்திருந்த அன்பைவிட அதிகமான அன்பை மனித குலத்திடம் வைத்திருந்தார் அவர். மனித குலத்தின் மேன்மைக்காக நரேந்திரர் பாடுபடவேண்டும் என்பதற்காகவே அவருடைய அநுபூதியைத் தாம் பூட்டி வைத்துக்கொண்டார்! நம்மிடமெல்லாம் அத்தகைய அருளினைப் புரிந்த தவயோகியின் இணையடிகளைப் பணிவோமாக!

* * *

நரேந்திரர் அத்வைத நிலையை எய்தினுல் அதிலேயேதான் கரைந்து போய்விடுவார் என்பது பரமஹம்ஸருக்குத் தெரிந்திருந்தது. ''தான் யார் என்று நரேந்திரன் எப்போது உணர்கிறுனே, அதன்பின் அவனுல் ஒரு கணம்கூட உடலில் இருக்க முடியாது. அப்படி உணரும்போது நரேந்திரன் தன்னிச்சையாக உலகைவிட்டு மறைவான். அவன் சுய சங்கற்பத்தால் மறைந்தால்தான் உண்டு. (அதன் முன்பு) அவன் தனது அறிவு பலத்தாலும், ஆத்ம சக்தியாலும் இவ்வுலகை அதன் அஸ்திவாரம் வரை ஆட்டிவைக்கும் காலம் வரும். பூரணப் பொருளின் உணர்வை நரேந்திரனிடமிருந்து ஒரு திரையிட்டு மறைக்கும்படி நான் ஸர்வேசுவரியைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன். அவனுல் ஆகவேண்டியது எவ்வளவோ இருக்கிறது. என்றுலும் இந்தத் திரை மிகவும் மெல்லியதாக உள்ளது. அது எந்த நிமிஷமும் அறுந்துவிடும் போலிருக்கிறது'' என்று பரமஹம்ஸர் வேறொருபோது தம் சீடர்களிடம் கூறினுர்.

நரேந்திரரின் எல்லையற்ற ஆர்வத்துக்கு இரங்கியே அவர் சிறிதுகாலம் அத்வைத நிலையைத் துய்க்க அருள்புரிந்தார் பரமஹம்ஸர். எனினும் அவர் நிர்விகல்ப சமாதியிலேயே இருந்தால் உலகப் பணி புரிவது யார்? நிர்விகல்ப சமாதியிலிருந்த சப்தரிஷியரில் ஒருவரை தெய்வக் குழந்தை தட்டி எழுப்பி இவ்வுலகத்துக்கு அழைத்து வந்தது என்னுவது?

நினைத்தபோது நிர்விகல்ப சமாதி நிலையில் பிரம்மமாக ஆவதும் அதிலிருந்து பிரிவதும் ஈசுவரகோடிகளுக்குத்தான் முடியும். ஸ்ரீராமகிருஷ்ணரால் அது முடிந்தது. எனினும் அவர் கூட சமாதிக்குச் செல்லுமுன் ஏதேனும் ஓர் அல்ப ஆசையை எழுப்பிக் கொண்டாலே தாம் நிச்சயமாக இக உலகுக்குத் திரும்ப முடியும் என்று கருதினுர். ''நான் புகை பிடிக்க வேண்டும்'' அல்லது ''எனக்குக் குடிக்க நீர் வேண்டும்'' என்பதுபோலக் குழந்தைத் தனமான ஆசைகளை எழுப்பிக் கொண்ட பின்பே ஸ்ரீராமகிருஷ்ணர் தியானத்துக்கு அமருவார்.

Koviloor Digital Library

குருமஹராஜ் மேலும் மேலும் நலிவுற்று வந்தார். எத்துணைக்காலம்தான் அந்தப் புனித ஆத்மா கட்டுப்படுவது ?

சோகத்திலும் சேவையிலும் சீடர்களின் பொழுது சென்றது.

சேவார்த்திகள் ஏராளமாக வரலாயினர். 1886-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் அவர்களின் எண்ணிக்கை மிகவும் உயர்ந்தது. தம்மை பக்த ஜனங்கள் பெருமளவில் அண்டிவரும்போது தமது உயிர் பிரியும் என்று ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியிருந்தது சிஷ்யர்களின் நினைவை வருத்தியது.

ஸ்ரீராமகிருஷ்ணரின் அன்பு எத்தகையது என்பதை நாம் எப்படி அறியமுடியும் ? அந்த அன்பினை நுகரும் பேறுபெற்ற சீடர்கள் அதனை இழக்க எப்படி மனசு கொள்வார்கள் ?

குருநாதரின்மீது நரேந்திரரின் உள்ளம் ஆழப்பதிந்திருந்தது எனினும் நினைத்த மாத்திரத்தில் தியானத்தில் ஆழவும் அவரால் இயன்றது. ஒரு நாள் கிரீச பாபுவும் நரேந்திரரும் ஒரு விருக்ஷத்தின் அடியில் தியானத்துக்கு அமர்ந்தனர். சிறிது நேரத்தில் கொசுக்கள் ஏகமாகப் பிடுங்கத் தொடங்கியதால் கிரீசரால் தியானம் செய்ய முடியவில்லை. கண்களைத் திறந்தார். என்ன ஆச்சரியம் ! நரேந்திரர் சற்றும் சலனமுறாமல் தியானத்தில் ஈடுபட்டிருந்தார் ! கம்பளிப் போர்வை போர்த்திக் கொண்டாற்போல், அவருடைய உடம்பில் ஊசிமுனை படக்கூட இடம் இல்லாமல், கொசுக்கள் அவர்மீது உட்கார்ந்திருந்தன !

இதையெல்லாம் அறிந்துதான் பரமஹம்ஸரும் தாம் போய் விடலாம் என்று தீர்மானித்து விட்டார். 'நான் இல்லாவிட்டால் சீடர்கள் என்னுவார்கள் ?' என்று முன்பு கவலைப்பட்ட அவர் இப்போது 'நரேன்தான் அவர்களைப் பார்த்துக்கொள்ள இருக்கிறானே !' என்று நிர்விசாரமானார்.

பேசவே முடியாத நிலையை அடைந்த பரமஹம்ஸர் ''நரேன் மற்றவர்களுக்கு உபதேசிப்பான்'' என்று ஒரு காகிதத்தில் எழுதிக் காட்டினார்.

நரேந்திரர் தயங்கினார். ''நானா, உபதேசிக்கவா ?'' என்று குழறினார்.

''நீ அதைச் செய்து தானாகவேண்டும்'' என்று சைகை காட்டினார் பரமஹம்ஸர்.

''என்னுடைய சித்திகள் காலக்கிரமத்தில் உன்மூலமாக வெளிப்படும்' என்றும் கூறினார்.

முன்பொரு முறை சித்திகளை அளிப்பதாக அவர் நரேந்திரரிடம் கூறியதற்கு நரேந்திரர், ''முதலில் எனக்கு விவேகம்

Koviloor Digital Library

வரட்டும்; அதற்கப்புறம் சித்திகளைப் பார்த்துக் கொள்வோம்'' என்று கூறினரல்லவா ?

'சிஷ்யராக இருக்கும் தம்மைக் குருவாகுமாறு பரமஹம்ஸர் பணிக்கிறார் !'

— இதனை நரேந்திரரால் இரண்டு காரணங்களுக்காகத் தாங்க முடியவில்லை. விநயம் ஒரு காரணம். விசனம் இன்னொரு காரணம். தாம் குரு ஸ்தானத்தை ஏற்பதென்றால் தமது குருநாதர் அந்த ஸ்தானத்தை விட்டுப் புறப்படப் போகிறார் என்பதுதானே அர்த்தம் ?

'நரேந்திரர் என்ற மொட்டினை ஓர் இதழ் மீதமில்லாமல் மலர்த்திவிட வேண்டும்; விரைவிலேயே மலர்த்திவிட அவசியம் ஏற்பட்டுவிட்டது' என்று திருவுளம் கொண்டவர்போல மோன மொழிகளாலும், சலனமற்ற செயல்களாலும் நரேந்திரரின் ஆத்ம வளர்ச்சிக்கு இறுதிப் பூச்சுக்கள் அளித்துவந்தார் குருமஹராஜ்.

வாய்திறக்க வொண்ணாத வேதனையிலும் அவர் பிரதிமாலை இரண்டு மூன்று மணிகள் நரேந்திரருக்கு உபதேசித்து வந்தார். நரேந்திரர் யாருக்கு எப்படியெப்படி உபதேசிக்க வேண்டுமென் பதையெல்லாம் உபதேசித்தார். சிஷ்யர்கள் சிதறிவிடாதபடி பராமரித்து எப்படி ஓர் அருட்குலத்தை அவர் உருவாக்க வேண்டு மென்பதையும் நரேந்திரருக்கு ஸ்ரீராமகிருஷ்ணர் எடுத்துரைத்து வந்தார்.

1886-ம் ஆண்டு ஆகஸ்ட் பன்னிரண்டோ, பதின்மூன்றோ— நரேந்திரரைத் தம் அருகே அமர்த்திக் கொண்டார் பரமஹம்ஸர். நரேந்திரரை மிகவும் கூர்ந்து நோக்கியவாறு சமாதியில் அமிழ்ந்தார் குருநாதர். மிகவும் சூக்ஷ்மமான ஏதோ ஒரு சக்தி — மின்சார அதிர்ச்சி போன்ற ஏதோ ஒன்று — தமது உடலில் புகுந்து வியாபிப்பதை உணர்ந்தார் நரேந்திரர். வெளி உலக நினைவுகள் அவரிடமிருந்து விலகலாயின.

பிரேம சாகரமாகிய பரம்பொருளில் குரு-சிஷ்யர் இருவரும் கரைந்திருந்தனர். அப்போதே சிஷ்யருக்குள்ளும் குருநாதர் கரையலானர்.

நரேந்திரர் கண்விழித்தபோது பரமஹம்ஸர் விம்மி அழுது கொண்டிருந்தார்.

''மஹாசய, ஏன் அழுகிறீர்கள் ?'' என்று நெஞ்சுவெடிக்கும் குரலில் கேட்டார் நரேந்திரர்.

''நான் ஏதுமில்லாப் பக்கிரியாகி விட்டேன் நரேந்திரா ! நான் சேமித்து வைத்திருந்ததை யெல்லாம் இன்று உனக்கு அளித்து விட்டேன். இந்த சக்திகளால் நீ மகத்தான காரியங்

Koviloor Digital Library

களைச் செய்யப் போகிறாய். அதன் பின்பு — அதன் பின்பே — நீ எங்கிருந்து வந்தாயோ அங்கு திரும்புவாய்'' என்று கூறி விம்மினார் பரமஹம்ஸர். சக்திகளை ஈந்து விட்டோமே என்று வருந்திய விம்மல் அல்ல அது. ஆனந்த விம்மலே யாகும்!

ஸ்தூலப் பொருட்களை நாம் பரிமாறிக் கொள்வதுபோல சூக்ஷ்ம உணர்வுகளையும் மகான்களால் பிறர்க்கு அளிக்கமுடியும். எவ்வளவோ பெரும்பாடுபட்டு ஸ்ரீராமகிருஷ்ணர் பெற்றிருந்த சாதனைப் பலன்களையெல்லாம் இன்று பெற்று விட்டார் நரேந்திரர். அவற்றைத் தமக்கென வைத்துக் கொள்ளாமல் உலகுக்காகப் பயன் படுத்தியதே விவேகானந்தரின் வரலாறு.

* * *

ஆகஸ்ட் பதிநாலாம் தேதி.

குருநாதரைப் பரிபூரணமாக நரேந்திரர் நம்பிவிடவேண்டிய சுபதினம் அது.

அதற்காகவே போலும், நரேந்திரருடைய உள்ளத்தில் மீண்டும் பழைய சங்கை லேசாகத் தலைதூக்கியது.

'பகவான் உண்மையாகவே மனிதனாக அவதரிக்கிறானா? அப்படிப்பட்ட அவதாரம்தானா ஸ்ரீகுருமஹராஜ்? மரணாவஸ்தைப்படும் இந்நிலையில் அவர் அப்படிச் சொல்லிவிட்டால் போதும். இத்தனை நோக்காட்டைத் தாங்கும்போது, 'நான் ஆண்டவனின் அவதாரம்' என்று உறுதியாகச் சொல்லிவிட்டால் போதும். அதனை அப்படியே ஒப்புக்கொண்டுவிட வேண்டியது தான்' என்று நரேந்திரர் எண்ணலானார்.

குருவும் சிஷ்யரும் தங்களுக்குள் செய்துகொண்ட கடைசிச் சோதனை இது.

நரேந்திரர் அவ்வாறு எண்ணிய உடனேயே அது குருவுக்குத் தெரிந்து விட்டது. 'டெலிபதி' என்ற எண்ணத் தொடர்புக்கும் மேல் ஏதோ ஒன்றல்லவா அவர்களை இணைத்து வைத்திருந்தது?

நரேந்திரர் எண்ணிய உடனேயே அது பரமஹம்ஸருக்குத் தெரிந்து விட்டது என்று சொல்வதுகூடத் தவறாக இருக்கலாம். நரேந்திரர் எண்ணும் முன்பே அது அவருக்குத் தெரிந்திருக்கலாம். ஏனெனில் அந்த சம்சய எண்ணத்தை நரேந்திரரிடம் தோற்றுவித்தவரே அவர்தானோ என்னவோ?

நரேந்திரரிடம் ஐயம் எழுந்ததுதான் தாமதம், குருநாதர் அவர் புறமாகத் தமது திருமுகத்தைத் திருப்பினார்.

''என் நரேன்! இன்னுமா உனக்கு நிச்சயப்படவில்லை?'' என்றவர் தமது சக்தியை எல்லாம் திரட்டிக்கொண்டு உறுதியான குரலில் தெளிவாகக் கூறினார்:

Koviloor Digital Library

"எவன் ராமனுகவும் கிருஷ்ணனுகவும் இருந்தானே அவனே ராமகிருஷ்ணனுக இந்த உடம்பில் இருக்கிருன்—
உன்னுடைய வேதாந்தப் பொருளில் அல்ல''.

வேதாந்தத்தின்படி யாவருமே, யாதுமே பிரம்மமாகும். எனவே அவதாரங்கள் என்பதற்கு அங்கு அர்த்தமேயில்லே. மாயைக்கு உட்பட்ட விவகார உலகிலுள்ளவர்களே உய்விப்பதற்காகப் பிரம்மமே மாயையுடன் கூடி உலகில் உற்பவிப்பதைத் தான் அவதாரம் என்கிருேம். 'உன்னுடைய' வேதாந்தம் என்று சிறிதே ஏளனம் தொனிக்கப் பரமஹம்ஸர் கூறியது, வெறும் வேதாந்தத்தில் மட்டும் நம்பிக்கை கொண்டு பரம் பொருள் நிர்குணமானது என்று வாதிப்பவர்கள் அதன் கருணையைப் புரிந்துகொண்டு மக்களுக்காக அது அவதரிப்பதை உணர வேண்டும் என்பதனுல்தான்.

சந்தேகித்தோமே என்று வேதனேயும் வெட்கமும் அடைந்த நரேந்திரர் அதே சமயத்தில் சந்தேக நிவிருத்தியின் சந்தோஷத்தையும் அடைந்து நிம்மதி பெற்ருர்.

* * *

அவதார தத்துவத்தை நரேந்திரர் புரிந்து கொண்டதுபற்றி சுவாமி நிகிலானந்தர் கூறும் அழகு வார்த்தைகளே இங்கு குறிப்பிடலாம்:

''தெய்விக மர்மங்களில் மிகப்பெரிய மர்மத்தை நரேந்திரர் கண்டு கொண்டார். உலகைக் காப்பதற்காக, அதனைப் படைத்த தந்தையே பிள்ளேயாக வருவதைக் கண்டார். மனிதனைக் கடவுளாக்குவதற்காகக் கடவுள் மனிதனுகிருர் என்பதை அவர் நம்பலானுர். இவ்வாறு ஸ்ரீராமகிருஷ்ணரை அவர் ஒரு புத்தொளியில் கண்டார்.''

அந்த நாளும் மறு நாளும் தங்கள் இயலாமையை ஓயாது உணர்ந்து துயரச் சுழலில் சிக்குண்டனர் சிஷ்யர்கள். கண் முன்னே சிறிது சிறிதாக குருநாதர் மாண்டு கொண்டிருப்பதைத் தடுக்க மாட்டாமல் பார்த்துப் பார்த்து அவர்கள் பொருமிக் கொண்டிருந்தார்கள். வைத்தியர் வந்தார். அவர் மட்டும் என்ன செய்ய முடியும்? 'நோயாளியை குணப்படுத்தி விடுகிறேன் என்று வைத்தியர் கூறும்போது பகவான் சிரித்துக் கொள்கிருன்' என்று பரமஹம்ஸர் கூறியதைத் தெரிந்திருந்ததைப் போல வைத்தியர், 'இனி மருந்துகளால் பயனில்லே' என்று கூறிவிட்டார்.

ஆக்ஸ்ட் பதினேந்து!

Koviloor Digital Library

அன்று குருநாதரின் உபாதை சொல்லிமுடியாது. அந்தப் புனிதர் பட்ட பாட்டினைப் பன்னி பன்னி எழுதக்கூட மனம் ஓடவில்லை. ஏதோ அரக்கத்தனமான செயலாகத்தான் அது தோன்றுகிறது. மாலை வந்தது. மூச்சு முட்டியது குருவுக்கு. சடேரென உபாதையிலிருந்து உபாதியற்ற சமாதி நிலைக்கு நழுவி னுர் குருநாதர். இது வழக்கம் போன்ற சமாதியாகச் சிடர் களுக்குத் தோன்றவில்லை. அவர்கள் கண்ணீர் சிந்தலானுர்கள்.

நள்ளிரவு கழிந்த உடன் — அதாவது மேல்நாட்டு முறைப் படி ஆகஸ்ட் பதினுரும் தேதி பிறந்த உடன் — பரமஹம்ஸர் கண் திறந்தார். சாமானிய மானுடர்கள் போலவே பேசினுர். ''பசிக்கிறது'' என்ருர். சிறிதளவு கஞ்சி உட்கொண்டார். ஐந்து ஆறு தலையணைகளைச் சரியாதபடி சீடு தாங்கியிருக்க, அவற் றில் சாய்ந்தபடி நரேந்திரரிடம் மிகமிக மெல்லிய குரலில் பேசிக் கொண்டேயிருந்தார். இறுதி விநாடிவரை ஏதேதோ சொல்லிக் கொண்டே யிருந்தார். அவர் என்னென்ன சொன்னுர் என்பதை நாம் எப்படி அறியமுடியும்?

பரம்பொருளில் தாம் நிரந்தரமாகக் கரைந்து கொண்டிருப் பதைப் பற்றிச் சொன்னுரா? அல்லது அது நிரந்தரமல்ல என் றும் மீண்டும் எப்போதெல்லாம் தேவைப்படுகிறதோ அப்போ தெல்லாம் தாம் தோன்றப்போவதாகச் சொன்னுரா? நரேந் திரரைப் பொறுத்தவரை இந்தத் தோற்றத்தையும் நீக்கத்தையும் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்றும் அவருக்குப் புறத்தே இருந்த தாம் இனி அகத்தே உறையப் போவதாகவும் சொன் னுரா?

நரேந்திரருடன் பேசுவதை முடித்துக் கொண்டார் பரம ஹம்ஸர்.

''காளி, காளி, காளி'' என்று மும்முறை கூறினுர். பலகோடி முறைகள் அந்தத் திருநாமத்தை ஜபித்திருந்த பக்தி உணர்வின் இறுக்கத்துடன் அமிருதமான தேவியைப்பற்றி அமிருத நினைவோடு அமிருத வார்த்தையைக் கூறினுர் பரமஹம்ஸர். மிருத்யுவுக்கு அப்பாற்பட்ட அமிருதம் இதோ அவருக்கு மிக, மிக, மிகவும் நெருங்கி வந்துவிட்டது.

கால ரூபிணியான காளி காலம் கடந்த பரம நிலையில் தன் அருமைப் பிள்ளையை அணைத்துக் கொண்டாள்.

அந்த அணைப்பில் ஸ்ரீராமகிருஷ்ணருடைய திருமேனியில் 'குறு குறு' என்று ஒரு மயிர்க்கூச்சு ஓடியது. அவரது கருணைக் கண்கள் திருநாசியின் முனையை நோக்குவதுபோல யோகியின் பார்வையாகக் குத்திட்டன. இன்சொல் பேசிப் பேசி எழிலேறி

Koviloor Digital Library

யிருந்த அதரங்களில் மந்தஹாஸம் நெளிந்து, தீபத்தை ஏற்றி வைத்தாற்போல முக மண்டல முழுவதிலும் ஓர் ஒளியைப் பரப்பியது.

ஒரு மணி இரண்டு நிமிஷம்.

இரண்டாக இருந்த அன்னையும் மகனும் ஒன்றுனுர்கள்.

* * *

மறு நாள் காலை. ஸ்ரீராமகிருஷ்ணர் என்ற அன்புச் சின்னம் வாழ்ந்து வந்த உடலம் சந்தனப்பூச்சாலும், மலர்களாலும் அலங் கரிக்கப்பட்டது; காவி உடை அணிவிக்கப்பட்டது.

ஊர்வலம் தொடங்கிற்று. பக்திப் பாடல்களில் ஊறிக் கொண்டிருந்தனர் அந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள். அதோ கங்கா நதி. அதற்கும் இப்பாலே மயானம்.

சிஷ்யர்கள் எல்லாரும் அதற்குள் சிறிது போதேனும் குரு நாதரின் உடலத்தைச் சுமந்து ஏதோ ஒரு வித ஆறுதலைப் பெற்றனர்.

சுமார் ஐம்பதாண்டுகள் யோகத்துக்கும், தியாகத்துக்கும், அருளுக்கும், அறிவுக்கும், பக்திக்கும், முக்திக்கும், எளிமைக்கும், எழிலுக்கும் உறைவிடமாகயிருந்த உடலை இரண்டே மணிகளில் இல்லாமல் செய்து விட்டான் அக்கினி தேவன்.

பஸ்மத்தையெல்லாம் திரட்டி ஒரு பாண்டத்தில் நிரப்பினர் சிஷ்யர்கள். பஸ்மத்தில் அவருடைய உடலின் அடையாளம் இருப்பதுபோல, தங்களின் உள்ளத்திலேயே அவருடைய உள்ளத் தின் அடையாளம் பதிந்துவிட்டது என்ற அமைதியுடன் திரும்பி னுர்கள்.

'ஜெய், ஸ்ரீராமகிருஷ்ணு' என்று கோஷித்தபடி, அன்புள்ளங்களின் நிலைக்களனுக இருந்த காஸிப்பூர் தோட்ட மாளிகையில் பிரவேசித்தனர்.

'ஆகா, இந்த இல்லத்தைக் கோவிலாக்கிய தெய்வம் எங்கே?' என்று அவர்கள் மீண்டும் நெகிழ்ந்தார்கள்.

''அவர் எங்கும் போய்விடவில்லை'' என்ருள் தூய அன்னை சாரதை. ''நான் விதவையாகி விட்டதாக எண்ணிக் கங்கணங் களைக் களையலானேன். அவர் எதிரே தோன்றினுர். 'நான் போய்விடவில்லை' என்று கூறினுர்'' என்ருள் அமைதியுடன்.

Koviloor Digital Library

அத்தியாயம் 10

மடாலயத்தின் வித்து

காஸிப்பூர் தோட்ட மாளிகைக்குக் கொடுத்திருந்த குடிக் கூலி முற்றிலும் கழிந்துபோக இன்னும் இரண்டு வாரங்கள் இருந்தன. அதுவரையில் அங்கேயேதான் ஸ்ரீராமகிருஷ்ணரின் சிஷ்யர்கள் தங்கி வந்தனர்.

என்ன விசித்திரமான மாறுதல்! நேற்று மட்டும் இருந்த அவதார புருஷர் இன்றில்லை! நாதனிழந்த வீடு போல, நாத மிழந்த வீணை போல உணர்ந்தனர் சிஷ்யர்கள். அவர்களுக்கு நாதனாக, ஆத்மநாதமாக விளங்க முன்வந்தார் நரேந்திரர். நேற்று மட்டும் தலைமை தாங்கத் தயங்கினார். இப்போது நிச்சய மாகத் தலைமை தாங்க வேண்டிய அவசியம் வந்துவிட்டது. பரமஹம்ஸர் வாழ்ந்ததெல்லாம் கனவாக மறைந்து விடக்கூடாது. அந்த வாழ்வின் உண்மைகளை உலகில் நிரந்தரமாக வாழ்விக்க வேண்டும். இதற்காக சாதுக்களின் ஒரு சங்கம் வேண்டும். இதை ஸ்ரீராமகிருஷ்ணரின் சிஷ்யர்கள்தான் ஒன்றுகூடி உருவாக்க வேண்டும். குருமஹராஜே அப்படித்தான் ஆக்ஞாபித்திருந்தார். 'தம்மையடைந்த பிரம்மசாரிகள் மீண்டும் தத்தம் வீட்டுக்குத் திரும்பிவிடக்கூடாது; தாம் வாழ்ந்த இந்து சமய வாழ்வை அவர்கள் பாருக்கெல்லாம் பரப்ப வேண்டும்' என்பதுதான் குருநாதரின் திருஉள்ளக்கிடக்கை என்பதை நரேந்திரர் அறிந் திருந்தார். எனவே சிஷ்யர்கள் சிதறிப் போகாமலிருக்கப் பார்த் துக்கொள்வது தமது கடமை எனக் கொண்டார் அவர். ஸ்ரீபரம ஹம்ஸர் உவந்து அளித்ததும், மற்றச் சீடர்கள் உவந்து ஒப்புக் கொண்டதுமான தலைமையைத் தாமும் உவந்து ஏற்றார் நரேந் திரர். 'புவிமிசைத் தலைமை எய்து' சுவாமி விவேகானந்தராக நரேந்திரர் பரிணமித்ததற்கு இதுவே முதற்படியாகும்.

*　　*　　*

குருமஹராஜ் விதேஹ முக்தியடைந்த பின் சில தினங்களுக்கு காஸிப்பூர் தோட்ட மாளிகையில் அவரைப் பற்றிய பேச்சாகவே தான் இருந்தது. அந்தப் பேச்சுக்களிலிருந்து நரேந்திரர் அவரை எவ்வளவு ஆழமாகப் புரிந்து கொண்டிருக்கிறார் என்பது புரிந்தது. குருநாதரின் பாவனமான வாழ்க்கையையும், உபதேசங்களையும் மற்ற சிஷ்யர்கள் பிரத்தியக்ஷமாகக் கண்டதைவிடத் தெளிவாக விரித்துரைத்தார் நரேந்திரர். குருமஹராஜைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தவர்கள் அப்படிப் பேசினால் மட்டும் போதாது என்று

Koviloor Digital Library

உணரலாயினர். அவர் வகுத்த வாழ் முறையைத் தாங்கள் வாழ்ந்து காட்ட வேண்டுமெனத் திவிரமாக உணரலாயினர். இத்தனை காலமும் அவரொருவர் ரக்ஷிக்க இருந்தார்; குற்றம் களைந்து காக்க இருந்தார்; இனி எந்தவிதமான சிறுமைகளும் சாராமல் தாங்கள் வாழவேண்டும்; யோகமும், ஜபமும், தியான மும், பூஜையும், பஜனையும், சாஸ்திர அப்பியாசமுமாகவே தங்கள் வாழ்க்கையை ஸாபல்யமாக்கிக் கொள்ளவேண்டும்; அதன் மூலம் மற்றவர்களின் வாழ்க்கையையும் பொருள் உள்ளதாக்கப் பாடுபட வேண்டும் — என்ற சங்கல்பத்தைப் பூண்டனர் அந்த இளைஞர்கள். அவர்களுடைய சங்கல்பம் திடமாவதற்கு உறு துணையாக இருந்தவர் நரேந்திரரே. பெரு நிதிய மொன்றுக்குத் தம்மைக் காவலராக நியமித்து அதனைச் செம்மையுற விநியோகிக் கும் மாபெரும் பொறுப்பைத் தம்மிடம் குருநாதர் ஒப்பித்துச் சென்றிருப்பதாக உள்ளிதயத்திலிருந்து உணர்ந்து, அந்த உணர்ச் சியைச் செயலாக்க முனைந்தார் நரேந்திரர்.

* * *

ஸ்ரீராமகிருஷ்ணர் தேக வியோகமடைந்து ஒரு வாரமிருக் கும். ஓர் இரவில் நரேந்திரர் தம் நண்பர் ஹரீஷ் என்பவரிடம் குருநாதரைப்பற்றிக் கசிந்து கொண்டே தோட்டத்தில் உலவி வந்தார். அங்குள்ள சிறு பொய்கை எதிரே அதே சிந்தனையாக நின்றார்.

தோட்ட வாசலிலிருந்து தங்களை நோக்கி யாரோ வருவது போலத் தோன்றவே அந்தப்புறம் தம் கண்களைச் செலுத்தினார் நரேந்திரர். அவருக்குப் புல்லரித்தது. 'இது கனவா நனவா? அதோ, தங்களை நோக்கி வரும் அந்த ஒளி உருவம் — அது குருமஹராஜ்தானே? இது உண்மையா, அல்லது தம்முடைய மனத்தோற்றமா?' · ஹரீஷிடம் இந்தக் காட்சிபற்றிக் கூறத் தயங்கியபடி நின்றார் நரேந்திரர்.

அப்போது ஹரீஷ் நடுங்கிய குரலில், "நரேன் பாபு, அதோ பாருங்கள். அது......அது......" என்று வாசல்புறத்தைச் சுட் டிக் காட்டினார்.

"யார் அங்கே?" என்று நரேந்திரர் உரக்கக் கேட்டவுடன் வீட்டிலிருந்த மற்ற சிஷ்யர்களெல்லாம் அங்கு வந்து விட்டனர்.

அப்போது நரேந்திரருக்குப் பத்தே கஜத்திலிருந்த மல்லிகைப் புதருக்குள் வந்த குருவின் திரு உரு மறைந்தே விட்டது. உள்ளத் தின் வெண்மையால் மல்லிகையாக இருந்த அவர் அந்த மல்லிகை யிலேயே மறைந்து விட்டாரா?

Koviloor Digital Library

சிஷ்யர்கள் தோட்ட முழுவதிலும் யாரோ அயலாரைத் தேடினர்கள். வெளியே தேடிக் கண்டுபிடிக்கக் கூடியவரா அவர்? 'தேவனை என்னுள்ளே தேடிக் கண்டுகொண்டேன்' என்பதல்லவா ஆப்தர் மொழி? 'உள்ளே யிருப்பவனைத் தாம் மறந்து விடுவோமோ என்றெண்ணித்தான் வெளியேயும் தோன்றி அவர் தரிசனம் தந்தாரோ?' என்று வியந்து நைந்தார் நரேந்திரர். 'தங்களை ஒருபோதும் மறக்கமாட்டேன், சுவாமி! தங்களின் ஆக்ஞையை ஒருபோதும் மறக்கமாட்டேன் சுவாமி!' என்று தமக்குள் கூறிக் கொண்டு உருகினர்.

* * *

நோயாளியாகக் குருமஹராஜ் எங்கு படுத்திருந்தாரோ அதே அறையில் அவரது அஸ்திகளையிட்ட தாமிரப் பாண்டமொன்றை வைத்துச் சிடர்கள் வழிபட்டு வந்தனர். அவற்றில் ஒரு பகுதியைக் குருநாதரின் கிருஹஸ்த சிஷ்யர்கள் பெற்று கங்குரகச்சி என்ற இடத்தில் பூமிக்கு இட்டுப் பின்னர் அங்கோர் ஆலயமும் எழுப்பினர். ராமசந்திர தத்தர்தான் இவர்களுக்கு முன்னணியில் இருந்தார். அஸ்திகளின் சில பகுதிகள் ஹரித்துவாரம் முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு அனுப்பப்பட்டுப் புனித கங்கையில் கரைக்கப்பட்டன. எஞ்சிய அஸ்தியைத் தங்கள் ஆஸ்தியாகக் கருதிப் பூஜித்து வந்தனர் ஸ்ரீராமகிருஷ்ணரின் அருமையான யௌவன சிஷ்யர்கள்.

பரமஹம்ஸர் மறைந்த சில நாட்களுக்குப்பின் அன்னை சாரதை பிருந்தாவனத்துக்கு யாத்திரை புறப்பட்டாள். உலகம் காணுத முறையில் தன் ஆத்மாவுக்குப் பதியாக இருந்த அற்புத மனிதரை இழந்த அவள் அவரது அஸ்தி கும்பத்தை தன்னுடன் எடுத்துச்சென்று பூஜித்து வந்தாள். பிறகு கல்கத்தாவை ஒட்டியுள்ள வர நகரத்தில் இளம் சந்நியாசிகளின் சங்கம் மாறியபோது அங்கு இந்தக் கும்பம் வைத்து வழிபடப் பட்டது. அதன்பின் நிலாம்பர் முகர்ஜியின் தோட்ட மாளிகைக்குச் சாதுக்கள் இடம் பெயர்ந்தபோது அஸ்தி கலசமும் இடம் மாறியது. வெகு காலம் கழித்து, பேலூரில் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் அற்புதமான பிரதான மடம் நிறுவப்பட்டபோது அங்கு சுவாமி விவேகானந்தராகிய நரேந்திரர் தமது குருநாதரின் திருமேனிச் சின்னத்தை நிரந்தரமாக ஸ்தாபித்தார். அப்போது அவருடைய விசாலமான நயனங்களிலிருந்து நீர் வழிந்தது. ''ஐயனை இங்கு வைத்து விட்டேன்; இங்கேயே அவர் நிரந்தரமாக வாழ்வார்'' என்று உள்ளமுருகிக் கூறினர் அவர்.

Koviloor Digital Library

இழுத்த இழுப்புக்கெல்லாம் இழுப்பட்டு, கூப்பிட்ட இடத்துக்கெல்லாம் அல்லவா அவர் வந்திருக்கிறுர்! காஸிப்பூரில் நோய் வாய்ப்பட்டிருக்கும்போது அவர் கூறிய வார்த்தைகள் விவேகானந்தரின் உள்ளத்தில் எதிரொலித்து அதனை நெகிழவைத்தது. ''நீ என்னை எங்கே இருக்கச் சொன்னுலும்சரி அங்கே நான் சந்தோஷமாக இருப்பேன்'' என்று கூறியிருந்த குருநாதர் தம்மிடம் கொண்டிருந்த அன்பையும் நம்பிக்கையையும் எண்ணி விழி நீர் சோர்ந்தார் விவேகானந்தர்.

எங்கிருந்தோ எங்கோ வந்துவிட்டோமே! விவேகானந்தரிடமிருந்து நரேந்திரருக்குத் திரும்புவோம்! பேலூரிலிருந்து காஸிப்பூருக்குத் திரும்புவோம்!

* * *

குருதேவரின் பிரம்மசாரி சிஷ்யர்கள் வீட்டுக்குத் திரும்பக் கூடாது; சந்நியாச வாழ்க்கையை மேற்கொள்ளவேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டனர். ஸ்ரீராமகிருஷ்ணரே அவர்களுக்கு சந்நியாச தீக்ஷை அளித்திருந்தார். எனினும் துறவற வாழ்க்கையை அவர்கள் இன்னும் பூரணமாகப் பின்பற்றத் தொடங்கவில்லை. இப்போது தொடங்க முடிவுசெய்து கொண்டார்கள்.

தாரக், லாடு, மூத்த கோபால் ஆகிய மூவரும் இப்போதே வீட்டுத் தொடர்புகளை முற்றிலும் களைந்து விட்டனர். லாடு, யோகின் என்பவரையும் அழைத்துக்கொண்டு தூய அன்னையுடன் க்ஷேத்திராடனம் புறப்பட்டு விட்டார். தாரக்கும் சில தினங்களில் பிருந்தாவனத்துக்குக் கிளம்பினுர். நரேந்திரருக்கு மட்டும் சோதனைபோலக் குடும்பப் பிரச்னை தீரவேயில்லை. அவரது வீட்டுக்கு பாத்தியதை கோரிப் பங்காளி ஒருவர் வியாஜ்ஜியம் தொடர்ந்திருந்ததாக முன்பு கண்டோமல்லவா? அது இன்னும் தீர்ந்தபாடில்லை. நரேந்திரர் அடிக்கடி நீதிமன்ற விசாரணைக்குச் சென்றுவர வேண்டியதாயிற்று. சட்டப்படிப்பும் பாதியில் நின்றது. எல்லாருக்கும் வழிகாட்டியாக இருக்கவேண்டிய நரேந்திரர் பூரண சந்நியாச வாழ்க்கையை அநுசரிக்க முடியவில்லை. 'வீட்டுக்கு ஏற்பாடு செய்; அப்புறம் அநுபவம் எல்லாம் பெறுவாய்' என்று குருநாதர் கூறியிருந்ததை நினைத்தே மன ஆறுதல் பெற்று வந்தார் அவர்.

தம் கதை எப்படியானுலும் மற்றப் பிள்ளைகளை சந்நியாச தர்மத்தில் நிலை நிறுத்த உறுதிபூண்டார் அவர். இந்த உறுதியைத் தகர்க்கக்கூடிய பல சோதனைகள் நேரிட்டன. சில இளைஞர்களின் உறவினர்கள் காஸிபூருக்கு வந்து அவர்களை மீட்க

Koviloor Digital Library

முயன்றனர். அவர்களிடம் வாதிடுவது நரேந்திரருக்குப் பெருத்த சிரமமாகிவிட்டது. அவர்களுடைய உள்ளமுருக்கும் வேண்டு கோளையும், அன்பான கண்ணீரையும், இவை பலனளிக்காத போது அவர்கள் வைத வசவுகளையும், அச்சுறுத்தியதையும் தாங்கு வது நரேந்திரருக்குப் பெரும் பாடாகிவிட்டது. தங்களுடைய குழந்தைகளைத் தடுத்து நிறுத்துவது நரேந்திரர்தான் எனக்கருதி அவரைத்தான் அவர்கள் ஏசினார்கள். குருநாதரின் கட்டளைக் காக இவ்வளவையும் பொறுத்துக் கொண்டார் நரேந்திரர். புலனின்பம் என்ற காகம் கொத்தாத தூய காய்களாக உள்ள அந்த இளைஞர்கள் அதே பரிசுத்தத்துடன் கனியவேண்டும் என்ற அன்பில் பிறந்ததே யல்லவா குருநாதரின் கட்டளை?

உறவினர்களின் பந்தத்துக்கும் 'மசியாத' அந்தத் தூய இளைஞர்கள் தமது திடத்தை இழந்துவிடுவார்களோ என்று அஞ்சச் செய்தது இன்னொரு பிரச்னை. அவர்களை வைத்துப் பராமரிக்கப் பொருள் வேண்டாமா? பொருள் எங்கே இருக்கிறது? உண்ண உணவும், உடுக்க உடையுமின்றிப் பரதவிக்கும் வாழ்க்கையை அவர்கள் எவ்வளவு காலம் சகித்துக் கொள்வார்கள்? இந்தக் கஷ்டம் காரணமாகவே அவர்கள் தத்தம் இல்லத்துக்குத் திரும்பி விடுவாரோ என்றும் நரேந்திரர் அஞ்சினார். அவர் அச்சத்தை மெய்ப்பிப்பதுபோல ஒரு சிலர் வீட்டுக்குத் திரும்பியும் விட்டார் கள்; பரீக்ஷைக்குப் படிக்கத் தொடங்கிவிட்டார்கள். அவர்களை எல்லாம் மறுபடியும் பிடித்திழுத்து வர நரேந்திரரின் மன உறுதி யாலும், குருபக்தியாலும்தான் முடிந்தது. அவர்களுடைய லௌகிக முன்னேற்றத்தைத் தடுத்ததால் நரேந்திரர் அடைந்த சொந்த லாபம் என்ன? மனித குலத்துக்குப் பணிபுரியும் பர தத்துவ படையொன்றை நிறுவவேண்டுமென்ற தியாக உணர்ச்சி ஒன்றே நரேந்திரர் உற்ற எதிர்ப்புகளுக்கெல்லாம் காரணமாக இருந்தது.

* * *

காஸிப்பூர் வாசம் முடிந்ததும் 'இனி எங்கே செல்வது?' என்ற கேள்வி எழுந்தது. 'வீட்டுக்குத் திரும்பக் கூடாது' என்று விதித்தபின் அந்த இளைஞர்களை ஒவ்வொருவரும் தம் வழிப்படி சஞ்சரிக்கும் சந்நியாசியாக விட்டுவிட நரேந்திரருக்கு மனமில்லை. ஒரு சங்கமாக இருந்து, பரஸ்பரம் ஒருவரை மற்றவர் கண் காணித்து, அயர்வின்றி ஆத்ம சாதனைகள் புரிந்து, மனதையும் புலன்களையும் நிச்சயமாகக் கட்டுப்படுத்திய பின்புதான் அவர்கள் தனித்தனியாகப் பிரிந்தாலும் உத்தமத் துறவிகளாக வாழ்ந்து

Koviloor Digital Library

உயிர்க் குலத்துக்கு உழைக்க முடியும் என்று அவர் நம்பினுர். அப்படியானுல் அவர்களைப் பரிபாலிப்பது எப்படி? வெறும் கை எப்படி முழம் போடும்?

பொருளுதவிக்காக ஸ்ரீராமகிருஷ்ணரின் கிருஹஸ்த சிஷ்யர் களை நாடினுர் நரேந்திரர். அவர்களில் சிலர், ''இதெல்லாம் நடக்கிற காரியமா? அந்தக் குழந்தைகளின் எதிர்காலத்தைக் குலேக்காதே. உன் எதிர்காலத்தையும் குலேத்துக் கொள்ளாதே. பேசாமல் அவரவர் வீட்டுக்குப் போய்ச் சேருங்கள். இதுதான் உங்களுக்கும் சுகம், உங்கள் உறவினர்களுக்கும் சுகம்'' என்றனர். பொருளுதவி செய்ய விருப்பமில்லாததால் அவர்கள் இப்படிக் கூறியதாக எண்ணலாகாது. உண்மையாகவே அந்தச் சிறுவர் களிடம் அன்பு கொண்டுதான் அவர்கள் அவ்வாறு கூறினுர்கள். இல்லறத்திலிருந்தவாறே தாங்கள் குருமஹராஜின் உபதேசங் களைப் பின்பற்றுவதுபோல அவர்களும் செய்யலாமே என்றெண் ணியே இவ்வாறு சொன்னுர்கள்.

ஆனுல் அதை நரேந்திரரால் எப்படி ஏற்கமுடியும்? இல்லற தர்மத்தை ஏற்கனவே ஏற்றுக்கொண்டவர்களுக்கிரங்கி ஒரு மார்க் கத்தை ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியிருப்பினும் துறவறத்தையே பெரி தாகக் கூறியவரன்ரூே அவர்? தனக்கே பூரணமாக உழைத்து ஆத்மாநுபவம் பெறுவதென்ருலும் சரி, உலகுக்கே பூரணமாக உழைத்து ஞானதிபத்தை வீடு வீடாக ஏந்திச் செல்வதென்ருலும் சரி, அது இல்லறத்தானுல் எப்படி இயலும்? இல்லறத்தில் பிரம்மசரியம் காப்பதுதான் முடிகிற காரியமா? எல்லாருமே பரமஹம்ஸராகவும், சாரதையாகவும் இருக்க முடியுமா, என்ன?

கிருஹஸ்த சிஷ்யர்களின் உரையை நரேந்திரர் காதில் போட்டுக்கொள்ளவேயில்லே. எனினும் மேலே என்ன செய்வது என்று புரியாமல் மயங்கினுர். இந்தச் சமயத்தில்தான் குரு நாதரே ஒரு வழியைக் காட்டி அருளினுர்.

சுரேந்திரநாத மித்ரா என்பவர் ஸ்ரீராமகிருஷ்ணரின் உத்தம மான கிருஹஸ்த சிஷ்யர்களில் ஒருவர். 'இல்லறத்தானின் கைங்கரியத்தால்தான் யதிகளும் உயிர்வாழ முடிகிறது' என்று பாரதம் போற்றுவதுபோல ஈட்டிய பொருளைத் தர்மத்துக்கு ஈந்து வாழ்ந்தவர் சுரேந்திரநாத மித்திரர். இவரது வீட்டுக்கு 1881-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பரமஹம்ஸர் எழுந்தருளிய போதுதான் நரேந்திரர் முதன் முதலில் குருமஹராஜைக் கண்டது. அப்போது நரேந்திரர் பாடக் கேட்டு மகிழ்ந்த பரமஹம்ஸர் அவரைத் தக்ஷிணேசுவரம் வருமாறு அழைத்தார். பிறகு நரேந் திரர் தக்ஷிணேசுவரம் சென்றதையும், கூட்டுப் புழுவாக இருந்

Koviloor Digital Library

தவர் வண்ணத்துப் பூச்சியாக மாறிய விந்தை வரலாற்றையும் தான் படித்தோமே !

சுரேந்திரநாதர்தான் பரமஹம்ஸரின் உடல்நிலே குன்றிய போதும் அதிகச் செலவை ஏற்றவர். இப்போது குருநாதர் மறைந்த பின்பு அவருக்கு ஒரு நாள் ஓர் அற்புத தரிசனம் கிடைத்தது. தோன்ருத்துணையாக இருந்த பரமஹம்ஸர் அவர் கண் முன் தோன்றி ''அந்தக் குழந்தைகளுக்கு உதவி செய்க!'' என்று உத்தரவிட்டு மறைந்தார்.

உத்தரவை சிரஸால் வகித்த சுரேந்திரநாத மித்திரர் உடனே காஸிப்பூருக்கு விரைந்தார்.

''தம்பிமார்களே, எங்கே போவோம் என்று விசாரப்படாதீர்கள். நானே சிறிய வாடகையில் ஓர் இடம் பார்த்து உங்களே அமர்த்தி விடுகிறேன். உங்களுக்கு ஏதோ ஒரு பிடி ஆகாரத்துக்கு நானே வழி செய்கிறேன். குருமஹராஜ் போனுல் என்ன? நீங்கள் இருக்கிறீர்கள் அல்லவா? அவர் இருந்தபோது அவர் பொருட்டு நான் என்ன செலவிட்டேனே அதையே இனி உங்களுக்கும் அளிக்கிறேன். நீங்கள் அத்தியாவசியத் தேவைகளேப் பூர்த்தி செய்து கொண்டு எளிய வாழ்வு வாழ என்னுலான உதவியை அளிக்கிறேன்'' என்று அந்த இளம் சிடர்களிடம் கூறினுர்.

'சுரேன் பாபு' வின் ஆதரவு நரேந்திரரின் கண்களேக் குளமாக்கின.

* * *

தக்ஷிணேசுவரத்துக்கும் கல்கத்தாவுக்கும் இடையே இருந்த வரநகரத்தில் ஒரு வீடு பேசி அமர்த்தினுர் நரேந்திரர். அதற்கு முன்பு அவர் அலேந்த அலேச்சல் அவருக்குத்தான் தெரியும்.

வரநகர வீட்டைப்பற்றிச் சுருக்கமாக சொல்வதென்ருல் அது மர்மக் கதைகளில் வரும் பேயுலாவும் பங்களாவாக இருந்தது என்று கூறலாம். விளக்கமாகக் கூறுவதென்ருல், அது ஜன சஞ்சாரமற்ற ஒரு பகுதியில் இருந்தது; குருநாதரைத் தகனம் செய்த மயானத்துக்கு அருகேயே இருந்தது; வாஸ்தவமாகவே அங்கு பேயுலாவுவதாகக்கூட வதந்தியிருந்தது — அதாவது பேயுலாவுவது வாஸ்தவமோ இல்லேயோ, அப்படி வதந்தியிருந்தது வாஸ்தவம் — என்றெல்லாம் கூறலாம். மிகவும் பழைய, சிலமான கட்டிடம் அது. வீடு முழுவதும் காலி என்று சொல்லப்பட்டபோதிலும் அதன் கீழ்த்தளம் முழுவதும் ஏராளமான பல்லிகளும், எலி பெருச்சாளி இத்தியாதி ஜீவராசிகளும், அவற்றின்

Koviloor Digital Library

எண்ணிக்கையைக் குறைத்து பூபாரம் தீர்த்துவரும் சாரை சர்ப்பங்களும் வாழ்ந்து வந்தன. வீட்டின் 'கேட்'டிலிருந்து — அதாவது பூர்வத்தில் அங்கு 'கேட்' இருந்ததை நினைவூட்டும் இடிபாடுகளிலிருந்து — தோட்டத்தில் கொசுக்களின் உற்பத்தி ஸ்தானமாகத் திகழ்ந்த குட்டைவரையிலும், புதர்களும் மரம் செடி கொடிகளும் மண்டிக் கிடந்த அந்தச் சூழலே மனித வாசத்துக்குச் சற்றும் தகாததாக இருந்தது. ஆனால் பத்து ரூபாய் வாடகையில் இவ்வளவு பெரிய இடம் வேறெங்கே கிடைக்கும்? ஜன சஞ்சாரமற்றிருப்பதும் நல்லதே, ஏகாந்தமாக சாதனை புரியலாம்; மயானத்துக்குச் சமீபத்திலிருப்பதும் நல்லதே, அக்கினியைப் புனிதம் செய்த குருதேவரை அனவரதமும் நினைவு கொள்ளலாம்; சிரமங்கள் இருப்பதும் நல்லதே, அவற்றைச் சகிப்பதுதான் துறவுக்குப் பயிற்சி என்ற எண்ணங்களுடன் வரநகர வீட்டுக்குக் குடி புகுந்தனர் இளைஞர்கள்.

கீழ்ப்பாகம் முழுவதையும் மற்ற உயிரினங்களுக்கே விட்டுவிட்டு, மாடியில் தினந்தோறும் சரிந்து விழுந்து கொண்டிருக்கும் வராந்தாவிலும், அந்த வராந்தாவுக்கு எல்லாவகையிலும் ஏற்ற அறையிலும் வசிக்கத் தொடங்கினார்கள். அவர்களுடைய ஜபமும் தியானமும் நடைபெற்றது இந்த அறையில்தான். அதற்குக் கிழக்கிடைப்புறமுள்ள அறை பூஜா கிருஹமாயிற்று. தெய்வங்கள், மகா புருஷர்கள் இவர்களின் படங்கள் அந்த அறையை அலங்கரித்து, எந்த இன்னலுக்குமிடையே இன்பத்தைத் தருபவர்கள் அவர்கள்தான் என்பதை நிதரிசனமாக்கி வந்தன.

பிருந்தாவனத்திலிருந்து திரும்பியிருந்த தாரக்கும், மூத்த கோபாலுமே அங்கு முதன் முதலில் தைரியமாகக் குடியேறிய இருவராவர். இந்தச் சமயத்தில்தான் மற்ற சிஷ்யர்களில் பலர் தத்தம் வீட்டுக்குத் திரும்பியிருந்தனர். சிலர் யாத்திரை சென்றிருந்தனர். ராகால் மாங்கிருக்குச் சென்றிருந்தார். காளி, லாடு, யோகின் ஆகியோர் தூய அன்னையுடன் பிருந்தாவனத்திலிருந்தனர். நரேந்திரரும் இச்சமயத்தில் வழக்கு விஷயமாகக் கல்கத்தாவிலேயே அதிகம் தங்கியிருக்க நேரிட்டது. எனினும் சிஷ்யர்களை வரநகரத்தில் சேர்த்துத் தாமும் அங்கு ஒழிந்த போதெல்லாம் வந்து அவர்களை அப்பியாசங்களில் ஈடுபடுத்தி வந்தார்.

* * *

வரநகரத்தில் ஸ்ரீராமகிருஷ்ண சங்கம், அவ்வாறு பெயரிடப்படாமலே தோன்றிவிட்டது. இதுவரை ஸ்ரீராமகிருஷ்ணரின் சிஷ்யர்கள் என்று குறிப்பிட்டவர்கள் இனி சாதுக்கள் என்றும்

Koviloor Digital Library

சந்நியாசிகள் என்றுமே குறிப்பிடவேண்டிய வாழ்க்கையைத் தொடர்ந்தார்கள். வீட்டையும், வாசலையும், சுற்றத்தினரையும் உறவினரையும், படிப்பையும் பதவியையும் நீத்து அந்த வாலிபர் கள் ஸ்ரீராமகிருஷ்ணரின் அன்புப் பணியில் இணைந்தனர். அந்த அன்புப் பணியில் தாமும் வளர்ந்து அவர்களையும் வளர்த்தார் நரேந்திரர்.

குருமஹராஜே மீண்டும் பேசுகிறாரோ என அவர்கள் வியப் புறும் வண்ணம் அவரது ஆத்மீக உணர்வுகளை அழகுற விரித் துரைத்துச் சொல்வார் நரேந்திரர். நரேந்திரர் தம்மை நிச்சய மாக நல்வழிப்படுத்துவார் என்ற நன்னம்பிக்கையுடன் அவரொத்த வயதினரான அந்த மற்ற இளைஞர்கள் அவர் சொற்படியே நடந்தனர். இந்த ஒற்றுமைதான் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் மூலதனம். மகா புருஷர் பலர் மறைந்த பின் அவரது சீடர்கள் பிரிந்து நின்று பேதகமுற்றதுண்டு. ஆனால் இவர்களோ பரம ஹம்ஸர் மறைவுக்குப்பின்தான் முன்னைவிட நெருக்கமுற்றனர். அவர்கள் நரேந்திரரை நம்பியதற்குக் காரணம் நரேந்திரரின் தன்னம்பிக்கை என்றே கூறலாம். தன்னம்பிக்கை என்று கூறு வதைவிடக் குருநாதர் தம்மிடம் வைத்த நம்பிக்கையில் நரேந் திரர் கொண்டிருந்த நம்பிக்கை என்று அதைச் சொல்வது பொருத்தமாக இருக்கலாம். இதுகாரணமாகத்தான் தம்மை அவர்களில் யாரேனும் எப்போவதாவது மீறினால் அவர்களை அடக்கி ஆண்டார் நரேந்திரர். ''குருமஹராஜ் உங்களையெல் லாம் என் பொறுப்பில்விட்டுச் சென்றிருக்கிறார், மறந்துவிட வேண்டாம்'' என்று கண்டிப்பார். அவர்கள் அவரை மீறுவது எந்த விஷயத்தில் என்று நினைக்கிறீர்கள்? இந்த ஏழைமை வாழ்வு வாழமாட்டோம் என்றோ, வீட்டுக்குத் திரும்பிச் செல் வோம் என்றோ அவர்கள் பிடிவாதம் செய்தனரா? இல்லை. இன்னும் அதிகமாக ஜபதப சாதனைகள் புரிவோம் என்று தங்கள் உடலை வருத்திக்கொள்ள முற்படுவார்கள். அவ்வளவுதான். அதற்கு நரேந்திரர் இடம்தர மாட்டார். இது அவர்களிடம் அவருக்கிருந்த அன்பின் மிகுதியைத்தானே காட்டுகிறது? நரேந் திரருக்கு அவர்கள் அடங்கி நடந்தார்கள் என்பது நரேந்திரரின் அன்புக்கு அவர்கள் அடங்கி நடந்தார்கள் என்பதேயாம். நரேந் திரரை மற்றவர்கள் நம்பியதைப் போலவே அவர்களையும் நரேந் திரர் நம்பியதால்தான் அவர்கள் விஷயத்தில் இவ்வளவு அக் கறையும் சிரத்தையும் கொண்டார். அந்த அக்கறையும் சிரத் தையுமே அந்த இருபத்திநாலு வயசு இளைஞரை ஒரு 'துறவுக் குடும்பத்' தின் தலைவராக்கி வைத்தது.

Koviloor Digital Library

பாபுராமின் அன்னை ஒரு விவேகமுள்ள ஜீவன். தன் மகன் பாபுராம் ஸ்ரீராமகிருஷ்ணரின் பணியிலேயே மூழ்கியிருப்பதில் பெருமை அடைந்தவள் அவள். 'மகனைப் பார்த்தவனை குரு மஹராஜின் சிஷ்யனாகக் காணவேண்டும்' என்று அவளுக்கு ஓர் ஆசை எழுந்தது. பாபுராமை மட்டுமின்றி அவருடன் வாழும் எல்லா இளம் துறவிகளையுமே தன்னுடன் அந்தப்பூரில் சில நாள் வந்திருக்கும்படி அவள் அழைத்திருந்தாள். பக்குவமான அவளுடைய அன்பு இளைஞர்களை மிகவும் கவர்ந்தது. நரேந்திரர் உள்பட அவர்கள் யாவரும் அந்தப்பூர் சென்றார்கள். அந்த அழகிய கிராமத்தில் நரேந்திரர் நண்பகல் கதிரவன்போல ஆன்மீகத்தில் ஒளிர்ந்தார். அவர்களுடைய சாதனை அங்கு தீவிரமாயிற்று. ''மாக்களாக இருப்பவர்களை மக்களாக்குவோம். இதுவே நமது ஒரு பெரும் சாதனையாகட்டும்! வெறும் படிப்பு சாதனையாகாது. தெய்வானுபவத்துக்காக முயலுவோம். தெய்வப் பணியாக மனிதப் பணி புரிவோம். ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்க்கை விளக்கம் தத்துவம் அதுதான்'' என்று அறைகூவினார் நரேந்திரர். தனி முத்துக்களாக இருக்கும் தங்களை யெல்லாம் ஒரு ஹாரமாக இணைக்கும் தங்கச் சரடு ஸ்ரீராமகிருஷ்ணர் என்பதை அவர்கள் யாவரும் உன்னி உணர்ந்தனர். ஒவ்வொருவரும் மற்றவர்களின் முன்பு சந்நியாச விரதத்தை மேற்கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் அவர்களிடையே கொழுந்துவிட்டெரிந்தது. எல்லாவற்றையும் துறந்தாலும் தங்களில் யாரும் மற்றவரைத் துறக்க முடியாமல் பரஸ்பரம் ஆத்மீக வழிகாட்டியாக தூய திருவாழ்வு வாழவேண்டும் என்று அவர்கள் துடித்தனர். சூக்ஷ்மமான இரு கைகள் இந்தக் குழந்தைகளின் வாழ்வுகளை தியாகமயமான சிலையாக நெய்து கொண்டிருந்தன.

ஒரு நாள் இரவு அவர்களின் உள்ளத்திலிருந்த உணர்ச்சிகள் கட்டுமீறிப் போயின. சாதுக்கள் வளர்ப்பது போன்ற துனி என்ற அக்கினியை அந்தப்பூர் தோட்டத்தில் வளர்த்தனர் அந்த இளம் சாதகர்கள். நரேன், பாபுராம், சரத், சசி, தாரக், காளி, நிரஞ்ஜன், கங்காதரர், சாரதா ஆகியோர் அதனைச் சுற்றி அமர்ந்தனர். அக்கினி கொழுந்துவிட்டெரிந்தாலும் சாந்தியின் தண்மையே அங்கு பரவியது. வானுலகம் தனது லக்ஷக்கணக்கான தாரகைக் கண்களால், பூவுலகிலேயே வானத்துக்கும் மேம்பட்ட பெருவாழ்வு வாழத் துடிக்கும் அந்த அற்புத யுவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தது. அவர்கள் எல்லாரும் தியானத்தில் ஆழ்ந்தனர். தங்களுக்கு உள்ளேயும் அக்கினிபோல ஏதோ ஒளிர்ந்துகொண்டிருப்பதைக் கண்டனர். அந்த அக்கினியில் இருந்த தண்மையை

Koviloor Digital Library

எண்ணி அதிசயத்தனர். அந்தர்யாமியான இறைவன் கனலாயும் புனலாயும் ஒரே சமயத்தில் திகழ்வதைக் கண்டனர். சம்ஹார ரூபிணியான கோரபவதாரிணி எப்படி அன்பு நிறைந்த அன்னையாகவும் இருக்கிருள் என்பதை உணர்ந்தனர். உலக இன்பம் என்று நாம் எண்ணுவது எப்படித் துன்பமாகவும் ஆகிறது என்பதை நினைந்தனர். அந்தத் துன்பத்தைப் போக்குவதற்காக ஒருவர் உறும் துன்பங்களில் எவ்வளவு இன்பம் இருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்த்தனர்.

மக்கள் துன்பம் துடைக்க வந்து, சிலுவையில் அறையுண்டு, அந்தத் துன்பத்தையும் இன்பமாகக் கண்ட ஏசுநாதரைப்பற்றி நரேந்திரர் ஆவேசமாகப் பேசலானுர். மாட்டுத் தொழுவத்தில் வாழ்ந்தவரில் தாழ்ந்தவராகப் பிறந்த அவர் எப்படிப் பண்பு மலையாக வளர்ந்தார், மலையின் மீது நின்று அன்புத் தத்துவத்தையும் மக்கள் யாவருடைய சோதரத்துவத்தையும் முழங்கினுர் என்பதைக் கூறினுர். தேவசாம்ராஜ்யம் மக்களின் ஆத்மாவிலேயே இருக்கிறது என்று கூறிய அவரை ராஜ்யத் தலைவன் தவருகப் புரிந்துகொண்டு சிலுவையில் அறைந்ததைக் கூறினுர். அப்படி அறைபவர்களையும் மன்னிக்குமாறு உலக பிதாவும், தமது விசேஷ பிதாவுமான ஆண்டவனை ஏசுநாதர் பிரார்த்தித்ததை அகம் குழைந்து எடுத்துக் கூறினுர். மாண்டவர் மீண்டு எழுந்ததையும், அர்ச்சிஷ்டர் பால் கிறிஸ்துவ சமயத்தை நிலை நாட்டியதையும் கூறினுர். பரமஹம்ஸரின் உபதேசங்களைத் தாங்கள் நிலை நாட்டினுல் அவரும் என்றும் உயிரோடு வாழ்வார் என்பதையும் கூருமல் கூறினுர்.

பேசி முடிந்ததும் விசித்திரமான ஒரு மௌனம் அங்கு நிலவியது. பேச்சு அற்ற மௌனமல்ல அது. பேச்சில் வராத மொழி அடர்ந்து நின்ற அற்புத மௌனம் அது. விறகுகள் எரியும் ஓசை அந்த மௌனத்தின் கம்பீரத்தை அதிகமாக்கின. அக்கினியின் ஒளியும் நிழலும் தங்களின் மீது ஆடி, உள்ளேயிருக்கும் அக்கினியை நுந்திவிட, அவர்கள் யாவரும் ஆண்டவனுக்கு முன்பாகவும், தங்களில் மற்றவர்களுக்கு முன்பாகவும் சந்நியாசப் பிரதிக்ஞை எடுத்துகொண்டார்கள். புராதன பாரதத்தில் ரிஷிகளும், முனிவர்களும், பரிவிராஜகர்களும், யோகிகளும் வாழ்ந்தார்கள் என்பது பொய்யல்ல என்று அக்கினி சாக்ஷியாக நிரூபிப்பதுபோல, ஆகாசவாணி பூமிதேவி சாக்ஷியாக நிரூபிப்பதுபோல, அவர்கள் துறவறத்துக்குத் தங்களை அளித்துக் கொண்டனர்.

Koviloor Digital Library

இவ்வாறு அவர்கள் பூரண சந்நியாசிகளான தினம் கிறிஸ்துமஸ் முன்மாலை என்று அதன் பின்னரே அவர்கள் அறிந்து வியப்பும், மகிழ்ச்சியும் கொண்டனர்.

தங்களைப் பொறுத்தமட்டில் அந்தப்பூரையே அந்தமற்ற அனந்தப்பூராக்கிக்கொண்டு வரநகரத்துக்கு திரும்பிய இளம் சாதுக்கள் வழியில் துறவுத் தெய்வமாகிய தாரகேசுவர சிவ பெருமானை வணங்கி வழிபட்டனர்.

* * *

இனி அந்தச் சாதுக்களுக்கு ஸ்ரீராமகிருஷ்ண சங்கமே நிரந்தர வாசமாயிற்று. முதலில் ராகால், நிரஞ்ஜன், பாபுராம், காளி, சரத், சசி முதலியவர்கள் வரநகரத்தில் வசிக்கலாயினர். ஸுபோத், சாரதா, பிரஸன்னு ஆகியோர் சிறிது பின்பு வந்து சேர்ந்தனர். திபேத்துக்கு யாத்திரைபோய்த் திரும்பியபின் கங்காதரரும் அவர்களில் ஒருவரானுர். அடிக்கடி மடத்துக்கு — சந்நியாசிகளின் வாசஸ்தானமாகிய வரநகர வீட்டினை 'மடம்' என்றே கூறுவதில் தவறில்லையல்லவா? — வந்து போய்க்கொண்டிருந்த ஹரி, துளசி இவ்விருவரும் விரைவிலேயே சந்நியாச ஆசிரமம் தழுவினர். சாரதையுடன் சென்றிருந்த யோகின், லாடு இவ்விருவரும் ஓராண்டுக்குள்ளேயே வரநகரம் திரும்பி சாதுக்களாயினர். உரிய சடங்குகளைச் செய்து புது ஜிவனத்துக்குரிய சந்நியாச நாமங்களும் தரித்தனர்.

ராகால், சுவாமி பிரம்மானந்தரானுர்; யோகின், சுவாமி யோகானந்தரானுர்; சுவாமி பிரேமானந்தரானுர் பாபுராம்; நிரஞ்ஜநானந்த சுவாமியானுர் நிரஞ்ஜனர்; சுவாமி ராமகிருஷ்ணனந்தரானுர் சசி; ஹரி, துரியானந்த சுவாமியானுர்; சுவாமி அத்புதானந்தர் எனப்பெயர் கொண்டார் லாடு; சாரதா, திரிகுணதீதானந்தா என்ற நாமம் பூண்டார்; சுவாமி சிவானந்தரானுர் தாரக்; காளி, அபேதானந்த சுவாமி என்ற பெயரைத் தாங்கினுர்; மூத்த கோபாலர், சுவாமி அத்வைதானந்தரானுர்; ஸுபோத், சுவாமி ஸுபோதானந்தர் என்றே பெயர் பெற்ருர். சிலகாலம் சென்ற பின்பு ஹரி பிரஸன்னு, சுவாமி விஜ்ஞானானந்தர் என்ற நாமத்தில் சந்நியாசியானுர்.

நரேந்திரர்? மற்றவர்களெல்லாம் துறவு பூண முக்கியமான தூண்டுகோலாகயிருந்த அவர் நிரந்தரமாக எந்த சந்நியாச நாமமும் பூணவில்லை. அவர் மனசில் ஏதேதோ திட்டங்கள் உருவாகிக் கொண்டிருந்தன. கல்லூரி நாட்களில் மனக்கண் முன்னர் தோன்றிக் கொண்டிருந்த இரு சித்திரங்களில் ஒன்று

Koviloor Digital Library

மீண்டும் அவர் முன் தோன்றத் தொடங்கியது. ஊரும் பேரும் தெரிந்துகொள்ளமுடியாத, யாருக்குமே அடையாளம் தெரியாத, ஆண்டியாகச் சுற்றி அலையவேண்டும் என்ற ஆர்வம் அவர் உள்ளத்தில் அலைவீசத் தொடங்கியது. மக்களுக்குச் சேவை புரிவதற்குமுன் அவர்களின் மனோபாவங்களை யெல்லாம் புரிந்து கொள்ளவேண்டும்; ஜன சமுத்திரத்தோடு ஓர் அலையாகத் தாமும் வாழ வேண்டும்; ஆனாலும் அந்த சமுத்திரத்தில் மடங்கி விழுந்து மடிந்துவிடும் அலையாக ஆகிவிடக்கூடாது; மக்களுடன் இருக்கும்போதே அவர்களிடமிருந்து பிரிந்து இறைவனுடனும் ஏகாந்த வாழ்வு வாழ வேண்டும்; அதனால் மக்களின் மனோ பாவங்களை எல்லாம் அறிந்தபோதிலும் அவற்றுக்குத் தாம் ஆளாகி விடாமல், அவற்றை எப்படிச் செம்மைப் படுத்துவது என்பதனை அறியவேண்டும்; சமுத்திரத்தின் இயல்பையே மாற்றும் அற்புத அலையாகத் தாம் ஆகவேண்டும் — என்றெல்லாம் அவருடைய எண்ணங்கள் கடலாகப் பொங்கிக் கொண்டிருந்தன. எல்லா ருடனும் வாழ வேண்டும்; ஆனால் யாருமே அறியாமல் வாழ வேண்டும் என்ற சிந்தனை மேலோங்கியது. நம் ஒவ்வொருவருக் குள்ளும் பரமனே இப்படித்தானே வாழ்கிறான்?

யாருமே அறியாமல் வாழ்வேண்டும் என்று எண்ணும்போது நரேந்திரர் தமது பேரன்புக்குரிய சக சாதுக்களும்கூடத் தம்மைப் பற்றி ஏதுமறியாதிருக்க வேண்டும் என்று கருதினார். பூரணமான சந்நியாசம் நிரம்பியவர்களால் அப்படிச் சட்டென்று பற்றுக்களை யெல்லாம் தகர்த்துவிடமுடியும். தம்மை யாரும் அறியக்கூடாது என்பதால்தான் நரேந்திரர் தமக்கென நிரந்தரமான ஒரு பெய ரையும் அப்போது சூடிக்கொள்ளவில்லை. செல்லுமிடங்களிலெல் லாம் ஒவ்வொரு பெயரைச் சொல்லிக் கொள்வது என்றே அவர் தீர்மானித்துக் கொண்டார்.

எத்தகைய மகத்தான ஆர்வம் அவருடையது! எவ்விதத் தகுதியுமில்லாத நாமெல்லாரும் நம்மை உலகம் அறியவேண்டும் என்று துடிக்கிறோம். எத்தனையோ தகுதிகள் பொருந்திய நரேந் திரரோ இந்த உலகில் யாரோ ஒருவனாக வாழ விரும்பினார். சிறியவராக வேண்டும் என்றும் விரும்பும்போதுதானே ஒரு வர் பெரியவராகிறார்? நரேந்திரரும் அப்படிப் பெரியவரானார்.

விவிதிசானந்தர், சச்சிதானந்தர் முதலிய பெயர்களில் நரேந் திரர் தமது தேச சஞ்சாரத்தைச் செய்து வந்தார். அமெரிக் காவுக்குப் புறப்படு முன்புதான் கேத்ரி மஹாராஜாவின் வேண்டு கோளுக்கிணங்கி விவேகானந்தர் என்ற நாமத்தை நிரந்தரமாகத் தமக்கிட்டுக் கொண்டார். எனவே இனி நரேந்திரரின் தேச

Koviloor Digital Library

சஞ்சார காலத்தைக் கூறும்போது அவரை எப்பெயருமிடாமல் சுவாமிஜி என்றே கூறலாம்.

* * *

பரிவிராஜகராகப் புறப்படவேண்டும் என்ற அவரது எண்ணம் செயலாக இன்னும் சிறிது காலம் பிடித்தது. அதுவரையில் வரநகரம் சாது சங்கத்தில் ஒருவராக வாழ்ந்து வந்தார் அவர்.

யௌவனத்திலேயே துறவு பூண்ட அவர்கள் எல்லாரும் இப்போது காவி உடை தரித்து விட்டார்கள். காவி 'உடை' என்று குறிப்பிட்டாலும் ஒவ்வொருவருக்கும் நிச்சயமாக இருந்தது வெறும் கௌபீனம்தான். காவி வேட்டியும் மேலங்கியும் ஓரிரண்டுதான் அவ்வளவு பேருக்குமாக உண்டு. யார் வெளி அலுவலாகச் செல்கிறார்களோ அவர்கள் மட்டுமே அதைத் தரித்துக் கொள்வார்கள். இப்படித் தியாக மூர்த்திகளாக வாழ்ந்தார்கள் சாதுக்கள். படுப்பதற்கு வெறும் பாய்தான்; கைதான் தலையணை. உணவு தானாகக் கிடைத்தால்தானுண்டு. பிக்ஷை எடுக்கலாம் என்று சந்நியாசிகளுக்கு விதி இருந்தாலும், அதுகூடத் தாமாக உணவைத் தேடிச் செல்வதற்குச் சமானமே என்ற அளவுக்கு அவர்களுக்குள் துறவறம் ஊறியிருந்தது. 'விதிவசாத் ப்ராப்தேன ஸந்துஷ்யதாம்' — விதிப்படி எது கிடைக்கிறதோ அதில் இன்பம் காண்க — என்ற ஆதிசங்கரரின் உபதேசத்துக்கு இலக்கணமாக வறுமையில் பெருமையோடு வாழ்ந்து வந்தனர். வறுமை உடம்புக்குத்தானே? உள்ளம் ஆத்ம சாம்ராஜ்யத்தின் பொற் சுரங்கங்களில் ஆழ ஆழச் சென்று செல்வத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தது.

வேறெது இருந்தாலென்ன, இல்லாவிட்டால்தான் என்ன? வணங்குவதற்குக் கடவுளரின் சித்திரங்கள் இருந்தன. ஜபம் புரிய அக்ஷமாலைகளிருந்தன. பாடிப் பரவுவதற்கொரு தம்பூராவும் இருக்கவே இருந்தது. அப்புறம், பொறுக்கி எடுத்தாற் போன்ற ஒரு நூறு நூல்கள் விசாரணைக்கும், விவாதிப்பதற்கும் இருந்தன. எல்லாவற்றுக்கும் மேலாக இவையே போதும் என்று, புறப்பொருளை நாடாமல் தன்னால் நிறைந்திருக்கும் உள்ளம் அவர்களிடம் இருந்தது.

அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையின் குதூகலத்தையும், கோலாகலத்தையும் சொல்லி முடியாது. பாரமாத்மிகமான உற்சாக உரையாடலிலும், பகவந்நாம கோஷத்திலும், பக்திமயமான அற்புதப் பாடல்களிலும், தியானத்திலும், விவாதத்திலும் பொழுது அதி ஆனந்தமாகக் கழிந்தது. எதுவுமே வேண்டாம் என்றிருந்த இந்த சாதுக்களை அன்போடு பராமரித்துத் தமக்கியன்ற உதவியை

Koviloor Digital Library

அளித்து வந்தார் சுரேந்திரநாத மித்ரா. முதலில் தாம் அளித்து வந்த திரவிய சகாயத்தை உயர்த்தினர். தாங்களாக அவர்கள் தேவைகளைத் தெரிவித்துக் கொள்ளாததோடு, இவர் ஒருவரே இவ்வளவு உதவி செய்யுமாறு சிரமமளிக்கலாகாது என்றும் கருதினர்கள். துறவறத்தில் இவர்களுக்கிருந்த நாட்டம் அவருக்குத் தர்மத்திலிருந்தது. எனவே அந்தப் பண்பாளர் தம் பெயர் தெரியாமலே தமது உதவியை அதிகரித்துக்கொண்டு போனர்.

* * *

வரநகரத்து வாழ்க்கையின் முழு அழகும் சுவாமிஜியின் — இனி சுவாமிஜி என்றால் நரேந்திரர்; நினைவிருக்கிறதல்லவா ? — சொற்களிலேயே ஒரு முறை வெளியாயிற்று. அவர் விவேகானந்தராக ஞான முரசும் கொட்டி முழங்கியபின் ஒரு நாள் பக்தர் ஒருவர், ''மஹராஜ்! அந்த நாளில் வரநகரத்தில் நீங்கள் எப்படி நாட்களைத் தள்ளினீர்கள் ?'' என்று கேட்டார். அப்போது சுவாமிஜியும், மற்றவர்களும் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேண்டும் என்ற அநுதாபம் பக்தரின் குரலில் மேலோங்கி யிருந்தது. அந்தக் கேள்வியில் சுவாமிஜி சிறுபோது உலகையே மறந்தார். அந்தப் பழைய நாட்களிலேயே நீந்தலானர். ஒரு விநாடி அவர் முகத்தில் துயர ரேகை படர்ந்தது; மறு விநாடியே அது களிப்பின் சாயையாகப் பிரகாசித்தது. அகத்தின் அழகை முகத்தில் காட்டும் அந்தப் பளிங்கு மனிதரின் முகத்தில் பலநூறு நினைவுகள் பல அற்புத மாற்றங்களைச் செய்தன. இறுதியில் ஆனந்தமொன்றே அதில் நிலைத்தது.

சடேரென்று நனவுலகுக்கு வந்த சுவாமிஜி கேள்வி கேட்டவரை நோக்கினர். அநுதாபப் படவேண்டிய வாழ்வா அது! சுவாமிஜி கூறுவார்:

''என்ன அசட்டுக் கேள்வி கேட்கிறாய்! நாங்கள் எல்லாரும் உண்மை சந்நியாசிகளாக வாழ்ந்தோம், தெரிகிறதா ? 'நாளைக்கு' என்பதைப்பற்றி நாங்கள் நினைத்ததே கிடையாது. எது கிடைக்கிறதோ அதைக்கொண்டு வாழ்ந்தோம். ''

அப்படிக் 'கிடைக்க'ச் செய்தவர்களின் நினைவு விவேகானந்தருக்கு வந்துவிட்டது. பெருமூச்செறிந்து தொடர்ந்தார்:

''சுரேஷ் பாபுவும், கலராம் பாபுவும் இன்று இந்த உலகில் இல்லையே! அவர்கள் இருந்தால் இப்போது இந்தப் பெரிய மடத்தைக் கண்ட மாத்திரத்தில் ஆனந்த நர்த்தனமே செய்வார்கள். உனக்கு சுரேஷ் பாபுவைப் பற்றித் தெரியுமோ ? அவர்தான் இந்த மடத்துக்கே ஆதாரம் என்று தெரிந்துகொள். வரநகர மடத்தை ஸ்தாபிக்க சகாயம் அளித்தவர்

Koviloor Digital Library

அவர்தான். எங்களுடைய தேவையை யெல்லாம் நிறைவு செய் தவர் அவர்தான். பக்தியிலும், சிரத்தையிலும் அவருக்குள்ள ஈடுபாடு வேறு யாருக்குண்டு?''

வரநகர வாழ்க்கையை வருணிக்கலானுர் விவேகானந்தர்:

''உண்பதற்கு எதுவுமே இல்லாத நாட்கள் எவ்வளவோ கழிந்திருக்கின்றன. அரிசி இருந்தால் உப்பு இருக்காது — இப் படிச் சில நாட்கள். ஆனுல் இதையெல்லாம் யார் லக்ஷியம் செய்தோம்? கோவையிலே, உப்பு, சிறிது அரிசி இவற்றை வேக வைத்து உண்டே நாங்கள் மாதக் கணக்கில் தள்ளியிருக்கிறோம். 'வருவது வரட்டும்' என்று உதாசினமாக இருப்போம். மதா நுஷ்டானங்கள், தியானம் என்ற அலேகள் அடித்துச் செல்லும் திசையில் சென்று கொண்டிருந்தோம். ஆகா, எப்பேர்பட்ட நாட்கள்! நாங்கள் விரதங்களை அநுஷ்டித்ததிலிருந்த கடுமை யைக் கண்டு பேய் பிசாசுகள்கூடப் பயந்து ஓட்டம் பிடித்திருக்கும். ராகாலேயும், சசியையும் கேட்டுப்பார். சொல்வார்கள்! சூழ் நிலேகள் ஒருவனுக்குப் பாதகமாக ஆனுல்தான் அவனுள்ளிருக்கும் சக்தி நன்கு வெளியாகும். புரிகிறதோ?''

இவ்வாறு மனதுவிட்டு சுவாமி விவேகானந்தர் பேசியது ஆப்த சிஷ்யர்களிடம் மட்டும்தான். மற்றவர்களிடம் பூர்வ காலத்தைப் பற்றிப் பூரண மௌனமே சாதித்து வந்தார் அவர்.

பரவசமும் அந்த பரவசத்தை வெல்லும் பரவசமுமாகவே வரநகர வாழ்க்கை சென்றது. அதிகாலேயிலிருந்து நள்ளிரவுவரை பசி, தாகம் தெரியாமல் அவர்கள் நாம சங்கீர்த்தனம் செய்த நாட்கள் எவ்வளவோ. மகாபாரதத்திலெல்லாம் பிராயோப வேசம் என்று வருமே — அதுபோல உடம்பு, பசி முதலிய உடம்பின் உணர்வு இவையாவும் மறந்து உயிரைக் கொடுத் தேனும் கடவுளேக் காணவேண்டும் என்ற பக்தி ஆவேசத்தில் சாதுக்கள் மிதந்தனர்.

இந்தப் பக்தி ஆவேசம் குறையவேண்டுமென்றே போலும், சுவாமிஜி நூல்களையெல்லாம் எடுத்துப் போட்டுக்கொண்டு அறி வாராய்ச்சியுடன் பிரசங்கம் புரியத் தொடங்கி விடுவார். வேதாந் தம், மீமாம்சை, சாங்கியம், யோகம், வைசேஷிகம் முதலிய இந்துமத தரிசனங்களும், சங்கரர் ராமானுஜர் மத்வர் முதலி யோரது தத்துவங்களும், கிறிஸ்துவம், பௌத்தம் இஸ்லாம் முதலிய புற சமயக் கோட்பாடுகளும், காண்ட், ஹெகேல், ஜான் ஸ்டுவர்ட் மில், ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் முதலிய மேநாட்டு தத்துவ ஆராய்ச்சியாளர்களின் முடிபுகளும் சுவாமிஜியின் உரை களில் நயம்பட மிளிரும். ஆன்மிக விஷயங்கள் மட்டுமின்றி

Koviloor Digital Library

சரித்திரம், இலக்கியம், கலை, சமூக இயல் எல்லாம் விளக்குவார் அவர். ஏன், மதத்துக்கு விரோதமான நாஸ்திக வாதங்களைக்கூடப் பாங்குற எடுத்துக் கூறுவார். அப்போது அவர் பேசுவதைக் கேட்டால் கடவுள் என்று யாருமே கிடையாது; அப்படி ஒருவர் இருந்தாலும் அவருக்குக் கருணை என்பது லவ லேசமும் கிடையாது என்று நல்ல ஆஸ்திக புத்தி உள்ளவர்கள் கூட மயங்கி விடுவர். சாதகர்களின் கட்டுமீறிய ஆர்வத்தை சமனப்படுத்தவே இந்தச் சாருவாகக் கோட்பாடுகளையும் விளக்கிய சுவாமிஜி உடனேயே அவற்றைத் தெளிவு படுத்துவார்: கடவுள் இல்லை என்பதை இத்தகைய அறிவாராய்ச்சியால் முடிவுகட்ட முடியாது; அவர் இருப்பதை அநுபவத்திலேயே காணும்போது எவ்வளவு அறிவாராய்ச்சியானாலும் அது இருந்த இடம் தெரியாமல் ஓடவேண்டியதுதான் — என்று. ''கடவுளுக்குக் கருணை உண்டென்று நமக்கெப்படித் தெரியும்'' என்று சக சந்நியாசி ஒருவர் கேட்டபோது, சுவாமிஜிதான் இப்படி விடைகூற இயலும் என்ற விதத்தில் அவர் அழகுறக் கூறினார்: ''உன்னிலும், என்னிலும், மனித இன்பம் எல்லாவற்றிலும் ஒரு துளியேனும் கருணை உள்ளதென்றால் இதெல்லாம் எங்கிருந்து வந்தது? இத்தனை பேரிடமும் உள்ள கருணையைப் படைத்த கடவுள் எப்படிப் பட்ட கருணா சமுத்திரமாக இருக்க வேண்டும்?'' என்றார். முதலில் கேள்விகேட்ட சாது வேடிக்கையாக, 'அதென்னவோ, நீங்கள் கடவுள் இல்லை என்று ஒரு சமயம் சொல்கிறீர்கள்; இருக்கிறார் என்று இன்னொரு சமயம் சொல்கிறீர்கள். இந்த மாதிரிக் கருத்துக்களை மாற்றிச் சொல்லிக்கொண்டிருந்தால் நீங்கள் சொல்வது எப்படி சத்தியமாக இருக்கமுடியும்?'' என்று கேட்டார். ''சரி; நான் எப்போதும் மாற்றிக் கொள்ளாத ஒரு சத்தியத்தைக் கூறுகிறேன். அது இதுதான்: 'நான்' என்ற எண்ணமும், ஆசையும் நம்மைத் தாக்கும் வரையில் நமக்குக் கடவுளிடம் நம்பிக்கையிராது.'' என்றார் சுவாமிஜி. உணர்ச்சி வசமாகி, ''தன்னிடம் சரண்புகுபவர்களுக்கு தஞ்சமளிக்கும் கருணாமயமான அம்மையப்பன் அவன்'' என்று உடனே அவர் பாட மற்றவர்களும் அதில் சேர்ந்துகொண்டு தெய்வ சாந்நித்தியத்தை நுகர்ந்தனர்.

* * *

வரநகர நாட்களைப்பற்றி சுவாமி சதானந்தர் கூறும்போது, ''அந்நாட்களில் சுவாமிஜி தினம் இருபத்துநாலு மணியும் உழைத்து வந்தார். காரியத்தில் வெறியாக இருந்தார் அவர் என்றே சொல்லலாம். அதிகாலையில் இருள் பிரியுமுன்பே அவர்

Koviloor Digital Library

எழுந்து விடுவார். ' விழித்துக் கொள்ளுங்கள், எழுந்திருங்கள்! தேவாமிருதத்தை அருந்துபவர்களே, விழித்தெழுங்கள் என்று ஆர்ப்பரித்து மற்றவர்களேயும் எழுப்பிவிடுவார். நள்ளிரவு சென்ற பிறகும் உறங்காது சில சுவாமிகளுடன் அவர் கூரையில் அமர்ந்துகொண்டு துதிப்பாடல்களேப் பாடிக்கொண்டிருப்பார். இதற்காக அண்டை வீட்டுக்காரர்கள் சண்டைக்கு வந்ததுமுண்டு. ஆனல் அதை யாரும் பொருட்படுத்தவில்லே. 'சீதா ராமா' என்றும் 'ராதா-கிருஷ்ணு' என்றும் சுவாமிகளின் இன்னிசைக் குரல் நாமங்களேப்பாட மற்றவர்கள் அவற்றைத் திரும்பப் பாடு வார்கள். அயராது உழைத்த நாட்கள் அவை. ஓய்வு எடுத்துக் கொள்ள அவகாசமே இராது. வெளியார் யாரேனும் வருவார் கள், போவார்கள். பண்டிதர்கள் வந்து வாதங்கள் நடத்து வார்கள். ஒரு கணமும் சுவாமிஜி சோம்பலோ, மந்தமோயின்றி இருப்பார்,'' என்கிருர்.

கிறிஸ்துவப் பாதிரிமார்கள் இந்து மதத்தின் 'மூட நம் பிக்கை' களேப் பழிப்பதற்காக வருவார்கள். இந்துமதம் என்ருல் என்ன என்பதை நன்கு புரிந்து கொண்டுவிட்ட சுவாமிஜி அவர் களுடைய வாதங்களே யெல்லாம் தகர்த் தெறிவார். கிறிஸ்துவ மதத்திலுள்ள குறைபாடுகளேயும் எடுத்துக் காட்டுவார். கடை சியில் கிறிஸ்துவின் பெருமையை அவர்களே அறியாத அளவில் விரித்துரைத்து அவர்களே அதிசயிக்கவும் வைத்து அனுப்புவார்.

இந்து மதத்தின் உத்தமமான உன்னத தத்துவங்களேயெல் லாம் குருமஹராஜ் வாழ்ந்து காட்டி விளக்கியிருப்பதை மற்றவர் களுக்கு விளங்க வைப்பதில் நிபுணராகவே இருந்தார் சுவாமிஜி. அமுதத்தைத் தங்கப் பாத்திரத்தால் எடுத்து வழங்குவதுபோல ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்களே சுவாமிஜி கூறக்கேட்டு இரட் டிப்பு மகிழ்ச்சியுறுவர் சகாக்கள். அவருடைய உண்மையான உணர்ச்சிகளும், தேனனேய குரலும் கேட்பவர்கள் உள்ளத்தை அப்படியே ஆகர்ஷித்துவிடும். அந்தத் தேன் குரலால் அவர் இசைக்கத் தொடங்கி விட்டாலோ கேட்கவே வேண்டாம். ''மகுடியின் இன்னெளி கேட்ட நாகம் படம் எடுத்து மயங்குவது போல, நரேந்திரன் பாடும்போது அந்தர்யாமியாக உள்ள அவனும் அப்படியே மந்திரத்தால் கட்டுண்டவன் போலாகிவிடுகிறன்'' என்று குருமஹராஜ் கூறியதுண்டு. இதற்குமேல் சுவாமிஜியின் சங்கித வசிகரத்தைப்பற்றி நாம் என்ன சொல்ல வேண்டும்?

* * *

திருநாட்களேத் தவருமல் கொண்டாடி வந்தனர் இளம் துறவிகள். வரநகர மடத்தில் முதல் சிவராத்திரியை அவர்கள்

Koviloor Digital Library

எவ்வாறு கொண்டாடினர் என்பது இதற்கு ஓர் உதாரணம். புத்தம் புதிதாக சுவாமிஜியே இயற்றியிருந்த பாடல்களை வைகறைப் போதில் அவர்கள் பாடி சிவபெருமானை உள்ளத்தில் ஆவாஹனம் செய்துகொண்டு விட்டனர். அன்று முழுவதும் சுத்தமாக உபவாஸமிருந்து பிரார்த்தனை கீதம் பல பாடினர். பூஜனை புரிந்தனர். இரவில் ஒவ்வொரு யாமமும் விதிப்படி ஐயனை வழிபட்டனர். கைகளை கோத்துக்கொண்டு ஆடிய படியே ''ஹரஹர மகாதேவ!'' என்றும் ''சிவகுரு சிவகுரு'' என்றும் வாய்விட்டுக் கூவி கூவி அழைத்தனர். மேனியெல்லாம் திருநீறு பூசி, அந்தத் துறவிகள் ஈசுவரனிடம் அந்தரங்கமான பக்தியுடன் ஆடிப்பாடியதைவிட நம் மனக்கண்ணுக்கு இனிக்கும் காட்சி எதுவுண்டு? இரவு முடியும் தறுவாயில் யாரும் கண்டிராத விநோதமான வேள்வியொன்றை நடத்தினர். எல்லாத் தெய்வங்களின் பெயரிலும், எல்லாத் தேசங்களைச் சேர்ந்த மகான்களின் பெயரிலும் ஆஹுதிகள் செலுத்தினர்.

* * *

இவ்வளவு தீவிரமும் போதவில்லை அந்த வாலிப சந்நியாசிகளுக்கு. ''ஆஹா, பரமஹம்ஸரின் துறவும் பக்தியுமன்றோ உண்மையானவை! அவற்றில் வீசம் பங்குகூட நமக்கு லபிக்கவில்லையே'' என்பார்களாம்!

அவர்களில் ஒருவருக்கோ தாம் இவ்வளவு முயன்றும் தெய்வ தரிசனம் கிட்டவில்லையே என்று ஆதங்கம் ஏற்பட்டதாம். அப்போது அன்பொழுக அவருக்கு ஆறுதல் கூறினர் சுவாமிஜி. ''மனிதனின் உண்மையான இயல்பைப்பற்றி க்ஷணகாலம் எண்ணிப்பார். இதோ சுடர்விடும் இந்த எண்ணிறந்த நக்ஷத்திரங்களில் எத்தனை எத்தனை சூரிய மண்டலங்கள் இருக்கின்றன! நாம் காண்பது ஒரு சூரியனையும் அதனைச் சுற்றியுள்ள கிரகங்களையும்தான். அவற்றிலும் அற்பமான ஒரு பகுதியைப் பற்றித்தான் நமக்குத் தெரியும். சூரியனோடு ஒப்பிடும்போது உலகம் ஒரு விளையாட்டுப் பந்துதான். அதன் மேற்புறத்தில் உலவும் மனிதன் சின்னஞ் சிறு ஜந்துதான். அப்படியெனில் ஆண்டவனின் முன்பு மனிதன் நெளியும் புழுவைவிட அற்பமானவனே யன்றோ?',

இவ்வாறு பேசிக்கொண்டுபோன சுவாமிஜி அவ்விதம் ஆண்டவன் மனிதனை அற்பமாகக் கருதிப் புறக்கணிக்காமல் அருள் புரியும் பான்மையை தம் முழு உணர்வாலும் உணர்ந்து கண்ணீரில் வடித்தார். ''ஆண்டவனே, எனக்கென்று ஏதும் செயலின்றி உன்னிடமே என்னை ஒப்புக் கொடுத்துவிட்டேன்! வாழ்வு பாதையின் குழிகளில் நான் இடறிவிழாமலும், மயக்குகளுக்கு

Koviloor Digital Library

ஆளாகாமலும் இருப்பது முற்றிலும் உன் பொறுப்பே'' என்று பொருள்படும் ஒரு பாடலைத் தேம்பித் தேம்பிக் கொண்டு பாடினார். சந்தேகப்பட்ட சாதுவை நேயமிக நோக்கினார்: ''ஆண்டவனிடம் அடைக்கலம் புகுவாய். அவனுடைய பாதாரவிந்தத்தில் உன்னைப் பரிபூரணமாக அர்ப்பணித்து விடு. ஸ்ரீராமகிருஷ்ணரின் மொழிகளை மறந்தனையா? ஆண்டவன் ஒரு கற்கண்டு மலையாக இருக்கிறான். நீ ஒரு எறும்பு. அந்த மலையின் ஒரு பொடி உனக்குப் போதும். நீயோ மலை முழுவதையும் இழுத்துக் கொண்டுபோக விரும்புகிறாய். சுகதேவரே ஒரு கட்டை எறும்பு தான் என்று சொல்லலாம். இதனால்தான் நான் காளியிடம் 'கடவுளைக் கஜக் கோலால் அளக்க முயலுகிறாயா?' என்று கேட்கிறேன். கடவுள் கருணை என்ற கரையற்ற கடல். அவன் உன்மீதும் கருணையைப் பொழிவான். 'உன்னுடைய மிருதுவான கருணையால் எங்களை எப்போதும் ரக்ஷி! பொய்யிலிருந்து எங்களை மெய்க்கு இட்டுச்செல்; இருளிலிருந்து எங்களை ஒளிக்கு இட்டுச் செல்; சாவிலிருந்து எங்களை அமரத்துவத்துக்கு அழைத்துச் செல்'* என்று இறைவனிடம் இறைஞ்சுவாயாக'' என்றார்.

ஆண்டவனிடம் பிரார்த்திப்பது என்றால் ஏதோ ஏராளமாக ஸ்தோத்திர கிரந்தங்களைப் படிக்க வேண்டியதில்லை; அவனுடைய நாமங்களை நவின்றாலே போதுமென நயமுறக் கூறினார்.

* * *

குருமஹராஜின் இருப்பை நாளும் நினைவுறுத்திக்கொண்டு புனிதமாக வாழ்ந்த நாட்கள் அவை. ஸ்ரீராமகிருஷ்ணரின் ஸ்தூல உடல்தான் மறைந்தது; உயிர் எங்கும் போய்விடவில்லை என்று தங்களுக்குத் தாங்களே சாதுக்கள் நிரூபித்துக் கொண்டனர். இரவு பகல் பாராமல் பிரார்த்தனை கீதம் பாடுபவர்கள்; பகலிரவு பாராமல் நிஷ்டை புரிபவர்கள்; அனவரதமும் அக்ஷமாலையை உருட்டி ஜபம் செய்பவர்கள்; ஸ்மசானத்திலேயே அமர்ந்து தியானம் புரிகிறவர்கள்; இரவு முழுவதும் தீ வளர்த்து அதன் முன் பகவத் ஸ்மரணை செய்பவர்கள்—இப்படிப்பட்டவர்கள் நிறைந்த வரநகர மடம் ஆத்மீகப் பண்ணையாகவே ஆகிவிட்டது.

தங்கள் சாதனைகளை எண்ணி எங்கே அந்த சாதுக்களே தருக்குற்றுவிடுவார்களோ என்பதால் அவ்வப்போது சுவாமிஜி அவர்களிடம், ''நீங்கள் எல்லாரும் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸராகி விடமுடியும் என்று எண்ணுகிறீர்களா? ஒருகாலும் முடியாது. ஒரு சகாப்தத்தில் ஒரு ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் தான் ஜனிப்பார்'' என்று கூறுவார். வெறியடங்கி அவர்கள்

* இது பிரகதாரண்ய உபநிஷத மந்த்ரமாகும்.

Koviloor Digital Library

தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும் இதே வார்த்தைகள் உதவும்.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸருக்கு இந்தப் புண்ணிய சிஷ்யர்கள் புரியும் பூசனைதான் எல்லா சாதனைகளுக்கும் சிகரமாக விளங்கும். ஸ்ரீராமகிருஷ்ணரின் திரு உருவப் பதுமை ஒன்றை பூஜை அறையில் அவர்கள் பிரதிஷ்டை செய்திருந்தார்கள். மந்திர பூர்வமாக அந்த உருவுக்கு வழிபாடு நடத்துவார்கள். தூபங்கள் போடுவார்கள். தீபங்களை ஏற்றி தீபாராதனை புரிவார்கள். ஜாலராக்களையும், சேமக் கலங்களையும் கொட்டி கம்பீர நாதத்தைப் பாய்ச்சுவார்கள். 'இது பரம சுத்தமான அன்னம்' என்று கூறி முன்பு குருமஹராஜ் ஒரு பருக்கையை உட்கொண்டாரல்லவா ? அதனை நினைவில் மறவாது போற்றிவைத்து அவருக்கு அமுது நிவேதனம் செய்தார்கள். சந்தி வேளையில் ஆராத்ரிக வழிபாடு நடத்தி எல்லாருமாக நெஞ்சு நைந்துபோக ஒரே குரலில் பாடுவார்கள். அதே வேளையில் காசி விசுவநாதனின் திரு முன்பு ஓதப் பெறும் நாமங்களை சர்வதேவ ஸ்வரூபியாகிய ஸ்ரீகுருவின் முன்பு பக்தி புஞ்சிதமாகப் பாடுவார்கள்:

ஜய சிவ ஓம் கார! பஜசிவ ஓம் கார!

ப்ரம்மா விஷ்ணு ஸதாசிவா! ஹர ஹர ஹர மஹாதேவா

என்ற புனிதமான சப்தங்கள் நிரம்பி வரநகரத்தின் அந்தப் பாழடைந்த மாளிகை வரப்பிரசாதம் பெற்ற திருக் கோயிலாகத் திகழும்.

இன்று ஸ்ரீராமகிருஷ்ணர் — விவேகானந்தர் ஆகியோரது பக்த ஜனங்களிடம் 'வரநகரம்' என்றால் அது 'ஆத்ம சாதனை' என்பதன் மறுபெயரே என்று கூறுவார்கள்.

* * *

இவ்வளவு சாதனை புரிந்தும் சுவாமிஜியின் உள்ளம் நிறைவு காணவில்லை. காஸிப்பூர் தோட்ட மாளிகையில் பரம்பொருளுடன் ஒன்றியிருந்து அத்வைதத்தை அநுபவித்த அவருக்கு அந்த நிலைக்குக் கீழ்ப்பட்ட வேறெந்த நிலையும் பூரண திருப்தி அளிக்கவில்லை. சில சமயங்களில் அவரே வாய்விட்டுக் கதறுவார்: ''நான் இங்கு என்ன பெரிய அநுபவங்களைக் கண்டுவிட்டேன் ? மந்திரங்களைத் தங்கமயமாகப் பிரகாசிக்கும் அக்ஷரங்களில் கண்டுகொண்டேன் என்பது உண்மைதான் ! காளி மாதாவின் திரு உருவைப் பலமுறை கண்டு விட்டேன் என்பதும் வாஸ்தவமே ! அவளுடைய இதர தெய்வ ரூபங்களைத் தரிசனம் செய்ததும் உண்மையே ! என்றாலும், எனக்கு சாந்தி எங்கேயிருக்கிறது ?

Koviloor Digital Library

எனக்கு எதிலுமேதான் — ஆமாம் இந்தப் பக்தர்களுடன் பேசுவதுகூட எனக்கு அருசியாகி விட்டது...... சத்தியத்தை நான் அநுபவிக்காவிடில் பட்டினி கிடந்தே சாவேனுக !''

ரிஷிகளைப் போல மந்திரங்களைக் கண்டதும், எல்லா தெய் வங்களையும் தரிசனம் செய்ததும்கூட சுவாமிஜிக்குப் போதவில்லை. ''அஹம்ப்ரம்மாஸ்மி'' — நானே பரம்பொருள் — என்ற அநுபவம்தான் அவருக்குத் தேவைப்பட்டது. ஆனுல் ஸ்ரீராம கிருஷ்ணரோ அந்த அநுபவத்தைவிட்டுப் பிரிய நரேந்திரர் ஒரு போதும் பிரியப்படமாட்டார் எனக்கண்டு, இதனுல் அவர் மக்க ளுக்குப் புரியவேண்டிய பணியைப் புரியமுடியாது என்பதால் அத்வைதத்தைப் பூட்டித் திறவுகோலைத் தாம் எடுத்துக்கொண்டு விட்டாரே !

* * *

அத்வைதாநுபவத்தை நரேந்திரர் மக்கள் பொருட்டுத் துறக்கவேண்டுமென்று பரமஹம்ஸர் பணித்தார். அந்தத் துற வினை நரேந்திரரால் அவ்வளவு எளிதில் மேற்கொள்ள முடிய வில்லை. ஆனுல் பிறருக்கெனத் தமது ஆத்ம சாதனைகளைத் துறக் கும் மகத்தான சாதனையைப் புரிந்த ஒருவரும் அந்த சந்நியாசிகள் சங்கத்தில் இருக்கத்தான் செய்தார். அவர்தான் சுவாமி ராம கிருஷ்ணுனந்தர் என்ற திருநாமத்தைத் தாங்கியிருந்த சசி. பல் லாண்டுகளுக்குப்பின் சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் அறம் வளர்க்கப் போகிறவர் இவரே. தமது தியானுவஸ்தையிலேயே சுவாமி விவேகானந்தரின் விதேக முக்தியை அறியப்போகிறவர். குருநாதர் பெயரிலேயே தாம் சந்நியாச நாமம் தாங்கியதற் கேற்ப, அவர் பணித்த மக்கள் சேவையை வாலிபப் பருவத்தி லேயே சிறப்புற ஆற்றியவர் அவர்.

எல்லா சாதுக்களும் தியானம், பூஜை என்றே இருந்து விட்டால் அவர்களுடைய இதர காரியங்கள் என்னுவது ? அவற் றையெல்லாம் கவனிப்பதற்காகத் தமது தியானத்தையும் யோகத் தையும் தியாகம் செய்தார் ராமகிருஷ்ணுனந்தர். இவரை வர நகர மடத்தின் ''அன்னை'' என்றே சொல்லிவிடலாம். மற்ற வர்களைக் குளிக்குமாறும் உண்ணுமாறும் உசுப்பித்தவர் இவரே. அப்படி அவர்கள் குளிக்க நீர் முகந்து வைத்தவரும், உண்ண உணவு படைத்து வைத்தவரும் இவரே. இதனை நினைவுகூர்ந்து அன்பிலே நெகிழ்ந்துபோன சுவாமி விவேகானந்தர் பிரிதொரு சமயம் சொன்னுர்: ''சசி எங்களுக்குத் தாயாகவே யிருந்தார். எங்கள் உணவு விஷயத்தைக் கவனித்துக் கொண்டவர் அவரே. காலையிலிருந்து மாலை நாலு அல்லது ஐந்து மணிவரைகூட

Koviloor Digital Library

நாங்கள் ஜபத்திலும் தியானத்திலும் அமர்ந்து விடுவோம். சசி எங்களுக்காக உணவு தயாரித்து வைத்துவிட்டுக் காத்துக்கொண் டிருப்பார். அவசிய மேற்பட்டால் எங்களைத் தியானத்திலிருந்து பலவந்தமாக எழுப்பித் தர தரவென்று உண்ண இழுத்துக் கொண்டு போவார் அவர்.''

* * *

இப்படி வெளி உலகம் இன்னதென்று தெரியாமல் ஸ்ரீராம கிருஷ்ண சாம்ராஜ்யத்தில் லயித்திருந்த வாலிபத் துறவிகளின் தியான பலம்தான் பின்னர் இந்த நாட்டைக் காத்து இந்து தர்மத்தில் அதனைச் செலுத்தியது; நம் வேதாந்த சமயம் உலகமெல்லாம் பரவவும் அந்த யோக பலமே உதவிற்று.

வழக்கு சுவாமிஜிக்குச் சாதகமாகவே முடிந்திருந்தது அல்லவா? எனவே வீட்டை வைத்துக்கொண்டு தம் வீட்டினர் எப்படியேனும் பிழைத்துக் கொள்வர் என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டது. பற்று நன்றாக இற்றே விட்டது. கடமையைச் செய்தோம் என்ற நிறைவுடன் புவனேசுவரியின் மைந்தர் புவனத் துக்கெல்லாம் ஈசுவரியான தேவியின் பணியில் — அதாவது அவளுடைய குழந்தைகளாக, அல்லது அவருடைய சோதரர் களாக புவனமெல்லாம் வாழ்பவர்களின் பணியில் — ஈடுபட லானார்.

தத்தர் குடும்பத்துப் புத்திரராகவும், அன்பு செய்யப்பட்ட மகனாகவும், அன்பு செய்த மகனாகவும், கல்லூரி மாணவனாகவும் நாம் கண்ட வாழ்வெல்லாம் முடிந்தது. வீட்டை விட்டவர் சட்டப் படிப்பையும் பூர்த்தி செய்யாமலே விட்டு விட்டார். இனி இந்த வரலாற்றின் தொடக்கத்தில் கண்ட தத்தர் குடிப் பெருமக்களிடமிருந்து ஒருவாறு விடை பெறுகிறோம்.

Koviloor Digital Library

அத்தியாயம்—11

உத்தர தேசத்தின் உத்தமப்பதிகளில்

சாதுக்கள் சங்கத்தின் விசேஷம் எல்லா சங்கத்தையும் துறக்கும்படிச் செய்வதேயாகும். ''ஸத் ஸங்கத்வே நிஸ் ஸங்கத்வம்'' என்று ஆதிசங்கரர் கூறியபடி சாதுக்களின் தொடர்பைப் பெற்ருல் பின்பு அந்தத் தொடர்பு உட்பட எல்லாவற்றையும் நீத்துவிட வேண்டும் என்ற ஆர்வம் எழும். சுவாமிஜிக்கு இத்தகைய ஆர்வம் எழுந்ததெனச் சென்ற அத்தியாயத்திலே கண்டோம். இன்னும் பலருக்கும் மெல்ல மெல்ல இந்தப் பரிவிராஜக ஆண்டி வாழ்வில் நாட்டம் சென்றது.

முக்கியமான க்ஷேத்திரங்களுக்குச் சென்று ஆங்காங்கு எழுந்தருளியுள்ள திவ்ய மூர்த்தங்களைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆர்வம் அந்த சாதுக்களுக்கு அதிகரித்து வந்தது. முன்பே சிலர் தூய அன்னையுடன் பிருந்தாவனம் சென்று திரும்பியதாகக் கண்டோமல்லவா? திரிகுணாதிதானந்தராகிவிட்ட சாரதா ஒரு நாள் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பிவிட்டார்.

அவர் எழுதிவைத்திருந்த ஒரு கடிதத்தில், ''நான் கால் நடையாகப் பிருந்தாவனத்துக்குப் புறப்பட்டு விட்டேன்'' என்று கண்டிருந்தது. அகண்டானந்தா எனப் பெயர் பூண்ட கங்காதரர் ஹிமாலயங்களில் யாத்திரை செய்து திபேத்தை அடையப் புறப்பட்டு விட்டார். அபேதானந்தா (பழைய காளி) தூய அன்னையுடன் பிருந்தாவனம் சென்று திரும்பிய உடனே சாரதானந்தா (சரத்), பிரேமானந்தா (பாபுராம்) இவர்களுடன் ஜகந்நாத பூரிக்குக் கிளம்பி விட்டார். குருமஹராஜின் பரமோத்தம சிஷ்யரான ராகால் பிரம்மானந்தர் எனப் பெயரேற்றதற்கு ஏற்பப் பிரம்ம நிஷ்டராக எங்கேனும் யோகத்தில் அமர்ந்துவிட வேண்டுமென அவாவிக் கொண்டிருந்தார். நர்மதா தீரத்தைப் போல எங்கேனும் தூரதேசம் போய்விட வேண்டும் என்று அவர் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார்.

துறவு என்பதன் மகிமையே அப்படிப் போலும். ஏதேனும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் சிறிது காலம் தங்கிஞலும்கூட அங்கிருக்கப் பொறுக்க மாட்டாமல் அந்த இடத்தையும் துறந்துவிட வேண்டும் என்று உள்ளம் நமைச்சலெடுக்கும் போலும்!

ஆஞல் எல்லாரின் தேக நலத்தையும் புரந்து வந்தாரே ராமகிருஷ்ணனந்தர்! அவர் மட்டும் எங்கும் வெளியேற வேண்டுமெனக் கூறியதே கிடையாது. அவருடைய உள்ளத்திலேயே

Koviloor Digital Library

சகல உலகமும் வந்து விட்டதால் எங்கிருந்தாலும், போனாலும் ஒன்றுதான் என்று அவர் கருதியிருக்கக்கூடும். சேவையின் உருவமான அவர் ஸ்ரீராமகிருஷ்ணரின் அஸ்தியைப் பூஜித்துக்கொண்டு, அவர் உபயோகித்த படுக்கை, துணிகள், பாத்திரம், பண்டங்கள் ஆகியவற்றைப் பாதுகாத்துக் கொண்டு குருவின் திருப்பணியில் வரநகரத்திலேயே இருக்கத்தான் எண்ணினார். உலகத்தை விட்டு விடும் துறவைவிட ஒட்டிக்கொண்டிருக்கும் துறவே அல்லவா கடினமானதும், மகத்தானதும் ஆகும்? இவ்வாறு சந்நியாசத்தை லோக சம்ரக்ஷணார்த்தமாகத் திருப்பி வாழும் முறைக்குத்தான் பின்னர் எல்லா சிஷ்யர்களுமே தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள்.

* * *

'குரு பாயி'க்கள் என்று சொல்லப்படும் மற்ற சகாக்களுக்காகத்தான் இத்துணைக் காலமும் சுவாமிஜி தமது தேச சஞ்சார விருப்பத்தை அடக்கி வந்தார். தாம் இல்லாமலும் அவர்கள் தைரியமாகத் தங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ளவேண்டும் என்பதற்காகவேனும் அவர்களை விட்டுச் சிறிது காலமாவது பிரிந்திருக்க வேண்டுமென அவர் எண்ணம் கொண்டார். இப்போது அவர்களும் ஒவ்வொருவராக யாத்திரை கிளம்பிக் கொண்டிருந்தார்கள். சுவாமிஜியும் அவ்வப்போது புறப்படுவார். நீண்ட நாள் பயணம் என்று சொல்லிக் கொண்டே அவர் புறப்படுவார். எனினும் விரைவிலேயே ஏதோ ஒன்று அவரை வரநகரத்துக்குத் திருப்பிச் சேர்த்துவிடும். 'ஏதோ ஒன்று' என்று ஏன் தீர்மானமில்லாமல் சொல்லவேண்டும்? 'குருபாயி'க்களிடம் அவருக்கு இருந்த உண்மையான அக்கறைதான் அவரை மீண்டும் மீண்டும் அவர்களிடமே கொண்டு தள்ளியது. தம் பொறுப்பில் பரமஹம்ஸர் விட்டுச் சென்ற அந்தக் குஞ்சுகள் இறகடித்துப் பறக்கக் கற்றுக் கொள்ளுமுன், தங்கள் உணவைத் தாங்களே தேடி உண்ண அறியுமுன், ராஜாளிகளிடமிருந்தும் வல்லூறுகளிடமிருந்தும் தங்களைக் காத்துக் கொள்ளத் தெரியுமுன் அவற்றைவிட்டுத் தாம் கிளம்புவது தகாது என்று அவரது மனசு உறுத்தும். தாம் ஓயாமல் உழைப்பதைக் கண்டு தம்மை ஓய்வு எடுத்துக் கொள்ளுமாறு வருந்தியழைத்த நண்பர்கள் சிலரின் ஊருக்கன்றி அவர் வேறெங்கும் செல்ல முடியவில்லை. வைத்தியநாதம், ஸிமுல்தளா, அந்தப்பூர் இவையே அவர் குருமஹராஜின் மறைவுக்குப் பின் சென்ற விடங்களாகும்.

இப்போது, அதாவது 1888-ம் ஆண்டு, அவரது ஆண்டி வாழ்வு அங்குரார்ப்பணமாயிற்று.

Koviloor Digital Library

சுவாமிஜியின் வாழ்க்கை வரலாற்றின் இப்பகுதியில் ஆங் காங்கு வெற்றிடங்கள் தட்டுகின்றன. பரிவிராஜகராக அவர் நாடு முழுவதிலும் திரிந்தது 1888-லிருந்து ஐந்தாண்டுகளாகும். இந்தக் காலத்தில் நடைபெற்ற எல்லா சம்பவங்களையும் அவ ரொருவர்தாம் அறிந்திருக்க முடியும். ஆனால் அவரோ விவேகா னந்த சுவாமியான பின்பு தமது பூர்வாசிரமத்தைப் பற்றி மிக மிகக் குறைவாகவே பேசி வந்தார். அவரையும் அறியாமல் ஏதே னும் பிரசங்கங்களில் இந்தப் பரிவிராஜக வாழ்வு பற்றிய சில குறிப்புக்களை அவர் வெளியிட்டு விடுவார். மிகவும் ஆப்தமான வர்களுக்குச் சில நிகழ்ச்சிகளைக் கூறியிருக்கிறார். எனினும் சம்ப வங்களைக் காலக்கிரமப்படி கோவைப்படுத்தி அவர் எழுதி வைக்க வில்லை.

.எனினும், அவரது சஞ்சார வாழ்க்கையைப் பற்றி நமக்கு வேறு சில ஆதாரங்களிலிருந்து குறிப்புக்கள் கிடைக்கின்றன. முக்கியமாக சுவாமிஜியே தமது குருபாயிக்களுக்கும், நண்பர் களுக்கும், புதிதாகத் தம்மை அடைந்த அன்பர்களுக்கும், சிடர் களுக்கும் எழுதிய கடிதங்கள் பல விவரங்களைக் கூறுகின்றன. சுவாமிஜி மனம் திறந்து கடிதம் எழுதியுள்ள அழகு அவற்றைப் படிப்பவர்களுக்குத்தான் தெரியும். எவ்வளவு அறிவு படைத் தவரோ அவர் அத்தனை குழந்தைத் தனமும் படைத்திருந்தார் என்பது இந்தக் கடிதங்களில் கண்ணாடியாகத் தெரியும். தாம் நினைத்ததைத் தெளிவாகவும், கேட்பவர் (அல்லது படிப்பவர்) உள்ளத்தில் ஆழப்பதியும் முறையிலும் எடுத்துக் கூறுவதில் அவர் எவ்வளவு சதுரர் என்பதையும் இந்தக் கடிதங்கள் விளக்குகின்றன. கடிதம் யாருக்கு எழுதப்படுகிறதோ அவருடன் எவ்வளவு நெருக்க மாகத் தமது இதயத்தை சுவாமி ஒட்ட விட்டிருக்கிறார் என்பதைக் கவனித்தால் 'ஸஹ்ருதயர்' என்றால் இவரே என்று எண்ணத் தோன்றும்.

சுவாமிஜியின் கடிதங்களிலிருந்து நாம் அவரது வாழ்க்கை நிகழ்ச்சிகளை அறிவதோடு அவருடன் சில சமயங்களில் சென்றவர் களின் மூலமும் சில சம்பவங்களை தெரிந்து கொள்கிறோம். ஸ்ரீராம கிருஷ்ண மட சுவாமிகளில் ஓரிருவர் அவருடன் அவ்வப்போது சென்றதுண்டு. ராமகிருஷ்ணானந்தர், அத்புதானந்தர், இவ்விரு வர் தவிர மற்றெல்லாரும் அவருடன் தனித்தனியே ஒரு சமயத்தி லேனும் சென்றதுண்டு. மேலும் அவர் சென்ற விடங்களில் புதிதாக அவரது சிடரானவர்கள் பலர் விரிவான குறிப்புக்களை விட்டுச் சென்றுள்ளனர். இவற்றிலும் சுவாமிஜியின் உலகம் காணா வாழ்க்கை ஒருவாறு விரிகிறது.

Koviloor Digital Library

காசி என்றும் வாரணுசி என்றும் கூறப்படும் திவ்விய க்ஷேத்திரம்தான் சுவாமிஜியை முதன் முதலில் அழைத்தது. துறவியான அவரது பாட்டனுர் துர்கா சரணரையும் அந்த ஸ்தலம் அழைத்திருந்ததல்லவா ? காசி விசுவேசுவரனுக்கு வேண்டிக் கொண்டுதானே புவனேசுவரி சுவாமிஜியையே பெற்றெடுத்திருந்தாள் ?

காசியைப் பற்றி ஆயிரமாயிரம் இன்ப எண்ணங்களைச் சுமந்து கொண்டிருந்தது விவேகானந்தரின் உள்ளம். வில்லைப் போல அந்த நகரத்தை அணைத்துக் கொண்டோடும் கங்கா தேவியும், அவளில் எத்தனை எத்தனையோ யுகங்களாக முழுகிப் புனிதம் பெற்ற கோடி கோடி மக்களையும் அகக் கண்களால் அவர் கண்டு வந்தார். காசியிலுள்ள எண்ணற்ற ஆலயங்களைக் காணப் பேராார்வமுற்ருர். முக்கியமாக, அருள் வடிவமான புத்தரும், அந்தப் புத்தரால் கூறமுடியாத இறுதி சத்தியத்தை உள்ளங்கை நெல்லிக் கனியாக எடுத்தியம்பிய சங்கரரும் தங்களது உபதேசங்களைப் பொழிந்த ஸ்தலமல்லவா அது என்று எண்ணி எண்ணி உவகை கொள்வார் சுவாமிஜி.

பிரேமானந்தா, பக்கிர் பாபு இருவருடனும் சுவாமிஜி காசிக்குச் சென்ருர். அங்கு சுமார் ஒரு வார காலம் இருந்தார்.

ஒரு நாள் துர்கா மந்திரத்துக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்தார் அவர். எங்கிருந்தோ ஒரு பட்டாளமாகக் குரங்குகள் திரண்டு வந்து அவரைத் துரத்த ஆரம்பித்தன. அஞ்சா நெஞ்சரான சுவாமிஜிக்குமே கலக்கமுண்டாயிற்று. அவர் வேகமாக ஓடலானுர். வானரங்களும் தங்கள் வேகத்தை அதிகரித்துக் கொண்டன. திடீரென்று ஒரு சந்நியாசியின் குரல் சுவாமிஜியின் காதுகளில் ஒலித்தது. ''நில்லு. அந்த குரங்குகளுக்கு முகம் கொடுத்து வெல்லு'' என்றது அக்குரல். அதே போலவே சுவாமிஜி குரங்குகளின் பக்கம் கம்பீரமாகத் திரும்பி நின்ருர். மறு விநாடியே அவை திரும்பி மறுபக்கம் ஓட்டம் பிடிக்கலாயின. பல ஆண்டுகளுக்குப் பின் விவேகானந்த சுவாமி நியூயார்க்கில் பிரசங்கம் புரியும்போது இந்த நிகழ்ச்சியை எடுத்துக்கூறி, அதன் படிப்பினையையும் மொழிந்தார்: ''இயற்கை வேகங்களை எதிர்த்து முகம் கொடுத்து வெல்லுங்கள்; அறியாமைக்கு முகம் கொடுத்து நில்லுங்கள்; மாயையை எதிர்நோக்கிப் போராடுங்கள். ஒரு போதும் அவற்றுக்காகப் பயந்து ஓடாதீர்கள்'' என்று ஆணையிட்டார்.

காசியில் துவாரகாதாஸ் என்பவரின் ஆசிரமத்தில் தங்கியிருந்தார் சுவாமிஜி. பிரசித்திபெற்ற பண்டிதரும் வங்காளி

Koviloor Digital Library

எழுத்தாளருமாகிய பூதேவ் சந்திர முகோபாத்தியாயர் என்பவருக்கு சுவாமிஜியை அறிமுகம் செய்தார் துவாரகாதாஸ். அவரோடு சுவாமிஜி பல விஷயங்களைப் பற்றி உரையாடிக் கொண்டிருந்தார். ''இந்தச் சிறிய வயதிலேயே எவ்வளவு அநுபவமும் தீர்க்க திருஷ்டியும் இவருக்கு இருக்கிறது! இவர் ஒரு மகா புருஷராக விளங்கப் போகிறார்'' என்று முகோபாத்தியாயர் நரேந்திரரைப் பற்றிக் கூறினார்.

காசியில் வசித்து வந்த த்ரைலங்க சுவாமி என்பவரையும் தரிசித்தார் சுவாமிஜி. எப்போதும் தவத்திலாழ்ந்து வெளி வியாபாரங்களில் நினைவே செல்லாத பெரியார் த்ரைலங்க சுவாமி. பல ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீராமகிருஷ்ணரும் இவரைத் தரிசித்ததுண்டு.

பாஸ்கரானந்தர் என்று ஒரு புகழ் வாய்ந்த சாது காசியில் வாழ்ந்து வந்தார். அவர் கல்வி கேள்விகளில் மிகவும் சிறந்தவர். அவரையும் கண்டு சம்பாஷித்தார் சுவாமிஜி. பொன்னாசை — பெண்ணாசையைப் பற்றிப் பேச்சு நடந்தது. இவ்விரு ஆசைகளை நீக்க வேண்டும் என்று பரமஹம்ஸர் தம் சிஷ்யர்களிடம் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வந்திருக்கிறார். இதையெல்லாம் பற்றிப் பேச்சு நடக்கும்போது பாஸ்கரானந்தர் சற்றே அலட்சியமாக, ''பொன்னாசை பெண்ணாசையை விட்டுவிட வேண்டும் என்று எவ்வளவு வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் உண்மையில் அவற்றைத் துறந்தவர் யாரும் கிடையாது'' என்றார். ''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? எவ்வளவோ ஞானிகள் இந்த ஆசைகளை அறவே களைந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒருவரையேனும் நானே என் கண் முன்னால் கண்டதுண்டு.' என்று உணர்ச்சியுடன் கூறினார் சுவாமிஜி. சற்றே பரிகாசம் நெளியப் புன்னகை செய்தார் பாஸ்கரர். சுவாமிஜிக்கு ஆத்திரம் வந்துவிட்டது. அவ்விடத்தை விட்டு வேகமாக அகன்றார் அவர்.

மனிதன் கடவுளாக முடியும் என்று நம்பியவர்கள் வேதகால முனிவர்கள் தொட்டு சமீபத்தில் அவதரித்த ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் வரையுள்ள ஞானிகள். அந்த நம்பிக்கையைப் பூரணமாகப் பெற்றவர் சுவாமிஜி. எனவே துறவற வாழ்க்கை மேற்கொண்ட பாஸ்கரர் யாராலும் ஆசைகளைக் கடக்க முடியாது என்று கூறுவதைக் கேட்டவுடன் அவருக்குச் சினம் வந்ததில் வியப்பில்லையல்லவா?

* * *

குருபாயிக்களிடமிருந்த அன்பு மீண்டும் சுவாமிஜியை வர நகரத்துக்கு அழைத்தது. இப்போது பாரதத்தின் ஒரு பகுதியில்

Koviloor Digital Library

உள்ள மக்களையெல்லாம் கண்டிருந்ததால் அவர் பல புதிய உணர்வு களைப் பெற்றிருந்தார். நிர்மானுஷ்யமான இடம் தேடித் தவத்தி லேயே காலத்தைப் போக்க வேண்டும் என்ற ஆர்வம் ஒரு புறம் இருக்க, மற்றொருபுறம் மக்கள் சேவை செய்யவேண்டும் என்ற துடிப்பும் சுவாமிஜிக்கு ஏற்பட்டு வந்தது.

'வேதாந்தத்துக்குத்தான் வேறென்ன பலன்? ஆத்ம சாதனைகள் புரிந்து ஒருவன் தானே பிரம்மம் என்று அறியப் பெறுகிறான். அதன்பின்?' இந்தக் கேள்விக்கு ஒரே விடை தான் சுவாமிஜிக்குத் தோன்றியது. 'மக்கள் எல்லாரும் பிரம்மமே என்று கருதி அவர்களின் வறுமையையும், துயர்களையும், அறியா மையையும் துடைக்க இயன்றமட்டும் முயல வேண்டும்'.

மற்ற பாலியத் துறவிகளிடமும் மக்கள் பணி பற்றிக் கூறி அவர்களை அதனில் ஈடுபடுத்த முயன்றார் சுவாமிஜி. மக்களுக்குப் பொருளாக எதுவும் தரும் நிலையில் அந்த சாதுக்கள் இல்லை. எனினும் அவர்கள் அறியாமையைப் போக்கி அவர்களிடம் ஞானப் பிரகாசம் செய்யவேண்டுமென சக சந்நியாசிகளைத் தூண்டினார் சுவாமிஜி. சேரிகளுக்குச் சென்று பிரசாரம் புரியுமாறு அவர்களை ஊக்கினார். ஆனால் அப்போது அவர்களுக்குப் பிரசாரத்தில் மனம் போகவில்லை. 'நாங்களே இன்னும் கற்ற பாடில்லையே! பிறருக்குப் பிரசாரம் செய்ய எங்களுக்குத் தகுதி ஏது? முதலில் நாங்கள் ஆத்மாநுபவத்தை முயன்று பெறுகிறோம். பிறகு பிர சாரம் புரிகிறோம்' என்றனர் அவர்கள். தாங்கள் காணாத, கடைப்பிடிக்காத உண்மைகளைப் பிறருக்குப் போதிப்பதில் சார மில்லை, அது கேலிக்குத்தான் இடமாகும் என்பதனை சுவாமிஜியும் ஒப்புக் கொண்டார். என்றாலும் அவ்வப்போது மாந்தரின் அறி யாமையைக் காணும்போது ஆசாரிய உணர்வு அவரிடம் பொங்கத் தொடங்கும்.

இது போன்ற சந்தர்ப்பமொன்றில் குருபாயி ஒருவர் 'வெறுமனே பேசுவதால் என்ன புரட்டிவிட முடியும்?' என்று அவரிடம் கேட்டு விட்டார். அப்போது உணர்ச்சி வசப்பட்டு சுவாமிஜி சொல்வார்: ''எல்லாரும்தான் பிரசாரம் செய்கிறார்கள் என்பது வாஸ்தவமே. ஆனால் அவர் தாங்கள் என்ன செய்ய வேண்டும், என்ன செய்கிறோம் என்று தெரியாமலே பிரசாரம் புரிகிறார்கள். அவர்கள் உணராமலே செய்யும் பிரசாரத்தை நான் உணர்ந்து செய்வேன். ஆம், என்னுடைய குருபாய்க ளாகிய உங்களால்கூட என் வழியில் நிற்க முடியாது. நீங்கள் தடுத்தாலும் கேளாமல் நான் சேரிகளுக்குள் ஈனமான சேரிக்குச் சென்று பறையர்களுக்கும் உபதேசம் செய்வேன்.''

Koviloor Digital Library

சடேரென அவரது சிந்தனை ஒரு சுற்றுச் சுற்றியது. மெல்லிய குரலில் அவர் முனகினார், ''உபதேசம் செய்வது என்றால் என்ன? தன் எண்ணங்களை வெளிப்படுத்துவதே உபதேசம். த்ரைலங்க சுவாமி மௌனியாக இருக்கிறார், அவர் ஒருபோதும் பேசுவதில்லை என்பதால் அவர் உபதேசம் செய்யவில்லை என்று நினைக்கிறீர்களா? அவருடைய மௌனமே பிரசங்கமாகும். மரங்களும் செடிகளும்கூட இப்படி மோன உபதேசம் செய்தபடிதான் இருக்கின்றன.''

'கல்லிலே நீதி போதனை; ஓடையிலே உயர் நூல்கள்; விருக்ஷத்தில் பேசும் நாக்கு; உள்ளன வற்றிலெல்லாம் ஆனந்தம்' — என்ற ஆங்கிலக் கவி வாக்கை நினைத்தாற் போலப் பேசினார் சுவாமிஜி.

மத உபதேசம் செய்ததில் — வீட்டுக்கு வீடும், நாட்டுக்கு நாடும், சென்று ஆன்ம உணர்வைக் கிளறி விட்டதில் — சுவாமி விவேகானந்தருக்கு ஈடு யாருளர்? உள்ளத்தை ஈர்க்கும் அவருடைய குரலும், மொழியும், கருத்துமே வேதாந்த சமயம் நிலைபெற வகை செய்தன. அவரது சொற்பொழிவாற்றலை முதன் முதலில் கண்டவர்கள் வரநகரத்து சாது சங்கத்தினரே யாவர்.

*　　　*　　　*

மீண்டும் தீர்த்தாடனம் புறப்பட்டார் சுவாமிஜி. வாரணாசிக்குச் சென்றார். அங்கு பாபு பிரமததாஸ் மித்ரா என்பவரைச் சந்தித்து நெருக்கமான நட்பு பூண்டார். 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்றும் 'புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சி தான் நட்பாம் கிழமை தரும்' என்றும் பெரியோர் கூறியிருப்பதற்கேற்ப வெகு விரைவிலேயே சுவாமிஜியும் பிரமத தாஸ மித்திரரும் அத்தியந்த மித்திரர்களாயினர். சம்ஸ்கிருதத்தில் உயர்ந்த பாண்டித்தியம் பெற்றிருந்த பிரமத தாஸரிடமிருந்து புராதன பாரத சுருதி, ஸ்மிருதிகளில் தமக்கிருந்த ஐயங்களுக்கு விடை கண்டார் சுவாமிஜி. பிரமத தாஸரை விட்டுப் பிரிந்த பின்பும் கடிதப் போக்கு வரவு மூலம் சந்தேக விளக்கம் பெற்றுவந்தார் சுவாமிஜி.

காசியிலிருந்து அயோத்தியை அடைந்தார் சுவாமிஜி; ஆண்டவன் நாட்டை ஆண்ட மன்னர் குடியில் வந்து, ஆட்சி துறந்து ஆண்டியாக வனவாசம் செய்த மாண்பினை எண்ணி எண்ணி உருகினார். மனித தர்மங்களை எல்லாம் தெய்வம் எப்படிப் பாங்குற நடத்திக் காட்டியது என்றெண்ணி வியந்தார். மனிதனைத் தெய்வமாக்குவதற்காகத் தெய்வம் மனிதனாகிறது என்ற உண்மையினைச் சிந்தித்து, அதற்குக் காரணமான கருணையை வணங்கினார். சதா ராமாயணத்தைப் பற்றியே நினைந்து தமது

Koviloor Digital Library

அறிவுக் கண்ணுலும் அகக் கண்ணுலும் ராமராஜ்யத்தை மீண்டும் நிர்மாணித்துக் கண்டு வந்தார். அயோத்தி வேந்தனை சாதுக்கள் தோத்தரிக்கும்போது மெய் புளகிக்க, விழிநீர் சோரப் பரவசராகி அதனை ருசித்து ரசித்து மகிழ்ந்தார். அடி நாளிலிருந்து அவர் ராமபிரான்பால் கொண்டிருந்த பிரேமை கொஞ்சமா? பரமஹம்ஸரும் அவருக்கு ஸ்ரீராம மந்திரத்தை ஓதுவித்து ராம தரிசன வேட்கையை அவரில் தூண்டியிருந்தார் அல்லவா?

ராமன் ஆண்ட அயோத்தியிலிருந்து லக்ஷ்மணபுரியாகிய லக்னௌ சேர்ந்தார். அங்கு நவாபு மாளிகைகளையும், மசூதிகளையும், பூங்காக்களையும் சுற்றிப் பார்த்துத் தம் அழகுணர்ச்சிக்கு விருந்து படைத்துக்கொண்டார். பின்னர் ஆக்ராவை அடைந்தார். அவரது கலை உள்ளத்துக்குக் கொள்ளையின்பம் கூட்டியது தாஜ் மகால். ஷாஜஹான் மனைவியிடம் கொண்டிருந்த அன்பும், அந்த அன்பை ஆதாரமாகக் கொண்டெழுந்த தாஜ் மகாலின் அழகும் அவரைப் பரவசமாக்கின. திரும்பத் திரும்பச் சென்று தாஜ் மகாலைப் பார்த்து வந்தார் அவர். பற்பல கோணங்களில் நின்று கொண்டு அதன் வனப்பைக் காண்பார். 'இந்த அற்புதக் கட்டிடத்தின் ஒவ்வொரு சதுர அங்குலத்திலும் ஒரு நாள் முழுதும் கவனிக்கவேண்டிய அழகுகள் உள்ளன. தாஜ் மகாலை முழுமையாக அறிந்து ரசிப்பதற்கு குறைந்த பக்ஷம் ஆறுமாதங்களேனும் வேண்டும்' என்பார் சுவாமிஜி. ஆக்ராவிலுள்ள கோட்டை கொத்தளங்களைப் பார்வையிடும் போதும், அதன் வீதிகளில் நடமாடும் போதும் மொகலாய சாம்ராஜ்யச் சரித்திரம் முழுவதும் சுவாமிஜியின் கண் முன் விரியும். மொகலாயர்களின் தீஞ்சுவை ரஸனையைப் போற்றுவார். அதோடு இஸ்லாமிய சமயம் குறித்தும் அவரது சிந்தனைகள் செல்லும். 'இஸ்லாமியர் யாவரும் சமம்' என்ற கோட்பாட்டை நடைமுறை இந்து சமுதாயத்தில் காண முடியவில்லையே என்று அவர் துக்கிப்பார். பொதுவாக முகம்மதியர் தங்களின் உடலை எவ்வளவு நன்ருக வைத்துக்கொள்கிருர்கள் என்பதையும் கண்டு சவலையில் வாழும் இந்துக்கள் என்று தேக திடம் பெறுவார்களோ என்று விசனிப்பார். வேதாந்தியின் புத்தி பலமும், முஸ்லிம்களின் தேக பலமும் ஒன்று சேர்ந்த மக்களைக் கொண்ட நவ பாரதம் உருவாக வேண்டும் என்று ஆர்வமிகப் பெறுவார்.

* * *

1888-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பிருந்தாவன புண்ணிய பூமியை அடைந்தார் சுவாமிஜி. 'ராமனுகவும் கிருஷ்ணனுகவும் வந்தவன் ராமகிருஷ்ணனுக வந்துள்ளான்' என்ருர் பரமஹம்ஸர்.

Koviloor Digital Library

ராமன் பிறந்த அயோத்தியைக் கண்ட சுவாமிஜி இப்போது கண்ணன் வளர்ந்த திரு ஆய்ப்பாடியை அடைந்தார். பாலாழியில் துயிலும் பெருமான் பாலும் வெண்ணெயும் களவாடி உண்ட எளிமையை எண்ணிய சுவாமிஜி எளியோரிலும் எளியோராகக் கையில் தண்டமும், கமண்டலமும் ஓரிரு புத்தகங்களும் மட்டுமே தமது உடைமைகளாகக் கொண்டு பரிவிராஜகராகப் பிருந்தாவனத்துக்கு வந்தார். வேதங்களும், தேவர்களும், நெருங்கவொண்ணாத பிரபு பிறந்த இடத்தைச் சுலபமாக வந்தடைந்து விடக்கூடாது என்பதற்காக முப்பது மைல் தொலைவிலிருந்து வண்டி ஏறாமல் கால் நடையாகவே வந்து கண்ணனின் கழலிணைகள் திளைத்து விளையாடிய பிருந்தாவனத்தை அடைந்தார்.

அக்ரூரர், உத்தவர் முதலிய பரமஞானிகளுக்குப் பிரம்ம ஞானம் புகட்டிய வாசுதேவன் சுவாமிஜியின் துறவறத்தைச் சோதனை செய்தான். பிருந்தாவனத்துக்கு இன்னும் இரண்டு மைல்கள் இருந்தன. நடந்து நடந்து நரேந்திரருடைய கணுக்களெல்லாம் இற்றுப்போனாற் போலிருந்தன. சோர்வு அவரைப் பற்றிக்கொண்டது. சற்று புகைப் பிடித்தால் தெம்பாக இருக்குமே என்றெண்ணினார் அவர். அவர் அவ்வாறு எண்ணிய போதே சாலை ஓரத்தில் ஒருவன் புகையிலைக் குழாயை மூட்டிப் புகைப்பிடித்துக் கொண்டிருப்பதைக் கண்டார். களைப்புடன் அவனிடம் சென்ற சுவாமிஜி தாமும் சிறிது புகைப் பிடிக்க விரும்புவதாகக் கூறி அவனிடம் குழாயைக் கேட்டார். அவன் துணுக்குற்றான். ''ஐயோ, சாமியாருங்களே, நான் தோட்டி சாதியுங்க. எங்குழாயிலே நீங்க புகைப் பிடிக்கலாமுங்களா ?'' என்று பதறிக் கூறினான். நரேந்திரருக்கும் உடனே அருசி உண்டாகி விட்டது. நடையைத் தொடர்ந்தார். சிறிது தூரம் போதற்குள் அவருக்கு வேதனையும் வெட்கமும் உண்டாயின. ''நான் சந்நியாசி அல்லவா ? விரஜா சடங்கு செய்து சந்நியாசி என்று பிரகடனம் செய்து கொண்டவனல்லவா ? எனக்கேது ஜாதியும், குலமும் ? எந்தக் குடும்பத்தையும் சேராத துறவிக்கு ஜாதி என்று ஒன்று ஏது ? அப்படியிருக்கத் தோட்டியென்றும் தொண்டைமான் என்றும் நான் ஏன் பேதம் பாராட்டினேன் ?'' புகை பிடிக்க வேண்டும் என்ற ஆசையைவிடத் தன் தவறைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்ற துடிப்பு சுவாமிஜிக்கு அதிகமாயிற்று. வந்த வழியே திரும்பச் சென்று அந்த பங்கியை அடைந்தார் சுவாமிஜி. ''என் குழந்தாய், எனக்காகவும் கொஞ்சம் புகை தயார் செய்து அந்தக் குழலை இப்படிக் கொடு'' என்றார்

Koviloor Digital Library

அவனிடம். அப்போது அவருக்கு பிராயம் இருபத்தியாறுதான்; இருந்தாலும் அவருடைய உணர்வு அவரை அப்படி 'குழந்தாய்' என்று பேச வைத்தது. பங்கி எவ்வளவோ மறுத்துத்தான் பார்த்தான். ஆனால் அவனை விட்டுவிடுவாரா விடாக் கண்டரான சுவாமிஜி? அவனுடைய குழாயிலிருந்து புகைப் பிடித்துவிட்டுத்தான் மீண்டும் பிருந்தாவனத்துக்குப் புறப்பட்டார்.

இதைப் பற்றிப் பின்னர் ஒருகால் சிஷ்யரிடம் குறிப்பிட்ட விவேகானந்தர், ''பிள்ளாய், எளிதிலே சந்நியாச தர்மத்தைக் கடைப்பிடிக்க முடியும் என்று நினைக்கிறாயா? முடியாதப்பனே, முடியாது. அதைவிட சிரம சாத்தியமான, கடினமான, வாழ்முறை வேறு கிடையாது. செங்குத்துச் சரிவொன்றின் விளிம்பிலே ஓர் இம்மி நீ தவறி விட்டாலும் போதும், கிடு கிடு பள்ளத்தாக்கில் அப்படியே விழவேண்டியதுதானே? ஒருவன் சந்நியாசம் பூண்டுவிட்டானாயி ன்ஒவ்வொரு க்ஷணமும் தன்னைப் பரீக்ஷித்துக் கொள்ளவேண்டும். ஜாதி, குலம் முதலிய கருத்துக்களிலிருந்து தான் விடுபட்டாயிற்றா என்று அனவரதமும் சோதித்துக் கொண்டே யிருக்கவேண்டும். இந்தச் சம்பவம் எனக்குப் பெரியதொரு பாடத்தைப் புகட்டியது — யாரையுமே நான் அருவருக்கக்கூடாது; எல்லாரையும் ஈசுவரனின் குழந்தைகளாகக் கருத வேண்டுமென்பதுதான் அது'' என்றார்.

* * *

ஸ்ரீராமகிருஷ்ண தேவரின் கிருஹஸ்த சிஷ்யர்களில் ஒருவரான பலராம் போஸ் என்பவரின் முன்னோர்களில் ஒருவர் பிருந்தாவனத்தில் கட்டியிருந்த நந்தவனக் கோயிலில் ('குஞ்சம்' எனப்படுவது) வந்து தங்கினார் சுவாமிஜி.

தமது இதயக் கதவுகள் படீரெனத் திறந்துகொள்வது போலிருந்தது சுவாமிஜிக்கு. அந்தக் கதவுகளுக்கப்பாலுள்ள ஆனந்த சாம்ராஜ்யத்தில் ராதிகாவும் முரளீதரனும் அன்பு செய்து கொண்டிருந்தனர். ஆண்டவனால் மட்டுமே செலுத்தக்கூடிய அன்பை அந்த இடைப்பிள்ளை பொழிய, பக்தரால் மட்டுமே செலுத்தக்கூடிய பிரேமையை அந்த ஆயர்குலப் பெண் அவன் மீது சொரிந்து கொண்டிருந்தாள். ராதா-கிருஷ்ண காதையைப் பரிசசித்து வந்து, பின்னர் குருநாதரையே கனவினில் ராதிகையாகக் கண்ட சுவாமிஜி அந்தக் காட்சியில் தம்மை மறந்தார். ஜீவாத்மாவும் பரமாத்மாவும் இணையும் மகத்தான தத்துவமே ராதா-கிருஷ்ணப் பிரேமை என்று உணர்ந்து கொண்டார்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்குமுன் அந்த ரமணீயமான யமுனைச் சூழலில் நந்தகுமாரன் புரிந்த விந்தைகளை யெல்லாம்

Koviloor Digital Library

எண்ணியபடி பக்தியாவேசத்துடன் பிருந்தாவனத்தில் சுற்றிச் சுற்றி உவகையுற்ருர் சுவாமிஜி. கோவர்த்தன கிரியைக் கண்டு மலைக்கும் மீதாக உயர்ந்தது அவரது உள்ளம். மழையில் தவித்த கோக்களையும் கோபர்களையும் காப்பதற்காகக் குட்டி கிருஷ்ணன் தன் குஞ்சுவிரலால் அந்த மலையைத் தூக்கி நிறுத்திய அருங் குணத்தை நினைந்து நீர் பெருக்கினுர். 'குன்று குடையாய் எடுத் தாய், குணம் போற்றி' என்றேயல்லவா நாச்சியாரும் அருளிச் செய்தாள்?

கோவர்த்தனகிரியைக் கால்சோரப் பிரதக்ஷிணம் செய்யப் புறப்பட்ட சுவாமிஜி அன்று உணவு தம்மைத் தேடி வந்தா லொழிய தாமே உணவைத் தேடிச் செல்லலாகாது என்று சங்கற் பித்துக் கொண்டார். நண்பகல் வந்து விட்டது. உள்ளத்துக்குத் தானே சங்கற்பம்? உடலுக்கு அது எப்படித் தெரியும்? பசி வயிற்றைக் கிள்ளத் தொடங்கியது. இந்த நிலைமையில் மழை வேறு பெய்யத் தொடங்கிவிட்டது. மலையால் மழை தடுத்த கிரிதரனை நினைத்தபடி சுவாமிஜி சென்றுகொண்டேயிருந்தார். தலையைச் சுற்றிக்கொண்டு வந்தது. காதில் 'ஓ' வென்று ஓசை கேட்க ஆரம்பித்தது. ஏதேதோ இனம் தெரியாத சப்தங் களும் கேட்கலாயின. அந்த சப்தங்களுக்கிடையே, ''சுவாமிஜி சுவாமிஜி'' என்று யாரோ கூப்பிடுவதும் அவர் காதில் விழுந்தது. ஆனுல் அவர் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. போய்க்கொண்டே யிருந்தார். இப்போது குரலொலியோடு தம்மைத் தொடர்ந்து இரு காலடிகளின் ஒலியும் சேர்ந்து கொண்டது. வேகமாக நடக்கலானுர் அவர். பின் தொடரும் ஓசையும் அதற்குச் சரியாக துருதமாயிற்று. ''சுவாமிஜி, உங்களுக்கு நான் உணவு கொண்டு வந்திருக்கிறேன்'' என்றது பின்னுலிருந்து வந்த குரல். ''இது ஏதோ சோதனைதான்! இவ்வளவு அக்கறையாகத் தனக்கு யார் மழையில் நனைந்துகொண்டு உணவு எடுத்துக்கொண்டு வருவார் கள்? என் புத்திக்கு ஏதோ பழுது ஏற்பட்டுவிட்டது!'' என் றெண்ணிய சுவாமிஜி தமது புத்தியின் போக்கிலிருந்தே தப்பித்து ஓட விரும்புபவர் போல ஓடத் தொடங்கினுர். 'உண்மையி லேயே கண்ணபெருமான் என் சங்கல்பத்தை நிறைவேற்ற உணவு அனுப்பியிருப்பானுயின், நான் ஓட்டம் பிடித்தால் உணவு கொண்டு வந்தவன் திரும்பிவிடுவானு என்ன?' என்ற ஓர் எண்ணமும் சேர்ந்து அவரது கால்களை மேலும் விரைவு படுத்தின. அயர்ந்து போன சுவாமிஜியை அயராமல் பின் தொடரும் அந்தப் பாதங்கள் வென்று விட்டன. சுவாமிஜியின் முன்னுல் வந்து விட்டான் முன் பின் அவருக்குப் பழக்கமில்லாத ஒருவன். அவருக்கு உணவு

Koviloor Digital Library

படைத்து, உண்ணச் செய்தான். அவர் உண்டதுதான் தாமதம், ஒரு வார்த்தைக்கூடப் பேசாமல் அவன் போயே போய்விட்டான். 'முன்பின் தெரியாதவன்' என்று சொன்னேமல்லவா? அதற் கேற்ப இந்தச் சமயத்துக்குப் பின்னும் சுவாமிஜி அவனைப் பற்றி ஏதும் அறியவில்லை. மாயவனாகிய மாதவனின் கருணையையும், பக்தர்களின் சங்கல்பத்தை நிறைவேற்றுவதில் அவனுக்குள்ள நாட் டத்தையும் நினைந்து விம்மி வெடித்தார் சுவாமிஜி.

* * *

ராதா குண்டம் என்ற பகுதி ராதிகா தேவி வாழ்ந்து பக்தி பரப்பிய புண்ணியஸ்தலம். வைஷ்ணவர்கள் மகா க்ஷேத்திர மாகக் கருதும் இடம். சுவாமிஜி இங்கிருந்தபோது அவரிடம் ஒற்றை கௌபீனம் தவிர வேறெந்த வஸ்திரமும் இருக்கவில்லை. அதனை ஒரு நாள் அவர் கசக்கி உலர்த்தி வைத்திருக்கும்போது ஒரு குரங்கு அதனைத் தூக்கிக்கொண்டு ஓடிவிட்டது. மரத்தின் உச்சாணிக் கிளை யொன்றில் ஏறி அமர்ந்து கொண்டு விட்டது. அந்தக் குரங்கிடம் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தார் சுவாமிஜி. அது அவருக்கு அழகு காட்டிக்கொண்டு பேசாமலே யிருந்தது. இப்படித் தாம் மானபங்க மடைந்து நிற்கவேண்டி நேர்ந்ததைக் குறித்து சுவாமிஜிக்குக் கோபம் வந்தது. அந்தக் கோபம் வான ரத்தின்மீது திரும்பவில்லை. ராதையின்மீதே திரும்பிற்று. கோபிகைகளின் வஸ்திரத்தைக் கண்ணன் எடுத்து வைத்துக் கொண்டு அவர்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டது போல நப்பின்னை தம்மை சோதிக்கிருள் என்று அவர் எண்ணி ஞரோ என்னவோ? ''தயா மூர்த்தி தயா மூர்த்தி என்று எல்லாரும் போற்றும் ராதே! உன் இருப்பிடம் தேடி வந்த இந்த இளைஞனை இப்படியா இழிவு செய்வாய்? அதோ கண் ணுக்குத் தெரிகிறதே, அந்த வனத்துக்குச் சென்று பட்டினி கிடந்து உன்னுடைய க்ஷேத்திரத்தில் என் உயிரையே விட்டு விடுகிறேன்'' என்று குமுறியபடி காட்டை நோக்கி ஓடலானுர் சுவாமிஜி.

எல்லாவற்றையும் எங்கிருந்தோ கவனித்துக் கொண்டிருந்த ஒருவன் ஒரு காஷாய வஸ்திரமும், சிறிது உணவும் எடுத்துக் கொண்டு வனத்துக்குச் சென்ருன். சுவாமிஜியின் விசால நேத் திரங்களில் பனித்திரையிட்டது. கௌபீனதாரியாக இருந்தவ ருக்கு வேட்டியே கிடைத்து விட்டது. அதனை அணிந்து உணவை யும் உட்கொண்டார். வனத்திலிருந்து வெளிப்பட்டால், அவர் எங்கே கௌபீனத்தை உலர்த்தியிருந்தாரோ, அங்கேயே அது காய்ந்து கொண்டிருந்தது!

Koviloor Digital Library

துன்பத்தை உண்டாக்கும் தெய்வமே அதனை நீக்கவும் செய்கிறது. நீக்குவதற்காகவே துன்பத்தை உண்டாக்குகிறது அது! 'திமை காட்டி விலக்கிடும் தெய்வம்' என்று கவி எவ்வளவு அழகாகக் கூறிவிட்டார்!

* * *

மானுபிமானம் விடமுடியாமல் ராதா குண்டத்தில் தவித்த சுவாமிஜி மானுபிமானம் விட்டுப் பராபக்தி செய்த ராதையை நன்கு புரிந்துகொண்டு விட்டார். தாம் முன்பு கேலி செய்து வந்த மதுரபாவத்தின் உயரிய தாத்பரியத்தையும் உணர்ந்தார்.

* * *

உத்தரப் பிரதேசத்தில் ஒரு சமயம் சுவாமிஜி தன்னந்தனியாகச் சஞ்சரித்துக் கொண்டிருந்தபோது ஸ்ரீராமனுடைய இன்னருளை அவர் பிரத்யக்ஷமாகக் கண்ட ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

சுவாமிஜி சென்ற ரயிலில், அதே மூன்றும் வகுப்புப் பெட்டியில் பனியா என்று கூறப்படும் வட இந்திய வர்த்தக குலத்தைச் சேர்ந்த ஒருவர் உடன் வந்தார். சுவாமிஜிக்கு தாக மெடுத்தது. வழியிலிருந்த ரயில் நிலையங்களில் ஏதேனும் காசு கொடுத்தால் தான் நீர் கொடுப்பார்கள். இவரிடமோ கால் காசு கிடையாது. அன்பர்கள் ரயில் டிக்கட் வாங்கிக் கொடுத்து விடுவார்கள். பணமாக எது கொடுத்தாலும் சுவாமிஜி ஏற்றுக்கொள்ள மாட்டார். இந்த நிலையில், தவித்த வாய்க்குத் தண்ணீர் கிடைக்காமல் அவதி யுற்றார் சுவாமிஜி. அப்போது சக பிரயாணியான அந்த வணிகப் 'புண்ணியாத்மா' கெக்கலி கொட்டிச் சிரித்தார். 'எங்களைப் போல உடம்பால் உழைத்து வேலை செய்து பொருள் ஈட்டுவதற்கு உமக்கென்ன கேடு? சமூகத்துக்குப் பாரமாக சந்நியாசம் வாங்கிக் கொண்டதன் பலனைப் பாரும்' என்று கூறி அவர் சுவாமிஜியைக் குத்திக் காட்டினார். சுவாமிஜி ஆத்திரமடையாமல் மௌனமாகவே யிருந்தார்.

தாரிகாட் என்ற ஊரில் இருவரும் இறங்கினர். வெயில் பொசுக்கிக் கொண்டிருந்தது. பசியிலும் தாகத்திலும் வாடிய சுவாமிஜி பிரயாணிகளுக்காக ஏற்பட்ட கூரைவேய்ந்த இடம் ஒன்றை நாடிச் சென்றார். அங்கிருந்த புண்ணியாத்மாக்களான ஊழியர்கள் 'காசு தந்தாலொழிய இங்கே உட்காரக் கூடாது' என்று சுவாமிஜியை ஈரமின்றி விரட்டினார்கள். மாடமாளிகையில் பிறந்து வளர்ந்த சுவாமிஜி அப்போதும் மனக்கிளர்ச்சி அடையாமல் காயும் வெயிலில் சென்றமர்ந்தார். தங்கு மிடத்தில் அமர்ந்து லட்டும், பூரியுமாக விழுங்கிய வணிகப் பெருந்தகை

Koviloor Digital Library

மீண்டும் சுவாமிஜியைத் தாக்க ஆரம்பித்தார். 'சந்நியாசத்தின் பலன் பார்த்திரா' என்று கொக்கரித்தார். 'பணம் எதற்கு, காசு எதற்கு என்று உபதேசிக்கிறீரே! இப்போது வற்றிய தொண்டையும், காய்ந்த வயிறுமாக, கட்டாந்தரையில் வறுபடுகிறீரே — அதற்காகத்தான் சாமியாரே, காசும் பணமும் வேண்டுமென்பது' என்று சுவாமிஜிக்கு போதிக்க வேறு தொடங்கிவிட்டார். அப்போதும் சுவாமிஜியின் நரம்பு மண்டலத்தில் ஒரு சிறு நரம்புங்கூட இம்மியளவு அசையவில்லை. எங்கிருந்துதான் அவருக்கு அவ்வளவு சாந்தம் வந்ததோ?

அச்சமயத்தில் உள்ளூர் வாசி ஒருவன் வலதுகையில் ஒரு மூட்டையும் டம்ளரும் இடது கையில் ஒரு மண் கூஜாவும், கையிடுக்கில் ஒரு விரிப்புமாகப் பரபரக்க சுவாமிஜியிடம் ஓடி வந்தான். ஸ்டேஷனில் சுத்தமான ஓர் இடத்தில் ஒரு விரிப்பை விரித்தான். தான் கொண்டு வந்திருந்த நானுவித உணவுப் பண்டங்களைப் பரிமாறினன். மண்பானையிலிருந்து நீர் சரித்து வைத்தான். சுவாமிஜியிடம் வந்து பயபக்தியுடன், ''பாபாஜி, உண்ண வாருங்கள்'' என்று அழைத்தான். சுவாமிஜிக்கு ஒன்றுமே புரியவில்லை. ''அப்பனே, என்னைத் தவருக யாரோ என்றெண்ணி உபசரிக்கிருய் போலிருக்கிறது'' என்ருர். ''அதெல்லாம் இல்லை; நான் கண்ட பாபாஜியேதான் நீங்கள்'' என்ருன் அவன். ''நீ கண்டாயா? எங்கே? எப்போது?'' என்று கேட்டார் சுவாமிஜி.

அவன் ஆரம்பித்தான்: ''நான் இந்த ஊரில் பக்ஷணக்கடை வைத்திருப்பவன். இன்று மத்தியானம் வழக்கம்போல் சிறிது தூங்கப் படுத்தேன். தூக்கத்தில்...... அதை என்ன சொல்வேன், போங்கள்! ஸ்ரீராம்ஜி இந்த எளியேனுக்குத் தரிசனம் தந்தார். உங்களை எனக்குக் காட்டி நீங்கள் நேற்றிலிருந்து பட்டினியாக இருப்பது தன்னை வருத்துகிறது என்று கூறி, 'புதிதாகப் பணியாரங்கள் பண்ணி எடுத்துக்கொண்டு இப்போதே நீ ரயில் நிலையத்திலிருக்கும் அவரிடம் ஓடு' என்று ஆக்ஞாபித்தார். நான் கனவு கலைந்து விழித்துக் கொண்டேன். என்ருலும் இது ஏதோ வெறும் கனவுதான் என்று உறங்கப் போனுல் மீண்டும் ரகுவீர் தோன்றி உங்களுக்கு உணவு படைக்குமாறு கட்டளையிட்டான். அதே போல இதோ புதிதாகப் பூரியும், மிட்டாய்களும் செய்து வந்திருக்கிறேன், பாபாஜி! எழுந்திருந்து வாருங்கள்'' என்ருன்.

குழந்தைப் பருவத்தில் தாம் ராமனிடம் பக்தி பூண்டதையும், பின்னர் ஸ்ரீராமப் பதுமையை உடைத்தெறிந்ததையும்,

Koviloor Digital Library

அப்புறம் பல்லாண்டுகளுக்குப் பின் குருமஹராஜ் தமக்கு ராம மந்திரம் உபதேசிக்கத் தாம் அவனைக் காணவேணுமென்று வெறி பிடித்தலைந்ததையும் எண்ணிப் பஞ்சாக நைந்து போனார் சுவாமிஜி. அவர் கண்கள் மாலை மாலையாக நீரைப் பொழிந்தன,; ''கருணைக் கடலே, ராகவா! இத்துணைப் பரிவா உனக்கு?'' என்று விம்மிய படியே, மிட்டாய்வாலாவுக்கு மனதார நன்றி கூறி உண்ண எழுந்தார் சுவாமிஜி. ''பாபாஜி, எனக்கு நன்றி கூறு கிர்கள்! இதெல்லாம் ஸ்ரீராம்ஜியின் சித்தம்!'' என்றான் உண்மையான பக்தி நிறைந்த அந்த மிட்டாய்வாலா. ராமச்சந்திரப் பிரபு ஒருவன் கனவில் தோன்றி அன்பாணை இடவேண்டுமானல் அவன் எவ்வளவு உத்தமமானவனாக இருக்க வேண்டும்?

இந்தக் காட்சியைக் கண்ட வணிகர் அதிசயமும், பச்சாத் தாபமும், அவமானமும் மேலிட சுவாமிஜியின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

நம்மைப் பூரணமாக பகவானுக்கு அர்ப்பணித்துக் கொண் டால் அவன் நம் வாழ்க்கையின் சின்னஞ்சிறிய அம்சங்களைக்கூட் நிச்சயமாகக் கவனித்துப் காப்பான். இதில் சந்தேகமேயில்லை. ஆனல் அப்படி அவன் விட்ட வழி யாகட்டும் என்பதாக மனசில் எத்தகைய ஆசையுமின்றிப் பூரணமாக சரணாகதி செய்ய யாருக்கு முடிகிறது? சுவாமிஜியால் முடிந்தது. ''என்னைச் சரண் அடைவாய்! நான் உன்னைக் காக்கிறேன். வருந்தாதே'' என்று தேனாக உபதேசித்த பிரபு பக்தனைக்காத்து தன் வாக்கையும் காப்பாற்றி விட்டான்.

* * *

மலையில் தவழும் பாகிரதி சமவெளியைத் தீண்டும் புண்ணிய ஸ்தலமாகிய ஹரித்வாரத்துக்கே கிளம்ப உத்தேசித்தார் சுவாமிஜி. வழியில் ஹத்ராஸ் என்ற ஊரில் ரயில் நிலைய வேளியில் அமர்ந்து தியானம் புரியலானார். ஹத்ராஸில் ஸ்டேஷன் மாஸ்டராக இருந்த சரத் சந்திர குப்தா ஒரு வங்காளி யாவார். ஜான்பூரில் முகமதியர்களுக்கு மத்தியில் வளர்ந்ததால் வங்காள மொழியை விட நன்றாக ஹிந்தி பேசக்கூடியவராக அவர் இருந்தார். 'இனிமை, இதய சுத்தம், ஆண்மை' என்ற மூன்று வார்த்தைகளில் அவரது இயல்பை வருணித்து விடலாம் என்று மேல்நாட்டுச் சிடர்கள் கூறுகின்றனர். ஸ்டேஷன் மாஸ்டர் என்ற முறையில் பல யாத்ரிகர்களைக் கண்டவர் அவர். என்றாலும் இவரைப் போல எவரையும் அவர் கண்டதில்லை. சுவாமிஜியின் அறிவுக் கனலான கண்களை அவரது கண்கள் சந்தித்தவுடனேயே 'இதோ ஓர் ஆத்மீகப் பெட்டகத்தைக் கண்டு விட்டோம்; இதனை விடலா

Koviloor Digital Library

காது' என்று அவர் பக்தி பூண்டு விட்டார் ''பார்த்த மாத்திரத்திலேயே அந்தக் கொள்ளிக் கண்களை நான் பின் தொடரலானேன்'' என்று பிற்பாடு சரத் சந்திர குப்தா வேடிக்கையாகக் கூறியதுண்டு. சுவாமிஜியும் சரத்தும் பரஸ்பரம் அறிமுகம்செய்து கொண்டார்கள்.

''சுவாமிஜி, தாங்கள் பசியாயிருக்கிறீர்களா ?' என்று பரிவோடு கேட்டார் சரத். ''ஆம்'' என்றுர் சுவாமிஜி. ''அப்படியானுல் என் இல்லத்துக்கு வாருங்கள்'' என்று உடனடி அழைப்பு விடுத்தார் சரத். ''வந்தால் என்னென்ன கொடுப்பீர்கள் ?'' என்று குழந்தை போல வினவினுர் சுவாமிஜி. ''என் இதயத்தைக் கொண்டே இன்சுவைப் பணியாரம் செய்தளிப்பேன், என் அன்பே'' என்ற பெர்ஷியப் பாடலொன்றைப் பாடினுர் சரத். நீண்டகாலம் விட்டுப் பிரிந்திருந்து, பின்பு மீண்டும்கூடிய அன்பர்கள் போல இருவரும் சரத் சந்திரரின் வீட்டை அடைந்தார்கள். அங்கு சென்றதும் சுவாமிஜி ஒரு வங்காளிப் பாட்டை முணு முணுத்தார்: ''வெண்ணீறணிந்த மதி முகத்தோடு என் அன்பன் வரவேண்டும்'' என்று. தமது அலுவல் உடுப்புக்களைக் களைந்து வேற்றுடை அணிந்து தமது சந்திரமுகத்தில் வீபூதி பூசிக்கொண்டு வந்தார் சரத் சந்திரர். இருவரும் ஆனந்தமாக உண்டார்கள்.

சரத்துடன் பேசிக்கொண்டிருக்கையில் விரஜேன் பாபு என்ற தமது பழைய நண்பரொருவர் அருகிலேயே வசிப்பதாக சுவாமிஜி தெரிந்து கொண்டார். அவரைக் காணச் சென்றுர். விரஜேன் பாபு அவரைப் பேரன்போடு வரவேற்றுர். தம்முடனேயே சில காலம் தங்கியிருக்குமாறு அவர் சுவாமிஜியைக் கேட்டுக் கொண்டார்.

சுவாமிஜி அங்கு தங்கியிருக்கும்போது சரத்தும், அவருடைய நண்பர் நட கிருஷ்ணு என்பவரும் அடிக்கடி அவரை வந்து பார்த்து அகமகிழ்ச்சி கொண்டனர். உள்ளூரிலிருந்த வங்காளிகள் யாவருமே தமது பிராந்தியத்தைச் சேர்ந்த யௌவனத் துறவியை வந்து தரிசித்தபடி இருந்தனர். இந்த நாட்களைப் பற்றி நட கிருஷ்ணு கூறியதாவது: ''அவரோடு ஆத்மீக விஷயங்களைப் பேசியபடி நாங்கள் மிகவும் புண்ணியமான நாட்களைக் கழித்தோம். அவருடைய புனித சங்கத்தின் காரணமாக வங்காளிகளிலேயே பல பிரிவினருக்கிடையே இருந்த சச்சரவுகளும், கெட்ட எண்ணங்களும் மறைந்தன. வயதில் பெரியவர்களென்றும், சமூக அந்தஸ்தில் உயர்ந்தவர்களென்றும் தருக்குக் கொண்டிருந்தவர்களும் அந்தச் செருக்கை மறந்து, குழந்தைகள் போல இளம்

Koviloor Digital Library

துறவியின் முன்வந்து அமர்வார்கள். சமய விஷயங்களைப் பற்றி அவரிடம் வினவுவார்கள். மாலை வேளைகள் சங்கீதத்திலேயே கரையும். அவரது மதுரமான சாரீரத்தில் அப்படியே வசமாகி, மந்திரத்தால் கட்டுண்டார் போலப் பல மணிகள் வந்தவர் அனைவரும் கானத்தைக் கேட்பார்கள். எவ்வளவுக் கெவ்வளவு அதிக நாழி அவர் பாடக் கேட்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு அதனை மேலும் கேட்க வேண்டும் என்று அவர்களது ஆத்மா வேட்கையுறும்.''

* * *

''ஏன், சிந்தாகுலமாகக் காண்கிறீர்கள்?'' என்று ஒரு நாள் சுவாமிஜியைக் கேட்டார் சரத்.

''குழந்தாய், மகத்தான பணியொன்றை நான் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. பணியின் பெருமையையும் என் ஆற்றலின் சிறுமையையும் எண்ணினால் மனம் நொய்ந்து போகிறது. பெரிய காரியம் ஒன்றைச் சாதிக்கும்படி என் குரு எனக்கு ஆக்ஞையிட்டிருக்கிறார். அது எனது தாய் நாடு முழுவதற்கும் புத்துயிரளிக்கும் பெரும் பணியாகும். நாட்டில் ஆத்மீகம் என்பது அடிமட்டத்துக்கு வடிந்து விட்டது. பஞ்சமும் பிணியும் தலைவிரித்தாடுகின்றன. இந்தியா உத்வேகம் பெறவேண்டும்; தனது ஆத்மீகத்தால் அகில உலகத்தையும் வெற்றி கொள்ளவேண்டும்'' என்று சுவாமிஜி உணர்ச்சி பொங்கக் கூறினார். சுவாமிஜியின் ஆர்வம் சரத் சந்திரரை அப்படியே கட்டிப் போட்டுவிட்டது. அவரது பணிக்குத் தம்மை இதய பூர்வமாக அளித்துக் கொண்டுவிட்டார் சந்தர். அந்தரங்க சுத்தத்துடன் ''சுவாமிஜி, அடியேன் இதோ இருக்கிறேன்; தங்களின் பணிக்கு நான் என்ன செய்ய வேண்டுமென விரும்புகிறீர்கள்?'' என்று கேட்டார். ''கையில் கப்பரையும் கமண்டலமும் எடுத்துக்கொண்டு உழைக்க நீ தயாராக இருக்கிறாயா? வீடு வீடாகப் பிச்சை கேட்க உன்னால் முடியுமா?'' என்று வினவினார் சுவாமிஜி. ''இதோ'' என்றார் சரத்.

கையில் கப்பரையை எடுத்துக்கொண்டு, தாம் எந்த ரயில் நிலையத்தில் ஸ்டேஷன் மாஸ்டராக இருந்தாரோ அதே ரயில் நிலையத்திலுள்ள போர்ட்டர்களிடம் பிச்சை கேட்டார் சரத்.

சந்நியாச யோகத்தில் இயற்கையாகவே நிலைத்த ஜீவன்கள் இந்தப் புனித மண்ணில் எவ்வளவோ பேர் உண்டு. இந்த மண்ணுக்குப் புனிதம் கூட்டுபவர்கள் அவர்களே!

'சந்நியாச யோகத்தால் சுத்த ஸத்துவர்களான யதிகள் தங்களது வேதாந்த அநுபவ ஞானத்தால் பிரம்ம சாக்ஷாத்

Koviloor Digital Library

காரத்தில் திட நிச்சயம் பெற்றவர்கள்; அவர்கள் பிரம்மத்தி லேயே நிலைபெற்ற ஜீவன் முக்தர்களாக வாழ்ந்து, சரீரம் விழுந்த பின் எல்லாவற்றினின்றும் விடுபட்டுப் பரம்பொருளில் லயிக்கின் றனர்' என்று உபநிஷதமும் இவர்களின் பெருமையை எடுத் தோதுகிறது.

*　　　*　　　*

''நான் இந்த ஹத்ராஸில் நீண்டநாள் தங்கி விட்டேன். யதிகள் எங்கும் அதிக காலம் தங்கக் கூடாதென நியதி. மேலும் எனக்கு உங்களிடமெல்லாம் வேறு பந்தம் வளர்ந்து வருகிறது. ஆத்மீக வாழ்விலும்கூட ஒரு பந்தம் இருக்கிறது. நான் போக வேண்டும். தடை செய்யாதீர்கள்'' என்று ஒரு நாள் சரத்தை யும் நட கிருஷ்ணவையும் கேட்டுக் கொண்டார் சுவாமிஜி. அவர்களால் பிரிவு எண்ணத்தையே தாங்க முடியாமலிருந்தது. ''எங்களையும் உங்கள் சீடர்களாக்கி உடன் அழைத்துச் செல்லுங்க ளேன்'' என்று கெஞ்சினர். ''என் சிஷ்யராக ஏன் ஆக வேண்டும்? என் சீடராவதால் மட்டுமே ஆத்மீக வாழ்விலுள் ளதை யெல்லாம் பெற முடியுமாக்கும் என்று நினைத்து விடாதீர் கள்'' என்றார் சுவாமிஜி. ''ஆண்டவன்தான் சகலமாகவும் இருக்கிறான் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். அந்த நினைவுடன் நீங்கள் செய்யும் எதுவுமே உங்களை முன்னேற்றி விடும். என்னை ஒரு மாதிரி விட்டு விடுங்கள்! நான் அடிக்கடி உங்களிடம் வருகிறேன்; வந்து தங்குகிறேன்'' என்று தொடர்ந்து ஆறுதல் கூறினார். நடகிருஷ்ண அவர் வார்த்தைக் குக் கட்டுப்பட்டார். ஆனால் தமது இதயத்தையே அவருக்குப் படைத்த சரத் சந்திரர் கேட்கவில்லை. சுவாமிஜியிடம் சந்நியாச தீக்ஷை பெற்றார் அவர்.

*　　　*　　　*

சுவாமிஜியும் சரத் சந்திரரும் ஹிருஷீகேசத்துக்குப் புறப்பட் டார்கள். இந்திரியங்களை அடக்கி ஆளும் பகவான் ஹிருஷீ கேசன். அவனது பெயர் தாங்கிய க்ஷேத்திரம் ஹிமாலயச் சாரலி லுள்ளது. எளிதில் சென்றடைய முடியாதது அது. அதுவும் நூறு ஆண்டுகளுக்கு முன்னால் என்றால் கேட்பானேன்?

சரத் சந்திர குப்தர் சௌக்கியமாக வாழ்ந்து பழகியவர். மலைப்பயணத்தின் கடுமையை அவரால் தாங்கிக்கொள்ள முடிய வில்லை. சந்நியாசிகளின் சாதனைகளும், எதிர்காலம் இன்ன தென்று கூறமுடியாத நிச்சயமின்மையுமே முதலில் சரத்தை அஞ்சச் செய்தன. அதில் இந்த மலைவழி சஞ்சாரமும் சேர்ந்து

Koviloor Digital Library

கொண்டது. சாதனைகளைத் தாங்கவும், எதிர்காலச் சிந்தையே அற்றிருக்கவும் சுவாமிஜி அவரைப் பழக்கி, முதலில் அச்சம் தந்த அவ்வினங்களை இன்பங்களாக்கினார். குருவாக இருந்து இந்த உபகாரம் செய்த சுவாமிஜி, சரத்தினால் யாத்திரையின் கடுமையைத் தாங்க முடியாதபோது அவருக்குத் தோழனாகவும், தாசனாகவும் இருந்து தம் ஒப்பற்ற மானுடப் பண்பினால் அவரது உள்ளத்தைத் தொட்டுவிட்டார்.

ஹிமாலயத்தை ஒட்டியுள்ள மாவட்டங்களில் அவர்களிருவரும் சஞ்சாரம் செய்து கொண்டிருந்தார்கள். அப்போது சரத் பலமுறை பசியாலும், தாகத்தாலும் மயக்க முற்றிருக்கிறார். சுவாமிஜிதான் அக்கறையுடன் அவரைப் பேணிச் சாவிலிருந்து காப்பாற்றியிருக்கிறார். காட்டாறு ஒன்று அவர்கள் பிரயாணத்தின்போது குறுக்கிட்டது. சரத் ஏறிக்கொண்டிருந்த குதிரைக்கு முன்பாக சுவாமிஜி காசாரிபோலச் சென்று அவரை ஜாக்கிரதையாக அக்கறை சேர்த்தார். காட்டாற்றுக்கு வேகம் அதிகம், அதன் அடிமண் வழுக்கும் என்பதாலேயே சரத்தின் குதிரையை முன்னால் விட்டால் என்னாகுமோ என்று கருதி அந்த ஆபத்தைத் தாமே துணிந்து ஏற்றுக்கொண்டார் சுவாமிஜி.

''எனக்காக அவர் தம் வாழ்க்கையைப் பலமுறை பணயம் வைத்துக் கொண்டிருக்கிறார்'' என்று பிற்காலத்தில் சரத் கூறியதுண்டு. ''அன்பு, அன்பு, அன்பு என்ற வார்த்தையாலன்றி அவரை நான் எப்படி வருணிப்பேன்!'' என்று உள்ளம் நனைந்து கூறுவார் சரத்.

சரத்துக்குக் காய்ச்சல் கண்டு விட்டது. அவருடைய உடைமைகளையெல்லாம் சுவாமிஜியே சுமந்து கொண்டு சென்றார் — பாதரக்ஷை உள்பட. இதைப் பிரிதொருபோது சுவாமிஜி சரத் சந்திரருக்கு நினைவூட்டியதுண்டு. ''சுவாமி, தாங்கள் என்னைக் கைவிடப் போகிறீர்களா?'' என்று சரத் சுவாமிஜியைக் கேட்டார். அப்போது கொஞ்சம் கடுமையுடன் சுவாமிஜி, ''முட்டாள்! உன்னுடைய செருப்பைக்கூட நான் தூக்கியிருக்கிறேன் என்பதை மறந்து போனாயா?'' என்று நினைவு படுத்தினார்.

சுவாமிஜியும் சரத்தும் கானகம் பலவற்றில் திரிந்ததுண்டு. ஒரு நாள் காஷாயம் சுற்றியிருந்த ஒரு எலும்புக் கூட்டை அவர்கள் கண்டார்கள். ''பார்த்தாயா!'' என்றார் சுவாமிஜி. ''புலியோ எதுவோ சந்நியாசி ஒருவரைப் பக்ஷித்திருக்கிறது. என்ன, பயமாயிருக்கிறதா?'' என்று கேட்டார். ''பயமா, உங்களுடனிருக்கும்போதா?'' என்று பளிச்சென்று திருப்பிக் கேட்டார் சரத்.

Koviloor Digital Library

ஹிருஷீகேசத்தில் பல சந்நியாசிகளும் சாதுக்களும் இருந்து வந்தனர். அவர்களிருவராகவே சுவாமிஜியும் சரத் சந்திரரும் வாழ்ந்தனர். புனிதம் கமழும் அந்தச் சூழலில் சுவாமிஜி மிகவும் உற்சாகமாக யிருந்தார். கங்கையின் முணு முணுப்பைக் கேட்டும், தூரத்தே பனிமுடி தரித்து விளங்கும்ஹிமவந்தனைக் கண்டும் ஆனந்தம் கொண்டார். இந்தச் சமயம் பார்த்து சரத் மீண்டும் ஜுரத்தில் விழுந்தார். ஹிருஷீகேசத்தில் மேலும் சில காலம் தங்கி, கேதாரிநாதத்துப் பரமேசனையும், பதரிநாராயணத்து ரமேசனையும் தரிசித்து வர எண்ணியிருந்த சுவாமிஜி தம் திட்டத்தைக் கைவிடும்படியாயிற்று. சீடரையழைத்துக் கொண்டு மீண்டும் ஹத்ராஸ் வந்தார். வந்ததும் சுவாமிஜிக்கு ஜுரம் கண்டு விட்டது. ஹிருஷீகேசத்தில் பிடித்துக்கொண்ட மலேரியா இங்கு தன் சுய ரூபத்தைக் காட்டிவிட்டது. இவ்விஷயத்தை அறிந்த வரநகரத்து மடத்தினர் அவரை உடனே அங்கு வந்துவிடும்படி எழுதினர். அவர் தங்களிடம் வந்துவிட வேண்டும் என்ற ஆதுரம் காரணமாக, கல்கத்தாவில் ஏதேதோ அவசர அலுவல்கள் இருப்பதாகவும் அவர்கள் எழுதியிருந்தனர். ஜுரம் சற்றுத் தணிந்த போதிலும், மிகவும் பலவீனமாகயிருந்த சுவாமிஜி வரநகரத்துக்குப் புறப்பட்டார். சரத் சந்திரரிடம் விடைபெறுவது லேசில் முடிகிற காரியமாயில்லை.

கன்றை யடைகிற தாய்ப் போலப் பல மாதங்களுக்குப்பின் சரத் சந்திரர் வரநகரத்து மடத்தை அடைந்தார். அவரை இரண்டு கைகளாலும் வரவேற்றனர் அங்கிருந்த சந்நியாசிகள். சரத் சந்திர குப்தா என்ற ஸ்டேஷன் மாஸ்டர் சதானந்தர் என்ற சாதுவானார்.

1888-ம் ஆண்டு இறுதியில் சுவாமிஜி வரநகரம் திரும்பினார். அப்போது சந்நியாசிகளில் பலர் அங்கில்லை. சுவாமிஜியைப் போலவே அவர்கள் தேச சஞ்சாரம் செய்து கொண்டிருந்தனர். எனினும் குருமஹராஜின் கிருஹஸ்தச் சீடர்கள் யாவரும் வரநகரத்தில் வந்து சுவாமிஜியைக் கட்டுக்கடங்காத அன்போடு வரவேற்றனர். அதன் பின் ஓராண்டுக் காலம் சுவாமிஜி பெரும்பாலும் வரநகரத்திலேயேதான் இருந்து வந்தார். உடல்நலம் சரியில்லை என்று வேனிற்காலத்தில் சிமுல்தாலாவுக்குச் சென்றது தவிர வேறெங்கும் அவர் போகவில்லை.

வரநகரத்து அடியார்களிடம் மீண்டும் மக்கள் சேவைபற்றி வலியுறுத்தலானார் சுவாமிஜி. தாம் கண்டதையும் கேட்டதையும் அவர்கள் யாவருக்கும் பொதுவான அநுபவமாக்கினார். வேரில் பாய்ச்சிய நீர் தரு முழுவதற்கும் செல்வதுபோல ஸ்ரீராம

Koviloor Digital Library

கிருஷ்ண சங்கத்தின் வேராகயிருந்து, சங்கத்தினர் யாவருக்கும் தம் அறிவைத் தந்து வந்தார் சுவாமிஜி. உள்ளத்தில் உள்ளதைத் தெளிய எடுத்துக்கூறும் ஆற்றலும் அவரிடம் மிகுந்து வந்தது. செடியில் பூக்கள் அரும்பு கட்டுவதுபோல அவருடைய சிந்தனை யிலும் பல்லாயிரம் கருத்துக்கள் பூக்கத் தொடங்கிவிட்டன. அந்தப் புஷ்பங்களை குருபாயிக்கள் யாவருக்கும் அள்ளி அளித்தார். இதனால்தான் சுவாமிஜியின் சரிதத்தைக் கூறும் மேல்நாட்டுச் சீடர்கள், 'விவேகானந்தர் தாம் புகழுற்ற காலத்தில் உலகுக் களித்த உயர்ந்த கருத்துக்கள் சக சாதுக்களுக்குப் புதியனவாக யில்லை; வரநகரத்தின் வாழ்வின்போது அவர்கள் கேட்டு, மகிழ்ந்து பின்பற்றியனவாக இருந்தன' என்று கூறுகிறார்கள்.

முக்கியமாக, அறிவு செல்லக்கூடிய மட்டும் ஹிந்துமதம் அறிவுக்குப் பொருந்தியதே என்பதை அவர்களுக்கு விளக்கி, ஹிந்து மதம் மூடநம்பிக்கை மிகுந்தது என்று நிந்திப்பவருடன் வாதப் போரிட்டு வெற்றிகாண மற்றவர்களைப் பழக்கினார் சுவாமிஜி. அந்நியர்கள் எடுத்துக் காட்டும் மூடப் பழக்க வழக் கங்களும், நம்பிக்கைகளும் ஹிந்து மதத்தில் இருக்கலாம்; எனி னும் அவையே ஹிந்துமதமாகா; உண்மையாக ஹிந்து மதத்தைக் காப்பாற்றவேண்டுமானால் அப்படிக் காக்க விரும்புபவர்கள் இந்த மூட நம்பிக்கைகளைத் தாக்குவதில் அந்நியர்களைவிடத் தீவிரமாக இருக்கவேண்டும்; அவற்றைக் களைந்தபின் ஹிந்து மதத்திலுள்ள உத்தமமான உண்மைகளைப் பாரெங்கும் பரப்ப வேண்டும் என்று முழங்கி வந்தார்.

சுருதியாகிய வேத வேதாந்தங்களையும், ஸ்மிருதியாகிய தர்ம சாஸ்திரங்களையும் குருபாயிக்களுக்குக் கற்பிக்க விரும்பினார். பொது வாக பாரதத்துக்கும், முக்கியமாக வங்காளத்துக்கும், ஆற்றிய அருந்தொண்டுகளில் ஒன்று வேதமோதுதலை அவர் விருத்தியுறச் செய்ததாகும். தாந்திரிக ஆராதனைகளும், அதன்பின் கௌரங்க தேவரின் பக்தி மார்க்கமும் வங்கத்தில் வேதாத்தியயனத்தை மறையச் செய்துவிட்டன என்றே கூறலாம். வங்காளத்தில் மீண் டும் வேதநெறி தழைத்தோங்கப் பாடுபட்டவர் சுவாமிஜி. தாம் உடலை உகுக்கும் தினத்தன்றுகூட சுவாமிஜி பிரேமானந்தருடன் உரையாடிக்கொண்டே உலவும்போது வேதத்துக்காக ஒரு வித்யா சாலை நிறுவவேண்டும் என்று கூறினார். "எதற்காக?" என்று பிரேமானந்தர் கேட்டதற்கு, "வேதம் பயில்வதால் மூட நம்பிக்கைகள் நாசமாகும்" என்றார்.

வேத அத்தியயனம் ஒரு குறிப்பிட்ட சாராருக்குத்தான் உரி யது என்ற தர்மசாஸ்திர விதியை அவர் ஒப்புக்கொண்டதில்லை.

Koviloor Digital Library

ஆத்மவிசாரம் செய்து பிரம்மாநுபவம் பெறுவதற்கு யாவரும் உரிமை பெற்றிருக்கும்போது அதற்கு உபாயம் மட்டுமேயான வேதத்தில் எல்லாருக்கும் அதிகாரம் இல்லை என்பது சரியாகாது என்பதே அவர் தம் கருத்து. வேதத்தில் யக்ஞம் செய்வதற்குத் தான் எல்லாருக்கும் அருகதை இல்லை என்று கூறியிருப்பதாகவும் ஞானகாண்டமாகியஉபநிஷதத்தில்எல்லாருக்கும்அதிகாரம்உண்டு என்றும் அவர் கருதினர். வேத கால வர்ண முறை தொழில் பிரிவினையே என்பதும், இதனை வம்சாவளியாகத்தான் அநுஷ்டித் தாக வேண்டுமென்பதில்லை என்பதும் சுவாமிஜியின் கருத்தாகும். வர்ணமுறையை அவர் ஒருபோதும் ஆக்ஷேபித்ததில்லை. ஆனல் அதன் அநுஷ்டானத்தில் உயர்வு-தாழ்வு எண்ணங்கள் ஏற்படுவ தாகக் கூறிக் கண்டனம் செய்தார் அவர். பிறர் பார்க்க உண் ணக்கூடாது என்பதுபோன்ற பழக்கங்கள் நிச்சயமாக உயர்வு-தாழ்வு எண்ணங்களைத்தான் உண்டாக்கும் என்று கூறிய அவர் ஹிந்து மதம் 'சமையலறை மதமாகி' விட்டது என்று ஏளனமும் செய்திருக்கிருர்.

ஆசார அநுஷ்டானங்களைப் பற்றி சுவாமிஜியுடன் அபிப் பிராய பேதங்கள் இருக்கலாம். எனினும் இந்த அநுஷ்டானங் களைப் பின்பற்றுமலே தங்களை உயர்ந்தவர்களாகவும் மற்றவர் களைத் தாழ்ந்தவர்களாகவும் கருதியவர்கள் சென்ற தலைமுறை களில் மிகுந்து இருந்திருக்கின்றனர் என்பது உண்மையாகும். மக்களில் வேறு வேறு தொழில்களைப் பகிர்ந்தளிப்பதில் தவறில்லை என்றாலும், அதில் ஒருவர் உயர்ந்தவர் மற்றவர் தாழ்ந்தவர் என்று கருதுவது சரியாகாதல்லவா ? இன்று இத்தகைய உயர்வு-தாழ்வு அபிப்பிராயங்கள் வெகுவாகக் குறைந்திருக்கின்றன வென் ருல் இதெற்கெல்லாம் மூலகாரணம் சுவாமி விவேகானந்தர் என்று நிச்சயமாகக் கூறலாம்.

தாங்கள் தாழ்ந்தவர்கள் என்று ஒரு பிரிவினர் கருதும்படி செய்துவிட்டு, அதன்பின் அவர்கள் பிற சமயங்களையும் தழுவக் கூடாது என்று எதிர்பார்ப்பது எப்படிப் பொருந்தும் ? இதனுல் தான் கிறிஸ்துவ மிஷனரிகள் தீவிரமாகச் செயல்பட்டு வந்த காலத்தில் தோன்றிஹிந்து மதத்தைச் சம்ரக்ஷிக்க வேண்டியிருந்த சுவாமிஜி நடைமுறை ஆசாரங்கள் பலவற்றைத் தாக்க நேர்ந்தது. எந்த மதமுமில்லாமல் மேல்நாட்டு லௌகிக இன்பங்களையே பெரிதென மதித்த இந்தியர்களுக்கு மத உணர்வு ஊட்டுவது; ஹிந்து மதத்தைவிட்டுப் பிரிய மனம் கொண்டவர்கள் அவர்கள் அவ்வாறு செய்யாதபடி காப்பது; ஹிந்துக்களாகவே இருந்தவர் களைக் காலத்துக் கொவ்வாத சில ஆசாரங்களைக் கைவிடுமாறு

Koviloor Digital Library

செய்வது — இந்த முப்பெரும் பணிகள் சுவாமிஜியின் தோளில் சார்ந்திருந்தன. எனவே ஒருபுறம் ஓர் இலக்ஷியத்துக்காக ஹிந்து மதத்தின் பெருமைகளை முழங்கிய அவரே, இன்னொரு புறம் இன்னோர் லக்ஷியத்துக்காக அம்மதத்தில் புகுந்துவிட்ட கோட்பாடுகள் சிலவற்றைத் தாக்கியும் குமுறினார்.

இந்தியாவில் சுவாமிஜிக்கு இந்த மூன்று பணிகள் இருந்த தோடு உலகில் நாலாவது பெரிய பணியும் இருந்தது — அதுதான் வேதாந்த சமயம் என்பது எல்லா சமயங்களும் நிறைவுறும் எல்லை நிலம் என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பு.

இத்தனை காரியத்தையும் தமது சில ஆண்டுகளில் சாதித்துக் காட்டி விட்டார் சுவாமிஜி.

* * *

வேத சாஸ்திரங்களை வரநகரத்து ராமகிருஷ்ண சங்கத்தினர் படிக்கப் பேருதவி புரிந்தவர் பாபு பிரமததாஸ் மித்ரா. வாரணாசியில் நாம் கண்டோமே அந்தப் பண்டிதர்தான். இவருக்கு எழுதியே அநேக நூல்களை இலவசமாகப் பெற்றார் சுவாமிஜி. பணம் கொடுத்துப் புத்தகம் வாங்க அப்போது அவர்களுக்கு 'ஐவேஜி' ஏது?

வேதங்களைப் பயில்வதற்கு முன்னால் வியாகரணத்தில் (சம்ஸ்கிருத இலக்கணத்தில்) மாணவர்களுக்குப் பயிற்சி தேவை என்று கருதினார் சுவாமிஜி. பாணினியின் வியாகரணப் பிரதி ஒன்று கேட்டுப் பிரமததாஸருக்கே எழுதினார். அந்தக் கடிதத்தில் கீழ்க்காணும் பகுதியில் வங்கத்துக்கு வேதத்தை மீட்டுத் தருவதில் சுவாமிஜிக்கு இருந்த பெரு நாட்டம் புலப்படுவதைப் பாருங்கள்:

''வங்காளத்தில் வேதங்கள் அப்பியாசத்திலிருந்து மறைந்தே விட்டன என்று கூறிவிடலாம் இங்கே மடத்திலுள்ள பலருக்கு சம்ஸ்கிருதத்தில் நல்ல பரிசயமுண்டு. இதனால் அவர்கள் வேதத்தின் ஸம்ஹிதைப் பகுதிகளில் தேர்ச்சி பெறத் தகுதி பெற்றவர்களாக இருக்கிறார்கள். (என்றாலும் அவர்கள் அத்துடன் நின்று விடாமல்) எதொன்றை எடுத்துக் கொண்டாலும் அதனைப் பூரணமாக முடிக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். பாணினி வியாகரணத்தில் தேர்ச்சியின்றி வேதபாஷை முழுவதிலும் தேர்ச்சி பெறுவது இயலாத காரியமென நினைக்கிறேன். எனவே வியாகரணப் பிரதியொன்று இங்கு அத்தியாவசியமாகக் கருதப்படுகிறது. ஊக்கத்தோடு உழைப்பவர்களுக்கும், திறமையுள்ளவர்களுக்கும், ஆழ்ந்த அறிவுள்ளவர்களுக்கும் இந்த மடத்தில் குறைவில்லை. குருமஹராஜின் கிருபையினால் அவர்கள் குறுகிய காலத்தி

Koviloor Digital Library

லேயே பாணினி நூலைக் கற்றுணர்வார்கள்; அதன் மூலம் வங்காளத்துக்கு வேதத்தை மீட்டுத் தருவதில் வெற்றி காண்பார்கள் என நம்புகிறேன்.''

வேதத்தைக் காத்துத் தருவதற்குத்தானே ஈசன் அவதாரங்கள் எடுத்ததும்?

* * *

தர்ம சாஸ்திர நூல்களைப் படிக்கும்போது பல முரண்பாடுகளிருப்பதாக சுவாமிஜிக்குப் பட்டது. சமூகப் பகுப்பு முறையை அவை செவ்வையாக அமைக்கவில்லை என்றே கருதினார் அவர். தாம் அலைந்து திரிந்த நாட்களில் இம்முறையின்கீழ் மக்கள் உற்ற நிலையையும் பார்த்து வருத்தமும் ஆத்திரமும் கொண்டார். பிறப்பினால் சமூக அந்தஸ்து பெறும் நிலைமாறி, தகுதியால் அந்தஸ்து பெறும் நிலை ஏற்படவேண்டும் என்று விரும்பினார். 'எல்லாருக்கும் பொதுவான உண்மைகளையே உபநிஷதம் கூறுகிறது. வேதமும் எல்லாருக்கும் பொதுவானதே. இவற்றைக் கொண்டுதான் நவ பாரதம் நிர்மாணிக்கவேண்டும்' என சுவாமிஜி கருதினார். இவ்விஷயங்களில் தமக்குள்ள எல்லா சங்கைகளையும் அவர் பிரமததாஸ் பாபுவுக்குத் தமது அழகிய கடிதங்களின் மூலம் தெரிவித்து அவரிடமிருந்து விளக்கம் பெற்று வந்தார். முன்பு தம் வாழ்வின் இன்னொரு கட்டத்தில் ஐயங்கள் மயமாகி அவற்றைக் குருநாதரின் கருணையால் தீர்த்துக் கொண்டாரல்லவா? அப்போது ஹிந்து மதம் தவிர இதர நூல்களைப் படித்ததாலேயே பெரும்பாலும் சந்தேகங்கள் தோன்றின. இப்போதோ ஹிந்து மத நூல்களைப் படித்ததாலேயே பல சந்தேகங்கள் எழுந்தன. வேத — உபநிஷத ரிஷிகள் சத்திய மூர்த்தியர்; அவர்கள் பெற்ற தரிசனங்களும், அவர்கள் எண்ணும் எண்ணங்களும், மொழியும் சொற்களும் உண்மையானவையே என்று நம்பினார் சுவாமிஜி. நீதி நூல்கள், புராணங்கள் ஆகியவற்றைச் செய்த எல்லாருக்குமே இந்தச் சத்தியத்துவத்தை அளிக்க அவர் தயாராக இல்லை. சாஸ்திரங்களில் எதனைக் கொள்வது, எதனைத் தள்ளுவது என்று தெரியாமல் தத்தளித்தார். இந்தத் தத்தளிப்பை அவர் பிரமததாஸருக்கு எவ்வளவு உருக்கமாகத் தெரிவிக்கிறார் பாருங்கள்:

''ஆண்டவனின் கருணையில் நான் இதுவரையில் நம்பிக்கை இழக்கவில்லை; இனியும் இழக்க மாட்டேன். வேதங்களில் எனக்குள்ள நம்பிக்கையும் அசைக்க முடியாததாகும். ஆனாலும் இறைவன் திருவுள்ளம் — கடந்த ஆறேழு ஆண்டுகளாக என் வாழ்க்கை எல்லாவிதமான போராட்டங்களாலும், தடைகளாலும், எதிர்ப்புக்களாலுமே நிரம்பி இருந்திருக்கிறது. ஆதரிச

Koviloor Digital Library

மான சாஸ்திரம் எதுவோ அதனை நான் அடைய உறுதிமொழி பெற்றிருக்கிறேன்; ஆதரிச மனிதர் யாரோ அவரை நான் கண்டிருக்கிறேன்; இருந்தாலும் எந்த ஒரு விஷயத்திலும் முடிவு வரை செல்லமுடியாமல் நான் தவறிக் கொண்டேயிருக்கிறேன் — இதுவே எனது பெருத்த துர்ப்பாக்கியமாகும்.''

குழந்தையைப் பெறுமுன் ஒரு தாய் எவ்வளவு பாடுபட வேண்டுமோ அவ்வளவு பாடுகளையும் ஒரு முடிவு காணுவதற்காக மகான்களும் பெறவேண்டும் போலும்!

இறுதியில் எதைக் கொள்ளுவது, எதைத் தள்ளுவது என்று நிச்சய புத்தி பெற்றார் சுவாமிஜி. இப்படிப் பகுத்ததே விவேகம். எனவேதான் அவரை விவேகானந்தர் என்று வாழ்த்தி வழி படுகிறோம்.

* * *

ஆனால் இது பிறகு வரும் கதையல்லவா? நாம் கண்டு வரும் கட்டத்தில் சுவாமிஜியின் உள்ளத்தில் சண்டமாருதம் அடித்து வந்தது. மக்களெல்லாரும் இப்படி மத உணர்வு இழந்து வருகிறார்களே என்று ஆறாத் துயரம் கொண்டிருந்தார் அவர். இதற்குக் காரணம் மேல் நாட்டினரே அல்லவா என்றெண்ணு வார். எனினும் மேல்நாட்டு வாழ்முறைமீது அவருக்கு ஆத் திரம் உண்டாகாது. ஐரோப்பிய நாகரீகச் சரிதத்தைப் படித்தவ ரல்லவா? மக்களை முன்னேற்றுவதற்காக அங்கு சீர்திருத்தத் துக்கு மேல் சீர்திருத்தமாக நடந்து வந்ததைப் பெரிதும் போற் றியவர் சுவாமிஜி. ஆத்மார்த்தமாகத் தனது விடுதலையைப் பெறப் பாடுப்டும் உணர்வையும், மக்கள் சேவையையும் எப்படி யேனும் இசைத்து இந்தியாவுக்கு அளிக்க வேண்டும் என்பதே அவரது சிந்தனையாயிற்று.

இதோடு உலகமெல்லாம் தழுவும் பேரன்பு காரணமாக மேல் நாட்டினரை எண்ணியும் துயருற்றார் சுவாமிஜி. 'லௌகிகமாக போக போக்கியங்களைத் தேடி ஆத்மாவையே அல்லவா மேல் நாட்டினர் இழந்து வருகின்றனர்? விஞ்ஞான முன்னேற்றமும், யந்திர சகாப்தமும் மனிதனின் உள்ளடங்கியுள்ள மாண்பையே அல்லவா குலைத்து விடுகின்றன? கனன்று கொண்டிருக்கும் எரி மலை ஒன்றின் வாயின்மீதே மேல்நாட்டினர் விச்ராந்தியாக உட் கார்ந்திருப்பதுபோல உணர்ந்தார். மனித ஆத்மாவின் மகிமை யைக் கூறி அவனுள்ளிருக்கும் தெய்வசக்தியைப் புலப்படுத்தும் வேதாந்தம்தான் மேல்நாட்டில் யந்திரங்களுக்கும், இந்திரியங் களுக்கும் அடிமையாகிவரும் மக்களை மீட்க முடியும்; அப்படி வேதாந்த தீபத்தை அங்கெல்லாம் ஏந்திச் செல்வார் யார்?' என

Koviloor Digital Library

எண்ணித் துடிப்பார். சரிந்து கொண்டிருக்கும் உலகை இருபத்தி யாறு வயது இளைஞரான தன்னால் தோள் கொடுத்துத் தூக்கி நிலைநாட்ட முடியுமா என எண்ணித் தம் இயலாமைக்காகப் பரிதவிப்பார்.

உலகளாவிய அந்த அருள் எண்ணம் பழுக்காமலும் போகுமா ?

* * *

தனியாக எங்கேனும் தவம் புரிவோம் என்ற ஆசை அவருள் எழும்போது பாரதத்தின் தீனக் குழந்தைகள் அலறும் சப்தம் அவர் ஆசையைத் தகர்க்கும். ஏழைமையிலும், அறியாமையிலும், அடக்குமுறையிலும் உயிரோடேயே செத்துவரும் பாமர மக்கள் தம்மையே எதிர்பார்த்துக் காத்திருப்பதாக அவருக்குத் தோன்றும். குருபாயிக்களிடம் ''மக்கள் சேவை புரிய வாரீர்'' என்று கூவுவார். ஆனால் அப்போது அவர்களில் யாரும் அதற்குத் தயாராக இருக்கவில்லை. தாம் தனியொரு மனிதராகவேனும் மக்களை உத்தாரணம் செய்யும் பணியில் இறங்கிவிடவேண்டும் என்ற துடிப்பு சுவாமிஜிக்கு ஏற்படும்.

இதற்கு அணைபோட்டது அவரது பூர்வாசிரமத்துக் குடும்பத்தினரின் நிலை. என்னதான் சந்நியாசம் பெற்றுவிட்டாலும், கல்கத்தாவுக்கு அருகிலேயே வாழ்ந்ததால் அவரது வீட்டினரின் துயரநிலை அவர்மீதும் மோதாமலில்லை. அவர்களை இல்லாமை பிடுங்கித்தின்றது. வீட்டுக்காக வழக்காடுவதில் ஏராளமான செலவேற்பட்டிருந்தது. பக்கத்திலேயே தாயும் சகோதரர்களும் வாடி மடிந்து கொண்டிருப்பதும், அதற்குத் தாம் பரிகாரம் தேடமுடியாமல் இருப்பதும் சுவாமிஜியை வதைத்தன. ''எனக்கு ராஜஸ குணம் அதிகமல்லவா ? எனவே என் உறவினரின் துர்த்தசையைக் காணும்போது என்னுடைய 'நான்' துருத்திக் கொண்டு வந்து என்னைக் கருமத்தில் தள்ளிவிடும் போலிருக்கிறது. இம்மாதிரி சமயங்களில் என் மனசில் பயங்கரமான ஒரு போராட்டம் மூளுகிறது.'' என்று பிரமததாஸருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் குறிப்பிடுகிறார் சுவாமிஜி.

ஒருவாறாக வியாஜ்ஜியம் சாதகமாகவே முடிந்தது. சில நாட்களில் ஒருவாறு வீட்டு விஷயங்களை ஒழுங்கு செய்துவிட்டு அங்கிருந்து நிரந்தரமாகக் கிளம்ப எண்ணினார் சுவாமிஜி. ''என் இதயம் உயர்ந்த தெய்வீக சக்தியைப் பெற்று பலம் பொருந்தியதாக வேண்டும்; மாயையின் எல்லாத் தோற்றங்களும் என்னிடமிருந்து சாசுவதமாக விலகவேண்டும் என்று ஆசீர்வதியுங்கள்'' என்று பிரமததாஸருக்கு எழுதுகிறார் சுவாமிஜி.

Koviloor Digital Library

குருமஹராஜை நினைத்து, பைபிள் வாக்கியத்தை மொழிகிறார்: ''சிலுவையைத் தாங்கி விட்டோம். தாங்கள்தான் அதனை எங்கள் மீது சாத்தியது. சாகும் வரையில் அதனை நாங்கள் தாங்குமாறு வரம் தருவீர்களாக.''

* * *

கல்கத்தாவைவிட்டுக் கிளம்பிவிடுவது என்று நிச்சயித்தார் சுவாமிஜி. மீண்டும் வாரணாசிக்கே செல்வோமா என யோசித்தார். பிரமததாஸரிடமிருந்து எவ்வளவோ கற்க அது வாய்ப்பளிக்குமென எண்ணினார். இந்தச் சமயத்தில் அகண்டானந்தர் ஹிமாலயத்தில் யாத்திரை செய்து வந்தார். திபேத்துக்குப் போவது பற்றியும், திபேத்திய நாட்டின் அழகுகள் பற்றியும், திபேத்து மக்களின் எளிய பழக்க வழக்கங்கள் பற்றியும் அவர் சுவாமிஜிக்கு அடிக்கடி எழுதி வந்தார். வேறு நாலு குருபாயிகளும் ஹிமாலயம் சென்றனர். சுவாமிஜிக்கும் வரநகரத்தில் உடம்பு பொருந்தவில்லை. 1889-ம் வருஷ இறுதியில் மடத்திலிருந்து புறப்பட்டுவிட்டார் அவர். வட இந்தியப் புண்ணிய ஸ்தலங்களில் யாத்திரை செய்ய உத்தேசித்தார். முதலில் பீஹாரிலுள்ள வைத்தியநாதம் என்ற புகழ்வாய்ந்த சைவப்பதியை அடைந்தார். அங்கிருந்து காசி செல்ல எண்ணியிருந்தார். காசியிலேயே தன் செயலில்லாது காலம் கழிக்கவேண்டும்; விசுவநாதனும் அன்னை அன்னபூரணியும் தம் எதிர்காலத்தை எப்படி இயக்குகிறார்கள் என்பதை சரணாகதனாக இருந்து பார்க்கவேண்டும் என்று விரும்பினார் சுவாமிஜி. இந்த விருப்பத்தை ஒரு கடிதத்தில் வெளியிட்டு, ''இலக்ஷியத்தை உணர்வது, அல்லது சாவது என்று தீர்மானம் செய்து கொண்டுவிட்டேன். காசிநாதா காப்பாற்று என்று இருக்கப் போகிறேன்'' என்று தொடர்கிறார் அந்த பக்த ஞானி.

ஆனால் காசிநாதனே அவர் காசிசென்று அவன் வசம் தம்மை ஒப்பித்துக் கொள்ளுமுன்பே வேறு திட்டங்கள் போட்டுவிட்டான். அல்லஹாபாத்திலிருந்த யோகானந்தர் அம்மைவார்த்துப் படுத்துக் கிடப்பதாக வைத்தியநாதத்துக்குச் செய்தி வந்தது. உடனே அல்லஹாபாத்துக்குப் பயணமானார் சுவாமிஜி. யோகானந்தருக்கு சுசுருஷைகள் செய்தார். சில நாட்களில் யோகானந்தர் குணமடைந்தார். அல்லஹாபாத்திலிருந்த வங்காளிகள் சுவாமிஜியைத் தரிசித்தனர். அவர்களிடம் ஹிந்து சமுதாயத்திலுள்ள பலவீனங்களை எல்லாம் எடுத்துக் கூறினார் சுவாமிஜி. எந்த நாடும் பெற்றிராத உன்னத தத்துவங்களைப் பெற்ற நாம் மற்ற நாடுகள் நையாண்டி செய்யும் பழக்க வழக்கங்களைப் பின்பற்றி

Koviloor Digital Library

ஹிந்து மதத்துக்கே அவப் பெயர் தேடித் தருவதாகக் கண்டித்து கூறினார்.

அல்லஹாபாத்தில் முஸ்லீம் ஞானி ஒருவரைக் கண்டார் சுவாமிஜி. 'அவருடைய முகத்திலுள்ள ஒவ்வொரு ரேகையும், வளைவும் அவர் ஒரு பரமஹம்ஸர் என்பதைக் காட்டுகின்றன' என்று சுவாமிஜி எழுதி யிருக்கிறார். உலகத்தில் எங்கு வேண்டு மானாலும் ஆத்ம ஞானிகள் இருக்கலாம் என்று ஆதிசங்கரர் கூறியுள்ளாரல்லவா? எனவே பரமஹம்ஸர்கள் எந்த மதத்தி லும் இருக்க முடியுமல்லவா? 'அப்பாலும் அடி சார்ந்தார்க்கு அடியார்க்கும் அடியேன்' என்பதாக ஹிந்து தர்மத்துப் புறம் பாகக்கூட எங்கெங்கு யாரார் பரம்பொருளிடம் உள்ளத்தை வைத்திருக்கிறார்களோ அவர்களையும் தாம் வணங்குவதாக சுந்தர மூர்த்தி நாயனாரும் கூறியிருக்கிறாரே!

* * *

சுவாமிஜி அல்லஹாபாத்திலிருந்தபோது, காஸிப்பூரில் வசித்துவந்த பவஹாரி பாபா என்ற ஞானியைப் பற்றிக் கேள்விப் பட்டார். அவரைக் காண்பதற்காக 1890-ம் ஆண்டு ஜனவரி மாதத்து மூன்றாம் வாரத்தில் காஸிப்பூர் சென்றார்.

பவஹாரி என்பது மக்கள் அவருக்கு இட்ட பெயர். 'காற் றைப் புசிப்பவர்' என்பது அதன் பொருள். பூமிக்கடியில் வசிக்கும் அவர் எதைக்கொண்டு ஜீவிக்கிறார் என்று தெரியாததால் வாயு பக்ஷணம் செய்பவர் என்று மக்கள் அவரை அழைத்து வந்தார்கள். அவர் பிறந்தது வாரணாசியில் ஒரு பிராம்மணக் குடும்பத்திலாகும். ஆயுள் முழுவதும் பிரம்மசாரியாக இருந்த தமது உறவினரொருவரிடமிருந்து வியாகரணம், நியாயம் முதலிய வைகளையும், ஸ்ரீராமானுஜரின் விசிஷ்டாத்வைத சம்பிரதாயத்தை யும் அவர் கற்றார். அந்த உறவினர் இறந்தவுடன், சத்திய வஸ்துவைக் கண்டுணர வேண்டும் என்ற ஆர்வத்தில் வீட்டைத் துறந்தார். நாடெங்கிலும் சுற்றி வந்தார். ஹிந்துக்கள் ஜைனர் கள் இருசாரருக்கும் புனிதமாகக் கத்தியவாரில் விளங்கும் கிர்நார் மலையில் யோக சாஸ்திரம் உபதேசிக்கப் பெற்றார். வாரணாசி வந்து சேர்ந்தார். அங்கு, கங்கையின் கரைமேட்டில் ஒரு குகை யில் வசித்து வந்த ஓர் உத்தம சந்நியாசியிடம் அத்வைத நூல்களைக் கற்றுத் தேர்ந்தார். பின்பு பல இடங்களில் சஞ்சாரம் செய்துவிட்டு காஸிப்பூரை வந்தடைந்தார். தமது வாரணாசி குருவைப் போலவே தாமும் கங்காதீரத்தருகே பூமிக்கடியில் தமக்கு இருக்கை அமைத்துக் கொண்டு அதில் வாழ்ந்து வந்தார். பகல் முழுவதும் தமது பாதாள 'ஆசிரம'த்தில் நிஷ்டை புரிவார். இரவானதும்

Koviloor Digital Library

ஆற்றுக்கு அக்கரை சென்று கடும் சாதனைகள் புரிவார். சிறிதளவு வேப்பிலையையோ, செம் மிளகுகளின் வெளித் தோலுறையையோ மட்டுமே அவர் உண்டு வந்தார். உணவு சமைத்து, அதனை இஷ்ட தேவதைக்கு நிவேதனம் செய்வதாகச் சொல்லி ஆண்டிகளுக்கோ ஏழைகளுக்கோ முழுவதும் கொடுத்து விடுவார். அவரது அல்ப ஆகாரத்தினுல் அவருக்குப் பவஹாரி என்ற பெயர் ஏற்பட்டது. வயது ஏற ஏற அவரது நிஷ்டைக்காலமும் அதிகமாகி வந்தது. மாதக் கணக்காகக்கூட அவர் பாதாளத்திலிருந்து வெளிவரவே மாட்டார்.

அவர் உயிர் வாழ்கிருரா, இல்லையா என்றுகூட யாருக்கும் தெரியாது. கடைசியில் ஒரு நாள் திடீரென்று மேலே பிரஸன்னமாவார். ஆரம்ப நாட்களில், தமது ஆசிரமத்துக்கு மேலாக உள்ள ஓர் அறையில் அவர் தம்மைக் காணவருபவர்களைச் சந்தித்து வந்தார். பிறகு அந்த வெளி வியாபாரத்தையும் மிகவும் குறைத்து விட்டார்.

இப்படிப்பட்ட மகானைப் பார்க்க வேண்டும் என்று சுவாமிஜி விரும்பியதில் வியப்பேதுமில்லை யன்றோ?

* * *

காஸிப்பூரிலிருக்கும்போது பாபு ஸதீஷ் சந்திர முகர்ஜி, ராய் கங்காசரண் ராய் பஹதூர் என்ற இருவரோடு தங்கி யிருந்தார் சுவாமிஜி. ஸதீஷ் சந்திரா என்பவர் சுவாமிஜி கல்கத்தாவில் அறிந்திருந்த பூர்விக நண்பர் ஆவார். அவரது இல்லத்தில் தங்கி யிருக்கும்போது பலர் சுவாமிஜியைக் காண வந்தனர்.

''இங்கு எல்லாமே நல்லனவாகக் காண்கிறது; மக்களெல்லாம் பண்பறிந்தவர்களாக இருக்கிருர்கள் — ஆனுலும் துர்ப்பாக்கியவசமாக எல்லாரும் மேல்நாட்டு பாணியில் வாழ்கிருர்கள். மேல்நாட்டைக் 'காப்பி' அடிப்பதை நான் அற்றறுதியாக எதிர்க்கிறேன். நல்லவேளையாக எனது நண்பன் அந்த வழியில் மிகவும் சாய்ந்துவிடவில்லை. எவ்வளவு விளையாட்டுப்பிள்ளைத்தனமான ஓர் வாழ்முறையை மேல் நாட்டினர் இங்கு சிருஷ்டித்து விட்டார்கள்! பௌதிகப் பிரபஞ்சமேதான் எல்லாம் என்ற மாயையை அவர்கள் எவ்வளவு தூரத்துக்கு உண்டாக்கி விட்டார்கள்! இந்த இதய பலவீனர்களை விசுவநாதன் காப்பானுக!''
என்று பிரமததாஸருக்கு எழுதினுர் சுவாமிஜி.

இந்தக் கடிதத்தின் பின் குறிப்பில் சுவாமிஜி கண்டிருப்பதாவது: "ஆகா விதியின் விஷம விளையாட்டைத்தான் என்னென்பது? பகவான் சுகர் பிறந்த இந்நாட்டில் துறவு என்பது பைத்தியக்காரத்தனமானது, பாபமானது என்று இகழ்ச்சியாகக்கருதப்படுகிறது.''

Koviloor Digital Library

பவஹாரி பாபாவைக்கண்டு உரையாடுவது சுவாமிஜிக்கு எளிதாயில்லை. அவர் தமது இருக்கையை விட்டு வெளியே வருவதாகவே காணேம். அப்படி வந்தாலும் கதவருகே உள்புறமாகவே வந்து நிற்பார். உள்ளிருந்தபடியே பேசுவார்.

ஒருவாறுகப் பவஹாரியின் தரிசனம் கிட்டிற்று. முதற் பார்வையிலேயே அவர் ஒரு மகா ஞானி எனக் கண்டு கொண்டார் சுவாமிஜி. ''என்ன அற்புதம்! இந்த நாஸ்திக உலகில் பக்தி, யோகம் இவற்றின் விந்தை சக்திக்கு ஓர் உன்னத உருவகமாக அவர் விளங்குகிறுர்! அவருடைய அருளில் நான் அடைக்கலம் புகுந்து விட்டேன். அவர் எனக்கு நம்பிக்கை யளித்துள்ளார். பாக்கியசாலிகளான வெகு சிலருக்கே கிட்டக்கூடிய பேறு அது'' என்று எழுதியிருக்கிறுர் சுவாமிஜி. பாபாஜியும் சுவாமிஜியைக் கண்டதில் மகிழ்ச்சியுற்றுர். 'நாஸ்திகம் நிறைந்த உலகில் சத்திய தரிசன தாபத்தோடு ஒரு பிள்ளை இப்படி அலைகிறதே!' என்று அவர் மகிழ்ந்திருக்கமாட்டாரா, என்ன?

பாபாஜியைக் கண்டபின்பு சுவாமிஜி ககன் சந்திரரின் தோட்ட மாளிகைக்குச் சென்று கடினமான அப்பியாசங்களைப் புரியலானுர். வயிற்றுப் போக்கு உண்டாயிற்று. அதனையும் பொருட்படுத்தாது யோக சாதனைகள் புரிந்தார். பிக்ஷை எடுத்து, வெந்த உணவென்றும் வேகாத உணவென்றும் பாராமல் உண்டு வந்தார். ஏறக்குறைய பிரதி தினமும் பாபாஜியிடம் சென்று அருளைப் பிரார்த்தித்தார். வைஷ்ணவ சம்பிரதாயத்திலிருந்து நைச்சியாநுஸந்தானம் செய்திருந்த பாபாஜி பணிவு நிலையமாக விளங்கியவர். எனவே சுவாமிஜி ஞானுேபதேசம் புரியுமாறு வேண்டும்போதெல்லாம் அவர், ''தாஸனுக்கு என்ன தெரியும்?'' என்றே கூறுவார். என்றுலும் சம்பாஷணை தொடர்ந்தால் அங்கே ஞானம் பளிச்சுப் பளிச்சென்று மின் வெட்டும். இதைக்கண்டு சுவாமிஜி உபதேசம் புரியுமாறு கோரினுல், ''இங்கே இன்னும் சில நாள் தங்கியிருக்கலாகாதா?'' என்று மட்டுமே கேட்பார் பாபாஜி.

சுவாமிஜிக்கு இப்போது கடும் இடுப்புப் பிடிப்பு வேறு உண்டாயிற்று. இதனுல் அவர் பவஹாரி பாபாவைக் காணச் செல்ல முடியவில்லை. பாபா சுவாமிஜியின் உடல்நலம் பற்றி விசாரித்து வந்தார். யாருடனும் தொடர்பு கொள்ள விரும்பாத பாபாவுக்கே இப்படி ஒரு பிரியம் சுவாமிஜியிடம் உண்டாகியிருந்தது!

* * *

சுவாமிஜியின் இடுப்புப்பிடிப்பு சொல்லிமுடியாத உபாதி தரும் போதெல்லாம் அவர் பவஹாரி பாபாவை நினைத்துக்

Koviloor Digital Library

கொள்வார். 'அவர் எப்படி இன்னல்கள் யாவற்றையும் சகித்துக் கொள்கிருர் ?' என்றெண்ணி வியப்பார்.

சுவாமிஜி தமது உடல்நலக் குறைவையேனும் ஒருவாறு மறந்திருக்க முடிந்தது. ஆனுல் ஹிருஷீகேசத்தில் அபேதானந்தர் மலேரியாக் காய்ச்சலில் கஷ்டப்படுகிருர் என்பது அவரை மிகவும் உபாதைப் படுத்திவிட்டது. தம்மை நம்பி வீடு வாசலேவிட்டுத் துறவியான குருபாயிக்களுக்காக அவருள்ளம் எப்போதும் குருதி கசிந்து கொண்டேதானிருந்தது. தாம் உடனே ஹிருஷீகேசம் வரவேண்டுமா என விசாரித்து காஸிப்பூரிலிருந்து தந்தி கொடுத்தார்.

''இதெல்லாம் உங்களுக்குச் சிரிப்பாக இருக்கலாம்'' என்று 'உங்களா'கிய பிரமததாஸருக்கு எழுதுகிருர் சுவாமிஜி. ''இப்படி மாயையின் வலேயை நான் பின்னிக்கொள்வது உங்களுக்குச் சிரிப்பாக இருக்கலாம். இது மாயை வலே என்பது உண்மைதான். அதைப்பற்றிச் சந்தேகமே கிடையாது. ஆனுல் தளேகளிலேயே இரண்டு விதம் உண்டு. இரும்புத் தளேயொன்று, தங்கத்தளே மற்ருென்று. பின்னதிலிருந்து நன்மைகள் பல உண்டாகின்றன. எல்லா நன்மைகளேயும் அறுவடை செய்துகொண்டபின் அந்த பொன் தளே தானே இற்று விழுந்து விடுகிறது. என் குரு மஹராஜின் குழந்தைகளே என் பணியின் மகத்தான இலக்குகள். அவர்கள் விஷயத்தில் எனக்கு இன்னமும் சிறிது கடமை இருப்பதாக நான் உணர்கிறேன்.'' என்கிருர் சுவாமிஜி.

ஒரு வாரம் கழித்து பிரமததாஸருக்கு மீண்டும் எழுதுகிருர்: ''கடுமையான வேதாந்தக் கருத்துக்களேக் கொண்டிருந்தபோதிலும் நான் மிகவும் மிருதுவான இயல்பு படைத்தவன். இது உங்களுக்குத் தெரிந்திராது. இந்த மிருதுவான இயல்புதான் என்னே நாசமாக்குகிறது. மிக நுட்பமாக என்னேத் தொட்டு விட்டால்கூடப் போதும். நான் அப்படியே மனம் தளர்ந்து விடுகிறேன். ஆத்மலாபம் பெறவேண்டும் என்று என்னேப்பற்றி மட்டுமே எண்ணியதற்கு நான் என்னதான் பிரயத்தனம் செய்தாலும், என்னேயும் மீறி நானுகப் பிறரது நலன்களேச் சிந்திக்கத் தொடங்கி விடுகிறேன்.''

நமக்கும் சுவாமிஜிக்கும்தான் எவ்வளவு அஜகஜாந்தரமாகயிருக்கிறது பாருங்கள். நம்மை மையமாக வைத்தேதான் நம்மால் வாழ முடிகிறது. பிறரை மையமாக வைத்தேதான் அவரால் வாழ முடிந்திருக்கிறது! 'குருபாயிக்களுக்கு மட்டும் தாம் சிறிது கடமை ஆற்ற வேண்டியிருக்கிறது' என்று அவர் சொன்னுலும், உண்மையில் நானிலம் முழுவதற்கும் உழைக்க

Koviloor Digital Library

வேண்டிய கடமை தமக்கிருப்பதாக ஏதோ ஒன்று அவரை உந்திக் கொண்டேதானிருந்தது.

ஹிருஷீகேசத்திலிருந்து பதிலை எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருக்கும்போதுதான் இத்தகைய சஞ்சலங்கள் இல்லாமல் வாழுவதெப்படி என்று தீவிரமாக எண்ணலானுர் சுவாமிஜி. பிறருக்காக உழைக்க வேண்டும்; அதற்காக சுய மோக்ஷத்தையும் தியாகம் செய்ய வேண்டும் என்பதையெல்லாம் அவர் ஒப்புக் கொண்டார். என்ருலும் அந்த உழைப்பின்போது ''பலன் பகவான் கையிலுள்ளது'' என்ற புத்தியுடன், உணர்ச்சிகளுக்கு இடம் கொடாமல் வாழுவதெப்படி என்று சிந்திக்கலானுர். இன்னல்களின் போதும் சமநிலை குலையாத அந்த யோகத்தைப் பவஹாரி பாபா தமக்குக் கற்பிக்கக்கூடும் என்று நினைத்தார், கற்பிக்கவேண்டும் என்றே விரும்பலானுர்.

இதனை அறிவதற்காகவே மீண்டும் மீண்டும் பாபாஜியிடம் கால் தேய நடந்தார் சுவாமிஜி. அவரோ இரண்டே உபதேசங்கள்தான் செய்தார்:

''உன்னுடைய ஆசாரியன் இல்லத்தில் பசுவைப் போல நடந்துகொள்''; ''லக்ஷியத்தைப் போலவே ஆத்ம சாதனைக்குரிய ஒழுக்கங்களையும் முக்கியமாகக் கருது'' என்பனவே அவை. இவற்றில் ஒன்று பணிவையும், மற்றது காரியம் — விளைவு இரண்டையும் ஒரே போல மதிக்கும் பாவனையையும் கூறுகின்றன. சுவாமி விவேகானந்தர் இவற்றை ஒருபோதும் மறக்கவில்லை. என்ருலும் 'இன்பதுன்பம் சமானமாக உறுவதெப்படி?' என்ற அவரது கேள்விக்கு இவை விடையாகுமா?

பாபா ஏன் தமக்கு ராஜயோகம் கற்பிக்க மாட்டேன் என்கிருர் என்று யோசித்துப் பார்த்தார் சுவாமிஜி. ஒரு நாள் படுக்கையில் புரண்டபடி இதனையே சிந்தித்துக் கொண்டிருந்த சுவாமிஜி பாபாவையே குருவாக அடைந்து தீக்ஷை அளிக்கச் சொன்னுல் கற்பிப்பாரோ என்றுகூட எண்ணிவிட்டார்.

அந்த எண்ணம் அவருக்குத் தோன்றியதுதான் தாமதம். வாசற்படியருகே ஓர் உருவம் தெரிந்தது.

ஆ! நாலாண்டுகளுக்கு முன்பு மறைந்த நல்ல குருநாதரின் திரு உருவம் அல்லவா அது! நாலாண்டுகளுக்குப் பின் அவரைக் கண்டோமே என்பதில் சுவாமிஜிக்கு ஆனந்தம் மீறிக்கொண்டு வரவில்லை. வெட்கமே பொத்துக்கொண்டு வந்தது. அவர் கண்களில் கண்ணீர் பொத்துக்கொண்டு வந்தது. குருநாதர் ஐம்பதாண்டுகளில் பெற்றிருந்த அநுபவ வெள்ளத்தை யெல்லாம் ஓர் ஐந்தாண்டில் தம்முன் பாய்ச்சியதையும், அதற்கும் மேலாக,

Koviloor Digital Library

ஐம்பதாயிரம் யுகங்களிலும் பொழிய முடியாத அன்பைத் தம் மேல் பொழிந்ததையும் எண்ணிக் கரைந்தார் சுவாமிஜி. தாம் தேடித்தேடிச் சென்றாலும் ஞானோபதேசம் செய்யாதவர்கள் ஒரு புறம் இருக்கட்டும். அவரோ தேடித்தேடி வந்தல்லவா தமது ஐயங்களைத் தீர்த்தார்? பக்தியைக் கேலி செய்த தம்மைப் பக்தனாக்கினார்? அத்வைதத்தைப் பரிகாசம் செய்த தமக்கு நிர் விகல்ப அத்வைத சமாதி நிலையை அருளினார்? பிறகு அதற்கும் மேலான லோக சேவைக்காக அத்வைதானுபூதியையும் தம்மிடம் பூட்டி வைத்துக் கொண்டார்? சிஷ்யருக்காகக் காத்திருந்து, அவரைக் கண்டு புடம் போட்டெடுத்துப் பொன்னாக்கிய புனிதர் பரமஹம்ஸரைக் குரு என்று கருதிய உள்ளத்தில் இன்னொரு வருக்குக் குரு பீடம் போடவாவது?

கதவண்டை நின்ற பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் சுவாமிஜியின் கண்களினுள்ளே உற்று நோக்கினார். ஒரு பேச்சும் பேசாமல் பார்வை நிலைத்துப் பார்த்துக் கொண்டேயிருந்தார். அந்தத் தீக்ஷண்யத்தை சுவாமிஜியால் தாங்கவே முடியவில்லை. அப்போது அவருடைய உணர்ச்சி எப்படி இருந்திருக்கும் என்று நாம் எவ் வாறு சொல்ல முடியும்? வேற்று மனிதரிடம் மனைவிக்கு மனது திரும்பியுள்ளது என்றறிந்த கணவன் அவளை நோக்கும்போது அவள் எப்படி உணர்வாளோ அப்படியே பரமஹம்ஸர் தம்மை நோக்கும்போது சுவாமிஜியும் உணர்ந்திருக்கக்கூடும்.

இருந்தாலும் அவ்வப்போது பவஹாரி பாபாவிடம் நரேந் திரரின் எண்ணம் சென்று கொண்டேயிருந்தது. அதுவரையில் — அதாவது இருபத்தியோரு நாட்களுக்கு — ஸ்ரீராமகிருஷ்ண ரின் உருவமும் அவர் முன் தோன்றிக் கொண்டேதான் இருந்தது. முன்பு நரேந்திரரை வெற்றி கொண்ட பரமஹம்ஸரே இப்போதும் சுவாமிஜியை வெற்றிகொண்டார்.

பிரமததாஸருக்கு சுவாமிஜி எழுதிய கடிதத்தில் இதைப் பற்றிக் குறிப்பிட்டு அவர் சொல்லுவதாவது: ''நான் அவரிடம் பிச்சைக்காரனாகப் போய்ச் சேர்ந்தேன். அவரோ பிச்சைக்கார னாகிய என்னிடமிருந்து கற்க விரும்பினார். இந்த சாதுவை (பவஹாரி பாபாவை) நான் சிரமப்படுத்த விரும்பவில்லை. வேறு எந்த மகானைத் தேடியும் நான் போகப் போவதில்லை.

''ஸ்ரீராமகிருஷ்ணருக்குச் சமானம் யாருண்டு? அவரது அநுபவ பூரணத்துவம் போலவும், அற்புதமான தயை போலவும், ஆழ்ந்த அநுதாபம் போலவும் உலகம் எப்போதுமே கண்டது கிடையாது. ஒன்று, அவர் தாமே கூறியது போல அவதாரமாக இருக்க வேண்டும். அல்லது எப்போதும் பூரணமான தெய்விக

Koviloor Digital Library

மனிதனுக இருக்க வேண்டும். முக்தி நிலையிலுள்ளவன், மனித குலத்தின் நலனுக்காகவே உடல் தாங்கியிருப்பவன் என்று வேதாந்தம் கூறும் தெய்வீக மனிதனுக இருக்க வேண்டும். இதுவே என் திண்ணமான கருத்து. இப்படிப்பட்ட தெய்வ மனிதனை வழிபடுவதையே பதஞ்சலி தமது சூத்திரத்தில், ''ஞானியின் சுத்தமான உள்ளத்தைத் தியானிப்பதால் லக்ஷியத்தை அடையலாம்'' என்று கூறுகிருர்.

சுவாமிஜி தமது பிரார்த்தனைகளில் ஒன்றுவிடாமல் குரு மஹராஜ் ஈடேற்றியதையும், தாம் செய்த லக்ஷோபலக்ஷம் அபசாரங்களையும் அவர் மன்னித்தருளியதையும் கண்ணீர் சோர நினைந்து உருகினுர்.

''என்னுடைய பெற்ருேர்கூட என்னிடம் அவ்வளவு அன்பு கொண்டிருக்க வில்லை. இவ்வாறு நான் சொல்வதில் கற்பனையோ, மிகையோ இல்லை. இது அப்பட்டமான உண்மை என்பதை அவருடைய சீடர்களெல்லாம் அறிவார்கள். மிகவும் ஆபத்திலும், மிகவும் சபலத்திலும் நான் சிக்குண்டபோதெல்லாம் எல்லையற்ற மனக்கிலேசத்துடன் நான் 'ஆண்டவனே காப்பாற்று' என்று பிரார்த்திக்கிறேன். ஆனுல் அந்தப் பிரார்த்தனைகளுக்கு விடை கிடைக்கவில்லை. ஆனுல் இந்த முனிவர், இந்த அவதார புருஷர் — அல்லது நீங்கள் அவரை எப்படிக் குறிப்பிட்டாலும் சரி, இவரோ — மனித இதயத்தை ஊடுருவிப் பார்க்கும் தமது ஆற்றலால் என்னுடைய மனவேதனையைத்தாமே முற்றிலுமறிந்து அவற்றை அகற்றினுர். நான் விரும்பாமலே என்னைத் தம்பாற்படுத்தி என் நோக்காட்டை குணப்படுத்தினுர்.''

ஸ்வாமிஜியின் அப்போதைய மனநிலையை 'பாட்டொன்று பாடுகிறேன் நினக்காக' என்ற கவிதை கவினுற விளக்குகிறது:

பாட்டொன்று பாடுகிறேன்
பாட்டொன்று பாடுகிறேன் நினக்கென்றே
படிப்பவர் புகழ்ந்தாலும் பரிகாசம் புரிந்தாலும்
பொருட்டில்லை என்றே நான் பாடுகிறேன்
..
..

எந்தன் பின்னணியில் நீ எப்போதும் நிற்கின்ருய்
சஞ்சலமில்லாமல் தஞ்சமாய் நிற்கின்ருய்
திரும்பு மிடமெல்லாம் திருமுகம் காண்கிறேன்
திருமுக மதனிலே குறுநகை காண்கிறேன்
..
..

Koviloor Digital Library

கண்டவுடன் பாடுகிறேன் பாட்டொன்று
ஒரு பாட்டு பலவாகப் பாடுகிறேன்
கருணைப் பெருங்கடலே, கல்பாந்த காலமாய்
கழலிணைத் தொழும்பு செய் கடையவன் நான்
விளங்குவதில்லை உந்தன் வழிமுறைகள்
விளங்குவதில்லை எந்தன் விதி எழுத்தும்
விளக்கம் பெறவும் நான் விரும்பவில்லை
பக்தியும் முக்தியும் ஜபதபசாதனையும்
போகமும் பூஜையும் பிறவும் உந்தன்
உன்னத ஆணையில் ஒதுக்கி விட்டேன்
உள்ளது ஒரே ஆசை உரைத்திடுவேன்:
நின் அன்பு நெருக்கத்துக்கே ஆசைகொண்டேன்.
..
..

விளையாட்டு செய்கின்ற இளையோர் போல
வினையேன் நினைச் சினந்து வெகுண்டதுண்டு !
விட்டுப் பிரிந்து உன்னை விலக்கி வைத்து
வெகு தூரம் விரைவாக வெளியேறினேன்.
கனுந்த காரமான வனுந்தரமதனில்
வழியறியாமல் நான் விழித்திடும்போது
வந்து நீ நிற்கிறாய் எந்தன் முன்பு!
பேசாத அதரங்கள் படபடக்க
பொழிகின்ற நயனங்கள் பொலபொலக்க
வந்து நீ நிற்கிறாய் எந்தன் முன்னால்!
இனித்த நின் வதனத்தை ஏழையன் அருகே
குனித்து நீ பார்க்கிறாய் குளிர்ந்த கருணையுடன்
அந்தக் கணத்திலே நின் அன்புக்கு ஆட்பட்டேன்
அடியிணைதனை அண்டி மண்டியிட்டேன்
மன்னிப்பு ஏதும் நான் கோருவதில்லை
மகனிடம் மனஸ்தாபம் நினக்கு உண்டோ ?
மடமைகள் எத்தனை நான் புரிவதற்கும்
மனிதர் யார் நின்னையன்றி மன்பதையிலே?
..
..

பரமஹம்ஸரைப் புறக்கணித்துப் பவஹாரி பாபாவையே சுவாமிஜி பரமகுருவாக வரிக்க முற்பட்டார் என்று நாம் எண்ணுவதற்கில்லை. ராஜ யோகத்துக்கு மட்டும் பவஹாரி பாபாவைத் தம் குருவாகக் கொண்டு கற்க சுவாமிஜி விரும்பினர்

Koviloor Digital Library

என்றே தெரிகிறது. ''நம்முடைய வங்காளம் பக்தியும் ஞான மும் நிறைந்த நாடு. அங்கு யோகம் என்ற பேச்சையே காணேம். வெறும் கசரத்துப் போன்ற ஹட யோகத்தின் அப்பியாசங்கள் தாம் அங்குள்ளன. எனவேதான் நான் இந்த ராஜ யோகியுடன் (பவஹாரி பாபா) தங்கி யிருக்கிறேன்.'' என்று முன்பே அவர் ஒரு கடிதத்தில் எழுதியிருந்தார்.

இது எப்படியானுலும், பவஹாரி பாபாவையே சுவாமிஜி தமது முழு முதற் குருவாகக் கருதிவிட்டார் என்று குருபாயிக்கள் சம்சயம் கொண்டார்கள். இது எவ்வளவு தவறு என்பது சுவா மிஜி அகண்டானந்தாவுக்கு எழுதிய ஒரு கடிதத்திலிருந்து தெரிய வருகிறது: ''எங்கிருந்து கிடைத்தாலும் சரி, நல்லதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதே என் லக்ஷிய வாசகம். இதனுலேயே நான் குருபக்தி குன்றிவருகிறேன் என்று நண்பர்கள் கருதுகிறுர் கள். இது பைத்தியக்காரர்களின் அல்லது குறுகிய மனப்போக்கு கொண்டவர்களின் கருத்தேயாகும். ஏனெனில் எல்லா குருக் களும் ஒன்றேதான். எல்லாருமே விசுவகுருவாகிய ஈசுவரனின் பகுதிகளே; அவனுடைய ஒளியின் பிரதிபலிப்புக்களே.''

சுவாமிஜி காஸிப்பூரிலேயே இருந்தால் பவஹாரி பாபாவின் சிஷ்யராகி விடுவார் எனப் பயந்து அவரை வாரணுசிக்கு அழைத் துச் செல்வதற்காகப் பிரேமானந்தா காஸிப்பூருக்கு வந்திருந்தார். அப்போது சுவாமிஜி அவரை மிகவும் கடுமையாகக் கோபித்துக் கொண்டு அனுப்பிவிட்டார். 'குருபாயிக்களிடம் எனக்கு உள்ள அன்பினுல் என் மார்க்கம் தடைப்பட இனி அனுமதிக்க மாட் டேன்' என்று அவர் சின மிகுதியில் கூறிவிட்டார்.

* * *

காஸிப்பூரில் சுவாமிஜிக்குப் பல ஐரோப்பிய அதிகாரிகளின் பரிசயம் ஏற்பட்டது. ககன் பாபுவின் மூலம் ராஸ் என்பவரின் தொடர்பு கிடைத்தது. இந்தியப் பண்டிகைகள் பற்றி ராஸ் கேட்ட பல கேள்விகளுக்கு மிகவும் சமத்காரமாகப் பதில் சொன் ஞர் சுவாமிஜி. ராஸ் கேட்டுக் கொண்டதன்பேரில் 'ஹோலி'ப் பண்டிகை பற்றி ஒரு வியாசம் எழுதினுர். மாவட்ட நீதிபதியாக இருந்த பென்னிங்டன் என்பவருக்கு சுவாமிஜியை அறிமுகம் செய்து வைத்தார் ராஸ். ஹிந்து மதத்தையும், ஆதியில் அம் மதத்தினர் பின்பற்றிய சமூக அமைப்பையும் பாங்குற சுவாமிஜி அவருக்கு விளங்க வைத்தார். அதனுல் பரமதிருப்தி யடைந்த பென்னிங்டன், ''நீங்கள் இங்கிலாந்து சென்று உங்கள் கருத்தை யெல்லாம் விளக்கவேண்டும்'' என்று ஆர்வத்துடன் கூறினுர்.

Koviloor Digital Library

சுத்தமான உள்ளத்தோடு சுப முகூர்த்தத்தில்தான் பெண்ணிங்டன் அவ்வாறு கூறியிருக்க வேண்டும்.

கர்னல் ரிவெட் கார்நாக் என்பவருடனும் சுவாமிஜி வேதாந்த தத்துவத்தைப் பற்றி விரிவாக உரையாடினர். இந்த உரையாடல்களின்போது அவர் மிகவும் உயர்ந்த நிலைகளுக்குச் சென்று சுடர் வாசகங்களை உதிர்த்து 'கர்னலை'க் களி கொள்ளச் செய்வார்.

* * *

சுவாமிஜி பவஹாரி பாபாவை 'தொந்தரவு செய்வதில்லை' என்ற முடிவுக்கு வந்தபின் தாம் எந்த உள்ளத் தெளிவை வேண்டி நின்றாரோ அதைத் தாமாகவே எவ்வாறோ பெற்று விட்டார். பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் கிருபைதான் காரணமாக இருக்க வேண்டும். தாம் குருநாதரிடம் திட பக்தி கொண்டிருக்கவில்லை என்று குருபாயிக்கள் எண்ணியது மட்டும் சற்றே அவரது உள்ளத்தை உறுத்திக்கொண்டிருந்தது. யாருடனும் தொடர்பில்லாமல் காஸிப்பூருக்குச் சிறிது தொலைவில் ஏகாந்த தியானம் புரிய அவாக் கொண்டார் சுவாமிஜி. இதற்கு முன் அவர் செய்ய வேண்டிய சில காரியங்கள் இருந்தன.

அப்போது அகண்டானந்தா இமயமலையில் சஞ்சரித்துக் கொண்டிருந்தார். அவருடன் சேர்ந்து கொண்டு நேபாள அரசாங்க அதிகாரிகளுடன் திபெத்துக்குச் செல்லவேண்டும் என்பதாக ஒரு விருப்பம் இருந்தது. பௌத்த மதத்தில் அவருக்கிருந்த நாட்டம் காரணமாகவும், அம்மதத்தில் கலந்திருந்த தாந்திரிக ஆராதனை முறைகளில் அவருக்குத் தனிப்பட்டதொரு பிடிப்பு இருந்ததாலுமே முக்கியமாக திபேத் செல்ல எண்ணம் கொண்டார். என்றாலும் அந்தச் சமயத்தில் ஹிருஷிகேசத்தில் அம்மை வார்த்துக் கிடந்த அபேதானந்தாவைப் பற்றியே விசாரமாக யிருந்ததால் சுவாமிஜி திபேத்துப் பயணத்தை மேற்கொள்ள இயலவில்லை. ஒருவாறாக அபேதானந்தா சிறிதே குணமடைந்து வருவதாகச் செய்தி வந்தது. அவரைச் சில நாட்கள் தமது மேற்பார்வையிலேயே பராமரிக்க வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சி சுவாமிஜிக்கு ஏற்பட்டது. எனவே அகண்டானந்தாவை ஹிமாலயத்திலிருந்து திரும்பவும் வரநகர மடத்திலோ, தமக்குப் பிடித்த வேறெந்த இடத்திலோ தங்குமாறு பணித்தார் சுவாமிஜி. அபேதானந்தாவை வாரணாசிக்கு வரவழைத்தார். பிரமததாஸ் பாபுவின் உதவியால் நோயாளியாக விருந்த அபேதானந்தருக்கு இடம் அமர்த்தினர். காஸிப்பூரையும், பவஹாரி பாபாஜியையும் விட்டுத் தாமும் வாரணாசிக்குப் புறப்பட்டார்.

* * *

Koviloor Digital Library

பவஹாரி பாபா இன்னும் பூரணத்துவம் பெறவில்லை; பல விதமான அநுஷ்டானக் கட்டுப்பாடுகளுக்கு அடங்கியே வாழ்கிறார் அவர்; கரையறியாத கடலாக அவர் இல்லை என்று சுவாமிஜி கருதினார். என்றாலும் அவரது பெருமையை ஒருபோதும் மறக்க வில்லை. தாம் அன்பு செய்து பணிவிடை புரிந்த உயர்ந்த குரவர் களில் பவஹாரி பாபாவும் ஒருவர் என்று சுவாமிஜி எழுதி யிருக்கிறார்.

இந்தச் சம்பவம் நடந்து பலகாலத்துக்குப் பின் ஒரு நாள் பவஹாரி பாபாவின் பாதாள ஆசிரமத்திலிருந்து புகை வருவதை மக்கள் கண்டனர். புகையோடு மனித உடல் ஒன்று வேகும் துர்கந்தமும் வருவதை உணர்ந்தனர். இஷ்ட தேவதைகள் என்று ஏழை எளியோரைக் கூறி அவர்களுக்கு அன்னம் நிவேதனம் செய்த பாபாஜி, பரம இஷ்ட தேவதையாகிய ஈசுவரனுக்குத் தாமே நிவேதனமாக விரும்பி அக்கினியில் தம்மையே ஆஹுதி செய்து கொண்டு விட்டார் என்று புரிந்து கொண்டனர்.

* * *

வாரணாசியில், தம் செயலேதுமின்றி விசுவநாதனுக்கும், அன்ன பூரணிக்கும் தம்மை அர்ப்பித்து வாழவேண்டுமென்ற ஆசை முன்பே சுவாமிஜிக்கு இருந்ததல்லவா? அப்போது அந்த ஆசை நிறைவேறவில்லை எனினும் இப்போது சுவாமிஜி வாரணாசிக்குச் சென்றார். அபேதானந்தா ஆரோக்கியம் பெறுவதற்கு வேண்டிய சௌகரியங்கள் செய்துவிட்டுத் தாம் பிரமததாஸரின் தோப்பி லேயே அனவரதமும் தியானமும், யோகமும் செய்து வந்தார்.

மனதில் மதுரமான மந்தமாருதம் வீசியது. தூசு தும்புகளை யும் சொகுசாக அப்புறப்படுத்தி உள்ளத்தில் அமைதியை நிரப் பியது அந்த மந்த மாருதம். அந்தச் சமயம் பார்த்துத்தான் மீண்டும் ஒரு சூறாவளி வீசி சுவாமிஜியின் உணர்ச்சியைக் கொந் தளிக்கச் செய்தது.

குருநாதரின் கிருஹஸ்த சிஷ்யர்களில் சிறந்தவராகவும், குரு பாயிக்களின் ஆதரவாளர்களில் சிறந்தவராகவும் விளங்கிய பல ராம போஸின் உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாகச் செய்தி வந்தது. அவரிலும் சிறந்த சிஷ்யரும் ஆதரவாளருமான சுரேந் திரநாத மித்ரா செத்துக் கொண்டேயிருக்கிறார் என்ற செய்தியும் வந்தது. மிகவும் கலக்கமடைந்து விட்டார் சுவாமிஜி. சந்நி யாசி ஒருவர் இவ்வளவு துக்காக்கிராந்தராக இருப்பதைக் கண்டு பிரமததாஸருக்கு வியப்பாக இருந்தது. அவர் அந்த வியப்பைத் தெரிவித்தபோது நரேந்திரர், ''என்ன சொல்கிறீர்கள்? இனி அப்படிப் பேசாதீர்கள்! நாங்கள் வறட்சியான சாதுக்களல்ல.

Koviloor Digital Library

சந்நியாசியாக இருப்பவர்களுக்கு இதயம் இருக்கக் கூடாது என்று நீங்கள் எண்ணுகிறீர்களா, என்ன?'' என்று சற்றே எரிச்சலுடன் கேட்டார். வாரணசியிலிருந்து புறப்பட்டு வரநகரம் வந்து சேர்ந்தார்.

1890-ம் ஆண்டு மே 13-ந் தேதி பலராம போஸ் குரு நாதரின் பாத கமலத்தை யடைந்தார். அதே மாதம் 25-ந் தேதி சுரேந்திரநாதரும் குருமஹராஜிடம் ஐக்கிய முற்றார். சுவாமிஜி தம்மைக் கல்லாக்கிக் கொண்டார்.

குருபாயிக்களிடம் நடுவில் சிறிது காலம் மன வேற்றுமைப் பட்டிருந்த சுவாமிஜி இப்போது அவர்கள் மத்தியில் இருக்கும் போது மீண்டும் பரிவு மயமானர். அறிவைக் கொண்டே மதத்தை நிர்ணயிக்க வேண்டுமென விரும்புபவர்கள் நாட்டில் அதிகமாகி விட்டதால் சுவாமிஜி தமது சக சந்நியாசிகளின் அறிவை விருத்தி செய்யும் முறையில் உபந்நியசித்து வந்தார். கல்லூரிப் படிப்பை எல்லாம் அந்தப் பால சந்நியாசிகள் துறந்த தால் ஒன்றும் மோசமாகி விடவில்லை என்ற அளவுக்கு சகல சாஸ்திர பாரங்கதரான சுவாமிஜி தமது ஞானத்தையெல்லாம் அவர்களுக்குப் புட்டுப் புட்டுக் கொடுத்தார். வகுப்பு, பாடம் என்று சொல்லாமலே மணிக்கணக்காக அவர்களுக்குப் பல அரிய விஷயங்களைக் கற்பித்தார். ஒரே பொருள்பற்றி நாள் கணக்கில் சாங்கோபாங்கமாக அலசி ஆராய்ந்து பிரசங்கித்தார்.

இந்தச் சமயத்தில் குருபாயிக்களுக்கு சுவாமிஜியின் சங்கம் மிகவும் தேவையாக இருந்தது. மடத்தின் போஷகராக விளங்கிய சுரேஷ் பாபுவின் மறைவுக்குப் பின் அவர்களது வறுமை கொடியதாகியிருந்தது. இந்தத் தருணத்தில் அவர்கள் உள்ள உறுதியைக் கைவிடாதிருப்பதற்கு சுவாமிஜியின் உபதேசங்களே மிகவும் உதவியாக யிருந்தன. குருமஹராஜை அடிக்கடி நினை வூட்டி, அவரது ஆணை தங்கள் மீது சுமந்திருப்பதை சுவாமிஜி மற்றவர்களுக்கு உணர்த்தி வந்தார். அறிவாராய்ச்சியிலும், கடமை உணர்ச்சியிலும் மிகவும் திட்பமாகக் கழிந்த போதுகளை ரம்மிய மாக்குவதற்காகத் தமது சுற்றுப்பிரயாண அநுபவங்களைச் சுவைபடக் கூறுவார்.

* * *

ஸ்ரீராமகிருஷ்ணர் அவதரித்து வாழும் பேற்றினைப் பெற்ற வங்காளத்தில் அவருக்குத் தகுந்த நினைவுச்சின்னமொன்று எழுப்ப வேண்டுமென்று சுவாமிஜி முன்பே நினைத்ததுண்டு. இப்போது அவருடைய அந்த எண்ணம் மேலும் ஆழ்ந்து வேரூன்றியது. கங்காதிரத்தில் கருணாகரருக்கு ஒரு கோயில் எடுக்க வேண்டும்

Koviloor Digital Library

என்று சுவாமிஜி ஆர்வம் கொண்டார். இது குறித்து அவர் பிரமததாஸருக்கு எழுதும் பக்தி ஒளி சொட்டும் கடிதத்தைப் பாருங்கள்:

''பல காரணங்களுக்காக ஸ்ரீராமகிருஷ்ணரின் உடலத்தைத் தகனம் செய்யுமாறு நேரிட்டது. இது மிகவும் பழிக்குரிய ஒரு செயல் என்பது பற்றிச் சற்றும் சந்தேகமில்லை. எனினும் அவரது அஸ்திகள் காப்பாற்றப்பட்டு வருகின்றன. அவற்றைத் தற்போது கங்கைக் கரையை ஒட்டி எங்கேனும் ஓர் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்வதன் மூலம் எங்கள் தலையில் சுமந்துள்ள பாபத்துக்குப் பரிகாரம் செய்து கொள்ளக்கூடும் என்று நான் எண்ணுகிறேன்.

''மேல்நாட்டு நாகரிகத்தின் உலகாயத ஜாஜ்வல்யத்தைக் கண்டு அதிலேயே கட்டுண்டு கிடந்த இந்தியர்களை உய்விப்பதற்காக அவர் இந்த மண்ணில் வந்தார். இது காரணமாகவே சர்வகலாசாலைப் படிப்பாளிகளைத் தமது துறவி சிஷ்யர்களாகத் தேர்ந்தெடுத்தார். அவரது ஜனனத்தால் வங்காளிக் குலமே புனிதம் பெற்றுவிட்டது; வங்காள நாடே பாவனமாகிவிட்டது. இப்படிப்பட்டவர் சாதனைகள் புரிந்த ஸ்தலங்களை ஒட்டி, அவருக்கு மரியாதை செலுத்தும் முறையில் இந்த வங்கத்திலே இதுவரை ஒரு நினைவுச் சின்னமும் எழுப்பப்படவில்லை என்பதைவிட விசனிக்கத்தக்கது ஏதேனும் உண்டா?

''.........சுரேஷ் பாபு இதற்காக ஆயிரம் ரூபாய் அளித்திருந்தார். இன்னமும் அளிப்பதாக உறுதி கூறியிருந்தார். ஆயினும் ஆண்டவன் சித்தம் நமக்கெங்கே புரிகிறது? சுரேஷ் பாபு இவ்வுலகைவிட்டுச் சென்று விட்டார். பலராம் பாபுவின் மறைவுச் செய்தியும் நீங்கள் அறிந்ததே!

''இப்போது குருமஹராஜின் புனித அஸ்திகளுடனும், ஆசனங்களுடனும் சிஷ்யர்கள் எங்கு செல்வது என்பதே புரியவில்லை. (இங்கே வங்காளத்திலுள்ள மக்கள் வாய்ப்பேச்சில் வல்லுநராக இருப்பார்கள்; கிரியாம்சையில் அங்குலம்கூட நகர மாட்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியும் தானே?) சிஷ்யர்கள் எல்லாம் சந்நியாசிகள். எனவே தங்களுக்கு எந்த வழி கிடைக்கிறதோ அதன்படி எங்கு வேண்டுமானாலும் செல்ல அவர்கள் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய பணியாளாகிய நான்தான் வேதனையில் வேகிறேன். பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் அஸ்திகளை ஸ்தாபிக்க ஒரு துண்டு நிலம்கூடப் பெற முடியவில்லையே என்பதை எண்ணினால் என் இதயம் பிளந்து போகிறது.''

Koviloor Digital Library

பிரமததாஸர் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தி நிதி சேகரித்துத் தர இயலுமா என்று கேட்டுவிட்டு சுவாமிஜி தொடர்கிறார்: ''நான் ஸ்ரீராமகிருஷ்ணரின் அடிமை. அவசியமானால் அவரது நினைவை அவருடைய நாட்டில் நிறுத்தவும், ஒரு சில சீடர்களையேனும் அவருடைய மகத்தான குறிக்கோள்களைக் கடைப் பிடிக்கவும் செய்வதற்காகத் திருடவும், கொள்ளையடிக்கவும்கூடத் தயாராக இருக்கிறேன். வங்காளத்தின் நிலைமை மிகவும் பரிதாபத்துக்குரியதாக உள்ளது. டாம்பீகம், புலன் வேட்கை, சுயநலம் இவை மக்களின் ஜீவனை உறிஞ்சிக் கொண்டிருக்கிறது. துறவு என்றால் உண்மையில் என்ன என்பதைக் கனவு காணக்கூட மக்களால் இயலவில்லை.''

குருமஹராஜின் நினைவுச் சின்னம் குறித்து ஏதேனும் செய் தாக வேண்டும் என்று இவ்வளவு செயல் துடிப்புக் கொண்டு விளங்கிய சுவாமிஜி உடனேயே மக்கள் கண்ணில் படாமல் வாழும் வாழ்க்கையை எண்ணலானார். இவ்வாறு அவர் அடிக் கடித் தனிமைக்கும் சங்கத்துக்கு மிடையே, தியானத்துக்கும் சேவைக்கு மிடையே, செயலுக்கும் சிந்தனைக்கு மிடையே மாறி மாறிப் பாய்ந்தது வாசகர்களுக்கு விசித்திரமாகக்கூடப் படலாம். ஆனால் சந்திரன் பூரண கலைகளுடன் நிறைந்ததும் மீண்டும் குறையத்தானே தொடங்குகிறான்? அதே போலப் பூரணமாகத் தேய்ந்ததும் மீண்டும் வளரத்தானே தொடங்குகிறான்? அதே போல எந்த ஒரு துறையிலும் சுவாமிஜியின் நாட்டம் பூரண வேகத்துடன் பதிந்தவுடன் அது தன்னையுமறியாமல் எதிர் திசை யில் செல்லத் தொடங்கிற்று.

முன்போலவே வரநகரத்தை விட்டுக் கிளம்பிட வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. முன்போலவே ''ஒரு போதும் அங்கு திரும்பக் கூடாது'' என்றும் சுவாமிஜி தீர்மானம் செய்து கொண்டார்.

அப்போது அகண்டானந்தர் இமயத்திலிருந்து திரும்பியிருந்த சமயமாகும். எளிமை நிறைந்த திபேத் பற்றியும் எழில் நிறைந்த காச்மீரம் பற்றியும் அவர் கதை கதையாகச் சொன்னார். துறவின் இலக்கணமாக சுவாமிஜி கருதிவந்த புத்தருடைய தர்மத்தை அநுசரிக்கும் லாமாக்களின் மடங்கள் பற்றியும், சந்நியாசிகளில் ஒரு தெய்வமாகவும், தெய்வங்களில் ஒரு சந்நியாசியாகவும் விளங் கும் கேதாரிநாதனின் திருத்தலம் பற்றியும் அகண்டானந்தர் கூறியது சுவாமிஜியின் அவாவைத் தூண்டி விட்டன. இப்பிர தேசங்களை அடைய எவ்வளவு பிரயாசை வேண்டும் என்பதை அறிய அறிய அவா அதிகமாயிற்று. குன்றாத ஊக்கத்துடன்

Koviloor Digital Library

தம் யாத்திரையை முடித்துவந்த அகண்டானந்தரை நோக்கி, ''நீயே என் மனிதன்! உனக்கு சிரத்தை உள்ளது! வா, நாமிருவரும் போவோம்'' என்று குதூகலித்துக் கூவினுர் சுவாமிஜி.

ஜுலை 6-ந் தேதியன்று குருபாயி ஒருவருக்கு எழுதிய கடிதத்தில், ''விரைவிலேயே, அதாவது பயணக் கட்டணத்தின் ஒரு பகுதியேனும் எனக்குக் கிடைத்தவுடனேயே, நான் அல்மோரா போக வேண்டுமென உத்தேசித்திருக்கிறேன். அங்கிருந்து, கங்கைக் கரையில் அமைந்த கர்வால் வந்து நீண்டகால தியானத்துக்காக அங்கு தங்கியிருக்க நினைத்திருக்கிறேன். கங்காதரர் (அகண்டானந்தர்) என்னேடு வருகிறுர். இந்த விருப்பத்துடனும் உத்தேசத்துடனும்தான் நான் அவரைக் காச்மீரத்திலிருந்து இங்கு வரவழைத்தது......ஹிமாலயத்துக்குச் சிறகடித்துச் செல்லவேணுமென ஏங்கிக் கொண்டிருக்கிறேன்.'' என்று கூறுகிறுர் சுவாமிஜி.

உடன் இருந்தவர்களிடம், ''என்னுடைய ஸ்பரிச மாத்திரத்தில் மனிதனை மாற்றும் அளவுக்கு அநுபவம் பெறுமுன் நான் திரும்ப மாட்டேன்'' என்று கூறினுர் சுவாமிஜி. ஸ்பரிச மாத்திரத்தில் தம்மைப் பேரின்ப நிலத்துக்குக் கொத்திச் சென்ற குருமஹராஜை நினைத்து இவ்வாறு கூறினுரோ, என்னவோ?

*　　*　　*

கல்கத்தாவிலிருந்து ஹிமாசலம் புறப்படுமுன் கங்கைக்கு அப்பாலுள்ள குஸுரீ என்ற கிராமத்துக்குச் சென்றுர் சுவாமிஜி. தூய அன்னை அங்குதான் அப்போது வசித்து வந்தார்.

குருதேவரால் பூஜிக்கப்பட்ட அந்தப்புண்ணியவதியை வணங்கினுர் சுவாமிஜி.

''அம்மா, நான் இமயமலை போகிறேன். ஞானத்தின் உயர் நிலையைப் பெற்றுலன்றி அங்கிருந்து திரும்ப மாட்டேன். ஆசி கூறி அனுப்பு'' என்றுர் பணிவு மயமாக.

குருநாதரின் பெயரில் குழந்தையை ஆசீர்வதித்தாள் சாரதை. ''என் மகனே, புறப்படுமுன் உன் சொந்த அம்மாவைக் காண்பாயல்லவா?'' என்றுள் — ஒரு பெண் மட்டுமே மற்றொரு பெண்ணிடம் காட்டக்கூடிய அநுதாபத்துடன்.

அன்பு பொலிய அவனை நோக்கினுர் சுவாமிஜி.

''அம்மா? அம்மாவாவது? நீ ஒருத்திதான் என் அம்மா'' என்றுர்.

சுவாமிஜிக்கு மீண்டும் ஆசி கூறினுள் சாரதை — அவதார புருஷரால் ஆராதிக்கப்பட்ட அன்னை.

Koviloor Digital Library

அத்தியாயம் 12

இமயமலேச் சாரலிலே

கல்கத்தாவிலிருந்து அகண்டானந்தருடன் புறப்பட்டார் சுவாமிஜி. புறப்பட்டவுடனேயே அவருக்கு நிம்மதி பிறந்தது. அவருக்கே உரித்தான குழந்தைத்தனத்துடன் புதுப்புது இடங்களைப் பார்த்து ரசித்து மகிழ்ந்து வந்தார். இந்தப் பயணத்தில் முதன் முதலாகச் சேர்ந்தாற்போல் அவர்கள் சில தினங்கள் தங்கியது பகல்பூரில்தான். ஆரம்பத்தில் அங்கு குமார் நித்தியானந்த ஸின்ஹா என்பவரின் வீட்டில் அவர்கள் தங்கியிருந்தனர். சுவாமிஜியின் இதய சுத்தத்திலும், வாக் படுத்துவத்திலும் வசியமாகாதார் யாருளர்? ஸின்ஹா அவரைப் பெரிதும் போற்றினார். அதன்பின் குமார் நித்தியானந்த ஸின்ஹாவின் போதகரான மன்மதநாத சௌத்ரி என்பவர் இல்லத்தில் சுவாமிஜியும் அகண்டானந்தரும் தங்கினர். அங்கு பாபு மதுராநாத ஸின்ஹா என்ற வழக்கறிஞர் சுவாமிஜியைக் கண்டு அவரால் ஆகர்ஷிக்கப்பட்டார். கல்லூரி நாட்களிலேயே தாம் சுவாமிஜியைக் கல்கத்தாவில் கண்டிருப்பதாகவும், பிரம்ம சமாஜத்தில் அவர் கானம் செய்து கேட்டிருப்பதாகவும் மதுராநாதர் நினைவு கூர்ந்தார். சுவாமிஜியின் மூச்சுக் காற்றே புலமையும், ஞானமும் தான் என்று அவர் ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். சுவாமிஜி பேசிய விஷயங்களிலெல்லாம் சுயநலக் கலப்பற்ற ஆழ்ந்த தேசபக்தி படிந்து முலாம் பூசுவதாகக் கண்டார் மதுரா நாதர். பிறகு சிகாகோவில் நடைபெற்ற சர்வமத மகாசபையில் சுவாமிஜி வெற்றி வீரராகத் திகழ்ந்து விவேகானந்தராக இலங்கியபோது, மதுரா நாதர் தாம் பகல்பூரில் கண்டு உரையாடிய சந்நியாசியே அவர் என்று அறிந்து கொள்ளை சந்தோஷமடைந்தார். 'என் மனிதன் நீயே' என்று சுவாமிஜி அகண்டானந்தரைக் கூறினாரல்லவா? அதே போல மதுராநாதரும் 'இந்தியா தனது மனிதரைக் கண்டு விட்டது — அவரே விவேகானந்தர்' என்று பிற்பாடு எழுதினார்.

சுவாமிஜி தங்கியிருந்த வீட்டுக்குரியவரான மன்மத நாதர் தீவிர பிரம்ம சமாஜியாவார். அவருக்கு சுவாமிஜி இந்து மதத்தின் விசேஷங்களை யெல்லாம் எடுத்துரைத்தார். ஸ்ரீகிருஷ்ணரின் சரிதாம்ருதத்தைத் தத்துவ ரீதியில் விளக்கினார். பிரம்ம சமாஜத்தினரின் கலக்கத்தை அநுபவ பூர்வமாகத் தெளிவிக்க சுவாமிஜியைவிடச் சிறந்தவர் யாருளர்?

Koviloor Digital Library

சுவாமிஜி இவ்வுலகைவிட்டுப் பிரிந்த பின் 1906-ம் ஆண்டில் அவரது சிஷ்யரொருவருக்கு மன்மதர் எழுதியுள்ள கடிதத்தில் சுவாமிஜி அவருடன் தங்கியிருந்த விவரங்களெல்லாம் அழகாகக் கூறப்பட்டுள்ளன.

சுவாமிஜிக்கும் அகண்டானந்தருக்கும் முதலில் இடம் அளிக்கும்போது மன்மதநாதர் அவர்களைப் பற்றி விசேஷமாக எதுவும் எண்ணவில்லையாம். அவர்களுக்கு பிக்ஷை செய்யும்போதுகூட ஒன்றும் உரையாடவில்லையாம். அவர்களைப் படிப்பு வாசனை யற்ற சாதாரணப் பரதேசிகள் என்றே எண்ணி யிருக்கிறார் மன்மத நாதர். போஜனம் முடிந்தபின் பௌத்தத்தைப் பற்றிய ஓர் ஆங்கில நூலைப் படிக்கலானார் மன்மதர்.

சுவாமிஜிக்குத்தான் பௌத்தத்தில் தனி ஆர்வம் ஆயிற்றே! எனவே அவர் அந்த நூலைப்பற்றி விசாரிக்கலானார். அதன் தலைப்பை மட்டும் கூறிய மன்மதர் ''உங்களுக்கு இங்கிலீஷ் புரியுமா?'' என்று சுவாமிஜியைக் கேட்டார். ''ஏதோ கொஞ்சம் புரியும்'' என்றார் சுவாமிஜி. பாமரராக அடங்கி வாழ வேண்டும் என்ற அவரது நீண்ட நாளைய ஆர்வமே அவரை இப்படிப் பேசத் தூண்டியிருக்க வேண்டும்.

பௌத்த மதம் பற்றிப் பேசலானார் மன்மதர். உடனே, பாமரராகி அடங்கி வாழ வேண்டும் என்ற விருப்பத்துக்கும் மேலாக புத்தரின் பெருமைகள் சுவாமிஜியின் மனசில் மோதின. தம்மையும் மீறி பௌத்த தத்துவங்களை அவர் விளக்கலானார். ஆங்கில நூல்களிலிருந்து மேற்கோள்கள் பலகாட்டிப் பேசிக் கொண்டே போனார் சுவாமிஜி. மன்மதரும் மதுராநாதரும் அந்தப் பேச்சில் கிறங்கிப் போய் விட்டனர்.

இன்னொரு நாள் இப்படித்தான் ஏதோ பேச்சு வாக்கில் சுவாமிஜி யோக சாதனை ஏதேனும் புரிந்து வருகிறாரோ என்று கேட்டார் மன்மதர். சுவாமிஜியோ தமது ஒவ்வொரு நரம் பிலும் ராஜயோகம் ததும்புவதைக் காட்டுவது போல அந்த சாஸ்திரத்தை கவினுற விளக்கத் தொடங்கினார்.

சுவாமிஜியின் சம்ஸ்கிருத ஞானத்தைப் பற்றி அறிய வேண்டு மென்று ஒரு நாள் ஆவல் கொண்டார் மன்மதர். தம்மிட மிருந்த உபநிஷத நூல்களை யெல்லாம் திரட்டி வைத்துக்கொண்டு அவை சம்பந்தமாக சுவாமிஜியைப் பல கேள்விகள் கேட்டார். பளிச்சுப் பளிச்சென்று சுவாமிஜி விடை கூறினார். மறைகள் யாவையும் தம்முளே அவர் மறைத்து வைத்திருக்கிறார் என்பதைக் கண்டார் மன்மதர்.

ஒரு நாள் சுவாமிஜி ஏதோ பாடலை தமக்குள்ளே முனகிக் கொண்டிருக்க அதனை அகஸ்மாத்தாகக் கேட்டுவிட்டார்

Koviloor Digital Library

மன்மதர். ''உங்களுக்குப் பாடத் தெரியுமா?'' என்று சுவாமிஜி யை அவர் கேட்டார். ''ஏதோ அற்ப சொற்பமாகத் தெரி யும்'' என்றார் சுவாமிஜி. அவர் அற்பம் என்பது எப்படி உண்மையில் அனந்தமாகயிருக்கிறது என்பதைத்தான் மன்மதர் கண்டு விட்டாரே! எனவே அவரைப் பாடுமாறு வற்புறுத்தினார் மன்மதர். எப்போதும் போலவே இப்போதும் பெரும் பயன் அடைந்தார். நாத வித்யை மர்மங்கள் அனைத்தும் தெரிந்த அற்புத காயகராக இருந்தார் சுவாமிஜி.

மறு நாள் மாலை சங்கித சிம்மங்களாக மதிக்கத்தக்க உஸ் தாத்கள் பலர் உள்ளிட்ட பல ரசிகர்களைத் தமது விட்டுக்கு வரவழைத்து சுவாமிஜியைப் பாடச் செய்தார் மன்மதர். இரவு ஒன்பது அல்லது பத்து மணியோடு பாட்டு முடிந்துவிடுமென எண்ணி, வந்தவர்களின் போஜனத்துக்கு ஒன்றும் ஏற்பாடு செய் யாமலேயிருந்து விட்டார். அவர். ஆனால் சுவாமிஜியோ தங்கு தடையின்றிக் கன மழையாகக் கான மழை பொழிந்து கொண்டே யிருந்தார். பத்து ஆகி, பதினொன்று மாகி, பன்னிரண்டையும் கடந்து ஒன்று, இரண்டு என்று ஓடி மூன்றுவது மணி நெருங்கும் போதுதான் சுவாமிஜி இசையுலகிலிருந்து இக உலகுக்கு வந்தார். மற்றவர்களும் அப்போதுதான் இக உலகுக்கு வந்தனர். போஜ னத்தைப் பற்றியோ, மன்மதர் தங்களுக்குப் போஜன மளிக் காதது பற்றியோ அவர்களில் யாருமே சிந்திக்கவில்லை.

அன்று சுவாமிஜியின் பாட்டுக்குப் பக்க வாத்தியம் வாசித்த கைலாஸ பாபு என்ற வித்வானுக்கு விரல்களே மரத்துப் போய் விட்டனவாம்!

மறு நாள் மாலையில் அந்த ரசிகர் குழாம் மன்மதர் விட்டை வந்தடைந்தது. புதிதாகவும் பலர் வந்திருந்தனர். கைலாஸ பாபுவும் நேற்றைய குறையை இன்று பூர்த்தி செய்ய வந்திருந் தார். ஆனால் சுவாமிஜி அன்று பாட மறுத்து விட்டார். இவற்றையெல்லாம் கண்டதாலும், இவற்றுக்கும் மேலாக இவற்றை மூடி வைத்திருக்கும் விநயத்தைக் கண்டதாலும், சுவாமிஜியிடம் மன்மதருக்கு அளவற்ற ஈடுபாடு உண்டாயிற்று. சுவாமிஜி தம்முடனேயே இருந்துவிட வேண்டும்; அவரைத் தாம் ஒரு போதும் பிரியக் கூடாது என்று எண்ணலானார் மன்மதர்.

''தேசமுமாச்சு, சஞ்சாரமுமாச்சு! இந்த பகல்பூரிலேயே இருந்து விடுங்களேன்'' என்று சுவாமிஜியிடம் அவர் கூறலானார். ஆனால் சுவாமிஜி உலக யிருளையெல்லாம் நீக்கிப் பகலாக்கப் பிறந்தவரல்லவா? எந்நாட்டவருக்கும் பொதுவான அவரால் எப்படி ஒரே இடத்தில் பொருந்தியிருக்க இயலும்?

Koviloor Digital Library

''இந்த ஊரிலுள்ள பெரிய மனிதர்களிடமெல்லாம் உங்களை இட்டுச் சென்று அறிமுகப்படுத்த விரும்புகிறேன்'' என்று ஒரு நாள் மன்மதர் சுவாமிஜியிடம் கூறினுர்.

''ஐயா, நான் ஒரு பரதேசி. பணக்காரர்களிடம் எனக்கென்ன வேலை? அவர்களை மட்டும் நான் தேடிச் செல்வது சந்நியாச தர்மத்துக்கே விரோத மாகும்'' என்ருர் சுவாமிஜி.

அவருடைய தூய துறவுணர்ச்சி மன்மதரைக் கவர்ந்தது. இளம் பருவத்திலிருந்தே மன்மதநாத செளத்ரிக்கும் ஏகாந்த மாகத் தியானம் புரிய வேணுமென்ற ஆர்வம் உண்டு. இப்போது அது அதிகமாயிற்று.

''சுவாமிஜி! பிருந்தாவனத்தில் ஸ்ரீகோவிந்தஜியின் ஆலயத்தில் முன்னூறு ரூபாய் காணிக்கை கொடுத்தால், உயிருள்ள அளவும் பிரசாதம் தருகிருர்களாம். நாம் இருவரும் அங்கே சென்று தங்கிவிடுவோமே! மனம் கொண்ட மட்டும் பரந்தாமனிடம் பக்தி பண்ணலாம். யமுனையின் அமைதியான தீரத்தில் ஆசை தீர யோகம் செய்யலாம்'' என்ருர் மன்மதர் சுவாமிஜியிடம்.

''ஒரு குறிப்பிட்ட இயல்பு பொருந்தியவர்களுக்கு நீங்கள் சொல்லும் திட்டம் சரிதான். ஆனுல் எல்லாருக்கும் அது சரியாகாது'' என்று கூறிவிட்டார் சுவாமிஜி.

* * *

சுவாமிஜியின் கருத்துக்களில் தம்மை மிகவும் கவர்ந்த இரண்டினை மன்மதநாத செளத்ரி குறிப்பிட்டிருக்கிருர்.

ஆரியர்களின் அநுபவம், ஞானம், மேதாவிலாஸம் இவற்றில் சுவாமிஜியின் காலம் வரை எவை மங்காமல் இருந்தனவோ அவை யாவும் கங்கை நதியை ஒட்டிய பிராந்தியங்களிலேயே காணப்படுவதாக அவர் கருதினுர். கங்கையிலிருந்து விலக விலக ஆரிய நாகரிகம் தேய்ந்து வருவதாக அவர் கருதினுர். இதனுலேயேதான் கங்காதேவியை நமது சாஸ்திரங்கள் மிகவும் புகழ்ந்து போற்றுவதாகக் கூறினுர்.

இரண்டாவதாக, 'ஹிந்துக்கள் சாதுப் பிராணிகள்' என்று மேநாட்டவர்கள் கூறியதில் இகழ்ச்சியாக எதுவும் இல்லை என்றும் அதுவே நம் பெருமையைக் காட்டுகிறது என்றும் கூறினுர். ஒரு சமுதாயம் மிருக பலத்தை விடவேண்டுமெனில், அவ்வாறு செய்வதற்கு அறநெறிகளிலும், ஆத்மீகத்திலும் அது எவ்வளவு தூரம் முன்னேறியிருக்க வேண்டும், அன்பையும் தயையையும் எவ்வளவு விருத்தி செய்துகொண்டிருக்க வேண்டும் என்று உணர்ச்சியுடன் கூறினுர் சுவாமிஜி. எனினும் ஹிந்துக்கள் சாதுவாக இருப்ப

Koviloor Digital Library

தாலேயே அவர்களை அப்பாவிகள் என்றும் அசடுகள் என்றும் எண்ணி ஏய்த்து வரும் பிரசாரகர்களைக் கண்டு அவர் மனம் கொதித்தார். இதனுல்தான் விவேகானந்தரான பிறகு ''போதும் நம்முடைய சாத்விகம்! இனி நமக்கு ராஜஸம்தான் தேவை! எழுமின், விழிமின்'' என்று முரசறைந்தார்.

* * *

சுவாமிஜி மன்மதருடன் ஒரு வாரம் தங்கியிருந்தார்.

மன்மதரிடம் விடை பெறுவது இயலாத காரியம் என்பதால் அவர் வீட்டிலில்லாத சமயம் பார்த்து அங்கிருந்து நழுவி விட்டார்!

சுவாமிஜி தம்மிடம் பேசியவற்றிலிருந்து அவர் அங்கிருந்து பதரிகாசிரமம்தான் சென்றிருப்பார் என்று ஊகித்தார் மன்மதர். நேயம் உந்தித்தள்ள சுவாமிஜியைத் தேடிக்கொண்டு அல்மோரா வரை சென்று விட்டார் மன்மதர். அங்கிருந்தும் சுவாமிஜி முன்பே புறப்பட்டு விட்டார் என்று கேள்விப்பட்டு வேறு வழியின்றி ஊருக்குத் திரும்பினுர்.

''தாம் ஏன் சுவாமிஜியை கிணற்றுத் தவளையாக்க விரும்ப வேண்டும்! அவருடைய அலுவலகம் இந்த உலகம் முழுவதுமல்லவா?'' என்று எண்ணித் தம்மை ஆற்றிக் கொண்டார் மன்மதர்.

சுவாமிஜி அமெரிக்காவிலிருந்து திரும்பியபின் ஒரு முறையேனும் அவரை பகல்பூருக்கு வரவழைக்க வேண்டுமென முயன்ருர் மன்மதர். ஆனுல் இறைவன் திருவுள்ளம் வேறு விதமாக இருந்து விட்டது!

* * *

பகல்பூரிலிருந்து கிளம்பிய சுவாமிஜியும் அகண்டானந்தரும் வைத்தியநாதத்தை அடைந்தனர். இருவருமாக பிரம்ம சமாஜப் பெருமகனுரான பாபு ராஜ நாராயண போஸ் என்பவரைக் காணச் சென்றனர். தாம் ஆங்கிலம் பயின்றவர் என்று அவரிடம் கூறக்கூடாது என்று சுவாமிஜி அகண்டானந்தரிடம் கூறினுர்.

'கல்லாத பேர்களே நல்லவர் நல்லவர்கள்!' என்று தாயுமான சுவாமிகள் பாடியதும் 'கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே' என்பதாகக் கல்லாதவருக்கே முதலிடம் தந்து வள்ளல் பாடியதும் சும்மாவா? கல்விமான் தனது கல்வியோடு, அந்தக் கல்வியைத்தான் பெற்றிருக்கிறேம் என்ற செருக்கையும் அல்லவா பெற்றிருக்கிறுன்!

Koviloor Digital Library

ராஜ நாராயண பாபுவை சுவாமிஜி சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் பல வேடிக்கைகள் நிகழ்ந்தன.

எவ்வாறே சம்பாஷணை நெருடலான விஷயங்களில் சென்று விட்டது. அந்தத் தத்துவ விவாதத்தின் போது சுவாமிஜியின் தொண்டைவரை ஆங்கில வார்த்தைகள் வந்து விடும். எப்படியோ சமாளித்துக்கொண்டு விடுவார். 'ப்ளஸ்' (+-கூட்டல் குறி) போன்ற வார்த்தைகளை வங்காளியிலும் கூறமுடியாமல் தவித்தார் சுவாமிஜி. விரலால் குறிபோட்டுக் காட்டியே இந்தத் தவிப்பை ஒருவாறு போக்கிக் கொண்டார். ராஜ நாராயண பாபு அவருக்கு ஆங்கில அரிச்சுவடிகூடத் தெரிந்திராது என்றே தான் எண்ணியிருப்பார்.

பல ஆண்டுகளுக்குப் பின்பு உலக அரங்கிலே ஆங்கில மொழியில் அதி நுண்ணிய கருத்துக்களைச் சக்கை போடாகப் போட்ட விவேகானந்தர்தான் தாம் கண்ட சுவாமிஜி என்றறிந்தபோது ராஜ நாராயணர் கொண்ட வியப்புக்கு ஓர் அளவே யில்லை.

* * *

ஓர் இரவு ராஜ நாராயணருடன் கழித்துவிட்டு சுவாமிஜியும் அகண்டானந்தரும் மறுபடியும் திவ்விய காசியை அடைந்தனர். பழைய நண்பரான பிரமததாஸருடன் தங்கினர் சுவாமிஜி. இந்து மத நூல்களைப்பற்றிப் பல விஷயங்களை இருவரும் விவாதித்தனர். இன்னும் எவ்வளவோ தெரிந்து கொள்ள வேண்டும் என்று சுவாமிஜிக்கு ஆர்வமிருந்த போதிலும் ஹிமாலயம் அவரைக் கூவி அழைத்துக் கொண்டிருந்தபடியால் காசியிலிருந்து புறப்பட்டார்.

பிரமததாஸ பாபுவிடம் விடை பெறுமுன், காசி விசுவநாதனும், தேவி அன்னபூரணியும் தம் எதிர்காலத்தைப்பற்றி அறிவித்துவிட்டதே போல ஆவேசமயமாக தீர்க்கதரிசன வாக்கொன்றை மொழிந்தார் சுவாமிஜி:

''அடுத்த முறை நான் இங்கு வரும்போது பீரங்கிக்குண்டு போலச் சமூகத்தின்மீது வெடிப்பேன்; அது நாய் போல என்னைத் தொடரும்'' என்றார்.

அவர் சொன்னது அப்படியே உண்மையாயிற்று.

அநாதிகாலமாக வேதாந்த வித்யையை வளர்த்து வந்திருக்கும் கல்வியிற் சிறந்த காசி சுவாமிஜிக்குத் தனது பூரண ஆசியையும் அளித்து அவரை அங்கிருந்து அனுப்பி வைத்தது.

அயோத்தி சென்ற சுவாமிஜி அங்கு ஜானகிவர சரணர் என்பவரை அவரது ஆசிரமத்தில் சந்தித்தார். ஏராளமான நில புலனுள்ள ஆலயமொன்றின் மஹந்துவாக இருந்த ஜானகிவரர்

Koviloor Digital Library

சம்ஸ்கிருதம், பாரசிகம் ஆகிய இரு மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவராவார். சுவாமிஜி அவரைப்பற்றி அகண்டானந்தரிடம், ''மனிதர் ஒருவரைக் கண்டேன், புனித மனிதர் ஒருவரைக் கண்டேன்'' என்று கூறி மகிழ்ந்தார்.

* * *

அடுத்து நாம் சுவாமிஜியையும், அகண்டானந்தரையும் காண்பது நைனிதாலில். ராம ப்ரஸன்ன பட்டாசாரியர் என்பவரின் விருந்தினராக ஒரு பக்ஷம் தங்கிவிட்டு அங்கிருந்து புறப்பட்டனர். சாந்திக்குப் பெயர் பெற்ற தொன்மை வாய்ந்த தவக்களஞ்சியமாகிய பதரிகாசிரமம்தான் அவர்களுடைய லக்ஷியமாகயிருந்தது. அதற்கு முதல் நிலையாக அல்மோராவுக்கு சுவாமிஜியும், குருபாயியும் புறப்பட்டனர். கால் நடையாகவே முழு யாத்திரையையும் முடிப்பது, காசைக் கையாலும் திண்டாமலிருப்பது என்ற கடுமையான நிபந்தனைகளுடன் பயணம் தொடங்கினர். மூன்றும் நாளிரவு ஓடைக் கரையொன்றில் தங்கினர். புராதனமான அரசமரம் ஒன்று தண்புனலின் கரையிலே நின்று மேலும் தம்மை கூட்டிக்கொண்டிருந்தது. கம்பீரம் நளினம் இரண்டும் இழைந்த அந்தச் சூழலில் சிவம் சக்தி இரண்டின் சாந்நித்தியமும் சுவாமிஜிக்குப் புலனாயிற்று.

ஓடையில் இறங்கி முழுகினார். அரச மரத்தடியில் வந்து அமர்ந்து தியானத்தில் ஆழ்ந்தார். சிவம், சக்தி — அவற்றின் தொடர்பு குறித்த தத்துவ சிந்தனை இறுகிற்று. பேரானந்த வாரிதியில் திளைத்தார் சுவாமிஜி. நீண்ட நேரம் தியானம் புரிந்த பின் தெளிவோடு எழுந்திருந்தார். ''கங்காதரா,* இந்தப் போதி விருட்சத்தினடியே என் வாழ்வின் மிகப்பெரிய பிரச்னைகளிலொன்று தீர்வு பெற்று விட்டது'' என்று உவகையோடு கூறினார். புத்தரைப் போற்றியவர் புத்தர் போலவே விருக்ஷத்தடியில் ஞானத்தெளிவு பெற்றார் போலும்! பிரபஞ்ச தத்துவமும் ஞான தத்துவமும் ஒன்று என்பதை அவர் எப்படிக் கண்டு கொண்டார் என்பதைக் குருபாயியிடம் கூறினார். அப்போது தம் உள்ளத்தில் எழுந்த எண்ணங்களை யெல்லாம் அவை தோன்றிய வாக்கிலேயே அவசரமாக வங்காளியில் எழுதிக் கொண்டார் சுவாமிஜி. அவ் வாசகமாவது:

ஆதியில் வாக்குத்தான் இருந்தது†......

பிரபஞ்சமும் மனிதனும் ஒரே அடிப்படையில்தான் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஜீவனுடைய

* கங்காதரர்—ஸ்வாமி அகண்டானந்தரின் பூர்வாசிரம நாமம்.

† இது கிறிஸ்துவ வேதத்தில் காணும் வாக்கியமாகும்.

Koviloor Digital Library

ஆத்மாவும் உயிருள்ள உடலுக்குள் வைக்கப்பட்டிருப் பதுபோல விசுவாத்மாவானது உயிருள்ள பிரகிருதி (இயற்கை)யில் — அதாவது நம் காட்சியிலுள்ள பிரபஞ்சத்தில் வைக்கப்பட்டுள்ளது. சிவா (எனப் படும் காளி) சிவனைத் தழுவிக்கொண்டிருக்கிருள்* — இது வெறும் கற்பனையல்ல. ஒன்றை (அதாவது ஆத்மாவை) மற்றது (பிரகிருதி) தழுவியிருக்கும் இந்த உறவானது ஒரு கருத்துக்கும் அதனை வெளியிடும் வார்த்தைக்குமுள்ள உறவு போன்ற தாகும். அவை ஒன்றேதான்; வேறல்ல. மானஸிகமான சூக்ஷ்மப் பாகுபாட்டால்தான் அவற்றில் ஒன்றை மற்றதிலிருந்து பிரிக்க முடியும். வார்த்தைகள் இல்லாவிடில் எண்ண மிடுவதே இயலாது. எனவேதான், ஆதியில் வாக்குத் தான் இருந்தது.........

விசுவாத்மாவின் இந்தத் துவந்த அம்சம் நிரந்தரமானது. எனவே நாம் அறிவதெல்லாம், உணர்வதெல்லாம் நிரந்தரமாக அமைப்புள்ளதும், நிரந்தரமாக அமைப் பற்றதுமான இரண்டின் இசைவேயாகும்.

வார்த்தையில்லாமல் எண்ணமுடியாது என்கிருர் சுவாமிஜி. ஆனுல் வார்த்தை யென்ருல் பல மொழிகளிலுள்ள பதங்கள் என்ற பொருளில் அவர் கூறியிருக்க முடியாது. எம்மொழியுமே தெரியாத குழந்தைக்கும்கூட எண்ணங்களுண்டு. மிருகங்களுக் கும், பக்ஷிகளுக்கும் எண்ணமுண்டு. ஆனுல் அந்த எண்ணத்தை ஒரு ஜீவன் புரிந்து கொள்கிருன் என்னும்போதே அதனைத் தனக்குத் தானே விளங்கிக் கொள்கிருன் என்றும் ஏற்படுகிறது. இப்படி விளங்கிக்கொள்ளும் மொழிகடந்த மொழியைத்தான் வார்த்தை என்று கிறிஸ்துவ வேதமும், சுவாமிஜியும் கூறுகின்றனர். எண் ணம் தோன்றுவதும், அந்த எண்ணம் தோன்றிய ஜீவன் அதனைப் புரிந்து கொள்வதும் உடனுக்குடனே — ஒரே சமயத்தில் என்றே சொல்லிவிடலாம் — நிகழ்கின்றன. இதைத்தான் அமைப்பற்ற தும், அமைப்புள்ளதும் இசைவதாக சுவாமிஜி கூறுகிருர்.

'விசுவாத்மாவின் துவந்த அம்சம் நிரந்தரமானது' என்று அவர் கூறுவதால் துவைதமே இறுதி உண்மை என்று ஒப்புக் கொள்வதாகவோ, அத்வைதத்தைக் கைவிட்டு விட்டதாகவோ எண்ணலாகாது.

விசுவம் என்றும், அவரே கூறுவதுபோல 'நம் காட்சியிலுள்ள பிரபஞ்சம்' என்றும் பேச்சு எழுகிற துவைத நிலையிலிருந்து

*இது தந்திர சாஸ்திர தத்துவமாகும்.

Koviloor Digital Library

சந்தியத்தைக் காணும்போது சுவாமிஜிக்கு எழுந்த கருத்துக்களே இவை. விசுவமே மறையும் நிலை உண்டு. அப்போது அமைப் புள்ளது — அமைப்பில்லாதது என்ற இரண்டுமே மறைந்து விடும். அதுதான் அத்வைதம். அத்வைதம் சுவாமிஜி ஒரு போதும் கைவிடாத தத்துவமாகும். இங்கு அவர் கூறியுள்ள இருமைக்கும் ஜீவாத்ம — பரமாத்ம துவைத சித்தாந்தத்துக்கும் சம்பந்தமில்லை.

* * *

இமயத்தின் மடியிலேயுள்ள அல்மோராவைச் சென்றடைந் தார் சுவாமிஜி. அம்பா தத்தர் தோட்டத்தில் அவரை இருக்கச் செய்த அகண்டானந்தர், அல்மோராவில் ஏற்கனவேயே வந்து தங்கியிருந்த சாரதானந்தரையும் வைகுண்டநாதரையும் அங்கு அழைத்துவரச் சென்றார். அம்மூவரும் தத்தர் தோட்டத்துக்கு வரும் வழியிலேயே சுவாமிஜி எதிர்கொண்டு அவர்களுடன் சேர்ந்து கொண்டார். லாலாபத்ரி ஷா என்பவர் சுவாமிஜியைத் தமது இல்லத்துக்கு அழைத்தார். சுவாமிஜியும் அழைப்பை ஏற் றார். அந்த இல்லத்தில் சிரஸ்ததார் ஸ்ரீகிருஷ்ண ஜோஷியுடன் சுவாமிஜி நீண்டநேரம் சம்பாஷித்தார். சந்நியாச யோகத்தின் பெருமையை விளக்கினார். சிரஸ்ததார் சுவாமிஜியின் ஆற்றல் களைக் கண்டு வியந்தார்.

லாலாபத்ரி ஷா சுவாமிஜிக்கு மிகவும் சிரத்தையோடு பணி விடைகள் புரிந்தார். 'பத்ரி ஷாவைப் போன்ற பக்தரை நான் மிகவும் துர்லபமாகவே கண்டிருக்கிறேன்' என்று சுவாமிஜி கூறியதுண்டு.

அல்மோராவிலிருக்கும்போது மிகவும் பயங்கரமான, துக்க கரமான ஒரு சேதி சுவாமிஜிக்கு எட்டியது. அவருடைய சோதரி களில் ஒருத்தி தற்கொலை செய்து கொண்டு விட்டாள் என்பதே அது. வறுமையாலோ, அல்லது கணவன் கொடுமைப் படுத்திய தாலோ அவள் தற்கொலை செய்து கொண்டாள் என்று ஊகிக்கப் படுகிறது. தமது துயரத்திலேயே, இந்தியப் பெண்குலத்துக் கெல்லாம் பொதுவான பிரச்னைகளைக் கண்டு இருவிதத்தில் மனசு நொந்தார் சுவாமிஜி.

மனிதர்கள் செல்ல முடியாத இமயமலைப் பகுதிகளுக்குள் செல்ல வேண்டும்; பிரகிருதியின் கடுமைகளையும், கொடுமை களையும், கண்டு அநுபவிக்க வேண்டும் என்று சுவாமிஜி விரும் பினார். எப்போதுமே உலக சேவைக்காக அவர் துடித்தவுடன் ஏகாந்த வாழ்வுக்குச் சென்றதைத்தான் நாம் கண்டிருக்கிறோமே!

Koviloor Digital Library

சாரதானந்தர், அகண்டானந்தர், வைகுண்டநாதர் மூவருடனும், தங்கள் சாமான்களைத் தூக்கிவர ஓர் ஆளை அமர்த்திக் கொண்டு கர்வாலை நோக்கிப் புறப்பட்டார் சுவாமிஜி. வழக்கம் போலவே அவருடைய ஏகாந்தத்தை தடுக்கும் விதத்தில் அகண்டானந்தருக்கு கபம் கட்டிக்கொண்டு அவஸ்தையாயிற்று. ஒருவாறுகக் கர்ணப் பிரயாகையை அடைந்தனர். அங்கிருந்து பதரி செல்ல உத்தேசம். ஆனால் பதரி மார்க்கத்தைச் சர்க்கார் அடைத்துவிட்டிருந்ததால் மீண்டும் சுவாமிஜியின் எண்ணம் சரிந்தது. கர்ணப் பிரயாகையை விட்டுக் கிளம்பியதும் அகண்டானந்தருக்குக் காய்ச்சல் கண்டுவிட்டது. சுவாமிஜிக்கும் ஜுரம் வந்து விட்டது. இருவருக்கும் உடம்பு குணமாகி அவர்கள் ருத்ரப் பிரயாகையை அடைய ஒரு வாரம் பிடித்தது.

ருத்ரப் பிரயாகையின் ரமணியம் சுவாமிஜியைக் குழந்தை போலக் குதூகலிக்க வைத்தது. ஹிமவானே அங்கு ஒரு பெரிய குழந்தையாகத் துவண்டு கொண்டிருந்தான். பனிக்காக நாம் குழந்தைகளுக்கு குல்லாய் போடுகிறோமென்றால் இங்கே இமயக் குழந்தை பனியையே குல்லாயாகப் போட்டுக் கொண்டிருந்தது. ஆங்காங்கு அந்தப் பனி மூடிய முகடுகளைக் கண்டு சுவாமிஜி பேரானந்த மடைந்தார். எங்கு பார்த்தாலும் அருவிகளும், ஓடைகளுமாக இருந்தன. அடர்ந்த வனந்தரத்தில் அந்தஅருவிகளின் ஒலியே ஒலியிறந்த சாந்திக்கு அணிசெய்து கொண்டிருந்தது. சுவாமிஜியின் உள்ளம் அங்கு பூரித்திருந்தது. ஜீவத்துடிப்பு மிகுந்து விளங்கினார் அவர்.

ருத்ர ப்ரயாகையில் பூர்ணானந்தர் என்ற வங்காள சந்நியாசியுடன் ஓர் இரவு தங்கினர். அங்கிருந்து கிளம்பிச் செல்கையில் வழியேயுள்ள ஒரு தர்மசாலையில் சுவாமிஜிக்கும், அகண்டானந்தருக்கும் தாப ஜ்வரம் கண்டுவிட்டது. பிரயாணம் தடைபட்டது. அவர்கள் எழுந்து, ஒரு சிறிது நடமாடவே சில நாட்களாயின. இவ்வளவு பலத்த காய்ச்சலடித்து எழுந்த உடம்பில் எப்படி மலைப்பாங்கான பகுதிகளில் கால் நடையாகச் செல்ல முடியும்! அந்த சீதோஷ்ணத்திலும் சூழ்நிலையிலுமே தொடர்ந்து இருந்தாலும் மலைக்காய்ச்சல் திரும்பிவிடும்.

இந்த இக்கட்டான நிலைமையில் நல்லகாலமாக அவர்கள் கர்வால் மாவட்டத்து அமீனாகிய பத்ரிதத் ஜோஷி என்பவரைச் சந்தித்தனர். அப்போது அங்கு முகாமிட்டிருந்த அமீன் சுவாமிஜிக்கும் அகண்டானந்தருக்கும் ஆயுர்வேத மருந்துகள் சில அளித்துக் குணப்படுத்தினார். அதோடு அங்கிருந்து ஒன்பது மைலில் இருந்த ஸ்ரீநகருக்கு 'தாண்டி' என்ற டோலி போன்ற சாதனத்தில் அவர்களை அனுப்பிவைத்து உதவி புரிந்தார்.

Koviloor Digital Library

அல்மோராவிலிருந்து சுமார் இரண்டு வாரங்களில் நூற்றிருபது மைல்களைக் கடந்து அவர்கள் ஸ்ரீநகர் வந்து சேர்ந்தார்கள். எவ்வளவோ உள்ளக் குமுறலுக்கும், உடல் பலவீனத்துக்கு மிடையே ஒரு நாளில் பல மைல்கள் கடினமான வழியில் பிரயாணம் செய்திருந்தார் சுவாமிஜி.

ஸ்ரீநகரத்தில் சுமை தூக்கி வந்த ஆளை அனுப்பி விட்டனர். அலகநந்தா நதியின் கரையில் ஓர் ஏகாந்தமான குடிலில் தங்கினர். முன்பு துரியானந்தர் தங்கியிருந்த இடம் அது. அங்கு சுமார் ஒருமாத காலம் சுவாமிஜியும் குருபாயிக்களும் தங்கியிருந்தனர். அவர்களுக்கு உணவு வசதி செய்யும் பொறுப்பை தனி எவருக்கும் தராமலே வாழ்ந்து வந்தார்கள். 'மதுகரி பிக்ஷை' என்பதாக ஒன்று உண்டு. மதுகரம் என்ருல் தேன் வண்டு. வண்டு பல புஷ்பங்களிலுள்ள மதுவைச் சேகரிப்பது போல, பல விடுகளில் உணவு இரந்து பெற்று உண்பதே மதுகரி பிக்ஷை. இப்படிப் பிச்சை எடுத்து சுவாமிஜியும் குருபாயிக்களும் உண்டனர். யாருக்கும் பாரமாக இராமல் சமூகம் முழுவதற்கும் தான பாக்கியத்தை அளித்து வந்தனர். யாத்திரையின்போது சாந்தோக்கியம், பிருஹதாரணியகம் ஆகிய இரண்டு தவிர மற்ற எல்லா உபநிஷதங்களின் உபதேசங்களையும் குருபாயிக்களுக்கு சுவாமிஜி விளக்கி வந்தார். இப்போது அவற்றை தொடர்ந்து வந்ததோடு மற்ற வேத சாஸ்திரங்களைக் -கற்பிக்கலானுர். துறவிகளுக்கே உரிய தூய முறையில் நாட்கள் சென்றன.

வைசியராக இருந்து பிறகு கிறிஸ்துவரான ஒரு பள்ளி ஆசிரியரை சுவாமிஜி ஸ்ரீநகரில் கண்டார். மன வேதனைப் பட்டார். ஹிந்து மதத்தின் பெருமைகளை யெல்லாம் அவருக்கு உணர்த்தினுர். அதன் பயனுக அந்த ஆசிரியர் மீண்டும் ஹிந்து தர்மத்தை தழுவினுர். ஹிந்துக்களின் கிறிஸ்துவ மத மோகத்தைத் தடுத்து ஹிந்து மதத்தைக் காத்ததே விவேகானந்த சுவாமி பாரதத்துக்குப் புரிந்த பரமோபகாரமாகும். அதில் முதன் முதலில் அவர் ஸ்தூலமாகப் பெற்ற வெற்றி இந்த ஸ்ரீநகர சம்பவம்.

* * *

ஸ்ரீநகரத்திலிருந்து தேரி என்ற இடத்தை அடைந்தனர். அங்கு நிர்மாநுஷ்யமான ஒரு தோப்பில் ஆண்டிகளுக்கென்றே இரண்டறைகள் கட்டி வைத்திருப்பதை அறிந்து அதில் தங்கினுர்கள். கங்காதேவி அருள் பாலிக்கும் அந்த ஊரில் மதுகரி பிக்ஷை எடுத்துக் காலம் கடத்தினர். நிறையத் தியானம் புரிந்தார்கள்; நிறையத் தோத்திரங்கள் சொல்லித் துதித்தார்கள்.

Koviloor Digital Library

தேரி ராஜ்யத்து திவானுகிய பாபு ரகுநாத பட்டாசாரியர் என்பவரின் பழக்கம் அவர்களுக்குக் கிடைத்தது. அவருடன் சுவாமிஜி சில நாட்கள் தங்கினுர். கங்கைக் கரையிலேயே தாம் தியானம் புரிய ஓர் இடம் தேடிக் கொண்டிருந்தார் சுவாமிஜி. தேரி ராஜ்ய திவான் அதற்குத் தாம் வசதி செய்து தருவதாக முன்வந்தார். கங்கையோடு விலங்கஞ நதி சங்கமமாகும் கணேச ப்ரயாகை என்ற ரம்மியமான க்ஷேத்திரத்தில் சுவாமிஜிக்கு ஓர் இருக்கை அமைத்துத்தர அவர் ஏற்பாடு செய்தார்.

ஆனுல் இந்த முறையும் சுவாமிஜியின் உத்தேசம் பலிதமாக வில்லே. ஏனெனில் மீண்டுமொருமுறை அகண்டானந்தருக்கு ஜுரம் கண்டது. சரியான மார்ச்சளியோடு உபாதைப்பட்ட அவரை உள்ளூர் வைத்தியர் ஒருவர் பரிசோதித்தார். அவருடைய நுரையீரல்கள் பாதிக்கப்பட்டதாகக் கூறி, அவரை உடனே சமவெளிப் பிரதேசத்துக்கு அழைத்துச் சென்று முறைப்படி சிகித்ஸை அளிக்க வேண்டுமென்று கூறினுர் வைத் தியர். மலேகளில் குளிர் ஏறி வருவதால் அகண்டானந்தர் விஷய மாக உடனே கவனம் செலுத்த வேண்டுமென்றும் அவர் எச்சரித் தார். அப்புறம் கணேசப்ரயாகையைப் பற்றி எண்ண இட மேது?

சுவாமிஜி திவானிடம் சென்ருர். அவருடைய அன்பான ஏற்பாடுகளுக்காக நன்றி தெரிவித்துத் தற்போது தாம் அங்கு தங்கியிருக்க இயலாததற்காக வருத்தம் தெரிவித்தார். பிறி தொரு சமயம் அவரது விருந்தோம்பலேத் தாம் பயன்படுத்திக் கொள்வதாகக் கூறினுர்.

அகண்டானந்தர் விஷயமாக திவான் ரகுநாத பட்டா சாரியார் தம் உதவியை நல்கினுர். டேராடூனிலுள்ள ஸிவில் ஸர்ஜனுக்கு ஒரு அறிமுகக் கடிதம் கொடுத்தார். அதோடு சுவாமிஜியும் அகண்டானந்தரும் முஸ்ஸோரி வரை செல்வதற் காகக் குதிரைகளேக் கொடுத்து, வழிச் செலவுகளேயும் தாமே ஏற்ருர்.

இமய வாசம் என்ற நீண்டகால ஆசைக்கு மீண்டும் ஒரு காற்புள்ளியிட்டுவிட்டு டேராடூன் வந்து சேர்ந்தார் சுவாமிஜி — குருபாயிக்களுடன். ''மோன வாழ்க்கையையும், யோக வாழ்க் கையையும், மேற்கொண்டு சமூகத்திலிருந்து விலகிவிடவேண்டும் என்று தாம் விரும்பியபோதெல்லாம் சூழ்நிலேகளின் நெரிசல் காரணமாகத் தம் யோசனேயைக் கைவிடுமாறு நிர்ப்பந்திக்கப் பட்டதாக சுவாமிஜி எண்ணிறந்த முறைகள் கூறிக் கேட்டிருக் கிறேன்'' என்று அகண்டானந்தர் எழுதியிருக்கிருர்.

Koviloor Digital Library

தேரியிலிருந்து கிளம்பியவர்கள் முஸ்ஸோரி வழியாக ராஜ்பூர் சென்றனர். அங்கு துரியானந்தாவும் அவர்களோடு சேர்ந்து கொண்டார். டேராடுனில், தேரி திவான் சொற்படி ஸிவில் ஸர்ஜன் மக்லேரன் என்பவரால் அகண்டானந்தர் பரீக்ஷிக்கப் பட்டார். அவருக்கு மார்ச்சளியால் சுவாஸக் குழலில் ரண முண்டாகியிருப்பதாக ஸர்ஜன் கூறினர். சம வெளியிலேயே அவர் வசிக்க வேண்டுமெனவும், கவனத்துடன் மருத்துவம் பெறவேண்டும் என்றும் கூறினர்.

அகண்டானந்தருக்கு ஒரு காப்பான இடம் தேடி டேராடுனில் அலேந்தார் சுவாமிஜி. பல வீட்டுக்காரர்களிடம் சென்று ''என் குருபாயி சுகவீனமடைந்திருக்கிறார். உங்கள் வீட்டில் அவருக்கு ஒரு மூலேயில் இடம் தர முடியுமா? அவருடைய ஆகாரத்துக்குச் சிறிது வசதி செய்தளிக்க முடியுமா?'' என்று கேட்டுக் கொண்டார். அவர் கோரிக்கைக்குப் பலனில்லே. சுவாமிஜியும் அதற்காக மனது தளரவில்லே. அவரும் அந்த குருபாயிக்களும் சரிவரப் படிப்பைப் பூர்த்தி செய்திருந்தாலும் இப்போது கைநிறையச் சம்பாதித்திருக்கலாம்; ஒரு நோய் நொடியென்றால் ராஜ வைத்தியம் செய்து கொண்டிருக்கலாம். அதெல்லாம் வேண்டாமென்றுதானே இப்படி அநாதைப் பரதேசிகளாகக் கிளம்பி விட்டார்கள்? இந்த வாழ்க்கையில் சௌகரியம் கிடைத்தால்தான் ஆச்சரியப்பட்டு மகிழ வேண்டுமே ஒழிய சௌகரியம் கிடைக்காததற்கு வருந்தி என்ன பயன்?

கடைசியில் நோயாளியை ரக்ஷிக்க ஒருவர் கிடைத்தார். பண்டித ஆனந்த நாராயணர் என்ற அந்தக் காச்மீரப் பிராமணர் ஒரு வக்கிலாவார். அவர் அகண்டானந்தரின் இருக்கைக்கும், ஆகாரத்துக்கும் வசதி செய்து தந்தார். மற்றவர்கள் வேறிடத்தில் தங்கி, பிக்ஷை எடுத்தே புசித்து வந்தனர்.

குணமடைந்து வந்த அகண்டானந்தரை அல்லஹாபாத்தில் ஒரு நண்பர் வீட்டுக்குப் போகுமாறு பணித்து, மற்றவர்களுடன் சுவாமிஜி ஹிருஷீகேசம் கிளம்பினர். ஆனல் அகண்டானந்தரோ அல்லஹாபாத் போகும் வழியில் ஸஹரன்பூர் என்ற இடத்தில் நண்பர் ஒருவர் கூறியதன்மேல் மீரட்டுக்குச் சென்று டாக்டர் த்ரைலோக்யநாத கோஷ் என்பவரிடம் ஒன்றரைமாதம் சிகித்ஸை பெற்றர்.

சுவாமிஜி ஹிருஷீகேசம் அடைந்தார்.

புராணப் பிரக்கியாதி பெற்ற புண்ணிய ஸ்தலம் ஹிருஷீகேசம். சித்திர விசித்திரமாகத் திகழும் தலம் அது. ஏதோ

Koviloor Digital Library

ஓர் ஊரே உலகையெல்லாம் துறந்துவிட்டு ஹிமோத்கிரியின் பாதத்தில் வந்து சாந்தியுடன் அமர்ந்திருப்பது போன்ற பதி அது. மலைகள் தன்னைச் சூழ்ந்திருக்க, யார் கண்ணுக்கும் காணு மல் சந்நியாசம் அநுஷ்டித்துக் கொண்டிருந்தது ஹிருஷீகேசம். பாகிரதி தேவியின் பெருக்கு அதனைச் சுற்றி வளைத்துக் கொண்டு ஓடி அதன் பெருமையைப் பெருக்கும். அங்கு வீசும் காற்றிலும் இந்த உலகத் தொடர்பில்லாத ஓர் உன்னதத் தூய்மை செறிந் திருக்கும். சுவாமிஜி சென்ற நாட்களில் ஹிருஷீகேசம் மரங் களும், புதர்களும் மண்டியிருந்த காட்டுப் பகுதியாகும். யாரும் பேரிட்டிராத காட்டுப் பூக்களும், பேரிட முடியாத அழகோடு பூத்துக் குலுங்கும் செடிகளுமாகத் தவம் புரிந்து கொண்டிருக்கும் ஹிருஷீகேசத்தின் பசுமையைத் தூக்கிக் காட்டுவது போல ஆங் காங்கு சாதுக்களின் குடில்கள் காணப்படும். கூரை வேய்ந்த அந்தப் பர்ணசாலைகளைக் காணும்போது தூக்கி முடிந்த சடையோடு கூடிய வீடுகளும் சந்நியாசிகளார் தவம் புரிவது போலவே காணும். கூதிர்காலத்தில், ஹிருஷீகேசத்தின் குளி ரையும் பொருட்படுத்தாமல் நூற்றுக் கணக்கான யோகிகளும், சந்நியாசிகளும் அங்கு வந்து வேத, வேதாந்த, வேதாங்கங்களைப் பாராயணம் செய்வார்கள்; யோக சாதனைகளைப் புரிவார்கள்.

சண்டேசுவர மஹாதேவன் என்ற அழகுத் திருநாமத்துடன் விளங்கும் பெருமானுடைய மந்திரத்தருகே ஒரு பர்ணசாலையில் சுவாமிஜியும் குருபாயிக்களும் தங்கினர். வயிற்றுப் பாட்டுக்கு மதுகரி பிக்ஷை இருக்கவே இருந்தது. மிகவும் தீவிரமான சாதனைகளை மேற்கொள்ள ஆவல் கொண்டார் சுவாமிஜி. ஆனால் பாழாய்போன விதி இப்பொழுதும் அவரைப் படுக்கையில் கிடத்தி விட்டது. ஜுரம் முற்றி அவருக்கு ஜன்னியே பிறந்துவிட்டது. பிரக்ஞையும் தப்பத் தொடங்கியது. நாடி கூடத் தளர்ந்து விட்டது. ஈரம்காக்கும் வெறும் தரையில் இரண்டே இரண்டு முரட்டுப் போர்வைகளைப் போட்டு அதன்மீது செங்கல் சூளையாக உடம்பு கொதிக்கப் படுத்திருந்தார் புவநேசுவரி அருமைக்கிட்டு வளர்த்த செல்வர் குடிப்பிள்ளை. அவரை அந்நிலையில் காணக் காண குருபாயிக்களுக்குத் துயரமும் அச்சமும் உண்டாயின. சுவாமிஜியை அவ்வளவு காய்ச்சலில் அங்கு வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் அவர்கள் கையைப் பிசைந்து கொண்டார்கள். அவருக்கு யாரிடம், என்ன வைத்தியம் செய் வது என்று தெரியாமல் கலங்கிக் கொண்டிருந்தபோது மலைவாசி ஒருவன் அங்கு வந்து சேர்ந்தான். அவன் ஏதோ ஓர் ஔஷ தத்தைத் தேனில் குழைத்து சுவாமிஜியின் வாய்க்குள் நிர்ப்பந்த

Koviloor Digital Library

மாக அதைச் செலுத்தினுன். ஆண்டவன் கிருபையால் சுவாமிஜி கண்களைத் திறந்தார். குருபாயிக்கள் ஆண்டவனை நினைந்து, அந்த மலைவாசியைப் பார்த்து ஆசுவாஸப் பெருமூச்சு விட்டனர்.

சுவாமிஜிக்கு அவ்வளவு ஆபத்தான நிலை நேரிட்டபோது அவர் தங்களுக்கு எவ்வளவு இன்றியமையாதவர் என்பதை குரு பாயிக்கள் முன்னெப்போதையும் விட ஸ்வச்சமாக உணர்ந்தார் கள். அவர் இல்லாவிட்டால் தாங்கள் உலகத்தில் ஓர் ஆதரவு மின்றி அநாதராகி விடுவோம் என்பது அவர்களுக்குப் பளிச் சென்று புரிந்தது. தங்களுக்கு அவர் என்னவெல்லாமாக இருந் திருக்கிறுர் — நண்பராக, வழிகாட்டியாக, குருவாக, தங்கள் நலம் பேணும் தாயாக, தங்களுக்காகப் பிச்சை புகும் சேவகனுக இப்படி யாவுமாக இருந்திருக்கிறுர் — என்பதை எண்ணி எண்ணி எப்போதையும்விட அவரிடம் அதிக அன்பும், மதிப்பும், நன்றியும் கொண்டனர்.

சுவாமிஜி மீண்டும் சகஜ உடல்நிலைக்கு வந்தவுடன் அவரை அவர்கள் தங்களது மீண்ட உயிர்போல அன்பு செய்து ஹரித் வாரத்துக்கு அழைத்து வந்தனர். ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் மற்ருெரு கண்ணுகிய சுவாமி பிரம்மானந்தரும் (பூர்விகத்தில் ராகால்) அங்கு வந்து சுவாமிஜியைக் கண்டு ஆனந்தித்தார். எல்லாருமாக ஹரித்வாரத்திலிருந்து கிளம்பி ஸஹரன்பூரில் பங்கு பேஹாரி பாபு என்ற வக்கிலின் வீட்டுக்கு வந்தனர். அகண்டா னந்தர் மீரட்டில் சிகித்ஸை பெற்று வருகிறுரென அங்கு அறிந்து அவர்களும் மீரட்டுக்குச் சென்றனர்.

டாக்டர் த்ரைலோக்யநாதரின் இல்லத்தில் குணமடைந்து கொண்டிருந்த அகண்டானந்தர் சுவாமிஜியைக் கண்டதும் இன்பக் கண்ணீரும், துன்பக் கண்ணீரும் கலந்து பெருக்கினுர். யமன் வாயிலிருந்து சுவாமிஜி தப்பினுரே என்பதில் இன்பம்; கட்டு மஸ்தான அவரது தேகம் இப்படி எலும்புக்கூடாகிவிட்டதே என் பதில் துன்பம். அகண்டானந்தரோடு சுவாமிஜியும் டாக்டரின் இல்லத்திலேயே பதினைந்து நாட்களிருந்து உடம்பைத் தேற்றிக் கொண்டார். மற்றவர்கள் யக்ஞேசுவர பாபு என்பவருடன் தங்கியிருந்தனர். (இந்த யக்ஞேசுவரர் பிற்பாடு சந்நியாச தர் மத்தைத் தழுவி சுவாமி ஞானனந்தர் என்ற பெயரில் பாரத தர்ம மஹாமண்டலத்தின் தலைவரானுர்.) டாக்டரிடம் அகண்டா னந்தருக்கும் சுவாமிஜிக்கும் சிகித்ஸை முடிந்தவுடன் எல்லா குருபாயிக்களுமாக யக்ஞேசுவரரின் நண்பரொருவருக்குச் சொந்த மான தோட்டமொன்றில் சிறிது காலம் வசித்தனர். சுவாமிஜி இன்னமும் மருந்துகள் சாப்பிட்டுக் கொண்டுதானிருந்தார். இப்

Koviloor Digital Library

போது வந்திருந்த காய்ச்சலுக்காக மட்டுமின்றி, இனிமேல் இவ்வாறு நிகழாமலிருக்கவும் தற்காப்பாகப் பல மருந்துகள் உட்கொண்டு வந்தார். அலேச்சலாலும், யோக சாதனைகளாலும், நானுதரப்பட்ட ஆகாரங்களாலும் தேக ஆரோக்கியத்தை இழந்திருந்த சுவாமிஜி மீரட்டில் சில நாட்கள் அமைதியாகத் தங்கியிருந்து இழந்த பலத்தை மெல்ல மெல்லப் பெற்று வந்தார்.

மீரட்டில் ஸேட்ஜி தோட்டத்தில் இருந்தபோது அகண்டானந்தர் தமக்குப் பழக்கமான ஓர் ஆப்கானியரை அழைத்து வந்தார். அவர் சுவாமிஜியிடம் வருமுன் ஹிந்துக்களைப் போல தலைக்கு ஸ்நானம் செய்து மடியாக அவரை அடைந்தார். இனிப்புப் பலகாரங்களைத் தம் கைபடாமல் ஹிந்து சேவகர் ஒருவர் மூலம் கொண்டுவந்து சுவாமிஜிக்கு அளித்தார். பிறகு, சுவாமிஜி எல்லாருக்கும் பொதுவானவர், ஆசாரத்தைவிட அன்புக்கே கட்டுப்பட்டவர் என்பதை அறிந்து பெருமகிழ்ச்சியடைந்தார்அவர்.

மீரட் தோட்டம் பழைய வரநகர மடம்போலாகி வந்தது. சுவாமிஜியுடன் பிரம்மானந்தர், அகண்டானந்தர், துரியானந்தர், சாரதானந்தர், வைகுண்டநாதர் இவ்வளவு பேரும் இருக்க, அத்வைதானந்தரும் வந்து சேர்ந்து கொண்டார். சுவாமிஜிக்கு உத்ஸாகம் பிறந்துவிட்டது. தினமும் பகல் போஜனமானவுடன் சமஸ்கிருத புராணங்களையும் இலக்கியங்களையும் படித்து விளக்கலானர். மிருத்-சகடிகை என்ற நாடகத்தையும், காளிதாஸரின் அபிக்ஞான சாகுந்தல நாடகத்தையும், குமார சம்பவ காவியத்தையும் முடித்தபின் விஷ்ணு புராணத்தை எடுத்துக் கொண்டார்.

சங்கீதமும், நாம சங்கிர்த்தனமும், தியானமுமாக மற்றெரு வரநகரமாகவே இருந்தது மீரட். சாயங்கால வேளைகளில் ராணுவ அணிவகுப்பு மைதானத்துக்குச் சாதுக்கள் யாவரும் சென்று விடுவார்கள். சிப்பாய்களின் பயிற்சிகளைப் பார்த்துப் பாலர்கள் போல ஆனந்திப்பார்கள். ‘அஹிம்ஸா பரமோ தர்ம:’ என்ற ஆக்ஞைப்படி ஒழுகிவரும் சாதுக்களுக்கும் சிப்பாய்களுக்கும் எத்தனையோ வேறுபாடுகளிருக்கலாம். ஆனுல் ஒழுக்கம்-கட்டுப்பாடு இவை இருவருக்கும் பொது அல்லவா? வாழ்க்கைப் போராட்டத்தில் அல்லலுறும் மக்களைக் காக்கும் ஞான வீரர்களே யல்லவா சாதுக்கள்?

ஸ்ரீராமகிருஷ்ணரின் சிஷ்யர்கள் மிகவும் சந்தோஷமாகயிருந்த நாட்களில் மீரட் வாசத்தையும் குறிப்பிட வேண்டும்.

* * *

கொஞ்சம் அறிவு ஆராய்ச்சியும், சர்ச்சையும் செய்ய வேண்டுமென்று சுவாமிஜிக்கு ‘குஷி’ பிறந்தது. அகண்டானந்தரைக்

Koviloor Digital Library

கொண்டு மீரட்டிலுள்ள நூல் நிலையம் ஒன்றிலிருந்து ஸர் ஜான் லுப்பக் என்பவர் எழுதிய புத்தகங்களையெல்லாம் வாங்கிவரச் சொன்னார். அவற்றை ஒரே நாளில் படித்து முடித்துவிட்டு திருப்பி அனுப்பி வைத்தார். ஒரே நாளில் ஒருவர் அவ்வளவை யும் படித்திருக்க முடியும் என்பதை நூல் நிலைய அதிகாரி நம்ப மறுத்தார். உடனே சுவாமிஜியே நூல் நிலையத்துக்குச் சென்றார். "நீங்கள் ஏதோ சந்தேகப்பட்டீர்களாமே! எந்தப் புத்தகத்தில் எந்த இடத்தைப் பற்றி வேண்டுமானாலும் கேளுங்கள். சொல்ல முடிகிறதா பார்க்கிறேன்" என்றார் சுவாமிஜி லைப்ரேரியனிடம். அவர் சுவாமிஜியை அதே போலப் பரிசோதித்தார். சுவாமிஜி அவ்வளவு புத்தகங்களையும் படித்திருக்கிறார், வெறுமனே படிக் காமல் நன்றாக ஊன்றிப் படித்து மனதில் வாங்கிக் கொண்டிருக் கிறார், என்பதைக் கண்டு பேராச்சரிய மடைந்தார்.

"உண்மையிலேயே சுவாமிஜி, உங்களால் எப்படி இப்படிப் படிக்க முடிகிறது?" என்று அகண்டானந்தர் சுவாமிஜியைக் கேட்டார்.

"நான் எப்போதுமே புத்தகங்களை வரிக்குவரி படிப்பது இடையாதே! வாக்கியம் வாக்கியமாகவோ அல்லது பாரா பாரா வாகவோதானே படிக்கிறேன்!" என்றார் சுவாமிஜி.

சுவாமிஜியின் இந்த ஆற்றலை அவரது மாணுக்கப் பருவத்தி லேயே நாம் கண்டிருக்கிறோம். ஒவ்வொரு பக்கத்தின் முதல் கடைசி வரிகளைப் படித்து முழுவதையும் புரிந்து கொள்ளும் ஆற்றலை அவர் பெற்றிருந்தார் என்பதையும் குறிப்பிட்டிருக் கிறோம்.

* * *

மீரட்டில் சுமார் ஐந்து மாதங்கள் தங்கியிருந்தார் சுவாமிஜி. தனிமை ஆசை மீண்டும் அவரைக் குடைய ஆரம்பித்தது. முன் எப்போதையும் விடத் தீவிரமாகக் குடைய ஆரம்பித்தது. ஹரித் வாரத்திலும், ஹிருஷீகேசத்திலும் தனித்து வாழ்ந்த துறவிகள் எல்லாரும் அவரது மனக்கண்முன் நிழலாடினர். பைத்தியம் போல் வாழ்ந்தவர்கள் — உள்ளத்தில் தெய்வப் பித்தேறினவர் கள்; ஆடையின்றித் திரிந்தவர்கள் — அதற்காகக் கல்லடி பட்டுக் குருதி கசிந்தவர்கள் — குருதியைக் கழுவி சுவாமிஜி துணி பொசுங்கிய பஸ்மத்தை அதில் தடவியபோதும் விழுந்து விழுந்து சிரித்துக்கொண்டே, 'அப்பனின் விளையாட்டைப் பார்த் தாயா?' என்று கேட்டவர்கள்; தங்கள் குகை வாசலில் மனித எலும்புக்களைப் பதித்துக் கொண்டிருந்தவர்கள் — சவங்களையே புசிப்பதாகக் கூறியவர்கள்; இவர்களெல்லாம் சுவாமிஜியின்

Koviloor Digital Library

நினைவில் முன் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களைப் போல அவ்வளவு தீவிரமாக வாழ எண்ணுவிடிலும் அந்த வாழ்முறை சுவாமிஜியை அழைத்துக் கொண்டேயிருந்தது. ஆண்டவனைக் கண்டு அவனுடைய ஆணையைப் பெறவேண்டும்; தமக்கும் ஆண்டவனுக்குமிடையே எதுவும் அல்லது யாரும் நிற்கக் கூடாது என்று தீவிரமாகக் கருதலானுர் சுவாமிஜி. தெய்வ தரிசனத்தில் அவருக்கிருந்த வேட்கை குருபாயிக்களுக்கு அச்சத்தை அளித்தது.

ஒரு நாள் சுவாமிஜி குருபாயிக்களிடம், ''ஆண்டவனின் ஆக்ஞையை அறிந்து விட்டேன். என் பணி என்ன என்று புரிந்து கொண்டேன். என் எதிர்காலத்தைப் பற்றித் தெரிந்து கொண்டேன். உங்களையெல்லாம் விட்டுத் தன்னந்தனியாகக் கிளம்பப் போகிறேன்.'' என்று உறுதியாகக் கூறினுர்.

''என்னை மட்டுமாவது அழைத்துப் போங்கள்'' என்று வேண்டிக் கொண்டார் அகண்டானந்தர்.

''ஊஹூம், குருபாயிக்களிடம் வைக்கும் பாசமும் மாயையே! உனக்கு நோய் வந்தால் நான் உன்னைக் கவனிக்க வேண்டும்; அதே போல் எனக்கு நோய் வந்தால் நீ எனக்கு சுசுருஷை செய்யவேண்டும். இதனுல் இருவருடைய சங்கல்பங் களும், லக்ஷியங்களை அடையும் வழியும் தடைபடுகின்றன. இனி மாயை எவ்விதத்திலும் என்னைச் சூழாதபடி வாழுவதென முடிவு செய்துவிட்டேன்'' என்றுர் சுவாமிஜி.

1891-ம் ஆண்டு ஜனவரி மாதக் கடைசியில் தன்னந்தனி யாகப் புறப்பட்டார் சுவாமிஜி.

Koviloor Digital Library

அத்தியாயம் 13

ஆண்டிப் பரதேசி

ராஜாவைப் போலத் தோற்றமும், ஆண்டியைப் போன்ற உடையும் உடமைகளும் கொண்ட ஒரு வாலிப சந்நியாசியைத் தேசத்தின் தலை நகரமாகிய தில்லி கண்டது. அந்தத் தலை நகரத்தைத் தமது மத உணர்வும், சரித்திர உணர்வும் நிரம்பிய கண்களால் கண்டு ரசித்து வந்தார் அந்த வாலிப சந்நியாசி. தில்லியின் முறுகலான காற்று — காற்றிலே, குழைந்த காற்று, முறுகலான காற்று, நளினமான காற்று, கம்பீரமான காற்று என்று பல தினுசு உண்டு; தில்லியிலே அப்போது முறுகலான காற்று விசிக்கொண்டிருந்தது — அவருக்கு இன்ப மூட்டிக் கொண்டிருந்தது.

சாம்ராஜ்யங்கள் பலவற்றின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் கண்ட மாநகரம் தில்லி. மகாபாரத காலத்தின் இந்திரப் பிரஸ்த மாக இருந்ததிலிருந்து அங்கு ராஜ்ய லக்ஷ்மியின் கடாக்ஷம் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. ராஜ்ய பாரம் புரிந்த மாமன்னர்கள் மறைந்த பின்னும் அவர்களுடைய கலை உணர்வைக் காட்டும் கோட்டைகளும், நினைவுச் சின்னங்களும் அங்கு இருந்து வந்தன. ஆனால் இவையும் தங்களுடைய பூரண எழில் குன்றி இடிபாடுற்றே இருந்தன. இதையெல்லாம் காணக் காண பௌதிக வாழ்க்கை எவ்வளவு நிரந்தர மற்றது; ஆத்ம வாழ்க்கை யொன்றே எவ்வளவு நிரந்தரமானது என்பதை அந்த இளந் துறவி மீண்டும் மீண்டும் நினைவு கூர்ந்தார். மன்னர்கள் மறைந் தாயிற்று. அவர்களை மறக்கக் கூடாது என்பதற்காக எழுப்பிய ஞாபகச் சின்னங்களும் மறைந்தாயிற்று. சாம்ராஜ்யங்கள் சரிந் தாயிற்று. சரித்திரம் புரண்டாயிற்று. ஆனால் ஆத்மாவோ அன்றுபோலின்றும் மறைவும், சரிவும், புரட்சியுமில்லாமலே இருந்து வருகிறது. உலக வாழ்வின் உன்னத சிகரத்தில் நின்ற வர்களெல்லாம் என்றும் அதிலேயே நிலைத்து நிற்கவில்லை. ஆனால் ஆத்ம சாம்ராஜ்யத்தில் பிரவேசித்து அநுபவம் என்ற உப்பரிகை யில் நிற்பவர்களின் நிலை ஒருபோதும் மாறுமலல்லவா இருக்கிறது? தில்லியில் காணும் கோட்டைகளும், கொத்தளங்களும், ஸ்தூபங் களும், நினைவுச் சின்னங்களும் சிதில மடைந்திருந்தாலும் அவற்றை எழுப்பிய விரமும், அன்பும், கலை யுணர்வும் எதில் அடங்கி யுள்ளனவோ அந்த ஆத்மா அழியாமல் அப்படியே அல்லவா இருக்கிறது?

Koviloor Digital Library

எதைப்பற்றி அதிகம் எண்ணுகிறேமோ அதிலேயே ஆகர்ஷணமாகி விடுவோம் என்பது பொது விதி. ஆனல் இந்த சந்நியாசியின் விஷயத்தில், அவர் லௌகிகத்தை அதிகமாக எண்ண எண்ண வேதாந்தத்தின் சிறப்பே முன்னிலும் தெளிவாகப் புலனுயிற்று. வேதாந்த உணர்விலிருந்து இக உலக உணர்வு பெறும் போது இந்தத் தலைநகரில் எப்பேர்ப்பட்ட கலைஞர்கள் தங்கள் திறமையை எல்லாம் காட்டி யிருக்கிறுர்கள் என்று எண்ணி ரசித்தார் அவர். பற்பல நாகரிகத்தவரின் தனித்தனிக் கலைகளையும், அவை ஒன்றுக்கொன்று இதமாக இழைந்து உருவாக்கிய பொதுக் கலையையும் வியந்தார் அவர். · இந்தியாவின் ஆன்மீக உணர்வையும், மத உணர்வையும் முன்பே நன்கு புரிந்துகொண்டிருந்த அந்த சாது இப்போது அதன் கலை உணர்வையும் சிறப்பாக உணர்ந்தார்.

யார் இந்த சாது?

அவரைத் தெரிந்து கொண்டவர்கள் அவர் பேர் விவிதிசானந்தர் என்று கூறினுர்கள்.

* * *

மீரட்டிலிருந்து தில்லி வந்து சேர்ந்த குருபாயிக்கள் சிலர் விவிதிசானந்தரைப் பற்றிக் கேள்விப் பட்டனர். ஆத்ம ஞானத்தோடு ஆங்கில ஞானமும் உடைய அவரைக் காண ஆசைப் பட்டார்கள். ஒரு நாள் கண்டும் விட்டார்கள்.

அவர்களும் சரி, இதைப்படிக்கும் நீங்களும் சரி, ஏமாறிப் போக முடியுமா?

விவிதிசானந்தர்தான் தங்கள் தலைவரான சுவாமிஜி என்பதைக் கண்டு அவர்கள் பெரும் களிப்படைந்தனர்.

சுவாமிஜிக்கும் சந்தோஷமாகத்தான் இருந்தது. ஆனல் உடனேயே தாம் மாய வலையிலிருந்து அறவே விலக வேண்டுமென்ற நினைப்பும் வந்தது.

''எங்கே இங்கும் வந்து சேர்ந்தீர்கள்?'' என்று கேட்டார் வறட்சியாக.

''நாங்கள் பாட்டில் தில்லி மாநகரைப் பார்க்கவேணுமென்று வந்தோம். வந்த இடத்தில் அற்புதமான சந்நியாசி ஒருவரைப் பற்றிக் கேள்விப் பட்டோம். அவரைத் தரிசிக்க வேணுமென்று வந்தால் அவர் நீங்களாக இருந்து வைக்கிறீர்'' என்று பாதி உண்மையும், பாதி ஹாஸ்யமுமாகக் கூறினர் குருபாயிக்கள்.

சுவாமிஜி அப்போது ஹாஸ்யத்தை ரசிக்கத் தயாராயில்லை.

''தம்பிரான்களே! நான் ஏகாந்தத்தையே விரும்புகிறேன் என்று உங்களிடம் படித்துப் படித்துச் சொல்லியிருக்கிறேன்,

Koviloor Digital Library

அதையே இப்போதும் இன்னொரு முறை சொல்கிறேன். என்னை யாரும் பின் தொடருவதை நான் விரும்பவில்லை. நான் இப்போதே தில்லியை விட்டுப் புறப்படுகிறேன். என்னை யாரும் பின் தொடர வேண்டாம். என் இருப்பிடத்தைப் பற்றி அறியவும் முயல வேண்டாம். என் வார்த்தைக்கு நீங்கள் கீழ்ப்படிந்து தானாக வேண்டும் என்று தீர்மானமாகச் சொல்கிறேன். எல்லா பழைய தொடர்புகளிலிருந்தும் நான் என்னைக் கத்தரித்துக் கொள்ளப் போகிறேன். என் ஆத்மா என்னை எங்கு அழைத்துச் செல்கிறதோ அதன் பின்னோடேயே செல்லப் போகிறேன். அது வனாந்தரமாக இருக்குமோ, பாலைவனமாக இருக்குமோ, மலைப் பிரதேசமாக இருக்குமோ, நாடு நகரமாகத்தான் இருக்குமோ — அதைப்பற்றி எனக்குப் பொருட்டு இல்லை. நான் கிளம்பி விட்டேன். அவரவரும் தத்தம் சத்தியானுஸாரம் லக்ஷியத்தை அடைய முயலுங்கள்'' என்று நிர்த்தாக்ஷிண்யமாகக் கூறி விட்டார் சுவாமிஜி.

சொன்னாரே தவிர தில்லியிலிருந்து புறப்பட்டாரில்லை. அவர் சியாமளதாஸ் என்பவரின் வீட்டிலும், மற்றவர்கள் வேற்றிடத்திலுமாக வசித்து வந்தார்கள். ஆனாலும் அவ்வளவு அருகிலிருக்கும்போது நேசம் விடுமா ? அவர்கள் உண்ணும்போது மட்டும் ஒன்றுகூடி விடுவார்கள்.

தில்லியிலிருந்த வங்காளி டாக்டராகிய ஹேம சந்திர ஸென் என்பவரை அகண்டானந்தர் கண்டபோது ஸென் சுவாமிஜியைப் பற்றிச் சற்று இழிவாகக் குறிப்பிட்டார். என்றாலும் அவரைச் சந்திக்கத் தமது விருப்பத்தைத் தெரிவித்தார். அதன்பேரில் டாக்டரின் வீட்டிலேயே சந்திப்புக்கு ஏற்பாடாயிற்று. கல்லூரிப் பேராசிரியர்கள் பலர் அங்கு கூடியிருந்தனர். பல விஷயங்களைக் குறித்து சர்ச்சை நடை பெற்றது. சுவாமிஜியை எல்லாரும் கேள்வி மாரியால் துளைத்தனர். எல்லாவற்றுக்கும் திட்டவட்டமாக விடை கூறி அவர்கள் ஒப்புக் கொள்ளும்படி செய்தார் சுவாமிஜி. அவருடைய புத்தி நுட்பத்தைக் கண்டு அவர்கள் மலைப்படைந்தனர். சுவாமிஜியிடம் தாம் கொண்ட தப்பபிப்பிராயத்துக்காக டாக்டர் ஸென் பச்சாத்தாபம் கொண்டார். மறுநாளே சுவாமிஜியையும் குருபாயிக்களையும் தமது வீட்டில் விருந்துண்ண அழைத்தார்.

* * *

தில்லியிலிருந்து குருபாயிக்கள் காஜியாபாத்துக்குப் புறப்பட்டார்கள். சுவாமிஜி யாரும் தன்னைப்பின் தொடர மாட்டார்கள் என்ற நிம்மதியோடு ராஜபுதனத்துக்குப் புறப்பட்டார்.

Koviloor Digital Library

தம்முடைய பிறவிப் பயனெய்தும் பணி தொடங்கக் காலம் நெருங்கி விட்டது என்று ஒரு குரல் அவருடைய இதயத்துக்குள் கிசுகிசுத்துக் கொண்டிருந்தது. அதனை எண்ணி உள்ளம் அலைக் கழியாமலிருக்க வேண்டும் என்றால் அதற்குப் பூர்வாங்கமாக ஏகாங்கியான வாழ்வு அவசியம் என்று அவர் உணர்ந்தார். அந்த வாழ்வுக்காகவே தண்ட கமண்டலத்துடன் காவி உடையணிந்து பரிவிராஜக சந்நியாசியாகக் கிளம்பிவிட்டார். அம்பிகையும், ஆசானும் தாம் அப்படி ஆண்டியாக வாழ ஆக்ஞையிட்டிருப்பதாகவே கொண்டு மகிழ்ந்தார். எவ்வளவு இறுக்கமாகவும், நெருக்கமாகவும் பழகிய குருபாயிக்களைக்கூட மறந்து தம்மால் வாழ முடிகிறது என்பதை எண்ணித் தமது பக்குவத்தைத் தாமே ரசித்தார். மாயை தன்னை இனி அண்டாது என்ற நம்பிக்கையில் புத்துணர்ச்சி பெற்றார். வீடு, வாசல், அன்னை, சோதரர் யாவற்றையும் விட்ட பின்பும் விடமுடியாதிருந்த குருபாயிக்களின் பாசமும் தன்னிடமிருந்து கழன்ற விஞ்சையை எண்ணிப் பேருவகை அடைந்தார். அந்தப் பேருவகையுடன் தம்ம பதத்தில் காணும் கீழ்கண்ட வரிகளை வாய்விட்டுப் பாடிக்கொண்டு பாடும் புள்ளினம் போல சுயேச்சையாக சஞ்சாரம் செய்து கொண்டிருந்தார்.

செல்லுக முன்னே, செல்லுக முன்னே
சாலைகள் எதையும் சார்ந்திடாமல்!
தன்னந்தனியாய் சஞ்சரித் திடுவாய்
பென்னம்பெரிய காண்டாமிருகம் போல்!
சத்தத்துக்கஞ்சா சிம்மம் போல
வலைக்குள் அகப்படா வாயுவைப் போல
நீரில் நனையாத நீர ஜம் போல
தன்னந் தனியாய் சஞ்சரித் திடுவாய்
பென்னம் பெரிய காண்டாமிருகம் போல்

ஆதியில் நரேந்திரராக இருந்த சுவாமிஜி மிருகேந்திரன் போலவே சென்று கொண்டிருந்தார். வரலாற்றுப் பிரசித்தி வாய்ந்த ராஜஸ்தானத்தில் ஆல்வார் ரயில் நிலையத்தில் 1891-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ஒரு நாள் காலையில் வந்திறங்கினார்.

தோட்டங்களும், பச்சைப் பசும் நிலங்களும், அழகு ஆர்ந்த மாளிகைகளும் இருமருங்கும் நிறைந்த சாலை வழியே நடந்து சென்று சமஸ்தான மருத்துவ நிலையத்தை அடைந்தார். அங்கு டாக்டராகப் பணி புரிந்து வந்த குருசரண லஸ்கர் என்ற வங்காளியிடம் சந்நியாசிகள் தங்க ஆல்வாரில் ஏதேனும் இடமுண்டா

Koviloor Digital Library

என்று விசாரித்தார். சுவாமிஜியின் தேசு நிறைந்த தோற்றத்தில் ஈடுபட்ட குருசரணர் அவரை வணங்கி எழுந்தார். தாமே அவருடன் கடைத் தெருவுக்குச் சென்று கடையொன்றின் மாடியிலிருந்த ஓர் அறையில் சுவாமிஜியை அமர்த்தினர். தற்போதைக்கு சுவாமிஜியை அங்கிருக்குமாறு கேட்டுக்கொண்டு தமது முகமதிய நண்பரொருவரின் வீட்டுக்கு விரைந்தார் டாக்டர் குருசரணர். அந்த நண்பர் உயர்நிலைப்பள்ளியொன்றில் உருது — பெர்சிய மொழிகளில் போதகராக இருந்தார். குருசரணர் அவரிடம் படபடப்புடன், ''மௌல்வி சாஹேப், வங்காள சந்நியாசி ஒருவர் நம் ஊருக்குச் சற்று முன்பு வந்திருக்கிறார். உடனே வந்து அவரைத் தரிசனம் செய்யுங்கள்! அவரைப் போல ஒரு மஹாத்மாவை நான் இதற்கு முன்பு கண்டதில்லை. நான் என் வேலையை முடித்துவிட்டு வரும் வரையில் நீங்கள் அவருடன் பேசிக் கொண்டிருங்கள்; அப்புறம் நானும் வந்து கலந்து கொள்கிறேன்'' என்றார். இருவருமாக பஜாருக்குச்சென்று குறிப்பிட்டகடையின் மாடிஅறையை அடைந்தார்கள். பாதரக்ஷையைக் கழற்றிவிட்டு பயபக்தியுடன் உள்ளே நுழைந்தார்கள்.

சுவாமிஜி தமது மூட்டையைப் பிரித்துப் பொருட்களை ஒழுங்கு செய்து கொண்டிருந்தார். 'பொருட்களை' என்றால் அந்த ஆண்டியிடம் வேறென்ன இருந்தது? சில புத்தகங்கள், ஒரு காவித்துண்டு, கௌபீனம் இவற்றைத்தான் ஒரு போர்வையில் கட்டி வைத்திருந்தார். அவை தவிர ஒரு கமண்டலுவும் தண்டமும் அவருக்கு உண்டு. அவ்வளவுதான்.

சுவாமிஜியை மௌல்வி சாஹேப் பக்தியுடன் வணங்கினர். சுவாமிஜி அவரை அன்புடன் தம் பக்கத்தில் அழைத்துக் கொண்டார். மத விஷயமாகக் பல சமரஸ உண்மைகளை எடுத்துக் கூறினர். திருக்குர்ஆன் பற்றிப் பேசுகையில், ''இதைப்பற்றி ஒரு விசேஷம் உண்டு. பதின்மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் அது எப்படி இருந்ததோ அப்படியே இன்றைக்கும் உள்ளது. அப்பழுக்கில்லாமல், இடைச் செருகல் எதுவுமில்லாமல் மூல நாளின் தூய்மையுடனே இருக்கிறது குர்ஆன்'' என்று சுவாமிஜி கூறினர். மௌல்வி மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

குருசரணர் தாம் கண்டவரிடமெல்லாம் ''மகானாகிய சாது'' வைப்பற்றி குறிப்பிட்டார். மௌல்வியும் தமது முஸ்லிம் நண்பர்களிடமெல்லாம் சுவாமிஜியைப் பற்றிப் பாராட்டிப் பேசினர். ஆக, சுவாமிஜியைக் காண ஏராளமானவர்கள் கூடலானார்கள். சுவாமிஜியின் அறை மட்டுமின்றி வெளி வராந்தாவும் நிரம்பியது.

Koviloor Digital Library

சுவாமிஜி உபந்நியசிக்கலானூர். உபந்நியாசத்திடையே உருது, ஹிந்தி, வங்காளி முதலிய மொழிகளிலிருந்து துதிப் பாடல்களை அதிமதுரமாக அநுபவித்துப் பாடினூர். வித்யாபதி, சண்டிதாஸர், ராமப்ரஸாத் ஆகியோரின் பக்திப் பாடல்கள் ஆல்வார் கடை வீதியின் காற்றில் தீஞ்சுவையுடன் மிதந்தன. சுவாமிஜி வேதங்கள், உபநிஷதங்கள் இவற்றிலிருந்து பல பகுதி களை மொழியும்போது இந்த இனிமையே ஆண்டவனின் மகிமை யைத் தன்னில் உணர்ந்த பெருமித கம்பீரமாக மாறியது. பைபிளிலிருந்து எடுத்து அவர் ஓதும்போது அங்கே தயைத் தத்துவம் கமழ்ந்தது.

புத்தர், சங்கரர், ராமாநுஜர், குருநானக், சைதன்யர், துளசிதாஸ், கபீர் இவர்களுடையவும் தமது ஆருயிர் ஆசாரிய ராகிய ஸ்ரீராமகிருஷ்ணருடையவும் சம்பந்தப்பட்ட வரலாறுகளை சுவாமிஜி வித்யா ப்ரகாசமும் விநய சீதளமும் சேர்ந்து மிளிரு மாறு விவரிப்பார்.

சுரோதாக்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே வந்ததில் வியப்பென்ன? அந்த மாடி அவ்வளவு கூட்டத்தைத் தாங்கக் கூடியதாக இல்லை. எனவே ஆல்வாரைச் சேர்ந்த செல்வாக் குள்ள மனிதர்கள் ஒய்வு பெற்ற என்ஜினீயரான பண்டித சம்பு நாதஜி என்பவரின் பெரிய இல்லத்தில் சுவாமிஜி தங்க ஏற்பாடு செய்தனர்.

இங்கு சுவாமிஜி தமது தினசரி காரியக் கிரமத்தை ஓர் ஒழுங்கு படுத்திக் கொண்டார். அதிகாலையிலிருந்து ஒன்பது மணிவரை பிரார்த்தனையும் ஜபமும் புரிவார். அதன்பின் தம் அறையிலிருந்து வெளியேவந்து தம்மைக் காண வந்திருப்போரிடம் சம்பாஷிப்பார். எல்லா மதங்களையும், ஜாதிகளையும், வகுப்பு களையும் சேர்ந்த சுமார் முப்பது பேர் போல அந்த நேரத்தில் காத்திருப்பார்கள். ஸுன்னி, ஷியா ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த முகம்மதியர்கள், சைவர்கள், வைஷ்ணவர்கள் ஆகிய எல்லாரை யும் ஒரே போன்ற அன்புடன் நடத்துவார் சுவாமிஜி. ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசங்களையும் அவர் கருதியதில்லை. படித்தவர், படிக்காதவர் இருவரும் அவருக்கு ஒன்றே. நடுப் பகல் வரையில் அவர்கள் கேட்பதற்கெல்லாம் அருளுடன் விடை கூறுவார் சுவாமிஜி. அவருடைய ஸௌலப்யம் காரணமாக யாரும் கூச்சமில்லாமல் அவரிடம்பேச முடிந்தது. சிலர்அயுக்தமாகக் கூடப் பேசி விடுவார்கள். அதனையும் சுவாமிஜி பொறுத்துக் கொண்டு விடையிறுப்பார். ஒருவர் இப்படித்தான், ''சுவாமிஜி மஹராஜ், தாங்கள் எந்த ஜாதி?'' என்று கேட்டார். சந்நி

Koviloor Digital Library

யாசிகளுக்கு ஜாதி கிடையாது. சுவாமிஜி பூர்வாசிரமத்தில் பிராமணர் என்றே பலரும் நினைத்தனர். பிராமணர் அல்லாத பக்ஷத்தில் அவரைத் தாங்கள் வணங்கலாமா என்பது போன்ற சந்தேகமுள்ளவர்களும் இருந்தார்கள். ஆனால் சுவாமிஜிக்கு எதையும் மூடி மறைத்து வைக்க வேண்டிய அவசியமில்லை. எனவே தாம் பிறப்பில் காயஸ்தர் என்றே சலனமுறாமல் கூறினார். "நீங்கள் ஏன் காஷாயம் கட்டிக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று ஒருவர் கேட்டார். சந்நியாசி எந்தவிதமான வித்யாசமும் பாராட்டக்கூடாது என்றால் வெள்ளை ஆடையை ஏன் புனையாது துவர் ஆடையே அணியவேண்டும் என்பது அவருடைய கேள்வியின் உட்பொருள். ஆனால் சுவாமிஜியோ சினம் கொள்ளாது குளிர்ந்த குரலில் உணர்ச்சியுடன் கூறினார்: "நான் ஏன் காவி வஸ்திரம் அணிகிறேன் என்றால் அதுவே பிச்சைக்காரர்களின் உடையாகும். நானும் மற்றவர்களைப்போல வெள்ளை ஆடை அணிந்திருந்தால் என்னிடம் ஏதோ பணம் காசு இருக்கும் என்றெண்ணி ஏழை எளியவர்கள் என்னிடம் பிச்சை கேட்பார்கள். நானே பிச்சைக்காரன். என்னிடம் சல்லிக்காசுகூட இல்லாத சமயங்களே அதிகம். அப்போது என்னை யாராவது யாசகம் கேட்டு, அவர்களிடம் ஏதுமில்லை என்று கூறி வருத்தப்படுத்தினால் எனக்கு உள்ளம் நோகும். ஆனால் நான் வெள்ளை உடை யணியாது காஷாயம் கட்டுவதால் பிச்சைக்காரர்களுக்கே நானும் அவர்களில் ஒருவன் என்று தெரிகிறது; என்னை அவர்கள் யாசிப்பதில்லை; அதனால் அவர்களிடம் 'இல்லை' என்று சொல்லும் துன்பமும் எனக்கில்லாமல் போகிறது".

ஏதலரோடு தம்மை சுவாமிஜி ஒன்று படுத்திச் சொல்வது நெஞ்சைத் தொடுகிறதல்லவா? காவி உடை தரிப்பதற்கு இதைப்போல மானுடப்பண்பு மிளிரக் காரணம் கூறியவர் யாருண்டு? அறிவுக்கனலாக இருந்த சுவாமிஜி அருட்புனலாகவும் இருந்ததை நிரூபிப்பதற்கு இது போன்ற ஓரிரு சம்பவங்களே போதும்!

அம்பிகை வழிபாட்டைப்பற்றி ஆல்வாரில் பல சமயங்களில் சுவாமிஜி பேச நேர்ந்தது. தேவியை நினைந்தவுடன் அவர் இதயம் பக்தியால் நிரம்பி வழியும். அப்படி ஒருத்தி உண்டா என்று சந்தேகம் கொண்டிருந்த தம்மைக் குருநாதர் வரம் கேட்குமாறு பவதாரணியின் திருச் சந்நிதிக்கு அனுப்பியதும், அங்கே கல் விக்ரகம் மறைந்து சாக்ஷாத் சர்வாங்க சுந்தரியான ஜகன்மாதாவே உடல் தரித்து ஞானம்பிகையாக நின்று சந்தேகப் பிராணியான தனக்கும் தரிசனம் தந்து, எதையும் கோராமல் அவளுடைய

Koviloor Digital Library

இணையடிகளில் பக்தியை மட்டுமே கோரும் பான்மையைத் தமக்குத் தந்தருளியதை எண்ணி எண்ணிப் பேசமுடியாமல் தத் தளிப்பார். அந்தத் தத்தளிப்பையும் பரமேசுவரி நீக்கி அவருள் பரம சாந்தத்தை ஊற்றி நிரப்புவாள். சுவாமிஜி பேசுவார். ஒரே ஒரு பதத்தைத்தான் திரும்பத் திரும்பப் பேசுவார்: ''அம்பா, அம்பா, அம்பா'' என்று மட்டுமே தித்திக்கக் கூப்பிடு வார். முதலில் கம்பீரமாக உரத்த குரலில் வரும் 'அம்பா' வரவரப் பட்டாகத்துவளும். எங்கோ மணித்வீபத்திலுள்ள அம் பிகையிடமே அவர் உள்ளம் செல்லுவதற்கேற்ப அவருடைய குரலும் உடன் செல்வதுபோல, தூரத்திலிருந்து, அதி தூரத்தி லிருந்து வரும் ஒலியாக 'அம்பா, அம்பா, அம்பா' என்ற நாதம் அடங்கிப் பாயும். அதன் பிறகு சுவாமிஜி பேச்சற்றுப் போய்விடுவர். தாமரை மொட்டு போன்ற அவரது கண்களி லிருந்து அவருடைய விரிந்த பரந்த முகத்திலே, அருவியென நீர் வழியும். 'அம்பிகைக்கு எவ்வளவு அருகே சென்று விட்டார்! அந்த அன்னை இந்தக் குழந்தையைத் தூக்கிக் கொள்ளக் கைக் கெட்டும் தூரத்தில் வந்து விட்டாளோ?' என்று குழுமி யிருப்பவர்கள் எண்ணுவார்கள். தேவியின் நினைவில் அப்படித் தோய்ந்து போய் விடுவார் சுவாமிஜி. அதைக் கண்ட பாக்கிய சாலிகள் எல்லாம் அன்னை அகிலாண்டேசுவரியின் அருள் வெள்ள அலைகள் தங்களுக்கும் மிக மிக நெருக்கத்தில் இருப்பதை உணர்ந்து கண்ணீர் விடுவார்கள். இப்படி சுவாமிஜியும் பக்தர்களும் விழிநீர் பெருக்கிய அற்புத நாட்கள் பல ஆல்வாரில் ஓடின.

* * *

ஹிந்து மதத்தில் பிறந்த நம்முடைய பாக்கியங்களிலெல்லாம் பெரும் பாக்கியம் அம்பிகைதான். ஞான மயமாயும், கருணை மயமாகவும், சௌந்தரிய மயமாயும் உள்ள அம்பிகை வேறெந்த மதத்தினருக்கு உண்டு? ஹிந்து மத அநுபூதி மான்களுக்குப் பரம்பொருள் காட்டியருளிய பல தேவதா ரூபங்களிலும் அம் பிகைக் கிணை யாருண்டு? மற்ற தெய்வங்களுக்குப் பொதுவாக ஒரு குணம், ஒரு நிறம் என்று உண்டு. கோர காளியாகவும், கலியாண சுந்தரியாகவும் இருக்கும் தேவியோ கௌரி என்ற பெயரில் தூய வெண்ணிறத்தவளாக இலங்குகிறாள்; துர்க்கை என்ற பெயரில் நீலமாகத் துலங்குகிறாள்; சியாமளா என்ற பெயரில் கருவண்ணத்தளாகத் திகழ்கிறாள்; மீனாக்ஷி என்ற பெயரில் பச்சை பசுங்கிளியாக விளங்குகிறாள்; காமேசுவரியாக இருக்கும்போது உதிக்கும் சூரியன்போலச் செவ்வொளி பரப்பும் செவ்விய மூர்த்தியாக ஒளிர்கிறாள். எவ்வளவு வேண்டுமானாலும்

Koviloor Digital Library

உரிமை கொண்டாடி பக்தி செய்ய அன்னைத் தெய்வத்தைவிட வேறு யாரிடம் செல்ல முடியும் ?

வேதத்தில் துதிக்கப்படும் தேவி, உபநிஷதத்தில் தேவாதியருக்குப் பிரம்ம வித்யோபதேசம் செய்த ஹேமவதியாக வருகிறுள். புத்த மதத்தால் தேய்ந்த வேத கர்மாக்கள் புத்த மதம் அழிந்தபின் பக்தி மயமான தாந்திரிக ஆராதனைகளானபோது தேவியின் உபாசனையும் செழித்தது. ஹிந்து மதத்தை மீண்டும் நிலை நாட்டிய ஆதிசங்கரர் ஷண்மதங்களை ஸ்தாபித்தாரெனினும் 'அந்த: சாக்தர்' என்று பெயர் பெற்று ஸ்ரீவித்யையாகிய அம்பிகையின் ஆராதனையை விசேஷமானதாக்கினுர். ஆசாரிய சங்கரருக்கு அடுத்தபடியாக ஹிந்து மதத்தின் சகல பிரிவுகளையும் ஒப்புக்கொண்டு அநுஷ்டித்து இதனை ஒப்புயர்வற்ற சமயம் என்று ஸ்தாபித்தவர் பரமஹம்ஸர். அவரும் எல்லா தேவதைகளையும் வழிபட்டபோதிலும் அம்பிகையிடமே தனிப்பட்ட உயரிய அன்பைச் செலுத்தினுர்.

வாசா வேதாந்திகளும், மாயை என்பது அவளே; எப்போது அவளால்தான் இந்த அஞ்ஞான உலகு தோற்றுவிக்கப் பட்டதோ, அப்போது அவள் விலகுவதால்தான் பிரம்மாநுபவம் கிட்டும் என்று கூறி அவளை விலகுமாறு பிரார்த்திக்குமாறு சொல்வார்கள். இதுவும் அம்பிகை வழிபாடுதான். ஆனுல் ஏதோ துர்த்தேவதையை சமாதானப் படுத்தி நம்மைவிட்டு வெளியே அனுப்பி வைப்பது போலல்லவா இது தோன்றுகிறது! ஸ்ரீராமகிருஷ்ணர் தேவியை மாயையாகக் கருதி அவள் விலகுவதற்காக பிரார்த்திக்கவில்லை. அவளேதான் பிரம்மம் எனக்கண்டு தேவி மாயையாக உள்ள நிலையில் மறைந்து, பிரம்மமாக உள்ள நிலையில் அநுபூதி அளிக்கவேண்டும் என்றே பிரார்த்தித்தார்.

காளிதாஸன் முதற்கொண்டு பாரதி வரையில் மகாகவிகளும் ஜகன் மாதாவிடம் தீவிரமான பற்றுதல் பூண்டிருப்பதைக் காணும்போது இந்தியாவின் ஆன்மீகம், கலை இரண்டுக்கும் அன்னைதான் மையமானவள் என்று புரியும். எனவே சுவாமிஜி தம்மைக் 'காளிப்பைத்தியம்' என்று சொல்லிக் கொண்டதில் பாரத தர்மமே அல்லவா பொதிந்திருக்கிறது ?

* * *

பிற்பகல் வேளைகளிலும், மாலைகளிலும் பிரார்த்தனைப் பாடல்களை இசைப்பார் சுவாமிஜி. அவரோடு கூட்டத்தினரும் சேர்ந்து பாடுமாறு பலுக்கிப் பலுக்கிப் பாடுவார். பக்தி வெள்ளம் கரைபுரளும். சில நாட்களில் நள்ளிரவுவரை பஜனை நடத்துவார் சுவாமிஜி.

Koviloor Digital Library

ஆல்வாரில் வசித்தபோது பல அடியாருக்கு சுவாமிஜி மந்திரோபதேசமும் செய்தார்.

* * *

மௌல்வி சாஹேபுக்கு ஓர் ஆசை உண்டாயிற்று. சுவாமிஜியைத் தமது இல்லத்துக்கு அழைத்து பிக்ஷை செய்ய வேண்டும் என்பதே அது. 'ஹிந்து சுவாமிஜி முஸ்லீமாகிய தமது இல்லத்துக்கு எப்படி வருவார்? சுவாமிஜி மதாபிமானங்களை எல்லாம் கடந்தவராயினும் அவர் தங்கியிருக்கும் வீட்டுக்குரியவரான பண்டித சம்புநாதஜி ஆக்ஷேபிக்கமாட்டாரா?'

பலபடியாக எண்ணிவந்த மௌல்வி ஒரு நாள் மாலை தம்மைத் துணிவுபடுத்திக்கொண்டு பண்டிட்ஜியிடம் அஞ்சலி யஸ்தராகச் சென்றார். ''தயவுசெய்து நாளைக்கு பாபாஜியை என் வீட்டில் பிக்ஷை கொள்ள அநுமதியுங்கள். உங்கள் எல்லாருடைய திருப்திக்காகவும் என் விருந்தாளியறையிலுள்ள நாற்காலி மேஜை முதலியவற்றைக் கழுவி பிராமணர்களைக் கொண்டு ஸ்தலசுத்தி செய்கிறேன். பிராமணர்களைத் தங்கள் வீட்டிலிருந்தே பாத்திரங்கள் கொண்டுவரச் செய்து அவர்கள் கையாலேயே என் வீட்டில் சமைக்கச் செய்து சுவாமிஜிக்குப் போஜனம் அளிக்கிறேன்'' என்று பக்தி பூர்வமாகக் கூறியவர், ''நான் அளித்த நிவேதனத்தை சுவாமிஜி உண்பதாகத் தொலைவிலிருந்தேனும் காண்பதற்கு இந்த யவனனுக்குக் கிடைக்குமானால் அதற்கு எந்த சிரமமும் பெரிதில்லை'' என்று நாத் தழு தழுக்க முடித்தார். அவருடைய நைச்சிய பாவம் எல்லாரையும் தொட்டுவிட்டது. பண்டிட்ஜியும் தமது ஆசாரங்களை மறந்து அவருடைய கைகளைப்பற்றிக் கொண்டுவிட்டார். ''என் நண்பரே! சுவாமிஜி சந்நியாசி யல்லவா? அவருக்கு ஜாதியே கிடையாது. எனவே இத்தனை சிரமம்கூட வேண்டாம். அவர் இத்தனை ஏற்பாடுகளுடன் உங்கள் வீட்டில் உண்பதில் எனக்கு எவ்வித ஆக்ஷேபணையும் இல்லை. உண்மையில் இத்தனை ஆசாரமாக உணவு தயாராகிறதென்றால் உங்கள் வீட்டில் நானே சாப்பிடுவதற்குக்கூட மன உறுத்தல் இராது. முக்தராகிய சுவாமிஜிக்குக் கேட்பானேன்?'' என்றார் சம்புநாதர் மௌல்வியிடம்.

மறு நாள் தாம் சொன்ன பிரகாரமே சுவாமிஜிக்கு உயர்ந்த முறையில் போஜனம் செய்வித்தார் மௌல்வி. தாம் தன்யரானதாகக் கருதி அகமகிழ்ந்தார். அதன்பின் வேறு சில முகமதியர்களும் மௌல்வி செய்தாற் போலவே சுவாமிஜிக்குத் தங்கள் இல்லங்களில் பிக்ஷை செய்து இன்புற்றனர்.

Koviloor Digital Library

ஆல்வார் சம்ஸ்தானத்துத் திவானுகிய மேஜர் ராமச்சந்திரஜி தங்களது தலை நகரில் வந்து தங்கியுள்ள சுவாமிஜியைப் பற்றிக் கேள்வியுற்ருர். அவரைத் தமது இல்லத்துக்கும் வரவேற்ருர். சுவாமிஜியுடன் அவருக்கு நல்ல பழக்கம் ஏற்பட்டவுடன் தங்களுடைய மஹாராஜாவாகிய மங்கள சிங்ஜி அவரைக் கண்டால் நன்மை ஏற்படும் என எண்ணினுர். மங்கள சிங்ஜி ஐரோப்பியப் பழக்க வழக்கங்களில் மிகவும் மூழ்கியிருந்தார். சுவாமிஜியின் அநுபவத்தையும் அறிவையும் வாக் விசேஷத்தையும் கண்ட திவான் அவரால் மஹாராஜாவின் போக்கை மாற்றக் கூடும் என நம்பினுர்.

அப்போது மஹாராஜா சில மைல்கள் தள்ளி ஓர் அரண்மனையில் வசித்துக் கொண்டிருந்தார். ''அசாத்தியமாக ஆங்கில அறிவு பெற்ற ஒரு பெரிய சாது இங்கு வந்திருக்கிருர்'' என்று மஹாராஜாவுக்கு எழுதினுர். மஹாராஜாவை ஈர்க்க 'ஆங்கில அறிவு' பற்றிய குறிப்பு போதும் என்பதை திவான் அறிந்திருப்பாரில்லையா? அவர் எதிர் பார்த்தது வீண்போகவில்லை. மறு நாளே மஹாராஜா திவானுடைய வீட்டுக்கு வந்தார். சுவாமிஜிக்கு முறைப்படி நமஸ்கரித்தார். முடிசார்ந்த மன்னரும் அடிசாரும் பெருமையைத் துறவிகளுக்களிக்கும் பெருமதமல்லவா ஹிந்து சமயம்? சுவாமிஜி தமக்காக எழுந்திருக்கக்கூடாது; அமர்ந்திருந்தே ஆசி கூறவேண்டும் என்றும் பவ்யமாகக் கேட்டுக் கொண்டார் மஹாராஜா. ராஜகுலத்தில் பிறந்த சம்ஸ்தானுபதிகளிடம் எவ்வளவு குறையிருப்பினும் அவர்களுடைய உபசரிப்புப் பண்புக்கு ஒருபோதும் குறை இருந்தது கிடையாது.

தம் மனதிலிருந்ததை மறைக்காமல் சுவாமிஜியுடன் பேச்சைத் தொடங்கினுர் மஹாராஜா.

''சுவாமிஜி, தாங்கள் ஒரு பெரும் படிப்பாளி என்று நான் கேள்விப் படுகிறேன். நீங்கள் வெகு எளிதில் கணிசமான சம்பாத்தியம் பெற்று வாழ முடியும். அவ்வாறிருக்க ஏன் இப்படிப் பிக்ஷை எடுத்து வாழ்கிறீர்கள்?'' என்று கேட்டார் மன்னர் மங்கள சிங்ஜி.

சுவாமிஜி அதற்கு நேரிடையாகப் பதில் சொல்லாமல், ''நல்லது மஹராஜ்! நீங்கள் ராஜாங்கக் கடமைகளை அலக்ஷியப் படுத்தி எப்போது பார்த்தாலும் ஆங்கிலேயர்களுடன் சல்லாபிப்பதிலும், வேட்டையாடுவதிலும் பொழுதைக் கழிப்பது ஏன்?'' என்று கேட்டார்.

அரசருடன் வந்திருந்த அதிகாரிகள் சுவாமிஜியின் கேள்வியைக் கேட்டு திக்பிரமித்து விட்டனர். இதனுல் சுவாமிஜி

Koviloor Digital Library

மிகவும் இன்னலுக்கு ஆளாகப் போகிறார் என்று எதிர் பார்த்தனர். ஆனால் ஏனோ தெரியவில்லை மஹாராஜா கோபமே அடையவில்லை. சிறிது நேரம் யோசித்து விட்டு, ''ஏனென்று எனக்கு சொல்லத் தெரியவில்லை. ஆனால் இப்படிச் செய்வது எனக்குப் பிடித்தமாயிருக்கிறது என்பதாலேயே இவ்வாறு செய்து வருகிறேன் என்பதில் சந்தேகமில்லை'' என்றார். அதற்கு சுவாமிஜி, ''எனக்குப் பிடித்திருக்கிறது என்ற அதே காரணத்துக்காகத்தான் நானும் பக்கிரியாகத் திரிகிறேன்'' என்றார்.

இது மஹாராஜாவின் மனநிலைக்கு ஏற்ப சுவாமிஜி அளித்த பதிலேயன்றி முழு உண்மையுமாகாது. மஹாராஜா மனம் போனபடி செய்வதால் தாமும் மனம் போனபடி செய்வது நியாயம் என்று சுவாமிஜி கூறியதாக நினைத்துவிடக்கூடாது. அவரவரும் தத்தமக்குப் பிடித்தமான வழியில் செல்ல சுவாமிஜி அனுமதித்ததாகவும் கொள்ளக்கூடாது.

உடல் உழைத்துச் சாப்பிடுவதே சரி; சந்நியாசிகள் அவ்விதம் செய்யாததால் சமூகத்துக்குப் பாரமாக யிருக்கிறார்கள் என்ற கருத்தொன்று உண்டு. இதற்கு உண்மையான விடை, 'உழைப்பு என்பது உடலில் மட்டுமில்லை; உள்ளத்திலும் இருக்கிறது' என்பதுதான். சந்நியாசிகளும் உடலால் உழைக்கத் தலைப்பட்டால் சமூக உயர்வுக்காக உள்ளத்தால் உழைக்க அவர்களுக்கு முடியாமற் போகும். அவர்கள் மக்களுக்கு ஆற்றும் திருத்தொண்டுக்காக ஜனசமூகமே அவர்களின் அற்பமான உலக சௌகரியங்களைச் செய்துதரக் கடமைப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக அரசர் மங்கள சிங் சுவாமிஜியிடம் ''பாபாஜி மஹராஜ், எனக்கு விக்கிரக ஆராதனையில் நம்பிக்கையில்லை. என்னுடைய விதி என்னவது?'' என்று கேட்டார். அப்படிக் கேட்கும்போது அவரது குரலில் வருத்தத்துக்குப் பதில் பரிகாசமே தொனித்தது. சுவாமிஜிக்கே இது சிறிது உறுத்தலாகத்தான் இருந்தது. ''நீங்கள் தமாஷ் செய்யவில்லையே?'' என்று மஹாராஜாவை வினவினார்.

''இல்லவே இல்லை! உண்மையாகத்தான் சொல்கிறேன்: மற்றவர்கள் செய்வதுபோல் மரத்தையும், மண்ணையும், கல்லையும், உலோகத்தையும் என்னால் தொழ முடிவதில்லை. இதனால் நான் இந்த உலக வாழ்க்கை முடிந்த பின் அவதி யுறுவேன் என்று அர்த்தமா?'' என்று கேட்டார்.

''நல்லது, ஒவ்வொருவரும் தன்னுடைய நம்பிக்கையை ஒட்டி மத லக்ஷியத்தை நாடிச்செல்வதுதான் சரி என்று நினைக்கிறேன்'' என்று கூறிவிட்டார் சுவாமிஜி.

Koviloor Digital Library

சுவாமிஜி இப்படிப் பட்டும் படாமலும் பதில் சொன்னதைக் கேட்ட பக்தர்களுக்கு வியப்பாகவும், ஏமாற்றமாகவும் இருந்தது. ஒரு காலத்தில் சுவாமிஜியே உருவ வழிபாட்டை நம்பாதிருந்து பின்னர் ஸ்ரீராமகிருஷ்ணர் அருளால் நம்பிக்கை பெற்ருர் என்பதை அவர்களில் சிலர் அறிந்திருந்தார்கள். எனவே விக்கிரக ஆராதனையின் சிறப்பை மன்னருக்கு அவர் எடுத்துரைப்பார் என அவர்கள் எதிர்பார்த்தார்கள். சுவாமிஜியின் முகத்தையே நோக்கினுர்கள். அவருடைய நோக்கு அந்த அறைச் சுவரில் மாட்டியிருந்த மன்னருடைய சித்திரமொன்றின்மீது படிந்தது.

''அதைக் கொஞ்சம் இப்படிக் கொண்டு வாருங்கள்'' என்று கையை நீட்டினுர் சுவாமிஜி. அவ்வாறே சித்திரத்தைக் கழற்றி அவரிடம் கொடுத்தார்கள்.

''இது யாருடைய படம்?'' என்று கேட்டார் சுவாமிஜி திவானிடம்.

''எங்கள் மஹாராஜா வுடையது'' என்ருர் திவான்.

''நல்லது, இந்தப் படத்தின் மீது எச்சில் துப்புங்கள்'' என்ருர் சுவாமிஜி திவானிடம்.

திவான் மட்டுமல்ல, அங்கு குமிழியிருந்த அவ்வளவு பேருமே சுவாமிஜி கூறிய வார்த்தைகளைக் கேட்டு விலவிலத்துப் போனுர்கள். அவர் ஏன் அரசரை அப்படி அவமரியாதை செய்கிருர் என்று அவர்களுக்குப் புரியவில்லை. ஒரு முறை மஹாராஜாவிடம் தப்பியவர் இப்போது நிச்சயமாகத் தப்ப மாட்டார் என்று அஞ்சினர். ஆனுல் அவரோ துளியும் அச்சமின்றி, ''திவான்ஜி, உங்களைத்தான் சொல்கிறேன்! இதன் மீது துப்புங்கள். என்ன, மாட்டீர்களா?.........சரி இங்கே கூடியிருக்கும் உங்களில் யார் வேண்டுமானுலும் இதன்மேல் காறி உமிழலாம். போயும் போயும் இது என்ன? ஒரு கடிதாசுத் துண்டுதானே? இதன் மேல் துப்ப உங்களுக்கு ஏன் ஆக்ஷேபணை இருக்க வேண்டும்?'' என்று நிறுத்தி நிதானமாகக் கேட்டார்.

திவான் சுவாமிஜிக்குத் தம் வீட்டில் இடமளித்ததையும், அவரைக் காணத் தாம் மஹாராஜாவை வரவழைத்ததையும் நினைந்து வருந்தி யாகத்தில் கட்டிய பசுபோல் நின்ருர். மற்றவர்கள் அச்சம் மிகுந்த கண்களுடன் மஹாராஜாவையும், அதே கண்களில் வருத்தத்தைத் தேக்கி சுவாமிஜியையும் பார்த்தனர். சுவாமிஜி அமைதியாகவே காணப்பட்டார். ஏனே மஹாராஜாவும் அவ்வளவாகப் பதற்றமடையவில்லை.

''...ம்! துப்புங்கள் என்று உங்களிடம்தான் சொல்கிறேன்: முன்வரமாட்டீர்களா?'' என்று மீண்டும் திவானிடம் கேட்டார் சுவாமிஜி.

Koviloor Digital Library

தமது குழப்பத்தைச் சற்றே சமாளித்துக் கொண்ட திவான் ''தாங்கள் என்ன சொல்கிறீர்கள்? இது எங்கள் மஹாராஜாவின் பிரதி பிம்பமல்லவா? இதன் மீது நான் எப்படித் துப்ப முடியும்?'' என்று கேட்டார்.

''மஹாராஜாவின் பிரதி பிம்பமாக இருக்கட்டுமே! அதனுலென்ன? ஆனுல் இது அசல் மஹாராஜா அல்லவே! மஹாராஜாவின் உடலா இதற்குள் இருக்கிறது? இது ஒரு காகிதம் தானே! இதில் மாஹாராஜாவின் எலும்போ, சதையோ, ரத்தமோ இருக்கிறதா, என்ன? இது மஹாராஜாவைப் போலப் பேசாது; பாவனைகள் புரியாது; அவர் போல நடக்காது, என்ருலும் இதன் மீது நீங்கள் துப்ப மறுக்கிறீர்கள்! ஏனெனில் உங்கள் மஹாராஜாவுடைய உருவத்தின் சாயை இதில் இருக்கிறது. இதன்மீது நீங்கள் உமிழ்ந்தால் அது நீங்கள் மஹாராஜாவை நிந்தித்ததற்கே சமமாகும் என்ற அளவுக்கு எண்ணுகிறீர்கள்!''

இப்படிப் பேசிவந்த சுவாமிஜி மன்னர் மங்கள சிங்கரை நோக்கிச் சொல்வார்:

''உயர்மிகு அரசரே, பாருங்கள்! ஒருவிதத்தில் இந்தப் படம் நீங்கள் இல்லை எனினும், இன்னெரு பொருளில் இதுவே நீங்களாக யிருக்கிறது. அதனுல்தான் உங்களிடம் விசுவாசம் கொண்ட இவர்கள் நான் இதன் மீது உமிழச் சொன்னதும் கதி கலங்கிப் போனுர்கள். உங்களின் ஒரு சாயை இதில் இருக்கிறது. அவர்கள் மனசில் இந்தப் படம் உங்களைத் தருகிறது. அதை ஒரு பார்வை பார்த்தால் போதும் உங்கள் நினைப்பை அவர்கள் பெறுகிருர்கள். எனவே அவர்கள் உங்களுக்கு எவ்வளவு மரியாதை அளிக்கிருர்களோ அந்த மரியாதையை இந்தச் சித்திரத்துக்கும் அளிக்கிருர்கள்.

''இதே போலத்தான் விக்கிரக ஆராதனை விஷயமும். தேவ தேவியரின் சிலாமூர்த்தங்களையும், உலோக விக்கிரகங்களையும் வழிபடும் பக்தர்களின் விஷயமும் இப்படியேதான். பிரதிமை என்பது அவர்களுக்குத் தங்கள் இஷ்டதேவதையையோ, அல்லது பரம் பொருள் தத்துவத்தின் ஒரு சில அம்சங்களையோ, கலியாண குணங்களையோ மனசில் கொணர்ந்து விடுகிறது. விக்கிரகங்கள் அவர்கள் சித்தத்தை ஒருமுகப்படுத்துவதால்தான் பக்தர்கள் கடவுளை விக்கிரகத்தில் வழிபடுகிருர்கள். அவர்கள் கல்லையும், உலோகத்தையும் கல்லாகவும், உலோகமுமாக வைத்து வழிபடுவதில்லை. நான் எத்தனையோ இடங்களில் சுற்றியிருக்கிறேன். ஆனுல் ஓர் இடத்திலேனும், 'ஏ கல்லே, உன்னை வணங்குகிறேன்!'

Koviloor Digital Library

ஏ உலோகமே, எனக்குக் கருணைக் காட்டு!' என்று யாரும் வேண்டிக்கொண்டு நான் பார்க்கவில்லை.

''மஹராஜ்! ஞானமயமானதும், பரமாத்மாவுமான பரம் பொருளைத்தான் ஒவ்வொருவரும் வணங்குகிறார்கள். ஒவ்வொருவருடைய உள்ளம் கிரகிக்கும் முறையிலும், அவர்கள் அவனை எந்த உருவில் சித்தரிக்கிறார்களோ அந்த விதத்திலும் பரம் பொருள் ஒன்றே தோன்றுகிறது. ஆனால், மஹராஜ், நான் என் மனோபாவத்தை வைத்துத்தான் பேச முடியும்; உங்கள் மனோபாவத்துக்கு ஒவ்வியபடி நான் எப்படிப் பேச முடியும்?''

முடிக்கும்போது சுவாமிஜி ஹிதமான விஷயத்தையும் சேர்த்தே பேசினார். அவர் கூறியுள்ள உண்மையை யார்தான் ஏற்காது மறுக்க முடியும்?

மன்னர் மங்கள சிங் சுவாமிஜியின் வார்த்தைகளைக் கூர்ந்து கவனித்து அதன் உண்மையில் சொக்கி விட்டார். தமது இரு கரங்களையும் குவித்துக் கொண்டு, ''சுவாமிஜி! விக்கிரக ஆராதனை பற்றித் தாங்கள் தந்த விளக்கப்படியே இதுவரை நானும் கல்லையும், மரத்தையும், உலோகத்தையும் யாரேனும் கல்லாக, மரமாக, உலோகமாக நினைந்து வழிபடுவதைப் பார்த்ததில்லைதான். என்றாலும் இத்தனை நாட்களாக நான் அதன் உட்பொருளை உணரவில்லை. நீங்கள் என் கண்களைத் திறந்து விட்டீர்கள்! பாபாஜி......இப்போது சொல்லுங்கள். விக்கிரக ஆராதனையைப் பழித்த என் விதி என்னவது?

இம்முறை பரிகாசமாகக் கேட்கவில்லை மன்னர். உருக்கத்துடனேயே கேட்டார். ''என்னிடம் கருணை கூர்ந்து சொல்லுங்கள்'' என்று சுவாமிஜியைப் பிரார்த்தித்தார்.

''மஹராஜ்...கடவுள் ஒருவனைத் தவிர யாராலும் கருணை காட்ட முடியாது. அவன் எப்போதும் கருணாமயமாகத் தானிருக்கிறான். அவனைப் பிரார்த்தியுங்கள். அவன் உங்களுக்கும் கருணை புரிவான்'' என்றார் சுவாமிஜி.

* * *

விக்கிரக ஆராதனையைப் பற்றி சுவாமிஜி கூறியதை யெல்லாம் இன்று நாம் எல்லாரும் நினைவு கொள்ள வேண்டும். விக்கிரகங்களைக் கேலி செய்பவர்களும் கூட தங்களுக்கென்று ஒரு கொடி வைத்துக்கொண்டு அதற்கு வணக்கம் செய்யும் விசித்திரத்தைக் காண்கிறோம். இந்தக் கொடிக்கு என்ன அர்த்தம் என்று அவர்களைக் கேட்டால் என்ன பதில் சொல்வார்களோ? தத்துவங்களைக் கிரகிப்பதற்கு ஸ்தூலமான சின்னம் வேண்டுமென்பதே சுவாமிஜி உருவ வழிபாட்டுக்குக் காண்பித்த காரணமாகும்.

Koviloor Digital Library

ஆனல் இதற்கு மேலும் ஒரு படி போகலாம். தெய்வப் பிரதிமைகள் உருவாகியுள்ள கல்லிலும் செம்பிலும் 'தெய்வம் இருக்கிறதா ?' என்று கேட்பவர்களிடம், 'இவற்றில் தெய்வம் இல்லை என்பதை நீங்கள் நிரூபித்துக் காட்டுங்களேன் !' என்று கூறிவிட்டால் போதும். விக்கிரகங்களை ஏன் பரம்பொருளின் அடையாளம் என்றும் சின்னம் என்றும் கூறவேண்டும் ? அவையும் பரம்பொருளேதான். எல்லாவற்றிலும் கடவுள் இருக்கிறன் என்ருல் விக்கிரகங்களிலும் இருக்கத்தானே செய்கிறன் ? எல்லாக் கல்லிலும், மண்ணிலுமே அவன் இருக்கிறன் எனினும் அவ்வாறு காண நம்மால் இயலாததால் சில மூர்த்திகளிலாவது அவனைக் காண முயல்கிருேம்; அவ்வளவுதான். எனவே எங்கும் நிறைந்த வஸ்துவுக்கு விக்கிரகங்கள் வெறும் சின்னமாகும் என்பதுகூட முற்றிலும் சரியாகாது.

'உருவகம்' 'உருவகம்' என்ற வார்த்தை இப்போதெல்லாம் நிரம்ப அடிபடுகிறது. அதாவது விட்டுக் கொடுக்கும் தாராள மனதுடன், விக்கிரகங்கள் ஆண்டவனின் உருவகம் என்று பெருந் தன்மையுடன் நாம் அவற்றை ஒப்புக் கொள்கிருேம். இந்தப் பெருந்தன்மை நாஸ்திகத்தைவிட பயங்கரமானது. நாஸ்திகத்தை ஆஸ்திகத்தால் எதிர்த்து வெற்றி காணலாம். ஆனல் 'பெருந்தன்மை' யுடன் அரை ஆஸ்திகர்களாக இருப்பவர்கள் ஏய்த்து வாழ்கிருர்கள். 'உருவகம்' 'உருவகம்' என்று முழங்குபவர்கள் ஒன்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் எல்லாம் மட்டுமென்ன ? 'நாம்' என்று நாம் எதை எண்ணுகிருேமோ அது உண்மையா ? ஏதோ ஒன்றுதானே இப்படித் தன்னை உருவகப் படுத்திக்கொண்டிருக்கிறது ? பரம்பொருள் அஞ்ஞானத்துக்கு ஆட்பட்டாற்போன்ற உருவகம் நாமெல்லாரும். தெய்வ வடிவங்களோ அப்படி அஞ்ஞானத்துக்கு ஆட்படாமல் அஞ்ஞானத்தை நீக்குவதற்காக ஏற்பட்ட கருணை 'உருவங்கள்'. எனவே நம்மைவிட எக்காலும் மிகவும் உயர்ந்தவையே அவை. அவற்றிடம் நாம் 'பெருந்தன்மை' பாராட்டவேண்டிய அவசியமில்லை.

'உருவகம்' என்ருல் நாம் என்ன கருத்தில் நினைக்கிருேமோ, அந்தத் தாழ்வு மனப்பான்மை தேவையில்லை. ஒயிட்ஹெட் என்ற பேராசிரியர் ''மொழியும்கூட உருவகந் தானே ?'' என்று ஆணித்தரமாகக் கேட்கிருர். சிறிது யோசித்துப் பார்த்தால் இதன் உண்மை தெரியும். உருவகம் என்பதால் மொழியைத் தாழ்ந்ததாகக் கூறமுடியுமா ?

தெய்வ மூர்த்தங்களைப் பற்றியுள்ள இன்னொரு தப்பபிப்ராயத்தையும் இங்கு குறிப்பிடலாம். ஏதேனும் ஒரு தெய்வ

Koviloor Digital Library

விக்ரகத்தின் நகை களவு போனுலோ, அல்லது அதன்மீது எலியும் பெருச்சாளியும் ஓடினுலோ உடனே, ''விக்ரகம் தெய்வமா என்ன? தெய்வத்தின் அடையாளம்தானே! அதனுல்தான் இப்படியெல்லாம் நேர்கிறது'' என்று 'ஆஸ்திகர்' கள் சமாதானம் சொல்கிருர்கள். விக்கிரகத்துக்கு ஊறு செய்யும்போது அதனுல் தன்னைக் 'காப்பாற்றி'க் கொள்ள முடியாததால் 'கடவுள் கையாலாகாதவர்' என்று நிந்திக்கும் நாஸ்திகர்களைவிட இந்த 'ஆஸ்திகர்' களுக்கே நாம் அதிகம் பயப்படவேண்டும். கடவுள் நம்மைப் போலவே சுயநலக்காரனுக இருக்கவேண்டும் என்று இவர்கள் நினைக்கிருர்கள். தன்னுடைய உடல் என்றும் பொருள் என்றும் அவன் சுயநலமாகக் கருதித் தன்னைக் காத்து கொள்ளவேண்டும்; அல்ப ஜந்துக்களைப் பழிவாங்கித் தன் மகிமையைத் தெரியப்படுத்த வேண்டும் என்று இவர்கள் நினைக்கிருர்கள். இந்த அறிவீனத்தை என்னென்பது? நாம் செய்யும் நகையையும் நட்டையும் ஒரு பெரிய விஷயமாகக் கருதி ஆண்டவன் பந்தோபஸ்து செய்து கொள்ளவேண்டும் என்று எதிர்பார்ப்பதால் நாம் அவனுடைய ஒப்பற்ற துறவு மனப்பான்மையை எவ்வளவு இழிவு படுத்தி விடுகிறேம்? உலகத்தில் எத்தனையோ இன்னல்கள் நேரும்போது, தனக்கு இழைக்கப்படும் சிறு தீங்குகளை மட்டும் அவன் நிவிருத்தி செய்துகொள்ள வேண்டும் என்று எண்ணுவதால் எல்லையற்ற எம்பிரானை எவ்வளவு அற்பனுக்கி விடுகிறேம்?

அப்படியானுல் சில ஆலயங்களிலுள்ள மூர்த்தங்களில் சில உக்கிரமானவை என்று கூறுவதெல்லாம் தவறு என்றெண்ணலாம். அல்ல. எங்குமுள்ள ஆண்டவனின் பெருமையை உன்னி உணர்ந்த உத்தமர்கள் தங்களது மந்திர சக்தியால் சில பிம்பங்களில் பரமனுடைய அனந்த கலியாண குணங்களில் சிலவற்றை அடர்த்தியாக வெளிக் கொணர்கிருர்கள். பரம்பொருளின் வேஷங்களேயான மானுடரில் பலதரப்பட்டவர்களிருப்பது போல அவனது அர்ச்சாவதாரங்களிலும் பலதரப்பட்ட பிரபாவங்கள் உள்ளன.

* * *

திவானின் வீட்டிலிருந்து சுவாமிஜி விடை பெற்றுக்கொண்டு தமது இருக்கைக்குத் திரும்பினர்.

மஹராஜ் மங்கள சிங் சிந்தனையில் ஆழ்ந்தார். சாம்ராஜ்யாதிபதியான தம்மிடம் கூடச் சற்றும் பயப்படாமலிருக்கும் யதியின் பெருமையை — அவரது சத்தியத்தின் பெருமையை — எண்ணி வியந்து கொண்டிருந்தார்.

Koviloor Digital Library

''திவான்ஜி, இவரைப் போன்றதொரு மஹாத்மாவை நான் எங்குமே கண்டதில்லை. உங்களுடனேயே அவரை இன்னும் சில காலம் தங்கியிருக்கச் செய்யுங்கள்'' என்று ராமசந்திரஜியிடம் கேட்டுக் கொண்டார்.

''நான் என்னல் இயன்றமட்டும் முயன்று பார்க்கிறேன், அரசே! ஆனல் நான் வெற்றி யடைவேன் என்று சொல்வதற்கில்லை. அவர் அக்கினிக்கு ஒப்பானவர்; ஸ்வாதந்திரியம் மிக்கவர்'' என்ருர் திவான் ராமசந்திரர்.

* * *

திவான் விடாமல் கேட்டுக் கொண்டதன்பேரில் அவருடன் தங்கியிருக்க சுவாமிஜி இணங்கினர். ஒரு நிபந்தனையுடனே இணங்கினர்.

''இங்கே ஏழைகளும், எழுத்தறிவற்றவர்களும் எப்போது வந்தாலும் அப்போது அவர்கள் என்னைக் காண அநுமதிக்க வேண்டும். உயர் அந்தஸ்து பெற்றவர்களும், அறிஞர்களும் வந்தால் அவர்கள் என்னைக் காண என்ன வசதிகள் செய்து தருவீர்களோ அதை ஏழை எளியவர்களுக்கும் காட்டவேண்டும்'' என்று சுவாமிஜி விதித்த நிபந்தனையை திவான் ஏற்றுக் கொண்டார்.

மகான்களுக்கு இரு அருங்குணங்களுண்டு: சத்தியம், கருணை. சத்தியத்தின் காரணமாக நாடாள்பவரையும் எடுத்தெறிந்து பேசிய சுவாமிஜி, கருணை காரணமாக ஏதுமற்றவர்களுடன் ஒன்றியிருந்தார். 'நானும் பிச்சைக்காரர்களில் ஒருவன்' என்று சில நாட்கள் முன்பு அவர் கூறியதைத்தான் கேட்டோமே!

* * *

ஆல்வார் சம்ஸ்தானதிபதிக்கு அறிவு புகட்டியதுபோலவே சுவாமிஜி பலருடைய வாழ்க்கையில் நல்ல திருப்பங்கள் ஏற்படுத்தினர். குருபீடம் அவருக்குரியதாகிவிட்டது. மக்கள் அவரிடம் பக்தி பூண்டு நாடத் தொடங்கி விட்டனர். ஸ்ரீராமகிருஷ்ணர் மறைந்த பின் சூனியம் தட்டிக் கிடந்த ஞானேபதேச சிம்மாதனம் தன்னில் சுவாமிஜியை அமர்த்திக்கொண்டுவிட்டது.

சுவாமிஜி கூறிய உபதேசங்களைப் பின்பற்றியவர்கள்போலப் பின் பற்ருத ஒருவரும் இருந்தார். தினந்தோறும் சுவாமிஜியிடம் வந்து கொண்டிருந்த அந்தக் கிழவரின் வேண்டுகோளுக்கிணங்க சுவாமிஜி அவருக்குச் சில நியமங்களைக் கூறி அநுஷ்டிக்கச் சொன்னர். ஆனல் அந்தக் கிழவர் அவற்றை மேற்கொள்ளவில்லை. சுவாமிஜியைப் பார்க்க மட்டும் வந்து கொண்டேயிருந்தார். சுவாமிஜிக்கு அவரிடம் மனது கசந்து விட்டது.

Koviloor Digital Library

ஒரு நாள் அந்தக் கிழவர் தூரத்தில் வருவதைக் கண்டவுடனேயே அவரைக் கவனியாதிருக்க வேண்டுமெனத் தீர்மானித்தார். வழக்கம் போலவே அந்தக் கிழவர் கேள்விகளால் துளைத்தெடுத்தார். சுவாமிஜி அதைக் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை. வந்திருந்தவர்கள் யாரிடமுமே முகம் கொடுத்து உரையாடவில்லை. எதனுல் சுவாமிஜி அப்படிக் கடினமாகயிருக்கிறுர் என்பது அவர்களுக்குப் புரியவில்லை. ஒன்றரை மணி நேரமாகியும் சுவாமிஜியின் போக்கில் மாறுதலேயில்லை. சிலைபோல இருந்தார் அவர். கிழவனுருக்குக் கோபம் வந்து விட்டது. வாய்விட்டிரைந்து கொண்டே அவர் அங்கிருந்து வெளியேறினுர். அவர் சென்றவுடன் சுவாமிஜி சிறுபிள்ளையைப் போல விழுந்து விழுந்து சிரிக்கலானுர். காரணம் தெரியாமலே மற்றவர்களும் சிரிக்கலானுர்கள். ஓர் இளைஞன் எழுந்திருந்து, ''பாபாஜி, நீங்கள் ஏன் அந்தக் கிழவரிடம் அவ்வளவு கடினமாக இருந்தீர்கள்?'' என்று கேட்டான்.

சுவாமிஜி இதயம் கசிந்து கூறுவார்: ''என் அன்புப் பிள்ளைகளே! உங்களுக்காக என் வாழ்வையே தியாகம் செய்ய நான் தயார். ஏனெனில் நான் கூறுவதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற எண்ணமும், அவ்வாறு கடைப்பிடிக்கும் சக்தியும் உங்களுக்கு உள்ளது. ஆனுல் இந்தக் கிழவரை நினைத்துப் பாருங்கள். தம் வாழ்நாளில் பத்தில் ஒன்பது பாகத்தை இவர் புலன் இன்பத்துக்காகவே செலவிட்டிருக்கிறுர். இப்போது உலக வாழ்வுக்குப் பயனின்றி ஆத்மிக வாழ்வுக்கும் இயலாதவராகிவிட்டார். அப்படியிருந்தும் தாம் கேட்டமாத்திரத்தில் ஆண்டவனின் கருணையைப் பெற்றுகவேண்டுமென்று விரும்புகிறுர். சத்தியத்தை அடைவதற்குச் சாதகனின் முயற்சி என்பது அத்தியாவசியமாகும். ஒருவிதமான முயற்சியும் செய்யாதவர்களிடம் கடவுள் எப்படிக் கருணை காட்டுவார்? ஆண்மையில்லாதவன் தமஸ் நிறைந்தவனுவான். வீரர் திலகமாகிய அர்ஜுனன் தனது ஆண்மையை இழந்து விடுவானே என்ற ஸ்திதி ஏற்பட்டபோதுதான் ஸ்ரீகிருஷ்ணன் அவனை ஸ்வதர்மம் அநுஷ்டிக்கும்படி ஆக்ஞாபித்தான். ஸ்வதர்மத்தைச் செய்வதால் அவன் பலனில் பற்றின்றி கடமையைச் செய்து ஸத்துவ குணத்தையும், ஹிருதய சுத்தியையும், கர்ம சந்நியாசமும், சரணுகத புத்தியும் பெறுவான் என்பதால் பகவான் இப்படி ஆக்ஞாபித்தான். ''பலமுள்ளவராக யிருங்கள்! ஆண்மை உள்ளவர்களாக இருங்கள்! ஒருவன் ஆண்மையுடனும், பலத்துடனும் இருப்பானுயின் அவன் கொடியோனுக இருப்பினும் நான் அவனுக்கு மரியாதை தருகிறேன். ஏனெனில் அவனுடைய

Koviloor Digital Library

பலமே என்றே ஒரு நாள் அவனைத் தன் கொடுங்குணத்தை விடுமாறு செய்யும்; சுயநலனுக்காகச் செய்யும் வேலைகளைத் துறக்கச் செய்யும்; இதன் வழியே அவனை சத்தியத்திடம் இட்டுச் செல்லும்.''

'சுய முயற்சியில்லாதவனுக்கு ஆண்டவன் கருணைபுரிய மாட்டான்' என்ற சுவாமிஜியின் கருத்துக்குச் சிறிது விளக்கம் தேவை. மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது ஸ்ரீவைஷ்ணவர்களின் பிரபத்தி தர்மத்துக்கு இது விரோதமோ என்று தோன்றும். நமக்கென்று எச்செயலுமின்றி 'நீ எப்படி நடத்துவாயானாலும் நடத்திக் கொள்' என்று பகவானிடம் சரணாகதியடைவதுதான் பிரபத்தி என்பது. இப்படி சரணாகதி செய்து உழைப்பற்றிருப்பவனை சுவாமிஜி குறிப்பிடவில்லை. ஏனெனில் சரணாகதன் தனக்காக உழைப்பில்லாவிடினும் பகவான் ஆட்டுவிக்கும்படி எந்தவிதமாக உழைக்கவும் தயாராக இருக்கிறான்; சிறிதும் முணுமுணுப்பின்றி எந்தக் கடினமான காரியத்தையும் அவன் செய்வான். பகவானைத் தவிர வேறெந்த லக்ஷியமுமில்லாத அவனுக்கு அல்ல சுவாமிஜியின் உபதேசம். எது நேர்ந்தாலும் நேரட்டும் என்ற அவனது மனப்பாங்கு இல்லாமலே, ஆனால் தன் முயற்சியின்றி பகவான் அருள்பெற விரும்பும் சாமானிய மக்களுக்கே சுவாமிஜியின் இந்த உபதேசம். இதனால் தான் அவர் ஆண்மை பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார். சரணாகதன் ஆண்மையற்றவனல்ல. ஆண்டவன் நியமிக்கும்படி நடக்கும்போது தீரத்துடன் நடப்பவன் அவன். சுவாமிஜி சரணாகதனைக் குறிப்பிடவில்லை என்பது அர்ஜுனன் இறுதியில் சரணாகதி செய்தது பற்றி அவர் உயர்வாகப் பேசுவதிலிருந்து தெற்றெனத் தெரிகிறது. பகவானும் கீதையின் முடிவில் இந்த சரணாகதியையே குறிப்பிட்டார். அது எளிதில் அடையமுடியாத உன்னத நிலையாகும். அதனை சாமானிய மக்களின் சாமானிய பக்தியுடன் குழப்பிக்கொள்ள வேண்டாம்.

* * *

சுவாமிஜி வலியுறுத்திக் கூறியதன் மீது ஆல்வாரிலுள்ள பல இளைஞர்கள் சம்ஸ்கிருதம் கற்கலானார்கள். சுவாமிஜியே சம்ஸ்கிருதம் கற்பித்ததுமுண்டு. சரித்திர காலத்துக்கு முன்பிருந்து மிகமிக உயர்வான ஆன்ம தத்துவங்களையும், கலை நுட்பங்களையும் தந்துள்ள அற்புத மொழியல்லவா அது? இந்தியாவில் ஆங்கிலம் பரவுமுன் அறிஞர்களின் பொது மொழிப் பாலமாக அமைந்ததும் சம்ஸ்கிருதமே யாகும். மத்தகஜத்தின் கம்பீரமும், அன்னப் பேட்டின் லளிதமும் கலந்த திவ்வியமான பாஷை அது;

Koviloor Digital Library

தேவ பாஷை என்றே கருதப்படுவது. பாரதத்தின் ஆத்மாவைப் புரிந்துகொள்ள உதவும் சாதனம் சம்ஸ்கிருதமே. இதனுல்தான் சுவாமிஜி கீர்வாண பாஷையின் அபிவிருத்தியில் நாட்டம் காட்டினுர்.

''சம்ஸ்கிருதம் படியுங்கள்! அதோடு மேல்நாட்டு விஞ்ஞானத்தையும் படியுங்கள், எதனையும் நுணுக்கத்துடன் திருந்தச் செய்யப் பயிலுங்கள். கல்வி பெறுங்கள்; உழைக்கப் பழகுங்கள். அப்படி நீங்கள் செய்தால் நமது சரித்திரத்தைப் பிழையற்ற விஞ்ஞான ரீதியில்* நாம் அமைக்க முடியும். இப்போது நம்முடைய சரித்திரம் கட்டுக்குலைந்து கிடக்கிறது. அதில் கால வரையறைகள் திட்டவட்டமாக இல்லை. ஆங்கில ஆசிரியர்கள் எழுதியுள்ள நம்முடைய சரித்திர நூல்கள் நம்முடைய மனதைப் பலவீனப் படுத்தத்தான் செய்யும். ஏனெனில் அவை நம்முடைய வீழ்ச்சியைமட்டுமே சொல்கின்றன. நம்முடைய பழக்க வழக்கங்களைப் பற்றியும், நம்முடைய சமயம், தத்துவ ஞானம் இவை பற்றியும் மிகவும் சொற்பமாகப் புரிந்து கொள்ளும் அந்நியர்கள் எப்படி இந்திய சரித்திரத்தை உண்மைக்கு மாறற்ற சிரத்தையுடனும், பட்சபாதமின்றியும் எழுத முடியும்? எனவேதான் அவர்களது சரித்திர நூல்களில் பல தவருன கருத்துக்களும் பிசகான முடிவுகளும் இடம் பெற்றுவிட்டன. எனினும் நமது, புராதனகாலச் சரித்திரத்தில் எப்படி ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்பதற்கு ஐரோப்பியர்கள் வழி காட்டியிருக்கிறுர்கள். இப்போது அதிலிருந்து நாமே சுதந்திரமாகச் சரித்திர ஆராய்ச்சிக்கு ஒரு பாதை வகுத்துக் கொள்ள வேண்டும். வேதங்கள், புராணங்கள், தொன்மை வாய்ந்த வரலாற்றுக் குறிப்புக்கள் இவற்றைப் படித்து, இவற்றிலிருந்து திட்டவட்டமாகவும், அநுதாபத்துடனும், ஆத்மாவைத் தெருட்சியுறவைக்கும் முறையிலும் சரித்திர நூல்கள் எழுத வேண்டும். இந்தியர்கள்தான் இந்திய சரித்திரம் எழுத வேண்டும். நாம் இழந்தனவும் நம்மிடமிருந்து மறைந்தனவுமான நிதியங்களை மீண்டும் பெற்றுக் காக்கும் பணியில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வீர்களாக!

''ஒருவன் எப்படித் தனது குழந்தை காணுமற்போனுல் அதனை மீண்டும் கண்டு பிடிக்குமளவும் நிம்மதி கொள்ள மாட்டானே, அதே போல நீங்களும் மக்களின் உணர்வில் பாரதத்தின் மாண்பு பொருந்திய புராதன சரிதத்தைப் புத்துயிர் பெறச்

* விஞ்ஞான ரீதி என்பது மனச்சார்பில்லாமல் உண்மையை ஆராய்வதையும் பிசகும் பிழையுமின்றி சூத்திரங்கள் போல ஆராய்ச்சி உண்மைகளை எடுத்துரைப்பதையும் குறிக்கும்.

Koviloor Digital Library

செய்யுமளவும் தளர்ச்சியடையாமல் பிரயத்தனம் செய்யுங்கள். அதுவே உண்மையான தேசியக் கல்வி; அதன் வளர்ச்சியிலேதான் உண்மையான தேசிய உணர்வு விழிப்புப் பெறும்'' என்று சுவாமிஜி ஆல்வார் இளைஞர்களுக்கு நல்லுரை கூறினுர்.

சுவாமிஜியின் தேசிய பக்திக்கு இதைவிடச் சிறந்த உதாரணம் தேவையில்லை. அரசியலில் மட்டும்தான் தேசிய உணர்வு இருக்கிறது என்ற அறிவற்ற கருத்தை விட்டால் மகான்களின் தேசிய உணர்வு தெரியும். எந்நாட்டுக்கும் பொதுவான அவர்கள் தாய் நாட்டின் மேன்மையை அனவரதமும் எண்ணியவர்களாவர்.

சுவாமிஜி இந்திய சரித்திரம் பற்றிக் கூறியது சுமார் எழுப தாண்டுகளுக்குப் பின்னர் இன்னமும் பூரணமாக நிறைவேறிய தாகத் தெரியவில்லை.

* * *

சுவாமிஜியிடம் பேரன்பு பூண்டவர்களில் பிராம்மணச் சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் அடிக்கடி அவரிடம் வருவான். சிஷ்யன் குருவிடம் நடந்துகொள்ளும் பாங்கில் அவரிடம் நடந்து வந்தான். அவனுக்கு உபநயனமாகியிருக்க வேண்டிய வயதாகியும், வசதிக் குறைவால் அவன் பிரம்மசாரியாக முடியவில்லை. பொருளின்மையால் அவனுக்கு உபநயனம் நடக்கவில்லை என அறிந்ததும் சுவாமிஜி நிம்மதி யிழந்தார். தம்மிடம் வந்து கொண்டிருந்த செல்வச் செழிப்புள்ளவர்களிடம் அவர், ''உங்களிடம் நான் ஒன்று யாசிக்கிறேன். இதோ ஒரு பிராம்மணப் பையன் உபநயனக் கல்யாணத்துக்காக செலவழிக்க வசதி பெற்றிராததால் பூணூல் போட்டுக் கொள்ளாமலிருக்கிறுன். கிருஹஸ்தர்கள் என்ற முறையில் அவனுக்கு உதவ வேண்டியது உங்கள் கடமையாகும். அவனுக்காக ஒரு நிதி சேகரிக்க முயலுங்கள். இந்த வயதுள்ள ஒரு பிராம்மணப் பையன் தன் ஜாதிக்குரிய மதாநுஷ்டானங்கள் செய்யாமலிருப்பது தகாது. அதோடு, அவனுடைய கல்விக்கும் நீங்கள் ஏற்பாடு செய்ய முடிந்தால் நன்மை பெறுவீர்கள்'' என்றுர்.

அவர்களும் உடனே பணம் சேகரித்தார்கள். ஆனுல் உபநயனம் நடக்குமுன்பே சுவாமிஜி ஆல்வாரிலிருந்து புறப்பட்டு விட்டார். என்றுலும் அவர் இந்த விஷயத்தை மறக்கவில்லை என்பது ஒரு மாதத்துக்குப் பின் அவர் ஆல்வார் நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்திலிருந்து தெரிகிறது. கடிதத்தைத் தொடங்கும்போதே அந்த அந்தணப் பிள்ளைக்கு உபநயனமாயிற்று என்றுதான் சுவாமிஜி விசாரிக்கிறுர்.

Koviloor Digital Library

'சமையற்கட்டுச் சமயமாகிவிட்டது ஹிந்து மதம்' என்பது போல சுவாமிஜி பல சமயங்களில் பேசியிருப்பதால் அவர் வர்ண தர்மத்தை வெறுத்தார் என்று பலர் நினைக்கிறார்கள். இது முழுத் தவறாகும். சுவாமிஜி ஜாதிக் கலப்பு செய்யவேண்டும் என்று கருதியது கிடையாது. வேதங்கள் ஒரு குறிப்பிட்ட சாரா ருக்கே உரியதாக இருக்கக்கூடாது என்றே அவர் வற்புறுத்தி வந்தார். ஜாதிகளுக்குள் உயர்வு—தாழ்வு எண்ணம் ஏற்படும் படியாக உள்ள அம்சங்களை வெட்டி எறியவேண்டும் என்றார். பிறர் பார்த்தால் உண்பதில்லை, பிறரோடு உட்கார்ந்து உண்ப தில்லை என்ற கட்டுப்பாடுகள் உயர்வு தாழ்வு மனப்பான்மையை நிச்சயமாக உண்டாக்கும் என்று கருதியதாலேயே அவர் இவற்றை வெறுத்து ''ஹிந்து மதம் உக்கிராண அறை மதமாகிவிட்டது'' என்று கூறினார்.

எனினும் அவருமேகூட எல்லா வர்ணத்தவரிடமிருந்தும், மதத்தினரிடமிருந்தும் பிக்ஷை ஏற்கும்போது மக்கள் யாவரும் அப்படிச் செய்யவேண்டும் என்று கூறியதில்லை. ''நான் சந்நி யாசி. எனக்கு இந்த ஆசாரங்கள் கிடையாது. எனவே நான் யார் கையாலும் உணவு பெறலாம்'' என்றே கூறி வந்தார். சந்நியாசிகளை அதிவர்ணாச்ரமிகள் என்பதாகக் கூறி சாஸ்திரமே சமூகப் பகுப்புக்களிலிருந்து விலக்களித்திருக்கிறது.

* * *

பரிவிராஜக வாழ்வு சுவாமிஜியை அழைத்தது. அவர் ஆல் வாரிலிருந்து புறப்பட முடிவு செய்தார். நாட்கள் வாரமாகி, வாரங்கள் மாதமானபின்னும் ஓரிடத்திலேயே தங்கலாமா? அதிக நாட்கள் ஒரேயிடத்தில் தங்கினால் புதுப் புதுப் பந்தங்கள் ஏற்படத் தானே செய்யும்?

''சந்நியாசி என்பவன் சஞ்சரித்துக் கொண்டேயிருக்க வேண்டும். நான் போயாக வேண்டும்'' என்று சுவாமிஜி ஆல்வாரிலுள்ள பக்த ஜனங்களிடம் கூறியபோது அவர்களால் அதனைத் தாங்கவே முடியவில்லை. அவர்களுடைய உள்ளன்பு சுவாமிஜியை நெகிழத்தான் செய்து விட்டது. என்றாலும் தமக் குத் தெரிந்ததை எல்லாப் பகுதிகளிலுமுள்ள மக்களுடன் பகிர்ந்து கொள்வதுதான் தர்மம்; தன்னால் யாரையேனும் கரையேற்ற முடியுமெனில் அவர்கள் நாடு முழுவதிலும்தான் இருக்க வேண்டு மேயன்றி ஒரே இடத்திலிருக்கலாகாது என்று அவரது இதயம் கூறிற்று.

''குழந்தைகாள், போகிறேன்'' என்று அன்பின் மிகுதியில் தாயாகி விம்ம ஆயத்தமாகிவிட்டார் சுவாமிஜி.

Koviloor Digital Library

அத்தனை காலம் தங்களுக்கு ஞானச் செல்வத்தை அள்ளித் தந்த சுவாமிஜி, தமது மூட்டையைத் தாமே தூக்கிக்கொண்டு தனியொருவராக அங்கிருந்து கடும் வெயிலில் நடந்தே செல்லப் போகிறார் என்பதை ஆல்வார் அடியார்களால் ஏற்க முடியவில்லை.

''சுவாமிஜி, தாங்கள் இங்கிருந்து பந்துபோல் மட்டுமாவது மாட்டு வண்டியில்தான் செல்லவேண்டும்'' என்று அவர்கள் பிடிவாதம் பிடித்தனர்.

சுவாமிஜியால் இளகாதிருக்க இயலவில்லை.

தாங்களும் அவருடன் ஐம்பது, அறுபது மைல்கள் தொடர்ந்து வருவோம் என்று அவர்களில் சிலர் பிடிவாதம் பிடித்தனர். சுவாமிஜியால் இளகாதிருக்க இயலவில்லை.

ஆல்வாரிலிருந்து மாட்டு வண்டியில் புறப்பட்டார் சுவாமிஜி. பரிவாரங்கள் பின் தொடர்ந்தன.

பந்துபோல் என்ற ஊரில் ஹநுமான்ஜி குடிகொண்டிருந்த ஓர் ஆலயமுண்டு. ஆல்வாரிலிருந்து புறப்பட்ட அன்றிரவு சுவாமிஜி ஆலயத்தில் படுத்துறங்கினார். குழந்தையாக இருந்த போது இரவு வேளைகளில் வாழைத் தோட்டங்களில் ஆஞ்சநேய சுவாமியைத் தேடித் திரிந்தவரல்லவா அவர்!

மறு நாள் காலை வண்டியை அனுப்பிவிட்டார். பக்தர்கள் புடைசூழ ஒரு பதினாறு மைல் நடந்தே சென்றார். வழியெல்லாம் ஒரே வனாந்தரம். அந்தக் காடுகளில் துஷ்ட மிருகங்களும் வசிப்ப துண்டு. எனினும் சுவாமிஜி சிரிக்கச் சிரிக்கவும், சிந்தித்து உணர வும் பேசிவந்ததில் காலமோ, கால்வலியோ, கானகத்தின் பயமோ சிஷ்யர்களுக்குத் தெரியவில்லை. தஹலா என்ற கிராமத்தில் அவர்கள் ஒய்வு எடுத்துக் கொண்டார்கள். நீல வானத்தில் பிறைமதி கோடிட்டிருக்கும் அழகுக்கு மாற்று அழகாகத் தனது நிலவு போன்ற கழுத்தில் நீல ரேகை தரித்திருக்கும் நீலகண்ட மஹாதேவன் என்ற நாம-ரூப சுந்தரனுக்குத் தஹலாவில் ஆலயம் இருந்தது. அங்கு சுவாமிஜியும் பரிவாரத்தினரும் இரவைக் கழித் தனர்.

மறு நாள் காலை எல்லாரும் பதினெட்டு மைல்கள் நடந்தனர். நாராயணி என்பதாக, நாராயணன் சோதரியின் பெயரைத் தன் பெயராகப் பெற்றிருந்த புண்ணியக் கிராமத்தில் அம்பிகையின் ஆலயத்தை அடைந்தனர். இங்கு ஆண்டுதோறும் நடக்கும் மேளாவுக்கு ராஜஸ்தானத்தின் எல்லாப் பகுதிகளிலிருந் தும் பக்தர்கள் வருவார்கள்.

அம்பிகையின் திருவடியில் தமது ஆல்வார் அன்பர்களுக்கு விடை கூறினார் சுவாமிஜி. அவர் பின்னாலேயே அவ்வளவு மைல்

Koviloor Digital Library

களைக் காலால் நடந்து வந்த அந்த மெய்யடியார்கள் உணர்ச்சி பொங்க அவரிடமிருந்து பிரிந்தனர்.

* * *

பூவுலகு முழுவதும் வீடாகவும், ஆகாசமே கூரையாகவும் கொண்டு ஏகாங்கியாக சுவாமிஜி செல்லலானார். பதினாறு மைல்களுக்கு அப்புறம் போஸோவே என்ற இடத்தில் ஜயப்பூருக்கு ரயிலேறினார். ஆல்வாரில் அவரைச் சந்தித்த அன்பர் ஒருவரின் வேண்டுகோளுக்கிணங்கியே சுவாமிஜி ஜயப்பூர் சென்றார். அந்த அன்பர் வழியிலேயே சுவாமிஜியைச் சந்தித்து அவருடன் ஜயப்பூர் வரை பிரயாணம் செய்தார். ஜயப்பூரில் அந்த சிஷ்யரின் வற்புறுத்தலுக் கிணங்கி சுவாமிஜி தம்மைப் புகைப் படமெடுக்க அநுமதித்தார். இதுவே பரிவிராஜக சந்நியாசக் கோலத்தில் சுவாமிஜியின் முதல் படமாகும்.

ஜயப்பூரில் சுவாமிஜி இரண்டு வாரங்கள் தங்கியிருந்தார். சம்ஸ்கிருத வியாகரணத்தில் மெத்தப் படித்திருந்த ஒருவரிடம் சுவாமிஜி வடமொழி இலக்கணம் பயிலத் தொடங்கினார். மெத்தப் படித்திருந்த அவருக்கோ பிறருக்குக் கற்பிக்கத் திறனில்லை. பாணினியின் வியாகரண சூத்திரத்துக்குப் பதஞ்சலி முனிவர் செய்திருந்த மஹாபாஷ்யத்தில் முதல் சூத்திர விளக்கத்தை சுவாமிஜிக்குத் தெளிவு படுத்த அந்த பண்டிதர் மூன்று நாட்கள் முயன்றும் அவரால் முடியவில்லை. நாலாம் நாள் அவர் சுவாமிஜியிடம், ''தாங்கள் என்னிடம் பாடம் கேட்பதால் எந்தப் பயனும் பெறவில்லையோ என்று அஞ்சுகிறேன்'' என்று மனம்விட்டு கூறினார். அவர் கற்பிக்கும் திறன் தமக்குக் குறைவு என்றுதான் எண்ணினாரோ அல்லது கற்கும் திறன் சுவாமிஜிக்குக் குறைவு என்றே எண்ணினாரோ — நாம் அறியோம். சுவாமிஜி அவரிடமிருந்து பாஷ்ய புத்தகத்தை வாங்கிக் கொண்டார். தாமே அதைப் படிக்கலானார். மூன்று நாட்களில் பண்டிதரால் முடியாததை மூன்றே மணிகளில் புரிந்து கொண்டார். பிறகு பண்டிதரைக் காணச் சென்றபோது, பேச்சு வாக்கிலேயே பாஷ்யத்தின் பொருளை விளக்கினார். பண்டிதர் அசந்துபோய் விட்டார்.

இதன்பின் சூத்திரம் சூத்திரமாக முழு பாஷ்யத்தையும் வெகு எளிதிலேயே சுவாமிஜி தமதாக்கிக் கொண்டார். இந்த அநுபவத்தைப் பற்றிப் பின்னர் பேசும்போது, ''உள்ளத்தில் தீவிரமான ஆர்வம் இருக்குமாயின் எதையும் சாதித்து விடலாம் — மலைகளையும் அணுக்களாகப் பொடித்து விடலாம்'' என்று குறிப்பிட்டார்.

Koviloor Digital Library

ஜயப்பூரில் சம்ஸ்தானத்து சேநாதிபதியான ஸர்தார் ஹரி ஸிங் என்பவருடன் சுவாமிஜிக்கு நெருக்கமான நட்பு ஏற்பட்டது. அவரது இல்லத்தில் பல அரிய விஷயங்களை அரிய முறையில் விளக்கி வந்தார் சுவாமிஜி. ஒரு நாள் விக்கிரக ஆராதனையின் பயனைப் பற்றி சுவாமிஜி பேசி வந்தார். ஸர்தார்ஜி வேதாந்தம் நன்கு கற்றவர். பிரம்மம் நிர்க்குணமானதே என்ற கருத்து கொண்ட அவரை ஸகுணப் பிரம்மத்தில் ஈடுபடுத்த ஒரு நாள் சுவாமிஜி எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. பல மணிகள் விவாதித்த பின்பும் அவர் தமது அபிப்பிராயத்தையே திடமாகக் கொண்டிருந்தார்.

அன்று மாலை இருவரும் உலாவச் சென்றனர். போகும் வழியில் கண்ண பெருமானின் திரு உருவத்தைச் சிலர் ஊர் வலமாக எடுத்து வந்தனர். ராதேச்யாமனைக் குறித்து பஜனை செய்தபடியே பெருமானைத் தூக்கிச் சென்று கொண்டிருந்தார் கள். சுவாமிஜியும் ஸர்தாரும் சிறிது நேரம் ஊர்வலத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

சுவாமிஜி சட்டென்று ஸர்தாரைத் தொட்டு, ''அதோ, உயிருள்ள ஆண்டவனைப் பாருங்கள்!'' என்று ஆர்ப்பரித்தார். ஸர்தாரின் கண்கள் நந்தபாலனின் விக்கிரகத்தின்மீது படிந்தன. அவருடைய உடல் அப்படியே சிலிர்த்தது. காலை வேளையில் சிலிர்க்கும் மலரிலிருந்து பனி தெளிப்பதுபோல அவர் கண்களி லிருந்து ஊற்றுப் பெருகிற்று. பரவசராகயிருந்த அவர் தம் வசமானபோது சுவாமிஜியிடம் கரைந்த குரலில் சொல்வார்: ''பாபா, எனக்கு ஞானோதயமாயிற்று. பல மணி நேர விவா தத்துக்குப் பின்னரும் உணரமுடியாததை உங்களுடைய ஒரு ஸ்பரிசத்தினால் சுளுவில் உணர்ந்து விட்டேன். சத்தியமாகவே கிருஷ்ண விக்கிரகத்தில் கடவுளைக் கண்டு விட்டேன்.''

* * *

'கடவுளைக் கண்டதுண்டா?' என்ற கனலான கேள்வியைச் சுமந்து கொண்டிருந்த நரேந்திரரை இப்படித்தான் ஒருவர் சர்வ சகஜமாகத் தொட்டார். 'கடவுளைக் கண்டதுண்டா?' என்று கேட்டவரும் கடவுளைக் கண்டார். இன்று அப்படிக் கேட் டுணர்ந்தவர் ஸ்பரிசித்ததில் இன்னொருவரும் தெய்வ தரிசனம் பெற்று விட்டார். 'ஸ்பரிச வேதியினும் குரு சிறந்தவர்' என்ப தாக முன்னோர் அத்தியாயத்தில் படித்த ஆதிசங்கரரின் அருள் வாக்குத்தான் இங்கு நினைவு வருகிறது.

அறிவினால் ஸர்தாரைத் திருத்த இயலாமற் போனதன் காரணமாக அவர் மேல் அருள் கொண்டு அற்புதத்தால் அவரைத் திருத்தி விட்டார் சுவாமிஜி.

Koviloor Digital Library

முப்பது வயசுக்குள் சுவாமிஜி எத்தகைய ஆத்ம சம்பத்தைத் தேடிக்கொண்டு விட்டார் என்பதற்குத் தமது ஸ்பரிசத்தாலேயே தெய்வ தரிசனம் செய்வித்த இந்த நிகழ்ச்சி சான்ருகும்.

* * *

அறிவும், அருளும், அற்புதமும் அகம்பாவிகளிடம் பயன் தராது. பாவங்களில் பெரும் பாவம் அகம்பாவம்தான். கற்றவர்கள் தாங்கள் அதற்குத் தக நிற்க வொண்ணுமல் அடி சறுக்கி விழுவது இந்தச் செருக்காலேயே ஆகும். அவர்களிடம் சுவாமிஜிக்கு அருள் பிறக்காது. அருள் பிறந்தாலும் அதனுல் அவர்கள் பயன் பெறமாட்டர்கள் என்று தோன்றினுல் அவர்களிடம் தமது ஆத்திரத்தை நகைச்சுவை மூலம் வெளிக்காட்டி விடுவார் சுவாமிஜி.

கற்றறியாத — அதாவது கற்றிருந்தும் கற்றதன் பயனே அறியாத — ஒரு ஸர்தாரை சுவாமிஜி ஜயப்பூரில் சந்தித்தார். பண்டித ஸிராஜ் நாராயணர் என்ற அவர் ராஜ்ய முழுவதிலும் தம் புலமைக்காகப் பெயரெடுத்திருந்தார். சுவாமிஜி பல விஷயங்களே விளக்கி வருகையில் ஸிராஜ் நாராயணர், ''சுவாமிஜி, நான் ஜீவராசிகளெல்லாம் பிரம்மமே என்று நம்பும் ஒரு வேதாந்தி. எனவே அவதாரங்கள் என்ற சிலர்மட்டும் விசேஷமாகத் தெய்வத் தன்மை பொருந்தியிருக்கிருர்கள் என்பதை நான் ஏற்க மறுக்கிறேன். நாம் எல்லாரும் பிரம்மம். எனக்கும் அவதாரத்துக்கும் என்ன வித்தியாசம்?'' என்ருர்.

''ரொம்பவும் சரி'' என்ருர் சுவாமிஜி பளிச்சென்று. ''நீங்கள் சொல்வது ரொம்பவும் உண்மை. மீன், ஆமை, பன்றி இவற்றை யெல்லாம் அவதாரம் என்று மக்கள் கருதுகிருர்கள். நீங்களும் ஓர் அவதாரமே என்று சொல்லிக் கொள்கிறீர்கள். இவற்றில் நீங்கள் உங்களே மீன் என்ருே ஆமை என்ருே கருதுகிறீர்களா? அல்லது பன்றியுடன் நீங்கள் ஒன்று என எண்ணுகிறீர்களா?'' என்று கேட்டார்.

கொல்லென்ற சிரிப்பு எழுந்தது. பண்டிதர் ஊமையானுர்.

சகல ஜீவராசிகளும் பிரம்மம்தானே என்று கேட்ட பண்டிதர் தம்மை ஸ்ரீராமனுடனும், கிருஷ்ண பரமாத்மாவுடனும் மட்டும் ஒன்ருக எண்ணுவது நியாயமாகுமா? சாதாரணப் பன்றியுடனும், புழு பூச்சிகளுடனும் கூடத் தாம் ஒன்று என்று எண்ண வேண்டுமல்லவா? வியவகார உலகம் என்பதில் அகப்பட்டுக்கொண்டிருக்கும் வரையில் தான் அத்வைதி என்று ஒருவன் பேசுவது மூடத்தனமாகும். வியவகார உலகுக்கு மேம்பட்டவன் அத்வைதம் பேசமாட்டான்; ஏனெனில் அது பேசா அநுபூதி நிலை.

Koviloor Digital Library

முன்பே சொல்லியிருக்கிறோம் — சாதாரண ஜீவர்கள் மாயையினால் தாங்கள் பிரம்மம் என்பதை மறந்து — கர்மக்கட்டில் சிக்குண்டு பிறந்து பிறந்து அழிபவர்கள். இவர்களை உய்விப்பதற்காகவென்றே — கர்ம விதியினால் அல்ல — பரம்பொருள் தாங்கும் பிறப்புக்களையே அவதாரம் என்கிறோம்.

* * *

ராஜபுதனத்தில் சுவாமிஜி பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது இன்னொரு ருசியான சம்பவம் நிகழ்ந்தது.

சுவாமிஜி சென்ற ரயில் பெட்டியிலேயே இரண்டு ஆங்கிலேயர்கள் உடன் வந்து கொண்டிருந்தார்கள். சுவாமிஜிக்கு ஆங்கிலம் தெரிந்திராது என்ற எண்ணத்தில் அவ்விருவரும் அவரைப் பற்றிப் பரிகாசமாகப் பேசிப் பேசி சிரித்து மகிழ்ந்து கொண்டார்கள். அவரும் ஒரு வார்த்தைகூடப் புரியாதது போலச் சும்மாவே யிருந்தார். ஏதோ ஒரு ஸ்டேஷனில் வண்டி நின்றதும் சுவாமிஜி ஸ்டேஷன் மாஸ்டரிடம் தமக்குக் குடிநீர் வேண்டுமென்று ஆங்கிலத்தில் கேட்டார். உடனே அந்த ஆங்கிலேயர் இருவரும், அவர் ஆங்கிலம் அறிந்திருந்தும் தாங்கள் கூறியதையெல்லாம் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தது ஏன் என வினவினார்கள். ''என் நண்பர்காள்! நான் முட்டாள்களைப் பார்ப்பது இது முதல் தரமல்ல'' என்றார் சுவாமிஜி நறுக்கென்று. ஆங்கிலேயர்களுக்கு ஆத்திரம் வந்தது. சுவாமிஜியைத் தாக்க அவர்கள் ஆயத்தமானார்கள். 'அதற்கும் தாம் தயார்; இரண்டு பேர்களையும் தம்மால் ஒரு கை பார்க்கமுடியும்' என்பதுபோல சுவாமிஜி முண்டாக்களைத் தட்டிக்கொண்டு எழுந்தார். அவ்விருவரும் வாலைச் சுருட்டிக் கொண்டு அமர்ந்தனர்.

* * *

ஹிந்து மன்னர்களும், மொகலாய அரசர்களும் சரித்திரம் செய்த ஆஜ்மீரை அடைந்தார் சுவாமிஜி. அங்கிருந்து ஆபு மலைக்குச் சென்றார். இது 1891-ம் ஆண்டு கோடை காலத்திலாகும்.

மத்திய பாரதத்திலுள்ளவர்களுக்கும் ராஜஸ்தானிகளுக்கும் அதுவே கோடை வாசஸ்தலமாகும். அங்குள்ள ஜைன தில்வாரா ஆலயத்தின் சிற்பச் சிறப்பு உலகப் பிரசித்தி பெற்றதாகும். ஆண்டவன் தானாகச் செய்த இயற்கை எழிலும், மனிதர்கள் மூலமாகச் செய்த செயற்கை அழகும் ஒன்றோடொன்று போட்டியிடும் ஆபுவில் சுவாமிஜியின் கண்ணுக்கும் கருத்துக்கும் நல்ல விருந்து கிடைத்தது.

Koviloor Digital Library

ஆபுவிலுள்ளவர்களின் அறிவுக்கும் இதயத்துக்கும் நல்விருந்தாக சுவாமிஜியே கிடைத்தார். சிறுகச் சிறுக அவரிடம் சிஷ்ய கணம் சேரலாயிற்று.

பக்தர்களுடன் மாலே வேளையில் மலைப்பிரதேசத்தில் உலாவுவார் சுவாமிஜி. ஆபுவின் எழில் வெள்ளத்தைத் தேக்கியுள்ள பெய்லிப் பாட்டையில் ஒரு நாள் அவர்கள் சென்று கொண்டிருந்தார்கள். அவர்களுக்குக் கீழே ஆபுவின் அழகுப் பொழில் ஒன்று நெளியும் வெள்ளிப் பாளமாக ஒளிர்ந்து கொண்டிருந்தது. பராசக்தியின் சித்திர சாலையில் சிறப்புறத் திகழும் அந்தக் காட்சியில் சொக்கிப்போன சுவாமிஜி பக்தர்களைப் பிரிந்து ஏகாந்தமாகத் தனி வழியில் செல்லலானுர். பாட்டைக்குப் புறத்தேயுள்ள பாறைகளுக்கு மேல் ஏறி அமர்ந்துகொண்டார். அவருடைய இசை பிறிக்கொண்டு வரலாயிற்று. தம்மை மறந்து கானம் செய்யத் தொடங்கினுர். தங்கு தடையின்றி, கங்கு கரையின்றி கான வெள்ளம் பாய்ச்சலானுர். அவ்வழியே சென்றுகொண்டிருந்த ஐரோப்பியர் சிலர் அந்த இசையினுல் ஈர்க்கப்பட்டனர். பாடுபவர் எங்கிருக்கிருர் என்பது அவர்களுக்குத் தெரியவில்லையே. அந்த மலேயே பாடி, அந்தப் பாட்டிலேயே கரைந்து அடியிலுள்ள ஏரியாகி யிருப்பதுபோலத் தோன்றிற்று. நீண்ட நேரம் கானுமுதம் படைத்தபின் சுவாமிஜி பாறைகளினின்று இறங்கிக் கீழே வந்தார். அவருடைய மதுரக் குரலையும் பரவச உணர்ச்சியையும் ஐரோப்பியர்கள் மனதாரப் பாராட்டினுர்கள்.

*　　*　　*

விதியின் விளையாடல்கள் அற்புதமானவை. மனம் நோகச் செய்யும் காரியங்களை மட்டுமே விதியின் விளையாட்டு என்கிறேம். அதே போல உள்ளம் உவகை கொள்ளும் பல விளையாட்டுக்களையும் விதிசெய்து கொண்டுதானிருக்கிறது. கூடியிருப்பவரைப் பிரித்து வைத்து விளையாடுவது போலவே பிரிந்தவரைக் கூட்டி வைத்துப் பார்க்கிறது. சுவாமிஜியைக் காணுத போதிலேயே — அறியாத போதிலேயே — அவருக்காகவென்று தன்னையும் மீறிக் காத்துக் கொண்டிருந்தது போன்ற ஒருவர் அவரைக் கண்டு அம்மாத்திரத்திலேயே அவரிடம் தம்மை ஒப்புக் கொடுத்துக் கொண்ட விளையாட்டை ஆபுவில்தான் விதி விளையாடிப் பார்த்தது. அப்படி சுவாமிஜியிடம் தம்மை அளித்துக் கொண்டவர் ஏதும் இல்லாத ஒருவர் அல்ல. ஒரு சம்ஸ்தானத்துக்கே அரசர் அவர். கேத்ரி மஹாராஜா என்பதாக விவேகானந்த பக்தர்கள் அன்புடன் நினைப்பவரே அவர்.

Koviloor Digital Library

ஆபுவிலுள்ள நிர்மாநுஷ்யமான ஒரு குகையில் சுவாமிஜி தபஸ் செய்து வந்தார். ஒரு நாள் குறுநில மன்னரொரு வருடைய வக்கிலாகிய முஸ்லிம் ஒருவர் அவ்வழியே செல்லும் போது சுவாமிஜியைக் கண்டு அவரின் ராஜகம்பீரத்தில், யோக கம்பீரத்தில் ஈடுபட்டார். அவரிடம் தாமே சென்று சம்பாஷிக்க லானுர். சில நிமிஷ சம்பாஷணையிலிருந்தே சுவாமிஜியின் பாண்டித்தியத்தையும், அநுபவ ஞானத்தையும் அவர் புரிந்து கொண்டார். அதிலிருந்து அவர் அடிக்கடி சுவாமிஜியைக்கண்டு வந்தார்.

ஒரு நாள் அவர் சுவாமிஜியிடம், ''பாபா, தாங்கள் என்னை தங்கள் கைங்கரியத்தில் எவ்விதத்திலேனும் ஈடுபடுத்திக் கொண்டால் மிகவும் பாக்கியம் பெறுவேன்'' என்று விநயமாகக் கூறினுர்.

சுவாமிஜி குகை வாயிலையே சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தார்.

''நல்லது; மாரிக்காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. மழை பெய்தால் இந்தக் குகைக்குள் எல்லாம் நீர் வந்து தேங்கி விடும். எனவே இந்தக் குகை வாயிலில் கதவு பொருத்தித் தரமுடியுமா?'' என்று வினவினுர் சுவாமிஜி.

''ஓ, செய்கிறேன்'' என்று கூறிய வக்கில், ''அது சரி சுவாமிஜி, கதவுகள் போட்டுவிட்டாலும்கூட இந்தக் குகை மிகவும் வசதியற்றதாகும். தாங்கள் ஏன் இங்கே காலம் கழிக்க வேண்டும்? என்னுடைய பெரிய பங்களாவில் நான் ஒருவன்தான் இருந்து வருகிறேன். தாங்கள் அங்கேயே வந்து தங்கியிருக்கக் கருணை கொண்டால் நான் கிருதார்த்தனுவேன்'' என்றுர்.

சுவாமிஜி அவரது கோரிக்கைக்கு இணங்கினுர்.

''நான் முஸல்மான் அல்லவா? எனவே சுவாமிஜியின் உணவுக்குத் தனியாக ஏற்பாடு செய்கிறேன்'' என்றுர் மன்னரின் வக்கில்.

''அது அவசியமில்லை'' என்று மொழிந்த சுவாமிஜி பங்களாவுக்குச் சென்றுர்.

அங்கு பல சம்ஸ்தானங்களின் அதிகாரிகளுடன் சுவாமிஜிக்குப் பரிசயம் ஏற்பட்டது. இவர்களில் கோடா மஹாராஜாவின் வக்கில், மந்திரி ஆகியவர்கள் குறிப்பிடப்பட வேண்டியவர்கள். சுவாமிஜிக்கு இருக்கையளித்த முஸ்லீம் கனவான் அவரைக் காண வருமாறு கேத்ரி மஹாராஜாவின் அந்தரங்கக் காரியதரிசியையும் அழைத்தார்.

முன்ஷி ஜகன்மோகன்லால் என்ற அந்தக் காரியதரிசி அழைப்பை ஏற்று வந்தபோது, சுவாமிஜி வெறும் கௌபீனதாரி

Koviloor Digital Library

யாக உறங்கிக் கொண்டிருந்தார். 'திருடர்களுக்கும் போக்கிரி களுக்கும் சமமான சாமானிய 'சாது'க்களில் ஒருவரே இவர்' என்றுதான் அவரைப் பார்த்தவுடன் முன்ஷிக்குத் தோன்றிற்று.

சுவாமிஜி எழுந்தபின் முன்ஷி அவரைக் கேட்ட முதல் கேள்வி இதுதான்: ''நீங்கள் ஒரு ஹிந்து சந்நியாசி. அப்படி யிருக்க முஸல்மான் ஒருவர் வீட்டில் நீங்கள் தங்கியிருப்பது எப்படி?''

சுவாமிஜிக்குச் சீற்றம் வந்து விட்டது.

''ஐயா நீங்கள் என்ன நினைத்துக் கொண்டு இப்படிக் கேட் கிறீர்கள்? நான் ஒரு துறவி, தெரியுமல்லவா? உங்களுடைய சமூக சம்பிரதாயங்களுக்கெல்லாம் நான் அப்பாற்பட்டவன். நான் தோட்டியுடனும் கூடச் சேர்ந்தமர்ந்து உண்பேன். இதற்காக நான் ஆண்டவனிடம் அஞ்சவில்லை; ஏனெனில் அவனே இதனை அநுமதித்திருக்கிறான். நான் சாஸ்திரங்களிடம் அஞ்சவில்லை; ஏனெனில் அவையும் இதனை அநுமதித்துள்ளன. ஆனால் நான் அஞ்சுவது யாரிடம் தெரியுமா? உங்களிடமும், உங்கள் சமூகத் திடமும்தான் நான் அஞ்சுகிறேன். உங்களுக்கு ஆண்டவனைப் பற்றியும், சாஸ்திரங்களைப் பற்றியும் எதுவுமே தெரியாது. நான் எங்கும் பிரம்மத்தைக் காண்கிறேன். தாழ்ந்தவற்றுள் தாழ்ந்த உயிரினங்களும் பிரம்மத்தின் தோற்றம் என்பதாகக் காண்கிறேன். எனக்கு உயர்ந்தது, தாழ்ந்தது என்று எதுவுமே கிடையாது.''

இப்படிப் பேசி வந்த சுவாமிஜி உன்னத ஹிமாசலத்தின் மீதமர்ந்து கொண்டிருக்கும் பிச்சைக்காரப் பரமனை நினைத்தார்.

''சிவனே, சிவனே'' என்று அந்த நினைவில் அவர் ஆர்ப் பரித்தபோது அவரைச் சுற்றிலும் தெய்வீகம் தீப்பிழம்பாக ஜொலித்தது.

ஜகன் மோஹன்லால் வாயடைத்துப் போனார். தமது மஹா ராஜா இந்த சுவாமிஜியைக் காணவேணும் என்ற எண்ணம் அவருக்கு எழுந்தது.

''சுவாமிஜி, தாங்கள் என்னோடு அரண்மனைக்கு வாருங்கள்! தங்களை எங்கள் அரசர் அவசியம் காணவேண்டும்'' என்றார் அவர்.

ஒரு நாள் நின்று மறு நாள் வருவதாக சுவாமிஜி வாக்களித் தார்.

அரண்மனைக்குத் திரும்பிய அந்தரங்க காரியதரிசி மன்ன ரிடம் விஷயத்தைக் கூறினார். அந்தக் கணமே கேத்ரி மன்னரின் உள்ளத்தில் ஏதோ ஒரு பாந்தவ்யம் தோன்றிவிட்டது போலும்! ''நானே சென்று அவரைத் தரிசிக்கிறேன்'' என்றார் அவர்.

Koviloor Digital Library

கேத்ரி மஹாராஜா தம்மைக் காணவருவதாக அறிந்த சுவாமிஜி தாமே அரண்மனைக்குக் கிளம்பி விட்டார். மஹாராஜா சகல மரியாதைகளுடன் அவரை வரவேற்ருர்.

அறிமுகப் படலமும், வழக்கமான குசலப் பிரச்னமும் ஆன பின், ''சுவாமிஜி, வாழ்க்கை என்பது என்ன?'' என்று வினவினுர் மன்னர்.

''தன்னை அழுத்திவைக்க முயலும் சூழ்நிலைகளின் கீழுள்ள ஒரு ஜீவன் தன்னை விளங்கிக் கொள்வதும், விரித்துக் கொள்வதுமே வாழ்க்கை'' என்ருர் சுவாமிஜி. தமது பிரத்யேக வாழ்வில் சுவாமிஜி சமாளிக்க வேண்டியிருந்த பிரச்னைகளெல்லாமாகச் சேர்ந்து அவரது குரலில் ஓர் உருக்க உலகத்தையே புகுத்தியிருந்தது. அவ்வார்த்தைகள் மஹாராஜாவின் உள்ளத்தில் ஆழப்பதிந்தன.

''கல்வி என்பது என்ன?'' என்று கேட்டார் மஹாராஜா.

''சில கருத்துக்கள் நம் நரம்பு மண்டலத்திலேயே ஊறிப் போவதுதான் கல்வி'' என்று கூறிய சுவாமிஜி அதனை விளக்கலானுர். அதாவது ஒருவர் படித்த அல்லது கேட்ட தாத்பரியம் அவரது உள்ளுணர்ச்சியாகி, அவருடைய உணர்வின் உண்மையான, உயிர்நிலையான உரிமைப் பொருளாகும்போதுதான் அது கல்வியாகிறது என்று கூறினுர்.

பிறகு, உள்ளுணர்ச்சியாலேயே எல்லையற்ற பக்தியையும் ஞானத்தையும் பெற்ற பரமஹம்ஸ மஹாயோகியின் பவித்திரமான சரித்திரத்தை மஹாராஜாவுக்குக் கசிந்துருகிக் கூறினுர் சுவாமிஜி. பேர் ஆர்வத்துடன் அதனைச் செவிமடுத்த சம்ஸ்தானுதிபதிக்குத் தாமும் சத்தியத்தைத் தரிசிக்க வேண்டும் என்ற இன்பத் தவிப்பு உண்டாயிற்று.

சந்திரனின் கதையை சந்திரிகையில் உருகும் சந்திரகாந்தக் கல்லே கூறுமானுல் எப்படி இருக்கும்? அப்படித்தான் இருந்திருக்கும் பரமஹம்ஸரின் சரிதையை சுவாமிஜி கூறியபோதும். அதில் கட்டுண்டு போகாதவர்களும் இருக்க முடியுமா?

பல நாட்களுக்கு சுவாமிஜியின் உபதேசங்களைக் கேட்டு மகிழ்ந்தார் அரசர். பிறகு அவர் தமது தலை நகரமாகிய கேத்ரிக்குத் திரும்பவேண்டி நேரிட்டது. சுவாமிஜியை விட்டுப் பிரிய அவருக்கு மனம் வரவில்லை. அவரையும் கேத்ரிக்கு வருமாறு அழைத்தார். க்ஷண காலம் யோசித்த சுவாமிஜி இணக்கம் தெரிவித்தார்.

ஜயப்பூர்வரை ரயிலில் சென்று, அங்கிருந்து மீதமுள்ள தொண்ணூறு மைல்களை அரசருக்குரிய வாகனத்தில் கடந்தார்

Koviloor Digital Library

சுவாமிஜி. கேத்ரிக்குச் சென்ற சில தினங்களுக்குப்பின் மன்னருக்கு மந்திரோபதேசம் செய்தார் சுவாமிஜி. மஹாராஜா அவருக்கு அத்யந்த சிஷ்யரானுர். நாட்டினர் வணங்கும் அரசராயினும் பணிவே உருவாக சுவாமிஜிக்கு சுசுருஷை புரிந்து வந்தார் அவர். மன்னரின் பக்திக்கு ஒரே உதாரணம் போதும். சுவாமிஜி நித்திரை புரியும்போது மன்னர் அவரது பாதங்களைப் பக்தியுடன் பிடித்து விடுவாராம்.

பிறர் எதிரில் மஹாராஜா தமக்கு ஊழியம் புரிவதற்கு சுவாமிஜி அநுமதிக்க மாட்டார். ''உங்கள் பிரஜைகளுக்கு இதனுல் உங்களிடம் மதிப்புக் குறைந்து போகும்'' என்று கூறி விடுவார் சுவாமிஜி.

சுவாமிஜியும் கேத்ரி மஹாராஜாவும் அன்பின் சக்தியினுல் மிகவும் நெருக்கமானுர்கள். தன்னிடம் மண்டியிட்டு அண்டி நிற்கும் அரசரிடம் சுவாமிஜி ஆழ்ந்த விசுவாசம் கொண்டார். மங்காத பரஸ்பர நட்பாக அது இருந்தது என்பதற்கு சுவாமிஜி அமெரிக்காவிலிருந்து அரசருக்கெழுதிய அற்புதமான கடிதங்களே சான்று கூறும்.

பல வாரங்கள் சுவாமிஜி அரண்மனையில் தங்கியிருந்தார். ஆத்மிகத்தைப் பற்றி நிறையப் படித்தார்; படித்ததைவிட அதிகமாக போதித்தார்; போதித்ததற்கும் அதிகமாகத் தாமே வாழ்ந்து காட்டினுர். அரண்மனையில் இருந்தாலும் அதன் செழிப்புக்கள் தன்னைத் தொடாமல் ஆண்டவனின் பணியாளான ஆண்டியாகவே வாழ்ந்தாரவர்.

ராஜஸ்தானத்தின் தலை சிறந்த வியாகரண பண்டிதரான நாராயணதாஸ் என்பவரின் தொடர்பு சுவாமிஜிக்குக் கேத்ரியில் கிடைத்தது. ஜயப்பூரில் படிக்கத் தொடங்கிய பதஞ்சலியின் மஹா பாஷ்யத்தை இவரிடம் தொடர எண்ணினுர் சுவாமிஜி. முதல் நாள் போதித்ததிலேயே தம்மிடம் இத்தகைய அறிவு செறிந்த மாணுக்கர் வந்து சேர்ந்ததில் பூரிப்புக் கொண்டார் நாராயணதாஸ். ''உங்களைப் போன்ற ஒரு மாணவர் கிடைப்பது அசாத்தியமாகும்'' என்று கூறினுர். ஒரு நாள் அவர் சுவாமிஜியிடம் முதல் தினம் கற்பித்த நீண்ட பாடமொன்றில் ஒரு கேள்வி கேட்டார். சுவாமிஜியோ மடைதிறந்தாற்போல, பாடம் முழுவதையும் ஓர் அக்ஷரம் பிழையின்றி திருப்பி ஒப்பித்து விட்டார். அதோடு நில்லாமல் அவற்றின்மேல் தமது நூதனமான நுண்ணிய விளக்கங்களையும் விவரிக்கலானுர். சில நாள் சென்றபின் சுவாமிஜி ஏதேனும் சங்கை எழுப்பினுல் அதற்குப் பண்டிதர் விடைதர இயலாமல் போயிற்று. ஆனுல் சுவாமிஜியே

Koviloor Digital Library

சிறிது யோசனைக்குப் பிறகு சங்கைகளைத் தீர்த்துக்கொண்டு ஆசிரியருக்கும் புது விஷயங்களைப் புகட்டினார். குருவுக்கு மிஞ்சிவிட்டார் சிஷ்யர்.

''சுவாமிஜி, தங்களுக்குப் போதிக்க என்னிடம் இனியேதுமில்லை'' என்று உணர்ச்சியுடன் கூறினார் பண்டிதர். சுவாமிஜியும் அவருக்கு விநயபூர்வமாக நன்றி நவின்றார்.

தமது நாட்டில் நீதியின் காவலனாக கேத்ரி மன்னர் ஒரு நாள் ''சட்டமென்பது என்ன பாபாஜி மஹாராஜ்?'' என்று சுவாமிஜியிடம் கேட்டார்.

''சட்டமென்பது முழுக்க முழுக்க ஒருவரின் உள்ளேயே இருப்பதுதான். வெளியிலிருந்து செய்யப் படுவதல்ல அது. அறிவும் அநுபவமும் சேர்ந்து செய்யும் ஒரு நியதி அது. புலன்களின் நுகர்ச்சிகளை உள்ளமே பகுத்துச் சட்டங்களாக உருவாக்குகிறது'' என்று கூறிய சுவாமிஜி சாங்கியர்களின் பகுப்புக்களை விவரித்து அது எப்படி விஞ்ஞானத்துக்குப் பொருந்தியிருக்கிறது என்பதை விளக்கினார்.

இதைத் தொடர்ந்து, ''மஹாராஜா, நீங்கள் விஞ்ஞானத்தில் ஆக்கரிதியில் சிரத்தை காட்டவேண்டும்; உங்கள் சம்ஸ்தானத்தில் விஞ்ஞானப் பயிற்சிக்கும் ஆராய்ச்சிக்கும் வசதிகள் செய்துதரவேண்டும்'' என்று கூறினார்.

மஹாராஜாவுக்கு ஆரம்ப விஞ்ஞான நூல்கள் சிலவற்றைத் தருவித்துக் கொடுத்து, ஞானியாகிய தாமே அவருக்கு விஞ்ஞான ஆசிரியருமானார்.

ஆன்மீகச் செல்வம், கலைச் செல்வம், விஞ்ஞானச் செல்வம் யாவற்றையும் தமக்களித்த சுவாமிஜியிடம் வேறொரு செல்வமும் பிரார்த்தித்தார் கேத்ரி மன்னர். புத்திரச் செல்வமே அது. ராஜ வம்சம் நாசமாகலாமா? எனவே பிறப்பிலிருந்து மீள வழி சொல்பவரிடமே தமக்குப் பிள்ளை பிறக்க வரம் கேட்டார் மன்னர்.

வியவகார உலகிலிருந்து தங்கள் கண்களை மகான்கள் ஒருபோதும் மூடிக்கொள்ள மாட்டார்கள். உலகிலுள்ளவர்களெல்லாம் சந்நியாசிகளாகி இந்த ஜன்மத்தோடேயே முக்தி பெற்று, அடுத்த பரம்பரை என்பதாக ஒன்று இல்லாமல் உலகம் சூனியம் ஆகும் என்று அவர்கள் ஒருபோதும் நினைப்பதில்லை. எனவே உலகினரின் தர்மமான ஆசைகளையும் அவர்கள் மதிப்பார்கள். ''தர்மத்துக்கு விருத்தமில்லாத ஆசையாக நான் இருக்கிறேன்'' என்று பரந்தாமனே பகர்ந்திருக்கிறான். 'பிறப்பு ஏது, இறப்பு ஏது?' என்ற ஆசாரிய சங்கரரும் அந்தணன் ஒருவன் தன் மகனை

Koviloor Digital Library

இழந்து பரிதவித்தபோது அவனை உயிர்ப்பித்தருளியதாக வரலாறு உண்டு.

''எனக்குப் புத்திர சந்தானம் கிடைக்க ஆசி கூறுங்கள், சுவாமிஜி! நீங்கள் ஆசி கூறினால் நிச்சயமாக என் மனோரதம் பூர்த்தியாகும்'' என்று ஆழ்ந்த நம்பிக்கையுடன் மஹாராஜா பிரார்த்தித்தார். சுவாமிஜி ''அவ்வாறே ஆகும்'' என்று உள்ளன்போடு வாழ்த்தினார்.

* * *

சுவாமிஜி கேத்ரியிலிருந்தபோது அரண்மனையில் அரசருடன் மட்டும்தான் பொழுதைச் செலவிட்டார் என்று எண்ணிவிடாதீர்கள். ஏழையரும் ஏதலரும் என்றுமே அவர் எண்ணத்தினின்று நீங்கியதில்லை. வறிய பல பக்தர்களின் இல்லங்களுக்கும் அவர் சென்று வந்தார். பண்டித சங்கரலால் என்ற ஏழை பிராம்மணரின் வீட்டுக்குப் பலமுறை சென்று வந்தார். கேத்ரியில் உள்ள மக்கள் யாவருமே சுவாமிஜியிடம் வசியமாயினர். சுவாமிஜியோ தம்மிடம் ஆவேச பக்தி காட்டுபவர், அலக்ஷிய புத்தி காட்டுபவர் யாவரையும் ஒரு போலத்தான் நடத்தினார்.

மன்னரும் மக்களும் போற்ற வாழ்ந்து வந்த சுவாமிஜியை மீண்டும் சஞ்சார வாழ்க்கை அழைத்தது.

புறப்பட்டார் சுவாமிஜி.

கேத்ரி சம்ஸ்தானத்தில் அவர் பயணம் செய்தபோது நடைபெற்ற ஓர் உருக்கமான நிகழ்ச்சியை சுவாமிஜியே கூறக் கேளுங்கள்:

''ஓர் இடத்தில் என்னிடம் போதனை பெற ஏராளமானவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். சொன்னால் நம்பக்கூட முடியாது. மூன்று நாளைக்கு இரவும் பகலும் ஒரு க்ஷண ஓய்வு கூட இன்றி என்னைப் பேச வைத்தார்கள். நான் சாப்பிட்டேனா, இல்லையா என்று அவர்கள் விசாரித்ததில்லை. மூன்றும் நாள் இரவு. எல்லாரும் போயாகிவிட்டது. தாழ்ந்த குலத்தைச் சேர்ந்த ஏழை ஒருவன் என்னிடம் வந்தான். ''சுவாமிஜி, இந்த மூன்று நாட்களாக நீங்கள் உணவேயில்லாமல் காலம் தள்ளுவதைக் காண எனக்கு நோகிறது. உங்களுக்கு மிகவும் சோர்வாகவும் பசியாகவுமிருக்குமே'' என்றான். ஈசுவரனே என்னைச் சோதிப்பதற்காக இப்படி தாழ்குலத்தவனாக என்னிடம் வந்திருக்கிறான் என்று எனக்குத் தோன்றிற்று. ''நான் உண்ண ஏதேனும் கொடுப்பாயா?'' என்று அவனைக் கேட்டேன். ''சுவாமிஜி, உங்களுக்கு உணவு அளிக்க வேண்டுமென என் இதயம் ஏங்கத்தான் செய்கிறது. ஆனால்...ஆனால்...என் கையால் சுட்ட சப்

Koviloor Digital Library

பாத்திகளை நீங்கள் எப்படி உண்ணமுடியும்? நீங்கள் அநுமதித் திர்களாயின் மாவும், காய்களும், மற்றவைகளும் கொண்டு வருகிறேன். நீங்களே அவற்றைச் சமைத்துச் சாப்பிடலாம்'' என்றுன் அவன். அப்போது நான் சந்நியாச விதிப்படி அக்கினி காரியம் எதுவும் செய்யாதிருந்தேன். எனவே நான், ''நீ தயாரித்த சப்பாத்திகளையே எனக்குக் கொடு; பரவாயில்லை. நான் அவற்றை மகிழ்ச்சியுடன் உண்பேன்'' என்றேன். இதைக் கேட்ட அவன் பயத்தில் நடுங்கினுன். அவன் கேத்ரி மஹாராஜாவின் பிரஜைகளிலொருவன். செருப்புத் தைப்பவனுகிய அவன் சந்நியாசி ஒருவருக்குச் சப்பாத்தி அளித்தான் என்று மஹாராஜாவுக்குத் தெரிந்தால் அவர் தன்னைக் கடுமையாகத் தண்டித்து, ராஜ்யத்திலிருந்தே துரத்திவிடுவார் என்று அவன் பீதி கொண்டான். நான் அவனிடம் பயப்படத் தேவையில்லை என்றும், மஹாராஜா அவனைத் தண்டிக்க மாட்டாரென்றும் கூறினேன். அவன் என் வார்த்தையை நம்பவில்லை. எனினும் தனக்குத் தண்டனை கிட்டினுலும் பரவாயில்லை என்ற இதய பூர்வமான அன்புடன் அவன் எனக்குத் தான் சமைத்த உணவையே கொணர்ந்து கொடுத்தான். தேவராஜனுகிய இந்திரன் என் முன் தங்கக் கோப்பையில் அமிருதத்தை ஏந்திக் கொண்டிருந்தாலும்கூட அது இந்த உணவைவிட ருசித்திருக்குமா என்ற சந்தேகம் எனக்கு எழுந்தது. அன்பிலும் நன்றியிலும் நான் கண்ணீர் பெருக்கினேன். இழிய குடில்களில் இதுபோல ஆயிரக் கணக்கான விசால உள்ளத்தினர் வாழ்கிருர்கள். அவர்களை நாம் தாழ்ந்த ஜாதியினர் என்றும் திண்டாதவர் என்றும் மட்டம் தட்டுகிருேமே' என்றெண்ணினேன். மஹாராஜாவுடன் எனக்கு நெருங்கிய நட்பு ஏற்பட்டபின் நான் அந்த மனிதனின் உத்தமமான செயலை எடுத்துக் கூறினேன். சில நாட்களுக்குள் அவன் மஹாராஜாவின்முன் ஆஜர் படுத்தப்பட்டான். வார்த்தைகளில் சொல்ல முடியாத பயத்துடன், தனக்குப் பயங்கரமான தண்டனை விதிக்கப்பட விருக்கிறது என்று நினைத்து தலையிலிருந்து கால்வரை நடுங்கியவாறு அவன் வந்தான். ஆனுல் மஹாராஜாவோ அவனை மிகவும் புகழ்ந்து, இல்லாமை என்ற கொடுமை அவனுக்கில்லாத படி செய்தார்.''

Koviloor Digital Library

அத்தியாயம்—14

ஒரே ரயிலில் இரு சிம்மங்கள்

கேத்ரி சம்ஸ்தானத்திலிருந்து அகமதாபாத் வந்துசேர்ந்தார் சுவாமிஜி. அகமதாபாத்தில் பல நாட்கள் விடு விடாகப் பிக்ஷை பெற்றே உணவு பெற்று வந்தார் சுவாமிஜி. கேத்ரியில் ராஜ க்ருஹத்தில் ஆசார உபசாரங்கள் பெற்றவர் அதை விட்டுப் பிச்சை புகுந்து விட்டார்.

அகமதாபாத் மாவட்டத்தின் ஸப்ஜட்ஜ்களில் ஒருவரான லால் சங்கர் உமியா சங்கர் என்பவர் சுவாமிஜியைக் கண்டு அவரிடம் ஈடுபட்டார். தம் விட்டிலேயே அவரை விருந்தாளி யாகப் பெற்று மகிழ்ந்தார்.

முன்னுட்களில் அகமதாபாத் குஜராத் சுல்தான்களின் தலை நகரமாக இருந்திருக்கிறது. அதன் அடையாளங்களாக விளங் கும் கலைச்செல்வங்களை சுவாமிஜி பார்வையிட்டு மகிழ்ந்தார். அகமதாபாத்தில் அழகிய ஜைன ஆலயங்கள் பல உள்ளன. அங்கு ஜைன பண்டிதர்கள் பலருண்டு. அவர்களிடம் பழகி சுவாமிஜி ஜைன சமயத்தைக் குறித்த தமது அறிவை விருத்தி செய்து கொண்டார்.

* * *

பத்வான் வழியாக லிம்ப்டி சம்ஸ்தானத்துக்குச் சென்று சேர்ந்தார் சுவாமிஜி. லிம்ப்டி சம்ஸ்தானம் பருத்தி உற்பத் திக்குப் பேர்போனது. அங்கு பிக்ஷை எடுத்தும், தெருத்திண்ணை யில் படுத்தும் சில நாட்களைக் கழித்தார் சுவாமிஜி. பிறகு தனிப்பட்ட ஓரிடத்தில் பல சாதுக்கள் வசிப்பதாக அறிந்து அவர்களிடம் சென்றுர். அவர்கள் மகிழ்ச்சியுடன் அவருக்கு ஓர் அறையை ஒதுக்கிவிட்டார்கள்.

தமது அறையில் இருந்த சுவாமிஜி அந்தக் கட்டடத் துக்குள்ளிருந்து வந்த ஒலிகளைக் கேட்டு எல்லையற்ற பீபத்ஸம் கொண்டார். அங்கு வசிக்கும் 'சாதுக்கள்' சமயம் என்ற பெயரில் மிகவும் விரஸமான முறையில் 'வழிபாடு' நடத்து வதையே அந்த ஒலிகள் தெரிவித்தன. ஆண்களோடு பெண் களுமாகச் சேர்ந்து உச்சாரணம் செய்த 'மந்திரங்கள்' சுவாமி ஜியின் குலையைப் பதற வைத்தன. அவருக்கு அங்கு இருப்புக் கொள்ளவில்லை. வெளியே ஓடுவதற்காக, சாத்தியிருந்த கதவைத் திறக்கச் சென்றுர். ஆகா, கதவைத் திறக்க முடியவில்லை. வெளியிலே பூட்டப்பட்டிருந்தது அது. அவர் கதவை உலுக்கிய

Koviloor Digital Library

பின் வெளியே அவருக்காகவே காவலாகப் போட்டிருந்த கிங்கரன் கதவைத் திறந்து அவரைத் தங்கள் குரு பூசாரியிடம் அழைத்துச் சென்றான்.

பூசாரி சுவாமிஜியையே சிறிது நேரம் உறுத்துப் பார்த்தார்.

''காந்த சக்தி வாய்ந்த ஒரு சாது நீர். பல ஆண்டுகள் பிரம்மசரியம் காத்ததாலேயே உம்மிடம் இவ்வளவு காந்தி கூடி யிருக்க வேண்டும். உம்முடைய பிரம்மசரியத்தை நாங்கள் தகர்க்கப் போகிறோம். அதனால் அற்புதமான ஒரு சடங்கை நாங்கள் நடத்தி சித்திகள் பெறப் போகிறோம்'' என்று கூறினார் அந்த பூசாரி.

பயமறியாத சுவாமிஜிக்கும் பீதி தோன்றியது. அப்போது மறுப்பதோ, தம் பீதியை வெளிக் காட்டுவதோ சரியாயிராது என்பதால் பேசாமல் தமதறைக்குத் திரும்பினார் சுவாமிஜி.

ரகசியமாகச் சிறுவன் ஒருவனிடம் தம் நிலையைத் தெரிவித்து ஒரு கடிதம் எழுதிக் கொடுத்து அதனை லிம்ப்டி அரசரிடம் சேர்ப்பிக்கச் செய்தார். அரசர் உடனே தமது காவலர்களை சுவாமிஜியிடம் அனுப்பிவிட்டார். அப்புறம் கேட்பானேன்? சுவாமிஜி அரண்மனை விருந்தாளியாகிவிட்டார்.

லிம்ப்டியிலுள்ள புல பண்டிதர்களுடன் சுவாமிஜி சம்ஸ்கிருதத்திலேயே விவாதங்கள் நடத்தினார். இந்த விவாதங்களி லொன்றினை புரியிலுள்ள கோவர்த்தன மடத்து அதிபதிகளாக அப்போதிருந்த ஸ்ரீசங்கராசரிய சுவாமிகளே கவனிக்க நேர்ந்தது. அவர் சுவாமிஜியின் கல்வியையும், பரந்த மனப்பான்மையையும் கண்டு தமது வியப்பைத் தெரிவித்தார்.

லிம்ப்டியிலிருந்து புறப்பட்டார் சுவாமிஜி. அவர் எங்கு சென்றாலும் எச்சரிக்கையாக யிருக்க வேண்டும்; சாது என்ற பெயரில் உலவும் பொல்லாதவர்களிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்றெல்லாம் மொழிந்து வழிகூறிய லிம்ப்டி மன்னர், பலருக்கு சுவாமிஜியைப் பற்றிய அறிமுகக் கடிதங்களும் கொடுத்தார்.

* * *

சுவாமிஜி பவநகர், ஸிஹோர் வழியாக ஜுனகாத் சம்ஸ்தானத்தை அடைந்தார். முஸ்லீம் ஆட்சியிலிருந்த அந்த ராஜ்யத்தில் பாபு ஹரிதாஸ் விஹாரிதாஸ் என்ற ஹிந்து திவானாக இருந்தார். அவருடைய விருந்தினராகத் தங்கினார் சுவாமிஜி. திவானும் மற்ற ராஜ உத்தியோகஸ்தர்களும் மாலையிலிருந்து நள்ளிரவு வரை நேரம் போவது தெரியாமல் சுவாமிஜியுடன் உரையாடி மகிழ்ந்தார்கள். சுவாமிஜி உலக முழுவதும் ஹிந்து

Koviloor Digital Library

மதத்தின் பெருமையைப் பரப்பவேண்டும் என்று ஏதோ ஒரு உந்தலின் பேரில் கூறுவார். அதற்காக வென்றே பிறந்தவ ரல்லவா அவர் ?

சுவாமிஜி பல விஷயங்களைப் பற்றி அலசினார். முக்கியமாக இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையையும் உபதேசங்களையும் பற்றிப் பேசினார். அதனால் கேட்பவர்கள் விதேசாபிமானம் பெற்றுவிடு வார்களோ என்பதால் பாரதத்தின் பெருமைகளை விளக்கினார். மேற்கத்திய சமய உணர்வுகள் உண்டாவதற்கு அவை பாரதத் துடன் கொண்டிருந்த தொடர்பே காரணம் என்று கூறினார். மத்திய ஆசியாவிலும், மேற்காசியாவிலும் பல நாட்டினரும் கூறியதையும், தத்துவங்களைப் பரிவர்த்தனை செய்து கொண்டதை யும் விளக்கி, எனவே எல்லா மதங்களிலும் பாரத தர்மங்கள் ஊறியிருப்பதாக விண்டு கூறினார். உலக முழுவதிலும் ஆத்மீக உணர்வு பரவியதற்குப் பாரதப் பெருமக்களின் அநுபவமே கார ணம் என்றார். அதிலிருந்து, பாரதத்தின் அநுபவங்களுக்கெல் லாம் சின்னமாயிருந்த தமது ஒப்பற்ற குருநாதரின் நினைவில் நெகிழ்ந்து, அவரது புனித வரலாற்றினை எடுத்துரைத்தார். பரமஹம்ஸ தேவர் மொழிந்த உபதேசங்களை அவரது வார்த்தை களிலேயே கூறினார். இத்தனை எளிய முறையில் மிகவும் உச்சியி லுள்ள தத்துவங்களைப் புரியவைத்த ஒரு மகாத்மா சமீபகாலத்தில் வாழ்ந்திருப்பதை எண்ணி அங்கு கூடியிருந்தவர்கள் வியந்தனர். ஸ்ரீராமகிருஷ்ணரின் பிரபாவத்தை உலகமெல்லாம் அறியவேண் டும் என்று சுவாமிஜியும் ஆர்வம் கொண்டார்.

ஜுனகாத்துக்கு அருகேயுள்ள கிர்நார் மலை ஹிந்துக்கள், ஜைனர்கள், பௌத்தர்கள் மூவருக்குமே புனித ஸ்தலமாகும். அங்கு முஸ்லிம்களின் மசூதிகளும், கல்லறைகளும் சமீபத்தில் சேர்ந்திருந்தன. சரித்திர முக்கியத்துவமும் வாய்ந்தது அவ்வூர். ஜுனகாத் முழுவதிலும் இவ்வாறு பல சமயங்களுடன் சம்பந்த முள்ள சரித்திரப் புகழ்வாய்ந்த இடங்களிருந்தன. இவைகளுக் கெல்லாம் சென்றார் சுவாமிஜி. கப்ரா கோடியா என்ற இடத்தி லுள்ள குகை மண்டபங்கள் பல வேறு வேறு காலத்தில் வேறு வேறு சம்பிரதாயத்தைச் சேர்ந்த சாதுக்கள் வசித்தவையாகும். அவற்றையும் ஆர்வத்துடன் பார்வையிட்டார் சுவாமிஜி.

கிர்நார் மலையில் சஞ்சரித்தபோது யோக வாழ்வு சுவாமி ஜியை அறைகூவி அழைத்தது. எனவே அங்கு ஜன நடமாட்ட மற்ற பகுதியிலுள்ள ஒரு குகையில் சில நாட்கள் சாதனைபுரிந்து வந்தார் சுவாமிஜி. இதையெல்லாம் எண்ணும்போதே நமக்கு விந்தையாக இருக்கிறது. க்ஷணகாலம் தியானம் புரியக்கூட இய

Koviloor Digital Library

லாதவர்கள் நாம். தியானம் புரிவது முடியாமலிருப்பது ஒரு பக்கம் இருக்கட்டும். பகவத் ஸ்மரணையில் பொழுதைக் கழிக்க வேண்டும் — செய்தித் தாள்களைப் படிப்பதில் பத்தில் ஒரு பங்கு நேரத்தையேனும் பகவானுக்கு ஒதுக்க வேண்டும் — என்ற எண்ணமே யல்லவா நமக்கு எழுவதில்லை? ஆனால் மற்ற எல்லாவற்றையும் புறக்கணித்து மலையிலும், வனத்திலும் ஈசுவரபரமாகச் சிந்தனையைச் செலுத்த வேண்டும் என்று துடித்த சிலரும் இருந்திருக்கிறார்கள். அதிலும் சுவாமிஜியைப் போலக் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கி அதன்மூலம் பொருட் செல்வத்தை வாரிக் குவித்திருக்கக் கூடியவர்கள் அதனைத் துச்சமாகத் தள்ளி தியானத்தில் நின்றார்கள் எனில் அதில் அவர்கள் எவ்வளவு இன்பமும், திருப்தியும் பெற்றிருக்க வேண்டும்? சுவாமிஜி போன்ற மகான்களின் சரித்திரத்தை நாம் படிப்பதற்குத் துளியாவது பிரதி செய்ய வேண்டுமெனில் இந்த அக வாழ்க்கைக்காக பிரதி தினமும் ஐந்து பத்து நிமிஷங்களாவது செலவிட வேண்டும். ஆண்டவனைப் பற்றிய எண்ணங்களில் ஒரு சிறிதேனும் நம்காலத்தை அர்ப்பணிக்கவேண்டும்.

* * *

கிர்நார் குகையில் செய்த தவத்தால் சுவாமிஜியின் மதியில் புதியதொரு மெருகேறியது. சுவாமிஜி திரும்பியபின் அவரது பழைய சீடர்கள் இந்தப் புது மெருகை ஸ்வச்சமாகக் கண்டார்கள்.

சுவாமிஜியைப் பாராட்டியவர்கள் மட்டும் இல்லை, கண்டித்தவர்களும் இருந்தார்கள். சுவாமிஜி முக்கியமாக ஆளான கண்டனங்களுள் ஒன்று, அவர் அரசர்கள், திவான்கள், மந்திரிகள், சர்தார்கள் இப்படிப்பட்டவர்களுடன் தங்குகிறார் என்பது தான். இதற்கு சுவாமிஜி மிகவும் பொருத்தமாகவும், உருக்கமாகவும் விளக்கம் தந்தார். பொதுமக்களிடத்தில், அநாதைகளிடத்தில், தரித்திரர்களிடத்தில், அறியாமையில் மூழ்கிக்கிடப்பவர்களிடத்தில் தமக்குள்ளஅளவற்ற அன்பு காரணமாகவேதான் தாம் சமூகத்தின் மேல் நிலைகளில் உள்ளோரிடத்தில் நெருங்கிப் பழகுவதாக அவர் கூறினார். பொருளாதாரத்திலும், சமூக அந்தஸ்திலும் தாழ்ந்துகிடப்பவர்களிடம் தாம் உபதேசிப்பதால் அவர்கள் பயன் அடைவார்களா? ஸ்ரீராமகிருஷ்ணரே ''வயிறு காய்ந்தவர்களுக்கு அல்ல மதம்'' என்று கூறியிருக்கிறாரே! உடுக்க உடையும், உண்ண உணவும் இல்லாமல் அவதியுறும் கருணை உள்ளம் படைத்த அவரால் தான் பட்டினி கிடப்போரின் பசியைத் தீர்க்காமல் பரதத்துவம் பற்றிப் பேச இயலுமா? பொது மக்கள் பொருளாதாரத்தில் மேம்பட வேண்டும்; கல்வி

Koviloor Digital Library

யில் உயர வேண்டும். அதன் பின்தான் அறநெறி உபதேசமும், அறிவாராய்ச்சித் தத்துவமும், அநுபவ வேதாந்தமும் அவர்களுக்குப் பயன்படும். இவ்வாறு பொது மக்களின் சமூக அந்தஸ்து உயர்வதற்காகவே தாம் மன்னர்களுடன் பழகி வருவதாக சுவாமிஜி கூறினர். தங்களுடைய பிரஜைகளுக்குப் பொருளாதார வசதிகளும், கல்வியும் அளிக்குமாறு மன்னர்களைத் தூண்டவே அவர்களுடைய தொடர்பை ஸ்வாமிஜி பெற்று வந்தார். சீர்திருத்தச் சட்டங்கள் செய்யக் கூடியவர்களும், தான தர்ம நிறுவனங்களையும் கல்விசாலைகளையும் ஏற்படுத்தக் கூடியவர்களும், ராஜ்யத் தலைவர்கள் தாமே! சுவாமிஜியின் காலத்தில் தேசத்தில் ஐந்தில் ஒரு பங்கு சமஸ்தானங்களாகத்தான் இருந்தன. இந்த சம்ஸ்தானாதிபதிகள் சுவாமிஜிக்கு மதிப்புக் கொடுப்பவர்களாகவும் இருந்தார்கள். ஆங்கிலேய ஆட்சியாளருக்குக் குருவாகயிருந்து புத்தி புகட்ட இயலாத சுவாமிஜி இந்த சம்ஸ்தானாதிபதிகளையேனும் தாம் நல்வழிப்படுத்தி அதனால் பொதுமக்களுக்கு க்ஷேமம் உண்டாக்க எண்ணினர். ''அதிகாரம் உள்ளவர்களையும், செல்வந்தர்களையும், நிர்வாகப் பொறுப்பு பெற்றவர்களையும் என்னுடைய நோக்கத்துக்கு நான் வென்றுகொள்ள முடியுமானல் என் பணி அதிவிரைவிலேயே சாபல்யமாகும். ஒரே ஒரு மஹாராஜாவை என் வழிப் படுத்துவதால் நான் பல்லாயிரம் மக்களுக்கு மறைமுகமாக உதவிபுரிய முடியும்'' என்று சுவாமிஜி ஆணித்தரமாகக் கூறியதுண்டு.

அதோடு 'யதா ராஜா ததா பிரஜா' — அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி — என்ற பழமொழியும் உள்ளது. ஆட்சியிலுள்ளவர்கள் தர்மத்திலும் ஆன்மிகத்திலும் நம்பிக்கை கொண்டிருந்தால்தான் மக்களும் அவ்வாறு நம்பிக்கை கொண்டு ஒழுகுவார்கள். எனவே எக்காரணம் பற்றிப் பார்த்தாலும் சுவாமிஜி மன்னர்களிடம் நெருக்கம் கொண்டது பொதுமக்களின் உயர்வை உத்தேசித்தே என்பது தெளிவாகும். மக்கள் பணியையும், தெய்வப் பணியையும் ஒன்முக இணைக்கும் மடங்களை ஸ்தாபித்த சான்றோரல்லவா சுவாமிகள்?

அவரைப் பொறுத்த மட்டில் கோமகன் இல்லமும் கூரைக் குடிசையும் ஒன்றுதான். ராஜக்ருஹத்தின் உத்யானவனத்தில் இந்த நிமிஷம் பணியாட்கள் புடைசூழ உலவிக் கொண்டிருக்கும் அவர் மறு நிமிஷமே யாரோ ஒருவராகக் குறுகல் சந்து ஒன்றின் புழுதியில் முழுகிக்கொண்டு நடந்து செல்வார்.

ஜுனகாத்திலிருந்து பூஜ் என்ற சுதேச சம்ஸ்தானத்துக்குச் சென்ற சுவாமிஜி அங்குள்ள திவானுடன் நீண்டநேரம் உரை

Koviloor Digital Library

யாடினுர். சம்ஸ்தானத்தின் தொழிலமைப்பு, விவசாயம், கல்வி நிலை இவை குறித்துப் பல அறிவுரைகள் வழங்கினுர். திவான் சுவாமிஜியைச் கட்ச் மஹாராஜாவுக்கு அறிமுகம் செய்து வைத்தார். கட்ச் மஹாராஜாவும் சுவாமிஜியினுல் பெரிதும் கவரப்பட்டார்.

பல ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்து அங்குள்ள சாதுக்களிடமெல்லாம் சம்பாஷித்து ஞானத்தை வழங்கியும், பெற்றும் மகிழ்ந்த சுவாமிஜி மீண்டும் ஜுனகாத் வந்து சில நாட்கள் தங்கினுர். அங்கிருந்து புராதனப் பெருமை பொருந்திய வேராவல் என்ற இடத்துக்குச் சென்ருர். பின்னர் பிரபாஸ க்ஷேத்திரம் எனப்படும் ஸோமநாத் பட்டினத்தை அடைந்தார்.

களங்கமுள்ள சந்திரனைத் தலையில் தரித்த ஸோமநாதன் களங்கமுள்ள மனத்தினர் தனது திவ்வியமான ஆலயத்துக்கு மும்முறை களங்கம் செய்ததையும் மன்னித்திருந்தான். சுவாமிஜி சென்றபோது மாபெரும் ஸோமநாத மந்திரத்தின் இடிபாடுகள் தாம் இருந்தன.* அவற்றைக் கண்டபோது சுவாமிஜியின் உள்ளமுமே இடிந்தது. ஒருகாலத்தில் பத்தாயிரம் கிராமங்களைச் சொத்தாகப் பெற்றிருந்த அந்த ஆலயம் இப்படி ஆனது ஏன்? அந்தக் கோயிலில் பாடிப் பணிவதற்கென்றே முன்னூறு இசைக் கலைஞர்கள் ஊதியம் பெற்று வந்தார்களாம். அதெல்லாம் கனவாய், பழங்கதையாய் போனது ஏன்? அந்த ஊரின் தூசிகூட விபூதிக்குச் சமமானது என்று ஹிந்துக்கள் நம்பியிருக்க, முஸ்லீம்கள் அங்கு பிரவேசித்துக் கோயிலைப் பாழாக்கியது எப்படி?

அலைமோதும் கடல் அருகே அலைமோதும் உள்ளத்தினராக சுவாமிஜி அலைவார். அந்த அலைகடலின் சோக ஒலியில் அவரது கேள்விக்கு விடை கிடைக்கும். நம் மக்களின் ஒற்றுமைக் குறைவினுல்தான் ஸோமநாதபுரத்துக்கு — ஏன் நாடு முழுவதற்குமே — உத்பாதம் ஏற்பட்டது என்று சமுத்திர ஒலி அவருக்குக் கூறும். இந்த ஒற்றுமையின்மை இன்று நேற்று ஏற்பட்டதா, என்ன? ஆயிர மாயிரம் ஆண்டுகளுக்கு முன் இதே பிரபாஸ க்ஷேத்திரத்தில், சுவாமிஜி உலவும் இதே கடற்கரையில் யாதவர்கள் தங்களுக்குள் ஒற்றுமைகுன்றி தாங்களே ஒருவரை யொருவர் மாய்த்துக் கொண்டதாக அல்லவா மகாபாரதம் கூறுகிறது?

பாரத காலத்தை எண்ணியவுடன் பகவத்கிதை மொழிந்த பரமனின் நினைவு சுவாமிஜிக்கு ஏற்பட்டது. தன் மக்களெல்லாம்

* இந்தியா சுதந்திரம் பெற்றபின் ஸர்தார் வல்லபாய் படேல் அவர்களின் நன் முயற்சியால் ஸோமநாதர் ஆலயம் புதுப்பித்துக் கட்டப்பட்டிருக்கிறது.

Koviloor Digital Library

மாண்டதைக் கண்டபின் மாதவன் இங்குதான் மர நிழலில் அமர்ந்து யோக மார்க்கமாகத் தனது திரு உடலை உதிர்க்க எண்ணினுன். அப்போது தொலைதூரத்திலிருந்த ஒரு வேடன் குழைவு மயமான எம்பிரானின் திருமேனியை மானுக நினைத்து அம்பெய்தான். எத்தனையோ அற்புதங்களைச் செய்தருளிய பூர்ணுவதாரன் சாதாரண மானுடன் போலவே அம்பின் அடியில் தன் தேகத்தைத் துறந்தான். தன் மலருடலில் அம்பு பொத்தி உயிர்விட வேண்டியவனு அவன்? கர்மவினை பற்ருத தெய்வம் மனிதனுக வரும்போது தன்னை வருத்திக்கொள்வதற்கிணையாக மானுடர்கூட அல்லலுறுவதில்லையே!

இந்தூர் ராணி அகல்யா பாய் ஸோமநாதத்தில் கட்டியிருந்த புதுக்கோயிலுக்கு சுவாமிஜி சென்று தரிசனம் செய்தார். மூன்று தீர்த்தங்களின் புனித சங்கம ஸ்தானத்தில் ஸ்நானம் செய்தார். பிரபாஸ க்ஷேத்திரத்தில் மீண்டும் கட்ச் மன்னரைக் கண்டார் சுவாமிஜி. ''உங்களுடைய இத்தனை ஆற்றலையும் நீங்கள் எப்படிப் பயன் செய்யப் போகிறீர்களோ? அற்புத சாதனைகளைச் செய்து முடிக்கும் வரையில் உங்களால் நிம்மதி பெற முடியாது'' என்று கட்ச் மஹாராஜா சுவாமிஜியிடம் கூறினுர். நம்முடைய முன்னேர் செய்த நல்வினைப் பயனுக அத்தகைய அற்புதங்களைப் பின்னர் சுவாமிஜி சாதித்து விட்டார்.

* * *

மீளவும் ஜுனகாத் வந்தார் சுவாமிஜி.

ஜுனகாத்திலிருந்து கத்தியவாரிலும் கட்சிலும் பல இடங்களுக்குச் சென்று வந்தார்.

கட்ச்சில் பாதசாரியாகக் கால் சோர நடந்துகொண்டிருந்தார் சுவாமிஜி. கதிரவன் கருணையின்றி அனல் மழையில் அவரைத் தீய்த்துக் கொண்டிருந்தான். சுவாமிஜியின் தொண்டை ஒரேயடியாக வறண்டு விட்டது. தவித்த வாய்க்குத் தண்ணீர் கேட்க ஒரு வீடு இருக்கவேண்டுமே! அவரது கால்கள் தம்மையே சுமந்துகொள்ள முடியாத தளர்ச்சியில் அவரை மிகவும் சிரமத்துடன் தாங்கிச் சென்று கொண்டிருந்தன. நாவு ஒட்டிக் கொள்ளும் தாகத்துடன் சுவாமிஜி சூனியப் பொட்டலில், கடும் வெய்யிலில் சென்று கொண்டேயிருந்தார். கடைசியில் அவரது கண்களுக்கு இனிக்க இனிக்க ஒரு காட்சி தெரிந்தது. வரவேற்பு கூறும் குளிர் பூந்தடாகங்கள் அவரது திருஷ்டியில் தெரிந்தன. உற்சாகத்துடன் அவற்றை நோக்கி நடந்தார் சுவாமிஜி. தளர்வுற்ற கால்களுக்குத் தெம்பூட்டிக் கொண்டு நடந்தார். இதென்ன ஆச்சரியம்! அவர் செல்லச் செல்ல அந்தத் தடாகங்களும்

Koviloor Digital Library

அவரிடமிருந்து விலகிச் சென்று கொண்டேயிருந்தன! 'ஆகா, வெறும் கானல் நீரைக்கண்டா ஏமாறிப் போனேம்?' என்று சாம்பிப்போய் மணலில் அமர்ந்து விட்டார் சுவாமிஜி. 'இந்தப் பேய்த் தேர் மட்டும்தானு மாயமானது! இந்த உலகமே — இதில் காணும் சகல சுக துக்கங்களுமே — மாயைதானே?' என்று சிந்தித்தார் சுவாமிஜி. அந்த மாய உலகிலுள்ள நரேந்திர நாதரின் தாகமும் மாயைதானே என்று எண்ணி மேலே நடக்கலானுர். அப்போதும் அவர் கண்களுக்குப் பேய்த் தேர் தெரிந்து கொண்டேதானிருந்தது. ஆனுல் அவர் அதைப் பொருட்படுத்தவில்லை. ஞானிக்கும் மாய உலகம் கண்ணுக்குத் தெரியும். எனினும் அது மாயை என்ற ஞானத்தால் அதில் மயங்காமலிருப்பான் அவன். மேல் நாடுகளில் மாயைபற்றி உபந்நியாசம் செய்யும் போது மாயையைக் கானல் நீருக்கு ஒப்பிடும்போது இந்தச் சம்பவத்தை சுவாமிஜி கூறியிருக்கிறுர்.

போர்பந்தர் சம்ஸ்தானத்துக்குச் சென்றுர் சுவாமிஜி. (காந்தியடிகள் பிறந்த அதே ஊர்தான்.) போர்பந்தரில் ஸுதாமா வாகிய குசேலர் வாழ்ந்து வந்தார் என்பதால் அதற்கு ஸுதாமா புரி என்றும் ஒரு பெயருண்டு. பண்டித சங்கர பாண்டுரங்கர் என்ற பேர் அறிஞர் அங்கு திவானுக இருந்தார். அரசருக்கு வயது வராததால் அவரே நிர்வாகத் தலைவராக இருந்தார். சுவாமிஜி சென்றபோது அவர் வேதங்களை மொழிபெயர்த்துக் கொண்டிருந்தார். சுவாமிஜியைத் தமது விருந்தினராக உபசரித்த திவான் அவரது வித்யைச் சிறப்பை நன்குணர்ந்தபடியால், வேதத்தின் சிக்கலான பகுதிகளில் சுவாமிஜியின் விளக்கத்தைக் கோருவார். சுவாமிஜியும் அதிலாகவமாகச் சிக்கலை அவிழ்த்துக் கொடுப்பார். வேதத்தைப் பரப்பும் பணிதான் சுவாமிஜிக்கு மிகவும் உவந்த ஒன்றுயிற்றே! எனவே வள்ளிசாக பதினேறு மாதங்கள் போர்பந்தரிலேயே தங்கி சங்கர பாண்டுரங்கரின் மொழிபெயர்ப்புக்குப் பெரும் சகாயம் புரிந்தார். வேத அநுவாதத்தோடு பதஞ்சலியின் மஹாபாஷ்யத்தையும் படித்துக் கொண்டிருந்தார் சுவாமிஜி. ஜயப்பூரில் தொடங்கி, கேத்ரியில் தொடர்ந்த மாஹாபாஷ்யப் படிப்பு இப்போதுதான் முடிவடைந்தது.

இதன் பின்னர் திவான் பாண்டுரங்கரின் யோசனைப்படி பிரெஞ்சு மொழி கற்கலானுர் சுவாமிஜி. ''இது உங்களுக்கு உதவியாயிருக்கும் சுவாமிஜி'' என்று அவர் கூறினுர். அவர் வாயில் சர்க்கரை போடவேண்டியதுதான் என்று இந்தச் சரிதையில் பின்னுல் ஓரிடத்தில் எண்ணுவோம்.

Koviloor Digital Library

சுவாமிஜியின் மகோந்நதமான எதிர்காலம் உருவாக போர்பந்தர் திவானும் ஒரு விதத்தில் காரணமாயிருந்தார் எனலாம். வேதாந்தத்தின் பெருமையை மேல் நாடுகளிலெல்லாம் பரப்ப வேண்டும் என்ற கட்டுக்கடங்காத ஆசை சுவாமிஜிக்கு நீண்ட காலமாகவே உண்டு. அந்தப் பணியைத் தாமே செய்யவேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு இருப்பினும் தம்மால் முடிகிற காரியமா அது என்ற மலைப்பும் அவருக்கு ஏற்படும். கடலைத் தன்னல் தாண்ட இயலுமா என்று மாருதி சந்தேகப்பட்டபோது ஜாம்பவான் அவருக்கு அவருடைய பெருமையையே எடுத்துச் சொல்லி ஊக்கினாற்போல, சுவாமிஜியையும் ஊக்கவேண்டியிருந்தது. அப்படி உற்சாக மளித்தவர்களில் சங்கரபாண்டுரங்கரும் ஒருவராவார்.

''சுவாமிஜி, தாங்கள் இந்தத் தேசத்தில் அதிகமாக எதுவும் செய்ய முடியாது என்றே எனக்குத் தோன்றுகிறது. இங்கே சிலரே உங்களைப் புரிந்து கொண்டு மகிழ்வார்கள். நீங்கள் மேல் நாடுகளுக்குச் செல்ல வேண்டும். அங்கே உள்ளவர்கள் உங்களையும் உங்கள் பெருமைகளையும் புரிந்து கொள்வார்கள். பாரதத்தின் ஸநாதன தர்மத்தைப் பிரசாரம் செய்வதன்மூலம் நீங்கள் மேல்நாட்டு நாகரிகங்களுக்குப் புது மெருகு ஊட்டமுடியும்'' என்று அந்தரங்க பூர்வமாகக் கூறினர் பாண்டுரங்கர். முன்பு காஜிப்பூரில் மாவட்ட நீதிபதி பென்னிங்டனும் சுவாமிஜியிடம் இதேபோலக் கூறியிருந்தார். பாரதத்தின் ஆத்மிகத்தால் மேல் நாடுகளின் உலகாயதத்தைப் போக்கடிப்பதோடு இன்னொரு காரணத்துக்காகவும் சுவாமிஜி மேல்நாடு செல்ல விரும்பினர். 'ஹிந்து மதம் எப்படிப்பட்டது என்பதைப் பாருங்கள். எங்களிடம் இவ்வளவு கற்றுக்கொள்ளவேண்டிய நீங்கள்தான் எங்கள் நாட்டிலேயே வந்து புகுந்துகொண்டு எங்கள் மதத்தைக் கேலி செய்கிறீர்கள். எங்கள் மக்களை உங்கள் மதத்துக்கு மாற்றுகிறீர்கள். இது அடுக்குமா?' என்று மேல்நாட்டாரிடம் கேட்க வேண்டுமென்றும் அவருக்கு ஒரு கொதிப்பு உண்டு.

அப்போது அமெரிக்காவில் சிகாகோவில் சர்வமத மகாசபையொன்று கூட்டுவதற்கு ஏற்பாடாகி வந்தது. இதனைப்பற்றி ஜுனகாத்திலோ போர்பந்தரிலோ தான் சுவாமிஜி அறிந்திருக்க வேண்டுமென்று அநுமானிக்கப் படுகிறது. ஒருகால் சங்கர பாண்டுரங்கரே இதுபற்றிக் கூறி சுவாமிஜி அதில் கலந்துகொண்டு ஹிந்து தர்மத்தின் பெருமையை உலக அரங்கில் இயம்ப வேண்டுமென யோசனை தெரிவித்திருக்கக் கூடும்.

எப்படியானுலும் இச்சமயத்தில் சுவாமிஜியின் உள்ளம் பூகர்ப்பமாகக் கொந்தளித்துக் கொண்டிருந்தது. 'உலகத்தையே

Koviloor Digital Library

ஒரு புரட்டுப் புரட்டி விடுவான் நரேன்' என்று பெருமிதத்துடன் கூறிய குருநாதனை அடிக்கடி எண்ணிக்கொண்டார் சுவாமிஜி. அப்படிப் புரட்டுவது எப்போது என்று தமது மனசையே புரட்டிக் கொண்டிருந்தார் சுவாமிஜி. இந்தியாவில் ஒரு பெரும் பகுதி யைப் பார்க்கப் பார்க்க அதனை மேம்படுத்தாமல் தாம் வாளா விருக்கிறோமே என்ற எண்ணம் அவரை வாளாய் அறுத்துக் கொண்டிருந்தது. அரசர் அவையில் அறிவுரை கூறும்போதும், அறிஞர் அவையில் ஆராய்ச்சி புரியும்போதும், இவை அல்ல தம் பணி — இன்னும் ஏதேதோ காரியங்களைத் தாம் எங்கெங்கோ செய்யவேண்டியிருக்கிறது என்றும் ஒன்று அவருள் உறுத்திக் கொண்டே யிருக்கும். அவை என்னென்ன காரியங்கள்? அவற்றைத் தாம் எங்கெங்கு சென்று செய்ய வேண்டும்?

இந்தியாவைப் பொறுத்த மட்டில் தமக்கு இன்னின்ன காரி யங்கள் உள்ளன; உலக அரங்கத்தில் தமக்கு இன்னின்ன காரி யங்கள் உள்ளன என்று அவருக்குக் காலக் கிரமத்தில் மெல்ல மெல்ல விளங்கலாயிற்று. விளங்கியவை மேலும் தெளிவு பெற் றன. 'இந்திய மக்களின் வறுமைத் துயரும், அறியாமையும் தீரத் தாம் தமது சக்தியைப் பயன் படுத்த வேண்டும்; மத உணர்வு குன்றி வருபவர்களுக்கு அந்த உணர்வை ஊட்ட வேண் டும்; மத உணர்வு குன்றுமலே ஹிந்து மதம் தவறானது என்று மட்டும் கருதி பிற சமயம் தழுவ முற்படுபவர்களைத் தடுத்து ஸநாதன தர்மத்தில் அவர்களை மீண்டும் சேர்க்க வேண்டும்.' என்றெல்லாம் குமுறியது அவர் உள்ளம். ஹிந்து மதத்தின் அழிவுக்கு முக்கியமான காரணம் ஸநாதனிகளின் வீம்புதான்; மதத்தின் சாரமான அம்சங்களை விட்டுவிட்டு இன்றைய நடை முறைக்கு ஒவ்வாத புறத்தோற்றங்களை வற்புறுத்தி மக்களை உயர்வு — தாழ்வு மனப்போக்குகளுக்கு ஆளாக்கி வருபவர்கள் அவர்களே என்று சுவாமிஜி கருதினர். அதே சமயத்தில் இந்த ஸநாதனிகளைவிடச் 'சீர்திருத்த வாதிகளை' மேலும் வெறுத்தார் அவர். மேல்நாட்டுப் பாணியில் நமது மதத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்ற அவர்களின் உத்தேசத்தை சுவாமிஜியால் ஒரு போதும் ஒப்புக்கொள்ள முடியவில்லை. இவ்விருசாராருக்கு மிடையே நாட்டின் புராதனமான ஆத்மிக உணர்வுகள் நசித்து வருவதைக் கண்டு வேதனையில் வெதும்பினர் சுவாமிஜி. நன் னடத்தையுள்ளவர்கள் தர்ம போதனை செய்யும் விசித்திரத்தைக் கண்டு வாடினர். தம்மில் எவ்வித ஆத்ம அநுபவமும் இல்லாத வர்கள் வேதாந்தங்களைக் கூறுவதால் அது ஒருகாலும் பலனளிக்காது என்று கண்டார். அநுபவம் பெற்றவர்களோ மக்களுக்குப் போதிக்

Koviloor Digital Library

காமல் ஏகாந்தமாக வாழத் தலைப்பட்டிருந்தார்கள். ஆத்ம சாதனைகளைப் புரிந்து, அவைகளை மக்களுக்கும் உபதேசிக்கக்கூடிய வர்கள்தான் நாட்டை நல்வழியில் திருப்ப முடியும் என்று சுவாமிஜி எண்ணினார். இதனாலேயேதான் போலும் சுவாமிஜி அவ்வப்போது குருபாயிக்களைக்கூடக் கடிந்து ஒதுக்கி ஏகாந்த வாழ்க்கையைத் தேடியதும். ஆத்ம சாக்ஷாத்காரத்துக்காக அவர் பாடுபடும்போது ஸ்தூலமாக வெளியுலகுக்கு சேவை செய்ய முடியாது என்பது உண்மைதான். எனினும் மக்களுக் காக அவர் செய்யும் பணி பலிக்கவேண்டுமானால் தாம் சொல் வதைத் தாமே உணர்ந்தவராக யிருக்கவேண்டும் என்பதையும் அவர் திடமாக நம்பினார். இதனால்தான் மக்கள் சங்கத்தையும், ஏகாந்த தியானத்தையும் மாறி மாறி கைக்கொண்டார் சுவாமிஜி.

இப்படி ஓர் ஒழுங்கான விகிதாசாரம் நாட்டு வாழ்க்கையி லேயே பல அம்சங்களில் ஏற்படவேண்டும் என விரும்பினார் சுவாமிஜி. மேல்நாட்டு நாகரிகம், விஞ்ஞானம், பொருளாதார உணர்வு, வேதாந்த தத்துவம், தர்ம சாஸ்திர ஆசாரமுறைகள், புராணங்களின் பக்தி இவையாவும் பாங்கான விகிதத்தில் கலந்து நாட்டை உயர்த்த வேண்டும் என்று எண்ணினார். ஆனால் அவர் நடைமுறையில் கண்டது என்ன? ஒரேயடியாக மேல்நாட்டு மோகம் கொண்டவர்கள், அல்லது ஒரே கட்டுப்பெட்டியாக இருந்தவர்கள்; ஒரேயடியாகத் தத்துவம் பேசியவர்கள் அல்லது வெறும் உணர்ச்சி மாத்திரமாகப் பிரார்த்தித்தவர்கள்; பொரு ளாதாரம்தான் வாழ்க்கை என்றவர்கள்; அல்லது மக்களின் இழி நிலைக்குச் சற்றும் இரங்காமல் வறட்டு வேதாந்தம் பேசியவர்கள் — இப்படியாகத் தனித்தனிச் சாராரிடம் தத்தளித்துக் கொண் டிருந்தது. இத்தனை கோஷ்டிகள் நாட்டில் இருக்கும்போது பேதக உணர்ச்சியும், பூசலும், சச்சரவும், வாதப் பிரதிவாதமும் கொஞ்சமாகவா இருக்கும்? பாமர மக்களின் அறியாமையையும் வறுமையையும் கண்டு சுவாமிஜி எவ்வளவு இதய நோவு கொண் டாரோ, அந்த அளவுக்கு 'மேன் மக்களின்' பிளவுகளைக் கண்டும் நோவுற்றார்.

தேசத்தைப் புனர் நிர்மாணிக்க வேண்டிய நாள் மிகமிக அருகில் வந்துவிட்டது என்று பரபரப்புக் கொண்டார் சுவாமிஜி. ஆனால் இந்தத் தேசத்தைத் திருத்துவதென்றால், அதற்கு முதலில் உலக அரங்கிலேயே பணி தொடங்கவேண்டும் என்றும் அவர் கண்டார். இப்படிச் சொல்வது சிறிது முரணாகத் தோன்றும். உள் நாட்டில் செய்யவேண்டிய பணிக்கு உலகப் பணி எப்படிப் பூர்வாங்கமாக இருக்க முடியும் என்று எண்ணலாம். அந்த

Koviloor Digital Library

உள்நாட்டினரில் செல்வாக்குள்ள எந்தப் பெரும் பகுதியினரை சுவாமிஜி திருத்த முயன்ருரோ அந்த மேநாட்டு மோகிகள், மேல்நாடு பாரத தர்மத்தின் பெருமையை உணர்ந்து போற்றினு லொழியத் தங்கள் கொள்கைகளைக் கைவிடமாட்டார்கள் எனத் தெளிவாக அறிந்தார் சுவாமிஜி. எனவே யாரை முன்மாதிரி யாகக்கொண்டு இந்தியர்கள் தங்கள் வாழ்முறையை மாற்றிக் கொள்ள நினைத்தார்களோ அந்த மேநாட்டினரிடமே வேதாந்த சமயத்தை விளக்கி அவர்கள் அதனை மதிக்குமாறு செய்ய வேண் டும் என்று அவர் ஆர்வம் கொண்டார். இதனுலேயே தாம் உலகுக்காக ஆற்றவேண்டிய பணியும் பூர்த்தியாகும் என்று கண் டார். அதாவது, இந்தியாவில் ஹிந்து சமயத்தை மீண்டும் நிலைநாட்டுவதுடன், விஞ்ஞான — பொருளாதாரத் துறைகளில் மட்டும் கவனம் செலுத்திவரும் மேல்நாடுகளுக்கு ஆன்மீக உணர்வை உசுப்ப வேண்டிய தமது பணியும் நிறைவுறும் என்று கருதினுர்.

ராஜஸ்தானத்திலும், பம்பாய் ராஜதானியிலும் தாம் கண்ட பல மன்னர்களிடமும், மந்திரிகளிடமும் இதையேதான் சுவாமிஜி கூறி வந்தார். 'வேத வேதாந்தங்களை நான் ஆராய ஆராய, ஆரிய ரிஷிகளின் உபதேசங்களுக்கு ஈடாக எதுவும் கிடையாது; ஹிந்து மதமே சமயங்களின் தாய்; இந்தியாவே நாகரீகத்தின் பிறப்பிடம் என்று நிச்சய புத்தி பெற்றுவருகிறேன். ஆனுல் இன்று இந்தியா அநாகரீகமும், மூட நம்பிக்கையுமே நிறைந்த நாடு என்று மேல்நாடுகள் நினைக்கின்றன. நம்மவர் களும் மேல்நாடுகளையே நாகரிகமானவை என்று எண்ணுகிருர் கள். இந்த நிலை மாறவேண்டுமானுல் முதலில் நமது ஸநாதன தர்மத்தின் செழிப்பையும் சிறப்பையும் மேல்நாடுகள் அறியுமாறு செய்யவேண்டும்' என்ற கருத்தையே சுவாமிஜி பலவிதங்களில் பலரிடம் தெரிவித்து வந்தார்.

* * *

சுவாமிஜியை விட்டுப் பிரிந்தபின் குருபாயிக்கள் தங்களுக் குள் பிரிந்து யாத்திரைகள் புரிந்து வந்தனர். இவர்களுள் திரி குணுதீதானந்தர் எங்கெங்கோ சஞ்சரித்து, குஜராத்தில் போர் பந்தருக்கே வந்து சேர்ந்திருந்தார். அங்கு வேறு சில சந்நியாசி களுடன் அவர் தங்கி யிருந்தார். அவர்கள் ஹிங்க்லாஜ் என்ற இடத்துக்கு யாத்திரை செல்ல விரும்பினுர்கள். ஆனுல் அது எளிதில் நடந்து சென்று அடையமுடியாத இடமாக இருந்தது. எனவே கராச்சி வரையில் நீராவிப்படகில் சென்று அங்கிருந்து ஒட்டகங்களில் சவாரிசெய்து ஹிங்க்லாஜ் செல்லலாமென அவர்

Koviloor Digital Library

கள் உத்தேசித்தார்கள். இதற்கான வழிச் செலவுக்கு அவர்கள் என்ன செய்வார்கள்? இதைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கையில் அவர்களிலொருவர் சொன்னார்: ''தற்போது திவானுடன் பரமஹம்ஸரொருவர் தங்கியிருக்கிறாராம். அவருக்கு அரண்மனையில் மிகவும் செல்வாக்கு இருப்பதாகச் சொல்கிறார்கள். அவர் நன்றாக ஆங்கிலம் பேசுவாராம். அவரை திரிகுணாதீதர் கண்டு நம் தேவையைத் தெரிவித்தால், அவர் திவானிடம் கூறி நமக்குத் திரவிய சகாயம் பெற்றுத் தரக்கூடும்,'' என்று. திரிகுணாதீதர் அப்போது என்னவெல்லாம் எண்ணி, எதிர்பார்த்து விம்மியிருப்பாரோ நமக்குத் தெரியாது.

ஆங்கிலம் பேசத் தெரிந்த திரிகுணாதீதானந்தரைத் தலைமையாகக் கொண்டு சாதுக்கள் அரண்மனைக்குச் சென்றார்கள். அப்போது சுவாமிஜி அரண்மனை மாடத்தில் உலவிக்கொண்டிருந்தார். காவி ஒளி அவரது கவனத்தைக் கீழே இழுக்க, சாதுக்கள் சிலர் வருவதையும் அவர்களில் திரிகுணாதீதர் இருப்பதையும் அவர் கண்டார். நீண்ட நாட்களுக்குப் பின் தமதருமை குருபாயிக்களில் ஒருவரைக் கண்டதும் சுவாமிஜிக்கு அன்பு கசியாமலிருந்திராது. எனினும் தம்மைப் பாசவலையிலிருந்து காத்துக் கொள்ள வேண்டுமென்று மனதைக் கெட்டியாக்கிக்கொண்டு. கீழே இறங்கித் தமதறைக்குச் சென்றார் சுவாமிஜி. திரிகுணாதீதர் தாம் தேடி வந்த பரமஹம்ஸர் இன்னாரென்று கண்டவுடன் தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ள இயலாமல் ஆனந்தத்தை வெளியிட்டார். சுவாமிஜியோ நிர்தாக்ஷிண்யமாக, ''என்னை ஏன் தொடர்ந்து வரவேண்டும்?'' என்று அவரைக் கடிந்து கொண்டார். திரிகுணாதீதர், தாம் அவரை மனமறிந்து தொடரவில்லையென்று கூறித் தாம் வந்த விஷயத்தை விளக்கினார். சுவாமிஜி சம்பந்தப்பட்டவர்களிடம் கூறி சாதுக்கள் ஹிங்க்லாஜ் செல்வதற்குத் தேவைப்படும் தொகையை வாங்கிக் கொடுத்தார். அவர்களுக்கு விடைகூறும்போது திரிகுணாதீதரிடம் தம்மை மீண்டும் அவர் நாடக்கூடாது என்று அழுத்தமாகச் சொல்லி அனுப்பினார்.

* * *

பரமபதத்தில் பாம்பணைச் சிம்மாதனத்தின் மீதமர்ந்து பிரபஞ்சம் முழுவதையும் பரிபாலிக்கும் பக்தவத்ஸலன் மண்ணுலகில் இடையர் குலத்தில் வளர்ந்தபின் சிம்மாதனத்திலிருந்து அரசு செலுத்திய திருநகரம் துவாரகை. துவாரகைக்கு வந்தார் சுவாமிஜி. அங்கு ஆண்டவன் ஆண்டதன் அடையாளச் சுவடுகள் எதையும் அவர் கண்டாரில்லை. சமுத்திர ராஜனின் தீனக் குரல் மட்டும்தான் அங்கு ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நிறைந்

Koviloor Digital Library

திருக்கிறது. அந்த தீனக்குரல் சுவாமிஜியின் நெஞ்சை நெகிழ்த் தது. 'புராதன பாரதத்தின் நினைவாக இன்று இருப்பது என்ன? எங்கேனும் சில இடிபாடுகள் காண்கின்றன, அவ்வளவுதான். அன்றைய தத்துவங்களும் இன்று இதே கதியில் தானிருக்கின்றன' என்ற எண்ணங்கள் சுவாமிஜியின் இமைகளை ஈரமாக்கின. கடற் கரையில் நீண்ட நேரம் அமர்ந்து அந்தக் கடலினும் ஆழமான நினைவுகளின் அடிவாரம்வரை குடைந்து குடைந்து சென்று கொண்டிருந்தார்.

பிறகு எழுந்திருந்தார். இதேபோல பாரத தர்மம் இடிந் திருந்த ஒரு காலத்தில் அவதரித்து அதனைச் சீர் செய்த செம்மல் சங்கர பகவத்பாதர் துவாரகையில் ஸ்தாபித்திருந்த திருமடத் துக்குச் சென்றார். அதன் மஹந்து சுவாமிஜி ஓர் அறையில் தங்க வசதி யளித்தார். பாழடைந்த துவராபதியில் சின்னஞ்சிறு அறையொன்றில் சுவாமிஜி தங்கியிருந்தபோது அவருடைய மன அறையில் கூட்டம் கூட்டமாக எண்ண மின் மினிக்கள் பறந்தன. மினிமினிக்களின் மந்த வெளிச்சம் பெருகிக்கொண்டே சென்றது. ஒளித்தூண் ஒன்றினையே தம் எதிரே கண்டார் சுவாமிஜி. தாம் எதிரே காணும் அந்த ஒளியே இந்தியாவின் எதிர்காலம் என்று தெளிந்தார்.

* * *

துவாரகாபுரியிலிருந்து மாண்ட்விக்கு சுவாமிஜி சென்றார். அங்கு குருபாயி அகண்டானந்தரைச் சந்தித்தார். ஒருபக்ஷம் இருவரும் பக்ஷமாக இருந்தபின் அகண்டானந்தர் வேறு மார்க் கத்தில் பிரிந்தார். சுவாமிஜி நாராயண ஸரோவரம், ஆசாபுரி ஆகிய இடங்களுக்குச் சென்று மாண்ட்விக்கே மீண்டார். அங்கு அவருக்குப் பலர் சிஷ்யராயினர். பிறகு பூஜ் மஹாராஜா கேட் டுக்கொண்டதன் பேரில் மறுபடியும் அந்த ஊருக்குச் சென்றார் சுவாமிஜி. ஜைனர்களுக்குப் புனிதமான சத்ருஞ்ஜயகிரி உள்ள பாலிதானு என்ற இடத்துக்குச் சென்ற சுவாமிஜி மலை உச்சியில் உள்ள ஹனுமந்தரின் ஆலயத்தையும், முஸ்லீம் அடியார் ஹேங்க ருக்கு எழுப்பிய மசூதியையும் கண்டார். அந்த மலையிலிருந்து கீழே நோக்கினால் கண்கொள்ளாக் காட்சியாக யிருக்கும். குழந்தை போன்ற கொண்டாட்டத்துடன் சுவாமிஜி இந்தக் காட்சியைக் கண்டார்.

கேக்வார் எனப்படும் பரோடா மஹாராஜாவின் ஆளுகையி லிருந்த பகுதிகளில் சுவாமிஜியின் தேச சஞ்சாரம் நடைபெற லாயிற்று. பரோடாவில் தெய்வபக்தியும், சீலமும் மிகுந்த மணி பாய் என்ற முன்னாள் மந்திரியின் வீட்டில் தங்கியிருந்தார். பிறகு

Koviloor Digital Library

மத்திய இந்தியாவிலுள்ள காண்ட்வாலா சுவாமிஜியின் அடிகளைத் தரித்தது. அங்கு பாபு ஹரிதாஸ் சட்டர்ஜி என்ற வக்கிலின் வீட்டு வாசலில் பிக்ஷைக்கு நின்றார் சுவாமிஜி. நீதி மன்றத்தி லிருந்து இல்லத்துக்குத் திரும்பிய ஹரிதாஸர் யாரோ பரதேசி யாசகத்துக்கு வந்ததாகத்தான் முதலில் எண்ணினார். ஆனால் சிறிது நேர உரையாடலிலேயே சுவாமிஜியின் பெருமையை ஒரு வாறு புரிந்துகொண்டு விட்டார் அவர். சுவாமிஜியைத் தமது வீட்டிலேயே தங்கியிருக்குமாறு கேட்டுக் கொண்டார். அவ் விதமே சுவாமிஜி அங்கு தங்கியிருந்த மூன்று மாதங்களில் ஹரிதாஸ் தமது குடும்ப அங்கத்தினரில் ஒருவராகவே அவரை பாவித்து நடத் தினார். இம்மூன்று மாதங்களுக்குள் சுவாமிஜி இந்தோருக்கு ஒரு 'மின்னல்' பயணம் செய்து திரும்பினார்.

காண்ட்வாவில் குடியேறியிருந்த வங்காளிகள் சுவாமிஜியைத் தரிசித்துப் பயனடைந்தனர். சுவாமிஜியின் அந்தரங்க சுத்தமும், எதையும் மறைக்க வேண்டிய அவசியமில்லாததால் குழப்பமின்றி அவர் உரையாடியதின் தெளிவும், உயர்ந்த விஷயங்களைப் பொறுக்கி எடுத்த பதங்களில் உருக்கலாக அவர் கூறிய அழகும் அவருக்கு நிறைய அடியார்களைச் சேர்த்துத் தந்தன.

பொதுக் கூட்டமொன்றில் உரை நிகழ்த்துமாறு ஹரிதாஸர் சுவாமிஜியைக் கேட்டுக் கொண்டார். சபைக் கூச்சமில்லாமல் தம்மால் பேச இயலுமா என்று சுவாமிஜி தயங்கினார். (சர்வமத மகாசபையில் மேடையேறி மற்றப் பேச்சாளர்களை எல்லாம் கதிர வன் முன் அகல்விளக்காகச் செய்த அதே சுவாமிஜிதான்.) ஒருவாறு காண்ட்வாவில் பேச சுவாமிஜி இணங்கினார். ஆனால் வேறு காரணங்களுக்காகப் பொதுக்கூட்டம் நடக்காமலே போயிற்று.

சுவாமிஜியின் வருகையை ஒட்டி ஸிவில் ஜட்ஜ் மாதவ சந்திர பானர்ஜி அவ்வூரிலுள்ள வங்காளிகளுக்கு ஒரு விருந்தளித்தார். அப்போது சுவாமிஜி உபநிஷத்திலுள்ள சில மந்திரங்களைக் குழந் தையும் புரிந்து கொள்ளுமாறு விளக்கினார். சுவாமிஜியின் புலமையைப் பரீக்ஷித்துப் பார்க்கவேண்டும் என்ற எண்ணத்துடன் வந்திருந்த பாபு பியாரிலால் காங்குலி என்பவர் அந்த விளக் கத்தைக் கேட்டவுடன் அசந்து போய்விட்டார். பரீக்ஷிக்க வேண் டும் என்ற எண்ணம் விலகி அவர் சுவாமிஜியை நோக்கியபோது அவரது தோற்றமே மேன்மையைக் குறிப்பதாகக் கண்டார். தமக்குத் தோன்றிய அந்த எண்ணத்தை ஹரிதாஸரிடம் காங்குலி கூறினார். ஹரிதாஸர் அதை சுவாமிஜியிடமே கூறினார். உடனே சுவாமிஜியின் முகத்தில் புத்தொளி ஒன்று பரவியது.

Koviloor Digital Library

''அதென்னவோ, எனக்குத் தெரியாது. ஆனால் என் குருநாதர் இதே கருத்தை வெளியிட்டிருக்கிறார் — இன்னும் பரவசமான மொழிகளில்'' என்றார் சுவாமிஜி.

அமெரிக்காவில் சிகாகோவில் சர்வமத மகாசபை ஒன்று நடக்க ஏற்பாடாகி வந்ததென்றும், இதனைப்பற்றி சுவாமிஜி ஜுனகாத்திலோ போர்பந்தரிலோ கேள்விப்பட்டார் என்றும் முன்பே கூறினோமல்லவா? நானிலத்துக்கெல்லாம் ஸநாதன தர்மத்தை எடுத்துரைக்க வேண்டுமென்று ஆர்வம் கொண்டிருந்த சுவாமிஜி இந்த மகாசபையில் தாமும் பங்கு கொள்ளவேண்டும் என உள்ளூற விரும்பினார். அந்த விருப்பம் முதன் முதலாக அவரது வாய் மொழியில் வெளியானது காண்ட்வாவில்தான். 'கடவுள் சித்தமிருந்து, பிரயாணச் செலவுகளை யாரேனும் கொடுத்து உதவ முடியுமானால், நான் இந்த மகாசபைக்குச் செல்வேன்'' என்று ஹரிதாஸரிடம் சுவாமிஜி கூறினார்.

* * *

காண்ட்வாவிலிருந்து புறப்பட்டு மத்திய இந்தியாவில் சுவாமிஜி சஞ்சரித்து வந்தபோது பெரும் சோதனைகளுக்கு ஆளானார். அங்கு பல இடங்களில் அவருக்கு யாருமே இடமும் உணவும் அளிக்க முன்வரவில்லை. தம்முடைய ஒரு சில உடமைகளிலிருந்த பரமஹம்ஸரின் புகைப் படத்தையும், பகவத்கீதைப் பிரதியையும் பார்த்துப் பார்த்துத் தம்மைச் சற்றே தேற்றிக் கொள்வார் சுவாமிஜி. 'உயர்ந்த மக்கள்' என்பதாகக் கூறப்படுபவர்கள் இவ்வளவு கடின சித்தத்தினராக இருக்கும்போது சேரிகளில் வாழ்வோர் சுவாமிஜியிடம் அன்புகாட்டியதைக் கண்டு அவர் நெகிழ்ந்திருக்கிறார். தோட்டிக் குடும்பம் ஒன்றுடனேயே அவர் சிலகாலம் தங்கியதும் உண்டு. சமூக நிலையில் தாழ்ந்தவருள் தாழ்ந்தவராக இருப்போரிடம் உயர்ந்தவற்றுள் உயர்ந்த உள்ளப் பான்மை இருப்பதைக் கண்டு சுவாமிஜி அகமுருகினார். இது போன்ற சம்பவங்களே சுவாமிஜிக்கு ஏழை எளியோரிடமிருந்த எல்லையற்ற அநுதாபத்துக்குக் காரணமாகும். அவர்களின் துயரங்களை அவர் உடன் இருந்து கண்டு அநுபவித்திருந்ததால்தான் அவர் அவர்களிடம் அவ்வளவு கருணை கொண்டார். சுவாமிஜி சமயச் சீர்திருத்தவாதியாக மட்டுமின்றி சமூகச் சீர்திருத்தவாதியாகவும் இருந்ததற்கு இந்த அநுபவங்களே காரணமாகும்.

* * *

இந்தியாவின் நுழைவாசல் எனப்பட்ட பம்பாய் மாநகரத்துக்குச் சென்றார் சுவாமிஜி. இது நடந்தது 1892-ம் ஆண்டு ஜுலை மாதப் பிற்பகுதியிலாகும். பிரபல வக்கிலாகிய சேத்

Koviloor Digital Library

ராமதாஸ் சபில்தாஸ் என்பவரின் விருந்தாளியாக சுவாமிஜி தங்கியிருந்தார். ஒரு நாள் அரசியல்வாதி ஒருவர் சுவாமிஜியிடம் ஒரு செய்தித் துணுக்கைக் காட்டினர். பாலிய விவாகம் கூடாது என்கிற மசோதாவை வங்காளத்துப் படிப்பாளிகள் எதிர்ப்பதாக அது கூறியது. சுவாமிஜியோ பாலிய விவாகத்தை ஆதரிக்காதவர். படித்தவர்கள் அதை எதிர்த்தார்கள் என்பது தமக்கு அவமானமாக இருப்பதாக அவர் கூறினர்.

பம்பாயில் சுவாமிஜி அகஸ்மாத்தாகத் தமது குருபாயியாகிய சுவாமி அபேதானந்தரைச் சந்தித்தார். ''தம்பீ, என்னுள் மகா சக்தி யொன்று வளர்ந்து வருகிறது; இதனல் என் உடல் அப்படியே சுக்கல் சுக்கலாக வெடித்துவிடுமோ என்று எனக்குச் சில சமயங்களில் தோன்றுகிறது'' என்று அவரிடம் சுவாமிஜி கூறினர்.

பம்பாயிலிருந்து பூனவுக்குக் கிளம்பினர் சுவாமிஜி. அவரை வழியனுப்ப விக்டோரியா டெர்மினஸுக்கு அன்பர்கள் வந்திருந்தனர். அதே ரயிலில் பூன செல்வதற்காகத் தேசபக்த திலகமும் பாரதத்தாய் பெற்றெடுத்த அருந்தவப் புதல்வர்களில் ஒருவருமான பால கங்காதர திலகர் அவர்கள் வந்திருந்தார். இருவருக்கும் அறிமுகமாயிற்று. பூனவிலிருக்கும்போது சுவாமிஜி திலகரின் இல்லத்திலேயே தங்கலாம் என்றும் ஏற்பாடாயிற்று. இருவரும் ஒன்ருகவே ரயிலில் சென்ருர்கள்.

இனி, இந்த மகாபுருஷர்களின் சகவாஸத்தைப்பற்றி அவர்களில் ஒருவரான திலகரின் வார்த்தைகளிலேயே கேளுங்கள்:

> அந்த சந்நியாசி என் வீட்டில் எட்டு அல்லது பத்து நாட்கள் தங்கியிருந்தார். அவருடைய பெயரைக் கேட்டேன். அவர் கூறவில்லை. 'நான் ஒரு சந்நியாசி, அவ்வளவுதான்' என்ருர். அவர் மேடைப் பேச்செதுவும் நிகழ்த்தவில்லை. வீட்டில் அத்வைத சாஸ்திரம் பற்றியும் வேதாந்தம் பற்றியும் அடிக்கடி பேசி வந்தார். அவரிடம் சல்லிக்காசுகூட இல்லை. மான் தோல், ஓரிரு வஸ்திரங்கள், கமண்டலு இவையே அவருடைய உடைமைகள். யாராவது டிக்கட் வாங்கிக் கொடுத்து, யாத்திரை செய்து வந்தார் அவர்.
>
> மஹாராஷ்டிரப் பெண்கள் பர்தாமுறை அநுசரிப்பதில்லையல்லவா ? எனவே அவர்களில் உயர்வகுப்பைச் சேர்ந்த விதவைகளில் சிலர், புத்த பிக்ஷிணிகள்போல, ஆன்மிக-சமயப் பிரசாரத்துக்கே தங்களை அர்ப்பணித்துக்

Koviloor Digital Library

கொள்ளக்கூடும் என்ற தமது தீவிரமான விருப்பத்தை சுவாமிஜி ஒரு முறை வெளியிட்டார். என்னைப் போலவே அவரும் பகவத்கீதை சந்நியாசத்தைப் போதிக்க வில்லை என்றும், பலனை எதிர்பாராது ஒவ்வொருவரும் பற்றற்ற கருமம் புரியவேண்டும் என்று தான் விதிக்கிறது என்றும் கருதினர்.

அப்போது நான் ஹிராபாக்கிலுள்ள தக்காண சங்கத்தில் அங்கத்தினராக இருந்தேன். சங்கத்தில் வாராந்தரக் கூட்டங்கள் நடைபெறும். இந்தக் கூட்டமொன்றுக்கு சுவாமிஜியும் என்னோடு வந்திருந்தார். அன்றைக்கு ஏதோ வேதாந்த விஷயமாகக் காலஞ்சென்ற கோவிந்த நாதர் ஓர் அருமையான பிரசங்கம் செய்தார். அது பற்றி எங்களில் யாரும் எதுவும் சொல்லவேண்டியிருக்க வில்லை. ஆனால் சுவாமிஜி எழுந்தார். கோவிந்தநாதர் பேசிய விஷயத்தின் மாற்றுக் கோணத்தை மிகவும் தெளிவான முறையில் சரளமான ஆங்கிலத்தில் விவாதித்தார். அவர் உயர்ந்த திறன்கள் பெற்றவர் என்று எல்லாருக்கும் ஒரு திடமான கருத்து உண்டாயிற்று. இச் சம்பவமாகி வெகு விரைவிலேயே சுவாமிஜி பூனாவிலிருந்து புறப்பட்டு விட்டார்.''

இந்தச் சரித்திரத்தில் பின்னால் நிகழப்போகும் சம்பவங்களையும் லோகமான்ய திலகரின் கட்டுரையில் காணலாம். அவற்றையும்தான் இங்கேயே முன்கூட்டிப் பார்த்து விடுவோமே ! லோகமான்யர் தொடருகிறார்:

''இரண்டு மூன்றாண்டுகளுக்குப்பின் சுவாமி விவேகானந்தர் உகலப் புகழுடன் இந்தியாவுக்குத் திரும்பினர். சர்வமத மகாசபையிலும், அதன்பின் அமெரிக்கா, இங்கிலாந்து இரு தேசங்களிலும் அவர் பெற்றிருந்த மகத்தான வெற்றி காரணமாகவே அவருக்கு இந்தப் பெரும் புகழ் கிடைத்திருந்தது. (இந்தியாவில் இறங்கியபின்) அவர் சென்றவிடங்களிலெல்லாம் வரவேற்பிதழ் அளிக்கப்பட்டது. ஒவ்வோரிடத்திலும் அவர் புளகமுறச் செய்யும் விதத்தில் வந்தனோபசாரம் கூறிவந்தார். சில செய்தித்தாள்களில் நான் அவரது புகைப்படத்தை பார்க்க நேர்ந்தது. தோற்றத்தில் தெரிந்த சாயல்களிலிருந்து என் இல்லத்தில் முன்பு தங்கியிருந்த சுவாமியாகத்தானிருக்கவேண்டும் இந்த

Koviloor Digital Library

விவேகானந்தர் என எண்ணினேன். என் அநுமானம் சரியானதுதானு எனக்கேட்டு அவருக்கு எழுதி யிருந்தேன். கல்கத்தா செல்லும் வழியில் பூனுவுக்கு விஜயம் செய்யுமாறும் அவரைக் கோரியிருந்தேன். என் அநுமானம் சரியே என்று அவர் தெளிவுபடுத்திப் பதில் எழுதினுர். தற்சமயம் தம்மால் பூனுவுக்கு வர இயலவில்லை என்று வருத்தம் தெரிவித்திருந்தார்......
இதன்பின் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மகாசபைக் கூட்டங்களிலொன்றுக்குச் சென்றிருந்த நானும் என் நண்பர்களும் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் பேலூர் மடத்தைக் காணச் சென்றிருந்தோம். அங்கு சுவாமி விவேகானந்தர் எங்களை இதயபூர்வமாக வரவேற்ருர். நாங்கள் ஒன்ருகச் சிற்றுண்டி சாப்பிட்டோம். சம் பாஷணையின்போது, சற்றே வேடிக்கை செய்யும் பாவத்திலிருந்த சுவாமிஜி என்னிடம், 'நீங்கள் சந்நி யாசம் வாங்கிக்கொண்டு இங்கே (வங்காளத்தில்) என் காரியத்தைச் செய்து வாருங்கள், நான் உங்கள் மஹா ராஷ்டிரத்துக்குப்போய் இதே பணியைத் தொடரு கிறேன். ஏனென்ருல் யாருமே எட்ட இருக்கும் இடங் களில் போலத் தங்கள் சொந்த ராஜ்யத்தில் செல் வாக்குப் பெற்றிருக்கவில்லை' என்ருர்''.

சுவாமிஜி பூனுவில் தங்கியிருந்தபோது, இந்தியாவின் அரசி யல் புரட்சிக்குத் திலகர் பாடுபடுவதென்றும், ஆன்மிகப் புரட் சிக்கு சுவாமிஜி பாடுபடுவதாகவும் அவர்கள் தமக்குள் உறுதி செய்து கொண்டதாகச் சொல்லப்படுவதுண்டு. இருவரும் நன்கு கற்றுத் தேர்ந்தவர்கள்; மக்கள் நலனை அநவரதமும் சிந்தித்தவர் கள்; பாரதத்தின் ஆன்மிகப் பெருமையை நன்கு உணர்ந்தவர் கள். எனவே இது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சம் பவம் அல்லவா?

* * *

முன்பே தாம் நன்கு பரிசயம் கொண்டிருந்த லிம்ப்டி மன்னர் மஹாபலேசுவரத்துக்கு வந்திருப்பதாக கேள்வியுற்ற சுவாமிஜி அங்கு சென்ருர். சுவாமிஜியிடம் மந்திரோபதேசம் பெற்ற லிம்ப்டி மன்னர் அவரைத் தமது சம்ஸ்தானத்துக்கு வந்து அங் கேயே தங்கும்படி கேட்டுக் கொண்டார்.

''வருவதற்கில்லை மஹராஜ். நான் ஒரு பணியைச் செய் தாகவேண்டியிருக்கிறது. இப்போது நான் ஓய்வெடுத்துக்கொள்

Koviloor Digital Library

வதற்கில்லை. எனினும் எனக்கு ஓய்வுகால வாழ்க்கை என்று ஒன்று இருக்குமாயின் அது உங்கள் இடத்திலேயே இருக்கும்'' என்றார் சுவாமிஜி உணர்ச்சியுடன்.

சுவாமிஜிக்கு ஓய்வுகால வாழ்க்கையென்று ஒன்றிருக்கவே யில்லை. எனவே அவர் லிம்ப்டி செல்லவேயில்லை. அயராத உழைப்பின் மத்தியிலேயே அல்லவா சுவாமிஜி மஹாசமாதியடைந்து விட்டார்!

*　　*　　*

பவநகர மஹாராஜாவின் அறிமுகக் கடிதத்தின் மூலம் கோலாப்பூர் மஹாராஜாவின் விருந்தினரானார் சுவாமிஜி. கோலாப்பூர் ராணி சுவாமிஜியிடம் மிகுந்த பக்தி கொண்டார். அவருக்குத் தாம் காஷாய வஸ்திரமளித்து அதனை அவர் அங்கீகரித்ததில் ராணி மிகவும் மகிழ்ச்சி யடைந்தார்.

அங்கிருந்து சுவாமிஜி பெல்காம் சென்றார். அங்கு அவரைத் தம் விருந்தினராக வரவேற்ற மராட்டிய பெரியாரின் குமாரரான பேராசிரியர் ஜி. எஸ். பாடே என்பவர் சில ருசிகரமான விஷயங்களை ஒரு வியாசத்தில் கூறியுள்ளார்.

அவரும் சரி, அவரது வீட்டினரும் சரி சுவாமிஜி இவ்வளவு பேரறிஞராக யிருப்பாரென்று முதலில் எண்ணவில்லையாம். இந்த சாதுவிடம் பல விசித்திரமான அம்சங்கள் இருப்பதாக அவர்கள் எண்ணினார்களாம். 'அவர் காஷாயம் உடுத்தியிருப்பது சரி தான்; ஆனால் பனியன் போட்டுக் கொண்டிருக்கிறாரே' என்று அவர்கள் ஆச்சரியப்பட்டார்களாம். சந்நியாசிகளின் தண்டம் போலில்லாமல் அவர் நடைக் கம்பு வைத்திருப்பதும் அவர்களுக்கு விநோதமாயிருந்தது. தோற்றத்தில் இப்படி யென்றால் பேச்சும் அதற்குமேல் விந்தையாக யிருந்தது. ஆங்கிலத்தில் சம்பாஷிக்கும் சந்நியாசியை அந்த குடும்பத்தினர் கண்டதில்லை. சாப்பாடானபின் சுவாமிஜி செய்த காரியம் இத்தனை நேரம் அவர்கள் கொண்ட ஆச்சரியத்தை யெல்லாம் ஒன்றுமில்லாத தாக்கிவிட்டது. தாம்பூலம் கேட்கிறார் இந்த சாது! மறு நாள் இன்னும் விசேஷம்: புகையிலை கேட்டார் சுவாமிஜி. அவரே சொன்னார்: 'நான் பிராமணனில்லை; என்றாலும் பரமஹம்ஸ பரிவிராஜக சந்நியாசி. குடும்பியில்லையாயினும் எனக்குத் தாம்பூலம், புகையிலை போன்ற வியஞ்சனங்கள் தேவைப்படுகின்றன' என்று. இதை மேலும் விளக்கமுகமாக அவர், 'நான் நல்ல செல்வச் செழிப்பிலிருந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவன். கல்கத்தா சர்வகலாசாலையில் பட்டம் பெற்றவன். பரமஹம்ஸ ஸ்ரீராமகிருஷ்ணருக்கு ஆட்படுமுன் உல்லாஸமாக

Koviloor Digital Library

யிருந்தவன். எனவே அதன் பின்னும் பழைய பழக்கங்களை என்னால் விடமுடியவில்லை. முக்கியமான பெரும் லௌகிக இச்சைகளையெல்லாம் துறந்தபின், இந்தச் சிறிய விஷயங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒன்றுதான் என்பதால் இவற்றைக் கைவிட நான் பெருமுயற்சி எதுவும் செய்வதில்லை' என்றார். தாம் சாமானிய சந்நியாசி வர்க்கத்தைச் சேர்ந்தவனில்லை என்றும் பரம்ஹம்ஸ சந்நியாசி என்றும் கூறி எனவே தமக்கு உணவுக் கட்டுப்பாடுகள் இல்லை என்று கூறினார். 'உணவை நாங்களாகத் தேடிப் போகக் கூடாது. ஆனால் யாரிடமிருந்து எந்த உணவு தானாகக் கிடைத்தாலும் — அது புலால் உணவாக யிருப்பினும் கூட — நாங்கள் அதனை உண்ணலாம்' என்றார்.

இதையெல்லாம் கொண்டு சுவாமிஜி தம் இல்லத்தில் தங்கிய போது முதல் இரண்டு நாட்கள் அவரை எடைபோட முயன்றார் பெரிய பாடே. ஆனால் அதன் பின்பு அவர் தம்மால் எடை போட முடியாத பெருமை பொருந்தியவர் என்று தெரிந்து கொண்டார். பாணினியின் அஷ்டாத்யாயியில் சிறுவர் பாடே தவறு செய்தபோது சிரித்துச் சிரித்துக் கொண்டே சுவாமிஜி அதனைத் திருத்தியபோது அவரது அறிவும் அன்பும் பெரிய பாடேக்குப் புரிந்தது. இப்படியே சுவாமிஜியின் ஒவ்வொரு பேச்சும், நடவடிக்கையும் அவருடைய அசாதாரணத்துவத்தைப் பாடேக்குப் புரியவைத்தது. அவர் தமது நண்பர்களையும் வரவழைத்து சுவாமிஜியுடன் உரையாடினார். இதன்மேல் உள்ளூர் தலைவர்களும் பண்டிதர்களும் சுவாமிஜியுடன் விவாதிப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள். இவர்களில் சிலர் சுவாமிஜியுடன் சில விஷயங்களில் அபிப்பிராய பேதம் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஆத்திர வசப்பட்டுப் பேசும்போது சுவாமிஜியும் சுடச்சுடப் பதிலளிப்பார். ஆனால் அந்தச் சூட்டில் ஆத்திரம் இராது; ஹாஸ்யமே இருக்கும். பெல்காமில் அப்போது எக்ஸிக்யூடிவ் இன்ஜினீயராக இருந்தவர் வெளிப்பார்வைக்குப் பரம ஆசாரமாக இருப்பார். ஆனால் உள்ளூற அவர் மதத்தை ஓர் அத்தியாவசியமான உணர்வாக எண்ணவில்லை. பல்லாண்டுகள் வழக்கில் இருந்து வந்திருப்பதாலேயே மதத்துக்கு வாழ்க்கையில் இடம் ஏற்பட்டிருப்பதாகத்தான் அவர் கருதினார். சர்வ சமயங்களின் சத்தியமாகவும் வாழ்ந்து காட்டிய மகான் ஸ்ரீராமகிருஷ்ணரின் அடிவாழையாகப் பிறந்த சுவாமிஜியால் இன்ஜினீயரின்கருத்தை ஏற்க முடியுமா? இருவரும் காரசாரமாக விவாதிப்பார்கள். இன்ஜினீயர் விஞ்ஞான உண்மைகளைக் காரணம் காட்டத் தொடங்கினால் சுவாமிஜி அதே விஞ்ஞானத்தில் இன்னும் ஆழச்

Koviloor Digital Library

சென்று தம் கூற்றுக்கும் அவற்றிலேயே ஆதாரம் காட்டுவார். இதனால் இன்ஜினியர் பொறுமை இழந்து விடுவார். ஒருபோது அவர் சுவாமிஜியை மிகவும் மரியாதைக் குறைவாகப் பேசி விட்டார். இதைக் கண்ட பாடே அவரைத் திருத்துவதற்காகத் தாமும் பேச்சில் தலையிட்டார். சுவாமிஜி பாடேயை சமனப் படுத்தி, இன்ஜினியர் கூறியதைத்தாம் இழிவாகக் கருதவில்லை என்று கூறினார். எந்த வாதத்திலும் சுவாமிஜிதான் வெற்றி காண்பார். எனினும் தமது வெற்றியை நினைந்து அவர் பெரு மிதம் கொள்ளவில்லை. வேதாந்தத்தின் பெருமை நிலை நாட்டப் படுவதிலேயே அவருடைய நாட்டம் இருந்தது. அந்தப் பெரு மைக்கு வணங்கியவர்களெல்லாம் ஞான தீபத்தை வீடு வீடாக எடுத்துச் செல்ல வேண்டுமென்பதே அவரது விருப்பமாக இருந்தது.

பெல்காமில் வன இலாகா அதிகாரியாக இருந்த பாபு ஹரிபாத மித்ரா என்ற வங்காளி சுவாமிஜியின் பரம பக்தரானார். முதலில் அவர் சுவாமிஜியைப் பற்றி விசேஷமாக எதுவும் நினைத் திருக்கவில்லை. மராட்டியருடன் தங்க இயலாததால் தம்மிடம் இடம் கேட்கவே சுவாமிஜி வந்திருப்பதாகத்தான் மித்ரா முதலில் எண்ணினார். ஆனால் சிறிது நேரம் அவரிடம் பேசியபோதே அவருடைய சிந்தனை மேகங்கள் மோதிப் பிறக்கும் அறிவு மின் வெட்டுக்களையும், அன்பு மழைச் சிதறலையும் கண்டு மோகித்துப் போய்விட்டார் மித்ரா. தாமாகவே சுவாமிஜியைத் தம் வீட்டில் தங்குமாறு கேட்டுக் கொண்டார். அவருடைய பழைய எண் ணத்தைப் புரிந்து கொண்டாற்போல சுவாமிஜியோ, "நான் மராட்டியர் இருக்கையிலேயே சந்தோஷமாக யிருக்கிறேன். வங் காளி ஒருவரைக் கண்டவுடன் நான் வாஸத்தை மாற்றிக் கொண் டால் அவர்கள் மனது கஷ்டப்படும். அந்தக் குடும்பமே என் னிடம் பெருத்த அன்பு காட்டி வருகிறது'' என்று கூறிவிட்டார். எனினும் ஹரிபாதர் வற்புறுத்தியதின்பேரில் மறு நாள் காலை உணவுக்கு அங்கு வருவதாக வாக்களித்தார்.

மறு நாள் காலை குறித்த வேளை கடந்து வெகு நேரமான பின்பும் சுவாமிஜி வராததால் ஹரிபாத மித்ரா அவரை அழைத்து வருவதற்காக பாடேயின் வீட்டுக்குச் சென்றார். அங்கு பல ஆங்கில பட்டதாரிகளும், பண்டிதர்களும், வழக்கறிஞர்களும், நகர முக்கியஸ்தர்களும் புடைசூழ சுவாமிஜி அமர்ந்திருப்பதைக் கண்டபோது அவர் எவ்வளவு பெரியவர் என்பதை மித்ரா நன்கு உணர்ந்தார். ஆங்கிலம், ஹிந்தி, வங்காளி, சம்ஸ்கிருதம் ஆகிய நான்கு பாஷைகளிலும் அவர்களுக்கு சுவாமிஜி தங்கு தடங்க

Koviloor Digital Library

லின்றி விளக்கங்கள் தருவதைக் கண்டு ஹரிபாத மித்ரா ஆச்சரியம் அடைந்தார்.

அவர்களெல்லாம் சென்றபின் சுவாமிஜி ஹரிபாதரிடம், ''சொன்னபடி வர இயலாததற்கு நீங்கள் மன்னிப்பீர்களென நம்புகிறேன். நான் குறித்த நேரத்தில் அங்கு வந்திருந்தால் இவர்களின் உணர்ச்சிகளைப் புண்படுத்தி யிருப்பேன்'' என்ருர். பிறகு, ''நீங்கள் ஸ்ரீபாடேயின் அநுமதியைப் பெற்ருல் நான் இப்போது உங்களுடன் வருகிறேன்'' என்ருர். அதேபோல 'அநுமதி' பெற்றபின் ஹரிபாதரைப் பின்தொடந்தார் சுவாமிஜி, தம்முடைய சிறிய உடைமைகளைத் திரட்டிக் கொண்டு. கமண்டலு, காஷாயத்தில் சுற்றியிருந்த ஒரு புஸ்தகம், அது தவிர பிரெஞ்சு இசைபற்றிய ஒரு புத்தகம் இவையே அப்போது சுவாமிஜியின் ஆஸ்தி. பிரெஞ்சு இசைபற்றி அப்போது சுவாமிஜி ஊன்றிப் படித்து வந்தார்.

ஹரிபாத மித்ராவின் விட்டில் சில நாட்கள் சுவாமிஜி தங்கியிருந்தார். அந்தச் சில நாட்களிலேயே, பல ஆண்டுகளாக ஹரிபாதரின் உள்ளத்தைக் குழப்பி வந்த சந்தேகங்களைத் தெளிவுபடுத்தினர். மித்ராவின் விட்டுக்கு வந்த நாலாம் நாள் சுவாமிஜி புறப்பட ஆயத்தமானுர். ''சந்நியாசிகள், நகரமானுல் மூன்று நாட்களுக்கும், கிராமமானுல் ஒரு நாளுக்கு மேலும் தங்கக் கூடாது என்பது விதி. ஒருவனை மாயைக்கு உட்படுத்தக்கூடிய எல்லாவற்றிலின்றும் சந்நியாசிகளாகிய நாங்கள் விலகி நிற்க வேண்டும்'' என்ருர். ஆனுல் ஹரிபாத மித்ரா அவ்வளவு சீக்கிரத்தில் அவரை விடத் தயாராக இல்லை. சுவாமிஜியும் இன்னும் சிலபோது அங்கேயிருக்க இணங்கினர்.

சுவாமிஜி ஹரிபாதரிடம் தமது சஞ்சார வாழ்க்கையில் நிகழ்ந்த பல சம்பவங்களைக் கூறினர். 'இங்கே திருடர்களுக்கும், சாதுக்களுக்கும் இடம் அளிக்கப்பட மாட்டாது' என்று கூறி சுவாமிஜியின் முகத்தில் கதவை அறைந்த இடங்களும் உண்டாம். பட்டினியால் வயிறு காய்ந்து, நடை தளர்ந்து பேச்சற்றுப்போன நாட்கள் எத்தனையோ. அப்படி ஒரு நாள் அவஸ்தைப்பட்ட போது யாரோ அளித்த காரம் மிகுந்த உணவை உண்டவுடன் ஒட்டி இருந்த குடல் பற்றி எரியத் தொடங்கிவிட்டதாம். இதையெல்லாம் சுவாமிஜி கூறும்போது ஹரிபாதருக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொள்ளும். ஆனுல் சுவாமிஜியோ சிரித்தபடியே, ''எல்லாம் ஸர்வேசுவரியின் திருவிளையாடல்!'' என்பார்.

ஹரிபாத மித்ரா சுவாமிஜியைக் குழந்தைகள் யானையைப் பார்ப்பதுபோல் வியந்து வியந்து பார்ப்பாராம். 'இந்த மனித

Koviloor Digital Library

ருக்குத் தெரியாத விஷயமில்லை போலிருக்கிறதே! இவருடைய கவனத்தைப் பெருத துறையே இருக்காது போலிருக்கிறதே' என்றெண்ணுவார் மித்ரா. ஒரு நாள் சுவாமிஜி சார்ல்ஸ் டிக்கென்ஸ் என்ற புகழ்வாய்ந்த ஆங்கில நாவலாசிரியர் எழுதியுள்ள ''பிக்விக் பேப்பர்ஸ்'' என்ற ஹாஸ்ய நூலிலிருந்து பல மேற்கோள்களை எடுத்துக் காட்டியபோது ஹரிபாதருக்கு மிகவும் ஆச்சரியமாகிவிட்டது. மதச்சார்பற்ற இலக்கியங்களில் இவருக்கு எப்படி இவ்வளவு ஈடுபாடு ஏற்பட்டது என அவர் வியந்தார். ''சுவாமிஜி, தாங்கள் இந்த நூலை எத்தனை முறை வாசித்திருக்கிறீர்கள்?'' என்று அவர் கேட்டார். ''இரண்டு முறை'' என்ருர் சுவாமிஜி. ''இரண்டே முறை படித்தா இவ்வளவு நினைவில் வைத்திருக்கிறீர்கள்?'' என்ருர் ஹரிபாதர். இதிலென்ன அதிசயம்? நான் ஒன்றைப் படிக்கும்போது என் மனசு முழுவதையும் அதிலேயே ஒருமுகப் படுத்துகிறேன். இப்படிச் செய்தால் யாரும் எதையும் சாதிக்கலாம். உடலின் வேகங்களை அடக்கிச் சக்தியை சேமித்துக் கொள்வதால் மனசு பலம் பெறுகிறது. பௌதிகமான சக்திகளைச் செலவழியாது காத்து மனோ சக்தியாகவும், ஆத்ம சக்தியாகவும் மாற்றவேண்டும். தேகத்தின் சக்திகளை மனம் போன இச்சைகளில் செலவழிப்பது பெருத்த அபாயமாகும். இவ்வாறு செய்வதால் புத்தியின் சக்தி மழுங்கிப் போகிறது.'' என்ருர் சுவாமிஜி. எந்தக் காரியத்தை எடுத்துக் கொண்டாலும் அதில் மனது முழுவதையும் செலுத்திச் செய்யவேண்டும் என்றும் கூறினுர்.

ஹரிபாத மித்ரா எழுதுகிருர்: ''சுவாமிஜி ஓர் உண்மையான போதகர். ஆனுல் அவர்முன் அமர்ந்து பாடம் கற்பது பள்ளிக்கூட ஆசிரியர் முன்னிருப்பதுபோல் இராது. மிகவும் உயர்ந்த தத்துவங்களைக் கூறும்போது அவர் மிகவும் உல்லாஸமாகப் பேசுவார்; களியாட்டமும், வேடிக்கையும் சிரிப்பும் நிறைந்து காண்பார். பலதரப்பட்டவர்கள் அவரைக் காண வருகிருர்கள். அவரது பேரறிவுக்காகச் சிலர்; அவரது படிப்பைப் பரீக்ஷித்துப் பார்ப்பதற்காகச் சிலர்; சொந்த நோக்கங்களுக்காகச் சிலர்; கற்பதற்காகச் சிலர்; அவரது கவர்ச்சிக்காகச் சிலர்; வாழ்க்கையின் கஷ்டங்களையும், கவலைப்பையும் மறந்து இவரிடம் காலத்தை ஆனந்தமாகக் கழிக்கலாமே என்றே சிலர் — இப்படிப் பலதரத்தினர் அவரிடம் வருவார்கள். யாருக்கும் அவர் சுலபராக இருந்தார். எல்லாரையும் இதயம் நிரம்பி வரவேற்பார் அவர். சுவாமிஜி எப்படி வந்தவர்களின் உத்தேசத்தைக் கிரகித்துக் கொள்கிருர் என்பதையும்; அவர்களுடைய நடத்தையை ஆழம்

Koviloor Digital Library

காண்கிருர் என்பதையும் பார்க்க அதிசயம் உண்டாகும். அவருடைய ஊடுருவும் கண்களிலிருந்து யாரும் எதையும் ஒளிக்க முடியாது. மக்களுடைய அந்தரங்க எண்ணங்களைக்கூட அவர் படிப்பதாகத் தோன்றும். சர்வகலாசாலைப் பரிசைஷகள் நெருங்கிக் கொண்டிருந்தபோது, அவற்றிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காகவே சாதுவாவதற்கு விரும்பிய வாலிபன் ஒருவன் அவரைப் பார்க்க அடிக்கடி வருவான். அவன் சாதுவாகும் விருப்பத்தைச் சொல்லு முன்பே சுவாமிஜி புன்னகையுடன் அவனிடம், ''எம்.ஏ. பட்டம் பெற்றபின் சாதுவாவதற்காக என்னிடம் வா. ஏனெனில் சந்நியாச வாழ்க்கை நடத்துவதைவிட எம்.ஏ. பட்டம் தேறுவது எளிதாகும்'' என்ருர். சுவாமிஜி எங்கள் உள்ளங்களை எப்படி வசியப்படுத்திக் கொண்டார் என்பது அதிசயமயமானது. என் விட்டு முன்னர், சந்தன மரத்தடியில் அமர்ந்து அவர் உபதேசித்ததை நான் என்றும் மறக்க மாட்டேன்.''

இச்சமயத்தில் ஹரிபாத பாபு பலவித மருந்துகளைச் சாப்பிட்டு வந்தார். சுவாமிஜி அதனைக் கண்டித்தார். பெரும்பாலான நோய்கள் நரம்பு மண்டலம் சரியாக இயங்காததால் உண்டாகின்றன என்றும், மனநிலையைச் செம்மை செய்து கொள்வதாலேயே இதனைச் சீர்செய்து கொள்ளமுடியும் என்றும் கூறினுர். ''அதெல்லாம் ஒருபக்கமிருக்கட்டும். எப்போது பார்த்தாலும் தன் உடம்பு சரியில்லை என்பதையே நினைப்பதால் என்ன பயன்? சந்தோஷமாக இருங்கள்; தர்ம வாழ்க்கை வாழுங்கள்; உயர்ந்த எண்ணங்களை எண்ணுங்கள்; உல்லாசமாக இருங்கள் — அதற்காக உடலைப் பாதிக்கும் இன்பங்களில் ஆழ்ந்து போய், பின்னர் பச்சாத்தாப மடையாதீர்கள். இப்படி வாழ்ந்தால் நோவு நொடியின்றி எல்லாம் சரியாகும். சாவைக் குறித்து நான் இதுதான் சொல்வேன்: உங்களையும் என்னையும் போன்றவர்கள் செத்தால்தான் என்ன? அதனுல் உலகம் ஒன்றும் அதன் அச்சிலிருந்து விலகிவிடாது. நாம் இல்லாமல் உலகம் நடக்க முடியாது என்பதாக நம்மை ஒருபோதும் முக்கியஸ்தர்களாக நாம் எண்ணக்கூடாது'' என்ருர் சுவாமிஜி.

ஏராளமாக மருந்துகள் உட்கொள்ளும் வழக்கத்தை ஹரிபாதர் அன்றிலிருந்து விட்டு விட்டார்.

ஹரிபாத பாபுவுக்குத் தம்மை ஆங்கிலேய மேலதிகாரிகள் கண்டிக்கும்போது எரிச்சல் உண்டாகும். ஆனுல் அவர் நல்ல உத்தியோகத்திலிருந்து, நல்ல சம்பாத்தியம் பெற்றுவந்த போதிலும் ஆங்கிலேயர்களை எதிர்த்துக்கொள்ள முடியாமலிருந்தது. இது சுவாமிஜிக்குத் தெரிந்தபோது அவர், ''நல்ல சம்பாத்தியம்

Koviloor Digital Library

கிடைப்பதால்தான் நீங்கள் இந்த உத்தியோகத்தை ஏற்றிருக்கிறீர்கள். அதேபோல ஊதியமும் பெறுகிறீர்கள். அப்படியிருக்கும்போது நீங்கள் ஏன் எதையோ எண்ணி மனதைக் குழப்பிக் கொள்கிறீர்கள் ? 'நான் அடிமையாகப் பந்தப்பட்டிருக்கிறேன்' என்றே ஏன் எப்போதும் எண்ணி வருகிறீர்கள் ? ஒருவரும் உங்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கவில்லை. உங்களுக்குப் பிடிக்கவில்லையானால் நீங்கள் வேலையை ராஜிநாமா செய்வதற்கு சுதந்திரம் பெற்றிருக்கிறீர்கள். அப்படி யிருக்கும்போது மேலதிகாரிகளை ஏன் நீங்கள் ஓயாமல் குறைகூறவேண்டும் ? உங்களுடைய தற்போதைய நிலையில் நீங்கள் நிர்கதியாக இருக்கிறீர்கள் என எண்ணினால் அதற்கு யாரையோ குறை கூறுகிறீர்கள் ! உங்களையே தான் நீங்கள் குறை கூறிக்கொள்ளவேண்டும் ! நீங்கள் யாரையும் எதிர்பாராமல் நல்லவராக நடந்து கொண்டால், உலகமவ்வளவும் உங்களுக்கு நல்லதாகவே தெரியும், மற்றவர்களிடமுள்ள நன்மையைமட்டும்தான் உங்களால் காணமுடியும். நம் இதயத்திலுள்ள பிம்பத்தின் பிரதி பிம்பத்தைத்தான் நாம் வெளியே காண்கிறோம். குற்றம் காணும் பழக்கத்தை நீங்கள் விடுங்கள். அதன்பின் நீங்கள் மனத்தாங்கல் கொண்டிருப்பவர்களின் மனோபாவம் எப்படிக் காலக்கிரமத்தில் பூரணமாக மாறுகிறது என்பதைக் காண ஆச்சரியமாக இருக்கும். பிறர் நம்மிடம் நடந்துகொள்ளும் முறையில் நம்முடைய மனநிலைகள்தாம் பிரதிபலிக்கின்றன.''

'நம்முடைய மன நிலைகள் எல்லாம் நாம் பிறரிடம் நடந்துகொள்ளும் முறையில் பிரதிபலிக்கின்றன' என்று மட்டுமே நாம் அறிவோம். ஆனால் சுவாமிஜியோ பிறர் நம்மிடம் நடந்துகொள்வது நம் மனநிலையைப் பிரதிபலிக்கும் என்கிறார். நாம் புறத்தே செய்யும் செயல்களைப் போலவே அகத்தே நினைக்கும் நினைவுகளும் பிறரிடம் நம்மைச் சேர்க்கவோ, விலக்கவோ செய்யும் என்கிறார் சுவாமிஜி.

சுவாமிஜியின் இந்த உபதேசத்தைக் கேட்டபின்பு ஹரிபாத பாபு தம் வாழ்வில் ஒரு புதிய அத்தியாயத்தைத் திருப்பினார்.

பகவத்கீதை எப்படி ஒரு வாழ்முறையை வகுத்துக் கொடுக்கிறது என்பதை சுவாமிஜி ஹரிபாதருக்கு விளக்கி வைத்தார்.

ஹரிபாத மித்ரா சொல்கிறார்: ''அவருக்குள்ளது போன்ற அவ்வளவு தீவிரமான தேசபக்தியை நான் யாரிடமும் கண்டதில்லை. ஒரு மாலை செய்தித்தாளொன்றைப் படிக்கும்போது கல்கத்தாவில் ஒருவன் பட்டினியால் மரணமடைந்ததாகக் கண்ட

Koviloor Digital Library

வுடன் சுவாமிஜி சோகாக்ராந்தரானுர். ''மேல்நாடுகளில் தர்மம் செய்வதற்குப் பல ஸ்தாபனங்களிருந்தபோதும் பலர் இதே காரணத்துக்காக — அதாவது சமூகத்தின் புறக்கணிப்பு காரணமாக — மாண்டு போகிறுர்கள். ஆனுல் நம் நாட்டிலோ, தர்மம் எப்போதுமே உயர்வாகக் கடைப்பிடிக்கப்பட்டிருப்பதால் ஒவ்வொரு பிச்சைக்காரனும் ஒரு பிடி அரிசியேனும் தானம் பெறுகிறுன். எனவே பஞ்சம் என்று நேரிட்டாலொழிய இங்கு யாரும் பட்டினியில் சாவதில்லே. இந்நாட்டில் ஒருவன் பட்டினியில் செத்தான் என்று நான் கேள்விப்படுவது இதுவே முதன் முறையாகும்'' என்ருர். நான், ''ஆனுல் எல்லாப் பிச்சைக்காரர்களுக்கும் பணம் காசு போடுவது வீணல்லவா? இவ்வாறு செய்வதால் அவனுக்கு நாம் நன்மை செய்வதற்குப் பதில் அவனே மேலும் இழிவு படுத்துகிருேம் என்றே என்னுடைய ஆங்கிலக் கல்வி எனக்குச் சொல்கிறது. ஏனெனில் நாம் கொடுக்கும் காசைக் கொண்டு அவர்கள் கஞ்சா போன்ற பொருட்களே வாங்கிச் சாப்பிடுகிறுர்கள். இதைவிட (மேல்நாடுகளில் போல) நிறுவனமாக அமைக்கப்பட்ட தர்மஸ்தாபனங்களுக்கு நிதி உதவுவதே சிலாக்கியமாக இருக்கும்'' என்றேன். அதற்கு சுவாமிஜி ஆழ்ந்த உணர்ச்சியுடன், ''நீங்கள் கொடுக்கும் ஒரு பைசாவையோ இரண்டு பைசாவையோ ஒரு பிச்சைக்காரன் எப்படிச் செலவிடுகிறுன் என்பதுபற்றி ஏன் மண்டையைக் குழப்பிக் கொள்ளவேண்டும்? ஏதும் தராமல் அவனே திருடனுக்குவதைவிட வசதியுள்ளவர் தங்களால் முடிந்ததைப் பிச்சை போடுவது மேலல்லவா? நீங்கள் தருகிற அற்பக் காசை அவன் கஞ்சாவில் செலவிட்டால் அது அவனைமட்டும்தான் பாதிக்கும். ஆனுல் அவன் திருடவோ, அதைவிடக் கேவலமான ஒரு தொழிலிலோ ஈடுபட்டால், அது சமூகம் முழுவதையும் அல்லவா பாதிக்கும்?'' என்று கேட்டார்.

சமூக சீர்திருத்தங்கள் பல செய்ய வேண்டுமென்று இந்தச் சமயத்திலிருந்தே சுவாமிஜி அடிக்கடி கூறலானுர். முக்கியமாக பாலிய விவாகத்தை அவர் பெரிதும் எதிர்த்து வந்தார். தம்மிடம் வரும் இளைஞர்களிடம் இவ்விஷயத்தில் அவர்கள் பிடிவாதமாக இருந்து பழக்கத்தை மாற்றவேண்டும் என்று அடித்துச் சொல்வார்.

சந்நியாசம் பெறவேண்டுமென்று யாரேனும் கூறினுல், அதற்கு முன்னதாக ஒருவர் மனசை அடக்கப் பழகி யிருக்க வேண்டும் என்பார் சுவாமிஜி. மாணுக்கனுகவும், கிருஹஸ்தனுகவும் உள்ளபோதே ஒருவன் ஆசை, கோபம், செருக்கு இவற்றை

Koviloor Digital Library

யெல்லாம் விட்டு, மனத்தூய்மை பெற்று அதன் பின்பே துறவியாகவேண்டும் என்றும், மனத்தூய்மை பெறுமுன்னரே பலர் சந்நியாசம் வாங்கிக் கொள்வதால்தான் இந்தியாவில் கஞ்சா சாமியார்களும், போலி சாதுக்களும் பெருகிச் சோம்பல் வாழ்வு வாழ்கிறுர்கள் என்றும் அவர் கூறினுர்.

''ஆனுல், மஹராஜ், நான் குடும்பத்திலிருக்கும்போது கோபம், பெருமிதம் இவற்றை விட்டு, எல்லாரையும் ஒன்ருகப் பார்க்கத் தொடங்கினுல் எனக்கடங்கிய சிப்பந்திகளும், வேலைக்காரர்களும் என் சொல்லைக் கேட்காமல் முரட்டுத்தனமாக நடந்து கொள்வார்களே! என் உறவினர்களே என்னை அமைதியாக இருக்க விடமாட்டார்களே!'' என்ருர் ஹரிபாதர்.

அதற்கு சுவாமிஜி மறுமொழி சொல்வார்: ''ஸ்ரீராமகிருஷ்ணர் எங்களுக்கு ஒரு கதை சொல்வார். ஒரு பாம்பு கிராமம் முழுவதையும் பயத்தில் ஆழ்த்தியிருந்ததாம். அந்தப் பாம்பை ஒரு சாது கண்டு நிறைய நற்புத்தி சொன்னுராம். பாம்புக்குப் பச்சாத்தாபம் உண்டாகிவிட்டது. சாது அந்தப் பாம்பிடம் இனி யாரையும் கடிக்காமல் அஹிம்ஸை வாழ்வு வாழும்படி கூறிப் போய்விட்டார். சிறிது காலமாயிற்று. அந்த சாது இதே கிராமத்தின் வழியாகச் செல்ல நேர்ந்தது. பாம்பைப் பார்க்கச் சென்ருர். அது ஏகமாக அடிபட்டு அரைவாசி செத்துக்கிடந்தது. 'ஏன் இப்படி ஆயிற்று?' என்று கேட்டார் சாது. 'உங்கள் பேச்சைக் கேட்டு பரமசாதுவாக வாழ்ந்ததால்தான் எனக்கு இந்த கதியாகி யிருக்கிறது. முன்பு இந்தப் பக்கமே வர நடுங்கியவர்களெல்லாம் இப்போது சர்வசகஜமாக என்னைப் போட்டுப் புடைக்கிறுர்கள்' என்றது பாம்பு. 'என் குழந்தாய்! நான் சொன்னது என்ன, நீ செய்தது என்ன? ஒருவரையும் கடிக்காமலிரு என்று மட்டும்தானே நான் உன்னிடம் சொன்னேன். உன்னிடம் யாரேனும் வந்தால் சீறவும் கூடாது என்ரு சொன்னேன்?' என்று கேட்டார் சாது. அதன்பின் பாம்பு தன்னிடம் யாரேனும் வாலாட்ட வந்தால் ஒரு சீறல் சீறத் தொடங்கியது. இதனுல் யாருக்கும் தீங்கு செய்யாமலே அதுவும் சுகமாக வாழ்ந்து வந்தது.

''இந்தக் கதையில் வரும் பாம்புபோல் நடந்து கொள்ளுங்கள் ஹரிபாத பாபு! அப்போது நீங்கள் மனத்தூய்மையுடன் காரியங்களைச் செய்து வரும்போதே, பிறர் உங்களை ஏமாற்ருமலும் இருப்பார்கள்''.

இப்படிக் கூறி முடித்தார் சுவாமிஜி.

சுவாமிஜியிடம் பலர் பல சந்தர்ப்பங்களில் ஒரே கேள்வியைக் கேட்பார்கள். ஆனுல் சுவாமிஜி அவர்களுக்கு ஒரேவிதத்தில்

Koviloor Digital Library

பதிலளிக்க மாட்டார். கேட்பவர்களின் மனப்பாங்குக்குப் பொறுத்த விதத்தில் பதில் கூறுவார். ஒரே மாதிரி மனப்பாங்கு படைத்தவர்களிடமும் புதுப்புது உவமைகள் கூறி விளக்குவார். இதனால்தான், அவரிடம் பலர் ஒரே கேள்வியைக் கேட்டபோதும் உடன் இருந்து வந்த ஹரிபாதர் போன்றவர்களுக்கு சுவாமிஜியின் பேச்சு ஒருபோதும் சலிப்பதில்லே.

''அவர் இன்னும் சொல்லமாட்டாரா, சொல்லமாட்டாரா என்றே ஏக்கமாக இருக்கும்'' என்கிறுர் இவ்வளவையும் தமது நாட்குறிப்பில் குறித்து வைத்துக்கொண்டுள்ள பாபு ஹரிபாத மித்ரா.

முக்கியமாக சுவாமிஜி ''மதம் என்பது ஒருவர் நேரடியாக அதை அநுபவிப்பதில்தான் இருக்கிறது. மதத்தை அநுபவத்தில் உணர முயலுங்கள். வேறு எதாலும் பயன் கிடையாது'' என்று ஹரிபாதருக்கு உபதேசித்தார்.

பெல்காம் வாசிகள் சுவாமிஜியிடம் பெரிதும் ஈடுபட்டது அவர் விஞ்ஞான சாஸ்திரத்திலிருந்து இணைகள்காட்டி ஆத்மீகத்தைக் கூறியதில்தான். மதம், விஞ்ஞானம் இரண்டின் லக்ஷியமும் சத்தியம் என்ற ஒன்றுதான் என்று கூறுவார் சுவாமிஜி. நெஞ்சுடைந்த துயரத்துடன் சமூக நிலேபற்றிப் பேசுவார். அசுத்தமான சூழ்நிலேயில் கல்வி வசதியின்றி வாழும் மக்களுக்காகக் கண்ணீர் வடிப்பார். இதயத்தைக் கழற்றிவைத்துவிட்டுச் சமயமும், சமூக நீதிகளும் பேசுவோரைக் கண்டால் சுவாமிஜிக்குப் பெரும் சீற்றமுண்டாகிவிடும். பெல்காம் அவரது இந்த ரௌத்திராகாரத்தைப் பலமுறை கண்டதுண்டு. வாதப் பிரதிவாதங்கள் எவ்வளவு செய்தாலும் பயனில்லே; தாழ்வுற்று வறுமை மிஞ்சி நிற்கும் மக்களே உயர்த்துவதுதான் கடமை' என்பார்.

''பேச்சினுல் ஆவதென்ன? கதை யொன்று சொல்வார்கள். அரசன் ஒருவன் அண்டை நாட்டினர் படையெடுத்து வருவதாகக் கேள்விப்பட்டான். உடனே மந்திராலோசனே சபையைக் கூட்டினுன். எல்லாத் துறைகளேச் சேர்ந்தவர்களேயும் அழைத்து அவரவருடைய யோசனேகளேக் கூறுமாறு கேட்டான். மராமத்து நிபுணர்கள் புதிதாகக் கோட்டை கொத்தளங்கள் கட்டவேண்டும் என்றனர். தச்சுக் கலேஞர்கள் மரத்திலேயே அந்தக் கோட்டைச் சுவர்கள் அமைய வேண்டுமென்றனர். செருப்புத்தைப்பவர்கள் 'தோலுக்கு மிஞ்சி எதுவும் கிடையாது; தோலேக் கொண்டே மதில் எழுப்புவோம்' என்றனர். கருமார்கள் இதெல்லாம் தவறென்றும், இரும்புக்கோட்டை கட்டுவதுதான் உண்மையான பாதுகாப்பென்றும் வற்புறுத்தினுர்கள். இந்தப் பிரச்னே இப்படி

Koviloor Digital Library

முடிவுறுதிருக்கும்போதே வழக்கறிஞர்கள், எதிரியின் முன்பு சட்டங்களை யெல்லாம் எடுத்துப் போட்டு, அந்த ஆதாரத்தில் அவனைப் பின்வாங்கச் செய்யவேண்டுமென்றனர். உடனே மத குருக்கள், 'எல்லாரும் பைத்தியக்காரத்தனமாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். யாகங்கள் செய்து தெய்வங்களைத் திருப்தி செய்தாலன்றி நாம் வெற்றி காணமுடியாது' என்றனர். இப்படியே தங்களுக்குள் விவாதம் செய்துகொண்டனர். எதிரியுடன் போரிடுவதற்குப் பதில் தங்களுக்குள்ளேயே சண்டை செய்துகொண்டனர். எதிரி தன்னிச்சையாக ராஜ்யத்தைக் கவர்ந்து விட்டான். இதைப் போலத்தான் நாம் மக்களை உயர்த்தும் காரியத்தில் உடனே ஈடுபடாமல் பேசிப் பொழுதை வீண் செய்வதும்'' என்றார் சுவாமிஜி.

முதலில் உலகத்தின் கண்ணை ஆத்மீகத்துக்குச் சிறிதே திறந்து விடவேண்டும்; அதனால் இந்தியாவின் கண் நன்றாகத் திறக்கும்; கண் திறந்த இந்தியா உலகத்தின் கண்ணை முழுவதும் மலர்த்திவிடும் என்பதுதான் சுவாமிஜியின் எண்ணமாக இருந்தது. இந்தியா தன் பலத்திலேயே வாழமுடியும் என்ற தன்னம்பிக்கையைப் பெறவேண்டுமானால், அதற்குத் தற்போது இந்தியா எந்த நாகரிகத்தைப் பின்பற்றுகிறதோ அந்த நாகரிகத்தின் பிறப்பிடமான மேல்நாடுகள் இந்தியாவின் ஆத்மிகப் பெருமையை அறிவதொன்றே வழி என்று கருதினார் சுவாமிஜி. எனவே தம்முடைய முதல் அக்கறை இந்திய நாட்டு ஏழைகளைக் குறித்தேயிருப்பினும் — அவர்களின் சுகாதார நிலையும், விவசாய முறைகளும், கல்வி அறிவும் சிறப்புற வேண்டும் என்பதாகவே யிருப்பினும் — தாம் உடனடியாகச் செயல்பட வேண்டியது உலக அரங்கத்தில்தான் என்று அவர் தீவிரமாகக் கருதலானார்.

சிகாகோவில் நடக்கவிருக்கும் சர்வமத மகாசபையில் கலந்துகொண்டு அந்த உடனடிப் பணியைச் செய்யத் தாம் விரும்புவதாக சுவாமிஜி ஹரிபாதரிடம் கூறினார்.

ஹரிபாதர் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டார். சுவாமிஜியின் பிரயாணச் செலவுக்குத் தாம் உடனே நிதி திரட்டத் தொடங்குவதாகவும் முன் வந்தார். ஆனால் எக்காரணத்தாலோ சுவாமிஜி அதற்கு அநுமதி அளிக்கவில்லை.

'எக்காரணத்தாலோ' என்று ஏன் சொல்லவேண்டும்? தாம் மேல்நாடு செல்வதற்கு குருநாதர் அவரது அங்கிகாரத்தையும், அநுக்கிரகத்தையும் ஏதேனும் ஒரு சமிக்ஞை மூலம் அளிக்க வேண்டும் என்பதனாலேயேதான் இதன்பின்னும் நீண்ட நாட்களுக்கு சுவாமிஜி அமெரிக்கப் பயணம் மேற்கொள்ளவில்லையென நாம் ஊகிக்கலாம்.

Koviloor Digital Library

பாரதத்தின் தென் கோடியில் வதியும் ராமநாதனைத் தரிசிக்கு முன்பு தாம் இவ்விஷயமாக முடிவு எடுப்பதில்லை என்று சுவாமிஜி ஹரிபாதரிடம் கூறினார்.

* * *

ஹரிபாத பாபுவின் மனைவிக்குக் குருமுகமாக உபதேசம் பெறவேணுமென்று நீண்ட நாட்களாக ஓர் ஆசை. அப்போதெல்லாம் ஹரிபாத பாபு, ''குருவென்றால் அவர் உண்மையிலேயே போற்றுதலுக்கு உரியவராயிருந்தால்தான் அவரிடம் பெறும் உபதேசம் பலனளிக்கும். அப்படிப்பட்ட ஒரு குரு கிடைக்கும்போது நாம் இருவரும் சேர்ந்தே அவரிடம் உபதேசம் பெறலாம்'' என்று கூறிவந்தார். சுவாமிஜியைக் கண்டு பழகிய பின் 'இவர் பரம உத்தமமான குரு' என்று ஹரிபாதர் — தம்பதி அவரிடம் பக்தி பூண்டனர். ஒரு நாள் ஹரிபாதர் சுவாமிஜியை அணுகித் தமக்கும் தம் மனைவிக்கும் மந்திரோபதேசம் செய்யுமாறு அவரைக் கேட்டுக் கொண்டார்.

சுவாமிஜி மறுத்தார். ''குருவாயிருப்பது ரொம்பக் கஷ்டம்'' என்றவர், சிரித்தபடியே ''சிஷ்யரின் பாபம் குருவைத் தான் சேரும், தெரியுமல்லவா ?'' என்றார்.

சந்நியாசி மூன்று நாட்களுக்குமேல் ஓர் இடத்தில் தங்கக் கூடாது என்று கூறிய சுவாமிஜியிடம் பிடிவாதம் பிடித்து அவரை மேலும் சில நாட்கள் தங்கவைத்தவரல்லவா ஹரிபாதர் ?

இப்போதும் பிடிவாதம் பிடித்தார் ஹரிபாதர்.

இப்போதும் ஹரிபாதரின் பிடிவாதம் வென்றது.

Koviloor Digital Library

அத்தியாயம்—15

தென்னட்டில் சுவாமிஜி

பெல்காமிலிருந்து சுவாமிஜி பெங்களூர் வந்து சேர்ந்தார். முதலில் சில நாட்கள் யாருமறியாது அங்கு வாழ்ந்தபின் மைசூர் சம்ஸ்தானத்துத் திவாணுகிய ஸர் கே. சேஷாத்ரி ஐயர் என்பவரைச் சந்தித்தார் சுவாமிஜி. சில நிமிஷங்கள் சுவாமிஜியுடன் சம்பாஷித்ததிலிருந்தே திவானுக்கு, அவர் காந்த 'சக்தி வாய்ந்தவர்; இந்நாட்டு சரித்திரத்தில் ஒரு முத்திரையைப் பொறிக்கப் போகும் தெய்வீக சக்தி பொருந்தியவர் என்ற உணர்ச்சி ஏற்பட்டது. சுமார் நாலு வாரங்கள் போல் சுவாமிஜி திவான் சேஷாத்ரி ஐயரின் விருந்தாளியாகத் தங்கியிருந்தார். அங்கு மைசூர் ராஜசபையைச் சேர்ந்த பல அதிகாரிகளையும், அரச பரம்பரையினரையும் சுவாமிஜி கண்டு உரையாடி வந்தார். பல்வேறு சமயத்தினரும் அவரை நாடிவந்து பயனடைந்தனர்.

ஸர் சேஷாத்ரி ஐயர் கூறினுர்: ''நம்மில் பலர் மதவிஷயமாக நிறையப் படித்திருக்கிறோம். ஆனுலும் அதிலிருந்து நாம் பெற்ற பயன் என்ன? இதோ இங்கே உள்ள இளம் சுவாமி* நான் அறிந்த எல்லாரையும்விடத் தீர்க்கமாகச் சமயத்தின் ஆழத்தை உணர்ந்திருக்கிறுர். இது அற்புதமன்றி வேறில்லை. பிறக்கும் போதிலிருந்தே இவர் சமய ஞானியாக இருக்கவேண்டும். இல்லாவிடில் இந்த இளம் பிராயத்துக்குள் இவர் எப்படி இவ்வளவு ஞானமும், ஆழ்ந்த உணர்வும் பெற்றிருக்க முடியும்?''

சுவாமிஜி ஒரு 'பாலிய ஆசாரிய புருஷர்' எனக் குறிப்பிட்ட திவான், அவர் மஹாராஜாவைக் காணவேண்டும் எனக் கருதினுர். இவ்வாறே அன்று மைசூர் மன்னராக இருந்த சாமராஜேந்திர உடையாருக்கும் சுவாமிஜிக்குமிடையே அரண்மனையில் சந்திப்பு நிகழ்ந்தது. பாரத மரபுகளில் நன்கு ஊறிய மஹாராஜா சுவாமிஜியினுல் பெரிதும் கவரப்பட்டார். சுவாமிஜியுடைய சிந்தனை ஒளியையும், தோற்ற வசிகரத்தையும், விரிந்த வித்யா விலாஸத்தையும், ஆழ்ந்த சமய உள்ளுணர்வையும் பெரிதும் போற்றினுர் மஹாராஜா. சுவாமிஜியை அரசாங்க விருந்தினராக இருக்கச் செய்து மரியாதை செலுத்தினுர்.

மைசூர் மஹாராஜாவும் சுவாமிஜியும் அநேக முறைகள் தனித்திருந்து சம்பாஷித்தனர். பற்பல விஷயங்களில் சுவாமி

* சுவாமிஜிக்கு அப்போது முப்பது வயது தான்.

Koviloor Digital Library

ஜியின் நல்லுரையை நாடினுர் மன்னர். ஒரு நாள் தமது ராஜ சபையைச் சேர்ந்த பிரமுகர்களின் முன்னிலேயில் மஹாராஜா சுவாமிஜியிடம் ''என்னுடைய சபைப் பிரமுகர்களேப்பற்றித் தங்களது கருத்து என்ன சுவாமிஜி'' ? என்று வினவினுர்.

''துரதிர்ஷ்டவசமாக எல்லா ராஜசபையினரும் எப்படியிருக்கிருர்களோ அப்படியேதான் உங்கள் ராஜசபையினரும் இருக்கிருர்கள்'' என்று நறுக்குத் தெரித்தாற்போலக் கூறினுர் சுவாமிஜி. அதாவது அவர்கள் மஹாராஜாவுக்கு இச்சகம் பாடுபவர்களாகவே இருக்கிருர்கள் என்று குறிப்பாலுணர்த்தி விட்டார்.

எல்லாருக்கும் தூக்கிவாரிப் போட்டது. மன்னர் சுதாரித்துக்கொண்டு, ''அல்ல சுவாமிஜி, அல்ல. என்னுடைய திவாளுருவரேனும் அவ்வாறில்லே. அவர் நல்லறிவு படைத்தவர்; மிகவும் நம்பகமானவர்'' என்ருர்.

சுவாமிஜி அதற்கும் விடாமல் ''ஆனுல் மஹாராஜா, எந்தத் திவானுமே தமது அரசனே ஏமாற்றி, ப்ரிட்டிஷாரின் ஏஜண்டுக்குப் பொருளேக் குவிப்பவர்தான்'' என்ருர்.

அரசர் பேச்சை மாற்றி விட்டார்.

பிறகு தாமும் சுவாமிஜியும் தனித்திருக்கும்போது மைசூர் அதிபர், ''என் அன்பு ஆர்ந்த அடிகளே ! மிகவும் வெளிப்படையாகப் பேசுவது அபாயமாகும். நீங்கள் சற்றுமுன் பேசினுற்போலவே இனியும் செய்தால் உங்களுக்கு யாரேனும் விஷம் வைத்து விடுவார்கள்'' என்ருர்.

உடனே சுவாமிஜி பேச்சில் வெடித்தார்: ''என்ன சொன்னீர்கள் ? உண்மையான சந்நியாசி ஒருவன் உண்மை பேச பயப்படுவான் என்ரு நினேக்கிறீர்கள் ? தன் உயிருக்கு ஆபத்து என்பதற்காக அவன் பொய் சொல்வான் என்ரு எண்ணுகிறீர்கள் ? நாளேக்கே உங்கள் பிள்ளே என்னிடம், 'சுவாமிஜி, என் தகப்பனுரைப்பற்றி என்ன அபிப்பிராயப்படுகிறீர்கள்' என்று கேட்பதாக வைத்துக் கொள்வோம். நான் உங்களிடம் எந்தக் குணவிசேஷங்கள் இல்லே என்று எனக்கு நன்ருகத் தெரியுமோ அவை உங்களுக்கிருப்பதாக இளவரசரிடம் சொல்வேனு ? நான் அசத்தியமா சொல்வது ? ஒருபோதுமில்லே.''

ராஜசபையினர், திவான், மன்னர் யாரையுமே சத்தியத்துக்கு முன்பு அலக்ஷியமாகக் கருதும் சுவாமிஜியின் சிலத்தைப் பாருங்கள் ! தமக்கு சகல உபசாரங்களும் செய்தவர்கள் என்பதற்காகவோ, தம்முடைய மேல்நாட்டுப் பயண உத்தேசத்துக்கு உதவியாகயிருப்பார்கள் என்பதற்காகவோ அவர் உள்ளத்துக்குக் கள்ளம் செய்யாத உயர்வை எண்ணிப் பாருங்கள் ! அவருடைய

Koviloor Digital Library

இந்த சத்திய பக்தி காரணமாகத்தான் வெளிப்பார்வைக்கு அவ ரால் இடித்துரைக்கப்பட்டவர்களும் அவரிடம் வெறுப்புக் கொள்ளவில்லை. மைசூர் மஹாராஜாவும் திவானும் அதன் பின் பும் அவரிடம் மரியாதையுடனும், அன்புடனும் பழகி வந்தனர்.

சுவாமிஜியின் ஒரு குணம் ஒருவரை அவர் எதிரிலேயே பாராட்டாதிருந்ததாகும். நேரில் ஒருவரைக் கண்டவிடத்து அவ ரது குறைகளையேகூறித் திருத்திக்கொள்ளச் சொல்வார். ஆனால் பிறரிடம் பேசும்போது ஒருவரது குணநலன்களைப் பற்றியே பேசு வார். மைசூர் மன்னரைப்பற்றியும் சுவாமிஜி மற்றோரிடம் மிக உயர்வாகப் பேசியுள்ளார்.

மைசூர் ராஜக் கிருஹத்தில் தங்கியிருந்தபோது ஆஸ்திரியா தேசத்தைச் சேர்ந்த ஓர் இசைக்கலைஞரை சுவாமிஜி சந்தித்தார். அவரிடம் ஐரோப்பிய சங்கித நுணுக்கங்களைப்பற்றி சுவாமிஜி சரளமாக விவாதித்தது எல்லாருக்கும் மிக ஆச்சரியமாகி விட்டது. இன்னொரு நாள் அரண்மனையில் மின்சாரவேலை நடக்கும்போது அலுவலரிடம் சுவாமிஜி மின்சார விஞ்ஞானம்பற்றிப் பேசியதும் இவ்வாறே மற்றோருக்கு வியப்பளித்தது.

சுவாமிஜி மைசூரில் இருந்தபோது அங்கு வித்வத் ஸதஸ் ஒன்று நடைபெற்றது. சுவாமிஜியும் அதில் கலந்து கொண்டார். வேதாந்தத்தைப்பற்றி விவாதிக்கப் புகுந்த அந்த ஸதஸுக்குத் திவானே அக்ராஸனம் வகித்தார். எல்லாப் பண்டிதர்களும் பேசிய பின்பு சுவாமிஜி பிரசங்கம் புரியுமாறு கேட்டுக்கொள் ளப்பட்டார். அழுத்தம் திருத்தமான மொழியில் சுவாமிஜி வேதாந்த சாரத்தை அப்படியே பிழிந்து வருவதுபோல அற்புத மானதோர் உரையாற்றினர். எல்லாப் பண்டிதர்களும் ஒருகுர லாக அவரைப் பாராட்டிக் கரக்கம்பம் செய்தனர்.

திவான் சேஷாத்ரி ஐயருக்கு இப்படிப்பட்ட ஒரு சாதுவின் பரிசயம் கிட்டியதில் எல்லையற்ற பெருமையும் மகிழ்ச்சியும் உண் டாயிற்று. ஒரு நாள் தம் காரியதரிசிகளில் ஒருவரிடம் செக் புத்தகமொன்றளித்தார் அவர். ''சுவாமிஜியைக் கடைவீதிக்கு அழைத்துச் சென்று ஆயிர ரூபாய் அளவுக்கு (இந்த நாளில் அது பத்தாயிரத்துக்கு சமானம்) அவர் விரும்பும் பொருள்களை வாங்கித் தாருங்கள்'' என்று கூறினர். அவரைத் திருப்தி செய்வதற்காக சுவாமிஜி காரியதரிசியுடன் பஜாருக்குச் சென்றார். கைவேலைக்குப் பேர் பெற்ற கர்நாடகத்தின் கலைப் பொருட்களையெல்லாம் கண்டு குழந்தையானர் சுவாமிஜி. எதைக் கண்டாலும் அவருடைய விசால நயனங்களில் ஒரு குதூகலமும், கொண்டாட்டமும் ஏற் பட்டது. எல்லாவற்றையும் பார்த்தாரேயன்றி, எதையுமே

Koviloor Digital Library

தமக்கென்று வாங்கிக்கொள்ள அவர் பிரியப்படவில்லை. இருந்த உடைமைகளையெல்லாம் தூ வென்று தள்ளி வந்தவர் புது உடைமைகள் சேர்ப்பாரா, என்ன ?

''ஒன்றுமே வாங்கிக் கொள்ளவில்லையே, சுவாமிஜி'' என்ருர் காரியதரிசி.

''நான் விரும்பும் பொருள் எதுவானுலும் வாங்கிக் கொள்ளலாம் என்று திவான் கூறினுரல்லவா ?'' என்று கேட்டார் சுவாமிஜி.

''ஓ'' என்ருர் காரியதரிசி.

''அப்படியானுல் இங்கு கிடைப்பதில் மிகவும் உயர்ந்த சுருட்டு ஒன்று வாங்கித் தாருங்கள்'' என்ருர் சுவாமிஜி — குழந்தை நரேனுகி.

முக்கால் ருபாய் பெறுமானமுள்ள சுருட்டைக் கொளுத்தி மகிழ்ந்தபடி அரண்மனை திரும்பினுர்.

மற்றொரு நாள் மஹாராஜாவின் அழைப்புப்படி சுவாமிஜி திவானுடன் அவரைக் காணச் சென்ருர்.

''சுவாமிஜி, தங்களுக்கு நான் என்ன கைங்கர்யம் செய்யட்டும் ?'' என்று வினயமாக கேட்டார் வேந்தர்.

சுவாமிஜி இதற்கு நேரடியாக ஏதும் பதில் சொல்லவில்லை. தம் மனதிலிருந்த மாபெரும் பணியைப்பற்றி உணர்ச்சிகரமான சொற்களில் விரித்துரைக்கலானுர். இந்தியாவின் அன்றைய இழி நிலையை எடுத்துக் கூறினுர். ''இந்தியா தத்துவத்தையும், ஆத்மிகத்தையுமே செல்வமாகக் கொண்டது. பொருளாதாரத்திலும், விஞ்ஞானத்திலும் வறியநாடு இது. தன்னிடமுள்ளதை மேல் நாடுகளுக்குக் கொடுத்துதவி அவைகளிடமிருந்து பொருளாதார உயர்வையும், விஞ்ஞான அறிவையும் இந்தியா பெறவேண்டும் என்று கூறினுர் சுவாமிஜி. இந்த பரிவர்த்தனைக்காகத் தாம் சிகாகோவில் நடைபெறவிருக்கும் சர்வமத மஹாசபைக்குச் செல்ல விரும்புவதாகவும் வெளியிட்டார். மேல்நாடுகளிலெல்லாம் வேதாந்தத்தின் உண்மையைப் பரப்பத் தாம் துடித்துக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

உடனேயே மைசூர் மன்னர் சுவாமிஜியின் மேல்நாட்டு யாத்திரைக்குத் தேவைப்படும் செலவைத் தாம் அளிப்பதாக முன் வந்தார்.

ஆனுல் முன்பு ஹரிபாதரிடம் செய்ததுபோலவே இப்போதும் சுவாமிஜி, ''இப்போதைக்குத் தங்கள் உதவி வேண்டாம்'' என்று கூறிவிட்டார். ''நான் ராமநாதனைத் தரிசிக்கவேண்டும்; அதன் பின்பு பார்த்துக் கொள்ளலாம்'' என்று கூறி விட்டார்.

Koviloor Digital Library

நாளாக ஆக மன்னருக்கு சுவாமிஜியிடம் நேசமும், பாசமும் அதிகமாகிக் கொண்டே வந்தது. சுவாமிஜி ''போய் வருகி றேன்'' என்று புறப்பட்டபோது வாஸ்தவமாகவே மைசூர் சாம்ராட்டின் கண்களில் நீர் துளித்து விட்டது.

''சுவாமிஜி, தங்கள் நினைவாக தங்களது குரலைப் போனோ கிராமில் பதிவு செய்து நான் வைத்துக் கொள்ள அநுமதி யுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார் சாமராஜேந்திர மன்னர்.

சுவாமிஜியும் இணங்கினர்.

இன்னும் அந்த ரிகார்டு மைசூர் அரண்மனையில் உள்ளது; ஆனல் அதில் ஒலி மங்கிப்போய் எத்தனையோ காலமாகி விட்டது.

மஹாராஜாவுக்கு இன்னோர் ஆசையும் இருந்தது. ஆசாரி யர்களுக்குச் செய்வதுபோலத் தாம் சுவாமிஜிக்குப் பாத பூஜை செய்ய விரும்புவதாக அவர் தெரிவித்தார். சுவாமிஜி மெத்த மனநெகிழ்ச்சியுடன் அதற்கு மறுத்து விட்டார்.

மஹாராஜா தாம் சுவாமிஜிக்கு ஏதேனும் நினைவுப் பரிசு அளித்தே தீரவேண்டும் என்று முனைப்பாக இருந்தார். இனி மறுக்கமுடியாது என்ற நிலை ஏற்பட்ட பின் சுவாமிஜி, ''வேந்தே, விடமாட்டீர்கள் போலிருக்கிறதே ! நல்லது, உலோகக் கலப் பில்லாமல் ஒரு ஹுக்கா (புகைக் குழல்) வாங்கிக் கொடுத்தால் எனக்குக் கொஞ்சம் பிரயோஜனமாயிருக்கும்'' என்றார்.

நூக்கமரத்தில் வெகு நுண்ணிய வேலைப்பாடமைந்த அழகிய புகைக்குழலொன்றை சுவாமிஜிக்கு அளித்தார் மைசூர் மன்னர்.

சுவாமிஜி விடை பெற்றுக்கொள்ளும்போது அவர் பாதத்தில் விழுந்து பணிந்தார் அரசர். திவான் சேஷாத்ரி ஐயர் கத்தை ரூபாய் நோட்டுக்களைக் கையில் வைத்துக் கொண்டு, இறுதி முயற்சியாக அதனை சுவாமிஜியின் அங்கியில் திணிக்கப் பிரயத் தனம் செய்துகொண்டிருந்தார்.

சுவாமிஜி அவரிடம், ''எனக்காக ஏதேனும் செய்தே தீர வேண்டுமெனில் திருச்சூருக்கு டிக்கெட் வாங்கித் தாருங்கள்'' என்றார்.

டிக்கட்டோடு, கொச்சி சம்ஸ்தானத்தில் இடைக்காலத் திவானக இருந்த சங்கரய்யாவுக்கு ஓர் அறிமுகக் கடிதமும் கொடுத்தார் மைசூர் பிரதமர்.

* * *

திருச்சூரில் ஒரு சில தினங்களே தங்கிய சுவாமிஜி கேரள நாட்டின் சித்திராலங்கார அழகுகளைக் கண்டவாறு சஞ்சரித்துக்

Koviloor Digital Library

கொண்டிருந்தார். திருவிதாங்கூர் ராஜ்யத்தின் தலைப்பட்டண மான திருவனந்தபுரத்தைச் சென்று சேர்ந்தார்.

அங்கு மன்னரின் மருமகனும், முதல் இளவரசருமான மார்த் தாண்ட வர்மருக்குப் போதகராயிருந்த பேராசிரியர் சுந்தரராம அய்யரின் இல்லத்தில் தங்கினார். சுவாமிஜி அங்கு வசித்தபோது நிகழ்ந்த சம்பவங்களை சுந்தரராம அய்யரும், அவரது புத்திரரும் இன்று சென்னை நகரத்தின் முதுபெரும் பிரமுகர்களில் ஒருவராக விளங்கிவருபவருமான ஸ்ரீ கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி அவர் களும் அருமையான கட்டுரைகளாக வடித்துத் தந்திருக்கிறார்கள்.

கொச்சி ராஜ்யத்து சேவகரான ஒரு முஸ்லிமுடன் சுவாமிஜி சுந்தரராம ஐயரின் இல்லத்தை அடைந்திருக்கிறார். தலையில் சிகப்புத் தலைப்பாகையும், பூமிமட்டும் புரளும் காவி அங்கியும், இடுப்பில் 'பெல்ட்' போலக் கட்டிய வஸ்திரமுமாக வந்த சுவாமி ஜியை சுந்தரராம ஐயரின் இரண்டு பிள்ளைகளும் பார்த்தனர். மூத்தவரான ராமஸ்வாமிக்கு அப்போது வயது சுமார் பதிநாலு. அந்த ஆண்டுதான் அவர் எப். ஏ. சேர்ந்திருந்தார். இளைய வருக்குப் பன்னிரண்டு பிராயம். தென், இந்திய சந்நியாசிகளை மட்டுமே பார்த்திருந்த இரண்டு பிள்ளைகளுமே சுவாமிஜி ஒரு சந்நியாசியாக இருப்பார் என்று நினைக்கவில்லை. அவரது முகத் தில் ததும்பிய கம்பீரத்தைக் கண்ட மூத்த பிள்ளை தந்தையிடம் சென்று, 'அப்பா நம் விட்டுக்கு யாரோ ராஜா வந்திருக்கிறார்' என்றான். இளையவன், 'அப்பா நம் வீட்டுக்கு இரண்டு முஸ்லீம் கள் வந்திருக்கிறார்கள்' என்றான்.

வந்தவருடன் சிறிது சம்பாஷித்தபின் சுந்தரராம அய்யருக்கு அவர் மன்னருமல்ல, முஸ்லிமும் அல்ல என்பது தெரிந்தது. அவர் வங்காளநாட்டு சாது என்று அறிந்து கொண்டார்.

சுவாமிஜி வந்தவுடன் தம்மோடு வந்துள்ள முகம்மதியருக்கு உணவு ஏற்பாடு செய்யவேண்டியதுபற்றித்தான் பேசினார். சுவாமிஜி இதற்கு முன் இருதினங்களில் பாலைத் தவிர வேறெது வும் பருகாதிருந்தபோதிலும் தம்முடைய தேவையை அப்போது தெரிவிக்கவில்லை. உடன் வந்த சேவகர் உணவுண்டு விடை பெற்றுக்கொண்டார். சுவாமிஜியோடு சிறிதுபோது பேசியதி லேயே அவர் அசாதாரணமானவர் என்பதை சுந்தரராம ஐயர் தெரிந்து கொண்டார்.

சுவாமிஜி வங்காளி என்பதனால் வங்கத்துப் பெருமக்களில் தாம் அறிந்திருந்தவர்களைப் பற்றி எல்லாம் சுந்தரராம ஐயர் கூறினார். முக்கியமாக பிரம்ம சமாஜத் தலைவரான கேசவ சந்திர சேனரைப்பற்றிக் குறிப்பிட்டார். உடனே சுவாமிஜி அது

Koviloor Digital Library



சுவாமி விவேகானந்தர் – திருவனந்தபுரம் 1892

Koviloor Digital Library



சுவாமி விவேகானந்தர் – லண்டன் 1896

Koviloor Digital Library

வரை தென் இந்தியா கேள்விப்பட்டிராத ஸ்ரீராமகிருஷ்ணரின் மகிமைகளை உணர்ச்சி பொங்க விஸ்தரிக்கத் தொடங்கினுர். 'ஸ்ரீராமகிருஷ்ணருடன் ஒப்பிடுங்கால் கேசவசந்திரர் ஒரு குழந்தையே; கேசவ சந்திரரும், இன்னும் பல வங்கத்து முக்கியஸ்தர்களும் ஸ்ரீராமகிருஷ்ணரிடமிருந்து பெரும் பயன் பெற்றிருக்கின்றனர்; ஐரோப்பியர்களும்கூட அவரைத் தரிசித்து தெய்வீகம் பொருந்திய மனிதர் அவர் என்று மரியாதை செய்திருக்கின்றனர்; வங்காளத்துப் பொதுக்கல்வி டைரக்டரான ஸி. ஹெச். டானி என்ற ஆங்கிலேயர் ஸ்ரீராமகிருஷ்ணரின் உளப்பாங்கு, மேதா விலாஸம், பரந்த மனப்பான்மை, பிறரில் ஆன்மீகத்தைத் தூண்டி விடும் ஆற்றல் இவைபற்றி கட்டுரை எழுதியுள்ளார்' என்று கூறினுர் சுவாமிஜி.

சுவாமிஜியின் மோஹன உருவும், மதுரக்குரலும், மகோந்நதமான கருத்துக்களும் சுந்தரராம ஐயரைக் கொள்ளை கொண்டபடியால் அன்று அவர் இளவரசருக்குப் பாடம் புகட்டக்கூடச் செல்லவில்லை. அன்று மாலை சுந்தரராம ஐயர் சுவாமிஜியைப் புகழ்பெற்ற ரஸாயன விஞ்ஞானியாகிய பேராசிரியர் ரங்காசாரியா என்பவரின் இல்லத்துக்கு இட்டுச் சென்ருர். அங்கு அவர் இல்லாததால் திருவனந்தபுரம் கிளப்புக்கு இருவரும் சென்றனர். அங்கு ரங்காசாரியா, பேராசிரியர் சுந்தரம் பிள்ளை ஆகியோருக்கு சுவாமிஜி அறிமுகம் செய்யப்பட்டார்.

சங்கத்திலிருந்த நாராயண மேனன் என்பவர் தாம் புறப்படும்போது அங்கிருந்த பிராமண பேஷ்கார் ஒருவருக்கு வணக்கம் தெரிவித்ததையும் அதற்குப் பதிலாக அந்தப் பிராமணர் கைகூப்பும்போது இடதுகையை வலது கைக்குச் சற்று மேல் உயர்த்தியதையும் சுவாமிஜி கவனித்தார். பிராமணர்கள் மற்றவர்களுக்கு இப்படி வணக்கம் தெரிவிக்கும் சம்பிரதாயம் உண்டு. பிறகு சுவாமிஜி கிளப்பிலிருந்து புறப்படும் சமயத்தில் பேஷ்கார்,சுவாமிஜிக்கு அஞ்சலி செய்தார். சுவாமிஜி அதற்குப் பதில் வணக்கம் செய்யாமல், சந்நியாசிகளின் வழக்கப்படி 'நாராயண, நாராயண' என்றுமட்டும் தமது தீங்குரலில் கூறினுர். சுவாமிஜி தமக்குச் சரியாக மரியாதை செய்யவில்லை என்று பேஷ்காருக்குக் கோபம் வந்துவிட்டது. சுவாமிஜி அவரைக் கேட்டார்: ''ஸ்ரீநாராயண மேனன் வணங்கியபோது நீங்கள் உங்கள் சம்பிரதாயப்படி அதற்கு உத்தரம் தந்தால், நான் ஏன் அதே போல உங்களுக்கு சந்நியாசிகளின் வழக்கப்படி ஆசி கூறக்கூடாது ?'' என்று.

மறு நாள் காலை அந்தப் பிராமணரின் சகோதரர் சுவாமிஜியிடம் வந்து மன்னிப்புக் கேட்டுப் போனுர்.

Koviloor Digital Library

சுவாமிஜி பிராமணரிடத்திலெல்லாம் ஏதோ மனக்கசப்புக் கொண்டிருந்ததாக எண்ணிவிடாதீர்கள். இதே திருவனந்தபுரம் கிளப்பில் நடந்த இன்னொரு சம்பவம் இதற்குச் சான்ருகும். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை தமக்கும் ஹிந்து மதத்துக்கும் சம்பந்தமில்லை என்றும் தாம் ஒரு திராவிடர் என்றும் கூறினர். இதை சுவாமிஜியால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பின்னர் சுந்தரராம ஐயரிடம் அவர், சுந்தரம் பிள்ளை மிகவும் பாண்டித் தியம் பெற்றவர் என்பது உண்மைதான். ஆனல் அவர் இன வேற்றுமைகளுக்கு இடம் அளித்திருக்கிருர். தென் இந்தியாவில் புத்தி சமநிலையில்லாத சாமானிய மனிதர் சிலரிடம் இந்த அருசி யான அம்சம் இருப்பதைப் பார்த்தேன்'' என்ருர்.

சுவாமிஜி இந்தியாவில் பல்லாயிரம் ஆண்டுகளாக இனக் கலப்பு ஏற்பட்டுவிட்டதாகவும், யாரும் தங்களைக் குறிப்பிட்ட ஓர் இனமாகக் கருதமுடியாது என்றும் அபிப்பிராயப்பட்டார். இது விஷயத்தில் அவரிடமிருந்து வேருெரு நாள் முரண்பட்டார் சுந்தரராம ஐயர். ஸி. எல். ப்ரேஸ் முதலிய அறிஞர்களின் நூல் களை ஆதாரமாகக் காட்டிய சுந்தரராம ஐயர் பிராமணர்கள் இனக் கலப்பற்றவர்கள் என்று வாதித்தார். சுவாமிஜியோ கருப்புத் தோலுள்ள பிராமணர்களெல்லாம் திராவிடக் கலப்புள்ளவர்கள் என்ருர். தோலின் நிறம் சீதோஷ்ணம் முதலியவற்றைப் பொறுத்தது என்று சுந்தரராம ஐயர் எடுத்துக் காட்டினர். இரு வரும் தத்தம் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளவில்லை. எனி னும் சுவாமிஜி சுந்தரராம ஐயரிடம் இன்னெரு சமயத்தில் பேசும்போது, ''சுயநலமின்றி தனக்குரிய கருமத்தைப் புரிந்து, எல்லா மக்களுக்கும் தனது ஞானசம்பத்தை அளிக்கும் வரையில் பிராமண குலம் உயிர் வாழும். பாரதத்துக்குப் பிராமண குலம் மகத்தான பணி செய்தது; செய்கிறது; இனியும் இதைவிட உயரிய பணி செய்ய இறைவனல் விதிக்கப்பட்டிருக்கிறது'', என்று மணி முழங்குவதுபோலக் கூறினர்.

வேத வேதாந்தத்துக்கென்றே தம்மை அர்ப்பணித்துக் கொண்டு பிராமணர்கள் ஒரு குலமாக வாழ்வதை சுவாமிஜி ஆக்ஷேபிக்கவில்லை என்பது வெள்ளிடை மலை. எனினும் பிற தொழில் புரிபவர்களுக்கும் வேத வேதாந்தங்களை அது புகட்ட வேண்டும் என்று அவர் கருதினர்.

எம். ஏ. பரீக்ஷைக்குப் படித்துக் கொண்டிருந்த இளவரசர் மார்த்தாண்ட வர்மரை சந்தித்தார் சுவாமிஜி. சுந்தரராம ஐய ரிடம் போதனை பெற்றுவந்த இளவரசருடைய விருப்பத்தின் மீதுதான் இந்த சந்திப்புக்கு ஏற்பாடாயிற்று. பல ராஜ்யங்

Koviloor Digital Library

களில் தாம் கண்ட அதிபர்களைப்பற்றி எல்லாம் இளவரசரிடம் கூறிய சுவாமிஜி பரோடா கேக்வாரையும், கேத்ரி மன்னரையும் விசேஷமாகப் புகழ்ந்தார். திருவிதாங்கூர் மக்களின் முன்னேற்றத்துக்காக ஓர் அரசக்குடிமகன் எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவையும் தமது எதிர் காலத்தில் செய்வதாக இளவரசர் சுவாமிஜிக்கு வாக்களித்தார். சுவாமிஜியின் சுந்தரத் திருஉருவில் லயித்த அவர், தாமே புகைப்படம் எடுக்கத் தெரிந்தவராயிருந்தபடியால் சுவாமிஜியை ஒரு புகைப்படம் எடுத்தார். இதனைப் பின்னர் இளவரசர் சென்னை மியுஸியத்தில் நடைபெற்ற நுண்கலைக் காட்சியொன்றுக்கு அனுப்பி வைத்தார்.

மற்றொரு நாள் திவான் சங்கர சுப்பையரின் முயற்சியினால் சுவாமிஜி திருவிதாங்கூர் மஹாராஜாவைச் சந்தித்தார். மஹாராஜா இரண்டு மூன்று நிமிஷங்களே சுவாமிஜியுடன் சம்பாஷித்தார். திருவனந்தபுரத்திலும், திருவிதாங்கூர் ராஜ்யத்தின் இதர பகுதிகளிலும் சுவாமிஜியின் சௌகரியங்களைத் திவான் கவனித்துக்கொள்வார் என்று அவர் கூறினார். சந்திப்பு இவ்வளவு குறைந்த நாழிகையே நடைபெற்றதில் சுவாமிஜிக்குச் சிறிது அதிருப்தி என்று சுந்தரராம ஐயர் குறிப்பிடுகிறார்.

சுந்தரராம ஐயர் ஆசார அநுஷ்டானங்களில் நம்பிக்கையுள்ளவராக இருந்தபடியால் சுவாமிஜி பெரும்பாலும் அவருக்கு ஒவ்விய முறையிலேயேதான் பேசுவாராம். எனினும் தேசாசாரமேதான் சமயம் என்று நினைப்பதைப்பற்றி ஓரிரு சமயங்களில் மிகவும் வன்மையாகக் கண்டித்துமிருக்கிறாராம்.

விஞ்ஞானத்துக்கு மனிதன் அடிமைப்பட்டிருக்கிறான் என்பதைக் குறித்து ஒரு நாள் சுவாமிஜி தீவிரமாக கண்டனம் செய்தார். பெரிய விஞ்ஞான உண்மைகளாகக் கருதப்படும் பரிணாமக் கொள்கை உள்பட பல கொள்கைகள் சந்தேகமற நிரூபணமாகவில்லை என்றும், எனினும் இவை பரம சத்தியம் போல மக்கள் கருதுவதாகவும் அவர் மொழிந்தார். மனதை அடக்கிச் சிந்தனையற்றிருக்கும் நிலையில் கடவுளை உணர முடியும் என்பதை ஒரு விஸ்தாரமான சாஸ்திரமாகவே இந்தியா வகுத்து வைத்திருக்கும்போது, அதனைச் சோதித்துக்கூடப் பாராமல் நாஸ்திகம் பேசுவதை சுவாமிஜி உத்வேகத்துடன் எதிர்த்தார். மனித இயல்பில் அசாதாரணமான அநுபவங்களைத் துய்க்கக்கூடிய மகிமைகள் இருப்பதைக் கருதாமல், இழிய வேகங்களை மட்டும் ஆதாரமாகக் கொண்டு எழுப்பியுள்ள மனோதத்துவ சாஸ்திரம் முழு உண்மையையும் கூறவில்லை என்றார். உன்னதமான ஒரு வாழ்முறையையும் அதன்படி வாழ்ந்தவர்களையும்

Koviloor Digital Library

பற்றிப் பாரதம்தான் அறியும் என்று எடுத்தியம்பினுர். ஐரோப்பிய விஞ்ஞானம் எங்கு முடிகிறதோ அங்கு பாரதத்தின் ஆத்மிகம் தொடங்குகிறது என்ருர். 'மதம் மட்டுமே — முக்கியமாக பாரத ரிஷிகள் கண்ட மதம் மட்டுமே — மனித மனதின் சூக்ஷ்மமான, ரகசியமான செயல் முறைகளை அறிய முடியும்; அதுவொன்றே மனசின் ஆத்மிகமற்ற வேகங்களை வென்று, ஒன்றேயான சத்திய வஸ்துவை அநுபவிக்க வழி வகுக்கும்' என்று உள்ளத்திலிருந்து பேசினுர்.

பிற்காலத்தில் பல பொது மேடைகளில் சுவாமிஜியிடமிருந்து உதிரப்போகும் அறிவுக்கனல் பொறிகளை முன்கூட்டியே காணும் பேற்றினைப் பெற்றிருந்தார் சுந்தரராம ஐயர்.

சமூகப் புரட்சி நடைபெறவேண்டுமென்பதில் தமக்குள்ள ஆர்வத்தை சுவாமிஜி சுந்தரராம ஐயரிடம் தெரிவித்ததுண்டு. 'எல்லா குலத்தைச் சேர்ந்தவர்களும் சம்ஸ்கிருதம் கற்கவேண்டும். இதேபோலப் பெண்கள் எல்லாருக்கும் சம்ஸ்கிருதக் கல்வி அளிக்க வேண்டும். இப்படிச் செய்தால் தங்கள் பிரச்னைகளைத் தாங்களே தீர்த்துக்கொள்ளும் திறனை அவர்கள் பெறுவார்கள்' என்ருர் சுவாமிஜி.

தாய்மொழிக் கல்வி டைரக்டராக இருந்த எஸ். சாமராவ் என்பவரிடம் சுவாமிஜியை அழைத்துச் சென்ருர் சுந்தரராம ஐயர். இந்திரிய நிக்ரஹம் அல்லது புலனடக்கம் பற்றிக் கூறுமாறு சாமராவ் சுவாமிஜியை கேட்டுக் கொண்டார்.

உடனே சுவாமிஜி, நாம் கிருஷ்ண கர்ணுமிருதம் இயற்றிய லீலாசுகரைப் பற்றிக் கூறுவோமே, அதே போன்ற ஒரு கதையை உணர்ச்சிப் பெருக்குடன் கூறலானுர். இறுதியில் கதாநாயகன் பிருந்தாவனம் சென்றதையும், தன்னுடைய காமக் கேளிக்கைகளுக்காகப் பச்சாத்தாபப்பட்டுக் கண்களை குத்திக் கொண்டு கண்ணனுக்கே தன்னை அர்ப்பணித்துக்கொண்டதையும் இதயம் விம்மக் கூறினுர் சுவாமிஜி. ''சுவாமிஜியின் சொற்சித்திரம் இருபத்தோராண்டுகளான பின்பு இன்னும் என் நினைவில் பசுமையாக இருக்கிறது. கும்பகோணம் தந்த அதிசய வேணுகான வித்வானுகிய சரப சாஸ்திரிகளின் மனமோஹனமான, அமர ஒலிக்குள்ள அதே சக்தியுடன் சுவாமிஜியின் சொற்களும் என்னிலிருந்து நீங்காமல் உள்ளன'' என்று சுந்தரராம ஐயர் பிறகு தாம் எழுதிய கட்டுரையில் கூறியிருக்கிருர்.

கதை முடிந்தபின் சுவாமிஜி, ''அடக்கியாளப்படாமல், இஷ்டப்படி திரிந்து கொண்டிருக்கும் புலன்களை வசப்படுத்தி, பகவானின்பால் சித்தத்தைத் திருப்புவதற்கு, அவசியமானுல்

Koviloor Digital Library

தனது கண்களைக்கூடக் குத்திக்கொள்ளுமளவுக்குத் தீவிரம் வேண்டும்'' என்று கூறினார்.

சென்னை அக்கவுண்டண்ட்-ஜெனரலின் உதவியாளரான மன்மதநாத பட்டாசாரியா அப்போது திருவனந்தபுரத்தில் ஏதோ வேலை விஷயமாக வந்திருந்தார். சுவாமிஜி திருவனந்தபுரம் வந்த மூன்றாவது அல்லது நாலாவது தினத்தில் அவர் மன்மத நாதரைச் சந்தித்தார். அதன் பின்பு அவர் மன்மதநாதருடனேயே அதிகப் பொழுதைக் கழிப்பதாக சுந்தரராமய்யர் குறைபட்டுக் கொண்டார். அதற்கு சுவாமிஜி வங்காளிகளுடனேயே சேருவது என்பது வங்காளிகளின் வழக்கம் என்று பாதி வேடிக்கையாகவும், பாதி உண்மையாகவும் கூறினார். மன்மதநாத பட்டாசாரியா தம்மோடு பள்ளியிலும், கல்லூரியிலும் படித்தவர் என்றும், அதோடு அவர் கல்கத்தா சம்ஸ்கிருதக் கல்லூரி முதல்வராயிருந்த பண்டித மஹேச சந்திரநியாயரத்னு என்பவரின் புதல்வரென்பதால் அவரிடம் தமக்கு விசேஷமான ஈடுபாடுண்டு என்றும் கூறினார். 'தென் இந்தியா வந்த நாளாய் நான் தென் இந்திய பிராமணர்களின் வீட்டிலேயே அதிதியாக இருந்து வருகிறேன். நீங்கள் மீன்கூடச் சாப்பிடுவதில்லை. எனவே எனக்குப் பழக்கமான உணவை வேண்டியும் நான் பட்டாசாரியாவின் வீட்டுக்கு அடிக்கடி செல்கிறேன்' என்றார் சுவாமிஜி. இதன்பேரில் புலால் உணவு, சாக உணவு இவைபற்றிப் பேச்சுத் திரும்பியது. புலால் மறுப்பதை ஆதரித்துப் பேசினார் சுந்தரராம ஐயர். அதற்கு சுவாமிஜி, புராண காலத்தில் எல்லாரும் புலால் உண்டுவந்ததாகவும், பௌத்தம் பரவிய பின்புதான் மரக்கறி உணவுப் பழக்கம் ஏற்பட்டதென்றும் கூறினார். மாமிச உணவை நீத்ததால்தான் பாரத மக்கள் பலவீனர்களாகி விட்டார்களென்றும், மீண்டும் அசைவ உணவுப் பழக்கத்தைப் பாரத மக்கள் யாவரும் மேற்கொண்டால்தான் இந்தியா பிரிட்டிஷ் ராஜ்யத்துக்குள்ளிருந்தாலும், அதற்கு வெளியே வந்தாலும் சக்தியுடன் விளங்க முடியுமென்றும் கூறினார். இதை ஐயர் ஒப்புக் கொள்ளவில்லை. அரசியலில் பலம் பெறுவதற்காக வாயற்ற ஜீவன்களிடம் அன்பு பூணும் அஹிம்சா உணவு முறையை விடலாகாது என்று அவர் கூறினார். பிராமணர்களின் இனத் தூய்மையைப்பற்றி இருவரும் தத்தம் கருத்தையே கடைசிவரைக் கடைபிடித்தது போலவே இவ்விஷயத்திலும் ஆயிற்று.

பைரவிப் பெருமாள் பிள்ளை என்ற ஒரு அதிகாரி சுவாமிஜி இந்திய சமய சம்பிரதாயங்கள் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறாரா எனப் பரீக்ஷித்துப் பார்க்க விரும்பினார். இதற்குத் தொடக்

Koviloor Digital Library

கமாக அத்வைத வேதாந்தத்தை ஆக்ஷேபித்துப் பேசலானுர். அவ்வளவுதான்! சுவாமிஜி கடல்மடை திறந்தாற்போல சகல சமயங்களேயும் அலசி அவற்றின் சிகரமே அத்வைதம் என்பதைத் தமக்கே உரிய சொல்லாற்றலாலும் அநுபவத்தில் விளைந்த உறுதியாலும் நிரூபிக்கலானுர். 'சுவாமிஜியிடம் வாதம் செய்யப் புகுவது தவருகும்; அவர் என்ன பேசிக்கொண்டிருக்கிருரோ அதில் குறுக்கிடாமல் கேட்டுக்கொண்டே யிருந்தால், அவரே ஆக்ஷேபணை சமாதானம் எல்லாம்கூறிப் புதுப் புது விஷயங்கள் பலவற்றைக் கேட்பவர் அறியச் செய்வார். கடலிலிருந்து அவரவரும் நீர் முகந்து வருவதுபோல அவர் பேசுவதைக் கேட்பவர்கள் தங்கள் புத்திக்குடம் நிரம்புமளவும் அதன் சாரத்தை எடுத்து வரலாம்' என்பதைப் பிள்ளை தெரிந்து கொண்டார்.

தம் எதிரே யிருப்பவரால் எவ்வளவு கிரஹிக்க முடியும் என்பதையும், அவருடைய உள்ளப்பான்மை எப்படிப்பட்டது என்பதையும் க்ஷணகாலத்தில் சுவாமிஜி எடைபோட்டு விடுவார். அதற்கேற்றவாறு பேசி அவர்களை மந்திரத்தில் கட்டிப்போட்டது போலச் செய்து விடுவார். அப்படிக் கட்டிப்போட்டு அவர்களுக்கு ஜீரணமாகும் பக்குவத்தில் தத்துவங்கள் கனிவித்து ஊட்டுவார்.

இவ்வாறே பைரவிப் பெருமாள் பிள்ளை விவாதித்தபோது புத்தரின் வைராக்கியத்தைப் பற்றி 'லலித விஸ்தாரம்' என்ற நூலிலிருந்து மேற்கோள் காட்டிய சுவாமிஜி தமது மதுரமான குரலால் சட்டென்று பிள்ளையின் நரம்பைத் தொட்டு விட்டார். பிள்ளை இளகத் தொடங்கினுர். அதைக் கண்டு கொண்ட சுவாமிஜி அவர் மீண்டும் இறுகிவிடாதபடி புத்தரின் சரித்திரத்தை நாத்தழுதழுக்கக் கூறலானுர். புத்தரின் துறவையும், சத்திய நாட்டத்தையும், ஞானேதயத்தையும், அதன்பின் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு அவர் எல்லா வகுப்பினரிடையேயும் சென்று உபதேசித்ததையும் மெய்சிலிர்க்குமாறு வர்ணித்துக்கொண்டே போனுர். சுமார் ஒரு மணிப் பொழுது புத்தர் கதையில் சென்றது. பிள்ளையின் கண்கள் கரைந்தன. 'வாழ்க்கையின் குப்பை கூளங்களிலிருந்து என்னை இவ்வளவு நாழி — இவ்வளவு நாழிக்கேனும் — தாங்கள் சுத்தமானதோர் இடத்துக்கு உயர்த்தியிருந்தீர்கள்' என்று கூறி சுவாமிஜியின் காலில் விழ்ந்து நமஸ்கரித்தார் பிள்ளை.

சுரோதாக்களின் மனநிலைக்கேற்ப சுவாமிஜி பேசுவார் என்பதால் அவர் ஏதோ நாடகமேடை நடிகரைப் போலப் போலித்தனமாகப் பேசுவார் என்று நினைத்துவிடக் கூடாது. உண்மை

Koviloor Digital Library

யான உணர்வுகளையன்றி வேறெதையும் அவர் ஒருபோதும் வெளியிட்டதில்லை. ஆனால் தம்மையே சுரோதாக்களைப் பொறுத்து சில சமயங்களில் நெகிழ்த்திக் கொண்டும், சில சமயங்களில் கடினமாக்கிக்கொண்டும் அவர் பேசுவார்.

பொதுமேடையில் தோன்றிப் பேசுமாறு சுந்தரராம ஐயர் சுவாமிஜியைக் கேட்டுக் கொண்டார். சுவாமிஜி தமக்குப் பழக்கமில்லை என்றும் தாம் மேடை ஏறினல் தோல்விதான் ஏற்படும் என்றும் கூறிவிட்டார்.

''அதுசரி, ஆனல் சிகாகோ சர்வமத மகாசபைக்குப் போய் பிரசங்கம் செய்ய விரும்புவதாகச் சொன்னீர்களே, அது எப்படி சாத்தியமாம்?'' என்று கேட்டார் சுந்தரராம ஐயர்.

சுவாமிஜி இதற்கு நேரிடையாக பதில் சொல்லவில்லை.

''ஆண்டவனுடைய சித்தம் நான் அவனுடைய கருவியாக இருந்து சத்தியத்துக்கும் புனித வாழ்க்கைக்கும் பணிபுரிய வேண்டும் என்றிருந்தால் அவனே அதற்கான ஆற்றல்களை அருள்வான்'' என்றார்.

''இம்மாதிரி ஆண்டவனே ஒருவர் விஷயமாகக் குறுக்கிடுவான் என்பதை நான் நம்பவில்லை'' என்றார் சுந்தரராம ஐயர்.

உடனேயே சுவாமிஜிக்கு சினம் பொங்கி எழுந்தது. ஐயரின் மீது சம்மட்டியெனச் சொற்களை வீசினர் அவர். ''ஆசார அநுஷ்டானம் அமர்களமாகச் செய்கிறீர்களேயன்றி இதயத்தில் நீங்கள் ஒரு நாஸ்திகர். ஆண்டவனின் ஆற்றலுக்கு நீங்கள் ஒரு எல்லை வகுக்கிறீர்கள். மனிதகுலத்தின் மேன்மைக்காக அவனே தலையிட்டுச் செயல் புரிகிறான் என்பதை நம்ப மறுத்து அவனுடைய அளப்பரும் கருணைக்கு அளவு கட்டுகிறீர்கள்'' என்றார். சுவாமிஜியின் அந்தரங்க சுத்தமான பக்தி ஐயரை உலுக்கி விட்டது.

இப்படியாக சுவாமிஜி திருவனந்தபுரத்தில் ஒன்பது நாட்கள் தங்கியிருந்ததை ''சுவாமிஜியுடன் எனது முதல் நவராத்திரி'' என்ற கட்டுரையில் ஐயர் விவரிக்கிறார். (சுவாமிஜி மேல்நாட்டுப் பயணமாகித் திரும்பியபின் சென்னையில் அவருடன் தாம் கழித்த ஒன்பது தினங்கள்பற்றி சுந்தரராம ஐயர் ''சுவாமிஜியுடன் எனது இரண்டாம் நவராத்திரி'' என்ற கட்டுரையில் கூறியிருக்கிறார்.)

சுந்தரராம ஐயரின் வீட்டில் ஓர் அங்கத்தினர் போலவே சுவாமிஜி ஸ்வாதீனமாகப் பழகி வந்தாராம். ''வீட்டில் எல்லார் உள்ளங்களையும் அவர் கவர்ந்து விட்டார். இனிமையே உருவானவராகவும், இளக்கமே உருவானவராகவும், அருளே உருவானவராகவும் அவர் ஒவ்வொருவருக்கும் தோன்றினர்'' என்கிறார் ஐயர்.

Koviloor Digital Library

சுவாமிஜி இந்த தமிழ்க் குடும்பத்தில் தங்கியபோது பல தமிழ் சொற்களையும் கற்றுக் கொண்டாராம். பரிசாரகரிடம் தம்முடைய தமிழ் ஞானத்தைக் காட்டி பேசுவதில் சுவாமிஜிக்கு மிகவும் சந்தோஷமாம். இதைப் படிக்கும்போது நமக்கும் அளவற்ற சந்தோஷம் உண்டாகத்தானே செய்கிறது? விவேகானந்தர் போன்ற மஹாத்மாக்கள் தேசம் காலம் எல்லாம் கடந்து எல்லாருக்கும் பொதுவானவர்கள்தாம். எனினும் அவர்களும் நம் நாட்டுக்கு வந்தார்கள், நம் மொழியைப் பேசினர்கள் என்பதில் நமக்கெல்லாம் பெருமை உண்டாகத்தானே செய்கிறது? மதுரகண்டத்துக்குப் பெயர்பெற்ற சுவாமிஜியின் நாவில் தமிழ்ச் சொற்கள் பூத்தபோது அது எவ்வளது சுந்தராமிருதமாக இருந்திருக்கும்? அதில் கு ழ ந் தை த் த ன மு ம் கூடிவிட்டதென்றல்?...அதை வர்ணிக்க தமிழிலேயே வார்த்தை கிடையாது என்றுதான் சொல்ல வேண்டும்.

* * *

இன்றைய சூழ்நிலையில் விசேஷம் பெறும் ஒரு சம்பவத்தை ஸ்ரீ கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் தமது நினைவுகளில் கூறுகிறர். சுவாமிஜி திருவனந்தபுரத்தில் தங்கியிருந்தபோது, சுந்தரராம ஐயரின் குமாரரான ராமஸ்வாமி சாஸ்திரிகள் இண்டர்மீடியட் சேர்ந்திருந்தார் என்று முன்பே குறிப்பிட்டோமல்லவா? ராமஸ்வாமிக்கு சம்ஸ்கிருதத்தில் காளிதாஸனின் குமார ஸம்பவம் பாட புத்தகமாக வைக்கப்பட்டிருந்தது. ''அதில் வரும் ஹிமாலய வர்ணனையைச் சொல் பார்ப்போம்'' என்று ராமஸ்வாமியைக் கேட்டார் சுவாமிஜி. தென் இந்தியாவுக்கே உரிய பிராஸத்தில் குறிப்பிட்ட சுலோகங்களை ராமஸ்வாமி கூறினன். சுவாமிஜி மகிழ்ச்சியுடன் புன்னகை பூத்தார். ஹிமாலயக் காட்சிகளுடைய பூரண அழகின் மத்தியில் நான் நீண்டகாலம் வாழ்ந்திருக்கிறேன் என்பது உனக்குத் தெரியுமா?'' என்று பழைய நினைவுகளில் திளைத்தவாறே கேட்ட சுவாமிஜி ''அந்த முதல் சுலோகத்தை மீண்டும் சொல்லு'' என்ருர். ராமஸ்வாமி அப்படியே செய்தான். ''பேஷ், ஆனல் இது போதாது'' என்று கூறிய சுவாமிஜி தமது அற்புதமான சங்கீதக் குரலில் விச்ராந்தியாக அந்த சுலோகத்தைக் கூறினர்:

அஸ்தயுத்தரஸ்யாம் திசி தேவதாத்மா
ஹிமாலயோ நாம நகாதிராஜ:
பூர்வாபரௌ தோய நிதாவகாஹ்ய
ஸ்தித: ப்ருதிவ்யா இவ மானதண்ட:

Koviloor Digital Library

சுவாமிஜி சொன்னர்: ''இதில் முக்யமான பதங்கள் 'தேவ தாத்மா', 'மானதண்ட:' என்ற இரண்டும்தான். (ஹிமாலயம் தெய்வத் தன்மையால் உயிர் நிறைந்தது என்பதையும், உலகை அளக்கும் அளவுகோல்போல உள்ளது என்றும் இவற்றின் பொருள்) கவியானவர் ஹிமாலயம் ஏதோ அகஸ்மாத்தாக இயற்கையால் அமைக்கப்பட்டதல்ல என்பதை 'தேவதாத்மா' என்பதால் உள்ளுரைப் பொருளாகக் கூறுகிருர். அது தெய்விகத்தால் பூரிதமான ஜீவன் பெற்றது. அது இந்தியாவையும், இந்திய நாகரீகக் குடிகளையும் துருவப் பிரதேசத்தின் பனிக்காற்று வீச்சிலிருந்து காப்பதோடு மட்டுமில்லை; அந்நிய எதிரிகளின் பயங்கரமான, நாசகரமான ஊடுருவல்களிலிருந்தும் நம்மைக் காக்கிறது. அதோடு தன் பனியை உருக்கி மாநதிகளாகிய ஸிந்து, கங்கை, பிரம்மபுத்ரா இவற்றுக்கு ஊட்டி, அவை பருவக் காற்றை எதிர்பாராது எப்போதும் ஜீவநதிகளாக ஓடுமாறு செய்தும் ஹிமாலயம் நம்மைக் காக்கிறது. 'மானதண்ட:' என்ற பதத்தால் கவி இந்திய நாகரீகம்தான் எல்லா நாகரீகங்களுக்கும் தலை சிறந்தது; மற்ற நாகரீகங்களை — பழைய, புதிய, வரப்போகிற நாகரீகங்களை — யெல்லாம் அளந்து பார்க்க வேண்டிய அளவுகோல் பாரத நாகரீகமே என்பதை உணர்த்துகிருர். தேசப்பற்று என்பதைப்பற்றி கவியின் உன்னதமான கருத்து என்ன என்பது இதிலிருந்து தெரியவருகிறது''.

* * *

தேசப்பற்று என்ருல் என்ன என்பதைப்பற்றி சுவாமிஜி கூறியதையும் சாஸ்திரிகள் கூறுகிருர்: ''செயலில் காட்டும் தேசப்பற்று என்பது வெறும் மனக்கிளர்ச்சியோ, தாய்நாட்டிடம் கொள்ளும் அன்பு உணர்ச்சியோகூட ஆகாது. நம்முடன் வாழும் நாட்டினருக்கெல்லாம் சேவை செய்யவேண்டும் என்ற ஆர்வ ஆவேசமே தேசப்பற்ருகும். நான் இந்தியா முழுதும் காலால் நடந்து சென்றிருக்கிறேன். மக்களின் அறியாமையையும், வறுமைத்துயரையும், அசுத்தத்தையும் என் கண்களால் பார்த்திருக்கிறேன். என் ஆவி முழுவதும் பற்றி எரிகிறது. இப்படிப்பட்டதிய நிலையை மாற்றவேண்டும் என்ற உக்கிரமான ஆசையில் நான் வேகிறேன். இதெல்லாம் 'கர்மம்' என்று யாரும் பேசாதீர்கள்! 'கஷ்டப்படவேண்டும் என்பது அவர்கள் கர்மம்' என்று நீங்கள் சொன்னல் 'அவர்களுடைய கஷ்டத்தை நிவிருத்தி செய்யவேண்டியது நம் கர்மம்' என்று நான் சொல்வேன். ஈசுவரனைத் தரிசிக்க விரும்பினீர்களானல் மனிதனுக்கு சேவை செய்யுங்கள். நாராயணனை அடையவேண்டுமானல் பட்டினியில்

Koviloor Digital Library

துயருறும் கோடிக்கணக்கான தரித்திர நாராயணர்களுக்குப் பணி புரியுங்கள்'' என்ருர் சுவாமிஜி.

இதே சுவாமிஜி ஐந்தாண்டுகளுக்குப் பின் மேரிஹேல் என்ற சிஷ்யைக்கு எழுதிய அற்புதமான வரிகளையும் நாம் இங்கேயே நினைவுகூர்ந்து மெய்சிலிர்க்கலாம்:

''இருக்கும் ஒரே கடவுளை வழிபடுவதற்காக நான் மீண்டும் மீண்டும் பிறப்பேனாக! பிறந்து ஆயிரமாயிரம் இன்னல்களை அநுபவிப்பேனாக! அந்த ஒரே கடவுள், நான் நம்பும் ஒரே கடவுள், எல்லா ஜீவர்களின் கூட்டுத் தொகையாவான். அதற்கும் மேலாக, துஷ்டனாக உள்ளவனும் என் கடவுள்; துயருற்று நிற்பவன் என் கடவுள்; உலகத்தில் எந்த நாட்டிலும் ஏழையாக எவன் இருக்கிருனே அவன் என் கடவுள்; துஷ்டனாக, துயருற்றவனாக, தரித்திரனாக உள்ள அந்தக் கடவுளே என் வழிபாட்டின் லக்ஷியம்.''

அத்வைதத்தைப் பற்றி குருமஹராஜ் நரேந்திரருக்கு உபதேசித்தது வாசகர்களுக்கு நினைவிருக்கிறதல்லவா?

* * *

''சுவாமிஜி சென்றதும் எங்கள் வீட்டிலிருந்து ஒளி வெளியேறி விட்டதுபோல எங்களுக்குத் தோன்றியது'' என்கிருர் சுந்தரராம ஐயர்.

அப்படி திருவனந்தபுரத்தை விட்டு வெளியேறிய ஒளி, தான் நீண்டகாலமாகக் காணத்துடித்த ராமேசுவரத்தை நோக்கி சென்று கொண்டிருந்தது. வழியில் நான்மாடக்கூடலாகிய மதுரையம் பதியில் ராமநாதபுரத்தரசர் பாஸ்கர சேதுபதியைக் கண்டார் சுவாமிஜி. நல்ல அறிஞரும், பக்தி நிரம்பியவருமான சேதுபதி மன்னர் சுவாமிஜியிடம் உள்ளார்ந்த ஈடுபாடு கொண்டார். மக்களின் கல்வித்தரத்தை உயர்த்துவதுபற்றியும், விவசாய முறைகளை அபிவிருத்தி செய்வதுபற்றியும் சுவாமிஜி ராமநாதபுர மன்னரிடம் நிறையக் கூறினர். அதோடு இந்தியாவின் இன்றைய பிரச்னைகளையும், அவற்றைத் தீர்த்துக்கொண்டு இந்தியா உன்னதம் பெறும் சாத்தியக்கூறு பற்றியும் கூறினர். இதையெல்லாம் கேட்டவுடன் சேதுபதி மன்னர் சுவாமிஜியை மறு ஆண்டு சிகாகோவில் நடக்கவிருந்த சர்வமத மஹாசபையில் கலந்துகொள்ளுமாறு தூண்டினர். பாரதத்தின் ஞான ஒளியை மேல்நாடுகளில் பாய்ச்சவும், இந்தியாவின் எதிர்கால நிர்மாணப் பணிக்கு அஸ்திவாரமிடவும் சர்வத மஹாசபை அயனான வாய்ப்பாகும் என்று அவர் ஆர்வத்துடன் கூறினர். ''என்னால் முடிந்த உதவியெல்லாம் செய்கிறேன்'' என்று முன்வந்தார் அந்தத் தமிழ் மகன்.

Koviloor Digital Library

''ஆகட்டும் பார்ப்போம்; நான் முதலில் ராமேசுவரத்தை தரிசித்து வருகிறேன்'' என்று முன்போலவே கூறிவிட்டார் சுவாமிஜி.

*　　　*　　　*

'ராமேசுவரம் தென் இந்தியாவின் காசி' என்கிருர்கள் சுவாமிஜியின் சரிதத்தை எழுதிய மேல்நாட்டுச் சிடர்கள். நாமோ காசியை வடநாட்டு ராமேசுவரம் என்று பெருமையோடு நினைப்பவர்கள். மக்களுக்கு வாழும் வழியை உணர்த்த வேண்டும் என்பதற்காகவே பரமபதநாதன் மானுடனுக வந்து மானுடனுகவே வாழ்ந்து அன்னைக்கும், அப்பனுக்கும், உடன்பிறந்தோருக்கும், மனைவிக்கும், சகல மக்களுக்குமே இனியனுக ஸ்ரீராமபிரானுக வாழ்ந்தான் அல்லவா? அவன் பக்தனுக இருந்து காட்டிய எளிமைக்குச் சின்னம் ராமேசுவரம். ராவண சம்ஹாரம் ஆகி, துன்பத்துக்கென்றே பிறந்த தேவியோடு திரும்பிய ராகவன், சிவபெருமானை வழிபட்ட பரம பவித்திரமான ஸ்தலம் ராமேசுவரம்.

ராமனுக்கு ஈசுவரன், ராமனை ஈசுவரனுகக் கொண்டவன், ராமனேயாகிய ஈசுவரன் என்பதாக சமயசமரஸம் ததும்பப் பொருள் கூறப்படும் ராமேசுவரனுக்கு அங்குள்ள மகத்தான ஆலயம் உலகப் பிரஸித்தி பெற்றது. இந்தியாவின் வடக்கே ஹிமய பர்வதத்தின் புத்திரியாகப் பிறந்து பார்வதி என்ற பெயரில் நாட்டைக் காக்கும் தாய், தென் சமுத்திரக் கரையில் இங்கும் பர்வத வர்த்தினி என்ற திவ்விய நாமத்திலேயே அருள் புரிகிருள்.

ராமநாதனைத் தரிசித்துத் தாம் வாழ்க்கையில் கொண்டிருந்த நீண்ட நாளைய மனேரதமொன்று பூர்த்தியானதில் மன மகிழ்ச்சி கொண்டார் சுவாமிஜி.

ராமேசுவரத்திலிருந்து நாட்டின் தென் கோடியாகிய கன்யா குமரியைச் சென்றடைந்தார். பனி மூடிய ஹிமாலயத்திலிருந்து புறப்பட்டவர் பாரதத்தாயின் திருமேனி முழுவதையும் தரிசித்து விட்டு இப்போது அவளுடைய திரு அடிகளின் முடிவை வந்தடைந்து விட்டார்.

பதரியிலிருந்து இந்தக் கன்யாகுமாரிவரை அவர் கண்டதென்ன? கோயில்கள், கோயில்கள், கோயில்கள்தான்! கிராமத்துக்குக் கிராமம், ஊருக்கு ஊர், நகரத்துக்கு நகரம் ஓர் ஆல்யம் — அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆலயங்கள். தொழிற்சாலைகளும், பாடசாலைகளும் இல்லாத ஊர்கள் இருக்கலாம். ஆனல் பெயருக்குக்கூடக் கோயிலில்லாத ஊர் இந்தியாவில் கிடையாது. பாரதத்தில் உள்ளூற ஆழ்ந்துள்ள புனிதத்தன்மையை எண்ணிப் புளகமடைந்தார் சுவாமிஜி. புனிதத்தின் உறைவிடமான

Koviloor Digital Library

குருநாதரையும், குருநாதர் அநன்யமாக ஆராதித்த அன்னையையும் நினைந்தார். ஹிமாலயம் அவளுடைய பிறந்த வீடு என்றால் கன்யாகுமாரியும் அவளது உறைவிடமாகவே அல்லவா இருக்கிறது? இந்த நாடு முழுவதும் அவளுடைய சொத்துதானே?

கன்னியாக, தபஸ்வியாக வாழும் தேவியைக் காணத் துடித்தார் சுவாமிஜி. அவள் கன்னியானாலும் லோகமாதா அல்லவா? அவளை எண்ணியவுடன் பச்சிளம் பாலகனானார் சுவாமிஜி. நீண்ட நாட்களாக அன்னையைக் காணாதிருந்த குழந்தைபோல ஒரே பரபரப்புடன், பரவசத்துடன் முக்கடலும் கூடும் புண்ணிய பூமியில் குடிகொண்டுள்ள கன்னியா குமரியைக் காண ஓடினார் சுவாமிஜி. சௌந்தரிய நிலையமாகிய தேவியைக் கண்டவுடன் ஆவேசமயமாக அவள் முன்பு தண்டமென வீழ்ந்துவிட்டார் சுவாமிஜி. மனது கொண்டமட்டும் அவளை வணங்கினார்.

ஆலயத்திலிருந்து வெளியேறினார். சமுத்திரக்கரையை அடைந்தார். மூன்று கடல்களும் கூடிய கடலிலும் இறங்கி நீந்தலானார். சிறிது தொலைவில் கடலில் இருந்த ஒரு பாறை மீதேறி அமர்ந்து கொண்டார்.

நாற்புறமும் அவரைச் சுற்றி அலைகள் எழும்பி எழும்பிப் பாறையில் மோதிக் கொண்டிருந்தன. அவற்றைவிட உயரமாக அவருடைய உள்ளத்தில் சிந்தனை அலைகள் எழும்பிக் கொண்டேயிருந்தன. கடலைவிடக் கொந்தளித்தது அவரது உள்ளம். அதோ அவருக்கு எதிரே இந்தியா முழுவதும் கிடக்கிறது! பாரதமாதா வாடிச் சோர்ந்துபோய் அவர் கண்ணெதிரே படுத்துக்கொண்டிருக்கிறாள்! பாரதத்தின் கடைசி கடைசி மண்ணில் அமர்ந்து கொண்டிருந்த சுவாமிஜிக்குப் புல்லரித்தது. அலைகள் உடைந்து விழும்போது எழும்பிய தூவானம் அவரை ஸ்பரிசித்துக் குறு குறுக்கச் செய்ததுபோல அவரது சிந்தனை அலைகள் மடிந்து விழும் போதும் நுண்ணிய பலதுளிகள் அவர்மீது தெரித்து அவருடைய உள்ளத்தை ரோமாஞ்சனம் அடையச் செய்தது. விரிந்த அவரது நயனங்கள் மேலும் விரியத் தன் எதிரே கிடந்த புண்ணிய பூமியை நோக்கினார். பரந்து விரிந்த அவரது மார்பு நீண்ட நீண்ட சுவாஸங்களால் மேலும் பரந்து விரிந்தது. இந்தியாவை அல்லவா அவர் காண்கிறார்! பாடபுத்தகத்தில் படித்த, பேச்சாளர்களின் பிரசங்கங்களில்கேட்ட, தேசப்படங்களில் கண்ட இந்தியாவை இதோ பிரத்தியக்ஷமாக அல்லவா உயிருடன் கூடியதாகக் காண்கிறார்? அப்போது அவர் கண்முன் தமிழகத்தின் ஒரு கோடியாகிய கன்யாகுமரி தெரியவில்லை. தமிழகமே தெரியவில்லை. ஏன் கேரளம், கர்நாடகம், ஆந்திரம், உத்கலம், அவரது

Koviloor Digital Library

அருமை வங்காளம், மஹாராஷ்டிரம், கூர்ஜரம், மத்தியப் பிர தேசம், பாஞ்சாலம் மகோந்நதமான ஹிமாசலம் உள்பட எது வுமே அவருக்கு அப்போது தெரியவில்லை. பாரதம் என்ற ஒன்றே அவர் கண்களுக்குத் தெரிந்தது. இத்தனை பகுதிகளிலிருந்தாலும், அவரவர்களுக்கென்று தனித்தனி மொழிகளும், பழக்க வழக்கங் களும் இருந்தாலும் அவற்றுக்கெல்லாம் ஆதாரமான வேதமும், வேதாந்தமும், ஆகமமும், புராணமும் ஒன்றேயல்லவா ? இந்திய மக்கள் வெறுமனே இந்த உலக வாழ்க்கையை அநுபவித்துவிட்டுச் சாகவா பிறந்தவர்கள் ? இத்தனை பகுதிகளுக்கும் பொதுவான ஆத்மிக அமுதத்தைப் பருகி அமரத்துவம் பெற அல்லவா பிறந்த வர்கள் ?

சுவாமிஜி அற்புதமானதொரு தியாக ஸமாதி நிலையில் இருக் கும்போது, நினைவென்று சொல்லவொண்ணாத அவரது நினைவில் இவையெல்லாம் எண்ணமென்று சொல்லவொண்ணாத சூக்ஷ்ம உணர்வுகளாக ஆழ்ந்து அடர்ந்து உதித்தன. பாரதத்தின் புராதன மேன்மை, அந்த மேன்மை சிதலமாகி அது இழிந்து நிற்பது, இனி இந்த இழிவை வென்று அது வீறுகொண்டு எழப் போவது எல்லாம் அலை அலை அலையாக அவருடைய கண்முன் தோன்றின. அலை ஒலி பிரணவநாதமாக மாறியது. பிரணவ நாதத்தை ஜீவஸ்வரமாகக் கொண்ட வேத கோஷமாயிற்று. வேதமந்திரங்களைக் கண்ட முனிபுங்கவர்கள் எல்லாம் சுவாமிஜி யின் முன் நின்றார்கள். ஜகத்தையெல்லாம் பரம்பொருளின் கவின் மிகு ஓவியசாலையாகக் கண்டு இயற்கையுடனும், சகல ஜீவராசிகளுடனும் இயைந்து வாழ்ந்து, அவற்றைப் போற்றிப் பூஜித்த வேதகால வரலாறு அவர் முன் விரிந்தது. இந்த ஓவிய சாலையை நிர்மாணித்த மகாமதியில் கரைந்துபோய், பரம்பொரு ளும் தானும் ஒன்றாகும் பரமநிலையைக் கூறிய உபநிஷத காலம் சுவாமிஜிக்கு ஸ்வச்சமாகத் தெரிந்தது. ஜீவன் பிரம்மமாக முயன்ற காலத்துக்குப் பின், பிரம்மமே ஜீவனாகி ராமனாகவும், கிருஷ்ணனாகவும் இந்த பாரத மண்ணில் வாழ்ந்து ஆதரிச வாழ்க்கை வாழ்ந்து காட்டிய இதிஹாஸ காலத்தில் சுவாமிஜி நினைந்தார். இதற்குப் பின் பல சடங்குகள் அதிகமாகி, அக உணர்வு குன்றி, புறச் செயலே மிகுதியானபோது தோன்றி, சீலத்தினால் ஒவ்வொருவனும் தானாக சத்தியத்தைக் காணவேண்டு மென்று கூறிய புத்தரின் சரித்திரத்தையும், பௌத்தம் இந்தி யாவில் வளர்ந்ததையும் கண்டார் சுவாமிஜி. அதன் பின்பு சடங்குகள், பக்தி, ஞானம், அஹிம்சை இவையெல்லாம் இணைந்த ஹிந்து தர்மத்தை ஆதிசங்கரர் நிலை நாட்டியதைக் கண்டார்.

Koviloor Digital Library

பிற்பாடு ராமானுஜரும், மத்வரும் தோன்றி பக்தியை வலி யுறுத்தியதைக் கண்டார். ஆழ்வார்களும், நாயன்மார்களும், கௌரங்கரும், மீராவும் இன்னும் எண்ணற்ற அடியார்களும் அந்தப் பக்திப் பிரவாகத்தைப் பெருக்கியதைக் கண்டார். ஆத் மிகத்தில்மட்டுமின்றி அரசியலிலும் மகோந்நதமாக விளங்கிவந்த பாரதம் — அந்நியர்களின் ஆட்சிக்கு அவ்வப்போது அடங்கியிருந் தாலும், அந்த அந்நியர்களின் தத்துவங்களையும் தனதாக்கிக் கொண்டு, ஸ்வாதந்தரியம் பெற்று வாழ்ந்த நாடு, ஒரேயடியாக விழ்ந்ததைக் கண்டு நெஞ்சுடைந்தார். முகலாய ஆட்சியும், அதன் பின் பிரிட்டிஷ் ஆட்சியும் ஏற்பட்டு பாரதம் ஆட்சியாளர் களின் வாழ்முறையே சிறந்தது என மயங்கித் தனது ஒப்பற்ற பண்பைக் கைவிட்டதைக் கண்டு குமுறினர். இதற்கெல்லாம் காரணமான ஒன்றுமையின்மையையும், பிரிவினை சக்திகளையும் வெல்ல இதோ சமயம் வந்துவிட்டது என்று அவரது உள்ளம் சிலிர்த்துக்கொண்டு சிம்மமாகக் கிளம்பியது.

மலரின் தனித்தனி இதழ்களைக் கண்டு, பின்னர் இதழ்களை மறந்து மலர் என்ற ஒன்றைக்காணுவதுபோல, ஒவ்வொரு சகாப்த மாக பாரத சரித்திரத்தைக் கண்டுவந்த சுவாமிஜியின் முன்னர் இப்போது பாரதம் என்ற ஒன்றே மேருமலைபோல வந்து நின்றது. தமிழகத்தையும், வங்கத்தையும், பாஞ்சாலத்தையும் மறந்து பாரதம் என்ற ஒன்றைக் கண்டதுபோல், வேதகாலமும், இதிஹாஸகாலமும், புராணகாலமும், நிகழ்காலமும் எல்லாம் மறைந்து பாரத சரித்திரம் என்பதாக ஏதோ ஒன்றே அவர் முன் வரையறை செய்த எழிலுடன் நின்றது. அந்த எழிலுக்கு உயி ரளிக்கும் சக்தி சமயம்தான் என்ற உணர்வும் முன் எப்போதையும் விட சுவாமிஜியின் உள்ளத்தில் திடமாக உறைந்தது. பாரத மக்களின் இசைக்கும், இலக்கியத்துக்கும், சிற்பத்துக்கும் ரத்த ஓட்டமாகயிருப்பது சமயம்தான்; பார்த மக்களின் வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்துக்கும் ஊட்டமளிப்பது சமய உணர்வுதான் என்று நிச்சயமாக உணர்ந்தார். சக்தி குன்றிக் கிடக்கும் பாரத நாட்டைத் தட்டி எழுப்பப் போவதும் இந்தச் சமய உணர்வுதான் என்ற நம்பிக்கையைப் பெற்றூர். அரசியலும், பொருளாதார மும், விஞ்ஞானமும் இந்தியாவுக்கு இரண்டாம்பக்ஷம்தான் என் பதை அவர் சந்தேகமற அறிந்தார்.

இந்தியா அரசியலிலும், விஞ்ஞானத்திலும், பொருளாதாரத் திலும் விழ்ந்ததற்குக் காரணம் அதன் சமய உணர்வு அல்ல; ஏனெனில் பலர் தப்பாக நினைப்பதுபோல இந்தியர்கள் சமய உணர்வு காரணமாகத் தங்கள் ஆக்கத்திறனை இழக்கவில்லை —

Koviloor Digital Library

மாருக உலகையும், சக ஜீவர்களேயும் கடவுளின் படைப்பாகவோ அல்லது கடவுளாகவேயோ காணச் செய்யும் ஹிந்துமதம் மக்களுக்கு உத்வைகமளித்து அவர்களேச் செயலில் செலுத்துவதாகும் என்று சுவாமிஜி உன்னி உணர்ந்தார். ஆனல் ஹிந்துமதத்தை இவ்வாறு புரிந்துகொள்ளாமல் வாழ்ந்ததாலேயே நாட்டின் வரலாறு சீர்கேடுற்றது என்றும் அறிந்து வேதனேயில் வெதும்பினர்.

பாரத சமுதாயம் ஆத்மிகத்துக்கென்றே ஏற்பட்டது, சாம்பிக்கிடக்கும் அந்த ஆத்மிகத்தை மீண்டும் ஊதினல் அது தியாகக் கனன்றெழும் என்று நிச்சயம் கொண்டார். விஞ்ஞானமும், பொருளாதாரமும் வாழ்க்கையின் குறிக்கோள் என்று நம்பி, ஆத்மிகத்தையும் அதன் அங்கமான அறநெறியையும் இழந்து வரும் உலகைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு இந்தியாவுடையதே என்பதைக் கண்டார்.

இந்தியாவுடைய பொறுப்பு என்ருல் அது தம்முடைய பொறுப்பு என்றே பொருளாகும்; ஏனெனில் தாம் இறுகிய இந்தியா என்று சுவாமிஜியுடைய உயிரணுக்கள் ஒவ்வொன்றும் தீவிரமாக உணர்ந்தன. இந்தியா என்று வருணித்துக்கொண்ட சுவாமிஜி கன்னியாகுமரியில் அந்த உணர்வை அசைக்கமுடியாதபடி பெற்று விட்டார்.

சுவாமிஜியின் இதயம் மோன மொழியில் பேசிற்று: 'மற்ற எல்லா நாகரிகங்களும் வளர்ந்த தொட்டிலாகவும், மற்ற எல்லா மதங்களும் தவழ்ந்த இந்தியாவை எக்காலத்தும் விளங்கச் செய்த உன்னத ஆத்மிக உணர்விஞல்தான் இந்தியா மீண்டும் ஏற்றம் பெறும்' — என்று. இந்தியாவின் மகிமைகளேப் போலவே அதன் பலவினங்களேயும் அலசிப் பார்த்தார் சுவாமிஜி. இந்தியாவின் நிகழ்கால இழிநிலேக்கு மையக்காரணம் அது தனது தனித்தன்மையை இழந்துவிட்டதுதான்; மேல்நாட்டு லோகாயதத்தைப் பின்பற்றுவதுதான் எனக் கண்டார். முனிவர்கள் வளர்த்த நாகரீகத்தை மீண்டும் எடுத்துக் கூறி, சோகைபிடித்த இந்தியாவுக்கு ரத்தம் ஊட்டவேண்டுமென்று துடித்தார்.

கன்யாகுமரியின் பாறையில் அமர்ந்திருந்த சுவாமிஜியின் உள்ளம் மெழுகாகக் கரைந்து கொண்டிருந்தது. இந்தியாவின் ஏழை எளியவர்களுக்காக, அடக்கி ஆளப்பட்டவர்களுக்காக, தாழ்த்தப்பட்டவர்களுக்காக, ஆன்மிக சாதனேகள் மறுக்கப்பட்டவர்களுக்காக அவரது உள்ளம் குழைந்து நெகிழ்ந்தது. 'மக்களேயெல்லாம் மேம்படுத்தாவிடில் 'தர்மம்' 'தர்மம்' என்ற ஒப்பற்ற வார்த்தைக்கு என்ன பொருள்? ஒவ்வொருவரும் சுயநலமாகத் தனது ஆத்ம விடுதலேயைத் தேடிக்கொள்வது தர்மமாகுமா? சமய விஷயங்களிலாகட்டும், அரசியலில் ஆகட்டும்,

Koviloor Digital Library

தொழில் துறையிலாகட்டும் — இவை எவற்றிலுமே கை மேலோங்கியவர்கள் மக்களை எல்லாம் வளரவிடாமல் நசுக்கித் தான் வைத்திருக்கிறார்கள். இப்படி நசுக்கப்பட்டவர்களுக்கெல் லாம் விடுதலையளிக்க வேண்டும்' என்று எண்ணங்கள் அடித்து மோதிக்கொண்டு வந்தன.

ஆனால் இந்தக் காரியத்தை எப்படிச் செய்ய முடியும்? கையில் கால் காசு இல்லாத தாமும் ஏழைகளிடம் வாய் வேதாந் தம் வேண்டுமானால் பேசலாமே யொழிய, காரிய பூர்வமாக அவர்களுடைய வறுமையை எப்படித் துடைப்பது?

கலங்கிய கண்களுடன் நாற்புறமும் பார்த்தார் சுவாமிஜி. எங்கும் ஒரே அலைகள்தான். கண்ணுக்கெட்டிய தூரம்வரை சமுத்திரத்தையே பார்த்துக் கொண்டிருந்தார் சுவாமிஜி. திடீ ரென்று அவரது திருஷ்டியின் எல்லை விரிந்து, விரிந்து சென்று கொண்டே இருந்தது. தொடுவானம் என்பது மேலும் மேலும் தொலைவில் சென்று கொண்டே யிருந்தது. விந்தையிலும் விந்தையாக ஆயிரமாயிரம் காதங்கள் கடந்து கடலை அளந்து கொண்டிருந்தது அவரது பார்வை. ஆயிரம் பல்லாயிரம் காதங் களுக்கப்பாலுள்ள அமெரிக்கக் கண்டம் அவருடைய கண்களுக்குக் கோசரமாயிற்று. அங்கிருந்து ஓர் ஒளி ரேகை புறப்பட்டது. அது நீண்டு நீண்டு சுவாமிஜியின் அருகில் வந்து 'வா, வா' என்றழைத்தது.

ஆம்; தாம் அமெரிக்கா சென்றேயாகவேண்டும்; சர்வத மஹாசபையில் கலந்துகொண்டு ஸநாதன தர்மத்தின் மாண்பினை உலகுக்கு அறிவிக்கவேண்டும். அவர்களுக்கு நிரந்தரமான ஆத்ம தனத்தை அளிப்பதற்குப் பிரதியாக அவர்களிடமிருந்து பொருட் செல்வத்தைப் பெற்றுத் திரும்பி வரவேண்டும், வந்து இங்கு ஏழைகளை உய்விப்பதற்காக தர்ம நிலையங்கள் அமைக்கவேண்டும். தர்மம் என்பது தானம், சமயம்' இரண்டையும் குறிப்பது அல்லவா? இந்த இரண்டும் இணைந்த திருமடங்களை குருமஹ ராஜின் புனித நாமத்தில் நிறுவவேண்டும்.

மேல்நாட்டில் புகழ்கண்ட பெருமையுடன் தாயகம் திரும்பும் போது இன்று உதாசீனமாக இருப்பவர்களெல்லாம் தம்மிடம் வருவார்கள். அவர்களின் உதவியைக் கொண்டும் மக்களுக்குப் பணிபுரியும் மாபெரும் தர்ம நிறுவனத்தைப் பலப்படுத்தவேண் டும். மக்கள் பணியென்றால் அவர்களின் சமய நம்பிக்கையை அபிவிருத்தி செய்வதோடு அவர்களின் வறுமையை ஒழிக்கவும், நோவு நொடிகளைத் தீர்க்கவும், வெள்ளம், பஞ்சம் முதலிய இயற்கை உத்பாத இன்னல்களையும் தவிர்க்கப் பாடுபடும் நிறுவனமாக

Koviloor Digital Library

அதை அமைக்கவேண்டும். அதற்காக மேல்நாடுகளில் தாம் சேகரிக்கும் பொருளும், உள்நாட்டில் திரட்டும் திரவியமும் மட்டும்போதாது. பணிபுரியும் சேவகர்களும் வேண்டும். வீடு-வாசல், பெண்டாட்டி-பிள்ளை என்ற சிந்தனையின்றி மக்கள் சேவையே தங்கள் வாழ்க்கையாகக்கொண்டவர்களாக அவர்கள் இருக்கவேண்டும். தூய்மையில் சிறந்தவர்களாக அவர்கள் இருக்கவேண்டும்; உயரிய மத அநுபவம் படைத்தவர்களாக இருக்கவேண்டும்; மக்களை ஆண்டவனின் உருவங்களாகக் கண்டு பணிபுரிபவர்களாக அவர்கள் இருக்கவேண்டும்; மக்களுக்காகப் பொருள் சேகரித்து அதனை நிர்வாகம் செய்தபோதிலும் பொருளாசை தம்மைத் தீண்டாதபடி தர்மகர்த்தர்களாக வாழும் பூரணத் துறவு மனப்பான்மை படைத்தவர்களாக யிருக்க வேண்டும்.

இந்தச் சிந்தனைகளைப்பற்றி சுவாமிஜி பிறகு எழுதுவதாவது: ''கன்யாகுமரியில், அன்னையாகிய குமரியின் ஆலயத்தருகே, இந்தியப் பாறையின் இறுதி முனையில் அமர்ந்திருக்கும்போது ஒரு திட்டத்தை உருவாக்கினேன். நாங்கள் எத்தனையோ சந்நியாசிகள் திரிந்து கொண்டிருக்கிறோம். பரதவிக்கும் மக்களுக்குப் பரதத்துவம் சொல்லிக்கொண்டிருக்கிறோம் — இது வெறும் பைத்தியக்காரத்தனம். 'காய்ந்த வயிறு மதத்துக்கு ஏற்றதல்ல' என்று எங்களது குருநாதர் கூறவில்லையா?''

சுவாமிஜி உருவாக்கிய அந்தத் திட்டம் என்ன? பிரத்யேக வாழ்க்கையைத் துறந்து, சமுதாய சேவை செய்பவர்களைத் திரட்ட வேண்டும். சந்நியாசம் — சேவை என்ற இரட்டை லக்ஷியத்தை வைத்து ஒரு புனித சேனையைத் திரட்டவேண்டும். ''பிறருக்கு நன்மை செய்வதே தங்கள் லக்ஷியமாகக் கொண்ட சில சுயநலமற்ற சந்நியாசிகள் கிராமம் கிராமமாகச் சென்று சண்டாளர்கள் உள்பட எல்லாருக்கும் கல்வியறிவைப் பரப்புவார்களானால் காலக்கிரமத்தில் அது நன்மை பயக்காதா? இந்தத் திட்டங்களையெல்லாம் நான் இந்தச் சிறு கடிதத்தில் விளக்குவதற்கில்லை'' என்கிறார் சுவாமிஜி. ஆனால் நாம் முன்பே கண்டதுபோலக் கல்விப்பணியை மட்டும் அவர் நினைக்கவில்லை. மருத்துவப்பணி, பஞ்சத்தில் அடிபட்டவர்களுக்கு அன்னதானம் இப்படி எல்லாவற்றையும் மேற்கொள்ளும் ஆத்மிக நிறுவனத்தைப்பற்றி எண்ணினார். யாரைக்கொண்டு அதனை நடத்துவது என்பதற்குத்தான் இந்தக் கடிதத்தில் விடைகண்டு விட்டோம். — அதாவது, சந்நியாசிகளின் சங்கம் ஒன்றைக்கொண்டு இந்தப் பணியைப் புரிய வேண்டும் என்று சுவாமிஜி தீர்மானம் செய்து கொண்டார்.

Koviloor Digital Library

இதற்கு ஆசாரசீலர்களான மக்களின் ஆதரவையெல்லாம் தேடிப் பெறவேண்டும் என்று சுவாமிஜி நிர்மானித்துக் கொண்டார்.

கடல் அலைகள் கொந்தளித்துக்கொண்டேதானிருந்தன. ஆனால் சுவாமிஜியின் இதயக் கொந்தளிப்பு மெல்ல மெல்ல அடங்கிற்று. ஸரோஜதளம் போன்ற தமது நேத்திரத்தில் பனி மல்க, அந்தப் பனியின் வழியே அன்னை கன்னியாகுமரியின் ஆலயத்தை நன்றி நிறைய நோக்கினர் சுவாமிஜி. 'அன்னையே, அலைப்புண்ட என் உள்ளத்துக்கு ஓர் உறுதியும், திட்டவட்டமான காரியக்கிரமம் ஒன்றையும் அளித்தாயே' என்று மொழியும், குரலும் வெளிப்படுத்த முடியாத உணர்வுகளால் நன்றி தெரிவித்தார் சுவாமிஜி. அன்னையை எண்ணியவுடன் அவளிலேயே தம்மை ஒப்பித்து வாழ்ந்த ஆசாரியர் ஸ்ரீராமகிருஷ்ணரின் நினைவும் அவரை நெகிழ்த்தது. ''என் ஐயா, என்னை இப்பணியில் நீ தான் ஈடுபடுத்த வேண்டும். மக்களை ஆண்டவனுகக் கருதி சேவை செய்வதே அத்வைதம் என்று உபதேசித்தது நீயே யல்லவா? அப்படி நான் சேவைபுரிய அருள்வாய்; சேவா ஸ்தாபனம் அமைக்கக் கருணை புரிவாய்'' என்று பிரார்த்தித்துக் கொண்டார்.

மக்களுக்காகப் பேரன்பு பூண்ட சுவாமிஜி, நீலவானின் பின்னணியில் நீலக்கடல் மத்தியில் பாறையில் அமர்ந்து பக்தி மயமாக குரு மஹராஜைப் பிரார்த்தித்தது நம் அகக்கண்கள் பருகிப் புனிதம் பெறவேண்டிய காட்சியாகும். அன்று அவர் அமர்ந்த பாறைதான் இன்று விவேகானந்தர் பாறை என்று பெயர் பெற்றிருக்கிறது. இந்த வரலாறு எழுதப்படும்போது அப்பாறையில் சுவாமிஜியின் உருவச்சிலை அமைக்க நன்முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

* * *

'நாராயண நாராயண' என்று ஸ்மரணம் செய்வது சந்நியாசிகளின் வழக்கம். அந்த நாராயணன் தம் குழந்தைகளை ஏழை என்றும் பணக்காரர் என்றும், எளியோர் என்றும் வலியவர் என்றும், அறியாதவர் என்றும் அறிஞர் என்றும் வேற்றுமைப் படுத்திப் பார்ப்பானு? 'நாராயணனின் குழந்தைகள்தாமா மக்கள்? நாராயணனே அல்லவா அவர்கள்?' என்று சுவாமிஜி எண்ணினர். இனி தமது நாராயண ஸ்மரணம் ஏழைகளாக உள்ள தரித்திர நாராயணர்களுக்கும், தாழ்த்தப்பட்ட நாராயணர்களுக்கும், அறியாமை மூடிய நாராயணர்களுக்கும் செய்யும் பணிதான் என்று உறுதி பூண்டார். அந்தப் பணியோடு மதமும் இணைந்த ஸ்தாபனத்தைத் தோற்றுவிப்பதே தாம் பிறவி எடுத்-

Koviloor Digital Library

ததின் நோக்கம் என்று நிச்சயம் பெற்ருர். சமூக சேவை, மதம் என்று பிரித்துச் சொல்வதே தவறு என்று நிச்சயம் பெற்ருர். மதம் என்ருல் வேத தர்மங்கள், உபநிஷதங்கள் கூறும் ஞானம், முனிவர்களின் யோகம், சாதுக்களின் துறவு, அடியார்களின் பக்தி இவற்ருேடு மக்களின் இதயம், அந்த இதயத்தில் குமுறும் ஆசைகள் ஆசாபாசங்கள், இன்ப எழுச்சிகள், துன்பச் சருக்கல்கள், நம்பிக்கைகள் ஐயங்கள் எல்லாம் இணைந்த வாழ்முறைத் தத்துவம் என்று புரிந்து கொண்டார் சுவாமிஜி. மக்கள் இல்லாவிடில் வேதங்களும்கூட ஆண்டவன் கண்களுக்குத் துக்கமாகவே தோன்றும் என்று கருதினுர். இப்படி சமூகப் பணியோடு இணைந்த மதத்தை அநுதாபத்துடனும், அநுபவத்துடனும் பரப்பக்கூடிய துறவிப்படையைத் தயாரிக்க வேண்டும் என்ற திட்டத்துடன், இதற்குப் பூர்வாங்கமாகத் தாம் அமெரிக்கா செல்லவேண்டும் என்ற தீர்மானத்துடன், கடலில் நீந்தி மீண்டும் கரை சேர்ந்தார். கன்யாகுமரிக் கரையில், விர் விர்ரென்ற கடற்காற்று தம்மைக் குளிர்வித்தே உலர்த்தும் அற்புத அநுபவத்துடன் நடக்கலானுர் சுவாமிஜி. இனி அவருக்குத் தம்மைப் பற்றியும் தமது மோக்ஷத்தைப் பற்றியும் கவலையில்லை.

எந்த சமய சரித்திரத்திலும் கண்டிராத கருணை ஸமாதி நிலையைக் கன்னியாகுமரியில் பெற்ருர் சுவாமிஜி. அவர் அன்று அகத்தால் உணர்ந்த கருணைப்பணி இன்று காசினி முற்றும் ஸ்தூல உருவத்தில் நிகழ்ந்து வருகிறது. அவர் அகத்தால் கண்ட சாதுப்படையினர்தான் இன்று உலகெங்கிலுமுள்ள ஸ்ரீராம கிருஷ்ண மடங்களின் மூலம் மக்கள் பணியைத் தெய்வப்பணியாகச் செய்து வருகின்றனர்.

Koviloor Digital Library

அத்தியாயம்—16

சில நிகழ்ச்சிகள்

சுவாமிஜி, தமது மகத்தான திருப்பணிக்கு மகத்தான ஊக்க மளித்த சென்னைக்கு வருமுன்னர், அவரது சஞ்சாரத்தின்போது நிகழ்ந்த சில உதிரி நிகழ்ச்சிகளை இந்த அத்தியாயத்தில் காண் போம். இவை எங்கு நடைபெற்றன, அல்லது எப்போது நடை பெற்றன என்று நிச்சயமாக தெரியாததால் தனியாக இங்கு கூறப்படுகின்றன.

* * *

ஒரு நாள் சுவாமிஜியின் அகக்கண் முன்பு ஓர் அற்புதக் காட்சி தெளிவாகத் தெரிந்தது. ஸிந்து நதிக்கரையில் வயோதி கர் ஒருவர் நின்றுகொண்டிருக்கிறார். வேதரிக்குகளை கோஷிக் கிறார் அவர். இதுவரை சுவாமிஜி கேட்டிராத ஸ்வரங்களில் அவர்கானம் செய்கிறார்:

ஆயாஹி வரதே தேவி த்ரயக்ஷரே ப்ரஹ்ம வாதினி
காயத்ரி சந்தஸாம் மாதா ப்ரஹ்ம யோனி நமோஸ்துதே

என்ற பதங்கள் அரிய ஸ்வரங்களில் தெள்ளத் தெளிவாக சுவாமிஜி யின் செவிகளில் விழுந்தன. ஆதிகாலத்து ஆரிய முனிவர்கள் இப்படித்தான் சங்கீதமயமாக வேதம் கூறியிருக்கவேண்டும் என்று முடிவு செய்தார் சுவாமிஜி. ஆசாரிய சங்கரரின் கவிதைகளில் இதே சங்கீதம் இருக்கும் அற்புத ஒற்றுமையையும் கண்டாரவர்.

சுவாமிஜியின் யோக சக்தி எவ்வளவுக்கு வளர்ந்திருந்தது என்பதற்கு இது ஓர் உதாரணமாகும்.

* * *

சுவாமிஜியுடன் சக பிரயாணியாக ஒருசமயம் வந்துகொண் டிருந்தார் ஒருவர். அவர் நன்கு படித்திருந்தார். உலக விஷயங் கள் தெரிந்தவராகவும், புத்தி கூர்மையுள்ளவராகவும் காணப் பட்டார். அவருடன் சம்பாஷிக்கும்போது தமது ஹிமாசல சஞ் சாரம்பற்றி சுவாமிஜி கூறினார். அப்போது அந்தப் படிப்பாளி யின் பலவீனம் தெரிந்தது. அவர் அற்புத சம்பவங்களைப் பெரி தும் நம்புகிறவராக இருந்தார். இமயமலை என்ற வுடனேயே அங்கு பல அற்புதங்கள் நிகழ்ந்திருக்குமென அவர் எதிர்பார்த் தார். சுவாமிஜியிடம், ''ஹிமாலயத்தில் சித்தர்கணங்களைச் சந்தித்தீர்களா?'' என்று கேட்டார். சுவாமிஜி அப்போது குறும்பு செய்யும் பாவனையிலிருந்தார். எனவே நிகழாத பல

Koviloor Digital Library

அற்புதங்களைச் சிரிக்காமல் கூறினர். மஹாத்மாக்களான சித்தர்கள் தமக்கு உலகின் முடிவைப்பற்றியெல்லாம் கூறியதாகச் சொன்னர். இந்த கல்பம் எப்போது முடியப்போகிறதென்று அவர்கள் கூறியதாகச் சொன்னர். பிரளயமாகி மீண்டும் சத்தியயுகம் பிறக்கும்போது எந்தெந்த சித்தர்கள் யார் யாராகப் பிறந்து எப்படி எப்படி மனிதகுலத்தை உருவாக்கப் போகிருர்கள் என்றும் தமக்கு அவர்கள் கூறியதாக சுவாமிஜி சொன்னர். அந்த சக பிரயாணி எல்லாவற்றையும் பூரண நம்பிக்கையுடன் கேட்டுக் கொண்டிருந்தார். தமக்கு இவ்வளவு 'ஞானம்' புகட்டிய சுவாமிஜியைத் தம்முடன் உணவருந்த அழைத்தார்.

அப்போதெல்லாம் சுவாமிஜி கையில் பணம் வைத்துக் கொண்டதில்லை. யாரேனும் டிக்கட் வாங்கிக்கொடுத்தால் அதை மட்டும் ஏற்றுப் பிரயாணம் செய்வார். மற்றபடி தமது உணவு, உடை, இருக்கை இவை ஆண்டவன் விட்டவழியாகட்டும் என்று இருந்து வந்தார். அன்றைக்கு சுவாமிஜிக்கு வயிற்றைப் பசி கிள்ளிற்று. 'சரி, இந்த அசட்டு மத்ஸ்யம் அளிக்கும் உணவைத் தான் பிகுசெய்து கொள்ளாமலே உண்டு வைப்போமே' என்றெண்ணினர் சுவாமிஜி. குறைவில்லாமல் நன்ருக போஜனமும் ஆயிற்று.

தமது அன்னதாதாவைப் பார்த்தார் சுவாமிஜி. அவர் நல்ல அறிவு, இதயம் இரண்டுமே பெற்றிருப்பதைக் கண்டார். ஆனல் அவருடைய மூட நம்பிக்கையானது அறிவு, இதயம் இரண்டையும் கெடுத்து வருவதாகவும் கருதினர். அவரிடம் இரக்கம் கொண்ட சுவாமிஜி வெளிப்படையாகவே அவரது குறையை எடுத்துக் கூறினர். ''இவ்வளவு படிப்பும், அறிவும் இருப்பதாகப் பெருமையடித்துக்கொள்ளும் நீர் இந்த விநோதக் கற்பனைக் கதைகளை எல்லாம் எப்படி உண்மை என்று நம்புகிறீர்கள்?'' என்று கேட்டார். சக பிரயாணிக்கு வெட்கம் உண்டாயிற்று. அவர் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டார். அவரை நல்வழிப் படுத்தவேண்டுமென்று சுவாமிஜி மிகவும் இதமான குரலில், ''நண்பரே, நீர் நல்ல புத்திசாலி. உம் போன்றவர்கள் தம் விவேகத்தைப் பயன்படுத்தவேண்டாமா? ஆத்மீகம் என்பது அற்புதம் செய்யும் சித்து விளையாட்டு அல்ல நண்பரே! அதிசயம் செய்து தமது காரியத்தை ஒருவர் சாதித்துக் கொள்ளும் வரையில் அவர் ஆசைகள் நீங்கப்பெருதவர் என்றுதான் அர்த்தம்! ஆசைகளுக்கு அடிமையாகவும், தம்மையே மையமாகக் கொண்டவராகவும்தான் அவர் இருப்பார். சத்திய நடத்தை என்பதன் சக்தியைப் பெறுவதே ஆத்மிகம். வேகங்களை வெல்வதும், வேட்

Koviloor Digital Library

கைகளை வெறுப்பதுமே ஆன்மிகம். வாழ்க்கைப் பிரச்னையைத் தீர்க்க உதவாத சித்து விளையாட்டுக்களை துரத்திச் செல்வது சக்தியை விரயம் செய்வதேயாகும்; சுயநலத்தின் வடிகட்டிய சாறுகும்; மனசைக் கெடுக்கவே அது உபாயமாகும். இந்த அபத்தம்தான் இன்று நாட்டின் நெறியைக் குலைத்து வருகிறது. நம்மை மனிதனுகச் செய்யும் வலுவாய்ந்த பகுத்தறிவும், பொது நல உணர்ச்சியும், தத்துவமும், சமயமுமே இன்று நமக்குத் தேவையாகும்'' என்ருர்.

சுவாமிஜியின் உபதேசத்தினுல் தாம் பெரும் பயன் பெற்ற தாயும், அதன் வழியேதான் ஒழுகுவதாயும் உடன்வந்தவர் பக்தியுடன் கூறினுர்.

* * *

உத்தரப்பிரதேசத்தில் சுவாமிஜி பிரயாணம் செய்கையில் பசி, தாகத்தால் தவித்ததாகவும் அப்போது வணிகர் ஒருவர், 'உழைத்துப் பொருளீட்டாமல் சமூகத்துக்குப் பாரமாக இருக்கும் உமக்கு இதுவும் வேண்டியதே' என்று குத்திப் பேசியதாகவும் முன்பு படித்தோமல்லவா? ஒரு முறை சுவாமிஜிக்கே இந்த வார்த்தைகள் உண்மைதானே என்று தோன்றியதுண்டு. 'நல்ல தேகக் கட்டு பொருந்திய தாம் வீடு விடாகச் சென்று பிச்சை வாங்கி உண்பது சரிதானு?' என்று அவர் சிந்திக்கலானுர். சரியல்ல என்ற விடையைத்தான் அவரது உள்ளம் கூறிற்று. இச்சமயத்தில் குருபாயி ஒருவருக்கு அவர், ''நான் வெட்கம் மானமில்லாமல், துளிக்கூட மன உறுத்தல் இல்லாமல், காக்கை போல மற்றவர்களின் வீடுகளில் பிச்சை எடுத்து உண்டபடி திரிந்துகொண்டிருக்கிறேன்'' என்று எழுதியிருக்கிருர்.

'சீ! எனக்கு உணவு படைக்கும் ஏழையருக்கு என்னுல் என்ன பயன்? அவர்கள் ஒரு பிடி அரிசி மீதம் பிடிக்க முடியுமானுல் அவர்களின் சொந்தக் குழந்தைகளுக்கே அது ஒரு நாள் உணவாகுமே! அதெல்லாம் தான் போகட்டும், ஆண்டவனை அநுபவிக்காமல் இந்த உடலை நான் இப்படிப் பிச்சை எடுத்தாவது காப்பாற்றி என்ன ஆகவேண்டும்?' என்று எண்ணினுர் சுவாமிஜி. அந்த எண்ணம் அதிதீவிரமாயிற்று.

வனந்தரத்துக்குச் சென்று தவம் புரிந்து, உடல் வற்றி வற்றிப் பிராயோபவேசம் எனப்படும் முறையில் உயிரைவிடுவது என்று தீர்மானித்து விட்டார் சுவாமிஜி. அதேபோல கனுந்தகாரமான ஒரு கானகத்தில் காதங்கள் பல கடந்து சென்றுகொண்டே யிருந்தார். மாலை வேளை வந்தபோது முக்கால்

Koviloor Digital Library

வாசி மயக்க நிலையில் மரம் ஒன்றின்கீழே சாய்ந்து பகவானைத் தியானிக்கலானார்.

சிறிது தியானம் கலைந்தபோது......

ஆகா...அதோ தெரியும் இரண்டு கனல் துண்டுகள்......

அவை...சந்தேகமேயில்லை! புலியின் கண்கள் தாம்!

அதோ தெரிந்த அந்தக் கண்கள் நெருங்கி நெருங்கி இதோ வந்துவிட்டன.

நினைத்துப் பார்த்தாலே நமக்குக் குலை நடுங்குகிறது.

ஆனால் சுவாமிஜியின் உடலும் சரி, உள்ளமும் சரி இம்மி கூட அசையவில்லை. அசைந்து அசைந்து வந்துகொண்டிருந்த அந்தப் புலியும் ஏனோ அவருக்குச் சற்று தூரத்தில் படுத்துக் கொண்டது.

அதையே அன்புடன் நோக்கினார் சுவாமிஜி.

அவரது சிந்தனை சந்தோஷமாகச் சிரித்தது. ''இது ரொம்ப யுக்தம்தான். என்னைப்போலவே அதுவும் பட்டினிகிடந்ததாகத் தெரிகிறது. இந்த என் உடலோ தெய்வாநுபவத்துக்கு உபாய மாக இருக்கவில்லை; இந்த உடலால் உலகுக்கு எந்த நன்மையும் விளையுமென்றும் தோன்றவில்லை. இதோ பசித்துக்காணும் இந்த மிருகத்துக்கேனும் இந்த உடல் பயனாகும் என்றால் அது மகிழ்ச்சிக் குரிய விஷயமே அல்லவா?'' என்று சிரித்தது சுவாமிஜியின் சிந்தனை.

தின்னவரும் புலி தன்னையும் அன்பொடு
சிந்தையில் போற்றிடுவாய்!
அன்னை பராசக்தி அவ்வுரு ஆயினள்
அவளைக் கும்பிடுவாய்!

என்று மஹாகவி பாடிய மனோபாவம் அக்ஷரத்துக்கு அக்ஷரம் மெய்யான அற்புத நிகழ்ச்சி அது!

அம்பிகையைத் தியானித்துக்கொண்டு அமைதியாகக் கிடந் தார் சுவாமிஜி. ஆனால் அவர் பக்கமாகப் பாயவேண்டிய புலி எக்காரணத்தாலோ எதிர்ப் பக்கத்தில் பாய்ந்தோடிச் சென்று விட்டது.

அது மீண்டும் வருமோ வருமோ என்று சுவாமிஜி எதிர் பார்த்தார். இரவு முழுவதும் அந்தக் காட்டுமத்தியில் தம் ஆத்மாவுடன் உரையாடியபடி கழித்தார் சுவாமிஜி. ஆனால் அந்தப் பொல்லாத புலி — அதாவது நல்ல புலி — அவரிடம் திரும்பவே இல்லை.

பொழுது விடிந்தது. பரம்பொருள் தம்மை எப்படிக் காத்து வருகிறது என்பதை சுவாமிஜி அகமுருகி நினைந்து பார்த்தார்.

Koviloor Digital Library

அப்போது அவர் என்னென்ன எண்ணினர் என்பதை அவர் தவிர வேறு யார் அறியமுடியும்? இருந்தாலும் நாம் ஒருவாறு ஊகிக்கலாம்: 'உடலால் உழைப்பது மட்டும் உழைப்பல்ல; அறிவால், அன்பால் உழைத்து மக்களை மேம்படுத்துவதும் உழைப்பே; அப்படி உழைப்பவர்களை ரக்ஷிக்கவேண்டியது சமூகத்தின் பொறுப்பேயாகும்; சமூகத்துக்கு நன்மை என்று ஸ்தூல உருவில் செய்யாமல், தன்னுடைய மோக்ஷத்தைமட்டும் அடைய ஒருவன் விரும்பி சாதுவானலும், அவ்வாறு தங்களில் ஒருவன் சம்சாரச் சுழலிலிருந்து விடுபடவேண்டும் என்ற நல்லெண்ணத்தில் சமூகம் அவனுக்கு உணவு அளிக்க வேண்டியதே' என்று சுவாமிஜி எண்ணியிருக்கக்கூடும். மேலும், தம்மால் சமூகத்துக்குப் பயனிராது என்பதால்தானே அவர் உயிரைவிடத் தயாராக இருந்தார்! அது தவறு என்றும் அவரால் நடக்கவேண்டியது எவ்வளவோ இருக்கிறதென்றும் தெய்வசக்தி அவரிடம் கூறியிருந்திருக்கலாம்!

சுவாமிஜி காட்டிலிருந்து வெளிப்பட்டு மீண்டும் பிக்ஷை எடுத்து வாழத் தொடங்கினர்.

*　　*　　*

இன்னொரு சமயம் தகிக்கும் வெயிலில் வேர்த்து விருவிருத்துக் களைப்படைந்தார் சுவாமிஜி. ஓர் அடிகூட நடக்கமுடியாத நிலைமையில் எப்படியோ சமாளித்துக்கொண்டு ஓர் மரத்தடிக்குச் சென்றமர்ந்தார். எல்லையற்ற சோர்வும், ஆயாசமும் கொண்டார் சுவாமிஜி. அப்போது அவருக்கு, கார்முகிலிடை மின்னல் போல ஓர் எண்ணம் உதித்தது. 'ஆத்மா சர்வசக்தி வாய்ந்தது பொய்யல்லவே? அப்படியிருக்க பசியும் களைப்பும் பரதவிப்பும் அதற்கு ஏது? உடலின் அயர்வை அது ஏன் தனதாக எண்ண வேண்டும்? நான் எப்படிப் பலவீனனுக இருக்கமுடியும்?' என்று சிந்தித்துப் பார்த்தார் அவர். உடனே அவர் உடல் முழுவதும் ஒரு சக்தி வெள்ளம் பாய்வதாகத் தோன்றியது. அவருடைய உள்ளம் தெள்ளியதோர் ஒளியினைப் பெற்றது. தேக ஆயாசம் இருந்த இடம் தெரியாமல் பறந்தது. தாம் ஒருகாலும் பலவீனத்துக்குப் பணியமுடியாது என்ற உறுதியுடன் எழுந்திருந்து நடையைக் கட்டினர். இப்படித் தமது தேக பலவீனத்தை ஆத்ம பலத்தால் அவர் வென்ற சந்தர்ப்பங்கள் பல.

பிற்பாடு கலிபோர்னியாவில் சுவாமிஜி ஆற்றிய உரையின் ஒரு பகுதியைப் பாருங்கள்:

''எத்தனையோ முறை நான் பட்டினிகிடந்தும், காலெல்லாம் கொப்புளம் கண்டும், எல்லையற்ற அலுப்படைந்தும் மரணத்தின் பிடியில் சிக்கியிருக்கிறேன். பலப்பல நாட்களுக்குப் பிடி உணவு

Koviloor Digital Library

கூட இல்லாமலிருந்திருக்கிறேன். நடக்க முடியாமல் தள்ளாடியிருக்கிறேன். ஏதாவதொரு மரத்தடியில் விழுந்து விடுவேன். உயிர் என்னிலிருந்து வெளியே தத்திச் செல்வதுபோல இருக்கும். பேச முடியாது. சிந்திக்கக்கூட முடியாது. எனினும், பிரயத்தினத்தின்பேரில் மனது ஒரே எண்ணத்தை எண்ணும்: 'எனக்குச் சாவைப்பற்றிப் பயமில்லை. நான் பிறந்ததுமில்லை, இறந்ததுமில்லை. எனக்குப் பசியும் கிடையாது, தாகமும் கிடையாது. அதுவே நான்; நானே அது. இயற்கைச் சக்திகள் எவ்வளவு திரண்டு வந்தாலும் என்னை நசுக்க முடியாது. இயற்கை என்பது என் பணியாள். எனவே ஆண்டவர்களுக்கு ஆண்டவர்களாகவும், கடவுளருக்குக் கடவுளராகவும் உள்ள என் ஆத்மாவே! உன் பலத்தை உறுதிப்படுத்திக்கொள், இழந்த உன் சாம்ராஜ்யத்தை மீண்டும் பெறுவாய், எழுந்திரு, நட, நில்லாதே!' என்ற எண்ணத்தை என் மனது பற்றிக்கொள்ளும். அதேபோல நான் புதுச் சக்தியுடன் எழுந்திருப்பேன்; இதோ, இன்று உங்கள் முன்னால் உயிருடன் நிற்கிறேன்.''

''ஆனபடியால், எப்போது இருள்சூழ்ந்தாலும் ஆத்மாவின் சக்தி என்ற சத்தியத்தை நிலைப்படுத்திக்கொள்ளுங்கள். அப்போது எதிர்ப்புக்கள் யாவும் மறைந்தேவிடும். அவையெல்லாம் வெறும் மாயைதானே? இன்னல்கள் மலை உயரமாகத் தோன்றினாலும், பயங்கரமாகவும், இருள்மயமாகவும் இருந்தாலும் அவை எல்லாம் மாயைதான். பயம் கொள்ளாதீர்கள்! பயத்தை விட்டால் எதிர்ப்புக்கள் துரத்தப்படும். நசுக்குங்கள்; அவை தேயும். நெரியுங்கள்; அவை மாயும்.''

பரிவிராஜக நாட்களைப்பற்றித் தம்மிடமே தாம் பேசிக்கொள்வதுபோலச் சீடரொருவரிடம் அவர் கூறியதைப் பாருங்கள்:

''ஆகா, நான் பாடுபட்ட அந்த நாட்கள்! ஒரு சமயம் மூன்று நாட்கள் அன்ன ஆகாரமில்லாமல் நான் மயக்கமடைந்து சாலை நடுவிலேயே விழுந்து விட்டேன். எவ்வளவு காலம் நான் அப்படி மயங்கி யிருந்தேன் என்பதே தெரியவில்லை. பிரக்ஞை வந்தபோது என் ஆடையெல்லாம் நனைந்திருப்பதை உணர்ந்தேன். நல்ல மழை பெய்திருக்கிறது என்று தெரிந்துகொண்டேன். அந்த ஈரம் எனக்குப் புத்துணர்ச்சி ஊட்டியது. எழுந்திருந்து பிரயாசையுடன் நடக்கலானேன். சிறிது தொலைவிலிருந்த ஒரு மடாலயத்தை அடைந்தேன். அங்கு எனக்குக் கிடைத்த உணவு என் உயிரைக் காப்பாற்றியது.''

ஒரு சமயம் சுவாமிஜி திபேத்தியக் குடும்பமொன்றில் தங்க நேரிட்டது. அங்கு ஒரு பெண் பல புருஷர்களை மணந்துவாழும்

Koviloor Digital Library

வழக்கமுண்டு. திபேத்தின் ஜனத்தொகையில் பெண்களின் விகிதா சாரம் குறைவாக இருப்பதாலேயே இந்த வழக்கம் ஏற்பட்டிருப்பதாகச் சொல்வதுண்டு. சுவாமிஜி தங்கியிருந்த குடும்பத்தைச் சேர்ந்த ஆறு சகோதரர்களும் ஒரு பெண்ணை மனைவியாகப் பெற்றிருந்தார்கள். சுவாமிஜி அவர்களுடன் சகஜமாகப் பழகத் தொடங்கியபின் இது விஷயமாகத் தமது கருத்தைக் கூறினர். கற்பு நெறியை விளக்கிவிட்டு, பல புருஷர்களை விவாகம் செய்துகொள்வது தமக்கு எவ்வளவு அருவருப்பூட்டுகிறது என்பதை வெளிப்படக் கூறினர். இதைக் கேட்ட வீட்டுப் பெரியண்ணன் பொறுமை இழந்தான். ''சாதுவான தாங்கள் பிறரைச் சுயநலக்காரர்களாக இருக்கும்படி போதிப்பது எப்படிப் பொருந்தும்? 'இதை நானேதான் அநுபவித்து மகிழவேண்டும்; பிறருக்கு அளிக்கக்கூடாது' என்று எண்ணுவது பிசகில்லையா? ஒவ்வொருவனும் தனக்கென்றுமட்டும் ஒரு மனைவியை அநுபவிப்பது சுயநலமில்லையா? அதுவும் சகோதரர்களாகப் பிறந்தவர்கள் தங்கள் உடமைகளையெல்லாம் சமமாகப் பகிர்ந்து கொள்ளவேண்டும்—மனைவி உள்பட'' என்ருன் அவன். கற்புநெறி, தூய்மை இவற்றை வைத்துப் பார்த்தாலும், தர்க்கரீதியாகவே அலசிப் பார்த்தாலும்கூட அவனுடைய கூற்று தவருக இருக்கலாம். எதையுமே புத்திசாதுரியம் கொண்டு ஆதரித்தோ, எதிர்த்தோ பேசிவிடலாம். என்ருலும் அந்த மலைஜாதி மக்களின் எளிய சகோதரத்துவத்தை நினைந்து சுவாமிஜி அதிசயித்தார்.

இதுபோல, ஹிமாசலம் முதல் கன்யாகுமரிவரையிலுள்ள பலதரப்பட்ட மக்களின் பழக்க வழக்கங்களை சுவாமிஜி அறிந்திருந்ததே அவரைப் பெரிய சமூகச் சீர்திருத்தவாதி யாக்கிற்று. அவரவர் மனப்பான்மைப்படி அவரவருடைய பழக்க வழக்கங்களை சுவாமிஜி அநுதாபத்தோடு காண்பார். அதே சமயத்தில் 'பாரதம் உலகத்தின் மானதண்டம்' என்று காளிதாஸன் கூறியதை ஒட்டி பாரதப் பண்பாடு என்ற வேதாந்த நாகரிகத்தை அளவுகோலாகக் கொண்டு அவர்களைச் செப்பம் செய்யவும் எண்ணுவார்.

* * *

அவரது பரிவிராஜக வாழ்க்கையில் அவர்கண்ட சில உண்மைகளையும், அவரது மனோபாவத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும் கூறி இந்த அத்தியாயத்தைப் பூர்த்தி செய்யலாம்.

வரநகரத்திலிருந்து புறப்படுமுன் சுவாமிஜி உலகத்தை அதிகம் கண்டவரில்லை. சமூகத்தின் ஒரு சில பகுதிகளையே அவர் அறிந்திருந்தார். பாரத துணைக்கண்டம் முழுவதையும் கண்டு

Koviloor Digital Library

அறிய பரிவிராஜக வாழ்க்கை அவருக்கு உதவிற்று. இந்தியாவின் தனிப்பெருந் தூதனுகத் திகழ்வதற்கேற்ப மூவாயிரம் லக்ஷம் மக்களின் பற்பல பழக்க வழங்கங்களையும், மனப்பான்மைகளையும் அவர் அறிந்தார். இதனுலேயே யார் யாரை எந்தெந்த வழியில் அழைத்துச் செல்வது என்பதையும் உணர்ந்தார். தக்ஷிணேசுவரத்தில் தாம் கண்ட அநுபவத்தை — அநுபவங்களின் உறைவிடமான ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்களை — எப்படி இந்தியா முழுவதும் பரப்புவது என்பதை உணர்ந்தார்.

இந்தியாவில் இன்று படித்தவர்கள் எவ்வளவு சமய உணர்வு குன்றியிருப்பினும், படிக்காதவர்களின் சமய உணர்வுகள் எவ்வளவு தவறுன வழிகளில் சென்றுலும் இந்நாடு சமயத்துக்கு என்றே ஏற்பட்டது; இந்நாட்டில் மீண்டும் சமய உணர்வை ஸ்தாபிப்பதுதான் அதன் மறுமலர்ச்சிக்கு வழிவகுக்கும் என்று சுவாமிஜி கண்டார்.

சுற்றுப்பயணத்தின்போது தாம் காண்பனவற்றையெல்லாம் அலசி ஆராய்ந்து பார்த்தார் சுவாமிஜி. குருபாயி ஒருவர் கூறுவதுபோல, ''இச்சமயத்தில் அவர் புதுப்புது அநுபவங்களை ஓயாமல் தேடி எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். புதுப்புதுக் கருத்துக்களை ஓயாமல் சேகரித்துக் கொண்டிருந்தார். அவைகளை ஒப்பிட்டும், மாறுபடுத்தியும் பார்த்தார். ஒவ்வொரு ராஜ்யத்தின் சமய, சமூகக் கருத்துக்களாலும் தன் அறிவை நிரப்பிக் கொண்டார். பற்பல மதக் கோட்பாடுகள், தத்துவ சாஸ்திரங்கள் இவற்றை ஆராய்ந்து, தாம் நுணிகிக் கவனித்த எல்லா இந்திய மக்களுடைய உள்ளீட்டையும் அறிந்தார்.'' முக்கியமாக வேற்றுமைகளில் ஒற்றுமை கண்டார் அவர். ஆத்மிகம் என்பதொன்றே அத்தனை வேற்றுமைகளையும் இணைக்கும் ஒற்றுமைச் சரடாக இருப்பதை உணர்ந்தார்.

இந்தக் கோணத்தில் நோக்கும்போது, ஹிந்துக்களுக்கு அடுத்தபடியாகப் பெருந்தொகையிலிருந்த முகம்மதியர்களையும் சுவாமிஜி ஹிந்துக்களோடு ஒன்றுகவே கண்டார். ஸுஃபி சமயத்துக்கும் அத்வைதத்துக்கும் உள்ள ஒற்றுமையைக் கண்டார். படிப்பாளிகளான முகம்மதியர்கள் வேதாந்த சத்தியத்தை ஒப்புக்கொள்வதையும் கண்டார். எனவே ஹிந்து, முஸ்லீம் என்ற பேதம் நீங்கி, இருவரையும் சேர்த்து இந்தியராகக் கண்டார் சுவாமிஜி.

சுவாமிஜியின் நுண்ணிய மேதாவிலாஸம் தனது முழுத் திறனையும் காட்டிப் பல முடிவுகள் எடுக்க அவரது பரிவிராஜக வாழ்க்கை உதவிற்று.

Koviloor Digital Library

அத்தியாயம்—17

தமிழகத்தில் சுவாமிஜி

தமிழகம் — அன்றைய தமிழகத்தில் கன்யாகுமரி சேர்ந்திருக்கவில்லை; சரியாகச் சொன்னால் அன்று தமிழகம் என்பதே சென்னை ராஜதானியின் ஒரு பகுதியாகத்தானிருந்தது — சுவாமிஜியைக் கண்ட அன்றோடு அவரது ஆண்டிப் பரதேசி வாழ்க்கை ஒருவாறு முடிவடைந்து விட்டது என்றே கூறலாம். வரநகரத்திலிருந்து அவர் புறப்பட்ட நாளாகப் பலர் அவரைக் கண்டு தொடர்பு கொண்டபோதிலும், யாரும் காணாது அவர் ஆண்டியாகத் திரிந்த நாட்களே அதிகம். தெய்வத் தமிழ் நாட்டினிலே அவர் அடிவைத்தபின் அந்தப் பரதேசி வாழ்க்கை ஒருவாறு முடிந்தது.

1892-ம் ஆண்டின் கடைசித் தினங்களில் சுவாமிஜி கன்யாகுமரியிலிருந்து கால் நடையாகக் கிளம்பினார். ராமநாதபுர சமஸ்தானம் வழியாக யாத்திரை செய்து புதுச்சேரி வந்தடைந்தார். அங்கு சிறிது காலம் ஓய்வு எடுத்துக்கொண்டார். அந்நகரத்து இளைஞர் பலர் அவரால் ஈர்க்கப்பட்டு, அவரைத் தமது இல்லங்களுக்கு அழைத்து உபசரித்தனர்.

புதுச்சேரியில் ஸநாதனி ஒருவருக்கும் சுவாமிஜிக்கும் மிகவும் உக்கிரமானதொரு வாக்குவாதம் நடைபெற்றது. அந்த ஸநாதனி துளிக்கூட விட்டுக்கொடுக்காதவராக யிருந்தார். சுவாமிஜி எது சொன்னாலும் ''கதாபிந கதாபிந'' (ஒருபோதும் இல்லை, ஒருபோதும் இல்லை) என்று அவர் ஆக்ரோசமாகக் கத்தியதை சுவாமிஜி நீண்ட நாட்களுக்கு மறக்கவில்லை. அவரால் காரணம் காட்டி சுவாமிஜியுடன் வாதிடமுடியாவிடினும் அவர் சொன்னதையெல்லாம் ஆக்ஷேபித்து வந்தார். கடைசியில் சுவாமிஜி ஆவேசமாக, ''நண்பரே! நீங்கள் என்னதான் நினைக்கிறீர்கள்? தர்மத்தின் உட்பொருட்களை சோதித்து நிருபிக்கும் பொறுப்பு படித்த இந்தியன் ஒவ்வொருவனுக்கும் ஏற்பட்டுள்ளது. இதற்கு நாம் பழங்காலத்துப் பொந்துகளிலிருந்து வெளிவந்து உலகம் தற்போதுள்ள நிலையை அநுசரித்து அதனை முன்னேற்றவேண்டும். கட்டுப்பெட்டி வழக்கங்கள் நமது சமூக வாழ்வின் வளர்ச்சியைக் குந்தகம் செய்தாலோ, நமது தத்துவ சிந்தனையைக் குழம்பச் செய்தாலோ, அந்தக் கட்டுப்பெட்டி வழக்கங்களை வெட்டி எறிந்து விட்டு முன்னால் அடி எடுத்துவைக்க வேண்டிய தருணம் இது. பொதுமக்களை உயர்த்தியே தீரவேண்டிய சமயம் இது. நான்

Koviloor Digital Library

காம் வர்ணத்தவர்கள் எழுச்சிகொண்டு தங்களது உரிமைகளையும் சலுகைகளையும் வலியுறுத்தப்போகும் காலம் நெருங்கிவிட்டது. இப்போது கல்விமான்கள் யாவரும் தாழ்த்தப்பட்டவர்களைப் படிப் பிக்க முயலவேண்டும். சமூக சமத்துவ லக்ஷியத்தைப் பரப்ப வேண்டும். புரோகிதர்களின் கொடுங்கோன்மையை வேரறுக்க வேண்டும். ஜாதி தர்மத்தையும், உயரிய மதக்கோட்பாடுகளை யும் திரித்துக் கடைபிடிப்பதால் தற்போது கட்டுக்கோப்பு குலைந் திருக்கும் தேசீய உணர்வைச் செப்பமாக்கவேண்டும்'' என்றெல் லாம் சுவாமிஜி கூறினார்.

* * *

ஜாதி முறைகள் கூடாது என்றோ, கலப்பு மணம் செய்து கொள்ளவேண்டும் என்றெல்லாமோ சுவாமிஜி கூறியதில்லை. எனி னும் வேத வேதாந்தங்களை எல்லா ஜாதியினரும் படிக்க உரிமை பெற்றிருக்கிறார்கள் என்பது அவரது கருத்து. அதோடு ஒருவர் பார்த்தால் சாப்பிடக்கூடாது, ஒருவரோடு சேர்ந்து உட்கார்ந்து சாப்பிடக்கூடாது என்பதுபோன்ற வழக்கங்களையும் சுவாமிஜி சமயம் நேரும் போதெல்லாம் தாக்கியிருக்கிறார்.

* * *

திருவனந்தபுரத்தில் நாம் மன்மதநாத பட்டாசாரியர் என் றொருவரைக் கண்டோமே, நினைவிருக்கிறதா ? அவர் சென்னையில் அக்கவுண்டண்ட் ஜெனரலின் உதவியாளராக இருந்தார். சுவாமிஜி கன்னியாகுமரியிலிருந்து கமண்டலுவும், தண்டமுமாக வந்தபோது அவரைக் கண்டுபிடித்த மன்மதநாதர் அவரைத் தம் மோடு சென்னை மாநகரத்துக்கு அழைத்து வந்தார்.

சுவாமிஜியின் சரிதத்தை எழுதியுள்ள மேல்நாட்டுச் சீடர்கள் சென்னையை ''சம்பிரதாயமான வித்தையும், பண்பாடும் நிறைந்த கேந்திர ஸ்தானம்'' என்று வர்ணிக்கிறார்கள். இன்னமும் அவர்கள் சென்னைக்குக் கொடுக்கும் நற்சான்றிதழ்களைப் படித்துப் பூரியுங்கள்:

''சென்னையில்தான் ஏராளமான இளைஞர்கள் அவரிடம் பக்திபூண்ட சிஷ்யராயினர். சென்னைதான் அவர் அமெரிக்கா போவதற்கு வேண்டிய நிதியும் சேகரித்துக் கொடுத்தது. சென்னை யில்தான் சுவாமிஜியுடைய குருநாதராகிய ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசம் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. சென்னையில் தான் சுவாமிஜி ஸ்தாபன ரீதியில் செயல்படத் தொடங்கியது. அங்குதான் அவரால் நூல் பிரசுரமும் முதன் முதலில் தொடங்கப் பட்டது. சுவாமிஜி மேல்நாடுகளிலிருந்து திரும்புமுன்னரே அவ ரது பணியை விரிவாகப் பரப்பியவர்களும் சென்னை வாசிகளே.''

Koviloor Digital Library

தமிழர்களாகிய நமக்கு சுவாமிஜியிடம் விசேஷ உரிமை உண்டு. அவரது பெருமையைப் பார் அறியுமாறு செய்ததில் வங்காளத்துக்குக் கிடைக்காத பங்கு நம் தமிழகத்துக்குக் கிடைத்தது.

பல்வித மாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசும் தமிழ் நாடு

என்று தேச மகாகவி சும்மாவா பாடினர் ?

* * *

சுவாமிஜி சென்னை நகரத்தில் வந்திறங்கியதிலிருந்தே பொது வாழ்வில் அவருடைய பிரவேசம் தொடங்கிவிட்டது. சுவாமிஜியினல் ஆகர்ஷிக்கப்பட்ட பத்து பதினைந்து இளைஞர்கள் அவரது பணிக்கே தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர். அன்னமிருக்கும் இடத்தை ஒரு காகம் மற்ற பல காகங்களுக்குச் சொல்லி அவற்றையும் வரவழைப்பதுபோல, இந்த இளைஞர்களின் பணி காரணமாக சென்னை நகரத்தின் பல துறைப்பட்ட மக்களும் சுவாமிஜியை வந்து தரிசிக்கலானர்கள். சமயம், மனேதத்துவம், விஞ்ஞானம், இலக்கியம், சரித்திரம் யாவும் அவருடைய வாக்கில் மலர்ச்சி பெற்றன.

ஒரு நாள் சிந்தனை கடந்த துரிய நிலையில் தோய்ந்து கொண்டிருந்தபோது யாரோ, ''சுவாமிஜி, உருவும் பெயருமற்ற பரம்பொருளே நாம் எல்லாரும் என்னும் வேதாந்திகளாக இருந்த போதிலும் ஹிந்துக்கள் உருவ வழிபாடு செய்வது ஏன் ?'' என்று கேட்டார்கள். சட்டென்று சுவாமிஜி அவர் பக்கமாகத் திரும்பினர். அவருடைய கண்கள் ஞானப்பிழம்பாக ஜ்வலித்தன. ''நாம் ஹிமாலயத்தைப் பெற்றிருப்பதால்தான்'' என்று ஒரே வெட்டில் விடை பகர்ந்தார் சுவாமிஜி. ''நாம் பிரம்மம்'' என்னும் அநுபவம் எத்தனை பேருக்குக் கைகூடும்? அந்த அநுபவம் கூடாமலே நாம் அப்படி வாய் வேதாந்தம் பேசாதிருக்க வேண்டுமானல் 'நாம் பிரம்ம மல்ல; ஆனல் மிகவும் அற்பமானவர்கள்' என்ற எளிமை அவசியமாகும். நாட்டின் வட எல்லை முழுதும் நீண்டு பரந்து வியாபித்துள்ள உன்னதமான இமயத் தொடரை நினைந்து, நம்மையும் நினைந்தால் இந்தப் பிரபஞ்சத்தில் நாம் எவ்வளவு சிறியவர்கள் என்று தெரியுமல்லவா ? அப்போதுதான் பரம்பொருளின் மகாசக்தி பற்றிய நினைப்பும் உடன் தோன்றும். 'அதுவே நாம்' என்ற நிலைக்கு இன்னும் எவ்வளவோ தொலைவு இருக்கிறது என்ற உணர்வும் உண்டாகும். இப்போது நம்மை நல்வழியில் அந்த மகாசக்தியே அழைத்துச் செல்லவேண்டும் என்ற எண்ணத்துடன் அதனை உருவத்தில் வழிபடும் பக்தியும் தன்னல்

Koviloor Digital Library

பிறக்கும். இவ்வளவையும் சுவாமிஜியின் ஒளிப் பார்வையும், ஒளி வாசகமும் சொல்லாமல் சொல்லிவிட்டன. சுவாமிஜியே அப்போது வணக்கத்துக்குரியதொரு ஹிமாசலமாகத்தான் இருந்தார்.

ஆத்ம உணர்வும், பக்தியும், கல்வியும், கலாரஸனையும் மிகுந்த சென்னை வாசிகள் சுவாமிஜியின் உயரிய கருத்துக்களையும், அவருடைய நுண்ணுணர்வுகளையும், அவற்றை அவர் வெளிப் படுத்தும் வளமான ஆங்கில மொழி அழகையும், அவரது சங்கீதக் குரலையும் கண்டு அவரிடம் வசமாகிவிட்டார்கள். நாளுக்கு நாள் பட்டாசாரியரின் வீட்டில் கூட்டம் பெருகிவந்தது. பொது மேடையில் ஏறிப் பேசத்தயங்கிய சுவாமிஜி அதற்கு ஊக்கம் பெற்ற பயிற்சிசாலை சென்னையில் பட்டாசாரியரின் இல்லமே என்று கூறலாம்.

பற்பல கோணங்களில் பார்க்கும்போது வைரம் பற்பல வண்ணங்களைச் சிந்துவதுபோல, சுரோதாக்களைப் பொறுத்து சுவாமிஜியும் நவநவமான சாயல்களில் திகழ்வார். ஒருபோது தம்மை நிந்திக்கும் பண்டிதரொருவரிடம் மிகவும் தாழ்மையுடன், 'நான் ஒன்றும் அறியாதவன், மன்னியுங்கள்' என்பார். இன்னொரு சமயம் புயல்காற்று வீசுவதுபோல எதிர்வாதங்களையெல்லாம் தவிடுபொடி செய்வார். ஆயிரம் ஆண்டு வாழ்ந்தவர் போல வந்தவர்களுக்கு ஆசி கூறுவார் ஒரு சமயம். இவரே குழந்தையாகிச் சிறிய விஷயங்களைக் கண்டு குதூகலிக்கவும் செய்வார். 'சாதாரணமாகத் தாங்கள் காணும் சாதுக்களுக்கு இவர் மிகவும் மாறுபட்டவர்; இவர் ஓர் ஆன்மிகச் சுரங்கம்' என்று சென்னைவாசிகள் லகுவில் புரிந்து கொண்டு விட்டனர். புஷ்பத்தை வண்டுகள் மொய்ப்பதுபோல் சுவாமிஜியை ஆசிரயிக்கத் தொடங்கினர்.

ஒரு நாள் பண்டிதரொருவர், ''பொழுது கிடைக்கவில்லை என்பதால் சந்தியாவந்தனத்தை விட்டுவிடுவது தவறாகுமா ?'' என்று கேட்டார்.

உடனே பொங்கி யெழுந்தார் சுவாமிஜி. ''என்ன ! என்ன சொன்னீர் ! பொழுதா கிடைக்கவில்லை, பொழுது ? பூர்வத்தில் மனித மலைகளாக வாழ்ந்த நம்முடைய ரிஷிகள், நம்மைப்போல மந்தநடைபோடாமல் காலை எட்டிப்போட்டு நடந்த நமது ரிஷிகள், யாரை ஒரு க்ஷணம் எண்ணினாலும் நீர் புழு அளவுக்குச் சுருங்க வேண்டுமோ அப்படிப்பட்ட ரிஷிகள், ஸந்தியாவந்தனம் செய்ய அவகாசம் பெற்றிருந்தார்கள் ! கேவலம் உமக்குப் பொழுதில்லாமல் போய்விட்டது...அப்படித்தானே ?''

Koviloor Digital Library

அந்த உறுமலைக் கேட்டு வெட்கினுர் விஞப் போட்டவர்.

அன்றைக்கே, மேஞட்டு மோகம் மிகுந்த ஒருவர் வேதகால ரிஷிகளின் 'அர்த்தமில்லாத உபதேசங்கள்' பற்றி ஏதோ பேச லாஞர். இடியென வெகுண்டெழுந்த சுவாமிஜி, ''உன்னுடைய பூஜனைக்குரிய முந்தையரை இப்படிப் பேச உனக்கு எத்துணைத் துணிச்சல்! அரைகுறைப் படிப்பு உன் மூளையைக் கலக்கி யிருக்கிறது. ரிஷிகள் கூறியிருப்பதின் விஞ்ஞான உண்மையை நீ பரிசோதித்துப் பார்த்ததுண்டா? பரிசோதிப்பது கிடைக்கும். நீ வேதங்களைப் படிக்கவாவது செய்திருக்கிருயா? படித்தால் அதில் ரிஷிகள் விடும் அறைகூவல் தெரியும். தைரியமிருந்தால் அதை எதிர்க்கப்போ'' என்ருர்.

இன்று நம்முடைய சாஸ்திரங்களை இன்னதென்றே படித்துத் தெரிந்து கொள்ளாமல் பிதற்றும் கூட்டத்துக்கெல்லாம் சுவாமிஜி அன்றே சவுக்கடி கொடுத்திருக்கிருர்.

ஓயாமல் ஒழியாமல் காணவருபவர்களுடன் பேசிக் களைத்துப் போன சுவாமிஜி பிரதிதினமும் மாலை வேளைகளில், பிரசித்தி பெற்ற சென்னை கடற்கரையில் உலவுவார். லவண சமுத்திரத் துக்குப் பக்கத்தில் லாவண்ய சமுத்திரமாக உலவுவார். சமுத் திரத்துக்கு மட்டுமின்றி, இயற்கை வனப்புக்கும் கரைகட்டிஞற் போன்ற சென்னைக் கடற்கரை சுவாமிஜியின் கவி உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்திருந்தது. சுவாமிஜியுடன் ஒரு சில சீடர்கள் உலவச் செல்வார்கள்.

ஒரு நாள் மீனவர் குலக்குழந்தைகள் தம் தாய்மார்களுடன் இடுப்பளவு நீரில் நின்று மீன் பிடிப்பதைக் கண்டார் சுவாமிஜி. அவரது கண்கள் கரைந்தன. ''பிரபோ, இப்படிப்பட்ட அபாக்கியசாலிகளை எதற்காகப் படைக்கிருய்? அவர்களைக் காணவே என்ஞல் தாள முடியவில்லை! இன்னும் எத்துணைக்காலம் பிரபோ, எத்துணைக்காலம்?'' என்று கூவிஞர் அவர்.

இன்னெரு நாள் சாயங்காலம் சுவாமிஜிக்கு மரியாதை செலுத்தி ஒரு கூட்டம் நடைபெற்றது. சென்னை நகரத்து அறி ஞர்கள் பலர் அதில் பங்கு கொண்டார்கள். அப்போது சுவாமிஜி தாம் ஓர் அத்வைதி எனக் கலக்கமறப் பிரகடனப்படுத்திக் கொண் டார். சிலர் அதை ஆக்ஷேபித்தார்கள். ''ஆண்டவனும் நீங் களும் ஒன்றே என்கிறீர்கள். அப்படியாஞல் உங்களுக்கு ஒரு பொறுப்புமில்லாமல் போகிறது. நீங்கள் தவருன மார்க்கத்தில் சென்ருல் உங்களைத் தடுப்பது யார்?'' என்று அவர்கள் கேட் டார்கள். உடனே சுவாமிஜி நெருப்புப் பொறிபோல, ''தானும் ஆண்டவனும் ஒன்று என்று உண்மையாக எண்ணுபவன் தவருன

Koviloor Digital Library

மார்க்கத்தில் செல்லவே முடியாது. அவனையுமறியாமலே அவன் பாபத்தை வெறுத்து ஒதுக்குவான். அவனுக்குத் தடை தேவையே இல்லை'' என்றார்.

இன்னொரிடத்தில் இன்னொரு சமயத்தில் சுவாமிஜி பிரம் மத்தைப் பார்க்க முடியும் என்று உறுதியாகக் கூறினார். அப் போது சிலர் ஆக்ஷேபிக்கக் கிளம்பினர். 'அறியவொண்ணாத பரம்பொருளைப் பார்க்கவாவது?' என்று கேலியாகக் கேட்டனர். அதற்கு சுவாமிஜி, ''அறியவொண்ணாத அந்தப் பரம்பொருளை நானே பார்த்திருக்கிறேன்'' என்று முழங்கினார். அதன்பின் அவரை யார் எதிர்க்க முடியும்? அநுபவ ஞானத்துக்கு முன்னால் வாசாஞானம் என்ன செய்ய முடியும்? ஆதிசங்கரரும் தமது பிரம்ம சூத்திர பாஷியத்திலே, 'இங்கே தனது இதயத்திலேயே பிரம்மத்தை ஒருவன் அநுபவித்திருப்பானேயாகில் அதனை யார் ஆக்ஷேபிக்க முடியும்?' என்று கேட்கிறார்.

திருவல்லிக்கேணி இலக்கிய சங்கத்தில் சுவாமிஜி நிகழ்த்திய சம்பாஷணைகள் பிரசங்கங்களாகவே இருந்தன. இந்த சங் கத்தைச் சேர்ந்த இளைஞர்களில் பலர் சமூக சீர்திருத்தவாதிக ளாவர். அவர்கள் பிராசீனமான மரபுகளை ஓயாமல் கண்டித்துப் பிரசாரம் செய்வதை சுவாமிஜி விரும்பவில்லை. அதை அவர்க ளிடமே கூறினார். அந்நியக் கொள்கைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்தே அநுசரிக்க வேண்டும் என்றும் சமய விரோதமான அம்சங்களை 'இரவல்' வாங்கி நம் பண்பாட்டைக் குலைக்கலாகாது என்றும் அறிவுறுத்தினார். நவ பாரதத்தின் அஸ்திவாரம் புரா தன பாரதம்தான்; புராதன பாரதத்தை அலக்ஷியப்படுத்தி நவ பாரதம் நிர்மாணிக்க முயலுவது அஸ்திவாரமில்லாமல் கட்டடம் கட்டுவதற்கு ஒப்பேயாகும் என்று கூறினார். 'நான் சமூக சீர்திருத்தங்களை எதிர்ப்பவன் அல்ல. ஆனால் சீர்திருத்தங்கள் வெளியிலிருந்து புகுத்தும் விஷயமல்ல; மக்களின் உள்ளத்தில் பிறக்க வேண்டியதே. அது அழிவு சக்தியாக இல்லாமல் ஆக்க சக்தியாக இருக்கவேண்டும்' என்றார்.

கிறிஸ்துவக் கல்லூரியில் விஞ்ஞான உதவிப் பேராசிரியராக இருந்த சிங்காரவேலு முதலியார் என்பவர் ஒரு நாஸ்திகர். நாஸ்திகராயினும், கிறிஸ்துவ மதத்தில் நடைமுறைக்கு உகந்த அம்சங்கள் இருப்பதாகக் கூறி, ஹிந்து மதத்தை பழிப்பார் அவர். சுவாமிஜியுடன் வாதிப்பதற்காக வந்தார் சிங்காரவேலு முதலியார். ஆனால் 'வேட்டையாடப் போனவன் வேட்டை யாடப் பட்டான்' என்பதுபோல சுவாமிஜியை மாற்றப்போன வர் தாமே மாறிப்போனார். ஒரே நாள் உரையாடலில் கடவுள்

Koviloor Digital Library

கொள்கைக்கு சிங்காரவேலு முதலியாரை சுவாமிஜி திருப்பி விட்டார். அவருக்குக் 'கிடி' என்று பேரிட்டு அன்பு செய்தார் சுவாமிஜி. ''வந்தேன் — கண்டேன் — வென்றேன் என்று ஸீஸர் சொல்வாராம். ஆனால் கிடியோ வந்தார்— கண்டார்— வெல்லப்பட்டார்'' என்று சுவாமிஜி சிரித்துக் கொண்டே கூறுவார். சிலகாலம் கழித்து முதலியார் சுவாமிஜியின் பணிக்குத் தம்மை அளித்துக் கொண்டார். 'ப்ரபுத்த பாரதம்' என்ற வேதாந்த சஞ்சிகையைச் சென்னையில் தொடங்கிய சுவாமிஜி கிடியையே அதற்கு கௌரவ நிர்வாகஸ்தராக நியமித்தார். இப் பத்திரிகையில் ஆசிரியராக இருந்து அமர தத்துவங்களை அற்புத மான ஆங்கிலத்தில் அள்ளிச் சொரிந்தவர் வத்தலகுண்டு தந்த அரும்குணச் செல்வரான பி. ஆர். ராஜம் அய்யர் அவர்களாவார். தமிழ்ப் புதினத்தின் தந்தையாகக் கருதப்பட்ட அந்த நுண்மதி யாளர் பல ஆயுள்களில் செய்யக்கூடிய இலக்கிய அற்புதங்களைத் தமது அல்ப ஆயுளிலேயே புரிந்து காட்டியவராவார்.

வி. ஸுப்ரம்மணிய அய்யர் என்பவர் தாம் சுவாமிஜியைத் தரிசித்தது குறித்துச் சுவையான குறிப்புக்கள் கொடுத்துள்ளார். மாணுக்கராக இருந்த அவரும், அவரது நண்பர்களும் சுவாமி ஜியை பட்டாசாரியரின் வீட்டில் சந்தித்தனர். பக்தி செய்வதை விடப் பரிகசிப்பதற்காகவே அவர்கள் சென்றனர். அவர்கள் சென்றபோது பாதி விழித்துக்கொண்டும் பாதி கனவு கண்டு கொண்டுமிருக்கும் கண்களுடன் சுவாமிஜி ஹுக்கா பிடித்துக் கொண்டிருந்தார். அவர் தூங்கி வழிந்தார் என்று சொல்வதை விட ஆத்ம சிந்தனையில் தோய்ந்து கொண்டிருந்தார் என்று சொல்வதே பொருத்தமாகும். காணவந்தோரில் ஒருவர் ''சுவாமிஜி கடவுள் என்றால் என்ன ?'' என்று கேட்டார். அதைக் காதிலேயே போட்டுக்கொள்ளாததுபோலப் புகையை உறிஞ்சி வெளியிட்டார் சுவாமிஜி. பிறகு தமது கனத்த இமைகளைத் தூக்கிக் கேள்வி கேட்டவரைப் பார்த்து, ''நல்லது பையா, சக்தி என்றால் என்ன ?'' என்றார். கேள்வி கேட்டவரும் மற்ற மாணவர்களும் சுவாமிஜியின் வினவுக்கு விடைசொல்ல முடியாமல் விழித்தனர். சுவாமிஜி நிமிர்ந்து உட்கார்ந்தார். ''என்ன இது ! 'சக்தி' என்ற வார்த்தையை உங்கள் வாழ்க்கையில் தினந்தோறும் உபயோகிக்கிறீர்கள். அப்படியும் உங்களால் அதற்கு லக்ஷணம் கூற முடியவில்லையா ? இவ்வாறிருக்க, கடவுளுக்கு நான் லக்ஷணம் கூறவேண்டுமென்று கேட்கிறீர்களே, இதெப்படி ?'' என்றார். இதேபோலவே, அவர்கள் விதண்டா வாதமாகக் கேட்ட மற்ற கேள்விகளுக்கும் மண்டையிலறைந்தாற் போல மறுமொழி கூறினார்.

Koviloor Digital Library

சிறிது நேரத்துக்குப்பின் அந்த மாணுக்கர்கள் சென்றுவிட்டனர். ஸுப்ரமணிய அய்யர் மட்டும் சுவாமிஜியால் ஆகர்ஷிக்கப்பட்டு அங்கேயே இருந்தார். சுவாமிஜி கடற்கரையில் உலவச் செல்லும்போது ஐயரும் உடன் சென்றுர். பேச்சுவாக்கில் சுவாமிஜி ஐயரிடம், ''நல்லது பையா, உனக்கு மல்யுத்தம் தெரியுமா ?'' என்று கேட்டார். ''தெரியும்'' என்றுர் அவர். உடனே சுவாமிஜி வேடிக்கையாக ''சரி, நாம் ஒரு போட்டி நடத்துவோம்'' என்றுர். மற்பயிற்சியில் சுவாமிஜிக்கு இருந்த திறனேயும், அவரது தசைகளின் திட்பத்தையும்கண்டு அதிசயித்த அய்யர் சுவாமிஜியைப் 'பயில்வான் சுவாமி' என்றே அழைக்கலானுர்.

ஒரு நாள் பட்டாசாரியரின் தவிசுப்பிள்ளை தமது ஹுக்காவையே பார்த்துக்கொண்டிருப்பதை சுவாமிஜி கவனித்து விட்டார். மைசூர் மஹாராஜா சுவாமிஜிக்கு அளித்திருந்த வேலேப்பாடமைந்த நூக்கமர குழல் அது. சுவாமிஜி சமையல்காரரிடம், ''நீ இதை விரும்புகிருயா ?'' என்று கேட்டார். அவன் ஏதும் பதில் சொல்லவில்லை. சுவாமிஜி இரண்டாம் முறையும் அதே கேள்வியைக் கேட்டவுடன் அவன் தயங்கினுன். ''இந்தா'' என்று ஹுக்காவை அவனிடமே கொடுத்து விட்டார் சுவாமிஜி. தன்கையிலேயே குழலே வாங்கிக்கொண்ட பின்னும்கூட அது தனக்குக் கிடைத்துவிட்டது என்பதை அவனுல் நம்பமுடியவில்லை. 'அவ்வளவு கலே விசித்திரங்கள் நிரம்பிய ஒரு பொருளேயா இவ்வளவு எளிதில் சுவாமிஜி தனக்கு — போயும் போயும் தனக்கு — அளித்துவிட்டார் ?'

சுவாமிஜியின் ஒரு சில பழக்கங்களில் ஹுக்கா பிடிப்பதும் ஒன்று. சோர்வும் தளர்ச்சியும் ஏற்படும் பல சமயங்களில் அது அவருக்குப் புதுத் தென்பு அளித்திருக்கிறது. எனினும் தாம் மிகவும் கருதுபவற்றைக்கூட வேறுயாரேனும் விரும்புவதாகத் தெரிந்தால் தயங்காமல் தானம் செய்துவிடுவார் சுவாமிஜி.

சுவாமிஜி நீண்ட நாட்களாகத் தமது பரிவிராஜக வாழ்க்கையின்போது ஒரு கைத்தடியை உபயோகித்து வந்தார். இதனேப் பிறகு அவர் அமெரிக்காவுக்குச் சென்றபோது பிரின்ஸ் உட்ஸ் என்ற இளேஞருக்குக்கொடுத்தார். உட்ஸின் அன்னேயாகிய கேட் அம்மையாருக்குத் தமது பெட்டியையும் போர்வையையும் கொடுத்தார். ''என்னிடமிருக்கும் ஏதேனுமொன்றை யாராவது விரும்பினுலே போதும், அது அவர்களுடையதாகிவிடும்'' என்றுர்சுவாமிஜி.

* * *

சுவாமிஜி சென்னேயிலிருக்கும்போது அவருக்கு ஒரு விசித்திரமான அநுபவம் ஏற்பட்டது. சில ஆவிகள் அவரைச்சுற்றி வந்து

Koviloor Digital Library

தொல்லை கொடுக்கலாயின. அவை அவரிடம் இல்லாத பொல்லாத விஷயங்களையெல்லாம் கூறி அவரது மூளையைக் குழப்ப லாயின. இவை பொய் விஷயங்கள் என்று பிறகு சுவாமிஜி அறிந்தார். மீண்டும் ஆவிகள் வந்தவுடன் சுவாமிஜி திடமாக இருந்து அவற்றை வெருட்டினுர். உடனே அவை பரிதாபமான குரலில் தங்களது துயர நிலையைக் கூறின. இதைப்பற்றியே சுவாமிஜி நீண்டநேரம் சிந்தித்தார்.

ஒரு நாள் கடற்கரைக்குச் சென்றபோது சுவாமிஜி கை நிறைய மணலை எடுத்துக்கொண்டார். அதையே அரிசியாகப் பாவித்து, ஆவிகள் அமைதியுறவேண்டும் என இதயபூர்வமாகப் பிரார்த்தித்துக்கொண்டு, பலியாகப் போட்டார். ஆவிகளும் உண்மையாகவே திருப்தி கொண்டன. அதன்பின் அவை சுவாமி ஜியைத் தொந்தரவு செய்யவில்லை.

மக்களிடத்திலும் விலங்குகளிடத்திலும் மட்டுமின்றிப் பிசாசுகளிடம்கூட சுவாமிஜி கருணைகாட்டியிருக்கிறுர். அவர் கருணைகாட்டுவார் என்று நம்பி அவையும் அவரிடம் தங்கள் குறை யிரந்திருக்கின்றன.

சென்னையில் சுவாமிஜியின் சிடர்குழாம் பெருகிற்று; முன் எப்போதுமில்லாத அளவில் அவர் தமது ஆத்ம பலத்தை வெளிக் காட்ட ஒரு வாய்ப்பு கிடைத்தது. அவருடைய புத்தி ஜாஜ்வல்ய மாகப் பிரகாசித்தது. அவருடைய இதயத்திலிருந்து உணர்ச்சி கள் பிரவாகமாகப் பெருக்கெடுத்தன.

சென்னையில் சுவாமிஜியின் சிடரான ஸ்ரீ கே. வியாஸராவ் எழுதியுள்ள ஒரு வியாசத்திலிருந்து சில பகுதிகளைப் பாருங்கள்: "......ஆங்கிலத்திலும் சம்ஸ்கிருதத்திலும் சரளமான ஞானம் பெற்றிருந்த அவர் பளிச்சுப் பளிச்சென்று சாதுர்யமாக விடை கூறுவதில் அசாதாரணமான திறன் பெற்றிருந்தார். அவர் தம் மையே பிரபஞ்சத்தின் ஜீவதத்துவத்துக்கு ஓர் இசைக் கருவியாக்கிக்கொண்டதுபோல முழுத்தொண்டையும் விட்டுப் பாடினுர். இவ்வளவு ஆற்றல்களிலிருந்தும் பூமியில் ஒருநாடோடி யாகத் திரிந்து கொண்டிருந்தார். தெம்பும் திடமும் படைத்த தேகத்துடன்கூடிய அவரது அறிவு மின்னல் பொறிகளாகத் தெறித்தது. நல்ல உணவை ருசித்து மகிழ்ந்தாரவர். ஹுக் காவையும், சுருட்டையும் எப்படி ரசிப்பது என்று அறிந்திருந் தார். இவரே துறவைப்பற்றிப் பன்னிப் பன்னி பேசுகையில்...... அவருடைய அந்தரங்க சுத்தம் மற்றவர்களின் போற்றுதலைப் பெற்றது......பாரமாத்மிக விஷயம் என்ற கோதாவில் மற் போரும், சிலம்பமும் புரியும்போது தம்மை எவ்வளவு அழகாக

Koviloor Digital Library

அவர் காத்துக்கொள்கிறுர் என்பதை பி. ஏ. பட்டதாரிகளும், எம். ஏ. பட்டதாரிகளும் கண்டு வியந்தனர். லேசான விஷயங் களைப் பேச வாய்ப்பேற்பட்டபோது அவர் வேடிக்கை விநோதங் களில் எப்படித்திளைக்கிறுர்......என்பதையும் அவர்கள் கண்டனர். எல்லாவற்றையும்விட அவரது தேசபக்திதான் அவரை மற்றவர் களுடைய அன்புக்குரியதாக்கியது. உலக பாசங்களைக் களைந்து, பந்தங்களிலிருந்து விடுபட்ட அந்த வாலிபருக்கு ஒரே ஓர் அன்பு இருந்தது: அவரது தாய்நாடு; ஒரே ஒரு துன்பம் இருந்தது; அதன் விழ்ச்சி. அவரது வார்த்தைகள் மின்னல்போலப் பிறி ஒளிர்ந்தன; உருக்குபோலக் கூர்மையாகப் பாய்ந்தன. அவர் யாவரையும் கவர்ந்தார்; சிலருக்குத் தமது ஆர்வத்தைப் புகட்டி ஞர்; பொறுக்கி எடுத்த ஒரு சிலரிடம் அழியாத நம்பிக்கை என்ற திபத்தை ஏற்றிவைத்தார்.''

புராதன வேத சாஸ்திரத்தின் அதிஉன்னத கருத்துக்களி லிருந்து, இன்றைய விஞ்ஞான பரிசோதனுலயத்தின் நுண்ணிய விஷயங்கள் வரையில் எல்லாமறிந்திருந்த வங்கத் துறவியை எவ் வாறு மதிக்கவேண்டுமோ அவ்வாறு மதித்தது சென்னே. அறிவுக் கடலாக விளங்கிய சுவாமிஜி, தாம் யாரிடம் உரையாடுகிறுரோ, அவர்களின் நிலேக்கு இறங்கிவந்து, கையைப் பிடித்து அழைத்துச் செல்வதுபோல் அவர்களை உயர்நிலேகளுக்கு இட்டுச்செல்லும் அழ கைப் பாராட்டி அவரது சென்னேச் சிடர்கள் எழுதியிருக்கிறுர்கள். அதோடு அவர் எதிராளி கேட்கவிருக்கும் கேள்வியையும் தாமே முன்கூட்டிக் கேட்டு அதற்கும் விடையிறுத்து விடுவார். ''மிருது வான இயல்பும், மன்னிக்கும் ஸ்வபாவமும் பொருந்தியவராக இருந்தார் சுவாமிஜி. எனினும் வெடிமருந்தின் அருகில் இருப்பது போலவே அவருடைய அண்மையில் இருக்கவேண்டும். யாருடைய மனதிலேனும் ஒரு திய எண்ணம் ஓடினுல் உடனே அது சுவாமி ஜிக்கு பளிச்சிட்டுவிடும். அவருடைய இதழ்களில் நெளியும் ஒரு விசித்திரமான முறுவலினுலோ, அகஸ்மாத்தாகச் சொல்வதுபோல சம்பாஷணையில் அவர் கூறும் ஓரிரு வார்த்தைகளிலோ இதனே மற்றவர்கள் புரிந்து கொள்வார்கள்'' என்கிறுர் ஒரு சிஷ்யர். ஒவ்வொருவரையும் அவரால் எப்படி இவ்வளவு சரியாகப் புரிந்து கொள்ளமுடிகிறது என்று அதிசயித்த ஒரு பக்தரிடம் அவர், 'சந்நியாசிகள் மனித மனத்தின் மருத்துவர்கள்; உடல் மருத்து வர்கள் வியாதிகளைக் கண்டறிந்து மருந்து தருவதுபோல், சந்நி யாசிகளால் உள்ளப் பிணியைக்கண்டு நிவாரணம் சொல்ல முடி யும்' என்ருர்.

ஆனுல் வைத்தியர்களை நம்பி உடலே ஒப்பிப்பதுபோல் மஹான்களை நம்பி உள்ளத்தை ஒப்பிப்பவர் நம்மில் யாருண்டு?

Koviloor Digital Library

மேல்நாடு போகவேண்டும் என்ற தமது உத்தேசத்தை அவர் சென்னையிலும் ஒருவாறு வெளியிட்டார். அது எவ்வளவு அவசியமான பணி என்பதைச் சென்னைப் பெருமக்கள் உணர்ந்து சுவாமிஜியை ஊக்கினர். வாயளவில் வெறுமனே நின்றுவிடாமல், உடனேயே சுவாமிஜியின் பயணச் செலவுகளுக்காக நன்கொடைகள் திரட்டலாயினர். சுமார் ஐந்நூறு ரூபாய் சேர்ந்ததும் அதனை சுவாமிஜியிடம் அளித்தனர். பொன்னையும், பொருளையும் உதறிவிட்டு வந்திருந்த சுவாமிஜிக்கு அந்தப் பணத்தைக் கண்டதும் நரம்புகள் தளர்ந்தன. பரமஹம்ஸ ஸ்ரீராமகிருஷ்ணருக்குப் பணத்தைக்கண்டால் ஏற்படும் கூச்சம்போலவே சுவாமிஜிக்கும் ஏற்பட்டது. ரூபாய் அணா பைஸா கணக்குப் பார்ப்பது தம்மால் முடியுமா? ஆண்டியான தம்மிடம் ஏன் இப்படிப் பொருள்வந்து சேருகிறது? அவர் பதறினர்.

'நான் என் சங்கல்ப பலத்தின்படி நடக்கிறேனு? அல்லது ஆர்வம் என்னை ஆட்டி வைக்கிறதா? அல்லது இதெல்லாவற்றிலும் ஏதோ ஒரு மகாசக்தியின் திட்டங்கள் உருவாகி வருகின்றனவா?' என்று அவர் தம்மைத்தாமே கேட்டுக் கொண்டார்.

''அம்பிகே! உன் திருஉள்ளத்தை எனக்குத் தெரிவித்து அருளமாட்டாயா? செயல்கள் யாவற்றையும் செய்பவள் உண்மையில் நீயே! என்னை உன் கருவியாக மட்டுமே செய்து கொள்வாய். எனக்கென்று ஏதோ திட்டங்களும், சங்கல்பமும் இருப்பதாக நான் மயங்காதபடி செய்வாய். தேவி! நான் ஒரு நாடோடிப் பரதேசி, உலகத்தின் போக்குகளில் அநுபவப்படாதவன். என்னை ஏழுகடல் தாண்டி தூரதேசங்கள் அனுப்பிவைக்க உன் திருஉள்ளமா? தூர தேசங்களில் தன்னந்தனியாக, யாரும் அறியாதவனுக நான் என்ன செய்யமுடியும்? விசித்திரமான மக்களிடையில் அவர்களுக்கு விசித்திரமான ஓர் ஆத்ம அறைகூவலை எழுப்ப என்னுல் முடியுமா? விடை சொல்ல மாட்டாயா? நீ ஐயம்திரிபற எனக்கு உத்தரவு தந்தாலொழிய நான் எப்படி இந்தப் பணத்தைத் தீண்டமுடியும்?''

அகம்குழைய, விழிநீர் இழிய அன்னையிடம் பிரார்த்தித்தார் சுவாமிஜி. ஏனே அப்போதும் பரமேசுவரி அவரிடம் பேசவில்லை.

''குழந்தைகாள்!'' என்ருர் சுவாமிஜி நிதி திரட்டிக் கொண்டு வந்திருந்த தமது அன்புச் சிடர்களிடம். ''குழந்தைகாள், எப்படியேனும் நான் தேவியின் சங்கல்பத்தை வற்புறுத்தித் தெரிந்துகொள்ள உறுதிபூண்டு விட்டேன். அந்நிய தேசம் செல்வதென்பது இருளில் எடுத்து வைக்கும் ஓர் அடியாகும். இவ்வாறு

Koviloor Digital Library

நான் போயாகவேண்டும் என்பதை அவள் நிச்சயப்படுத்தவேண்டும். அவளுடைய விருப்பம் அதுவாயின் தானே பணமும் அப்போது கிடைக்கும். இப்போதைக்கு — ஸர்வேசுவரியின் ஒப்புதலைப்பெறுமல் — நான் இந்தப் பணத்தை ஏற்பதற்கில்லை. இதை ஏழை எளியவர்களுக்கு தானம் செய்துவிடுங்கள்'' என்றுர் பக்தியின் மேருவாகவும், அன்பின் இமயமாகவும் இருந்த சுவாமிஜி.

சீடர்கள் மறுபேச்சின்றி அவருக்குக் கீழப்படிந்தனர்.

ஒரு பெரும் சுமை தம்மீது சாராமல் காத்துக்கொண்ட விச்ராந்தி சுவாமிஜிக்கு உண்டாயிற்று.

இதன் பின் சுவாமிஜி தியானக்கடலில் குடைந்து குடைந்து முழுகினுர். அன்னையையும், ஆசாரியனையும் எவ்வாறேனும் கண்டு அவர்களுடைய சித்தத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதே அவருடைய குறிக்கோளாக இருந்தது. தத்துவ உபதேசகராகயிருந்த சுவாமிஜி அப்போது அம்பிகையின் பச்சைக் குழந்தையாகவே மாறிவிட்டார். அவளுடைய அழைப்புக்காகத் துடித்தார். 'அம்மாவை என்னுடன் பேசவைத்தே தீரவேண்டும்' என்ற குழந்தைப் பிடிவாதம் ஒன்றே அவரிடம் அதுபோது இருந்தது. அம்மா அதற்குமேல் பிடிவாதமாக இருந்தாள். நினைத்துருகும் அடியாரையன்றி வேறு யாரை நைய வைப்பது ?

* * *

ஹைதராபாத்திலிருந்த சிலர் தங்கள் சென்னை நண்பர்கள் மூலம் சுவாமிஜீயைக் குறித்துக் கேள்விப்பட்டார்கள். ஹைதராபாத்துக்கு வருமாறு அவர்கள் சுவாமிஜியை அழைத்தனர். சுவாமிஜியும் உடனே புறப்பட்டார்.

அப்போது ஹைதராபாத் ராஜ்யம் நைஜாமின் ஆட்சியில் அல்லவா இருந்தது ? நைஜாமின் சூப்பரண்டெண்டிங் என்ஜினியரான பாபு மதுசூதன் சட்டர்ஜி என்பவருக்கு பட்டாசாரியார் சுவாமிஜியின் வருகைப்பற்றித் தந்தி கொடுத்தார்.

பிப்ரவரி 10ந் தேதி சுவாமிஜி ஹைதராபாத் ரயில் நிலையத்தில் வந்திறங்கும்போது அவர் இதுவரையில் கண்டிராத அளவுக்கு அங்கு மக்கள் பெருந்திரளாகக் குழுமியிருந்தனர். குறைந்த அவகாசத்தில் ஒரு வரவேற்புக் குழுவே அமைத்திருந்தனர் ஹைதராபாத் நன்மக்கள்: சுவாமிஜிவை வரவேற்ற ஐநூறுபேரில் முஸ்லீம்களும், ஹிந்துக்களுமாக மிகவும் உயர்பதவி வகித்தோரும், பெரும் கல்விமான்களும் இருந்தனர். கல்கத்தாவில் சுவாமிஜி அறிந்திருந்த பாபு காளிசரண சட்டர்ஜி அவரைப் பிரமுகர்களுக்கு அறிமுகம் செய்தார். சுவாமிஜிக்கு ஏராளமான மலர்

Koviloor Digital Library

மாலைகள் அணிவிக்கப்பட்டன. 'சுவாமியார் ஒருவரை வரவேற்க இத்தனை பெரிய கூட்டம் கூடி நாங்கள் பார்த்ததே இல்லை' என்று ஒரு பக்தர் எழுதியுள்ளார்.

மறுநாள் ஸெகந்தராபாத் மக்களில் நூற்றுவர் ஒரு குழுவாக அமைந்து சுவாமிஜியைக் காணிக்கைப் பொருள்களுடன் கண்டனர். மஹபூப் கல்லூரியில் அவரை ஓர் உரை ஆற்றுமாறு கேட்டுக் கொண்டனர். பொதுமேடை ஏற இதுகாறும் மறுத்து வந்த சுவாமிஜி எக்காரணத்தாலோ அப்போது உடனே ஒப்புக்கொண்டார். அதனை ஹைதராபாத் செய்த பாக்கியமென்றுதான் சொல்லவேண்டும்.

அன்று கோல்கொண்டா கோட்டையை எல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு சுவாமிஜி திரும்பியபோது, ஹைதராபாத் பிரபலஸ்தர்களில் முக்கியமானவரும், நிஜாமின் மைத்துனருமான நவாப் பஹதூர் ஸர் குர்ஷித்ஜா என்பவரின் காரியதரிசி தமக்காகக் காத்திருக்கக் கண்டார். மறுநாள் காலை நவாபை பேட்டி காண அரண்மனை வருமாறு அவர் சுவாமிஜியை அழைத்தார்.

அதேபோல் மறுநாள் காலை காளிசரணருடன் சுவாமிஜி அரண்மனையை அடைந்தார். அங்கு நவாப்பின் மெய்க் காப்பாளர் சுவாமிஜியை வரவேற்று, குர்ஷித்ஜாவிடம் அழைத்துச் சென்றார். குர்ஷித்ஜா மிகவும் பரந்த மனப்பான்மை படைத்தவர். ஹிமாலயத்திலிருந்து கன்னிமுனை வரையில் உள்ள முக்கியமான எல்லா ஹிந்து க்ஷேத்திரங்களுக்கும் அவர் யாத்திரை செய்திருந்தார்.

சுவாமிஜியும், ஸர் குர்ஷித்ஜாவும் இரண்டு மணிகளுக்கு மேல் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். பல மதங்களைப் பற்றிப் பேசினர். உருப்படைத்த கடவுளை ஜாவினால் ஒத்துக்கொள்ள முடியவில்லை. சுவாமிஜி உருவம் என்பது கண்-காது-மூக்கில் இல்லையென்றும் எந்தச் சின்னத்தின்மூலம் பரம்பொருளை நினைத்தாலும் அது உருவமே என்றும், இவ்வாறு எந்த ஒரு உருவத்தாலும் கடவுளை வணங்காத மதமே கிடையாது என்றும் நயம்பட விரித்துக் கூறினார். ஹிந்துமதத்தின் உச்சித் தத்துவமாக விளங்கும் அத்வைதம் குணம் குறி கடந்த கடவுளைக் கூறி, சாதகனும் அதுவாகவே ஆவதற்கு வழிசெய்வது பற்றியும் கூறினார். வேதாந்தத்தின் சிறப்பினை மேற்கத்திய நாடுகளுக்கு எடுத்துரைக்கவேண்டும் என்ற தமது அபிலாஷையையும் தெரிவித்தார்.

''சுவாமிஜி, இதோ தங்கள் பயணத்துக்கு எனது காணிக்கையாக ஓர் ஆயிரம் ரூபாய்'' என்று முன் வந்தார் ஸர் குர்ஷித்ஜா.

Koviloor Digital Library

''இப்போது வேண்டாம் ஸாஹேப்! நான் புறப்படும்போது பெற்றுக்கொள்கிறேன்'' என்று கூறிவிட்டார் சுவாமிஜி.

இன்னமும் அவருக்கு அன்னையின் ஆதேசம் கிடைக்க வில்லையே!

பதின்மூன்றும் தேதி காலை சுவாமிஜி ஹைதராபாத் பிரதம ரான ஸர் அஷ்மான்ஜா, பேஷ்காரான மஹாராஜா நரேந்திர கிருஷ்ண பஹதூர், மஹாராஜா ஷிராஜ் பஹதூர் ஆகியோரைச் சந்தித்தார். அவர்களும் சுவாமிஜியின் அயல்நாட்டு யாத்தி ரைக்கு உதவ முன்வந்தனர்.

அன்று பிற்பகல் மஹபூப் கல்லூரியில் சுவாமிஜி முதன் முறையாக மேடைப் பிரசங்கம் புரிந்தார். ''மேல்நாட்டுக்கு என் தூதுப்பணி'' என்பதுபற்றி அவர் பேசினர். பண்டித ரத்தன்லால் தலைமைவகித்த இந்தக் கூட்டத்தில் பல ஐரோப்பியர் கள் உள்பட ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர். பிற்காலத்தில் நானிலமெல்லாம் காணப்போகும் அவரது நாவன் மைக்கு அன்றே அங்குரார்ப்பணமாயிற்று.

மறுநாள் காலை ஸேத் மோதிலால் என்பவரின் தலைமையில் பீகம் பஜார் வட்டிக்கடைக்காரர்கள் சுவாமிஜியைக் கண்டு, அவருடைய அமெரிக்கப் பிரயாணச் செலவுகளுக்கு உதவுவதாகக் கூறினர். பிப்ரவரி 15-ந் தேதியன்று சுவாமிஜிக்குப் பூனு மக்களிட மிருந்து அழைப்புத் தந்தி வந்தது. எனினும் சுவாமிஜியால் அதனை ஏற்க முடியவில்லை.

ஹைதராபாத்தைச் சுற்றியுள்ள ஹிந்துக் கோயில்களின் இடி பாடுகளையும் மசூதிகளையும் மாளிகைகளையும் சுவாமிஜி சுற்றிப் பார்த்து வந்தார்.

யோக சாதனைகளில் சிறப்புப்பெற்றிருந்த ஒருவரை சுவாமிஜி ஹைதராபாத்தில் கண்டார். அற்புத சக்திகள் பெற்றிருந்த அவருக்கு சுவாமிஜி சென்றபோது கடும் காய்ச்சல் கண்டிருந்தது. சுவாமிஜியைக் கண்ட மாத்திரத்திலேயே அவர் நல்ல ஆத்ம சம்பத்துப் பொருந்தியவர் என அறிந்த யோகி அவரைத் தம் அருகே அமர்ந்து அவரது கரத்தைத் தம் தலையில் வைக்குமாறு கேட்டுக் கொண்டார். சுவாமிஜியும் அவ்வாறே செய்தாரோ இல்லையோ அந்தக் கணமே யோகியின் ஜுரம் பறந்தோடிவிட்டது. அவர் எழுந்திருந்து அமர்ந்து யோக பலத்தால் பல விந்தைகளைப் புரிந்து காட்டினர். மனேசக்தியை வளர்த்துக்கொள்வதால் பௌதிக அதீதமான செயல்களைப் புரிவது மிகவும் சாத்தியமே என்று இதிலிருந்து சுவாமிஜி நிச்சயம் பெற்றார். இவ்விஷயமாக

Koviloor Digital Library

அவர் கலிஃபோர்னியாவில் ''மனேசக்தி'' என்ற தலைப்பில் ஆற்றியுள்ள சொற்பொழிவில் நிறையக் கூறியுள்ளார்.

பிப்ரவரி 17ந் தேதி சுவாமிஜி ஹைதராபாத்திலிருந்து புறப்பட்டபோது ஆயிரம் மக்கள் அவருக்குப் பக்தியுடன் பிரிவுபசார மளித்தனர். ஹைதராபாத் பக்தர்களிடையே தமது நினைவை மங்காத சித்திரமாக அவர் தீட்டிக்கொண்டு விட்டார்.

சென்னைக்குத் திரும்பிய சுவாமிஜியை அவருடைய அருமைச் சீடர்கள் ஆர்வத்துடன் வரவேற்றனர். மஹபூப் கல்லூரியில் சபைக் கூச்சமின்றி சொற்பொழிவாற்றியதால் சுவாமிஜிக்கு இப்போது தன்னம்பிக்கை முன்னிலும் கூடியிருப்பதாகத் தோன்றியது. தமது வாக்கினுல் மக்களின் மனப்போக்கை மாற்ற முடியும் என்ற ஒரு திடம் அவருக்கு உண்டாயிற்று. சிகாகோவின் சர்வமத மஹாசபையில் கலந்துகொள்வதால் தன்னுல் ஸ்தூலமாக ஒரு பணி புரிய முடியும் என்று உறுதிபெறலானுர்.

புதுப்புதுச் சீடர்கள் நாள்தோறும் சுவாமிஜியை ஆசிரயித்து வர அவரது சென்னை வாழ்க்கை சென்று வந்தது. அமெரிக்க யாத்திரை குறித்தே அவர் பெரும்பாலும் பேசி வந்தார். அவரை அமெரிக்கா அனுப்பிவைப்பதற்குத் தேவைப்படும் திரவிய சேகரிப்பில் பலர் ஈடுபட்டனர். குருமஹராஜுடைய சத்தியத் திருவாக்கின்படித் தாம் செயற்கரிய சாதிக்கப் போகிறேம் என்பது சுவாமிஜிக்குத் தெரியும். எனினும் அவரே இதுபற்றி மற்றவர்களிடம் கூறியது கிடையாது. சுவாமிஜி தமது எதிர்கால உலகப் புகழ்பற்றிப் பரமஹம்ஸர் கூறியதை ஒருபோதும் வெளியிடாமலே பரமஹம்ஸரின் பெருமையைப்பாரெங்கும் பரப்பினுர். சென்னையிலும் இவ்வாறு தமது பெருமையை தாமாகச் சொல்லிக்கொள்ளாமலே அவர் விளக்கியதை வியாஸராவ் அவர்கள் வெகு அழகாகக் கூறுகிறுர்கள்:

''உலகம் விவேகானந்தரைக் கண்டறிந்தபோது, அவருடனேயே ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரையும் அது கண்டறிந்தது. பரமஹம்ஸர் மறைந்து எட்டாண்டுகளுக்குப் பின்னர் அவரைத் தெரிந்து கொண்டது. ஸ்ரீராமகிருஷ்ணரை அவரது சிஷ்யரான விவேகானந்தர் என்ற சாதனத்தின்மூலம் மக்கள் புரிந்து கொண்டனர். சுவாமி விவேகானந்தரைப்பற்றி நம்பிக்கை ஏற்பட்டது எனில் அதற்குக் காரணம் நிச்சயமாக ஸ்ரீராமகிருஷ்ணரல்ல. புகழ் ஏதும் அடைந்திராத சுவாமிஜியிடம் சென்னை மக்கள் தாமாக என்னென்ன கண்டார்களோ அவற்றைக் கொண்டே அவரிடம் நம்பிக்கை வைத்தார்கள்.''

Koviloor Digital Library

1893ம் ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் சுவாமிஜியின் சிஷ்யர்கள் அவரது அமெரிக்க யாத்திரைக்காக நிதி திரட்டுவதில் தீவிரமாக முனைந்தனர். பள்ளி ஆசிரியரான ஸ்ரீ அழகிய சிங்கப் பெருமாள் — 'அளசிங்கா' என்று சுவாமிஜியால் உள்ளன்போடு அழைக்கப்பட்டவர் — இதில் காட்டிய சிரத்தை வார்த்தைகளில் வடிக்க முடியாததாகும். பல இளைஞர்களைச் சேர்த்துக்கொண்டு அவர் வீடு வீடாகச் சென்று யாசகம் செய்தார். ''இந்தியாவின் மக்களுக்காக, ஏழைமக்களுக்காக நான் அமெரிக்கா செல்ல நினைக்கிறேன். அம்பிகையின் சித்தம் இருந்து நான் செல்வேனேயானால் அதற்கான பணம் மக்கள் எல்லாரிடமிருந்தும் வரவேண்டும் — தனிகர்களிடமிருந்தல்ல'' என்று சுவாமிஜி கூறியிருந்தார். இதனையொட்டி மத்தியதரக் குடும்பத்தினரிடமிருந்தே பெரும்பாலான நன்கொடைகள் வசூலிக்கப்பட்டன. மைசூர், ராமநாதபுரம், ஹைதராபாத் முதலிய இடங்களில் சுவாமிஜியிடம் அன்பு பூண்டு ஒழுகியவர்களையும் சென்னைச் சீடர்கள் அணுகி நிதி சேகரித்தனர். இப்படியே கிட்டதட்ட மூவாயிரம் ரூபாய் சேர்ந்துவிட்டது.

குடத்து விளக்கைக் குன்றேற்றிய பெருமையில் தமிழகத்தின் பங்கு கொஞ்ச நஞ்சமல்ல.

தாம் தீர்மானமாக எதுவும் கூறாமலே இந்தத் தமிழ் நாட்டிளைஞர்கள் இவ்வளவு ஆர்வத்துடன் வங்கத்தைச் சேர்ந்த தமக்காக நிதி திரட்டுவதைக் காண சுவாமிஜிக்கு வியப்பாக இருந்தது. 'இதுவே அம்பிகையின் திருஉளக் கருத்துக்குத்தான் முதல் அறிகுறியோ ?' என்று எண்ணினார். இருந்தாலும் அவள் ஏன் தெள்ளத் தெளியத் தன் உள்ளத்தை வெளிப்படுத்துகிறாளில்லை ?

சுவாமிஜி மீண்டும் கலங்கினார். சதா பிரார்த்தனை புரிந்தார். பிரார்த்தனை புரிகையில் உறுதி பிறந்தது. என்றாலும் இந்த எண்ணம் போதாது; நேரடியான தரிசனமும் உத்தரவும் வேண்டும் என்று தீவிரமாக இருந்தார் சுவாமிஜி.

நாட்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தேய்ந்துகொண்டே வந்தன. ஓர் இரவு சுவாமிஜி அரைத்தூக்கமும் அரைவிழிப்புமான நிலையில் படுத்துக்கொண்டிருந்தார்.

திடீரென்று அவர் கண்முன் வெண் மணற் பரப்பு விரிந்தது. அந்த மணற்பரப்பில்......ஆஹா......குருமஹராஜ் ! அம்பிகையான ஆசாரியர்தான் நடந்து கொண்டிருக்கிறார் ! அது வெறும் மணல் வெளி அல்ல. கடற்கரை. இதோ குருமஹராஜ் கரையிலிருந்து கடலுக்குள் பிரவேசிக்கிறார். திரும்பி விவேகானந்தரைப் பார்த்துத் தம்மைத் தொடருமாறு சைகை காட்டுகிறார். கடலில் சரசரவென்று சென்றுகொண்டே இருக்கிறார்.

Koviloor Digital Library

விவேகானந்தரின் நெஞ்சில் ஆனந்தம் குமுகுமு என்று பாய்ந்து நிரம்பியது. ஸ்வப்னுவஸ்தை என்று சொல்லமுடியாத நிலையிலிருந்து நன்ருக விழிப்புற்ருர். 'போ' என்ற வார்த்தை அவர் செவிகளில் ரீங்காரமிட்டது.

'பிரத்யக்ஷமாகத் தமக்கு உத்தரவு கிடைத்துவிட்டது! இனியும் தயங்குவதற்கில்லை.'

சுவாமிஜி அமெரிக்கப் பிரயாணத்துக்கு ஆயத்தம் செய்யத் தொடங்கி விட்டார்.

* * *

பரிவிராஜக வாழ்வு தொடங்குமுன் தூய அன்னை சாரதையிடம் உத்தரவு பெற்றுக்கொண்டதுபோல் இப்போதும் அவளுடைய ஆசியைப் பெற விழைந்தார் சுவாமிஜி. தேவி சாரதாமணிக்குக் கடிதம் எழுதினுர். தமது உத்தேசத்தைத் தெரிவித்து, அதனை அவள் வேறு யாருக்கும் தெரிவிக்காதிருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

கடிதத்தைக் கண்ட சாரதையின் கண்கள் முத்துக்களைச் சிதறின. அது ஆனந்தக் கண்ணீரா, துயரக் கண்ணீரா என்று அவளுக்கே தெரியாது. தன் அருமை மைந்தனுக அவள் கருதிய நரேனைப்பற்றி — தனது ஒப்பற்ற பர்த்தா பேரன்பு செய்த நரேனைப்பற்றி — நீண்டகாலமாக அவள் எதுமே அறிந்திருக்கவில்லை. இப்போதுதான் அவனைப் பற்றித் தெரிந்து நிம்மதி உண்டாயிற்று. ஆனுல் அந்த நிம்மதியைக் குலைப்பதுபோல அவனே அலைகடல்தாண்டிப் போவதாக எழுதுகிருன்! சாரதையின் தாய்மை அவனுடைய அயல்நாட்டுப் பயணத்துக்குச் சம்மதமளிக்கவில்லை. தாயான பாவம் மாறி சிஷ்யையாகி குருமஹராஜை நினைத்தபோது இதெல்லாம் அவருடைய சங்கல்பமே என்றும் அவளுக்குத் தோன்றியது. நரேந்திரநாதன் எந்தக் கனியைத் தரவேண்டும் என்பதற்காக அவர் பார்த்துப் பார்த்து ஆதியில் அவனைப் பயிராக்கி, நீர் வார்த்து, களை பிடுங்கி, உரமிட்டு வளர்த்தாரோ அந்தக் கனியைத் தரும் தருவாக அவன் வளர்ந்து விட்டான். இப்போது அவனுடைய ஜன்மப் பணிக்குத் தான் குறுக்கே நிற்கக்கூடாது என்று மனதை உறுதிபடுத்திக்கொண்டாள் சாரதை.

சுவாமிஜி வெளிநாடு செல்வதற்குத் தனது அநுமதியையும் ஆசியையும் தெரிவித்ததோடு புத்திமதிகளையும் சொல்லி ஒரு கடிதம் எழுதினுள் தூய அன்னை. அதனைப் படித்தபோது சுவாமிஜியின் பரந்த மார்பு விம்மி விம்மித் தணிந்தது.

Koviloor Digital Library

அமெரிக்கப் புறப்பாட்டுக்குச் சகலவிதமான ஏற்பாடுகளும் ஆகிவிட்டன. மே 31-ந் தேதி சுவாமிஜி கப்பலேற வேண்டுமென நிச்சயமாயிற்று.

இந்தச் சமயத்தில்தான் அவரை கேத்ரி சம்ஸ்தானத்துக்கு இட்டுச் செல்வதற்காக மஹாராஜாவின் அந்தரங்கக் காரியதரிசியாகிய முன்ஷி ஜக்மோஹன்லால் சென்னையில் வந்து குதித்தார்.

* * *

இரண்டாண்டுகளுக்கு முன்பு கேத்ரி மஹாராஜா சுவாமிஜியை வணங்கித் தமக்குப் புத்திரசந்தானம் வாய்க்கவேண்டுமெனப் பிரார்த்தித்ததும், சுவாமிஜி ஆசிகூறியதும் நினைவிருக்கிறதா ?

இப்போது மஹாராஜாவின் குறை தீர்ந்துவிட்டது. சுவாமிஜியின் ஆசியினால்தான் தனக்குப் பிள்ளைவரம் கிட்டிற்று என்று மஹாராஜா நம்பினார். யுவராஜாவின் ஜனனோத்ஸவத்தைக் கேத்ரி கோலாகலமாகக் கொண்டாடும்போது சுவாமிஜி நிச்சயம் உடன் இருக்கவேண்டும் என்றுமஹாராஜா அந்தரங்கமாக விரும்பினார். அவரை அழைத்துவரவே தமது காரியதரிசியைச் சென்னைக்கு அனுப்பி வைத்திருந்தார்.

சுவாமிஜிக்கு என்னசெய்வது என்றே தெரியவில்லை.

''அன்பான ஜக்மோஹன்! இன்னும் ஒரு மாதத்தில் — சரியாக மே மாதம் 31-ந் தேதி — நான் கப்பல் ஏறவேண்டும். இப்போது எப்படி கேத்ரிக்கு வருவது ?'' என்றார்.

''சுவாமிஜி, அதெல்லாம் எனக்குத் தெரியாது. தாங்கள் ஒரு நாளாவது கேத்ரியில் இருந்து விழாவில் கலந்துகொண்டு, குழந்தைக்கு ஆசிகூறத்தான் வேண்டும். இல்லாவிடில் மஹாராஜா மிகவும் ஏமாறிப்போய் மனது வெதும்பி விடுவார்'' என்றார் ஜக்மோஹன். ''அமெரிக்கப் பிரயாணம்பற்றி உங்களுக்கு எள்ளளவுகூடச் சிந்தை வேண்டாம். அதெல்லாம் ராஜா வெகு சுலபமாக முடித்துத் தந்து விடுவார். என்னோடு கிளம்புங்கள் சுவாமிஜி'' என்று ஊக்கினார்.

சுவாமிஜி தமிழ்த்திருநாட்டைவிட்டுக் கேத்ரிக்குப் புறப்பட்டார். பம்பாய், ஜயப்பூர் மார்க்கமாகக் கேத்ரியைச் சென்று சேர்ந்தார்.

சுவாமிஜி அரண்மனையை அடையும்போது இருட்டிவிட்டது. ஆனால் பகலைவிட ஜகத்ஜோதியாக அரண்மனை தீபாலங்காரம் செய்யப்பட்டு ஒளியை உமிழ்ந்து கொண்டிருந்தது. ஆட்டமும் பாட்டமும் இவ்வளவென்று சொல்லி முடியாது. சுவாமிஜி

Koviloor Digital Library

அரண்மனையை அடைந்தபோது மஹாராஜா, தமது மதிப்புக்குரிய விருந்தாளிகளான ராஜபுதனத்து மன்னர் பலருடன் படகில் உல்லாஸ உலாச் சென்று கொண்டிருந்தார்.

சுவாமிஜி வந்துவிட்டார் என்றதும் அவருடைய மகிழ்ச்சி பொங்கிவிட்டது. அப்படியே படகிலிருந்து கரைசேர்ந்து சுவாமிஜியிடம் ஓடினுர். அந்த சமஸ்தானம் முழுவதற்கும் அதிபதியான அவர் சுவாமிஜியின் பாதத்தருகே நெடுஞ்சாண்கிடையாகப் பூமியில் விழுந்தார். சுவாமிஜியும் நிறைந்த அன்போடு அவருக்கு ஆசி அளித்து, அவரைத் தமது தங்கக் கரத்தால் பற்றி எழுப்பினுர்.

இதர ராஜப் பிரமுகர்கள் யாவரும் ஒருவர் பின் மற்றவராக சுவாமிஜியை வணங்கினர்.

எல்லாரும் சபாமண்டபத்துக்குப் புறப்பட்டனர்.

வாத்திய கோஷங்கள் விண்ணளாவின.

சுவாமிஜிக்கென்றே வரவேற்பு கீதம் ஒன்று இசைக்கப்பட்டது. அவரை உயர்ந்த ஆசனமொன்றுக்குப் பரமபவ்யமாக இட்டுச்சென்று, அமரவைத்தார் மன்னர். விருந்தினர் யாவருக்கும் சுவாமிஜியைப்பற்றிப் புளகமுறக் கூறினுர்.

''இவருடைய ஆசிர்வாதத்தினுல்தான் எனக்கு மகன் பிறந்திருக்கிருன். என் மகனை வாழ்த்தவே இவர் இங்கு வந்திருக்கிருர். ஸநாதன தர்மத்தைக் சிகாகோ சர்வமத மஹா சபையில் முழங்குவதற்காக அமெரிக்காவுக்குப் புறப்படவிருக்கிருர் இவர்'' என்று மன்னர் கூறியதும் அரசவை முழுவதும் கரகோஷம் செய்து ஆனந்தத்தையும் ஆமோதிப்பையும் தெரிவித்தது.

பிறகு குட்டிராஜா கொண்டு வரப்பட்டார். தமது ஆசியால் பிறந்த அந்தச் செல்வனுக்கு சுவாமிஜி அகமகிழ்ந்து அநுக்கிரஹம் செய்தார். குட்டி ராஜாவுக்கு மட்டுமல்ல; விவேகானந்தருக்குமே நாமகரணமானது கேத்ரி மன்னரின் ராஜசபையில் தானுகும். விவிதிசானந்தர், சச்சிதானந்தர் முதலிய பல பேர்களில் சஞ்சரித்துவந்த சுவாமிஜி கேத்ரியில்தான் மன்னரின் வேண்டுகோளுக்கிணங்க விவேகானந்தர் என்ற திருநாமத்தைத் தரித்துக்கொண்டார். அத்வைத சாதனையின் முதல்படி ஆத்மா-அநாத்மா-விவேகம். இது ஆத்ம அநுபவத்துக்கு உகந்தது, உகாதது என்று பகுக்கும் திறனே அது. இந்த விவேகம் என்பது வெறும் புத்தியால்மட்டும் பிறப்பதல்ல. இதயத்தின் உள்ளுணர்ச்சியால்-நல்லது-கெட்டது தெரிந்து கொள்வதும் அதில் அடங்கும். விவேகானந்தருக்கு அந்தப் பெயர் எவ்வளவு சிறப்பாகப் பொருந்தியது என்பதைச் சொல்லிமுடியுமா ?

Koviloor Digital Library

ஒரு சில தினங்களானதும் விவேகானந்தர் — உலகம் போற்றிய அந்த உத்தம நாமத்தில் இனி நாமும்தான் அவரை அழைப்போமே — புறப்படவேண்டியதுதான் என்று மன்னரிடம் தெரிவித்தார். இப்போதே பம்பாய் சென்று பிரயாண முன்னேற்பாடுகள் செய்தால்தான் அங்கிருந்து கப்பல் ஏறச் சரியாக இருக்கும் என்று கூறினர். மஹாராஜா, ஜக்மோஹன் லால் இருவரும் சுவாமிஜியுடன் புறப்பட்டனர்.

கேத்ரி மன்னருக்கு சுவாமி விவேகானந்தரிடம் தேவதா விசுவாசம் இருந்தது என்று கூறினலும்கூட முழு உண்மையையும் சொன்னதாக ஆகாது.

* * *

ஜயப்பூரில் அவர்கள் தங்கியிருந்தபோது சுவாமிஜியால் என்றும் மறக்கமுடியாத ஒரு நிகழ்ச்சி நடந்தது.

ஒரு நாள் மாலை மஹாராஜாவுக்காக நாட்டியப்பெண் ஒருத்தியின் இசை நிகழ்ச்சி ஏற்பாடாகியிருந்தது. விவேகானந்தரையும் சங்கீத கச்சேரிக்கு வருமாறு தூதர் மூலமாக அழைத்தார் மன்னர். நாட்டியப்பெண் ஒருத்தியின் கலை நிகழ்ச்சியில் சந்நியாசியான தாம் பங்கு கொள்வதற்கில்லை என்று சுவாமிஜிசொல்லி அனுப்பிவிட்டார்.

இது பாடகியின் உள்ளத்தைப் புண்ணுக்கிவிட்டது. புண்ணுண்ட புரு கதறுவதுபோலவே மிகவும் தீனமாக அவள் கானம் செய்யலானுள்:

பாவத்தைப் பார்த் தென்னைத் தள்ளாதே பரமா-சம
பாவம் என்பதே உந்தன் நாம மன்றோ பரமா ?
ஐயனின் பதுமையில் அயத்துண்டு ஒன்று
ஐந்து லோகத்தி லொன்ருய் அமைவது காணுய்
பாவி கைவாளாய் பிரிதொரு துண்டு
பிராணிகளைக் கொல்லும் பாதகம் பாராய்!
இரு துண்டும் ஒரு போல் ரசவாதி திறனில்
மறு வற்ற பொன்னுக மாறிடும் அன்றோ ?
பாவத்தைப் பார்த் தென்னைத் தள்ளாதே பரமா!-சம
பாவம் என்பதே உந்தன் நாம மன்றோ பரமா ?
காளிந்தி நதியின் கரிய திரு நீரும்
கழிகாலில் வழிகின்ற இழி நீரும் ஒரு போல்
இன்னருு கங்கையில் இணைகின்ற போது
ஏற்றம் பெறுவதை நீ ஏற்றுக் கொள் ஐயா!
பாவத்தைப் பார்த் தென்னைத் தள்ளாதே பரமா!-சம
பாவம் என்பதே உந்தன் நாம மன்றோ பரமா ?

Koviloor Digital Library

அந்தக் கீதம் காற்றினிலே தத்திக்கொண்டே சென்று சுவாமிஜி இருந்த இடத்தைச் சென்றடைந்து அவரது காதுகளில் பிரவேசித்தது. செவி வழியே அவரது உள்ளத்தில் பாய்ந்தது. அவருடைய இதயம் இளகிற்று. மாசு படிந்தவள் என்று உலக மெல்லாம் கருதிய ஒரு பெண் அவருக்கு உயர்ந்ததொரு புத்தி மதியைப் புகட்டி விட்டாள். மாசும் தேசும் ஆண்டவன் முன் ஏது? பரம்பொருளின் முன்பு யாவும் ஒன்றல்லவா? மாயைக்கு உட்பட உலக மக்களுக்குத்தான் பேதங்களுண்டு. மாயையைக் கடந்து பிரம்மபூதனாக இருக்கவேண்டிய சந்நியாசிக்கு சமபாவ மல்லவா இருக்கவேண்டும்? எல்லையற்ற வெட்கமும், வேதனையும் சுவாமிஜியை அரித்துப் பிடுங்கின.

கானம் நடைபெற்றுக் கொண்டிருந்த இடத்துக்கு விவேகா னந்தர் ஏகினார். ஒளிகாந்தும் கண்களில் நீர் தேங்கியதால் அவை மேலும் பளபளக்கப் பாடகியை வாத்ஸல்யத்துடன் நோக்கினார். அன்னை வத்ஸனைப் பார்க்கும் வாத்ஸல்யமல்ல அது. அன்னையை வத்ஸன் பார்க்கும் வாத்ஸல்யமே அது.

''தாயே, நான் குற்றவாளி. இங்கு வராமலேயிருந்து உன்னை அவமதித்திருப்பேன். பாக்கியவசமாக உன் சங்கீதம் தான் என் அறிவை விழிப்புறச் செய்தது'' என்றார்.

* * *

கேத்ரி மன்னரிடமிருந்து பிரியா விடைபெற்று பம்பாய்க்குப் புறப்பட்டார் சுவாமி விவேகானந்தர். ஜக்மோஹன்லால் மட் டும் அவரைப் பின் தொடர்ந்தார்.

ஆபுசாலை ரயில் நிலையத்தில் இறங்கிய சுவாமிஜி, முன்பு தாம் ஏகாங்கியாகச் சஞ்சாரம் செய்தபோது இதே ஊரில் இருக்கை அளித்த ரயில்வே ஊழியர் இல்லத்துக்குச் சென்று அவரைக் களிப்புக் கடலில் ஆழ்த்தினார்.

சுவாமிஜி மீண்டும் ரயிலேறியபோது வங்காளி ரயில் ஊழியர் ஒருவரும் அவருடன் கம்பார்ட்மெண்டில் ஏறிச் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். ஆங்கிலேயரான டிக்கெட் பரிசோதகர் வந் தார். மட்டுமரியாதையின்றி ரயில் ஊழியரை இறங்கச் சொன் னார். ரயில்வே கம்பெனியிலேயே அலுவல் பார்க்கும் தம் விஷ யத்தில் அப்படி விதி கிடையாது என்று அவர் பரிசோதகரிடம் எவ்வளவோ மன்றாடினார் பயனில்லை. விவேகானந்தரும் பக்தரின் சார்பில் பேசத் தொடங்கினார். ''நீ (தும்) யார் குறுக்கே பேச?'' என்று ஹிந்தியில் கேட்டார் அதிகாரி.

Koviloor Digital Library

சுவாமிஜிக்கு ஆத்திரம் வந்துவிட்டது. ''என்ன சொன் வீர்? நீ என்ரு? நீங்கள் (ஆப்) என்று சொல்லக் கற்றுக் கொள்ளும்'' என்ருர்.

''வருந்துகிறேன். எனக்கு ஹிந்தி சரியாக வராது. உங்களை அவமதிக்க எண்ணமில்லை. இந்த ஆளை (திஸ் மான்)......'' என்று பேசிக்கொண்டுபோன அதிகாரியை இடை மறித்தார் சுவாமிஜி.

''உமக்கு ஹிந்தி மட்டும்தானு தெரியாது? உம்முடைய தாய்பாஷையான ஆங்கிலமும் அல்லவா தெரியாததாகக் காண கிறது? இந்த ஆள் என்கிறீரே! இந்த மேன்மகன் (ஜென்டில் மேன்) என்று சொல்லும்'' என்ருர்.

ஆங்கிலேயர் மறு பேச்சில்லாமல் கம்பார்ட்மெண்டிலிருந்து வெளியேறினுர்.

சுவாமிஜி ஜக்மோஹன்லாலிடம் ''ஐரோப்பியர்களிடம் நாம் பழகும்போது நமக்குத் தேவைப்படுவது சுயமரியாதை ஒன்று தான். இப்படி நாம் செய்யாததால்தான் அவர்கள் அதையே பயன்படுத்திக்கொண்டு நம்மை மட்டம் தட்டுகிருர்கள். அயலார் முன்னிலையில் நாம் நமது கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்'' என்ருர்.

விவேகானந்த சுவாமிஜியின் சுதேச உணர்வைப் பார்த் தீர்களா?

*　　　　*　　　　*

ஆபுசாலை ரயில் நிலையத்தில் பிரம்மானந்த சுவாமிஜியும், துரியானந்தரும் விவேகானந்தரைக் கண்டனர்.

''ஹரிபாயிக்களே! மதம் மதம் என்று எல்லாரும் எதையோ நினைத்துக் கொண்டிருக்கிருர்களே! நாடு முழுவதும் இத்தனை நாளாகத் திரிந்தும் அது என்ன என்பது எனக்கு இன்னும் புரிய வில்லை'' என்று கூறிய சுவாமிஜியை சோக ஸிந்து விழுங்கியது. அவர் உடல் எல்லாம் பதறியது. ''இருந்தாலும் இந்தச் சஞ் சாரத்தில் வேருென்று நிகழ்ந்து விட்டது. என் இதயம் விசால மாகிவிட்டது. உணருவதற்குக் கற்றுவிட்டேன். என்னை நம் புங்கள், நான் திவிரமாக உணர அறிந்து விட்டேன்'' என்று திக்கினுர்.

மக்களுக்காக அவர் இதயம் எவ்வளவு கசிந்ததோ அவ்வளவு கசிவையும் வார்த்தைகளில் வெளியிட முடியவில்லை. நீண்ட போது பேசமாட்டாது மௌனத்தில் ஆழ்ந்திருந்தார் சுவாமிஜி. தாரை தாரையாக அவரது தாமரஸ நயனங்களிலிருந்து நீர் வழிந்து கொண்டிருந்தது. மன்பதையின் துன்பவதை அவ்வள

Koviloor Digital Library

வையும் சுவாமிஜி தமது ஒவ்வொரு நரம்பிலும் ஏற்றுத் துடிப்ப தாகவே தோன்றியது. 'புத்தரே நம் முன் வந்திருக்கிருரா, என்ன ?' என்று துரியானந்தர் வியந்தாராம்.

சுவாமிஜியின், பூத தயை குறித்த இன்னொரு சம்பவத்தை யும் — இது அவர் அமெரிக்காவிலிருந்து திரும்பியபின் நிகழ்ந்தது — இங்கே கூறலாம். கல்கத்தா பாக் பஜாரில் பலராம் போஸின் வீட்டில் சுவாமிஜி இருந்தபோது நடந்த இந்த நிகழ்ச்சியை துரியானந்த சுவாமியின் மொழியில் பார்ப்போம்: ''நான் சுவாமிஜியை பார்க்கச் சென்றிருந்தேன். அவர் ஆழ்ந்த சிந்தனை யில் லயித்தவாறு வராந்தாவில் உலவிக்கொண்டிருந்தார். என் வருகையை அவர் கவனிக்கவேயில்லை. அவருடைய மனோராஜ் யத்தில் குறுக்கிட வேண்டாமென்று நானும் பேசாமலேயிருந் தேன். சிறிதுபோது சென்றது. சுவாமிஜியின் கன்னத்தில் கண் ணிர் புரளத் தொடங்கிற்று. அழுதவாறே அவர் மீராபாயின் பிரசித்தமான ஒரு பாடலை முணமுணக்கத் தொடங்கினர். பிறகு கிராதியில் சாய்ந்துகொண்டு தமது முகத்தை கைகளில் புதைத்துக் கொண்டார். வேதனை வெடிக்கும் குரலில், 'ஆஹா, யாருமே என் சோகத்தைப் புரிந்து கொள்ளவில்லையே ! என் சோகத்தை புரிந்து கொள்வார் யாருமே இல்லையே' என்று பாடிக்கொண் டிருந்தார். அந்த மெட்டில் நிறைந்த துக்கமும் சுவாமிஜியின் விஷாதமும் அவரைச் சுற்றியிருந்த ஜடப்பொருட்களைக் கூடப் பற்றிக் கொண்டதுபோல் தோன்றியது. சோக மதுரத்தில் அந்தச் சூழல் முழுவதும் விம்மிக் கொண்டிருந்தது. 'வேதனைப் படுபவனை அன்றி வேதனையை வேறு யாரால் அறியமுடியும் ?' என்று சுவாமிஜி பாடியபோது அவருடைய குரல் ஓர் அம்பாகி என் இதயத்தைத் துளைத்தது''.....

உலகளாவிய அநுதாபம் சுவாமி விவேகானந்தருடையது.

அறிவில் மலையாக இருந்த அவர் அருளில் பனியாகக் கரைந்து கொண்டேயிருந்தார்.

* * *

விவேகானந்த சுவாமியும், ஜக்மோஹன் லாலும் பம்பாய்க்கு வந்து சேர்ந்தார்கள். அழசிங்கப்பெருமாள் சென்னையிலிருந்து எழுநூறு மைல்கள் கடந்து பம்பாய்க்கு வந்திருந்தார் — சுவாமி ஜியைக் கப்பலேற்றுவதற்காக. அவரது அயல் நாட்டுப் பயணத் துக்கு சுதேச சம்ஸ்தான அதிபதிகள் மனமுவந்து பண வசதி செய்திருந்தார்கள். தமிழ்ப் பெருமக்கள் சேகரித்திருந்த நிதியமும் சுவாமிஜியிடம் ஒப்பிக்கப்பட்டது. இவர்களில், சமீபத்தில்

Koviloor Digital Library

சதாப்தி விழாவுக்குப் பாத்திரமான ஸ்ரீ வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்களும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜக்மோஹன்லால் தமது மன்னரின் கட்டளைப்படி சுவாமிஜிக்கு 'பெனின்ஸுலர்' — தீபகற்பம் — என்ற ஓரியண்ட் கம்பெனிக் கப்பலில் முதல் வகுப்பு டிக்கெட் எடுத்தார். உலகாயதப் போக்கின் உச்சாணியிலிருந்த அமெரிக்கர் சுவாமிஜியை மதிக்க வேண்டுமானால், அவர் விலையுயர்ந்த ஆடைகள் உடுத்தவேண்டும் என்று பக்தர்கள் விரும்பினர். சுவாமிஜி சிறிய விஷயங்களில் பிடிவாதமாகயிருந்து பெரிய விஷயங்களைக் கோட்டை விடுபவர் அல்லவே! எனவே அவர் பக்தர்களின் கோரிக்கைக்கு இணங்கினார். அவருக்கு ஆடைகளும், அமெரிக்காவில் தங்கும்போது தேவைப்படும் இதர பொருள்களும் வாங்கப்பட்டன. கணிசமான தொகையும் அவருடைய செலவுக்காக அளிக்கப்பட்டது. பணத்தைத் தீண்டவே கூசிய சுவாமிஜி இந்தத் திராத நிலையில் பர்ஸை வாங்கிக்கொண்டார்.

மரம் மேலே மேலே வளரும்போதே அதன் வேர் கீழே கீழே செல்வதுபோல, சுவாமிஜிக்குப் புதிய பல தொடர்புகள் ஏற்படும் இப்போது வரநகர குருபாயிக்களின் நினைவும் அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது. தியானம் புரியவும், அன்பர்களைக் கண்டு உரையாடவும், பிரயாண ஏற்பாடு செய்யும்போது போதாமலிருந்தபோதும் குருபாயிக்களின் நினைவு மட்டும் இடைவிடாது தோன்றிக்கொண்டேயிருந்தது. 'தம்மை நம்பி வீட்டையும் வாசலையும் விட்டுவிட்டு வந்த அந்தத் தம்பிமார்கள் என்ன செய்கிறார்களோ? குருமஹராஜின் ஆக்ஞையை இப்போது தாம் ஒருவரே ஏற்று வேதாந்த பிரசாரம் தொடங்கியிருக்கிறோம். அவர்கள் எல்லாரும் மக்கள் பணியில் ஈடுபட என்று அன்னை அருளுவாளோ?' என்று எண்ணமிட்டார். 'அந்தக் குழந்தைகள் செவ்வையாக இருப்பார்கள்; சீரிய வழியிலேயே செல்வார்கள்' என்று தமக்குத் தாமே ஆறுதல் சொல்லிக் கொண்டார். இவ்வளவு அக்கறை ஏற்பட்டபோதிலும்தாம் அக்கரைச் சீமைக்குச் செல்லப்போவது குறித்து அவர் அவர்களுக்கு எதுவுமே தெரிவிக்கவில்லை.

தெரிவிக்காததால் என்ன? அமெரிக்காவில் யாரோ ஒரு ஹிந்து சுவாமிஜி வேதாந்தத்துக்குப் பெரு வெற்றி ஈட்டிக் கொடுத்தார் என்று அந்த குருபாயிக்கள் பிறகு அறிந்த உடனேயே அந்த சுவாமிஜி தங்கள் தலைவராகத்தான் இருக்கவேண்டும் என்று ஊகித்து விட்டார்கள்.

Koviloor Digital Library

1893-ம் ஆண்டு, மே மாதம், 31ந் தேதி. பம்பாய் துறைமுகத்தில் 'பெனின்ஸுலர்' என்ற நீராவிப் கப்பல் புறப்பட ஆயத்தமாக நின்றுகொண்டிருந்தது. கப்பல் கருவிகளின் ஓசையும், ரத்னுகரமாகிய அரபுக் கடலின் ஓசையும், துறை முகத்தில் கூடியிருந்தோரின் பேச்சொலியுமாக ஒன்றில் ஒன்று கலந்துகொண்டன. துறைமுக மெங்கிலும் ஒரே பரபரப்பு. உடைமை ஏதும் — ஏன், உடை என்பதேகூட இல்லாதிருந்த சுவாமிஜி இன்று பெட்டி படுக்கை இத்யாதிகளுடன் ஆரஞ்சு வர்ணத்தில் பட்டு ஜிப்பாவும், தலைப்பாகையும் அணிந்து அக்கினிக் கொழுந்துபோலவே நின்றுகொண்டிருந்தார். அவர் பக்கலில் ரத்னுகரத்தைக் காணும்போது அறிவுக் கனலையும் அருட்புனலை யும் ஒருங்கே சேர்த்துக் காண்பது போலிருந்தது.

பணத்தையும் பொருள்களையும் பாதுகாப்பது முதலிய பழகி யிராத வழக்கங்களைத் தாம் எப்படி மேற்கொள்ளப்போகிறோம், பழகியிராத பிரதேசங்களில் ஏகாங்கியாக என்ன செய்யப் போகி ரேம் என்ற கலக்கம் அவருக்கு உள்ளூற இருந்துகொண்டே யிருந் தது. நிலைகுலையாத அவரது நெஞ்சமும் அப்போது அலை பாய்ந்து கொண்டிருந்தது. 'பதினுயிரம் மைல் கடந்தல்லவா செல்கிறேன்? அங்கே போய் தன்னந் தனியாக என்ன செய்யப் போகிறேன்?' என்று மீண்டும் மீண்டும் அவரது உள்ளம் சிந்தித்தது. ஒரேயடி யாக அவர் சிந்தித்துக் குழம்பிவிடாமல் உடன்வந்திருந்தோரின் உள்ளன்பு அவரது மனசை வேறு திக்கில் திருப்பிவிட்டது.

கப்பல் படிக்கட்டுகளை ஒரு லக்ஷம் உணர்ச்சிகளுடன் அடைந் தார் விவேகானந்த சுவாமி. ஜக்மோஹன்லாலும், அழசிங்கமும் அதுவரை அவரைப் பின் தொடர்ந்தனர். அவர் பாதங்களில் விழுந்து அவற்றை அவர்கள் கண்ணீரால் பிரக்ஷாலனம் செய்த அதே சமயத்தில் சுவாமிஜியின் நேத்திரங்களிலிருந்து அவர்கள் சிரங்களில் மந்திராக்ஷதைகளாக முத்துக்கள் உதிர்ந்தன.

கப்பலின் பெரிய மணிகள் 'கணகண' வென்று ஒலித்தன.

இதோ, அந்தப் பெரும் கலம் கடல் அலைகளைச் 'சளசள'' எனக் கலக்கிக்கொண்டு நீந்தத் தொடங்கிவிட்டது.

இந்திய நாடெங்கும் சுற்றிய சுவாமிஜி அந்த நாட்டின் மக்களுக்காகக் கண்காணுத தேசம் செல்கிருர்! அம்பிகையின் அருளையும், ஆசானின் ஆசியையும், ஆதரவாளர்களின் நம்பிக் கையையுமே மூலதனமாகக்கொண்டு சர்வமத மகாசபையில் கலந்து கொள்ளச் செல்கிருர்!

கப்பலின் மேல்தளத்தில் சுவாமிஜி வந்து நின்ருர். கடலின் நீலத்தையும், வானின் நீலத்தையும் அழுத்தமாகப் பிரித்துக்

Koviloor Digital Library

காட்டும் திவண்ணத் திரு உடையில் 'ராஜகம்பீர நாடாளு நாயகனுக' நின்றுகொண்டிருந்தார். தன்னே வழியனுப்ப வந்தவர்களுக்கெல்லாம் இருகைகளையும் தூக்கி ஆசிர்வாதம் அளித்தபடி நின்றுகொண்டிருந்தார் முப்பது வயதிலேயே மூத்த அந்த முனிவர்.

அவருக்கும் கரைக்கும் உள்ள தொலேவு சிறிது சிறிதாகப் பெருகிக்கொண்டே வந்தது. அவருடைய கண்கள் உருகின; பெருகின.

பவதாரிணியை நினைந்தார்; பரமஹம்ஸரை நினைந்தார்; தூய சாரதையை நினைந்தார்; குருபாயிக்களே நினைந்தார்; தமக்கு உபகாரம் புரிந்த மன்னர்களேயும், அறிஞர்களேயும், சாமானிய மக்களேயும் நினைந்தார். கடைசியாகத் தாம் உபகாரம் புரியவேண்டிய பாரதத்தின் பாமரமக்கள் அனைவரையும் எண்ணி விசித்தார். அவர் பார்வையிலிருந்து மறைந்து கொண்டிருந்த பாரதத்தின் அத்தனை ஏழைகளும், அறியாதாரும் ஜல சமுத்திரத்துக்கும் மீதாக ஒரு ஜன சமுத்திரமாகி அவர் எதிரே வந்து நின்ருர்கள். 'எங்களேக் காப்பாற்றுங்கள், ஏழைமையும், அறியாமையும், மேல் வகுப்பினரின் கொடுங்கோன்மையும் எங்களேப் படுத்தும் பாட்டிலிருந்து எங்களே விடுவியுங்கள்' என்று அலறினர்.

மறுபுறம் திரும்பிப் பார்த்தார் சுவாமிஜி.

'தியாக பூமியிலிருந்து போக பூமிக்குச் செல்கிறேன்; முனிவர்களும், ரிஷிகளும், யோகிகளும், சித்தர்களும், பக்தர்களும், முக்தர்களும் வாழ்ந்த திருநாட்டியிலிருந்து தொழில் பிரமுகர்களும், விஞ்ஞான நிபுணர்களும், அரசியல் வல்லுநர்களும், பொருளாதார அறிஞர்களும் வாழும் நாட்டுக்குச் செல்கிறேன். யுக யுகாந்தமாக நாகரிகமறிந்த தெய்வத்திரு நாட்டிலிருந்து பச்சைக் குழந்தையாக ஐரோப்பிய நாகரிகம் பரவிய புது நாட்டுக்குச் செல்கிறேன். பாரதத்தின் பண்பை அதற்குத் தருவேன். பாரதத்துக்கு அதன் பொருள் உதவியைப் பெற்று வருவேன். பாரதத்தின் நிரந்தரச் செல்வத்தை அதற்குத் தந்து, சென்று மறையும் செல்வத்தை அதனிடமிருந்து பாரதத்துக்கும் பெற்று வருவேன். இது எளிதில் நடக்கும் காரியமல்ல. இனிமேல் என் வாழ்நாள் முழுவதும் உழைப்பு, கடினமான உழைப்பு, அரை நொடியும் அயராத அசுர உழைப்புத்தான். இந்த உடம்பு மடிந்து விழும் வரையில், எலும்புகள் சிதறும் வரையில், நரம்புகள் வெடிக்கும் வரையில், உழைப்பேன். அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் பாரத தத்துவத்தை எடுத்துரைப்பேன். இந்தியாவின் ஏழைகளுக்காக அங்கெல்லாம் திரவியம் திரட்டித் தாய்நாடு

Koviloor Digital Library

மிள்வேன். பிறகு ஏழையரை வாழ்விக்கும் ஸ்தாபனங்களை நிறுவி அவற்றில் தளராது உழைப்பேன்.

'இவ்வளவு உழைப்பும் என் ஆற்றலால் நான் புரியமாட்டேன். எனக்கு அவ்வளவு ஆற்றல் இருப்பதாக நான் எண்ணிஞல் அந்த அகம்பாவமே என்னை விழுங்கிவிடாதா? சர்வேசுவரியின் குழந்தையாக, குருமஹராஜின் சிஷ்யனுக இருந்தே என் பணியைப் புரிவேன்?

விவேகானந்த மஹராஜின் உள்ளம் குழைந்தது. 'சர்வேசுவரி, ஸ்ரீகுருநாதா' என்று வாய்விட்டே அரற்றினர்.

நிலத் திரைகடலில் சென்று கொண்டிருக்கும் அவருக்கு யார் துணை போனர்கள்?

ஏன், கங்கையும், யமுனையும், சிந்துவும், தப்தியும், மஹாநதியும், கோதாவரியும் பாரதத்தின் இனிய ஆத்மாவும் அவருக்குத் துணை சென்றன.

கௌரி சிருங்கமும், காஞ்சன சிருங்கமும், தவளகிரியும், விந்தியமும், மேற்கிலும் கிழக்கிலும் அணிவகுத்து நிற்கும் மலைத் தொடர்களும் அழகு செய்யும் பாரதத்தின் கம்பீர ஆத்மா அவருக்குத் துணை சென்றது.

பாரத்தின் வேதாந்த சத்தியம் அவருடன் துணை சென்றது.

அதன் புராண கவித்துவம் அவருக்குத் துணையாகச் சென்றது.

எல்லோராவிலும், அஜந்தாவிலும், தில்வாராவிலும், தஞ்சைபுரியிலும் எழும்பி நிற்கும் கலை அவருடன் சென்றது.

துளஸிதாஸரும், மீராபாயும், சண்டிதாஸரும், துகாராமும், ஆண்டாளும், மணிவாசகரும், தியாகராஜரும் இழைத்த சங்கிதம் அவருடன் துணை சென்றது.

சங்கரரும், ராமாநுஜரும், மத்வரும், குருநானக்கும், மகாவீரரும், சைதன்யரும் பிரகடனம் செய்த தத்துவம் அவருடன் சென்றது.

அந்தத் தத்துவங்களின் உருவமாக வாழ்ந்த ஸ்ரீராமகிருஷ்ணர் அவருடன் சென்ருர்.

'புவனியில் போய் பிறவாமல் நாள் நாம் போக்குகின்ருேம் அவமே' என்று தேவரும் மண்ணுலகை அடைய இச்சிக்குமாறு இங்கு அவதாரங்களாகவும், அர்ச்சாவதாரங்களும் எழுந்தருளிய பல தெய்வ ரூபங்களின் தயை அவருடன் சென்றது.

அந்தத் தெய்வங்களுக்கெல்லாம் தெய்வமாகிய தேவி பராசக்தி அவருக்குத் துணை சென்ருள்.

Koviloor Digital Library

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, குபு குபு என்று மண் புகை போலக் கிளம்பி, அந்தப் புகைத்துகள் நகத்தில் புகுந்து கொள்ள அதனை வெளியேற்றக்கூட அவகாசமின்றி, பூமியைக் கிளறிக் கொண்டே செல்லும் ஏர்க்காலைப் பின்தொடரும் பாரதத்தின் கோடானுகோடி ஏழைப் பிள்ளைகளின் இதயங்கள் —

கடும் வெயிலில் நெற்றி நிறைய வேர்வை வழிய, அதைத் துடைத்துக் கொள்ளக்கூட முடியாதபடி தலையிலுள்ள புல்லுக் கட்டை ஒரு கையாலும், இடையிலுள்ள குழந்தையை ஒரு கையாலும் அணைத்துக்கொண்டு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க நடந்துகொண்டிருக்கும் கோடானுகோடி ஏழைப் பெண்களின் இதயங்கள் —

சுவாமி விவேகானந்தருடன் துணை சென்றன.

KOVILOOR ANDAVAR
A. No. 48256
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

அத்தியாயம்—18

ஆழ்கடல்

ஆரம்பத்தில் கப்பல் வாழ்க்கை சுவாமிஜிக்கு ஒத்துவராத ஒன்ருகத்தான் இருந்தது. கமண்டலுவையும், தண்டத்தையுமே அக்கடா என்று விசி எறிந்துவிட்டுக் காற்ருடிபோலத் திரிய விரும்பிய பரிவிராஜகர் அவர். இப்போது அவருக்குப் பெட்டி, படுக்கை, பைகள் எல்லாம் சேர்ந்துவிட்டன. அவற்றைப் பார்த் துக்கொள்வதென்பது முதலில் அவருக்கு அவற்றைத் தம் தலைமீதே தூக்கி வைத்துக்கொண்டிருப்பது போலத்தான் சிரமமாக இருந்தது.

'பகவானின் லீலாவிபூதிகள்தாம் எத்துணை விந்தையானவை?' என்றெண்ணி வியந்தார். வீட்டையும் வாசலையும் விட்டுத் தம்மை ஆண்டியாக ஓடச்செய்த ஈசுவரனே இன்று அவரை 'சந்நியாச சம்சாரி' யாக்கியிருக்கிருன்! மக்களுக்காகத் தமது பூரண சந்நியாசத்துக்கும்கூட ஓரளவு சந்நியாசம் அளிக்கவேண்டியதுதான் போலும்! புறப்பொருள் எதுசேர்ந்தாலும் உள்ளத்தால் சந்நியாச தர்மம் பிறழாமல் வாழ்ந்தால் ஆசிரமத்துக்குப் பங்கமில்லை' என்று எண்ணி ஒருவாறு தம்மை நிம்மதிப் படுத்திக்கொண்டார் விவேகானந்த சுவாமி.

சக பிரயாணிகளிடம் நெருங்கிப் பழகி அந்தக் கப்பலையும் தம் இல்லமாக்கிக் கொண்டார் சுவாமிஜி. பல தேசங்களையும், மதங்களையும் சேர்ந்த மக்கள் கொண்ட அந்தக் கப்பல் உலகுக்கே ஒரு 'மாதிரி'யாக இருந்தது. சர்வமத மகாசபைக்கு அதுவே ஒரு பூர்வாங்கமாகவும் சுவாமிஜிக்கு அமைந்தது. ஹிந்து சமயத்தின் வேதாந்தம், பக்தி, யோகம், தந்திரம் இவற்ருேடு புத்த மதம், ஜைன மதம், இஸ்லாம், கிறிஸ்துமதம், ஆகியவற்றையும் தம்முள் கரைத்துக்கொண்ட சுவாமிஜி விஞ்ஞானம், சரித்திரம் ஆகிய பிற துறைகளிலும் நிபுணராக விளங்கியதால் எங்கும் எப்போதும் எந்தச் சூழலிலும் ஒரு சுடர் விளக்காகப் பொலிந்தவர். 'சர்வமத மகாசபையில் கலந்து கொள்ள இவரைவிடத் தகுதி வாய்ந்தவர் யார்?' என்று பெயரெடுக்கப் போகும் சுவாமிஜி அந்தக் கப்பலில் அனைவரின் அன்பையும் பெற்ற ராஜயோகியாகத் திகழ்ந்ததில் அதிசயம் என்ன? கப்பலில் இருந்த வெள்ளையரின் பழக்க வழக்கங்களை சுவாமிஜி அறிந்ததும் பிற்பாடு அவருக்கு உதவியாக இருந்தது. கப்பல் நாயகரும் தமது ஓய்வு வேளைகளில் அவருடன் உரையாடி, யந்திரங்களின் வேலை முறையை எல்லாம் அவருக்கு விவரித்தார்.

Koviloor Digital Library

கப்பல் இந்தியாவை அப்பிரதக்ஷிணமாகச் சுற்றிக்கொண்டு இலங்கை, சிங்கப்பூர், சைனு, ஜப்பான், வழியாக அமெரிக்காவின் மேற்கு கடற்கரையில் வான்கூவரை அடைந்தது.

ஜப்பானில் யோகோஹாமாவிலிருந்து அவர் தமது அருமைச் சென்னை சிஷ்யர்களான அழசிங்கர், டி. ஆர். பாலாஜி ராவ், ஜி. ஜி. நரசிம்மாச்சாரியார் ஆகியோருக்கு எழுதியுள்ள அற்புதமான கடிதத்திலிருந்து பிரயாண விவரங்களைப் பாருங்கள்:

''பம்பாயிலிருந்து கொழும்பு சேர்ந்தோம். அங்கு கப்பல் ஏறக்குறைய ஒரு முழு நாள் தங்கியபடியால் நகரத்தைச் சுற்றிப் பார்த்து வருவதற்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன் படுத்திக் கொண்டோம். சாலைகள் வழியே நாங்கள் சுற்றி வந்ததில் எனக்கு நினைவிருப்பது ஆலயமொன்றில் சயனித்த நிலையில் நிர்வாணம் எய்தும் புத்தரின் மகோன்னதமான மூர்த்தி ஒன்றுதான்.

''அடுத்து கப்பல் நின்ற இடம் பினுங்கு......மலேயாக் காரர்களெல்லாம் முகம்மதியர்கள். இவர்கள் முன்பு கடற் கொள்ளைக்காரர்கள் என்று பெயரெடுத்து கடல் வணிகர்களுக் கெல்லாம் சிம்மசொப்பனமாக இருந்தவர்கள். போர்க் கப்பல் களின் சுழல் மேடைகளிலிருந்து குண்டு வீசும் பிரம்மாண்டமான பீரங்கிகள் இப்போது இவர்களை அமைதியான முறையில் ஜீவனோபாயம் தேடிக்கொள்ளுமாறு செய்திருக்கின்றன.

''சிங்கப்பூரில் நேர்த்தியானதொரு பூங்காவனம் உள்ளது. இங்கு விசிறி போன்ற மட்டைகொண்ட அழகிய பனைவகைகளும் கொட்டைப் பலாக்காய் மரங்களும் எங்கு பார்த்தாலும் செழித் தோங்கியுள்ளன. சென்னையில் மாமரம்போல இங்கு புகழ்வாய்ந்த மாங்கோஸ்டீன் நிறையக் காணப்படுகின்றன. என்றாலும் மாம் பழத்துக்கு இணையேது? இங்குள்ள மக்கள் தமிழ்மக்களைப்போலப் பூமத்திய ரேகைக்கு அருகே வசித்தபோதிலும் சென்னை மக்களில் அவர்கள் பாதிக் கருமைகூட இல்லை. சிங்கப்பூரில் அழகிய மியுஸியமும் உள்ளது.

''அடுத்தபடியாக ஹாங்காங். சீன அம்சங்கள் அதிமுக்கியமாக முன் நிற்பதால் சீனுவுக்கு வந்துவிட்டோம் என்ற உணர்வு ஏற்படுகிறது. தொழிலாளிகள் மயம், அவர்களுடைய கையி லில்லாத தொழிலே இல்லை எனத் தோன்றுகிறது. கப்ப லுக்கு நங்கூரம் பாய்ச்சியவுடன் உங்களைக் கரைக்கு இட்டுச் செல்வதற்காக நூற்றுக்கணக்கான படகுகள் சுற்றிவந்து முற்றுகை யிடுகின்றன. இரண்டு சுக்கான்கள் கொண்ட விசித்திரக் கலங்கள் இவை. படகோட்டி தன் குடும்பத்துடன் அதிலே வசிக்கிறுன். அநேகமாக எப்போதுமே மனைவிதான் சுக்கான்களை இயக்குகிறுள்

Koviloor Digital Library

— ஒன்றைக் காலாலும், மற்றதைக் கையாலும். இவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்களுடைய முதுகில் ஒரு குழந்தையைக் கட்டிக்கொண்டிருப்பதை காண்பீர்கள். குட்டிச் சீனனுடைய கைகளையும், கால்களையும் சுதந்திரமாக விட்டுக் கட்டியிருப்பார்கள். தாயார் தன் முழுபலத்தையும் காட்டிக் கலத்தை வலிக்கும்போதும், சுமைகளைத் தூக்கிச் செல்லும் போதும், அற்புதமான சுறுசுறுப்புடன் படகிலிருந்து படகாகக் குதித்துத் தாவிச் செல்லும்போதும் குட்டிச்சீனன் அவளுடைய தோளில் விச்ராந்தியாக ஊஞ்சலாடிக்கொண்டிருப்பதைக் காண நிரம்ப விநோதமாயிருக்கும். எப்போது பார்த்தாலும் சாதாரணப் பட்குகளும் விசைப் படகுகளும் வருவதும் போவதுமாக ஒரே நெரிசலாக இருக்கிறது. எந்த நிமிஷமும் குட்டிச்சீனனுடைய சின்ன மண்டையும், அதிலுள்ள சிண்டும் எல்லாமும் நொறுங்கி விடும் ஆபத்து இருக்கிறது; ஆனால் அதற்காக அவன் லவலேசம் கூட லக்ஷியம் செய்வதில்லை. இந்தப் பரபரப்பு வாழ்க்கையில் அவனுக்கு சுவாரஸ்யம் எதுவும் இல்லை. வேலை வெறிபிடித்த அவனுடைய தாய் அவ்வப்போது கொடுக்கிறாளே, அந்த அரிசி அப்பத்தின் 'உடற்கூறு' என்ன என்று பிட்டுப் பிட்டுப் பார்ப்பதிலேயே அவன் திருப்தியாக இருக்கிறான். சீனக்குழந்தை ஒரு வேதாந்தி. உங்களுடைய இந்தியக் குழந்தை தவழக் கற்கு முன்னே குட்டிச்சீனன் சாந்தமாக வேலை செய்யப் பழகுகிறான். 'அவசிய மேற்பட்டால் இதைச் செய்யத்தான் வேண்டும்' என்ற தத்துவத்தை அவன் வெகு நன்றாக அறிந்திருக்கிறான். சவ அடக்கம் செய்த நிலையில் இந்தியர்கள் சீனக்காரர்கள் ஆகியோருடைய நாகரிகம் இருப்பதற்கு ஒரு காரணம் அவர்களுடைய கடுமையான வறுமையாகும். அன்றாட அவசியத் தேவைகள் என்பனவே ஒரு சாமானிய ஹிந்துவின் முன்னும் சீனன் முன்பும் பயங்கரமாக வந்து நின்று அவன் வேறெதையும் நினைக்க முடியாத படி செய்கின்றன.

''ஹாங்காங் வெகு அழகான ஒரு நகரம். மலைச்சரிவுகளிலும், உச்சியிலும் அந்நகரம் எழுப்பப்பட்டிருக்கிறது. அதனால் குளிர்ச்சியாக உள்ளது. தந்திக்கம்பிகளாலும், நீராவிச் சக்தியாலும் இழுக்கப்படும் ட்ராம்கள் மலை உச்சிவரையில் ஏறக் குறைய செங்குத்தான பாதையில் செல்கின்றன.

''ஹாங்காங்கில் மூன்று நாள் இருந்தோம். நதி மார்க்கமாக எண்பது மைல் சென்று காண்டன் சேர்ந்தோம். பெரிய நீராவிக் கப்பல்களும் செல்லுமளவுக்கு அந்த நதி விசாலமாக உள்ளது. விடியற்காலையில் காண்டனை அடைந்தோம். அங்கு என்ன

Koviloor Digital Library

பரபரப்பு, என்ன ஜீவத்துடிப்பு! நீர்ப்பரப்பு முழுவதையும் படகுகள் மூடி விட்டிருந்தன! வியாபாரத்திற்குச் சாதனமாக மட்டுமின்றி, குடியிருப்பு வீடுகளாகவே நூற்றுக்கணக்கான கலங்கள் இருந்தன. அவற்றில் பல வெகு நேர்த்தியாகவும், விஸ்தாரமாகவும் இருந்தன. இரண்டு மூன்று மாடிகளும் சுற்றிலும் வராந்தாக்களும், இடையில் வீதிகளுமாக அந்தப் பங்களாக்கள் எல்லாம் மிதந்து கொண்டிருந்தன. பெரும் ஜனத்தொகையும், சுறுசுறுப்பும்கொண்ட இந்த நகரத்தைப்போல அசுத்தமான ஒரு நகரத்தை நான் கண்டதே இல்லை. வாழ்நாள் முழுவதும் குளிப்பதே இல்லை என்று சீனன் ஒரு விரதமே எடுத்துக்கொண்டிருப்பான் போலிருக்கிறது. தெருக்கள் மிகவும் குறுகல், நடக்கும் போது இரு சிறகிலுமுள்ள கடைகளை ஏறக்குறைய உராயவேண்டியிருக்கும். பத்துத் தப்படிக்கு ஒரு மாமிசக் கடையிருக்கும். பூனை, நாய் இவற்றின் மாமிசத்தைக்கூட விற்கிறார்கள். மிகவும் ஏழையான சீனர்களே இந்த மாமிசங்களை உண்கிறார்கள்.

''சீனாவின் உயர்குடிப் பெண்களை ஒருபோதும் பார்க்க முடியாது. வட இந்திய ஹிந்துப் பெண்களைப்போல கடுமையான கோஷா முறை அநுஷ்டிக்கிறார்கள். தொழிலாளிப் பெண்களைத் தான் காணமுடியும். இவர்களில் சிலருடைய பாதங்கள் உங்களுடைய கைக்குழந்தையின் பாதத்தைவிடச் சிறியதாக இருப்பதைக் காண்பீர்கள். இவர்கள் நடப்பதாகவே சொல்ல முடியாது; உருண்டு கொண்டிருப்பதாகவே தோன்றும்.

''பல சீனக் கோயில்களைப் பார்க்க நான் சென்றிருந்தேன். காண்டனிலுள்ள மிகப் பெரிய ஆலயம், முதல் பௌத்த சக்ரவர்த்தியின் நினைவுக்கும், முதல் ஐந்நூறு புத்த சிஷ்யர்கள் நினைவுக்கும் அர்ப்பணமாகியுள்ளது. நடுநாயகமாக விளங்குபவர் புத்தரே. எல்லா உருவங்களும் மரத்தில் வனப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன.

''ஜப்பானில் நாங்கள் அடைந்த முதல் துறைமுகம் நாகஸாகி.(சீனாவிடமிருந்து) எத்தகைய மாறுபாடு! புவியிலுள்ள பரம சுத்தமான மக்களில் ஜப்பானியரும் ஒருவர். எல்லாம் சுசிருசியாக உள்ளன. தெருக்கள் விசாலமாயும், நேராயும், குண்டு குழியில்லாமலும் உள்ளன. அவர்களுடைய வீடுகள் பட்சிக் கூண்டுகளைப்போலிருக்கின்றன. ஊசியிலை மரங்கள் போர்த்தியுள்ள சிறு குன்றுகளே அவர்களுடைய ஒவ்வொரு நகரத்துக்கும் கிராமத்துக்கும் பின்னணியாக இருக்கின்றன. ஜப்பானியர்களின் குள்ளமான உருவம், பளிச்சென்ற நிறம், விசித்திர உடுப்பு, நடை, பாவனை, சைகை எல்லாமே சித்திர விசித்திரமாக

Koviloor Digital Library

இருக்கின்றன. ஜப்பான் சித்திராலங்காரமான பூமி! அநேகமாக ஒவ்வொரு வீட்டுக்குமே ஒரு தோட்டமிருக்கிறது. ஜப்பானிய நாகரிகப்படி அந்தத் தோட்டத்தில் புதராக வளரும் சிறு செடிகளும், புல் திடல்களும், செயற்கை நீர் நிலைகளும், சிறு கல் பாலங்களும் உள்ளன.

''ஜப்பானின் உட்புறத்தைக் காணவேண்டுமென்று நாகஸாகியிலிருந்து கோப் சென்றேன். நிலமார்க்கமாக யோகோஹாமாவுக்குச் சென்றேன். உள்நாட்டுப் பட்டிணங்கள் மூன்றினை நான் கண்டேன் — பெரும் தொழில் நகரமான ஒஸாகா, முந்தைய தலைநகரான க்யோடோ, இன்றைய தலைநகரான டோக்கியோ.

''டோக்கியோ கல்கத்தாபோல இருமடங்கு பெரியது; ஜனத்தொகையும் இரு மடங்கு. பாஸ்போர்ட் இல்லாவிட்டால் அந்நியர்களை உள்நாட்டில் அநுமதிப்பதில்லை.

''இன்றைய காலச் சூழ்நிலையின் தேவைக்கேற்ப ஜப்பானியர்கள் புது விழிப்புப் பெற்றிருக்கிறார்கள். நன்றாக அமைக்கப்பட்ட ஒரு தரைப்படை அவர்களுக்கு உள்ளது. கப்பற்படையையும் பெருக்கி வருகிறார்கள். ஜப்பானிய எஞ்சினியர்களே உருவாக்கியுள்ள ஒரு மைல் நீளமுள்ள ஒரு டன்னலை நான் கண்டேன்.

''தீப்பெட்டித் தொழிற்சாலைகள் நேத்திரானந்தமாகும். தங்கள் தேவை அவ்வளவையும் உள்நாட்டிலேயே தயாரிப்பதில் அவர்கள் முனைந்திருக்கிறார்கள். பற்பல கோயில்களைக் கண்டேன். ஒவ்வொரு கோயிலிலும் பழைய வங்காளி லிபியில் சம்ஸ்கிருத மந்திரங்கள் சில எழுதப்பட்டிருக்கின்றன. புரோஹிதர்களில், ஒரு சிலருக்குத்தான் சம்ஸ்கிருதம் தெரிகிறது. முன்னேற்றத்தை விரும்பும் புதுமை உணர்ச்சியைப் புரோஹிதர்களிடையேகூடக் காண முடிகிறது. ஒரு சிறு கடிதத்தில் ஜப்பானியரைப்பற்றி நான் எண்ணுவதவ்வளவையும் சொல்ல இயலாது. நம் நாட்டு இளைஞர்கள் கோஷ்டிகோஷ்டியாக ஒவ்வோர் ஆண்டும் ஜப்பானுக்கும் சீனாவுக்கும் செல்லவேண்டும் என்று விரும்புகிறேன். ஜப்பானியர்களுக்கு இந்தியா இன்னும் உயர்ந்தனயாவற்றுக்கும், நல்லனயாவற்றுக்கும் ஒரு ஸ்வப்பன தேசமாக விளங்குகிறது. ஆனால் உண்மையில் நாம் எப்படி இருக்கிறோம்?......''

தொடர்ந்து இக்கடிதத்தில் மூட நம்பிக்கைகளும், உயர்வு தாழ்வு எண்ணமும், மேல்நாட்டு மோகமும், குமாஸ்தா உத்யோகம் பெறுவதே பிறப்பெடுத்த லக்ஷியம் என்ற மனோபாவமும் கொண்ட இந்தியாவைத் தாக்குகிறார் சுவாமிஜி. பிறகு தமது சென்னை சிஷ்யர்களுக்கு அவர் எழுதுவதாவது:

Koviloor Digital Library

''இந்தியாவுக்குக் குறைந்த பட்சம் ஓராயிரம் இளைஞர்களின் தியாகம் தேவையாக இருக்கிறது — மனித மனது படைத்த இளைஞர்கள் தேவை; மிருகத்தனமானவர்கள் அல்ல......சுய நலமின்றி லக்ஷியத்தை அடையும்வரை தங்கு தடையின்றி செல்லக் கூடிய எத்தனை மனிதர்களை அளிக்க இன்று சென்னை தயாராக இருக்கிறது? ஏழைகளுக்கு அநுதாபம், அவர்களுடைய பசித்த வாய்க்குப் பிடி அன்னம், பாமரர்களுக்கு அறிவொளி இவற்றை அளித்துப் புதியதொரு அமைப்பை உருவாக்குவதற்காகச் சாவு வரை போரிடக்கூடிய எத்தனை மனிதர்களைச் சென்னை வழங்கும்? உங்கள் முந்தையரின் கொடுமை காரணமாக விலங்குகளின்நிலைக்கு வந்துவிட்டவர்களை மனிதர்களாக்குவதற்காகச் சாவுவரை போராடக்கூடிய எவ்வளவு பேரைச் சென்னை அளிக்கும்?''

* * *

சீன ஆலயங்களில் அந்நியரை அநுமதிப்பதில்லை என்று தெரிந்தும் சுவாமிஜி பிடிவாதமாக ஓர் ஆலயத்தில் பிரவேசித்தா ராம். அப்போது இரண்டு மூன்று சீனர்கள் கையில் குண்டாந் தடியுடன் அவரை நோக்கிப் பாய்ந்து வரவே அவருடன் வந்தவர் கள் ஓடிவிட்டனர். மொழிபெயர்ப்பாளரும் ஓடத்தயாரான போது சுவாமிஜி அவருடைய கையைப்பிடித்து நிறுத்தி, 'யோகி யைச் சீன பாஷையில் என்னவென்று சொல்கிறார்கள் என்பதைக் கூறிவிட்டு நீங்களும் ஓடலாம்' என்றாராம். அவரும் அவ்வாறே சொல்ல, சுவாமிஜி சீன மொழியில் தாம் இந்தியாவிலிருந்து வந்துள்ள ஒரு யோகி என்று உரக்கக் கூவினார். என்ன ஆச்சரி யம்! அடிக்க வந்த சீனர்கள் அவர் அடியில் பணிந்தார்களாம்.

பாரத ஞானிகளுக்கு வெளி நாடுகளில் அத்தனை மதிப்பு இருந்திருக்கிறது.

தங்களுக்கு மந்திரத் தாயத்துக்கள் வேணுமென்று அந்தச் சீனர்கள் சுவாமிஜியைச் சூழ்ந்துகொண்டார்கள். யோகத்தைப் பற்றி அவர்கள் அறிந்தது அதுதான். சுவாமிஜி சற்று நேரம் யோசித்தார். பிறகு தம் சட்டைப்பையிலிருந்து ஒரு தாளை எடுத்துத் துண்டுகளாக்கினார். ஒவ்வொன்றிலும் 'ஓம்' என்று எழுதி அவற்றைச் சீனர்களுக்கு விநியோகித்தார். பிரணவத்தை விட உயர்ந்த மந்திரம் ஏது?

சீனாவில் கண்ட பௌத்த விக்கிரகங்களில் வங்காளிகளின் தோற்றச் சாயல் இருப்பதைக் கண்ட சுவாமிஜி நீண்ட நாட் களுக்கு முன் வங்காளத்துக்கும் சீனாவுக்குமிடையே இருந்த தொடர்பை நினைவு கூர்ந்தார். பௌத்தத்தை சீனாவுக்கு வழங்

Koviloor Digital Library

இயவர்களின் வம்சத்தில் வந்தவரல்லவா தாம் என்பதை எண்ணிப் பெருமிதம் கொண்டார்.

* * *

பழைய உலகிலிருந்து புது உலகை நோக்கிக் கப்பல் சென்று கொண்டிருந்தது.

யோகோஹாமாவிலிருந்து புறப்பட்ட சுவாமிஜி அமெரிக்கக் கண்டத்திலுள்ள வான்கூவரில் வந்திறங்கிவிட்டார்.

Koviloor Digital Library

அத்தியாயம்—19

புதிய உலகம்

சுவாமிஜி தமது நம்பிக்கைகளின் நிலேக்களனுன நவின உலகில் வந்திறங்கினர். பலவிதங்களில் அது அவருக்கு ஆறுதலாக இருந்தது. உள்ளத்து உணர்ச்சிகள் ஒருபுறமிருக்க அப்போது அவருக்கு உடல் நலம் அவ்வளவு செவ்வையாக இருக்கவில்லே. பார்த்துப் பார்த்து அவருடைய பயணத் தேவைகளேப் பூர்த்தி செய்த அன்பர்கள் அந்தப் பருவத்தில் வட பஸபிக் பிராந்தியங்களில் கடுங்குளிராக இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கவில்லே. ஆனபடியால் சுவாமிஜிக்குப் போதிய கம்பளி உடைகளே அவர்கள் தயார் செய்து அனுப்பவில்லே. இது காரணமாக சுவாமிஜி தமது கடற்பயணத்தின் கடைநிலேகளில் கபமும் ஜலதோஷமுமாகக் கஷ்டப்பட்டார். ஒருவழியாக அமெரிக்கா வந்தவுடன் ஆசுவாச மடைந்தார்.

வான்கூவரிலிருந்து கனடா வழியாக சிகாகோவுக்கு ரயிலில் பிரயாணம் செய்தார் சுவாமிஜி.

ஓர் ஊரிலிருந்து இன்னேர் ஊருக்குச் சென்ருலே புதுமைகள் பலவற்றைக் காண்கிருேம். ஓர் உலகிலிருந்து இன்னேர் உலகுக்குச் சென்ருல் எப்படி இருக்கும்? பழைய உலகத்தின் பழம்பெரும் பகுதியாகிய பாரதத்திலிருந்து புதிய உலகத்துக்குச் சென்றிருந்த சுவாமிஜி அதிசயங்களேக் கண்டவாறு சென்று கொண்டிருந்தார். திருவிழாக் கூட்டத்தில் தனித்துவிடப்பட்ட குழந்தையின் மனநிலேயில் சிகாகோவில் — சர்வமத மகாசபை நிகழவிருந்த பெருநகரில் — வந்திறங்கினர். சிகாகோ ஸ்டேஷனில் அவர் இறங்கியவுடனேயே இதுகாறும் அவர் நம்பிக்கையின் நிலேக்களனுக நினேத்திருந்த அமெரிக்கா அவரை ஏமாற்றத் தொடங்கியது.

சுமைதூக்கிகள் கேட்ட கூலி அவரையே தூக்கிப் போட்டது. வாழ்க்கைச் செலவு இவ்வளவு உயர்வான நாட்டில் தாம் கொண்டு வந்துள்ள திரவியம் எவ்வளவு காலத்துக்குப் போதுமானதாயிருக்கும் என்று அப்போதே அவர் கணக்குப் போடவேண்டியதாயிற்று. ரயில் நிலேயத்திலிருந்த சிலர் அவரது காஷாய அங்கியையும் தலேப்பாகையையும் கண்டு கேலி செய்தபடி பின் தொடர்ந்தனர். இந்தக் கருப்பு நிற அந்நியனே அந்த 'நாகரிகவாசி'கள் ஏதோ இழிய ஜந்துவைக் காண்பதுபோலவே நோக்கினர்.

அப்போது சிகாகோவில் உலகக் கண்காட்சியொன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்தக் கண்காட்சியின் ஓர் அங்க

Koviloor Digital Library

மாகத்தான் சர்வமத மகாசபை நடைபெற விருந்தது. உலகக் கண்காட்சி பிரம்மாண்டமான அளவில் அமைந்திருந்தது. ஏராள மானவர்கள் அதற்கு வந்து போய்க்கொண்டிருந்தார்கள். இவர் களில் ஒரு துளியாகக் கரைந்தார் சுவாமிஜி. ஆனால் பாலில் விழும் ஒரு தயிர்த்துளிபோல, தாம் அவர்களாக ஆகாமல் அவர் களை யெல்லாம் தம்மவர் ஆக்குபவராகக் கலந்தார் என்பதை மறவாதீர்கள்!

ஹோட்டல் ஒன்றில் அறை அமர்த்திக்கொண்டார் சுவாமிஜி. சுமைதூக்கிகள் சென்ற பின்பு தமது உடைமைகளுக்கு நடுவே அமர்ந்துகொண்டு, மனதைச் சுதாகரித்துக்கொள்ள முயன் றார். 'எல்லாமே அந்நியமாக உள்ள இங்கு தாம் தொடர்ந்து என்ன செய்யப்போகிறோம்? இங்குள்ளவர்களுக்குத் தாம் கூற விருந்த உபதேசம் எட்டுமா? அவசரப்பட்டு இப்படி எங்கிருந்தோ எங்கோ வந்து விட்டோமோ?' என்ற சங்கைகளைத் தீர்த்துக் கொள்ள முயன்றார்.

மறுநாள் உலகக் கண்காட்சிக்குச் சென்றார் சுவாமிஜி. இது வரை அவர் கண்ட அதிசயங்களெல்லாம் அதிசயங்கள் அல்ல என்று அவரை எண்ணச்செய்தது அது. அமெரிக்காவில் விஞ் ஞானமும், தொழில் நுட்ப அறிவும் கண்டிருந்த விந்தைகளை யெல்லாம் தேக்கித் தந்தது அந்தக் கண்காட்சி. எத்தனை இயந்திரங்கள்! எத்தனை எத்தனை நூதனப் பண்டங்கள்! மனி தனின் இவ்வுலக வாழ்க்கை வசதியாக இருப்பதற்காக இந்த அமெரிக்கர்கள் என்னென்ன சாதனங்களையெல்லாம் கண்டுபிடித் திருக்கிறார்கள்! இவர்களின் கலை உணர்வும் எவ்வளவு உயர்வாக இருக்கிறது!

அவ்வளவு கூட்டத்திலும் தமக்கு இதமாக ஒருவர் இன்றிச் சுற்றிச்சுற்றிப் பார்த்துவிட்டு கால் சோர்ந்து ஹோட்டல் அறைக்குத் திரும்பினார் சுவாமி விவேகானந்தர்.

அப்புறம் அவர் அடிக்கடி அந்த அற்புதக் கண்காட்சிக்குச் சென்று வந்தார். முதலில் அற்புதமாகத் தம் உணர்வைக் கவர்ந்த வற்றின் சூக்ஷ்மங்களை மெல்ல மெல்ல அறிவினால் புரிந்துகொண்டு விஞ்ஞான மர்மங்கள் பலவற்றைக் கற்றார். சிறுகச் சிறுக சில மக்களிடம் பரிசயமும் கொண்டார்.

சுவாமிஜி பத்திரிகைமூலம் பிராபல்யம் அடைந்தது மிகவும் வேடிக்கையான முறையிலாகும். அப்போது கபூர்த்தலா சம்ஸ் தானாதிபதி சிகாகோவில் இருந்தார். சுவாமிஜி இவரைக் கண் காட்சி மைதானத்தில் கண்டபோது இந்தப் பக்கிரியுடன் என்ன பேச்சு என்று அவர் உதாசீனமாகவே இருந்தாராம். நகத்தால்

Koviloor Digital Library

சித்திரம் எழுதும் மராட்டிய பிராமணன் ஒருவனும் எப்படியோ சிகாகோவுக்கு வந்து உலகக் கண்காட்சியில் ஒரு கடை வைத்திருந்தான். இவனையும் மகாராஜா அலக்ஷியப்படுத்தியிருந்தார் போலிருக்கிறது. அவன் அமெரிக்கப் பத்திரிகை நிருபர்களிடம் மகாராஜாவைப்பற்றி இல்லாததும் பொல்லாததுமாகக் கதை அளந்தான். ஆவலைக் கிண்டுகிற விஷயங்கள் வெளியிடுவதில் அமெரிக்கப் பத்திரிகைகள் பெயர் போனவை. அமெரிக்காவோ அதன் உள்ளூர்ப் பத்திரிகைகளுக்குப் பெயர்போனது. ஒவ்வோர் ஊரிலும் அங்கு ஒரு பத்திரிகை இருக்கும். இவற்றில் 'வசீகரண' விஷயங்கள் ஏராளமாக இருக்கும். நிருபரின் சரட்டுக்கும் புரட்டுக்கும் இவற்றில் பஞ்சமே இராது. மராட்டி பிராமணன் சொன்னதற்கும் மேல் இல்லாததையும் பொல்லாததையும் கூட்டி எழுத சிகாகோப் பத்திரிகை நிருபர்கள் காத்துக்கொண்டிருந்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களிடம் விவேகானந்தர் மாட்டிக்கொண்டார். அவ்வளவுதான்! இந்தியாவிலிருந்து ஒரு ஞானி வந்திருப்பதாக அவரைப்பற்றி கூறப் புகுந்த அந்தப் பத்திரிகையாளர்கள், மராட்டி பிராமணன் கூறிய தவ்வளவையும் விவேகானந்தர் சொன்னதாகத் தங்கள் பத்திரிகைகளில் பத்தி பத்தியாகப் பிரசுரித்தனர். அதன்பின் சிகாகோவின் நாகரிக சமுதாயத்தினர் மஹாராஜாவைச் சீண்டவில்லையாம்.

எப்படியோ சுவாமிஜி யத்தர்களான அமெரிக்க நிருபர்களிடம் சிக்கிவிட்டார்! அவர்கள் அவரைக் கேள்விமாரியால் துளைத்து எடுப்பார்கள். சுவாமிஜி தமது சூழலுக்குப் பழக்கப்பட்டு வரலானார். மாறி மாறி வரும் உணர்ச்சிகளுக்கிடையேயும் ஆண்டவன் தமக்கு எப்படியும் வழிகாட்டுவான் என நம்பத் தொடங்கினார். 'ஒரு சிரேஷ்டமான காரியத்தைச் செய்யத்தானே நான் நாடுகடந்து இங்கு வந்திருக்கிறேன்? அது பலிதமாகாது போகுமா?' என்று தெளிவு பெறத்தொடங்கினார்.

தகவல் அறிவிப்பு நிலையத்துக்குச் சென்று சர்வமத மகாசபை குறித்து விவரங்கள் கேட்க அவர் போனபோது தெளிந்த உள்ளம் மீண்டும் கலங்க நேர்ந்தது. மகாசபை தள்ளிப் போடப்பட்டிருப்பதாகவும் செப்டம்பர் முதல் வாரத்தில்தான் அது கூடும் என்றும் அறிந்தது முதல் அதிர்ச்சி. சுவாமிஜி அமெரிக்காவை அடைந்தது ஜூலை மத்தியில். இன்னும் இரண்டு மாதங்களுக்கு இந்தக் குபேர நாட்டில் காலம் தள்ளுவதென்றால் அவர் கையிருப்பைப்போல எத்தனையோ மடங்கு வேண்டியிருக்கும். இப்போதே அவர் கொண்டுவந்திருந்த பணம் கனவேகமாகக் கரைந்து கொண்டிருந்தது. தங்களின் சுக சாதனப் பொருட்களைப் பிறநாடெது

Koviloor Digital Library

வும் பெறக்கூடாது என்பதற்காக அமெரிக்கர் வேண்டுமென்றே அவற்றின் விலைகளை ஏகத்தாருக உயர்த்தியிருந்ததாக சுவாமிஜி எழுதியிருக்கிருர்.

இரண்டாவது அதிர்ச்சி அவர் எந்த ஒரு ஸ்தாபனத்தின் சார்பிலும் வரவில்லை என்பதும், அவர் யாரிடமிருந்தும் நற்சான்றிதழ் பெற்று வரவில்லை என்பதுமாகும். இப்படிப்பட்டவர்களை சர்வமத மகாசபையில் அனுமதிக்க இடமில்லை என்று சொல்லி விட்டார்கள். சுவாமிஜிக்குத் தம் காலடியே இருந்த பூமியே நழுவுவதுபோலத் தோன்றியது. ஆயிரம் பதினுயிரம் மைல்கள் கடந்து தாம் அமெரிக்கா வந்தது வியர்த்தமா ? அந்தச் சென்னை நகரத்து இளம்பிள்ளைகள் முன்யோசனையில்லாமல் செய்த காரியத்துக்கு இப்படி ஆளானேமே என்று அவருக்குக் கோபமாகக்கூட இருந்தது. 'அவர்கள் மட்டுமென்ன ? குழந்தைக் குணம்படைத்த சுவாமிஜியேதான் இந்த விதிமுறைகளையெல்லாம் எதிர்பார்த்திருக்கவில்லை' என்கிருள் சகோதரி நிவேதிதை — இவளுடைய அன்புமயமான சரிதத்தை இனி வரப்போகும் பகுதிகளில் காண்போம்.

'இந்தியாவுக்குத் திரும்பிவிட வேண்டியதுதானு ?' என்ற விணு சுவாமிஜியின் உள்ளத்தில் எழுந்தது. 'இதென்ன அசட்டுத்தனம் ! ஆண்டவனிடம் நமக்கு நம்பிக்கை போதவில்லையா ? ஆசாரியனும், அம்பாளுமே அங்கிகரித்ததன் மேலல்லவா நாம் இங்கு வந்திருக்கிறேம் ! அப்படியிருக்கக் காரியம் சாதகமாகாமலே திரும்புவதுபற்றி ஏன் எண்ணவேண்டும் ? கூடவே கூடாது. பொருள் தேவைப்பட்டால் சென்னைக்கு எழுதினுல் போயிற்று. மகாசபை கூடும் வரையில் இங்கேயே இருந்து அதனில் கலந்துகொள்ள எப்படியேனும் அனுமதி கிடைக்குமா என்று பார்த்தேவிடுவது !' என்று தீர்மானித்துக் கொண்டார் சுவாமிஜி.

சிகாகோவைவிட போஸ்டனில் வாழ்க்கைச் செலவு குறைவாக இருக்கும் என்பதனுல் சுவாமிஜி போஸ்டனுக்குப் புறப்பட்டார். போகும் வழியிலேயே ஆண்டவனின் இன்னருள் துணை மனுஷ்யருபத்தில் அவருக்குக் கிட்டிவிட்டது.

போஸ்டனுக்கு அருகேயுள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த மிஸ் கேட் ஸன்பார்ன் என்பவள் சுவாமிஜி சென்ற ரயில் பெட்டியிலேயே உடன் வந்தாள். சுவாமிஜியின் தோற்றத்தாலேயே அவரிடம் மதிப்புக்கொண்ட மிஸ் கேட் அவருடன் பேசப் பேச அவரது பெருமையை மென்மேலும் உணர்ந்தாள். அவர் உத்தேசித்திருந்த திருப்பணியை வரவேற்ருள். ''சுவாமிஜி !

Koviloor Digital Library

தாங்கள் எனது இல்லத்திலேயே வந்து தங்கியிருக்கவேணும்! உங்களுக்குச் சாதகமாகவே சந்தர்ப்பம் மாறும்'' என்ருள் அவள்.

சுவாமிஜி அந்த அன்பான அழைப்புக்கு இணங்கினர்.

மஸ்ஸசூஸெட்ஸ் மாநிலத்தில் மெட்காஃப் கிராமத்திலிருந்த 'இளங்காற்றுப் புல்வெளி' என்ற ரம்மியமான இல்லத்தில் மிஸ் கேட்டின் விருந்தினராகத் தங்கினர் சுவாமிஜி. இதனல் அப்போதைக்குச் செலவு என்பதே அவருக்கு இருக்கவில்லை.

எழுத்துத் தொழில், போதனைத் தொழில் இரண்டாலும் மிஸ் கேட் ஓர் ஆசிரியையாவாள். ஐம்பத்துநாலாவது வயதிலும் ஊக்கத்துடன் தொழில் புரிந்துவந்த அவளுக்கு ஏராளமான நண்பர்கள் உண்டு. தன் நண்பர்களையெல்லாம் அழைத்துவந்து இந்தியாவைச் சேர்ந்த 'அதிசய வஸ்து' வைக் காட்டிவந்தாள். சுவாமிஜிக்கு ஆரம்பகாலத்தில் இது கூச்சமாகத்தானிருந்தது. அவர்கள் ஹிந்து மதத்தைப்பற்றிக் கொண்டிருந்த தப்பபிப்ராயங் களை வைத்து அவரைக் கேள்விகள் கேட்டபோது அவர் ஆரம் பத்தில் சங்கடப்பட்டுப் போனர். பிற்பாடுதான் நயமாகவும், பலமாகவும் விடைகள் கூறலானர்.

சுவாமிஜி மெட்காஃப் என்ற இடத்தில் தங்கியிருந்ததைப் பற்றி அருகிலுள்ள ஃப்ராமிங்ஹாமில் நடைபெற்ற 'ட்ரிப்யூன்' பத்திரிகை

> 'இந்திய ராஜாவான சுவாமி விவேகானந்தர், மிஸ் ஸன்பார்னுடன் குதிரையில் சவாரி வந்தார்.'

என்பதுபோல 'ரசமான' குறிப்புக்கள் தருகிறது.

கிறிஸ்துவ மதத்தைத் தழுவிய ரமாபாய் அம்மையார் என்பவள் 1887லிருந்து இரண்டாண்டுகள் இந்தியாவின் இளம் விதவைகளின் நலனுக்காக என்று அமெரிக்காவில் பல சங்கங்கள் ஏற்படுத்தி யிருந்தாள். ரமாபாயிடம் ஈடுபாடுகொண்ட போஸ் டன் பெண்கள் சங்கத்தில் சுவாமிஜி ஓர் உரை நிகழ்த்தினர். ஆனல் அவர் ரமாபாய் கூறியவற்றையெல்லாம் ஒப்புக்கொண்டு பேசாததால் சங்கத்தினரை அவ்வளவாகக் கவரவில்லை எனத் தெரிகிறது.

பெண் குற்றவாளிகளை நல்வழிப்படுத்தும் 'ஷெர்பார்ன் ரெஃபர்மேடரி' யின் சூப்பரின்டெண்டெண்டான மிஸ்ஸிஸ் ஜான் ஸனுடன் அவ்விடத்தைச் சென்று கண்ட சுவாமிஜி, தாய்நாட்டின் ஈனமான நிலையில் காருண்யம் என்பதையே காணுது வாழும் கோடானுகோடி மக்களை எண்ணி விழிநீர் சாய்த்தார். சிறைச்

Koviloor Digital Library

சாலை என்று பெயரிடாமல் சீர்திருத்தசாலை என்று பெயரிட்ட அமெரிக்கர்களைப் பாராட்டினார்.

இதையெல்லாம் குறிப்பிட்டுச் சென்னையிலிருந்த அழசிங்க ருக்கு சுவாமிஜி எழுதிய கடிதத்தில் சில பகுதிகளைப் பாருங்கள்:

''நாடு உங்களைத்தான் நம்பியுள்ளது....ஏழைகளுக்காக உருகுங்கள்; உதவிபுரிய விழையுங்கள் — உதவும் வசதி தன்னால் வரும். இதே சுமையை என் இதயத்திலும், இந்த எண்ணத்தையே என் அறிவிலும் சுமந்துகொண்டு கடந்த பன்னிரண்டாண்டுகளாக நான் சுற்றி அலைந்திருக்கிறேன். இந்த உதவியைப் பெறுவதற்காகவே உதிரம் கொட்டும் இதயத்துடன் உலகில் ஒரு பாதியைக் கடந்து இந்தப் புதுமையான நாட்டுக்கு வந்திருக்கிறேன். ஆண்டவன் பெரியவன். அவன் எனக்கு உதவுவான் என்று நான் நம்புகிறேன். ஆனால் ஒருகால் நான் இங்கேயே பனியிலோ பசியிலோ மடிந்துபோகக்கூடும். அப்படி நான் மாண்டாலும், இளைஞர்காள்! ஏழையரிடமும், அறியாதவரிடமும், தாழ்த்தப்பட்டவரிடமும் அநுதாபத்தையும், அவர்களுக்காகப் போராடும் பாவனையையும் என் சொத்தாக உங்களுக்கு விட்டுச் செல்கிறேன். இப்போதே, இந்நிமிஷமே, பார்த்தசாரதிப் பெருமாளின் திருக்கோயிலுக்குச் செல்லுங்கள்! ஏழையரான, தாழ்ந்த கோகுலத்து இடைப்பிள்ளைகளுக்கு உற்றநண்பனாக இருந்த அவர் முன்பு, புத்தராக அவதரித்தபோது மேன்மக்களின் அழைப்புகளுக்கும் மேலாக தாஸி ஒருத்தியின் அழைப்பை மதித்து அவளிடம் சென்று அவளை உய்வித்தவனின் திருமுன்பு விழுந்து தண்டனிடுங்கள். ஆண்டவனின் சந்நிதியில் ஒரு மகத்தான தியாகம் செய்யுங்கள் — ஏழைகளுக்காக உங்கள்வாழ்க்கையையே தியாகம் செய்யுங்கள். இந்த ஏழைகளுக்காகத்தானே இறைவன் மீண்டும் மீண்டும் இந்த உலகுக்கு வருகிறான்? இவர்களைத்தானே அவன் எதற்கும் மேலாக நேசிக்கிறான்? அப்படிப்பட்டவர்களில் நாள்தோறும் கீழே கீழே சென்றுகொண்டிருக்கும் முப்பது கோடி மக்களை மீட்பதற்காக உங்கள் வாழ்க்கை முழுவதையும் ஈடுபடுத்துவதாக விரதம் எடுத்துக்கொள்ளுங்கள்!

''இது ஒரு நாள் காரியமல்ல. இதன் வழி நெடுகிலும் உயிராபத்தான புதர்கள் மண்டியுள்ளன. ஆனால் பார்த்தசாரதிப் பெருமாள் நம்முடைய சாரதியாகவும் இருக்கச் சித்தமாக உள்ளார். அது நமக்கு நன்றாகத் தெரியும். அவருடைய திருநாமத்தின் மேல், அவரிடம் சாசுவதமான நம்பிக்கைகொண்டு துயரமலைக்குத் தீ மூட்டுங்கள்!......நம்பிக்கை, அநுதாபம் — ஜொலிக்கும் நம்பிக்கை, ஜொலிக்கும் அநுதாபம்! இவை

Koviloor Digital Library

இருந்தால் சுயவாழ்க்கை என்பது எதுவுமில்லை, சாவு என்பது எதுவுமில்லை, பசி என்பது எதுவுமில்லை, பனி என்பது ஏதுமில்லை. ஆண்டவனுக்கு ஜயகோஷம் செய்து முன்னேறுங்கள்! ஆண்டவனே நமது சேநாதிபதி, யார் வீழ்கிறார்கள் என்று திரும்பிப்பாராமல் முன்னே முன்னே சென்றுகொண்டேயிருங்கள்...... ஒருவன் விழ்ந்தால் இன்னொருவன் அப்பணியை எடுத்துக்கொள்வான்!''

* * *

'ஈவினிங் ட்ரான்ஸ்கிரிப்ட்' என்ற போஸ்டன் பத்திரிகை 'சுவாமி விர்க்கானந்தா என்ற பிராமண சந்நியாசி' ஷெர்பார்ன் ரெஃபர்மேடரியில் பேசியதுபற்றிக் குறிப்பிடுகிறது.

போஸ்டனில் சுவாமிஜி மிஸ் கேட் ஸன்பார்னின் ஒன்று விட்ட சகோதரரும், தர்மஸ்தாபன மொன்றின்காரியதரிசியுமான ஃப்பிராங்ளின் பெஞ்சமின் ஸன்பார்ன் என்பவரின் விருந்தாளியாக இருந்தார்.

குளிர்காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. சுவாமிஜி கம்பளி உடைகள் வாங்கிக்கொள்ள வேண்டியதாயிற்று. அவருடைய விசித்திரமான உடை ஊருக்கெல்லாம் ஒரு நகைச்சுவைப் பொருளாக இருந்தபடியால் அவரை அமெரிக்க முறையிலேயே உடுத்துமாறு மிஸ் கேட் சொல்லிவந்தாள். சுவாமிஜியும் அப்படியே செய்தார். கையிருப்பு அதனால் கணிசமாகக் குறைந்தது.

சாதாரணமாக அமெரிக்க நாட்டு உடைகளை அணிந்த போதிலும் பொது மேடையில் காஷாய அங்கியும், தலைப்பாகையும் அணிந்தே பேசுவது என சுவாமிஜி தீர்மானம் செய்தார்.

மெட்காஃப் மாதர் மன்றத்தில் சுவாமிஜியின் முதல் அமெரிக்கப் பிரசங்கம் நிகழ்ந்தது.

சுவாமிஜிக்கு ஏசுநாதரிடம் இருந்த மதிப்பையும் மரியாதையையும் கண்ட அமெரிக்க மக்கள் அதுகாரணமாக அவரிடம் நெருங்கிப் பழகி அன்பு செய்யலாயினர்.

அமெரிக்கா வந்தவுடன் சுவாமிஜியின் எதிர்கால வாழ்வை மூடி மறைத்த பனி மூட்டத்தை ஆண்டவனின் அருள் சூரிய ஒளி சிறிது சிறிதாக விலக்கத் தொடங்கியது. ஹார்வர்ட் சர்வ கலாசாலையில் கிரேக்க மொழிப் பேராசிரியராக இருந்த ஜே. டபிள்யூ. ரைட் என்பவர் சுவாமிஜியை சந்தித்தார். ஹிந்து மதம் பற்றி சுவாமிஜி கூறியதைக்கேட்டு ரைட் பெரிதும் கவரப்பட்டார்.

மஸ்ஸாசூஸெட்ஸில் அன்னிஸ்க்வாம் என்ற இடத்தில் பேராசிரியர் ரைட்டின் விருந்தாளியாகத் தங்கினார் சுவாமி விவேகானந்தர். ஸ்ரீமதி ரைட் அவளுடைய தாயாருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் சுவாமிஜியின் விஜயம்பற்றி அழகுற எழுதியிருக்கிறாள்:

Koviloor Digital Library

''காலக்கணக்கில் அவருக்கு [சுவாமிஜிக்கு] முப்பது வயது இருக்கும்; பண்பில் யுக யுகாந்தரமானவர்......இந்த ஊரே அவரைக் காணவேண்டுமென்று ஆர்வத்தில் பற்றி எரிந்துகொண்டிருந்தது'' என்றெல்லாம் கூறுகிறாள் அவள்.

ஸ்ரீமதி ரைட் எழுதியுள்ள ஒரு கட்டுரையிலிருந்து கருணைமயமான சுவாமிஜி எவ்வளவு கோபாவேசமாகவும் இருக்க முடியும் என்பது தெரிகிறது. ஆங்கிலேயர்கள் இந்திய நாகரிகத்தைச் சிதைத்ததை எண்ணி ஒரு நாள் திக்கங்காகக் கனன்று எழுந்த சுவாமிஜி, 'ஆண்டவன் அவர்கள் மீது நிச்சயம் வஞ்சம் தீர்த்துக் கொள்வான்; இன்று பிற்போக்காக உள்ள சீனர் அல்லது ருஷ்யர் மூலம் வஞ்சம் தீர்த்துக்கொள்வான்' என்றாராம். அதோடு,'பிரிட்டிஷார் இந்தியாவை விட்டுச் சென்றபின் இந்தியாவைச் சீனு வென்றுவிடக் கூடிய ஒரு பேராபத்து நிகழும்' என்றும் சுவாமிஜி கூறியிருப்பதாக 'அமெரிக்காவில் சுவாமி விவேகானந்தர்; புது விவரங்கள்' என்ற நூலில் ஆசிரியர் மேரிலூயி பர்க் கூறியுள்ளார்.

சுவாமிஜியின் 'தீர்க்கதரிசனத்துக்கு' இதைவிட என்ன அத்தாட்சி வேண்டும்? ஆனால் துரதிருஷ்டவசமாக இந்த ஆபத்து வெறும் ஆபத்தாகவே இருந்து விலகுமா, அல்லது நடைமுறையாகிவிடுமா என்பதை சுவாமிஜி கூறவில்லை.

ஆங்கிலேயரின் யதேச்சாதிகாரத்தை எண்ணி சுவாமிஜியின் தேசபக்தி எப்படிப் பொங்கி எழுந்தது என்பது ஸ்ரீமதி ரைட்டின் வாசகத்திலிருந்து தெரிகிறது:

'ஆங்கிலேய அரசாங்கம் தம்மைக் கைது செய்து சுட்டுக் கொல்லாதா என்று கேட்ட அவர் ஒரு விருப்பத்தைப் பலமுறை வெளியிட்டார். 'அப்படிச், செய்தால் அதுவே அவர்களது சவப் பெட்டியின் முதல் ஆணியாகும்' என்பார் அவர் — தமது வெண்பற்கள் ஒளிர. 'எனது சாவு நாடுமுழுவதும் காட்டுத் தியாகப் பரவும்' என்பார்,' என்கிறார் ஸ்ரீமதி ரைட்.

செயலற்றிருந்த பாரத மக்களை விறுகொண்டு எழச்செய்வதற்காகத் தமது பிராணனையும் தியாகம் செய்யத் தயாராக இருந்திருக்கிறார் சுவாமிஜி!

அன்னிஸ்க்வாம் மாதா கோயிலில் ''ஸிவானி யிவ்க்லா நந்தா'' இந்தியப் பழக்க வழக்கம்பற்றி ஓர் உரை நிகழ்த்தியதாக 'க்ளஸ்டர் டெய்லி டைம்ஸ்' கூறுகிறது.

சர்வமத மகாசபையில் கலந்துகொள்ளத் தமக்கு வாய்ப்பே இராது என்றெண்ணிய சுவாமிஜி அந்த ஆசையை ஒருவாறு கைவிட எண்ணிய தருணத்தில் இறைவனின் திரு அருள் ரைட்டின்

Koviloor Digital Library

தோழமையைக் கூட்டி வைத்தது. சுவாமிஜி அவசியம் சர்வமத மகாசபையில் கலந்துகொண்டேயாகவேண்டும் என்று வற்புறுத்தினுர் ரைட். ''தங்களை இந்நாடு முழுவதும் அறிய இதன்றி வேறு வழியில்லை'' என்று சுவாமிஜியிடம் கூறினுர். சுவாமிஜியோ தாம் எந்த ஸ்தாபனத்தின் ஆதரவிலும் வரவில்லை என்றும், நற்சான்றிதழ் பெற்றுவரவில்லை என்றும் கூறினுர்.

''சுவாமிஜி, உங்களிடம் சான்றுகள் கேட்பது, சூரியனிடம் அவன் ஒளி வீசுவதற்கு உரிமை பெற்றிருக்கிருளு என்று கேட்பது போல இருக்கிறது'' என்ருர் ரைட். ''சுவாமிஜி, சர்வமத மகாசபையில் நீங்கள் பங்குகொள்வதற்கு என்னுலியன்ற தவ்வளவையும் செய்கிறேன்'' என்றும் உறுதி கூறினுர்.

சபையில் கலந்துகொள்ள விரும்பும் பிரதிநிதிகளைத் தேர்வு செய்யும் குழுவின் அக்கிராஸனர் ரைட்டுக்குத் தெரிந்தவர்தான். அவருக்கு உடனே ஒரு கடிதம் எழுதினுர் பேராசிரியர் ரைட்.

''கற்றறிந்த நமது பேராசிரியர் எல்லாரும் சேர்ந்து அறிந்திருப்பதைவிட அதிகமாகக் கற்றறிந்துள்ள ஒரு வியக்தி இதோ இருக்கிருர்'' என்று அந்தக் கடிதத்தில் எழுதினுர். பிரதிநிதிகளுக்கு இடவசதியும் போஜன வசதியும் செய்துதரும் குழுவுக்கு சுவாமிஜியை அறிமுகம் செய்யும் ஒரு குறிப்பை அளித்ததோடு அவர் சிகாகோவுக்குச் செல்வதற்கான டிக்கெட் கட்டணத்தையும் ரைட் பேரன்புடன் உதவினுர்.

மனித உருவில் தெய்வமே தமது தேவை உணர்ந்து சகாயம் செய்கிறது என்று சுவாமிஜி புரிந்துகொண்டு உள்ளம் கரைந்தார்.

ஸேலம் என்ற நகரில் வசித்த மேதி கேட் டான்னட் வுட்ஸ் என்ற அம்மையாரின் விருந்தாளியாக ஒரு வாரம் தங்கினுர் சுவாழிஜி. ஐம்பத்தெட்டு பிராயமான ஸ்ரீமதி கேட் வுட்ஸ் ஓர் ஆசிரியை. அவளும், அவளது புதல்வரும் சுவாமிஜி ஸேலத்தில் தங்கியிருந்தபோது அவரிடம் எவ்வளவு பிரியம் கொண்டிருந்தனரோ அவ்வளவுக்கு வெறுப்பைக் காட்டினராம் அந்த ஊர் பாதிரிமார்கள். ஹிந்துக்களுக்கு மதமாற்றம் தேவையில்லை என்று கூறும் சுவாமிஜியிடம் அவர்களுக்கு ஆத்திரம் வரத்தானே செய்யும்?

இந்தியாவிலிருந்து ஒரு 'ராஜா தமது சுதேச உடுப்பிலேயே' ஸேலத்தின் 'சிந்தனை-செயல் சங்க' த்தில் பேசுவார் என்று அந்த ஊரின் 'ஈவினிங் ந்யூஸி'ல் அறிவிப்பு காண்கிறது.

இந்தப் பத்திரிகையும், 'டெய்லி கெஜட்' என்ற தினத்தாளும் சுவாமிஜியை, 'ஸ்வானி விவே கனேண்டா' என்றும் 'விவே க்யோண்டா' என்றும் 'ராஜா ஸ்வானி விவி கனென்டா'

Koviloor Digital Library

என்றும் 'விவி ரானந்தா' என்றும் பலபடியாக குறிப்பிட்டு அவரது உரையை விளக்கமாகக் கூறுகின்றன. 'இந்தியர்களுக்கு மதபோதனை அளிப்பதற்காக அமெரிக்கர் மிஷனரிகளை அனுப்பத் தேவையில்லை; தாழ்வுற்று வறுமை மிஞ்சி நிற்கும் அவர்களுக்குத் தொழிலறிவு அளிக்கவே அமெரிக்கரின் உதவி அவசியம்' என எழுபதாண்டுகளுக்கு முன்பு சுவாமிஜி கூறியது இந்தப் பத்திரிகைச் செய்திகளிலிருந்து தெரிகின்றது.

இதன்மீதுதான் பாதிரிமார்கள் ஆத்திரம் கொண்டனர். இனிமேல் சுவாமிஜி காணப்போகும் பேர் எதிர்ப்புக்களுக்கு இதுவே அங்குரார்ப்பணம்.

ஆனுல் சுவாமிஜியின் கருத்துக்களை ஆமோதித்த உயர்மனத் தவரான பாதிரிகளும் இருந்தனர் என்பது 'ஈஸ்ட் சர்ச்' எனப் படும் மாதாகோயிலிலேயே இதன்பின் அவரது பிரசங்கமொன்று நடைபெற்றது என்பதிலிருந்து தெரிகிறது. ஸேலத்தில் ஸ்ரீமதி வுட்ஸின் இல்லத்தில் நடைபெற்ற குழந்தைகள் கூட்டமொன்றி லும் சுவாமிஜி பேசினுர்.

ஸேலத்திலிருந்தபோது பேராசிரியர் ரைட்டுக்கு சுவாமிஜி எழுதிய கடிதங்களில் சிகாகோ சர்வமத மகாசபையில் தாம் அநுமதிக்கப்படுவதன் சாத்தியக் கூறுகளைப்பற்றி வினவியுள்ளார். 1893-ம் ஆண்டு ஸெப்டம்பர் நாலாம் தேதி ரைட்டுக்கு எழுதிய கடிதத்தில் ''இதோ கவிதை செய்ய முயற்சித்துச் சிலவரிகள் எழுதியுள்ளேன். இந்த ஹிம்சையை உங்களுடைய அன்பு மன் னிக்கும் என நம்புகிறேன்'' என்று முகவுரை கூறிவிட்டு 'பர்வ தத்தின் மீதும், பள்ளத்தாக்கிலும்' என்று தொடங்கும் பாடலை எழுதியுள்ளார்.

எங்கெங்கோ இறைவனைத் தேடிப் பிறகு அவனைத் தன்னிலும், பிறகு எங்கெங்கிலும் கண்டதைக் கூறும் இந்த அழகிய கவிதை 'உளன் கண்டாய் நன்னெஞ்சே' என்ற பாசுரத்தை நினைவுறுத்துகிறது.

கம்பீரம் கொழிக்கின்ற காலைப் பொழுதிலும்
உருகித் துவள்கின்ற இரவுப் பொழுதிலும்
பிரகிருதி எழிலிலும் பட்சிகள் இசையிலும்
உன்னை நான் காண்கிறேன்............

மோகனக் குழந்தையின் மெல்லிய இமைகளைத்
தாழிடும் தாயின் தாலாட்டிலே நின்றன்
தேன் குரல் கேட்கிறேன்

என்றெல்லாம் ராஜநடை போடுகிறது இந்தப் பாடல்.

Koviloor Digital Library

ஸேலத்திலிருந்து ஸரடோகா ஸ்பிரிங்ஸ் என்ற இடத்துக்குச் சென்ற சுவாமிஜி அங்குள்ள அமெரிக்க சமூக இயல் சங்கத்தில் மூன்று சொற்பொழிவுகள் நிகழ்த்திஞர். மதச் சார்பற்ற இந்தச் சங்கத்தில் சகலகலா வல்லபரான சுவாமிஜி 'இந்தியாவில் மகம் மதிய ஆட்சி,' 'இந்தியாவில் வெள்ளியின் உபயோகம்' என்ற இரு பொருள்பற்றி, இரண்டு உரைகள் ஆற்றிஞர். மற்ற உரையின் பொருள் என்ன என்பது தெரியவில்லே.

* * *

பெண்கள் கூட்டம், குழந்தைகள் கூட்டம் உள்படப் பல இடங்களில் பேசி அமெரிக்கர்களே சுவாமிஜி ஒருவாறு எடை போட்டாகி விட்டது.

சர்வமத மகாசபை கூடவிருக்கும் ஸெப்டம்பர் மாதம் பிறந்து ஊர்ந்து வரலாயிற்று.

சுவாமிஜி சிகாகோவுக்கு ரயில் ஏறிஞர்—முதலில் இருந்த கலக்கங்களெல்லாம் ஒருவாறு தீர்ந்து தெய்வம் தம்மைப் பாலித்து வருகிறது என்ற நம்பிக்கையுடன்.

என்ருலும் தெய்வம் மீண்டும் மீண்டும் சோதனே செய்தே தான் வந்தது. சோதனே ஏற்பட்டுப் பின்னர் அது நீங்கும் போதுதான் தெய்வ் நினேவு ஏற்படும் என்பதால்தானே என்னவோ ? 'துன்பம் காட்டி விலக்கிடும் தெய்வம்' என்பதல்லவா ஞானியின் வாக்கு ?

சுவாமிஜி சிகாகோவுக்குச் சென்றபோது அவருடன் ரயிலில் வந்த ஒரு வியாபாரி அவர் செல்லவேண்டிய இடத்துக்குத் தாம் வழி சொல்வதாகச் சொன்ஞர். ஆஞல் சிகாகோ ரயில் நிலேயம் வந்தவுடன் ஒரே அவசரமாகத் தம்பாட்டில் அவர் இறங்கிச் சென்று விட்டார். சுவாமிஜியோ வழியில் எங்கேயோ விலாசத்தைத் தொலேத்துவிட்டார். சர்வமத மகாசபையின் தலேவரான டாக்டர் பர்ரோஸ் என்பவரின் பெயரைமட்டும் சொல்லி அந்த மாநகரத்தில் இடத்தைத் தெரிந்துகொள்வது இயலாத காரியமாயிருந்தது. அதுவும் சுவாமிஜி சென்று கொண்டிருந்த சிகாகோவின் வடகிழக்குப் பகுதியில் ஜெர்மானியர்களே அதிகம் இருந்தனர். அவர்களுடன் சுவாமிஜியின் ஆங்கிலத்தில் உரையாடவும் முடியவில்லே.

இரவு வந்துவிட்டது. களேத்துப்போயிருந்த சுவாமிஜிக்கு ஒரே தூக்கமாக வந்தது. பேசாமல் ரயில் நிலேயத்திலிருந்த ஒரு பெரிய காலிப் பெட்டிக்குள் படுத்துக்கொண்டார். பகவான் மீது பாரத்தைப் போட்டுவிட்டு நிம்மதியாகத் தூங்கிஞர். சர்வ மத மகாசபையையே ஒரு கலக்குக் கலக்க இருந்தவர் அன்றிரவை

Koviloor Digital Library

அமெரிக்காவில் ஓர் அகதியைப்போல உணவும், படுக்கையுமின்றிக் கழித்தார் !

மறுநாள் காலை எழுந்தவுடன் புது நீரின் நறுமணத்தை மோந்த சுவாமிஜி அந்த மணம் வந்த திக்கை நாடி நடையைக் கட்டினர். 'லேக் ஷோர் ட்ரைவ்' என்ற ஏரிக்கரைச் சாலையை அடைந்தார். பணம் கொழுத்த நாகரிக வாசிகள் வாழும் இடம் அது. அங்கு அழுக்கடைந்த உடைகளோடு, பசிக்கொடுமை தாங் காமல் விடு விடாக ஏறிப் பிச்சை கேட்டுக்கொண்டும், சர்வமத மகாசபைக்கு வழி கேட்டுக்கொண்டும் சுவாமிஜி சென்று கொண் டிருந்தார். கௌரவம் பெறவேண்டிய இடத்திலும் அவர் மானபிமானம் விட்ட பரிவிராஜகராக யாசகம் செய்ய வைத்து விட்டான் ஆண்டவன். அவரை யாரும் லட்சியம் செய்யவே இல்லை. அந்த சாலையிலிருந்த மாளிகையின் வாசலில் காவல் காத்துக்கொண்டிருந்த சேவகர்கள் அவருக்கு ஐயமிடாதது மட்டுமில்லை; சர்வமத மகாசபை அலுவலகம் இருக்குமிடத்தை அந்த ஹிந்துப் 'பக்கிரி'க்குச் சொல்லக்கூட அவர்கள் தயாராக இல்லை. சில 'கருணாமூர்த்தி' கள் அவருடைய முகத்திலேயே கதவைச் சாத்தினர். சுவாமிஜிக்கோ டெலிபோன் சமாசாரம் எதுவும் தெரியாது. எனவே அவ்விதத்திலும் தமக்கு வேண்டிய விலாஸத்தை அவரால் அறியமுடியவில்லை.

'ஆண்டவனே, திரும்பத் திரும்ப சோதனையும் வேதனை யுமா ?' என்று வெம்பிச் சோர்ந்தபடியே சென்றுகொண்டிருந் தார் சுவாமிஜி. எவ்வளவு நாழிதான் இப்படியே நடப்பது ? தமது நிலையைப்பற்றிச் சிறிதும் எண்ணாது அப்படியே சாலை ஓரத்தில் உட்கார்ந்துவிட்டார் சுவாமிஜி, 'இறைவா, நீ என்ன செய்தாலும் சரி' என்று கூறியபடியே.

அவருடைய குரல் இறைவனின் இதயக் கதவைத் தட்டியது. அந்தக் கதவு திறந்தது.

சுவாமிஜி அமர்ந்த இடத்துக்கு நேரே சாலையில் இருந்த மாளிகையின் கதவும் திறந்தது.

ஞானி போன்ற தோற்றத்துடன் ஒரு பெண்மணி வெளிப் பட்டாள். வாசல்படிகட்டுகளில் மளமளவென்று இறங்கிவந்தாள்.

சோர்ந்து உட்கார்ந்திருந்த சுவாமிஜியிடம் இரக்கமும், அவருடைய முகத்தில் கொழுந்துவிடும் ஞானத்திடம் மதிப்பும் கொண்டு அவரை உள்ளேயழைத்தாள்.

இருவரும் அறிமுகம் செய்துகொண்டார்கள்.

சுவாமிஜியை நாம் அறிமுகம் செய்துகொள்ளத் தேவையில்லை.

அவரை அழைத்த பெண்மணியைத் தெரிந்து கொள்வோம். அவள் ஜார்ஜ் டபிள்யூ ஹேல் என்ற தனிகருடைய மனைவி.

Koviloor Digital Library

உயர் அந்தஸ்து படைத்த ஹேலுக்கும் ஸ்ரீமதி ஹேலுக்கும் சிகாகோவில் நிரம்பச் செல்வாக்கு உண்டு. எனவே சுவாமிஜியை சர்வமத மகாசபையில் பிரதிநிதியாக அநுமதிக்கச் செய்யத் தான் முயல்வதாகக் கூறினுள் ஹேல்.

''முதலில் சிற்றுண்டி ஆகட்டும், அப்புறம் நானே உங்களே சர்வமத மகாசபை அலுவலகத்துக்கு அழைத்துச் செல்கிறேன்'' என்ருள் ஸ்ரீமதி ஹேல் அன்புடன்.

ஸ்ரீமதி ஹேலுக்கு மட்டுமின்றி, அவளைத் தம்மிடம் கூட்டு வித்த, அல்லது தம்மை அவளிடம் கூட்டுவித்த, திருவருளுக்கு மாகச் சேர்ந்து நன்றி தெரிவித்தார் சுவாமி விவேகானந்தர்.

ஸ்ரீமதி ஹேல், அவருடைய கணவர், குழந்தைகள், மரு மான்கள் ஆகியோர் சுவாமிஜிக்கு மிகவும் ஆப்தமான அமெரிக்கர் களாயினர்.

சுவாமிஜியின் பசியைச் தீர்த்தவுடன் அவரை சர்வமத மகாசபையின் தலைவரான டாக்டர் ஜே. ஹெச். பர்ரோஸிடமே கூட்டிச் சென்ருள் ஸ்ரீமதி ஹேல். ஏற்கனவே பேராசிரியர் ரைட் வேறு சுவாமிஜியைப்பற்றி மகாசபை முக்கியஸ்தர்களுக்கு எழுதியிருந்தார் அல்லவா? எனவே சிகாகோவின் பிரபலஸ்தர் களில் ஒருத்தியான ஸ்ரீமதி ஹேலின் அறிமுகமும் சேரவே, சுவாமி விவேகானந்தர் சர்வமத மகாசபைக்கு ஒரு பிரதிநிதியாக அநு மதிக்கப்பட்டார்.

எந்தக் காரியத்துக்காக சுவாமிஜி அமெரிக்கா வந்தாரோ அந்தக் காரியத்தின் பூர்வாங்கம் செம்மையாக நிறைவேறிவிட் டது. நிறைவேருமல் போகுமா? அது நிறைவேற வேண்டு மென்பதில் சுவாமிஜியைவிட அம்பிகைக்கே அல்லவா அதிக அக் கறை? எதற்காக அவள் இந்த அவதாரத்தை நிகழ்த்துவித் திருந்தாளோ அந்தப் பணியைப் பலிதமாகச் செய்வது அவ ளுடைய பொறுப்பே அல்லவா?

கீழ்நாட்டுப் பிரதிநிதிகளின் இருக்கையில் சுவாமிஜிக்கும் வசதியான இடமளிக்கப்பட்டது.

சுவாமிஜியின் உடம்பில் குதுகுதுப்பு ஏறத் தொடங்கியது. உலகத்துப் பேரறிஞர்கள் கூடிய சர்வமத மகாசபையில் முப்பது பிராயத்து இளைஞரான அவரும் பேசப் போகிருர்!

இந்தப் பரீட்சையில் தேறவேண்டுமே எனப் பரமனையும், பரமகுருவையும் பிரார்த்தித்தபடியே பொழுதைக் கழிக்கலானுர்.

'எனக்கென்று எதுவும் இல்லே. ஈசுவரனின் ஆணை, ஆசாரி யரின் ஆணை எப்படி நடக்கவேண்டுமோ அப்படி நடக்கட்டும்' என்று ஆத்ம நிவேதனம் செய்துகொண்டார்.

Koviloor Digital Library

அத்தியாயம்—20


சர்வமத மகாசபை

உலக சரித்திரத்தில், முக்கியமாக உலகத்துச் சமயங்களின் சரித்திரத்தில், குறிப்பாக ஹிந்து சமய சரித்திரத்தில் பொன்னெழுத்தால் பொறிக்கவேண்டிய பெருவிழா 1893-ம் ஆண்டு ஸெப்டம்பர் மாதம் சிகாகோவில் நடைபெற்ற சர்வமத மகா சபை. கீழ்நாட்டு நாகரிகங்களின் மதிப்பும், ஆத்மீக உயர்வும் மேல்நாடுகளுக்குத் தெரிவதற்கு ஒரு சாளரமாக அமைந்தது இந்த மகாசபையேயாகும். கீழ்நாட்டு மக்கள் அநாகரிகமானவர்கள், அவர்களுடைய மதங்கள் வெறும் சடங்குகளும் மூடநம்பிக்கைகளும் மட்டுமே பொருந்தியவை என்று மேல்நாடுகளில் பொதுவாக நிலவிவந்த கருத்தை மாற்றப் பெரிதும் உதவியது சர்வமத மகாசபையேயாகும். கிறிஸ்துவ மதம் ஒன்றே மதம் என்றெண்ணியவர்கள் இஸ்லாம், பௌத்தம், ஜைனம், ஷின்டோ மதம், கன்பூஷியஸ் மதம் இவற்றின் பெருமையை உணரச்செய்தது இம்மகாசபை. இதெல்லாவற்றுக்கும் மேலாக, ஹிந்து மதத்தின் சிறப்புக்களையும், அந்தச் சிறப்புக்களின் சிரோமணியான உபநிஷத வேதாந்தம் எம்மதத்தினருக்கும் பொதுவான இறுதிநிலை என்பதையும் பூவுலகம் முழுவதற்கும் தெரியச் செய்தது மகாசபை தான். அப்படி அறிவித்து, உலகமதமாகிய வேதாந்தத்தை உண்மையாகவே இந்தியாவின் எல்லைகளைத் தாண்டி உலகம் முழுவதற்கும் அளித்த மகான் சுவாமி விவேகானந்தர்.

கிறிஸ்டஃபர் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்து நானூறு ஆண்டுகள் பூர்த்தியானதையொட்டி 1893-ம் ஆண்டு சிகாகோவில் ஒரு விழா கொண்டாடப்பட்டது. இந்த விழாவின் ஒரு பகுதியாகவும், உலகக் கண்காட்சியின் ஓர் அங்கமாகவுமே சர்வமத மகாசபை கூட்டப்பட்டது.

எல்லா மதங்களுக்கும் இடமளித்து மகாசபை நடத்தவேண்டும் என்று எண்ணியபோதே அந்த எல்லா மதங்களிலும் கிறிஸ்துவ மதமே தலைசிறந்தது என்று நிலைநாட்டவேண்டும் என்ற ஆசையும் நிர்வாகஸ்தர்களுக்கு இருந்திருக்கக்கூடும். எங்கே இந்த மகாசபையின் விளைவாக கிறிஸ்துவ சமயத்தின் செல்வாக்கு குறைந்து விடுமோ என்று எண்ணி இந்த விழாவைக் கண்டித்து இதில் கலந்துகொள்ளாத கிறிஸ்துவ சமயத் தலைவர்களும் உண்டு. இங்கிலாந்தின் பிரதம குருவாகிய காண்டர்பரி ஆர்ச் பிஷப் இவ்வாறு தான் கருதி மகாசபைக்கு எவ்வித ஆதரவும் அளிக்கவில்லை.

Koviloor Digital Library



சுவாமி விவேகானந்தர்—சிகாகோ 1893

Koviloor Digital Library



சுவாமி விவேகானந்தர்—கலிபோர்னியா 1900

Koviloor Digital Library

அவரது கருத்தை மறுதலித்த டாக்டர் பர்ரோஸின் அறிக்கையிலிருந்து கிறிஸ்தவ மதத்தின் செல்வாக்கைப் பெருக்கவே இந்தச் சபை உதவும் என்று அவர் கருதியதாகவும், ஒருக்கால் அதற்காகவே இதனைக் கூட்டினரோ என்று எண்ணவும் இடமேற்படுகிறது. உள்நோக்கத்தைப்பற்றி நாம் ஏன் அநுமானிக்க வேண்டும்? எப்படியோ உலகிலுள்ள சகல சமயங்களும் அற்றுப் படியாகும் ஒரு சம்மேளனம் ஏற்பாடாகிவிட்டது. பிற்காலத்தில் சுவாமி விவேகானந்தரிடம் சர்வமத மகாசபையை யார் நடத்தியது என்று கேட்டபோது அவர் சந்தோஷத்துடன் சிரித்த படியே ''யார் என்ன? அம்பாள்தான் நடத்திவைத்தாள். அமரசமயமாகிய ஹிந்து தத்துவத்தை உலகுக்கெல்லாம் நான் எடுத்துச் சொல்லவேண்டுமென்றே சர்வேசுவரியானவள் சர்வமத மகாசபையை நடத்தினாள்'' என்று கூறினார்.

உலகத்தின் பற்பல நாடுகளிலிருந்து கத்தோலிக்கர், பிராடெஸ்டெண்ட், கிரிக்சர்ச் ஆகியன உள்ளிட்ட கிறிஸ்துவ மதம் தவிர, ஹிந்து மதம், ஜைனமதம், பௌத்தம், ஜூடாஸ் மதம், கன்பூஷியஸ் மதம், ஷின்டோ மதம், முகம்மதிய மதம், மஜ்டா மதம் ஆகிய எட்டு சமயங்களின் பிரதிநிதிகள் மகாசபையில் கலந்துகொள்ள வந்திருந்தனர். பிரதிநிதிகள் தேர்வுக்கும், வரவேற்புக்கும், மகாசபை நிர்வாகத்துக்கும் குழுக்கள் நியமனமாகி அவை அல்லும் பகலும் உழைத்தன. உலகத்தின் நூற்றிருபது கோடி மக்களின் சமயப் பிரதிநிதிகள் சிகாகோவில் வந்து குழுமினர்.

கலை இல்லம் — என்ற பெயருக்கு முற்றிலும் தகுதிவாய்ந்த கட்டிடத்தில் கொலம்பஸ் ஹால் என்ற மாபெரும் மன்றத்தில் 1893-ம் ஆண்டு ஸெப்டம்பர் 11-ந் தேதி காலை பத்து மணிக்கு 'டாண் டாண்' என்று மணி முழங்கியது. அன்று பிற்பகலில் சுவாமிஜி நிகழ்த்திய உணர்ச்சிமயமான உரையில் இந்த மணி ஓசையைத்தான் குறிப்பிட்டு 'இதுவே குறுகிய மதவெறியின் சாவுமணியாக இருக்கட்டும்' என்று கூறப்போகிறார்!

ஏழாயிரம் மக்கள் — அல்லது குறைந்தபட்சம் நாலாயிரம் மக்கள் — அப்பெரிய மன்றத்தில் ஆர்வத்துடன் கூடியிருக்க, சமயப் பிரதிநிதிகள் யாவரும் மகத்தானதோர் அணியாக வகுத்து வந்து மேடைமீது ஏறினர். வெவ்வேறு வண்ணமுள்ள பற்பல அங்கிகளில், பற்பல தலையணிகளுடனும், பிறைமதி, சிலுவை போன்ற பற்பல சின்னங்களுடன், முடிவளர்த்தவரும், முண்டனம் செய்தவருமாக அந்தப் பிரதிநிதிகள் வரிசையாக வந்ததே ஒரு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. குடகோளார்த்தம் எனப்

Koviloor Digital Library

படும் உலகத்தின் மேற்குப் பாதியில் ரோமன் கத்தோலிக்க கிறிஸ்துவ மதத்தின் பிரதம பாதிரியாகிய கார்டினல் கிப்பன்ஸ் மேடையில் நடுநாயகமாக விற்ருர். அவர்தான் பிரார்த்தனை யுடன் சர்வமத மகாசபையைத் தொடங்கி வைத்தவர்.

இந்தியாவிலிருந்து பல பிரதிநிதிகள் மகாசபைக்கு வந்திருந் தனர். கல்கத்தாவிலிருந்தே பிரதாப் சந்திர மஜூம்தாரும், பம்பாயிலிருந்து நகர்கரும் பிரம்ம ஸமாஜப் பிரதிநிதிகளாக வந்திருந்தனர். காந்தி என்ருெருவர் ஜைனர்களின் பிரதிநிதியாக வந்திருந்தார். அன்னை வஸந்தா எனப் புகழ்பெற்ற அன்னி பெஸன்ட் அம்மையாரும் சக்ரவர்த்தியும் தியஸாபிகல் சொஸைட்டியின் பிரதிநிதிகளாக வந்திருந்தனர். தர்மபாலர் என்பவர் ஈழத்துப் புத்தமதப் பிரதிநிதியாக வந்திருந்தார்.

இதில் வேடிக்கை என்னவென்ருல் அதிகாரபூர்வமாக அனுப் பப்படாத சுவாமி விவேகானந்தர் தவிர ஹிந்து மதத்தின் பிரதிநிதி என்ற பெயரில் யாருமே வரவில்லை, வேடிக்கையல்ல இது; வேதனை தருகிற விஷயமே ஆகும். 'சீர்திருத்தப்பட்ட' ஹிந்துமதப் பிரதிநிதிகளை அனுப்பிவைக்க இந்தியாவில் செல்வாக்குப் பொருந் தியவர்கள் இருந்தார்களேயன்றி சநாதனமான, புராதனமான ஹிந்து தர்மத்துக்கென ஒரே ஒரு பிரதிநிதியைக்கூட முறைப்படி மகாசபைக்கு அனுப்பிவைக்க அன்றைய இந்தியா அறிந்திருக்க வில்லை. ஹிந்து மதத்தின் பெருமை அமெரிக்க மேடையிலிருந்து மேதை விவேகானந்தரால் பிரகடனமானபின்தான் இந்தியாவிலேயே சநாதன வேதாந்த மதம் வீறுகொண்டு கட்டுக்கோப்புடன் எழுந்தது.

மேடையில் முப்பத்தொன்ருவதாக சுவாமிஜி அமர்ந்திருந் தார். ஆனுல் காய்கறிகளிடையே திகழும் ஒரு புஷ்பம்போல அவரே மற்றவர்களிடையில் எடுப்பாகத் துலங்கிஞர். வெண் கலத்தின் அழுத்தமான ஒளிக்கு தாமிர முலாம் தந்தது போன்ற தேக காந்தியும், ஐந்தடி எட்டங்குல உயரமும் அதற்கேற்ற அல்லது சற்றே அதிகமான பருமனும் கொண்ட நூற்றி எழுபது ராத்தல் எடையுள்ள மலைபோன்ற திருமேனியில் ஆயிரமாயிரம் ராத்தல் ஞானத்தைத் தாங்கியிருப்பதுபோல அமர்ந்திருந்த சுவாமிஜி அவையோரை எளிதில் கவர்ந்துவிட்டார். பொன்னிறத் தலைப்பாகையின் கீழ் விரிந்த விசாலமான நெற்றியும், அந்த விசாலத்துக்கு ஈடுகொடுக்கும் பரந்த நயனங்களும், அவற்றை நேயமுறப் பாதி போர்த்தும் கனத்த இமைகளும், தெற்றெனத் துலங்கும் நாசியும், அமைப்பானதொரு வாயும், 'மனிதகுலத் தின் மது சாரம்' என்றும் தமது பூர்விக முந்தையர்கள் என்றும் சுவாமிஜி மகிழ்ச்சியுடன் குறிப்பிடும் டார்டார்களுக்குரிய அழுத்த

Koviloor Digital Library

மான தாடையும், சிவந்த நீண்ட அங்கியில் மறைந்துள்ள சச் சதுரமான தடந்தோளும், பூரித்த மேனியும், காஷாய இடைப் பட்டையுமாக விற்றிருந்த சுவாமிஜி தனியானதோர் ஆகர்ஷணம் படைத்து விளங்கினுர். பிரம்ம சமாஜம், தியாஸபி போன்ற எந்த மதப் பிரிவுக்கும் பிரதிநிதியாக இல்லாமல், ஹிந்துமதம் என்ற பெயரால் நாம் எதை எண்ணுகிருேமோ அதற்கு மட்டும் பிரதிநிதியாக இராமல், ஹிந்துமதம் உலகமதம் என்ற பொருளில் உலகத்துக்கெல்லாம் ஒரு பிரதிநிதியாக விற்றிருந்தார் சுவாமி விவேகானந்தர்.

சபைத் தலைவர் டாக்டர் பர்ரோஸ் பிரதிநிதிகள் ஒவ்வொரு வரையும் பெயர் குறிப்பிட்டு அழைத்து அந்த மாபெரும் சபைக்கு அறிமுகம் செய்ய, அவர்கள் அதற்கு நன்றி தெரிவிக்கும் முகமாகத் தாங்கள் தயாரித்து வந்திருந்த உரைகளைப் படித்தனர்.

அச்சமும் கூச்சமும் அறியாத சுவாமிஜிக்கு இன்று இதயம் திக் திக்கென்று அடித்துக் கொண்டது. 'அடேயப்பா, அந்தப் பிரதிநிதிகளில் ஒவ்வொருவரும் அந்தஸ்திலும் வயதிலும் எவ்வளவு பெரியவர்கள்? இவர்களிலொருவனுக ஆண்டிப் பரதேசிப் பையனுகிய தமக்கு எப்படி இடம் கிடைத்தது? ஆஹா, இவர்கள் முன்னேற்பாடாகப் பிரசங்கங்கள் தயாரித்து எழுதி வந்திருக் கிருர்கள். தாமோ ஆயத்தமில்லாமல் வந்திருக்கிருேமே! தலைவர் கூப்பிட்டுவிட்டால் என்ன செய்வது?'

டாக்டர் பர்ரோஸ் இரண்டு மூன்று முறை சுவாமிஜிக்குச் சைகை காட்டியும் சுவாமிஜி 'அப்புறம் ஆகட்டும், ஆகட்டும்', என்றே தட்டிக் கழித்துவந்தார். 'இந்த சாது பேசவே போவ தில்லையோ' என்றுகூட எண்ணிவிட்டார் பர்ரோஸ்.

''என் இதயம் தத்தளித்துக் கொண்டிருந்தது. நாவு வறண்டே போய்விட்டது. நரம்புத் தளர்ச்சி காரணமாகக் காலைக் கூட்டத்தில் பேசும் துணிவு எனக்கு இல்லை'' என்று சுவாமிஜி ஒரு கடிதத்தில் எழுதுகிருர்.

''மஜும்தார் நன்ருகப் பேசினுர்; சக்ரவர்த்தி ரொம்ப நன்ருகப் பேசினுர். அவர்கள் நிரம்பக் கரகோஷம் பெற்ருர்கள். அவர்களெல்லாம் பேச்சுக்களைத் தயாரித்துக் கொண்டு ஆயத்த மாக வந்திருந்தார்கள். நான்தான் முட்டாள்......'' என்று சொல்லிக்கொண்டு போகிருர். அந்த 'முட்டாள்தனம்' எந்த அறிஞருக்குத்தான் கிடைக்கும்?

மீண்டும் மீண்டும் அக்ராஸனர் கூப்பிட்ட பின் மனதைக் கெட்டிப் படுத்திக்கொண்டு சுவாமிஜி பேச எழுந்திருந்தார். ஹைதராபாத்தில் மட்டும் ஒரே ஒரு முறை பொதுமேடைப்

Koviloor Digital Library

பிரசங்கம் புரிந்தவர், பேரறிஞர்களின் பெரும்குழுவில், ஏழாயிரம் அமெரிக்கப் பெருமக்கள் கூடிய அவையில் பேச எழுந்திருந்தார். எதைப் பேசுவது, எதை எண்ணுவது என்றே புரியாத நிலையில் அவரது உள்ளம் தன்னை அறியாமல் கலைவாணியை நாடிச் சென்றது. அறிவுப் பொய்கையாம் ஞான சரஸில் விளங்கும் சரஸ்வதியை, நவரஸங்களுடன் கூடிய கலையின் ஸ்வரூபமாகிய சரஸ்வதியை உள்ளம் குவிந்து நினைந்தார்.

சுவாமி விவேகானந்தரை டாக்டர் பர்ரோஸ் அந்த உலக மகாநாட்டினருக்கு அறிமுகம் செய்தார்.

விவேகானந்தர் பேசத் தொடங்கினுர்.

யுக யுகாந்தரங்களாக விளங்கிவந்துள்ள ஹிந்துமதம் பேசிற்று.

வெகு சமீபகாலத்தில் பிறந்த அமெரிக்க நாகரிகத்தை நோக்கி கல்ப கல்பாந்தரங்களாக உயிர்வாழ்ந்து வந்துள்ள வேதாந்த சமயம் பேசிற்று.

'' அமெரிக்க சகோதரிகளே, சகோதரர்களே! ''

விவேகானந்தரின் வாயிலிருந்துஉதிர்ந்த அந்த வார்த்தைகள் வெறுமனே வாயிலிருந்து உதிரவில்லை. உண்மையாகவே அவரது உள்ளம் அங்கு கூடியிருந்தவர்களையெல்லாம் தம் உடன் பிறந்தவர்களாக எண்ண, அந்த எண்ணமே சொல்லாக உதிர்ந்தது.

ஞானக்கனி ஒளிவீசும் திருமுகமும், செந்தழலையே ஆடையாகப் பூண்டதுபோன்ற காஷாயக் கோலமுமாக நின்றவரிடமிருந்து பனியின் தன்மையான அன்பு எண்ணம் சந்தனத்தின் குளுமையான வார்த்தைகளாக வந்த அந்தக் கணமே கூடியிருந்தோரின் இதயங்கள் அவரிடம் வசியமாகிவிட்டன. 'நான் வந்தேன், கண்டேன், வென்றேன்' என்று ஸீஸர் சொன்னுனமே; அதுபோல சுவாமிஜி 'வந்தார்; ஒரே வார்த்தை சொன்னுர்; அமெரிக்கர்களை வென்ருர் !'

இதுகாறும் பேசிய பிரதிநிதிகள் யாவரும் சபையினருக்கு ஆசாரியர்களாகத் தங்களைக் கருதி உயர்பீடத்திலிருந்து பேசுவதுபோல் அவர்களை விளித்தார்கள், அல்லது 'கனவான்களே, சீமாட்டிகளே' என்று அழைத்தனர். சுவாமிஜிதான் அவர்களுடன் ரத்தக் கலப்பு உள்ளவராக, அதிலும் தத்துவ அறிவில் குறைந்தவர்கள் என்று எண்ணப்பட்ட பெண்களை முன்வைத்து 'சகோதரிகாள், சகோதரர்காள்' என்று அழைத்தார்.

எத்தனையோ மேடைப் பிரசங்கிகள் இப்படி விளித்தாலும், சுவாமிஜிபோல் சகோதரத்துவத்தை இதய பூர்வமாக அநுபவித்துப் பேசியவர் யாருண்டு ?

Koviloor Digital Library

அந்த இதய சுத்தம்தான் அமெரிக்கர்களைக் கவர்ந்திழுத்து விட்டது.

கூட்டத்தினர் உடனேயே வெறிபிடித்தாற்போல் கரக்கம்பம் செய்தனர். சிலர் ஆவேசமாகத் தங்கள் இடத்திலிருந்து எழுந்து 'வாழ்க' கோஷம் போட்டார்கள். உணர்ச்சிகளை அடக்கி மிகவும் திவிரமாக இருக்கவேண்டிய சமய மகாநாடொன்றில் உணர்ச்சி வசப்பட்டு ஆர்ப்பரித்தார்கள்.

சுவாமிஜியால் முழுசாக நூறு செகண்டுகளுக்கு மேல் பேச்சைத் தொடங்கவே முடியவில்லை. கல் விழுந்த தடாகம்போல அவரது ஒரு வார்த்தை அத்தகைய கொந்தளிப்பை ஏற்படுத்தி விட்டது.

ஒருவாறு சபை அடங்கியவுடன் சுவாமிஜி பேசலானார்:

''எங்களுக்கு நீங்கள் அளித்த இதயபூர்வமான குளிர்ந்த வரவேற்பை ஏற்று இங்கு நான் பேச எழுந்திருப்பது பேசவொண்ணாத ஆனந்தத்தில் என் இதயத்தை நிரப்புகிறது. பிரபஞ்சத்திலேயே, மிகமிகத் தொன்மைவாய்ந்த சாது சங்கத்தின் சார்பில் உங்களுக்கு நன்றி கூறுகிறேன்; எல்லா மதங்களுக்கும் அன்னையான மதத்தின் சார்பில் உங்களுக்கு நன்றி கூறுகிறேன்; எல்லா வகுப்புக்களையும் பிரிவுகளையும் சேர்ந்த கோடானு கோடி ஹிந்துக்களின் சார்பில் உங்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.''

வாஸ்தவமாகவே 'அடர்ந்த இந்தியா' பல லக்ஷகால சரித்திரத்தின் சாரமாகி, இந்தியாவின் உன்னத ஹிந்து தத்துவத்தின் சாறும் ஆகிப் பேசினார் சுவாமி விவேகானந்தர்.

''இம்மேடையில் எனக்கு முன் பேசியவர்களில் சிலர் கீழ் நாடுகளிலிருந்து வந்துள்ள பிரதிநிதிகளைப்பற்றிக் குறிப்பிட்டு, 'தூர தேசங்களிலிருந்து வந்துள்ள இப்பிரதிநிதிகள் சகிப்புத் தன்மை என்ற தத்துவத்தைப் பலவேறு நாடுகளுக்கு எடுத்துச் சென்று பரப்பிய கௌரவத்துக்கு உரிமை கொண்டவர்கள்' என்று கூறினார்கள். அப்படிக் கூறியவர்களுக்கு என் நன்றிகள் உரித்தாகின்றன. சகிப்புத்தன்மை, உண்மைகளை உலகம் முழுவதும் அங்கீகரிக்கவேண்டும் என்ற இரண்டு தத்துவங்களைப் பாருக்கெல்லாம் உபதேசிக்கும் ஒரு மதத்தைச் சேர்ந்தவன் நான் என்பதில் பெருமிதம் கொள்கிறேன். எந்த ஒரு மதத்தின் புனித மொழியாகிய சம்ஸ்கிருதத்தில் 'விலக்கி வைத்தல்' என்ற பதத்துக்கு வார்த்தை கிடையாதோ அத்தகைய ஒரு மதத்தினன் நான் என்பதில் பெருமிதம் கொள்கிறேன். எல்லா மதங்களுடையவும், எல்லாத் தேசங்களுடையவும் அகதிகளுக்கும் பகிஷ்கரிக்கப் பட்டவர்களுக்கும் நிழல் தந்த நாட்டைச் சேர்ந்தவன் என்பதில் நான் பெருமை காண்கிறேன்.

Koviloor Digital Library

''உடன் பிறந்தோரே, என்னுடைய பாலப் பருவத்திலிருந்து நான் மனனம் செய்து நினைவில் வைத்துள்ள ஒரு சுலோகத்திலிருந்து, கோடிக் கணக்கான மக்கள் தினந்தோறும் மொழியும் ஒரு சுலோகத்திலிருந்து, சில வரிகளை உங்களுக்கு மேற்கோள் காட்டுகிறேன்: பல வேறு நதிகள், பல வேறு இடங்களில் உற்பவித்தாலும் ஒரே கடலில் ஒன்ருகக் கலப்பது போல, பதவிதமான ருசி உடையவர்கள் பின்பற்றும் மார்க்கங்கள் நேரானவையாகவும், குடிலமானவையாயும் தோன்றினுலும், ஆண்டவனே, உன் ஒருவனிடம் தான் இட்டுச் செல்கின்றன.*

''இப்போது நடக்கும் இந்த சம்மேளனம், என்றென்றுக்கும் நடைபெற்ற மகோன்னதமான கூட்டங்களில் ஒன்ருன இந்தச் சம்மேளனம், கீதையில் போதிக்கப்படும் கீழ்க்கண்ட அற்புத சித்தாந்தத்தின் நிருபணமேயாகும்: எந்த உருவில் என்னை ஒருவன் நாடினுலும் அவனை நான் சென்றடைகிறேன். இறுதியில் என் ஒருவனிடமே கொண்டுவிடும் பாதைகளில் தான் எல்லா மக்களும் முயன்று கொண்டிருக்கிருர்கள்!†

பிரிவு மனப்பான்மை, குறுகிய நோக்கம், அதன் வழித் தோன்றும் சுய மத வெறி இவை இந்த எழிலார்ந்த உலகை நீண்ட நாட்களாகப் பிடித்துவிட்டன; அதனைக் கொடுமையால் நிரப்பிவிட்டன; மக்களின் இரத்தத்தால் நனைத்துவிட்டன; நாகரிகங்களை அழித்துவிட்டன; தேசங்களை முழுமையாகத் துர்த்தசையில் ஆழ்த்திவிட்டன. இந்தப் பயங்கர பூதங்கள் இருந்திராவிடில், இப்போது இருப்பதைவிட மனித சமுதாயம் மிக மிக முன்னேறியிருக்கும். அவற்றின் அழிவுகாலம் வந்து விட்டது. இந்தச் சம்மேளனத்தின் பெருமையைத் தெரிவித்து இன்று காலையில் முழங்கிய மணி எல்லா மத வெறிக்கும் போர் வாளாலும், பேனுவாலும் பிறமதத்தினரை அழிக்கிற காரியங்களுக்கும், மக்களிடையே நிலவும் எல்லா அன்பற்ற உணர்ச்சிகளுக்கும் சாவு மணியாக இருக்கும் என நான் ஆர்வமுற நம்புகிறேன்.''

சிறிய உரைதான் அது! ஆனுல் அந்தச் சிறிய உரையே க்ஷணகால மின்னலைப்போலக் கேட்போரின் உள்ளத்தில் சுடர்க் கொடி பரப்பிவிட்டது. அந்த உரையில் தொனித்த சுவாமிஜியின் உளமார்ந்த சிரத்தையையும், அவரது அழகிய அழுத்தமான ஆங்கிலத்தையும் இங்கு கால் திட்டத்துக்குக்கூட மொழிபெயர்க்கக்கூடவில்லை.

சமய சமரஸம் என்ற மகத்தான பொருள்பற்றி சுவாமிஜி கூறிவிட்டார். எம்மதத்தையும் கண்டிக்கவில்லை. எதையும்

* சிவமஹிம்னஸ் தோத்திரம்—7ம் சுலோகம்.

† பகவத்கீதை ஏழாம் அத்தியாயம் இருபத்தியோன்ரும் சுலோகத்தின் பொருளை சிறிதே விரித்துக் கூறியிருக்கிருர் சுவாமிஜி.

Koviloor Digital Library

பெரிது சிறிது என்று பாகு படுத்தவில்லை. எல்லா மதங்களும் இறைவனிடம் அழைத்துச் செல்பவை என்று கூறிவிட்டார். தக்ஷிணேசுவரத்துத் தவமுனிவர் பரமஹம்ஸ ஸ்ரீராமகிருஷ்ண பகவான் எந்தச் சத்தியத்தை நிலைநாட்ட அவதரித்தாரோ அந்தச் சத்தியமாகிய சர்வமத சமரஸத்தை உலக அரங்கில் எடுத்தோதி விட்டார் சுவாமிஜி.

'எம்மதமும் சம்மதம். எனவே பிற மதத்தினர் ஹிந்து மதத்தைத் தாழ்த்திப் பேச வேண்டியதில்லை. ஹிந்துக்களும் பிறரை மிலேச்சராக நினைக்கவேண்டியதில்லை' என்ற கருத்துக்கு சுவாமிஜியின் பிரசாரம் தொடங்கிவிட்டது.

இன்னும் சில காரியங்களும் அவருக்கு இருந்தன.

'எல்லா மதங்களையும்போலச் சடங்குகளும், சின்னங்களும், தெய்விகக் கதைகளும் கொண்ட ஹிந்து மதம் அந்த எல்லா மதங்களையும் நிறைவு செய்யும் வேதாந்தத்தில் பூர்த்தியாகிறது. ஜீவனும் பரம்பொருளும் ஒன்றே என்று கூறும் வேதத்தின் மகா வாக்கியங்களும், அவ்வாறு ஆத்மாவை யாவுமாகக் காண வழி வகுக்கும் சாதனைகளும் ஹிந்து மதத்துக்குமட்டும் உரியன அல்ல; உலகினர் யாவருமே அவற்றை அநுசரித்து அநுபூதி பெறலாம்' — என்பதனை சுவாமிஜி விளக்கவேண்டியிருந்தது.

எல்லா மதங்களும் ஒன்றிலேயே முடிகின்றன என்பதுபோல எல்லா ஜீவர்களும் ஒன்றிலேயே தோன்றி அந்த ஒன்றுகவே ஆகிறவர்கள் என்பதை மன்பதைக்கு அளிக்கும் பணியும் அவருக்கு இருந்தது. 'நான் பரம்பொருள்! எல்லா மக்களும் பரம் பொருள்; எனவே எல்லா மக்களும் நானே' என்ற விவகார அத்வைத சிந்தாந்தத்தை உன்னி உணர்ந்து, அப்படித்தானுகவே உள்ள மக்களின் வறுமையையும், அறியாமையையும் நீக்கப் பாடு படவேண்டிய அந்தத் திருப்பணிதான் ஸ்ரீராமகிருஷ்ண தேவர் தமது பிரிய சிஷ்யருக்கு இட்டிருந்த ஆக்ஞையாகும். அதனை நடத்திவைக்கவேண்டிய பெரும் பொறுப்பு சுவாமிஜிக்கு இருந்தது.

இதற்கெல்லாம் துவஜாரோஹணமே 1893-ம் ஆண்டு ஸெப்டம்பர் 11-ந் தேதி அவர் சிகாகோவில் நிகழ்த்திய சிறு பிரசங்கம்.

துவஜம் தட்டுத் தடங்கலின்றி கொடிமரத்தில் ஏறிவிட்டது. அமெரிக்க குடிமக்களின் மனத்தில் ஏறிவிட்டது. வளமான மண்ணில் போட்ட விதைபோல அமெரிக்க மக்களின் உள்ளத்தில் சுவாமிஜியின் வார்த்தைகள் பதிந்தன.

ரோமெய்ன் ரோலண்ட் எழுதியுள்ள சுவாமிஜியின் சரித் திரத்தில் காண்பதுபோல, சுவாமிஜி அமெரிக்கா வருமுன்பே

Koviloor Digital Library

எமெர்ஸன், தோரோ, வால்ட் விட்மன் முதலிய இலக்கிய ஞானிகள் உன்னத உபநிஷதக் கருத்துக்களைத் தங்களின் எழுத்தில் அள்ளித் தெளித்திருந்தனர். இதனால் உலகாயத போகங்களிலும், கலைகளிலும், விஞ்ஞானத்திலும், பொருளாதாரத்திலும் விரைவாக முன்னேறி வந்த அமெரிக்க வாழ்க்கையில் ஏதோ ஒரு கனவின் நினைவாக, நிலவின் பிறையாக பாரதத்தின் ஆத்மீகப் பெருமை ஒளியாடிக் கொண்டுதான் இருந்தது. சுவாமிஜி அமெரிக்கா வருவதற்கு முன் ஆண்டுதான் காலகதி அடைந்திருந்த கவி வால்ட் விட்மன் சநாதன பாரத தர்மத்தின் சின்னமொன்று அமெரிக்காவுக்கு வரப்போவதையே தமது அகக் கண்ணால்கண்டு அதற்கு, அல்லது அவருக்கு, வரவேற்பு பாடியிருந்தார். 'பெருஞ்சாலைப் பேரணி' என்ற கவிதையில் 'பிரம்ம குலம் இங்கு என் நகருக்கு வருகிறது' என்று பாடிய அவர் 'அன்னையே, நீயும் நின்னை நிகர்த்த நின் குழந்தைகளும்' என்ற பாடலில் 'மத போதகம் தரும் மாண்பு மிகு ஆசியா இன்று நின்னேடு கடல் கடந்து வந்துள்ளது' என்று சுவாமிஜிக்கென்றே பாடினாற்போல மொழிந்திருக்கிறார்! ஜனநாயகத்தின் திருச் சந்நிதானமாக அமெரிக்காவைக் குறிப்பிட்டு அதற்கு வேதாந்தத்தை வரவேற்றிருக்கிறார்.

ஆம், அதிலும் ஒரு பொருத்தம் இருக்கத்தானே செய்கிறது? ஜனநாயகம் என்பது அரசியல் அடிப்படையில் எல்லாரையும் சமமாகக் காண்பது; எல்லாருக்கும் சமவாய்ப்பு அளிப்பது. வேதாந்தம் என்பது அன்மிக அடிப்படையில் எல்லாரையும் சமமாக — சமம் என்றே பெயர்கொண்ட பிரம்மமாகக் — காண்பதாகும். ஞானம் பெறுவதில் எந்த ஒரு வகுப்பினரும் விசேஷச் சலுகை பெற்றிருக்கக் கூடாது என்று கருதிய சுவாமிஜி சம வாய்ப்புக்களை எடுத்தியம்பும் ஜனநாயக நாட்டில் பிரசாரம் தொடங்கியதில் ஒரு பொருத்தம் இருக்கத்தானே செய்கிறது?

எங்கோ தூர தூரத்திலிருந்து வரும் ரகசியக் குரலாக, அமெரிக்கர்களில் பெரும்பாலோரின் காதுகளிலேயே எட்டாத ரகசியக் குரலாக இருந்த வேதாந்தத்தை, வேதாந்தத்தின் உறைவிடமாக விளங்கிய பரமஹம்ஸ தேவரின் காலடியில் பயிரான வேதாந்த வேந்தர் விவேகானந்தர் எடுத்துச் சொன்னவுடனேயே அமெரிக்காவில் அதற்கொரு விசேஷ ஆகர்ஷணம் ஏற்பட்டு விட்டது.

சுவாமிஜி தமது சிற்றுரையை முடித்தவுடன் அவரின் சத்திய உணர்வினால் அந்த உரையின் பொருளில் உறைந்திருந்த ஏழாயிரம் மக்களின் பதினாலாயிரம் கரங்களும் மகிழ்ச்சி கோஷம்

Koviloor Digital Library

செய்தன. சுவாமிஜியோ உணர்ச்சி எழுச்சியில் தமது சக்தி முழுவதும் உறிஞ்சப் பெற்ருற்போல அயர்ந்து அமர்ந்தார்.

இதன் பின் செப்டம்பர் 19-ந் தேதியன்று 'ஹிந்துமதம்' என்ற தமது புகழ்பெற்ற சொற்பொழிவை நிகழ்த்துவதற்குள் இடைக்காலமான எட்டு நாட்களில் ஒரே ஒரு சின்னஞ் சிறு பிரசங்கம்தான் புரிந்தார். இந்தப் பிரசங்கத்தில் ஹிந்துக்கள், கிறிஸ்துவர், முஸ்லீம் முதலிய ஒவ்வொரு மதத்தினருமே கிணற்றுத் தவளையாகத்தானிருக்கிருர்கள் — பிற தத்துவங்களை அறியாமல் தத்தம் மதமே பெரிது என்று சொல்லிக்கொண்டிருக்கின்றனர் என்று கூறி, இப்படிப்பட்ட எல்லாரையும் சர்வமத மகாசபை ஒன்று சேர்த்து வைப்பதற்காகப் பாராட்டினுர்.

செப்டம்பர் 19-ந் தேதியன்று சுவாமிஜி நிகழ்த்திய 'ஹிந்து மதம்' என்ற பிரசங்கம் ஹிந்து மதத்தின் சகல அம்சங்களையும் சாரமாகப் பிழிந்து தந்த அற்புத உரையாகும். பூரணமான ஹிந்து மதத்தின் ஒரே பிரதிநிதியாக வந்திருந்த சுவாமிஜியை அன்றி ஹிந்து தர்மத்தின் பூரணத்துவத்தை இவ்வளவு சிறப்பாக, சுருக்கமாக யார் எடுத்துக் கூறமுடியும்?

விதியைப் பற்றியும், வழிபாட்டைப் பற்றியும், வழிபாட்டு முறையாவற்றையும் இசைத்துத்தரும் வேதாந்தத்தைப் பற்றியும், ஆத்மாவைப் பற்றியும் சுவாமிஜி பேசினுர். ஆத்மா நித்திய சுத்தமானது, எப்போதும் விடுதலை பெற்றது என்ற அமிருத தத்துவத்தை இந்த உரையில் அமெரிக்கர்களுக்கு அளித்தார். ஆத்மாவுக்குப் படைப்புமில்லை, அழிவுமில்லை, சாவு என்பது ஒரு உடலிலிருந்து இன்ஞென்றுக்கு மாறிக் கர்மப் பயனை அநுபவிப்பதுதான் என்று கூறினுர். ஆத்ம விடுதலை என்ற ஆனந்த லக்ஷியத்தை அடைய வழி அகம்பாவத்தை யொழிப்பது தான்; 'நான்' என்ற எண்ணத்தை அழிப்பது சூனியத்தில் முடிவதல்ல; உலகமெல்லாம் தானுகக் காணும் பூரணத்துவத்தில் நிறைவதாகும் என்று ஓதினுர். அப்படி நான் என்பதை அழித்துத் தானுவது தான் சாவைச் சாகச்செய்யும் அமர நிலையாகும் என்று கூறினுர். ''ஜீவ தத்துவத்துடனேயே நான் ஒன்றிவிடும் அப்போதுதான் சாவு அழியும்; ஆனந்தத்துடனேயே நான் ஒன்றிவிடும் அப்போதுதான் துயரம் அழியும்; ஞானத்துடனேயே நான் ஒன்றிவிடும் அப்போதுதான் தவறுகள் எல்லாம் அழியும் இடையீடற்ற பொருள் வெள்ளத்தில் இடைவிடாது மாறிக்கொண்டிருக்கும் ஒரு குவியல்தான் நான். எனக்கென்று பௌதிகமான தனித்தன்மை யிருப்பதாக எண்ணுவது வெறும் மயக்கு — என்று விஞ்ஞானம் நிருபித்துள்ளது. பௌதிகத்தின் மாற்று அங்கமாகிய எனது ஆத்மாவைப் பற்றிய இதே முடிவு

Koviloor Digital Library

தான் அத்வைதம்,'' என்று கூறி, ஒவ்வொரு ஜீவனும் பரம் பொருள் என்ற மகாவாக்கிய உபதேசத்தை குட கோளார்த்தத்தில் முழங்கினர்.

தானும் பரம்பொருளும் ஒன்றே, அதேபோல எல்லா ஜீவர்களும் பரம்பொருளே என்று உணர்ந்த ஒருவன் எப்படி எல்லா ஜீவர்களையும் தானுகக் கருதுவான் என்பதையும் சுவாமிஜி எடுத்துக் கூறினர். தான் பிரம்மம் என்ற உணர்வின் ஆனந்தம், அப்போது பிறரைத் தானுக எண்ணிச் சேவைபுரியும் செயலின் ஆனந்தமாவதைக் குறிப்பால் காட்டி, ஆனபடியால் அத்வைதம் எப்படி உலகப் பணிக்கு அறைகூவுகிறது என்பதைச் சுட்டி காட்டிவிட்டார். உலகத்தைத் துறந்தவனின் மதமல்ல அது, உலகத்தவருடன் எல்லாம் உறவு பூண்டு உய்விக்கச் செய்யும் சாதனம் அது என்பதல்லவா அத்வைதத்தின் பெருமை?

விஷய ஆசைகளை நீத்து சுத்தமான உள்ளத்துடன் தியானம் புரிபவன் எவனுயினும் அவன் அத்வைதத்தை அநுபவிக்கலாம் — அது எந்தத் தனியொரு நாட்டினருக்கும், ஜாதியினருக்கும், மதத்தினருக்கும் மட்டும் உரியதல்ல என்ற பேருண்மையை அறிவிக்கு முகமாக அமெரிக்கர்களை, ''அமர ஆனந்தத்தின் வாரிசுகளே!'' என்று விளித்து விவேகானந்த சுவாமி கூறுவார்.

''கேளுங்கள், ஹிந்து மதத்தினர் உங்களை 'பாவி' என்று சொல்ல மறுக்கிருர்கள். நீங்கள் ஆண்டவனின் குழந்தைகள், சாசுவத சுகத்தின் பங்குதாரர்கள், புனிதம் நிறைந்த பூரணப் பொருள்கள். தாரணியிலுள்ள தெய்விகங்களாகிய உங்களையா 'பாபி' என்பது? மனிதனைப் பாபி என்பதுதான் பாபம். அது மானுட இயல்பின்மேல் நிரந்தரமாகச் சூட்டிய அபவாத மாகும். சிங்கங்காள், எழுந்து வாருங்கள், நீங்களெல்லாம் ஆட்டு மந்தை என்ற மயக்கை உதறிச் சிங்கங்களாகுங்கள். அழிவற்ற ஆத்மா நீங்கள்; சுதந்திரமான, சுகமான, சாசுவதமான உயிர் நீங்கள். நீங்கள் வெறும் ஜடவஸ்துவல்ல, நீங்கள் வெறும் தேகமல்ல, ஜடப்பொருள் உங்களின் பணியாள்; நீங்கள் அதன் பணியாள் அல்ல...... இப்படித்தான் வேதங்கள் கோஷிக்கின்றன. அவை இரக்கமற்ற கொடுமையான விதிகளைத் தொகுத்துத் தரவில்லை. காரியம் — காரணம் என்று முடிவில்லாமல் பிணைத்த ஒரு சிறைச்சாலையைப்பற்றி அவை பேசவில்லை. 'இந்த விதிகளுக்கெல்லாம் முடிவில் ஒருவனே உள்ளான்; பொருள், சக்தி இவற்றின் ஒவ்வொரு நுண்ணிய துளியிலும் அந்த' ஒருவனே உள்ளான். அந்த ஒருவனின் ஆக்ஞையாலேயே வாயு வீசுகிறது, தீ தீய்க்கிறது, முகில்கள் மழை பொழிகின்றன, சாவு என்பது உலகில் சுற்றி வருகிறது. அவனுடைய இயல்பு என்ன? தூயோ

Koviloor Digital Library

னும், உருவற்றவனும், சர்வசக்தனும், கருணைமயமானவனுமான அவன் எங்கும் இருக்கிறான். அவனை அறிவதொன்றாலேயே நீங்கள் மீண்டும் மீண்டும் சாவில் சிக்குவதிலிருந்து தப்பித்து அமரத்துவத்தை அடைவீர்கள்''.

'உருவற்ற' பரம்பொருளை — எனவே எந்த மதத்தினரும் ஏற்கக்கூடிய உண்மைப் பொருளை — ச் சொல்வதோடு ஹிந்து மதம் நிற்கவில்லையா! உருவுபடைத்த பல தெய்வங்களைக் கொள்ளும் மதமல்லவா அது? 'இத்தனை சாமிகளாமே! சாமிகளுக்குள் உறவாமே! அவை சண்டை போட்டுக் கொண்டும், சமாதானம் செய்துகொண்டும் வாழ்வதாக அல்லவா இந்த அநாகரிக ஹிந்துக்கள் சொல்கிறார்கள்?' என்றுதான் மேநாட்டினர் — முக்கியமாக இந்தியாவில் மதமாற்றம் செய்துவந்த கிறிஸ்துவ மிஷனரிகள் — கூறிவந்தனர். இதைப்பற்றி பிரஸ்தாபம் இல்லாவிடில் சுவாமிஜியின் 'ஹிந்து மதம்' என்ற உரை எப்படி நிறையும்? எனவே பலதெய்வம் கொள்வதன் உட்பொருளையும் சுவாமிஜி திறம்பட விளக்கலானார். மனோதத்துவத்தின்படி பார்க்கும்போது உருப்படைத்த தெய்வம் மனிதனின் சமயத் தேவைகளில் ஒன்றாகும்' என்றும், தத்துவத்தைப் புரிந்துகொள்ள உதவும் சின்னங்களே பற்பல தெய்வங்கள் என்றும், உணர்வினை இறுக்கி ஒன்றில் பதித்து ஒருமுகப்படுத்த உருவ வழிபாடு உதவி புரிகிறது என்றும், சடங்குகள் யாவும் உள்ளத் தூய்மையை அளிக்கும் சாதனமாகும் என்றும் தெளிவு படுத்தினார் சுவாமிஜி. சின்னம் இல்லாமல் வழிபடுபவர் எம்மதத்திலும் இல்லை என்பதை எல்லா மதத்தினரும் கூடிய அவையில் தைரியமாகக் கூறினார் சுவாமிஜி. அதையும்விடத் துணிச்சலாக, இதர மதத்தினர் இந்தச் சின்னங்களை நம்பியோ, அல்லது அறிவாராய்ச்சியிலோ ஏற்பதோடு நின்றுவிடும்போது, ஹிந்துவோ, இச் சின்னங்களுக்கு ஆதாரமான உண்மைகளைத் தானே அநுபவித்துப் பார்த்து ஒப்புக் கொள்ளுகிறான் என மொழிந்தார். அவ்வாறு சின்னங்களைக் கடந்த நிலையிலும் ஹிந்துவானவன் அவற்றைப் பரிகாசம் புரிவதில்லை; ஏனெனில் அந்த நிலையிலிருந்துதான் அவனும் பிறகு தத்துவத்தின் உயர்விடத்தைப் பெற்றான்; 'வயோதிகன் குழந்தையாயிருப்பது பாவம் என்று சொல்ல மாட்டான் அல்லவா?' என்று ஆணித்தரமாகக் கேட்டார். அதைத் தொடர்ந்து உலகமெல்லாம் இன்று சுடர்வீசும் இந்த ஒப்பற்ற வாசகத்தைக் கூறினார்: ''மனிதன் தவற்றிலிருந்து உண்மைக்குச் செல்கிறான் என்று ஹிந்து கருதுவதில்லை; ஓர் உண்மையிலிருந்து இன்னோர் உண்மைக்குச் செல்கிறான்; கீழ்ப்பட்ட உண்மையிலிருந்து மேம்பட்ட உண்மைக்குச் செல்கிறான் என்பதே ஹிந்துவின் கொள்கை.''

Koviloor Digital Library

ஆம், கர்மம் செய்யும் நிலையில் அதுவே உண்மை; பக்தி செய்யும் நிலையில் அதுவே உண்மை; ஞானம் எய்தும் நிலையில் அதுவே உண்மை; எல்லாம் உண்மை; ஆனால் இறுதியில் எல்லாம் பொய் என்ற எண்ணத்துடன் பொய்யைப் பல படிகளாக்கி உண்மைபோல அநுஷ்டித்தால் சாசுவத உண்மையான இறுதி நிலையை அடையலாம். அப்போது உலகமே பொய் என்ற கருத்துப் போய், உலகத்தின் ஒவ்வோர் அணுவும் பரம சத்திய மான பரம்பொருளே என்ற பாவம் வரும்.

இதுதானே அத்வைத சாஸ்திரம்? 'அவரவர் தம தம தறி வறி வகைவகை' யாகவும் அந்தந்த நிலையில் உண்மையே என்ற தயாளம் அல்லவா அத்வைதத்தின் ஜீவநாடி? 'சகிப்புத் தன்மை' என்பதன் எல்லை இதுவே. வறட்டுக் கருத்துக்களைப் பேசாமல் எல்லாமத அநுஷ்டானங்களையும் ஒப்புக்கொண்டு எல்லா இனத்தவரையும் உயர்த்தும் பெருமை பொருந்தியது ஹிந்து மதம் என்பதை அமெரிக்காவுக்கு அறிவித்துவிட்டார் சுவாமிஜி. 'எங்களுடைய ஜாதி மத எல்லைக்கு அப்பாலும் பூரணத்வம் பெற்றவர்கள் இருக்கிறார்கள்' என்று வேதவியாஸ முனிவரே எடுத்துரைப்பதைப் பெருமையுடன் உலகுக்கு அறிவித்தார் சுவாமிஜி. இறுதியில் எல்லா மதங்களின் லக்ஷியமும் ஒன்றே தான் என்று கூறிய சுவாமிஜி, சகல சமய அநுஷ்டானங்களைச் சேர்ந்தவர்களும் அப்பியசிக்கக்கூடிய உலகமதம் உருவாக வேண் டும் எனக் கூறினார். சகல மதங்களையும் அநுஷ்டித்துப் பலனைப் பெற்ற பரமஹம்ஸர் இறுதி சத்தியமாகக் கருதிய வேதாந்தம் தான் அந்த உலகமதம். ஆனால் இந்த உரையில் அப்படி வேதாந்தம்தான் உலகமதம் என்பதை சுவாமிஜி விளங்க கூற வில்லை. யாரையும் ஒதுக்காத மதம் ஒன்றை அளித்தால், ''எல்லா நாடுகளும் உங்களைப் பின் தொடர்ந்து செல்லும். அசோகனின் சபை பௌத்த மதத்தினர் மட்டுமிருந்த சங்கமே யாகும். அக்பரின் அவை, உலகமத நோக்கத்தைக் கண்டிருப் பினும் வெறும் விவாத அரங்காகவே இருந்தது. ஆண்டவன் எல்லா மதங்களிலும் இருக்கிறான் என்ற உண்மையை நானி லத்தின் நான்கு திக்கிலும் பிரகடனம் செய்யும் பணி அமெரிக் காவுக்கென்றே விடப்பட்டிருக்கிறது. ஹிந்துக்களின் பிரம்மமும், ஜோராஸ்திரியர்களின் அஹுரமஜ்தாவும், பௌத்தர்களின் புத்த ரும், யூதர்களின் யெஹோவாவும், கிறிஸ்துவர்களின் பரமண்ட லத்தில் உறையும் பரம பிதாவுமான அந்த ஒருவன் உங்களது சீரிய எண்ணங்கள் செயலாகச் சக்தி அருள்வானாக'' என்று பிரார்த்தித்தார் சுவாமிஜி.

Koviloor Digital Library

சர்வமத மகாசபையில் கலந்துகொண்டவர்களின் முன்பு ஒரு புது கருத்துலகம் விரிந்தது. சர்வமத மகாசபையே எதிர் பார்த்திராத ஒரு சர்வமதமும் அடங்கிய உலகப் பெருமதத்தைப் பற்றி அல்லவா இந்த இந்திய சாது உள்ளுணர்ச்சியுடன் பேசி விட்டார் ! சமய சரித்திரத்திலேயே ஓர் அற்புத மறு மலர்ச்சியை சுவாமிஜியின் பிரசங்கம் ஏற்படுத்தி விட்டது.

'ஸர்வதர்ம ஸ்வரூபி' — எல்லா சமயங்களும் உருவாகச் சமைந்தவர் என்று பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரைப்பற்றிய சுலோகம் கூறும். அவருடைய ஞான புத்திரர் தந்தையின் சொத்தினை உலகத்திலுள்ள தமது கோடானுகோடி சகோதரர்களுக்கும் வழங்கிவிட்டார்.

மதத்தின் பெயரால் ஏற்பட்ட குறுகிய மனப்பான்மைக்கும், நிந்தனைகளுக்கும் ஓர் ஆசாரத்திலிருந்து இன்னோர் ஆசாரத்துக்கு வலை வீசித் திருப்புவதற்கும், வலையில் விழாதவர்களை வாள்முனையில் வென்று ரத்த வெள்ளம் பாய்ச்சுவதற்கும் முடிவுகட்டுவதற்காக நிகழ்த்திய பேருரை சுவாமிஜியின் இந்தப் பிரசங்கம். எந்த மதத்தையும் சிறிதுகூட தாழ்த்தாமலே, யாரும் தங்கள் மதத்தைக் கைவிட வேண்டிய அவசியமில்லை என்பதை எடுத்தியம்பி, அதே சமயத்தில் உலகப் பொதுச் சமயத்தின் அவசியத்தையும் சுவாமிஜி வற்புறுத்திவிட்டார்.

விவேகானந்தரது ஆத்மாவின் விஸ்தாரம் அவரது அநுபவத்தின் விரிவு, அவரது மனோபாவத்தின் வியத்தகு தயாளம், அமெரிக்க மக்களை ஆட்கொண்டு விட்டது.

சுவாமிஜி லோககுரு பீடத்தில் ஆரோஹணித்து விட்டார் !

அமெரிக்கா அவரை அகில லோக மதத்தைச் சொல்லும் அற்புத ஆசாரியனாக ஏற்றவும் போற்றவும் தொடங்கி விட்டது !

உலகமறியாமலே, சகல உலகங்களையும் தம்மில் கண்டு வாழ்ந்த ஞானமூர்த்தியாகிய பரமஹம்ஸரின் கீர்த்தி இன்று ஓர் உருவம் தரித்து உலகத்தின் சீர்த்தி மேவி விளங்கியது !

பாரதம் ஓர் அநாகரிக நாடு; பாரதமதம் ஓர் அநாகரிக மதம் என்றெண்ணி மிஷனரிகளை அனுப்பிவைத்த கிறிஸ்துவ உலகத்தின் கண்களைத் திறந்துவைத்த பிரசங்கம் சுவாமிஜியுடையது. பாரதத்துக்குக் கற்பிக்கத் தங்களிடம் ஏதுமில்லை; மாறாக அதனிடமிருந்து தாங்கள் கற்க வேண்டியது ஏராளம் என்று அவர்கள் புரிந்து கொள்ளத் தலைப்பட்டார்கள்.

இதுவே அன்றோ சுவாமி விவேகானந்தர் அவதரித்ததின் முக்கிய நோக்கம் ?

பாரதத்தில் இறைவனும், ஞானிகளும் அவதரித்திருப்பது எல்லாம் இங்கு சநாதன தர்மத்தை நிலை நாட்டத்தானே ?

Koviloor Digital Library

சுவாமிஜியோ இங்கு சநாதன தர்மத்தைப் பிற மதங்கள் அடித்துப்போகாமல் நிலை நாட்டியது மட்டுமின்றி, உலக முழுவதிலும் சநாதன தர்மத்தை நிலை நாட்டிவிட்டார். அதற்காக நிகழ்த்திய கால்கோள் விழாவே சுவாமிஜியின் 'ஹிந்து மதம்' என்ற பேருரை.

அது சுவாமிஜி நிகழ்த்திய பேருரைதானா? அவரில் இருந்து கொண்டு பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் பேசவில்லையா? அந்த ராமகிருஷ்ண ஜோதியிலிருந்துகொண்டு முன்னைக்கும் முன்னையில் தொடங்கி யுக யுகமாக வளர்ந்த பாரதத்தின் ஆன்மீக சரித்திரமே அல்லவா தனது சாரிரத்தை வெளியிட்டுவிட்டது?

பதினேழு நாட்களுக்கு காலையிலிருந்து இரவுவரை இடையருது நடைபெற்ற சர்வமத மகாசபையில் சுவாமிஜி பல அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். தத்துவ நுட்ப ஆராய்ச்சி பிரிவிலும் அவர் பல உரைகள் ஆற்றினர்.

இந்தப் பிரசங்கங்களையும் சரி, இனி சுவாமிஜி அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும், இந்தியாவிலும் நிகழ்த்தப் போகும் அற்புதமான சொற்பொழிவுகளையும் சரி இந்நூலில் விரிவாகத்தர இயலவில்லை. தேனருவிபோல ஒவ்வொரு துளியிலும் மாதுரியம் சொட்டும் இந்தச் சொற்பொழிவுகளில் எதனை விடுவது, எதனைச் சேர்ப்பது? எல்லாவற்றையும் சேர்க்க இந்நூலின் முக்கிய நோக்கமும், இதன் அளவும் இடமளிக்கவில்லை. எனினும் சுவாமிஜியைப்பற்றி பூரணமாக அறிய விரும்பும் அன்பர்கள் அவரது உரைகளையும், கடிதங்களையும் படிக்கவேண்டியது அவசியமாகும்.

* * *

'இந்தியாவின் அவசியத் தேவை உணவுதான்; மத உணர்வு அல்ல' என்று ஓர் உரை நிகழ்த்திய சுவாமிஜி தாம் வெறும் வாசா ஞானி மட்டுமல்ல, மக்களுக்காக அனவரதமும் விசாரப்படும் அன்பு மனத்தவர் என்பதை உலகுக்கு நிரூபித்தார். தம்மைப்பற்றி அவர் செய்த இந்த நிருபணம் வேதாந்தத்தின் பெருமைக்கே செய்த நிருபணமாகும். அதாவது வேதாந்தி என்பவன் பாமர மக்களுக்கு எட்டாத சிந்தனை உலகிலேயே சஞ்சரித்துக் கொண்டிருப்பவன் அல்ல என்றும் நடைமுறை உலகின் மேன்மைக்காக அயராது பாடுபடுபவன் என்றும் சுவாமிஜி நிதரிசனமாக்கி விட்டார்.

'மேல்நாடுகளுக்கு ஆன்மீகத்தைத் தந்து, அவைகளிடமிருந்து பொருளுதவி பெற்று அதைக்கொண்டு இந்தியாவில் தர்ம நிலையங்கள் அமைக்கவேண்டும்' என கன்யாகுமரியில்

Koviloor Digital Library

சுவாமிஜி எண்ணினுர் அல்லவா? அந்த எண்ணத்தை ஒருவாறு வார்த்தைகளில் வடித்தார் சுவாமிஜி.

''ஹிந்துமத ஆசாரங்களும், வேதாந்த தத்துவமும்'', ''இந்தியாவின் புது மதங்கள்'' ''ஹிந்துமத ஸாரம்'' ''பௌத்தம்: ஹிந்து மதத்தின் நிறைவு'', முதலிய பல உரைகளேயும், இறுதிக் கூட்டத்துக்கு உபதேசமும் அளித்தார் சுவாமிஜி.

இவற்றில் சுவாமிஜி முக்கியமாக வலியுறுத்தியது ஹிந்து மதத்தின் சகிப்புத் தன்மைதான். பிற மதங்களின் சிரிய கருத்துக்களே அது தனதாக்கிக் கொள்வதோடு, ஹிந்து மதம் என்ற பெயரிலேயே மூட நம்பிக்கைகளேயும், புறச் சடங்குகளேயுமே பெரிதாக மதிப்போருக்கும் இடம் தருகிறது என்பதை நிலே நாட்டினுர். இதனுல் மூட நம்பிக்கைகளும், புறச் சடங்குகளும் மட்டும்தான் ஹிந்து மதம் என்றெண்ணுவது முழுத்தவருகும் என்பதை மீண்டும் மீண்டும் அறுதியிட்டு உறுதி கூறினுர். மூட நம்பிக்கையால் அன்றி அநுபவத்தால் உணரவேண்டியதும், புறச் சடங்குகளால் அன்றி அகத்தூய்மையாலும் அப்பியாசத்தாலும் பெறவேண்டியதுமான ஜிவபிரம்ம ஐக்கியத்தைச் சொல்வதுதான் ஹிந்து மதத்தின் இதயம் என்பதை எடுத்தியம்பி, இந்த ஐக்கியம் உலகுக்கெல்லாம் இந்தியா தந்த பொதுச் செல்வம் என்பதை நிர்த்தாரணம் செய்தார். ஜீவபிரம்ம ஐக்கியம் என்பது ஏட்டுச் சுரைக்காய் அல்ல என்றும் விஞ்ஞான பூர்வமான உண்மை என்றும் விளக்கி ஹிந்து தர்மம் எப்படி அறிவுக்குப் பொருந்திய சத்தியச் செல்வம் என்பதைத் தெளிவு படுத்தினுர்.

உலகம் முழுவதற்கும் இறுதி உபதேசத்தை நல்கும் இந்தியாவுக்குக் கிறிஸ்துவ மதம் தேவையில்லே என்பதைச் சற்றும் தயக்கமின்றிக் கூறி, மத மாற்றச் செயல்களே வன்மையாகக் கண்டித்தார் சுவாமி விவேகானந்தர்.

இவ்விஷயமாக சர்வமத மகாசபையில் அடிக்கடி மிகவும் காரசாரமான விவாதங்கள் நடைபெற்றதுண்டு. சுவாமிஜி, மற்றும் இந்திய, இலங்கை பிரதிநிதிகளும், கூறியதைப் பல கிறிஸ்துவ மதத்தலேவர்கள் ஏற்க மறுத்தாலும், அநேகர் அவற்றை ஏற்றுப் பாராட்டவும் செய்தனர். 'கடவுள் உலகைப் படைக்கவில்லே; உலகம் வெறும் தோற்றம்', என்ற சித்தாந்தத்தையும், விக்கிரக ஆராதனேயையும் பல கிறிஸ்துவத் தலேவர்கள் எதிர்த்ததில் ஆச்சரியம் இல்லே. ஆனுல் வேறு பலர் அவற்றை மனமார ஏற்றதுதான் ஆச்சரியம்! எதிர்த்தவர்களும்கூட ஹிந்து மதம் என்பது வெறும் மூட நம்பிக்கைகள் மலிந்த சடங்குப் புதர் என்ற கருத்தை மாற்றிக்கொண்டு, ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு தத்துவ

Koviloor Digital Library

சாஸ்திரம் அது என்பதைப் புரிந்து கொண்டனர். அந்தத் தத்துவத்தை அவர்கள் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் ஹிந்து மதத்தை லேசில் புறக்கணித்துவிட முடியாது என்று தெரிந்து கொண்டனர். பிடிவாத மனப்பான்மை கொண்ட மத குருமார் களிடம் இத்தகைய ஓர் எண்ணத்தை ஏற்படுத்தியதே அற்புத சாதனைதான் !

மதத்தலைவர்கள் விஷயம் எப்படி ஆனாலும் அமெரிக்க மக்கள் சுவாமிஜியின் உபதேசங்களால் ஓர் ஆன்மீக மறுமலர்ச்சி பெறத் தான் செய்தார்கள். முக்கியமாக, மக்களை எல்லாம் பாபிகள் என்று கூறும் மதத்தில் பிறந்த அவர்களுக்குத் தாங்கள் பாபிகள் அல்ல, தெய்விகம் நிறைந்த நித்திய சுத்தமான ஜீவர்கள் என்று சுவாமிஜியின் வாயிலாகக் கேட்டறிவது ஓர் ஆனந்தானுபவமாக இருந்தது. வெகு எளிதில் இந்த வங்காள தேசத்து வாலிபர் சர்வமத மகாசபையின் நடுநாயகமாக, கதாநாயகராக மாறி விட்டார் ! தங்களுடைய ஆங்கில மொழியைத் தங்களைவிட நன்றாகப் பேசத் தெரிந்திருப்பதுபோலவே தங்களுடைய இதய மொழியையும் பேசத் தெரிந்திருந்த சுவாமி விவேகானந்தரை ஆசாரியராக ஏற்க முன்வந்து விட்டனர் அமெரிக்கர்கள். தடுமாற்றமின்றி உள்ளத்தில் தோன்றிய உண்மைகளை யெல்லாம் உரையில் மொழிந்த சுவாமிஜியைச் சத்தியமூர்த்தியாகக் கருதி வழிபடலாயினர் அமெரிக்கர்கள். பரமஹம்ஸ தேவர் தமது சீடரின் உலகப்புகழ் பற்றிக் கூறிய வார்த்தைகள் பழுக்கத் தொடங்கிவிட்டன. நரேன் உலகத்தின் அடிவாரம்வரை ஆட்டி வைத்து விடுவான் என்றல்லவா அவர் கூறியிருந்தார் !

சுவாமி விவேகானந்தர் தான் சர்வமத மகாசபையின் ஜீவ ஸ்வரமாகி விட்டார் என்பதைச் சபை கூட்டியவர்களும் உணர்ந்து விட்டனர். தொடர்ந்து பதினேழு நாட்கள் நடைபெற்ற அந்தச் சமய விவாதத்தில் மக்கள் அலுப்புக் கொள்ளாமலிருப்பதற்காக, 'விவேகானந்தர் பேசுவார்' என்று அறிவித்துக் கூட்டம் கூட்டி, அவரைக் கடைசியிலேயே பேசச் செய்து கூட்டம் கலையாது காத்தனர் அந்தக் கெட்டிக்காரர்கள்.

செப்டம்பர் 27-ந் தேதி சபையின் இறுதிக் கூட்டத்தில் சுவாமிஜி ஆற்றிய அற்புத உரையிலிருந்து ஒரு பகுதியை மட்டும் இங்கு படித்துப் புனிதம் பெறுவோம்:

''கிறிஸ்துவர்கள் ஹிந்துக்களாகவோ, பௌத்தர்களாகவோ ஆகவேண்டியதில்லை. அதேபோல ஹிந்துவும் பௌத்தராகவோ, கிறிஸ்துவராகவோ மாறவேண்டியதில்லை. ஆனால் ஒவ்வொரு வரும் மற்றவர்களின் ஆத்மீக உணர்வைத் தமதாக்கிக்கொள்ள

Koviloor Digital Library

வேண்டும். தமது தனித்தன்மையை இழக்காமலே, தமது பரிணும விதிமுறைக்கேற்ப வளரவேண்டும்......

''சர்வமத மகாசபை உலகுக்கு எதையாவது உணர்த்தியுள்ளது என்ருல் அது இதுவே: புனிதமும், தூய்மையும், ஈகையும் எந்த ஒரு மத ஸ்தாபனத்துக்கும் தனிச் சொத்து அல்ல; எல்லா சமய சம்பிரதாயமும் அதி உன்னதமான உண்மைகளைத் தோற்றுவித்திருக்கின்றன — என்று இச்சபை நிரூபித்துள்ளது. இந்தப் பிரத்தியக்ஷ உண்மைக்கு முன் யாரேனும் தனது மதம் மட்டும் உயிர்வாழ வேண்டுமென்றும் மற்றவை அழியவேண்டும் என்றும் எண்ணுவானேயாகில் அவனிடம் என் இதய ஆழத்திலிருந்து அநுதாபம் கொள்கிறேன். வெகு விரைவிலேயே ஒவ்வோரு மதத்தின் துவஜத்திலும், 'உதவிபுரியுங்கள்; யுத்தம் செய்யாதீர்கள்' என்றும் 'இணைத்துக் கொள்ளுங்கள்; அழிக்காதீர்கள்' என்றும், 'இணைந்து வாழ்ந்து சாந்தி காண்போம்; பிளந்துபோக மாட்டோம்' என்றும் பொறிக்கப்படும் என்று அவனுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.''

தீனராக அமெரிக்காவுக்கு வந்த ஒருவர் தீரராகி, தீர்க்கதரிசியுமாகிவிட்டார்!

விவேகானந்தர் என்ற வேதாந்தத் திருநாமம் சர்வமத மகாசபையிலும், வெளியே சிகாகோ நகர விதிகளிலும் பற்பல அன்புக் கொச்சையில் பரவலாயிற்று. பத்திரிகைகளின் மூலமாக அந்த நாமம் சிகாகோ நகரில் மட்டுமின்றி அமெரிக்காவின் எல்லாப் பகுதிகளிலும் பரவலாயிற்று.

சாது விவேகானந்தர் என்று அடியில் எழுதப்பெற்ற அவரது உருவப்படங்கள் பல — நர ஆக்ருதி உள்ள படங்கள் பல — சிகாகோ நகரின் மூலை முடுக்குகளிலெல்லாம் ஒட்டப்பட்டன. இந்தியர்கள் மூலை முடுக்குகளிலெல்லாம் விநாயகப் பெருமானைப் பிரதிஷ்டித்து வழிபடுவதுபோலவே அமெரிக்க மகாஜனங்கள் விவேகானந்தரின் சித்திரத்தைக் கண்செல்லும் இடங்களிலெல்லாம் ஒட்டியதோடு, அதன் பக்கலில் செல்லும்போது சிரம் தாழ்த்தி வந்தனை செய்ய ஆரம்பித்தனர். கையைக் கட்டிக் கொண்டு சுவாமிஜி கம்பீரமாக நிற்பதுபோல ஒரு படம் உண்டே! இது சிகாகோ சர்வமத மகாசபையில் முதல் நாள் எடுத்ததுதான். உதயசூரியன்போல முதல் உரையிலேயே சுவாமிஜி மக்களின் உள்ளத்தைக் கவர்ந்ததால், மகாசபை நடக்கும்போதே இந்தப் படமும் பெரிய பெரிய சுவரொட்டிகளாக சிகாகோ எங்கும் திகழ்ந்து சர்வமத மகாசபைக்கு மக்களை அழைத்ததாம்!

Koviloor Digital Library

ஆத்மஞானிக்குத் தேவர்களே காணிக்கை கொண்டு வருகிருர்கள் என்று வேதம் ஓதும்போது, இதில் வியப்பதற்கு என்ன இருக்கிறது ?

குரலினிமை, வாக்கு வன்மை, கருத்தின் அழகு, அந்தக் கருத்து இரத்தத் துடிப்போடு கலந்து வருவதால் பிரகாசிக்கும் சத்திய ஒளி — எல்லாமாகச் சேர்ந்துதான் முன்பின் அறியாத வரும், அமெரிக்கர்கள் இழிவாக எண்ணிவந்த ஹிந்துமதத்தைச் சேர்ந்தவருமான சுவாமிஜிக்கு இவ்வளவு புகழைத் தேடித் தந்தன. இவை எல்லாவற்றுக்கும் மேலான காரணம் குருமஹராஜின் பூரணமான அநுக்கிரகம் !

சுவாமிஜியைப் பற்றி அமெரிக்காவின் புகழ்வாய்ந்த பத்திரிகைகள் எப்படிப் பரவச நடையில் எழுதின என்பதற்குச் சில உதாரணங்கள் பார்ப்போம்:

பிரக்யாதிபெற்ற 'நியூயார்க் ஹெரால்ட்' ''சர்வமத மகாசபையில் முதல் பெருமை வாய்ந்தவர் இவரே என்பதில் ஐயமில்லை. இவரது உரையைக் கேட்டபின் வித்யையில் சிறந்த இவருடைய நாட்டுக்கு நாம் மிஷனரிகள் அனுப்புவது எவ்வளவு முட்டாள்தனம் என்று உணருகிருேம்'' எனக்கூறியது.

'போஸ்டன் ஈவினிங் ட்ரான்ஸ்க்ரிப்ட்', ''இவர் மகா சபையில் ஓர் பேர் அபிமானப் புள்ளியாகி விட்டார்...... இவர் மேடையைக் கடந்து சென்ருலே சபையோர் கரகோஷம் செய்கின்றனர்......சபையோர் கூட்டத்தின் முடிவு வரையில் இருக்க வேண்டுமென்பதற்காக நிர்வாகிகள் இவரை கடைசிவரை பேச விடமாட்டார்கள்......இதரர்கள் மணிக்கணக்காகப் பேசும் போது, விவேகானந்தர் கடைசியில் ஒரு பதினைந்து நிமிஷம் பேசப் போகிருர் என்பதற்காக, புழுக்கத்தில் விசிறிக் கொண்டிருக்கும் நாலாயிரம் மக்களும் ஆனந்தத்துடனும் ஆர்வத்துடனும் காத்துக் கொண்டிருப்பார்கள்.''

விவேகானந்தருடைய சொற்பொழிவின் கவர்ச்சியையும், சக்தியையும், ஆங்கில மொழியை எவ்வளவு சுத்தமாகவும், லாவகமாகவும் அவர் கையாண்டார் என்பதையும் கூறும் 'விஸ்கான்ஸின் ஸ்டேட் ஜர்னல்', ''உயர்குணங்கள் பொருந்திய அந்த ரங்க சுத்தம் வாய்ந்த, அன்புநிறைந்த, இந்தப் *பிராமணரைப் பார்க்கவும், அவர் தமது ஆசிரமத்துக்கென ஏற்பட்ட உடையை அணிந்துகொண்டு, தொலைதூரத்திலுள்ள தமது தேசத்தின் மதத்தைப்பற்றியும், சம்பிரதாயங்கள் பற்றியும் உண்மைக் கதை

* சுவாமிஜி பிராமண வகுப்பைச் சேர்ந்தவர் என்பது இப்பத்திரிகை நிருபரின் அநுமானம்.

Koviloor Digital Library

களைக் கூறுவதைக் கேட்கவும் நம் நாட்டு நகரங்களுக்கு வாய்ப்புக் கிடைக்குமானால் அது வாழ்நாள் முழுவதும் மறையாத ஒரு வாய்ப்பாகும்'' என்கிறது.

சுவாமிஜியை சர்வமத மகாசபையில் பலர் குறுக்குக் கேள்வி கேட்டதையும் அவற்றுக்கெல்லாம் அவர் தக்க விடைகள் கூறிய தையும் 'சிகாகோ டெய்லி இன்டர் ஓஷன்' தெரிவிக்கிறது.

''மகாசபையின் அந்தரங்கத்தையும், அதேபோல அதன் குறைகளையும் இந்த ஹிந்து சாதுவைப்போல யாரும் விளக்க வில்லை. அவர் பிரசங்கம் புரிவதற்கெனவே தெய்வ சாஸனம் பெற்று வந்திருக்கிறார்'' என்று பகர்கிறது 'நியூயார்க் க்ரிடிக்'.

''அவரது பண்பும், பேச்சுத்திறனும், வசிகரணம் வாய்ந்த உருவமும் நமக்கு ஹிந்து நாகரிகத்தைக் குறித்து ஒரு புதிய கருத்தைத் தந்துள்ளன. குறிப்புக்கள் எதுவுமின்றியே அவர் பேசுகிறார், விஷயங்களையும் அவற்றைப் பற்றிய தமது முடிவுகளையும் ஓர் அற்புதக் கலையாக அவர் விளக்குகிறார்......'' என்று இதே ஏடு கூறுகிறது.

'ரூதர் ஃபோர்ட் அமெரிக்கன்', 'பிரெஸ் ஆவ் அமெரிக்கா', 'இன்டீரியர் சிகாகோ' 'ரிவ்யூ ஆவ் ரிவ்யூஸ்' ஆகிய பத்திரிகை களும் சுவாமிஜியின் பிரசங்கங்களைப் பிரசுரித்ததுடன் அவருக்குப் புகழ்மாலை சூட்டி மகிழ்ந்தன.

'டைம்ஸ்' வெளியிட்ட 'ஹிஸ்டாரியன்ஸ் ஹிஸ்டரி ஆவ் தி வோர்ல்ட்' என்ற நூலின் இரண்டாம் பாகத்தில் 547—548 பக்கங்களில் சுவாமிஜியின் பெயரைக் குறிப்பிடாமலே சர்வமத மகாசபைச் சம்பவமொன்று கூறப்படுகிறது. அது வருமாறு:

'1893-ம் ஆண்டு சிகாகோவில் நடைபெற்ற சர்வமத மகா சபையில் பெருந்திரள் ஒன்றின் முன் பேசுகையில் முக்கியத்துவம் பெற்ற ஹிந்து ஒருவர், [கிறிஸ்துவ மதப் பிரசாரகர்களின்] குறுகிய மனப்பான்மையை அழுத்தமாக எடுத்துக் காட்டினார். தமது உரையைச் சிறிதே நிறுத்திவிட்டு அவர், அங்கு கூடியிருப்ப வர்களில் ஹிந்துக்களின் சமய கிரந்தங்களைப் படித்து அம்மதத் தைப்பற்றி நேர்முகமான ஞானமுடையவர்களைக் கை தூக்குமாறு கேட்டுக்கொண்டார். பற்பல நாட்டின் பிரதானமான மத நிபுணர்கள் அடங்கியிருந்த அந்த அவையில் மூன்று நான்கு கரங்களே உயர்ந்தன. சபையைச் சாந்தமாகப் பார்த்தார் அந்த ஹிந்து. தமது உடலை முழு உயரத்துக்கும் விரித்துக் கொண்டார். ஒவ்வொரு வார்த்தையும் ஒரு கண்டனமாகச் சபையோரைத் தாக்குகிற குரலில் இந்த எளிய பதங்களைக் கூறினார். ''இப்படியிருந்தும் (எங்கள் மதம்பற்றி நீங்கள் இவ்

Koviloor Digital Library

வளவு ஞானசூனியமாக இருந்தும்) எங்களை மதிப்பிட்டுத் தீர்ப்புக் கூற உங்களுக்குத் துணிச்சல் இருக்கிறது!'' என்றார்.'

சுவாமிஜி கண்டித்தாலும், அவரது கண்டிப்பிலுள்ள நியாயம் மக்களை அவர்பால் படுத்தியது. அன்பு வழிகிற அவரது இதயத்தில் யாரிடமும் வெறுப்பிருக்க முடியாது என்று அமெரிக்க மக்கள் உணர்ந்து அவரைக் கொண்டாடினர். அவரவர் தத்தம் மதத்தை அநுஷ்டிப்பதை அவர் ஒருபோதும் ஆட்சேபித்ததில்லை. தத்தம் மதமே உண்மையானது என்று அவர்கள் கருதுவதையும், எல்லா மதங்களும் நிறைவுபெறும் வேதாந்தத்தைக் கூறும் ஹிந்து மதத்தை இகழ்ந்து ஹிந்துக்களை மதமாற்றம் செய்ய முயல்வதையுமே அவர் வன்மையாகக் கண்டித்தார்.

பத்திரிகைகளும் நூல்களும் சொன்னதுமட்டுமின்றிப் பிரமுகர்கள் வாயிலாகவும் சர்வமத மகாசபையில் சுவாமிஜி பெற்றிருந்த முக்கியத்துவத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

உதாரணமாக, பொதுக்குழுத் தலைவர் பர்ரோஸ், ''சுவாமி விவேகானந்தர் அவையோரின் மீது ஓர் அற்புதமான ஆகர்ஷணத்தை வீசியிருந்தார்'' என்கிறார்.

அன்னிபெஸண்ட் அம்மையார் நீண்ட நாட்களுக்குப்பின் சர்வமத மகசைபையில் சுவாமிஜி பெற்றிருந்த இடத்தை நினைவு கூர்ந்து பின்கண்டவாறு எழுதினார்:

''உள்ளத்தில் பதியும் தோற்றம்; மஞ்சளிலும் கனகாம்பர வண்ணத்திலும் ஆடை; சிம்மத்தின் முகம்; ஊடுருவுகிற கண்கள், இறுக்கமற்ற உதடுகள்'', வேகமான திடும்பிரவேச நடை; சிகாகோவின் கனத்த சூழலில் இந்தியாவின் சூரியன்போன்ற ஒளி — சர்வமத மகாசபையில் பிரதிநிதிகளுக்காக ஒதுக்கியிருந்த ஓர் அறையில் சுவாமி விவேகானந்தரைக் கண்டதும் எனக்கு ஏற்பட்ட முதல் எண்ணம் இதுவே. சாது என்று அவரைச் சொன்னார்கள். அதற்கு முகாந்தரம் இல்லாமலில்லை. ஆனால் மேடையேறாத போதுகளில் அவர் ஒரு வீர சாதுவாக இருந்தார்...... (பாரதத்தின்) தூதராக அவர் வந்திருந்தார். பாரதத்தின் பெயரில் பேசினார். எந்த அரசருக்குத் தாம் தூதுவராக வந்திருந்தாரோ அந்த அரசராகிய பாரத நாட்டின் மாண்பினை அவர் மறக்கவில்லை. பிறரிடம் சற்றும் விட்டுக் கொடுக்காதவராக இருந்தார் அவர்.

''மேடையில் இவரது கௌரவமும், தன் மதிப்பு உணர்ச்சியும் வெளிப்பட்டன. ஆனால் அவையெல்லாம் அவர் கொண்டு வந்திருந்த ஆத்மிகச் செய்தியின் உத்தம அழகுக்கு......அடங்கிப் போயின. பரவசமாகி, அந்தப் பெருங்கூட்டம் அவரது வார்த்தை

Koviloor Digital Library

களில் அப்படியே சாய்ந்துவிட்டது. ஓர் அக்ஷரம்கூட விட்டுப் போகக்கூடாது, தொனியின் ஓர் அசைவைக்கூடத் தவற விடக் கூடாது என்று அவரது வார்த்தைகளில் சாய்ந்துவிட்டது. மன்றத்தைவிட்டு வெளியே வந்த ஒருவர் 'இவரா பொய் சமயத்தைச் சேர்ந்தவர்! இவருடைய மக்களுக்குத்தான் நாம் மதப்பிரசாரர்களை அனுப்புகிறோம்! இதைவிட அவர்கள் நமக்கு மிஷனரிகள் அனுப்பினால் பொருத்தமாக இருக்கும்' என்றார்''.

சர்வமத மகாசபையில் தத்துவ நுட்ப ஆராய்ச்சிப் பகுதித் தலைவரான மெர்லின்-மேரி ஸ்நெல், ''ஹிந்துமதத்தைப்போல் சர்வமத மகாசபையில் இடம்பெற்ற வேறெந்த மதமும் அமெரிக்க மக்களிடையே ஆழ்ந்த ஆதரவைப் பதிக்கவில்லை. ...இதுவரையில் ஹிந்துமதத்தை நன்கு பிரதிபலிக்கிற மிகவும் முக்கியமான பிரதிநிதிகளில் சுவாமி விவேகானந்தரே முதல்வராவார். அவரே மகாசபையில் மிகவும் அதிக ஆதரவும் செல்வாக்கும் பெற்றிருந்தார் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். ...கிறிஸ்துவ மத ஆசாரங்களில் ஊறிய தீவிரவாதிகள்கூட 'உண்மையாகவே மனிதரில் இவர் ஒரு மன்னர்' என்று அவரைப்பற்றிக் கூறுகிறார்கள்.''

மக்களும், மதத்தலைவர்களில் பெரும்பாலானவர்களும் சுவாமி விவேகானந்தர் கூறியவற்றிலிருந்த உண்மையை எடுத்துக் கொண்டாலும் சில மிஷனரிகள் அவரிடம் வெகுவாக ஆத்திரம் கொண்டனர். இதைவிட வெட்கக்கேடாக சர்வமத மகாசபைக்கு இந்தியாவிலிருந்து வந்திருந்த 'புண்ணியாத்மா' வாகிய பிரதாப சந்திர மஜூம்தார் என்ற பிரம்ம சமாஜத்தலைவரும் அசூயை வாய்ப்பட்டு அவரைப்பற்றி மகாசபை நிர்வாகிகளிடம் அவதூறு கூறினர். ஆனால் இந்தத் தந்திரம் செல்லுபடியாகவில்லை. அன்னி பெஸண்ட் அம்மையார் பிற்காலத்தில் சுவாமிஜியைப் பற்றி உயர்வாக எழுதினாலும், அமெரிக்காவுக்கு வந்திருந்த தியஸாபிகல் சொஸைடிக்காரர்கள் அவருடைய பெருமையைக் குறைவு படுத்துவதிலேயே முனைந்திருந்தனர். எல்லாரும் மேரு முகட்டை எதிர்க்கப் புறப்பட்ட சிட்டுக்குருவியின் கதியைத்தான் அடைந்தனர்.

இவ்வாறாக நாடும், ஏடும், பாராட்டினாலும் சுவாமிஜி சர்வ மத மகாசபையில் தாம் பேசியதைப்பற்றி என்ன எளிமையுடனும், பக்தியுடனும் பேசுகிறார், பாருங்கள்!

''அன்புச் சகோதரரே! உலகமெங்கிலுமிருந்து வந்திருந்த சிறந்த பேச்சாளர்களும், சிந்தனையாளர்களும் கூடிய அந்தச் சபையின் முன் நின்று பேச நான் மிகவும் பயந்தேன். ஆனால் பிரபு எனக்குப் பலம் தந்தான். ஒவ்வொரு நாளும் நான்

Koviloor Digital Library

விரமாகச் சபையையும் சபையினரையும் சமாளித்தேன். நான் என் பணியை நன்ருகச் செய்திருப்பேனுயின் ஆண்டவன் எனக்கு ஆற்றல் அளித்தான் என்பதே அதன் அர்த்தம். நான் விசனகர மாகத் தோல்வியடைந்திருப்பேனுயின் — அது நான் முன்பே எதிர் பார்த்திருந்ததுதானே ?......

''ஈசுவரன் என்னைத் தினந்தோறும் எப்படியெல்லாம் காப் பாற்றி வருகிருன் தெரியுமா, சகோதரரே ? இதற்குப் பிரதியாகக் கோடி கோடி யுகங்கள் வாழ்ந்து, கந்தல் உடை உடுத்தி, பிச்சை எடுத்துண்டு அவனுக்குக் கர்மத்தின்மூலம் சேவை செய்ய வேண் டும் என்று சில சமயங்களில் எண்ணுகிறேன்.

''அமெரிக்காவுக்கு வந்த புதிதில், இது மட்டும் வழக்கப் படுத்திக் கொண்டதுபோல் 'ஆண்டவன் விட்ட வழியாகட்டும்' என்றிருக்க முடியாது என்றெண்ணி, என்னை நானே கவனித்துக் கொள்ளவேண்டும் என்று நான் நினைத்ததுண்டு. என்ன பயங்கர மான விஷமம் அது ! எத்தகைய நன்றியின்மை ! இப்போது நான் தெளிவாகக் காண்கிறேன் — ஹிமாலயத்தின் பனிமுடி களிலும், இந்திய சமவெளிகளின் சுடு வெயிலிலும் எவன் எனக்கு வழிகாட்டினுனே அவன் இங்கும் எனக்குத் துணை நிற்கிருன், வழிகாட்டுகிருன்......''

இவ்வாறெல்லாம், சர்வமத மகாசபையில் தாம் கலந்து கொள்ள தூண்டுகோலாயிருந்த பேராசிரியர் ரைட்டுக்கு எழுது கிருர் சுவாமிஜி.

மகாசபையை விட்டு வெளியேவந்த பின்பும் உலகத்தவர் களின் பாராட்டினுல் அவர் அகம்பாவம் பெற்றுவிடவில்லை. வீடு வாசலின்றித் திரிந்த தமக்கு, ஒரு பிடி அன்னமளிக்கக்கூட மறுத்த பல விட்டு வாசற்படிகள் ஏறி இறங்கிச் சலித்த தமக்கு இன்று சிகாகோ நகரத்துப் பெருந் தனிகர்களின் விடுகளெல்லாம் திறந் திருக்கின்றன, என்பதைக் கண்டும் அவர் மகிழ்ச்சியில் ஆழ்ந்து விடவில்லை.

முதல் பிரசங்கத்தாலேயே அமெரிக்கர்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட சுவாமிஜியைத் தமது இல்லங்களுக்கு அழைத் தவர் பலர்.

சுவாமிஜி அப்போது ஜான் பி. லயன் என்பவரது இல் லத்தில் தங்கியதாகத் தெரிகிறது. இரவு தமக்காகப் பட்டுப் பஞ்சு மெத்தை விரித்திருப்பதைக் கண்டவுடன் அவருடைய அடிவயிற்றிலிருந்து துக்கப் பந்துகள் திரண்டு மேலே மேலேவந்து அவரது நெஞ்சை அடைத்தன. கண்கள் மாலை மாலையாகக் நீரைப் பொழிந்தன.

Koviloor Digital Library

நாள் முழுவதும் சுமைதூக்கிவிட்டு, எலும்பெல்லாம் நொந்து நொறுங்கிவிடும் போல வலிக்க, சாலே ஓரத்திலே கட்டாந் தரையிலே கையை மடித்துத் தலேயணேயாக வைத்துப் படுக்கும் லட்சோப லட்சம் பாரதமக்கள் அவர் கண் முன் தோன்றினர்.

வாய்விட்டுக் குமுறிக் குமுறிக் கண்ணீர் பெருக்கித் தாம் படுத்திருந்த மெத்தையின் பட்டுப் பஞ்செல்லாம் ஊறிக் கெட்டிப் படுமாறு கதறினுர் சுவாமிஜி.

அதுதான் ஐயா, அன்பு செய்கிற காரியம்!

அந்த ஏழைகளே எண்ணியவுடன் அவர்களுக்காக மதத்தையும், கல்வியையும், சமூக நலன்களேயும் அளிக்க ஸ்தாபனங்கள் நிறுவவேண்டும் என்ற எண்ணம் உத்தண்டமாக எழுந்தது. அதற்காகவே இனி உழைக்க வேண்டும். இத்தனே நாள் லௌகிக சௌகரியங்கள் ஏதுமின்றிச் சஞ்சாரியாகத் திரிந்தபோது தமக்காகப் பட்ட சிரமங்களே அல்பமாக்கும் விதத்தில் மக்களுக்காக இனி உழைக்க வேண்டும். தாம் சௌகரியமாக வாழ்வதுபோல உலகம் எண்ணும்போதே, உடம்பின் ஒவ்வோர் அணுவாலும் உழைத்து உழைத்து நலியவேண்டும். நலிவையும் பொருட்படுத்தாது மக்கள் சேவை செய்யவேண்டும். அந்தச் சேவையிலேயே இந்த உடம்பைச் சாவுக்குத் தந்துவிட்டு உள்ளத்தை நிரந்தர சத்தியத்தில் கரைக்க வேண்டும். கூடாது கூடாது! இப்போது மோக்ஷம் வேண்டாம்! துயருற்றவர்கள் உலகில் இருக்கும்வரை அவர்களின் துயரைத் துடைப்பதற்குத் தாமும் பிறவி எடுத்துக் கொண்டேதான் இருக்கவேண்டும்.

மயக்கம் வந்து விடுகிற அளவுக்குத் துக்கத்தில் மொத்துண்டார் சுவாமிஜி. தள்ளாடித் தள்ளாடிச் சாளரத்தருகே சென்றுர். நக்ஷத்திரங்கள் மினுக்கும் கார்நிற வானத்தைக் கண்டார்.

'அம்பிகை! சர்வேசுவரியான தாய்!' — வைர அங்கி அணிந்த தேவியாகத் தோன்றியது ஆகாசம்.

தரையில் விழுந்து தண்டனிட்டார் சுவாமிஜி.

''ஜகன் மாதா! என்னுடைய தாயகம் தரித்திரத்தில் திண்டாடும்போது எனக்கு ஏன் இந்தப் பெயரும் புகழும்? ஆயிரமாயிரம் இந்தியர்கள் அரைவயிற்றுக் கஞ்சிக்கு இல்லாமல் சாகும்போது இங்கே சொகுசுப் பொருள்களுக்காக இவர்கள் கோடி கோடியாகச் செலவழிக்கிறுர்களே! இது ஏனம்மா? பாரதமக்களே உயர்த்துவது யார்? அவர்களுக்கு உணவளிக்கப் போவது யார்? வழிகாட்டு, தாயே, எனக்கு வழிகாட்டு! அவர்களுக்கு நான் எப்படி உதவுவது என்று ஒரு மார்க்கத்தைக் காட்டிக் கொடு'' என்று நீராளமாய் உருகினுர் விவேகானந்தர்..

Koviloor Digital Library

சுவாமிஜி தங்கியிருந்த வீட்டுக்காரரின் ஆறு வயசுப் பேத்தி கார்னிலியா பிற்பாடு அந்த நாட்களைப் பற்றியெல்லாம் எழுதி யிருக்கிறுள்.

சர்வமத மகாசபையினர் தங்கள் பிரதிநிதிகளுக்குப் பல வீடுகளில் இடம் அமர்த்தித் தந்தபோது சுவாமி விவேகானந்தரை ஜான் பி. லயன் தம்பதியரின் வீட்டுக்கு அனுப்பி வைத்தனர். இந்தக் 'கருப்பர்' தங்குவதற்கு அந்த வீட்டில் ஏற்கனவே யிருந்த விருந்தாளிகள் ஆட்சேபிப்பார்களோ என்று ஸ்ரீமதி லயன் பயப்பட்டபோது, சுவாமிஜியுடன் அரைமணி பேசியதிலேயே அவரிடம் வசிகரமான லயன் ''மற்ற எல்லா விருந்தாளிகளும் வீட்டைவிட்டு வெளியேறிலுைம் எனக்குப் பொருட்டு இல்லை. இவர் இங்குதான் இருக்க வேண்டும்'' என்ருராம்.

பேரறிஞர்களுடன் தத்துவார்த்தங்களை அலசிய சுவாமி விவேகானந்தர் குழந்தை கார்னிலியாவுக்குக் கதைகள் சொல்லி களிப்படையச் செய்வாராம்; அதிலேயே தாமும் களிப்பாராம். இந்தியாவிலுள்ள மயில்களையும், வானரங்களையும், [சுவாமிஜியின் குழந்தைப் பிராயத் தோழர்களில் இவை உண்டு என்பது நினை விருக்கிறது அல்லவா ?], பச்சைக் கிளிகளையும், ஆலமரங்களையும், எல்லாவிதமான காயும், பழமும், பூவும் கொட்டிக் கிடக்கும் இந்தியச் சந்தைகள் பற்றியும் விஸ்தாரமாகச் சொல்வாராம்.

இந்தியாவில் சமூக—சமய ஸ்தாபனம் நிறுவவேண்டும் என்று சுவாமிஜிக்கு இருந்த ஆர்வம் அமெரிக்காவில் மேலும் தீவிர மாயிற்று.

''என்னுடைய வாழ்க்கையில் இந்த அமெரிக்காவில் தான் பெரிய தொரு சபலத்துக்கு ஆளாகி விட்டேன்'' என்ருர் சுவாமிஜி ஒரு நாள்.

''அப்படிச் சபலிக்கச் செய்தவள் யாரோ ?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் ஸ்ரீமதி லயன்.

''அவள் இல்லை; அது என்று சொல்லுங்கள்; என்னை உங்களுடைய ஸ்தாபனங்கள் தாம் சபலமடையச் செய்து விட் டன'' என்ருர் சுவாமிஜியும் பதில் சிரிப்புடன்.

ஆம், இனி அவர் ஆசையற்றிருப்பது எப்படி சாத்தியம் ? இந்தியாவில் மட நிர்மாணம் செய்து ஸ்தாபன ரீதியில் தர்ம பிரசாரத்துக்கு ஓர் உறுதியை ஏற்படுத்துமுன் அவருக்கு ஏது அமைதி ?

ஸ்தாபனம் தொடங்க நிதி வேண்டும். எனவே இந்தச் சந்நியாசி இனி சம்பாதிக்க வேண்டும். அமெரிக்காவில் நல்ல பேச்சாளர்கள் பெரும் சம்பாத்தியம் பெறுவது அந்தக் காலத்தில்

Koviloor Digital Library

வெகு லகுவாக இருந்தது. பேச்சாளிகளுக்குப் பல இடங்களில் பிரசங்கங்கள் அமைத்துத்தரும் 'லெக்சர் பீரோ'க்கள் பல இருந்தன. கட்டணத்தின் மூலம் பிரசங்கம் கேட்க வருவோரை அனுமதித்து, மொத்தத் தொகையில் பிரசங்கிக்கு இத்தனைப் பங்கு, தங்களுக்கு இத்தனைப் பங்கு என்று அவை பிரித்துக்கொள்ளும். பிரசங்கங்கள் அமைத்துக் கொடுப்பதிலும், கட்டணம் வசூலிப்ப திலும் பெற்றிருந்த அதே 'சாமர்த்தியத்தைப் பிரசங்கிக்குத் தரும் பங்கில் மாயவித்தை செய்வதிலும் பெற்றிருந்தன சிலபீரோக்கள்.

சுவாமிஜி ஒரு 'லெக்சர் பீரோ'வின் அழைப்பை ஏற்ருர். 'ஸ்லேடன் லிக்கம் லெக்சர் பீரோ' என்பது இதன் பெயர் என்று அனுமானிக்கப்படுகிறது.

சுவாமிஜி பல மேடைகள் ஏறி உரைகள் நிகழ்த்தத் தொடங் கினுர். பிரசங்கத்துக்குத் தரும் பணத்தை அவர் மறுக்காமல் வாங்கிக் கொள்வார். இந்தியாவின் கௌரவத்தை எடுத்துச் சொல்லவேண்டிய ஒருவர் ஆண்டியாகப் பிச்சை எடுத்து வாழ் வதால் அமெரிக்கர் பாரதத்தின் பணிவிலுள்ள கௌரவத்தைப் புரிந்து கொள்ளாமல் அதனை யாசக மனப்பான்மையாக எண்ணி விடுவார்களோ என்பதால் சுவாமிஜி பணம், காசு வைத்துக் கொள்ள வேண்டியிருந்தது. அதோடு பாரதத்தில் தாம் நிறுவ எண்ணியிருந்த தர்ம நிறுவனத்தின் மூல தனத்துக்காகவும் அவர் நிதியம் பெற வேண்டியிருந்தது.

லெக்சர் பீரோ எதிலும் தொடர்பின்றியே சுவாமிஜி பிரசங்கம் புரியத் தொடங்கிய புதிதில் பர்ஸ் எதுவும் வைத்திருக்க வில்லையாம். எனவே தமக்கு அன்பர்கள் அளிக்கும் பரிசுத் தொகைகளைக் கைக்குட்டையில் முடிந்து வைத்துக்கொண்டு, பெரு மிதம்படைத்த பாலனைப்போல அவற்றை ஸ்ரீமதி லயனின் கையில் அவிழ்த்துக் கொட்டுவாராம். எந்த நாணயத்துக்கு என்ன மதிப்பு என்பதெல்லாம் தெரியாதிருந்த அவருக்கு அதையெல்லாம் ஸ்ரீமதி லயன் படித்துப் படித்துச் சொல்லிக் கொடுப்பார். 'ஏக ஸந்த க்ராஹி'யாகக் கடினமான வேதாந்த தத்துவங்களை யெல் லாம் புரிந்துகொண்ட விவேகானந்தருக்கு இந்தக் காசுபணம் விஷயம் மட்டும் எளிதில் விளங்காது. 'உங்கள் ஜனங்கள் தமது கண் காணுமல் பதினுயிரம் மைலுக்கு அப்பாலுள்ள என் நாட்டு மக்களுக்காக இவ்வளவு தாராளமாக உதவுகிறுர்களே!' என்று கூறி சுவாமிஜி மகிழ்ச்சியடைவார்.

அமெரிக்கப் பெண்மணிகள் சுவாமிஜியிடம் பெருத்த ஈடு பாடு கொண்டனர். அவரைச் சூழ்ந்துகொண்டு அவர்கள் பாராட்டுவார்கள். சுவாமிஜிக்கு அப்போது பிராயம் முப்பத்

Koviloor Digital Library

தோன்றுதானே? எனவே, 'ஐயோ இந்த நிர்மலமான பிள்ளையை இந்தப் பெண்கள் சலனமடையச் செய்துவிடப் போகின்றனரே!' என்று ஸ்ரீமதி லயனுக்கு விசாரம் ஏற்பட்டது. சுவாமிஜியிடம் தனது பயத்தை அவள் தெரிவித்தாள். சுவாமிஜி அவளது கையைத் தட்டிக்கொடுத்து, ''என் அன்பான அமெரிக்கத் தாயாகிய ஸ்ரீமதி லயன் அம்மாளே! இதெல்லாம் எனக்குப் புதிதல்ல. ஆலமரத்தடியில் படுத்துக்கொண்டு, ஏழைக்குடியானவன் எவனோ தரும் உணவு கவளத்தை நான் உண்ட நாட்கள் மட்டும் என் வாழ்வில் நிகழவில்லை. மஹாராஜாக்களின் அரண்மனையில் நான் விருந்தாளியாக இருந்ததுமுண்டு. அடிமைப் பெண்கள் இராமுழுதும் எனக்கு மயில்பீலி விசிறியால் விசிறிய நாட்களும் உண்டு'' என்றார்.

ஒருவிதமான முன்னேற்பாடும் இன்றி, ஒரு குறிப்புத்தாள் கூட இல்லாமல் சிகாகோவின் இலக்கிய சங்கங்கள் பலவற்றிலும், மாதாகோயில்களிலும் உரைகள் பல ஆற்றினார் சுவாமிஜி. சிகாகோ நகரம் முழுவதும் அறிந்து, வணங்கி, போற்றிய புள்ளியாகி விட்டார். சநாதன தர்மத்தை அவர்களுக்கு அளித்த அதே சமயத்தில் அமெரிக்க வாழ்முறைகள் பற்றியும், விஞ்ஞான உண்மைகள் பற்றியும் நிறையக் கேட்டறிந்தார். கல்வித்துறையில் அமெரிக்கா கண்ட முன்னேற்றத்திலும், கல்வி வளர்ச்சிக்காக அமெரிக்கா வகுத்த திட்டங்களிலும் அவர் தனி ஆர்வம் காட்டினார் என்றும், இந்தியாவின் கோடானுகோடி மக்களுக்கு எழுத்தறிவிப்பதில் இவை எப்படிப் பயனளிக்கும் என்பதில் தீவிரமாகச் சிந்தனை செலுத்தினார் என்றும் தெரிகிறது.

* * *

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரைப் பற்றி சுவாமி விவேகானந்தர் சர்வமத மகாசபையிலும் சரி, மற்ற மேடைகளிலும் சரி விசேஷமாக எதுவும் பேசாதது நமக்குச் சற்று வியப்பாகவே இருக்கிறது. பரமஹம்ஸரே தம்மில் ஆவிர்பாவமாகியிருப்பதாக சுவாமிஜி உணர்ந்து, எனவே அவரைப்பற்றி பேசுவது ஆத்ம ஸ்துதிக்கு ஒப்பாகும் என்றெண்ணி யிருப்பாரா? அல்லது, குருமஹராஜைப்பற்றிப் பேசுவதால் அற்புதங்கள் நிறைந்த அவரது வாழ்க்கையைப் பற்றியும் பேச வேண்டிவரும்; தாம் அற்புதத்தால் அமெரிக்காவைத் தம்புறம் திருப்புவதாக இந்நாட்டு மக்கள் எண்ணக்கூடும், எனவே ஹிந்து சமயத்தை அறிவினால் இவர்களிடம் நிர்த்தாரணம் செய்யவேண்டிய சமயத்தில் குருதேவரின் அற்புத சரிதத்தை அணுகவேண்டாம் என்று நினைத்திருப்பாரோ, என்னவோ?

Koviloor Digital Library

எவ்வாருயினும் அவரது உரையில் வராத உத்தம குரு அவரது உள்ளத்தின் ஆழத்தில் எப்போதும் இருக்கத்தான் செய்தார்.

சிகாகோவில் மிசிகன் ஏரிக்கரையில், நிலா படர்ந்த ஓர் இரவில் சுவாமிஜி அமர்ந்திருக்கும்போது அவரது ஆத்மா பரம் பொருளில் ஒன்றுபடத் தொடங்கியது. தமது விடுதலையில் அவர் கரைந்திருக்கும்போது சடேரென்று தவமுனி ஸ்ரீராமகிருஷ்ணர் அவர் முன் தோன்றினுர். ஆஹா, அவர் இட்ட கட்டளை என்ன? 'உன் விடுதலையைத் தேடாதே! மக்களை உயர்த்து. அப்புறம்தான் உனக்கு மோக்ஷசுகம். உன்னிடமிருந்து முக்தி நிலையைப்பூட்டி அதன் திறவுகோலை நான் வைத்திருக்கிறேன். என்றல்லவா அவர் கூறியிருந்தார்!

சுவாமிஜி மக்களுக்காகத் தம்மைத் தியாகம் செய்து கொள்ளும் உயர் உணர்வுக்குத் தம்மைப் புத்தம் புதுச் சக்தியொன்ருேடு மீண்டும் அர்ப்பணம் செய்துகொண்டார்.

லயன் தம்பதியரின் வீடுமட்டுமின்றி வேறு பல இல்லங்களும் சுவாமிஜியை விருந்தினராகப் பெறும் பேற்றினை அடைந்திருந்தன. இவைகளில் புகழ்பெற்றது ஜார்ஜ் டபிள்யூ. ஹேலின் இல்லமாகும். முன்பே நாம் கண்டுள்ள இல்லம்தான் இது. சுவாமிஜி அமெரிக்காவில் பல இடங்களில் பிரசங்கம் புரிந்தபோதும் 1894-ம் ஆண்டு முழுவதும் ஹேல் இல்லத்தையே தமது ராஜ தானியாக வைத்துக்கொண்டு அவ்வப்போது திரும்பிவிடுவார். ஹேல் குடும்பத்தினரின் உள்ளமார்ந்த அன்பைப்பற்றி சுவாமிஜி பலமுறை குறிப்பிட்டதுண்டு. ஹேல் தம்பதியர் வயதானவர்கள். அவர்களுக்கு இரண்டு பெண்கள்: மேரி ஹேல், ஹேர்ரியட் ஹேல்—என்று. ஹேர்ரியட் மக்கிண்ட்லி, இஸபெல் மக்கிண்ட்லி என்ற இரு மருமாளும் ஹேல் தம்பதியுடன் வசித்தார்கள். இவ்விருவரும் குழந்தைகள் பள்ளி ஒன்று நடத்தி வந்தார்கள். நால்வரும் மணமாகாதவர்கள். 'புஷ்பம் போன்றவர்கள், நல்லவர்கள், தூயவர்கள், புனிதமானவர்கள், சந்தோஷப் பிராணிகள்' என்றெல்லாம் சுவாமிஜி இவர்களைப்பற்றிக் கூறியிருக்கிருர். இரண்டு ஹேர்ரியட்களும் சாந்த சுபாவமுள்ளவர்கள். மேரியும் இஸபெல்லும் சரியான 'வம்பி'கள். ஆனுலும் சுவாமிஜிக்கு இந்த வாயாடிகளிடம்தான் அதிகப் பிரியம்.

'போன ஜன்மத்தில் நாங்கள் உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்திருக்க வேண்டும்' என்று சுவாமிஜி சொல்லுமளவுக்கு அந்த இல்லம் அவருக்கு பாந்தப்பட்டுவிட்டது; பந்தப்பட்டும் விட்டது.

Koviloor Digital Library

அத்தியாயம்—21

புயல் காற்று

அமெரிக்காவில் சுவாமிஜியின் புகழ் பத்திரிகைகள் மூலம் காட்டுத் தீ யெனப் பரவி விட்டது. இப்போது அந்தப் புகழுக் கெல்லாம் உரியவரும் அந்த ஊர்களுக்குச் சென்று பிரசங்கம் புரிந்து தமது புகழைப் பாரதத்தின் புகழாக நிலை நாட்டலானர்.

முதலில் அமெரிக்காவின் கிழக்கத்திய, மத்திய மேற்கத்திய ராஜ்யங்களில் சுவாமிஜியின் பிரயாணமும் பிரசங்கங்களும் நடந் தன. ஐயோவா, டெஸ்மாயின்ஸ், மெம்ஃபிஸ், இண்டியான போலிஸ், மின்னியா போலிஸ், டெட்ராய்ட், ஹார்ட்ஃபோர்ட், பஃபலோ, போஸ்டன், கேம்பிரிட்ஜ், பால்டிமோர், வாஷிங்டன், ப்ருக்லின், நியூயார்க் ஆகிய எல்லா முக்கிய நகரங்களும் சுவாமி ஜியைக் கண்டன.

சுவாமிஜியின் உரைகளை அமெரிக்க மக்கள் எவ்வளவு பெருந் திரளாகக் கேட்டனர் என்பது அவருடைய ஒரு பிரசங்கத்துக்கே 2,500 டாலர்கள் வசூலாயிற்று என்பதிலிருந்து தெரியவரும். இவ்வளவு நல்ல வசூல் இருந்தும் லெக்சர் பீரோக்காரர்கள் சுவாமிஜியை ஏமாற்றத் தொடங்கினர். ஆரம்பத்தில் அவருக்கு ஓர் உரைக்கு 900 டாலர்கள் வழங்கி, மிகுதியைத் தாங்கள் எடுத்துக்கொண்ட லெக்சர் பீரோவினர் சிறுகச் சிறுக அவருக்குரிய தொகையைக் குறைத்துக்கொண்டே வந்து இருநூறு டாலர்களாக் கினர். பணவிஷயத்தில் அக்கறை செலுத்த இயலாத சுவாமி ஜிக்கே இந்த ஏமாற்றுதல் புரியலாயிற்று. பொருள் ஆசை அவருக் கில்லாவிடினும், அந்தப் பொருளைக் கொண்டு தாய்நாட்டுக்கு நன்மைபுரிய அவர் நோக்கம் கொண்டிருந்தார். தமக்குப் பொருள் வேண்டியிருந்தாலும் இல்லாவிடினும் தம்மை ஒரு கருவியாக வைத்து ஏமாற்றி அமெரிக்கச் சங்கம் ஒன்று கொள்ளைலாபம் அடிப்பதை அவரால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. எனவே அவர் சிலகாலத்துக்குப் பின்பு லெக்சர் பீரோவிலிருந்து விலகிக்கொண்டு விட்டார். அதன் பிறகு தமது சொந்த ஹோதாவிலேயே பிரசங்கங்கள் புரியலானர்.

இச்சமயத்தில் அவரைப் பலவிதமாக ஆசைகாட்டி இழுத்த பல பேச்சாளர்கள் உண்டு. அவரையும் தங்களுடன் பேசச் செய்து நன்ருகக் பணம் சேர்க்க அவர்கள் விரும்பினர்கள். இவர்களுடைய மோஹனஸ்திரத்துக்கு சுவாமிஜி மயங்கவில்லை. கிறிஸ்துவ பிரசாரகர்கள் சிலர் சுவாமிஜிக்கு நயமாகவும், பய

Koviloor Digital Library

மாகவும் வலை போடப் பார்த்ததுமுண்டு. அதற்கும் சுவாமிஜி மசியவில்லை. இதனால் அவர்கள் சுவாமிஜியைக் குறித்து வாயில் வராததையெல்லாம் சொல்லியும், எழுதியும் பழித்தார்கள்.

ஆனால் அமெரிக்காவின் பொதுமக்களிடம் மட்டுமின்றி, மதத் தலைவர்களில் பெரும்பான்மையினரிடமும் சுவாமிஜி பெரு மதிப்பைப் பெற்றார். பத்திரிகைகள் அவர் சென்றவிடமெல்லாம் அவரை வானளாவப் புகழ்ந்தன. ஆனால் சுவாமிஜியோ, பொதுவாழ்க்கைப் பிதற்றலும், பத்திரிகைப் புகழ் என்ற பிதற்றலும், பற்றிக் காரமாகவே பேசினார்.

சுவாமிஜி எங்கு சென்றாலும் அங்குள்ள மக்கள் அவரை ஆழ்ந்து அறிய முயன்றது போலவே சுவாமிஜியும் அந்த மக்களை அறிய முயன்றார். சர்வகலாசாலை, மியூஸியம், கலைக்கூடம், இப்படி ஒவ்வோர் ஊரிலும் அமெரிக்காவை விளங்கிவைக்கும் இடங்களுக்கு அவர் சென்று வந்தார். அமெரிக்காவின் இயந்திர சாதனங்கள் மலிந்த வாழ்க்கையை நுணுகிப் பரிசீலிக்கலானார். உடனுக்குடன் இந்தியாவையும் அவர் மனக்கண் முன்பு காண்பார். இவை பரஸ்பரம் எப்படி இசையவேண்டும் என்பதை 'கிழக்கும் மேற்கும்' என்ற அவரது நூலில் காணலாம். அவருடைய கடிதங்களிலிருந்து, அமெரிக்க சமூகத்தில் அவர் முக்கியமாகக் கருதியது பெண்களின் முன்னேற்றம்தான் என்பது தெரிகிறது. ஆத்மீகத்தை அமெரிக்காவுக்குத் தந்து சமூக இயலை அவர்களிடம் இந்தியா கற்கவேண்டும் என்ற கருத்தை சுவாமிஜி தெரிவித்திருக்கிறார்.

சுவாமி விவேகானந்தரின் பிரயாணத்தைப் பற்றிய எல்லா தகவல்களும் நமக்குத் தெரியவில்லை. தெரிந்தாலும் அவற்றையெல்லாம் விவரிக்க இடம்பற்றாது. ஆங்காங்கு எதிர்ப்புக்கள் இருந்தாலும் அவர் எங்கு சென்றாலும் அங்கு சீரும் சிறப்பும் பெற்று ஹிந்து தர்மத்தின் பெருமையை அமெரிக்க மக்களுக்கு உணர்த்தினர் என்பது சரித்திர பூர்வமாக நிர்த்தாரணமான உண்மையாகும்.

* * *

1893-ம் ஆண்டு நவம்பரில் சுவாமிஜி மாடிஸன் அடைந்தார். அங்கு அவர் நிகழ்த்திய உரைபற்றிக் கூறும் 'விஸ்கான்ஸின் ஸ்டேட் ஜர்னல்', ''அவர் பிறமதத்தவர் எனினும் கிறிஸ்துவ சமயமானது அவர்கூறும் பல உபதேசங்களைப் பின்பற்றலாம். அவரது மதம் பிரபஞ்சத்தைப்போல் பரந்து விரிந்தது. எல்லா மதங்களையும் தன்னுள் அடக்குவது. சத்தியம் எங்கு இருந்தாலும் அதனை அங்கீகரிப்பது. குறுகிய மனப்பான்மைக்கும்,

Koviloor Digital Library

மூட நம்பிக்கைக்கும், அர்த்தமற்ற சடங்குக்கும் இந்திய மதத்தில் இடம் கிடையாது'' என்கிறது. இதைவிட அழகாக ஹிந்து தர்மத்தை யார் கூறமுடியும்?

சுவாமி விவேகானந்தா என்றும் கானந்தா என்றும் இவரைக் குறிப்பிடும் 'மின்னியாபோலிஸ் ஸ்டார்' இவரது மின்னியா போலிஸ் பிரசங்கம்பற்றி எழுதுகையில், ''ஹிந்து மதம் முழுவதும் பரவியிருக்கும் தத்துவமும் அதன் பிரதானமான சித்தாந்தமும் இதுவே: ஆத்மாவானது உள்ளூற தெய்விகம் பொருந்தியது, அது பரிபூரணமானது. மனிதனுள் எப்போதுமே இருக்கும் இந்தத் தெய் விகத்தை வெளிப்படுத்துவதே மதம்'' என்று குறிப்பிடுகிறது.

அமெரிக்கர்கள் வேதாந்தத்தை எவ்வளவு தெளிவாகப் புரிந்து கொண்டு விட்டார்கள் என்பது இதிலிருந்து தெரிகிற தல்லவா?

விவேகானந்தரை, 'கானந்த்' என்றே பல பத்திரிகைகள் குறிப்பிட்டன. இதைக் காணும்போது, அபேதானந்தரைப் பற்றித் தாம் பாடிய பாடலில் பாரதியார்

.........தேசுறும் அவ் விவே
கானந்தப் பெருஞ்சோதி......

என்று பதச் சேதம் செய்திருப்பதும் நினைவில் வருகிறது!

அசத்தியத்தைக் கண்டால் சுவாமிஜி எப்படிச் சினந்து எழுந் தார் என்பதற்கு மின்னியாபோலிஸில் அவர் நிகழ்த்திய ஓர் உரை சான்றாகும். தாம் எந்த நாட்டில் பேசினாரோ அந்த நாட்டினரையே கண்டித்து அவர் கூறியதைக் கேளுங்கள்:

''மேல்நாட்டினராகிய நீங்கள் உங்களிடமே கடவுள் இருப்ப தாக எண்ணுகிறீர்கள். அப்படிக் கடவுள் உங்களிடம் இருப்ப ராயின் இவ்வளவு குற்றங்கள் இங்கு இருக்குமா? பத்தில் ஒன்பது பேர் போலிகளாக இருப்பீர்களா?''

சுவாமிஜி தங்களைத் தாக்கி இப்படிக் கேட்டதும் மக்கள் கரகோஷம் செய்ததாக 'ஜர்னல்' கூறுகிறது. சத்தியத்தின் மகத்துவம் அதுவே!

உணவும், நீரும், காற்றும் எப்படி உயிர்வாழத் தேவையாகக் கருதப்படுகின்றனவோ அதைப்போலக் கடவுளை ஒரு தேவையாகக் கருதித் துடிக்கவேண்டும் என்ற மந்திரோபதேசத்தையும் இந்தப் பிரசங்கத்தில் சுவாமிஜி வழங்கினர்.

ஐயோவாவில் டெஸ்மாயின்ஸ் என்ற இடத்தில் சுவாமிஜி மாதாகோயிலொன்றில் பேசுகையில், ''ஒருவர் முழுமையான கிறிஸ்துவராக வேண்டுமென்றால் எல்லா மதங்களையும் தழுவ

Koviloor Digital Library

வேண்டும். ஒரு மதத்தில் இல்லாததை இன்னென்று தருகிறது'' என்று கூறினர்.

டெஸ்மாயின்ஸில் ஆத்ம மின்சாரத்தைப் பாய்ச்சி விட்டார் சுவாமிஜி. அங்கு சுடர்விட்டு ஜ்வலித்த சுவாமிஜி தம் எதிராளி மீது எப்படிச் சிம்மமாகப் பாய்ந்து ஹிம்ஸை செய்யாமலே வென்ருர் என்பதை 'ஐயோவா ஸ்டேட் ரிஜிஸ்தர்' கூறுகிறது. அவரது திறந்த உள்ளத்தையும், சத்திய சம்பத்தையும், அன்புக் குரிய தன்மையையும், நன்றி நிறைந்த பான்மையையும் பற்றிக் கூறும் இந்த ஏடு, ''எல்லா உண்மையான கிறிஸ்துவர்கள் இதயத்திலும் விவேகானந்தர் இடம் பெற்றுவிட்டார், அவரது பணியும் இடம் பெற்றுவிட்டது'' என்கிறது.

பிறகு 1894 ஜனவரி கடைசிவரை சுவாமிஜியின் அமெரிக்க சஞ்சாரம்பற்றி நாம் எதையுமே அறிய முடியவில்லை. எப்படி யாஞலும், பாதிரிமார்கள் ஹிந்து மதத்தைப்பற்றி மிகவும் பழித் துப் பிரசாரம் செய்திருந்த இடங்களில் சுவாமிஜி அதற்கு வெற்றிப் பாவட்டா வீசிக்கொண்டு சென்ருர் என்பது மட்டும் நிச்சயம். சர்வமத மகாசபை நடந்ததிலிருந்து பல மாதாகோயில் தலைவர் கள் பகிரங்கமாக ஆத்மசோதனை செய்துகொண்டதாக 'ஸெயின்ட் லூயி ரிபப்ளிக்' என்ற சஞ்சிகையின் வாயிலாகத் தெரிகிறது. சுவாமிஜி தவருன வழியில் மதமாற்றம் செய்யும் கிறிஸ்துவ பிரசாரகர்களைத்தான் தாக்கினர், கிறிஸ்துவ சமயத்தைத் தாக்க வில்லை, மாருக அதன் பெருமையை கிறிஸ்தவர்களே அறியாத விதத்தில் விளக்கினர் என்பது, இதே சஞ்சிகை மாதாகோயில் களில் மக்களின் கூட்டம் பெருகி வருகிறது என்று கூறுவதிலிருந்து வெளியாகிறது.

'ஸர்வ தர்ம ஸ்வரூபி' — எல்லா மதங்களும் ஓர் உருவான வர்—என்று பரமஹம்ஸரை நாம் போற்றுகிருேம். எந்தத் தனியொரு மதத்தையும் நிலை நாட்ட மட்டுமின்றி, லோகாயதம் வலுத்துவந்த சென்ற நூற்ருண்டில் மத உணர்வு என்ற ஒன் றையே நிலை நாட்ட அவதரித்தவர் பரமஹம்ஸர். அவர் தம்மில் நிரூபித்துக் கொண்ட சத்திய அநுபவங்களை உலகின் சொத் தாக்கினர் விவேகானந்த சுவாமி. ஹிந்து மதத்தை கிறிஸ்துவ மதம் அடித்துச் செல்லாமல் காத்தது இதில் ஓர் அம்சமே. ஹிந்து மதத்தின் சிரோபூஷணமான வேதாந்தம் எல்லா மதங்களுக்கும் மேம்பட்டது, எல்லா மதங்களுக்கும் பொதுவானது என்பதையும் சுவாமிஜி நிலைநாட்டி வந்தார். எல்லா மதங்களுக்காகவும் நிகழ்ந்த அவதாரங்கள் என்ற வகையில் பரமஹம்ஸர், சுவாமிஜி இவர்கள் வேறுயாருக்கும் இல்லாத தனி மகத்துவம் பொருந்தியவர்களாவர்.

Koviloor Digital Library

1894-ம் ஆண்டு ஜனவரி 13-ந் தேதி சுவாமிஜி மெம்ஃபிஸ் அடைந்தார்.

'பிராம்மண மதத்தில் பிறந்து பிறகு ஹிந்து மதத்துக்கு மாறி போதகரானதாக' சுவாமி 'கானந்த'ரைப் பற்றிக் கூறும் மெம்ஃபிஸ் பத்திரிகைகள் அவருடன் நடத்திய பேட்டிகளை விரிவாகப் பிரசுரித்தன.

''கடவுளிடம் பயப்படுவது என்பதே மதத்தின் தொடக்கம்; கடவுளிடம் அன்பு கொள்வதே மதத்தின் முடிவு'' என்ற அமர வாசகத்தை இங்கு நிகழ்த்திய உரையில் அளித்தார் சுவாமிஜி.

''உங்களுடைய மதம் மனிதன் மூலத்தில் பாபி என்று கூறுவதாக மயங்காதிர்கள். ஆதம் தூய்மையிலிருந்து பாபத்துக்கு நழுவினான் என்று அது எப்போது கூறுகிறதோ, அப்போதே அது மனிதன் மூலத்தில் தூய்மையானவன் என்பதை ஒப்புக் கொள்வதாகவும் ஏற்படுகிறது'' என்று கூறி, இதுவரை யாரும் செய்திராத முறையில் கிறிஸ்துவ சமயம் ஹிந்து சமயம் இவற்றின் ஒற்றுமையைப் புதுக் கோணத்தில் விளக்கினார்.

''ஆட்டுக்கூட்ட மொன்றின் மீது பாய்ந்த ஒரு கர்ப்பவதிச் சிம்மம் ஒரு குட்டியை அப்போது ஈன்றது. பிறகு இந்த சிங்கக் குட்டி ஆடுகளுக்கிடையிலேயே வளர்ந்து வந்தது. தன்னை ஆடு என்றே நினைத்து வந்தது. புல்லைத் தின்று வந்தது. 'அம்மே' என்று கத்திற்று. இன்னொரு நாள் வேறொரு கிழச்சிங்கம் இந்த ஆட்டுமந்தைமேல் பாய்ந்தபோது அந்த ஆடுகளுடன் இந்தச் சிங்கமுமே பயந்து ஓடலாயிற்று. அப்போது கிழச்சிங்கம் சிங்கக் குட்டியை ஓர் ஏரிக்கரைக்கு அழைத்துச்சென்று, அதன் பிரதி பிம்பத்தை நீரில் காட்டி 'நீயும் என்னைப்போல ஒரு சிங்கமே' என்று கூறி நிரூபித்தது. இதன்பின்தான் சிங்கக்குட்டி கர்ஜனை புரியவும், பிராணிகளைத் தின்னவும் தொடங்கியது. நாமும் இந்தச் சிங்கக்குட்டி போலத்தான் நம்மையே அறியாது நம்மைச் சுற்றியிருக்கும் மாயையால் நம்மையும் மாயமாக்கிக் கொள்கிறோம். நாம் தெய்விகம் பொருந்தியவர்கள் என்ற உண்மையைக் கிழச்சிங்கம் இளஞ்சிங்கத்துக்கு அறிவித்ததுபோல ஆசாரியர் நமக்கு அறிவிக்கிறார்.''

பிற்காலத்திலும் பலமுறை சுவாமிஜி கூறிய கதை இது.

'பல குருடர்கள் யானையைத் தடவிப் பார்த்து அதனைப் பற்றிய பலவேறு கருத்துக் கொள்வதுபோல, பல மதத்தினரும் சத்தியத்தின் ஒவ்வொரு கோணத்தைத் தெரிந்துகொண்டு தத்தம் கோணமே சரியென வாதிடுகிறார்கள்' என்ற உவமையும் சுவாமிஜிக்கு மிகவும் பிரியமானது என்பது அவர் பல பிரசங்கங்

Koviloor Digital Library

களில் இதனைக் குறிப்பிடுவதிலிருந்து தெரிகிறது. முழு யானை யையும் கண்ட வேதாந்தச் செல்வரான விவேகானந்தர், ஓரிரு அங்கங்களைக் கண்டவரை எல்லாம் ஐக்கியப் படுத்தப் பாடு பட்டார்!

உயிரானது ஓர் உடல் விழுந்தபின் தனது கர்மத்துக்கேற்ப வேறு உடலை அடைகிறது என்ற கொள்கையை இன்னொரு நாள் மெம்ஃபிஸில் விளக்கினார் சுவாமிஜி. பிற்பகல் நாம் காணும் ஏற்றத் தாழ்வுகளுக்கு இந்தக் கொள்கையே விடையளிக்கிற தென்றும், என்றோ ஒரு நாள் — ஆனால் நிச்சயமாக — நம் முடைய வினையின் பயனை நாம் அநுபவித்துத் தானாகவேண்டும் என்ற இந்தக் கொள்கை மக்களை நல்வழிப்படுத்துவதில் மிகவும் சக்திவாய்ந்தது என்பதையும் அமெரிக்கர் உள்ளத்தில் பதியுமாறு விளக்கினார்.

''மெம்ஃபிஸுக்கு வந்துள்ள எந்தப் பேச்சாளரையும், மதப் பிரசாரகரையும்விட கானந்தர் அதிக கவனத்தைக் கவர்ந்திருக் கிறார்'' என்று கூறும் 'அப்பீல்-அவலாஞ்ச்' என்ற பத்திரிகை, ''கானந்தருடைய கீழ்நாட்டு மதத்தின் ஜாஜ்வல்யம் புராதனமான நமது கிறிஸ்துவ மதத்தின் எழிலை அமுக்கிவிட்டது'' என்று குறைப்பட்டுக் கொள்கிறது.

* * *

அமெரிக்காவிலிருந்தாலும் சுவாமிஜியின் உள்ளம் தமது பிறந்த நாட்டைச் சுற்றிக்கொண்டுதான் இருந்தது. நாட்டை மட்டும்தானா? தாம் பிறந்த வீட்டைப்பற்றிக்கூட அவரது எண் ணம் சுழன்றதுண்டு.

''என் அப்பா என் ஜாதக பலனை எங்கோ எழுதி வைத்திருந் தார். ஆனால் அதை அவர் எனக்கு வெளியிட்டதே கிடையாது. அவர் காலமானபின், நான் சந்நியாசியானபின் ஒரு நாள் வீட் டுக்குப் போயிருந்தேன். எதெதையோ கிளறும்போது அந்தக் குறிப்பும் அகப்பட்டது. நான் ஆண்டியாகப் பூமி எல்லாம் சுற்றி அலைவேன் என்று அதில் கண்டிருந்தது'' என்று ஒரு நாள் நாத்தழு தழுக்க மெம்ஃபிஸ் நிருபர்களிடம் கூறினார் சுவாமிஜி. பிறகு சிறிது நேரம் மௌனமானார். ஏதேதோ பழைய நினைவுக ளெல்லாம் அவரிலிருந்து புகைந்து சுருள்விட்டு நீறுபூத்த நெருப் பாகிறது என்பதைக் காட்டுவதேபோல அவர் கையில் பிடித்திருந்த சிகரெட்டிலிருந்து புகை சுருண்டு சுருண்டு மடிந்து கொண்டிருந்தது.

* * *

நிதி வேண்டிப் பிரசங்கங்கள் புரிந்த சுவாமிஜி மெம்ஃபிஸ், போஸ்டன், முதலிய பல இடங்களில் அங்குள்ள ஸ்தாபனங்

Koviloor Digital Library

களுக்கு நிதி ஈட்டித் தருவதற்காகத் தமது சம்மானத்தையும் துறந்து பல பிரசங்கங்கள் புரிந்திருக்கிறார் !

மெம்ஃபிஸிலிருந்து சுவாமிஜி விடைபெறும்போது, ''நான் ஹிமாலயத்திலிருந்து உருகி ஓடுகிற ஒரு துளி. நீங்கள் *ஜியனிலிருந்து உருண்டு ஓடுகின்ற துளிகள். உங்களை நான் இமயமலையிலிருந்துதான் பெருகவேண்டும் என்று கூற முடியாது. ஆனால் எங்கு உதித்தாலும் பல நதிகளாகிய நாம் எல்லா மதத்தினரும் இறுதியில் சத்தியம் என்ற ஒரு கடலில்தான் சங்கமமாகப் போகிறோம்'' என்று உணர்ச்சியுடன் கூறினார்.

1894 ஜனவரி 22-ந் தேதி சுவாமிஜி மெம்ஃபிஸிலிருந்து சிகாகோவுக்குப் புறப்பட்டார்.

ஜனவரி 24-ந் தேதி அவர் தமது அருமைச் சென்னை சிஷ்யர்களுக்கு ஓர் அற்புத மடல் எழுதினார்.

சுவாமிஜி எழுதாமலே அவரைப்பற்றிப் பல சமாசாரங்கள் சென்னைக்கு எட்டிக்கொண்டுதான் இருந்தன. அவருடைய புகழ் மட்டும் எட்டவில்லை. அவரைப் பாதிரிமாரும், இந்தியப் பிரதிநிதிகள் சிலருமே இகழ்ந்ததும் எட்டியிருந்தது. இந்த இகழ்ச்சியைப் பற்றித் துடித்த சென்னை அன்பர்களை ஆசுவாஸப்படுத்தி, தம்மை இகழ்ந்து கூறுபவர் அமெரிக்க ஜன சமுத்திரத்தில் ஓரிரு துளிகளே என்பதை சுவாமிஜி இக்கடிதத்தில் தெளிவு படுத்தினார்.

இந்திய நாடு அதன் குடிசைகளில்தான் இருக்கிறது என்பதைத் தமது சென்னைச் சிடர்களுக்கு நினைவூட்டினார். 'உங்களிலேயே நம்பிக்கை கொள்ளுங்கள், மகத்தான உறுதிப்பாடுகள் தான் மகத்தான செயல்களுக்கு அன்னை. முன்னேறுங்கள்' என்று ஆக்ஞாபித்தார்.

29ந் தேதி ஜுனகாத் திவானுக்கு அவர் எழுதிய கடிதத்தின் உள்ளுருக்கும் தொடக்கத்தைப் பாருங்கள்.

''நீங்கள் என்னுடைய துர்ப்பாக்கிய அன்னையையும், சகோதரர்களையும் காணப் போயிருந்தீர்கள் என்று கேட்க மகிழ்கிறேன். என் இதயத்திலுள்ள ஒரே மிருதுவான பகுதியை நீங்கள் தொட்டு விட்டீர்கள். திவான்ஜி, நான் கல்மனம் படைத்த மிருகமல்ல என்பதை நீங்கள் தெரிந்துகொண்டிருப்பீர்கள். இந்த உலகத்தில் நான் எந்த ஒருவரையேனும் நேசிக்கிறேன் என்றால் அது என் அன்னைதான். என்றாலும் உலகவாழ்வைத் துறக்காவிட்டால் எனது மகாகுரு ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் போதிக்க வந்த மகத்தான உபதேசம் பிரகாசிக்காது என நான்

* ஜியன் என்பது ஜெருஸல மலை ஒன்றின் பெயர்

Koviloor Digital Library

நம்பினேன்; இப்போதும் நம்புகிறேன்...... அதாவது இந்தியா வுடையவும், அகில உலகத்துடையவும் சமய வாழ்வின் எதிர் காலத்தைப்பற்றி நான் காணும் காட்சியும், ரட்சிப்பவர் இன்றி பலகாலமாகக் கீழே கீழே அமுழ்ந்திக்கொண்டிருக்கும் கோடிக் கணக்கான மக்களிடம் நான் கொண்டுள்ள அன்பும் ஒரு புறம் நிற்கின்றன; மற்ருெருபுறம் என் உற்ருர் உறவினரைத் துன்ப முறச் செய்கிருேமே என்ற எண்ணம் நிற்கிறது. இவற்றில் உலக மக்களிடமெல்லாம் கொண்ட அன்பைத்தான் நான் தேர்ந்தெடுக் கிறேன்.''

ஒவ்வொரு தனி மனிதனையும், அதேபோல ஒரு நாட்டையும் பெருமைப் படுத்துவதற்கு மூன்று விஷயங்கள் உள்ளன என்று இக்கடிதத்தில் சுவாமிஜி கூறுகிருர்:

1. நன்மையின் சக்தியில் நம்பிக்கை.
2. பொருமையும், சந்தேகமும் இல்லாதிருத்தல்.
3. நல்லவர்களாக இருக்கவும், நல்லது செய்யவும் முயலும் எல்லாருக்கும் உதவி செய்வது.

* * *

உத்வேகம் ததும்பும் நகரம் டெட்ராய்ட். சுவாமிஜியின் டெட்ராய்ட் விஜயத்துக்கு மேரிலூயி பர்க் தமது நூலில் வெகு முக்கியமான ஓரிடம் அளிக்கிருர். ஏனெனில் இங்குதான் சுவாமி ஜியை பூஷித்தவர்கள் தூஷித்தவர்கள் இருவரும் பெருமளவில் கலந்திருந்தனர். சுவாமிஜியை எதிர்த்து கிறிஸ்துவப் பாதிரி மார்கள் மிகவும் காரசாரமான, விரசமான, அபவாதப் போரைத் தொடங்கியது இங்குதான். சுவாமிஜி 1894ம் ஆண்டு பிப்ரவரி மாதம் டெட்ராய்ட்டில் பிரவேசித்த அன்று வீசிய பனிப் புயல் அவருடைய டெட்ராய்ட் வாழ்க்கைக்கு ஒரு பொருத்தமான முகவுரையாக இருந்தது. ஆனல் அந்தப் பனியில் கரையாத அறிவுக்கனலாகவேதான் அவர் இறுதிவரை திகழ்ந்தார்.

மிசிகனில் கவர்னராயிருந்த காலஞ்சென்ற ஜான் ஜே. பாக்லி என்பவரது மனைவி சுவாமிஜியைத் தமது அதிதியாகப் பெற்ருர். செல்வாக்குள்ள பற்பலருடைய இல்லங்கள் சுவாமிஜியை உப சரித்து மகிழ்ந்தன. ஸ்ரீமதி பாக்லி, நகரப் பிரமுகர்கள் சகல மானவரையும் கிறிஸ்துவ மதப்பிரமுகர்கள் உள்பட — அழைத்து சுவாமிஜிக்கு ஒரு மகத்தான விருந்தளித்தாள்.

மறுநாள் தம்மைப் பேட்டிகண்ட டெட்ராய்ட் ஃப்ரீ ப்ரெஸ் நிருபரிடம் சுவாமிஜி, இதன்பின் பலமுறை வெளியிட்ட அற்புத மான கருத்தொன்றைக் கூறினுர். ''மேற்கும் கிழக்கும் இணைய வேண்டும்; சிம்மத்தின் சக்தியும் ஆட்டுக்குட்டியின் மென்மையும் இணையவேண்டும்'' என்ருர்.

Koviloor Digital Library

சிம்மத்தின் சக்தியும், ஆட்டுக்குட்டியின் மென்மையும் நிரம்பிய சுவாமிஜியிடம் பக்திப் பித்தேறிய டெட்ராய்ட் மக்கள் பலர். அங்கு பள்ளி ஆசிரியையாக இருந்த மிஸ் குக் என்ற ஜெர்மன் மாது சுவாமிஜியுடன் கைகுலுக்கிய பின், ''பெருமையும், புனிதமும் நிறைந்த அந்தக் கையைக் குலுக்கிய எனக்கு என்னுடைய கையைக் கழுவிக் கொள்வதே மூன்று நாட்களுக்குத் தாங்கமுடியாத செயலாக பட்டது'' என்று கூறுகிருள்.

இந்தியாவுக்கு சென்று வந்திருந்த மேற்றிராணியாகிய நின்டே என்பவர் சுவாமிஜியை டெட்ராய்ட் பொதுமேடையில் அறிமுகம் செய்து வைத்தார்.

அதனுல் ஏற்படப்போகும் விளைவுகளை அவர் அப்போது அறிந்திருப்பாரா? சுவாமிஜி சர்வ சகஜமாக இந்தியரை கிறிஸ்துவ மதத்துக்கு மாற்றும் செயலைக் கண்டித்துப் பேசலானுர். வேண்டுமென்றே இந்திய வாழ்வைத் திரித்து அமெரிக்காவில் தப்பபிப்பிராயத்தை உண்டாக்கியுள்ள பாதிரிமார்களைக் கண்டித்தார். பிடிவாதமாகப் பெண்களையெல்லாம் இறந்த கணவனுடன் சேர்த்துக் கொளுத்துவது, குழந்தைகளை முதலையிடம் விட்டெறிவது, கல்லையும் கட்டையையுமே இறைவன் என்று நினைப்பது, புரிஜகந்நாதம் போன்ற க்ஷேத்திரங்களின் ரதத்தில் அறைபட்டுச் செத்தால் மோக்ஷம் கிடைக்குமென்றெண்ணி ஆயிரக் கணக்கான மக்கள் அவ்வாறு தேர்ச் சக்கரத்தடியில் விழுந்து மரிப்பது — இதுதான் இந்தியா என்று அமெரிக்கர் எண்ணுமளவுக்குத் துஷ்பிரசாரம் நடந்திருந்தது. சுவாமிஜி சென்ற இடமெல்லாம் மக்கள் இவற்றைப் பற்றியே கேட்டார்கள். இந்த அநியாயத்தைக் கண்டு சுவாமிஜி வெகுண்டெழுந்தது நியாயம்தானே? உள்ளத்துக்கு ஒரு காலும் கள்ளம் புரியமுடியாத அவர், தம் மனத்தில் தோன்றியதை, மாற்று தேசமொன்றில், தமது உயிருக்கு அதனுல் ஆபத்து ஏற்பட்டாலும் பாதகமில்லை என்ற உறுதியுடன், எடுத்துச் சொன்னுர்.

பிற்பாடு சுவாமிஜி அமெரிக்காவின் பிரசித்திபெற்ற நிரீசுவரவாதி—நிரீசுவரவாதி என்பதைவிட மத எதிர்ப்பு நிபுணர் என்பது பொருத்தம் — இங்கர்ஸாலைச் சந்தித்தபோது அவர் சுவாமிஜியை ஜாக்கிரதையாக இருக்குமாறு எச்சரித்தாராம். ''ஐம்பதாண்டுகளுக்கு முன் நீங்கள் இங்கு வந்திருந்து, இப்போது சொல்வதையெல்லாம் சொல்லி யிருந்தால் உங்களைத் தூக்குக் கயிற்றிலேயே தொங்க விட்டிருப்பார்கள்'' என்ருராம்!

சுவாமி விவேகானந்தரின் டெட்ராய்ட் பிரசங்கம் குறித்தும், அதற்கு நின்டே அக்கிராஸனம் வகித்தது பற்றியும் இரு

Koviloor Digital Library

தரப்பட்ட கருத்துக்களும் டெட்ராய்ட் பத்திரிகைகளைப் பத்தி பத்தியாக அடைத்துக்கொண்டு வெளியாயின. நிண்டே தாம் சுவாமிஜியை அறிமுகம் செய்ய நேர்ந்ததுபற்றி வருத்தம் தெரிவித்து எழுதினுர்.

என்ருலும் நாளுக்கு நாள் சுவாமிஜியின் அன்பர்கள் அதிகமாகிக்கொண்டேதான் போனுர்கள். யுனிடேரியன் சர்ச்சைச் சேர்ந்த ரீட் ஸ்டுவர்ட், ராபி க்ராஸ்மன் என்ற இரண்டு கிறிஸ்துவ மதத்தலைவர்கள் சுவாமிஜியைப் பெரிதும் ஆதரித்து, அவரது பிரசாரத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் வகையில் எழுதினர். சிறப்புக்கள் நிறைந்த ஹிந்து மதத்தினரைக் கிறிஸ்துவராக்குவது சரியல்ல என்ற அளவுக்கு இவர்கள் எழுதியது விசேஷமாகும்.

'நம்முடைய கடவுள் பரமண்டலத்தில் இருக்கிருர்; விவேகானந்தரின் கடவுளோ இந்தப் புவியிலேயே இருக்கிருர்' என்றெழுதினுர் ராபி.

இவ்வாறு எழுதியதால் இவ்விரு மதப்பிரமுகர்களுமே பலத்த எதிர்ப்புக்கு ஆளாயினர்.

அந்த எதிர்ப்பைவிடப் பலமாக ஹிந்து மதத்தின் ஆகர்ஷணமும் அமெரிக்க மக்களிடையே உயர்ந்துகொண்டுதான் இருந்தது. சுவாமிஜியிடம் இவ்வாறு பேரன்பு பூண்டவர்களில், உலகக் கண்காட்சிக் குழுத் தலைவரும் முன்னுள் அமெரிக்க சட்டசபை அங்கத்தினருமான தாமஸ் டபிள்யூ பால்மர் ஒருவர். இவரது இல்லத்திலும் சுவாமிஜி பல நாட்கள் தங்கினுர்.

சுவாமிஜிக்கு விருந்தளிப்பது மட்டுமின்றி, இந்தியாவில் அவர் தொடங்கவிருந்த இயக்கத்துக்காக நிதி வழங்கியவர்களும் பலர். 'அழகில் லக்ஷ்மியாகவும், சீலத்தில் சரஸ்வதியாகவும், திவ்விய மாதாவின் அவதாரங்களாகவும்' விளங்குவதாக அவர் குறிப்பிட்ட அமெரிக்கப் பெண்கள் பலர் அவருக்குப் பேருதவி புரிந்தனர். இதையெல்லாம் கண்டு எதிர்ப்பாளருக்கு வயிற்றெரிச்சல் உண்டாயிற்று. '' 'இவன் எங்கிருந்து ஒரு தொத்து வியாதியாக வந்து சேர்ந்தான்? இப்படிப் பல்லாயிரக் கணக்கான ஆண்களும் பெண்களும் இவன் பின்னுலேயே செல்கிருர்களே. இவன் நம்முடைய மதத்தையே வேரோடு கெல்லி விடுவான் போலிருக்கிறதே' என்று என்னைப்பற்றிப் பலர் கூவுகிருர்கள்'' என்று சுவாமிஜியே கூறியிருக்கிருர்!

மீண்டும் மீண்டும் தமக்குக் கிறிஸ்துவின்பாலுள்ள மதிப்பை எடுத்துச்சொல்லி, ஆனுல் தற்காலக் கிறிஸ்துவர்கள் உண்மையாக கிறிஸ்து வழி செல்பவர்கள் அல்ல என்பதையும் ஒளிக்காமல் கூறினுர் சுவாமிஜி. கிறிஸ்துவ ஆசாரங்களைக் கெல்லுவது தமது

Koviloor Digital Library

அபிப்பிராயம் அல்லவே அல்ல வென்றும், கிறிஸ்துவர்கள் ஹிந்துக் களின் ஆசாரங்களைக் கெல்ல முயல்வதையே தாம் தடுப்பதாகவும் அவர் மொழிந்தார்.

திட்டமிட்டோ, தற்செயலாகவோ, இச்சமயத்தில் டெட்ராய்ட்டில் 'மாணவத் தொண்டர் மதப்பிரசார இயக்கம்' என்று ஒன்று நடைபெற்றது. 'ஹிந்து ஆண்டி'யைப் பழிக்க அது ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது.

சுடச்சுட ஒளிரும் பொன்போல, தாக்குதல்கள் அதிகமாக ஆக சுவாமிஜியும் கனன்று ஜ்வலித்தார். மீண்டும் மீண்டும் டெட்ராய்டுக்கு வந்து, சிங்கத்தை அதன் குகையிலேயே சென்றடைந்து அடக்குவதுபோல, எதிர்ப்புக்கு ஆணித்தரமாக மறுப்புத் தெரிவித்தார். அப்போது டெட்ராய்ட் முழுவதும் சுவாமிஜியின் பெயர்தான் — பெரும்பாலும் புகழ்ச்சியாகவும், சிறுபான்மையோரால் இகழ்ச்சியாகவும் — ஒலித்துக் கொண்டிருந்தது.

''கிறிஸ்துவின் உண்மையான பிரசாரகர்களை இந்தியா வரவேற்கிறது. அவர்கள் நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் இந்தியாவுக்கு வரட்டும். கிறிஸ்துவின் வாழ்க்கையை எங்களுக்கு வழங்குங்கள். எங்கள் சமூகத்தின் ரத்தத்தில் அதனை ஊறச் செய்யுங்கள். ஆனால் இப்போதுள்ள மிஷனரிகள் வேண்டவே வேண்டாம்'' என்று அடித்துச் சொன்னார் சுவாமிஜி. ''இந்தியாவைக் கிறிஸ்துவ நாடாக்க முடியும் என்று நீங்கள் எண்ணினால் அது நிச்சயம் நடவாது'' என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினார்.

'ஹிந்து மதத்தில் மூட நம்பிக்கைகள் உண்டு. ஆனால் மூடநம்பிக்கை மட்டுமே மதம் அல்ல. உங்களுடைய மதத்தில் மூடநம்பிக்கை கிடையாதா? எங்கள் நாட்டில் என்றோ நிலவி வந்த உடன்கட்டை ஏறும் வழக்கத்தைப் பழிக்கிறீர்களே! நாங்கள் அப்படி உடன்கட்டை ஏறியவளை மதித்துப் பூஜித்தவர்கள். ஆனால் நீங்கள் பல கிழவிகளை சூனியக்காரிகள் என்பதாகச் சொல்லி மதத்தின் பெயரால் கோரமான முறையில் எரித்தீர்களே! இதற்கென்ன சொல்கிறீர்கள்?' என்று கேட்டார் சுவாமிஜி.

சத்தியத்தின் ஜ்வாலை அசத்தியத்தைப் பொசுக்கிக்கொண்டே தான் இருந்தது. ஆனாலும் சூரபதுமன் தலைபோல எதிர்ப்பு மீண்டும் மீண்டும் ஓங்கிக்கொண்டே வந்தது.

தைரியமாக எதிர்க்கச் சக்தியற்ற வஞ்சகர்களிடம் சுவாமிஜி சிக்கிக் கொண்டதுண்டு. சுவாமிஜியே விஞ்ஞானானந்தாவிடம் கூறிய ஒரு சம்பவத்தைப் பாருங்கள்.

Koviloor Digital Library

டெட்ராய்ட்டில் இப்படிப்பட்ட வஞ்சகர்கள் சுவாமிஜிக்கு ஒரு விருந்து நடத்தினுர்கள். சுவாமிஜி விருந்தில் வைத்திருந்த காப்பியைப் பருக எடுத்தார். அதை அவர் வாயருகே கொண்டு போகும்போது திடீரென குருமஹராஜின் திரு உருவம் அவர்முன் தோன்றியது. ''அதைக் குடிக்காதே, அதில் விஷம் கலந்திருக்கிறது'' என்ருர் அமுதர்.

சுவாமிஜி காப்பாற்றப்பட்டார்!

குருநாதரின் கருணை அவரைச் சென்றவிடமெல்லாம் விடாது தொடர்ந்ததன் விசேஷம் அது!

தமிழகத்து அன்பர்களுக்கும், ஜுனகாத் திவானுக்கும், ஹிரிபாதமித்ராவுக்கும் கடிதங்கள் எழுதிவிட்டு அதிசயத்திலும் அதிசயமாக ஆறு மாதங்கள் தமது குருபாயிக்களுக்கு எதுவுமே எழுதாதிருந்த சுவாமிஜி 1894-ம் ஆண்டு மார்ச் மாதம் ராம கிருஷ்ணனந்த சுவாமிக்கு எழுதிய முதல் கடிதத்தில், ''ஆசாரியர் என்னுடனேயே இருக்கிருர். என்னை யார் என்ன செய்துவிட முடியும்?'' என்று கேட்கிருர். ''சாவு என்பது நிச்சயமான போது, நல்ல காரியமொன்றுக்காகத் தன்னையே தியாகம் செய்து கொள்வது சிலாக்கியம்தானே?'' என்றும் கேட்கிருர்.

ஓயாத வம்பு தும்புகளைக் கிறிஸ்துவப் பிரசாரகர்கள் கிளப்பிக் கொண்டேதான் இருந்தனர். இவற்றில் சிலவற்றைத் தான் சுவாமிஜி லட்சியம் செய்தார். மற்றவற்றைத் தம் பக்தர்களுக்கே விட்டுவிட்டுத் தாம் ஒதுக்கியிருந்தார்.

சுவாமிஜி திக்கங்காகச் சினந்தெழுந்த சந்தர்ப்பங்கள் பல இருந்தபோதிலும் அவருடைய இதய அந்தரங்கத்தில் அன்பு ஒன்றே நிறைந்திருந்தது என்பதை உணர்ந்த அமெரிக்க மக்கள் அவரிடம் ஈடுபட்டனர்.

''அன்பு என்பது தியாகமே. அதை எடுத்துக்கொள்வதில்லை; கொடுத்துக் கொண்டேதான் இருக்கிறது'' என்று கூறித் தம்மையே அமெரிக்க மக்களுக்கு அளித்துக்கொள்ள அவரிடம் அவர்கள் எப்படி வசியமாகாமல் இருக்க இயலும்?

அவர் தம்மை அமெரிக்கர்களுக்கு அளித்துக் கொண்டார். 'அமெரிக்கர்களோ அவரை உலகத்துக்கே அளித்துவிட்டனர்' என்கிருர் சுவாமி நிகிலானந்தர். ஆம், பாரதத்திலேயே சுவாமிஜியின் பெருமை தெரிவதற்கு அமெரிக்காதானே காரணமாக இருந்தது?

அந்தப் பாரதத்தைப்பற்றி சுவாமிஜி எண்ணுத பொழுதில்லை. அதனுடைய ஆத்மீக மகோந்நதத்தை அமெரிக்கர்களுக்கு உணர்த்தும்போதே சமூகரீதியில் இந்தியா எவ்வளவு இழிநிலை உற்றிருக்

Koviloor Digital Library

கிறது என்பதை எண்ணி வெந்துகொண்டிருந்தார். பாரதத்தின் ஆத்மிக மகோந்நதத்தை அமெரிக்காவுக்கு எடுத்துரைத்தபோதே பொருளாதாரத்தில் பாரதம் எவ்வளவு பின்தங்கி நிற்கிறது என்பதையும் கூறிச் செல்வம்மிக்க அமெரிக்க மக்களிடம் நிதி உதவி வேண்டினுர் சுவாமிஜி.

முன்பே கூறியதுபோல சில அன்பர்கள் அவ்வாறு திரவிய சகாயம் அளிக்கவும் செய்தார்கள். என்ருலும் சுவாமிஜி உத்தேசித்திருந்த பணிக்கு இது போதவில்லை. சுவாமிஜியின் சொந்தச் செலவு ஆகுமளவுக்கு அவருக்குச் சன்மானம் அளிக்க 'லெக்சர் பீரோ' தயாராக இல்லை. 'லெக்சர் பீரோ' எவ்வளவு வசூலாஞலும் அவருக்குச் சராசரியில் எழுபது டாலர்தான் அளித்து வந்தது. ஸ்ரீராமகிருஷ்ணனந்தருக்கு சுவாமிஜி எழுதிய கடிதத்திலிருந்து அமெரிக்காவில் அந்தக்காலத்திலேயே ஒரு ஜதை பாதரட்சை இந்திய கணக்கில் இருபத்து நாலு ரூபாய் விற்ற தாகவும், ஒரு சூட் ஐந்நூறு ரூபாய் விற்றதாகவும் தெரிகிறது. குளிர்கால ஆடைகள் ஏராளமாகத் தேவைப்பட்ட சுவாமிஜியால் 'லெக்சர் பீரோ'வுடன் ஈடுகொடுக்க இயலவில்லை. எனவே மூன்று வருஷத்துக்கு ஒப்பந்தமாகியும் நாலாம் மாதத்திலேயே ஒப்பந்தத்தை முறித்து பீரோவிலிருந்து விலகினுர். தாமே பிரசங்கங்களுக்கு ஏற்பாடு செய்து கொள்ளலானுர்.

அமெரிக்கரை ஆத்மிகத்தில் காப்பதைவிட, பாரதத்தைப் பொருளாதாரத்தில் காப்பதே அப்போது சுவாமிஜிக்குப் பிரதான லக்ஷியமாக இருந்தது என்று பர்க் கருதுகிருர். அமெரிக்காவுக்கு வந்த உடனே சுவாமிஜி எழுதிய கடிதத்தில் ''ரத்தம் கொட்டுகிற இதயத்தோடு உதவி வேண்டி உலகின் ஒரு பாதியைக் கடந்து இந்த அந்நிய நாட்டுக்கு வந்திருக்கிறேன்'' என்று கண்டிருந்தார்.

டெட்ராய்ட் வாஸம் முடிந்து சுமார் ஓராண்டுகளுக்குப் பின் சுவாமிஜி எழுதிய கடிதத்திலிருந்து அவர் எப்படி உடலைத் திருண மாத்திரமாகக் கருதி, சற்றும் ஒய்ச்சல் இன்றிப் பிரசங்கங்கள் புரிந்து வந்தார் என்பது தெரியும். ''பிரசங்கங்கள் செய்வதற்காக நான் பலமுறை பயங்கரமான குளிர்காலத்தில் பனி மூடிய மலைகளை யெல்லாம் குடைந்து சென்றிருக்கிறேன். இரவு ஒரு மணி, இரண்டு மணி என்றும் பாராமல் பிரயாணம் செய்திருக்கிறேன்'' என்கிருர் அவர். ''நூற்றுக்கணக்கான மைல்கள் தள்ளியுள்ள பல இடங்களில் ஒரே நாளில் சுவாமிஜியை அழைப்பார்கள். அவரும் ஒப்புக்கொள்வார். ரயிலோ வேறெந்த வாகனம் கிடைக்கிறதோ அதில் மணிக்கணக்காகப் பிரயாணப் படுவார்'' என்று சுவாமி அபேதானந்தர் கூறியுள்ளார்.

Koviloor Digital Library

இத்தனையும் எதற்காக? சொந்தப் புகழுக்காகவா? சொந்தப் புகழை 'நான்ஸென்ஸ்' என்று கூறி வெறுத்தவரல்லவா சுவாமிஜி? பிறந்த பொன்னுட்டுக்காக, ஞானச்சுடராகத் தம்மைப் பிறப்பித்த குருநாதரின் ஆக்ஞைக்காக, இப்படி உழைத்தார் சுவாமிஜி.

இதனுலேயே 1895லிருந்து அவரது கட்டுமஸ்தான உடலும் ஆரோக்கியம் குன்றத் தொடங்கியது.

சுவாமிஜி இவ்வாறு உடலைப் பொருட்படுத்தாது பிரசாரம் செய்யாதிருந்தால் இன்னும் பலகாலம் இந்த மண்ணுலகில் ஸ்தூலமாக இருந்திருப்பாரோ, என்னவோ? ஆனுல் இப்படி அவர் பிரசாரம் செய்யவில்லை என்ருல் சநாதன தர்மம் எப்படி அமெரிக்காவில் நிலைபெற்றிருக்கும்?

நற்பணிக்காக உடம்பைத் தியாகம் செய்வதுபற்றி ஸ்ரீராமகிருஷ்ணுனந்தருக்கு எழுதிய சுவாமிஜி அதைத் தாமே நிரூபித்து விட்டார்! இந்த வரலாற்றில் பின்னுல் படவேண்டிய அந்த வேதனையை இங்கேயே ஏன் நினைவுறுத்திக் கொள்ளவேண்டும்? சுவாமிஜியின் அமெரிக்கப் பிரயாண நாட்களுக்கே செல்வோம்.

அமெரிக்காவில் சுவாமிஜி தங்கியிருந்தபோது முதல் பதினுறு மாதங்களில் வேதாந்தப் பிரசாரத்தை முக்கியமாகத் தொடங்கவில்லை என்றும், இந்த உயரிய தத்துவத்தை மக்கள் புரிந்து கொள்ள அடிப்படையாக அவர்களது ஆத்ம சிந்தனையைத் தூண்டி மட்டுமே விட்டார் என்றும் பர்க் கூறுகிருர். தமது சாந்நித்தியத்தாலேயே பலரில் இவ்வாறு ஆத்மீக நாட்டத்தைக் கிளறி விட்டார்; 'அவரது இருப்பே அநுக்கிரகமாயிருந்தது' என்றும் அவர் கூறுகிருர்.

இப்படி அவர் முதல் பதினுறு மாதங்களில் கிளறிவிட்ட தீயானது வரப்போகிற தலைமுறைக்கெல்லாம் அணையாதிருப்பதற்காக அடுத்த பதினுறு மாதங்களில் அவர் அந்தத் தீயை வளர்ப்பதற்காக ஆத்மீக, தத்துவார்த்த ஞானத்தை அளித்தார் என்று கூறுகிருர் பர்க்.

* * *

1894-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் அமெரிக்காவின் கிழக்குப் பகுதிகளில் பயணம் தொடங்கினுர் சுவாமி விவேகானந்தர்.

இதற்கு முன்பாக இதே மாதத்தில் சிகாகோவில் நடைபெற்ற ஒரு முக்கியமான நிகழ்ச்சியை இங்கு கூறவேண்டும்.

சுவாமிஜி இத்தனைகாலமாக மத்திய மேற்கு நாடுகளில் பயணம் செய்து வந்தாலும் அவ்வப்போது சிகாகோவுக்கு வந்து

Koviloor Digital Library

போய்க்கொண்டேதான் இருந்தார். சிகாகோதான் அவருக்குத் தலைநகரமாக இருந்தது. ஹேல் தம்பதியரும், அவர்களது இரு பெண்களும், இரு மருமாள்களும்தான் அவரிடம் அன்பைப் பொழிய இருந்தார்களே!

1894-ம் ஆண்டு மார்ச் மாதம் வேறொரு பிரபல புள்ளியும் சிகாகோவுக்கு வந்திருந்தது. சுவாமிஜி மக்களை கவர்கிறார் என்றால் இந்தப் புள்ளியும் மக்களைத் தன் நினைவில் பித்தாக்கிக் கொண்டிருந்தது. ஆனால் சுவாமிஜி எந்த துறையில் மக்களைக் கவர்ந்திருந்தாரோ அதற்கு முற்றிலும் மறுதிசையில் இந்தப் புள்ளியின் ஆகர்ஷணம் இருந்தது. எம்மா கால்வி என்ற புகழ் பெற்ற நாடக நக்ஷத்திரம்தான் அந்தப் புள்ளி. ஏற்கனவே பெரும் புகழ்பெற்றிருந்த எம்மா கால்வி சமீபத்தில் ஐரோப்பாவுக்குச் சென்று அந்தக் கண்டத்திலுள்ள ரசிகர்களையும் பைத்திய மாக அடித்திருந்தாள். அப்படி பழைய உலகிலும், புதிய உலகிலும் பேர் எடுத்திருந்த கால்வி தனது ஒளியின் உச்சியில் சிகாகோவுக்கு வந்து சேர்ந்தாள்.

மேடை வாழ்வு இப்படி ஆனந்தமயமாக இருந்தாலும் அவளது பிரத்யேக வாழ்வில் பல கொந்தளிப்புக்கள் நிறைந்திருந்தது. இதற்கு அவளது இயல்பான நரம்புத் தளர்ச்சியும், பிடிவாதமும் ஒரு காரணம். இரண்டாவது, அவளுடைய தொழிலுள்ளவர்கள் பெரும்பாலும் எத்தகைய வாழ்க்கையை வாழ்வார்களோ — எத்தகைய வாழ்க்கையைத்தான் வாழமுடியுமோ — அத்தகைய வாழ்வை எம்மா கால்வி வாழ்ந்தது. மூன்றாவதாக அவளுடைய ஒரே ஆறுதலாக இருந்த அருமை மகள் சமீபத்தில் மரணமடைந்திருந்தது.

வாழவே முடியாமல் தவித்த கால்வி மேடையில் தான் நடிப்பதைப் போல வாழ்விலும் நடிக்க முடியாமல் உணர்ச்சி வசப்பட்டு விட்டாள். தற்கொலை செய்துகொள்ள வேண்டும் என்பதொன்றே அவளுடைய மனோரதமாயிற்று. அதற்கு எப்போது துணிவு வருமோ என்று காத்திருந்தாள்.

இச்சமயத்தில் அவளுடைய சிநேகிதி ஒருத்தி சுவாமி விவேகானந்தரின் உரைகளைக் கேட்கவும், அவருடன் பரிசயம் கொள்ளவும் நேர்ந்தது. அவள் கால்வியிடம் சுவாமிஜியின் அருள்கோலத்தை வர்ணித்தாள். ''சஞ்சலிக்கிற உன் உள்ளம் அவரால் சாந்தி பெறும். அவரை அடைந்து வழி கேள்'' என்று சொன்னாள். ஆனால் புனிதம் மிக்க ஒருவரைத் தான் பார்ப்பதா என்றோ என்னவோ கால்வி மறுத்துக்கொண்டே யிருந்தாள். சுவாமிஜியைப் பார்க்கத் துணிவு பெறாத கால்விக்குத் தற்கொலை

Koviloor Digital Library

செய்துகொள்ளத் துணிவு ஏற்பட்டது. மிசிகன் ஏரியில் விழுந்து பிராணனை விட முடிவு செய்தாள்.

கோடானுகோடி மக்கள் எந்த உடம்பைக் கண்டு பித்தேறிக் கிடந்தார்களோ அந்த உடம்பை ஏரியில் விடுவதற்காகக் கிளம்பினுள்.

கிளம்பினுளாவது? அவள் எங்கே கிளம்பினுள்? ஏரியில் உடம்பைவிட உத்தேசித்தாள் என்று சொல்வதுதான் சரியாக இருக்கும். உத்தேசம் இவ்வாருனுலும் அவளுடைய கால்கள் அந்த உத்தேசத்தை நிறைவேற்றி வைக்கத் தயாராக இல்லை.

அதை மாயம் என்பதா, மந்திரம் என்பதா, இல்லாவிடில் மாய மந்திரங்களுக்கு மேம்பட்ட அன்பின் சக்தி என்பதா? ஏரிக்குச் சென்று தற்கொலை செய்துகொள்ள வேண்டும் என்று அவள் உத்தேசித்திருக்க அவளுடைய கால்களோ பிடிவாதமாக வேருெரு சாலையில் சென்றுகொண்டிருந்தன, 'ஆகா, சுவாமி விவேகானந்தர் தங்கி இருக்கிற சாலையல்லவா இது?'

ஒரு முறை மட்டுமல்ல; இரண்டாம், மூன்ரும் முறைகள் அவள் தற்கொலை எண்ணத்துடன் ஏரிக்குப் புறப்பட்டபோதும் அவளுடைய கால்கள் சுவாமிஜி தங்கியிருந்த சாலைக்கே அவளை, அவளறியாமல் இட்டுச் சென்றன.

ஒவ்வொரு முறையும் அவள் தற்கொலை நோக்கத்தைக் கைவிட்டு இருப்பிடம் திரும்புவாள்.

நாலாம் முறையும் இப்படி மெஸ்மெரிஸத்தின் கீழ் நடப்பவளைப்போலச் சென்ற கால்வி தனது தோழியின் வீட்டு வாசலில் தான் வந்து நின்று கொண்டிருப்பதை உணர்ந்தாள். உள்ளே சென்ருள். ஆழமான ஒரு நாற்காலியில் நன்ருக அமர்ந்தாள். ஏதோ கனவு காண்பது போலிருந்தது.

அப்போது கனவைக் கலைத்துக்கொண்டு பக்கத்து அறையிலிருந்து தேன் சொட்டுகிற ஒரு திவ்வியமான குரல், ''என் குழந்தே! இங்கே வாம்மா! பயப்படாமல் வா அம்மா'' என்று அழைத்தது.

முறுக்கிவிட்ட இயந்திரம்போல் கால்வி உடனே எழுந்திருந்து அந்த அறைக்குள் சென்ருள்.

பெரிய மேஜையோன்றின் பின்னுல் சுவாமி விவேகானந்தர் அமர்ந்திருந்தார்.

தியான நிலையிலிருந்தபடியே ''வாம்மா'' என்று அவர் அழைத்திருந்தார் என்பது அவருடைய கமலக் கண்கள் தரை மீதாகப் பதிந்ததிலிருந்து தெரிந்தது.

க்ஷணகாலத்தில் தலையைத் தூக்கிக் கால்வியைப் பார்த்தார் விவேகானந்தர்.

Koviloor Digital Library

''என் மகளே, ஏன் இப்படிக் கிடந்து தத்தளிக்கிறாய்? எவ்வளவு வேதனைகளை இழுத்துப் போட்டுக்கொண்டிருக்கிறாய்! அமைதியாயிரு மகளே, அமைதியாயிரு. சாந்தம்தான் தேவை.''

கால்வி யார் என்பதுகூடத் தெரிந்திராத சுவாமிஜி இவ்வாறு கூறியதும் அவளுக்குப் பேராச்சரியமாயிற்று.

பட்டுக்குரலில் சுவாமிஜி பேச்சைத் தொடர்ந்தார். தம்மிடமே பேசிக்கொள்வதுபோல அவளுடைய வாழ்க்கையின் சகல மர்மங்களையும், சிக்கல்களையும், துயரங்களையும் சொல்லிக்கொண்டு போனார்.

''சுவாமி, தங்களுக்கு இதெல்லாம் எப்படித் தெரிந்தது? என்னைப்பற்றித் தங்களிடம் யாரேனும் பேசியதுண்டா? ஆனால் எனக்கு அந்தரங்கமானவர்களிடம்கூட நான் இவ்விஷயங்களையெல்லாம் சொன்னதில்லையே'' என்றாள் கால்வி.

கால்வியை நோக்கிச் சாந்த மென்னகை புரிந்தார் விவேகானந்தர். அசட்டுக் கேள்வி கேட்கும் குழந்தையை நாம் எப்படிப் பார்ப்போமோ அப்படி அவளைப் பார்த்தார்.

''யாரும் உன்னைப்பற்றி என்னிடம் பேசியதில்லை'' என்று கூறிய சுவாமிஜி குரலை அடக்கி, ''அது அவசியமென்று நினைக்கிறாய்? திறந்து கிடக்கும் ஒரு புத்தகத்தைப் படிப்பதுபோல உன்னிலேயே உன் கதையைப் படிக்கிறேன்'' என்று முடித்தார்.

''எல்லாவற்றையும் நீ மறக்கவேண்டும். சந்தோஷத்தையும், குதூகலத்தையும் உண்டாக்கிக்கொள். தேக ஆரோக்கியத்தைக் கவனித்துக்கொள். தனியாயிருக்கும் போதெல்லாம் துயரத்தையே எண்ணி வாழாதே. உன் உணர்ச்சிகளை இடைவிடாமல் ஏதேனும் ஒரு விதத்தில் திருத்தி வெளியிட்டுக் கொண்டேயிரு. உன்னுடைய உள்ளத்தின் ஆரோக்கியத்துக்கு இது அவசியமாகும். உன்னுடைய கலை இதைத்தான் கோருகிறது'' என்று சுவாமிஜி கால்வியிடம் ஒரு தந்தைக்குரிய பிரியத்துடனும், அநுதாபத்துடனும் கூறினார். தந்தையாலும்கூடப் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு அவளது உள்ளுணர்ச்சிகளைப் புரிந்துகொண்டு, உணர்ச்சிகளைச் செம்மைப் படுத்தி வெளியிடக் கலை எப்பேர்ப்பட்ட சாதனம் என்பதையும் குறிப்பாலுணர்த்தி விட்டார்.

சுவாமிஜியின் தோற்றமும், வாசகமும், குரலும், உணர்ச்சியும் கால்வியின் உள்ளத்தில் ஆழப் பதிந்து விட்டன. 'அவர் என்னுடைய மனத்திலிருந்த தகிக்கும் சிக்கல்களையெல்லாம் கொட்டிக் கவிழ்த்து அதனைக் காலி செய்துவிட்டுப் பின்னர் தமது சுத்தமான சாந்த சிந்தனைகளை அதில் நிரப்புவதுபோல இருந்தது'' என்று எம்மா கால்வி எழுதியிருக்கிறாள்.

Koviloor Digital Library

'அவர் ஹிப்நாடிஸம் செய்யவில்லை. மெஸ்மரிஸம் செய்ய வில்லை. அவருடைய சிரிய நடத்தையும், நோக்கத்திலிருந்த தூய்மையும், திவிரமுமே என்னை அவரது வார்த்தைகளில் ஆழப் பதித்துவிட்டன. நான் மீண்டும் உயிர்த்துடிப்புடனும், மகிழ்ச்சி யுடனும் வாழலானேன். போற்றி, அவரது சக்திவாய்ந்த சங் கல்பம்!' என்று தொடர்கிறுள் கால்வி.

அதன் பின்னர் அவள் சுவாமிஜியைப் பலமுறை தரிசித்து, அவரது பரம பக்தைகளில் ஒருத்தியாளுள்.

சுவாமிஜி நாடகக்காரியான எம்மா கால்வியின் துயர் துடைத்ததைப் படிக்கும்போது கௌதம புத்தர் அம்பா பாலிக்கு அருள் புரிந்தது நினைவு வராமற் போகாது.

கலை உலகில் பெரும் கியாதிபெற்ற கால்வியைக் கண்டது போலவே தொழில் உலகில் அழியாப் புகழ்கொண்ட ஜான் டி: ராக்ஃபெல்லரையும் சுவாமிஜி சிகாகோவில் கண்டு உபதேசித்த தாக நம்பப்படுகிறது. பர்க்கின் 'அமெரிக்காவில் சுவாமி விவேகானந்தர்: புது விவரங்கள்' என்ற நூலில் இச்சம்பவம் கூறப்படுகிறது.

ராக்ஃபெல்லரின் நண்பர்களில் சிலர் சுவாமிஜியின் உரை களுக்கு வருவதுண்டு. இவர்கள் ராக்ஃபெல்லரையும் தங்க ளுடன் வருமாறு அழைத்ததுண்டு. ஆனால் அவர் எக்காரணத் தாலோ மறுத்தே வந்தார்.

ஆனாலும் ஒரு நாள் தாமே அறியாத ஒரு வேகத்தில் அவர் சுவாமிஜி தங்கியிருந்த இல்லத்துக்கு வந்தார். கதவைத் திறந்த பட்லரை ஒரு தள்ளு தள்ளிக்கொண்டு, 'நான் அந்த ஹிந்து சாதுவைப் பார்க்கப் போகிறேன்' என்று கூறியபடி திடும் பிரவேசமாக நுழைந்தார். அமெரிக்க நாட்டில், அதுவும் பெரும் தனவந்தரொருவரிடம், சற்றும் எதிர்பார்க்க முடியாத செய்கை இது!

புயல் காற்றுபோல் சுவாமிஜி இருந்த அறைக்குள்ளேயே சென்றுர் ராக்ஃபெல்லர். சுவாமிஜியோ இதனுல் சற்றும் நிலைகுலையாது, தம் கண்ணைக்கூட உயர்த்தாமல் அமர்ந்திருந்தார்.

க்ஷணகாலம் சென்றது. கால்வியிடம் கூறியது போலவே ராக்ஃபெல்லரின் அந்தரங்க வாழ்க்கையையும் சுவாமிஜி எடுத்துக் கூறலானுர்.

''நீங்கள் ஈட்டியுள்ள பெருஞ் செல்வம் உங்களுடையதல்ல, மக்களுக்குப் பாய்ச்சுவதற்காகச் செல்வத்தை எடுத்துச் செல்லும் ஒரு வாய்க்கால்தான் நீங்கள், மக்களுக்கு நீங்கள் நன்மைசெய்ய ஒரு வாய்ப்பாகவே ஆண்டவன் உங்களுக்கு இவ்வளவு செல்வ

Koviloor Digital Library

த்தை அளித்திருக்கிருன்'' என்று சுவாமி விவேகானந்தர் ராக்ஃபெல்லரிடம் கூறினர்.

சுவாமிஜி இப்படித் தமக்கு உபதேசித்தது ராக்ஃபெல்ல ருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. எரிச்சலடைந்த அவர் 'குட்பை' கூடச் சொல்லாமல், வந்தது போலவே வேகமாக வெளியேறினர்.

ஒரு வாரகாலம் சென்றது.

மறுபடியும் முன்னறிவிப்பு இல்லாமலே ராக்ஃபெல்லர் சுவாமிஜியின் இருக்கைக்கு வந்தார்.

முன்போலவே சுவாமிஜி அவரை ஏறிட்டும் பாராமல் கீழ் நோக்குடன் அமர்ந்திருந்தார்.

ராக்ஃபெல்லர் தாம் கொண்டுவந்திருந்த ஒரு காகிதக் கட்டை சுவாமிஜியின் முன்பிருந்த மேஜைமீது போட்டார்.

''தானதர்மங்கள் செய்வதற்காக நான் போட்டுள்ள திட்டம் இது. நீங்கள் இப்போது திருப்தி அடைந்து என்னிடம் நன்றி கொள்ளலாம்'' என்ருர்.

சில விநாடிகள் சுவாமிஜி சிலைபோல அமர்ந்திருந்தார். புருவத்தைக்கூட உயர்த்தவில்லை அவர். பிறகு அந்தக் காகிதங் களை எடுத்துச் சாவதானமாகப் படிக்கலானர்.

''நீங்கள்தான் என்னிடம் நன்றிகொள்ளவேணும்'' என்று மிருதுவாகக் கூறினர்.

ராக்ஃபெல்லர் பேட்டி அத்துடன் முடிந்தது.

இந்தச் சம்பவத்தை அறுதியிட்டு உறுதிப்படுத்த முடிய வில்லை என்றும், எனினும் சுவாமிஜி சிகாகோவில் இருந்த சமயத் தில்தான் ராக்ஃபெல்லர் தமது தானதர்மப் பணியைத் தொடங் கினர் என்றும் பர்க் கூறுகிருர். கொடைவள்ளலாகப் பிற் காலத்தில் திகழ்ந்த ராக்ஃபெல்லரின் வரலாற்றை எழுதியவர், அவருடைய சிறப்புக்களை எதுவும் வெளியாக்காத இதுபோன்ற ஒரு சம்பவத்தைத் தமது நூலில் சேர்த்திருக்கப் பிரியப்பட்டிருக்க மாட்டார் என்பதையும் பர்க் எடுத்துக் காட்டுகிருர்.

பிறிதொரு சமயத்தில் ராக்ஃபெல்லர், ''தனிகன் ஒரு தர்மகர்த்தாவே. அவன் தனது செல்வத்தை முறையின்றிச் செலவிடுவது பெரும் பாபமாகும். மற்றவர்களுக்காக வாழ்வதே ஒருவனுடைய வாழ்க்கையின் நிறைவு. அப்படி வாழத்தான் நான் முயல்கிறேன்'' என்று கூறியிருக்கிருர்.

முன்பு நாம் கண்ட சுவாமிஜியின் உபதேசத்திலிருந்தே ராக்ஃபெல்லரிடம் இந்த மனேபாவம் ஏற்பட்டிருக்கலாம் என்று நாம் கருதலாமல்லவா?

* * *

Koviloor Digital Library

''பிரசங்கம் செய்வது போன்ற 'நான்ஸென்ஸ்' களில் அலுத்துப் போய்விட்டேன்'' என்று சுவாமிஜி ஹேல் சகோதரி களுக்கு எழுதினுலும் 'விதி' அவரை விடவில்லே.

''நான் ஒரு கருவியே, அவன்தான் அதை இயக்குகிறுன். இந்தக் கருவியினுல் அவன் இந்தத் தொலேதூர நாட்டிலே பல்லாயிரம் மக்களின் சமய உணர்வைக் கிளர்த்திக்கொண்டிருக் கிறுன்'' என்று சுவாமி பிரம்மானந்தருக்குப் பிறிதொரு சமயத் தில் விவேகானந்தர் எழுதியதே உண்மையாயிருந்தது.

1894-ம் ஆண்டு ஏப்ரல் 14-ந் தேதி நார்த்தாம்ப்டனுக்கு வந்தார். 15-ந் தேதி அங்குள்ள ஸ்மித் காலேஜில் உரை யாற்றினுர் சுவாமி.

ஸ்மித் காலேஜில் அப்போது படித்துக்கொண்டிருந்த மார்தா ப்ரெளன் ஃபிங்க் நாற்பத்திரண்டாண்டுகளுக்குப் பின் சுவாமி ஜியின் விஜயத்தைப்பற்றி அற்புதமான ஒரு வியாஸம் எழுதினுள். சுவாமிஜியின் விஜயம் நிகழ்ந்த காலத்தை அவள் தவருகக் குறிப்பிட்டிருக்கிறுள்.

கல்லூரியின் முதல்வரும், பேராசிரியர்களும் குழுமியிருக்க எலிக்குஞ்சுகள்போல் மார்தாவும் அவளுடைய தோழிகளும் ஒடுங்கி உட்கார்ந்திருந்தனராம். சுவாமிஜியை அந்தக் கல்வி நிபுணர்கள் குடைந்தெடுத்தார்கள். ஹிந்து மதம் அநாகரிக மானது, கிறிஸ்துவ மதமே உண்மையான மதம் என்று சுவாமிஜி யை ஒப்பவைப்பதே அவர்களுடைய உத்தேசமாயிருந்தது.

''சுவாமிஜியை அன்பின் உருவம் என்று சொல்வதுண்டு. ஆனுல் அன்று இரவு எனக்கு அவர் சக்தியின் உருவமாகவே தோன்றினுர்'' என்கிறுள் மார்தா. 'என்னே எவன் எந்த உருவில் பாவித்தாலும் அவனே நான் சென்றடைகிறேன்' என்ற பகவத்கிதா வாக்கு அவர்களுக்கு ஏற்கவில்லேயாம். அன்பு அவர் களே எட்டாது; சக்தியினுல்தான் அவர்களே அயரச் செய்து வழிப்படுத்தவேண்டும் என்று சுவாமிஜி நினேத்துச் சக்தியின் உருவமானுர் என்கிறுள்.

''தெய்விகம் நமக்குள் இருக்கிறது, இதுவே மனிதனின் உண்மையான இயல்பு என்று நம்புவதைவிட அதிகமாக நாம் எதைக் கேட்க முடியும்? இந்த உபதேசத்தைப் பெற்ற நான் என்னுடைய சொந்தமான இல்லத்துக்கு வந்துவிட்டதாக உணர் கிறேன்!'' என்று அவள் கட்டுரையை முடிக்கிறுள்.

இதேபோல பல்லாயிரக்கணக்கான அமெரிக்கர்களேத் தங்கள் மனேபாவம் ஸ்வஸ்தமாக உறைகிற இல்லத்தில் சேர்ப்பதற்காகத் தான் சுவாமிஜி பிரயாணம் செய்துகொண்டிருந்தார்.

Koviloor Digital Library

இல்லம் என்பதற்கு வீடு என்று மறுபெயர் சொல்கிறோம். விட்டுவிடும் நிலையாகிய மோக்ஷமே உண்மை வீடு. 'இன்ப வீட்டினில் இருப்பேனோ?' என்று தாயுமான சுவாமிகள் கேட்ட வீடு அது!

'நார்த்தாம்ப்டன் டெய்லி ஹெரால்ட்' சுவாமிஜியைப் பற்றி எழுதியதாவது:

''சுவாமி விவேகானந்தரைப் பார்ப்பதும், கேட்பதும், எந்த அறிவுள்ள அமெரிக்கரும் இழக்கக் கூடாத ஒரு வாய்ப்பாகும். நம்முடைய தேச வாழ்வை நாம் நூற்றாண்டுகளால் அளப்பது போல், தனது வாழ்வை ஆயிரமாண்டுகளால் அளக்கும் ஒரு நாட்டின் அறிவு, ஆன்மிகம், நெறி இவற்றின் பண்பு அளித்த ஒரு அதி நேர்த்தியான பண்டத்தின் பிரகாசமான ஒளியைக் காணவேண்டும் என்ற அக்கறை இருக்கும் எந்த அமெரிக்கரும் இழக்கக்கூடாத வாய்ப்பு அவர்.''

அமெரிக்கர் இழக்கக்கூடாத அந்த வாய்ப்பை சுவாமிஜியின் தாய்த்திருநாடாகிய பாரதமே இழக்கச் செய்யும் சூழ்நிலையை இந்தியாவில் உண்டாக்கிக் கொண்டிருந்தார் பிரம்ம சமாஜத் தலைவர் பிரதாபசந்திர மஜூம்தார். சுவாமிஜியை இந்தியாவி லேயே அறிந்திருந்தவரும், அவர் அமெரிக்கா வந்த புதிதில் அவருக்கு நண்பருமாக இருந்த மஜூம்தார் சர்வமத மகாசபையில் சுவாமிஜி அளப்பரும் கீர்த்தி பெற்றதைக்கண்டு பொறாமை வாய்ப் பட்டதை முன்பே கண்டோம். அமெரிக்காவில் சுவாமிஜியைப் பற்றி அபவாதம் பரப்ப முயன்று தோற்ற அவர் இப்போது இந்தியாவில் அந்தக் 'கைங்கரியத்தை'த் தொடர்ந்திருந்தார்.

சுவாமிஜியின் புகழைப் பத்திரிகை வாயிலாகக் கேட்டு மகிழ்ச்சி கொண்ட இந்திய மக்களிடையே மஜூம்தார் நிந்தனை களைப் பரப்பி வந்தார்.

வந்தனையைப் போலவே நிந்தனையும் சுவாமிஜியைத் தொடவில்லைதான். என்றாலும் வேறொரு காரணத்துக்காக சுவாமிஜி மஜூம்தாரின் பிரசாரத்துக்குக் கவலைப்பட்டார்.

நியூயார்க்கிலிருந்து சிகாகோவிலுள்ள ஹேல் தம்பதியின் மருமாளான இஸபெல் மக்கின்ட்லிக்கு அவர் எழுதிய கடிதத்தில் நெஞ்சைத் தொடும் விதத்தில் இந்தக் கவலையை அவர் தெரிவித் திருக்கிறார்.

''எந்நாட்டு மக்கள் என்னைப்பற்றி என்ன சொல்கிறார்கள் என்பதுபற்றிக்கூட எனக்குக் கவலையில்லை. ஆனால் ஒரே ஒரு கவலையுண்டு. கிழ அன்னை ஒருத்தி எனக்கிருக்கிறாள். வாழ்நாள் முழுவதும் அவள் எவ்வளவோ துயரம் அநுபவித்துவிட்டாள்.

Koviloor Digital Library

இவ்வளவுக்கும் மத்தியில் அவள் என்னை ஆண்டவனுக்கும், மனிதனுக்கும் சேவை செய்வதற்காகத் தியாகம் செய்து, அந்தத் தியாகத்தைத் தாங்கி வருகிறாள். தன்னுடைய எதிர்கால நம்பிக்கையாகவும், தன் குழந்தைகளிலெல்லாம் அருமைக்கு அருமையாகவுமிருந்து தான் துறந்த அந்த மகன் கண்காணாத தேசமொன்றில் மிருகம்போல — மஜூம்தார் இப்படித்தானே கல்கத்தாவில் சொல்லி வருகிறாராம் ? — வாழ்கிறான் என்றறிந்தால் அது அவளை அப்படியே கொலை செய்துவிடும். ஆனால் ஆண்டவன் பெரியவன். அவனது குழந்தைகளை யாரும் எதுவும் செய்துவிடமுடியாது.''

மஜூம்தாரின் அபத்தங்களை இந்தியாவில் யாரும் பொருட்படுத்தத்தான் இல்லை. அவருக்குச் சகோதரர் முறையாகவேண்டிய பத்திரிகாசிரியர் ஒருவரே சுவாமிஜியைச் சிலாகித்து எழுதியதால் மஜூம்தாரின் 'திருப்பணி' எடுபடவில்லை. இதை சுவாமிஜி அறிந்தபின் ஓரளவு மன நிம்மதி பெற்றார்.

நியூயார்க் மாநகரத்தில் 1894-ம் ஆண்டில் ரோல்ஸ் ராய்ஸ்கள் ஓடவில்லை. நூறடுக்கு விண் உயர மாளிகைகளும் இருக்கவில்லை. என்றாலும் அன்றைய அமெரிக்காவில் அங்குதான் அதிகமாக சாரட்டுகள் ஓடின. அன்றைய அமெரிக்காவில் அங்குதான் இருபது மாடிகளுள்ள கட்டிடங்கள் உயர்ந்து நின்றன. புது உலக வாழ்வின் மத்திய கேந்திரமாக விளங்கிய அந்தப் பெரும் பட்டணத்தில் சுவாமிஜி 1894 ஏப்ரல் 24-ந் தேதியிலிருந்து மே 6-ந் தேதி வரையில் தங்கினார். நியூயார்க்கின் பெருமையை அவர் பெரிதும் ரசித்தார். பர்க் கூறுவதுபோல், சுவாமிஜி எங்கெங்கே மனிதனின் சக்தி, ஆக்கத்திறன் இவை வெளிப்படுவதைக் கண்டாலும் அங்கு திவ்ய மாதாவின் சக்தியையும், ஆக்கத்திறனையுமே கண்டு வந்தார். பலம் எந்த உருவில் அவரிடம் பேசினாலும் அந்த எல்லா உருவையும் ஒரே போல் ஆழ்ந்த மட்டத்தில் கண்டார் அவர். அப்போது விண்ணை முட்டும் கட்டிடம் எழுப்புகிற மனித சக்தியும் உலகைத் தாங்கிக் காக்கும் திவ்விய சக்தியும் ஒன்றாகவே தெரிந்தன. இதே சக்தியையும், ஆற்றலையும்தான் சுவாமிஜி உருவகித்தார்.'

பிற்காலத்தில் சுவாமிஜியின் பிரிய சிஷ்யர்களானவர்களில் பலர் நியூயார்க்கில்தான் அவருக்கு அறிமுக மாயினர். சமூகத்தில் செல்வாக்குப் பொருந்தியவர்களும் இவர்களில் இருந்தனர். சமூக சேவகி மிஸ் மேரி ஃபிலிப்ஸ், டாக்டர் குர்ன்ஸீ தம்பதியர், பிரபல பாடகி மிஸ் எம்மா தர்ஸ்பி, எழுத்தாளர் லியன் லாண்ட்ஸ்பெர்க், மிஸ்ஸிஸ் ஓல்புல், மிஸ்ஸிஸ் ஆர்தர் ஸ்மித், ஆகியோர் இவர்களில் சிலர்.

Koviloor Digital Library

எல்லா மதங்களிலும் கிறிஸ்துவமே தலை சிறந்தது என்று சர்வமத மகாசபையில் பேசிய லிமன் அப்பட் நியூயார்க்கில் சுவாமிஜியுடன் சற்றே இறுக்கமாகப் பழகியதன் விளைவாகத் தம் கருத்தை அப்போதைக்கு மாற்றிக்கொண்டார். ''உலகத்தவர் எல்லாரும் தங்களது எண்ணங்களையும், உணர்வுகளையும், ஒரே விதத்தில்தான் வெளியிடவேண்டும் என்று கருதுவது சாத்திய மல்ல, விரும்பத்தக்கதுமல்ல... வசந்தம் என்பது ஒன்றுதான். ஆனால் அதில் புஷ்பிக்கும் மலர்கள் பலப்பல அல்லவா?'' என்று அவர் எழுதியது சமய சமரஸத்தை கவினுற விளக்குகிறது. (எனினும் பிற்பாடு அப்பட் தமது பழைய கருத்தையே வெளியிட லானார் என்று தெரிகிறது.)

நியூயார்க்கில் சுவாமிஜியின் ரஸிகையான ஸ்ரீமதி டௌன், சுவாமிஜி சிகாகோவில் உரை நிகழ்த்திய நாளாக அவர்மீது நியூயார்க்கிலிருந்து அழைப்பிதழ்கள் மழையாகப் பொழிந்தன, என்று கூறுகிறாள். 'அமெரிக்காவில் வேதாந்த கேந்திரங்களை ஸ்தாபித்த இவரைவிட விசால புத்தியும், சகிப்புத்தன்மையும் உள்ள எவரையும் இந்தியா கண்டிருக்க முடியாது' என்று அடித்துக் கூறுகிறாள் அவள்.

சுவாமிஜியை நியூயார்க்கில் கண்ட புகழ்பெற்ற சில்பியாகிய மால்வினா ஹாஃப்மான் என்பவள் பல ஆண்டுகளுக்குப் பின் நம் உள்ளத்தைத் தொடுகிறமாதிரி எழுதினாள்:

''1931-ல் நாங்கள் கல்கத்தாவின் புறநகராகிய பேலூருக்குச் சென்றோம். எத்தனையோ வருஷங்களுக்கு முன் எவரை அமெரிக் காவில் கண்டோமோ அவருடைய சலவைக்கல் சமாதியைக் கண் டோம். மல்லிகைகளாலேயே ஆன ஹாரம் ஒன்றைச் சந்நிதிக்கு நிவேதனமாக அளித்தேன். அப்போது உணர்ச்சி பொங்கி வந்தது. இவரை நான் கண்ட ஒரே முறையில் இவர் ஒரு வார்த்தை பேசாமல் இந்தியாவின் உண்மையான உயிரை விளக்கி யதை நினைவு கொண்டேன். அவரைக் கண்டபின்னர் நான் இந்தியாவைப் பற்றி எத்தனையோ பிரசங்கங்களைக் கேட்டு விட்டேன்; ஆனால் அவற்றில் நான் காணாத உயிரைப் பேசாம லேயே அவர் விளக்கி வைத்தார்.''

நியூயார்க்கில் தமது நினைவை நீங்காமல் பொறித்துவிட்டு, அரசியலிலும், கல்வியிலும் சீர்திருத்தவாதியாகிய ஸ்ரீமதி ஜூலியா வார்ட் ஹௌ என்பவளுடைய அழைப்பின்மேல் மே 6-ந் தேதி போஸ்டன் அடைந்தார் சுவாமிஜி. பெண்கள் முன்னேற்றத்தில் ஈடுபட்டுள்ள பெண்மணி ஸ்ரீமதி ஹௌ. இந்தியாவில் பெண்கள் இழிநிலையில் இருக்கிறார்கள் என்று எண்ணிவந்தவர்களிடையே சுவாமிஜி இப்படிப் பேசினார்:

Koviloor Digital Library

''இந்தியாவில் உயர் ஜாதி விதவைகள் மறுமணம் புரிந்து கொள்வதில்லை. கீழ் ஜாதி விதவைகளே மணம் புரிந்து கொள் வார்கள்; எதை வேணுமானாலும் உண்பார்கள்; குடிப்பார்கள்; கூத்தாடுவார்கள்; இஷ்டப்பட்ட அளவுக்குக் கலியாணம் செய்து கொள்வார்கள்; அப்படிக் கலியாணம் செய்துகொண்ட எல்லா ரையும் விவாகரத்து செய்வார்கள். சுருங்கச் சொன்னால் உங்கள் நாட்டில் மிக உயர்ந்த அந்தஸ்திலுள்ள பெண்கள் செய்வதை எங்கள் நாட்டின் இழிகுல மாதர் செய்வர்'' என்றார்.

அமெரிக்கப் பெண்களை அழகில் லக்ஷ்மியாகவும், அறிவில் சரஸ்வதியாகவும், அம்பாளின் அவதாரங்களாகவும் கூறியவரே தான், தம் நாட்டுப் பெண்களைப் பற்றி அவர்கள் தாழ்வாக எண்ணுகிறார்கள் என்றறிந்தபோது இப்படிக்கொதிப்புடன் நகைச் சுவை குன்றாமல் பேசினார். இது அல்லவா தேசபக்தி?

இதே பிரசங்கத்தில் இன்னொரு ரஸமான பகுதி:

''எங்களை மத வெறியர்கள் என்கிறீர்கள். இருக்கட்டும். நாங்கள் மத வெறியர்களாயிருக்கும்போது எங்களைத்தான் துன் புறுத்திக் கொள்கிறோம்; சுவாமியின் ரதத்துக்கு முன் விழுந்து உயிரை விடுகிறோம்; எங்களுடைய தலையையே வெட்டிக் கொள் கிறோம்; ஈட்டிப் படுக்கையில் படுத்துக் கொள்கிறோம். ஆனால் நீங்கள் மத வெறியர்களாக இருக்கும்போது என்ன செய்கிறீர் கள்? பிறருடைய கழுத்தை அறுக்கிறீர்கள், பிறரைத் தீயில் பொசுக்கிச் சித்திர வதை செய்கிறீர்கள், ஈட்டிப் படுக்கையில் மற்றவர்களைப் படுக்க வைக்கிறீர்கள்! உங்கள் சதைக்கு எந்த ஆபத்தும் வராமல் சர்வஜாக்கிரதையாக இருக்கிறீர்கள்!''

துணிச்சல் என்பதற்கு இங்கேயில்லாமல் வேறெங்கு இலக் கணம் காண்பது?

''தம்மைச் சுற்றியுள்ள மக்களைப்பற்றிய அருசியான அம்சங் களையும் அவர்களிடமே எடுத்துக்கூறும் பொறுப்பை சுவாமிஜியால் ஆற்ற முடிந்தது. ஆனால் இப்படிக் குறைகாணும்போது அவர் அதைவிட ஆழ்ந்த ஓர் உண்மையையும் வெளியிடாமலிருந்தது கிடையாது. அவருடைய ஹாஸ்யமான, குத்தலான, வெட்டுகிற பாய்ச்சல்களுக்காக அவர்கள் ஒருபோதும் அவரைப் பழித்ததில்லை. அவருடைய தயையும், நல்லது செய்கிற ஆற்றலும் அப்பேற் பட்டவை!'' என்று பர்க் கூறுவதை இங்கு நினைவு கூறலாம்.

பரமஹம்ஸ தேவரைப்பற்றிப் பொது மேடைகளில் அதிகம் பேசாத சுவாமிஜி போஸ்டனில் ''எனது குரு'' என்றே ஒரு சொற்பொழிவு ஆற்ற ஒப்புக் கொண்டார். உரையைக் கேட்க ஒரு பெரும் திரள் கூடியிருந்தது.

Koviloor Digital Library

குருநாதனைப்பற்றிய எண்ணங்களை ஒருபோதும் மறவாத சுவாமிஜி அன்று அந்த நினைவுகளிலேயே ஒரேயடியாகத் தோய்ந் திருந்தார். செல்வச் சிறப்புமிக்க அமெரிக்காவில் வாழ்ந்தாலும், ஏழை இந்தியாவில் எங்கோ எளியவராக வாழ்ந்த அந்த வேதியக் கிழவரின் வாழ்க்கை சுவாமிஜியின் நெஞ்சைக் கவ்விக்கொண் டிருந்தது. விம்மிப் புடைத்து எழுகிற துறவு உணர்வோடு மேடை ஏறினர் சுவாமிஜி. சபையோரைப் பார்த்தார். உல காயதமே பல உருவங்களாகி எதிரே உட்கார்ந்திருப்பதுபோல அவருக்குத் தோன்றியது. அவர்களின் காட்சியே அவரை அரு வருக்கச் செய்தது. ஸ்ரீராமகிருஷ்ண யதியைப்பற்றி இவர்க ளிடமா பேசுவது என்ற எண்ணம் எழுந்தது. தாம் பேசவந்த பொருளை விட்டு விட்டார். மேற்கத்திய வாழ்முறையின் நாக ரிகத்தை வன்மையாகத் தாக்கிப் பேசத் தொடங்கிவிட்டார். போகமும், போக்கியமும், குடியும் கூத்தும் நிறைந்த சமூக வாழ்வை வஜ்ராயுதம் போன்ற வார்த்தைகளால் பொடிக்கத் தொடங்கினர். எவ்வளவோ முறை அவர் தாக்கிப் பேசி யிருந்தும், அவருடைய நல்லெண்ணத்தையும், அன்பு இதயத் தையும் புரிந்துகொண்டு சரியாக வரவேற்ற அமெரிக்க மக்களா லேயே அன்று அவரது பேச்சைப் பொறுத்துக்கொள்ள முடிய வில்லை. நூற்றுக் கணக்கில் அவர்கள் வெளியேறத் தொடங்கினர். ஆனல் சுவாமிஜியோ அதையும் பொருட்படுத்தாமல் அக்னித் துண்டங்கள் போன்ற வார்த்தைகளை விடாமல் கக்கித் தீர்த்தார்.

மறுநாள் பத்திரிகைகள் அவரது பேச்சைக்குறித்து விமரி சித்தன. சில கண்டித்தன. சில அவர் கூறியதன் உண்மையை ஒப்புக்கொண்டு எழுதின. எல்லா பத்திரிகைகளுமே அவரது பயமின்மை, அந்தரங்க சுத்தம், கபடமின்மை இவற்றைப் பாராட்டின.

வர்ணமுறையைப் பற்றி 'பிராமண சாது' விவேகானந்தர் கூறியதை 'போஸ்டன் ஹெரால்ட்' வாயிலாகத் தெரிந்து கொள்கிறோம்.

''எங்களில் குணத்தின் தரமும், பிறப்புமே ஜாதிகளை உண் டாக்குகிறது. பணமல்ல......பணம் உலகில் பல போர்களை உண்டாக்கியிருக்கிறது. கிறிஸ்துவர்கள் இதர சமயத்தினரின் கழுத்தை மிதிக்குமாறு செய்திருக்கிறது. இங்கு பணம் சேர்க்க வேண்டும் என்பதற்காகவே இத்தனை உழைப்பும், பரபரப்பும், சுறுசுறுப்பும். பணத்தால் பெரியவனாக முடியாது என்ற எங்கள் ஜாதி முறையில் இந்தக் கொந்தளிப்பிலிருந்து மனிதன் காக்கப் படுகிறன். குறைந்த வருவாயுடனே அது மனிதனைத் திருப்தியாக

Koviloor Digital Library

வாழச் செய்கிறது. இதனால் எல்லாருக்கும் வேலை கிடைக்கிறது. மனிதன் பணத்தைப்பற்றி மட்டும் எண்ணாமல் ஆத்மாவைக் குறித்து எண்ணமுடிகிறது. இதையே இந்தியா தனது சமூகத்திடம் எதிர்பார்க்கிறது.''

''பிராம்மணன் ஆண்டவனை ஆராதிக்கவே பிறந்தவன். அவனுடைய ஜாதி எவ்வளவுக்கு உயர்வாக இருக்கிறதோ அவ்வளவுக்கு அவனுக்குத்தான் சமூகத்தில் அதிகத் தடைகள் இருக்கின்றன. வர்ணமுறை என்பதே எங்களை ஒரு நாடாக உயிருடன் காப்பாற்றி வந்திருக்கிறது. அதில் குறைகள் பல இருந்தாலும் அதைவிட அதிகமாக நிறைகள் உண்டு.''

பிரசித்திபெற்ற ஹார்வர்ட் சர்வகலாசாலையில் சுவாமிஜி ஓர் உரை நிகழ்த்தினர். எட்டாண்டுகள் 'ஸ்ரீராமகிருஷ்ண' முனிவரின் சிஷ்யராக இருந்த விவேகானந்தர் ஹார்வர்ட்டில் பேசப் போவதாக 'ஹார்வர்ட் க்ரிம்ஸன்' அறிவித்தது. சிஷ்யரின் பெருமையை முதலில் வைத்து குருமஹராஜின் பெருமையும் ஒருவாறு அமெரிக்காவுக்குத் தெரியலாயிற்று.

அதே சமயத்தில் சிஷ்யரின் பெருமையை அடிமட்டமாக்கவும், மகத்தான யத்தனங்கள் தொடங்கிவிட்டன. 1894-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் இந்த எதிர்ப்பு இயக்கம் உச்சகட்டத்தை அடைந்து விட்டது. கிறிஸ்துவ மிஷனரிகளும், தியாஸஃபிஸ்ட்டுகளும் செய்துவந்த தூஷணைப் பணிக்கு பிரம்ம சமாஜத் தலைவர் பிரதாப் சந்திர மஜூம்தார் நன்ருகத் தூபம் போட்டு வந்தார். இந்தியாவிலும் அமெரிக்காவிலுமாக சுவாமிஜியின் பெயரைக் கெடுக்க சகல அபாண்டங்களையும் அவர் பரப்பி வந்தார். பளிங்குக்குக்கூடக் களங்கம் சொல்லாமல் எனத்தக்க தூய்மை நிறைந்த சுவாமிஜின் பிரம்மசரியத்தைத் தாக்கிப் பிரசாரம் புரியுமளவுக்கு அவர் அசூயை ஏறியிருந்தார். எல்லாவற்றுக்கும் மேலாக சுவாமிஜி சர்வமத மகாசைபைக்குஎவ்வித நற்சான்றிதழும் பெற்று வராததைக் காரணம் காட்டி, இந்தியாவில் அவரை யாருமே அறிந்திருக்கவில்லையென்றும், சுவாமிஜி அமெரிக்காவுக்கு வந்த பின்னரே சந்நியாசி ஆகிய ஒரு வேஷதாரி என்றும் அவதூறு பரப்பினர் மஜூம்தார்.

'உங்களிடம் நற்சான்றிதழ் கேட்பது சூரியனிடம் ஒளிவீசுவதற்கு சான்றிதழ் கேட்பது போலவே' என்று பேராசிரியர் ரைட் முன்பு சுவாமிஜியிடம் சொல்லியிருந்தது உண்மைதான். என்றாலும் மஜூம்தார் மீண்டும் மீண்டும் எழுதிய பின் சுவாமிஜியைப்பற்றி இலேசான ஒரு ஐயமும் எழத்தொடங்கியது. பேராசிரியர் ரைட், டெட்ராய்ட் பக்தை ஸ்ரீமதி பாக்லி இவர்களும்கூட

Koviloor Digital Library

சந்தேகிக்கிறார்களோ என்றும் சுவாமிஜி எண்ணவேண்டிய தாயிற்று. கேத்ரி மஹாராஜா போன்ற பிரமுகர்கள் தமக் கெழுதிய கடிதத்தை சுவாமிஜி ரைட்டுக்கு அனுப்பிவைத்துத் தம் அந்தஸ்தைத் தெரிவித்துக் கொள்ளவேண்டியதாயிற்று.

தாய்நாட்டுக்காகவென்று தனியாக இந்த அந்நியக் கண்டத் துக்கு வந்து கண்டனத்துக்குள்ளான சுவாமிஜியின் நிலையை எண்ணினாலே நெஞ்சு நோகிறது.

சுவாமிஜியும் நெஞ்சு நொந்து தம் சென்னைச் சீடர்களுக்கு எழுதினார். 'உங்களின் பேச்சைக் கேட்டு இங்கே வந்ததே தவறு' என்று கடிந்து எழுதினார். இந்திய மக்கள் தங்களுக்குள் சுவாமிஜி அமெரிக்காவில் செய்துவருகிற பணியை எவ்வளவு புகழ்ந்தாலும் அதனால் பயன் இராது என்று எழுதினார். மஜூம்தாரின் குற்றச் சாட்டுகளுக்குத் தக்க விடை அளிக்கவேண்டுமானால் இந்திய சமூகம் சுவாமிஜி தங்களுக்குப் பரிசயமான புள்ளி என்றும், தங்கள் பிரதிநிதி என்றும் அமெரிக்காவுக்குத் தெரிவிக்கவேண்டு மென்று குறிப்பிட்டார்.

அதுபோல எழுதுவதற்கு சுவாமிஜி எவ்வளவு லஜ்ஜை அடைந்திருப்பாரோ? ஆனால் அவருக்காக எழுதியதல்லவே அது? அவருக்கு யாரால் என்ன ஆகவேண்டும்? இச்சமயத்தில் அவர் எழுதிய கடிதமொன்றில் காண்பதுபோல அவர் ஹிமாசலத்தின் மடியில் சஞ்சரிக்கத் துடித்துக் கொண்டிருந்தார். அங்கு அவருக்குப் புகழ் ஏது, இகழேது? என்றாலும் தமது சமயப்பணி சிதிலமாகிவிடும் — குருநாதரின் ஆணையை நிறைவேற்ற வொண் ணாமல்போய்விடும் — என்பதற்காகவே சுவாமிஜி இவ்வாறு எழுத நேர்ந்தது.

சுவாமிஜின் கடிதம் சென்னைக்குப் போய்ச் சேருமுன்னரே அங்கு ராஜா ஸர் ராமஸ்வாமி முதலியார், ஸர். சுப்பிரமண்ய அய்யர், ஆகியோர் கலந்துகொண்ட ஒரு பொதுக் கூட்டத்தில் உலக அரங்கில் பாரதத்தின் பெருமையை நிலைநாட்டிய பெரு மகனுக்குப் புகழ் மாலைகள் சூட்டப்பட்டன.

வங்கத்து சிங்கம் உலக அரங்கத்திலேறக் காரணமாக இருந்த தற்குத் தமிழகம் எவ்வளவு பெருமைப் படலாமோ அவ்வளவு பெருமையும் பட்டது. சுவாமிஜியைத் தக்க முறையில் வர வேற்று, உபசரித்து, ஊக்கமளித்த அமெரிக்கர்களுக்கு தங்களது நன்றியைத் தெரிவிக்கும் ஒரு தீர்மானத்தையும் சென்னை மகா ஜனங்கள் நிறைவேற்றி, அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தனர்.

சென்னைக் கூட்டத்தைப் பற்றியும், நன்றித் தீர்மானம் குறித்தும் போஸ்டன் ஈவினிங் ட்ரான்ஸ்கிரிப்டில் விவரமாகப் பிரசுரமாயிற்று.

Koviloor Digital Library

கும்பகோணம் முதலிய பல தமிழ்நாட்டு நகரங்களிலும் சுவாமிஜிக்குப் பாராட்டு தெரிவித்துக் கூட்டங்கள் நடைபெற்றன. ராமநாதபுரத்தரசர் சுவாமிஜிக்கு ஒரு வாழ்த்துச் செய்தியனுப்பி வைத்தார்.

வடக்கே கேத்ரி மஹாராஜா விசேஷ தர்பாரொன்று நடத்தி, தமது பெயரிலும் தமது பிரஜைகளின் பெயரிலும், சுவாமிஜி ஹிந்து தர்மத்துக்குப் புரிந்த மாபெரும் சேவைக்காக நன்றிச் செய்தி அனுப்பி வைத்தார்.

இவற்றுக்கெல்லாம் சிகரமாக சுவாமிஜியை ஈன்றெடுத்த வங்கம் தனதருமைச் செல்வன் செய்த ஒப்பற்ற சமயப் புரட்சியை ஆனந்தப் பெருமிதத்துடன் பாராட்டி விழா எடுத்தது. கல்கத்தா டவுன் ஹாலில் 1894-ம் ஆண்டு ஸெப்டம்பர் 5-ந் தேதி கோலாஹலமான ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. வங்காளத்திலிருந்த மட்டும் — அந்த வங்காளத்தில் தங்காமல் பாரதம் முழுவதும் அலேந்து திரிந்தமட்டும்—தாங்கள் அறிந்திராத அந்தத் தவப் புதல்வரை, தங்களால் எவ்வித உதவியும் பெருமல் அமெரிக்காவுக்குப் போய் வேதாந்தக் கொடியை அவர் உயர்த்திய பின்னரே தங்களவராக அறிந்த வங்காள மக்கள் உணர்ச்சியுடன் அவரை வாழ்த்தினர். கல்கத்தாவின் பிரமுகர்கள் பங்குகொண்ட இந்தக் கூட்டத்துக்கு மதிப்பு வாய்ந்த ராஜா பியாரி மோஹன் மூகர்ஜி ஸி.எஸ்.ஐ. தலேமை தாங்கினுர். சுவாமிஜிக்கும், சர்வ மத மகாசபையினருக்கும் இங்கும் நன்றித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மஜூம்தாரின் குற்றச் சாட்டுக்கள் பிரசுரமான பத்திரிகைகளில் இந்தச் செய்திகளும் வெளியாயின. சுவாமிஜி ஹிந்து மதத்தை உள்ளபடி விளக்கிக் கூறியவரே, இந்திய மக்களின் பேரன்பையும் பெருமதிப்பையும் பெற்றவரே என்பது இதனுல் நிரூபணமாயிற்று.

வேற்று நாட்டில் யாவராலும் பகிஷ்கரிக்கப்படுகிற பயங்கர நிலேயிலிருந்த சுவாமிஜி இந்தப் பாராட்டுக்களால் தமது சீரையும் சிறப்பையும் மீண்டும் பெறலானுர். விலகியவர்கள் — அல்லது சுவாமிஜி அப்படி நினேத்தவர்கள் — வந்து கூடினுர்கள். கவிந்திருந்த கனமேகங்கள் சிதறியேவிட்டன.

இது அம்பிகையின் அநுக்கிரகத்தாலேயே நிகழ்ந்தது என்றுதான் சுவாமிஜி நம்பினுர். ஹேல் சகோதரிகளுக்கு அவர் எழுதுகிறுர்:

''ஜய ஜய ஜகதாம்பா ! நான் எதிர்பார்த்ததற்கு மேல் பெற்றுவிட்டேன்......ஆண்டவன் கருணேயை எண்ணி நான்

Koviloor Digital Library

குழந்தைபோல் விசிக்கிறேன், சகோதரிகளே, அவன் தனது பணி யாட்களை ஒருபோதும் விட்டுப் போவதில்லை......ஆண்டவன் ஒரு வன் இருக்கிறான். பிதாவாக இருக்கிறான். மாதாவாக இருக் கிறான் — தனது குழந்தைகளை அவன் ஒருபோதும் விடுவதில்லை. இல்லை, இல்லை, இல்லவே இல்லை. சிக்கலான தத்துவங்களை யெல்லாம் ஒதுக்குங்கள். ஆண்டவனின் குழந்தைகளாகி அவனிடம் சரணம் புகுங்கள் — இதற்குமேல் என்னால் எழுதமுடியவில்லை — பெண்பிள்ளையைப்போல நான் புலம்பிக் கொண்டிருக்கிறேன்.''

அபாண்டமான நிந்தைக்கு ஆளாகி ஸுவாமிஜி துடிதுடித்த நாட்களிலும் அவரது இதயம் கவிக்கோலம் பூண்டு கடவுளிடம் பக்தி சொறிந்து, நிந்தையின் நினைவே இல்லாமல் இறை நினைவில் திளைத்ததுண்டு என்பதைச் சொல்கிற ஒரு கடிதத்தில் சில பகுதி களையும் இங்கு காண்போம். இதுவும் ஹேல் சகோதரிகளுக்கு எழுதியதுதான்:

ஏராளமான பலவற்றில் ''உலகம்'' அன்பை வைக்கட்டும். நமக்கு ஒரே ஒரு அன்புப் பண்டம்தான் உண்டு. நம்மைப்பற்றி யார் என்ன சொன்னாலும் அக்கறையில்லை. ஆனால் நம் அன்புப் பண்டத்தை கோரமான குணங்களில் திட்ட அவர்கள் முயலும் போதுதான் நாம் அஞ்சுகிறோம். மற்றபடி அவர்கள் எதை வேண்டுமானாலும் செய்யட்டும். நமக்கு அவன் ஒருவனே அன்பு — எனக்கு வேண்டியதெல்லாம் அந்த என் அன்பன், என் அன்பனே!

''அவனுடைய ஆற்றல்கள் என்னென்ன, குணங்கள் என் னென்ன என்பதெல்லாம் இங்கு யாருக்கு வேண்டியிருக்கிறது? அவனுடைய கலியாண குணங்களும்கூட நமக்கு வேண்டாம் — (ஏதோ காரணத்துக்காகவா, பயனுக்காகவா அவனை நாம் விரும்பு கிறோம்?) — இன்றைக்கும் என்றைக்குமாக அடித்துச் சொல் வோம்: 'எங்களுக்கு அவன் தரக்கூடிய பொற்கிழியின் மீது அன்பில்லை' என்று — இப்படியெல்லாம் நாம் அன்பை விலை கூறவில்லை — நமக்குத் தேவை எதுவும் இல்லை— கொடுப்பதே நம் கடமை.

''இந்தத் தத்துவக்காரர்களெல்லாம் அவனுடைய சாரத் தைச் சொல்ல வருகிறார்கள் — சக்தியைச் சொல்ல வருகிறார்கள் — அறியாதவர்கள்! அவனுடைய அதரங்களின் ஒரு ஸ்பரிசத் துக்காக அல்லவா இங்கு நாம் செத்துக் கொண்டிருக்கிறோம்?

''அறிவிலியே, யார்முன் நீ பயபீதியில் நடுங்குகிற முழங் கால்களைக்கொண்டு வணங்குகிறாயோ அவனுக்கு நான் என் கழுத்தி லிருக்கிற மாலையைக் கழற்றிச் சூட்டினேன். அவனுடைய

Koviloor Digital Library

கழுத்தைப் பிடிக்கிற பட்டையாகச் சூட்டினேன். அதனுடன் ஒரு கம்பியையும் கோத்து அதைப் பிடித்துக்கொண்டு அவனை என்னுடனேயே இழுத்து வருகிறேன் — அவன் ஒரு க்ஷணமும் என்னிடமிருந்து பறந்துவிடக் கூடாதே என்ற கவலையில்தான் கழுத்துப்பட்டை போட்டிருக்கிறேன் — அந்த மாலை சாதாரணப் பட்டை அல்ல; பிரேமைப் பட்டை. அந்தக் கம்பி பிரேமையின் பரவச நிலை. அறிவிலியே! உனக்கு ரகசியம் தெரிவது இல்லை — எங்குமுள்ள ஆனந்தன் அன்புக்குக் கட்டுப்பட்டு என்னுடைய பிடிக்குள் அகப்படுகிறானடா. அகிலாண்ட நாயகன் அன்புக்கு ஆயுட்கால முறி எழுதித்தந்த அடிமை என்பதை நீ அறியாயா? உலகங்களை யெல்லாம் நடத்திவைப்பவன் பிருந்தாவன ஆய்ச்சியரின் கங்கணங்களின் குலுங்கல் இசைக்கேற்ப பரதமாடினான் என்பதை நீ அறியாயா?......

''எதை வார்த்தைகளில் வெளிப்படுத்த முடியாதோ அதை வார்த்தைகளில் வெளிப்படுத்த நான் முயல்கிறேன். இந்தக் கோமாளித்தனத்தை மன்னிப்பீர்களாக!''

பக்தியும், கவிதை நயமும் ஒன்றையொன்று எப்படி கவ்விக் கொண்டிருக்கின்றன, பாருங்கள்!

* * *

இன்னொரு விதத்திலும் மஜூம்தாரின் புரளி பயனற்றுப் போயிற்று என்று நாம் ஊகிக்கலாம்.

இந்த மஜூம்தார் பிரம்ம சமாஜத் தலைவர் ஆயினும் பல ஆண்டுகளுக்கு முன் பரமஹம்ஸ தேவரின் பாதத்தை அண்டியதுண்டு. அவரிடம் தாம் பெரிதும் வசமானதாக எழுதியதுண்டு. குருமஹராஜைப்பற்றி வேறு யாரேனும் இவ்வளவு விகஸிதமாகத் துதித்திருப்பார்களா என்று நாம் எண்ணுமளவுக்கு அவர் பரமஹம்ஸரது அருமை பெருமைகளைப் பற்றி ஒரு வியாஸமும் எழுதியிருந்தார். குருதேவரின் அந்த மகத்துவத்தை நாமும்தான் படிப்போமே!

''அந்த அற்புத மனிதர் [ஸ்ரீராமகிருஷ்ணர்] எங்கு சென்றாலும், எப்போது சென்றாலும், அங்கு அப்போது ஒரு ஒளிவெள்ளச் சூழலை உண்டாக்கி விடுகிறார். அந்த வெள்ளத்திலேயே என் உள்ளம் இன்னும் மிதந்து கொண்டிருக்கிறது...... இந்த உத்தமப் புனிதர் ஹிந்து மதத்தின் ஆழத்துக்கும் இனிமைக்கும் ஓர் உயிருள்ள உதாரணம். உடல் நினைவைப் பூரணமாக அடக்கி விட்டவர் அவர். இப்போது அவரது தேகத்தில் ஆத்மாவே, சமயத்தின் சத்தியமே, ஆனந்த பூரணமே, பாவன

Koviloor Digital Library

பரிசுத்தமே நிறைந்து நிரம்பியுள்ளது......அப்பழுக்கற்ற புனிதம், வார்த்தைகளில் வழங்க முடியாத அருளழகு, பண்டிதத் தன்மை யில்லாமல் அவரிடமிருந்து வெளியாகிற அந்தமில்லாத ஞான போதம், குழந்தைகளை நிகர்த்த சாந்தம், சகல ஜீவராசிகளிடமும் அன்பு, எல்லாவற்றையும் விழுங்குகிற தீவிரத்துடன் ஜ்வலிக்கும் தெய்வ பக்தி — இவையே இவரது சாதனைப் பலன்கள். எங்களுடைய [பிரம்ம சமாஜிகளின்] சமய வாழ்க்கையின் லக்ஷியம் [ஸ்ரீராமகிருஷ்ணரின் லக்ஷியத்திலிருந்து] வேறுபட்டதுதான். என்றாலும் இவரை ஆண்டவன் நம்மிடை வைத்துள்ள வரையில் நாம் இவரது பாதத்தருகே அமர்ந்து புனிதம், பாரமார்த்திகம், ஆத்மீகம், பக்தி போதை இவற்றின் உன்னதச் சிறப்புக்களைக் கற்போம்.''

தமது ஆசானைப்பற்றி சர்வமத மகாசபையினருக்குச் சொல்ல விரும்பிய சுவாமிஜி மஜூம்தார் எழுதிய கட்டுரையையே படித்துக் காட்டினார் என்று நம்பப்படுகிறது. அப்போது சுவாமிஜி பிரக்யாதி பெற்றிராததால் மஜூம்தார் அவரது நண்பராகத்தானே இருந்தார்! சுவாமிஜியின் பிரக்யாதிதானே மஜூம்தாரின் ஆத்திரத்துக்குக் காரணமாயிற்று?

மஜூம்தாருடைய கட்டுரையின் ஈராயிரம் பிரதிகளை அனுப்பி வைக்குமாறு சுவாமிஜி தமக்கு அபக்கியாதி ஏற்பட்டபோது சென்னைச் சிடர்களுக்கு எழுதியிருந்தார். அந்தப் பிரதிகளைத் தருவித்து சுவாமிஜி அமெரிக்காவில் பிரசாரப்படுத்தி, இதே ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் பிரிய சிஷ்யராகிய தம்மைத் தான் மஜூம்தார் ஹிந்து மதத்தின் பிரதிநிதியல்ல என்று குற்றம் சாட்டுகிறார் என்பதை எடுத்துக் காட்டியிருக்கக்கூடும்.

எப்படியானால் என்ன? மஜூம்தாரின் துஷ்பிரசாரம் தவிடு பொடியாயிற்று.

துஷ்பிரசாரம் செய்தவர்களையும் நாம் மன்னித்துவிடலாம். அவர்களால்தான் 'எந்தச் சமயத்தில் எதைச் செய்யவேண்டும் என்பதே தெரியாமல் ஆலஸ்யம் படைத்தவர்கள்' என்று கருதப் பட்ட ஹிந்துக்களும் உத்வேகமடைந்து சுவாமிஜியின் புகழுக்குப் பணிந்து, அமெரிக்கருக்கும் நன்றிகூறி அவர்களின் நன்மதிப்பைப் பெற்றனர்.

தங்களின் சகாவாகவும், தலைவனாகவும், ஞான ஆசானாகவும் இருந்த நரேந்திரர் எங்கு சென்றார் என்பதையே அறியாதிருந்து பின்னர் அவரது அமெரிக்கப் புகழைக் கண்டுப் பூரித்த குரு பாயிக்கள் — 'நரேன் உலகின் அடித்தளம் வரையில் ஆட்டி வைத்து விடுவான்' என்று ஆசாரியர் கூறியது உண்மையாகி

Koviloor Digital Library

வருகிறதென ஆனந்தித்த குருபாயிக்கள் — மஜூம்தாரின் செய்கையால் மனம் புண்ணுக நொந்துபோனபோது சுவாமிஜி பிரம்மானந்தருக்கு எழுதினர்: ''உங்களைப்போன்ற பெருமக்கள் இதையெல்லாம் பொருட்படுத்தவே கூடாது. ஸ்ரீராமகிருஷ்ணரின் குழந்தைகளாகிய நாம், அவரது இதய சாரத்தைப் பருகி உருவான நாம் கொசுக்கடிக்கு பயப்படலாமா?......இதை நினைத்து இந்த அறியாதவரை மன்னித்துவிடுங்கள்.''

நாமும் மன்னித்து விடுவோம்.

* * *

ஜுலை 26-ந் தேதி ஸ்வாம்ப்ஸ்காட் என்ற கடற்கரை நகரை சுவாமிஜி அடைந்தார். ''மீனைப்போல் கடலில் முழுகி முழுகி எழுந்தேன்'' என்று ஹேல் சகோதரிகளுக்கு எழுதுகிருர்.

ஹேல் சகோதரிகள் சுவாமிஜியிடம் எவ்வளவு ஸ்வாதீனமாக குறும்பு செய்திருக்கிருர்கள் என்பது இக்கடிதத்திலிருந்து தெரிகிறது. வேதாந்தச் சிங்கமாயிருந்தபோதும் சுவாமிஜி எவ்வளவு மானுடப் பண்புடன் இருந்தார், சுலபமாக விளங்கினுர் என்பதைத் தெரிவிப்பதால் இந்தக் குறும்புகளில் ஒன்றைப் பார்ப்போம்:

சுவாமிஜிக்கு ஃப்ரெஞ்சு கற்பிப்பதாகச் சொல்லிக் கொண்டு ஹேரியட் தப்பும் தவறுமாக ஒரு ஃப்ரெஞ்சுப் பாடலை அவருக்குச் சொல்லிவைத்து, அதன் பொருளையும் மனம்போனபடி கூறியிருந்தாள். ஃப்ரெஞ்சுப் பண்டிதர் ஒருவரிடம் சுவாமிஜி அதைப் பாடிப் பொருள் கூறியபோது அவர் வெடித்துப்போகிற அளவுக்கு விழுந்து விழுந்து சிரித்தாராம். இதை ஸ்வாம்ப்ஸ்காட் கடிதத்தில் கூறுகிற சுவாமிஜி, ''இங்கே மிகவும் குளிர்ச்சியாக இருக்கிறது. அங்கே நீங்கள் வெப்பத்தில் வேர்த்து விறுவிறுத்துக்கொண்டு, வறுபட்டு, வெந்து கொண்டிருப்பீர்கள். போக்கிரிகளான நீங்கள் இப்படி அவஸ்தைப்பட்டுக் கொண்டிருப்பீர்கள் என்று எண்ணும்போது இங்குள்ள குளிர்ச்சி மேலும் எனக்கு குளிர்ச்சி யாகத் தெரிகிறது'' என்று முப்பத்தோரு வயது இளைஞருக்குரிய விளையாட்டுத் தனத்தோடு எழுதினுர்.

அமெரிக்காவில் தமக்குக் கிடைத்த பெரும் புகழ், எதிர்ப்பு இரண்டையும் உள்ளூறப் பொருட்படுத்தாமல் விளையாட்டாகவே கண்ட இளைஞர் அவர். பர்க் கூறுவதுபோல 'அவர் முப்பத்து சொச்சம் வயது இளைஞர் என்பது மட்டுமல்ல; திவ்ய மாதாவின் லீலா விபூதிகள் இடையருது நடைபெறுகின்ற ஆதி அந்தமற்ற நிலையின் விளிம்பில் வாழ்ந்த அவர் நிரந்தரமாகவே இளைஞராக இருந்தார்.'

Koviloor Digital Library

1894-ம் ஆண்டு வேனிற்காலத்தில் சுவாமிஜியின் ஆன்ம எழுச்சி தழைத்துக் கிளுகிளுக்கலாயிற்று. இதற்கு ஒரு காரணம் இத்தனை நாட்களாக அமெரிக்காவின் பரபரப்புமிக்க நகரங்களி லும், ஹோட்டல்களிலும், ரயில்களிலும் வாழ்ந்த அவர் இப் போது அமைதியான இடங்களில் சஞ்சாரம் செய்ததாகும். பர பரப்பு மிக்க இடங்களிலும் சுவாமிஜி தம்மை மறந்து தியானுவஸ் தையில் ஆழ்ந்ததுண்டு. டிராம் வண்டியில் பயணம் செய்யும் போது, இவ்வாறு தியானத்தில் ஆழ்ந்தபடியால் இறங்கவேண்டிய இடத்தில் இறங்காமல் அதனுடைய பல சுற்றுக்களுக்கு சுவாமிஜி கட்டணம் தரவேண்டியதாகப் பலமுறை நேரிட்டிருக்கிறது என்று சகோதரி நிவேதிதை கூறுகிறுர். என்றுலும் கூடியவரையில் சுவாமிஜி இந்த ஒராண்டில் தமது ஆத்மசாதனைகளை ஒரளவுக்குச் சங்கிலி போட்டுத்தான் வைத்திருந்தார் என நாம் ஊகிக்கலாம். இப்போது அது கட்டவிழ்த்துக் கொண்டது.


தம்மைப் போலவே பலர் ஆத்மசாதனைபுரிய ஓர் ஆசிரமத்தை அமைக்கவேண்டும் என்ற எண்ணம் இச் சமயம் சுவாமிஜிக்கு உதித்தது என்று அவருடைய கடிதமொன்றிலிருந்து தெரிகிறது.

இதே சமயத்தில் அமெரிக்காவில் இந்தியப் பணிக்காக நிதி சேகரிக்கும் உத்தேசத்தையும் சுவாமிஜி ஒரளவு கைவிடத் தொடங்கினுர். இதற்குக் காரணம் அமெரிக்க மக்கள் ஆர்வம் காட்டாததல்ல. பொது நலனுக்காகக்கூடப் பணம் திரட்டி வைத்துக்கொள்ள முடியாத பூரண பரிவிராஜகத்வம் அவரில் அப்போது நிறைந்திருந்தது. ஆகஸ்டு முப்பத்தோரும் தேதி அவர் அழசிங்கருக்கு எழுதினுர்: 'பணத்தை வைத்துக் கொள்வது — ஏன் அதைத் திண்டுவதுகூட — எனக்கு எல்லாவற்றையும் விடக் கடினமாக யிருக்கிறது. அது அருவருப்பாயும், இழிவு படுத்துவதாயும் இருக்கிறது.'

இந்தப் பொழுதில் குருமஹராஜ் அப்படியே தமது ஆருயிர் சேடரில் ஆவிர்ப்பாவமாகி யிருந்தாரோ?

அப்படியானுல் இந்தியாவில் தர்மப் பண்ணைகள் நிறுவும் எண்ணத்தை சுவாமிஜி கைவிட்டுவிட்டாரா என்ன? அல்ல. அமெரிக்காவில் ஆசிரமங்கள் அமைத்து, ஆன்மிக எழுச்சியுள்ளவர் களைச் சங்கமாகத் திரட்டினுல் இந்தியாவில் உள்ள அவருடைய சிஷ்யர்களே இந்த அமெரிக்கச் சிஷ்யர்களுக்கு ஸ்தாபன ரீதியில் எழுதி உதவி பெற்றுக்கொள்ளலாம்; தாம் பணவிஷயத்தில் பிரவிருத்திக்காமலிருக்கலாம் என்று சுவாமிஜி கருதினுர். இந்தக் கருத்து அவர் ஆகஸ்டு 31-ந் தேதி அழசிங்கருக்கு எழுதிய கடிதத்தில் வெளியாகிறது. தமது அவதாரத்தில் என்னென்ன

Koviloor Digital Library



சர்வசமயப் பேரவைக்குப் பின் அமெரிக்காவில்
செப்டம்பர் 1893

Koviloor Digital Library

Koviloor Digital Library

உயர்பணிகள் புரியவேண்டுமோ அவை சுவாமிஜியை அழைத்துக் கொண்டேயிருந்தன.

ஓயாத அலைச்சலிலிருந்தும், பிரசங்கங்களிலிருந்தும் சிறிது ஓய்வுபெற்ற காலத்தில்தான் சுவாமிஜியின் உள்ளம் இத்தகைய நிர்மாணதிட்டங்களில் ஈடுபட்டிருந்தது. என்றாலும் அவர் ஈசுவர சங்கல்பத்தை ஆராய்ந்து பார்த்தே எதையும் செய்தார், தாமாக ஏதும் நிகழ்ச்சி நிரலை வகுத்துக் கொள்ளவில்லை என்பதையும் காண்கிறோம். சுவாமிஜியின் நிகழ்ச்சித் திட்டத்தைத் தமக்கு அனுப்பிவைக்கும்படி அழசிங்கர் கேட்டுக்கொண்டபோது அவர் பதில் எழுதினார்: ''இந்தியாவில் நான் என்ன செய்து வந்தேன்; அதைத்தான் அப்படியே இங்கும் செய்துவருகிறேன் — அதாவது எதிர்காலத் திட்டங்கள் எதுவும் வகுக்காமல் எப்போதும் பகவானையே நம்பிச் சார்ந்திருக்கிறேன்''.

* * *

ஆண்டவனையே எண்ணும் தெளிவுடன் சுவாமிஜி க்ரீனேக்கருக்கு வந்து சேர்ந்தார். அங்கு சர்வமத சமரஸக் குடியிருப்பொன்று இருந்தது. வேதாந்தத்திலிருந்து தந்திரஜாலம்வரை எல்லாவற்றையும் அவியலாக்கி எல்லாம் மத உணர்வே என்று அந்தக் குடியிருப்பினர் எண்ணியிருந்தபோதிலும் அவர்களில் பதமான பல ஆத்மாக்களும் இருந்தனர். பிற்காலத்தில் சுவாமிஜியின் முக்கியமான சிஷ்யர்களில் ஒருவரான டாக்டர் லூயி. ஜி. ஜேன்ஸ் அவர்களில் ஒருவர். சுவாமிஜிக்கு மிகவும் உகந்த இடமாக அது அமைந்தது.

போர்ட்ஸ்மௌத்துக்கருகில் ஆற்றங்கரையில், வனந்தரப் பிரதேசத்தில் அமைந்திருந்தது க்ரீனேக்கர். அங்கு சமவெளிப் பிரதேசத்தில் குடியிருப்பவர் பலர் கூடாரங்கள் அமைத்துக் கொண்டிருந்தனர். அருகேயிருந்த குன்றில் பல குடில்களில் தனவந்தர்கள் தங்கியிருந்தனர். இந்தக் குன்றிலே பைன் மரங்கள் சூழ்ந்த ஒரு பகுதி உண்டு. அங்கே இந்த மரங்களின் கீழ்தான் சாதகர்கள் சாதனை புரிவார்கள். 'சுவாமி பைன்' என்று பெயர் பெற்ற மரத்தின் கீழ்தான் சுவாமிஜி தியானம் புரிந்ததோடு, உபதேசங்களும் செய்துவந்தார். 'சுவாமி பைனி'ன் கீழ் சுவாமிஜி ராஜகம்பீரமாக நிற்கும் ஒரு புகைப்படமும் உண்டு. இதுகாறும் அமெரிக்காவில் இந்தியாவின் பழக்க வழக்கங்களைப் பற்றியே அதிகம் பேசி அவர்களின் தப்பபிப்பிராயத்தைக் களைந்துவந்த சுவாமிஜி இங்குதான் வேதாந்த உபதேசத்துக்குப் பிராதான்யம் அளிக்கத் தொடங்கினார். ஜீவபிரம்ம ஐக்கியத்தைச் சொல்லும் அற்புத வாசகங்களை ஆர்வமுடன் சில அமெரிக்கர் அங்கு பருகினர்.

Koviloor Digital Library

மேரி ஹேலுக்கு சுவாமிஜி எழுதுவார்:
''நான் சிவோஹம், சிவோஹம் என்று கூறுகிறேன். வெள்ளை உள்ளமும், தூய்மையும், திரமும் படைத்த குடியிருப்பு வாசிகளும் 'சிவோஹம், சிவோஹம்' என்று திரும்பச் சொல்கிருர்கள். நான் மகிழ்கிறேன்''.

பிற்பாடு சுவாமிஜி எந்த உபதேச முறையைப் பின்பற்றிருரோ அதற்கு க்ரீனேக்கர் ஒரு பயிற்சிக்கூடமாக இருந்தது. அமெரிக்காவில் இத்தனை நாட்கள் மாபெரும் மன்றங்களில் பேசி, பட்டு மெத்தைகளில் உறங்கியவர் க்ரீனேக்கரில் இருந்தபோது இந்தியாவில் தாம் இயற்கையுடன் வாழ்ந்தபோது எப்படி ஆனந்தம் கண்டாரோ, அப்படி அமைதியுடன் இன்பம் கண்டார். 'தரையில் படுப்பதிலும், வனத்தின் தரு நிழலில் தியானம் செய்வதிலும் நான் பெறும் மகிழ்ச்சியை என்னென்பேன்!' என்கிருர் சுவாமிஜி.

பரவச நிலையிலிருந்த சுவாமிஜி எல்லாவற்றிலும் ஈசுவர பூரிதத்தை உணர்ந்த நாட்கள் அவை. சுவாமிஜி க்ரீனேக்கரில் இருந்தபோது புயலொன்று வீசியது. அதையும் சர்வேசுவரியின் விளையாட்டாகவே கண்டு அவர் எழுதுவதைப் பாருங்கள்: ''இங்குள்ள கூடாரங்களுக்குக்கூட ஒரேயடியாக ஆத்ம உணர்ச்சி வந்து விட்டது. நேற்றடித்த புயலில் அவை மனிதர்களின் பார்வையிலிருந்து தப்பி விடுபட்டு ஓடியேவிட்டன. சுமார் இருநூறு நாற்காலிகள் ஆத்மபரவசத்தில் தரையில் கால் பரவாமல் நர்த்தனமாடின'' என்கிருர்!

* * *

சர்வமத மகாசபையின் விளைவாகவோ என்னவோ சமய சமரஸ மகாநாடுகள் பல அமெரிக்காவில் நடைபெற்றன. கர்னல் ஹிக்கின்ஸன் என்பவர் ப்ளிமத்தில் நடத்திய மகாநாட்டில் சுவாமிஜி கலந்துகொண்டார்.

அங்கிருந்து, சுவாமிஜி தம் பிரிய சிஷ்யையும், நடுக்காலத்தில் தம்மீது சுமத்தப்பட்ட அபாண்டங்களை நம்பித் தம்மைத் துறக்க நினைத்தவள் என்று தாம் எண்ணியவளுமான, ஸ்ரீமதி ஜான் பாக்லியின் அழைப்பைப் பெற்று அன்னிஸ்க்வாம் வந்தார்.

இதற்குச் சரியாக ஓராண்டுகளுக்கு முன்பு, அமெரிக்காவில் யாரும் அறியாதவராக, சர்வமத மகாசபையில் தமக்கு இடம் கிடைப்பதே சந்தேகம் என்று எண்ணியவராக சுவாமிஜி இதே அன்னிஸ்க்வாம் வந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கக்கூடும். இந்த ஓராண்டு இடைக்காலத்தில் எத்தனை பெருமைகளை அவர் சாதித்து விட்டார்? இந்தச் சாதனைகளுக்கு நன்றி தெரிவித்து ஜூன்

Koviloor Digital Library

மாதத்தில் சென்னை நகரம் அவருக்களித்த பாராட்டுகளைத் தெரிவிக்கும் லிகிதம் இரு மாதங்களுக்குப்பின் அன்னிஸ்க்வாமில்தான் சுவாமிஜியின் கையில் கிட்டிற்று.

செப்டம்பர் மாதம் சுவாமிஜி போஸ்டனுக்குச் சென்றார். பிரசங்கத்தில் அலுப்பு ஏற்பட்டு புத்தகம் எழுதவேண்டும் என்ற ஆவல் இச்சமயத்தில் சுவாமிஜிக்கு உண்டாயிற்று. ஆனால் அவர் உரை நிகழ்த்தாமலிருக்க யார் விட்டார்கள்? இத்தனைப் பிரசங்கங்களுக்கும் மத்தியில் அவர் எப்படியோ ஓர் அரிய கட்டுரையை யாத்தார். 'சென்னைப் பாராட்டுக்கு சுவாமிஜியின் பதில்' என இப்போது புகழ்பெற்றுள்ள உரை இந்தக் கட்டுரையின் வடிவம் தான் என்று பலர் கூறுகிறார்.

இந்த செப்டம்பர் மாதத்தில் சுவாமிஜி தாயகத்துக்குப் பல கடிதங்கள் எழுதினார். அவற்றிலெல்லாம், பாரதம் புத்துணர்ச்சி கொண்டு, எழுச்சிபெற்று ஆன்மீக மாளிகை எழுப்பவேண்டுமென்று அவர் அறைகூவல் விடுத்தார். ''என் கண்முன் நான் தெள்ளத் தெளிய ஒரு காட்சியைக் காண்கிறேன். யாரும் வகுத்தற்கரிய பிராயத்தினளான தேவி விழித்துக் கொண்டு விட்டாள். இளமைத் துடிப்புடன் சிம்மாதனத்தில் வீற்றிருக்கிறாள். முன் எப்போதையும்விடக் காந்தியுடன் வீற்றிருக்கிறாள். சாந்தத்தின் குரலாக, அருளின் குரலாக அவளுடைய பெருமைகளைப் பாரெங்கும் பிரகடனம் செய்யுங்கள்'' என்று ஒரு கடிதத்தில் எழுதுகிறார் சுவாமி விவேகானந்தர்.

போஸ்டனிலிருந்து அக்டோபர் இரண்டாந்தேதி கேம்பிரிட்ஜ் சென்று ஸ்ரீமதி ஒல் புல்லின் இல்லத்தில் தங்கினார். பிரசித்திபெற்ற வயலின் வித்வானாக இருந்து மறைந்த ஒல்புல் என்பவரின் மனைவி இவள். இவளை சுவாமிஜி தாயாகக் கருதி, தாய் என்றே அழைத்தும் வந்தார். இவருடைய உணர்ச்சிகளை அவளும் பிரதிபலித்தாள். இதேபோல் அமெரிக்காவில் அவர் சந்தித்த வேறு பலரும் அவரைப் பெரிய தத்துவஞானியாகக் கண்டு மரியாதை செலுத்தும்போதே, தங்களின் அன்புக்குரிய ஓர் உறவினராகவும் கருதி சுவாதீனமாகப் பழகினர். ஹேல் சகோதரிகளின் உதாரணத்தைத்தான் முன்பே பார்த்திருக்கிறீர்களே!

கேம்பிரிட்ஜில் ஸ்ரீமதி ஒல்புல் சுவாமிஜிக்கு சகல வசதிகளுடன் இருக்கை அமைத்துத் தந்தபடியால் அவரும் எழுதும் பணியில் நிம்மதியாக ஈடுபட்டார்.

டாக்டர் வில்லியம் ஜேம்ஸ் என்ற புகழ்பெற்ற தத்துவ சாஸ்திரி இச்சமயத்தில் சுவாமிஜிக்கு அறிமுகமானார்.

Koviloor Digital Library

''சமாதி என்றும், அப்போது நேரடியாகப் பரம்பொருளுடனும் தொடர்பு கொள்ளலாம் என்றும் சொல்கிறீர்களே! இது அநுபவத்துக்கு வரக்கூடியதுதானா ?'' என்று கேட்டார் டாக்டர் ஜேம்ஸ்.

அவ்வளவுதான். அந்தக் கணமே சுவாமிஜி பரசிந்தனையில் முழுகினார். அந்தக்கணமே 'தோன்றுதெல்லாம் விழுங்கும் சொரூபமாகி' மெய்ப்பொருளில் நின்றார். எந்தவிதமான உணர்வும் அவருக்கு அப்போதில்லை. கொழுந்துவிட்டுப் பிரகாசித்தது அவரது மேனி. டாக்டர் ஜேம்ஸ் சுவாமிஜியின் உன்னத அகப் பயிற்சியைக் கண்டு ஸ்தம்பித்துப் போய்விட்டார். தெரியாமலா ஆதிசங்கர பகவான் 'ஆத்ம சாக்ஷாத்காரம் இங்கேயே இருக்கிறது; இன்றே இருக்கிறது' என்று மீண்டும் மீண்டும் அடித்துச் சொன்னார் ?

ஓய்விருந்தும் சுவாமிஜியால் புத்தகமெழுதும் பணியைத் தீவிரமாகச் செய்ய முடியவில்லை. ஏதோ எதிலுமே ஓர் ஆயாசம் கண்டது. ''பொது வாழ்வும், பத்திரிகைப் பிராபல்யமும் வெறும் 'நான்ஸென்ஸ்'. இது எனக்குப் போதுமென்றாகிவிட்டது. சாந்த ஹிமாலயத்துக்கு திரும்பமாட்டோமா என்று ஏங்குகிறேன்'' என்று அழசிங்கருக்கு எழுதினார். ஆனால் ஈசுவரியின் திரு உள்ளம் அப்படியில்லையே ! தனஞ்ஜயனின் தனுசிலிருந்து விடுபட்ட பாணம் பூமியின் அடிவாரம்வரை சென்று கங்கையைப் பீறிடச் செய்ததுபோல், கரும்பு வில் தரித்த ராஜேசுவரியின் பாணமாகிய சுவாமிஜியும் அமெரிக்க சமுதாயத்தின் ஆயிரக்கணக்கான மக்களின் அடி ஆழம்வரை குடைந்து சென்று, ஆன்மப் பெருக்கை அங்கிருந்து பீய்ச்ச வேண்டியிருந்ததே !

சுவாமிஜி மீண்டும் உத்வேகம் பெற்றார்.

அக்டோபர் பன்னிரண்டாம் தேதி பால்டிமோர் அடைந்தார்.

'' 'சுவாமி விவேகானந்தர்' என்பதில் 'சுவாமி' என்றால் மதகுரு என்று அர்த்தம்; விவேகானந்தர் என்பது அவருடைய குடும்பப் பெயர்'' என்பதாக அவரை 'அறிமுகம்' செய்தது 'பால்டிமோர் அமெரிக்கன்'. சுவாமிஜியின் பெயரையும், அவருடைய வாழ்க்கைச் சம்பவங்களையும் அவர் கூறும் கருத்துக்களையும் அமெரிக்கப் பத்திரிகைகள் தாமறியாமலே என்னபாடு படுத்தியிருக்கின்றன என்பதை முழுவதும் சொல்வதே ஒரு தனிப் புத்தகமாக விரிந்துவிடும்.

வ்ருமன் சகோதரர்கள் என்பதாகத் துடிப்புவாய்ந்த மூன்று இளைஞர்கள் பால்டிமோரில் சமூக சீர்திருத்தத்தையும், மதத்தை

Koviloor Digital Library

யும் இணைத்து இயக்கம் நடத்திவந்தனர். சுவாமிஜி அதனில் கலந்துகொண்டார்.

பால்டிமோரில் இனபேதம் தலைதூக்கியிருந்தது. கருப்புத் தோலுடைய சுவாமிஜிக்கு இடமளிக்கக்கூட ஒரு போஜனசாலை மறுத்ததாம்.

இச்சந்தர்பத்தில் சுவாமிஜி அமெரிக்காவில் தங்கியிருக்கையில் நேர்ந்த இதேபோன்ற வேறு சில உருக்கமான நிகழ்ச்சிகளையும் கூறலாம்.

ஏதோ ஒரு ரயில் நிலையத்தில் சுவாமிஜி இறங்கியபோது அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பைக்கண்ட நீக்ரோ போர்ட்டர் ஒருவன் அவரை அணுகினன். ''இந்த வெள்ளையர்களிடம் என்னைப்போல் கறுப்புத்தோல் படைத்த தாங்கள் மதிப்புப்பெற்றிருப்பதைக் காணக்காண எனக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. உங்கள் கையைப் பிடித்து நான் குலுக்க அநுமதிப்பீர்களா ?'' என்று ஆர்வத்துடன் கேட்டான் அவன். சுவாமிஜி உடனே அவனது கையை இறுகப் பற்றிக்கொண்டார். ''நன்றி சகோதரா, நன்றி'' என்று நாத்தழுதழுக்கக் கூறினர்.

சுவாமிஜியை நீக்ரோவில் சிவந்தவர் என்றே நினைத்து ஒதுக்கிய இடங்கள் உண்டு. அப்போதெல்லாம் அவர் தாம் நீக்ரோவல்ல என்றே சொல்லிக்கொள்ள மாட்டார். பிறகு செய்தித் தாள்களில் அவரது பிரசங்கத்துடன் படத்தையும் கண்டு தங்கள் தவறை உணர்ந்து அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டவர்களும் உண்டு.

முடிதிருத்தகங்களில்கூட சில சுவாமிஜிக்கு சிகைதிருத்த முடியாது என்று சொல்லி வெளியேற்றியுள்ளன. சுவாமிஜியும் மௌனமாக வெளியேறி விடுவார். ''ஏன் சுவாமி, நீங்கள் நீக்ரோ அல்ல என்பதை அவர்களுக்குச் சொல்லவில்லை ?'' என்று மேல்நாட்டுச் சீடரொருவர் பிற்காலத்தில் விவேகானந்தரைக் கேட்டார். அப்போது சுவாமிஜி, ''என்னது ! இன்னொருவரை மட்டமாகச் சொல்லி அதனுல் நான் உயருவதா ? இந்தப் பூவுலகத்தில் அதற்காக வரவில்லை'' என்ருர். ஆம், எல்லாரும் தெய்விகம் பொருந்தியவர்கள் என்பதை எடுத்துச் சொல்வதற்காக அல்லவா அவர் பூவுலகம் வந்திருந்தார் ?

சுவாமிஜியின் ஆற்றல்களைச் சந்தேகித்த பலரிடம் அவர் சிக்கிக்கொண்டதுமுண்டு. அப்போதெல்லாம் சுவாமிஜி பிரத்யக்ஷமாகத் தமது சக்திகளை நிருபித்துக் காட்டியிருக்கிருர். டாக்டர் வில்லியம் ஜேம்ஸ் சமாதி நிலைபற்றி ஐயம் கொண்டவுடன் சமாதி எய்தியதாகக் கண்டோமல்லவா ?

Koviloor Digital Library

சிகாகோவில் ஒரு செல்வந்தர் சுவாமிஜியின் யோக சக்தியைக் குறித்து ஐயப்பட்டார். ''சுவாமிஜி, யோக சக்தியால் அற்புதம் நிகழ்த்த முடியும்; ஆனால் நான் நிகழ்த்தத் தயாரா யில்லை என்கிறீர்கள். உண்மையில் உங்கள் யோகத்தால் அற்புதம் நிகழ்த்தவே முடியாதோ என்னவோ? முடியுமென்றால் என்னுடைய சிந்தனைகளையும், பூர்வ சரித்திரத்தையும் கண்டறிந்து சொல்லுங்களேன்'' என்றார். ஒரு விநாடி தயங்கிய சுவாமிஜி தனது பார்வையை அந்தத் தனவந்தர்மீது ஆழப்பதித்தார். கூரிய அந்தத்திருஷ்டி அந்த மனிதரைத் துளைத்துக்கொண்டு அவரது சகலமான சிந்தனைகளையும், பழம் வாழ்க்கையையும் உட்புறம் வெளிப்புறமாகக் கவிழ்த்துவிட்டது. சுவாமிஜிக்குத் தம்மைப்பற்றிச் சகலமும் தெரியத் தொடங்குகிறது என்பதைத் தனிகர் புரிந்துகொண்டார். அவருக்கு நரம்புத்தளர்ச்சியே உண்டாகிவிட்டது. ''ஐயோ, சுவாமி! என்ன செய்கிறீர்கள்! என் உள்ளத்தை அப்படியே கடைந்து பழைய மர்மங்களையெல்லாம் திரட்டிக்கொண்டு வருகிறீர்களே, வேண்டாம் சுவாமி, வேண்டாம்'' என்று கூவினார் அவர்.

அமெரிக்காவின் மேற்கத்திய பாகத்தில் அவருக்கு ஏற்பட்ட ஒரு பயங்கரமான — ஆனால் அவர் பயங்கரமாகவே உணராத — சோதனையையும் இவ்விடத்திலேயே கூறிவிடலாம்.

அந்த மேற்கத்திய ஊரில் ஆயர்கள் என்பதாகப் பெயர் சூட்டிக்கொண்டு பட்டதாரிகள் சிலர் கால்நடைப் பண்ணை நடத்தி வந்தனர். சுவாமிஜி, பிரம்ம நிலையைத் துய்த்தவன் மலைகுலைந் தாலும் நிலைகுலையாமல் 'ஆபூர்யமாணம் அசலப்ரதிஷ்டம்' என்பதாக விளங்குவான் என்று ஓர் உரையில் கூறியதைக் கேட்டிருக்கிறார்கள் இவர்கள். அதன் சத்தியத்தைச் சோதித்துப் பார்க்க விரும்பினார்கள். சுவாமிஜியைத் தங்கள் பண்ணைக்கு அழைத்தனர். மாடுகள் தண்ணீர் பருகும் மரத்தொட்டியொன்றையே கவிழ்த்துப்போட்டு சுவாமிக்கு மேடை அமைத்திருந் தார்கள். இதனால் அவர் சலனம் எதுவும் அடைந்துவிடவில்லை. எல்லாருக்கும் ஒரேபோல உபதேசம் வழங்கும் சமபாவம்பெற்ற அவர் சர்வமத மகாசபையின் ஜாஜ்வல்யமான அரங்கில் ஆயிரக் கணக்கான மக்களுக்கு முன்னர் உரையாற்றியது போலவேதான் இங்கும் உரை நிகழ்த்தினார்.

அப்போது......திடீரென அது என்ன சத்தம்! அவர் நின்று பேசிய தொட்டி முறிந்துவிட்டதா? இல்லை. அதனிலும் பயங்கரமான துப்பாக்கி சுடும் சத்தமல்லவா அது! ஆம். சுவாமிஜியைச் சுற்றி வேட்டுக்கள் பறந்தன. அவரது காதை

Koviloor Digital Library

உரசியவாறு 'ரொய்ங்' 'ரொய்ங்' என்று ரவைகள் பறந்தன. 'கௌபாய்கள்' முரட்டுத்தனமாக நடத்திய சோதனை இது! அதனால் சுவாமிஜியோ இந்தக்குண்டு மாரியைப் பொருட்டாகவே நினையாமல் சாவதானமாகத் தமது பிரசங்கத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தார்!

எது நேரினும் இடர்ப்பட மாட்டோம்
அண்டம் கலங்கினாலும் அஞ்ச மாட்டோம்.

என்ற ஆப்தர் மொழியை இவ்வாறு மெய்யாக்கினார்.

* * *

அக்டோபர் பிற்பகுதியில் சுவாமிஜி பால்டிமோரிலிருந்து புறப்பட்டு அமெரிக்காவின் முக்கிய நகரமாகிய வாஷிங்டனை அடைந்தார். அங்கு ஸ்ரீமதி டாட்டன் என்பவளின் விருந்தின ராகத் தங்கினார். அப்போது அவர் சிகாகோவிலுள்ள இஸபெல் லுக்கு எழுதிய கடிதத்தில், ''என் நண்பர் ஒருவர் லண்டனில் இருக்கிறார். அவர் தங்கியுள்ள வீட்டுச் சீமாட்டி என்னை அங்கு வந்து தம் விருந்தாளியாகத் தங்கியிருக்குமாறு அழைத்திருக்கிறாள். இந்தியாவில் உள்ளவர்கள் என்னைத் திரும்பிவரும்படி அழுத்த மாகக் கேட்டுக் கொள்கிறார்கள்'' என்று கண்டிருக்கிறார். தாம் இங்கிலாந்துபோக விரும்புவதாகவும் தெரிவித்திருக்கிறார். ஆனால் அந்த எண்ணம் ஈடேற 1895 ஜனவரி முடியக் காலம் வைத் திருந்தாள் திவ்யமாதா.

சுவாமிஜி இந்தியாவுக்குத் திரும்பாவிடினும், அவர் அமெரிக் காவில் செய்த பெருஞ்செயல் இந்தியாவுக்குச் சென்று அங்கு ஒரு விழிப்பை ஏற்படுத்தத் தொடங்கிவிட்டது. சிகாகோவில் சர்வமத மகாசபை நடைபெற்றபோது சுவாமிஜியுடன் பரிசயம் பூண்ட அவருடைய பக்தரான ஜி. ஜி. நரசிம்மாசாரியா என்ற வாலிபர் 1894 நவம்பர் மாதம் சென்னை பச்சையப்பன் கல்லூரியிலிருந்து எழுதிய கடிதத்திலிருந்து இது தெளிவாகத் தெரிகிறது:

''நீங்கள் அங்கு செய்கிற ஒவ்வொரு காரியமும் இந்தியாவில் அதிக வலுவோடு எதிரொலிக்கிறது. இங்கு ஒவ்வொருவரும் ஒரு சமயச்சூழலை உணர்கின்றனர். இங்கு 'கீழ்த்தரமான ஹிந்து மிலேச்சர்'களின் ஆபத்பாந்தவர்களாக உள்ள மிஷனரிகள் தங்க ளுடைய கனவு கலைந்து எழுந்துவிட்டனர். தங்கள் பிரசாரத் துக்குப் பாதகமான சூழ்நிலை உண்டாகிவிட்டதைக் கண்டு அதற்கு முழுக்காரணமும் நீங்களே என்று புத்திசாலித்தனமாகக் கண்டு பிடித்துவிட்டனர். எனவே தங்களுடைய ஈட்டிகளைக் கடல்

Koviloor Digital Library

கடந்து உங்கள்மீது விசத் தொடங்கிவிட்டார்கள்'' என்கிறார் நரசிம்மாசாரியார்.

ஸ்ரீராமகிருஷ்ண தேவரும், சுவாமி விவேகானந்தரும் அவதரித்தது உலகத்தில் ஆன்மிகம் பரவவும், பாரதத்தில் ஹிந்து தர்மம் மீண்டும் நிலைபெறவும்தான். எல்லா மதங்களும் சத்தியமே என்று உலகுக்கு எடுத்துக்கூற வேண்டியதுடன், இந்தியாவைப் பொறுத்தமட்டில் காலம் கடந்து ஹிந்து மதம் பரம சத்தியமானதே என்று சொல்லி மக்களைப் பிற மதங்களில் புகாதவாறு அணைபோடவேண்டிய ஆணை அவர்களுக்கு இருந்தது. பரமஹம்ஸரின் ஊனுடல் மறைந்தபின் அவரது உள்ளத்தைத் தம்முள் தேக்கி 'ராமகிருஷ்ண-விவேகானந்தர்' என்றே பெயர் பெற்றுவிட்ட ஞானச் செல்வர் அயல்நாடுகளில் தாம் புரிய வேண்டியிருந்த அவதாரப் பணியைச் செய்யும்போது, தாய் நாட்டில் அவருக்கிருந்த கடமையும் தன்னால் நிறைவேறத் தொடங்கிவிட்டது.

எந்த கிறிஸ்துவமதம்தான் ஒரே உண்மையான மதம் என்று ஹிந்துக்கள் மோகம் கொண்டிருந்தனரோ, அந்த கிறிஸ்துவ மக்களே சுவாமிஜியைக் கொண்டாடிப் பாராட்டி வழிபடுகிறார்கள் என்று அறிந்த பாரதத்தின் படிப்பாளிகள் 'ஆஹா, நம்முடைய சநாதன தர்மமே உயர்வானதாகத் தெரிகிறதே' என்று விழிப்புப் பெறலாயினர். போக போக்கியங்களில் பெயரெடுத்த அமெரிக்க நாட்டில் அவற்றைவிட ஆத்மிகத்தை உயர்வாகக் கருதும் நாட்டமும் ஏற்பட்டதால், மேல்நாடுகள் அளித்த லௌகிக வாழ்முறையில் ஊறிக்கொண்டிருந்த பாரதமக்களுக்கும் அதிலிருந்து விடுபடவேண்டும் என்ற ஓர் அரிப்பு ஏற்படத் தொடங்கிவிட்டது!

*　　　*　　　*

ஹிந்து மக்கள் கிறிஸ்துவ மதம் தங்களுக்கு அவசியமில்லை என்று உணர்ந்ததைவிட விசேஷம், அமெரிக்க மக்களுக்கே இந்தியாவில் கிறிஸ்துவ மதமாற்றம் செய்யவேண்டிய தேவையில்லை என்ற எண்ணம் தோன்றியதாகும். 1894-ம் ஆண்டு அக்டோபர் 10-ந் தேதி வெளியான 'மெதாடிஸ்ட் ப்ராடெஸ்டண்ட்' என்ற சஞ்சிகையில், ''அயல்நாட்டு மிஷன்களுக்கு வருமானம் கணிசமாகக் குறைந்து வருகிறது'' என்று காண்கிறது. இதை மூடி மறைப்பதற்காக சுவாமிஜி வாஷிங்டனில் தங்கியிருந்தபோது மிஷனரிகள் இந்தியாவில் தங்கள் பிரசாரத்துக்கு முன் எப்போதையும்விட பேராதரவு கிடைத்துவருவதாகப் பறை சாற்றத் தொடங்கின. சர்வமத மகாசபையின்

Koviloor Digital Library

அக்கிராஸனருக்கே, 'இதேதடா, தாம் முன்னின்று நடத்திய மாநாடு காரணமாக நமது மதத்தலைவர்களின் அதிருப்திக்கு ஆளாகவேண்டி நேரிட்டுவிட்டதே' என்ற 'குளிர்' தோன்றத் தொடங்கியதாகத் தெரிகிறது. அவரும் தற்போது 'சர்வமத மகாசபையின் முடிவாக கிறிஸ்துவ மதமே சமயங்களில் தலை சிறந்தது என ஏற்பட்டுவிட்டது' என்று கூறியதாக அக்டோபர் 17-ந் தேதி 'பால்டிமோர்ஸன்' கூறுகிறது.

* * *

வாஷிங்டனில் வேதாந்தத்துக்கு வித்திட்ட சுவாமிஜி நவம்பர் 7-ந் தேதி அங்கிருந்து புறப்பட்டு ஃபிலடெல்ஃபியா அடைந்தார். பிறகு ஒரு மாதத்துக்கு — டிஸம்பர் 5-ந் தேதிவரை — அவரது சுற்றுப் பயணத்தைப்பற்றிய விவரங்கள் தெரியவில்லை. சுவாமிஜியின் அமெரிக்க வாழ்வில் ஒவ்வொரு விநாடியையும் பற்றி அறிய, அரிய ஆராய்ச்சி செய்த பர்க்கே இங்கு நம்மைக் கைவிட்டு விடுகிறுர்.

பிறரறியாமல் சுவாமிஜி செலவிட்ட இந்தக் காலத்தில் அவர் எங்கிருந்தார் என்று நாம் ஒருவாறு அநுமானிக்கலாம். "பரமஹம்ஸருடன் பரமசிஷ்யராக இருந்தார்; திவ்ய மாதாவுடன் பவ்யமான குழந்தையாக இருந்தார்; பரம்பொருளுடன் பரம்பொருளாகவே இருந்தார்' என்று சொல்லலாம். 'மெடிகல் செக்-அப்' போல 'ஸ்பிரிசுவல் செக்-அப்' செய்து கொண்டார் எனலாம்.

நவம்பர் 30-ந் தேதி சுவாமிஜி நியூயார்க்கிலிருந்து அழகிய சிங்கருக்கு எழுதிய கடிதத்தில், ''நான் நியூயார்க்கில் ஒரு சங்கம் நிறுவி விட்டேன். அதன் 'உபதலைவர் உனக்கு விரையில் எழுதுவார். இச்சங்கத்துடன் விரைவிலேயே கடிதத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். மற்ற பல இடங்களிலும் இதுபோல என்னுல் சங்கங்கள் தொடங்க முடியும் என நம்புகிறேன்'' என்கிறுர். இந்தச் சங்கத்தைப்பற்றி நமக்குத் திட்டவட்டமாக எதுவும் தெரியவில்லை.

ஆரம்ப காலத்தில் இந்தியாவுக்குப் பொருளுதவி செய்வதற்காகவே சுவாமிஜி சங்கங்களை நிறுவ விரும்பினுர், இதேபோல இந்தியர்களும் சங்கங்கள் நிறுவிக்கொண்டு, ஸ்தாபன ரீதியில் அமெரிக்க சங்கங்களைத் திரவியசகாயம் கோரிப் பெறவேணுமென்றும், நிதிப்பொறுப்பிலிருந்து தம்மை விடுவிக்க வேணுமென்றும் விரும்பினுர். ஆனுல் காலக்கிரமத்தில் இந்தியாவின் நலனுக்காகமட்டுமின்றி அமெரிக்காவின் ஆத்மீக நலனுக்காகவே

Koviloor Digital Library

அங்கு சங்கங்கள் ஸ்தாபிக்கவேண்டியதன் அவசியத்தை அவர் உணரலானர்.

டிஸம்பர் 5-ந் தேதி சுவாமிஜி கேம்பிரிட்ஜில் ஸ்ரீமதி புல் என்பவளின் இல்லத்தை அடைந்தார். கேம்பிரிட்ஜ் கல்லூரியில் பிரசங்கம் புரிகிற நல்வாய்ப்பைப் பெற்ருர். இங்கு சுவாமிஜி அடைந்த புகழின் உச்சகட்டமாகத்தான் ஒன்றேகால் ஆண்டுகளுக்குப் பின் ஹார்வர்ட் பல்கலைக்கழகம் அவருக்கு கீழ்நாட்டுத் தத்துவ சாஸ்திரங்களுக்குரிய பேராசிரியர் பதவி வழங்க முன் வந்தது. பெருமதிப்பு சார்ந்த இந்தப் பதவியை ஏற்க சுவாமிஜி மறுத்துவிட்டார் என்பதையும் இங்கே குறிப்பிடலாம். ஞான ஆசாரியராகச் சுற்றவேண்டியவரைப் பேராசிரியராக்க முடியுமா ?

* * *

சுவாமிஜி நிகழ்த்திய அற்புதமான பல பிரசங்கங்களின் சாரத்தைக்கூட இந்நூலில் அளிக்க இயலவில்லை. இதற்காக வாசகர்களின் மன்னிப்பைக் கோருகிருேம். எனினும் தத்துவ தரிசியாக அவர் ஆற்றிய உரைகளைத் தர இயலாவிடினும், அவருடைய மானுடப் பண்புகளை விளக்கும் ஓர் உரைபற்றி மட்டும் இங்கே குறிப்பிடலாம்.

கேம்பிரிட்ஜில் 'இந்திய மாதரின் லக்ஷியம்' என்பதாக ஒரு பிரசங்கம் புரிந்தார் சுவாமிஜி. இதன் இறுதியில் அவர் தம்மை ஈன்ற மாதாவின் நினைவில் கனிந்தார். ''இவ்வுலகில் நான் என்னவெல்லாம் சாதிக்க முடிந்ததோ அதற்காக என் அன்னையுடைய தன்னலமற்ற அன்புக்கும், பரிசுத்தத்துக்கும் நான் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்று அவர் கூறினர்.

ஆம், புவநேசுவரி தேவி அவரைச் சந்நியாசம் பூணக்கூடாது என்று பிடிவாதமாக நிர்ப்பந்தித்து இருந்தால், அந்த வயோதிக விதவையின் ஆணையை அவர் எப்படி மீறியிருக்க முடியும்? தான் துறந்த மகன் அமெரிக்காவில் அடைந்த புகழ்பற்றி அவள் என்ன அறிந்தாளோ, இல்லையோ சுவாமிஜிமட்டும் அவளைப்பற்றி அடிக்கடி நினைந்து வந்தார். இந்தியாவில் பரிவிராஜக வாழ்வின் போது பேசியதைவிட அமெரிக்காவில் அவளைப்பற்றி அதிகமாகப் பேசினர். ஜனனிக்கும், ஜன்ம பூமிக்கும் பெருமை தேடித்தந்தார்.

சுவாமிஜி தம் தாயிடம் கொண்டிருந்த நேயம் கேம்பிரிட்ஜையும், போஸ்டனையும் சேர்ந்த பெண்களின் உள்ளத்தைத் தொட்டது. சுவாமிஜியையும் அவருடைய தாயையும் எண்ணும் போது அவர்களுக்கு இயேசுநாதரும், அவரது தாய் மரியாளும் நினைவில் வந்தனர். அவர்கள் புவநேசுவரியின் விலாசத்தைத் தெரிந்துகொண்டு, சுவாமிஜி அறியாமலே அவளுக்கு இயேசு-

Koviloor Digital Library

நாதரும் மரியாளும் சேர்ந்து காட்சி அளிக்கும் ஓர் ஓவியத்தை அனுப்பிவைத்துத் தங்களின் இதயம் செறிந்த அன்பு வணக்கங்களையும் எழுதித் தெரிவித்தனர்.

ப்ரூக்லினில் நன்னெறிச் சங்கம் என்பதாக ஒன்றினை டாக்டர் லூயி ஜி. ஜேன்ஸ், சார்லஸ் எம். ஹிக்கின்ஸ் ஆகியோர் நடத்தி வந்தனர். அதன் ஆதரவில் உரைகள் ஆற்றுவதற்காக சுவாமிஜி ப்ரூக்லின் வந்து சேர்ந்தார்.

'நேற்றுமாலை ப்ரூக்லின் நன்னெறிச் சங்கத்தின் அழைப்பு ஏற்று, விஸ்தாரமான பிரசங்கமண்டபமும், அடுத்துள்ள அறைகளும் நிரம்பிவழிகிறபடி கூடிய நூற்றுக்கணக்கானவர்களில் ஒவ்வொருவரும், ஹிந்து சந்நியாசியாகிய பரமஹம்ஸ சுவாமிவிவேகானந்தரின் மூலமாக அன்பையும், சகிப்புத் தன்மையையும் தித்திக்கும் சொற்களில் எடுத்துக்கூறிய புராதன வேதரிஷிகளின் குரலில் வசியமாயினர்' என்று சுவாமிஜியின் முதல் பிரசங்கத்தை 'ஸ்டான்டர்ட் யூனியன்' வர்ணிக்கிறது. 'ரிஷிகளின் குரல்' என்றே தலைப்பிட்ட இந்தச் செய்தியில் இன்னொரு பகுதி ''அப்பழுக்கற்ற ஆங்கிலத்தில் அன்பையும், அநுதாபத்தையும், ஏற்புத்திறனையும் மட்டுமே மொழியும் வார்த்தைகளைப் பொழியும் இவர் ஹிமாலயத்தில் புகழ்வாந்த முனிவர்களின் ஒரு பிரகாசமான பிரதிநிதி; கிறிஸ்துவர்களின் நெறியுடன் பௌத்தர்களின் தத்துவத்தைப் பிணைக்கும் புதிய சமயமொன்றின் ஸ்தாபக ஞானி'' என்கிறது.

''உங்களுடைய வேதத்தைக் கற்பதால் நான் என்னுடைய வேதத்தை மேலும் நன்றாகக் கற்க முடிகிறது. அதேபோல என்னுடைய வேதத்தைப் படிப்பதால் நீங்களும் உங்களுடைய வேதத்தை மேலும் நன்றாகக் கற்க முடியும். ஒரே சத்தியம் பலப்பல விதங்களில் வெளிப்பட்டிருக்கிறது. வெவ்வேறு நாடுகளின் பௌதிக இயல்பையும், மன இயல்பையும் ஒட்டிய மாறுபட்ட சூழல்களுக்கு ஏற்பப் பலவிதங்களில் ஒன்றே வெளியாகியுள்ளது.

''ஜட வஸ்துக்களைக் கொண்ட பௌதிக உலகில் விரிவது என்பதே வாழ்க்கை; சுருங்குவது என்பதே சாவு. விரியமுடியாத எதுவும் வாழ்வதில்லை. இதையே ஆத்ம உலகுக்குப் பொருத்தினால் நாம் காணும் முடிவு இதுவே: ஒருவன் விரிய விரும்பினால் அவன் அன்பு செய்தே ஆகவேண்டும். அவன் அன்பு செய்வதை எப்போது நிறுத்துகிறானோ அப்போது சாகிறான். இது உங்கள் இயல்பில் ஏற்பட்டது. நீங்கள் (அன்பு) செய்தேயாகவேண்டும். ஏனெனில் இதுவே வாழ்க்கையின் விதி'' என்றார் சுவாமிஜி.

Koviloor Digital Library

சுவாமிஜியின் வேதாந்தப் பிரசாரம் ப்ருக்லினில்தான் உண்மையாகத் தொடங்கியது என்று மேற்கத்திய சிடர்கள் கூறு வது இதனுல் என்றறிய இந்த இரண்டே உதாரணங்கள் போது மல்லவா ?

ப்ருக்லினில் சுவாமிஜியைப் பலர் சரமாரியாகக் கேள்வி கேட்டபோதுதான் அவர் தற்போது அடிக்கடி எடுத்துச் சொல்லப் படும் இந்த வாசகத்தைச் சொன்னுர்: ''கீழ்நாடுகளுக்கு புத்தர் ஒரு மஹா உபதேசம் அளித்ததுபோல் மேல்நாடுகளுக்கு அளிக்க நான் ஒரு மஹா உபதேசம் வைத்திருக்கிறேன்.''

சுவாமிஜியின் உபதேசத்தை வாங்கிக்கொள்ள ப்ருக்லின் மிகவும் பக்குவமாக இருந்தது. இதைக் கெடுக்க முயன்ருர் டி. டிவிட் டால்மேஜ் என்ற பாதிரியார். ப்ருக்லினைச் சேர்ந்த இவர் உலக நாடுகளில் எல்லாம் பிரயாணம் நடத்திவிட்டு தாம் கண்ட இந்தியாவுக்கும், சுவாமிஜி கூறும் இந்தியாவுக்கும் சம்பந்த பிரசாரம் தொடங்கினுர். ''ஹிந்துவுக்கு ஏற்படுகிற மிகப் பெரிய விபத்து அவன் ஹிந்துவாகப் பிறப்பதுதான்'' என்றெல் லாம் அவர் எழுதி வந்தார். ஹிந்துக்கள் விரும்பி கிறிஸ்துவ சமயத்தில் சேருவதாகவும், ''இந்தியா முழுவதும் கிறிஸ்து வுக்கு மாறும்'' என்றும்கூட அவர் கூறினுர்.

ஆனுல் அவருடைய கூற்றுக்கள் ப்ருக்லின் மக்கள் காதில் ஏறவே இல்லை. பல மாதங்கள் அமெரிக்காவில் இல்லாதிருந்த டால்மேஜ் பாதிரியாருக்கு அங்கு சுவாமிஜி மதமாற்ற விஷயத்தில் எப்பேர்ப்பட்ட விழிப்பை ஏற்படுத்தியிருந்தார் என்பது தெரி யாது. 1894-ம் ஆண்டுக் கடைசியில் சுவாமிஜி எழுதினுர்: ''இந்த மிஷனரிகளும், அவர்களின் சகபாடிக்களும் தொண்டை யடைத்துப் போகிறமட்டும் ஊளையிட்டு விட்டார்கள்; உலகத்தில் மதம் மாற்ற நினைப்பவர்கள் யாருமே அப்படிப் பேச்சற்றுப் போகவேண்டியதுதான்'' என்று.

'நடைமுறையிலுள்ள ஹிந்து மதத்தில் பிழைகள் இருக்கக் கூடும்; ஆனுல் கிறிஸ்துவ மதத்திலும் இப்படி எவ்வளவோ உண்டு. எந்த மதமும் அதன் உண்மையான வடிவில் சத்திய தரிசனத்துக்கு அழைத்துச் செல்வதுதான். எனவே யாருமே தங்களுக்குரிய எந்த மதத்தையும் விடத் தேவையில்லை. இந்த எல்லா மதங்களுக்கும் பொதுவானது உபநிஷத வேதாந்தம். அதில் ஹிந்து மதத்துக்கு மட்டும் உரியது என்பதாக எதுவும் இல்லை'' —— இந்தக் கருத்தை சுவாமிஜி அமெரிக்காவில் நன்கு பதித்துவிட்டார். எனவே மதமாற்றம் செய்யும் மிஷனரிகளின் பேச்சு அங்கு எடுபடவில்லை. ஹிந்து சமூகத்திலுள்ள குறைபாடு

Koviloor Digital Library

களை அவர்கள் சுட்டிக்காட்டியபோது சுவாமிஜி, ''நாம் எந்தத் தேசத்தைப்பற்றியும் செய்கிற மதிப்பீடு அந்தத் தேசத்தின் இழி மக்களை அளவு கோலாகக் கொண்டதல்ல'' என்றார்.

எதிர்ப்பாளர்களுக்குச் சரியாக சுவாமிஜியும் தீவிரமாக விடைசொல்லிய நாளே கிடையாது. ஓரளவுக்கு விடைகூறி விட்டுச் சும்மாயிருந்து விடுவார். ''நானும் எதற்காக எதிர் தாக்குதல் நடத்தவேண்டும்? சந்நியாசி ஒருவனுக்குத் தற்காப்பு செய்துகொள்வது கடமையல்ல. சத்தியம் தன் வழியே முன் னேறும். என்னை நம்புங்கள். சத்தியம் சாசுவதமாக நிற்கும்'' என்று ஒரு முறை கூறினார் அவர். சத்தியம் சாசுவதமாக நிற்கவே செய்தது.

மதபோதகர்களினால் ஏற்பட்ட சர்ச்சை போதாதென்று வேறு புதியதொரு சர்ச்சை ப்ரூக்லினில் கிளம்பியது.

இந்தியப் பெண் குலத்தைப்பற்றி ஓர் உரை நிகழ்த்திய சுவாமிஜி, ஸ்திரீதனம் என்பதாக அவர்களுக்குச் சொத்துரிமை இருப்பது பற்றியும், இந்திய விதவைகள் எவ்வளவு கண்ணியமாகச் சொத்துக்களைப் பரிபாலித்து நல்வாழ்வு வாழ்கிறார்கள் என்பது பற்றியும் கூறினார். இதில் தவறுதலாக ஏதேனும் தெரிகிறதோ? ஆனால் இதை வைத்தே ஒரு பெரிய வாதம்தொடங்கியது.

தொடங்கியவர்கள் ரமாபாய் சங்கத்தைச் சேர்ந்த அமெரிக்கப் பெண்மணிகளாவர். (சுவாமிஜி அமெரிக்கா வந்த பின் நிகழ்த்திய முதல் பிரசங்கம் போஸ்டனில் உள்ள ரமாபாய் சங்கத்தில்தான் என்பது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.)

1858-ம் ஆண்டில் மராத்தி பிராம்மணர் ஒருவரின் பெண் ணாகப் பிறந்தவள் ரமாபாய். பதினாறு வயதுப் பெண்ணாக இருந்தபோதே தன் தம்பியுடன் இந்தியா முழுவதிலும் சுற்றிய வள். பல கல்விமான்களின் வீடுகளில் சமைத்துப்போட்ட அவள் தேச ஆசாரங்களையெல்லாம் கற்றதோடு அந்த வீடுகளில் நிலவும் கல்வியையும் கேள்வியாலேயே கற்றாள். ஆதிநாளிலேயே சம்ஸ் கிருதத்தில் தேர்ச்சிபெற்றிருந்த அவளது அறிவு நன்கு விருத்தி யாயிற்று. அவள் கல்கத்தாவுக்கு வந்தபோது அங்குள்ள பல்கலைக் கழகப் பேராசிரியர்களும் அவளுடைய புலமையை மதித்து அவளுக்கு 'சரஸ்வதி' என்று விருது அளித்தனர். இருபத்து இரண்டாவது வயதில் வசதியான ஒருவரைத் திருமணம் புரிந்து கொண்ட ரமாபாய், இரண்டே ஆண்டுகளுக்குப் பின் எட்டு மாதக் கைக்குழந்தையொன்றின் விதவை அன்னையாகத் தனித்து விடப்பட்டாள். இதன்பின் இந்தியாவின் இளம் விதவைகளுக்கு நல்வாழ்வளிப்பதே அவளது லக்ஷியமாயிற்று. மூடப் பழக்கங்கள்

Koviloor Digital Library

காரணமாகச் சிலர் பாலிய விதந்துகளுக்குச் செய்த கொடுமைகளால் ஹிந்து மதத்தின் மீதே வெறுப்படைந்து கிறிஸ்துவ மதத்தைத் தழுவிய ரமாபாய் இங்கிலாந்து சென்றுள். பிறகு அங்கிருந்து அமெரிக்காவுக்குச் சென்று சேவாசதனங்களை எப்படித் தோற்றுவித்து இயக்குவது என்பதைச் சுற்றிப்பார்த்து அறிந்து வந்தாள். அப்படித் தோற்றுவித்து இயக்குவதற்கு வேண்டிய நிதியும் சேகரம் செய்துவந்தாள்.

இளம் விதவைகளுக்கு நல்வாழ்வளிக்கவேண்டும் என்ற அவளது லக்ஷியம் யாரும் வரவேற்கக் கூடியதுதான். என்றுலும் சமூகத்தில் ஒரு சிலர் இழைத்த கொடுமைகளைப் பெரிதாக்கி இந்தியாவில் பெண்கள் படாதபாடு படுவதாக அவள் மிகைப் படுத்தி வருணித்ததால் அமெரிக்காவில் இந்திய சமுதாய வாழ்வைக் குறித்து மிகவும் இழிவான கருத்து ஏற்படலாயிற்று. மேலும், ஹிந்து விதவைகளின் கஷ்டத்துக்கு ஓரளவு ஹிந்து மதத்தையே அவள் பொறுப்பாக்கியிருந்தாள்.

'ரமாபாய் வட்டம்' என்பதாக அமெரிக்காவின் பல நகரங்களில் சங்கங்கள் தோன்றி இந்திய மாதருக்காகப் பணி செய்து வந்தன.

ஹிந்து தர்மத்தில் ஸ்திரிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள உயர்ந்த இடம் பற்றியும், அவர்களுக்குள்ள சொத்துரிமை குறித்தும் சுவாமிஜி பேசியது ப்ரூக்லின் ரமாபாய் வட்டத்தைக் கொதிப் படைய செய்துவிட்டது. அவர்கள் இந்தியாவில் எத்தகைய சூழ்நிலை இருக்கிறது என்று சொல்லி நிதி சேகரித்து அனுப்பி வந்தனரோ, அதற்கு மாறுபாடான சூழ்நிலை நிலவுவதாக சுவாமிஜி சொன்னதால், தங்கள் பணியைப்பற்றி மக்கள் அவநம்பிக்கை கொள்ளுமாறு அவர் செய்துவிட்டார் என்றே கருதினர். தங்கள் கருத்தைப் பத்திரிகைகளில் எழுத்தாகக் கொட்டினர். மிகவும் காரசாரமாகவே எழுதினர். சுவாமிஜி கூறியது சத்தியமல்ல என்று சொல்லி, இந்தியாவில் பெண்கள் ஆண்களின் அரக்கத் தனத்துக்கு அடிமையாகி, அகதியாகவே வாழ்கின்றனர் என்று எழுதினர். லட்சக்கணக்கான மூன்று-நாலு வயசுப் பெண் குழந்தைகளைத் தொண்டு கிழவர்கள் கலியாணம் செய்துகொண்டு அக்கிரமம் செய்வதாயும், பிறகு கன்னி விதவைகளாக்கிச் செல்வதாயும் கூறினர்.

சுவாமிஜியை இது குறித்து நிருபர்கள் கேட்டபோது அவர் தாம் கூறியது முற்றிலும் உண்மை என்றும், ரமாபாய் கட்டுக் கதைகளை அளந்திருக்கிறுள் என்றும் வியத்தமாகச் சொல்லிவிட்டார். 'ஹிந்து விதவைகளில் சிலர் கொடுமைக்கு ஆளாவது

Koviloor Digital Library

உண்மையாயிருக்கலாம்; ஆனால் எங்கள் ஹிந்து மதமே இப்படிக் கொடுமைப்படுத்த விதி வகுத்திருக்கிறது என்று சொல்வது முழுப் பொய்' என்று கூறினார்.

விவேகானந்தரின் சத்திய உணர்வில் குன்றாத விசுவாசம் படைத்தவர்களல்லவா அமெரிக்க மக்கள்? அவர்கள் அவரது வாக்கை ஒப்புக் கொண்டனர். ரமாபாயின் அதிசயோக்திகளைப் புரிந்து கொண்டனர். ரமாபாய் வட்டத்துக்கு ஆத்திரம் அதிகமாயிற்று.

ஒரு தொடர்புமில்லாமல், சுவாமிஜி கிறிஸ்துவ மதத்தை வெறுக்கிறார் என்று புதுக்குற்றம் சுமத்த அது முற்பட்டது.

'சுவாரஸ்யமான' செய்திகளுக்கு அலைந்த ப்ரூக்லின் பத்திரிகைகளின் பாடு கொண்டாட்டமாயிற்று. வாத விவாதங்களையும், கண்டன — பிரதி கண்டனங்களையும் பிரசுரித்துப் பக்கங்களை நிரப்பின. சுவாமிஜி இவற்றில் ஈடுபடாவிட்டாலும் அவரது அன்பர்கள் அவர் சார்பாக எழுதினர். நன்னெறிச் சங்கத் தலைவர் லூயி ஜி. ஜேன்ஸ் 'சுவாமிஜி ஹிந்து மாதரின் சமூக அபிவிருத்தியை எதிர்ப்பவர் அல்லவே அல்ல; அவர்களுக்கு கல்வி அறிவைப் புகட்டும் பணியை மெச்சுபவரே அவர். இல்லாததை எல்லாம் சொல்லி மிகைப்படுத்தி எந்தப் பணியையும் செய்யவேண்டாம் என்பதே அவர்கருத்து' என்று எழுதினர். ரமாபாய் வட்டத்தின் ஆதரவுபெற்ற சசிபாத பானர்ஜி ஹிந்து விதவைகளுக்காகக் கல்கத்தாவில் நடத்திய ஒரு கல்வி நிலையத்துக்கெனவே சுவாமிஜி தாம் நிகழ்த்திய உரையொன்றுக்குக் கிடைத்த வசூல் முழுவதையும் அளிக்க முன் வந்தார். என்றாலும் மிஷனரிகளின் பலத்துடன் ரமாபாய் வட்டம் அவதூறுகளைப் பொழியத் தொடங்கிவிட்டது. ஸ்ரீமதி ஜேம்ஸ் மக்கீன் இந்தத் தொண்டுக்குக் கங்கணம் கட்டிக்கொண்டாள்.

'போஸ்டன் பெண்களை யெல்லாம் இந்த வனப்புமிக்க வாலிபர் வசீகரம் செய்துகொண்டு விட்டார்' என்று எழுதினாள் அந்தப் புண்ணியவதி. ரமாபாய் வட்டத்துக்குச் சாதகமாயிருந்த 'ப்ரூக்லின் ஈகிள்' பத்திரிகை, டாக்டர் ஜேன்ஸ் விடுத்த பதிலைப் பிரசுரிக்கவில்லை.

'ஹிந்து விதவைகள் கஷ்டப்படுவதற்கு முக்கியமான காரணம் அவர்கள் கஷ்டமான வாழ்வைத் தாங்களாகவே விரும்பி ஏற்று, சந்நியாசினிகளைப்போல வாழவிரும்புவதுதான். கிறிஸ்துவக் கன்னியா மடத்துப் பெண்கள் எப்படித் தலையை முண்டனம் செய்துகொண்டு, உண்டியைச் சுருக்கி, சயனாதி சுகங்களை நீத்து மத உணர்வுடன் வாழ்கிறார்களோ அப்படி வாழவே

Koviloor Digital Library

ஹிந்து விதவை விரும்புகிறாள்' — இந்த உண்மையை அமெரிக்க மக்களுக்குத் தெரிவிக்க வேண்டியிருந்தது.

இரண்டாவதாக, அயல்நாடுகளிலிருந்து நிதி சேகரித்து இந்திய மக்களுக்குச் சேவைசெய்யும் கருத்தை சுவாமிஜி ஆட்சேபிக்கவில்லை. பார்க்கப்போனால், இந்தக் காரியத்துக்காகத்தான் அவரே அமெரிக்கா வந்திருந்தார். ஆனால் ரமாபாய் செய்வது போல, இந்தியர்களை இழிவானவர்களாகக் காட்டி அவர்களிடம் அமெரிக்கரைப் பரிதாபம் கொள்ளச்செய்து பணம் சேகரிப்பதை அவர் சுயமரியாதைக் குறைவாகக் கருதினார் !

இந்த இரண்டு உண்மைகளும் அமெரிக்க மக்களுக்குத் தெரியாத வரையில் சுவாமிஜி ரமாபாய் சங்கத்திடம் அசூயை கொண்டிருப்பதாக ஒரு சிறிது சந்தேகிக்க இடம் இருந்திருக்கும் அல்லவா ? ஆனால் சுவாமிஜியோ இவ்விஷயமாக எதுவுமே கூறவில்லை. அப்போதைக்கு ரமாபாய் வட்டமே அவரை வென்றதாகத் தோன்ற ஆரம்பித்தது.

பாய்வதற்குத் தயாராகும் புலி பதுங்குவது போலவே, சுவாமிஜி இவ்வளவு நாள் மௌனமாக யிருந்தாரோ என்றெண்ணும்படி கடைசியில் அவர் வாய் திறந்தார். 1895-ம் ஆண்டு ஏப்ரல் ஏழாந்தேதி அவர் நிகழ்த்திய அந்தப் பிரசங்கம் இடியேறு போல எதிர்ப்பாளர் மீது விழுந்தது.

அதோடு ரமாபாய் வட்டங்கள் வாயடைத்துப் போயின.

இந்தப் பிரசங்க விவரங்கள் பத்திரிகையில் வெளிவரவில்லை. என்றாலும் ஒரே உரையால் மலையளவு எதிர்ப்பையும் சுவாமிஜி உமியாக ஊதிவிட்டார் என்பது பிறகு ரமாபாய் சங்கத்தினர் மௌனமானதிலிருந்து வெளியாகிறது. டெட்ராய்ட்டில் ஒரே உரை மூலம் மிஷனரிகளின் துஷ்பிரசாரத்தை நொறுக்கியது போலவே இங்கும் சுவாமிஜி செய்துவிட்டார் !

இதை வாயாரப் பாராட்டும் பர்க், சுவாமிஜிக்கு மக்களின் உள்மனத்துக்குள்ளும் ஊடுருவிப் பாய்ந்து அவர்களை ஒரே வீச்சில் தம் வயமாக்கிக்கொள்ளும் அற்புதத்திறன் இருந்ததாகக் கூறுகிறார் ! இந்த அபாரமான திறனை அவர் அபூர்வமாகவே வெளிப்படுத்தியிருக்கிறார் !

* * *

ரமாபாய் இயக்கத்தைப்பற்றிய சர்ச்சை ஒருபுறம் நடந்து கொண்டிருக்கும்போதே சுவாமிஜி, நியூயார்க், மன்ஹாட்டனில் தமது ஆசாரியப் பணியைச் சிறப்புறப் புரிந்துகொண்டிருந்தார். 1895-ம் ஆண்டு வஸந்த காலத்தில் நியூயார்க்கில் சுவாமிஜி வேதாந்த மலர்களைப் புஷ்பித்துக் கொண்டிருந்தார்.

Koviloor Digital Library

1895-ம் ஆண்டு பிறக்கும்போதே சுவாமிஜிக்குத் தமது பணியைத் தொடர்ந்து நடத்தக்கூடிய சீடர்களைத் தயாரிக்க வேண்டும் என்ற ஆர்வம் கட்டுக்கடங்காமல் ஏற்பட்டது. ஏராள மான மக்களுக்காகப் பிரசங்கம் புரிந்து அலுத்துப்போன அவர் ஒருசிலருக்கு வேதாந்தத்தை நன்கு கற்பித்து தேர்ச்சிபெறச் செய்யவேண்டும் என்று விரும்பினர். வகுப்பு நடத்துவதற்கு தக்க ஓர் இடத்தையும், அதற்கான நிதி வசதிகளையும் தேடிக் கொண்டிருந்தார்.

ஹிந்துக்களுக்கு மட்டுமே புரியக்கூடிய கதைகளும், சம்பிர தாயங்களும் இன்றி, வேதாந்தத்தை எப்படி அமெரிக்கருக்கு ஈடுபாடு உண்டாகுமாறு பகுப்பது என்பதிலும் அவர் சிந்தனையைச் செலவிட்டு வந்தார். ஓராண்டுக்குப் பின் அவர் ஈ. டீ. ஸ்டர்டி என்பவருக்கு எழுதினர்: ''அவர்களுக்கு (அமெரிக்கருக்கு)த் தளர்ச்சியும், நெகிழ்ச்சியும் இல்லாத பகுத்தறிவுக்குப் பொருந்தும் தத்துவத்தை அன்பு என்ற பரம மதுரமான ரஸத்தில் மிருது வாக்கி, கடினமான உழைப்பினுல் அதற்கு விறுவிறுப்பு ஊட்டி, யோக அக்னியில் அதனைச் சமைத்து குழந்தையும் ஜீரணிக்கும் எளிய வஸ்துவாய் அளிக்க விரும்புகிறேன்.''

''ஹிந்துக் கருத்துக்களை ஆங்கிலத்தில் ஆக்கி, வறட்சியான தத்துவங்கள், சிக்கல் நிறைந்த புராணங்கள், மானுடப் பண்பு குறித்த விநோதமான விசித்திர அபிப்ராயங்கள் இவற்றிலிருந்து எளிதான, தெளிவான, ஜனரஞ்சகமான — அதே சமயத்தில் நுண்ணறிவாளர்களின் அறிவுத் தேவையையும் பூர்த்திசெய்கிற — ஒரு மதத்தை வகுப்பது என்பது எப்பேர்பட்ட காரியம் என்பதை, அந்தக் காரியத்தில் முயன்றவர்கள் மட்டுமே அறிய முடியும்'' என்று அழசிங்கருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் சுவாமிஜி கூறுகிறுர்.

அந்தச் சிரமசாத்தியமான காரியத்தைத்தான் அவர் அப் போது எடுத்துக்கொண்டிருந்தார். அதனை எவ்வளவு அருமை யான முறையில் அவர் நிறைவேற்றினர் என்பதற்கு அமெரிக் காவில் தோன்றியுள்ள ஸ்ரீராமகிருஷ்ண சங்கங்களே சான்று.

சுவாமிஜி நியூயார்க்கில் வேதாந்த வகுப்புக்கள் நடத்துவ தற்குப் பெரிதும் உழைத்தவர்களில் லியன் லாண்ட்ஸ் பெர்க்கை முக்கியமாகக் குறிப்பிடவேண்டும். ருஷியாவைச் சேர்ந்த யூதராகிய இவர் அமெரிக்கப் பிரஜையாகி ஹிந்து தர்மத்தில் ஈடுபட்ட அதிசயத்தை என்னவென்பது?

சுவாமிஜி வேதாந்த வகுப்பு நடத்துவதற்காக மேற்குப் பகுதி 33-வது தெருவில் 54-வது இலக்கமுள்ள வீட்டை வாட

Koviloor Digital Library

கைக்கு அமர்த்தினர். சரியான ஜலதோஷத்துடன் போராடிக் கொண்டிருந்த சுவாமிஜி உடல்நலக் குறைவைச் சற்றும் பொருட் படுத்தாது அங்குதான் ஜனவரி 28-ந் தேதி வகுப்புத் தொடங் கினர். ஜுன் மாதம் வரையில் இவ்விடத்தில் ஞானசானுகை அவரது சேவை சிறப்புற்றது. சுவாமிஜியின் அமெரிக்க வாழ்க் கையில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் அதிகாரமாகும்.

மேற்குப் பகுதி 33-வது தெருவின் 54-வது வீடு சௌகரியம் நிறைந்தது என்றோ, நாகரிகச் சுற்றுப்புறத்தில் அமைந்தது என்றோ சொல்ல முடியாது. இனபேதக் கொள்கை காரணமாகக் கருப்புத் தோல் போர்த்திய சுவாமிஜிக்கு இருக்கைதரப் பலர் முன்வராதது இந்த இடத்தை சுவாமிஜி அமர்த்திக்கொண்டதற்கு ஒரு காரண மாக இருக்கலாம் எனக் கருதுகிருர் பர்க்.

சுற்றுப்புறம் எப்படியானுல் என்ன? சுவாமிஜியின் அகம் சாந்தம் கமழும் தூய திருப்பொய்கையாக சுந்தரதரங்கங்களை விசிக்கொண்டிருந்தது. அந்தத் தரங்கங்களின் பூஞ்சிதறலாகத் தெறித்த வாக்குப் பிந்துக்களைப் பருகப் பலப்பலர் கூடிக்கொண்டு தான் இருந்தனர். அவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டே வந்தது.

பிற்பாடு சகோதரி ஹரிதாஸியான குமாரி எஸ். ஈ. வால்டோ என்ற ப்ரூக்லின் நகரப் பெண்மணி இந்த வகுப்புக் களைப்பற்றிக் கூறுவதைக் கேளுங்கள்:

''குடியிருப்பு விடாகிய ஒரு கட்டிடத்தின் இரண்டாம் மாடியிலுள்ள ஒரு சாதாரண அறையே அது. வகுப்புக்கு வருகிறவர்களின் எண்ணிக்கை ஆச்சரியப்படும் வகையில் வேகமாக ஏறிவந்தது. அந்த அறை நிரம்பிவழியத் தொடங்கியபின் ஒரு சித்திராலங்கார அழகைப் பெற்றது. சுவாமி தரையிலேயே உட் காருவார். வகுப்புக்கு வருகிறவர்களில் பெரும்பாலோரும் அவ் வாறே அமருவர். கூட்டம் அதிகமாக ஆக அங்கு போட்டிருந்த சலவைக்கல் பதித்த மேஜை, ஸோபாவின் கைப்பிடிகள், — ஏன், மூலையில் கையலம்புவதற்காக வைத்திருந்த பேஸின் ஸ்டாண்ட் — உள்பட யாவும் ஆசனங்களாயின. அறைக் கதவு திறந்தே வைக்கப்பட்டது. வெளியே உள்ள ஹாலிலும், மாடிப்படிகளிலும் சுரோதாக்கள் குழுமினர். ஆகா, அந்தத் தொடக்க வகுப்புக்கள்! அவை எவ்வளவு ஈர்ப்பனவாக இருந்தன! அவற்றைக் கேட்கும் பாக்கியம்பெற்ற ஒருவர் ஒருபோதும் அந்த வகுப்புக்களை மறக்க முடியாத கௌரவமும், எளிமையும் ஒருங்கே தோன்ற, உரைப் பொருளில் ஆழ்ந்து உறைந்த ஈடுபாட்டுடன் அவர் சொல்மாரி பொழியும்போது மற்ற எல்லா அசௌகரியங்களையும் மறந்து,

Koviloor Digital Library

அவரது ஒவ்வொரு வார்த்தையையும் மூச்சுவிடாமல் பற்றிக் கொண்டு கேட்டனர் கூடியிருந்தோர்.

''இன்று மகோன்னதமாக வளர்ந்துள்ள இயக்கத்துக்கு ஏற்ற வேர் அது. இவ்வாறு எந்தப் பகட்டுமில்லாமல் சுவாமிஜி வேதாந்த பிரசாரத்தை நியூயார்க்கில் தொடங்கினுர். அவர் காற்றைப்போல, இலவசமாகவே தமது இந்தப் போதனையை அளித்தார். அறை வாடகையைச் சிலர் தாமே முன்வந்து அளித்தனர்.''

இந்தத் தொகை போதாதபோது சுவாமிஜி மதச் சார்பற்ற விஷயங்களில் சம்மானத்துக்குப் பிரசங்கம் புரிந்து அதைக்கொண்டு ஈடு செய்தார். ஆனுலும் வேதாந்த போதனையை மட்டும் விலைக்கு விக்கிரயம் செய்ய அவர் மனம் கொள்ளவே இல்லை. பூர்வகாலத்துக் குலபதிகள் மாணுக்கரைத் தம்முடனேயே வைத்துக்கொண்டு, அவர்களிடம் திரவியத்தை எதிர்பாராது அல்லவா இந்த ஆத்ம செல்வத்தை அளித்திருக்கிருர்கள்! தாமும் அந்தக் கோட்டிலிருந்து இம்மியும் பிறழக்கூடாது எனத் திடம் கொண்டார் சுவாமி விவேகானந்தர்.

முனிவர்கள் உபதேசத்தைத் தூய்மை நிறைந்த பிரம்ம சாரிகள் எப்படி ஏற்றிருப்பார்களோ அப்படியே லௌகிகம் நிறைந்த அமெரிக்க மக்களிலும் பலர் இதயக் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு அறிவுக்கனலாகிய சுவாமிஜி பாய்ச்சிய ஒளியை உள் நிரப்பிக் கொண்டனர்; ஆன்மகும்பத்தில் அருட்புனலாகிய அவரின் அநுபவம் பிரவாகத்தை முகர்ந்து கொண்டனர். குமாரி மெக்லியாட் ஒருத்தி போதுமே! அவளுடைய பரவச மொழி களைக் கேளுங்கள்:

''அறையில் ஒரே கூட்டம். நாற்காலிகளெல்லாம் நிரம்பி வழிந்தன. எனவே நான் தரையில் முன் வரிசையில் அமர்ந்து கொண்டேன். சுவாமி மூலையில் நின்றுகொண்டிருந்தார். அவர் என்னவோ சொன்னுர். வார்த்தைகள் எனக்கு நினைவில்லை. என்றுலும் அது அப்படியே சத்தியம் என்று அப்பொழுதே நான் உணர்ந்துவிட்டேன். அவரிடமிருந்து அடுத்த வாக்கியம் வெளி யாயிற்று. அதுவும் அப்படியே சத்தியமாக இருந்தது. மூன்றுவது வாக்கியம்: சத்தியமேதான்! ஏழாண்டுகளாக அவர் பேசிக் கேட்டிருக்கிறேன். அவர் சொன்னதவ்வளவும் எனக்குச் சத்திய மாகும்.''

உள்ளத்தில் உண்மை யொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி யுண்டாகும்.

என்ற கவி வாக்குக்குச் சான்றுக இதயத்தின் சத்தியப் பிரகாசத்தில்

Koviloor Digital Library

வார்த்தைகளை முக்கி எடுத்துப் பேசியவர் சுவாமிஜி. அசத்தியமும், போலித்தனமும் நிறைந்த வாழ்க்கையில் இந்த சத்தியப் பிரகாசத்தை நாடித்தான் அமெரிக்கர் பலர் வரலாயினர்.

வேதாந்த வகுப்பில் சுவாமிஜி முக்கியமாகத் தெரிவித்தது, வேதாந்தம் என்பது வாழ்க்கையில் ஒவ்வொரு கணமும் அநுஷ்டிக்கவேண்டிய ஒன்றேயன்றி எங்கோ புத்தகத்திலிருப்பதல்ல என்பதுதான். ''ஆத்மிகச் சார்பில்லாமல் வாழ்க்கையில் எதுவுமே கிடையாது என்பதை அவர் எங்களுக்கு உணர்த்தி வந்தார்...... 'நீ அமெரிக்கப் பிரஜையாயிருப்பது அகஸ்மாத்தாகத்தான்; பெண்ணுயிருப்பது அகஸ்மாத்தாகத்தான்; ஆனுல் உண்மையில் நீ எப்போதும் ஆண்டவனின் குழந்தை என்பதை எப்போதும் நினைவில் கொள்' என்பார்'' என்று நெஞ்சையள்ளுகிற வாக்கியங்களைக் கூறுகிருள் குமாரி மெக்லியாட்.

சுவாமிஜியின் இன்னொரு பிரிய சிஷ்யையான சகோதரி தேவமாதா இந்த நியூயார்க் வகுப்புக்களைப்பற்றிக் கூறும்போது சுற்றுப்புறத்தின் நெரிசலை முதலில் வர்ணிக்கிருள். தொடர்ந்து, ''திடீரென ஒரு நிசப்தம். சாவதானமான அடியோசை படிகள் மீது கேட்கிறது. சுவாமி விவேகானந்தர் அரச கம்பீரத்துடன் நிமிர்ந்து நடந்து மேடையை அடைகிருர். பேசத் தொடங்குகிருர். நினைவு, காலம், இடம் சபையோர் எல்லாம் உருகி ஓடி விடுகின்றன. சூனியத்திலே மணியாக ஒலிக்கிற ஒரு குரலைத் தவிர வேறெதுவும் இல்லை. திடுமென ஒரு கதவு திறந்துகொள்ள அந்தமில்லாத சாதனைக்கு அழைத்துச் செல்லும் ஒரு பாதையில் நான் பிரயாணம் செய்வதாகத் தோன்றுகிறது அதோ அவர் ஆதி அந்தமற்ற பூரணத்தைக் கூறும் ஞானியாக நிற்கிருர்'' என்கிருள்.

* * *

சுவாமிஜிக்கு அமெரிக்காவில் இருக்கை அளித்தவர்களிலும், அவருடைய உபதேசங்களால் மிகவும் கவரப்பட்டவர்களிலும் பெண்டிரே அதிகமாயிருப்பதை வாசகர்கள் கவனித்திருப்பார்கள். இதற்கு ஒரே காரணம் எந்த நாட்டிலும் பெண்கள்தான் லோகாயதத்துக்குப் பரிபூரணமாக இரையாகிவிடாமல் ஆத்ம சம்பத்துக்களை வளர்த்து வருகிருர்கள் என்பதுதான். நம் நாட்டிலும் பெரும்பாலான பெண்களிடம் ஆண்களைவிட அதிகமாக மத உணர்வு இருப்பதைக் காண்கிறேம். ஆனுல் இவர்கள் வெளியுலகில் சஞ்சரிப்பது நமது சம்பிரதாயத்துக்கு வரவில்லை. அமெரிக்கச் சமுதாய அமைப்பில் பெண்கள் சுதந்திரம் பெற்றிருந்ததால் பொதுவில் ஆத்மிகம் வேண்டி ஒன்றுகூடவும், ஆத்

Koviloor Digital Library

மிகம் அளிப்பவரை அழைத்து உபசரிக்கவும் இயன்றது. இன்று போல் அன்று அமெரிக்காவில் பெண்கள் மிக அதிகமாகக் கல்லூரி களில் படிக்காததால் விஞ்ஞானம் அவர்களை ஒரேயடியாகப் பலி கொண்டுவிடவில்லை. விஞ்ஞானம் உண்மையில் ஆத்மிகத்துக்கு விரோதமானதல்ல என்றறியாமல், அதனை அதற்காகவே போற்றி ஆத்மிகத்தைப் புறக்கணித்து வந்தனர் அமெரிக்க ஆடவர்கள். ஆனால் அமெரிக்கப் பெண்களை முதலில் ஆகர்ஷித்த வேதாந்தம் நாளடைவில் பெருவாரியாக ஆடவர்களையும் கவர்ந்து வெல்லத் தான் செய்தது.

அமெரிக்காவில் பெண்கள் ஹிந்துமதத்தில் அதிக ஈடுபாடு காட்டியதற்கு சுவாமிஜி தமது சென்னை உரை ஒன்றில் இன்னொரு காரணமும் கூறுகிறார். அமெரிக்க ஆடவர்கள் பொருள் திரட்டுவதிலேயே எப்போதும் குறியாக இருந்து அதற்கே தங்கள் பொழுதையெல்லாம் செலவிட்டனர். பிறவிஷயங்களில் செல்லப் பெண்களுக்குத்தான் அமைதியும் அவகாசமும் இருந்தன என்கிறார்.

சுவாமிஜியிடம் பெண்களுக்கு விசேஷ ஈடுபாடு இருந்ததற்கு இன்னொரு காரணமும் சொல்லலாம். சுவாமிஜியின் அங்க அமைப்புக்களிலிருந்து அவரது குணசித்திரத்தை வடிக்க முயலும் 'ஃப்ரெனலாஜிகல் ஜர்னல்' என்ற நியூயார்க் சஞ்சிகை பௌருஷ பர்வதமாக விளங்கிய அவரை வர்ணிக்கும்போது 'உள்ளுணர்ச் சியில் பெண்மை நிறைந்திருந்த அவர் பசுதர்மக் கவர்ச்சிபற்றி எண்ணியே இருக்க முடியாது' என்கிறது. இந்தப் பெண்மைதான் பெண்கள் பலரைப் பரிசுத்தம் குன்றாத அவரிடம் சேர்த்தது எனலாம். 'அம்பிகையை உபாஸிப்பவர்கள் அம்பிகையே ஆவார் கள்' என்பது ஆப்தர் மொழி. திவ்ய மாதாவை எப்போதும் போற்றுபவர் சுவாமிஜி. அதோடு பெண்மையின் மென்மை செழிக்கத் துலங்கிய பரமஹம்ஸ பரமபுருஷரின் பிரதம சீடரும் அவர். மாதாவின் மாதுரியம் அவரிடம் விளங்கக் கேட்பானேன்?

பெண்களோடு ஆண்கள் கூட்டமும் சேரத்தொடங்கியது என்றோம். ஆண்கள் விஞ்ஞான மோகத்தில் ஆழ்ந்திருந்த காலம் அது என்றும் சொன்னோம். இது முழு உண்மையாகாது. கல்விகற்கும் அமெரிக்கரிடையே விஞ்ஞான மனோபாவம் வளர்ந்து வந்தாலும் மற்றவர்கள் அவ்வாறு இருக்கவில்லை. மதம் என்ற பெயரில் மாயாஜாலங்களை எல்லாம் நாடுபவர்களாகவே அவர்கள் இருந்தார்கள். சித்துவிளையாட்டுத்தான் அவர்கள் அறிந்திருந்த ஆத்மிகம். மாயமந்திரம் செய்பவர்களுக்கும் அல்லது அப்படிச் செய்வதாக ஏமாற்றியவர்களுக்கும் அப்போது அமெரிக்காவில் அமோகமான வரவேற்பு கிடைத்து வந்தது.

Koviloor Digital Library

இந்தச் சமயத்தில்தான் சர்வ சித்திகளும் வாய்க்கப்பெற்றும் அவற்றைத் தூவென்று தள்ளிவிட்டு ஆத்ம சாஸ்திரமாகிய வேதாந்தத்தைப் போதிக்கத் தொடங்கினார் சுவாமிஜி. 'ஹிந்து சாது ஒருவர் வந்திருக்கிறார்' என்றவுடன் கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தையையும், அமிலத்தையும் கண்ணாடித் துகளையும் விழுங்குகிற அற்புதத்தையும், காணும் ஆவலோடு அமெரிக்க மக்கள் கூடினர்.

இவர்களை சுவாமிஜி ஏமாற்றினார். ஆனால் அப்படி ஏமாறிப் போனதற்காக அவர்களே பெருமைப்படுமாறு அத்யாத்ம தத்துவங்களை அழகாக, பதமாக, தெளிவாக எடுத்துத் தந்தார். கூடுவிட்டுக் கூடு பாய்வதிலல்ல ஆத்மாவின் பிரபாவம், இந்த முறை வாய்த்த கூட்டை உதறிய பின் எந்தக் கூட்டிலும் புகாமல் மெய்ப்பொருளில் ஒன்றுவதுதான் அதன் பிரபாவம் என்று உபதேசித்தார். அமிலத்தையும், கண்ணாடியையும் விழுங்குவதில் ஆத்மாவின் மகிமையில்லை. அது எதையும் விழுங்குவதில்லை; எதனாலும் விழுங்கப்படுவதுமில்லை; என்றாலும் அதனை உணர்ந்தவர்கள் உலகனைத்தையுமே தங்களில் விழுங்கியவர்களாவார்கள் என்று கூறினார். நான் என்பது உடலா, உணர்வா, உள்ளமா என்று சிந்திக்கத்தூண்டி, யாவுமாக உள்ளதே நான் என்ற ஆத்மா என்பதை அவர்களுக்கு விரித்துரைத்தார். ஆத்மானுபவத்தால் மெய்ப்பொருளில் ஒன்றியிருக்கும் மோக்ஷமே மானுடவின் லக்ஷியம் என்பதைப் பிரகடனம் செய்தார். ஆத்மானுபவம் புத்தகத்திலிருக்கிற நிலையல்ல; நம்மில் நாமே காணவேண்டியது என்பதை அழுத்தமாகக் கூறி அப்படிக் காணும் சாதனையில் அமெரிக்கக் கண்டத்து அந்நியமக்களை ஈடுபடுத்தினார். ஆத்மானுபவம் கைகூடப் பெற்றவர்களுக்கே உரிய துணிவோடு இந்த அற்புதப் பணியைத் தொடங்கினார்.

அமெரிக்கர்களை நேரடியாக ஆத்மசாதனைகளில் திருப்பிய தன்மூலம் உலகத்தின் சமய சரித்திரத்தில் ஓர் ஏட்டைத் திருப்பிவிட்டார் சுவாமிஜி. வேதாந்தம் கூறும் அகப்பொருள் உணர்வை இன்னும் ஒருவர் பெறலாம் என்பதை நிரூபிக்கத் தமது அத்தியாத்ம சர்வகலாசாலையில் சுவாமிஜி நிகழ்த்திய பரிசோதனை அல்லவா இது?

பிராணாயாமம் முதலியவற்றின் மூலம் சுவாசத்தைச் சீராக இயக்கி உள்ளத்தைத் தெள்ளியதாக்கிக்கொண்டு தியானம் புரிய அமெரிக்கர்களுக்குப் பயிற்சி ஆரம்பித்தார் சுவாமிஜி. 'இந்த ஆண்டு நான் ஒருசில ஆண் பெண்களை அத்வைத உணர்வுக்காக நடைமுறையில் பயிலுவிக்கப் போகிறேன்' என்று 1895 ஏப்ரலில் அவர் ஸ்டர்டிக்கு எழுதியுள்ளார். ஜீவாத்மாவும், பரமாத்மாவும்

Koviloor Digital Library

ஒன்று என்பதை, ஆத்ம சாஸ்திரத்துக்கே புதியவர்களான அமெரிக்கர்களிடம் நிரூபணம் செய்யமுடியும் என்று சுவாமிஜி நம்பினுர் என்ருல் அவர் எவ்வளவு சிறப்பாக அத்வைத சாக்ஷாத் காரம் பெற்றவர் என்று ஊகிக்கலாம் அல்லவா ?

வகுப்புக்கள் நடத்துவதற்கு சிரோபூஷணமாக யோகப் பயிற்சி தொடங்கியது. பரமஹம்ஸரிடமிருந்து மக்களது நானுவித மான இயல்புகளையும் புரிந்துகொண்டு, அந்த இயல்புகளுக்கு ஏற்ப சாதனு மார்க்கத்தை அமைத்துத்தரும் பாகுபாட்டை சுவாமிஜி பெற்றிருந்தார். பலவிதங்களில் அமெரிக்க சிஷ்யர்களைப் பயிலு விக்கத் தொடங்கினுர்.

தமது மாணுக்கர்களுக்குத் தியானம் புரியும் முறையை விளக்கும்போது சுவாமிஜி ஓர் அளவுக்குமேல் விளக்க முடியாதபடி தாமே தியானத்தில் ஆழ்ந்துவிடுவாராம். தியானம் கலைந்தபின் தம்மிடமே கோபம் கொள்வாராம். 'யோகியாக இருப்பதைவிட குருவாக இருக்கவேண்டியதுதான் முக்கியம்' என்று சங்கல்பம் கொள்வாராம். அதாவது தமக்காக ஆத்மசுகத்தைத் தேடிக் கொள்வதைவிட பிறருக்கு அதை அளிப்பதுதான் முக்கியம் என்று உறுதிகொள்வாராம். பரமஹம்ஸரின் ஆணையே இதுதானே? நரேன் ஆத்மவிடுதலையைத் தள்ளிவிட்டு உலகத்துக்குப் பாடுபட வேண்டும் என்பதுதானே ?

குடகோளார்த்தத்தில், அமெரிக்காவின் செல்வச் செழிப்பு நிறைந்த நாகரிக நியூயார்க் நகரின் மேற்கு பகுதியில் முப்பத்து மூன்ரும் தெருவிலிருந்த ஐம்பத்து நாலாவது வீட்டின் இரண் டாவது மாடியிலுள்ள அந்த அறை குணகோளார்த்தத்தில், பாரதத்தின் ஆன்மிகச் செழிப்பு நிறைந்த எளிய தக்ஷிணேசு வரமாக மாறியது. சுவாமிஜி பரமஹம்ஸராக மாறினுர். அமெரிக்க அன்பர்கள் வங்காள குருபாயிக்களாயினர்.

ஸ்ரீராமகிருஷ்ணரை ஐயத்துடன் அணுகிய நரேந்திரர் போலவே விவேகானந்தரை ஐயத்துடன் அணுகியவர்கள் பலர். ஸ்ரீராமகிருஷ்ணர் நரேந்திரரின் ஐயத்தைத் தெளிவித்தது போலவே இவர்களின் ஐயத்தை விவேகானந்தர் தெளிவித்தார்.

ஐயமே இல்லாத சிலரும் சுவாமிஜியிடம் வந்ததுண்டு. அதாவது பௌதிகத்துக்கு மேலாக ஆத்மிகம் என்று ஒன்று உண்டா என்று சிறிதும் ஐயமில்லாமல், ஆத்மிகம் என்பது கிடையவே கிடையாது என்று பூரணமாக நம்பிய லோகாயத வாதிகளும் சுவாமிஜியிடம் வந்தனர். இவர்களிடம் இவர்களை விடச் சிறப்பாக லோகாயதவாதம் செய்தபின் சுவாமிஜி பௌதி கத்துக்கு மேம்பட்டது ஆத்மிகம் என்பதை ஆணித்தரமாக எடுத்

Koviloor Digital Library

துரைத்து 'மாற்றுரை மாற்றழிப்பாராம்'. இதனை கிருபானந்த சுவாமி அழகாக விளக்கிக் கூறுகிறார். இந்த கிருபானந்த சுவாமி வேறு யாருமில்லை. சுவாமிஜிக்கு நியூயார்க்கில் இடம் அமர்த்திக் கொடுத்த லியன் லாண்ட்ஸ்பெர்க்தான்.

லாண்ட்ஸ்பெர்க்கும் சுவாமிஜியுமாகத் தாங்களே அரிசிச் சோறு வடித்துக்கொண்டு கிரைவகைகளையோ, பார்லியையோ வியஞ்சனமாகச் சமைத்து உண்பார்களாம். 'அமெரிக்காவில் இத்தனை நாளாக இருந்ததைவிட இப்போதே நான் உண்மையான சந்நியாசியாக இருக்கிறேன்' என்று சுவாமிஜி ஸ்ரீமதி ஒல்புல்லுக்கு எழுதியிருக்கிறார். அதேபோலத் தமது மாணுக்கர்களையும் சாத்விக உணவு உண்ணுமாறு விதித்தார்.

பிரம்மசரியத்தின் அவசியத்தையும் போதித்தார். இந்த அற்புத சந்நியாசியின் ஆணைக்கேற்ப ராஜயோகத்தைப் பயின்ற அமெரிக்கர்கள் புறநினைவின்றி தியானம் புரியும் அளவுக்குத் தேர்ச்சி பெற்றுவிட்டார்கள். மதம் என்பது அந்தப் பெயர் குறிப்பிடுவதுபோல் வெறும் நம்பிக்கை மட்டுமில்லை; நம்மிலேயே வாழ்ந்து காண்கிற அநுபவம் அது என்று பிரத்யக்ஷமாகப் புரிந்துகொண்டார்கள்.

விஞ்ஞான பூர்வமாக ஒப்புவனம் காட்டி ஆத்ம தத்துவத்தை சுவாமிஜி விளக்கியதால் மெத்தக் கற்றவர்களும் அவரது உபதேசத்தினால் கவரப்பட்டனர். பிராணசக்தியைச் செம்மைப்படுத்தி இயக்குகிற யோக சாஸ்திரங்களை அநுஷ்டித்து அவற்றைப் பற்றி விளக்கமளித்த சுவாமிஜி நரம்பு மண்டலத்துக்கும் உள்ளத்துக்கும் உள்ள தொடர்பினைப்பற்றிக் கூறிய கருத்துக்கள் அமெரிக்காவின் உடற்கூற்று வல்லுநர்களையும், மருத்துவர்களையும் கவர்ந்தது. பௌதிக விதிகளுக்கு அதீதமான அநுபவங்களைப் பெறுவது பற்றி அவர் கூறியது அமெரிக்க மனோதத்துவ நிபுணர்களின் கவனத்தைக் கவர்ந்தது. இவர்களில் ஹார்வர்ட் பல்கலைக்கழகப் பேராசிரியர் வில்லியம் ஜேம்ஸைக் குறிப்பிடலாம். முன்பே சொன்னதுபோல் நிரீசுவரவாதிகளும் அவரால் பூரணமாக மாறாவிடினும், அவரது பெருமையை அறிந்தனர்.

சமய அமைப்பையே எதிர்த்த இங்கர்ஸாலுக்கும் சுவாமிஜிக்கும் ஏற்பட்ட சந்திப்பை இங்கே கூறலாம்.

''உலகம் என்பதுதானே நமக்கு நிச்சயமாகத் தெரிந்தது? இந்த உலகைப் பூரணமாகச் சுகத்துக்கு பயன்படுத்திக் கொள்வதிலேயே நான் நம்பிக்கை வைக்கிறேன். உலக ஆரஞ்சுப்பழத்தை ஒட்டப் பிழிந்து சுகம் காண விரும்புகிறேன்'' என்றார் இங்கர்ஸால்.

Koviloor Digital Library

ஆத்மாவும், ஆண்டவனும், மோக்ஷமும் அவருக்குத் தேவைப் படவில்லை.

''உலக ஆரஞ்சை ஒட்டப் பிழிய உங்களுடைய வழியைவிட சிலாக்கியமான ஒரு வழி எனக்குத் தெரியும்'' என்றார் விவேகானந்தர். ''உங்களைவிட நான் அவ்வழியில் அதிகச் சாறு பெறுகிறேன். நான் என்பதற்குச் சாவு கிடையாது என்பது எனக்குத் தெரியும். எனவே நான் அவசரப்படவில்லை. அபயம் என்பதை நான் அறிந்திருக்கிறேன். எனவே நான் கனியை பிழிவதில் ஆனந்தம் காண்கிறேன். எனக்கேதும் கடமையில்லை, மனைவி மக்கள் சொத்து என்ற கட்டுக்கள் இல்லை. எனவே என்னால் எல்லா ஆண் பெண்களையும் அன்பு செய்ய முடிகிறது. ஒவ்வொருவரும் எனக்கு ஆண்டவனே! மனிதனை ஆண்டவனாகக் கருதி அன்பு செய்தவன் ஆனந்தத்தை எண்ணிப்பாருங்கள். உங்களுடைய ஆரஞ்சுப் பழத்தை என்வழியில் பிழியுங்கள். ஒரு சொட்டுக்கூட வீணாகாமல் ரஸம் கிடைக்கும்'' என்று இங்கர்ஸாலிடம் கூறினார் சுவாமிஜி.

எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருளை மெய்ப்பொருளாகக் காணும் பாவத்தால், விண்ணாதி மண்ணினந்தமுள்ள ஒவ்வோர் அணுவையும் பூரணப்பொருளாக ரஸிப்பதற்கிணையாக வேறெப்படி ஆனந்தம் பெறமுடியும்?

லோகாயதவாதி உலகப்பொருளை அவன் எப்படிக் காண்கிறானோ அப்படியே உண்மைப்பொருளாக எண்ணி ஆண்டு அநுபவித்து சுகம் நுகர விரும்புகிறான். சுவாமிஜி உலகப்பொருளை தோற்றம் என்று அறிந்து, இந்தத் தோற்றத்துக்கு ஆதாரமான உண்மைப்பொருளாகவே அவற்றைக்கண்டு, அதே காட்சியிலேயே நித்தியசுகம் நுகர்ந்தார். பயமும், துன்பமும் கலந்த லோகாயதவாதியின் நிரந்தரமற்ற சுகம் பெரிதா, அபயமும் ஆனந்தமுமான சுவாமிஜியின் சாசுவத சுகம் பெரிதா?

சுவாமிஜி சந்தித்த மற்றொரு பெரும்புள்ளி நிகோலாடெல்ஸா என்ற பிரபல விஞ்ஞானியாவார். இவர் மின்சாரத் துறையில் விசேஷ ஆராய்ச்சி புரிந்தவராவார். சாங்கியர்களின் பிரபஞ்சக் கொள்கைபற்றிய சுவாமிஜியின் விளக்கத்தால் அவர் பெரிதும் ஈர்க்கப்பட்டார். பொருள், சக்தி இவைபற்றிய பௌதிக விஞ்ஞான கோட்பாடுகளும் சாங்கியர்கள் கொள்கையும் பெரும் பாலும் ஒத்திருப்பதாக அவர் கருதினார். கல்பங்கள் என்ற காலப் பிரிவினையும் விஞ்ஞானபூர்வமாக ஒப்பக்கூடியது என்று கண்டு ரசித்தார் அவர்.

பிற்பாடு கெல்வின் பிரபு என்று பெயர்பெற்ற ஸர் வில்லியம் தாம்ஸன், பேராசிரியர் ஹெல்ம் ஹால்ட்ஸ் ஆகிய இரு பிரமுக

Koviloor Digital Library

விஞ்ஞானிகளையும் சுவாமிஜி கண்டு உரையாடி மகிழ்வித்திருக்கிறார்.

இப்படியெல்லாம் பலர் சுவாமிஜியிடம் ஈடுபாடுகொண்டது உண்மையே என்றாலும், அவர்மட்டும் இன்னும் சிறிது போலித்தனமாக நடந்துகொண்டு, கிறிஸ்துவ மதத்தைக் கொஞ்சம் கூடுதலாகவே புகழ்ந்து, இந்தியாவின் சீர்திருத்த இலக்கங்களைப் போல் ஹிந்து மதத்தை அதனுடன் இணைத்துப் பேசியிருப்பாராயின் இன்னும் ஏராள மக்களிடம் பேராதரவு பெற்றிருக்கலாம். அல்லது அஷ்டசித்திகளும் கைவரப்பெற்ற அவர் அந்தச் சக்தியைச் சிறிதேனும் வெளிக்காட்டியிருந்தாலும் கோடானுகோடி மக்கள் அவருடைய காலடியில் விழுந்திருப்பார்கள். ஆனால் இவ்விதமான 'வெற்றி' எதையும் அவர் எதிர்பார்க்கவே இல்லை. 1895-ம் ஆண்டு மே மாதம் அழசிங்கருக்கு அவர் ''நான் உலகத்துக்கு ஒவ்வ வேஷதாரியாக யிருப்பேனாயின் இப்போதே ஸ்தாபனம் அமைப்பதில் மகத்தான வெற்றிகண்டிருப்பேன், குழந்தைகாள்!'' என்று எழுதினார். இன்னும் சிறிதுகாலத்துக்குப் பின்னர், ''இந்தியாவிடமிருந்தும் சரி, அமெரிக்காவிடமிருந்தும் சரி நான் புகழ் எதையும் நாடியதில்லை. இந்த நீர்மேல் குமிழியை நான் இப்போதும் நாடவில்லை. என்னிடம், ஆண்டவனின் குழந்தையாகிய என்னிடம், சத்தியமொன்று உள்ளது போதிப்பதற்காக. எனக்கு அந்த சத்தியத்தைக் கொடுத்த அவனே என்னுடன் உழைக்கச் சேவகர்களை அனுப்பிவைப்பான்.''

அவன் அப்படியே அனுப்பியும் வைத்தான் அன்றோ?

ஆட்களின் எண்ணிக்கையைக் கொண்டு சுவாமிஜி தமது போதனையின் பிரசாரத்தைக் கணக்கிட்டதேயில்லை. சீடர்களின் தீவிர உணர்வையும் அந்தரங்க சுத்தத்தையும் கொண்டே கணக்கிட்டார். ''நான் விரும்பினால் என் உரையைக் கேட்க இன்னும் ஆயிரக்கணக்கான மக்களை வரவழைக்க முடியும். ஆனால் நான் என் பணியைப் பலிதமாக்கும் இதய நாட்டமுள்ள மாணாக்கனையே விரும்புகிறேன். என்னுடைய வாழ்நாளில் ஒரே ஒரு மனிதன் விடுதலைபெற நான் உதவினாலும் என்னுடைய உழைப்பு வீணாகவில்லை, வெற்றியே கண்டது என்று கருதுவேன்'' என்று ஒரு சமயத்தில் சுவாமிஜி கூறினார்.

கிறிஸ்துவப் பாதிரிமார்களிடம் சுவாமிஜி சிறிதும் விட்டுக்கொடுக்காதிருந்ததாலும், கிறிஸ்துவ மதமே எல்லாச் சமயங்களிலும் சிறந்தது என்று கூறாததாலும் பல அமெரிக்க நண்பர்கள் அவரைத் தவறாகக்கூட மதிப்பிட்டனர். எல்லாரையும்போல் இவரும் சுய மதாபிமானம் பெற்றவர்தான் என்று எண்ணினர்.

Koviloor Digital Library

தொலைவிலிருந்து அவரது உரையைப் படித்த ஸ்ரீமதி ஹேலும், மேரி ஹேலும்கூட இப்படி எண்ணிவிட்டார்கள் என்றால் பாருங்களேன்! சுவாமிஜி இன்னும் இனியவராக இருக்கவேண்டும், இன்னும் நைச்சியமாக இருக்கவேண்டும் என்று மேரி ஹேல் அவருக்கு எழுதினாள்: அதற்கு அவர் எழுதிய பதிலில்,

''ʻஇனியவராக' இருப்பது உலகில் முன்னேறுவதற்கு எவ்வளவு நல்லது என்பது எனக்குத் தெரியும். என்றாலும் இனியவராக இருப்பதற்காக அந்தரங்கமான சத்தியத்தை விட்டுக் கொடுக்க நேரிட்டால் அங்கே நான் முன்னேற்றத்துக்கு முற்றுப் புள்ளி வைத்துவிடுகிறேன். நைச்சியத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை. எல்லாவற்றையும் ஒரே பாவத்துடன் பார்க்கும் ஸமத் ருஷ்டித்வத்தைத்தான் நான் நம்புகிறேன் கொள்கைகளை விட்டுக்கொடுக்கிற மனிதன் ரோஜாப் பாதையில் செல்கிறான், அப்படிச் செய்யாதவன் முள்பாதையில் போகிறான் — ஆனால் மக்களுக்காக ஆடுகிறவன் ஒரே கணத்தில் சர்வநாசமாகிறான் — சத்தியத்தின் குழந்தைகளோ அமரர்களாக வாழ்கிறார்கள்'' என்று தம் நிலையை உள்ளங்கை நெல்லிக்கனியாக விளக்கினார். இன்னும் ஏழே ஆண்டுகளில் தாம் அந்த அமரவாழ்வை எய்தப் போவதையும் உணர்ந்ததைப்போல் அவர் தொடருகிறார்:

''சகோதரி, இது நீண்ட நெடும் பயணம்; இருக்கும் காலமோ குறுகியது. இதோ அந்தி மங்கிவிட்டது. நான் என் வீட்டுக்குச் சீக்கிரமே திரும்பவேண்டும். இதற்குள் என் நடத்தைக்கு 'நகாசு' செய்துகொள்ள எனக்குப் போது இல்லை. என்னுடைய ஜன்ம உபதேசத்தை வழங்கவே எனக்குப் போது இல்லை. நீ நல்லவள், நீ அன்பு நிறைந்தவள். உனக்காக நான் எதுவும் செய்வேன் — என்னிடம் கோபியாதே! உங்கள் எல்லாரிலும் நான் என் குழந்தைகளையே காண்கிறேன்......

''நான் என்னுடைய உபதேசத்தை 'ஹிந்து' உருவாக்க மாட்டேன்; 'கிறிஸ்துவ' உருவாக்கமாட்டேன்; அதற்கு எந்தச் சமய உருவும் தரமாட்டேன். அதற்கு என்னுடைய உருவையே தருவேன். விடுதலை — முக்தி — இதுவே என் மதம் அவ்வளவும். அதை நசுக்க முயலும் எதையும் நான் சண்டையிட்டுத் தவிர்ப்பேன்; அல்லது அதிலிருந்து விலகியோடித் தவிர்ப்பேன் சமூகம் என்ற பொய்க் கடவுளை எதிர்க்கத் துணிந்தவர்களிடம் 'விட்டுக்கொடுப்பது' பற்றியும் 'இனியராவது' பற்றியும் பேசி அவர்களைக் கீழ்நிலைக்குக் கொண்டுவர முயலாதே!''

கண்கள் பனித்து எழுத்தை மறைக்கும் வரையில் திரும்பத் திரும்ப படிக்கவேண்டிய கடிதம் இது.

Koviloor Digital Library

பிறகு சுவாமிஜிக்கும் மேரி ஹேலுக்கும் கவிதையிலேயே ஒரு அற்புதமான கடிதப் போக்குவரத்து நடைபெற்று இருவரும் 'ஒரு மாதிரி' சௌஜன்யமானார்கள்.

குமாரி ஹேல் சௌஜன்யமானாலும் ஸ்ரீமதி ஹேல் சுவாமிஜியிடம் திரும்புவது இவ்வளவு எளிதில் நடைபெறவில்லை. ''தெய்வப் பிரேமை நிரம்பப்பெற்று, தெய்விக ஒளி பிரகாசித்த முகத்துடன், கனல் ஒத்த வாக்குடன் தனது இருப்பினாலேயே சூழலில் ஒற்றுமையையும் தூய்மையையும் பரப்பியபடி யாரையும் தம்மிடம் இழுத்துக்கொண்டவராக சர்வமத மகாசபைக்கு வந்த மகாத்மா இன்று எங்கே?'' என்று சுவாமிஜிக்கே அவள் எழுதினாள். ஸ்ரீமதி புல்லும்கூட 'சுவாமிஜி ஏன் விட்டுக் கொடுக்காதவராக இருக்கிறார்?' என்று வருந்தினாள். உண்மையில் இந்தப் பெண்களுக்கு சுவாமிஜியிடம் வருத்தமில்லை. அவர் இப்படி உள்ளத்தைத் திறந்து பேசுவதால் அவருடைய வேதாந்த வகுப்புக்குப் போதிய வரவேற்பு இராதோ என்பதுதான் அவர்களின் முக்கியமான விசாரம். அப்படியெல்லாம் நடைபெறவில்லை என்று எழுதி சுவாமிஜி அவர்களைச் சமாதானப்படுத்தினார்.

ஆம், சுவாமிஜி பேசுவதை நேரில் காணும்போது அவர் விட்டுக்கொடுக்காத பிடிவாதக்காரராகத் தோன்றவில்லை. கருணை ரஸத்தில் ஊறி நெகிழ்ந்தவராகவே இருந்தார். எனவே அவரது பக்தர்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டேதான் இருந்தது.

வேதாந்தத்துக்கு முற்றிலும் மாறுபட்ட வாழ்முறையை அநுசரித்து வந்த மக்கள் அப்படிக் கூடியது அதிசயத்திலும் அதிசயமாகும். அதுவும் இந்தச் சமயத்தில் சுவாமிஜி மிகவும் உன்னதமான ஒரு நிலையில் சஞ்சரித்துக்கொண்டிருந்தார். பர்க்கின் வார்த்தையில் சொல்லவேண்டுமானால், ''ஆதி அந்தமற்ற பொருளின் விளிம்பிலேயே அவர் அல்லும் பகலும் வாழ்ந்து கொண்டிருந்தார்''. இப்படிப்பட்டவர் சிஷ்யர்களுக்கேற்பப் பற்பல நிலைகளுக்கு இறங்கி வந்தது, அந்தச் சிஷ்யர்கள் கூடியதை விடப் பேர் அதிசயமாகும்.

பிரசங்கத்தின் மூலம், பாடம் கற்பதன் மூலம், சம்பாஷணையின் மூலம், நயமாகப்பேசுவதன் மூலம், கடிந்துகொள்வதன் மூலம், பிரத்யக்ஷ தியானமும் யோகமும் புரிவதன் மூலம் பலப்பல விதங்களில் சுவாமிஜியின் உபதேசம் நடைபெற்றது. நாட்டத்துடன் தேடிவரும் சாதகனுக்கு மட்டுமின்றி தெருச்சுற்றிக்குக் கூடத் தமது உபதேசத்தை அவர் வழங்கினார். சகோதரி கிரிஸ்டைன் கூறும் ஒரு சம்பவத்தை இங்கு நாம் பார்க்கலாம். இது சிறிதுகாலத்துக்குப் பிற்பாடு நடைபெற்றதாகும். ''ஒரு

Koviloor Digital Library

சமயம் பரிதாபத்துக்குரிய ஒரு சிறிய கூட்டம் எப்போது பார்த்தாலும் சுவாமிஜியையே விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டிருந்தது. அவர் உலவச் செல்லும்போது ஒவ்வொருவராக அவர்களைத் தம்முடன் கூட்டிக்கொண்டிருக்கிறார். இந்தப் பக்கிரிப் பரிவாரம் அவருடனேயே வேதாந்த சங்கத்துக்குப் பின் தொடர்ந்தது. சுவாமிஜியுடன் மாடிப்படிகளில் ஏறிய ஒருவர் 'இப்படிப்பட்ட விசித்திர ஜந்துக்களுடன் எல்லாம் இவர் எப்படிக் கலக்கிறார்?' என்று எண்ணினார். உடனே சுவாமிஜி அவர் பக்கம் மின்னலைப் போலத் திரும்பினார். அவர் வார்த்தைகளில் வெளியிடாத எண்ணத்துக்கு விடைகூறு முகமாக 'இவர்களெல்லாம் சிவபெருமானின் பிரதம கணங்கள். தெரிந்து கொள்ளுங்கள்' என்றார்.''

யாருக்காகவும் சத்தியத்தை விட்டுக்கொடுக்காமல் தம் வழியேதான் சென்றார் சுவாமி விவேகானந்தர். யாராரோ தாமாகவே அவரிடம் கூட்டம் கூட்டமாக வந்து சேர்ந்தனர். ''தம் வழியாகவே சென்று அவர் சரித்திரத்தின் போக்கை மாற்றி விட்டார்'' என்று பர்க் சூட்டும் மாபெரும் புகழ்மாலைதான் நினைவு வருகிறது.

''ஏறக்குறைய ஒரு தேசம் முழுவதும் சுவாமிஜியை எதிர்த்துக் குரைத்திருக்கிறது. ஆனால் அவர் சஞ்சலமின்றி ராஜநடை போட்டிருக்கிறார். அவசியமான இடத்தில் ஓர் இரு அடிகள் கொடுத்துத் திருத்தியிருக்கிறார். ஆயிரக்கணக்கான மக்களின் மனத்தைத் தட்டி எழுப்பி விறுவிறுப்பூட்டியிருக்கிறார். மித்திரன், சத்துரு எல்லார்மீதும் அருளைப் பொழிந்திருக்கிறார். ஒன்றரை யாண்டுத் தொடர்புக்குப்பின் அமெரிக்காவும் மாறியது; சுவாமிஜியும் மாறினார். நாட்டின் கண்கள் ஒரு புதிய சிந்தனை உலகுக்குத் திருப்பிவிடப்பட்டன. ஆன்மீகத்தின் உயிருள்ள விதை மக்களின் உள்ளத்தில் உறுதியாகப் பதிந்துவிட்டது. அங்கு அது வளர்ச்சியுற்றுத்தான் தீரும் என்கிற நிலை ஏற்பட்டது. சுவாமிஜியும் தமது கருத்துக்களில் பலவற்றை இப்போதுதான் அபிவிருத்தி செய்து அவற்றுக்கு உருவம் கொடுத்தார். மேல்நாடுகளுக்கு வேதாந்த சாஸ்திரம் மிகவும் தேவைப்படுகிறது என்பதை அவர் புரிந்துகொண்டுவிட்டார். அந்த சாஸ்திரத்தை மனிதனின் அன்றாடப் பிரச்னைகளுக்கு எப்படிப் பயனாக்குவது என்பதைக் கண்டுகொண்டு விட்டார். தாம் ஊன்றிய விதையை ஒரு மரமாகப் பேணி வளர்த்து, அதன் வேர்கள் ஆழ்ந்து செல்லவும், அதன் கிளைகள் உலகுக்கெல்லாம் நிழலளிக்கவும் செய்வதற்காக அவர் தம்மை ஆயத்தமாக்கிக்கொண்டார்.''

இதவ்வளவும் பர்க்கின் அழகிய மதிப்பீடே.

Koviloor Digital Library

சுவாமிஜியின் அமெரிக்க வாழ்வுபற்றிய பல புது விவரங்களைக் கூறும் பர்க்கின் நூல் இந்தக் கட்டத்துடன் முடிகிறது. 1895-ம் ஆண்டு வஸந்தத்திலிருந்து சுவாமிஜியின் வாழ்க்கையில் எல்லா விவரங்களும் ஏற்கனவே பிரபலமாகியிருப்பதுதான் இதற்குக் காரணம். அந்த ஆண்டு இறுதியிலிருந்து ஜே. ஜே. குட்வின் என்ற அடியார் திலகம் சுவாமிஜியைப் பின்தொடர்ந்து அவரதுஉரைகளை எல்லாம் விடாது எழுதிவந்திருக்கிறார்.

இவ்வாறு நியூயார்க்கில் பிரதிதினமும் இரவு பகலென்று பாராமல் — சுவாமிஜி இரண்டே மணிதான் உறக்கம் கொள்வார் என்று சொல்வதுண்டு — சமயப் பெரும்பணி புரிகிறபோதே விவேகானந்தரது உள்ளம் இந்தியாவின்பால் சென்று கொண்டேயிருந்தது. தமது இந்தியச் சீடர்களுக்கு இக்காலத்தில் ஒப்பற்ற கடிதங்கள் எழுதினாரவர்.

'நான் சூக்ஷ்ம தத்துவவாதியல்ல, வேதாந்த சாஸ்திரியல்ல, முனிவனும் அல்ல. நான் ஓர் ஏழை. ஏழைகளை நேசிக்கிற ஏழை இந்தியாவில் வறுமையிலும் அறியாமையிலும் மூழ்கிய முன்னூறு லட்சம் ஆண்களுக்காகவும் பெண்களுக்காகவும் உருகுகிறவர் யார்? அவர்களுக்கு வாழ்வொளியோ, கல்வியோ கிடைக்கவில்லை. யார் ஒளியை அவர்களுக்குக் கொண்டு செல்வார்கள், வீடு வீடாக ஏறியிறங்கி அவர்களுக்குக் கல்வியை எடுத்துச் சொல்வார்கள்? இந்த ஏழைகள் உங்கள் கடவுளாயிருக்கட்டும் — அவர்களைப்பற்றிச் சிந்தியுங்கள், அவர்களுக்காக உழையுங்கள், அனவரதமும் அவர்களுக்காகப் பிரார்த்தனை புரியுங்கள் * ஆண்டவன் உங்களுக்கு வழிகாட்டுவான். ஏழைகளுக்காக எவனது இதயம் குருதி கசிகிறதோ அவனையே நான் மஹாத்மா என்கிறேன்; அல்லாவிடில் அவன் துராத்மாவே யாரும் அறியாதவராய், யாரும் அநுதாபம் காட்டாதவராய், ... எந்தப் பணியையும் நிறைசெய்யாதவராய் நாம் சாகக் கூடும். ஆனால் நாம் எண்ணிய ஓர் எண்ணமும் வீண்போகாது. விரைவிலோ, நீண்டநாட்களுக்குப் பின்னோ அது பலிதமாகும்..... கோடிக்கணக்கான மக்கள் பட்டினியிலும் அறியாமையிலும் வாழும் போது, அவர்களைக் கீழ்ப்படுத்தியதன் மூலம் கல்வி கற்ற எவனொருவன் அவர்களைக் கவனியாதிருக்கிறானோ, அப்படிப்பட்டவனை நான் துரோகி என்றே சொல்வேன். என் சகோதர்காள்! நாம் ஏழைகள், நாம் அநாமதேயங்கள் — ஆனால்

* இந்தியாவின் ஏழைகளுக்காகவும், ஏதலருக்காகவும் துடித்துக்கொண்டிருந்த சுவாமிஜியின் கருணை உள்ளத்தைக்காட்ட இது ஓர் உதாரணம்தான்.

Koviloor Digital Library

இப்படிப்பட்டவர்களே எந்தக் காலத்திலும் பராத்பரனின் கருவி களாக இருந்திருக்கிறூர்கள்.''

நியூயார்க்கில் ஓர் ஒழுங்குபாட்டுக்கிசைய வேதாந்தப் பணியைத் தொடங்கிவிட்ட சுவாமிஜி இவ்வாறு ஸ்தூலமாக ஆத்மீக சேவைபுரியவேண்டும் என்று தமது சென்னைச் சிடர் களுக்கும் ஆக்ஞையிட்டார். சஞ்சிகை ஒன்றைத் தொடங்கி அதன் வழியே பாரதத்தின் சிரிய பண்புச் செல்வங்களை வழங்கு வதே மிகவும் யுக்தமான பணி எனக்கருதினுர். தாம் நிகழ்த்திய மதச்சார்பற்ற பிரசங்கங்களிலிருந்து கிடைத்த தொகையை இதற் காகச் சென்னைக்கு அனுப்பிவைத்தார். இதன் விளைவாகவே 'பிரம்மவாதின்' என்ற பத்திரிகை தோன்றியது. பத்திரிகையில் எதைக்குறித்து எழுதவேண்டும் என்பதையும் விளக்கினுர் சுவாமிஜி:

''எல்லாச் சமயங்களும் வேதாந்தத்தில் அடங்கியுள்ளன — அதாவது வேதாந்தத்தின் மூன்று நிலைகளாகிய துவைதம், விசிஷ் டாத்வைதம், அத்வைதம் இவற்றுள் அடங்கியுள்ளன. இவற்றுள் ஒன்று மற்றதன்பின் வருகிறது ஒவ்வொன்றுமே அவசிய மாகும் முதல் நிலையாகிய துவைதத்தை ஐரோப்பிய மக்க ளினப் பிரிவுகளுக்குப் பொருத்தியதே கிறிஸ்துவ மதம்; ஸெமிடிக் இனங்களுக்குப் பொருத்தியதே முகம்மதிய மதம். அத்வைதத்தை யோக சாஸ்திர நோக்கத்தின் உருவில் பொருத்தியதே புத்த சமயம். மதம் என்ருல் வேதாந்தம்தான். வேறு வேறு தேசங் களின் மாறுபட்ட தேவைகளுக்கும், சூழ்நிலைகளுக்கும், இதர சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப அது மாறுபட்டு உருவங்கள் பெறுகிறது. உங்களுடைய சஞ்சிகையில் இந்த மூன்று முறைகள் பற்றி யும் இடைவிடாது கட்டுரைகள் மீது கட்டுரைகளாக எழுதி அவற்றின் இசைவையும், அவை ஒன்றைத் தொடர்ந்து மற்றதாக வருகின்றன என்பதையும் விளக்குங்கள். சடங்கு அமைப்புக்களைத் தவிர்த்துத் தத்துவ ரீதியிலேயே இதைச் செய்யுங்கள். ஆன்மிகப் பகுதியை மட்டும் பிரசாரம் செய்யுங்கள். மக்கள் தத்தம் மதத்தின் வெளி அமைப்பு (சடங்கு)க் கேற்ப அவற்றைப் பின் பற்றட்டும் சஞ்சிகை விளையாட்டுத்தனமாக இருக்கக் கூடாது. ஸ்திரமும், அமைதியும், கௌரவமும் கூடியதாய் இருக்கவேண்டும். சிறிதும் சுயநலமின்றி, தளர்ச்சியில்லாமல் உழைத்து வாருங்கள்.''

ஆக சுவாமிஜி தாம் இந்தியாவுக்குத் திரும்பிய பின்னர் செயலாற்றுவதற்கு ஆதாரமாக அமெரிக்காவிலிருந்தே அடித் தளம் அமைக்கத் தொடங்கிவிட்டார்.

Koviloor Digital Library

இவ்வளவுக்கும் மத்தியில் அந்த அதிசய மனிதர் தமது எழுத்துத் தொழிலேயும் தொடர்ந்து வந்தார். ஜூன் மாதத்தில் அவரது 'ராஜயோகம்' என்ற உயர்ந்த நூல் பூர்த்தியுற்றது. பதஞ்சலி முனிவரின் யோக சூத்திரத்தின் மொழிபெயர்ப்பும், அவற்றின்மீது சுவாமிஜியின் விளக்க உரையுமே 'ராஜயோகம்'.

ஜடவஸ்துவிலிருந்து ஆத்மாவை விடுவிப்பதற்கான பல்வேறு முறைகளைக் கூறுவதே இந்நூல். மன ஒருமைப்பாட்டை எப்படி அடைவது என்பதற்குப் பல உபாயங்களைக் கூறுகிறுர் முனிவர். இவற்றை சுவாமிஜி விளக்கியதன் மூலம் சமய சத்தியங்களையும் விஞ்ஞான உண்மைகளைப்போல நேர்முகமாகச் செய்துகாட்டி நிரூபிக்க முடியும் என்று உறுதி செய்தார். இந்த நூல் ஹார்வர்ட் பேராசிரியர் வில்லியம் ஜேம்ஸைப் பெரிதும் கவர்ந்துவிட்டது. பிற்பாடு அது ருஷ்ய ஞானி டால்ஸ்டாயின் உற்சாகமான வரவேற்பைப் பெற்றது என்று சுவாமி நிகிலானந்தரின் நூலிலிருந்து தெரிகிறது.

ராஜயோகம் நூலே சுவாமிஜி வாய்மொழியாகச் சொல்ல அப்படியே எழுதியவள் அவருடைய பரமபக்தையாகிய குமாரி வால்டோ. அவள் சொல்கிறுள்:

''இந்நூலின் விஷயத்தை சுவாமிஜி நான் எழுதுவதற்காக எடுத்துச் சொல்லும்போது அவரைக் கண்டாலே ஒரு பிரபோதம் ஏற்படும். சூத்திரங்களுக்குத் தமது பாஷியத்தை அளிக்கும் போது அவர் ஆழ்ந்த தியானுவஸ்தையிலும், ஆத்ம பரிசோதனே யிலும் முழுகி என்னே நீண்டநேரம் காத்துக்கிடக்கும்படி செய்வார். நான் எப்போதும் பேனுவை மையில் முக்கியபடியே வைத்திருக்க வேண்டியதாயிருக்கும். அவர் நீண்டநேரம் தியானத்திலிருந்தபின் திடீரென்று ஓர் ஆர்வம் செறிந்த சொற்ருடரோ, நீண்டதொரு போதனேயோ மௌனத்தை உடைக்கும்.''

குருமஹராஜைப் போலவே நானுவிதச் சூழலிலும் சடேரென்று சமாதிக்கு நழுவும் பாங்கு இச்சமயத்தில் சுவாமிஜியிடம் பூரித்து நின்றது. இதை அமெரிக்க நண்பர்களும் உணர்ந்து அதைக் குலேக்காமல் வெகு பக்குவமாக நடந்துகொண்டனர். சுவாமிஜி இவ்வாறு அடிக்கடி ஸமாதி நிலேயில் ஆழந்ததைப் பற்றிக்கூறும் அன்பரொருவர் 'அவரது ஈடுபாடு அகத்தேதான் இருந்தது; புறத்தே இல்லே' என்கிறுர். இதை அப்படியே நாம் ஏற்பதற்கில்லே. புறத்துக்காகச் சேவை செய்வதற்காகத் தான் அகத்தை அப்படித் துலக்கிக் கொண்டார் அவர். இன்னும் சொல்லப்போனுல் புற உலகவ்வளவையும், உலகத்து ஜீவராசிகள்

Koviloor Digital Library

அனைத்தையும் அகத்துக்குள் கண்டு, அகமாகவே கண்டு அன்பு செய்தவர் அவர். குருமஹராஜ் போதித்த அத்வைதம் இதுவே அல்லவா?

பரமஹம்ஸர் எப்படி ஒரு சில இளைஞர்களை ஞானிகளாகப் பயிர் செய்வதற்கு விரும்பிக் காத்திருந்தாரோ அப்படியே சுவாமி ஜியும் அமெரிக்காவில் தமது பணியைத் தொடர்ந்து புரிய ஒரு சிலரையேனும் தயார்ப்படுத்தவேண்டும் எனப் பேரார்வம் கொண்டிருந்தார். ''தங்களுடைய இளமை மலர்ந்த பருவத்தி லுள்ள ஐந்தாறு பேர் எனக்குத் தேவைப்படுகிறார்கள்'' என்று அவர் எழுதினார். அப்படிப்பட்ட அதித ஈடுபாடு கொண்டவர்கள் இப்போது அவரை வந்தடைந்தனர். லாண்ட்ஸ்பெர்க், மேரி லூயிஸி, ஸ்ரீமதி ஒல்புல், டாக்டர் ஆலன்டே, குமாரி வால்டோ, பேராசிரியர் வைமன், பேராசிரியர் ரைட், டாக்டர் ஸ்ட்ரீட், குமாரி ஜே. மெக்லாயிட் ஆகியோரை முக்கியமாகக் குறிப்பிட லாம். 'தெய்விக ஸாரா' எனப்பட்ட ஸாரா பெர்ன்ஹார்ட் என்ற நடிகையும் அவரிடம் ஈடுபாடு கொண்டாள். டிக்ஸன் சொஸைட்டி அங்கத்தினர்கள் அவரது உபதேசத்தைச் சிரஸால் வகித்துப் பரப்பினார்கள்.

1895-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் சுவாமிஜி தமது அமெரிக்கப் பணியை வலுவான அஸ்திவாரமிட்டு உறுதிப்படுத்தி விட்டார். சரித்திரம் கேட்டிராத முறையில், தனியொரு மனித ராக இரண்டே ஆண்டுகளில் ஒரு கண்டத்தின் மனப்போக்கை மாற்றும் அற்புத சாதனையை அவர் புரிந்துவிட்டார்! மக்களிடம் ஹிந்து சமயத்தைப்பற்றி இருந்த தப்பபிப்பிராயத்தைக் களைந்து விட்டார். இக உலக இன்பங்களுக்கு மேலாக ஆத்மிக இன்ப முண்டு என்ற கருத்தை ஒருவாறு அந்தக் கண்டத்தில் பரப்பி விட்டார். இப்போது இங்கிலாந்து செல்வதுபற்றி அவரது எண்ணம் சென்றது. மேற்கு உலகம் முழுவதும் பாரத தர்மத்தை அறியவேண்டும் — அதை எள்ளி நகையாடாதிருப்பதற்காகமட்டு மல்ல; பாரத் தர்மம் உண்மையில் பாரதத்துக்கு மட்டுமின்றிப் பார்முழுவதற்கும் உரியதானபடியால் அதை எல்லா நாடுகளுக்கும் வழங்கவேண்டும் என்பதற்காக அப்படி சுவாமிஜி அவாக் கொண் டார். 'கிறிஸ்துவ மிஷனரிகள் என்னை எவ்வளவுக் கெவ்வளவு எதிர்க்கின்றனரோ அவ்வளவுக்குக் கிறிஸ்துவ நாடுகளில் பாரத தர்மத்தை ஆழப்பதிக்க உறுதிகொண்டிருக்கிறேன்' என்று அவர் கேத்ரி மன்னருக்கு எழுதினார்.

சுவாமிஜியின் கடும் உழைப்பும், பெருநம்பிக்கைகளும், உச்ச கட்டத்தை அடைந்த ஆண்டு 1895. 'புயல்காற்று' என்று

Koviloor Digital Library

அமெரிக்கர்கள் அவரை வர்ணித்ததற்கு முற்றும் பொருத்தமாக அயராது அவர் பணிபுரிந்த ஆண்டு அது. பொதுமேடையிலும், வகுப்பிலும் ஓயாமல் பிரசங்கம் புரிந்து அவர் ஆயாசமடைந்து விட்டார். அவருடைய நரம்புகள் பலவீனமாயின. ஸநாதன தர்மம் அமெரிக்காவில் ஊறி உட்புகத்தொடங்கிவிட்டது என் பதில் உள்ளத்திருப்தி கொண்டாலும் உடலுக்கு ஓய்வு தேவை யாகிவிட்டது. சில அமெரிக்க சந்நியாசிகளைத் தோற்றுவித்து அவர்களிடம் பணியை ஒப்புக்கொடுத்துவிட்டு அந்த மாபெரும் நாட்டிலிருந்து புறப்படவேண்டும் என்று அவர் எண்ணமிட லானார்.

ஒருவாறு தாம் எடுத்துக்கொண்ட மகத்தான சேவை நிறை வேறிவரும் அற்புதத்தை நினைத்தபோது ஈசுவரன் தமக்கு உறு துணையாக நின்றதை உன்னி உணர்ந்து உள்ளம் கசிந்தார். தாம் ஏழைகள் வசிக்கும் அநாகரிகச் சூழலில் வசித்தாலும், தகுதிவாய்ந்தவர்கள் தாமாகவே அங்கும்வந்து உபதேசம் பெற்றுப் போவதை எண்ணி ஆண்டவனின் அருள்விலாஸத்தை வியந்தார். பரமேசனின் சங்கல்பத்துக்கே தம்மைப் பூரணமாக அர்ப்பணித் துக்கொண்டு அவர் எழுதும் அமிருத வாசகங்களைப் பாருங்கள். "சிவபெருமானே, குழந்தைப் பருவத்திலிருந்தே நான் உன்னிடம் சரண்புகுந்திருப்பவன். நான் உலகின் உஷ்ணமண்டலங்களில் இருந்தாலும், துருவங்களின் பனியில் இருந்தாலும், மலையின் உச்சியில் இருந்தாலும், ஆழ்கடலின் அடிவாரத்திலிருந்தாலும் நீ என்னுடனே இருப்பாய்" என்கிறார்.

அந்த நம்பிக்கைதான் சுவாமிஜி புரிந்த அதிசயங்களுக்கெல் லாம் ஆதாரம். 'தகுதிவாய்ந்தவர்கள்' சுவாமிஜியிடம் வந்தனர் என்றோம். அதுவல்ல முழு உண்மை. சுவாமிஜி மனிதனின் உள்ளார்ந்த தெய்விகத்தில் கொண்டிருந்த திடநம்பிக்கையினால் தகுதியற்றவர்களும் தகுதி பெற்றனர். 'களிம்பு தோய் செம் பனைய' பலரை 'பத்து மாற்றுத் தங்கமாக்கியே பணி கொண் டார்' சுவாமிஜி.

தாம் அமெரிக்காவிலிருந்து புறப்படவேண்டும் என்று எண் ணியதால்தானோ என்னவோ தம்முடைய ஞாபகார்த்தமாகத் தமக்குப் பேரன்பு காண்பித்தவர்களுக்கு பரிசுப் பொருள்கள் வழங்கினார் சுவாமிஜி. இதற்காகவென்றே கேத்ரி மகாராஜா அவருக்குப் பல உயர்ந்த பொருட்களை அனுப்பிவைத்தார். தாம் முன்பே உபயோகித்துவந்த கைத்தடி, போர்வை, பெட்டி, இவற் றுடன் புதிதாக வந்த காச்மீரச் சால்வை, ரத்தினக்கம்பளம், மஸ்லின், பட்டு ஆடைகள், நூதன வேலைப்பாடமைந்த பேழை

Koviloor Digital Library

கள் ஆகியனவற்றை ஈகைக் குணத்தில் சிறந்த சுவாமிஜி அவர்களுக்கு வழங்கினுர். தமது இந்திய சீடர்களுக்கு எழுதி ருத்திராக்ஷ மாலைகளும், தர்ப்பை ஆசனங்களும் தருவித்து அவற்றை அமெரிக்கச் சீடர்களுக்கு அளித்தார். குசாஸனத்திலிருந்து, ருத்திராக்ஷமணிந்து தியானம் புரிந்த அந்த அமெரிக்கர்களை எண்ணினுலேயே அற்புதம் கலந்த ஓர் இன்பம் ஏற்படும்.

ஸ்தாபன ரீதியில் அமெரிக்காவில் சநாதன தர்மப் பிரசாரத்தை நிலைநாட்டிவிட்டு சுவாமிஜி விடைகொள்ள விரும்புகிருர் என்றறிந்த இந்தியச் சீடர்கள் பலர் ஸ்தாபனம் என்று ஏற்பட்டால் அதில் ஊழல்களும் கலந்துவிடும் என்று பயந்தனர். அப்போது சுவாமிஜி தாம் மக்களின் தனித்தன்மையையே போற்றுபவர் என்றும் ஸ்தாபனம் என்ற வெளி அமைப்பு சிஷ்யர்களின் தனித்தன்மைகளை யெல்லாம் சாலை உருளைபோல நெரித்துச் சமன்படுத்த விரும்பவில்லை என்றும் தெரிவித்தார். பலர் சேர்ந்த பௌதிக ஸ்தாபனத்தைவிட ஒவ்வொருவரும் தனித்தனி ஆத்மிகஸ்தாபனமாக இருந்து அரும்பணி புரியமுடியும் என்றும் அதையே தாம் எண்ணிவருவதாயும் கூறினுர். இப்படித் தனி ஒருவரே ஸ்தாபனமாக இருக்க முடியும் என்பதைத்தான் அவரே நிரூபித்திருந்தாரே !

என்றுலும் ஸ்தூலமாக ஒரு ஸ்தாபனமும் விலக்கமுடியாத ஒரு தேவையாகும் என்றும் சுவாமிஜி எண்ணலானுர். 'ஸ்தாபன அமைப்பில் குறைபாடுகளுண்டு, ஆனுல் அது இன்றி எதுவும் செய்யமுடியாது' என்று எழுதினுர்.

எப்படியாயினும், ஸ்தாபனத்திடமோ, தனிமனிதர்களிடமோ தமது வேலையை ஒப்படைக்கத் துடித்தார் சுவாமிஜி. தாம் பணிபுரிந்ததெல்லாம் போதும் போதுமென்றுகிவிட்டது அவருக்கு. மாயையின் வலையில் தாம் விழுந்ததால்தான் இப்படி ஓயாமல் வேலை செய்தோமோ என்றுகூடச் சிலசமயங்களில் அவர் எண்ணியதுண்டு. 'என் தலையில் கடவுள்' விதித்த பெரிய கர்மத்தை நான் கழித்துக்கொள்கிறேன். சீக்கிரமே அவன் என்னை விடுவிப்பான் என்று நம்புகிறேன்' என்று எழுதினுர். 'என்னுடைய பழம் கந்தலுக்காகவும், முண்டனம் செய்த தலைக்காகவும், மரத்தடித் தூக்கத்துக்காகவும், பிச்சை உணவுக்காகவும் நான் ஏங்குகிறேன்' என்று கதறினுர்.

* * *

நியூயார்க்கில் சண்டமாருதமாகப் பிரசாரம் புரிந்த சுவாமிஜி ஜூன் மாதத்திலிருந்து அமைதியைத் தீவிரமாகத் தேடினுர். இச்சமயத்தில் அவருடைய சீடர்களில் பலர் நியூயார்க்கிலிருந்து

Koviloor Digital Library

கடற்கரை பட்டணங்களுக்கும், மலைவாசஸ்தலங்களுக்கும் செல்ல வானார்கள். சுவாமிஜியால் உடனே இங்கிலாந்துக்கு புறப் படுவதற்கில்லாமலிருந்தது; எனவே அமெரிக்காவிலேயே விச் ராந்தியான ஓரிடத்துக்காக அவர் காத்துக்கொண்டிருந்தார்.

இந்தச் சரியான சந்தர்ப்பத்தில் மிஸ் டட்சர் என்ற சிஷ்யை தௌஸண்ட் ஐலண்ட் பார்க் (ஆயிரம் திவுப் பூங்கா) என்ற பரமரம்மியமான இடத்துக்கு வருமாறு சுவாமிஜிக்கு அழைப்பு அனுப்பினாள். சுவாமிஜி அழைப்பை ஏற்றார்.

சுவாமிஜியின் ஜீவிதம் என்ற தருவில் மற்றொரு ரஸம் செறிந்த கனி பழுக்கப் போகிறது !

தக்ஷிணேசுவரத்திலும், காஸிப்பூரிலும் பத்துப் பதினொரு சிஷ்யமணிகளுடன் பரலோக ஆனந்தத்தை நில உலகில் நிலவச் செய்தார் பரமஹம்ஸ தேவர். அதேபோல சுவாமிஜியும் பிரபஞ் சத்திலுள்ள சகல ஜீவராசிகளும் காணக்கூடிய அவ்வளவு ஆனந் தத்தையும் தூய்மையாக ஒரு பத்துப் பன்னிரண்டு பேருடன் அநுபவிக்க தௌஸண்ட் ஐலண்ட் பார்க்கை உற்ற இடமாகக் கருதினார். இயேசுநாதருக்குப் பன்னிரண்டு உத்தமமான சிஷ்யர் கள் அமைந்தாற்போல சுவாமிஜியுடன் பன்னிரண்டு சீடர்கள் அந்த இடத்தில் தங்கியிருந்து ஓர் அற்புத உலகை உருவாக்கி னார்கள். முதலில் நாலைந்துபேருடன் தொடங்கிய அந்த ஆத்மிகப் பண்ணை பிறகு விரிந்தது.

* * *

ஸெயிண்ட் லாரென்ஸ் நதியிலுள்ள ஆயிரத்தெழுநூறு தீவு களில் இரண்டாவது பெரிய திவு வெல்லஸ்லித் திவு. அதன் மேற்கு முனையில் அமைந்தது ஆயிரம் திவுப் பூங்கா. இயற்கை அன்னை தன்னை மோகனமாகச் சிங்காரித்துக்கொண்டு காட்சி தந்த அழகுப் பேடகம் அது. மெதாடிஸ்ட் கிறிஸ்துவர்கள் நிறைந்த அங்கு குடி, கூத்து போன்ற செய்கைகள் என்றுமே அநுமதிக்கப்பட்டதில்லை.

இங்கு ஊருக்கு அருகிலிருந்தும் தோப்பு ஒன்றுக்குள் ஒளிந்து கொண்டு ஊரின் கண்ணில்படாத ஒரு பாகத்தில் குமாரி டட்சரின் 'குடில்' இருந்தது. பாறை ஒன்றின்மீதமர்ந்து, அமெரிக்காவின் க்ளேடன் நகரையும் கனடாவின் கடற்கரையையும் கம்பீரமாகப் பார்த்துக்கொண்டிருக்கும் அந்தக் குடில். சுவாமிஜியை அழைத்த பின் இந்தக் 'குடிலு'க்கு மூன்று மாடிகள்கொண்ட ஓர் அங்கத் தைச் சேர்த்தாள் மிஸ் டட்சர். அதன் உச்சாணி அறையே மனிதர்களில் உயர்ந்த விவேகானந்தருக்கு ஒதுக்கப்பட்டது. அங் கிருந்து ஸெயிண்ட் லாரென்ஸ் நதியில் சூரியாஸ்தமனமாவதைக்

Koviloor Digital Library

காண்பது நெஞ்சை அள்ளுகிற காட்சியாகும். அஸ்தமனத்துக்குப் பின் மதி உதயமாகித் தன் பிரதிபிம்பத்தை ஸெயிண்ட் லாரன்ஸ் நதியில் கண்டுகொள்கிற காட்சியை வர்ணிக்க வார்த்தை கிடையாது.

இந்த செளந்தரியத் திடலில்தான் 'உலகை மறந்தவர்களாக, உலகால் மறக்கப்பட்டவர்களாக' சுவாமிஜியும் சீடர்களும் அத்யாத்ம வாழ்க்கையைத் தொடங்கினர்.

அத்யாத்ம வாழ்க்கையின் அடர்ந்த ஆனந்தங்களைப் பெறும் போதே, குழந்தைகளுடையதைப் போன்ற கள்ளமற்ற குதூகலங்களையும் அவர்கள் அநுபவித்தனர்.

எப்படி பகவான் கிருஷ்ணன் விளையாடிக்கொண்டே தத்வோபதேசம் புரிந்தானே, எப்படி பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் சிரித்துச் சிரித்தே — சிரிக்கவைத்தே — சித்தத்தைத் தித்திக்க வைத்தாரோ அவ்வாறே சுவாமி விவேகானந்தரும் தமது மனோகரமான மதுர நடவடிக்கையோடு போதனையையும் குழைத்துத் தந்தார்.

ஆயிரம் தீவுப் பூங்காவில் கூடிய இந்த அன்புக்குடும்பத்தினர் பிறரின் உதவியின்றித் தாங்களாகவே சகல காரியங்களையும் கவனித்துக்கொள்ளவேண்டும் என்றே முதலில் முடிவு செய்திருந்தனர். சுவாமிஜியும் மற்றவர்களோடு சேர்ந்து எடுபிடி காரியங்கள் எல்லாம் செய்வார். அவர்களில் யாருக்குமே வீட்டு வேலைகள் செய்து பழக்கம் கிடையாது. எல்லா கற்றுக்குட்டிகளுமாகச் சேர்ந்துகொண்டு செய்த அமர்க்களம் சொல்லிமுடியாது. பாத்திரம் கழுவுவது போன்ற வேலைகளை வேண்டுமானால் சிலர் செய்ய முடிந்தது. சமையல்? ரொட்டித் துண்டுகளை நறுக்கக்கூடத் தெரியாமல் ரொட்டித்துண்டைத் தவிர, பலகை, கைவிரல் உள்பட மற்ற எல்லாவற்றையும் நறுக்கிக்கொண்டார்கள். எதையும் சரியாகச் செய்யவராமல் அழுகையும் ஆத்திரமுமே வரும். சிஷ்யர்களுக்குச் சகிப்புத்தன்மை ஏற்படவேண்டுமென்றே சுவாமிஜி இப்படி விதித்திருப்பாரோ என்னவோ?

ஆனால் சுவாமிஜிமட்டும் பரபரப்புடன் எல்லா வேலைகளுக்கும் முன்நிற்பார். அந்தக் குழுவில் அவர் ஒருவர்தான் சிறியவர். எனினும் முப்பத்திரண்டே வயதான சுவாமிஜி — அவரது வயதை நினைவு படுத்திக்கொள்ளும்போதெல்லாம், அவரது அளப்பரும் செயல்கள் உடனுக்குடன் மனத்தில் தோன்றி, ஓர் ஆச்சரிய உணர்வை ஏற்படுத்துகிறது அல்லவா? — மற்ற எல்லாருக்கும் ஒரு தாய்போலப் பொறுமையுடனும், மென்மையுடனும் விளங்கினர்.

Koviloor Digital Library

''இன்றைக்கு நானே சமைக்கிறேனே!'' என்பார் சுவாமிஜி.

உடனே ''ஹா! எங்களைக் கடவுள் காப்பாராக!'' என்பார் லாண்ட்ஸ்பெர்க்.

அவருக்கு அதில் பழைய அநுபவம் உண்டே! நியூயார்க்கில் சுவாமிஜி பாகம் பண்ணுவதுண்டு. அதற்கு வீட்டிலுள்ள சகல பாத்திரங்களையும் வாரிப் போட்டுக்கொண்டுவிடுவார். அவற்றையெல்லாம் யார் கழுவிவைப்பது? அதோடு, சுவாமிஜி வெகு நேர்த்தியாகச் சமைப்பார் எனினும் காரத்தை மிகவும் தூக்கலாகப் போட்டுவிடுவார். இந்தச் சரிதத்தின் ஆரம்பத்தில் கூறியது போல தாமஸ உலகுக்கு ராஜஸத்தை உண்டாக்கவே அப்படிச் செய்வாரோ, என்னவோ? இந்தியர்கள் யாரும் புலால் உண்ண வேண்டும் என்பதற்கும் அவர் இதைத்தானே காரணமாகக் காட்டி வந்தார்?

'காரமாக இருந்தால் என்ன? ஆனுனப்பட்ட விவேகானந்தர் எனக்காக உணவு சமைப்பாராகில் அதை உண்பதைத் தவிர நான் என்ன செய்யமுடியும்?' என்கிறுள் ஸ்ரீமதி ஃபங்க்.

சாப்பாட்டுச் சமயத்தில் சுவாமிஜி வெள்ளைக் குட்டை ஒன்றை கழுத்தில் கட்டிக்கொண்டு, மேஜை அருகே நின்றபடி, போஜனசாலை சர்வர் போலவே 'சாப்பாடு தயார்' என்று கூவி அழைப்பார். உண்ணும்போது இன்னும் பல வேடிக்கைகள் நிகழும்.

டாக்டர் ரைட் அடிக்கடி, ''ஏன் சுவாமிஜி, தாங்கள் சொல்வதெல்லாம் இதுதானே: 'நானே பிரம்மம்' என்பது தானே?'' என்று கேட்பார். ''ஆமாம் டோகி, நீங்களேதான் பிரம்மம்'' என்று டாக்டரை 'டோகி'யாக்கிச் செல்லமாகச் சொல்வார் சுவாமிஜி. பிறகு டாக்டர் ரைட் உணவு மேஜைக்கு வரும்போது சுவாமிஜி ''இதோ பிரம்மம் வருகிறது, பராக்'' என்பார்.

சிஷ்யர்களின் நடவடிக்கைகளை அப்படியே விகடம் செய்து காட்டுவார். யாரையும் புண்படுத்தாமல், பண்படுத்தும் நகைச் சுவையில் பரமஹம்ஸ தேவர் போலவே விளங்கினுர் சுவாமிஜி.

சிஷ்யர்களின் வெளிநடத்தைகளை மட்டுமின்றி உள்ளத்துச் சிந்தனைகளையும் அறிந்திருந்ததிலும் தமது குருவுக்கு நிகராகவே இருந்தார் சுவாமி விவேகானந்தர். முதலில் ஆயிரம் தீவுப் பூங்காவில் சீடர்கள் எல்லாரும் ஒன்றுகூடியவுடன் சுவாமிஜி அவர்களின் எண்ணங்களில் புகுந்து பரீட்சை செய்தார்.

''நீங்கள் எல்லாம் உபதேசம்பெறத் தயாராக இருக்கிறீர்களா, என்று அறிய விரும்புகிறேன்'' என்றவர் சிறிதே லஜ்ஜையுடன், ''எனக்கு ஒரு சக்தி உள்ளது. அதை நான்

Koviloor Digital Library

மிக்குறைவாகத்தான் பயன் படுத்துகிறேன். இப்போது பயன் படுத்த சர்தர்ப்பம் வந்துள்ளது. நீங்கள் அநுமதி அளித்தீர்க ளானல் உங்களுடைய சிந்தனைகளை நான் படித்துப் பார்த்து, அதன்பின் நாளைக் காலை உபதேசமளிப்பேன்'' என்றார். தூய்மை தவிர வேறு எதுவும் உள்ளத்தில் இல்லாத அந்தச் சிடர்கள் அந்தப் பரீட்சைக்கு உள்பட உடனே மகிழ்ச்சியுடன் இசைந் தார்கள். சுவாமிஜியும் அவர்களின் உள்ளத்தைக் குடைந்து பார்த்து திருப்தி கொண்டார். மறுநாள் உபதேசமும் அளித்தார்.

இவ்வாறு தாம் பிறர் மனதுக்குள் பிரவேசிப்பதையும், அதோடு காலவெள்ளத்தினுட் புகுந்து எதிர்காலத்தில் நடக்கப் போவதைச் சொல்வதும் எப்படி என்று சுவாமிஜி விளக்கி யிருக்கிறார். அது அவருக்கு மிகவும் எளிய காரியமாகவே இருந்தது. எங்கும் விரிந்து பரந்த நிர்மலமான நீல ஆகாசத்தை முதலில் அவர் நினைப்பார். இந்த வான வெளியை நோக்கி சித்தத்தை ஒருமுகப்படுத்தினல் தாம் யாரைப்பற்றி அறிய விரும்பு கிறாரோ அவரைப்பற்றி அங்கு காட்சிகள் தோன்ற ஆரம்பிக்கு மாம். இந்தக் காட்சிகளை அறிவினல் விளங்கிக் கொள்வாராம் சுவாமிஜி. இவ்வாறு கண்டு அவர் தமது சிஷ்யர்கள் செல்லப் போகிற இடங்கள், அவருடன் வசிக்கப்போகிற இல்லங்கள் முதலியவற்றைக்கூட ஒரு விவரம் விடாமல் வர்ணித்திருக்கிறு ராம்!

சுவாமிஜியின் யோக சக்தியை விளக்கும் இன்னொரு விவரத் தையும் இங்கு நாம் கூறலாம்:

சுவாமிஜி இரண்டாண்டுகளாகத் தினந்தோறும் — சில சம யங்களில் ஒரே தினத்தில் ஒருமுறைக்கு மேலும் — உரைகள் நிகழ்த்திவந்ததாகக் கண்டோம். அப்படியானல் ஒரே விஷயத் தையேவா அவர் திரும்பத் திரும்பச் சொல்லிவந்தார்? உரையின் முக்கியமான பொருளும், சிற்சில உவமைகளும் ஒன்றுக இருந் திருக்கலாம். என்றலும் அவை ஒவ்வொன்றிலும் புதுப் புதுக் கருத்துக்கள் பிரகாசித்துக்கொண்டேதான் இருந்தன. இத்தனை எண்ணங்கள் அவருக்கு எங்கிருந்து உதயமாயின?

சுவாமிஜி பலமுறை பயந்ததுண்டாம். 'இப்படி ஒரே ஊரில் பல பிரசங்கங்கள் செய்ய ஒப்புக்கொள்கிறேமே! புதிது புதிதாக என்ன பேசமுடியும்?' என்று சிந்தை கொள்வாராம். இதே நினைவில்தான் படுக்கப் போவாராம்.

அப்போது அவரது யோக சக்தி வெளிப்படும்.

நள்ளிரவின் நல்லமைதியில் ஏதோ ஒரு குரல் அவர் இதுவரை மொழிந்திராத புது விஷயங்களை, புதிய வாக்குத் தொடர்களில்

Koviloor Digital Library

பொழியத் தொடங்கும். சிலசமயத்தில் இக்குரல் தொலைவி லிருந்து கேட்கும். பிறகு மெல்ல மெல்ல அருகில்வரும். வேறு சில சமயங்களில் இரு குரல்கள் அவர்முன் பல பொருள்கள்பற்றி வாதப் பிரதிவாதம் செய்யும். இவற்றிலிருந்து சுவாமிஜியின் மறுநாள் உரைக்கு விஷயம் கிடைக்கும்.

இது அவரது மனப்பிரமை என எண்ணிவிடாதீர்கள்! இந்தக் குரல்களை அவரது அறைக்கு வெளியே படுத்திருப்பவர்களும் கேட்டதுண்டு. ''சுவாமிஜி, நேற்று இரவு நீங்கள் யாருடன் வாதம் செய்துகொண்டிருந்தீர்கள்?'' என்று மறுநாள் அவரை அவர்கள் வினவுவார்கள்.

இதில் அற்புதம் எதுவும் இல்லை என்றும், தம்முடைய பிரபோதம் மானுட சாரிரமாகக் கிட்டிற்று என்றும் சுவாமிஜி கூறுவார்.

குருதேவரைப்போல ஸ்பரிசத்தாலேயே ஒருவரை மாற்றும் ஆற்றலும் சுவாமிஜிக்கு அப்போது இருந்தது என்றும், எனினும் அவர் அதனைப் பயன் படுத்தவில்லை என்றும் சுவாமி நிகிலா னந்தர் கூறுகிறார்.

பிற்காலத்தில் ஒருமுறை சுவாமி துரியானந்தர் விவேகானந் தரின் அறைக்குள் நுழைந்தபோது, அங்கு படுக்கையில் சுவாமி ஜியின் பௌதிகமான உடலுக்குப் பதில் ஒளிப்பிழம்பு ஒன்றே படுத்திருப்பதைக் கண்டதாகவும் இங்கு நிகிலானந்தர் குறிப் பிடுகிறார்.

ஆயிரம் தீவுப் பூங்கா அன்பர்கள் தங்கள் காரியங்களைத் தாங்களே கவனித்துக்கொள்ள முயன்றதால் ஏக ரகளை உண்டாகி விட்டது. எனவே பிற்பாடு வெளி மனிதர் ஒருவர் உதவியாள ராக அமர்த்திக்கொள்ளப்பட்டார்.

ஆனால் இந்தக் கும்மாளத்துக்காகவா அவர்கள் அங்கு கூடியது?

பாரமார்த்திக உலகில் பிரவேசிப்பதற்காக அல்லவா சுவாமிஜி அவர்களையெல்லாம் அங்கு அழைத்து வந்திருந்தார்?

வேலைகளிடையே கதைகள், புராணங்கள் எல்லாம் சொல்லி அவற்றிலேயே சுவாமிஜி உன்னத தத்துவங்களை மலர்த்திய வனப்பை அவரது ஆயிரம் பூங்காச் சீடர்கள் சொல்கிறார்கள்.

தினமும் காலைவேளையில் பகவத்கீதை, உபநிஷதம், பாத ராயண சூத்திரம் இப்படி ஆத்மக் கிரந்தங்களில் போதனை நடத்து வார் சுவாமிஜி. பிரஸ்தானத்ரயம் என்று பெயர்பெற்ற இம் மூன்றுக்கும் அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம் மூன்று சம்பிரதாயப்படியும் பாஷ்யம் உண்டல்லவா? மூன்றினையும்

Koviloor Digital Library

விளக்குவார் சுவாமிஜி. இவற்றில் ஸ்ரீசங்கரரின் நுணுக்கமான அத்வைத விளக்கங்களைவிட ஸ்ரீராமாநுஜரின் எளிமையான விசிஷ்டாத்வைத விளக்கங்களையே அமெரிக்க சிஷ்யர்கள் அதிகம் ரசித்தனராம். உடையவராகிய ஸ்ரீராமாநுஜாசாரியர் அவர்களுடைய அபிமான குருவானபோதிலும், சுவாமிஜி அத்வைதத்தையே இறுதி நிலையாக உபதேசித்து வந்தார்.

நாரதரின் பக்தி சூத்திரங்களையும் சுவாமிஜி அவ்வப்போது போதிப்பதுண்டு. ஈசுவரப் பிரேமை என்பது என்ன என்று உள்ளபடி இதன்மூலம் தமது சீடர்களுக்கு உபதேசித்தார்.

குருமஹராஜ் ஸ்ரீராமகிருஷ்ணரைப்பற்றியும், அவரைத் தாம் அடைந்தது பற்றியும், அவர் தம்மைக் குற்றம்களைந்து கோதாட்டிய தேனுன வரலாற்றைப் பற்றியும் நிறையச் சொன்னுர் சுவாமிஜி. தம்மிடம் வந்துள்ள சீடர்களுக்கு இருக்கக்கூடிய ஐயங்களைவிடத் தீவிரமாகத் தாம் ஐயப்பட்டதையும், அதனைப் பரமஹம்ஸர் தீர்த்துவைத்ததையும் உள்ளமுருகிச் சொன்னுர்.

மந்திர உபதேசம் நடைபெற்றது. அதிகாலையில் எளிமையும், அழகும் நிறைந்த முறையில் அது நிகழ்ந்தது. சிறிய வேதியொன்றில் அக்கினி வளர்க்கப்பட்டது. புஷ்பாஞ்சலி செலுத்தி மந்திரோபதேசம் பெற்றனர் அந்த அமெரிக்க சிஷ்யர்கள்.

மந்திர உபதேசத்துக்குப்பின் பிரசங்க உபதேசம் ஜூன் 19-ந் தேதியிலிருந்து தொடங்கியது. அப்புறம் ஏழு வாரங்களுக்கு அமிருத தாரையைப் பெருக்கும் அமிருத நிலையமாகவே சுவாமிஜி விளங்கினுர். தக்ஷிணேசுவரத்துத் தபஸ்வி தமது சீடர்களுக்கு எப்படிப் போதித்தாரோ அப்படியே அன்பின் உருவமாகிவிட்டார் சுவாமிஜி. பிற்பாடு சுவாமிஜியே தமது வாழ்நாளில் தாம் ஆயிரம் தீவுப் பூங்காவில்தான் தலைசிறந்த நாட்களைச் செலவிட்டதாகக் கூறியுள்ளார். தம்முடைய பணி பாய்வதற்கு ஒரு வாய்க்காலைத் தாம் கண்டது அப்போதே என்று கூறியுள்ளார். குரு தமது சிஷ்யர்களைக் கண்டுவிட்ட நாட்களல்லவா அவை? முக்திக்கு வழிகாட்டவேண்டும் என்று சுவாமிஜி துடித்த நாட்கள் — தமது சீடர்களைக் கையைபிடித்து அழைத்து மோக்ஷ சாம்ராஜ்யத்தின் தோரணவாயிலுக்கு அழைத்துச் சென்ற நாட்கள் — அல்லவா அவை?

தம்முடைய பணியை ஒப்படைக்க அவர் ஆட்களைத் தயாரித்த நாட்கள் அவை. இதனுல்தான் தாம் உரையாற்றுவதோடு நில்லாமல், தமது சீடர்களையும் அவர் அப்போது உரையாற்றுமாறு பணித்துவந்தார். அப்போது சிலர் பரவசமாக முன்

Koviloor Digital Library

வந்ததும், சிலர் தயங்கித் தடுமாறியதும் இன்பநாட்களின் மறக்க முடியாத அநுபவங்கள்.

சுவாமிஜியை மையமாகவைத்து ஓர் அரைவட்டமாகச் சீடர்கள் தினந்தோறும் அமர்ந்துகொள்வார்கள். இன்றைக்கு ஆத்ம சாம்ராஜ்யத்தின் எந்த அழகிய மணிக்கதவம் திறந்து கொள்ளுமோ என்று ஆவல் மீதூற அமர்வார்கள். அப்படியே ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ரமணியமான பாதைவழியாக அந்த அகண்டானந்தத் திருநாட்டைக் காணத்தான் செய்தார்கள். 'அவர் தெய்வத்தின் திரு அவதாரம் இல்லையா? ஜீவன் தான் இழந்த சாம்ராஜ்யத்தை மீண்டும் பெறும்வரையில் அதனை விடாமல் இழுத்து வசியப்படுத்தும் தெய்வத்தின் திரு அவதாரம் அல்லவா அவர்?' என்று கேட்கிறாள் சகோதரி கிறிஸ்டைன்.

காலையில் சுவாமிஜி உபதேசிக்கத் தொடங்கினால் பகல்வரை தொடரும். பிற்பகலில் சிஷ்யர்களுடன் மலைச்சாரல்களில் இறங்கி நதிப்படுகையை அடைந்து அதோடு செல்வார் சுவாமிஜி. புல் தரையில் எல்லாரும் அமர்ந்துகொண்டு அவரது உரையாடலின் அழகை மாந்துவார்கள். ஒரு பட்சி, ஒரு புஷ்பம், ஒரு பூச்சிகூட அவரின் இதய அடிவாரத்தைக் கிளறிவிட்டுவிடும். அங்கிருந்து சுந்தரமயமான எண்ணங்களும், சொற்களும் பீறிட்டுப் பெருகத் தொடங்கும். தாராகணங்களும், தாராபதியும் நீண்டவானில் ஒரு பாதியைக் கடக்கும்வரைகூட பிரசங்கமாரி நீடிக்கும். நள்ளிரவையும், நண்பகலையும் அப்போது யார் கண்டபடி? 'காலமும், இடமும் எங்களிடமிருந்தே மறைந்தேபோயின' என்கிறாளே கிறிஸ்டைன்.

'பிரபோத பிரசங்கங்கள்' என்ற பொருத்தமான பெயரில் சுவாமிஜியின் ஆயிரம் திவுப் பூங்கா உரைகளைத் தொகுத்தளித்து ஆத்மிக உலகுக்கு அருந்தொண்டாற்றியுள்ள குமாரி வால்டோ கூறுவதைக் கேட்போம்:

''இந்தப் பேச்சுக்களிலிருந்து குறிப்பெடுத்துக்கொள்வது அசாத்தியமாகும். அவற்றைக் கேட்டவர்களின் இதயங்களிலேயே அவை வைத்துக் காப்பாற்றப் படுகின்றன அச்சமயங்களில் சுவாமி தமது இதயம் முழுவதையும் கொட்டிவிட்டார். அவருடைய சொந்தப் போராட்டங்கள் யாவும் அப்போது எங்கள் முன் மீண்டும் நிகழ்ந்தன. அவரது குருநாதரின் ஆத்மாவே அவருடைய உதடுகளின் மூலம் பேசிற்று; எல்லா ஐயங்களையும் தீர்த்தது; எல்லாக் கேள்விகளுக்கும் விடை சொல்லிற்று; எல்லாப் பயங்களையும் விலக்கி விச்ராந்தி யளித்தது. பலமுறை சுவாமி நாங்கள் இருக்கிறோம் என்பதையே அடியோடு மறந்ததாகக் கண்டார். அச்சமயங்களில் அவருடைய எண்ணப்பெருக்கைத்

Koviloor Digital Library

தடுத்து அவரை நிலைகுலையச் செய்யக்கூடாது என்ற பயத்துடன் நாங்கள் மூச்சை இறுகப் பிடித்துக்கொள்வோம்.

''அவர் எங்களிடம் நேரிடையாகப் பேசினார் என்றே தோன்றுது. தமக்குத்தாமே கனலான வாக்குகளில் — ஆம், அவை அவ்வளவு தீவிரமாகவும், அழுத்தமாகவும் கேட்பவர் இதயத்தில் என்றும் மறவாதபடி ஜொலிக்கும் — பேசிக்கொள்வார்.''

ஆத்ம மின்சாரத்தைச் சீடர்களிடையே வெள்ளமாகப் பாய்ச்ச அவர் துடித்த நாட்கள் அவை. அவரைத் தேடித் தேடி, அவர் தங்களை அங்கிகரிப்பாரா என ஏங்கி ஏங்கி டெட்ராய்ட்டி லிருந்து நீண்ட பயணம்செய்து அவரை வந்தடைந்த ஸ்ரீமதி ஃபங்க்கும், மேரி கிறிஸ்டைனும் அவரைக் கண்டவுடன், ''இயேசுநாதர் இந்த மண்ணுலகில் இருந்தாராகுல் அவரிடம் எத்தகைய உணர்வுகளுடன் வந்திருப்போமோ அப்படி உங்களிடம் வந்திருக்கிறோம்'' என்று பக்தி அலைகளில் மொத்துண்டு கூறினார்கள். உடனே சுவாமிஜி, ''ஆஹா, எனக்கு மட்டும் கிறிஸ்துவைப் போல் உங்களை இப்போதே முக்திநிலைக்கு அனுப்பும் ஆற்றல் இருந்தால்?'' என்று உணர்ச்சியுடன் கூறினார்.

பிற்பாடு இவர்களில் ஒருத்தியான கிறிஸ்டைன் சுவாமி ஜியைக் கிறிஸ்துவ அடியார்களுடன் ஒப்பிட்டு எழுதும்போது அவர்களில் பிரம்மசரியம்காத்த சில ரோமன் கத்தோலிக்க அடியார்களாலேயே சுவாமிஜியைப்போல் ஆத்மிகம் பரப்ப முடிந்தது என்று கூறி ஆத்மிகத்துக்கும், பிரம்மசரியத்துக்கும் உள்ள தொடர்பை விவரிக்கிறாள்.

இதைப்பற்றி சுவாமிஜியும் வெகுவாக வற்புறுத்திவந்தார். அப்போது மேல்நாடுகள் அறிந்திராத தத்துவம் இது. இந்திரிய நிக்கிரகம்செய்து வீரியத்தை ஆத்மசக்தியாக்கும் முறையை சுவாமிஜியின் மூலம்தான் மேல்நாடுகள் சிறப்பாக உணர்ந்தன. ஒரு நாள் சுவாமிஜி சீதாதேவியைப்பற்றி பேசிவரும்போது, அவர் மேல்நாட்டுச் சமூகப் பெண்களைக் காணும்போது என்ன எண்ணுவார் — அவரைக் கண்டதும் அவர்கள் என்ன எண்ணுவர் — என்ற எண்ணம் ஸ்ரீமதி ஃபங்க்குக்கு எழுந்தது. இதை எப்படியோ புரிந்துகொண்ட சுவாமிஜி தமது விசாலமான நயனங்களால் அவளை சாந்தமாகப் பார்த்தார். ''என்னை இந்த உலகத்தின் அதிரூப சௌந்தரி ஒருவள் தவருன முறையில் பார்த்தாலும் உடனே பச்சைத் தவளையாக மாறிவிடுவாள்'' என்றார். அத்தகைய பிரம்மசரியம் அவரிடம் இருந்தது.

தமது அந்தச் சிஷ்யர்கள் யாவரையும் பிரம்மசரிய விரதம் காக்குமாறு பணித்தார் சுவாமிஜி. அதோடு மேதாம் ஜாயியை

Koviloor Digital Library

அபயானந்தா என்ற பெயரிலும், லியான் லாண்ட்ஸ் பெர்க்கை கிருபானந்தா என்ற பெயரிலும் தீக்ஷை அளித்துத் துறவிகளாக்கினர். சுவாமிஜியினுல் சந்நியாச ஆசிரமம் பெற்ற இவ்விரு அற்புத அமெரிக்கர்கள் பிரம்மசரியம் காப்பதோடு திரவியத்தை வைத்துக்கொள்ளக்கூடாது என்றும் சுவாமிஜி விதித்தார்.

ஆகஸ்டு ஏழாம் தேதி. அன்று சுவாமிஜி ஃபங்க்கையும் கிறிஸ்டைனையும் தம்முடன் உலவ அழைத்துச் சென்ருர். அரை மைல் தொலைவிலுள்ள ஒரு மலையின் உச்சியை அடைந்தனர். வனப்பாங்கான பகுதி அது. மோனத்தில் ஆழ்ந்திருந்தது அந்த வனம். தாழ்ந்த கிளைகளுடன்கூடிய ஒரு மரத்தைத் தேர்ந்தெடுத்தார் சுவாமிஜி. அதனடியே மூவரும் அமர்ந்தனர். வழக்கம்போல் சுவாமிஜி உபதேசிப்பார் என்றே அவர்கள் எதிர் பார்த்தனர். அவரோ, 'இன்று நாம் தியானம் செய்யப் போகிறேம். போதிவிருக்ஷத்தடியே புத்தர் இருந்தாற்போல் இருக்கப் போகிறேம்' என்ருர். உடனேயே அவரது உடல் வெண்கல விக்கிரகம்போல அசைவற்று மாறிவிட்டது.

மேகங்கள் குமுறின. இருள் பரவிவந்தது. சில்லென்று காற்று வீசத்தொடங்கியது. கன மழையும் பொழியத் தொடங்கியது.

வெண்கல விக்கிரகமாகவே வீற்றிருந்தார் விவேகானந்தர்.

ஃபங்க் தனது குடையை அவருக்குப் பிடித்தாள்.

தியானம் சிறிதும் முறிவில்லாமல் நடைபெற்றது.

மற்ற சிஷ்யர்கள் மழைக்கோட்டும் குடைகளுமாக வந்தார்கள்.

அந்த அமளியில்தான் சுவாமிஜி கண் திறந்தார்.

எல்லாரையும் தீனமாகப் பார்த்தார் — தியானம் கலைக்கப் பட்டுவிட்டதே என்ற துயருடன்தான்.

''மீண்டும் நான் கல்கத்தாவின் கன மழையில் இருந்தேன்'' என்ருர்.

முன்பொருநாள் உதரமும், உள்ளமும் பசிக்க வாடிவதங்கிக் கல்கத்தா சாலையில் மயக்கமுற்ற அவர் மழையில் தெப்பமாக நனைந்து விழிப்புற்றதும், அப்போது அன்புமயமான கடவுள் துன்பத்தைப் படைத்தது ஏன் என்பதற்கு விடைகண்டதும் நினைவில் இருக்கிறதல்லவா ?

ஏப்ரல் ஏழாந்தேதியாகிய அன்றே சுவாமிஜி ஆயிரம் தீவுப் பூங்காவின் அந்தப் பேரின்ப சுகவாழ்வை சமாப்தி செய்துவிட்டு நீராவிக் கப்பலில் க்ளேடனுக்குக் கிளம்பிவிட்டார் — அங்கிருந்து நியூயார்க் செல்லும் உத்தேசத்துடன்.

Koviloor Digital Library

நதியின் திருப்பத்தில் கப்பல் வளைந்து செல்லும்வரைச் சிஷ்யர்கள் யாவரும் உள்ளம்குவிந்து நோக்கிக்கொண்டிருந்தார் கள். குழந்தையைப்போல ஆனந்தமாக அவர் தமது தொப்பியை ஆட்டி ஆட்டி அவர்களிடம் பிரியாவிடைபெற்ருர்.

*　　　*　　　*

''அமெரிக்காவில் இப்படி ஓரிடமா ?'' என்று அதிசயித்துத் தங்கள் ஆயிரம் தீவுப் பூங்கா வாழ்வைப்பற்றிக் கூறுகிருள் ஒரு சிஷ்யை.

ஆம், புராதன பாரதத்தின் தனமும், பர்ணசாலைகளையு மல்லவா நவயுகத்திலே நவகண்டத்திலே தோன்றியிருந்தன ? தனி யொரு அயல்நாட்டு இளைஞரை நம்பிப் பன்னிரண்டுபேர் வீடு வாசலை மறந்து உடன்வந்திருந்த அற்புதத்தை என்னென்பது ? அப்படியாவது அந்த இளைஞர் இவர்களுக்காகத் தமது கருத்துக் களை விட்டுக்கொடுப்பவராக இருந்தாரா ? அதுவும் இல்லை. ஏன், இவர்களுக்கு இருக்க இடமளித்தவன் யாரோ, அந்த டட்சரே சுவாமிஜியின் போதனைகள் தனது மெதடிஸ்ட் கிறிஸ்துவ சமயத்துக்கு மிகவும் புறம்பாக இருப்பதாகக் கண்டு, அவற்றை அறிவினுல் மறுக்கவும் முடியாமல் திணறி, வகுப்பைவிட்டு வெளி யேறுமளவுக்கல்லவா அவர் தமது உள்ளத்துச் சத்தியத்தைக் கள்ளமில்லாமல் மொழிந்தார் ?

அமெரிக்காவில் இப்படி ஓர் ஆத்மிகப் பண்ணை எழுப்பிய வுடன் அதனை ஆயிரம் தீவுப் பூங்கா மக்களால் புரிந்துகொள்ளத் தான் முடியவில்லை. இவர்களுடைய குடிலுக்கு வழிகேட்ட ஒருவரிடம் ஊரார் ஒருவர் சொன்னுராம்: ''அதோ அந்த மலைக்கு மேலே சில விசித்திரமான பிரகிருதிகள் வசிக்கின்றன'' என்று. அந்த விசித்திரமான பிரகிருதிகளின் ஆத்ம சம்பத்துத் தான் அமெரிக்காவையே காத்தது.

சுவாமிஜி ஆயிரம் தீவுப் பூங்காவில் ஒரு மடம் ஸ்தாபிக்கப் போகிருர் என்றே சிஷ்யர்கள் நினைத்தனர். ஆனுல் அவரோ அப்போது அத்தகைய ஸ்தாபனம் பற்றி எண்ணவில்லை.

''எங்களுக்கு ஸ்தாபனம் எதுவும் இல்லை. எதனையும் எழுப்பவும் நாங்கள் விரும்பவில்லை. ஒவ்வொருவரும், அவனே அவளோ விரும்பியதைச் சுதந்திரமாகப் போதிக்கலாம். அந்தரங்க எழுச்சி இருந்தால் ஒருவரை நாடி மக்கள் நிச்சய மாகக் கவரப்படுவார்கள் தனி மனிதர்கள் பெற்றுள்ள தனித்தன்மையே எனது குறிக்கோள். தனி மனிதர்களைப் பயிலு விப்பதை விட வேறு அபிலாஷை எனக்கில்லை. எனக்குத் தெரிந்

Koviloor Digital Library

தது வெகு சொற்பம்; அந்தச் சொற்பத்தை நான் தங்குதடையில்லாமல் போதிக்கிறேன்; எனக்கு ஏதேனும் தெரியாதென்றல் அப்போது என் அறியாமையை வெளிப்பட ஒப்புக்கொள்கிறேன் நான் ஒரு துறவி. ஆனபடியால், நான் என்னை இந்த உலகத்தில் ஒரு பணியாளாக எண்ணிக் கொள்கிறேனேயன்றி பரமாசாரியனுக அல்ல'' என்று சிடரொருவருக்கு எழுதினுர் சுவாமிஜி.

பிற்காலத்தில் பல மடங்களை ஸ்தாபித்த அவர் இப்படி எழுதியது முரணுகாதா எனத் தோன்றலாம். முரண் எதுவுமில்லை. மகான்களின் மனநிலை பல ஸ்தாபனங்களில் உலவும். மனமே இல்லாத பரிசுத்த நிலையிலும் அவர் ஆழ்ந்திருப்பதுண்டு. அப்போது பற்பல கருத்துக்கள் அவர்களிடம் எழும். இவை ஒன்றுக்கொன்று மாறுபட்டிருப்பதாக நமக்குத் தோன்றும். சுவாமிஜி ஆயிரம் தீவுப் பூங்காவில் பிரம்ம நிலையிலேயே இருந்தார் என நாம் ஊகிக்கலாம். ஒரு நாள் தாம் உற்ற சமாதி பற்றிப் பிற்காலத்தில் சுவாமிஜி அது தமது ஒப்பற்ற அநுபவம் என்று கூறியிருக்கிறுர். எனவே இந்தச் சமயத்தில் அவரது சிந்தனைகள் எப்படி விரிந்தன என்று யார் ஆழம் காணமுடியும்?

சுவாமிஜி ஆயிரம் தீவுப் பூங்காவில் எத்தகைய உன்னத நிலையில் இருந்தார் என்பதை விளக்குவதற்கு அப்போது அவர் இயற்றிய ''சந்நியாசியின் கீதம்'' என்ற கவிதையே ஒரு சான்றுகும். அதில் சில அடிகளைப் பாருங்கள்:

தங்கமே ஆயினும் தாமிரம் ஆயினும்
தளைகள் யாவையும் தகர்த்திடுவாய்
தடைகள் யாவையும் தவிர்த்திடுவாய்.
அன்பு-விரோதம் ; நல்லது-அல்லது ;
துவந்தங்கள் யாவுடன் துவந்தம் செய்வாய்
பணியப் பெற்றுலும், அணையப் பெற்றுலும்
அடிமை அடிமையே என உணர்வாய்.
பொன் விலங்காயினும் பொல்லாதது என்று
புறம் தள்ளித் தீரனுய் புறப்படுவாய்
சாந்த சந்நியாசியாய்த் திகழ்ந்திடுவாய்-நீ
சொல்லுவாய்: ஓம்தத்ஸத்

உடல் உளதா இலதா என உன்னாயாதே
காயத்தின் காரியம் முடிந்தென அதனைக்
கர்மத்தின் வினைக்குக் கதியாக்கு.
அணி செய்திட்டாலும் அடித்து உதைத்தாலும்

Koviloor Digital Library

அசையாமல் அலையாமல் அகத்தே நிற்பாய்!
வந்தனை செய்வானே வந்திக்கப்படுவானும்;
நிந்தனை செய்வானே நிந்திக்கப்படுவானும்;
சிந்தனை செய்திதைத் தெளிந்துவிட்டால் பின்
வந்தனைதான் ஏது? நிந்தனை தான் ஏது?
புரிந்து கொண்டே தீர, புறப்படுவாய்!
சாந்த சந்நியாசியாய்த் திகழ்ந்திடுவாய்—நீ
சொல்லுவாய்: ஓம்தத்ஸத்

சத்தியம் அறிந்தவர் சிலரே—மற்றவர்
பைத்தியம் என்பர் பெரியவன் உன்னை
சிறியோரின் அறியாமை சகித்திடுவாய்—(அச்)
சிறியோரெல்லாரையும் சிறைதனிலே வைக்கும்
மாயை வலைதனை மாய்த்திட வேண்டியே
நாடு நகரெல்லாம் நாடிச் செல்வாய்!
இருளில் இருப்போருக்கு ஒளி அளிப்பாய்
இன்னலுக் கஞ்சாமல், இன்பத்தைத் தேடாமல்
இரண்டும் கடந்த தீரன் இன்றே சொல்வாய்!
சாந்த சந்நியாசியாய்த் திகழ்ந்திடுவாய்—நீ
சொல்லுவாய்—ஓம்தத்ஸத்

இப்படிப்பட்ட சாந்த சந்நியாசியாக சுவாமிஜி திகழ்ந்ததை எண்ணி எண்ணி மகிழ்ந்து நெகிழ்ந்து போகிறார் சுவாமி நிகிலானந்தர். ஐயப்பாட்டிலும், வறுமையிலும், இளமையெல்லாம் அல்லலுற்றுப் புயல்காற்றாகத் திரிந்தார் அவர். பிற்பாடு, ஆத்மீக வெள்ளத்தில் சிக்கிக்கொண்டு அலைபாய்ந்தார். அதன் பின் பாரதத்தில் நாடு நகரமெல்லாம் திரிந்து ஜனசமூகத்தின் பல துக்கங்களையும் கண்டு அந்தத் துக்கத்திலேயே தாமும் மொத்துண்டு புரண்டு கொண்டிருந்தார். அதற்கப்புறம் அமெரிக்கா வந்து, அதனுடைய வெறிவாழ்வைக் கண்டு தாமும் வெறியாகப் பிரசங்கமாரி பொழிந்து வந்தார். இப்படிப்பட்டவர் சாந்தமும், அமைதியும் சார்ந்து நின்றது எப்படி? அந்த வித்தையை அவர் கற்றது எப்போது? — என வியக்கிறார் நிகிலானந்தர்.

அதற்கு விடையாக அவரால் ஒன்றுதான் கூறமுடிகிறது: ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியதுபோல் நரேந்திரர் ஒரு நித்திய சித்தர் — சாதாரண மானுடரல்ல; அவர் ஈசுவரகோடியைச் சேர்ந்தவர்; — ஜீவகோடியைச் சேர்ந்தவரல்ல என்கிறார் சுவாமி நிகிலானந்தர்.

ஆட்சேபணை என்ன?

Koviloor Digital Library

புயல்காற்று என்றே சுவாமிஜிக்கு அமெரிக்கா பெயர் சூட்டிற்று. அகத்தில் அமைதிகூடிய அற்புதப் புயல்காற்று அது. அமெரிக்க மக்களின் மனதிலிருந்த தூசி தும்புகளையெல்லாம் அடித்துத் தள்ளிவிட்டது அந்தச் சண்டமாருதம். தமது பணியைத் தொடரத் தங்கமான சிடர்களையும் தயாரித்து விட்ட அந்தப் புயல் இங்கிலாந்துக்குச் செல்ல உத்தேசித்தது.

அதற்காகவே ஆயிரம் திவுப் பூங்காவிலிருந்து நியூயார்க் சென்றடைந்தது.

Koviloor Digital Library

அத்தியாயம்—22

ஆட்சியாளர் நாட்டில் மாட்சி

லண்டனைச் சேர்ந்த குமாரி ஹென்ரியாட்டா முல்லர் என்பவள் சுவாமிஜியை இங்கிலாந்துக்கு வருமாறு அழைத்திருந் தாள். இச்சமயத்தில் அவர் ஐரோப்பாவுக்குச் செல்ல இன்னொரு காரணமும் நேர்ந்தது.

நியூயார்க்கைச் சேர்ந்த தனிகரான ஃப்ரான்ஸிஸ் ஹெச். லெக்கெட் என்பார் சுவாமிஜியைத் தமது அதிதியாகப் பெர்ஸி யில் உபசரித்திருந்தவர். அவர் மூலமாக ஸ்ரீமதி வில்லியம் ஸ்டர்ஜஸ் என்ற விதவை மாதும், குமாரி ஜோஸஃபைன் மக்லா யிடும் சுவாமிஜிக்கு அறிமுகமாகி, இந்நால்வரும் பரஸ்பரம் ஆழ்ந்த அன்பு பூண்டனர். பிறகு விதவையாகிய ஸ்டர்ஜஸ்ஸும் லெக் கெட்டும் திருமணம் புரிந்துகொள்வதாக ஏற்பாடாயிற்று. பாரிஸில் இத்திருமணம் நிகழவிருந்தது. இதற்கு சுவாமிஜி வந்திருந்து நடத்தித்தரவேணும் என்று லெக்கெட் மிகவும் கேட் டுக்கொண்டார்.

விதவைகள் மறுமணம் புரிவதை சுவாமிஜி ஒப்பியதாக நினைப்பதற்கில்லை. ''எங்கள் நாட்டு இழிகுலப் பெண்கள் எத்தனை பேரை வேண்டுமானாலும் மணப்பார்கள் — அதாவது உங்கள் நாட்டு உயர்வட்டப் பெண்களைப்போல்'' என்றுகூட அவர் கேலிசெய்து அமெரிக்காவில் பேசியிருப்பதாக நாம் படித்தோ மல்லவா? என்றாலும் அவர் பிறநாட்டு மரபுகளையும், ஆசாரங் களையும் மாற்ற முற்படவில்லை. எப்படியோ லெக்கெட்டின் விவாகத்துக்கு வர ஒப்புக்கொண்டார். சுவாமிஜியின் ஐரோப்பிய விஜயத்துக்கு இதுவும் ஒரு காரணமாயிற்று. லெக்கெட், குமாரி முல்லர் இருவரும் தம்மைத் தனித்தனியாக அழைத்ததிலிருந்தே இது ஒரு 'தெய்விக ஆணை' என்று அவர் ஏற்றுக்கொண்டார்.

அதுவுமின்றி இரண்டாண்டுகள் அமெரிக்காவில் அலைந் தலைந்து உரைகள் ஆற்றித் தளர்ந்துபோயிருந்த அவர் கடற் பயணம் தமக்கு நன்மை பயக்கும் என்று கருதினார். அப்போதே அவர் தாம் அதிகநாள் மானுட உருவில் வாழப்போவதில்லை என்பதையும் அறிந்திருந்தார். ''என்னுடைய காலம் ஆகி விட்டது'' என்றுகூடத் தமது நியூயார்க் பக்தர்களிடம் கூறினார்.

1895-ம் ஆண்டு ஆகஸ்ட் மத்தியில் லெக்கெட்டுடன் சுவாமிஜி பாரிஸுக்குக் கிளம்பினார். சுமார் இருவாரக் கப்பல் பயணத்துக்குப்பின் அம்மாத கடைசியில் பாரிஸ் சென்று சேர்ந்

Koviloor Digital Library

தார். அவர் எதிர்பார்த்ததுபோல் நீல வானையும், நீலக்கடலையும் ஒட்டிவாழ்ந்த அந்த இடைக்காலம் அவருக்குப் புத்துணர்ச்சி ஊட்டியது.

நுண்கலைகளின் நிலைக்களனும், போகபுரியுமான பாரிஸின் காட்சி சாலைகளையும், அரண்மனைகளையும், கலைக்கூடங்களையும், மாதாகோவில்களையும் கண்டு களித்தார் சுவாமிஜி. பல பிரெஞ்சுப் பிரமுகர்களுக்கும் அவர் அறிமுகம் செய்யப்பட்டார். பாரதத்தைப்பற்றிப் பல உண்மைகளை அவர்களுக்கு அளித்து அவர்களது நாட்டைப்பற்றிய பல உண்மைகளைத் தாம் சேகரித்துக் கொண்டார்.

இச்சமயத்தில் சுவாமிஜியைப்பற்றி இந்தியாவில் மிஷனரிகள் செய்த துஷ்பிரசாரம் குறித்து விசாரப்பட்டு எழுதிய அழசிங்கருக்குக் கனல் கங்காக ஒரு மடல் எழுதினர் சுவாமிஜி. சுவாமிஜி புலால் உணவு உண்பதைக் குறிக்கும் 'மிலேச்சர்' தீண்டிய உணவை ஏற்பதையும்பற்றி அவர்கள் பிரசாரம் செய்வதாக அழசிங்கர் எழுதியிருந்தார். அதிவர்ணாச்ரமி என்ற முறையில் எந்த உணவு கிடைத்தாலும் தாம் அதனை உட்கொள்ளலாம் என்று முன்பே பலமுறை சுவாமிஜி சொல்லியதுண்டு. இப்போது அவர் எப்படி நெருப்பாக ஜ்வாலை வீசினர் என்பதைப் பாருங்கள்:

''அப்படி, இந்தியர்கள் நான் ஹிந்து உணவைத்தான் உண்ண வேண்டும் என்று நினைப்பார்களானல் அவர்களிடம் எனக்கு ஒரு பரிசாரகரையும், அவரைப் பராமரிக்கப் பணத்தையும் அனுப்பி வைக்குமாறு தயவுசெய்து சொல். அல்ப உதவிகூடச் செய்யாமல் முட்டாள்தனமாக என்மீது எஜமானத்துவம் செலுத்துவதை நினைத்தால் எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. சந்நியாசிக்கு முக்கியமானவை பிரம்மசரியமும், பணமில்லாமையும் — இவற்றை நான் முறித்துவிட்டேன் என்று மிஷனரிகள் சொல்வார்களா? அப்படி அவர்கள் கூறினல் அவர்களிடம், 'நீங்கள் பெரும் புளுகர்கள்' என்று சொல்லுங்கள்.

''இந்தியாவுக்கு நான் எவ்வளவு சொந்தமோ, அவ்வளவுக்கு உலகம் முழுவதற்கும் சொந்தமாவேன். எந்த நாடும் என்மீது தனி பாத்தியதை கோரமுடியாது. நான் எந்தத் தனியொரு நாட்டுக்கும் அடிமையாவேன, என்ன?

''எனக்கு யாருடைய உதவியும் வேண்டாம். பிறருக்கு உதவிசெய்தே என் வாழ்நாள் முழுவதையும் கழித்தவன் நான்.

''ஜாதிக்கட்டுக்குள் அகப்பட்ட, மூடநம்பிக்கைகள் நிறைந்த, கருணையற்ற, போலித்தனமான நாஸ்திகக் கோழைகளில் ஒருவனாக வாழ்ந்து சாவதற்காகவா நான் பிறந்ததாக நினைக்கிறாய்?''

Koviloor Digital Library

இதே அனல்வீசும் கடிதத்தில் சுவாமிஜி தம்மை அரசியலுடன் சம்பந்தப்படுத்துவதையும் வன்மையாகக் கண்டித்தார்.

''அரசியல் 'நான்ஸென்ஸுடன்' எனக்கு ஒரு தொடர்பும் கிடையாது. எந்த அரசியலிலும் எனக்கு நம்பிக்கை கிடையாது. சர்வேசுவரனும், சத்தியமும்தான் உலகிலுள்ள ஒரே அரசியல். மற்றவை எல்லாம் வெறும் குப்பையே ஆகும்'' என்று ஆக்ரோசமாக எழுதினுர்.

பாரிஸிலிருந்து எழுதப்பட்ட இந்தக் கடிதம் 1895 ஸெப்டெம்பர் 9-ந் தேதியிட்டதாகும்.

எதிர்ப்பாளர்மீது இப்படி ஆக்னேயாஸ்திரமாகப் பாயக் கூடிய இதே சுவாமிஜி தாக்குதல்களை நினைந்து நெஞ்சுடைந்து கண்ணீர் பெருக்கியதுமுண்டு. திவ்ய மாதாவைத் தன் துணைக்குக் கூவி அழைத்துப் புலம்பியதுமுண்டு. ''ஈசுவரனின் திராக்ஷைத் கொடிக்காலில் பணிபுரிகிற சமயவாதிகளே தங்கள் சகோதரன் ஒருவனை இப்படி நிந்திக்கிறுர்களே'' என்று நொந்திருக்கிறுர் சுவாமிஜி.

* * *

ஆங்கிலேயர், எந்த இந்தியர்களை அடிமைகளாக்கி ஆண்டு வந்தனரோ, அந்த இந்தியர்களில் ஒருவரான சுவாமிஜி ஆங்கிலேயர் நாட்டில் அடியெடுத்து வைத்தார். பாரதத்தில் நிகழும் மதமாற்றம், பாரதமக்கள் தங்கள் மரபை மறந்து உலகபோகங்களில் மோகித்திருப்பது, இவற்றுக்குமட்டும் சுவாமிஜி ஆங்கில ஆட்சியைக் காரணமாக நினைக்கவில்லை என்று நாம் கருதலாம். ஆங்கில ஆட்சியினுல் நன்மைகள் மட்டுமே நிகழ்ந்திருந்தாலும் கூட அவர்கள் இந்தியாவை அடிமைப்படுத்தியிருக்கும் ஒரு காரணத்துக்காகவே அவர் பொங்கியிருப்பார். அவர் அமெரிக்காவில் ஒருமுறை 'என்னை ஆங்கிலேயர்கள் கொன்றுபோட்டாலாவது எங்கள் மக்களுக்கு உத்வேகம் வந்து எழுச்சியடைவார்கள்' என்று சொன்னதிலிருந்து அவரது சுதந்திரதாகம் வெளியாகிறது அல்லவா? சுவாமிஜி தாம் ஒருவிதமான அரசியல் சார்பும் அற்றவர் என்று கூறியதைச் சற்றுமுன்தான் கேட்டோம். அதற்கு இது முரண் அல்ல. நாட்டின் அடிமைத்தனமும் விடுதலையும் அரசியலைமட்டும் சேர்ந்தது என்றெப்படிச் சொல்லமுடியும்? அது சகலமக்களின் வாழ்முறையையுமே அல்லவா பாதிப்பது? 'சுவாமிஜி கூறியவற்றிலிருந்தே, அவர் இங்கிலாந்தில் நட்புணர்ச்சியுடன் அடியெடுத்து வைக்கவில்லை என்று அறிகிறேம்' என்கிறுர் சுவாமி நிகிலானந்தர்.

Koviloor Digital Library

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அடிமைப் பிரஜை ஒருவர் பாரதத்தின் மாண்பினை விளக்கத் தைரியமாக இங்கிலாந்து வந்து விட்டார். அந்தத் தைரியமும் அதிவிரைவிலேயே பலனளித்தது என்பதைக் காணப்போகிறோம்.

லண்டனில் வந்திறங்கிய சுவாமிஜியை அமெரிக்காவிலேயே அவருக்குப் பரிசயமாயிருந்த ஸ்டர்டி, குமாரி முல்லர் ஆகியவர்கள் வரவேற்றனர். ஆத்மிகத்தில் நாட்டமுள்ள பலரை நண்பர்கள் அவருக்கு அறிமுகம் செய்வித்தனர்.

சில தினங்கள் பூரண ஓய்வுகொண்டு உடலைத் தேற்றிக் கொண்டார் சுவாமிஜி. சரித்திரப் பிரசித்திபெற்ற இடங்களை யெல்லாம் சுற்றிப் பார்த்தார். இரண்டு வாரங்கள் இப்படிக் கழிந்த உடனே எவ்வாறோ அவரை உழைப்பு மீண்டும் பற்றிக் கொண்டுவிட்டது. ஓய்வுகொள்ளாமல் அவரை உழைக்கச்செய்து, எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவில் அவரது பணியை முடிக்கச்செய்து, தன்னிடம் அவரை அழைத்துக்கொள்வது என்று சர்வேசுவரி சங்கல்பித்திருப்பாள் போலும் !

'வெஸ்ட்மினிஸ்டர் கெஜட்', 'ஸ்டாண்டர்ட்', 'லண்டன் டெய்லி', 'கிரானிகல்' முதலிய பிரபல பத்திரிகைகளின் நிருபர்கள் அவரைப் பேட்டிகண்டு அவரையும் அவரது தத்துவத்தை யும் சிலாகித்து எழுதினர். ராம்மோஹன்ராய், கேசவ சந்திரஸேனர் — ஏன் புத்தரையுமே — அவர் நினைவுறுத்துவதாக எழுதினர். எந்த ஹிந்துக்களை ஈனமாகக் கருதினார்களோ அந்த ஹிந்துக்களில் ஒருவரான சுவாமிஜியை மரியாதையுடன் 'ஹிந்து யோகி' என்றே ஆங்கிலேயர்கள் குறிப்பிடலாயினர். லேடி இஸபெல் மார்கெஸன் முதலிய பெருங்குலத்தவரும் அவரை நாடி வரலாயினர். அமெரிக்காவைப்போலவே இங்கும் சுவாமிஜி காலை என்றும், பகல் என்றும், இரவென்றும் பாராமல் ஓயாமல் உபதேசம் புரிந்தார்.

பொதுவாழ்க்கையை இங்கிலாந்தில் விஸ்தரித்துக் கொள்ள வேண்டாம் என்று சுவாமிஜி நினைத்தபோதிலும், அவரது அன்பர்கள் அதற்கு அநுமதிக்கவில்லை. அக்டோபர் 22-ந் தேதி மாலை பிக்கடெல்லி பகுதியிலுள்ள மன்னர் மன்றம் என்ற இடத்தில் அவரது முதல் பொதுப்பிரசங்கத்துக்கு ஏற்பாடு செய்தனர். 'ஆத்ம ஞானம்' என்ற பொருள்பற்றி ஆத்ம ஞானியாகிய சுவாமிஜி உள்ளம் நிரம்பிப் பேசினார். கேட்கவந்திருந்த ஏராளமான மக்களில் எல்லாத்துறைகளையும், சமூகத்தின் எல்லா மட்டங்களையும் சேர்ந்தவர்கள் இருந்தனர். அவ்வளவு பேருக்கும் தேவாமிருதமாகத் தித்தித்தது சுவாமிஜியின் உரை. புகழ்பெற்ற சிந்தனையாளர்களும் அதனால் கவரப்பட்டனர்.

Koviloor Digital Library

அமோக வெற்றி பெற்றுவிட்டார் சுவாமிஜி.

மறுநாள் காலையில் இங்கிலாந்துப் பத்திரிகைகள் சுவாமி ஜிக்குப் புகழ்மாலைகள் சூட்டின.

'' 'சாது' ஹிந்து என்று நீங்கள் இளக்காரமாகக் கூறுகிற எங்களுக்கு உங்களுடைய பிரமாதமான நாகரிகம் வேண்டவே வேண்டாம்'' என்று அவர் திரத்துடன் எடுத்தியம்பியதை ஆட்சி யாளரின் நாட்டு ஏடுகள் அப்படியே பிரசுரித்திருந்தன!

'வெஸ்ட்மினிஸ்டர் கெஜட்'டின் நிருபர் சுவாமிஜியைப் பேட்டி கண்டபோது அவர் வேதாந்தம் என்பது மந்திரஜால மல்ல என்றும், சத்திய தரிசனத்துக்கு வழிவகுப்பது என்றும், அந்தச் சத்திய மார்க்கத்தைச் சொல்லவே தாம் வந்திருப்ப தாகவும் கூறினர். குருமஹராஜ் பற்றியும் கூறினர். ''எனக்குப் பாக்கியவசமாகக் கிட்டிய பல பேட்டிகளில் நான் சுய சிந்தனை ஆற்றலில் தலைசிறந்த சிலரைக் கண்டிருக்கிறேன். அவர்களில் ஒருவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டேன்'' என்று கட்டு ரையை முடிக்கிருர் நிருபர்.

சுவாமிஜி ஓர் உபதேசத்தைக் கொண்டு வந்திருக்கிருர் என்று அறிந்ததும் மக்கள் திரண்டுவந்து அவரிடம் போதனை பெற்றனர்.

ஆங்கில மக்கள் இவ்வாறு தம்மைக் குருவாகக் கருதி உபதேசம் நாடிவந்தது சுவாமிஜிக்கு வெகு ஆச்சரியமாகவே இருந்தது. முதல் பொதுமேடைப் பிரசங்கம் நிகழ்த்தியதிலிருந்து சுமார் ஒரு மாதம்தான் சுவாமிஜி அம்முறை இங்கிலாந்தில் இருந்தார் எனினும், அதற்குள்ளாகவே தம்மையும், தமது மதத் தையும் ஆங்கிலேயர் மறவாதபடி ஆழ்ந்த நினைவைப் பதித்தார்.

* * *

அருளுக்கு நிவேதனமாய் அன்பினுக்கோர்
கோயிலாய் அடியேன் நெஞ்சில்
இருளுக்கு ஞாயிருய்

என்றெல்லாம் பாரதியார் ஓர் ஆங்கில நாரீமணியை நாவாரத் துதித்திருக்கிருர். ஆங்கில நாட்டினர் இந்தியரான விவேகா னந்தருக்கு மரியாதை செய்தது அதிசயமெனில், பாரதியாரோ தமது 'ஜன்மபூமி' — என்ற 'ஸ்வதேச கீதங்களின் இரண்டாம் பாக'மாகிய தேசியப்பாடல்களையே இந்த ஆங்கில மாதரசிக்கு சமர்ப்பித்திருப்பது அதிசயத்திலும் அதிசயமல்லவா? அந்தப் பெண்மணி யார் என்று அறியவேண்டுமாளுல் பாரதியாரின்

Koviloor Digital Library

சமர்ப்பண உரையைப் படித்தாலே போதுமானது. கவி சொல்கிருர்:

> எனக்கு ஒரு கடிகையிலே, மாதாவினது மெய்த்தொண்டின் தன்மையையும், துறவுப் பெருமையையும் சொல்லாமல் உணர்த்திய குருமணியும் பகவான் விவேகானந்தருடைய தர்ம புத்திரியும் ஆகிய ஸ்ரீமதி நிவேதிதா தேவிக்கு இந்நூலை சமர்ப்பிக்கின்றேன்.
>
> **சி. சுப்பிரமணிய பாரதி**

நிவேதிதை என்பது அந்த ஆங்கிலப் பெண்மணி இந்தியாவுக்கு வந்து ஆத்மிகம் பரப்பி, பெண்கல்விக்குத் தொண்டு புரிந்து, அரசியல் விடுதலைக்கு முயன்றபோது பெற்றிருந்த பெயர். அதன்முன் — அதாவது பகவான் விவேகானந்தர் அவளைத் தர்ம புத்திரியாக ஈன்றெடுக்குமுன் — அவள் பெயர் குமாரி மார்கரெட் நோபில் என்பதாகும்.

இந்தப் பெயருடன்தான் அவள் சுவாமிஜியை 1895-ம் ஆண்டில் லண்டனில் சந்தித்தாள். தூய்மை தழைத்த ஒரு திவ்வியத் தொடர்பு அவளுக்கும் சுவாமிஜிக்கும் ஏற்பட்டது அப்போதுதான். 'லண்டனில் சுவாமிஜி ஈட்டியவற்றுள் மிகப் பெரும் சொத்து குமாரி மார்கரெட் நோபில்தான்' என்கிருர் நிகிலானந்தர்.

அயர்லாந்தின் விடுதலைக்காகப் போரிட்ட ஒரு குடியில், சுவாமிஜி உதித்த நாலாண்டுகளுக்குப்பின் பிறந்தவள் மார்கரெட். (விடுதலை வேட்கை அவள் உடலிலேயே ஊறியிருந்ததால் பின்னர் ஆத்மவிடுதலைக்கு ஆலாப்பறந்ததோடு, பாரத சுதந்திரத்துக்கும் பாடுபட்டிருப்பாளோ ?) அவளுடைய குழந்தைப் பருவத்திலேயே தந்தை காலகதி அடைந்துவிட்டார். மரணத்தறுவாயில் அவருக்கு ஏதோ ஸ்புரித்தது. தம் மனைவியைக் கூப்பிட்டு, ''மார்கரெட்டை ஆண்டவன் அழைப்பான். அப்போது அவளை அனுப்பிவை. அவள் தன் இறகுகளை விரித்துப் பறப்பாள். மகத்தான காரியங்கள் எல்லாம் செய்வாள்'' என்ருர்.

கல்லூரிப் படிப்பு முடிந்தபின் மார்கரெட் பல இடங்களில் உபாத்திமைத் தொழில் புரிந்து, பின் லண்டனுக்கு வந்து 1895-ல் தானே விம்பிள்டனில் 'ரஸ்கின் பள்ளி'யைத் தொடங்கினுள். சுதந்திர அயர்லாந்துக் குழுவில் சேர்ந்தாள். அரசியலில் மட்டுமின்றி இலக்கியம், கல்வி இவற்றிலும் ஈடுபாடு காட்டினுள். குழந்தைகள், பெண்கள் இவர்களின் உரிமைகளுக்காக உரைகள் நிகழ்த்தினுள். பிற்காலத்தின் பெர்னுர்ட்ஷா, டி. எச். ஹக்ஸ்லி

Koviloor Digital Library

முதலிய மாபெரும் இலக்கிய கர்த்தர்களும், விஞ்ஞான அறிஞர்களும் அங்கத்தினர்களாக விளங்கப்போகிற 'ஸிஸேம் கிளப்' அப்போது வித்து நிலையில் இருந்தது. இதற்குக் காரியதரிசியாக இருந்தது மார்கரெட்தான்.

மார்கரெட் ஒன்றன்பின் மற்றதாக இரு பேரதிர்ச்சிகளுக்கு ஆளாகியிருந்த சமயம் அது. அவள் திருமணம் செய்துகொள்வதற்காக நிச்சயிக்கப்பட்டிருந்த வரன் ஒருவன் க்ஷயரோகம் கண்டு காலபாசத்துக்கு ஆளானான். இதன்பின் அவள் வேறோர் ஆடவனிடம் உளமார்ந்த அன்பு கொண்டாள். அவனும் அவளை நேசித்தான். இருவருக்கும் திருமணத்துக்கு நாளும் குறிப்பிடப்பட்டுவிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் அவனை வேறொரு மங்கை வலைவீசிப் பிடித்துக்கொண்டு போய்விட்டாள். இந்த அதிர்ச்சிகளின் காரணமாக மனசு முறிந்திருந்த அவள் மதத்தையே தனக்கு ஆறுதல் அளிக்கும் ஆசிரயமாக நாடலானாள்.

வேதனையில் விண்டு விரிந்துகொண்டிருந்த நோபிளிடம் அவளுடைய கலைப்பயிற்சி ஆசிரியர் எபினஸர் ஒரு நாள் சொன்னார்: ''ஹிந்து சாமியார் ஒருவர் லேடி இஸபெல் மார்கஸென் வீட்டுக்கு வந்திருக்கிறாராம். அவரைக் காணச் சில அன்பர்களுக்கு அழைப்பு வந்திருக்கிறது. நீயும் வருகிறாயா ?'' என்றார்.

சூரிய ரச்மி ஒன்று குட்டையிலுள்ள ஒரு நீர்த்துளியை முகர்ந்து எடுத்துக்கொண்டுவிட்டது. அது ஆவியாகிப் பிறகு மேகபிந்துவாகிக் குளிர்ந்து பிரம்மாண்டமான சாகரத்தில் விழப்போகிறது !

ஸிஸேம் கிளப்பினர் ஏற்கனவே ஸ்டார்ட்டி, மிஸ் முல்லர் இவர்கள்மூலம் ஸ்ரீவிவேகானந்தரின் அமெரிக்கப் பிரக்யாதியை அறிந்திருந்தனர். அவரேதான் இஸபெல் சீமாட்டியின் இல்லத்துக்கு வந்திருப்பவர் என அறிந்த மார்கரெட் அங்கு சென்றாள்.

அன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை. மாலைப்பொழுதில் கிளம்பினாள் மார்கரெட். லண்டனின் நாகரிகங்களுக்குச் சிறப்பு இடமான 'வெஸ்ட் எண்ட்' என்ற மேற்கு முனையில் இருந்த இஸபெல் சீமாட்டியின் வீட்டை அடைந்தாள். நவம்பர் மாதத்து குளிருக்கு இதமாக அங்கே வரவேற்பு அறையில் கணகணவென்று தீ எரிந்துகொண்டிருந்தது. அங்குதான் அறிவுக்கனலாகிய சுவாமி விவேகானந்தர் வீற்றிருந்தார். பதினைந்து பக்தர்கள் அவரைச் சுற்றி அரைவட்டமாக அமர்ந்திருந்தனர். அங்கு மௌனம் என்பது ஸ்பரிசிக்கக்கூடிய ஒன்றுபோல் அடர்ந்து படிந்திருந்தது. அதனைக் கலைத்துவிடுவோமோ என்று தயங்கியபடி உள்ளே நுழைந்தாள் மார்கரெட். தனது 'ஸ்கர்ட்'டைச் சரிசெய்து கொண்டு நாற்காலியில் அமர்வதற்குள் அதென்ன சப்தம்

Koviloor Digital Library

செய்யுமோ என்று பயந்தாள். அவளுக்கு நேர் எதிரே சுவாமிஜி. அவரது நெடிதுயர்ந்த தோற்றமும், அமைப்பான அங்கங்களும், அவற்றில் துலங்கும் தூய கம்பீர சாந்தமும், துயருற்றுத் தவித்த அவளை என்னவோ செய்துவிட்டன. அவர் கண்களைத் திறந்து பார்த்தபோது அதில் ஒரே பொழுதில் மாதுரியமும் மகோந்நதமும் மிளிர்வதைக் கண்டு அதிசயித்தாள் நோபிள்.

அந்தியும் கங்குலும் கலக்கிற நேரம். அந்தப் பின்னணியில் அதிசயமானதோர் எளிமை சொட்டியது. ''இதன்பின் ஒரு போதுமே சுவாமிஜி இங்கிலாந்தில் ஆசாரியனாக விளங்கும்போது இத்தகைய எளிமையை நான் காணவில்லை'' என்கிறாள் நோபிள். கூடியிருந்தோரின் கேள்விக்கு அவர் பதில்சொன்ன பான்மை யிலும், நடு நடுவே கம்பீரமாக சம்ஸ்கிருத சுலோகங்களை ஓதிய விதத்திலும், அவ்வப்போது 'சிவா சிவா' என்று அவர் உருகி உருகி அழைத்த பாங்கிலும் அவளுடைய உள்ளம் நனைந்தது. ''நாம் இன்ப துன்பங்களை நாடவில்லை; விடுதலை ஒன்றையே நாடுகிறோம்'' என்று அவர் கூறியது சிறப்பாக அவள் மனத்தில் பதிந்தது.

என்றாலும் அவர் கூறியன யாவற்றையும் நோபிளால் ஏற்க முடியவில்லை.

அதனால் என்ன? நரேந்திரநாத தத்தரால்கூடத்தான் ஆரம்பகாலத்தில் பரமஹம்ஸர் கூறியவற்றையெல்லாம் ஏற்க முடியவில்லை. பிறகு?

விவேகானந்தர் லண்டனைவிட்டு ஒரு மாதத்தில் புறப்படு கையிலே அவரைத் தம் 'குரு' என்று அழைக்கத் தொடங்கி விட்டாள் நிவேதிதை.

இந்த ஆரம்பகாலச் சந்திப்புக்களை நினைவுகூர்ந்து 1904-ம் ஆண்டில் நிவேதிதை எழுதினாள்: ''அவர் அப்போது லண்டனுக்கு வராமலே இருந்திருந்தார் என்று வைத்துக்கொள். அப்போது வாழ்க்கையென்பதே தலையில்லாத கனவு முண்டமாக யிருந்திருக் கும். ஏனெனில் ஏதோ ஒன்றுக்காகத்தான் நான் காத்துக் கொண்டிருக்கிறேன் என்பது எனக்குத் தெரியும். எனக்கென்று ஓர் அழைப்பு வரும் என்று அறிந்திருந்தேன். அது வந்தே விட்டது அம்பானது வில்லில் தனக்குரிய இடத்தை அடைந்துவிட்டது.''

விரலானது வீணையில் தனக்குரிய ஸ்தானத்தை அடைந்து விட்டது என்றும் கூறலாம்.

லண்டனில் தங்கியிருந்தபோது சுவாமி விவேகானந்தர் ஸ்டர்டியுடன் நாரத பக்தி சூத்திரங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கலானார்.

Koviloor Digital Library

இச்சமயத்தில் சுவாமிஜி மதம் என்பது ஸ்தாபனமும், சடங்குகளும் இல்லாவிடில் மக்களை நிரந்தரமாகப்பற்ருது என அடிக்கடி கருதலானுர். அந்த ஸ்தாபனத்தில் பணம் என்பது மையமாகிவிடக்கூடாது என்றும் கருதினுர். சடங்குகளும் மூடநம்பிக்கையில் எழுந்தவையாக இல்லாமல் உபநிஷத உண்மைகளின் உட்பொருளை உணர்த்துவனவாக இருக்கவேண்டும் என்று கருதினுர். பிற்காலத்தில் அவர் ஸ்ரீராமகிருஷ்ண மடங்களை ஸ்தாபித்து, அவற்றின் ஆசாரங்களை நிர்ணயித்தபோது இந்த எண்ணங்களே உருவம் பெற்றன எனலாம்.

தனி மனிதர்களே ஸ்தாபனமாக இருக்கவேண்டும் என முதலில் லட்சியவாதம் செய்த சுவாமிஜி இப்போது ஸ்தூலமான ஸ்தாபனங்கள் தேவை என்றெண்ணியது மகான்கள் எப்படி உயர்நிலைகளிலிருந்து மக்களின் பொருட்டு இறங்கி வருகிருர்கள், என்பதற்கு ஓர் உதாரணமாகும்.

சுவாமிஜி இங்கிலாந்தில் சொற்பகாலமே தங்கினுர் எனினும் பாரத தர்மத்தை அதற்குள்ளாகவே அந்நாடு ஓரளவு புரிந்துகொண்டு மதிக்குமாறு செய்துவிட்டார். எங்குபார்த்தாலும் மிகவும் சிறந்த சிஷ்யர்கள் அவரை வந்தடையலானுர்கள். இங்கிலாந்து தம் உபதேசத்துக்கு எப்படிப்பட்ட வரவேற்பளிக்கும் என்று ‘நோட்டம்’ பார்க்கவேதான் சுவாமிஜி அங்கு அப்போது வந்திருந்தார் எனினும், அவர் எதிர்பாராதவிதமாக அவருடைய செல்வாக்கு அங்கு பெருகிவந்தது. சில பாதிரிமார்கள்கூட அவரது வாக்கைக்கேட்டு ஆமோதித்தனர். ஆங்கில ஆட்சி எப்படியானுலும், ஆங்கில மக்கள் எவ்வளவு கண்ணியமானவர்கள் என்பதை அவர் கண்டுகொண்டார். அமெரிக்கர்களைப்போல அவர்கள் உணர்ச்சிவசப்பட்டவர்கள் அல்ல; புகழ்வது, இகழ்வது இரண்டிலும் மிதமாயிருப்பவர்கள் என்பதைக் கண்டுகொண்டார். இப்படிப்பட்டவர்களில் பலர் சுவாமிஜியுடன் தரையில் பத்மாஸனமிட்டு அமர்ந்து ஜபம்செய்யத் தொடங்கினுர்கள் என்ருல் சுவாமிஜியின் காந்த சக்தியை என்னென்பது ?

இப்படி ஆங்கிலேயர்கள் அப்பியாசம் பெற்றதைப்பற்றி எழுதிய தினசரி நிருபர் ஒருவர், ‘‘ஆங்கிலம் பேசுகிற இனத்தவர்களின் மனத்தில் இந்தியாவின்பால் சுவாமி உண்டாக்கியுள்ள அன்பும் அநுதாபமும் இந்தியாவின் முன்னேற்றத்துக்கு ஒரு வலுவாய்ந்த தூணுக விளங்கும் என்பதில் ஐயமில்லை’’ என்று எழுதினுர்.

‘எந்த நாடும் என்னிடம் விசேஷ பாத்தியதை கொண்டாட முடியாது’ என்று ஏதோ ஓர் உணர்ச்சிமிகுதியில் சுவாமிஜி

Koviloor Digital Library

கூறினும் அவர் இந்தியாவை மையமாக வைத்தேதான் தமது உலகப் பணியினைப் புரிந்தார்.

அமெரிக்காவில் அவர் செய்திருந்த சேவைகளை ஊறவைத்துப் பூரணமாக்குமாறு அங்கிருந்து பல கடிதங்கள் வந்தன. லண்டன் வாசிகளோ அவர் அங்கேயே தங்கியிருக்கவேணுமென்றனர். என்றாலும் சுவாமிஜி, எதையும் ஆய்ந்தோய்ந்து பார்த்துச் செய்கிற இங்கிலாந்தில் ஒரே வேகமாகத் தமது பணியைச் செய்வது நலமாயிருக்காது என்றும், தாம் இப்போது தூவியுள்ள விதை என்னவாகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டுமென்றும் எண்ணினர். இச்சமயத்தில் போஸ்டன் சீமாட்டி ஒருத்தி, குளிர்காலம் முழுவதும் சுவாமிஜி நியூயார்க்கில் தங்கி உபதேசிப்பதற்கான வசதி அவ்வளவையும் செய்துதருவதாக முன் வந்தாள்.

எனவே சுவாமிஜி மீண்டும் இங்கிலாந்து நாகரிகத்தின் சேயாக மதிக்கத்தக்க அமெரிக்க நாகரிகத்தில் ஆன்மிக ஞானத்தை ஊறச்செய்வதற்காகப் புறப்பட்டார்.

நவம்பர் பதின்மூன்றும் தேதி அகண்டானந்தருக்கு சுவாமிஜி எழுதிய கடிதத்தில், ''இந்த நாட்டில் எந்தக் காரியத்தையுமே தொடங்கக் காலம் ஆகிறது. ஆனால் ஜான்புல் ஏதேனுமொன்றில் கையை வைத்துவிட்டாரோ, அதன் பின் அதை அவர் விடவே மாட்டார். அமெரிக்கர்கள் துடிப்பானவர்கள். ஆனல் தீப் பற்றிய வைக்கோல்போல் சிக்கிரத்தில் அணைந்துபோகிறவர்கள்'' என்கிறார். பதினெட்டாம் தேதி சென்னைச் சிடருக்கு எழுதுகையில் ''இங்கிலாந்தில் என் பணி அமோகமாக நடந்துவிட்டது. அதைக்கண்டு நானே திக்பிரமை அடைகிறேன். பத்திரிகைகளின் வாயிலாக ஆங்கிலேயர்கள் அதிகம் பேசுவதில்லை. ஆனல் மௌனமாக வேலை செய்கிறார்கள். அமெரிக்காவில் செய்ததைவிட இங்கிலாந்தில் நான் அதிகம் பணி புரிந்திருக்கிறேன் என்று திடமாக நினைக்கிறேன்'' என்கிறார்.

இந்தியாவிலிருந்து ஒரு சுவாமிஜியை இங்கிலாந்துக்குத் தருவிக்க எண்ணிய விவேகானந்தர், அதுவரையில் ஸ்டார்டி ஆத்மிக வகுப்புகள் நடத்த ஏற்பாடு செய்துவிட்டு அமெரிக்காவுக்குப் புறப்பட்டார்.

இந்த அத்தியாயத்தை முடிக்கு முன்னர் மேல்நாட்டுச் சிடர்கள் சுவாமிஜியின் ஒப்பற்ற ஓர் ஆற்றலைப்பற்றிக் குறிப்பிடுகிறார்கள். ஒரே பேட்டியில், தம்மைக் காண்பவரிடம் புதியதொரு சிந்தனையை உண்டாக்குவதிலும், ஒரு சிறிய உரையிலேயேஉன்னத தத்துவங்களையெல்லாம் கேட்போருக்குப் புரியுமாறு எடுத்துக்

Koviloor Digital Library

கூறுவதிலும் சுவாமிஜி பெற்றிருந்த அபார சக்தியை அவர்கள் வியக்கிருர்கள். இந்தச் சக்தியைத் தமது முதல் இங்கிலாந்து வாசத்தின்போது சுவாமிஜி நன்ருகப் பிரயோகித்தார் என்று நாம் ஊகிக்கலாம். இல்லாவிடில் அமெரிக்காவில் செய்ததைவிட இங்கிலாந்தில் சிறப்பாகச் சேவை செய்ததாக அவர் கூறியிருப்பாரா ?

Koviloor Digital Library

அத்தியாயம்—23

அமெரிக்கப் பணியை அலர்த்துகிறார்!

பிரிட்டனிலிருந்து புறப்பட்ட சுவாமிஜி மீண்டும் அமெரிக்காவுக்குத் திரும்பி 1895-ம் ஆண்டு டிசம்பர் ஆறும் தேதி நியூயார்க்கில் அடிவைத்தார். சுவாமிஜி இங்கிலாந்திலிருந்த மூன்றுமாத இடைக்காலத்தில் புதிதாகத் துறவறம் தழுவிய கிருபானந்தர், அபயானந்தர் ஆகிய இருவரும் குமாரி வால்டோவும் மற்றவர்களும் வேதாந்தப் பிரசாரத்தை நன்கு புரிந்து வந்தார்கள். நியூயார்க்கிலும், இதர பல நகரங்களிலும் கூட்டங்கள் போட்டார்கள். மக்கள் கூட்டம் கூட்டமாக இவற்றுக்குச் சென்று புத்தொளிபெற்று வந்தார்கள்.

விந்தையாகத்தான் இருக்கிறது! ஹாலிவுட் சினிமாக்களைக் காண இன்று இந்திய மக்கள் எவ்வளவு நாட்டத்துடன் செல்கிறார்களோ, அப்படி இந்தியாவின் ஆத்மிகத்தை அறிய அன்று அமெரிக்கர்கள் ஆர்வமாக இருந்தார்கள்!

நியூயார்க் திரும்பிய சுவாமிஜி முப்பத்தொன்பதாவது சாலையில் கிருபானந்தருடன் வசிக்கலானார். அந்த மாளிகையின் இருபெரும் அறைகளில் நூற்றைம்பதுபேர் வசதியாக உட்கார்ந்து போதனைபெற முடிந்தது. சுவாமிஜி கர்மயோகத்தைப்பற்றி அற்புதமான சொற்பொழிவுகள் ஆற்றத் தொடங்கினார். கர்மயோகத்தின் உருவமாகவே யிருந்தவரல்லவா சுவாமிஜி? எப்படி பார்த்தசாரதிக்கு கர்மத்தினால் ஆகவேண்டியது யாதொன்றும் இல்லாவிடினும் லோக க்ஷேமார்த்தமாக அவன் கர்மத்தில் ஈடுபட்டாற்போலிருந்தானோ அவ்வாறே சுத்த சந்நியாசியான சுவாமிஜியும் கர்மத்தில் ஈடுபட்டிருந்தார். சுவாமிஜியின் 'கர்மயோகம்' என்ற நூல் இந்த உரைகளின் தொகுப்பேயாகும்.

இச்சமயத்தில், சுவாமிஜியின் பிரசங்கங்கள் புத்தக வடிவு பெற்றதைப்பற்றிச் சொல்லவேண்டும். சுவாமிஜி ஏற்கனவே எழுதிவைத்துத் தயார்ப்படுத்திப் பேசுபவரல்ல. கடலில் அலைகள் எப்படிப் பூர்விகத்திட்டமின்றியே வீசுகின்றனவோ அதேபோல சுவாமிஜியின் பேரறிவில் சிந்தனை அலைகள் தாமாக எப்படி வீசினவோ அதனையே சொல்லாக்கித் தந்தார் அவர். இந்த அற்புத உரைகளை நிரந்தரமாக்கித் தரவேண்டுமென்று அமெரிக்கர்கள் நீண்டநாளாக விரும்பினர். பலமுறை சுருக்கெழுத்தாளர்களைக்கொண்டு பிரசங்கங்கள் சிலவற்றைக் குறிப்பும் எடுத்துக்கொண்டார்கள். ஆனால் இதெல்லாம் சரிப்பட்டு வரவில்லை.

Koviloor Digital Library

இதன்பின்தான் சுவாமிஜி இங்கிலாந்திலிருந்து திரும்பினபின் ஜே. ஜே. குட்வின் என்பவரைக் கொண்டு சுவாமிஜியின் உரைகளை உள்ளவாறே எழுத்தில் பதிவு செய்துகொள்ள ஏற்பாடு செய்யப் பட்டது.

குட்வின் சமீபத்தில்தான் இங்கிலாந்திலிருந்து நியூயார்க் குக்கு வந்திருந்தார். லௌகிகமே நிறைந்தவர் குட்வின். எப்படி ஒரு கருவியானது சுவாமிஜியின் பிரசங்கத்தை எவ்வித சுய ஈடுபாடுமின்றிப் பதிவு செய்யுமோ, அப்படிப்போலத் தமது ஈடு பாடு இல்லாமல் தொழிலாக இதனைச் செய்யத்தான் வந்தார். ஆனால் என்ன ஆச்சரியமோ, சுவாமிஜி அவரை அடியோடு மாற்றி விட்டார். சுவாமிஜி தமது அப்போதைய சிந்தனைகளைச் சொல் லில் வடித்து, அதனை குட்வின் காகிதத்தில் பதிவு செய்துகொண் டது மட்டுமல்ல. அவர் தம்முடைய பூர்வாசிரமத்தையெல்லாம் குட்வினிடம் கூறினார், அதன் படிப்பினையை குட்வின் தமது இதயத்தில் பதிவு செய்துகொண்டார். அத்யாத்ம வாழ்க்கைக்கு அவரது உள்ளம் நழுவ ஆரம்பித்தது. சுவாமிஜியின் பிரசங் கங்களை விடாமல் கேட்கும் ஒருவரால் அதன் சக்திக்கு ஆளாகாமல் எப்படி இருக்கமுடியும்? மெழுகுக் கரண்டியால் தீயை வாரி யெடுக்க இயலுமா, என்ன? குட்வின் உருகத் தொடங்கினார். சுவாமிஜியிடம் அத்யந்தமான பக்தி பூண்டார். சோர்வின்றி அவரது உரைகளையெல்லாம் சுருக்கெழுத்தில் எடுத்துக்கொண்டு, பிறகு இரவுகளில் அதனைத் தட்டெழுத்தில் மாற்றுவார். அந்தத் தட்டெழுத்துப் பிரதிகளைப் பத்திரிகைகளில் பிரசுரமாவதற்கு அனுப்பிவைப்பார்.

அமெரிக்காவில் சுவாமிஜி சென்ற இடமெல்லாம் பின் தொடர்ந்த குட்வின் பிறகு அவர் இரண்டாம்முறை இங்கிலாந் துக்குச் சென்றபோது அங்கும் சென்றார். அதன்பின் சுவாமிஜி யுடன் இந்தியாவை அடைந்து அங்கும் அவரது பிரசங்கங்களை எடுத்துக்கொண்டார். இந்தியாவிலேயே தமது இன்னுயிரை நீத்தார் குட்வின். 'எனது வலதுகையை இழந்தேன்' என்று அப்போது சுவாமி விவேகானந்தர் அரற்றினார்.

பேச்சில் மன்னராக இருந்த சுவாமிஜி எழுதும் பழக்கத்தை அவ்வளவாக ஏற்படுத்திக்கொள்ளவில்லை. இன்று சுவாமிஜியின் நூல்களில் அவரது கையெழுத்துப் பிரதியில் காணக்கிடைப்பன சொற்ப பாகங்களேயாகும்.

1895-ம் ஆண்டு இறுதியில், கிறிஸ்துமஸ் விழாவின்போது போஸ்டனுக்குச் சென்றார் சுவாமிஜி. பிறகு நியூயார்க்குக்குத் திரும்பி 1896-ம் ஆண்டு ஜனவரி 6-ந் தேதியிலிருந்து தொடங்கி

Koviloor Digital Library

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் ஹார்ட்மன் மன்றத்தில் இலவச உரைகள் நிகழ்த்தலானுர். மன்றம் கொள்ளாமல் மக்கள் நிரம்பி வழியலாயினர். இதன்பின் பிப்ரவரியில் மாடிஸன் சதுக்கத்தில் 1,500 பேர் இடம்பெறக்கூடிய ஒரு மன்றத்தை வாடகைக்கு அமர்த்தினர். அன்புவழியே ஆத்மாவை அடையும் பக்தியோகத்தைப்பற்றித் தமது உடலின் ஒவ்வோர் அணுவிலும், உரையின் ஒவ்வோர் அக்ஷரத்திலும், தொனியின் ஒவ்வோர் அசைவிலும், உணர்வின் ஒவ்வொரு சாயலிலும் உண்மை தொனிக்கத் தொடர் உரைகள் நிகழ்த்தினுர் ஸ்ரீவிவேகானந்தர். 'எனது குருநாதர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர்' என்பதாகவும் ஓர் ஒப்பற்ற பிரசங்கம் புரிந்துச் சிக்கல் வாழ்க்கைக்குச் சின்னமான அமெரிக்கர்களுக்கு எளிமையால் ஏற்றம்பெற்ற ஏந்தலின் உயர்வைப் போதித்தார்.

சுவாமிஜி அமெரிக்காவில் எவ்வளவு பெரும் புகழ்பெற்றிருந்தார் என்பதற்கு அமெரிக்காவில் தலைசிறந்த பத்திரிகையான 'நியூயார்க் ஹெரால்ட்' தனது 1896-ம் ஆண்டின் ஜனவரி மாதத்திய ஏடு ஒன்றில் அத்தாட்சி பகர்கிறது.

''சுவாமி விவேகானந்தரின் பெயர் மந்திரசக்திவாய்ந்ததாக ஆகிக்கொண்டு வருகிறது சமூகத்தில் தமக்கும் தமது போதனைக்கும் பிராபல்யம் பெற்றுவிட்ட அவர் இப்போது பொது மக்களை எல்லாம் அடைவதை இலக்ஷியமாக எடுத்துக் கொண்டிருக்கிறுர் சுவாமி விவேகானந்தரின் முயற்சிகள்நல்ல வெற்றியை அடைந்திருக்கின்றன. தமது பூர்வ சரிதம்பற்றி அவர் பேசுவதேயில்லை. அவர் தற்போது இந்நாட்டில் பிரசாரம் செய்யப் பிரயாசைப்பட்டு வருகிற சித்தாந்தங்களையும், அப்பியாசங்களையும் அவருக்குப் போதித்த மஹாகுருவைப் பற்றிப் பொதுப்படையாக அவர் பேசுவதுதவிரத் தமது பழைய வாழ்க்கை பற்றிக் கூறுவதில்லை. அவரிடம் ஓர் அபாரமான காந்த சக்தி உள்ளது''.

இதேசமயத்தில் சென்னையில் பிரசுரமான, 'பிரம்மவாதின்' பத்திரிகையில் ப்ருக்லினைச் சேர்ந்த ஹெலன் ஹண்டிங்டன், ''இந்தியாவிலிருந்து எங்களுக்கு ஓர் ஆத்மிக வழிகாட்டியை அனுப்பவேண்டுமென்று ஆண்டவன் திருவுள்ளம் கொண்டிருக்கிறுன். அவரது உன்னதமான சித்தாந்தம் மெதுவாக, ஆனுல் நிச்சயமாக, எங்கள் தேசத்தின் நெறிமுறைகளில் ஊறிக்கொண்டு வருகிறது நீரின் அடிமட்ட ஓட்டம்போல ஓர் ஆழ்ந்த ஆத்மிக விழிப்பு அவரது பிரபாவத்தால் இப்போதே ஏற்பட்டுள்ளது.''

Koviloor Digital Library

வேதாந்தம் அமெரிக்காவில் எப்படிப் பிரசாரமாயிற்று என்பதை அமெரிக்க சந்நியாசியாகிய சுவாமி கிருபானந்தரின் மொழியிலும்தான் பார்த்து விடுவோமே !

''வேதாந்த இலக்கியத்துக்கு இங்கு பெருத்த தேவை ஏற்பட்டு வருகிறது. சற்றும் எதிர்பார்க்க முடியாதவர்களெல்லாம் சம்ஸ்கிருத வார்த்தைகளை அதிகமாக உபயோகிக்கிறார்கள். 'ஆத்மா, புருஷன், பிரகிருதி, மோக்ஷம்' — இன்னும் இது போன்ற சொற்கள் 'பூரணப் பிரஜை'களாகிவிட்டன. ஹக்ஸ்லி, ஸ்பென்ஸர் இவர்களுடைய பெயர்களைப் போலவே பலருக்கு சங்கராசாரியர், ராமாநுஜர் ஆகியோரின் பெயர்களும் பழக்கமாகி வருகின்றன. இந்தியாவைப்பற்றிக் குறிப்பிடும் எந்த நூலாயினும் அவற்றுக்குப் பொது நூல் நிலையங்களில் 'மவுசு' ஏற்பட்டிருக்கிறது. தத்துவம் என்ற முறையிலும் சமயம் என்ற முறையிலும், இருவிதமாகவும் தங்கள் இதயம் அறிவு இரண்டையும் ஆகர்ஷித்து மனித இயல்பிலுள்ள சமயவிருப்பங்களைப் பூர்த்திசெய்யும் ஹிந்து தர்மத்தின் மகிமையையும், அழகையும் மக்கள் தயங்காமல் ரசித்து ஏற்கிறார்கள்'' என்கிறார் கிருபானந்தர்.

இந்தியாவிலேயே ஹிந்து மதத்துக்கு இல்லாத புகழும், அமெரிக்காவில் கிறிஸ்துவ மதத்துக்கே இல்லாதிருந்த புகழும், ஹிந்து மதத்துக்கு அமெரிக்காவில் ஏற்பட்டுவிட்டது !

ஹார்ட்ஃபோர்ட் பௌதிகாதீத சங்கத்தில் 1896 பிப்ரவரியில் சுவாமிஜி 'ஆண்டவனும் ஆத்மாவும்' என்பதுபற்றிப் பேசினார். இந்த உரையைப்பற்றி அவ்வூர் டெய்லி டைம்ஸ், ''கிறிஸ்துவர்கள் என்று சொல்லப்படுகிறவர்களைவிட இவரது பிரசங்கங்களே கிறிஸ்துவுடைய உபதேசங்களுக்கு இசைவாக உள்ளன'' என்கிறது. முன்பே நமக்குப் பரிசயமான ப்ரூக்லின் நன்னெறிக் கழகத்திலும் அம்மாதத்தில் சுவாமிஜி பேசினார்.

மாடிஸன் சதுக்கத்தில் பக்தியோகம், ஞானயோகம், சாங்கியம், வேதாந்தம் இவை குறித்துச் சொற்பொழிவுகள் ஆற்றி வந்த சுவாமிஜி பிப்ரவரி 24-ந் தேதி 'என் குருநாதர்' என்ற ஒப்பற்ற உரையுடன் அந்தத் தொடரை முடித்தார். அன்றைக்கே தான் இந்தியாவில் ஸ்ரீராமகிருஷ்ணரின் ஜயந்தி மகோற்சவம் பொதுமக்களால் கொண்டாடப்பட்டது என்பதையும் இங்கு குறிப்பிடலாம்.

இதற்குச் சில நாட்களுக்கு முன்பு, பிப்ரவரி 13-ந் தேதி, குருவாரத்தன்று பல இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் சுவாமிஜி மந்திரோபதேசம் செய்து குருவானார். அதற்கடுத்த

Koviloor Digital Library

குருவாரத்தில் டாக்டர் ஸ்ட்ரிட் என்ற அத்யந்த பக்தருக்குத் துறவு அளித்து யோகானந்தர் என்ற நாமத்தை அளித்தார். மற்றப் பிரம்மசாரி சிஷ்யர்களும் இரு சந்நியாசி சிஷ்யர்களும் இந்த வைபவத்தில் பங்கு கொண்டனர். அமெரிக்கா வந்த ஓராண்டுக்குள் சுவாமிஜி வேதாந்தத்தைப் பரப்பவே தமது வாழ்க்கையை அர்ப்பணித்துக்கொள்ளுமாறு மூன்று அமெரிக்கரைச் சாதுக்களாக்கியது ஓர் அரிய திருப்பணியாகும். ''நல்லது செய்வதில் சுவாமிஜிக்கு உள்ள பேராற்றலுக்கு இது ஓர் அற்புதச் சான்ருகும்'' என்று அமெரிக்கப் பத்திரிகை உலகம் கூறிற்று.

சுவாமிஜியின் அன்பர்களாகவும், ரசிகர்களாகவும் இருந்த பலர் இப்போது சிஷ்யர்களாகி பிரம்மசரியம், அபரிக்ரஹம் முதலிய சிறந்த கொள்கைகளைக் கடைப்பிடிக்கலாயினர்.

''ஹோமரின் பிறந்த இடம் என்பதாக ஏழு நகரங்கள் உரிமை கொண்டாடிச் சர்ச்சையிட்டதுபோல் எங்கள் குருவை [சுவாமி விவேகானந்தரை]த் தங்களவராக ஏழு தேசங்கள் உரிமை கோரும் காலம்வரும்; அதனுல் பாரதமானது தனது பெருமாண்பு பொருந்திய புத்திரர் ஒருவரைப் பெற்ற கௌரவத்தை இழந்து நிற்க நேரிடும்'' என்று பக்தி பாதியும், ஹாஸ்யம் பாதியாகவும் எழுதினுர் சுவாமி கிருபானந்தர்.

பத்தே நிமிஷங்கள் விவேகானந்தரின் பேச்சைக்கேட்டுத் தங்கள் விளையாட்டு விநோத வாழ்க்கையையும், வியாபார உலகத்தின் விழ்ச்சி எழுச்சியையும், விஞ்ஞானத்தின் விந்தைகளையும் மறந்து ஆத்மிகத்தில் மூழ்கிய அமெரிக்கர் பலர். ஸ்ரீமதி எல்லா விலர் வில்காக்ஸின் நினைவுக் குறிப்புக்களைப் படித்தால் இந்த உண்மை புலனுகும், ''விவேகானந்தர் நம்மிடம் ஒரு மகத்தான செய்தியுடன் வந்தார்: 'உங்களை நான் புது மதமொன்றுக்கு மாற்ற வரவில்லை. இப்போது ஒவ்வொருவரும் தாம் அநுசரிக்கும் மதத்தை இன்னும் சிறப்பாக அநுசரிக்க வகை செய்யவே நான் வந்திருக்கிறேன். சத்தியத்தை நீங்கள் வாழ்ந்து காட்டவேண்டும் என்று உபதேசிக்க வந்திருக்கிறேன். உங்களுக்குள் உள்ள அக விளக்கை உங்களுக்கு விளக்குவதற்காகவே வந்திருக்கிறேன்' என்ருர். அவர் தந்த உபதேசம் வர்த்தக உலக மனிதனுக்கு வலிவு தந்தது. விளையாட்டு வனிதையரைச் சிந்திக்கச் செய்தது; கலைஞனுக்குப் புது அபிலாஷைகளை அளித்தது; மனைவியையும், அன்னையையும், கணவனையும், தந்தையையும் தங்கள் கடமைகளை மதிக்கும் உணர்வில் ஊறச்செய்தது'' என்கிருள் ஸ்ரீமதி வில்காக்ஸ்.

Koviloor Digital Library

சுவாமிஜியும் அமெரிக்காவில் தாம் புரிந்த சாதனையை நன்கு உணர்ந்திருந்தார். பிப்ரவரி பதினேழாம் தேதி அழசிங்கருக்கு அவர் எழுதிய கடிதத்தில் 'அமெரிக்க சமுதாயத்தின் இதயத்தையே தொட்டு எழுப்புவதில் நான் வெற்றி கண்டுள்ளேன்' என்கிறார் அவர்.

சுவாமிஜியின் பிரசங்கங்கள் சிறு பிரசுரங்களாக வெளிவரலாயின. ராஜயோகம், பக்தியோகம், கர்மயோகம் இவற்றைப் பற்றிய அவரது உரைகளும் தனித்தனி நூல்களாக உருவாகத் தொடங்கின. குட்வின் ஒருவர் இருக்கக் கேட்பானேன்?

நியூயார்க்கில் செய்யவேண்டியதையெல்லாம் செய்துவிட்டு மீண்டும் சுவாமிஜி டெட்ராய்ட்டுக்குச் சென்றார். ''அச்சமயத்தில் அவர் ஒரே பக்திமயமாக இருந்தார். கடவுள் அன்பு என்பதே அப்போது அவருக்குப் பசியாகவும், தாகமாகவும் இருந்தது. அன்புருவான திவ்யமாதாவுக்காக ஏங்கி அவரது இதயம் வெடித்துவிடும்போல் அப்படி ஒரு தெய்வவெறி அவரை ஆட்கொண்டிருந்தது'' என்கிறாள் ஸ்ரீமதி ஃபங்க். அவர் அங்கு நிகழ்த்திய இறுதிப் பிரசங்கத்தின்போது, ''இந்த மண்ணுலகைச் சேராத ஒன்று அவரது அழகில் பொலிந்தது. உடலின் தளைகளை ஆத்மா ஏறக்குறைய உடைத்தெறிந்துவிட்டதுபோலத் தோன்றினார். அப்போதுதான் நான் அவருடைய முடிவின் நிழலாட்டத்தை முன்கூட்டிக் கண்டேன். பல வருஷங்கள் அளவுக்கு மீறி உழைத்ததால் அவர் மிகவும் தேகபலம் தீர்ந்துபோயிருந்தார். இந்த உலகில் அவரது காலம் அதிகமில்லை என்பது அப்போதே தெரிந்துவிட்டது. நான் என் கண்களை மூடிக்கொள்ள முயன்றேன். ஆனாலும் என் இதயத்தில் உண்மையை அறிந்திருந்தேன். அவருக்கு ஓய்வு தேவையாயிருந்தது. என்றாலும் தாம் உழைத்துக் கொண்டே இருக்கவேண்டுமென அவர் எண்ணினார்'' என்று உருக்கத்துடன் எழுதினாள் ஃபங்க்.

புவியில் தமது பௌதிகமான ஆயுட்காலம் முடிவை நெருங்குகிறது என்பதை சுவாமிஜியுமே அறிந்திருந்தார். தீர்க்க தரிசியாகிய அவருக்குத் தெரியாததும் உண்டா? ''ஹா! இந்தத் தேகம் எத்தனை பயங்கரமான ஒரு தளை!'' என்று அடிக்கடி அரற்றினார். தமது குறிப்புப் புத்தகத்தில், ''என் உடலை நீட்டிப் படுத்துக்கொண்டு உயிரைவிடுவதற்காக ஒரு மூலையைத் தேடி அலைகிறேன்'' என்று எழுதினார்.

அவ்வளவு அவசரம் ஏன் எந்தையே! லோகாயதம் நிறைந்த உலகில் ஆத்மிகத்தைப் பரப்புவதற்காக அவதரித்தீர்கள். அந்தப் பணியினைத் தாங்கள் அற்புதமாக நிறைவேற்றியதையும் இன்று

Koviloor Digital Library

நாங்கள் படிக்கிறோம். ஆனால் எந்தையே, தாங்கள் மறைந்து அறுபதாண்டுகளில் இன்று ஆத்மிகம் எங்குபோயிற்று? லோகாயதம் அல்லவா மீண்டும் மக்களை வந்து பற்றிக்கொண்டு விட்டது? தங்களின் அவதாரப் பணியைப்பற்றிப் பெருமையுடன் எழுதும் போதே மீண்டும் அந்தப் பணிக்கு அவசியம் நேரிட்டுவிட்டது என்ற ஏக்கமும் அல்லவா உண்டாகிறது? தங்களின் சதாப்தியைக் கொண்டாடும் இன்றளவும் தாங்கள் எம்மிடையே உடலும் உயிரும் தரித்து வாழ்ந்து, லோகாயதத்தை வேரோடு கெல்லியிருந்திருக்கலாகாதா? நாற்பதே பிராயத்தில் அவ்வளவு அவசரமாக ஏன் உடலை உதறிவிட்டுச் சென்றீர்கள்? 'அவனவனும் தன்னாலேயே முன்னேறவேண்டும்' என்று அனவரதமும் கூறிவந்த தாங்கள், மக்களை அவரவர் பொறுப்பிலேயே நம்பிவிடவேண்டும் என்று கருதிச் சென்றுவிட்டீர்களா? 'திசை தெரியாமல் திகைத்த அவர்களுக்கு வழியைக் காட்டினால்மட்டும் போதும்; அவர்களின் உள் மறைந்துகிடக்கும் தெய்விகத்தை நினைவுறுத்தினால்மட்டும் போதும்; அவர்களே முன்னேறுவார்கள்' என்று நம்பினீர்களா? சுவாமிஜி, தங்களின் நம்பிக்கைக்கு நாங்கள் தக்க பாத்திரங்கள் அல்ல. மீண்டும் இங்கு வாருங்கள்; உலகத்தின் கடைசி ஜீவன் கடைத்தேறும்வரை அப்படிக் கடைத்தேற்றுவதற்காகத் தாங்கள் இந்த மண்ணுலகில் வந்து வந்து பிறப்பீர்கள் என நம்புகிறோம். வாருங்கள் ஐயனே, வாருங்கள்!

* * *

ஹார்வர்ட் சர்வகலாசாலையில் சுவாமிஜி நிகழ்த்திய 'வேதாந்த தத்துவம்' என்ற சொற்பொழிவு மிகவும் முக்கியத்துவம் பொருந்தியது. பேரறிஞர்களின் அவையில் நிகழ்த்தப்பட்ட உரை அது. அந்த உரையைக்கேட்டு அந்தப் பேரறிஞர்களும் வியந்தனர். சர்வகலாசாலையைச் சேர்ந்த பூஜ்ய ஸி. ஸி. எவரெட் சுவாமிஜியின் பிரசங்கம் புத்தகமாக வந்தபோது பின்வருமாறு எழுதினார்:

''மேல்நாட்டினராகிய நாம் பலவற்றைக் குறித்து ஆராய்கிறோம். இந்தப் பலவும் எந்த ஒன்றில் உள்ளனவோ, அந்த ஒன்றைப்பற்றி நாம் அறியாவிடில் பலவற்றைப்பற்றியும் அறிய முடியாது. அந்த ஒன்றைப்பற்றிய சத்தியத்தை கீழ்நாடுகள் நமக்கு நன்கு போதிக்க முடியும். இந்தப் போதனையை மிகவும் சக்தியுடன் நமக்கு அளித்த விவேகானந்தருக்கு நாம் நன்றிக் கடன்பட்டிருக்கிறோம்''.

சுவாமிஜியின் அறிவாற்றலைக்கண்ட ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தினர் அவருக்குக் கீழ்நாட்டுத் தத்துவப் பேராசிரியர் பதவியை அளிக்க முன்வந்தனர். பெருமதிப்பு வாய்ந்த ஒரு பதவி

Koviloor Digital Library

இது. என்ருலும் தியாகமூர்த்தியாகிய விவேகானந்தர் சந்நியாசியாகக் காலம் கழிக்கவே ஜன்ம விரதம் பூண்டவர். பேராசிரியர் பதவியை அவர் நன்றியுடன் மறுதலித்துவிட்டார்.

கொலம்பியா சர்வகலாசாலேயினர் சுவாமிஜிக்கு சம்ஸ்கிருதப் பேராசிரியர் பதவியை வழங்கியபோதும் இதேபோல் அவர் மறுத்துவிட்டார்.

வேதாந்தம், யோகம் இவை எப்படி அன்புமயமானவை என்பதையும், விஞ்ஞான உண்மைகளுக்கு மேம்பட்டவை என்பதையும் சுவாமிஜி ஹார்வர்ட் மாணுக்கர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மிகத் தெளிவாகவும், திடமாகவும் விளக்கி வைத்தார். வார்த்தை விளக்கத்தில் வேதாந்தம் இல்லேயென்றும் வாழ்க்கையிலேயே பின்பற்றவேண்டியவை அவை என்பதையும் உணர்த்திஞர். மேல்நாட்டில் தத்துவ சாஸ்திரங்கள் ஏட்டளவில் காணும் முடிவுகளில் உள்ளன என்பதையும், பாரதத்தில் அவை வாழ்க்கையில் அங்கமாகின்றன — அல்லது வாழ்க்கை அவற்றின் அங்கமாகிறது — என்பதையும் உள்ளங்கை நெல்லிக்கனியாக எடுத்தியம்பியவர்களில் சுவாமிஜிக்குச் சிறப்பான இடமுண்டு.

பற்பல மத அநுஷ்டானங்களேயும் கைவிடாமல், அத்வைதத்தை அவற்றுக்கு ஆதாரமாகவும், பின்னணியாகவும், லக்ஷியமாகவும் ஆக்கித்தருகிற 'பிரபஞ்ச சமயம்' பற்றி போஸ்டனில் பேசிஞர் சுவாமிஜி.

அப்படிப்பட்ட பிரபஞ்ச சமயத்துக்கு அஸ்திவாரமாக வேதாந்த சங்கத்தை நியூயார்க்கில் நிறுவிஞர் சுவாமிஜி. இதன் மூலம் ஸ்தூலமாக ஸ்தாபனரீதியில் தமது பணியினேத் தொடங்கிவிட்டார் அவர். 'ஸ்தாபனம் வேண்டுமா, வேண்டாமா?' என்பதுபற்றி அவருக்கெழுந்த விஞ, இறுதியில், 'ஸ்தாபனம் தேவையே; குற்றம் குறைகள் அதில் இருக்கக்கூடுமாயினும் நடைமுறை உலகுக்குக் கட்டுக்கோப்பான ஓர் அமைப்பு அத்தியாவசியம்' என்ற விடையைக் கண்டது.

நியூயார்க் வேதாந்த சங்கம் தோன்றியது சமயசரித்திரத்தில் ஒரு முக்கியமான தினம். உலகமதம் என்பதாக ஒன்றுக்கு அங்குரார்ப்பணம் செய்த நாள் அதுவே அல்லவா? எல்லா மதஸ்தர்களேயும், எல்லாவிதமான சித்தாந்திகளேயும் அழைத்தது வேதாந்த சங்கம். யாரும் எதையும் கைவிடவேண்டாம்; தங்கள் கையிலிருப்பதற்கு மேலான தத்துவத்தை உணரவாருங்கள் — என்று அழைத்தது.

எல்லா மதங்களேயும் சத்தியமென ஒப்புக்கொள்வதும், சகிப்புத்தன்மையுமே அதன் லக்ஷிய வாசகங்களாயிருந்தன.

Koviloor Digital Library

வேதாந்தத்தைப் பயிலுவது, தியானம் புரிவது, யோகம் அப்பிய சிப்பது இவை அதன் அங்கத்தினர்களின் கடமையாயின. இவற்றேடு வேதாந்த திபத்தை இருளில் உள்ள எல்லாருக்கும் எடுத்துச் செல்லும் பெரும் கடமையும் அவர்களுக்கு இருந்தது. தங்களைக் கண்டுகொள்வதும், அதே சமயத்தில் பிறருக்கும் அவர்களைக் காட்டிக்கொடுப்பதும், அவர்களையும் தாங்களாகவே கருதிக் காண்பதும் வேதாந்த சங்க அங்கத்தினருக்கு சுவாமிஜி இட்டிருந்த ஆணையாகும். சங்க அங்கத்தினர் 'வேதாந்தி'கள் என்றே அழைக்கப்பட்டனர். அவர்கள் குறிப்பிட்ட நேரங்களில் ஒன்ருகக் கூடி நிர்மாணத் திட்டமொன்று வகுத்துக்கொண்டு அதன்படி செயலாற்றி வந்தனர்.

நியூயார்க்கிலுள்ள சங்கத்தைப்போலப் பல இடங்களில் பல தோன்றி கிழக்கையும் மேற்கையும் இணைக்கவேண்டுமென சுவாமிஜி விரும்பிஞர். ''ஓர் இல்லத்திலிருந்து இன்னெென்றுக்குப் புகுவதுபோல், கிழக்கும் மேற்கும் எவ்வித அந்நிய உணர்வுமின்றி ஒன்று மற்றதில் புகுவதற்குக் கதவு திறப்போம்'' என்று கோஷித்தார். தமது குருபாயிக்கள் சிலர் மேல்நாடுகளுக்கு வந்து வேதாந்தப் பிரசாரம் செய்யவேண்டும் என்றும், அதேபோல் அமெரிக்க, ஆங்கில சிஷ்யர்கள் இந்தியாவுக்குச் சென்று தொழிலும், விஞ்ஞானமும், பொருளாதாரமும், சமூக இயலும் போதிக்க வேண்டுமெனவும் ஆசைபட்டார் சுவாமிஜி. இங்கிலாந்திலிருந்த போதே சுவாமிஜி சுவாமி சாரதானந்தரை மேல்நாடுகளுக்கு வர ஆயத்தமாகுமாறு பணித்திருந்தார்.

எதிர்காலத்தில் கிழக்குக்கும் மேற்குக்கும் உள்ள பிரிவுக் கோடு மறைந்து அவை ஒன்ருகும் எனத் தாம் காண்பதாக அவர் அடிக்கடி கூறிவந்தார்.

இச்சமயத்தில் இன்னெெரு ஹிமாலயப் பணி பற்றியும் சுவாமிஜி நினைத்துவந்தார். அத்வைதம் — விசிஷ்டாத்வைதம் — த்வைதம், 'கர்மம் — ஞானம் — பக்தி; வேதங்கள் — புராணங்கள் — ஸ்மிருதிகள் இவையாவும் பற்பல அம்சங்களில் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருப்பதுபோல் தோன்றினுலும் உண்மையில் விரோதமற்றவை என்று நிரூபித்து, அவற்றைப் பல படிகளாக்கி சத்திய தரிசனத்துக்கு வழிவகுப்பனவாக அவலம்பிக்கவேண்டும்; எல்லா நூல்களையும் பயின்று, ஒப்பிட்டு, மேற்கோள்கள்காட்டி இதனைச் செய்யவேண்டும்; மேல்நாட்டினர், ஏன் உலகத்தவர் யாவருமே, தயக்கமின்றி ஏற்கக்கூடிய ஓர் அமைப்பாக ஹிந்து மதத்தின் சகல அம்சங்களையும் பாகுபடுத்தி புனர் நிர்மாணிக்கவேண்டும் — இப்படித் துடித்தார் ஸ்ரீமத்

Koviloor Digital Library

விவேகானந்த சுவாமிகள். யாவரும் ஏற்கவேண்டுமெனில் ஹிந்து சமயம் விஞ்ஞானத்துக்கு விரோதமானதல்ல என்றும், அறிவுக்கு முற்றிலும், பொருந்தியது என்றும் நிலைநாட்டவேண்டுமல்லவா ? இவ்வாறு நிலைநாட்ட முயன்ற முதல் இந்திய தத்துவஞானி சுவாமி விவேகானந்தரே என்கின்றனர் அவரது சரிதையை எழுதிய மேல்நாட்டுச் சீடர்கள்.

'ஓம்' என்ற ஒரே சின்னத்துடன் பிரபஞ்ச ஆலயம் ஒன்றை நிறுவ வேண்டுமென்றும் இச்சமயத்தில் அவர் விரும்பிவந்தார்.

* * *

இந்தியாவிலிருந்து சுவாமிஜிக்குக் கடிதங்கள் வரத்தொடங்கின — அவர் திரும்பிவரவேண்டும் என்று. அவர்களுக்கு சுவாமிஜி தாம் விரைவில் திரும்பிவருவதாக எழுதினர். அவர் வருமுன்பே அவர்கள் ஒன்ருகச் சேர்ந்து செயலாற்றவேண்டுமென்றும் எழுதினர். ஹிந்து தர்மத்தின் சாசுவத சத்தியங்களுக்கு ஒரு சின்னமாகத் திகழ்ந்த பரமஹம்ஸ ஸ்ரீராமகிருஷ்ணரின் ஆணையை நிறைவேற்ற அவர்கள் ஒன்றுகூடவேண்டும் என்ருர். அதேசமயத்தில் 'ராமகிருஷ்ண மதம்' என்பதாகக் குறுகலான புதியதொரு அமைப்பை ஏற்படுத்திவிடலாகாது என்றும் எச்சரித்தார். ''ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் தெய்வமே ஆவார் என்பதுபோன்ற விஷயங்களை மேல்நாடுகள் ஏற்கமாட்டா. அப்படிச் சொல்வதால் நமது இயக்கம் ஒரு சிறிய ஜாதியாகிவிடும். மக்கள் தாமாகவே அவரைக் கடவுளாக வழிபடுவதால் ஏதும் திங்கில்லை. எனினும் நீங்கள் இதை ஊக்கவும் வேண்டாம், தாக்கவும் வேண்டாம். பொதுமக்களுக்கு எப்போதும் மனிதரிடம் தான் ஈடுபாடு; அறிவில் உயர்ந்தவர்களுக்கோ தத்துவத்திலேயே ஈடுபாடு. நமக்கு இரண்டும் வேண்டும். என்ருலும் தத்துவங்கள் உலகமுழுவதற்கும் பொதுவாயிருப்பதுபோல் மனிதரால் இருக்க முடிவதில்லை. எனவே அவர் போதித்த தத்துவங்களிலேயே ஒட்டிக்கொள்ளுங்கள், அவரைப்பற்றி மக்கள் என்ன நினைக்கிருர்களோ நினைத்துவிட்டுப்போகட்டும்'' என்று எழுதினர். இப்படி எழுதியவரே தம்மைப் பொறுத்தமட்டில் குருமஹராஜை எவ்வளவு உயர்வாகக் கருதினர் என்பதைத் தெரிவிக்கும் திருமுகம் ஒன்று உண்டு.

* * *

1896-ம் ஆண்டு ஏப்ரல் இறுதியில் அலம்பஜாரில் ஒன்று திரண்டிருந்த குருபாயிக்களுக்கு எழுதிய இந்தக் கடிதத்தில் மட நிர்வாகத்தைப்பற்றி என்னென்ன கூறவேண்டுமோ அவ்வளவையும் கூறிவிட்டார்.

Koviloor Digital Library

தோட்டம் சூழ்ந்த ஒரு வீட்டில் மடத்தை அமைக்க வேண்டும். சாது ஒவ்வொருவருக்கும் ஒரு அறை இருக்கவேண்டும். நூல்களை வைப்பதற்கு ஒரு பெரிய அறையும், பார்க்கவருபவர்களை வரவேற்க ஒரு சிறு அறையும் இருக்கவேண்டும். உபந்நியாசங்கள் நிகழ்த்த இன்னொரு பெரிய அறை இருந்தாலும் நல்லது. முறை போட்டுக்கொண்டு குருபாயிக்களில் ஒருவரேனும் வெளிஹாலில் இருந்து, அங்குவரக்கூடிய பொதுமக்களை விசாரித்து அவர்களுக்குச் சந்தேகம் ஏதேனும் இருக்குமாயின் அதைத் தீர்க்கவேண்டும். வம்பளப்பதையும், வேண்டியவர்களையெல்லாம் சேர்த்துக் கொள்வதையும் கட்டோடு நிறுத்தவேண்டும். மதவிஷயமாகக் கேட்கிறவர்களுக்குமட்டுமே பதிலளிக்கவேண்டும். அலுவல் அறை ஒன்று வைத்துக்கொண்டு காரியதரிசி மூலம் கடிதப் போக்குவரவுகளைக் கவனிக்கவேண்டும். கோபமோ ஆத்திரமோ ஏற்பட்டால் யாராயினும் நிச்சயமாக மடத்துக்கு வெளியே சென்றுதான் அவற்றை வெளிப்படுத்தலாம்.

வாக்கெடுப்பு மூலம் வருஷத்துக்கொரு தலைவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

முதல் ஆண்டில் சுவாமி பிரம்மானந்தரைத் தலைவராகக் கொள்ளலாம்.

சுத்தமான தண்ணீரில் தூய்மையைக் காக்கும் உணவைச் சமைக்கவேண்டும். ஒவ்வொரு சாதுவுக்கும் நல்ல குடிதண்ணீர், சார்பாய், காஷாயம் இவை அளிக்கவேண்டும்.

சந்நியாசியாக விரும்புபவர் முதலில் பிரம்மசாரியாகப் பயிற்சி பெறவேண்டும். ஓராண்டு மடத்திலும் ஓராண்டு வெளியிலும் வாழ்ந்தபின் அவருக்குத் துறவு தீக்ஷை அளிக்கலாம். பூஜையைப் பிரம்மசாரிகளிடமே ஒப்படைக்கவேண்டும்.

படிப்பு, பிரசாரம், மத அநுஷ்டானம் என மூன்று இலாகாக்கள் மடத்தில் இருக்கவேண்டும்.

பார்வையாளர் அறையைத்தாண்டி எந்தப் பெண்ணையும் அநுமதிக்கலாகாது. பெண்களுக்குத் தனி மடம் இருக்கவேண்டும். ''துர்சங்கத்தைவிட சூனியம் மேலானது''. யாரேனும் தீய நோக்கம் படைத்திருப்பதாகத் தெரிந்தால் தயங்காமல் துரத்தி விடவேண்டும். ஆன்மிக வகுப்புகளுக்கு வருகிற பெண்கள் அது முடிந்தவுடன் வெளியேறிவிடவேண்டும்.

குறிப்பிட்ட காலத்தில்தான் உண்ணவேண்டும். ஒவ்வொருவருக்கும் ஆசனமும், தாலமும் இருக்கவேண்டும்.

தலைவரைத் தவிர காரியதரிசி, பொருளாளர், நூல்நிலையக் காவலர் இவர்களையும் தேர்ந்தெடுக்கவேண்டும்.

Koviloor Digital Library

மடத்தின் கொள்கைகள் பற்றி என் கருத்தாவது:

பரமஹம்ஸ தேவரை யாரொருவன் அவதாரம் என்று எண்ணினுலும் அது சரியே. அப்படி எண்ணுவிட்டாலும் சரியே. பரமஹம்ஸரைப் பற்றிய உண்மை, அவர் தமது சுத்தமான நடத்தையால் மற்ற எல்லா மகான்களுக்கும் மேல் சென்று விட்டார் என்பதே. தமக்கு முன் சென்றவர்களைவிட தயாள மாகவும், புதுக்கருத்துக்கள் கொண்டவராகவும், முன்னேற்ற மனப்பான்மை கொண்டவராகவும் இருந்தவர் பரமஹம்ஸர். பழைய குருமார்கள் ஒவ்வோர் அம்சத்தைச் சொன்னவர்கள். இவர் யோகம், பக்தி, ஞானம், கர்மம் எல்லாவற்றிலுமுள்ள சிறப்புக்களைச் சேர்த்து புது சமுதாயம் அமைக்க வழி கண்டவர். பழைய அவதாரங்கள் எல்லாம் ஒரே உருவில் இசைந்தவர் தான் ஸ்ரீராமகிருஷ்ணர். எல்லா மகான்களையும் போற்றவேண்டும் என்று போதியுங்கள் யாரிடமும் எதிர்ப்புணர்ச்சி காட்டலாகாது

''நீங்கள் என் கருத்து வழி நடந்தால் உங்களுக்குத் தேவை யான நிதியம் அளிப்பேன்''.

''நான் பிரசாரகன்தான்; ஸ்தாபகன் அல்ல'' என்று சுவாமிஜி சொன்னதாக முன்பு படித்தோம். இந்தக் கடிதத்தைப் படித்தபின் இதில் பின் பாதியை ஒப்புக்கொள்வது இயலுமா ?

* * *

இங்கிலாந்திலிருந்து சுவாமிஜிக்கு அழைப்புக்கள் வரத் தொடங்கின. அங்கு ஒருவாறு அவருடைய உபதேசங்கள் ஊறத் தொடங்கியிருந்தனவாம். சுவாமிஜியே நேரில் வந்து அவற்றை வலியுறுத்தி நிலைநாட்டவேண்டுமென ஆங்கிலேய நண்பர்கள் விரும்பி அவரை அழைத்தனர்.

சுவாமிஜி சிந்தித்தார். அமெரிக்காவில் சத்தான சிஷ்யர் களைத் தயாரித்தாகிவிட்டது. சமூகத்தின் சகல பகுதிகளிலும் சத்தியத் தத்துவத்தைப் பற்றிய ஒரு விழிப்பை ஏற்படுத்தி யாயிற்று. இனி அந்தச் சிஷ்யர்களே பொறியை அணையவிடாது காக்கமுடியும் என்று நம்பினர். நியூயார்க்கில் நல்லதொரு சங்கம் நிறுவியாயிற்று. வீட்டு முற்றத்திலுள்ள தீபம் கூடம் தாழ்வரை யாவற்றுக்கும் ஒளிதருவதுபோல் நியூயார்க்கில் நடை பெறும் இயக்கம் நாடுமுழுவதற்கும் சக்தி தரும். இதே போல் இங்கிலாந்துக்கெல்லாம் ஒளிதர லண்டனிலும் ஒரு சங்கம் அமைப் பது அவசியம் என எண்ணினர் சுவாமிஜி.

அமெரிக்க சிஷ்யர்களுக்கு — வேதாந்திகள் சந்நியாசிகள் இரு பிரிவினருக்குமே — தீவிரமாகப் பயிற்சியளித்தார். வேதாந்

Koviloor Digital Library

தத்தை மும்மதப்படியும் அவர்களுக்குக் கற்பித்தார். 'சகோதரி ஹரிதாஸி' எனப் பெயர்பூண்ட குமாரி வால்டோவுக்கு விசேஷ மான ஆத்மிக சக்திகளை அளித்தார். அவளே ராஜயோகத்தைப் பயிலவும் போதிக்கவும் மிகச்சிறந்த பாத்திரம் என்பது சுவாமி ஜியின் கருத்து: ஃபிரான்ஸிஸ் லெக்கெட்டை வேதாந்த சங்கத் தின் தலைவராக நியமித்தார். பிரபல பாடகி எம்மா தர்ஸ்பி, குமாரி மேரி ஃபிலிப்ஸ், ஸ்ரீமதி ஆர்தர் ஸ்மித், வால்டர் குட் இயர் தம்பதி ஆகியோர் வேதாந்தத்தைப் பிரசாரம் செய்யும் பணியை ஆர்வத்தோடு ஏற்றனர்.

1896-ம் ஆண்டு ஏப்ரல் பதினைந்தாம் தேதி நியூயார்க்கி லிருந்து இங்கிலாந்துக்குக் கப்பல் மார்க்கமாகப் புறப்பட்டார் சுவாமி விவேகானந்தர்.

* * *

சுவாமிஜி வேதாந்தப் பணிகள் செய்வதில் அலுத்திருப்பா ரோ இல்லையோ, நமக்குத் திரும்பத் திரும்ப அவருடைய வேதாந்தப் பணிகளைப் படித்தபின் 'லேசான' சம்பவங்களும் தேவைப்படுகின்றன. சுவாமிஜியின் சண்டமாருத வாழ்க்கையில் அவற்றுக்கு குறைவில்லை. அமெரிக்காவில் அவர் வாழ்ந்தபோது நிகழ்ந்த இந்த லேசான சம்பவங்களில் — எனினும் சுவாமிஜ்யின் மனிதத்தன்மை மிளிரும் சம்பவங்களில் — சிலவற்றை இங்கு பார்க்கலாம்.

ஓயாமல் உன்னத தத்துவங்களை எடுத்துரைத்தபின் சுவாமிஜி, ''பேத்தப் போகிறேன்'' என்று ஆரம்பித்துச் சந்தோஷமாகப் பேசுவார்; மற்றவர்களையும் சந்தோஷப்படுத்து வார். 'பஞ்ச்' போன்ற நகைச்சுவை ஏடுகளைப் படித்துக் கண் ணில் ஜலம் வருகிறவரை விழுந்து விழுந்து சிரிப்பார். பிரவாக மாகப் பேச்சைப் பொழிந்துவிட்டு அது முடிந்தபின், ''நல்ல வேலை, கடவுள் புண்ணியத்தில் ஒய்ந்ததே'' என்று சொல்லிச் சிரிப்பார்.

அமெரிக்கர்களின் ஹாஸ்யக் கதைகளை மிகவும் ரசித்துக் கேட்டு அவற்றில் சிலவற்றைத் தாமும் திரும்பத்திரும்பக் கூறு வார்.

அவற்றில் ஒன்று:

பழங்குடிகள் வாழுமிடம் ஒன்றுக்குக் கிறிஸ்துவப் பாதிரி ஒருவர் மதமாற்றம் செய்யச் சென்முராம். அவர்களின் தலைவன் அவருக்கு முன்பே ஒரு பாதிரி வந்ததாகச் சொன்னனும். 'அவர் எப்படியிருந்தார் ?' என்று கேட்டாராம் புதுப் பாதிரியார். 'எப்படியா ? வெகு நன்முக இருந்தார் தித்தி ப்பாக

Koviloor Digital Library

இருந்தார்' என்ருனும் அந்த நரமாமிச பட்சிணி. புதுப் பாதிரிக்கு எப்படி யிருந்திருக்கும் ?

சுவாமிஜி ஓர் அமெரிக்கர் வீட்டில் தங்கியிருந்தபோது அந்த விட்டுச் சமையற்காரப் பெண்ணிடம் செவ்விந்தியன் ஒருவன் நேசம் கொண்டான். அவள் அவனே மணக்க மறுத்துவிட்டாள். உடனே அவன் தன் தலேயில் இறகுகளேப் பொருத்திக்கொண்டு, தைலம் சிகையிலிருந்து முகமெல்லாம் வழியத் தன்னேச் 'சிங் காரித்து'க் கொண்டு அந்த விட்டு வாசலில் வந்தமர்ந்துகொண்டு சத்தியாக்கிரகம் செய்யலானன். இச்சமயத்தில் அவ்வூர் சித்திர சாலேயொன்றில் சுவாமிஜியின் 'ஆயில் பெயிண்டிங்' படம் ஒன்று தயாராகிவந்தது. அதைப் பார்வையிட சுவாமிஜியும், வீட்டுக்குரியவரும் சென்ருர்கள். சித்திரத்திலிருந்த விவேகானந் தரின் கன்னங்களில் ஆயில்பெயிண்ட் வழிந்து கொண்டிருந்தது. ''ஆஹா, சுவாமியார் சமையற்காரியைக் கலியாணம் செய்து கொள்ளத் தயாராகிருர்'' என்று கூவினர் சுவாமிஜி.

தமது அமெரிக்க நண்பர்களுக்குச் செல்லப் பெயர்களிட்டு அழைப்பதில் சுவாமி விவேகானந்தருக்கு ஒரு சந்தோஷம். அமெரிக்கர்களின் ஆங்கிலக் கொச்சைகளே அமெரிக்கர்போலவே பேசக்கற்ற அவர் 'யும்' 'ஜோ ஜோ' என்பதுபோன்ற புனே பெயர்களேச் சூட்டினர்.

ஹேல் துரையை போப் ஆண்டவர் என்றும் ஸ்ரீமதி ஹேல் அம்மாளே மாதாகோவில் மாதா என்றும் அழைப்பார். தமக்கு மிகவும் நெருக்கமான அமெரிக்க நண்பர்கள் வீட்டில் உண்ணும் போது ஸ்பூனே உபயோகிக்காமல் விரலாலேயே எடுத்துச் சாப்பிடு வார். அது அவர்களுக்கு அதிசயமாகவும், சற்றே அருவருப் பாகவும்கூட இருக்கும். ஆனல் சுவாமிஜியோ 'அப்படிச் சாப்பிட் டால்தான் ருசிக்கிறது' என்பார். ஸ்வாதீனமாகப் பல சிநேகிதர் களின் அடுக்களேக்குச் சென்று தமக்கு வேண்டிய உணவுவகை களேத் தாமே சமைத்துக்கொள்வார். சென்னேயில் அவருக்குக் கிடைத்திருந்த அன்புமயமான சிஷ்யர்கள் அனுப்பியிருந்த 'சட்னி' யை மறவாமல் சேர்த்துக்கொண்டு உண்பார். காரம் பற்றி எரிகிற உணவுகளேச் சாப்பிட்டுத் தமது குடல் அவஸ்தை பட்டா லும் ''ஸ்வஸ்தமாக இருக்கிறது'' என்பார். அதோடு காரமே சேர்க்காத அமெரிக்கர்களுக்கும் அவற்றைப் பரிமாறிச் சாப்பிடச் செய்து கண்ணில் ஜலத்தை வரவழைத்துவிடுவார் !

அமெரிக்க நடைமுறைக்கு விரோதமாக விரலே உபயோகித்து உண்பதுபோலவே அவர் அடிக்கடி கழுத்துப்பட்டையையும், கால் பூட்ஸையும் உதறி எறிந்துவிட்டு விச்ராந்தியாக செய்தித்தாள்

Koviloor Digital Library

களைப் படிப்பார். புத்தகங்களை முன்அட்டையிலிருந்து பின் அட்டைவரை படிக்கும் அவர் செய்தித்தாள்களைமட்டும் பொறுமையாகப் படிக்கமாட்டார். தலைப்புக்களைமட்டுமே பார்த்துப் பக்கங்களைப் புரட்டிவிடுவார்.

அநாவசியமான மரியாதை முறைகளை எல்லாம் பின்பற்றமாட்டார். சில சமயங்களில் சிறுவிஷயங்களில்கூடத் தாம் சொன்னதே நடக்கவேண்டும் என்று பிடிவாதம் பிடிப்பார். 'வெண்கலக் கடையில் யானை புகுந்தாற்போல்' என்று நாம் சொல்கிறோம். 'பீங்கான் கடையில் காளைபோல்' என்று இதையே ஆங்கிலத்தில் சொல்வார்கள். சுவாமிஜி தமது வீட்டில் இப்படித்தான் 'லூட்டி' அடித்தார் என்கிறாள் ஓர் அமெரிக்க மாது.

இப்படிச் செய்கிறவரே அமெரிக்கப் பழக்கவழக்கங்களைக் குழந்தைபோலக் கேட்டறிந்து பின்பற்றுவதும் உண்டு. 'மாடியில் ஏறும்போது பெண்களை முன்னால் செல்ல அனுமதிக்க வேண்டுமா, நாமே முதலில் செல்லலாமா?' என்பதுபோன்ற விஷயங்களைக் கூடக் கேட்டறிவார். தாம் அமெரிக்க வழக்கங்களை அறியாததால் ஏதாவது தப்புச்செய்தால் பொருட்படுத்தாமலிருக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொள்வார்.

வேடிக்கை விநோதமாய் பொழுதைக் கழிக்கும்போதே அவர் திடீரென ஒரு சொற்றொடரால் கேட்பவர்களுடைய இதயத்தை உலுக்கிய சந்தர்ப்பங்களும் பல உண்டு. சுவாமிஜியுடன் வாதம் புரிந்த ஒருவர் அதன்பின் மூன்று நாட்களுக்குப் படுக்கையை விட்டே எழுந்திருக்க முடியாதபடி கிடந்தார் என்று ஓர் அமெரிக்க சிஷ்யர் எழுதியிருக்கிறார். 'இனிமையும் பேராற்றலும் ஒருங்கே இணைந்தவர்; குழந்தையும் ஞானியும் ஒன்றாகப் பிணைந்தவர்" என்று மற்றொருவர் கூறுகிறார்.

சுவாமிஜி அமெரிக்காவிலேயே இருக்கவேண்டியது எதிர் பிரசாரத்தினால்தான் மிகவும் அவசியமாயிருந்தது. சுவாமிஜியைக் குறித்து கிறிஸ்துவப் பிரசாரகர் செய்துள்ள விஷமப் பிரசாரங்கள் 1896-ம் ஆண்டு வாக்கில் ஒருவாறு மங்கியேவிட்டன. இச் சமயத்தில், அவரை பிரபலமான மிஷன் எதுவும் என்றுமே எதிர்க்கவில்லை என்பதையும் நாம் நினைவுகொண்டு அவற்றைப் பாராட்டவேண்டும்.

அமெரிக்காவில் பிரபல சமயத்தலைவர்கள், சமூகத்தலைவர்கள், அறிவாளிகள், தத்துவ ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள் இவர்களிடமெல்லாம் சுவாமிஜியின் செல்வாக்கு — அதாவது ஹிந்து தர்மத்தின் செல்வாக்கு — ஓங்கியது. ஹார்வர்ட் பேரா

Koviloor Digital Library

சிரியராகிய வில்லியம் ஜேம்ஸ் அவரை 'குருநாதர்' என்று அழைத்தார் என்பதிலிருந்தே அமெரிக்காவில் அவருக்கு ஆசாரிய பீடம் ஸ்திரமாகிவிட்டது என்று தெரிகிறதல்லவா? எனவே நிம்மதியான உள்ளத்துடன், ஒரு கண்டத்தையே இந்தியாவின் பால் திருப்பிவிட்ட மகோன்னத சேவையைச் சாதித்துவிட்டு இங்கிலாந்துக்குப் புறப்பட்டார் சுவாமிஜி.

Koviloor Digital Library

அத்தியாயம்—24

ஐரோப்பாவில்

லண்டனில் சுவாமிஜிக்கு ஓர் ஆனந்த அநுபவம் காத்திருந்தது. முன்பு சுவாமிஜி பணித்தபடி சாரதானந்தர் அங்குவந்து சுவாமிஜியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

பார்த்துப் பார்த்துப் பதியன்போட்ட ரோஜாத் தோட்டத்தை நீண்டநாட்கள் பாராமலிருந்து பின்னர் அது புஷ்பித்துக் குலுங்கும்போது கண்டால் எவ்வளவு உள்ள நிறைவு ஏற்படும்? சுவாமிஜி தாம் பயிர் பண்ணிய குருபாயிக்களைப் பார்த்து இப்போது எவ்வளவோ ஆண்டுகளாகிவிட்டன. அவர்களில் ஞான சாரத்தில் செழிப்பாக வளர்ந்த ரோஜாவாக இன்று சாரதானந்தரைக் கண்டதும் சுவாமிஜிக்கு நெஞ்சு நெகிழ்ந்தது. ஞானப் பூங்காவில் மற்றச் செடிகளும் புஷ்பித்துவிட்டன என்றும் ஒரு பயிர் கூட வீண்போகவில்லை என்றும் சாரதானந்தர் தெரிவித்தார். குருபாயிக்கள் இப்போது அலம்பஜார் என்ற இடத்தில் மடம் அமைத்துக்கொண்டு தூய பெருவாழ்வு வாழ்வதாக அவர் தெரிவித்தார்.

குமாரி முல்லர், ஸ்டர்டி இவர்களின் விருந்தாளியாக இரு சுவாமிகளும் ஸெயிண்ட் ஜார்ஜ் சாலையில் தங்கியிருந்தனர். அறிவுத் தேனை நாடி வண்டுகள் வரத்தொடங்கின. 1896-ம் ஆண்டு மே மாதத்தில் சுவாமிஜி வகுப்புக்கள் தொடங்கினர். ஞானயோகத்தைப்பற்றி அதிகமாக உபதேசித்தார். அம்மாதக் கடைசியிலிருந்து ஞாயிறுதோறும் பிகடில்லியிலுள்ள அரசாங்க நீர்வண்ண ஓவியர் நிலையத்தில் மூன்று உரைகள் நிகழ்த்தினர். இவை வெற்றிகரமாக நிறைவேறியதன்பேரில் மன்னர் மன்றத்தில் ஜூலை மத்திவரையில் பிரதி ஞாயிறும் உபந்நியாசங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

வாரத்தில் ஐந்து நாட்கள் வகுப்பு நடத்திவந்தார் சுவாமிஜி. வெள்ளிக்கிழமை மாலைகளில் வினா விடை வகுப்பு நடைபெறும். இதெல்லாம்போகத் தனி மனிதர் இல்லங்களிலும் சங்கங்களிலும் வேறு சொற்பொழிவுகள் ஆற்றிவந்தார் சுவாமிஜி. அன்னி பெஸண்ட் அம்மையாரின் அழைப்பை ஏற்று அவரது இல்லத்தில் பக்தி என்பது குறித்துப் பேசினர். ஸ்ரீமதி மார்டின், ஸ்ரீமதி ஹண்ட் இவர்களின் வீடுகளிலும், ஸிஸேம் சங்கம், விம்பிள்டன் ஆகிய இடங்களிலும் சுவாமிஜி பிரசங்கங்கள் புரிந்தார்.

பிரிட்டனில் சுவாமிஜி எப்படிப் பிராபல்யமடைந்து வந்தார் என்பதை எரிக் ஹாம்மாண்ட் கூறுகிறர். லண்டன் வாசிகள்

Koviloor Digital Library

யோசனையுடனும், பரபரப்பின்றியும் தான் யாரையுமே வரவேற்பது வழக்கம். அதேபோலத்தான் சுவாமிஜியையும் வரவேற்றனராம். ஆனால் கூடியவிரைவிலேயே பல கதவுகள் அவருக்காகத் திறந்துகொண்டனவாம். மாணுக்கர்கள் அவரிடம் குழுமினராம்.

சுவாமிஜியின் பிரசங்கமொன்றில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை ஹாம்மாண்ட் கூறுகிறார். இங்கிலாந்தில் வயது முதிர்ந்த தத்துவ ஆராய்ச்சியாளர் ஒருவர் சுவாமிஜியிடம், ''உங்கள் பேச்சு அற்புதமாகத்தான் இருக்கிறது. ஆனால் நீங்கள் புதிதாக எதுவும் சொல்லவில்லையே'' என்றார். சுவாமிஜி உடனே தமது சங்கித சாரீரத்தில், ''ஐயா, நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொன்னேன். அந்தச் சத்தியமானது மலைகளைப்போலப் புராதனமானது; மனிதகுலம் எவ்வளவு தொன்மையானதோ அவ்வளவு தொன்மையானது; சிருஷ்டி தொடங்கி எவ்வளவு காலம் ஆகிறதோ அவ்வளவு காலமாக உள்ளது; ஆண்டவனுக்கு எவ்வளவு பிராயமோ அவ்வளவு பிராயமானது இந்தச் சத்தியம். இந்தச் சத்தியத்தைப்பற்றி நீங்கள் சிந்திக்குமாறு நான் பேசியிருந்தேனாயின், அந்தச் சிந்தனைக்கேற்ப நீங்கள் வாழுமாறு நான் பேசியிருந்தேனாயின், தெரிந்த விஷயத்தையே நான் பேசியது சரிதானே?'' என்று கேட்டார். சபையில் எழுந்த கரகோஷமே அவருக்கு விடைகூறிற்று.

மாதாகோவில் உபதேசங்களைக் கேட்டுத்தான் அலுத்துப் போனதாகவும், சுவாமிஜியின் உரைகளில் உயிரைக் கண்டதாகவும் ஓர் ஆங்கிலப் பெண்மணி அப்போது கூறினாள்.

''இந்த உயிருள்ள சத்தியத்தை நான் எப்படி அடைந்தேன் என்பதைச் சொல்கிறேன்'' என்று தொடங்கிய சுவாமிஜி சத்தியமூர்த்தமாகிய பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பற்றிப் பேசலானார். உன்னதமும், எளிமையும், தெய்விகமும், மனிதப் பண்பும் ஒருங்கே கூடியிருந்த பரமஹம்ஸர் எப்படிச் சத்திய தரிசனம்பெற்று, பிறருக்கும் தரிசனம் செய்வித்தார் என்பதையெல்லாம் அந்த ஆங்கிலேயர்கள் கேட்டுப் பரவசமானார்கள். பல மதாநுஷ்டானங்களாலும் சத்தியத்தை அடைந்து, தாமே அந்தச் சத்தியமாகி, 'நான் எங்கு இருக்கிறேனோ, அங்கு சத்தியம் உள்ளது' என்று அவர் பிரகடனம் செய்ததை அறிந்து புளகமடைந்தார்கள். ''நான் சத்தியத்தை எப்படிக் கண்டேனென்றால், அது எப்போதுமே என் இதயத்தில் இருந்துவந்ததால் கண்டேன் சத்தியத்தை இந்த மதத்திலோ அந்த மதத்திலோ காணலாம் என எண்ணாதீர்கள்! அது உங்களுக்குள்ளேயே இருக்கிறது. உங்கள் மதம் அதை உங்களுக்கு அளிக்காது.

Koviloor Digital Library

நீங்கள்தான் அதை உங்கள் மதத்துக்கு அளிக்கவேண்டும்'' என்ருர் சுவாமிஜி.

அவரன்றி வேறு யார் அப்படிச் பேச முடியும்?

ஆனல் அவரோ தம் இங்கிலாந்து வாசத்தின்போது சொன்ருர் — தாம் எதுவுமே பேசவில்லை, என்று. ''நாஞகச் சொல்வதற்கு ஒரு சிறு வார்த்தைகூடக் கிடையாது. நாஞக விரித்துரைப்பதற்குக் கடுகளவு சிந்தனைகூட எனக்குக் கிடையாது''. என்ருர். அவர் எதுவாக இருந்தாரோ, இருக்கிருரோ, இருக்கப் போகிருரோ அதவ்வளவும் ஸ்ரீராமகிருஷ்ணரிடமிருந்தே உண்டானவை என்று உணர்ச்சியுடன் வெளியிட்டார். ''அப்படிப்பட்ட என் குருநாதரின் தரிசனத்தை ஒரு க்ஷணகாலம் இந்த உலகுக்கு நான் காட்ட முடியுமானுல் நான் வாழ்ந்ததெல்லாம் வீணுகாது'' என்று அந்தரங்க சுத்தத்துடன் கூறினுர்.

இந்தச் சம்பவத்தைக் கூறும் மேல்நாட்டுச் சீடர்கள் ''உண்மையான சிஷ்யனெருவனே உண்மையான ஆசாரியனுக முடியும்'' என்கிருர்கள்.

அதற்குமேல் சொல்ல என்ன இருக்கிறது?

சுவாமிஜி வினுவிடை வகுப்பொன்று நடத்துவார் என்று கூறியிருக்கிருேமல்லவா? இந்த வகுப்பில் ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ஒரு விஷமி, ''பாபூ, பாபூன் என்பனவற்றுக்குள் என்ன வித்தியாசம்?'' என்று சிலேடை செய்தான்.

பாபூ என்பது வங்காளத்தில் 'ஐயா' என்பதுபோல். பாபூன் என்பது வானரவகையைச் சேரும்.

சுவாமிஜி அமைதியாக: ''ஒரெழுத்துத்தான் வித்தியாசம் — ஸாட் என்பதற்கும் ஸ்காட் என்பதற்கும் உள்ளதுபோல்'' என்ருர்.

ஸாட் என்ருல் முட்டாள்; ஸ்காட் என்ருல் ஸ்காட்லாந்து வாசி.

* * *

ஆக்ஸ்ஃபர்ட் சர்வகலாசாலையில் பேராசிரியராக இருந்தவரும், கியாதிவாய்ந்த சம்ஸ்கிருத நிபுணருமாகிய மாக்ஸ்முல்லர் இந்தியராகப் பிறக்காமல் ஆங்கிலேயராகப் பிறந்தது இயற்கையின் ஒரு தவறுதலினுல் என்றே சொல்லலாம். பாரதப் பண்பில் அப்படிப்பட்ட ஒரு பிடிப்பு அவருக்கு! கேசவ சந்திரஸேனரின் ஆத்மிகத்துடிப்பையும், சொற்பெருக்கையும் கண்டு அவரிடம் மாக்ஸ்முல்லர் தொடர்புகொண்டிருந்த நாட்களில் அவர்மூலமாக. தக்ஷிணேசுவரத்துத் தபோநிதியைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தார். அந்த அதிசய புருஷரின் பிரபாவங்களைப் பல இந்தியர்களிட

Koviloor Digital Library

மிருந்து கேட்டறிந்து அவரிடம் பக்திபூண்டு ஒழுகினுர் மாக்ஸ் முல்லர். 'பத்தொன்பதாம் நூற்ருண்டு' என்ற பத்திரிகையில் ஸ்ரீராமகிருஷ்ணரைப்பற்றி ''ஓர் உண்மை மஹாத்மா'' என்று ஒரு வியாஸம்கூட எழுதியிருந்தார் மாக்ஸ்முல்லர்.

ஸ்ரீராமகிருஷ்ணர் என்பதை ஆத்மிகத்துக்கு மறுபெயராக மதித்து, அவருடன் தொடர்புள்ளவற்றையெல்லாம் புனிதமாகப் போற்றிவந்த மாக்ஸ்முல்லர் பரமஹம்ஸரின் பரமசிஷ்யரான சுவாமிஜியைக் காணத் தவறுவாரா ?

மே மாதம் 28-ந் தேதி மாக்ஸ் முல்லரைக் காணச் சென்ருர் ஸ்ரீவிவேகானந்தர்.

ரமணீயமான நந்தவனத்திடையே கச்சிதமான சின்னஞ்சிறு வீடு. வெள்ளியென நரை ஓடிய முடியும், சாந்திபூத்த முகமும், எழுபது வேனில்களைக் கண்டும் வாடாமல் குழந்தையின் மென்மையுடன்கூடிய நெற்றியும், உள்ளே எங்கோ இருக்கிற ஆத்மிகச் சுரங்கத்தைத் தெரிவிக்கும் ரேகைகள் படர்ந்த முகமுமாக மாக்ஸ் முல்லர் சுவாமிஜியை வரவேற்ருர் — இதவ்வளவும் சுவாமிஜியின் வர்ணனையே. மாக்ஸ் முல்லரையும், கண்ணியம்வாய்ந்த அவரது மனைவியையும் கண்டவுடன் தாம் இந்தியாவுக்கே வந்துவிட்டது போலவும் அருந்ததியும் வஸிஷ்டரும் போன்ற திவ்விய தம்பதிகளும், பிரம்மரிஷிகளும், ராஜரிஷிகளும், வானப் பிரஸ்தர்களும் வாழ்ந்த காலத்துக்குச் சென்றுவிட்டது போலவும் உணர்ந்தார் சுவாமிஜி.

ஸ்ரீராமகிருஷ்ணரின் அன்பைப் பெற்றவர் இவர் என்பதால் இவரிடம் அவருக்கு உள்ளார்ந்த அன்பு; ஸ்ரீராமகிருஷ்ணரை மதிக்கத் தெரிந்தவர் அவர் என்பதால் அவரிடம் இவருக்கு உள் ஆர்ந்த மதிப்பு.

''பேராசிரியர் அவர்களே ! இன்று ஸ்ரீராமகிருஷ்ணரை ஆயிரக்கணக்கானவர்கள் வழிபடுகிருர்கள்'' என்ருர் சுவாமிஜி.

''அவரன்றி வழிபாடு பெறக்கூடியவர் வேறுயாருண்டு ?'' என்று பதிலுக்கு வினவினுர் 'அப்பாலும் அடிசார்ந்த' அந்த அடியார்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் மகிமையைப் பரப்ப சுவாமிஜி என்ன செய்திருக்கிருர் என்று கேட்டார் மாக்ஸ் முல்லர். அவரது சரிதத்தையும் உபதேசத்தையும் பரப்பவேண்டுமென்று தமக்குள்ள ஆர்வத்தைக் கூறி, தமக்கு விவரங்கள் தரக்கூடிய ஒருவரை உதவுமாறு சுவாமிஜியிடம் கேட்டுக்கொண்டார். சுவாமிஜி சாரதானந்தரை இப்பணியில் ஈடுபடுத்தினுர்.

''ஏன் சுவாமிஜி, தாங்களே இந்தச் சேவையில் இறங்கவில்லை ?'' என்று கேட்டார் சாரதானந்தர்.

Koviloor Digital Library

அப்போது சுவாமிஜி தமது உணர்ச்சியெல்லாம் விம்மிப் புடைத்தெழக் கூறினர்: ''குருமஹராஜைக் குறித்து எனக்கு உள்ள உணர்வு மிக மிக ஆழ்ந்தது. இதனுலேயே என்னல் பொது உலகுக்கு அவரைப்பற்றி எழுத இயலாது. நான் மாக்ஸ் முல்லர் விரும்பிய கட்டுரையை எழுதினேனுயின், கிறிஸ்துவ சமய நூல்கள் உள்படத் தத்துவ சாஸ்திரங்கள் மூலமும், பிரமாண மத கிரந் தங்கள் மூலமும் ஸ்ரீராமகிருஷ்ணரே உலகில் இதுவரை பிறந்த எல்லா ஞானிகளிலும் தலைசிறந்தவர் என்று நிருபிப்பேன். அதை ஏற்க அந்த முதியவருக்கு (மாக்ஸ் முல்லர்) சிரமமாயிருக்கும். நீங்கள் குருமஹராஜைக் குறித்து என்னைப்போல் ஆழ்ந்து நினைத்த தில்லை. எனவே மாக்ஸ் முல்லருக்குத் திருப்தி அளிக்கும் விதத்தில் உங்களால் எழுதமுடியும்''.

ஸ்ரீராமகிருஷ்ணரின் சரிதத்திலுள்ள அற்புதங்களை நீக்கியும், அவர் தெய்வத்தின் அவதாரம் என்ற கருத்தை நீக்கியும் அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதவேண்டுமென முன்பு ஒரு சமயம் சுவாமிஜி எழுதி நாம் படித்ததுண்டு. ஆனல் அது தம்மால் முடிகிற காரியமில்லை என்றே அவர் எண்ணினுர். ஏனெனில் உண்மையிலேயே ஸ்ரீராமகிருஷ்ணர் அற்புதங்கள் சூழ வாழ்ந் தவர்; உண்மையிலேயே அவர் ஓர் அவதார புருஷர். சுவாமிஜி கண்ட அளவுக்கு மற்றயாரும் பரமஹம்ஸரின் ஆழத்தைக் கண் டிருக்கமாட்டார்கள் என்பது மெய்தான். என்ருலும் அவரைச் சிறிது அறிந்தவர்களும் அவருடைய தெய்வத் தன்மையை உணர்ந்தவர்களே. அந்தத் தெய்வத்தன்மையை மறைத்தெழுது மளவுக்கு யாரால் தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ள இயலும்?

மாக்ஸ் முல்லர் சுவாமிஜியை ஆக்ஸ்ஃபர்ட்டின் பல கல்லூரி களுக்கும், நூல் நிலையத்துக்கும் அழைத்துச் சென்றுர். ரயில் நிலையம் வரையில் சுவாமிஜியைப் பின்தொடர்ந்தார்.

''எனக்காக இவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்கிறீர்களே!'' என்றுர் சுவாமிஜி.

''நன்றுகச் சொன்னீர்கள். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் சிஷ்யரொருவரைக் காண்பது என்பது தினப்படி கிடைக்கிற விஷயமல்லவே!'' என்று விடையிறுத்தார் மாக்ஸ் முல்லர்.

மாக்ஸ் முல்லரைப்பற்றி இவ்வாறு எழுதினுர் சுவாமிஜி: அவரை நான் பன்மொழி இயல் புலவராகவோ, கல்விமானுகவோ காணவில்லை. தினந்தோறும் பிரம்மத்துடன் அத்வைதத்தை அநுபவித்த ஓர் ஆத்மாவாகவே — ஒவ்வொருகணமும் பிரபஞ்சத் துடன் லயிப்பதற்காக விம்மிவிரியும் இதயமாகவே — நான் அவரைக் கண்டேன்.

Koviloor Digital Library

''இந்தியாவிடம்தான் அவருக்கு எத்தகைய அன்பு! அதில் நூற்றில் ஒரு பங்கு எனக்கு என் தாய்நாட்டின்மீது இராதா என ஆசைப்படுகிறேன் அவர் வேதாந்திகளில் ஒரு வேதாந்தி.' 'நீங்கள் எப்போது இந்தியாவுக்கு வரப்போகிறீர்கள்?'... என்று கேட்டேன். வயதுமுதிர்ந்த அந்த முனிவரின் முகத்தில் ஒரு பிரகாசம் தோன்றியது. அவர் கண்களில் ஏறக்குறைய ஒரு துளி உருண்டுவிட்டது. தலையை மெதுவாக அசைத்தார் அவர். மெல்ல மெல்ல, 'இந்தியாவுக்கு வந்தால் நான் இந்த நாட்டுக்குத் திரும்பமாட்டேன். என்னை அங்கேயேதான் நீங்கள் அடக்கம் செய்யவேண்டியதாயிருக்கும்' என்றார்.''

பிற்பாடு சாரதானந்தர் அளித்த குறிப்புக்களுடன் மாக்ஸ் முல்லர் 'ஸ்ரீராமகிருஷ்ணர்: அவரது வாழ்வும் உபதேசங்களும்' என்ற நூலை எழுதினர். சுவாமிஜியின் பணி ஆங்கில உலகில் பதிய இந்நூல் பேருதவி புரிந்தது.

'மோக்ஷ மூலர்' என்று போற்றப்படும் மாக்ஸ் முல்லரைப் பாரதம் என்றும் மறவாது.

* * *

ஒரு நாள் குமாரி முல்லருடனும், ஆங்கிலேய நண்பர் இன்னெருவருடனும் சுவாமிஜி வயல்களின் வழியாக நடந்து சென்றுகொண்டிருந்தார்.

அப்போது திடீரென ஒரு வெறிகொண்ட காளைமாடு அவர்களை நோக்கிக் கனவேகமாகப் பாய்ந்துவந்தது.

ஆங்கிலேய நண்பர் அருகிலிருந்த குன்று ஒன்றின் பின்புறத்தில்போய் மறைந்து கொண்டார். குமாரி முல்லரும் ஓடினாள். ஆனுல் பயப்பிராந்தியில் ஒரேயடியாகத் தளர்ந்துபோய் சிறிது தூரம் சென்றவுடனேயே தரையில் சாய்ந்துவிட்டாள்.

மாடானுல் அவளை நெருங்கிக்கொண்டே வந்தது. பார்த்தார் சுவாமிஜி. யோசித்தார். க்ஷணகாலம்தான் யோசிக்க வேண்டியிருந்தது. தமது உயிரைப் பணயம் வைக்க அந்தத் தியாகமூர்த்திக்கு அதற்குமேல் பொழுது தேவையாக இருக்கவில்லை. குமாரி முல்லருக்கு முன்னுல் குதித்தோடினுர் சுவாமிஜி. அவளுக்கும் காளைமாட்டுக்கும் மத்தியில் கண்மூடிக் கரம்குவித்தபடி நின்றுவிட்டார்.

'ஏன் அந்தப் பொல்லாத மாடு இன்னும் தம்மை முட்டவில்லை?' மரணத்தைப்பற்றிச் சிறிதுகூடக் கவலைப்படவில்லை சுவாமிஜி. அவருடைய அறிவு ஒரு கணக்கைப் போட்டுக்கொண்டிருந்தது. இத்தனைவேகத்தில் வருகிற இத்தனை எடை

Koviloor Digital Library

யுள்ள இந்த மாடு தம்மைக் கெந்தி எறிந்தால் தமது உடல் எவ்வளவு அடிகள் தள்ளிவிழும் என்று வேடிக்கையாகக் கணிக்க வானுர் சுவாமிஜி.

சுவாமிஜி கண்களைத்திறந்தார்.

அந்தப் பொல்லாத மாடு — அல்ல, பொல்லாத்தனமே இல்லாத அந்த நல்லமாடு — ஏனே அவருக்கருகில் வந்ததும் தனது சண்டமாருத வேகத்தை கட்டுப்படுத்திக்கொண்டுவிட்டது. தலையைத் தூக்கி அவரையே பச்சாத்தாபத்துடன் பார்த்தது. பிறகு தூக்கிய அந்தத் தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டு வந்தவழியே திரும்பிச் சென்றுவிட்டது !

இன்னும் ஒரு சில ஆண்டுகளுக்கு அவர் இந்தப் புவியில் இருக்கவேண்டுமென்பது புவனேசுவரியின் திருஉள்ளம் அல்லவா ?

''அதெப்படி உங்களால் அப்படிக் குன்றுத நெஞ்சுரத்துடன் தியாகத்தில் முனைந்து நிற்கமுடிந்தது ?'' என்று கேட்டார்கள் குமாரி முல்லரும், உடன்வந்த அந்த இன்னெருவரும்.

''எனக்கே தெரியவில்லை. என் வாலிபப் பருவத்தில் இப்படி தான் ஒரு சம்பவம் கல்கத்தாவில் நடைபெற்றது. வண்டியில் பூட்டப்பட்டிருந்த குதிரை தறிகெட்டு ஓடிக்கொண்டிருந்தது. பெண்மணி ஒருத்திமட்டுமே அதில் அமர்ந்திருந்தார். குதிரையின் சண்டித்தனத்திற்கு ஈடுகொடுக்க மாட்டாமல் வண்டியோட்டிகூட ஓடிவிட்டான் போலிருக்கிறது. அவளுடைய கதி என்னுவது என்பதிலேயே என் எண்ணம் இருந்தது. குதிரையை நேருக்கு நேராக எதிர்த்து அதன் மூர்க்கத்தனத்தை அடக்கி அந்தப் பெண்ணை விடுவித்தேன்'' என்றுர் சுவாமிஜி.

சுவாமிஜி தாம் அமெரிக்காவைவிடப் பிரிட்டனில் சிறப்பான பணி ஆற்றுவதாகக் கருதினுர் என்று கண்டோம் அல்லவா ? இம்முறையும் பிரிட்டன் அவரது அந்தப் பாராட்டுக்கு அருகதை யாகவே நடந்துகொண்டது.

அமெரிக்க வேதாந்த சங்கத்தின் தலைவராகத் தாம் நியமித் திருந்த ஃபிரான்ஸிஸ் ஹெச். லெக்கெட்டுக்கு சுவாமிஜி எழுதி னுர்:

''பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் எவ்வளவு குறைபாடுகள் இருப் பினும் இதுவே ஒருவரின் கருத்துக்களையும் பரப்புவதற்கு மிகச் சிறந்த உபகரணமாகயிருக்கிறது. என்னுடைய கருத்துக்களை இந்தக் கருவியின் மையஸ்தானத்திலேயே புகுத்த எண்ணியிருக் கிறேன். அவை அப்போது உலகெங்கிலும் பரவும். எல்லாப் பெரும் பணிகளுமே நிதானமாகத்தான் நடக்கும். சிரமங்கள் நிறைய இருக்கின்றன. அதுவும் ஹிந்துக்களாகிய நாங்கள்

Koviloor Digital Library

ஆளப்படுகிற இனமல்லவா ? ஆனால் இந்தக் காரணத்துக்காகவே என் காரியம் நிறைவேறித்தான் ஆகவேண்டும். ஏனெனில் நசுக்கப்பட்டவர்களிடமிருந்தே எப்போதும் ஆத்மிக லக்ஷியங்கள் வெளியாகின்றன.''

இங்கிலாந்துக்கு வரும்போது ஆங்கிலேயர்கள்மீது அதிக நட்பு உணர்ச்சியில்லாதிருந்த சுவாமிஜி காலக்கிரமத்தில் அவர்களின் கண்ணியத்தைக் கண்டு அவர்களிடம் அன்புகொள்ளலானார். அவர்களின் கண்ணியத்தை சுவாமிஜி கண்டதுமட்டும் அன்புக்குக் காரணமாகாது. சுவாமிஜி எல்லாவற்றிலுமே தெய்விகத்தைக் கண்டு பிரேமைபூணும் ஓர் ஒப்பற்ற மனநிலையிலிருந்தார் அப்போது. இந்த மனநிலையைப் படம்பிடித்துக்காட்டும் கடிதமொன்றுண்டு. சுவாமி விவேகானந்தரே இந்தக் கடிதத்தில் வாழ்கிறார் என்று மேல்நாட்டுச் சீடர்கள் கூறும் விதத்தில் பிரேமையின் மகாசாஸனமாக சுவாமிஜி லெக்கெட்டுக்கு எழுதியிருந்த அந்த அமுத மடலின் அலைகளை ரசிப்போம்:

''இறுமாப்புகொண்ட ஆங்கிலோ-இந்தியன் உள்பட எல்லாரிலும் நான் தெய்விகத்தைக் காணத் தொடங்கிவிட்டேன். 'சாத்தான்' என்று ஒருவன் இருந்தால் அவனைக்கூட நேசிக்கும் நிலைக்கு நான் மெல்லச் சென்றுகொண்டிருப்பதாக எண்ணுகிறேன்.

''இருபது வயது இளைஞனாக இருந்தபோது நான் சற்றும் விட்டுக்கொடுக்காதவனாக இருந்தேன். தீமை என்று எண்ணியவற்றிடம் சிறிதும் அநுதாபம் காட்டாமல் தீவிரமாக இருந்தேன். கல்கத்தா சாலைகளில் நாடக மன்றங்கள் உள்ள பக்கத்தில் கூட நான் நடக்கமாட்டேன். அதே நான், இப்போது முப்பத்து மூன்றாவது வயதில் தாஸிகள் வசிக்கும் ஒரு விடுதியில், அவர்களைப்பற்றிப் பழியாக ஒரு வார்த்தை நினையாமல், உடன் வாழக்கூடியவனாக இருக்கிறேன். அப்படியானால் நான் தாழ்ந்து போய்விட்டேன் என்று அர்த்தமா ? அல்லது சாக்ஷாத் பிரபுவின் வடிவமாகிய பிரபஞ்ச அன்பு என்பதில் என்னை நான் விஸ்தரித்துக் கொள்கிறேனா ? சுற்றியுள்ள தீமையைத் தீமையாகக் காணவிட்டால் நல்லது செய்யமுடியாது; எல்லாம் விதிவசமாக நடக்கும் என்ற பாவத்திலேயே இது முடியும் என்று சொல்கிறார்கள். ஆனால் நான் அப்படி எண்ணவில்லை. மாறாக இப்போது தான் வேலை செய்கிற ஆற்றல் என்னிடம் அபரிமிதமாகப் பெருகியுள்ளது, அளவிடமுடியாத பலனுடையதாகவும் அது இருக்கிறது. சில நாட்களில் நான் ஒருவித பரவசநிலையை அடைந்துவிடுகிறேன். எல்லாரையும், எல்லாவற்றையும் நான் அநுக்கிரகிக்கவேண்டும்

Koviloor Digital Library

என்று ஆர்வம் கொள்கிறேன். நான் பிறந்த தினத்தை வாழ்த்துகிறேன். இங்கு — இந்த மண்ணுலகில் — நான் எத்தனையோ அன்பையும், தயையையும் பெற்றுவிட்டேன். பூரணப் பிரேமையாகிய எது என்னை இங்கு படைத்ததோ, அது என்னுடைய நல்லகாரியங்கள், கெட்டகாரியங்கள் சகலத்தையும் ரக்ஷித்திருக்கிறது. நான் என்பது என்ன? எப்போதுமே அவனுடைய கையிலுள்ள ஒரு கருவி என்பதைத் தவிர நான் யார்? அவனுடைய பணிக்காகத்தானே நான் எனது சகலத்தையும் — என் அன்பு மனிதர்கள், என் இன்பத்தை, என் வாழ்வை — நீத்துவிட்டேன்? அவன் என்னோடு விளையாடுகிற அன்பன். நான் அவனுடைய விளையாட்டுத் தோழன். இந்தச் சராசரத்தில் அர்த்தமோ, அறிவோ எதுவும் கிடையாது. எந்த அறிவால் அவனைக் கட்டமுடியும்? லீலை செய்கிற அவனொருவனே இத்தனை கண்ணீரையும் கொட்டி, சிரிப்புக்களை மலர்த்தி விளையாடுகிறான். இது ஒரு வேடிக்கையான உலகம். இதில் நிரம்பவும் வேடிக்கையானவன் அவனே.

'ஆதி அந்தமற்ற அன்பனாகிய அவனைவிட வேடிக்கையை நீங்கள் காணமுடியாது. தமாஷ்தான்; இல்லை? சகோதரத்துவம், அல்லது விளையாட்டுத் தோழமை — இந்தப்பரந்த மைதானமாகிய உலகத்தில் விளையாடுவதற்காக விடப்பட்ட கும்மாளக் குழந்தைகளின் சங்கம் அல்லவா? இதில் யாரைப் புகழ்வது? யாரைப் பழிப்பது? எல்லாம் அவனது லீலையல்லவா? விளக்கம் வேண்டும் என்கிறார்கள். ஆனால் அவனை எப்படி விளக்க இயலும்? அவனுக்குப் புத்திகிடையாது. அவனுக்கு அறிவு முறைகளும் கிடையாது. நமக்குச் சின்னஞ்சிறு புத்தியையும் அறிவு முறைகளையும் தந்து அவன் நம்மை முட்டாளாக்குகிறான். ஆனால் இப்போது நான் முட்டாளாகமாட்டேன். இனி என்னைத் தூங்குமூஞ்சியாக அவன் காணமாட்டான்.

''ஏதோ ஓரிரு விஷயங்கள் கற்றிருக்கிறேன்: அறிவுக்கும் படிப்புக்கும் பேச்சுக்கும் அப்பால் — அப்பாலுக்கும் அப்பால் 'அன்பு' என்ற உணர்ச்சியும் 'அன்பன்' என்ற உணர்ச்சியும் இருக்கின்றன. தோழா, வா. கிண்ணத்தை நிரப்பு; நாம் போதை கொள்வோம்.''

அன்புக் கிண்ணத்தை வழிய வழிய நிரப்பி உட்கொண்டு தெய்வ போதை பெறத் துடித்தார் சுவாமிஜி.

இந்த அன்பு எந்த நாட்டைத்தான் வெல்லாது போகும்? பேரறிஞர்களும், கிறிஸ்துவ சமயத்தலைவர்களும்கூட சுவாமிஜியின் பிரேமை மந்திரத்துக்குக் கட்டுப்படலாயினர். ஸ்தாபனரீதியில்

Koviloor Digital Library

பிரிட்டனில் சுவாமிஜி இயக்கத்தை அமைக்கவில்லை எனினும் தத்துவத்தின் உயிரை அங்கு பாய்ச்சிவிட்டார். 'நான் ஸ்தாபகன் அல்ல; போதகனே' என்று சுவாமிஜியே சொல்லிக்கொண்டதுண்டு.

* * *

முன்பு சுவாமிஜி லண்டனுக்கு வந்திருந்தபோதே மார்கரெட் நோபிள், ஈ. டி. ஸ்டர்டி, குமாரி முல்லர் உள்படப் பல அத்யந்த சிஷ்யர்களைப் பெற்றிருந்தார். இம்முறை ஸேவியர் தம்பதியரைத் தமது பேரன்புச் சீடர்களாகப் பெற்றார். 'சீடர்களாக' என்று மட்டும் சொன்னால் போதாது. அவர்களைத் தமது தாய் தந்தையர் போலவும் கருதினர் சுவாமிஜி. அதேபோல் அவர்களும் சுவாமிஜியை ஆசாரியனாகக் கண்டபோதே தங்கள் பிள்ளை போலவும் பாவித்தனர். காப்டனாக இருந்து ஓய்வுபெற்றிருந்த ஸேவியர் நீண்டகாலம் இந்தியாவில் பணியாற்றியிருந்தவர். ஸேவியர் உண்மையான ஆத்மிகத்துக்கு அருட்தாகம் கொண்டிருந்தார். எந்த மதமும் அவர்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. இச்சமயத்தில்தான் சுவாமிஜியின் உரையொன்றைக் கேட்டவுடன் அவ்விருவரும் ஒரேபோல், 'இந்த மனிதர்தான் நாம் தேடியவர்; இந்தத் தத்துவம்தான் நாம் தேடியது' என்று உணர்ந்தனர். உடனே தங்களை அவருக்குப் பரிபூரணமாக அர்ப்பணித்துக் கொண்டுவிடவேண்டும் என்ற துடிப்பு இருவருக்கும் ஏற்பட்டது.

''நான் சுவாமிஜியின் சீடனாவதற்கு அனுமதிப்பாயா?'' என்று தமது மனைவியைக் கேட்டார் ஸேவியர்.

''ஓ'' என்ற ஸ்ரீமதி ஸேவியர், ''நான் சுவாமிஜியின் சிஷ்யை ஆவதற்கு அநுமதிப்பீர்களா?'' என்று திரும்பக் கேட்டாள்.

''நிச்சயமாகச் சொல்வதற்கில்லை'' என்று அன்புச் சிரிப்போடு கூறினர் அவளுடைய பதி.

கணவன்-மனைவி உறவுபோய் சுவாமிஜியின் சீடர்கள் என்பதாகப் புது உறவை அவர்கள் தொடங்கினர். ஸ்ரீமதி ஸேவியரை சுவாமிஜி முதன்முறை கண்டவுடனே ''அம்மா'' என்று அழைத்தாரெனில் அவர்களின் பக்குவத்தை ஊகிக்கலாம்.

''நீங்கள் இந்தியாவுக்கு வர விரும்புகிறீர்கள் அல்லவா? உங்களுக்கு நான் என்னுடைய தலைசிறந்த அநுபவங்களைத் தருகிறேன்'' என்றார் சுவாமிஜி ஸ்ரீமதி ஸேவியரிடம்.

பிற்பாடு ஹிமாலயத்தின் மடியில் மாயாவதி என்ற ரமணீயமான இடத்தில் மாயையை மடிப்பதற்காக எழும்பிய அத்வைத ஆசிரமத்தில் இந்த ஆங்கிலேய தம்பதி ஆத்மிகம் பரப்பினர்.

Koviloor Digital Library

அந்த ஆசிரமம் எழும்ப அவர்களது தயாளமே காரணமாக இருந்தது.

ஜூன் மாதத்தில் சுவாமிஜி தமது அமெரிக்கப் பணியைத் தொடர்வதற்காக சுவாமி சாரதானந்தரை அங்கு அனுப்பிவைத்தார். எழுத்தர் குட்வினும் உடன் சென்றார்.

உழைத்துக் களைத்த சுவாமிஜிக்கு இடம் மாறியிருக்க எண்ணம் ஏற்பட்டது. இச்சமயத்தில் அவர்களுடைய நண்பர்களின் அழைப்பும் கிடைத்ததால் ஐரோப்பாக்கண்டத்தில் இதர நாடுகள் சிலவற்றுக்குச் செல்லத் தயாரானர் சுவாமிஜி. ஸேவியர் தம்பதி, குமாரி முல்லர் ஆகியோர் உடன்செல்வதாக ஏற்பாடாயிற்று.

ஜூலை மாதப் பிற்பகுதியில் பயணம் தொடங்கிற்று. கொந்தளிப்புக்குப் பேர்போன ஆங்கிலக் கால்வாய்கூட அப்போது அடங்கி அமைதியாக இருந்தது. பாரிஸ் வழியாக சுவாமிஜியும் சிடர்களும் அழகுக் களஞ்சியமான ஸ்விட்ஜர்லாந்தில் ஜினிவாவை அடைந்தனர்.

ஜினிவாவின் நீர் நிலைகளில் மனம்கொண்டமட்டும் ஸ்நானம் செய்து புத்துணர்ச்சி பெற்றார் சுவாமிஜி. அங்கு தங்கியிருந்த மூன்று நாட்களில் சில்லான் கோட்டையைக் கண்டு மகிழ்ந்தார்.

ஜினிவாவிலிருந்து நாற்பது மைலிலுள்ள சாமூனிக்ஸில் சுவாமிஜி மாண்ட் ப்ளாங் தொடர்களில் ஏற ஆர்வம் கொண்டார். ஆனல் பனிமலையின் செங்குத்தான பாறைகள் கடக்க எளிதானவை அல்ல என்று டெலிஸ்கோப்பின் மூலம் கண்டார். என்றுலும் 'க்ளேஸியர்' எனப்படும் நகரும் பனிப்பாறையின் மிதேனும் சஞ்சரிக்க அவர் விரும்பினர். கோவேறு கழுதைகளின் மீது பயணம்செய்து அவ்வாறு ஒரு நகரும் பனிக்குன்றை அடைந்தனர். பயங்கரமான அந்தப் பாறைகளில் செல்லும்போது சுவாமிஜிக்கு முதன்முறையாக தலைச்சுற்றல் மயக்கம் கண்டது. எதிர்பார்த்த அளவுக்கு ரம்மியமாக இந்த மலைப்பிரயாணம் நடைபெறவில்லை. என்றுலும் சுவாமிஜி அந்தச் சூழலில் ஹிமாலயத்தின் நினைவையும், அங்குள்ள மக்களில் ஹிமாலய மக்களின் நினைவையும் பெற்று அதில் ஒரு சாந்தி கண்டார்.

''மலைப்பாங்கான பகுதியொன்றில் மடமொன்று அமைக்க விரும்புகிறேன் என் உழைப்புக்கெல்லாம் முடிவுகட்டிவிட்டு அங்கு அமைதியாக ஓய்வுபெற விரும்புகிறேன். என் கிழக்கத்திய, மேற்கத்திய சிஷ்யர்களுக்கெல்லாம் அங்கு பயிற்சி அளிப்பேன். கிழக்கத்திய சிஷ்யர்கள் மேல்நாடு சென்று வேதாந்தப் பிரசாரம் செய்வார்கள். மேல்நாட்டுச் சிஷ்யர்கள் இந்தியாவின் ஏவலுக்காகத் தங்கள் வாழ்வை அர்ப்பணிப்பார்கள்'' என்றுர் சுவாமிஜி.

Koviloor Digital Library

ஐரோப்பாவின் மலைவாசஸ்தலங்களில் மிகவும் உயர்ந்த லிட்டில் ஸெயிண்ட் பெர்னார்டை அதன்பின் அடைந்தார் சுவாமிஜி. அங்கிருந்து மாக்ஸ் முல்லர் குறிப்பிட்டிருந்த ஒரு கிராமத்தை அடைந்தனர். பனிமூடிய முகடுகள் நாற்புறமும் சூழ்ந்திருக்க நடுவில் எழில்கொஞ்ச அமைந்துள்ள அந்தக் கிராமத் தில் சுவாமிஜியின் உணர்வுகள் தமது உச்சத்தை அடைந்தன. உலகாயதம் சற்றும் பற்றுமல், மலைகளுக்கு நடுவில்வந்து தஞ்சம் பெற்றுத் துஞ்சிக்கொண்டிருந்த அந்த இடத்தில் சுவாமிஜியால் போதனைகூடச் செய்ய முடியவில்லை. மோனத்தில் ஆழ்ந்து தபஸ்வியாகத் தியானம் செய்யமட்டிலுமே அவரால் முடிந்தது.

இங்கு இரண்டு வாரம் தங்கியிருந்தனர் சுவாமிஜியும் அவரது சீடர்களும். இங்கு ஒரு நாள் சுவாமிஜி தியான சமாதி நிலையி லேயே தன்னந்தனியாகத் தமது சிஷ்யர்களிடமிருந்து பின்தங்கி உலவிக்கொண்டிருந்தார். செங்குத்தான விளிம்பொன்றின் அருகே வந்து விட்டார். திடீரென அவர் உலவிக்கொண்டிருந்த இடம் பிளந்துகொண்டது. சுவாமிஜி செங்குத்துச் சரிவில் வழுக்கி விழாமல் அன்று மரணத்தின்வாயிலிருந்து தப்பியது ஓர் அற்புதம் தான்! இதை அறிந்த அவரது நண்பர்கள் இனி அவரைத் தனியாக விடக்கூடாது என்று முடிவுசெய்தனர்.

காலபாசத்திலிருந்து மயிரிழையில் தப்பிய சுவாமிஜி தமது மற்றச் சீடர்களுடன் இருக்கைக்குத் திரும்பிக்கொண்டிருந்தார். அங்கே ஒரு சிறு மாதாகோவில் சாந்திபூத்துக் காட்சி அளித்தது.

ஸ்ரீமதி ஸேவியரைப் பார்த்தார் சுவாமிஜி. ''கன்னிமாதா வுக்கு என்பெயரில் புஷ்பக் காணிக்கை செலுத்திவாருங்கள். அவளும் என் சர்வேசுவரியே'' என்றார்.

சுவாமிஜி இந்தக் கிராமத்திலிருக்கும்போது, ஜெர்மனியில் கியல் பல்கலைக் கழகத்தில் தத்துவப் பேராசிரியராக இருந்த பால் தாஸனுடைய — தேவஸேனர் எனப்படுபவர் — அவசர அழைப்பினை அவர் பெற்றார். வேதாந்தத்தில் பெரும் பற்றுக் கொண்டிருந்த தாஸன் சமீபத்தில் இந்தியாவுக்குச் சென்று திரும்பி யிருந்தார். சம்ஸ்கிருதத்திலேயே சரளமாக சம்பாஷிக்கக்கூடிய ஆற்றல் பெற்றிருந்தார் அவர். வேதாந்தத்தைப் பிரத்யக்ஷமாக அநுபவத்துக்குக் கொண்டுவர உதவும் யோக சாஸ்திரம்பற்றிப் பலவிஷயங்களை அறியவே அவர் சுவாமிஜியை அழைத்ததாகத் தெரிகிறது.

சுவாமிஜி உடனேயே கியலுக்குச் செல்ல விரும்பினார் எனி னும் உடன்வந்தவர்கள் கூடியமட்டும் வழியிலுள்ள ஐரோப்பாவின்

Koviloor Digital Library

பகுதிகளில் தங்கிக்கண்டபின்னரே அங்கு செல்லலாம் எனக் கரு தினர். சுவாமிஜியும் இதற்கு இணங்கினர்.

லூஸெர்ன் என்ற சுந்தரஸ்தலத்தைச் சென்று சேர்ந்தார் சுவாமிஜி. இங்கிருந்து தமது அமெரிக்க சிஷ்யை ஸ்ரீமதி புல்லுக்கு அவர் எழுதினர்:

''வேலையை நான் தொடங்கியாயிற்று. இனி மற்றவர்கள் அதைப் பூர்த்தி செய்யட்டும். பணியைச் செய்யவேண்டும் என்பதற்காக நான் சிறிதுகாலம் பணத்தைத் தொட்டு என்னை அசுத்தமாக்கிக்கொள்ள வேண்டியதாயிற்று. இப்போது என் பங்கை நான் முடித்தாகிவிட்டது என்று நிச்சயமாக எண்ணு கிறேன். வேதாந்தத்திலோ, வேலையிலோ இனி எனக்கு ஒரு அக்கறையுமில்லை. நான் புறப்பட ஆயத்தமாகி வருகிறேன். உலகம் என்ற இந்த நரகத்துக்கு ஒருபோதும் திரும்பிவராமல் புறப்பட ஆயத்தமாகிறேன் கர்மம், பிறருக்கு நன்மை செய் வது இதெல்லாம்கூட மனத்தைத் தூய்மைப்படுத்திக்கொள்வதற் கான சிறு பயிற்சிகளே. அதை நான் வேண்டிய அளவு பயின் ருயிற்று''.

சுவாமிஜியின் உள்ளம்தான் எத்தனைவிதமாகச் சிந்தித்திருக் கிறது? உலகையெல்லாம் மோக்ஷ சாம்ராஜ்யமாக அவர் கண்ட நாளும் உண்டு. அதுவே அவருக்கு நரகமானதும் உண்டு. மக்கள் சேவைக்காக அவர் துடித்த சமயங்கள் பல. மக்களை யெல்லாம் ஒதுக்கித்தள்ளிவிட்டு மெய்ப்பொருளில் கசிவதற்கு அவர் தவித்ததுமுண்டு. சுவாமிஜியின் உபதேசங்களையெல்லாம் அவர் எந்தச் சமயத்தில், அல்லது யாரைக் குறித்து செய்தார் என்பதையும் மனத்தில் வாங்கிக்கொண்டு படிக்கவேண்டும். இல்லாவிட்டால் முரண்பாடுகள் இருப்பதாகக்கூடத் தோன்றும்.

லூஸெர்னில் ரகி என்ற கிரியில் ரயில்மார்க்கமாக ஏறி, உலகின் ஒப்பற்ற ஒரு காட்சியைக் காட்டிக்கொடுக்கும் மலை உச்சியை அடைந்தார் சுவாமிஜி குழுவினர். லூஸெர்னில் குமாரி முல்லர் விடைபெற்றுக் கொண்டாள். சுவாமிஜியும் மற்ற இரு சிடர்களும் ஜெர்மாட் என்ற இடத்தை அடைந்தனர். அங்கு கார்னர் கிராட் மலைமீதேற முயன்றதில் ஸேவியர் ஒருவரே வெற்றிகண்டார்.

ரைன் நதியின் பெருக்கு அற்புத அழகுடன் விளங்கும் ஸ்காஃப்ஹாஸெனைப் பார்த்துக்கொண்டு, ஜெர்மானிய சர்வகலா சாலைகள் நிறைந்த ஹைடல்பெர்க்கை அடைந்தனர் சுவாமிஜி குழுவினர். கோப்லென்ஸிலிருந்து ரைன் மார்க்கமாக கோலோன் சென்றனர். அங்குள்ள பெரிய மாதாகோவில் தொழுகையைக்

Koviloor Digital Library

கண்டு களித்தனர். பாரிஸுக்குச் சமமான அழகுடைத்தது என்று சுவாமிஜி கருதிய பெர்லின் மாநகரத்தைச் சுற்றிப் பார்த்து விட்டு ட்ரெஸ்டென் வழியாக, தாஸென் வசித்த கியெலுக்கு வந்து சேர்ந்தனர். பால்டிக் கரையில் அமைந்த அழகிய ஊர் அது.

சுவாமிஜியும், ஸேவியர் தம்பதியும் தாஸென்னுடன் காலை உணவு உட்கொண்டனர். இரு வேதாந்திகள் சந்தித்தால் வேதாந்தத்தைப்பற்றித்தானே பேச்சு நடக்கும்? அப்படியே நடந்தது.

உபநிஷதங்களிலும், பிரம்ம சூத்திரங்களிலும் கண்டுள்ள வாக்குகளும், அவற்றுக்கு பகவத்பாத சங்கரர் இயற்றியுள்ள பாஷ்யங்களும் மனிதகுலத்தின் சத்திய வேட்கையில் பிறந்த மிகவும் கம்பீரமான, பெருமதிப்புக்குகந்த ஆத்மிகச் செல்வங்கள் என்று கூறினார் தாஸென். மனிதன் நன்னெறியுடன் வாழ்வதற்கு தலைசிறந்த சாதனம் வேதாந்தமே என்றும் மொழிந்தார். வேதாந்தம் சமூகவாழ்வைப் புறக்கணிப்பதாகும் என்று நம் நாட்டு பிரகஸ்பதிகளில் சிலரே எண்ணும் போது ஜெர்மானியர் ஒருவர் அதனை இவ்வளவு தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தது அதிசயம் தானே!

ஆத்மிகத்தை நோக்கி மீண்டும் ஒரு இயக்கம் உருவாகிறது என்றும் இதற்கு இந்தியாவே ஊற்றுக் கண்ணாக இருக்கும் என்றும் அவர் சுவாமிஜியிடம் கூறியதாகத் தெரிகிறது.

டாக்டர் தாஸென் செய்து கொண்டிருந்த மொழிபெயர்ப்புக் களைப் பற்றி ஆழ்ந்த அக்கறையுடன் விசாரித்த ஸ்வாமிஜி சில நெருடலான தத்துவங்களை வெகுஅழகாக விளக்கி வைத்தார்.

டாக்டர் தாஸென்னின் நூல் நிலையத்தை பார்வையிட்ட சுவாமிஜி கவிதைப் புத்தகமொன்றைப் பிரித்துப் படிக்கலானார். அப்படியே அதன் பொருளில் மூழ்கிவிட்டார். மன ஒருமைப்பாடு என்பது எவ்வளவு எளிதில் அவருக்குக் கைவரும் என்பதைத் தான் முன்பே பலமுறை பார்த்திருக்கிறோமே! தாஸென் சுவா மிஜியிடம் ஏதோ கேட்டார். கவிதையின் கருவிலே ஊறிக் கொண்டிருந்த சுவாமிஜியின் செவியில் அந்த வினா விழவில்லை. அவர் கவிதை யுலகிலேயே இருந்தார். பிற்பாடுதான் அவருக்குப் பேராசிரியர் வினவியதாகவும், தாம் பதில் சொல்லாமல் இருந் ததாகவும் தெரியவந்தது. அவர் தவறாக எண்ணிவிடலா காதே என்று நினைந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். என் றாலும் தாஸென்னுக்கு உள்ளூற நம்பிக்கை வரவில்லை. இப்படிக் கூட பொருளில் லயித்துவிடமுடியுமா, என்று. அவரைத் திருப்தி,

Koviloor Digital Library

படுத்துவதற்காக சுவாமிஜி சம்பாஷணையில் பேச்சோடு பேச்சாகத் தாம் அப்போது படித்த கவிதையிலிருந்து நீண்ட பல பகுதிகளை ஒப்பித்தார். இதேபோல் பல ஆண்டுகளுக்கு முன்பு மீரட் நூல் நிலைய அதிகாரி ஒருவரை சுவாமிஜி அதிசயத்தில் ஆழ்த்தியிருப்பது நினைவிருக்கிறதல்லவா ?

யோக சக்தியினால் அப்படி மனோலயம் கிடைக்கும் என்பதை சுவாமிஜி — தாஸென்னுக்கு விளக்கினார். அவரும் யோக சாஸ்திரம் அறிவதற்குத்தானே முக்கியமாக சுவாமிஜியை அழைத்திருந்தார் ? தாம் கற்க விரும்பியதன் நிருபணத்தை கண்முன் பெற்றுவிட்டார் அவர்.

கியலில் நடைபெற்ற கண்காட்சியொன்றுக்கு சுவாமிஜியை அழைத்துச் சென்றார் தாஸென். சிறிது காலத்துக்குமுன் கெய்ஸர் திறந்துவைத்திருந்த கியல் துறைமுகத்துக்கு மறுநாள் சுவாமிஜியுடன் சென்றார் பேராசிரியர்.

ஆறுவார காலம் பயணத்தில் சென்றுவிட்டது. இனி லண்டனுக்குச் சென்றால் மீண்டும் உற்சாகத்துடன் உழைக்க முடியும் என்று நம்பினார் சுவாமிஜி. தாஸென்னோ சுவாமிஜி இன்னும் சில நாட்கள் தம்முடன் தங்கவேண்டுமென விரும்பினார். அது இயலாது எனக் கண்டதும் சுவாமிஜியைத் தாம் ஹாம்பர்க்கில் மீண்டும் சந்திப்பதாயும், பிறகு தாமும் லண்டன்செல்லப் போவதாகவும் தெரிவித்தார் அவர்.

அதேபோல் ஹாம்பர்க்கில் அவர்கள் ஒன்று சேர்ந்தார்கள். அங்கிருந்து ஆம்ஸ்டர்டாமில் காணவேண்டிய கலைச்செல்வங்களையெல்லாம் கண்டுவிட்டு, கொந்தளிக்கிற பிரிட்டிஷ் கால்வாயைக் கடந்து இங்கிலாந்து வந்தடைந்தனர். சுவாமிஜியும், தாஸென்னும் வெவ்வேறு இடத்தில் தங்கியிருந்தாலும் அடிக்கடி சந்தித்துக் கொண்டார்கள்.

அமெரிக்காவில் சுவாமி சாரதானந்தர் அற்புதமான பணி புரிந்து வருவதாகவும், அங்குள்ள சிஷ்யர்கள் ஆர்வம் குன்றாமல் ஆத்மிக சாதனையில் ஈடுபட்டு வருவதாகவும் அவ்வப்போது செய்திகள் வந்து சுவாமிஜியைக் குளிரச்செய்தன. தம்மோடு தமது பணி போய்விடக்கூடாது; அதனை மங்காது காக்க ஒரு சாது சேனைவேண்டும் என்று நீண்டகாலமாகவே எண்ணிவந்தவரல்லவா சுவாமிஜி ?

ஸெப்டம்பர் மாதத்தில் சிகாகோ சகோதரி ஹாரியட் ஹேலின் திருமணச் செய்தி கிடைத்தது. சுவாமிஜி ஓர் அற்புதமான மடல்வரைந்து சகுந்தலைக்குக் கண்வர் புத்திகூறியதுபோல ஹிதோபதேசம் செய்தார். ''மனிதகுலத்தில் தொண்ணூற்

Koviloor Digital Library

றொன்பது சதவிகிதத்தினருக்குத் திருமணம்தான் மிக உண்மையான லக்ஷியம்'' என்று ஞானிக்கே உரிய தயாளகுணத்துடன் அதில் கூறினர்.

இந்தக் கடிதம் எழுதியபின் மேரி ஹேலுக்கும் மனம்விட்டு ஒரு மடல் வரைந்தார். அவள் கல்யாணம் செய்துகொள்வதா வேண்டாமா என்று தயங்கிக்கொண்டிருந்தாள். அவருக்கு சுவாமிஜி எழுதியதாவது:

''நான் வாழ்க்கையில் கற்றுக்கொண்ட ஒரு மகத்தான பாடத்தை உனக்குச் சொல்கிறேன்: உன்னுடைய லக்ஷியம் எவ்வளவுக்கு உயர்வாக உள்ளதோ, அவ்வளவுக்கு நீ வருத்தப் படுவாய்! ஏனெனில் லக்ஷியம் என்ற ஒன்றை இந்த உலகில் அடையவே முடியாது. இவ்வுலகில் பூரணத்துவம் காணவிரும்பு கிறவன் பைத்தியக்காரனேயாவான். அது நடக்கமுடியாத விஷயம். அந்தமடைகிற உலகில் நீ எப்படி அனந்தத்தைக் காண முடியும்? எனவே உனக்கு என் நல்லுரை, நீ உன்னுடைய லக்ஷியங்களை நடைமுறை மட்டத்துக்குக் கொண்டுவரும் வரையில் திருமணம் செய்துகொள்ளக்கூடாது.''

லக்ஷியத்துக்கும் நடைமுறைக்குமாகத் தத்தளித்து இரண்டையும் விடத் துணியாத மேரிக்கு அவர் மேலும் எழுதுவார்:

''ஒன்று போகம்; அல்லது யோகம் — ஒன்று உலக இன்பங்களை அநுபவி; அல்லது அவற்றை நீத்துப் புறப்படு. இரண்டையும் ஒரே வாழ்முறையில் பெறுவது யாராலும் முடியாது ஒன்று இன்பத்தை அடை; அல்லது பெருமையை அடை நீ உன் அற்புதமான அறிவையும், ஆற்றலையும் துருப்பிடித்துப்போகுமாறு செய்கிறுய். இதற்கு உன்னைச் சிறிதும் மன்னிக்கமுடியாது. என்னுடைய இந்தக் கடுமையான கருத்துக்களை நீ சரியான முறையில் எடுத்துக்கொள்வாய் என நான் அறிவேன்''

பிற்காலத்தில் ஃப்ளாரான்ஸ் நகரச் சீமான் ஒருவரை மேரி ஹேல் மணந்து மாதாம் மாட்டியினி ஆனுள்.

* * *

விம்பிள்டனில் இருந்த குமாரி முல்லரின் வீட்டில் சுவாமிஜி நிகழ்த்திய உரைகள் பலரைக் கவர்ந்தன. இதைத் தொடர்ந்து சுவாமிஜி ராஜயோக வகுப்புக்கள் நடத்தினுர். பிறகு விக்டோரியாசாலை முப்பத்தொன்பதாம் இலக்கமுள்ள வீட்டில் ஒரு விஸ்தாரமான அறை அமர்த்திக்கொண்டு அங்கு ஞானயோகத்தைப்பற்றி அருமையான உரைகள் ஆற்றினுர்.

சுவாமிஜிக்கு உதவிபுரிவதற்காக சுவாமி அபேதானந்தரும் இப்போது இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு வந்து சேர்ந்தார்.

Koviloor Digital Library

அபேதானந்தரை அவ்வப்போது பேசுமாறுசெய்து, தாம்விலகி நின்று, குழந்தையின் சிறப்பைக்காணும் தாய்போல சுவாமிஜி மகிழ்ந்து நின்ற பான்மையை அவரது வரலாற்று ஆசிரியர்கள் வியக்கிறார்கள்.

அக்டோபர் 27-ந் தேதி சுவாமி அபேதானந்தர் முதல் பிரசங்கம் நிகழ்த்தினார். அதுவே அபாரமாக அமைந்துவிட்டது. சுவாமிஜி கூறினார்: ''நான் இப்போதே மரணமடைந்துவிட்டாலும் பாதமில்லை. இந்த அன்பு அதரங்கள் என் உபதேசத்தைச் சொல்ல உலகம் கேட்கும்'' என்று.

சிஷ்யரிடம் குரு — அதுவும் முப்பத்துமூன்றே பிராயமான இளம் குரு — சிறிதும் அசூயை இன்றிப் பாராட்டியது மேல் நாட்டினருக்கு அதிசயமாயிருந்தது. ஆனால் பாரதத்தின் பண்பே அதுதானே? ஆயிரம் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமது வித்யை அவ்வளவையும் மிச்சம் மீதி இல்லாமல் சிஷ்யர்களுக்கு அளித்த குருபரம்பரையால் உருவானதல்லவா பாரத சமயவரலாறு? மழைச் சூல்கொண்டு இறுகிய மேகம் பொழியத் தயாராயிருப்பது போல் தக்க சிஷ்யர்களிடம் தமது ஞானத்தையெல்லாம் பொழியக் காத்துக்கொண்டிருந்த முனிவர்கள் எத்தனை எத்தனை பேர்கள்? ஏன் சமீபகாலத்தில் அப்படிச் சிஷ்யர்களுக்காக ஏங்கித்தவித்த ஒரு ஸ்ரீராமகிருஷ்ண தேவர் போதுமே! அவருடைய பரமசிஷ்யர் அவரைப்போலவே இருந்ததில் அதிசய மென்ன?

இந்திய சிஷ்யர்களை எப்போதும் தமது கருத்தில்வைத்து தமது பணிகளைப்பற்றியும் அவர்கள் எதிர்காலத்தில் செய்யவேண்டியதுபற்றியும் சுவாமிஜி எழுதி வந்தார்.

இங்கிலாந்து தமது உபதேசத்தை சிறப்பாக ஏற்றிருப்பதைக் குறிப்பிட்டு, இருபது திறனுள்ள பிரசாரகர்கள் இருந்தால் இருப தாண்டுகளில் மேல்நாடுகள் முழுவதையும் தம்மால் மாற்றமுடியும் என்று எழுதினார். தமது அந்நியப் பணியின் முக்கியத்தை முற்றிலும் புரிந்துகொண்டு, 'இந்தியாவுக்கு வெளியே நடக்கிற ஒரு தாக்குதல் இந்தியாவுக்குள் நடைபெறும் நூறாயிரம் தாக்குதல்களுக்கு சமானமாகும்' என்று எழுதினார்.

அவரது எண்ணங்கள் இந்தியாவைச் சுற்றிச் சுற்றியே வந்தன. இந்திய மண்ணில் பாதத்தைப் பதிக்கமாட்டோமா, இந்திய நீரில் முழுக்காடமாட்டோமா, இந்தியக் காற்றை சுவாசிக்கமாட்டோமா என்று ஆர்வமுறத் தொடங்கியிருந்தார் சுவாமி விவேகானந்தர். இந்தியாவுக்குத் திரும்பவேண்டும் என்ற தமது விருப்பத்தை ஸேவியர் தம்பதிக்குக் கூறினார் சுவாமிஜி. அமெரிக்காவிலிருந்த ஸ்ரீமதி புல்லுக்கும் எழுதினார். அவள்

Koviloor Digital Library

உடனே சுவாமிஜியின் இந்தியப் பணிக்காகப் பெரு நிதியம் உதவுவதாக எழுதினாள். ஆனால் சுவாமிஜியோ தமக்குத் தற்போது அத்தகைய நிதி பரிபாலனப் பொறுப்பு வேண்டாமென்றும், தாம் ஆக்கரீதியில் பணி தொடங்குவதற்குமுன் நன்கொடை ஏற்பதற்கில்லை என்றும் எழுதிவிட்டார்.

நவம்பர் மாத மத்தியில் திடீரென ஒருநாள் சுவாமிஜி ஸ்ரீமதி ஸேவியரிடம் நேபிள்ஸிலிருந்து கொழும்புவுக்கு நாலு கப்பல் டிக்கெட்டுகள் எடுக்கச் சொன்னார். சுவாமிஜி, ஸேவியர் தம்பதி, குட்வின் இவர்கள்தான் அந்த நால்வர். கூடியமட்டும் கடற்பிரயாணத்தைக் குறைக்கவேண்டுமென்பது சுவாமிஜியின் விருப்பம். ஆனபடியால் நேபிள்ஸ்வரையில் தரைமார்க்கமாக இயன்றமட்டும் சென்று, அங்கிருந்து கப்பல் ஏறலாம் என அவர் உத்தேசித்திருந்தார். சுவாமிஜியின் திடீர் உத்தரவுக்கு அதிசயித்தவாறே ஸ்ரீமதி ஸேவியரும் பிரயாணத்துக்கு ஏற்பாடு செய்யத் தொடங்கினாள்.

இந்தியா என்றவுடன் சுவாமிஜிக்குச் சென்னைச் சீடர்களின் நினைவுதான் வந்தது. தாம் இந்தியாவுக்கு வரப்போவதாகவும், தம்முடன் வானப்பிரஸ்த தம்பதியரான ஸேவியரும் ஸ்ரீமதி ஸேவியரும் வரப்போவதாகவும் தெரிவித்தார். அவர்களுடைய ஆதரவில் ஹிமாலயத்தில் ஒரு மடம் நிர்மாணமாகப்போகிறது என்பதையும் தெரிவித்தார்.

ஹிமாலயத்தில் மட்டுமின்றி சென்னை, கல்லத்தா இவற்றிலும் மடங்கள் ஸ்தாபிக்கவேண்டும் என்றும், பிற்பாடு பம்பாய், அல்லஹாபாத் ஆகிய இடங்களிலும் மடங்கள் நிறுவவேண்டும் என்றும் நவம்பர் 29-ந் தேதி இந்தியாவுக்கு எழுதினார் சுவாமிஜி. பிறந்த ராஜ்யமாகிய வங்காளத்துக்கு ஒப்பாக அவர் சென்னையையும் பாவித்தது நம் பாக்கியம். அவரது பெருமையை உணர்ந்த நம் முன்னோர்களுக்கு அவர் சூட்டிய பாராட்டு அது.

மடங்கள் ஸ்தாபிப்பதோடு ஒரு சஞ்சிகை நடத்தவேண்டுமென்றும் விரும்பினார் சுவாமிஜி. சென்னையிலிருந்து பிரம்மவாதின், ஆங்கிலமொழி மூலமாக ஆத்மிகப் பணிசெய்துகொண்டிருந்ததுபோலவே பிரதேச மொழிகளுக்கும் பத்திரிகைகள் வேண்டும் என்று விரும்பினார் சுவாமிஜி. இவை எல்லாவற்றுக்கும் மேலாக எல்லா தேசங்களின் எழுத்தாளர்களும் நிர்வகிக்கும் ஒரு உயரிய சஞ்சிகைமூலம் உலகெங்கும் உபநிஷத உண்மையைப் பரப்பவேண்டும் என்றும் அவருக்கு ஓர் ஆசையிருந்தது. ''எனது ஈடுபாடுகள் இந்தியாவைமட்டும் குறித்தனவல்ல; அவை அகில உலகத்தையும் குறித்தனவாகும்'' என்று எழுதினார் சுவாமிஜி.

Koviloor Digital Library

ஸேவியர் தம்பதியர் தங்களது குடும்ப விவகாரங்களையெல்லாம் அதிவிரைவில் முடித்துக்கொண்டனர். தங்களுடைய சொத்துக்களையெல்லாம் பணமாக்கிக்கொண்டனர். ஆடை ஆபரணங்கள், புத்தகங்கள், சித்திரங்கள், மரச்சாமான்கள் யாவும் அவர்களிடமிருந்து பிரிந்தன. அவ்வளவு பணத்தையும் தங்கள் குருநாதராகிய சுவாமி விவேகானந்தரிடம் சமர்ப்பித்தனர் பக்தியின் எல்லை நிலத்தில் வாழ்ந்த அந்த ஆங்கிலேயத் தம்பதிகள். தங்களுடைய பிறந்த மண்ணையும், பழகிய மனிதர்களையும் பிரிந்து ஆறுயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள அந்நிய நாட்டுக்குச் செல்ல ஆயத்தமாயினர்.

சுவாமிஜி பெண்களின் நலனைக் கண்ணெனக் கருதியவர். ஆனபடியால், இந்தியாவுக்குத் திரும்பியவுடன் மடங்கள் ஸ்தாபிப்பதுமட்டுமின்றி பெண் கல்விக்காக வித்யாசாலைகளும் நிறுவ வேண்டுமென அவர் எண்ணியிருந்தார்.

சென்னை, கல்கத்தா, ஹிமாலயத்தின் நகரமொன்று, அல்லஹாபாத், பம்பாய் முதலியவற்றிலிருந்து பணியைத் தொடங்கி, ''ஆண்டவன் அநுக்கிரகித்தால் இந்தியாமீது மட்டும் படை எடுக்காமல், உலகின் எல்லாப் பகுதிகளுக்கும் பிரசாரக் குழுக்களை அனுப்பி வைப்போம்'' என்று எழுதினர் சுவாமிஜி. அற்புதமான படையெடுப்பு அல்லவா அது? யாருமே தோற்காமல் இருதரப்பாரும் வெற்றிகண்டு ஆத்மானந்த சாம்ராஜ்யத்தைக் கைப்பற்றும் புண்ணியத் திருப்போரல்லவா அது?

பெண்களுக்காகத் தாம் நிறுவும் நிலையங்களில் ஸ்ரீமதி ஸேவியரும், மார்கரெட் நோபிளும் முக்கியமான பங்குபெறவேண்டுமென சுவாமிஜி விரும்பினர்.

* * *

சுவாமிஜி தாயகம் திரும்பப்போகிருர் என்றறிந்த ஆங்கில சிஷ்யர்கள் நறும் புனலொன்று தங்களை விட்டுப் பிரிகிருர்போல வேதனையுற்றனர். அவரைப்போல அன்புப் பெருக்கில் மற்றவர்களைத் தோய்த்து விடுகிறவர் யாருண்டு?

இங்கிலாந்தில் ஆத்மிகச் சுடரை ஏற்றிவைத்த பெருமகனுக்கு நன்றிதெரிவித்துப் பிரிவுபசார விழா நடத்த ஸ்டர்டியும், குட்வினும் ஏற்பாடு செய்தனர். டிஸம்பர் 13-ந் தேதியன்று பிக்கடில்லியிலுள்ள நீர்வண்ண ஓவியர்களின் அரசாங்க சங்கக் கட்டிடத்தில் பிரிவுபசாரக் கூட்டம் நடைபெற்றது. லண்டன்மாநகரத்திலிருந்து மட்டுமின்றி, சுற்றுப்புறங்களிலிருந்து நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டு வந்தனர். மன்றத்தில் நிற்கக்கூட

Koviloor Digital Library

இடமில்லாமல் கூட்டம் நெரிந்தது. மன்றம் நிரம்பி வழிந்தது; மன்றத்தினரின் மனங்களும் அன்பில் நிரம்பி வழிந்தன; அருள் வழிகிற நெஞ்சத்தோடு சுவாமிகளும் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

''கூட்டத்தில் பல்வகை மக்களும் இருந்தனர். அவ்வளவு பேரும் ஒரே ஆசையில் நிறைந்திருந்தனர்: சுவாமிஜியைக் காண வேண்டும், அவர் பேசிக் கேட்கவேண்டும், முடியுமானுல் அவரது அங்கியின் நுனியை மீண்டும் ஒருமுறையேனும் தொட்டுப் பார்க்க வேண்டும் என்பதுதான் அந்த ஆசை'' என்கிருர் எரிக் ஹம் மாண்ட்.

''கண்ணீர் பலரது கண்களை மிகவும் நெருங்கிக்கொண்டிருந்தது ஒரே ஒருவர்மட்டும் சோகத்துடன் போரிட்டு வென்றிருந்தார் சூரியன் ஒளிக்கதிர் உயிர்பெற்று நடப்பது போல் அந்த ஒருவரான சுவாமிஜி மக்களுக்கிடையே சென்ருர். 'நாம் மீண்டும் சந்திப்போம்; ஆம், நிச்சயமாக' என்ருர் அவர்''.

சுவாமிஜிக்கு வாழ்த்துப்பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. அதற்கு நெகிழ்ச்சியுடன் பதில் அளித்த அவர் ''இந்த உடலிலிருந்து விடுபடுவதுகூட நன்மையென்று நான் எண்ணுவதுண்டு. உபயோகம் தீர்ந்துபோன ஓர் ஆடையைத் தூக்கி எறிவதுபோல் உடலை எறிய விரும்புவதுண்டு. ஆனுல் நான் உத்தம சத்தியத்தை எல்லாரும் அறியும்வரையில் மனிதகுலத்துக்குப் பிரசாரம் செய்வதிலிருந்து ஓய்வுபெற இயலாது'' என்று கூறினுர். பிறருக்காகத் தமது மோக்ஷத்தைத் துறக்கவேண்டும் என்று குருமஹராஜ் பணித்திருந்தது அவரிடம் அப்படிப் பழமாகப் பலித்திருந்தது.

மக்களுக்குப் போதிப்பதற்காக எத்தனை ஜன்மங்கள் வேண்டுமானுலும் பிறந்து உலகவாழ்க்கையின் இன்னலையெல்லாம் ஏற்கவும் சுவாமிஜி தயாராயிருந்தார். உலகில் கடைசி மனிதன் கடைத்தேறும் வரையில் தமது மோக்ஷத்தைத் துறக்கத் தயாராக இருந்தார். ஆனுல் அவர் தமது இதய அந்தரங்கத்தில் அறிந்துதான் இருந்தார் — அவ்வாறு உலகின் கடைசி மனிதன் வரையில் சத்திய சாக்ஷாத்காரம் பெறுகிற நாள் வரவே வராது என்று. தாம் எவ்வளவுதான் பிரசாரம் செய்தாலும் ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தானே முன்னேற்றிக்கொள்ளவேண்டியதுதான் என்று அவர் நம்பினுர். 'உத்தரேத் ஆத்மனுத்மானம்', 'மன ஏவ மநுஷ்யாணும் காரணம் பந்த மோக்ஷயோ:' என்பதுபோன்ற ஆன்ருேர் மொழிகளை அடிக்கடி எண்ணிப் பார்த்தார். 'தெய்வ அருள், குருவின் அருள் இவை இருந்தாலும் அவற்றைவிட

Koviloor Digital Library

ஒருவனுக்குத் தன் நெஞ்சின் அருள் இருக்கவேண்டும்' என்று பரமஹம்ஸர் கூறியதை அடிக்கடி நினைத்துக்கொண்டார். உலக மெல்லாம் உயர்நிலை எய்துகிற காலம் ஏற்படும் என்று அவர் நினைக்கவேயில்லை. ஒரு கடிதத்தில் அவர் கூறுகிறார்: ''உத்தம மான உலகம் என்று சொல்வது 'கொதிக்கிற பனிக்கட்டி' என்று சொல்வதற் கொப்பேயாகும். உத்தமமாக ஆகிவிட்டால் அது உலகமாகவே இராது 'மனிதகுலத்தின் முன்னேற்றம்' என் பதுபோல் அமெரிக்காவில் பேசப்படும் வாய்விச்சுக்களைக்கேட்டு மயக்கமுறாதே''.

1896-ம் ஆண்டு மேரி ஹேலுக்கு மடல் எழுதுகையில், ''வெளியுலகமானது விண்ணுலகமாகும் என்ற எண்ணம் கற்பனை யில்மட்டுமே இருப்பதாகும். ஆனால் உள் உலகமானது எப் போதுமே விண்ணுலகாக இருக்கிறது. கஸ்தூரிமான், கஸ்தூரி யின் வாசனை எங்கிருந்து வருகிறது என்று அலைந்து திரிந்து தேடிவிட்டுத் தன்னிடமே அதனைக் காணும்'' என்று கூறினார் சுவாமிஜி.

மகாபுருஷர்களின் பணியைப்பற்றி எழுதும்போது நாம் பக்தி ஆவேசத்தாலோ, அல்லது வார்த்தை ஜாலத்திலுள்ள ஆசை காரணமாகவோ அவர்களால் உலகமே புரண்டுவிட்டது என்றும், ஆத்மிகம் எங்கும் பெருகிப் பொங்கி வளர்ந்தது என்றும் எழுது கிறோம். இவ்வாறு உலகம் முழுவதுமோ அல்லது ஒரு தனி நாடோகூடத் திரும்பியதென்பது, திருந்தியதென்பது உண்மையில் கிடையாது.

அப்படியானால் அவதார புருஷர்களின் பணி என்ன? ஆத் மிகம் அடியோடு நசித்துவிடாமல் காப்பதுதான் அவர்களின் பணி. அவர்கள் ஒரு சிலரை மோக்ஷமார்க்கத்துக்கு அழைத்துச் சென்றாலும் அதுவே அவதாரத்தின் பலனாகும். ஏனெனில் அப்படி மோக்ஷ மார்க்கத்தில் செல்லும் ஒரு சிலருமே தங்களுக்குள் அகில உலகத்தையும் அடையப்பெறுகிறார்கள் அல்லவா? சுவாமிஜி குறிப்பிட்டதுபோல் உள் உலகே விண்ணுலகாக்கும் பணி — விண்ணுலகாகவே எப்போதும் உள்ள உலகின் அந்த இயல்பை ஒரு சிலருக்கேனும் உணர்த்தும் பணி — உலகுக்கெல்லாம் புரிந்த பணியே அல்லவா?

அனவரதமும் பெருவாழ்வு வாழ்வது சகல ஜீவராசிகளுக்கும் இயலாத காரியம். அவதாரங்கள் அவர்களை அப்படி ஆக்குவதும் இல்லை. சுதந்திரமாக ஜீவனால் சத்திய நிலை எய்த முடியும் என்ப திருக்க, அதனை அவதாரத்தின்மூலம் நிறைவேற்றிவைக்கப் பரம் பொருள் நினைப்பதில்லை என்றே இதற்குக் காரணமும் சொல்ல

Koviloor Digital Library

லாம். ஆனால் அனவரதமும் மக்கள் பெருவாழ்வு வாழாவிடினும் எவ்வளவு போது உத்தம சிந்தனைகளில் இருக்கின்றனரோ அத்த னைக்கு அது சிறப்பானதுதானே? தங்களுடைய வாழ்வின் மூலமும், உபதேசத்தின்மூலமும் அவதாரபுருஷர்கள் இன்றளவும், ஒருசில நாழிகைகளுக்காவது மக்களை உயர்த்துவதை கதாகால க்ஷேப, பிரவசனக் கூட்டங்களிலும், ஆத்மிக இலக்கியங்களில் மக்களுக்கு உள்ள ஆர்வத்திலும் நாம் காண்கிறோம். 'ஒரு சில நாழிகை' என்பது விரிந்து பரந்து சாசுவதமாவது சாத்தியமல்ல போலும்! உலகத் தோற்றத்தை உண்டாக்கிய அம்பிகையைத் தான் அதற்குக் காரணம் கேட்கவேண்டும். எல்லாரும் ஞானிக ளானால் உலகத் தோற்றமே அல்லவா மறைந்துவிடும்? உலகம் அம்பிகையின் லீலை. அவள் விரும்பும்வரை அது அப்படியேதான் இருக்கும் என்று நன்றாகக் கண்டுகொண்டார் சுவாமிஜி.

அன்னை குழந்தைக்காக உணவைத் தயாரிக்கிறாள்; பிறகு பிசைகிறாள்; அதன்பின் ஊட்டுகிறாள். என்றாலும் அதை உண்ண வேண்டியது குழந்தைதானே ஒழிய குழந்தைக்காக அன்னை அதனை உட்கொள்ள முடியாதல்லவா? நமக்காக ஞானிகள் ஆத்மி கத்தை ரஸமான பொருளாக உற்பத்திசெய்கிறார்கள்; தங்கள் அநுபவத்தால் அதனைக் குழைத்துப் பிசைகிறார்கள்; உபதேசகர் களாக அவற்றை நமக்கு ஊட்டுகிறார்கள்; எனினும் உண்ண வேண்டியது நாம்தானே? நாம் எல்லாருமே அதனை உண்போம் என்று சொல்லமுடியாது. ஜுரம் வந்த உடலுக்கு நல்ல உணவும் கசப்பதுபோல் நம்முடைய சம்ஸ்காரம் காரணமாக ஞானமுதம் பிடிக்காமல் அதனைத் துப்பக்கூடும். அப்படியே உண்கிறவர்களி லும் அதனை வாயின் ருசி அறிவதோடு நில்லாமல், வயிற்றில் ஜீரணித்து ரத்தத்தோடு கலக்கச்செய்துகொள்கிற அநுபவசாலி கள் மிகவும் குறைவாகவே இருக்கமுடியும். இதையெல்லாம் நன்கு அறிந்திருந்ததால்தான் சுவாமிஜி தமது தொண்டைப்பற்றி மிகையாகக் கருதவில்லை.

தாம் உடலில் இருக்கப்போவது இன்னும் சிறிதுகாலம்தான் என்பதையும் இச்சமயத்தில் சுவாமிஜி நன்கு அறிந்திருந்தார்.

சுவாமி அபேதானந்தரிடம் வியக்தமாகவே சொன்னார்: ''அதிக பட்சம் இன்னும் ஐந்து, ஆறு ஆண்டுகள்தான் நான் உயிர் வாழ்வேன்'' என்று.

''சுவாமி, இந்த இளம் வயதில் ஏன் நீங்கள் மரணத்தைப் பற்றி நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டார் அபேதானந்தர்.

''என்ன அறிவில்லாமல் பேசுகிறாய்?'' என்றார் விவேகா னந்தர். ''உனக்கு விஷயம் புரியவில்லை. தினந்தோறும் என்

Koviloor Digital Library

னுடைய ஆத்மா பெரிதாகிக்கொண்டே வருகிறது. அதை இந்த உடலால் தரிக்கமுடியாது. சதையும் எலும்புமான இந்தக் கூண்டை அது எப்போது வேண்டுமானுலும் வெடிக்கவைத்து விடும்'' என்று முடித்தார்.

இந்த சம்பவத்தை வர்ணிக்கும் நிகிலானந்த சுவாமி, 'உலகம் அவரிடமிருந்து கழன்றுகொண்டிருந்தது. காற்ருடியை உலகுடன் பிணைத்திருந்த கயிறு அறுந்துகொண்டிருந்தது' என்று உருக்கமாகக் கூறுகிருர்.

மிகமிக மெல்லிய திரை ஒன்றுதான் நரேந்திரரைப் பரப் பிரம்மத்திடமிருந்து பிரித்து வைத்திருக்கிறது என்று குருமஹராஜ் பலமுறை கூறியதுண்டல்லவா? அந்த மெல்லிய திரை இப்போது மேலும் மேலும் நலிவுற்றுக்கொண்டே வந்தது. பரம்பொருளின் காந்த சக்தி சுவாமிஜியைப் பையப்பைய ஈர்த்துக்கொண்டே யிருந்தது.

சுவாமிஜி பிரிட்டனிலிருந்து புறப்படுமுன்பு அவர் அங்கு ஆற்றிய அரும் தொண்டைப்பற்றிய ஓர் அரிய விமரிசனத்தை பார்ப்போம். 'இந்தியன் மிர்ரர்' என்ற சஞ்சிகையில் இது வெளியாயிற்று.

''சுவாமி விவேகானந்தரின் பணியை மிஷனரிப் பணி என்று சொல்லவேண்டுமானுல் ஒரு பெருத்த வித்தியாசத்தைக் கூற வேண்டும். இன்றைய மிஷனரி வேலை முறைகளில் பெரும் பாலானதைப்போலன்றி சுவாமிஜியின் உரை எந்தவித மனக் கடுப்பையும் ஏற்படுத்தவில்லை; எவ்விதமான துர் எண்ணத் தையோ குறுகிய மனப்பான்மையையோ அது உண்டாக்கவில்லை. கோஷ்டிகளைச் சேர்ந்தவரல்ல சுவாமிஜி. அவர் ஏதோ ஒரு மதத்தை வளர்க்க வந்தவரல்ல; மதம் என்கிற ஒன்றையே வளர்க்கிறவர் அவர். மதம் என்கிற அந்தப் பெருவயலிலுள்ள சிறுபிரிவுகளில் வாழ்ந்து அந்தப் பிரிவுகளின் பெருமைகளைக் கூறு பவர்கள் அவரிடம் போரிடுவதற்கு எந்தக் காரணத்தையும் காண வில்லை.''

அறிவாராய்ச்சிகளுக்கு மதம் ஈடுகொடுக்காததால் அறி வாராய்ச்சியையும் விடமுடியாமல் மத உணர்வையும் விடமுடி யாமல் தவித்துக்கொண்டிருந்த ஐரோப்பிய நாடுகளுக்கு அறி வொடுபொருந்திய மதத்தைத் தந்து தெளிவித்தார் சுவாமிஜி என்கிருள் குமாரி நோபிள் — பிறகு தன்னையே சுவாமிஜியின் பணிக்கு நிவேதனம் செய்துகொண்டு நிவேதிதையானவள்.

''சுவாமிஜியின் 'நானே கடவுள்' என்ற வாசகமானது எப்போதும் நாம் அறிந்திருந்த ஒன்ருக — ஆனுல் ஒருபோதும்

Koviloor Digital Library

மொழிந்திராத ஒன்றுகக் — கிடைத்தது'' என்கிறுள் நிவே திதை. எல்லாமே கடவுள்; நான் கடவுள்; எனவே நானே எல்லாமும் என்ற போதனேதான் மக்கள் சேவைக்கு இதுவரை எந்த மதமும் அளித்திராத உயர்வைத் தந்தது என்பதையும் அவள் குறிப்பிடுகிறுள்.

சுவாமிஜியும் தாம் ஆங்கில நாட்டில் செய்த சேவையில் திருப்தி அடைந்தார். தம்முடன் இந்தியாவுக்குத் திரும்பவிருக்கும் ஸேவியர் தம்பதி, குட்வின் இவர்களேப்போல பலர் தங்களுடைய சகலத்தையும் துறந்து ஆத்மிக சேவைசெய்யத் தயாராக இருக்கிறுர்கள் என்று எழுதினுர்.

* * *

டிஸம்பர் 16-ந் தேதியன்று சுவாமிஜியும் ஸேவியர் தம்பதியும் லண்டனிலிருந்து புறப்பட்டனர். ஆங்கிலக் கால்வாயைக் கடப்பது தவிர நிலமார்க்கமாகவே அவர்கள் நேபிள்ஸ் செல்வதாகவும், அங்கு குட்வின் கடல்மார்க்கமாக வந்து அவர்களுடன் சேரவேண்டுமென்றும், பிறகு அவர்கள் கப்பலில் பாரதம் திரும்புவதென்றும் உத்தேசிக்கப்பட்டிருந்தது.

சுவாமிஜியின் அன்பர்கள் பலர் ரயில்நிலேயத்தில் கசிந்த உள்ளங்களுடன் வழியனுப்பினர். சுவாமிஜி சென்றுவிட்டாலும், அவர் தங்களுக்கு இட்டுள்ளபணி இருக்கிறது என்று அவர்கள் உணர்ந்தனர். ஸ்டர்டி தமது நண்பர் ஒருவருக்கு எழுதினுர்:

''அவருடைய பணியை நாங்கள் எடுத்துக்கொண்டு முன் செல்கிறேம், அவருடைய குருபாயி இதில் எனக்கு உதவுவார். இப்படிப்பட்ட ஒரு அநுக்கிரகம் கிடைப்பதற்கு நான் பூர்வத்தில் ஏதோ அசாதாரணமான புண்ணியத்தைச் செய்திருக்கவேண்டும். நான் வாழ்நாள் முழுதும் எதற்கு ஏங்கினேனே அதை சுவாமிஜியிடம் கண்டேன்''.

* * *

''இனி எனக்கு ஒரே சிந்தனேதான் — இந்தியாதான் அது'' என்றுர் சுவாமிஜி ஸேவியர் தம்பதியிடம். புறப்படுவதற்கு முதல் நாள் ஒரு நண்பர் அவரிடம் கேட்டார்:

''போகங்களும், பெருமைகளும், ஆற்றல்களும் நிறைந்த மேல்நாடுகளில் நாலாண்டுகள் வாழ்ந்துவிட்டீர்களே. இப்போது உங்கள் தாய்நாட்டைப்பற்றி எப்படி நினேக்கிறீர்கள் ?'' —என்று.

''எப்படியா ? நான் என் தாய்நாட்டிலிருந்து கிளம்புமுன் அதனே நேசித்தேன். இப்போதோ அதனுடைய ஒவ்வொரு தூசியும் எனக்குப் புனிதமாகிவிட்டது. அதன்மீது வீசுகிற

Koviloor Digital Library

காற்று எனக்குப் புனிதமானது. இப்போது என் தாய்நாடு புனிததேசமான இந்தியா, எனது க்ஷேத்திராடன ஸ்தலம், தீர்த்தாடன லக்ஷியம்'' என்ருர் தேசபக்த திலகமான சுவாமிஜி.

பிரான்ஸ், ஆல்ப்ஸ் இவற்றின் வழியாக மிலானை அடைந்தனர் சுவாமிஜியும் ஸேவியர் தம்பதியும். இத்தாலியின் முதல் அநுபவம் சுவாமிஜிக்கு ஆனந்தமயமாக இருந்தது. ஓவியர் மணியாகிய லியானுர்டோ டாவின்ஸி தீட்டிய கிறிஸ்துவின் கடைசிப் போஜனம் என்ற சித்திரத்தைக் கண்டு சுவாமிஜி சொக்கிப்போனுர்.

பைஸாவுக்குச் சென்று உலக அதிசயமான சாய்ந்த கோபுரத்தைக் கண்டார். இத்தாலியின் சலவைக்கல் வேலைப்பாட்டை மிகவும் ரஸித்தார். ஆர்னே நதிக்கரையில், அழகிய மலைகளின் மத்தியில் அமைந்த ஃப்ளாரன்ஸின் அழகையும், சரித்திர முக்கியத்துவம் கொண்ட சின்னங்களையும் கண்டு களித்தார் சுவாமிஜி.

ஃப்ளாரன்ஸில் ஓர் இனிப்பான நிகழ்ச்சி. 'போப்பாண்டவர்' என்றும் 'மாதாகோவில் மாதா' என்றும் சுவாமிஜி செல்லப் பெயர் இட்டிருந்த ஹேல் தம்பதியர் — சிகாகோவில் அவருக்கு இன்னெரு பிறந்த வீட்டையும், அருமை சகோதரிகளையும் அளித்திருந்த தம்பதியர் — அப்போது ஃப்ளாரன்ஸுக்கு வந்திருந்தனர். அகஸ்மாத்தாக அவர்களும் சுவாமிஜியும் சந்தித்தனர். பல மணி நேரம் அவர்கள் பேசிப் பேசி மகிழ்ந்தார்கள்.

ரோமாபுரியைப் பெரும் துடிப்புடன் அடைந்தார் சுவாமிஜி. ஒருவாரம் அங்கிருந்து காணவேண்டியதையெல்லாம் கண்டனர். குமாரி எட்வர்ட்ஸ், குமாரி மக்லியாட், என்ற இருவரும் ரோமாபுரியில் பல இடங்களுக்கு உடன்வந்தனர்.

முனிவர்களுடன் வைத்து மதிக்கத்தக்க அர்ச்சிஷ்ட பாலையும், புனித பீட்டரையும் நினைத்தபடி — கிறிஸ்துவமதம் ஐரோப்பாவில் பல இன்னல்களுக்கும், இன்னுயிர்த் தியாகங்களுக்கு மிடையில் பிரவேசித்த நாட்களை நினைந்தபடி ஸெயின்ட் பீட்டர்ஸ் சர்ச் என்ற மகோன்னதமான ஆலயத்தை மோனத்தில் மூழ்கியபடி தரிசித்தார் சுவாமிஜி.

அங்கு விமரிசையாக நடந்த சடங்குகளையெல்லாம் கண்டார் ''சுவாமி, உங்களுக்கு இந்தச் சடங்குகள் பிடிக்கின்றனவா ?'' என்று கேட்டாள் உடன்வந்திருந்த ஒருத்தி.

''உருப்படைத்த ஆண்டவனை நீ விரும்புகிருயெனில், அவனுக்கு உலகத்திலுள்ள சிறப்புக்களையெல்லாம் அளிக்கவேண்டியது தானே ? தலைசிறந்த வாசனைப் பொருட்களையும், புஷ்பங்களையும்,

Koviloor Digital Library

பழங்களையும், பட்டுக்களையும் அவனுக்கு அளிக்கவேண்டியது முறைதானே?'' என்றார் சுவாமிஜி.

சுவாமிஜி ரோமில் இருந்தபோது கிறிஸ்துமஸ்ஸும் நேரிட்டது. மிகவும் கோலாகலமாகவும் ஆடம்பரமாகவும் அந்த விழா கொண்டாடப்பட்டது. சடங்குகளை ஒப்புக்கொண்ட சுவாமிஜியாலேயே அதனை ஏற்கமுடியவில்லை. 'தனது தலையைச் சாய்ப்பதற்கு ஒரு சாண்பூமி அற்றிருந்த கிறிஸ்துவுக்கா இத்தனை படாடோபம்?' என்று அவர் வருந்தினார். சந்நியாசத்தைப் போதித்தவரல்லவா கிறிஸ்து? அந்த உணர்வு இந்த விழாவில் எங்கே போய்விட்டது?' என்று தேடித் தவித்தார். அவரை அமைதியுறச் செய்வதற்காக ஸேவியர் தம்பதியர் உல்லாஸப் பயணம் அழைத்துச் சென்றனர். ஹிதமான சீதோஷ்ணம் கூடியிருந்த அன்று சுவாமிஜி கிறிஸ்துவையும் கிருஷ்ணனையும் இணைத்து இணைத்துப் பேசி மகிழ்ந்தார்.

கத்தோலிக்க கிறிஸ்துவ சமயத்தின் குருவாகிய போப்பாண்டவரின் வாசஸ்தலமாகிய வாடிகன் முதலிய இடங்களையும் சுவாமிஜி ரோமில் இருக்கும்போது கண்டார். எதைக்கண்டாலும் தமது கலை உணர்வையும், சரித்திர அறிவையும் வெளிப்படுத்தும் முறையில் விமரிசனம் புரிந்தார்.

* * *

நேபிள்ஸை அடைந்தாயிற்று. பாரதத்துக்குச் செல்லவேண்டிய கப்பல் அங்குவர இன்னும் சில நாட்கள் இருந்தன. நேபிள்ஸில் காணவேண்டிய காட்சிகளையெல்லாம் சுவாமிஜி கண்டார். சாந்தப் போர்வை போர்த்தியிருந்த வெஸுவியஸ் எரிமலைமீது ரயில்வழியாகச் சென்றார். அப்போது சில கற்கள் உச்சியிலிருந்து வெடித்துக்கொண்டு உருண்டன.

நேபிள்ஸுக்குக் கப்பல் வந்தது. குட்வினும் வந்து சேர்ந்தார்.

1896-ம் ஆண்டு டிஸம்பர் முப்பதாம் தேதி நேபிள்ஸிலிருந்து புறப்பட்ட கப்பல் சுவாமிஜியையும், ஸேவியர் தம்பதியையும், குட்வினையும் தனது பல பிரயாணிகளிடையே பெற்றிருந்தது.

நேபிள்ஸுக்கும் போர்ட் ஸெயிடுக்குமிடையே, மத்திய தரைக் கடற்பகுதியில் கப்பல் சென்றபோது சுவாமிஜிக்கு ஓர் அற்புத அநுபவம் ஏற்பட்டது.

நிசிவேளை. நன்றாக உறங்கிக்கொண்டிருந்த சுவாமிஜிக்கு ஸ்வப்பனம்போன்ற ஓர் அநுபவம் ஏற்பட்டது. முனிபுங்கவரைப் போலத் தோற்றமுடைய ஒருவர் அவர்முன் பிரஸன்னமானார். ''இப்போது நீ க்ரீட் தீவுக்கருகே சென்றுகொண்டிருக்கிறாய்.

Koviloor Digital Library

இங்குதான் கிறிஸ்துவ மதம் தோன்றிற்று. நான் இங்கு வாழ்ந்த தேராப்யூடேக்களில் ஒருவன்'' என்றார். பிறகு அவர் கூறிய ஒரு வார்த்தை சுவாமிஜிக்குச் சரியாக நினைவில்லை. 'எஸ்ஸின்' என்பது போல அது அவருடைய காதுக்குத் தொனித்தது.

'எஸ்ஸின்' என்ற பிரிவைச் சேர்ந்தவர்தான் ஏசுநாதர் என்று கருதுவார் உண்டு. அவர்கள் அத்வைதத்தைக் கைக் கொண்ட துறவியராவர். தேராப்யூடே என்பது 'தேர புத்திரர்' என்பதன் சிதைவு என்றும், புத்தமதத் தலைவர்களான தேராக் களின் வழிவந்தோரே அவர்கள் என்றும் கருத இடமுண்டு.

முனிவர் தமது பேச்சை முடிக்கும்போது, ''தேராப்யூடே யான நாங்கள் கூறிய சத்தியங்களையும் லக்ஷியங்களையும் கிறிஸ்து வர்கள் இயேசுநாதர் கூறியதாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் உண்மையில் இயேசு என்று ஒருவர் பிறந்ததே கிடையாது. இதோ இந்தப் பகுதியில் நடைபெறப்போகும் புதைபொருள் ஆராய்ச்சியிலிருந்து இதற்குப் பல சான்றுகள் கிடைக்கப்போ கின்றன'' என்றார்.

சுவாமிஜிக்குத் துயில் — அது துயில் என்பது சரியானால் — கலைந்தது. கப்பல் அதிகாரி ஒருவரிடம் சென்று ''நாம் இப்போது எப்பகுதியில் சென்றுகொண்டிருக்கிறோம்?'' என்று கேட்டார்.

''க்ரீட்டுக்கு அருகில்'' என்றார் அதிகாரி.

சுவாமிஜி மறைந்த சில ஆண்டுகளுக்குப்பின் கல்கத்தா 'ஸ்டேட்ஸ்மேன்' பத்திரிகையில் ஒரு செய்தி வெளியாயிற்று. க்ரீட்டில் ஆங்கிலேயர் நடத்திய புதைபொருள் ஆராய்ச்சியின் விளைவாகக் கிறிஸ்துவ மதத் தோற்றுவாயைப்பற்றி பல நூதன மான விஷயங்கள் வெளியாகி இருப்பதாக அது கூறிற்று.

ஸ்வாமிஜியைப் பொறுத்தமட்டில் அவர் இயேசுநாதரை உண்மையாகவே வாழ்ந்த ஓர் உத்தம ஆசாரியராகத்தான் இறுதி வரையில் கருதினார். ஆயிரம் சோலைப் பூங்காவில் தம்மைக் கிறிஸ்துவாகப் பாவித்துத் தேடிவந்த சிஷ்யைகளிடம் 'நான் அவரானால் ஒருவரை ஸ்பரிசித்த மாத்திரத்திலேயே ஞானத்தைப் புகட்டமாட்டேனா?' என்று உணர்ச்சி பொங்கக் கூறியவரல்லவா அவர்? பிறிதொரு சமயத்தில் அவர் ''ஏசுவின் காலத்தில் நான் பாலஸ்தீனத்தில் வாழ்ந்திருந்தால் அவருடைய பாதத்தைக் கழுவி யிருப்பேன் — கண்ணீரால் அல்ல, என் இதயத்தின் ரத்தத் தினால்'' என்றார்!

* * *

கப்பல் பிரயாணிகளில் இரு கிறிஸ்துவப் பிரசாரகர்கள் இருந்தனர். அவர்களுடன் சுவாமிஜி ஹிந்து மதத்தின் மேம்பாடு

Koviloor Digital Library

குறித்து விவாதம் புரிந்தார். தர்க்கரீதியில் அவர்கள் சுவாமிஜி யிடம் தோற்றுக்கொண்டே வந்தனர். இதனுல் ஆத்திரமடைந்து ஹிந்துக்களேயும், ஹிந்து மதத்தையும் குறித்து வாயில்வந்தபடி வசைமாரி பாடத் தொடங்கினுர்கள். சுவாமிஜியும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார். அவர்களுடைய தூஷணே வரம்புமீறிப் போய்க்கொண்டேயிருந்தது. வாதத்திஞல் வெல்லக்கூடியவர்க ளல்ல அந்த அறிவிலிகள் என்பது சுவாமிஜிக்கு நிச்சயமாகி விட்டது. எனவே அறிவால் மட்டுமின்றி உடல் தோற்றத்தாலும் மலே என மதிக்கத்தக்க சுவாமிஜி மெல்ல நடந்து அவர்களில் ஒருவருக்கு மிகவும் சமீபமாக நின்று உறுத்துப் பார்த்தார். சட்டென்று அவரது சட்டைக்கழுத்துப் பட்டையைக் கெட்டி யாகப் பிடித்துக்கொண்டார். கோபமாகச் சொல்கிருரா, விளே யாட்டாகச் சொல்கிருரா என்றே புரியாத முறையில், ''மீண்டும் ஒருமுறை என் மதத்தைப் பழித்துப் பேசிஞயோ அப்படியே தூக்கி சமுத்திர மத்தியில் எறிந்துவிடுவேன், ஜாக்கிரதை ?'' என்ருர். அந்த மிஷனரியின் கால்கள் பூட்ஸுக்குள் வெடவெடப் பதுகூட அவரைப் பற்றியிருந்த சுவாமிஜிக்குத் தெரிந்தது. நடுங் கிய குரலில், ''என்னே விட்டுவிடுங்கள் ஐயா, இனி நான் இப்படிச் செய்யமாட்டேன்'' என்று மன்ருடிஞர் அந்தப் பிரசார கர். இன்னெருவரோ மூச்சுப் பேச்சு அற்று இருந்தார்.

இந்தச் சம்பவமானபின் அவர்கள் தங்கள் பொறுப்பற்ற கண்டனத்தை நிறுத்திக்கொண்டதோடு சுவாமிஜிக்குப் பிரயாணத் தில் பல சௌகரியங்களும் செய்துகொடுத்தனர்.

இந்தச் சம்பவத்தைத் தமது சிஷ்யரொருவரிடம் கூறிய சுவாமிஜி, ''அப்பனே, உன்னுடைய அன்னேயை யாராவது அவமதித்தால் நீ என்ன செய்வாய் ?'' என்று கேட்டார்.

''ஏன் அவன்மேல் அப்படியே பாய்ந்து ஒரு பாடம் புகட்டி விடுவேன்'' என்ருர் ஸின்ஹா என்ற அந்த சீடர்.

''நல்லது, நம்முடைய மதம் நமது நாட்டுக்கெல்லாம் அன்னே. நம்மைப்பெற்ற அன்னேயிடம் நமக்கு உள்ள உணர்வு நமது மதத்திடம் இருக்குமாஞல் ஹிந்து சகோதரன் ஒருவன் மதம் மாறுவதைக்கூட நாம் சகிக்கமுடியாது. ஆனுல் நடப்ப தென்ன ? தினந்தோறும் மதமாற்றம் நடந்துகொண்டேதான் இருக்கிறது. ஆனுலும் நீ அசிரத்தையாக உட்கார்ந்துகொண் டிருக்கிருய் ! உன்னுடைய மத உணர்வு என்னுயிற்று ? உன் னுடைய தேசபக்தி என்னுயிற்று'' என்று கொழுந்துவிட்டார் அறிவுக்கனலாகிய சுவாமி விவேகானந்தர்.

* * *

Koviloor Digital Library

ஏடன் துறைமுகத்தில் இறங்கிப் பார்க்கவேண்டியதையெல்லாம் பார்த்தனர் கப்பல் பிரயாணிகள்.

தூரத்தே ஒருவன் ஹுக்கா பிடித்துக்கொண்டிருப்பதைக் கண்ட சுவாமிஜி தமது மேல்நாட்டுச் சிடர்களை விட்டுவிட்டு அவனிடம் விரைவாகச் சென்றார். ஆஹா, அவன் ஓர் இந்தியன்! உலகுக்கெல்லாம் பொதுவான சுவாமிஜிக்கும் — 'நான் இந்தியாவை மட்டும் சேர்ந்தவனல்ல, உலகு முழுவதற்கும் பொது' என்று சொன்ன சுவாமிஜிக்கும் — தம் நாட்டவனைக் காண்கிறோம் என்பதில் ஓர் அலாதி இன்பம் உண்டாகத்தான் செய்தது. ஹிந்துஸ்தானி பேசுகிற தாம்பூல வியாபாரி அவன்.

அவனிடம் சுவாமிஜி, ''தம்பி, உன்னுடைய புகைக் குழாயைக் கொஞ்சம் எனக்கும் கொடேன்'' என்று குழந்தை போலக் கேட்டார்.

முக்கியமான அம்சங்களில் வைராக்கியத்தைக் கடைப்பிடிப்பதே சுவாமிஜியின் வழி. எல்லாவற்றிலும் விராகம் வேண்டுமென்பதற்காக முக்கியமற்ற விஷயங்களில் அளவுக்குமீறிக் கவனம் செலுத்துவது அவருக்குப் புரியாத ஒன்றாகும். பெல்காமைச் சேர்ந்த பாடே இவ்விஷயத்தைக் குறிப்பிட்டிருப்பதை சுவாமிஜியின் பரவிராஜக தேசசஞ்சாரப் பகுதியில் பார்த்திருக்கிறோம். ''சிறிய ஆசைகளை நிறைவேற்றிக்கொண்டு, பெரிய ஆசைகளை விலக்கு'' என்று பரமஹம்ஸரே ஒருமுறை உபதேசித்ததுண்டு. இதில் முதல் பாதியைமட்டும் நாம் எடுத்துக்கொள்வது நியாயமாகாது. சுவாமிஜி பின் பாதியையும் எடுத்துக்கொண்டு அநுஷ்டித்தவரல்லவா?

அந்த இந்தியன் மகிழ்ச்சியுடன் 'சாமியாரி'டம் புகைக் குழாயைக் கொடுத்தான். சுவாமிஜியும் ஏக சந்தோஷமாக அதனை உறிஞ்சிப் புகையை பந்து பந்தாக விட்டு வேடிக்கை பார்த்தார்.

''எங்களை விட்டுவிட்டு எதற்காக அவ்வளவு அவசரமாக ஓடிவந்தீர்கள் என்பது இப்போதுதான் புரிகிறது'' என்றார் ஸேவியர்.

* * *

ஜனவரி பதினைந்தாம் தேதி. சுவாமிஜி பிறந்து முப்பத்து மூன்று ஆண்டுகளும் மூன்று தினங்களும் ஆகியிருந்தன. முப்பத்து முக்கோடி தேவதைகளும் புகழத்தக்க மாபெரும் சாதனையைச் செய்துவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த அந்த இளைஞரின் அழகிய கண்கள் தமது வழக்கமான பிரகாசம் ஆர்வத்தினால் மேலும் ஒளிவிட, ஒளி முத்துக்கள் அவற்றிலிருந்து உருள, இளம் காலையில்

Koviloor Digital Library

தம் எதிரே தூரத்தில் தெரிந்த நிலத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

இன்று அந்நியநாடாக உள்ள இலங்கை அன்று இந்தியாவின் ஒரு பகுதியாகத்தான் இருந்தது. அந்த இலங்கையின் பூமியைக் கண்டுதான் தாயின் மேனியைக் காணும் அன்புக் கிளர்ச்சியை அடைந்தார் சுவாமிஜி.

உதிக்கின்ற சூரியனின் செக்கர் ஒளியில் நிழலாட்டமிட்ட கொழும்பு மாநகரத்தின் துறைமுகம், அதனைச் சுற்றியிருந்த பனைகளும், மஞ்சள் பழுப்பான கடற்கரையும் மெல்ல மெல்லத் தெளிவு பெற்றுவந்தன.

சிறப்புக்கள் பல செய்துவிட்டுத் தாயை அணுகும் சேயாக, சுவாமிஜி பரபரப்படைந்தார். ஆனால் தம்மைக் குறித்துக் கொழும்புத் துறைமுகமும் பரபரப்படைந்திருந்தது என்பதை அவர் அறிந்திருக்கவில்லை. குருபாயியாகிய சுவாமி நிரஞ்ஜனானந்தர் கொழும்புவுக்கு வந்திருப்பதையோ, கொழும்பு மக்கள் தம்மை வரவேற்க அமர்க்களமாக ஏற்பாடுகள் செய்திருப்பதையோ அவர் எப்படி அறிந்திருக்கமுடியும் ?

பெரியோர்கள் ஜீவியவந்தராக இருக்கும்போதே அவர்களின் பெருமையைத் தெரிந்து பாராட்ட அறியாத நாடு என்பதாக இந்தியாவுக்கு ஓர் அபக்கியாதி உண்டு. சுவாமிஜி விஷயத்திலேனும் இவ்விதம் நிகழவில்லை என்பது நமக்கு மன ஆறுதல் தருகிற விஷயமாகும்.

* * *

'வந்தான் வந்தான் வந்தான் யுக புருஷன்' என்ற துடிப்போடு சுவாமிஜியை வரவேற்றுக் கொழும்பு மக்கள் எழுப்பிய ஜயகோஷம் அதன்பின் அவர் பாரதத்தில் சென்ற இடங்களிலெல்லாம் ஹிமாலயத்திலுள்ள அல்மோராவரை எதிரொலித்தது.

இந்திய நாட்டின் பெருமையை அவ்வப்போது இந்தியர்களுக்கே எடுத்துரைத்த அவதார புருஷர்களாகிய ஆசாரியர்கள் பலருண்டு. ஆனால் இவரோ இந்நாட்டுக்கு மட்டுமின்றி உலகுக்கெல்லாம் பாரதத்தின் மேன்மையை எடுத்துரைத்துத் திரும்பியவரல்லவா ? இந்தியாவின் முதல் ஆத்மிக தூதராகப் பாரெங்கும் சென்று வந்தவரல்லவா அவர் ? அப்படிப்பட்டவரை எப்படி மதித்து, போற்றி, பூஜிக்கவேண்டுமோ, அவரது ஆக்ஞையை எப்படித் தாங்கிப் பணிபுரியவேண்டுமோ அப்படி மதிக்கவும், போற்றவும், பூஜிக்கவும், அவரது ஆக்ஞையை சிரஸால் வகித்து உழைக்கவும் இந்தியா துடித்துக்கொண்டிருந்தது. அந்தத் துடிப்பின் தொடக்கத்தைக் கொழும்புவிலேயே கண்டார் சுவாமிஜி.

Koviloor Digital Library

டெட்ராய்ட்டில் இருந்தபோது ஒரு நாள் சுவாமிஜி தமது உடலெல்லாம் குலுங்கச் சொன்னார்: ''இந்தியா நான் சொல்வதை கேட்டேயாகவேண்டும். நான் இந்தியாவை அதன் அஸ்திவாரம்வரை குலுக்குவேன். பாரதத்தாயின் நரம்புகளிலெல்லாம் ஒரு மின்சார அதிர்ச்சியை நான் ஊட்டுவேன். பொறுத்திருந்து பாருங்கள்! இந்தியா என்னை எப்படி வரவேற்கிறது என்று பாருங்கள்! இந்தியா, என் சொந்த இந்தியா — நான் இங்கு இலவசமாக வாரி வழங்கியதை — என் ஜீவரத்தத்துடன் சேர்த்து வழங்கியதை — வேதாந்தத்தின் உயிர் என்று உள்ளபடி அறிந்து கொண்டாடும். இந்தியா என்னை வெற்றிவிழா எடுத்து வரவேற்கும்.''

அவர் கூறியது அக்ஷரத்துக்கு அக்ஷரம் உண்மையாயிற்று.

* * *

கொழும்புத் துறைமுகத்தில் கப்பல் நின்றது. அலங்கரிக்கப்பட்ட ஒரு நீராவிப் படகு சுவாமிஜியைக் கப்பலிலிருந்து துறைமுகத்துக்கு அழைத்துச் சென்றது. ஜலசமுத்திரத்திலிருந்து ஜனசமுத்திரத்திடையே இறங்கினர் சுவாமிஜி. ஏராளமாக மக்கள் யாராலும் அடக்கமாட்டாமல் திமிறிக்கொண்டுவந்து சுவாமிஜியின் பாதங்களில் விழுந்து பணிந்தனர். விரைவு விரைவாக வரவேற்பு வைபவம் முன்னேறியது. விரைவு விரைவாகச் செல்கிற இரு புரவிகள் பூட்டிய ஸாரட்டு சுவாமிஜியை பார்னெஸ் சாலையில் அமைத்திருந்த பந்தலுக்கு இட்டுச்சென்றது.

அதைத் தொடர்ந்து ஊரிலுள்ள வண்டிகள் எல்லாம் சென்றன. பாதசாரிகளும் திமிதிமி என்று ஓடிப் பின்தொடர்ந்தனர். கொடிபிடித்து, குடைபிடித்து, நடைபாவாடை போட்டு, மரபுப்படி சுவாமிஜியை வரவேற்றனர் இந்தியரான அந்த நாள் இலங்கையர்.

முதல் பந்தலிலிருந்து சுவாமிஜிக்கு ஜாகை ஏற்பாடு செய்திருந்த விட்டுவாசலிலுள்ள இரண்டாம் பந்தலை யாவரும் அடைந்தனர். அவர் அதனுள்ளே பிரவேசித்ததும் ஓர் அழகிய செயற்கைக்கமலம் தனது இதழ்களை விரித்துக்கொண்டது. அதனுள்ளிருந்து பட்சியொன்று பறந்துசென்றது. பாரதத்தாயின் கூம்பியிருந்த இதயகமலம் விரிந்துவிட்டது. இத்தனை நாள் அதில் மறைந்து வாழ்ந்த பெருமை இன்று சிறகடித்துப் பறக்கத் தொடங்கிவிட்டது.

மலர்மழை பொழிய சுவாமிஜியும் அவரது மேல்நாட்டு சிடர்களும் அமர்ந்தனர். வயலின் வாத்தியத்தில் சில சுஸ்வரங்கள்

Koviloor Digital Library

பிறந்து அமைதியை உண்டாக்கின. உடனே தேவார இன்னிசை எழும்பியது. சுவாமிஜியை சம்பிரதாயமாக பாரதத்துக்கு வர வேற்ற முதற் சொற்கள் தீந்தமிழ் சொற்கள், அதுவும் சிவநேசச் செல்வர்களின் தெய்வச் சொற்கள் என்பதில் நமக்குத் தனிப்பட்ட பெருமை உண்டல்லவா? சுவாமிஜிக்கென்றே இயற்றப்பட்ட சம்ஸ்கிருத ஸ்துதியொன்று அதை அடுத்துப் பாடப்பட்டது. பெரும் பிரமுகராகிய ஸ்ரீமான் பி. குமாரஸ்வாமி அவர்கள் சுவாமிஜியை வணங்கிவிட்டு வரவேற்புரையை வாசித்தார்.

விண்ணட்டும் கரக்கம்பத்திடையே எழுந்து, எழுச்சிகொண்ட உணர்ச்சியுடன் பேசினர் சுவாமிஜி. ''பிச்சைக்காரனை ஒரு சந்நியாசிக்கு இப்படிப்பட்ட ராஜோபசாரம் செய்வதிலிருந்தே ஹிந்துக்கள் ஆத்மிகத்துக்கு அளிக்கும் மதிப்பு தெரிகிறது'' என்று நெகிழ்ச்சியுடனும் மகிழ்ச்சியுடனும் கூறினர் சுவாமிஜி. **இந்திய தேசம் உயிர்வாழ வேண்டுமானல் சமய உணர்வைத் தேசிய வாழ்வின் முதுகெலும்பாகச் செய்ய வேண்டும்** என்று ஆணையிட்டார்.

இதே ஆணையை அவர் மீண்டும் மீண்டும் பல இடங்களில் புதுப்பித்தார். எனினும் இன்றே இன்னெரு விவேகானந்தர் தோன்றி இதே ஆணையை இடவேண்டிய நிலையில் நாடு இருக்கிறது.

எல்லாருக்கும் ஆசி வழங்கிவிட்டு சுவாமிஜி வீட்டுக்குள் நுழைந்தார்.

சுவாமிஜி அப்போது தங்கியிருந்த வீடு பிற்பாடு விவேகானந்தர் இல்லம் என்றே பெயர் பெற்றது.

மறுநாள் மாலை மலர் மன்றத்தில் சுவாமிஜியின் மகத்தான உரை மகத்தான கூட்டத்தின் முன்பு நடைபெற்றது. வெளிநாடு சென்று திரும்பிய சுவாமிஜி தாய்நாட்டில் நிகழ்த்திய இந்த முதல் உரை — வெளிநாடு செல்லுமுன் சுவாமிஜி ஸெகந்திராபாத்தில்மட்டும் ஒரே ஒரு முறைதான் மேடை ஏறிப் பேசியிருக்கிறர் என்பது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம் — ''இந்தியா, பரமபாவனமான நாடு'' என்ற பொருளைப்பற்றிய ஆவேசச் சொற்பொழிவாகும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. பகலெல்லாம் ஏராளமான பக்தர்களுடன் உரையாடுவதில் சென்றது. மாலையில் ஈசுவரன் கோயிலுக்குச் சென்றார். வழிநெடுகிலும் வீடுதோறும் சுவாமிஜிக்குப் பூரணகும்பம் அளிக்கப்பட்டது. ஈழத்தீவின் வழக்கப்படி வாயிற்படியில் பழங்களை அலங்காரமாக வைத்து தீபமேற்றியிருந்தனர். ''ஜய மஹாதேவா'' என்ற கோஷத்திடையே சுவாமிஜி ஆலயத்தில் வரவேற்கப்பட்டார். அவர் ஜாகைக்குத்

Koviloor Digital Library

திரும்பியபோது பல அந்தணோத்தமர்கள் தமக்காகக் காத்திருப்பதைக் கண்டார். இரவு இரண்டரை மணிவரையில் அவர்களுடன் உரையாடினர்.

திங்களன்று செல்லையா என்ற அன்பரின் வீட்டுக்குச் சென்றார் சுவாமிஜி. மலர்மாலை மலைக்கிடையே அங்கு எழுந்தருளிய சுவாமிஜியின்மீது புனித கங்கைநீர் — அவரது பிறந்தநாட்டுப் புண்ணிய நதியின் இனிய நீர் — தெளிக்கப்பட்டது. எல்லாருக்கும் சுவாமிஜி விபூதி பிரசாதம் அளித்தார். அங்கு மாட்டியிருந்த குருமஹராஜின் சித்திரமொன்றைக் கண்டு உள்ளம் நனைந்து அதற்குத் தண்டனிட்டார் சுவாமிஜி. சிஷ்யரால் குருவின் பெருமையும் பரவத் தொடங்கிவிட்டது!

அன்று மாலை கொழும்புப் பொது மன்றத்தில் அத்வைத தத்துவத்தை எழில் ஒழுகும் எளியமுறையில் விளக்கிவைத்தார். வேதத்தை அடிப்படையாகக்கொண்டு சர்வதேச சமயத்தைச் சமைப்பதுபற்றிப் பேசினர். சர்வதேசியத்தைப்பற்றிப் பேசினாலும் அதற்காக சுதேச அபிமானத்தை இழந்து அந்நியமோகம் பிடித்தலைவதையும் இதே கூட்டத்தில் கண்டித்தார் சுவாமிஜி, கூட்டத்தினரில் பலர் ஆங்கிலேய உடை அணிந்திருப்பதுதான் சுவாமிஜியின் கண்டனத்துக்குக் காரணம். கீழ்நாட்டுச் சூழலுக்குச் சற்றும் ஒத்துவராத அந்த உடை அணிவது, அந்நியர்களை 'காப்பி' அடிப்பதன்றி வேறெதுவும் இல்லை என்று விண்டு கூறினர் சுவாமிஜி.

இன்று இந்தியாவுக்கு வந்தால் சுவாமிஜி என்ன சொல்வாரோ?

பத்தொன்பதாம் தேதி காலையில் சுவாமிஜி ரயிலில் கண்டிக்குக் கிளம்பினர். முதலில் அவர் விரைவாகச் சென்னை அடைய உத்தேசித்திருந்தாலும் ஈழத்தின் பல நகரங்களிலிருந்து வந்த அழைப்பைத் தட்டமுடியவில்லை.

பிரகிருதி சுந்தரி தனது சௌந்தரியத்தையெல்லாம் மலர்த்திக்கொண்டிருக்கும் இருநூறு மைல்களைக் குதிரைவண்டியில்கடந்து யாழ்ப்பாணம் செல்லப் புறப்பட்டார் சுவாமிஜி. வழியில் ஒரு மலைச்சரிவில் வண்டி விபத்துக்குள்ளாகி முன் சக்கரங்கள் உடைந்து போயின. பிறகு மாட்டு வண்டியில் பிரயாணம் நடைபெற்றது.

எந்த ஆசையுமற்ற மகான்கள் மக்களுக்காக எத்தனைக் கஷ்டங்கள் படவேண்டியிருக்கிறது?

அநுராதபுரத்து போதிவிருக்ஷத்தடியே சுவாமிஜி 'வழிபாடு' என்பதுபற்றி ஒரு சிற்றுரை நிகழ்த்தினர். தமிழ் சிங்களம் இரு மொழிகளிலும் அது பெயர்க்கப்பட்டது. அப்போது மத

Koviloor Digital Library

வெறிகொண்ட புத்த பிக்ஷுகளும் பௌத்தர்களும் திரண்டுவந்து தாரை தப்பட்டைகளை முழங்கி சுவாமிஜியைப் பேசமுடியாதபடி தடை செய்தனர். சுவாமிஜியைவிட அவர்கள் புத்தர் பெருமானை அதிகமாகப் புரிந்து பக்தி செய்தவர்களா, என்ன? சுவாமிஜி அப்போது புத்தராகவே இருந்து தமது ஹிந்துச் சிடர்களை அமைதி யாக இருக்குமாறு கூறி அடக்கியதாலேயே அன்று கலவரம் ஏதும் நேராமலிருந்தது.

மேலும் நூற்றிருபது மைல்களைக் குண்டும் குழியுமான சாலைகளில் கடந்து யாழ்ப்பாணம் சேர்ந்தார் சுவாமிஜி.

யாழ்ப்பாணத்துக்குப் பன்னிரண்டு மைல்கள் முன்பாகவே, அன்பில் சிறந்த அந்த ஊரார் பலர் சுவாமிஜியை வரவேற்றனர். யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு சாலையும் — ஒவ்வொரு வீடுமே — பண்டிகைக் கோலம் பூண்டிருந்தது. அன்று மாலை சுவாமிஜி ஹிந்து கல்லூரிக்குச் செல்கையில் நடைபெற்ற ஊர்வலம் ஓர் அற்புதக் காட்சியாகயிருந்தது.

ஈசுவரன் கோயிலிலும், கார்த்திகேயன் கோயிலிலும், சுவாமிஜி வழிபாடு செய்தார். திருவிதாங்கூரின் முன்னாள் பிரதம நீதிபதியாகிய எஸ். செல்லப்பப் பிள்ளை அவர்கள் சுவாமிஜியை விழாப்பந்தலில் வரவேற்றார். சுவாமிஜி வெகு அழகாகப் பதி லளித்துப் பேசினார். யாழ்ப்பாண சமூகமே அந்த நூறு நிமிட உரையில் மின்சாரம் பாயப்பெற்றதுபோல் ஆயிற்று என்று பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

கூட்டத்தினரின் விருப்பப்படி இங்கு ஸேவியரும் பேசினார். தாம் ஹிந்துமதத்தை ஏற்று சுவாமிஜியுடன் வந்தது எதனால் என்பதை அவர் விளக்கினார்.

இதோடு சுவாமிஜியின் ஈழப்பயணம் முடிவுபெற்றது.

இந்த ஒருவாரகாலத்திலேயே ஈழப்பெருமக்கள் வேதாந்தச் சிறப்பில் மனம் திருப்பப்பட்டனர். ஸ்ரீராமகிருஷ்ணரின் உப தேசத்தைப் பரப்ப சாதுக்களை அனுப்புமாறு பலர் சுவாமிஜியைக் கேட்டுக்கொண்டனர். சுவாமிஜிக்கு வந்த அழைப்புக் கடிதங் களும் தந்திகளும் கணக்கிலடங்கா. ஆனால் அவரால் அவற்றை ஏற்க முடியவில்லை. காலம் போதாதது ஒரு காரணம். அவரது உடலும் மிகமிக அலுத்துப்போயிருந்தது. ''அவர் இன்னும் அதிக நாள் இலங்கையில் இருந்திருந்தால் அன்பினாலேயே கொல்லப் பட்டிருப்பார்'' என்று உடன்இருந்த ஒருவர் கூறுகிறார்.

இன்று பாரதம் என்ற பெயரில் விளங்கும் தாய்த்திரு நாட்டுக்கு அவரை மனம் கசிந்து அனுப்பிவைத்தனர் ஈழத்து அன்புத் தமிழர்கள்.

Koviloor Digital Library

ஜனவரி 26-ந் தேதி மங்களவாரம் — மங்களமான தினமே தான் அது — நீராவிப்படகு இந்திய முனையாகிய பாம்பனை அடைந்தது.

புண்ணிய மண்ணுக்கு மேலும் புண்ணியமூட்டியது சுவாமி விவேகானந்தரின் திருப்பாதம்.

ஆண்டிப்பரதேசியாக சுவாமிஜி திரிந்தகாலத்திலேயே அவரை அண்டி ஆசிபெற்று அவரது அமெரிக்கப் பயணத்துக்கு உதவிய ராமநாதபுரத்து மன்னர் பாஸ்கர ஸேதுபதி தமது அதிகாரிகளுடன் தாமே ராஜாங்கக் கப்பலோடு அங்கு ஆர்வமாகக் காத்திருந்தார். நீராவிப்படகிலிருந்து சுவாமிஜி அந்தப் கப்பலுக்கு மாறியவுடன் மன்னர் உள்ளிட்டயாவரும் மகநீயரை வணங்கினர்.

''நான் அமெரிக்கா செல்லவேண்டுமென்று முதன் முதலில் எண்ணியவர்களில் நீங்கள் ஒருவர். எனவே தாய்நாடு திரும்பும் நான் உங்களை முதன் முதலில் சந்திப்பது பொருத்தமே'' என நாத்தழுதழுக்க ராமநாதபுரத்தரசரிடம் கூறினர் சுவாமிஜி. அதற்கு விடைகூட கூறவொண்ணுமல் மனவெழுச்சி அடைந்திருந்தார் மன்னர்.

கடற்கரை, அதோ தெரிந்தது. 'அதோ' மெல்ல மெல்ல 'இதோ' ஆயிற்று. அங்கு ஆயிரமாயிரம் மக்கள் பக்தி ஆவேசத்துடன் ஆர்ப்பரித்துக் காத்திருந்தனர்.

அலைகளில் துள்ளித் துள்ளிச் சென்று இந்தியாவின் முதல் சர்வதேச ஆத்மிக தூதரைக் கரைக்குக்கொண்டு சேர்த்ததுகப்பல்.

புண்ணிய பாரத மண்ணுக்கு மேலும் புண்ணியம் கூட்டியது சுவாமி விவேகானந்தரின் திருப்பாதம்.

Koviloor Digital Library

அத்தியாயம் —24-A

திக் விஜயம்

வங்காள விரிகுடாவைப் போல் பரந்த, ஆழ்ந்த அன்பைத் தெரிவிக்கும் முறையில் வங்காளம் தந்த வேதாந்தச் செல்வரை வரவேற்றது தமிழகம். பாம்பன் மக்களின் வரவேற்பு அதற்குத் தொடக்கமாகும். மக்களோடு மன்னரும் சேர்ந்து உணர்ச்சி பொங்க சுவாமிஜியை வரவேற்ருர். அதற்கு சுவாமிஜி நன்றிகூறு முகமாகப் பேசுகையில் இந்திய தேசிய வாழ்வு அரசியலிலோ, படை பலத்திலோ, வர்த்தக வளர்ச்சியிலோ, விஞ்ஞான மேம்பாட்டிலோ இல்லை என்றும் மதத்தில்தான் பாரதத்தின் வாழ்வு உள்ளது என்றும் கூறினுர்.

வரவேற்புக்கூட்டம் இனிது முடிந்தது. மன்னரின் ஸாரட்டில் சுவாமிஜி ராஜமாளிகை நோக்கி ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். மன்னரும், உயர் அதிகாரிகளும் வாகனத்தோடு நடந்து சென்றனர். அவ்வளவு மரியாதைசெய்தும் மன்னருக்குத் திருப்தியுண்டாகவில்லை. புரவிகளை வண்டியிலிருந்து அவிழ்த்துவிடுமாறு உத்தரவிட்டார். தாமே தமது அதிகாரிகளுடன் வாகனத்தை இழுக்கலானுர். மன்னனுக்கு மேலாகக் கற்ருேரை மதித்துப் பாராட்டிய தமிழ்ப் பண்பை இப்படி நிருபித்துக் காட்டிவிட்டார் ராமநாதபுரத்து மன்னர்.

மறுநாள் ராமேசுவரத்தின் மகோந்நதமான ஆலயத்துக்குக் கசிந்த கண்களும் கசிந்த நெஞ்சுமாகச் சென்ருர் சுவாமிஜி. ஐந்தாண்டுகளுக்கு முன் அலைபாயும் உள்ளத்தோடும் நடந்து நடந்து கொப்புளம் கண்ட உள்ளங்காலோடும் ராமநாதனைக் கண்டதையெல்லாம் நினைவு கூர்ந்தார். ஐந்தாண்டுகளுக்கு முன் யாரும் கவனியாமல் வந்தவரை இன்று கோவில் அருகே யானைகளும் ஒட்டைகளும், கோவில் திருச்சின்னங்களும் வரவேற்றன. கடல்தாண்டிச் சென்று வெற்றிபெற்றுத் திரும்பிய ராகவன் ராமநாதனைப் பூஜித்ததுபோலவே கடல்தாண்டிச் சென்று அஹிம்ஸா வெற்றி — ஆத்மிக வெற்றி — பெற்றுத் திரும்பிய சுவாமிஜியும் ராமநாத சுவாமியை மனமாரப் பணிந்தார்.

ராமேசுவரத்து ஆலயத்தில் நடைபெற்ற வரவேற்புக்கு அற்புதமாக விடையளித்துப் பேசினுர் விவேகானந்த சுவாமி. சிவபெருமான் ஒவ்வொரு ஜீவனிலும் இருக்கிருன் என உணர்ந்து மக்கள் சேவையை மகாதேவன் சேவையாக நினைக்குமாறு அறை கூவினுர். மறுநாளே மகாராஜா ஆயிரக்கணக்கான ஏழையருக்கு

Koviloor Digital Library

உணவும் உடையும் அளித்து சுவாமிஜியின் ஆணையை காரியத்தில் செய்துகாட்டினர்.

சுவாமி விவேகானந்தர் மேனுடுகளில் ஹிந்து தர்மத்துக்கு வெற்றிகண்டு திரும்பியதையொட்டி மன்னர் நாற்பதடி உயர முள்ள ஒரு ஜய ஸ்தம்பம் எடுத்தார். இன்று பாரத அரசின் பிரமாணவாசகமாக விளங்கும் ஸத்யமேவ ஜயதே என்ற உப நிஷத மகாமந்திரத்துடன்தான் இந்த ஜய ஸ்தம்பத்தின் வாசகமும் தொடங்குகிறது.

* * *

திருப்புல்லாணியில் ஒரு சம்பிரதாயச் சடங்குகளில்லாத வர வேற்பைப் பெற்றுக்கொண்டு ராமநாதபுரம் அடைந்தார் சுவாமிஜி. கடற்கரையிலிருந்து மாட்டு வண்டியில் சிறிது தூரம் பயணம் நடைபெற்றது. பின்னர் அழகிய ஏரிகளில் சம்ஸ்தானப் படகிலே பிரயாணம் தொடர்ந்தது.

சுவாமிஜி சம்ஸ்தானத் தலைநகராகிய ராமநாதபுரத்தை அடைந்ததும் பீரங்கிகள் கம்பீரமாக வரவேற்பளித்தன. கணக் கற்ற அதிர்வேட்டுக்கள் ஜிலுஜிலுவென்று விண்ணில் ஏறி ஒளியைச் சிந்தி கர்ஜித்தன. பாண்டு கோஷ்டிகள் வீரரை வரவேற்கும் முறையில் இசைபாடின. திவர்த்திகள் வேலி எடுத்ததுபோல் இருமருங்கும் ஜ்வலிக்க சுவாமிஜி மன்னரின் வாகனத்தில் நகர் வலம் சென்ருர். இளையராஜாவும், மன்னரின் அந்தரங்க காவலர் களும் சுவாமிஜியைப் புடைசூழ்ந்திருக்க, மன்னரே பாதசாரியாக பாதையைக் கூறிக்கொண்டு சென்ருர். சிறிது தூரம் சென்றபின் மன்னர் வேண்டுகோளுக்கிணங்க சுவாமிஜி அவரது எழிலார்ந்த பல்லக்கில் அமர்ந்து ஊர்வலத்தைத் தொடர்ந்தார். 'சங்கர வில்லா' என்ற பெருமாளிகையும் வந்துசேர்ந்தது.

அத்வைத ஸ்தாபகரின் பெயரைத்தாங்கிய அந்த மாளி கையில், அத்வைதத்தின் தனிப்பெரும் பிரசாரகரான சுவாமிஜி பிரவேசித்தார். சிறிது நேரம் ஒய்வுகொண்டுவிட்டு அதன் பிரம்மாண்டமான சபாமண்டபத்தை அடைந்தார். ஆயிரக் கணக்கான கண்டங்களிலிருந்து புறப்பட்ட வாழ்த்தொலிகள் ஆகாயத்தை முட்டின. மன்னர் பாராட்டுரை வழங்கியபின் அவரது சகோதரராகிய ராஜா தினகர சேதுபதி வாழ்த்துப் பத்திரத்தை வாசித்தார். அதனை சொக்கத் தங்கத்தினுல் ஆகிய சௌந்தரியப் பேழை ஒன்றில் வைத்து சுவாமிஜிக்கு அர்ப்பணித் தார். சுவாமிஜி ஓர் அரிய உரை நிகழ்த்தினர்.

இனிப்புக்கள் விற்கும் வீதியிலே செல்கிற ஒரு குழந்தை அந்த இனிப்புக்குச் சபலப்படாமல் செல்ல வேண்டுமென்ருல்

Koviloor Digital Library

எப்படியிருக்கும்? இந்த நூலாசிரியர் அப்படிப்பட்ட ஒருநிலையில் தான் இருக்கிறார். சுவாமிஜியின் அமிருதச் சொற்பொழிவுகளை யெல்லாம் விட்டுப் பிரிய மனமில்லை; அவற்றின் சாரத்தையேனும் இங்கு தரவேண்டும் என்ற துடிப்பு ஏற்படுகிறது. என்றாலும் சுவாமிஜியின் ஏராளமான பிரசங்கங்களின் சாற்றைப் பிழிந்து கொடுத்தாலும்கூட இந்நூல் மிக மிக விரிந்துவிடும். இதனால் இந்நூலை ஆக்குபவர் தமக்கு ஓர் இனிய அநுபவத்தை மறுத்துக் கொள்வதுடன், வாசகர்களுக்கு இனிப்புக்களை வழங்கவும் மறுக்க வேண்டியிருக்கிறது. இதற்காக வாசகர்கள் அவரை மன்னித் தாலும் அவர் தம்மைத் தாமே மன்னித்துக்கொள்ள முடியாதவ ராக இருக்கிறார்!

சுவாமிஜி ராமநாதபுரம் சமஸ்தானத்துக்கு விஜயம்செய்த தற்கு ஞாபகார்த்தமாக சென்னை பஞ்ச நிவாரண நிதிக்கு திர வியம் சேர்த்துத்தரவேண்டுமென்றார் மன்னர். மக்கள் சேவையே அல்லவா சுவாமிஜியின் மதம்?

ராமநாதபுரத்துத் தர்பாரில் கோலாகலமாக நடைபெற்ற ஒரு வரவேற்பில் சுவாமிஜி ராமநாதபுரத்தரசருக்கு ''ராஜரிஷி'' என்ற விருதை அளித்து சிலாகித்துப் பேசினார். மன்னர் வேண்டு கோளுக்கிணங்க சக்தி உபாஸனை குறித்து ஃபோனோகிராப்பில் ஒரு சிற்றுரையைப் பதிவு செய்தார்.

அருமந்தச் சிடர்கள் நிறைந்த தமது அன்புக்குரிய சென் னைக்குக் கிளம்பினார் சுவாமி விவேகானந்தர். வழியிலுள்ள பல இடங்களில் வரவேற்பு உபசாரங்களை ஏற்று உபதேசித்தார். மகான் ஒருவரைத் தமிழன்னை எப்படிப் போற்றி வழிபடுவாள் என்பது அப்போது நிருபணமாயிற்று. சுவாமிஜியின் புகழ் தமிழ் நாட்டில் எப்படிக் காட்டுத்தீயாகப் பரவியிருந்தது என்பது அப் போது வெளியாயிற்று.

பரமக்குடி, மானமதுரை, சிவகெங்கை ஆகிய நகரமக்களின் உபசரணைகளை ஏற்று மதுரை அடைந்தார் சுவாமிஜி. ஓயாத அலைச்சலாலும், சொற்பொழிவாலும், உடல் அலுத்திருந்தாலும் தமிழ் பெருமக்களின் அன்பு அவர் உள்ளத்தை உற்சாகமாகவே வைத்திருந்தது. மதுராபுரியில் இந்த உற்சாகத்தைத் திக்கங்காக வடித்து பிரசங்கம் புரிந்தார் சுவாமிஜி. ஸ்ரீமதி மீனாக்ஷி—சுந்தரே சுவரர்களின் திருக்கோயிலில் வழிபட்டார். ஆலவாய் ஆலயத்தின் கலைச்சிறப்புக்களைக்கண்டு பெருமிதமும் பேருவகையும்கொண்டார். அர்ச்சகர்களிடம் மிகவும் அன்புடன் பழகிப்பேசினார்.

மதுரையிலிருந்து அவர் கும்பகோணம் செல்கிற மார்க்கத் தில் ஒரு சிற்றூர் மீதமில்லாமல் ரயில் நிலையம்தோறும் மக்கள்

Koviloor Digital Library

கூடி அவருக்கு அஞ்சலிகளை அளித்தனர். எல்லா வரவேற்பு உபசாரங்களையும் பெற்றுச் சிற்றுரைகள் நிகழ்த்தினார் சுவாமிஜி.

திருச்சியில் ஆயிரத்துக்கு மேம்பட்டவர்கள் விடியற்காலை நாலுமணிக்கு ரயில் நிலையத்தில் கூடியிருந்தனர். மக்கள் அளித்த வரவேற்புப் பத்திரத்துடன், தேசிய உயர்தரப் பாடசாலைக்குழு, மற்றும் மாணவ சமூகம் இவற்றின்சார்பிலும் வாழ்த்தேடுகள் சமர்ப்பிக்கப்பட்டன. தஞ்சையிலும் உயர்ந்த முறையில் சுவாமி ஜிக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

கும்பகோணத்தில் சுவாமிஜி மூன்று நாட்கள் தங்கியிருந் தார். அப்போது மக்களின் உற்சாகம் கரைபுரண்டோடியது. கும்பகோணத்தில்தான் சுவாமிஜி ''வேதாந்தத்தின் உபதேசப் பணி'' என்ற ஞானச்சுடர் உரையை நிகழ்த்தினார்.

பட்சணக் கடைவிதியின் வழியே செல்லும் குழந்தை சபலம் தாளமுடியாமல் அங்கு உதிர்ந்துகிடக்கும் பூந்திகளை எடுத்து மெல்லுவதுபோல் இந்த உரையின் சில பிந்துக்களை இங்கு சிந்தனை யால் உண்போம்:

''இன்று உலகுக்குத் தேவைப்படுகிற உன்னதக்கருத்து இதுவே — முக்கியமாக உலகிலுள்ள உயர்வகுப்பினரைவிடத் தாழ்ந்த வகுப்பினர்களுக்கும், கல்விமான்களைவிடக் கல்வியறி வற்றவருக்கும், பலசாலிகளைவிட பலவினர்களுக்கும் தேவைப் படுகிற இந்தக் கருத்தாவது: சகலபிரபஞ்சமும் ஒன்றேதான்; சத்தியவஸ்து ஒன்றே; அது உன்னிலும் என்னிலும் எல்லாவற்றி லும் உள்ளது; நமக்குள்ளேயே உள்ளது, ஆத்மாவாக உள்ளது; இந்த சாசுவதமான மகத்தான கருத்தே அது. ஆத்மா என்பது அனந்தமான ஒன்றே — நானும் நீங்களும் சோதரர்மட்டுமல்ல; நாம் ஒருவரே — என்ற இந்த உணர்வுதான் எல்லா நன்னெறி களுக்கும் நிரந்தரமான காப்பாகும்''.

ஞானியர்களுக்கும் எளிதில் கைவராத அத்வைதம்தான் உலகத்தின் எல்லா மக்களுக்கும் லட்சியம் என்று சுவாமிஜி அறை கூவினார். எனில் அவர் மனித சமுதாயத்திடம் எத்தகைய நம் பிக்கை வைத்திருக்கவேண்டும்? அவர் இந்த உரையில் மேலும் கூறியதைப் பாருங்கள்:

''நான் அத்வைதத்தை அளவுக்குமீறி உபதேசிக்கிறேன், துவைதத்தை மிகவும் சொற்பமாகத்தான் சொல்கிறேன் என்று குறைகூறப்படுகிறது. துவைத சமயத்தில் எவ்வளவு மகோந்நதம் உள்ளது, எத்தகைய அன்புக்கடல் உள்ளது, எப்பேர்ப்பட்ட எல்லையற்ற பரவச அருள் நிலையும் ஆனந்தமும் உள்ளது என்பதை யெல்லாம் நான் நன்றாக அறிவேன். ஆம், அவ்வளவும் எனக்குத்

Koviloor Digital Library

தெரியும். என்றாலும் இது அழுவதற்கான காலமில்லை; ஆனந்தத்தில்கூடக் கண்ணீர்விடுகிற சமயமல்ல இது. நாம் வேண்டியது அழுதாயிற்று; எனவே இனியும் நாம் மிருதுவாக இருப்பதற்கு இது தருணமல்ல. பஞ்சு பொதியாகிற அளவுக்கு நாம் மிருதுவாக இருந்துவிட்டோம். இப்போது நமது தேசத்துக்கு வேண்டியன இரும்பை நிகர்த்த தசைகளும், உருக்கை ஒத்த நரம்புகளும், எதாலும் தடுக்கமுடியாத மகத்தான சங்கல்ப பலமுமே. நோக்கத்தை எக்காலும் நிறைவேற்றிக்கொள்கிற சங்கல்ப பலம், அதற்காக ஆழ்கடலில் அடிவாரம் வரையில் சென்று மரணத்தை நேருக்குநேர் எதிர்கொள்கிற சங்கல்ப பலம் இன்று தேவை. யாவும் ஒன்றே என்னும் அத்வைத லக்ஷியத்தைப் புரிந்துகொண்டு உணர்வுக்குக் கொண்டுவருவதால்தான் இந்த நிலைமையை உண்டாக்கவும், நிலைநாட்டவும், வலுவாக்கவும் இயலும். நம்மில் நம்பிக்கை, நம்பிக்கை, நம்பிக்கை. உங்களுடைய புராணங்கள் கூறும் முப்பத்துமுக்கோடி தேவதைகளிடமும், மேல்நாட்டினர் அறிமுகம் செய்துள்ள கடவுளரிடமும் உங்களுக்கு நம்பிக்கையிருந்தும் உங்களிடமே, நம்பிக்கையில்லாவிடில் உங்களுக்கு விமோசனமே கிடையாது. சுயநம்பிக்கை கொள்ளுங்கள்; அதன்மீதே உறுதியாக நில்லுங்கள். எந்த அந்நியராயினும், விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலர் முப்பத்துமுக்கோடி மக்களாகிய நம்மைக் கடந்த ஆயிரம் ஆண்டுகளாக ஆண்டு வருவது எதனால்? அவர்களுக்குத் தங்களிடம் நம்பிக்கை இருந்தது; நமக்கு இல்லை.

''ஒவ்வொரு ஜீவனுக்கும் நாம் இவ்வாறு பிரகடனம் செய்வோம்: எழுந்திரு, எழுந்திரு, விழிப்புறு. பலவீனமென்ற இந்த மயக்கத்திலிருந்து விழிப்புறு, பலவீனமானவர் எவருமே கிடையாது: ஆத்மா சர்வ வியாபகமானது; சர்வசக்தி வாய்ந்தது; சர்வக்ஞமானது. நிமிர்ந்து நில். உன் சக்தியை உறுதிகூறு. உனக்குள் உள்ள ஆண்டவனை எடுத்தியம்பு. அவனை மறுதலிக்காதே.''

மக்களையெல்லாம் ''ஆண்டவனாகுங்கள்'' என்று அறைகூவுவதுதான் எவ்வளவு அற்புதமாயிருக்கிறது. ''தேவராவோம்; தேவராக்குவோம்'' என்று கம்பீரமாக சங்கநாதம் செய்தவரல்லவோ சுவாமி விவேகானந்தர்?

கும்பகோணத்திலிருந்து சென்னைவரும் வழியில் மீண்டும் வரவேற்புக்கள். மாயூரத்தில் அளிக்கப்பட்ட வரவேற்புக்கு விடைகூறிய சுவாமிஜி 'ஆண்டவன் இட்ட பணியைத்தான் நான் ஏதோ என்னாலியன்றமட்டும் செய்தேன்' என்று பணிவுடன் கூறினார். ஆயிரம் ஆனாலும் மாயூரம் ஆகாது என்று புகழ்பெற்ற

Koviloor Digital Library

மாயூரத்து மக்கள் 'ஜெய் சுவாமி விவேகானந்த மஹாராஜ்கி ஜெய்' என்று ஜயகோஷமிட ரயில் நகர்ந்தது.

சென்னை நெருங்கிக்கொண்டிருந்தது. ஏதோ ஒரு சிற்றூர். அங்கு சுவாமிஜி பயணம் செய்த 'எக்ஸ்பிரஸ்' ரயில் நிற்காது. என்ருலும் மக்களுக்கு அவரைப்பார்த்து அஞ்சலி செலுத்தியே ஆகவேண்டுமெனப் பேராவல். ரயிலை நிறுத்தும்படி ஸ்டேஷன் மாஸ்டரைக் கேட்டுக்கொண்டு பார்த்தார்கள். ஆனல் அவருக்கு ஏது அந்த அதிகாரம்? ரயிலோ கண்ணுக்குத் தொலைவில் வந்து விட்டது. 'கிஜு கிஜு' என்று நெருங்கிக்கொண்டும் இருக்கிறது. அவ்வளவுதான் நூற்றுக்கணக்கான மக்கள் தண்டவாளத்தின் குறுக்கே படுத்துக்கொண்டு விட்டார்கள். ஸ்டேஷன் மாஸ்டர் விலவிலத்துப்போனுர். ரயிலின் கார்ட் விஷயத்தைப் புரிந்து கொண்டு ரயிலை நிறுத்திஞர். மக்கள் ஆனந்தபரவசமாக சுவாமி ஜியின் பெட்டியைச் சூழ்ந்துகொண்டு ஆரவாரம் செய்தனர். அந்தத் தமிழ்நாட்டுக் கிராமவாசிகள் அமிழ்த நெஞ்சைக் கண்டு சுவாமிஜியின் நெஞ்சு நெகிழ்ந்தது; கண்களிலிருந்து பொல பொல என நீர் உதிர்ந்தது. இருகரங்களையும் தூக்கி அவர்களுக் கெல்லாம் ஆசிகூறிப் பேசிஞர்.

சுவாமி விவேகானந்தர் வரப்போகிருர் என்பதை அறிந்த சென்னை ராமபிரானை வரவேற்கத் துடித்த பரதனைப்போல உற் சாகத்தில் திக்குமுக்காடிக் கொண்டிருந்தது. பரதேசப் பரிவி ராஜராக அவர் சுற்றிய நாட்களில் அவரது உபதேசத்தை மிக மிகப் புரிந்துகொண்டு அவரைப் பெருமைப்படுத்தி தானும் பெருமை கண்ட நகரம் சென்னையே. அமெரிக்கா செல்வதற்காக அவருக்கு நிதியம் சேகரித்தளித்த நகரமும் சென்னையே. அன்று தாங்கள் வைத்த நம்பிக்கை எவ்வளவு சரியானது என்று இன்று தன்னையே பாராட்டிக்கொண்டது சென்னை. சுவாமிஜியை வர வேற்க அதிவிமரிசையாக ஏற்பாடுகள் தொடங்கிற்று.

வழக்கறிஞர் வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் — தர்ம ரக்ஷா மணி ஸ்ரீ கே. பாலசுப்பிரமணியய்யர் அவர்களின் பிதா — நீதிபதி எஸ். சுப்பிரமணிய அய்யர், வழக்கறிஞர் பிலிகிரி அய்யங் கார், டாக்டர் நஞ்சுண்ட ராவ் முதலிய பிரமுகர்கள் சுவாமிஜியின் வரவேற்பில் பெரும் சிரத்தை கொண்டவர்களில் முக்கியமாகக் குறிப்பிடவேண்டும். ஸ்ரீராமகிருஷ்ண மாணவரில்லம் என்ற கலைக்கோயிலைப் பிற்காலத்தில் தோற்றுவித்த ஸி. ராமஸ்வாமி அய்யங்கார், ஸி. ராமாநுஜாச்சாரியார், பேராசிரியர் பி. என். ஸ்ரீநிவாஸாச்சாரியார் முன்பே நமக்கு நன்கு பரிசயமான 'கிடி' என்ற சிங்காரவேலு முதலியார், அழசிங்கர், ஆகியோர் சுவாமி

Koviloor Digital Library

ஜியின் சென்னை வாசம் சிறப்புற நிகழ்ந்ததற்குக் காரணகர்த்தர்களாவர்.

சென்னை மாநகரம் பிரம்மோத்ஸவக்கோலம் பூண்டது. நகர வீதிகள் அலங்கரிக்கப்பட்டன. வெற்றிவளைவுகள் பதினேழு எழுப்பப்பட்டன. 'பூஜ்ய விவேகானந்தர் நீடு வாழ்க,' 'ஓங்குக ஈசுவர சேவகர்', 'விழிப்புற்ற இந்தியாவின் இதயபூர்வமான நல்வாழ்த்துக்கள்', 'ஸ்ரீராமகிருஷ்ணரின் அருமைச் செல்வர் வாழ்க' என்பதுபோன்ற வாசகங்களை சாலைகளிலெல்லாம் காணப்பட்டன. ஊர்முழுவதும் உள்ள மக்கள் 'சுவாமி விவேகானந்தர் எப்போது வருகிறார், எப்போது வருகிறார் ?' என்று கேட்டபடியிருந்தனர். அனைவர் நாவிலும் விவேகானந்தர் நாமமே நின்றது. பட்டப் பரீட்சை எழுதுவதற்காக வெளியூர்களிலிருந்து வந்த ஏராளமான மாணவர்கள் சுவாமிஜியின் விஜயத்துக்காகச் சென்னையிலேயே பொங்கும் உள்ளத்துடன் தங்கியிருந்தனர்.

நாலாண்டுகளுக்கு முன்பு சுவாமிஜி சென்னைக்கு வந்திருந்தபோது அவரிடம் ஈடுபாடு பூண்டு வாழ்ந்த மாணவர்களைப் பலர் 'அர்த்தமில்லாமல் ஆவேசப்படுகிறவர்'கள் என்று கேலி செய்ததுண்டு. சுவாமிஜியை மேல்நாடு அனுப்ப அவர்கள் நிதி திரட்டத் தொடங்கியபோது 'கனவு காண்பவர்கள்' என்று கிண்டல் செய்ததுண்டு. இப்போது அவர்களது ஆவேசம் எவ்வளவு தகுந்த பாத்திரத்தைக் காரணமாகக் கொண்டது என்பதை நாடு முழுவதும் உணர்ந்தது. அவர்களுடைய கனவு நனவானதை அனைவரும் கண்டு ஆச்சரியம் கொண்டனர். அந்த இளைஞர்கள் இப்போது சுவாமிஜியின் வெற்றிப் பிரவேசத்தின்போது தங்கள் மனோரதம் நிறைவேறி இறும்பூது அடைந்தனர்.

இளம் தலைமுறையைக் காக்கத்தானே சுவாமிஜியின் அவதாரமே ? அறிவில் சிறந்த சென்னையில் என்றுமே தரமான சஞ்சிகைகள் உண்டு. அவையெல்லாம் சுவாமிஜியைக் குறித்துப் பரவச நடையில் தலையங்கம் தீட்டின. 'தீரத்துடன்' கடல் கடந்து தன்னந்தனியாகச் சென்று பாரதத்தின் மகிமைக்கு மேல் நாடுகளின் கண்களைத் திறந்து வைத்தவர்' என்று ஏடுகள் அவரை ஏகோபித்துப் பாராட்டின. அவர் சென்னை வரும்போது 'ஹிந்து' 'மெயில்' முதலிய பத்திரிகை நிருபர்கள் செங்கல்பட்டில் அவரைச் சந்தித்து, அங்கிருந்து அவருடனேயே பிரயாணம்செய்து பல விவரங்களைச் சேகரித்துக் கொண்டார்கள்.

1897-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஆறும்தேதி என்ற அந்த மகத்தான தினத்தில் அதிகாலையிலிருந்து நகர மாந்தர் திரள் திரளாக எழும்பூர் ரயில் நிலயத்தை நோக்கிச் சென்றுகொண்

Koviloor Digital Library

டிருந்தனர். எல்லார் இதயமும் அன்பு, ஆவல் இவற்றில் தத்தளித்துக் கொண்டிருந்தன.

அவ்வளவு கூட்டத்திற்கும் இடவசதியிராதென்பதால் பிளாட்பாரத்தில் செல்வதற்கு விசேஷ கட்டணம் வசூலிக்கப் பட்டது. அப்படியும் பிளாட்பாரம் நிரம்பிவழிந்தது. பொது மக்களோடு, சென்னை நகரத்தின் பிரமுகர்கள் பலரும் அவர்களில் இடம்பெற்றிருந்தனர்.

சரியாக ஏழுமணி ஐம்பது நிமிஷத்துக்கு சுவாமிஜி பிரயாணம் செய்த ரயில் ஸ்டேஷன் அதிர, ஸ்டேஷனில் கூடியிருந்தவர் அனைவரின் இதயங்களும் கண்களும் வெடித்துவிடும்படி விம்ம வந்து நின்றது.


சந்திரகாந்தி ஓர் உருப்பெற்று வந்தாற்போல் குளிர்ச்சியும், பிரகாசமும் ஒருங்கே இணைந்த சுவாமி விவேகானந்தர் சென்னை மண்ணில் தமது திருக்காலை வைத்தார். வான்முகட்டைக் கிழிப்பதுபோன்ற வாழ்த்தொலி பல்லாயிரம் கண்டங்களிலிருந்து பெருகியது. மாணவரின் திறமையறிந்து தேர்ந்தெடுத்த ஆசிரியர், அவன் பிற்காலத்தில் பெரும்பதவியும் புகழும் பெற்று விளங்கும் போது எப்படிப் பூரிப்பாரோ, அப்படிப் பூரித்தது சென்னை — நாலாண்டுகளுக்கு முன்புதான் விவேகானந்தர் பேர்பூணாத விவே கானந்தரிடம் அறிந்திருந்த மகிமையை இன்று நானிலம் எல்லாம் அறிந்துவிட்டது என்பதால்.

குருபாயிக்களான நிரஞ்ஜனானந்தர், சிவானந்தர் இருவரும் சுவாமிஜியுடன் வந்தனர். எழுத்தர் குட்வினும் அவருடன் வந்தார். முன்தினமே சென்னைக்கு வந்திருந்த ஸேவியர் தம்பதி சுவாமிஜியின் வரவேற்பில் கலந்துகொண்டனர்.

ரயில் நிலையத்தில் வரவேற்பானதும் பிரம்மாண்டமான ஊர் வலம் தொடங்கிற்று. இரட்டைக் குதிரைகள் பூட்டிய ஸாரட்டில் சுவாமிஜி ஜயசிலராக ஆரோஹணித்தார். நீதிபதி ஸர். ஸுப்ர மண்ய அய்யரும், குருபாயி இருவரும் அவரோடு அமர்ந்தனர். ஜன நெரிசல் சொல்லிமுடியாது. குதிகாலில் நின்றும், மற்றத் தலைகளுக்குமேல் கழுத்துவலிக்க எழும்பியும் சுவாமிஜியைத் தரி சனம் செய்து பெருங்களிப்பு பெற்றனர் மக்கள்.


சிந்தாதிரிப்பேட்டை மார்க்கமாக நேபியர் பார்க், மவுண்ட் ரோட், வாலாஜா சாலை, பைக்ராஃப்ட் சாலையைக் கடந்து தெற்கு கடற்கரை வீதிக்கு வந்து சேர்ந்தது ஊர்வலம். நாம் ஒரே வரியில் ஊர்வலத்தைச் சொல்லிவிட்டாலும், உண்மையில் அது ஊரை வலம் செல்வதால்மட்டும் ஊர்வலமாயிராமல் ஊர்ந்து ஊர்ந்து சென்றதாலும் ஊர்வலமாகயிருந்தது. வீதிகளில் வீடுகள்

Koviloor Digital Library



கன்னியா குமரியில் உள்ள விவேகானந்தர் பாறை—
சுவாமியவர்கள் இங்கிருந்து தான் இந்திய நாட்டை
நோக்கினர்—அதன் பிரச்னைகளைப் பற்றி சிந்தித்தார்—
தமது எதிர்கால வேலையை உருவாக்கினர்

Koviloor Digital Library



1897-ம் ஆண்டு மேற்கு நாட்டு விஜயத்தினின்று திரும்பிய சுவாமி விவேகானந்தர் சென்னையில் சில நாள் தங்கிய இல்லம். முன்பு "ஐஸ் ஹௌஸ்" என்று அழைக்கப்பட்டது, இப்போது "விவேகானந்தர் இல்லம்" என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது

Koviloor Digital Library

யாவும் பண்டிகைக் கோலம் கொண்டன. ஜன்னல்கள், வெளிமாடிகள், யாவும் மக்கள் திரளில் நிரம்பியிருந்தன. வீடுதோறும் சுவாமிஜிக்கு புஷ்பாஞ்சலி, பூர்ணகும்பம் — தெய்வத்துக்குச் செய்வதுபோல் தீபாராதனை, மாடிகளிலிருந்தெல்லாம் மலர்கள் சொரியப்பட்டன.

நமக்கு இன்று மிகவும் பரிசயமான சாலைகள் வழியே சுவாமிஜி சென்றார் என்பதை நினைக்கும்போதெல்லாம் அவரிடம் ஏதோ ஒரு புதிய உறவு கொண்டாடத் தோன்றுகிறது.

இளைஞர்களின் உற்சாகத்தைப்பற்றி முன்பு குறிப்பிட்டோம். அறிஞர்களும் கல்விமான்களும் அவருக்காகக் கூடியதை குறிப்பிட்டோம். ஆனால் பாமரரான வயதுமுதிர்ந்த பெண்களையும்கூடக் கவரும் சாந்நித்தியம் அவருக்கு இருந்தது. தோட்டி ஒருத்தி கூட்டத்தை விலக்கமுடியாமல் விலக்கியபடி சுவாமிஜியை நெருங்கினாள். அறிவுக்கனல்வீசும் அந்த அருட்புனலைக் கண்டதும் அவளது கண்கள் உருகிப்பெருகின. ''ஞானசம்பந்தமூர்த்தியிடம் என் பாபங்களையெல்லாம் கழுவிக்கொள்கிறேன்'' என்று கூவினாள் அவள்.

ஞானசம்பந்தர்தான் விவேகானந்தர் — ஆம், அவர் பேர் அறிவுடன் பொருந்தியவரல்லர் என்று யார்தான் கூற இயலும்?

கடற்கரை சாலையில் கோச்சு திரும்பியவுடன் வாலிபர்களின் ஆவேசம் எல்லைமீறிப்போயிற்று. வண்டியில் பூட்டியிருந்த குதிரைகளை அவிழ்த்துவிட்டு அவர்கள் தாங்களே அதனை இழுக்கலாயினர். இவர்களில் ஸ்ரீ கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார் அவர்களும், காலஞ்சென்ற என். கோபாலஸ்வாமி அய்யங்கார் அவர்களும் இருந்தனர்.

ஒன்பதரை மணிக்கு வழக்கறிஞர் ஸ்ரீமான் பிலிகிரிராவ் அவர்களின் 'காஸில் கெர்னன்' என்ற பெருமாளிகையை அடைந்தது ஊர்வலம். அதுதான் சுவாமிஜி தங்கவேண்டிய இடம். இதன்பின் 'ஐஸ் ஹவுஸ்' என்று நீண்டகாலத்துக்கு அழைக்கப்பட்ட அந்த மாளிகை இப்போது 'விவேகானந்தர் இல்லம்' என்றே பெயர் பெற்றிருக்கிறது.

'காஸில் கெர்னனில்' சுவாமிஜி இறங்கியவுடன் சென்னை வித்வத் மனோரஞ்சனி சபையின் சார்பில் வக்கீல் ஸ்ரீகிருஷ்ணமாச்சாரியார் சம்ஸ்கிருதத்தில் ஓர் உரையை வாசித்து அவருக்கு அளித்தார். இதை அடுத்துக் கன்னடத்தில் ஒரு வரவேற்புப் பத்திரம் அளிக்கப்பட்டது. சுவாமிஜி பிரயாணத்தினால் மிகவும் களைத்திருப்பதால் அவருக்கு ஓய்வு தேவை என்று கூறி, கூட்டத்தினரைக் கலையுமாறு கேட்டுக்கொண்டார் ஜஸ்டிஸ் ஸுப்ரமண்ய அய்யர்.

Koviloor Digital Library

காஸில் கெர்னன் பெயருக்கேற்ப கோட்டையாகவேதான் இருந்தது. அதன் விஸ்தாரமான ஓர் அறையில் சுவாமிஜி ஓய்வு பெறச் சென்றூர்.

''சென்னை நகரம் தனது குழந்தைப் பருவத்திலிருந்து ஐரோப்பியர், இந்தியர் எவருக்குமே இத்தகைய உற்சாக வரவேற்பு அளித்துக் கண்டதில்லை. அரசாங்க பூர்வமாகச் சென்னையில் இதுவரை நடந்துள்ள வரவேற்புகளிலும் எதுவுமே சுவாமி விவேகானந்தருக்கு அளிக்கப்பட்டதற்குச் சமானமாகாது'' என்று ஒரு பிரபல பத்திரிகை கூறிற்று.

சுவாமிஜி சென்னையில் ஒன்பது நாட்கள் தங்கியிருந்தார். இதனை ஒரு நவராத்ரி என்றே பொருத்தமாகக் கூறுகிறூர் ஸ்ரீ கே. சுந்தரராமய்யர் — திருவனந்தபுரத்தில் ஏற்கனவே சுவாமிஜியைக் கண்டு உபசரித்தவர்.

சென்னைக்கு வந்துசேர்ந்த அன்று சுவாமிஜி உடலால் மிகவும் களைத்துத்தான் இருந்தார். எனினும் ''இந்தியாவில் ஒருவரை ஆன்மிகப் பணி ஒருபோதும் அலுப்புறச் செய்வதில்லை'' என்று கூறி பேட்டிகள் வழங்கினுர். ஸ்ரீசுந்தரராமய்யர், பேராசிரியர் ரங்காசாரியார், அழகியசிங்கர் ஆகியோர் சுவாமிஜி உரை ஆற்றுவதற்கு நான்கு பொருள்களை யோசனை கூறினுர்கள். அவை யாவன: எனது பிரசாரத் திட்டம்; இந்திய முனிவர்கள்; நடைமுறை வாழ்வும் வேதாந்தமும்; இந்தியாவின் எதிர்காலம். சென்னையில் வரவேற்புக்கு சுவாமிஜி அளிக்கும் விடைதவிர இந் நான்கு விஷயமாக அவர் பேசவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்கள். சுவாமிஜியும் அதற்கு இணங்கினுர். இவைதவிர அழகிய சிங்கரின் கோரிக்கைக்கிணங்க திருவல்லிக்கேணி இலக்கிய சங்கத்தில் தமது இந்தியப் பணியின் அம்சங்களைப்பற்றி விவரிக்கவும் சுவாமிஜி ஒப்புக்கொண்டார். நல்லார்கள் நல்ல எண்ணங்கள் நிச்சயமாகப் பலிக்கும் என்பது சாஸ்திரம். சுவாமிஜியின் பிரிய சிஷ்யர்கள் விரும்பியபடியே அவர் இந்த அற்புதமான உரைகளை நிகழ்த்தினுர்.

வந்த அன்று மாலை சுவாமிஜி ஜயதேவ அஷ்டபதியிலிருந்து பரம மதுரமாக, நளினமாக, குளிர்ச்சியாகச் சில பாடல்களைப் பாடித் தமது அருமை அடியார்களை மகிழ்வித்தார்.

காஸில் கெர்னனில் ஓயாமல் ஒழியாமல் ஜனக்கூட்டம்தான். பிரசித்திபெற்ற மடாதிபதிகளுக்குக் காட்டுவதைப் போன்ற — அதைவிட அதிகமாகவே — சுவாமிஜியிடம் மரியாதை காட்டினர் மக்கள். உயர்குடும்பப் பெண்கள் உள்பட ஏராளமானவர் அவரது தரிசனத்துக்காகக் காத்திருந்து அவர் வெளியே வரும் போதெல்லாம் அவர் பாதங்களில் விழுந்து பணிந்தனர்.

Koviloor Digital Library

சுவாமிஜி சென்னை வந்த மூன்றுவது தினமாகிய பிப்ரவரி 8-ந் தேதியன்று பிற்பகலில் அவர் தேவலோகக் குழந்தைபோல் ஒளியும் எளிமையும் ஒருசேரப் பொலிந்ததைப்பற்றி சுந்தரராமய் யர் குறிப்பிடுகிறுர். பேசிக்கொண்டிருக்கும்போது அவரது சுடர் விடும் கண்களும், தெய்விகம் ததும்பும் இதர அங்கங்களும் சடேரென்று சாந்தியில் முழுகியதாகவும், அவர் விழித்திருக்கிறுரா துயில்கிறுரா என்று புரியாத இத்தகைய நிலையில் அவரைப் பலமுறை கண்டதுண்டு என்றும் ஸ்ரீசுந்தரராமய்யர் கூறுகிறுர். ''இதென்ன நிலை?'' என்று பிறகு கேட்டதற்கு சுவாமிஜி ''எனக்கு சொல்லத் தெரியவில்லை'' என்றுராம். அவர் பௌதிகக் கூண்டிலிருந்து விடுபட்டு வேறுேர் உன்னத நிலையில் அப்போது வாழ்ந்தார் என்றுமட்டுமே தாம் சொல்லமுடியும் என்கிறுர் அவர்.

அன்றுமாலை சுமார் நாலுமணிக்கு — இப்போது வடஆற் காடு மாவட்டத்தில் இருப்பதும் அப்போது சேலம் மாவட்டத்தி லிருந்ததுமான — திருப்பத்தூரிலிருந்து ஒரு சைவ கோஷ்டி ஸ்ரீநல்லசுவாமிப் பிள்ளை என்பார் தலைமையில் வந்திருந்தது. சைவசித்தாந்தத்துக்கும் அத்வைதத்துக்கும் மாறுபாடுகள் உண் டல்லவா? அவற்றை அத்வைதியாகிய சுவாமிஜியுடன் வாது புரிந்து ஆராயவே இந்த கோஷ்டியினர் வந்திருந்தார்கள். அத் வைதத்தைக் கண்டிக்க விரும்பும் எவரும் கேட்கிற கேள்வியை அவர்கள் சுவாமிஜியிடம் கேட்டார்கள்: ''பிரம்மம்தான் மாயை காரணமாக உலகாகத் தோன்றுகிறது என்கிறீர்களே. ஏன், எப்போது, எதற்காக, எப்படித் தன்னிலேயே லயித்திருந்த பிரம்மம் இப்படி உலகத் தோற்றத்தை ஏற்படுத்தியது?'' என்பதே வினு.

சுவாமிஜி க்ஷணகாலம்கூடத் தயங்கவில்லை. மின்னல் மின்னு வதுபோல் உடனே கூறினுர்: ''ஏன், எப்போது, எதற்காக, எப்படி என்பதெல்லாம் தோற்றமாகிய இந்த உலகு உண்டான பின் தான் எழுகிற விஷயங்கள். இந்த உலகுக்குமட்டுமே தொடர்புள்ள விஷயங்கள் தோற்றத்துக்கு முன் உள்ள நிலையில் — காரண காரியமும் மாறுபாடும் அறியாத பிரம்ம நிலையில் — நமது சம்சாரிக வாழ்வுடன் தொடபுறுத்த முடியாத உயர்நிலையில் — உங்கள் கேள்விக்கு அர்த்தமே கிடையாது.''

வினு கேட்டவர்கள் சுவாமிஜியின் விடையால் அயர்ந்து விட்டார்கள்.

திடீரென்று சுவாமிஜியிடமிருந்து தேனலைகள் தண்ணெனப் பாய்வது போலிருந்தது. அந்தச் சூழலில் அன்பும், கருணையும்,

Koviloor Digital Library

அருளும், நெகிழ்ச்சியும், இரக்கமும், இளக்கமும் பெருகத் தொடங்கின. ஏதோ மாயமந்திர ஸ்பரிசம் ஏற்பட்டாற்போல் உணர்ந்தனர் சைவக் குழுவினர்.

''இந்த விசாரமெல்லாம் எதற்கு? இவற்ருல் என்ன புண்ணியம்? ஆண்டவனைத் தேடுங்கள், அவனுக்கு சேவை செய்யுங்கள். ஆண்டவனைத் தேடுவதும், சேவை செய்வதும் என்ன? ஏழை எளியவர்களைத் தேடிச்சென்று அவர்களின் துயர் துடைப்பதுதான்.''

சேவா உபநிஷதமாகவே சுவாமிஜியின் பேச்சு விரிந்தது.

சேவையே சிவம் என்ற உணர்வு உள்ளத்தில் ஊற அந்தச் சைவர்கள் சுவாமிஜியை வணங்கி விடைபெற்றனர்.

சுவாமிஜி சென்னைவந்த மூன்ரும் நாள் வரவேற்பு விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்று மாலை தமது இருக்கையி லிருந்து கோலாகல பவனியாக விக்டோரியா மன்றத்தை (வி. பி. ஹால் எனப்படும் விக்டோரியா பப்ளிக் ஹால்) அடைந்தார் சுவாமிஜி. விக்டோரியா என்ற பெயரே ஜயத்தைக் குறிக்கிறது. விக்டோரியா மன்றமே இந்த ஞான ஜயசாலியின் பக்தர்களுக்குப் போதவில்லை. மன்றத்துக்குள் ஒருபங்கு என்ருல் அதைப்போல் பலமடங்கு மக்கள் வெளியே திரண்டிருந்தார்கள். ஸ்ரீ வி. ஸி. சேஷாச்சாரியரைக் காரியதரிசியாகக்கொண்டு அமைக்கப்பட் டிருந்த வரவேற்புக்குழு கூட்டத்தைச் சமாளிக்கமுடியாமல் திண றியது.

ஸர் வி. பாஷ்யம் அக்கிராஸனம் வகிப்பதற்காக ஆசனத்தில் அமர்ந்துவிட்டார். சுவாமிஜி அவருக்குப் பக்கத்தில் மேரு பர்வதமாக அமர்ந்தார். வித்வத் வைதிக சபா முதலில் வர வேற்புரை வாசித்தளித்தது. ஸ்ரீ எம். ஓ. பார்த்தசாரதி அய்யங் கார் உரையை வாசித்துச் சமர்ப்பித்தார். சென்னை சமூக சீர்திருத்தச் சங்கம் அடுத்தபடியாக பாராட்டுரை வழங்கியது. சுவாமிஜியின் அத்யந்த சீடரான கேத்ரி மன்னர் அனுப்பியிருந்த வாழ்த்துரை அதைத் தொடர்ந்தது. பற்பல மொழிகளில் இருபத்து நாலு மடல்கள் வாசித்தளிக்கப்பட்டன.

மண்டபத்துக்குள்ளே இந்த வைபவம் நடைபெற்றுக்கொண் டிருக்கையில் வெளியே கூடியிருந்தோர் சுவாமிஜியைக் காணவும், அவர் பேச்சைக் கேட்கவும் துடித்துக்கொண்டிருந்தனர். இன்று போல் அன்று ஏது ஒலிபெருக்கி? எனவே அவர்கள் ''திறந்த வெளி யில் விழாவை நடத்துங்கள்'' என்று உரக்கக் கோஷமிடலானுர்கள்.

அன்பெனும் வலைக்குள் அகப்படும் சுவாமிஜி மண்டபத்தி லிருந்து வெளியேகினுர். திறந்த வெளிக்கு வந்தார். அங்கு

Koviloor Digital Library

கூடியிருந்த ஜனசமுத்திரத்தைக் கண்டு உள்ளம் இளகினுர். தாம் இங்கே பேசுவதுதான் நியாயம் என்று கருதினுர். ஆனுல் இங்கு எல்லாரும் காணுமாறு அவர் எந்த மேடையில் அல்லது பீடத்தில் நின்று பேசுவது? தயங்கவில்லே சுவாமிஜி. அருகேயிருந்த கோச் வண்டி ஒன்றின் கூண்டுமீது ஏறிக்கொண்டார். '**கீதை பாணி'யில் பேசுகிறேன்** என்று தொடங்கினுர்.

கீதாசாரியன் எப்படி ரதத்தின்மீதமர்ந்து பேசியபடியே ஞான மார்க்கத்தில் அர்ஜுனனேச் செலுத்தினுனே அதேகாரியத்தைத் தான் சுவாமிஜியும் செய்தார். திருவல்லிக்கேணியில் பார்த்த சாரதியாகக் கோயில் கொண்டுள்ள பெருமானேப்பற்றி அவர் கொஞ்சமாகவா கசிந்துருகியிருக்கிருர். இன்றே, இந்நிமிஷமே பார்த்தசாரதியின் முன் தண்டனிட்டுத் தியாக சீலராகுங்கள் என்று மேநாட்டிலிருந்து கடிதம் எழுதியவரல்லவா அவர்?

மக்களின் ஆரவாரத்திடை அதிகநேரம் சுவாமிஜியால் பேச முடியவில்லே. தியாகம், அன்பு, அபயம் இவற்றை இந்தியாவே மக்கட்குலத்துக்கு வழங்கி சம்சார சாகரத்திலிருந்து மன்பதையைக் கரையேற்ற உதவியிருக்கிறது; வாழ்க்கை என்ற புதிரை சத்தியா நுபவம் என்ற ஆனந்தமாக்குகிறது நமது மதம் — என்பதைச் சுருக்கமாகக் கூறினுர். இன்று சென்னே வாசிகள் காட்டும் இதே உற்சாகத்தை என்றும் காட்டி நாட்டுக்காக நற் செயல்கள் புரியவேண்டும், தமது திட்டத்தை நிறைவேற்றித்தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மறுநாள், அதாவது பிப்ரவரி ஒன்பதாம் தேதி காலே சுவாமிஜி திருவல்லிக்கேணி இலக்கிய சங்கத்தில் ஓர் உரை நிகழ்த்தினுர். அன்று மாலே விக்டோரியா மன்றத்தில் ''என் பிரசாரத் திட்டம்'' என்ற புகழ்பெற்ற பிரசங்கத்தை வழங்கினுர்.

பட்சணக்கடைத் தெருவில் சிந்திய பூந்திகளே மீண்டும் பொறுக்கத்தான் சபலம் ஏற்படுகிறது. விட்டுப்பிரிய மனம் வராத உரை இது.

''என்னுடைய திட்டம் என்பது நமது மகத்தான புராதன ஆசாரிய புருஷர்களேப் பின்பற்றுவதுதான்'' என்று கூறிய சுவாமிஜி அவர்கள் எப்படி இந்நாட்டைச் சமய உணர்வில் ஊறச்செய்திருக்கிருர்கள் என்பதைக் கூறினுர். ஒரு தேசத்தின் வாழ்வு அரசியல் அதிகாரத்தையும், இன்னெரு தேசத்தின் வாழ்வு கலே வளர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டிருப்பதுபோல் இந்தியாவின் வாழ்வு சமயத்தையே அடிப்படையாகக் கொண்டது என்ருர்.

''நீங்கள் சமயத்தை தூரதள்ளிவிட்டு அரசியல், சமூக இயல் அல்லது வேறு எதையோ மையமாகக்கொள்ளும் முயற்சியில்

Koviloor Digital Library

வெற்றிபெற்ருல் அன்றே நீங்கள் ஒன்றுமில்லாமல் போய்விடுவீர்கள் யாவரும், யாவும், உங்களது மதத்தின் சக்தியினுல் செயல்படுமாறு நீங்கள் செய்யவேண்டும் உங்களுடைய எல்லா நரம்புகளும் மதம் என்ற முதுகுத்தண்டினூடே அதிரட்டும் இந்தியாவில் சமூகச் சீர்திருத்தங்களைக்கூட அந்தப் புது முறைகள் ஆத்மிக வாழ்வுக்கு என்ன நலனளிக்கும் என்பதைக் காட்டுவதன்மூலமே பிரசாரம் செய்யவேண்டும்; இதேபோல் அரசியலும் நமது நாட்டின் ஒரே தேவையான ஆத்மிகத்துக்கு எவ்வளவு அபிவிருத்தி அளிக்கும் என்பதைக் கொண்டே பிரசாரமாகவேண்டும் இந்தியாவை சோஷலிஸம் அல்லதுவேறெந்த அரசியல் கொள்கைவெள்ளத்திலும் மூழ்கடிக்குமுன் ஆத்மிகக் கருத்துக்கள் என்ற மகாப் பிரவாகத்தை நாட்டில் பாய்ச்சுங்கள்.

முதலில் ஆத்மிக அறிவைப் பரப்பினுல் அதனுடனேயே எல்லா லௌகிக அறிவும் வளரும். ஆனுல் — நான் வெளிப்படையாகச் சொல்கிறேன் — மதம் இல்லாமல் லௌகிக அறிவைப் பெறமுயன்றீர்களானுல் உங்கள் முயற்சி இந்தியாவில் வியர்த்தமேயாகும்

''ஆனபடியால், என் அன்பர்களே, என் திட்டம் இதுதான்: நமது இளைஞர்களுக்கு இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் சாஸ்திரங்களைப் போதிக்கப் பயிற்சி அளிப்பதற்காகச் சில நிலையங்களை நம் நாட்டில் ஸ்தாபிக்கப் போகிறேன் இப்படி நூறுபேர் இருந்தால் உலகமே புரட்சி கண்டுவிடும்.''

'சீர்திருத்தம்' என்ற பெயரில் நமது பண்பைக் குலைப்பவர்களுக்கு நல்ல அடி கொடுத்தார் சுவாமிஜி இந்தப் பிரசங்கத்தினுல்.

'தேசபக்தி' என்பதை வெறும் மேடைப்பிரசங்கமாகமட்டும் கருதும் வாய்ச்சொல் விரர்களுக்கும் நெஞ்சில் உறைக்கும்படி உபதேசம் செய்தார். அவர்களுக்கு நாட்டிடம் உண்மையான அன்புள்ளதா, நாட்டின் நிலையைக்கண்டு அவர்கள் பதறியும் கதறியும், தூக்கமிழந்தும், அதே சிந்தனையாக ஆனதுண்டா என்று கேட்டவர் அன்பின் பெருமையை விளக்கினுர்:

'புத்தி அல்லது அறிவு என்பதில் என்ன இருக்கிறது? அது சில அடிகள் சென்றபின் நின்றுவிடவேண்டியதுதான். ஆனுல் இதயத்தின் வழியாகத்தான் பிரபோதம் வருகிறது. காத்தற்கரிய கதவங்களை அன்புதான் திறந்துவைக்கிறது. பிரபஞ்சத்தின் சகல ரகசியங்களுக்கும் அன்புதான் நிலைவாசல். எனவே சீர்திருத்தவாதிகள் என்றும் தேச பக்தர்கள் என்றும் சொல்லிக்கொள்பவர்களே, முதலில் உணரக் கற்றுக்கொள்ளுங்கள்''

Koviloor Digital Library

இனி தனது மகத்தான தேசபக்தியை வெளிக்காட்டும் ஒப்பற்ற வாசகங்களை உதிர்த்தார் சுவாமிஜி:

"நான் சர்வமத மகாசபையில் கலந்து கொள்வதற்காக அமெரிக்காவுக்குச் செல்லவில்லை. ஆனால் என் ஆத்மாவில் இருக்கிறதே உணர்ச்சி என்கிற இந்தப் பிசாசு. இதற்காகத்தான் சென்றேன். இந்தியா முழுவதும் நான் பன்னிரண்டாண்டுகள் சுற்றி அலைந்திருக்கிறேன். ஆனால் என் நாட்டு மக்களுக்காக எப்படி உழைப்பது என்பதற்கு ஏதும் உபாயம் காணவில்லை. இதனால்தான் அமெரிக்காவுக்குச் சென்றேன். சர்வமத மகாசபையைப் பற்றி யார் லக்ஷியம் செய்தார்கள்? இங்கே யாரும் கவனியாமல் என்சொந்தச் சதையும் தினமும் அழுந்திக்கொண்டே வரும் சோதரர்கள் — என் சதையோடு சதையாக ரத்தத்தோடு ரத்தமாக வாழும் மக்களின் சேவையின் முதல்படியாகத்தான் நான் அமெரிக்காவுக்குச் சென்றேன்''.

அமெரிக்காவில் நிதி திரட்டுவதன்மூலம் மட்டுமின்றி, அங்கு நமது மதம் பெற்ற ஏற்றத்தால் பாரதத்திலுள்ளவர்களின் கண்களையும் திறப்பதன்மூலம் சுவாமிஜி தம் பணியை நிறைவேற்றினார் என்று முன்பே பலமுறை சொல்லியிருக்கிறோம்; மீண்டும் நினைவூட்டுகிறோம்.

தேசிய இயக்கம் தோன்றுவதற்கு அடிப்படை தேசிய உணர்வு — நம் நாடு சிறந்தது; நாம் உயர்ந்த மக்கள் என்ற உணர்வு. இந்த உணர்வை இந்தியாவுக்கு முதலில் அளித்தவர் எந்த அரசியல் வாதியுமல்ல. அரசியலும் ஆத்மிகத்தின் மூலம்தான் நம் நாட்டில் மேவும் என்று விவேகானந்தர் கூறிய உண்மை இதிலேயே நிருபணமாகிவிட்டது. ஆம், இந்தியாவின் உயர்வை அதன் மக்களுக்குப் புலப்படுத்தி அவர்களைத் தேசிய உணர்வுகொள்ளச் செய்ததற்கு முதற் காரண புருஷர்கள் பரமஹம்ஸரும், சுவாமிஜியும்தான். இதனால்தான் நிகிலானந்தர், ''இந்தியாவின் விடுதலை இயக்கம் தக்ஷிணேசுவரத்திலிருந்துதான் தொடங்கிற்று'' என்கிறார்.

என்றாலும் இருவருமே அரசியலிலிருந்து ஒதுங்கி வாழ்ந்தனர். சுவாமிஜி மீண்டும் மீண்டும் ''நான் அரசியல்வாதியல்ல; என்னை அரசியலில் இணைக்காதீர்கள்'' என்றே கூறிவந்திருக்கிறார்.

'என் பிரசாரத்திட்டம்' என்ற இந்தப் பிரசங்கத்தில் சுவாமிஜி தம்மைப்பற்றிக் கூறப்படும் சில அவதூறுகளுக்கும் மறுமொழி கூறினார். பிராம்மணரல்லாத சுவாமிஜி எப்படி பரமஹம்ஸ சந்நியாசியாவார் என்று பலர் கேட்டிருக்கிறார்கள்.

Koviloor Digital Library

இதற்கு சுவாமிஜி, . பிராம்மணர்களும் சந்தியோபாஸனையில் வணங்கும் சித்திரகுப்தரின் வழித்தோன்றல் தாம் என ஒரு காரணம் கூறினர். ஆனல் தம்மைப் பொறுத்தமட்டில் தீண்டாதானக இருந்தாலும் பெருமைப்படுவேன் என்று கூறினர். ''ஏனெனில் பஞ்சமனின் விட்டைக் கழுவ விரும்பிய அந்தணரில் சிறந்த அந்தணரின் சீடன் நான். ஆனல் பஞ்சமன் ஓர் அந்தணன் தன் விட்டைக்கழுவ அநுமதிப்பான? எனவே அவர் நள்ளிரவிலே எழுந்திருந்து யாருமறியாமல் தீண்டாதானின் வீட்டில் பிரவேசிப்பார். அங்குள்ள கழிவிடத்தைக் கழுவிவிடுவார். பிறகு அந்த இடத்தைத் தமது முடியாலேயே துடைப்பார். இப்படியே பல நாட்கள் செய்துவந்தார் — தாம் எல்லாருக்கும் சேவகனுக இருக்கவேண்டும் என்பதற்காக. அவரது பாதத்தை என் சிரஸில் வகிக்கிறேன். அவரே எனது ஆதரிச புருஷர். அந்த ஆதரிச புருஷரின் வாழ்வைப் பின்பற்றவே முயல்வேன்'' என்று குரு பக்தியிலும், மனித சேவையின் மகிமையிலும் திளைத்துக் கூறினர் சுவாமிஜி.

சுவாமிஜி அமெரிக்கா சென்றிருந்தபோது அங்கு வந்திருந்த பிரம்மசமாஜப் பிரதிநிதிகளும், தியாஸாஃபிகல் சொஸைடியினரும் அவருக்கு உபகாரம் புரியாததோடு அபகாரமும் புரிந்தனர் என்பதை முன்பே கண்டிருக்கிறோம். சுவாமிஜி அமெரிக்காவில் குளிர்காலத்தில் போதிய உடுப்புகளின்றி கஷ்டப்பட்டபோது 'இப்படியாவது ராக்ஷஸன் ஒழிந்துவிடுவான்' என்று இந்திய தியாஸாஃபிகல் சொஸைடியில் சிலர் ஆறுதல் கொண்டதையும் குருபாயி ஒருவர்மூலம் சுவாமிஜி அறிந்திருந்தார். இதையெல்லாம் அவர் 'என் பிரசாரத்திட்டம்' என்ற உரையில் உடைத்துக் கூறிவிட்டார். கர்னல் ஆல்காட் போன்ற தியாஸாஃபிகல் சொஸைட்டிப் பிரமுகர்கள் சுவாமிஜியை உற்சாகத்தோடு வரவேற்கையில் அவர் இப்படியெல்லாம் பேசுகிறரே என்றுகூட சுவாமிஜியின் பக்தர்கள் விசனித்தார்களாம்.

விக்கிரக வழிபாட்டின் பெருமைக்கும் வெகு அழகாக இவ்வுரையில் அவர் நிருபணம் தந்தார். 'உருவ வழிபாடு தவறனது என்ற கருத்தை அப்படியே ஏற்றுக்கொள்கிறர்கள் இந்நாள் மக்கள். நானும் இப்படி நினைத்தவன்தான். அதற்கு அபராதமாக எல்லா அநுபவங்களையும் விக்கிரகங்கள் மூலமே பெற்ற ஒருவரின் பாதத்தில் பாடம் கேட்டேன் — ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரைத்தான் குறிப்பிடுகிறேன். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஒருவரை விக்கிரக ஆராதனைமூலம் பெறமுடியும் எனில் இன்னமும் ஆயிரம் விக்கிரகங்களை வைத்துக்கொண்டு பூஜைசெய்வோம்.

Koviloor Digital Library

உருவ வழிபாடு செய்பவர்களில் ஒரு ஸ்ரீராமகிருஷ்ண பரம ஹம்ஸர் தோன்றுவார் எனில் அதன்பின் உங்களுக்கு சீர்திருத்த வாதியின் சித்தாந்தம் வேண்டுமா, அல்லது எண்ணிக்கையற்ற உருவங்கள் வேண்டுமா ?

பிப்ரவரி பத்தாந்தேதியன்று சமூக சீர்திருத்த சங்கத்தில் பிரசங்கம் புரிந்தார் சுவாமிஜி. 'தீண்டாமை முதலியவற்றை நீக்கத்தான் வேண்டும். சீர்திருத்தம் அவசியமே. எனினும் பூர் வத்தில் ஜாதி தர்மங்கள் எப்படி அநுஷ்டிக்கப்பட்டனவோ அவ் வாறே அவற்றை மீண்டும் அமைக்கவேண்டும்' என்றுகூறி, தமக்குப் புரியாத விஷயங்களிலெல்லாம் 'சீர்திருத்தம், சீர் திருத்தம்' என்று தீவிரமாக இறங்கி மாறுபாடுகள் செய்வதைக் கண்டித்தார் விவேகானந்த சுவாமி.

பிப்ரவரி 11-ந் தேதி. அன்று காலே அன்பர்களிடம் சர்வ சமய ஆலயமொன்று எழுப்புவதுபற்றி சுவாமிஜி பேசிக்கொண் டிருந்தார். எல்லாச் சமயங்களின் குரவர்களுக்கும் சிலேகள் சமைத்து, திறந்த வெளியான கர்பகிருஹத்தில் பிரணவம் பொறித்த ஸ்தம்பத்தை நிறுவவேண்டும் என்று அவர் கூறினர். இது அவரது நீண்டநாளேய அவா என்பது நமக்குத் தெரியும்.

அன்று மாலே விக்டோரியா மன்றத்தில் 'இந்தியாவின் முனிவர்கள்' என்ற தலைப்பில் அந்த முனிவர்களில் ஒருவரான சுவாமிஜி அரியதொரு உரை நிகழ்த்தினர். ஆத்மிக சத்தியத்தை நேருக்கு நேராகக் கண்டவர்களே — மந்திரங்களேக் கண்ணுக்கு மெய்யாகவே கண்டவர்களே ரிஷிகள் என்று கூறி வேதத்தின் பெருமையைக் கூறினர். நம்மதம் எந்த தனிப்பட்ட ஸ்தாபக ராலும் யாரையும் கட்டுப்படுத்தவில்லே என்றும் தன்னில் பொதிந் துள்ள சத்தியங்களாலேயே அது நிலேபெற்றுள்ளது என்பதை விண்டு கூறினர். உலகத்திடமெல்லாம் நாம் வேதத்தின் மொழி யில் பேசுவோம்' என்று கூறி மீண்டும் ஒரு வேதகாலத்தை சிருஷ்டிக்க அறை கூவினர். இதிகாசகாலத்தில் மக்களுக்கு லட்சியமாக வாழ்ந்த காவிய நாயக நாயகிகள் பற்றியும் — முக் கியமாக, 'தூய்மையை விடத் தூய்மையாக வாழ்ந்த சீதாதேவி' பற்றி உள்ளமுருகிப் பேசினர். பிறகு பக்தியுகம் பிறந்ததுபற்றி விரித்துக்கூறி, பயத்தாலோ ஸ்வர்க்காதி போகங்களில் உள்ள ஆசையாலோ, ஈசுவர ஆராதனம் செய்யும்முறை அடியோடு போய், அன்புக்காகவும் அன்பினுலும் ஆராதிக்கும் இனியமரபு ஏற்பட்டதை எடுத்துச்சொன்னர். இந்த அன்பு மதத்தின் நடு நாயகமான கண்ணபெருமான் சமயத்தின் சகல அம்சங்களேயும் இணைத்துத் தமது கிதையை வழங்கியதைக் கூறினர். புத்தமதம்

Koviloor Digital Library

நடுவே தோன்றியதையும் பிறகு சங்கரர், ராமாநுஜர், சைதன்யர் ஆகியோர் சநாதன தர்மத்தை மீண்டும் நிலைநாட்டியதையும் விளக்கினார். சங்கரருடைய அறிவையும் ராமாநுஜர் சைதன்யர் இவர்களின் இதயத்தையும் ஒருங்கே படைத்த ஒரு மகாமுனிவருக்கு நவபாரதத்தில் தேவை ஏற்பட்டதாகச் சொன்னார். அப்படிப்பட்ட மகாமுனிவராக ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் அவதரித்ததாக உணர்ச்சிப் பெருக்குடன் கூறினார்.

''அவரது பாதத்தருகே அமரும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.'' மேற்கத்தி நாகரிக மோகத்தில் மூழ்கிய ஒரு மாநகருக்கருகே அவர் ஒரு குக்கிராமத்தில் பிறந்து கல்வியும் கேள்வியுமின்றித் தாமாகவே ஞானியாகி பக்குவமான அற்புதத்தைச் சொன்னார். இந்த எழுத்தறிவற்றவரை நாடிப் பட்டதாரிகள் எல்லாம் வந்து ஆத்மிகக் கல்வி பயின்றதைக் கூறினார்.

''அதெல்லாம் நீண்ட நெடும்கதை. இன்றிரவு அது முழுவதையும் சொல்லப் பொழுதில்லை. ஒன்றுமட்டும் சொல்கிறேன். மகானாகிய ஸ்ரீராமகிருஷ்ணர் இந்திய முனிவர்களின் நிறைவிடம்; நிகழ்காலத்துக்கென வந்த முனிவர்'' என்று கூறி ஏழைப் பிராம்மணர் ஒருவரின் பிள்ளையாக ஏதோ எட்டாக்கையில் அறியாவதராக வளர்ந்த அவர் இன்று ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஆயிரக்கணக்கான மக்களால் பூஜிக்கப்படுவதைக் கூறினார். ''எதிர்காலத்தில் மேலும் ஆயிரமாயிரம் மக்கள் அவரை வணங்குவார்கள்'' என்று தீர்க்கதரிசன வாக்கினை மொழிந்தார்.

மறுநாள் சுவாமிஜியைக் காண வந்தவர்களில் ஐரோப்பியப் பெண்மணி ஒருத்தியும் இருந்தாள். லண்டனில் ஏழைகளுக்குச் சேவை செய்துவந்தாள் அவள். அவளிடம் சுவாமிஜி ஆத்மாநுபவம், மாயாதத்துவம் முதலியவற்றை விளக்கும்போது அவரது வாக்குத்திறன் அமெரிக்காவில் எப்படி ஜொலித்திருக்கும் என்பது வெளியாயிற்று என்கிறார் ஸ்ரீசுந்தரராமய்யர்.

ஐரோப்பிய நங்கை விடைபெற்றுக்கொண்டபோது சுவாமிஜியே கூட்டத்தை விலக்கி அவருக்கு வழிசெய்துவிட்டு அடக்கமாக நின்றாராம்.

பிரம்மம் உலகாகத் தோன்றுவதுபற்றி முதல் நாள் திருப்பத்தூர் சைவர்குழு கேட்ட அதே கேள்வியை இன்றைக்கு ஒரு மாத்வ இளைஞர் சுவாமிஜியிடம் கேட்டார். அதே விடையை சுவாமிஜியும் கூறினார். வைஷ்ணவ பண்டிதர் ஒருவர், ''சுவாமிஜி தாங்கள் 'அத்வைதியா, த்வைதியா' என்று தெளிவாகக் கூறுங்கள்'' என்று சம்ஸ்கிருதத்தில் கேட்டார். சுவாமிஜி

Koviloor Digital Library

மணிக்குரலில் ஆங்கில மொழியில் அருகேயிருந்தவர்களைப் பார்த்துச் சொன்னார்: ''எனக்கு உடம்பு என்று ஒன்று இருக்கும்வரையில் நான் த்வைதிதான் என்றும் உடல்போனபின் அத்வைதி என்றும் இந்தப் பண்டிதரிடம் கூறுங்கள்'' என்றார். ''இவர் கேட்டதைப்போல் விஷமமான சர்ச்சைகளிலும் புதிர்களிலும் ஈடுபட்டு புத்தியை தவறானவழியில் செலுத்துவதை நிறுத்தத்தான் நான் பிறவி எடுத்திருப்பதே'' என்று ஆணி அறைந்தாற்போல் சொன்னார். அதாவது இந்தப் பிறவி முடிந்தபின் தாம் அகண்டாநந்தத்தில் ஒன்றப்போவதாக சுவாமிஜி தெரிவித்தார். ஆனால் இவரே தமது பணிக்கு மீண்டும் மீண்டும் இந்த உலகில் தேவை ஏற்படும் என்பதையும் அறிந்து, தாம் மோக்ஷநிலையில் கரையாமல் பலப்பல பிறவிகள் எடுத்து மக்களை நல்வழிப் படுத்தப் போவதாகக் கூறியதும் உண்டு.

மறுநாள் பச்சையப்பன் கல்லூரியில் ''வேதாந்தமும் நடைமுறை வாழ்வும்'' என்பதுபற்றி ஓர் இணையற்ற உரை ஆற்றினார் சுவாமிஜி. இந்திய சமயப் பிரிவுகள் எல்லாவற்றுக்கும் வேதாந்தமாகிய உபநிஷதங்கள் பொதுவானவை என்பதைக்கூறி, பக்தி உள்பட சகல ஆத்மிக மார்க்கங்களும் வேதாந்தத்தில் உள்ளடங்கியுள்ளன என்று விளக்கினார். ஸ்ரீசங்கரர், ஸ்ரீராமாநுஜர் உள்பட ஒவ்வொரு சமயாச்சாரியரும் தங்கள் கருத்துக்கிசைய உபநிஷதங்களைச் சிரமப்பட்டு பொருள்கொண்டதாகக் கூறி, அவ்வாறின்றி உபநிஷதங்கள் ஒவ்வொரு நிலையில் அந்த எல்லா சமயங்களையும் ஒப்புக்கொள்வதாகவும், இதை உணர்ந்து அவற்றுக்கு உள்ளபடி பாஷியம் செய்யவேண்டியது அவசியம் என்று கூறினார். சர்வ சமய சர்வஸ்வமாக விளங்கிய ஸ்ரீராமகிருஷ்ணரின் சிடர் என்பதால்தான் தமக்கு உபநிஷதங்களின் சமரஸம் தெரியலாயிற்று என்பதையும் சொன்னார். ''உபநிஷதங்கள் உபாஸனை முதலியவை கொண்ட த்வைதக் கருத்துக்களுடன் தொடங்கி அத்வைதத்தின் மகத்தான எழுச்சியுடன் முடிகின்றன'' என்றார்.

உபநிஷதங்களின் கருத்தாழத்தை மட்டுமின்றி கவிதை எழிலையும் விளக்கினார் விவேகானந்த சுவாமி. புறத்தையன்றி, அகத்தை வைத்துப் பிறந்த அற்புதக் காவியம் அவை என்று கூறினார். இக்காரணத்தால் ஐரோப்பாவின் உன்னத இலக்கியங்களைவிட அவை சிறந்தவை என்றார்.

உபநிஷதங்களின் மையக்கருத்து 'பலம்' என்பதே என்றார். ''ஒவ்வொரு பக்கத்திலும் உபநிஷதங்கள் பலம், பலம் என்றே பேசுவதாக எனக்குத் தெரிகிறது. 'பயமற்ற' (அபி:) என்ற அடைமொழியை ஆண்டவனுக்கும் மக்களுக்கும் சூட்டிய ஒரே

Koviloor Digital Library

பிரமாண நூல் வேதாந்தம்'' என்றார். இந்திய இளைஞர்கள் பலசாலிகளாகவேண்டும் என்று அறைகூவிய சுவாமிஜி ''கீதை படிப்பதைவிட கால்பந்து விளையாடுவதன்மூலம் நீங்கள் மேலுல குக்கு அருகே செல்லமுடியும்'' என்ற மறக்கமுடியாத உப தேசத்தை அளித்தார். தேகபலத்தைக் காத்து, பிறகு பிரம்ம சரியத்திறல் அதனை ஆத்ம பலமாக்குவதை மனத்தில்கொண்டு தான் சுவாமிஜி இந்த உபதேசத்தைப் புரிந்திருக்கவேண்டும். பௌதிக பலத்தை அதே பௌதிகக் கோணத்திலிருந்து பெரிதாக மதிப்பவரல்லவா அவர்!

உலகப் பிரமாண நூல்களுக்குள் உபநிஷதம் பெற்றுள்ள இன்னொரு தனிச்சிறப்பையும் சுவாமிஜி குறிப்பிட்டார். ''அது விமோசனத்தைப்பற்றிப் பேசவில்லை; சுதந்திரத்தைப்பற்றிப் பேசு கிறது. அந்த சுதந்திரம் உங்களுக்குள்ளேயே உள்ளது என்று காட்டிக்கொடுக்கிறது'' என்றார். மனிதன் பாபி. அவனுக்கு விமோசனம் தேவை என்று அது கருதாததே இதற்குக் காரணம். ''நான் பாபமே கிடையாது என்ற பைசாசக் கருத்தைப் பிரசாரம் புரிவதாக பிரபஞ்சத்தின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிவரை என்னைக் கண்டனம் செய்திருக்கிறது. நல்லது. இப்படிக் கண் டனம் செய்பவர்களின் வாரிசுகளே என்னை சில போதகர், பாப போதகர் அல்ல என வாழ்த்தப் போகிறார்கள்! ஆம், நான் புண்ணியத்தைப் பிரசாரம் செய்பவன்; பாபத்தை அல்ல. ஒளியை விளக்குவதில் நான் உவகை காண்கிறேன்; இருளை விளக்குவதில் அல்ல'' என்றார் சுவாமிஜி.

பாபம் என்ற கருத்தைப்பற்றிச் சொன்னவர்கள் பாபத்தையே பிரசாரம் செய்தவர்கள் என்று சுவாமிஜி கூறியது சிலருக்கு 'அதி'யாகத் தோன்றக்கூடும். ஆனால் அவரோ மனிதன் தன் இயல்பில் பாபியே என்று கூறுவதுதான் மாபெரும் பாபம் என்று திடமாகக் கருதினார்.

நம்பிக்கை, சிரத்தை இவை நவீன காலத்தில் மிகவும் அவசியம் என்று மொழிந்த சுவாமிஜி நம்பிக்கையுடன் உப நிஷதங்களைப் பயில்வதால் நடைமுறை வாழ்வுக்கு ஏற்படும் நன் மைகளைக் கூறினார். மீன்பிடிக்கும் வலை ஏரியிலிருந்து தொடங்கி யார் உபநிஷதக் கருத்துக்களை அறிந்தாலும் அவர்கள் தொழி லால் தாம் எதுவரையினும் இயல்பில் தெய்விகம் கூடியவர்கள் என்று புரிந்துகொள்வார்கள்; எனவே பிறர் தொழிலுக்கு ஆசையும், அசூயையும் படாமல் அவரவரும் தத்தம் தொழிலையே புரிவர்; ஜாதிமுறை என்ற நல்ல சமூக அமைப்பு இதனால் அதன் உண்மையான நோக்கத்துடன் பின்பற்றப்படும் என்று கூறினார்.

Koviloor Digital Library

சுவாமிஜியைத் தங்களுடன் சேர்த்துக்கொள்ள விரும்பும் 'சீர்திருத்த' வாதிகள் இந்த ஓர் உரையைப் படித்தால் அவருக்கு சநாதன தர்மத்தில் இருந்த ஈடுபாட்டைப் புரிந்துகொள்ள முடியும். சுவாமிஜி அந்தணர்களை அநேக சந்தர்ப்பங்களில் தாக்கிப் பேசியதற்குக் காரணம் அவர்கள் அந்தணர்கள் என்பதல்ல; அவர்கள் உண்மையான அந்தணர்களாக இல்லை என்பதுதான் காரணம். வேத உபநிஷதங்கள் பொதுமக்களுக்கு அல்ல என்ற கருத்தை சுவாமிஜி என்றும் ஒப்புக்கொண்டதில்லை. வேத உபநிஷதங்களை ரக்ஷிக்கவே ஒரு பரம்பரைப் பிரிவு அவசியம் என்பதை அவர் ஒப்புக்கொண்டபோதிலும், மற்றவர்களுக்கும் அவற்றின் தாத்பரியங்களைப் பரப்பவேண்டும் என்று அபிப்பிராயப் பட்டார். 'யதே மாம் வாசம் கல்யாணீ மாவாதானி ஜனேப்யக: ப்ரம்ம ராஜைன்யாப்யாம் சூத்ராய சார்யாய சஸ்வாய சாரணுய' என்ற வேத மந்திரமே மறைகள் எல்லாருக்கும் பொது என்பதற்குச் சான்று என்பது அவருடைய கருத்து.

''உலகத்தில் ஒளியைக் கொண்டு வாருங்கள். எல்லா மக்களுக்கும் ஒளி கிடைக்குமாக'' என்று இந்த உரைமுடிவில் ஆணையிட்டார் சுவாமிஜி.

இப்பிரசங்கத்துக்கு ஹிந்து ஆசிரியராகயிருந்த ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய அய்யர் வந்திருந்தார். சுவாமிஜி இளைஞர்கள் பலசாலிகளாக வேண்டியதுபற்றிக் கூறியபோது அவர் குறுக்கிட்டுச் சபையோரை நோக்கித் தமிழில் சொன்னாராம்: ''நானும்தான் இதை எத்தனையோ முறை சொல்லிவிட்டேன், நீங்கள் காது கொடுக்கவில்லை. இப்போது சுவாமிஜி சொல்லும்போது எல்லாரும் ஆர்ப்பரிக்கிறீர்கள்'' என்று. இப்படிக்கூறிய ஜி. சுப்பிரமணிய அய்யரின் உற்சாகம், பிற்பாடு சுவாமிஜி ஜாதிமுறைகளை சிலாகித்துப் பேசியபோது குன்றிவிட்டதாம்!

மறுநாள், அதாவது பிப்ரவரி 14-ந் தேதியன்று, ஞாயிற்றுக் கிழமை. அன்று ஹார்ம்ஸ்டன் சர்க்கஸ் மைதானத்தில் சுவாமிஜி ''இந்தியாவின் எதிர்காலம்'' என்பதுபற்றி உணர்ச்சிமயமாக ஓர் உரை ஆற்றினர். அன்று கூட்டம் சொல்லி முடியாது. சுவாமிஜி சிம்மம்போல் மேடையில் உலவியபடி அமரவாசகங்களை கர்ஜித்தார்.

அன்று சுவாமிஜி உதிர்த்த நித்திலங்களில் இதோ ஒரு சில:

''எதிர்கால இந்தியாவை நிர்மாணிப்பதில் முதல் அம்சம், யுகங்களாக வாழ்ந்த இந்தப் பாறையில் செதுக்கவேண்டிய முதல் படி நமது மதத்தின் எல்லாப் பிரிவுகளையும் ஐக்கியப் படுத்துவது தான். ஹிந்துக்கள் எனப் பெயர்கொண்ட நாம் யாவரும் —

Koviloor Digital Library

த்வைதிகளாயினும், விசிஷ்டாத்வைதிகளாயினும், அத்வைதிகளாயினும், சைவராயினும், வைஷ்ணவராயினும், பாசுபதராயினும் — சில பொதுத் தத்துவங்களை உடைத்தாயிருக்கிறோம் என்பதை அறியவேண்டும். நமது இனத்தின் நல்வாழ்வுக்காகவும், நம்முடைய நல்வாழ்வுக்காகவும், நம்முடைய சச்சரவுகளையும், பேதங்களையும் விட்டுவிடவேண்டிய காலம் வந்துவிட்டது என்பதை யாவருக்கும் புரியவைக்கவேண்டும்.

''நமது வீரியம், பலம் — ஏன், நமது தேசியவாழ்வே நமது மதத்தில்தான் உள்ளது. இது சரியா, அல்லவா என்று நான் இப்போது விவாதிக்கப்போவதில்லை. ஆனால் நமது நன்மைக்கோ தீமைக்கோ இதுதான் யதார்த்த நிலைமை. இதிலிருந்து நீங்கள் விடுபடமுடியாது. இன்றைக்கும் என்றைக்கும் இது உங்களை விட்டகலாது. எனவே உங்களுக்கு என்னைப்போல் மதத்தில் நம்பிக்கையில்லாவிடினும் அதைத்தான் ஆதாரமாகக்கொண்டு நீங்கள் நிற்கவேண்டும். நீங்கள் அதனால் கட்டுண்டு இருக்கிறீர்கள். அதை நீத்தால் நீங்கள் தூள்தூளாகச் சிதறிப்போய் விடுவீர்கள் இந்தியா முதற்கையில் மத உணர்வு மிகுந்தது; பிறகுதான் மற்றவை. எனவே இந்த உணர்வை வலுப்படுத்த வேண்டும். எப்படி? என் கருத்தை உங்கள் முன் வைக்கிறேன். இவை என் மனத்தில் நீண்டகாலமாக இருந்திருக்கின்றன. நான் அமெரிக்கா புறப்படுவதற்குப் பலகாலத்துக்கு முன்பிருந்தே இந்தக் கருத்துக்கள் எனக்கு உண்டு. இவற்றைப் பிரசாரப்படுத்துவது என்ற ஒன்றுக்காகத்தான் நான் அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் சென்றதே. சர்வமத மகாசபையைப்பற்றியோ வேறெதைப்பற்றியோ நான் லக்ஷியம் செய்ததேயில்லை. அது ஒரு வாய்ப்பாக அமைந்தது அவ்வளவுதான். என்னுடைய கருத்துக்களேதான் என்னை உலகமுழுவதும் இட்டுச் சென்றனவேயன்றி வேறெதுவும் அல்ல.

''என்னுடைய முதல் கருத்தாவது: மடங்களிலும் வனங்களிலும் ஒளித்துவைக்கப்பட்டாற்போல் ஒருசிலரின் உரிமையாக மட்டும் இருக்கும் நமது சாஸ்திரங்களில் சேகரித்து வைக்கப் பட்டுள்ள ஆத்மிக மணிகளை வெளிக்கொண்டுவந்து, அவற்றின் ஞானஸாரத்தை வெளிக்கொண்டுவரவேண்டும். அது எங்கு மறைவாக இருக்கிறதோ அங்கிருந்து வெளிப்படுத்துவதோடு, அவை எம்மொழியில் பாதுகாக்கப்படுகின்றனவோ அந்த கிடைத்தற்குரிய மொழியாகிய சம்ஸ்கிருதத்தின் பல்லாண்டுக்கால மூட்டங்களிலிருந்து தத்துவங்களை வெளிக்கொண்டுவரவேண்டும். ஒரு வாக்கியத்தில் சொல்லவேண்டுமெனில், நமது ஆத்மிகத் தத்து

Koviloor Digital Library

வங்கள் பொதுஜனங்களையெல்லாம் கவர்வதாகச் செய்ய விரும்புகிறேன். இதற்குத் தத்துவங்களை மக்கள் பேசுகிற மொழிகளில் போதிக்கவேண்டும். அதே சமயத்தில் சம்ஸ்கிருத கல்வியையும் பொதுமக்களுக்குப் புகட்டவேண்டும். ஏனெனில் சம்ஸ்கிருத பதங்களின் ஒலியே நமது இனத்துக்கு ஒரு கௌரவத்தையும், சக்தியையும், பலத்தையும் அளிக்கிறது. ராமாநுஜர், சைதன்யர், கபீர் முதலியவர்கள் பொதுமக்களை உயர்த்தினர்கள் என்பது உண்மையே எனினும் அவர்கள் சம்ஸ்கிருத மொழியை மக்களுக்குப் புகட்டுவதில் தங்கள் சக்தியைச் செலுத்தவில்லை. மகானுகிய புத்தரும் பொதுமக்கள் சம்ஸ்கிருதம் படிப்பதை நிறுத்தியபோது தவருன பாதையில் ஓர் அடி வைத்துவிட்டார் இதனுல்தான் இந்த மதத்தலைவர்களுடைய உபதேசங்கள் அவர்களின் மறைவுக்கு ஒரு நூற்ருண்டுக்குப் பின்னிருந்தே சக்தி குன்றத் தொடங்கின (பொதுமக்களுக்கு) ஞானம் வந்தது; ஆனுல் கௌரவம் இல்லை; பண்பாடு இல்லை. பண்பாடுதான் அதிர்ச்சிகளைத் தாங்கக்கூடும்; ஞானமல்ல பொதுமக்களுக்கு அவரவர் தாய்மொழியைக் கற்பியுங்கள்; அதில் தத்துவங்களைத் தாருங்கள்; அவர்களுக்குப் பலவிஷயங்கள் தெரிய வரும்; எனினும் இன்னும் ஏதோ ஒன்று தேவை; அவர்களுக்குப் பண்பாட்டைத் தாருங்கள்

சென்னைக்குத் தனிப்பட்ட முக்கியத்துவம்பொருந்திய ஒரு பிரச்னையை விவாதிக்க விரும்புகிறேன். தக்ஷிண பாரதத்தில் திராவிடர்கள் எனப்பட்ட ஒரு மனித இனம் இருந்ததாகவும், இது ஆரியர்கள் எனப்பட்ட வடஇந்திய இனத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டது எனவும், தென் இந்தியாவில் தற்போதுள்ள பிராம்மணர்கள்மட்டுமே வடக்கேயிருந்து வந்த ஆரியர்கள் எனவும், மற்ற எல்லாத் தென்னிந்தியர்களும் பிராம்மணர்களிலிருந்து முழுவதும் வேறுபட்ட ஜாதியையும் இனத்தையும் சேர்ந்தவர்களெனவும் ஒரு சித்தாந்தம் இருக்கிறது. மொழிவழி ஆராய்ச்சி புரியும் நிபுணரே தங்களின் மன்னிப்பைக் கோருகிறேன். இந்தக் கூற்று சற்றும் ஆதாரமற்றது. தங்கள் கூற்றுக்கு ஒரேசான்று வடக்குக்கும் தெற்குக்கும் மொழியில் பேதம் இருப்பதுதான். இதைத்தவிர நான் எந்த வித்தியாசத்தையும் காணவில்லை. இங்கே பல வடக்கத்தியர்கள் இருக்கிருேம். இப்போது இங்கு கூடியுள்ளோரில் வடக்கத்தியர் யார், தெற்கத்தியர் யார் என்று பிரிக்குமாறு எனது ஐரோப்பிய நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பேதம் எங்கே உள்ளது? ஏதோ மொழியில் சிறிது வித்தியாசம். அவ்வளவுதான். சம்ஸ்கிருத மொழியைப் பேசிய

Koviloor Digital Library

பிராம்மணர்கள் என்ற வேற்றினத்தார் இங்குவந்ததாகச் சொல்லப்படுகிறது. நல்லது, பிறகு அவர்கள் திராவிட மொழிகளை ஏற்றுக்கொண்டு, சம்ஸ்கிருதம் தாய்மொழி என்பதை மறந்துவிட்டார்களாம். அவ்வாறெனில் மற்ற (ஆரிய) ஜாதிகளும் ஏன் இவ்வாறே செய்திருக்கக்கூடாது? வட இந்தியாவிலிருந்து எல்லா ஜாதியினரும் ஒருவர் பின் மற்றவராக இங்குவந்து, திராவிட மொழிகளைத் தமதாக்கிக்கொண்டு, தமது தாய்மொழியை மறந்திருக்கக்கூடாதா? இதுபோன்ற வாதங்களுக்கு இரண்டு பக்கம் உண்டு. இப்படிப்பட்ட முட்டாள்தனமான விஷயங்களையெல்லாம் நம்பாதிர்கள். இங்கே திராவிடர்கள் என்ற மக்களினம் இருந்திருக்கக்கூடும். ஆனால் அவர்கள் இங்கிருந்து மறைந்துவிட்டார்கள். மீதமிருந்த சிலர் வனங்களிலும் மற்ற இடங்களிலும் வசித்தார்கள். அவர்களின் மொழியைப் பிறகு வந்தவர்கள் எடுத்துக்கொண்டிருக்கக்கூடும். ஆனால் இப்போது இங்குள்ள யாவரும் வடக்கேயிருந்து வந்த ஆரியர்கள்தான். இந்தியா முழுவதும் ஆரியநாடுதான்; வேறல்ல.

''இன்னொரு சித்தாந்தம் உள்ளது: சூத்திரர்கள் என்ற ஜாதியினர் இந்தியாவின் பழங்குடிகள் என்பதே. அவர்கள் யாராம்? அடிமைகளாம். சரித்திரம் திரும்புகிறதாம். அமெரிக்கர்களும், ஆங்கிலேயர்களும், டச்சுக்காரர்களும், போர்த்துகீஸியர்களும் ஏழை ஆப்பிரிக்கர்களைத் தம் பிடியில் வைத்துக்கொண்டு, அவர்கள் உயிருள்ளவரை தங்களுக்காக கடினமாக உழைக்குமாறு செய்தார்கள் அல்லவா? இரு இனமும் கலந்து குழந்தைகள் பிறக்கும்போதே அடிமைகளாகப் பிறந்து, அதேநிலையில் நீண்ட காலத்துக்கு வைக்கப்பட்டனர் அல்லவா? இந்த 'அற்புதமான மாதிரி'யை வைத்துக்கொண்டு அவர்களுடைய புத்தி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய நிலைக்குத் தாவுகிறது. அப்போதும் இப்படியேதான் நடந்திருக்கவேண்டும் என்று கற்பனை செய்கிறது. நம்முடைய புதைபொருள் நிபுணர் இருக்கிறாரே, அவர் இந்தியா முழுவதும் கருங்கண்படைத்த காட்டுக் குடிகள்தான் இருந்தார்கள், பிறகே சிவந்த ஆரியர் வந்தனர் (எங்கிருந்தோ, பகவான் தான் அறிவார்!) என்று கனவு காண்கிறார். ஆரியர்கள் மத்திய திபேத்திலிருந்து வந்தவர்கள் என்கிறார்கள் சிலர். வேறுசிலர் அவர்கள் மத்திய ஆசியாவிலிருந்து வந்தனர் என்பார்கள். சில தேசபக்தி மிக்க ஆங்கிலேயர்கள் ஆரியர்களின் கேசம் செம்பட்டையாக இருக்கும் என்கிறார்கள். ஆராய்ச்சியாளர் கருப்பு கேசத்தவராயிருப்பின் ஆரியர்களும் கரும்கேசத்தவர் என்பார்கள். ஆரியர்கள் ஸ்விட்ஜர்லாந்து ஏரிக்கரையில் வசித்தவர்

Koviloor Digital Library

கள் என்பதாக நிரூபிக்க வேறு சமீபத்தில் ஒரு முயற்சி செய்திருக்கிருர்கள். அந்த ஏரிகளிலேயே அவர்கள் முழுகிப்போயிருந்தால் கூட, இந்த சித்தாந்தங்களுடனும் மற்ற எல்லாவற்றுடனும் முழுகிப்போயிருந்தால்கூட நான் வருந்தமாட்டேன். வடதுருவத்தில் அவர்கள் வாழ்ந்ததாகச் சிலர் இப்போது சொல்கிருர்கள். ஆரியர்களேயும், அவர்களது குடியிருப்பையும் ஆண்டவன் ரக்ஷிப்பாராக! இந்தச் சித்தாந்தங்களின் சத்தியத்தை ஆராயப் புகுவோமாயின், இவற்றைப்பற்றி நமது சாஸ்திரங்களில் ஒரு வார்த்தைகூடக் குறிப்புக்கிடையாது. ஆஃப்கானிஸ்தானம் உள்ளிட்ட பண்டைய பாரதத்துக்கு வெளியே எங்கிருந்தோ ஆரியர்கள் வந்தார்கள் என்று அநுமானிக்க நமது சாஸ்திரங்களில் ஒரு மதம்கூடக் கிடையாது. இதோடு விஷயம் முடிகிறது. சூத்திர ஜாதியினர் ஆரியரல்லாதார், அவர்கள் பழங்குடிக் கும்பல் என்பதும் இதேபோல் குதர்க்கமும் இதேபோல் அறிவற்றதுமான வாதமாகும்.

ஒருசில ஆரியர்கள் அந்தக்காலத்தில் நூருயிரம் திராவிடர்கள் குடியிருந்த இடத்தில் குடியேற்றம் செய்து அவர்களுடன் வாழ்ந்ததோடு அவர்களே அடிமைப்படுத்திஞர்கள் என்பது சாத்தியமே அல்ல. இந்த ஏராளமான அடிமைகள் அந்த ஒருசிலரை விழுங்கியே இருப்பார்கள்; ஐந்து நிமிஷத்தில் சட்னியாக்கியிருப்பார்கள். இவ்விஷயத்தில் நமக்குக் கிடைக்கக்கூடிய ஒரே விளக்கம் மகாபாரதத்தில் உள்ளது. ஸத்திய யுகத்தில் பிராம்மணர் என்ற ஒரே ஒரு ஜாதி யிருந்ததாகவும், பிறகு தொழில் பிரிவிகேள் தேவைப்பட்டதால் அவர்கள் பலஜாதியினராகப் பிரிந்ததாகவும் அது சொல்கிறது. இது ஒன்றே உண்மை; இது ஒன்றே அறிவுக்குப்பொருந்திய விளக்கமும் ஆகும். இன்னெரு சத்திய யுகம் வரும்போது எல்லா ஜாதிகளும் மீண்டும் அதே நிலையை அடையும்.

''எனவே இந்திய ஜாதிப் பிரச்னேயின் உருவம் இதுதான்: உயர்ஜாதியினரை கிழ்மட்டத்துக்குக் கொண்டுவரக்கூடாது; பிராமணரை நசுக்கி அகற்றக்கூடாது. பிராம்மணத்துவம்தான் இந்தியாவின் மக்கட் சமுதாய லக்ஷியம். இவ்வாறுதான் ஸ்ரீசங்கராச்சாரியர் தமது கிதாபாஷ்யத் தொடக்கத்தில் அற்புதமாக விவரிக்கிருர். பிராம்மணத்துவத்தை, பிராம்மணராயிருக்கும் தன்மையை ரக்ஷித்துத்தரவே ஸ்ரீகிருஷ்ணன் ஆசாரியனுக வந்தான் என்று அவர் காரணம் காட்டுகிருர். இதுவே மகத்தான குறிக்கோள். பிராம்மணன் என்பவன் ஆண்டவனின் மனிதன்; பிரம்மத்தை அறிந்தான்; ஆதரிசபுருஷன்; பூரணத்துவம்பெற்ற

Koviloor Digital Library

மானுடன் — அப்பபடிப்பட்ட பிராம்மணன் இருந்தேயாகவேண்டும்; அவன் அழிந்துபடலாகாது. ஜாதிமுறையில் இன்று எவ்வளவோ தோஷங்கள் இடம்பெற்றுவிட்டன என்ருலும் பிராம்மணர்களுக்கு நாம் ஒரு விஷயத்தில் பாராட்டைத் தந்தேயாக வேண்டும்: மற்ற ஜாதிகளைவிட பிராம்மண ஜாதியில்தான் உண்மையாகவே பிராம்மணத்துவம் பொருந்தியவர்கள் அதிகமாக தோன்றியிருக்கின்றனர். இது உண்மை. அவர்களின் குறைகளை நாம் துணிவாக தைரியமாகச் சொல்லவேண்டும். அதேசமயத்தில் அவர்களுக்குரிய பாராட்டையும் வழங்கவேண்டும் எனவே, என் நண்பர்காள், ஜாதிசண்டை போட்டுக்கொண்டிருப்பதில் உபயோகமில்லை. அது நம்மை மேலும் பேதப்படுத்தும், மேலும் பலவீனப்படுத்தும், மேலும் இழிநிலைக்குத் தள்ளும். ஜாதியைவைத்து சிலர் தனிப்பட்ட சலுகைகளும் தனிப்பட்ட உரிமைகளும் கோரியகாலமெல்லாம் போய்விட்டது; இந்நாட்டிலிருந்து ஒரேவழியாகப் போயே போய்விட்டது

''உயர இருப்பவரைக் கீழே கொண்டுவருவதில் தீர்வு இல்லை; கீழே இருப்பவரை உயர்மட்டத்துக்கு எழுப்பவேண்டும் இதற்கு திட்டம் என்ன? குறிக்கோளின் ஒரு முனை பிராம்மணத்துவம், மறுமுனை சண்டாளத்துவம். சண்டாளனை பிராமணனாக உயர்த்துவதே முழுப்பணியுமாகும் நான் பிராம்மணர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் பரிசிரமப்பட்டு இந்தியப் பொதுமக்களுக்குத் தங்களுக்குத் தெரிந்ததையெல்லாம் கற்பித்து அவர்களை உயர்த்தவேண்டும். பலநூற்ருண்டுகளாகத் தாங்கள் திரட்டியுள்ள பண்பாட்டுச் செல்வத்தை அவர்களுக்கு வழங்கவேண்டும் இவ்வாறு வழங்காததால்தான் முகமதிய படையெடுப்பு நேர்ந்தது. இதனுல்தான் ஆயிரம் ஆண்டுகளாக நாம் எவரெவர் இந்தியாவுக்கு வர எண்ணம் கொண்டார்களோ அவர்களின் கால்களால் மிதிக்கப்பட்டு வருகிருேம். எனவே பிராமணர்கள் தாங்கள் செலுத்திய விஷத்தைத் தாங்களே உறிஞ்சி எடுக்க வேண்டும். பிராம்மணரல்லாதாருக்குச் சொல்கிறேன்: காத்திருங்கள், அவசரப்படாதீர்கள். பிராம்மணருடன் சண்டை பிடிக்க எங்கே வாய்ப்புக்கிடைக்கும் என்று காத்திராதீர்கள். ஏனெனில் நீங்கள் உங்கள் தவறுதலினுலேயே கஷ்டப்படுகிறீர்கள். உங்களை யார் ஆன்மிகத்தையும், சம்ஸ்கிருத கல்வியையும் புறக்கணிக்கச் சொன்னுர்கள்? இவ்வளவு காலமாக நீங்கள் என்னதான் செய்துகொண்டிருந்தீர்கள்? ஏன் அசிரத்தையாக இருந்தீர்கள்? இப்போது ஏன் சிலருக்குமட்டும் உங்களைவிட அதிக புத்தியும், அதிக சக்தியும், அதிகமான முன்னேற்ற வாய்ப்புக்

Koviloor Digital Library

களும் இருப்பதாக ஏன் கொதிப்படைந்து வேகிறீர்கள்? உங்கள் சக்தியை பத்திரிகைகளில் வாதம் புரிந்தும் சச்சரவு செய்தும் வீணடிப்பது பாபம்; உங்கள் வீடுகளில் சண்டையும் சச்சரவும் இடுவது பாபம். இவற்றுக்கு பதில் உங்களுடைய முழுசக்தியை யும் பிராம்மணனிடமுள்ள பண்பாட்டைப் பெறுவதில் பயனுக் குங்கள். என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்தாகிவிடும். நீங்கள் ஏன் லக்ஷக்கணக்கில் செலவுசெய்து சம்ஸ்கிருத ஞானத்தை இந்தியாவின் எல்லா ஜாதியினருக்கும் பரப்பவில்லை? அதை எப்போது செய்கிறீர்களோ அப்போது நீங்களும் பிராம்மணனுக்குச் சமானமாவீர்கள்''

(சுவாமிஜியின் நூற்றாண்டின்போது அவரது சோஷலிஸத் தையும், ஜனநாயகப் பண்பையும், தேசபக்தியையும் நிர்த்தாரணம் செய்யவேண்டுமென்பதால் பலர் பலவிதமாகப் பேசியதனால், ஜாதிதர்மம் அவரது உண்மையான கருத்தை நாடு அறிவது நல்லது என்பதாலேயே இவ்வளவு நீண்ட சொற்பொழிவுப் பகுதி கள் இங்கு தரப்பட்டிருக்கின்றன. நமக்குச் சில சமதர்மங்கள் பிடித்திருக்கலாம்; அதுவே காலதர்மம் என்றும் நாம் கருதலாம். ஆனால் நமது கருத்தை சுவாமிஜியின் வாய்மொழியாக நாம் திணிக்கவேண்டாம். சுவாமிஜி எல்லா ஜாதிகளின் நிறை குறை இரண்டையும் பக்ஷபாதமின்றிக் கண்டவர், சமூகம் செவ்வனே நடைபெற உதவும் தொழிற் பிரிவினையாக ஜாதிதர்மம் செயல் படுவதில் தவறில்லை என்றும் **சமூகத் தொழில் எதுவாயினும், ஆத்மிகப் பண்பு எல்லோருக்கும் பொதுவானது** என்றும் கருதினார் அவர்.)

''அடுத்த ஐம்பதாண்டுகளுக்கு நமது வாழ்வின் ஆதார சுருதி இதுதான் — நமது இந்த மகத்தான மாதா பாரதம். இந்தக்காலத்தில் எல்லா பயனற்ற கடவுளரும் விலகட்டும். விழிப் புடன் உள்ள கடவுள் ஒன்றே — நமது இனமே அது, அந்தக் கடவுள் எங்கும் கைகளும், எங்கும் கால்களும், எங்கும் செவிகளு மாக எல்லாவற்றையும் சூழ்ந்திருக்கிறான் மக்களும் விலங்கு களுமே நமது தெய்வங்கள்; இந்நாட்டு மக்கள் நமது முதல் தெய்வங்கள்.

''இன்று நீங்கள் கற்கும் கல்விமுறையில் சில நல்ல அம்சங்க ளுண்டு; எனினும் அதன் மாபெரும் தீய அம்சங்கள் நல்லனவற் றையெல்லாம் ஒன்றுமில்லாமல் செய்துவிடுகின்றன. முதலில் அது மனிதனை மனிதனாக்குகிற கல்வி அல்ல. அது முழுவதும் வெறும் எதிர்மறைக் கல்வியேயாகும். கல்வியாகட்டும், வேறெதுவா கட்டும் எதிர்மறையில் ஊன்றிய எதுவுமே சாவைவிட மோச

Koviloor Digital Library

மானது. இன்று குழந்தை பள்ளிக்கு அழைத்துச் செல்லப் படுகிறுன். முதலில் அவன் கற்பது அவனுடைய தந்தை ஒரு முட்டாள் என்பது; இரண்டாவது அவனது பாட்டனுர் ஒரு பைத்தியம் என்பது; மூன்ருவதாக ஆசாரியர்களெல்லாம் வேஷ தாரிகள் என்பது; நாலாவதாவது நமது புனித சாஸ்திரங்கள் எல்லாம் புளுகு மூட்டை என்பது. பதினுறு வயதுக்குள் பையன் எதிர் மறைகளின் குவியலாகி விடுகிறுன். ஜீவனும் எலும்பும் அற்ற வனுகி விடுகிறுன்......கல்வி என்பது உன்புத்தியில் புகுத்தப்பட்டு, அங்கு சரியாக ஜிரணமாகாமல் வாழ்வு முழுவதும் தெறிகெட்டு ஓடுகிற தகவல் தொகையல்ல. நமக்கு வாழ்வை எழுப்பித் தருகிற மனிதனை மனிதனுக்குகிற, நன்னடத்தையைத் தோற்றுவிக்கிற கருத்துக்களைத் தனதாக்கிக்கொள்ளும் கல்வியே வேண்டும். ஓர் ஐந்து கருத்துக்களைத் தன்மயமாக்கிக்கொண்டு அவற்றை உங்கள் வாழ்வாகவும் நடத்தையாகவும் செய்துகொண்டிருப்பீர் ஆயின் முழுநூல் நிலையத்தையும் மனப்பாடம் செய்திருப்பவனைவிட நீங் கள் பெரிய கல்விமான் ஆவீர்கள். எனவே நமது லக்ஷியம் கல்வி என்பது — ஆத்மிகக் கல்வி லௌகிகக் கல்வி இரண்டுமே — நம் கையில் இருக்கவேண்டும், அது தேசியப்பாதையில் அமைய வேண்டும், கூடியவரையில் தேசிய முறையிலேயே புகட்டப்பட வேண்டும்.

''இது மிகப் பெரிய திட்டம்; மகத்தானதொரு திட்டம். இது காரியசாத்தியமாகுமா என்பதை நான் அறிந்தேன் இல்லை. என்ருலும் நாம் பணியைத் தொடங்கியாகவேண்டும். எப்படி? உதாரணமாக சென்னையை எடுத்துக்கொள்ளுங்கள். இங்கு நமக்கு ஓர் ஆலயம் வேண்டும். ஏனெனில் ஹிந்துக்களுக்கு மதம்தான் முதலிடம் பெறவேண்டும். ஆலயம் என்று ஏற்பட்டால் ஹிந்து மதத்தின் பலபிரிவினருக்குமிடையே சச்சரவு மூளும் என்கிறீர் களா? நல்லது; நாம் அதை எந்த ஒரு பிரிவுக்கும் சார்பற்றதாக அமைப்போம். எந்தப் பிரிவுக்கும் தலையாகிய சின்னமாகிய 'ஓம்' என்ற சின்னத்தைமட்டும் ஆலயத்தில் அமைப்போம்.

''இந்த ஆலயத்தோடு இணைந்து ஒரு நிறுவனம் எழுப்பு வோம். சமயம், லௌகிகக் கல்வி, இரண்டையும் மக்களைத் தேடிச்சென்று அளிக்கும் ஆசிரியர்களைப் பயிலுவிப்பதற்கே இந்த நிறுவனம். இந்த ஆசிரியக் குழுக்களின் மூலமும், பிரசார கர்கள் மூலமும் பணி விஸ்தரிக்கும். மற்ற பல இடங்களிலும் ஹிந்துக்களுக்குப் பொதுக் கோவில்கள் எழும்பும். பாரதம் முழுவதும் இவ்வாறு நிகழும் வரையில் பணியைத் தொடர வேண்டும். இதுவே என் திட்டம். இது பிரம்மாண்டமானதாகத்

Koviloor Digital Library

தோன்றலாம். ஆனால் இதுதான் நமது தேவை. இதற்கெல்லாம் நிதி எங்கே என நீங்கள் கேட்கக்கூடும். நிதி தேவையில்லை. நிதி என்பது ஒன்றுமே இல்லை. கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக அடுத்தவேளை உணவு எங்கிருந்துவரும் என்று நான் அறிந்திருக்க வில்லை. என்றாலும் நிதியும், வேறு நான் விரும்புகிற யாவும் வந்தேதீரும்; ஏனெனில் அவை என் அடிமை. நான் அவற்றின் அடிமை அல்ல. நிதியும் மற்றயாவும் வந்தே தீரவேண்டும். 'வந்தே தீரவேண்டும்' என்பதுதான் சரியான வார்த்தை. நிதி கிடக்கட்டும், பணிபுரியவேண்டிய மனிதர்கள் எங்கே? அதுவே பிரச்னை. சென்னையின் இளைஞர்களே, உங்களிடம்தான் நம்பிக்கை வைத்திருக்கிறேன். தேசத்தின் அழைப்புக்கு நீங்கள் செவிசாய்ப்பீர்களா?''

சென்னை சுவாமிஜியின் நம்பிக்கையைப் பொய்ப்பிக்கவில்லை. எனினும் சுவாமிஜி விதித்த ஐம்பதாண்டு வரம்பு முடிந்துபோய் மேலும் பதினைந்து ஆண்டுகளான பின்பும் அவர் இட்ட பணிக்கு இன்னும் அவசியம் இருக்கத்தான் செய்கிறது.

''உங்களில் ஒவ்வொருவரும் தம்மிடம் நம்பிக்கை கொள் ளுங்கள்; நிரந்தரமான சக்தி உங்களில் ஒவ்வோர் ஆத்மாவிலும் குடிகொண்டிருக்கிறது என நம்புங்கள்; பாரதம் முழுவதையும் மறுமலர்ச்சிபெறச் செய்வீர்கள் வக்கில் போன்ற தொழில் களைத் தேடிச்சென்று வம்பு, தும்பு செய்வதைவிட உங்களுக்குப் பெரிய காரியங்கள் இருக்கின்றன. உங்கள் இனத்துக்காக மனித குலத்தின் நலனுக்காக உங்களையே தியாகம் புரிந்துகொள்வது தான் அந்த மகத்தான பணி. வாழ்க்கையில் என்ன இருக்கிறது? நீங்கள் ஹிந்துக்கள்; வாழ்க்கை என்பது சாசுவதமானது என்ற உள்ளுணர்ச்சி உங்களுக்கு உண்டு. சிலசமயம் சில இளைஞர்கள் என்னிடம் வந்து நாஸ்திகம் பேசுகிறார்கள். ஹிந்து ஒருவன் நாஸ்திகனாக முடியும் என்பதை என்னால் நம்பமுடியவில்லை. அவன் ஐரோப்பிய நூல்களைப்படித்து விட்டுத்தான் லோகாயதவாதி என்று ஊர்ஜிதப்படுத்திக்கொள்ளலாம். ஆனால் இது சிறிது காலத்துக்குத்தான் நிற்கும். அது உங்கள் ரத்தத்தில் சேர்ந்த தல்ல. உங்களது உடற்கூற்றில் இல்லாத ஒன்றை உங்களால் நம்பமுடியாது அம்மாதிரிச் செயல்களில் முயலாதீர்கள். நான் சிறுபிள்ளையாயிருந்தபோது அப்படித்தான் முயன்றேன். ஆனால் அப்படியிருக்க முடியவில்லை.''

இந்த மகத்தான பிரசங்கங்களைத் தவிர சென்னபுரி அன்ன தான ஸமாஜத்தில் பாரதத்தின் தர்மசிந்தனை குறித்து ஒரு சிற்றுரையும் அளித்தார் சுவாமிஜி.

Koviloor Digital Library

திருவல்லிக்கேணி இலக்கியக் கழகத்தில் நிகழ்த்திய பிரசங்கத்திலும் பல உன்னதக் கருத்துக்களை வாரித் தெளித்தார் விவேகானந்த சுவாமி. உலகம் தழுவும் பரந்த மனப்பான்மை நமக்குத் தேவை என்ருர். தியாகத்தில்தான் வாழ்வு உள்ளது என்ருர். கொடுப்பதின்மூலமே பெறலாம் என்றுகூறி இந்தியா உலகுக்கெல்லாம் சமயத்தையும், தத்துவத்தையும் தந்ததால் தான் வாழ்ந்தது என்ருர். பூமியை வெல்வது நமது பண்பல்ல — ஆத்மிக வெற்றியே நமது வெற்றி என்ருர்.

எழுத்தாளர்களின் கவனத்தைப் பெறவேண்டிய ஒரு விஷயத்தையும் இந்த இலக்கிய சங்கத்தில் மொழிந்தார் சுவாமிஜி. ''யாரும் பாராமல், யாரும் கேளாமல், மிருதுவான பனித்துளி ரோஜாவில் விழுந்து அதனை மலர்த்துவதுபோல் இந்தியா உலக சிந்தனையை மலர்த்தியிருக்கிறது. மௌனமாக, யாருக்கும் பனிச் சென்று தெரியாமல் தனது வினைத்திட்டத்தை வெளிப்படுத்தி அது உலகத்தின் சிந்தனையைப் புரட்டியிருக்கிறது. என்ருலும் யாருக்குமே அது எப்போது இப்படிச் செய்தது என்பது தெரியவில்லை. என்னிடம் யாரோ சொன்னுர்கள்: 'இந்தியாவில் எந்த நூலாசிரியரின் பெயரையுமே உறுதிப்படுத்திக் கொள்வது எவ்வளவு கடினமாக இருக்கிறது?' என்று. 'அதுதான் இந்தியத் தத்துவம்' என்று நான் விடையிறுத்தேன். இந்திய நூலாசிரியர்கள் இன்றைய எழுத்தாளர்கள்போல் அல்ல. இன்றைய எழுத்தாளர்கள் நூற்றுக்குத் தொண்ணூறு கருத்துக்களைப் பிற ஆசிரியர்களிடமிருந்து திருடுகிருர்கள். பத்து சத வீதக் கருத்துக்களே அவர்களுக்குச் சொந்தமானவை. என்ருலும் அவர்கள் மறக்காமல் ஒரு முன்னுரை எழுதி 'இதில் காணும் எல்லாக் கருத்துக்களுக்கும் நான் பொறுப்பேற்கிறேன்' என்கிருர்கள். ஆனுல் க்ஷணகாலத்தில் மனிதவர்க்கத்தின் இதயத்தில் மகத்தான எதிர்விளைவுகளை உண்டாக்கிய நமது புராதன மகாமதியாளார்களோ தங்கள் நூல்களின் பெயரைக்கூடச் சொல்லிக்கொள்ளவில்லை. நூல்களைப் பின் தலைமுறையினருக்கு விட்டு, சாந்தமாக மறைந்து போனுர்கள். நமது தத்துவங்களையும், புராணங்களையும் தந்தவர்களை யார் அறிவார்கள்? வியாஸர், கபிலர் இப்படிச் சில பொதுப்பெயர்களிலேயே அவர்களெல்லாம் மறைந்துவிட்டார்கள். அவர்களே ஸ்ரீகிருஷ்ணனின் உண்மைக் குழந்தைகள். அவர்களே கீதையை மெய்யாகப் பின்பற்றியவர்கள். 'கர்மத்தில்தான் உனக்கு அதிகாரம்; பலனில் அல்ல' என்ற மகா ஆக்ஞையை ஏற்று நடத்தியவர்கள் அவர்களே.''

Koviloor Digital Library

இந்தப் பிரசங்கத்தில் சுவாமிஜி மேல்நாட்டினர் லௌகிகத்தின் உச்சாணிக்குச்சென்று, எரிமலை சிகரத்தில் அமர்ந்திருப்பதாகவும் அவர்களுக்கு வேதாந்தம் மிகமிகத் தேவைப்படுவதாகவும் கூறினார்.

''எனவே சென்னையின் வாலிபர்களே! நீங்கள் இதை நினைவுகொள்ளவேண்டுமென விசேஷமாகக்கேட்டுக்கொள்கிறேன். நாம் வெளிநாடுகளுக்குச் செல்லவேண்டும். நமது ஆத்மிகத் தாலும், தத்வ ஞானத்தாலும் உலகை வெல்லவேண்டும்'' என்றார்.

ஒருபுறம் மூடப்பழக்க வழக்கங்களைக் கட்டியழும் தீவிர சநாதனி, மறுபுறம் சீர்திருத்த வெறிபிடித்த நவயுகத்தவர். இவர் களுக்கிடையே மாட்டிக்கொண்டு ஹிந்துமதம் அவதிப்படுவதாகக் கூறிய சுவாமிஜி விவேகத்துடன் மதத்தைப் புரிந்துகொண்டு பரப்பவேண்டிய அவசியத்தை விண்டுகூறினார். சடங்கு கோவில் எல்லாவற்றையும் இரண்டாம் பட்சமாக்கிவிட்டு, இதயத்தைத் திறந்துகொண்டு அன்பினால் உலகையெல்லாம் வெல்லவேண்டு மெனத் தேன்வார்த்தைகள் சொரிந்தார்.

திங்கட்கிழமை. 1897-ம் ஆண்டு பிப்ரவரி 15-ந் தேதி, சென்னையில் புனித நவராத்ரி அன்றோடு முடிந்தது. இந்த ஒன்பது நாட்களில் நகரம் தனது எல்லாப் பொதுவாழ்வையும் அடியோடு நிறுத்தி சுவாமிஜியின் வாழ்விலேயே இணைந்திருந்தது என்று பிரம்மஸ்ரீ கே. எஸ் ராமஸ்வாமி சாஸ்திரிகள் கூறுகிறார்கள். உலகுக்கெல்லாம் ஒருவரான சுவாமிஜி அந்த இணைப்பைத் தளர்த்தவேண்டியதாயிற்று.

லோகமான்ய திலகர் சுவாமிஜியைப் பூனாவுக்கு வருமாறு அழைத்திருந்தார். வேறு பல இடங்களிலிருந்தும் அழைப்புக்கள் வந்திருந்தன. அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய பிறநாடுகளி லிருந்தும் சுவாமிஜியை மீண்டும் வரச்சொல்லி அழைப்புக்கள் வந்தன. சுவாமிஜியின் பணி அங்கெல்லாம் தளர்வுரவில்லை என்பதையும் எடுத்துக்கூறியிருந்தனர். என்றாலும் சுவாமிஜிக்கு ஹிமாசல அமைதி தேவையாக இருந்தது. பிறந்த பொன்னா டாகிய வங்காளத்தைக் கண்டுவிட்டு மன்னும் இமயமலையை நாட எண்ணினார்.

சுவாமிஜி தங்களைவிட்டுப் பிரிகிறார் என்பதைச் சென்னைச் சீடர்களால் தாங்கமுடியவில்லை. ''வருத்தப்படாதீர்கள்! ஆசா ரத்திலும், வித்தையிலும் ஞானத்திலும் பக்தியிலும் சிறந்த ஒரு வரை உங்களுக்கு அனுப்பிவைக்கிறேன்'' என்றார் சுவாமிஜி. ஸ்ரீராமகிருஷ்ண தர்மத்தைப் பரப்பத் தமிழகம் வந்த அந்த உத்தமர்தான் சுவாமி ராமகிருஷ்ணானந்தர் அவர்கள். 1897-ம்

Koviloor Digital Library

ஆண்டு மார்ச் மாதம் அவர் சென்னைக்கு வந்தார். சென்னையில் ஸ்தாபிதமான ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் முதல் தலைவர் ஸ்ரீராம கிருஷ்ணானந்தர் அவர்கள்தாம். வரநகர மடத்தில் குருபாயிக் களுக்கெல்லாம் மாதாவாகவிருந்து, சேவையின் மூலமே மற்றவர் கள் தியான, ஞானவிசாரங்களால் பெற்ற ஆத்ம பூரணத்து வத்தை அடைந்த அந்த மகானின் இன்னருளால்தான் இன்னும் சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடம் சேவையின் சிறப்புக்கோயிலாகத் திகழ்ந்து வருகிறது.

கல்கத்தாவுக்கு நீராவிப் படகில் செல்வதற்காக சுவாமிஜி சென்னை துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தார். ஆரிய வைசியர் களின் சார்பில் கடற்கரையில் ஒரு வாழ்த்துப் பத்திரம் வாசித் தளித்தார் ராஜமந்திரியைச் சேர்ந்த ஸ்ரீசுப்பாராவ்.

சுவாமிஜியை வழியனுப்பவந்தவர்களில் ஏராளமானவர்கள் தேங்காய்களை அவருக்கு சமர்ப்பித்தனர். தேங்காய்வைத்து பூரணகும்பத்துடன் வரவேற்பதுண்டு; இங்கோ தேங்காயுடன் விடைகொடுத்தார்கள். அந்தத் தேங்காய்குன்றை ஸ்ரீமதி ஸேவி யர் — ஸேவியர் தம்பதி சுவாமிஜியுடனே சென்றனர் — "இதென்ன பிரயாணிகள் கப்பலா? இல்லை; சரக்குக்கப்பலா?" என்று சிரித்துக்கொண்டே வினவினாள். சுவாமிஜி சொன்னார்: "என் உடல் நலம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. நீருக்குப் பதில் நான் இளநீர்தான் சாப்பிடவேண்டுமென வைத்தியர்கள் விதித்திருக்கிறார்கள். அதனால்தான் அன்பர்கள் இவ்வளவு தேங்காய்களைக் கொண்டுவந்து குவித்திருக்கிறார்கள்" என்றார்.

உடல்நிலை சரியில்லாததால்தான் தரைமார்க்கமாகக் கல் கத்தா சென்று மக்களின் அன்புத்தொல்லைக்கு ஆளாகாமல் கடற் பயணம் மேற்கொண்டார் சுவாமிஜி.

சுவாமிஜியுடன் பலர் நீராவிப் படகில் ஏறிக்கொண்டனர். படகு புறப்படும்வரையில் சத்தியத்தின் சாந்நித்தியத்தில் முக் குளிக்கவேண்டும் என்ற ஆர்வம்தான் காரணம். ஒவ்வொரு வரிடமும் அன்பு பிழியப் பிழியப் பேசி விடைபெற்றார் சுவாமிஜி. அவர்பால் தம் இதயத்தையே வைத்திருந்த ஸ்ரீசுந்தரராமய்யர், "சுவாமிஜி, இரண்டே கேள்விகள், தாங்கள் அமெரிக்காவுக்கும் மேல் நாட்டுக்கும் புரிந்த பணியின் அளவைக் கூறமுடியுமா?" என்று கேட்டார். "அதிகமாக ஒன்றும் நான் செய்துவிடவில்லை. சிற்சில இடங்களில் சில விதைகளை நட்டிருக்கிறேன். அவை காலத்தில் வளர்ந்து சிலருக்கேனும் பலனளிக்கும் என நம்பு கிறேன்" என்றார் அடக்கத்தில் உயர்ந்த சுவாமிஜி.

Koviloor Digital Library

இரண்டாவது கேள்வி: ''உங்களை மீண்டும் காண்போமா? இங்கே தங்கள் பணியை எப்போது செய்யக் காண்போம்?'' என்றார் சுந்தரராமய்யர். ''அதைப்பற்றிச் சந்தேகமே வேண்டாம். ஹிமாலயப் பகுதியில் சிறிது ஓய்வு பெறுவேன். பிறகு நாட்டின்மேல் காட்டாற்றுப் பிரவாகமாகப் பாய்வேன்'' என்றார் சுவாமிஜி.

ஆனால் அந்தப் பிரவாகம் தன்னில் மீண்டும் பாயச் சென்னை கொடுத்துவைத்திருக்கவில்லை.

சுவாமிஜியின் சிறப்பு மலர்ச்சிபெற முதற்காரணமாகயிருந்த சென்னை அவருக்கு நிரந்தரமாக வழிகூறிவிட்டது! அவருடைய உருவுக்குத்தான்; உபதேசத்துக்கு அல்ல.

Koviloor Digital Library

அத்தியாயம்—25

வங்கமாதா வரவேற்கிறாள்!

வங்காளவிரிகுடாவில் வங்கத்துக்கு மிதக்கும்போது சுவாமிஜியின் நரம்புமண்டலம் இதம்பெற்று வந்தது. கப்பல் நாயகர், சிப்பந்திகள், பிரயாணிகள் எல்லாருக்கும் இளநீரை வழங்கித் தாமும் இளநீர் உண்டு அந்த நீராவிப்படகை உல்லாஸப் படகாக்கினார் சுவாமிஜி.

வங்காளத்தைக் காண அவர் எவ்வளவு ஆவல்கொண்டிருந்தார், அவரைக்காண வங்காளம் எவ்வளவு ஆவல்கொண்டிருந்தது என்பதை நாம் அளவிட்டுச் சொல்வதற்கில்லை. தாங்கள் அறிந்திராத தவப்புதல்வர் ஒருவர் தரணிமுழுவதும் தாயகத்தின் தத்துவப் பெருமையை நிலைநாட்டித் திரும்பிவருகிறார் என்பதில் வங்காளம் உற்சாகமாகப் பொங்கிக்கொண்டிருந்தது. வங்காளிகளின் உணர்ச்சிக்குக் கேட்கவும் வேண்டுமா? தர்பங்கா மஹாராஜாவை அக்ராஸனராகக்கொண்டு வரவேற்புக்குழு அமைக்கப்பட்டது.

கிட்டர்பூரில் நீராவிப்படகு வந்து நங்கூரம் பாய்ச்சியதும் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்கிருந்து 'ஸ்பெஷல்' ரயில் ஒன்றில் சுவாமிஜி கல்கத்தாவின் ஸியால்டா ரயில் நிலையத்தைச் சென்றடைந்தார். இதே சமயத்தில் நியூயார்க்கிலும் லண்டனிலும் சுவாமிஜிக்கு வழங்கப்பட்ட பிரிவுபசாரப் பத்திரங்கள் கல்கத்தாவில் விநியோகமாகியிருந்தபடியால் மக்களின் ஆர்வத்துடிப்பு மேலும் உயர்ந்தது.

உவகை, உற்சாகம், ஆவல், ஆர்வம் என்பதுதவிர வேறு சொல்தெரியாத காரணத்தால் கல்கத்தா சுவாமிஜிக்கு அளித்த வரவேற்பின் இயல்பைச் சொல்லாமலே விடவேண்டியதாகிறது.

குருபாயிக்கள் பலரும் ரயிலடியில் தங்கள் பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் பாத்திரமான நரேந்திரர் உலகத்தையெல்லாம் கலக்கிவிட்டுத் திரும்பிய விவேகானந்த சுவாமியாகக் கண்டு உள்ளம் பூரித்தனர். ராமனைக் கண்ட பரதன்போல் சுவாமிஜியைச் சென்னை வரவேற்றது என்று முன்பு சொன்னோம். அவ்வாறெனில் குருபாயிக்கள் அவரை மீண்டும் சந்தித்ததை வர்ணிக்க உவமை ஏது?

வெகு விமரிசையாக கல்கத்தாவில் ஊர்வலம்வந்த சுவாமிஜிக்கு ரிப்பன் கல்லூரியில் சம்பிரதாயபூர்வமாக இன்றி ஒரு வரவேற்பு வழங்கப்பட்டது. கல்கத்தாவுக்கு வந்த அன்று

Koviloor Digital Library

சுவாமிஜிக்கும் அவருடன் வந்தோருக்கும் ராய் பசுபதிநாத போஸ் என்பவரின் மாபெரும் மாளிகையில் விருந்துபசாரம் நடைபெற்றது. பிற்பகல் சுவாமிஜியும் அவரது ஐரோப்பிய சீடர்களும் காஸிப்பூரிலுள்ள கோபாலலால் ஸியால் என்பவரின் ஆற்றங்கரை பங்களாவைச் சென்றடைந்தனர். இதுவே சுவாமிஜியின் தாற்காலிக வாசஸ்தலமாயிற்று. சுவாமிஜியைக் காண ஓயாமல் வந்த மக்கள் திரளை இங்குதான் அவர் கண்டார். நாடெங்கிலுமிருந்து வந்த ஏராளமான வாழ்த்துக் கடிதங்களும், தந்திகளும் இங்குதான் வந்து குவிந்தன. பகல்வேளைகளை ஸியால் தோட்ட மாளிகையிலும், இரவுகளை அலம்பஜாரில் அப்போது இருந்த ஸ்ரீராமகிருஷ்ண மடத்திலும் செலவிட்டார் சுவாமிஜி.

பிப்ரவரி 28-ந் தேதியன்று கல்கத்தா சம்பிரதாய பூர்வமாக சுவாமிஜிக்கு வரவேற்பு நல்கியது. ராஜா ஸர் ராதாகாந்த தேவ பஹதூர் என்பவரின் அரண்மனை நிகர்த்த மாளிகையில் இந்த மகத்தான விழா நடைபெற்றது. தலைமைதாங்கிய ராஜா விஜய கிருஷ்ண தேவ பஹதூர் சுவாமிஜியை இந்தியாவின் முதல்பெரும் தலைவர் என வருணித்தார். ஆம்; யாரும் அறிந்திராத வங்கத்து வாலிபர்தான் இன்று பாரதத்தின் முதல்பெரும் சமயத் தலைவராகவும், சமூகத் தலைவராகவும் பரிணமித்திருந்தார்.

கல்கத்தா வரவேற்புக்கு சுவாமிஜி அளித்த விடை நமது ஆத்மிக சரித்திரத்தில் அமரத்துவம்பெற்ற ஒரு அத்தியாயமாகும்.

தமது குருநாதரை நினைந்து விம்மி விதிர்த்த விவேகானந்தர் இந்த உரையில், ஸ்ரீராமகிருஷ்ணரே ''எனது குரு, என் ஆசாரியர், என் ஆதரிச புருஷர், என் லக்ஷிய மனிதர், என் வாழ்வின் தெய்வம். நான் சிந்தனையாலோ, செயலாலோ, சொல்லாலோ எதையேனும் சாதித்திருந்தேனாயின் என் உதடுகளிலிருந்து உலகில் ஒருவரையேனும் காக்க உதவிய உரைகள் ஏதேனும் உதிர்ந்திருக்குமாயின், அவை எதுவும் என்னுடையனவல்ல; எல்லாம் அவருடையனவே, பலவீனமான எந்த அம்சங்கள் என்னிடமுண்டோ, அவைமட்டுமே என்னுடையன. உயிரளிப்பதாகவும், உரமளிப்பதாகவும், புனிதமாகவும், பவித்திரமாகவும் நான்மொழிந்த எதுவும் அவரால் உந்தப்பட்டவை; அவர் மொழியில் வழங்கப்பட்டவை; அவராலேயே உரைக்கப்பட்டவை. ஆம், என் நண்பர்காள், அவரை உலகம் இனித்தான் அறியவேண்டும்'' என்றார். பரமஹம்ஸரை அவதார புருஷர் எனவே பிரகடனம் செய்தார். எல்லா இனங்களும், எல்லா மதங்களும் நலன் எய்துவதற்காகத் தோன்றிய மகத்தான ஆத்மிக லக்ஷியம் ஸ்ரீராமகிருஷ்ணர் என்று பறையறைந்தார் அவரின் தனிப்பெரும் சீடர்.

Koviloor Digital Library

சுவாமிஜி கல்கத்தாவுக்கு வந்த ஒரு சில தினங்களிலேயே பரமஹம்ஸரின் அவதாரதினம் நிகழ்ந்தது. வழக்கம்போல் தக்ஷிணேசுவரத்தில் கொண்டாடப்பட்ட ஜயந்திவிழாவில் இவ்வாண்டு சுவாமிஜி கலந்துகொண்டதால் வழக்கத்தில் இல்லாதபடி மாபெரும் மக்கள்திரள் தக்ஷிணேசுவரத்தில் கூடிற்று.

தக்ஷிணேசுவரத்துக்குவந்த சுவாமிஜி தேவி பவதாரிணியின் சந்நிதியில் பிரவேசித்தார். அப்போது அவர் உள்ளத்தில் என்னவெல்லாம் எண்ணங்கள் எழும்பியிருக்குமோ? பவதாரிணியை நம்பாத தினங்கள், அவளை அவர் நம்புமாறு குருபிரான் செய்த தினம், பிறகு பவதாரிணியை அன்றி வேறெதையும் அவர் நம்பாத தினங்கள், அதற்கும் பிற்பாடு பவதாரிணி தவிர வேறெதுவுமே கிடையாது — காண்பன எல்லாம் அவளே — எனக்கண்டு உலக சேவையை உலகநாயகியின் சேவையாக அவர் காணத்தொடங்கிய தினங்கள் இவை எல்லாவற்றின் நினைவுகளும் அவரது நெஞ்சினை நிறைத்திருக்கும். அடியற்ற மரம்போல் அம்பாளின் அடியிணைகளில் பணிந்தார் சுவாமிஜி.

பின்னர் தாம் பலமுறை சென்று கண்டுதொழுத ராதாகாந்தனின் மந்திரத்தில் வழிபாடு செய்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் தவத்தையும், ஞானத்தையும், யோகத்தையும், பக்தியையும், எளிமையையும், தர்மத்தையும், சத்தியத்தையும் அநுதினமும் பரப்பிய அறையைச் சென்றடைந்தார் சுவாமிஜி. 'ஜெ ராமகிருஷ்ண' என்ற கோஷமும், நாமசங்கீர்த்தனமுமாக அந்த அறையில் ஆவேச ஒலிகள் ஆர்ப்பரித்தன. முதன் முதலில் அந்த அறையில் மேற்குவாயில் வழியாகத்தான் சுவாமிஜி பிரவேசித்தார். இன்று மேற்குநாடுகளை எல்லாம் மேலான வேதாந்த சாரத்தில் ஈடுபடுத்திவிட்டு மீண்டும் வந்திருக்கிறார்!

பிறகு, பாரதத்தின் மறுமலர்ச்சிக்குக் காசியான தக்ஷிணேசுவரத்துப் பஞ்சவடியை அடைந்தார் சுவாமிஜி. அங்கு பார்த்த பல முகங்கள் ஆண்டுகளின் அடிச்சுவட்டில் மாறிக் காட்சியளித்தன. வாலிபர் நரேந்திரநாதரை விவேகானந்த சுவாமியாகக் கண்டு அந்த முகங்கள் பெருமையும், மதிப்பும் கொண்டன. அவர்களில் பரமஹம்ஸரால் பாவம் தேய்ந்து பாவனம்பெற்ற நாடகாசிரியர் கிரிஷ்சந்திரகோஷைக் கண்டவுடன் சுவாமிஜிக்குப் பழைய நினைவுகள் பீறிட்டுக்கொண்டு வந்தன. "முன்பும்தான் நாம் சில பக்தர்கள் குருமஹராஜின் ஜயந்தியை அவரோடு சேர்ந்திருந்து கொண்டாடினோம். இன்று எவ்வளவுபேர் இங்கு குழுமியிருக்கிறார்கள். அன்றைக்கும் இன்றைக்கும் எத்துணை மாறுபாடு!" என்றார் சுவாமிஜி.

Koviloor Digital Library

ஆம், அன்று பரமஹம்ஸர் விதையூன்றி, நீர்வார்த்து வளர்த்த பிஞ்சுச் செடியாக இருந்தவர் இன்று மாபெரும் விருக்ஷமாக அல்லவா வளர்ந்துவிட்டார் !

கூடியிருந்த மக்கள் சுவாமிஜியிடம் குருமஹராஜைப்பற்றிக் கூறுமாறு கேட்டுக்கொண்டனர். சுவாமிஜிக்கும் அருளாளரைப் பற்றிப் பேசி இனித்துப்போக ஆர்வம்தான். ஆனலும் கூட்டமும் கூச்சலும் அதற்குரிய சாந்தச் சூழலே அளிக்காததால் சுவாமிஜியால் பேசமுடியவில்லே.

தக்ஷிணேசுவரத்திலிருந்து அலம்பஜாரிலிருந்த மடத்துக்குத் திரும்புகையில் சுவாமிஜி உற்சவங்களின் அவசியத்தைப்பற்றிப் பேசினர். சத்தியத்தின் சூக்ஷ்மச் சாயைகளே கிரகிக்கமுடியாதவர்களுக்கு உற்சவமும் உற்சாகமும்தான் தெய்வ உணர்வை உண்டாக்கும் எனக் கூறினர்.

கல்கத்தாவில் சுவாமிஜி தமது இரண்டாவது மகத்தான சொற்பெருக்கை நிகழ்த்தினர். சொற்பெருக்கு என்பது அவ்வளவு பொருத்தமாகப் படவில்லே. 'கருத்துப்பெருக்கு' என்றே சொல்வது யுக்தம். வேதாந்தத்தின் எல்லா அம்சங்களேயும் இப்பிரசங்கத்தில் விவரித்தார் சுவாமிஜி. ஹிந்து மதத்தின் எல்லாப் பிரிவினரும் வேதாந்தமாகிய உபநிஷத்தையே ஆதாரமாகக் கொண்டவர்கள் என்று கூறி எனவே ஹிந்துக்கள் தம்மை ஹிந்துக்கள் என்ற மிசிர வார்த்தையால் குறிப்பிட்டுக் கொள்வதைவிட வேதாந்திகள் என்றே கூறிக்கொள்ளவேண்டும் என்ருர். துறவின் பெருமையை எடுத்துக்கூறி போலித்தனம், மதவெறி இரண்டையும் கண்டனம் செய்தார்.

மேல்நாடு சென்றுவந்த சுவாமிஜியைப்பற்றி ஒரு சிறிது ஐயம் கொண்டிருந்தவர்களும் இந்த உரையைக் கேட்டபின் தெளிந்தனர். சநாதன தர்மத்தைத்தான் அவர் சிறிதும் பிறழாமல் போதிக்கிருர் என உணர்ந்தார்கள். பாரத தர்மத்தைத் திரிக்காமல் கூறியேதான் மேநாட்டினரை அதனில் ஈடுபடுத்தியிருக்கிருர் என்பதைப் புரிந்துகொண்டார்கள்.

வங்காளம் விழித்துக்கொள்ளத் தொடங்கியது.

வங்காளம் மட்டும்தான ?

சுவாமிஜி அமெரிக்காவில் வேதாந்தக் கொடியைத் தூக்கிப் பிடித்த நாளாக பாரதமாதா தனது உடல் முழுவதையும் அசைத்துக்கொண்டு துயில் கலேயத்தான் செய்தாள்.

எதற்காக சுவாமிஜியின் அவதாரம் நிகழ்ந்ததோ அது நிகழத் தொடங்கிவிட்டது. ஆனல் அதனே ஒரு நிகழ்ச்சியாகவைத்து எழுத்தில் விவரிப்பது முடியாதகாரியம். மனிதன் பிராணுதார

Koviloor Digital Library

மான மூச்சுக்காற்றை எப்படிக் கண்ணுக்குக்காட்டிக் கொடுக்க முடியாதோ அவ்வாறே இந்தச் சரிதத்தின் பிராணனைப்போன்ற பாரத மறுமலர்ச்சியையும் வாசகர்களின் கண்களுக்கு எழுத்தில் வடித்துக்காட்டமுடியவில்லை.

மறுமலர்ச்சி எப்படி நடைபெற்றது என்று விளக்க முடியா விட்டாலும் மறுமலர்ச்சி நடைபெற்றது என்பதைமட்டும் அடித்துச் சொல்லலாம். ஆம், இல்லாவிடில் இன்று பாரதநாடு முழுவதும் கிறிஸ்துவ சமயம் அல்லவா பரவியிருக்கும்? அல்லது கிறிஸ்துவம், பௌத்தம், இஸ்லாம் இவை கலந்த சீர்திருத்த சமயங்களல்லவா பரவி வளர்ந்திருக்கும்? அல்லது எவ்விதமான சமய உணர்வுமற்று நாஸ்திக லோகாயத நாடாக அல்லவா இந்தப் பொன்னுடு மாறியிருக்கும்? படித்தவர்களெல்லாம் ஹிந்து மதத்தின் சில சடங்குகளையும், பழக்க வழக்கங்களையும் வெறுத்து கிறிஸ்துவர்களாக மாறியகாலம் அல்லது மத உணர்வுக்கே முழுக்குப்போட்ட காலம் அல்லவா அது? படிக்காதவர்களையோ பணத்தைக்காட்டி மதமாற்றி வந்தனர் பாதிரிமார். இந்த நிலைமையில் பாரத தர்மம் சாம்பி மடிந்துகொண்டிருந்தது. அதற்கு சுவாமிஜி சிகித்ஸைசெய்து உயிர்த்துடிப்பு அளித்தார் என்பதற்கு பாரதம் இன்றளவும் பாரதமாக இருப்பதே சான்று.

சுவாமிஜி கூறியதையெல்லாம் மக்கள் புரிந்துகொண்டார்கள் என்று சொல்லமுடியாது. புரிந்துகொண்டதையும் அநுஷ்டித்தார்கள் என்று சொல்லமுடியாது. ஆனால் ஓர் உண்மையை நன்ருகப் புரிந்துகொண்டார்கள். 'கிறிஸ்துவப் பிரசாரகர்கள் கூறுவதுபோல் கட்டுக்கதைகளும் மூடப்பழக்கங்களும் மட்டும் கொண்ட மதமல்ல ஹிந்து மதம். சிறப்புக்கள் பலபொருந்திய அதன் மற்றப் பகுதியே அதன் பெரும் பகுதி; அதுவே அதன் ஜீவநாடி. மற்ற மதங்களிலும் இல்லாத உன்னத உண்மைகள் அதில் உள்ளன என்பதற்கு மேநாட்டில், அதற்குக் கிடைத்த பேராதரவே அத்தாட்சி' என்பதை சந்தேகமறத் தெரிந்து கொண்டார்கள். சுவாமிஜி பலமுறை தாம் மேநாடுகளுக்குச் சென்றதும் இந்தியாவுக்காகத்தான் எனக் கூறியிருக்கிருர். இதனுல் இந்திய சமய மறுமலர்ச்சிக்கு நிதியம்திரட்டுவதைமட்டும் அவர் குறிப்பிடவில்லை. மேநாட்டினரை ஆட்கொள்ளும் உன்னத உண்மைகள் ஹிந்து மதத்தில் உள்ளன என்பதை அறிந்தால் நம் நாட்டு மேதாவிகள் அதன்பின் மேநாட்டு மதங்களை நாடிச் செல்லமாட்டார்கள் என்பதை அவர் தெரிந்திருந்தார். அந்த உன்னத உண்மைகள் என்ன என்று அவர்கள் புரிந்துகொண்டு பின்பற்றிஞர்களா என்பது வேறு விஷயம். உன்னத உண்மைகள்

Koviloor Digital Library

உள்ளன என்பதைப் புரிந்துகொண்டு தாம் பிறந்த தர்மத்திலேயே அவர்கள் நிலைத்ததுதான் நமக்கு விஷயம்; சுவாமிஜி, குரு மஹராஜ் இவர்களின் அவதாரத்துக்கு விஷயமானதும் இதுவே.

பாமரமக்கள் மதம் மாறியதற்கு முக்கிய காரணம் ஜாதி முறையைப்பற்றிப் பாதிரிமார்கள் செய்த பிரசாரம் தான். இந்தப் பிரசாரத்தில் உண்மை இல்லாமலில்லை. ஜாதி முறைகளின் காரணமாகச் சமூகத்தில் சிறுமைக்கு ஆளானவர்கள் அந்தச் சிறுமை இல்லாத கிறிஸ்துவ மதத்துக்கு மாற விழைந்ததில் ஆச்சரியமில்லை. இதோடு கிறிஸ்துவப் பிரசார இயக்கத்தின் பணபலமும் ஏழை இந்தியர்களிடம் 'பேசிற்று'. மக்கள் கூட்டம் கூட்டமாக கிறிஸ்துவ மதத்தைத் தழுவினர்.

இதனை சுவாமிஜி ஒப்பற்ற முறையில் தடுத்து நிறுத்தினர். இந்த முறையின் பெருமையை இதுவரை யாரும் போதியாவாறு உணர்ந்து எடுத்துச் சொன்னதாகத் தெரியவில்லை. அதாவது சுவாமிஜி ஜாதி முறைகளைத் தகர்க்க வேண்டுமென்பதுபோல் எதுவுமே கூருமல் இந்த அற்புதத்தைச் செய்தார். ஏற்றத்தாழ்வு இல்லாமல் ஜாதி தர்மம் அநுஷ்டிக்கப்பட்டு சமூகத்தின் பல தேவைகளும் பூர்த்திசெய்யப்பெற்ற புராதன காலத்தைப் போற்றினர். பிறகு ஏற்றத்தாழ்வுகளை உண்டாக்கி, ஜாதிமுறையினுல் கடமையைவிட அதிகமாகச் சலுகைகளைப் பெற்றவர்களைக் காரசாரமாகக் கண்டித்தார். ஆனுல் நவ பாரதத்தில் பண்டைய நீதிப்படி ஜாதி முறைகளைப் புனர் நிர்மாணிக்கவேண்டுமென்றோ, வேண்டாமென்றோ எதுவுமே அவர் கூறவில்லை. வர்ணதர்மம் மூலத்திலிருந்தாற்போல் உருவானுல் அதனை அவர் வரவேற்றிருக்கவும் கூடும். ஆனுல் நடைமுறையில் அது மிகவும் சாத்தியமற்றது என்று சுவாமிஜி கருதியிருக்கக்கூடும் ;

எப்படியாயினும், ஜாதியை முன்வைத்து ஒருவர் சலுகை பெறுவதையோ, வேருெருவர் சிறுமைப் படுவதையோ அவர் கண்டித்ததொன்றே மற்ற எந்தச் சீர்திருத்த இயக்கமும் செய்ய முடியாத அற்புதத்தைச் செய்தது. ஜாதி முறையின் தவருன நடைமுறையால் இன்னல் உற்றவர்களில் பெரும்பான்மையோர் உட்பட இந்தப் பல்லாயிரம் காலப்பயிரை அடியோடு வெட்டி எறிந்துவிடவேண்டுமென்று எண்ணுவதில்லை. மிகவும் நயமாகக் கையாளவேண்டிய ஒரு மலர் போன்றது சமூகம். அதனைப் பிய்த்துப் பிய்த்துப் பார்த்தனர் மற்ற சீர்திருத்தவாதிகள். சுவாமிஜி நாசூக்காகக் கையாண்டே அதிலுள்ள மாசுக்களைத் தட்டி எடுத்தார்.

Koviloor Digital Library

பாமரமக்கள் சுவாமிஜியின் உபதேசங்களை நேரிடையாகக் கேட்டுப் புரிந்துகொண்டு பிறமதம் தழுவாமல் இருந்தனர் என்று சொல்வதற்கில்லை. ஆனால் இந்நாட்டின் படிப்பாளிகள் விழித்துக் கொண்டதை எதிராளிகள் புரிந்துகொண்டனர். தாங்கள் முன் போல் பாரத தர்மத்தைப்பற்றி அவதூறும், அபவாதமும் சொன்னால் ஒரு பெரும்படை தங்களை எதிர்க்கும் என்பதை அவர்கள் புரிந்துகொண்டனர். இதனால் மதமாற்றத் தீவிரம் தானே நலிவுற்றது.

பாரதத்தைப் பாரதமாகக் காத்துத்தந்த பகவான் ஸ்ரீராம கிருஷ்ணருக்கும், சுவாமி விவேகானந்தருக்கும் ஒவ்வொரு ஹிந்துவும் தொழும்புபூணக் கடமைப்பட்டிருக்கிறான்!

* * *

ஸியால் மாளிகையிலும் அலம்பஜார் மடத்திலும் மாறி மாறி வசித்துவந்த சுவாமிஜி ஸ்ரீராமகிருஷ்ண பக்தர்களில் ஒவ்வொருவரையும் சென்று கண்டுவந்தார். அவர்கள் உதிரி உதிரியாகப் பிரிந்திராமல் ஒன்றுகூடி உழைக்கவேண்டிய காலம் வந்துவிட்டது என்று தட்டி எழுப்பிவந்தார்.

லக்ஷாதிப் பிரபுக்களிலிருந்து அஷ்டதரித்திரர்கள்வரைப் பலரும் சுவாமிஜியை வரவேற்று உபசரிக்கலாயினர். கல்விமான்களும், உத்தியோகஸ்தர்களும், தொழில் துறையினரும், இவர்களுக்குமேல் சுவாமிஜி நம்பியிருந்த இளைஞர்களும் நாள்தோறும் அவரை நாடிவந்து நமது நாட்டின் மதச்சிறப்புக்குக் கண்திறக்கப் பெற்றார்கள். இளைஞர்கள்தானே எதிர்காலத்துக்குப் பாலமாக முடியும்? எனவே அன்று பரமஹம்ஸ தேவர் செய்ததுபோலவே இன்று சுவாமிஜியும் தமது சக்தியையெல்லாம் இளைஞர் குழாத்தின் இரத்தக் குழாய்களில் பாய்ச்சி அவர்களை எழுச்சிகொள்ளச் செய்வதில் முனைந்தார். ஸ்ரீராமகிருஷ்ண பகவானைப்போலவே அவர்களிடம் வறட்டு வேதாந்தத்தை பேசாமல், மனிதப் பாங்குடன் பழகி அவர்களை ஈர்த்தார்.

உபநிஷதங்கள் கூறும் தத்துவங்களைத்தான் சுவாமிஜி மேல் நாடுகளில் பரப்பினார். ஹிந்து தர்மத்தின் பக்தி மார்க்கத்தைப் பற்றி எடுத்துரைக்கவில்லை என்று வங்காளத்துக் கிருஷ்ண பக்தர்களுக்கு ஒரு குறையிருந்தது. இதை சுவாமிஜியிடமே வந்து அவர்களில் ஒரு பிரமுகர் தெரிவித்துக்கொண்டார். அப்போது சுவாமிஜி, "பாபாஜி, அமெரிக்காவில் ஒருமுறை நான் ஸ்ரீகிருஷ்ணனைப்பற்றி ஓர் உரை நிகழ்த்தினேன். அதைக் கேட்க வந்திருந்தவர்களில் ஓர் அழகிய இளம் பெண்ணின் உள்ளத்தில் அது

Koviloor Digital Library

ஆழப்பதிந்துவிட்டது. எவ்வளவு ஆழப்பதிந்துவிட்டது என்றால் அவள் தனக்குக் கிடைக்கவிருந்த மாபெரும் பிதுரார்ஜித சொத்தைத் துறந்துவிட்டு ஏகாந்தமான ஒரு தீவுக்குச் சென்று ஸ்ரீகிருஷ்ண தியானம் புரியலானுள்'' என்றுர்.

என்றுலும் பிறநாடுகளில் தத்துவங்களைப்போல் உருவங்கள் மனத்தில் பதிவதில்லை. நமது தெய்வங்களின் லீலைகள் அவர்களுக்கு அர்த்தமாவது கடினம். இதனுல்தான் சுவாமிஜி உருவங்களைப் பிரதானமாகக்கொண்ட பாரத பக்திமார்க்கத்தை வெளிநாடுகளில் அதிகமாக விளக்கமுடியவில்லை.

இன்னெருநாள், ஸ்ரீராமகிருஷ்ணரிடம் ஈடுபாடுகொண்ட ஒரு பேராசிரியர் சுவாமிஜியிடம் கேட்டார்: ''நீங்கள் சேவை, தானதர்மம், லோகக்ஷேமம் என்றெல்லாம் பேசுகிறீர்கள். இவை எல்லாம் மாயையின் ஆளுகைக்கு உட்பட்ட உலகைச் சேர்ந்தவை அல்லவா? மாயையின் கட்டுக்களை அறுத்துக்கொண்டு முக்தி பெறுவதுதான் ஜீவனின் லக்ஷியம் என்று வேதாந்தம் கூறுகையில் நீங்கள் மனித சேவையைக் குறிக்கோளாகச் சொல்வது எப்படிச் சரியாகும்?''

நொடிப்பொழுதும் தயங்காமல் சுவாமிஜி விடையளித்தார்: ''நல்லது, அப்படியானுல் முக்தி நிலையை அடையுமுன் அந்த நிலையை அடையவேண்டும் என்று எண்ணுவதும் மாயைக்கு உட்பட்டதுதானே? ஆத்மா மாயையால் கட்டுப்படாதது; அது எப்போதும் முக்திநிலையில் உள்ளது என்று வேதாந்தம் போதிக்கும்போது முக்திக்காக முயல்வது என்பதற்கு என்ன அர்த்தம்?''

பாரததேசம் முழுவதும் பிரக்யாதிபெற்று, இந்நாட்டின் இக்காலத்துச் சாதுச் சக்கரவர்த்தி என்று புகழடைந்தபின்னும் வேறெந்த சாதுவும் கண்டிராதவகையில் தேசத்தின் தொழுகையைப்பெற்ற பின்னும் சுவாமிஜி தமது எளிமையை இழக்காதிருந்ததை மேல்நாட்டுச் சிடர்கள் குறிப்பிட்டு அதற்கு ஓர் உதாரணமும் தருகிறுர்கள்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் தமையனுர் புதல்வரான ராமலால் சட்டோபாத்தியாயர் ஒரு நாள் சுவாமிஜியைக் காணவந்தார். உடனே சுவாமிஜி தமது ஆசனத்திலிருந்து எழுந்திருந்து, ''ராம்லால் தாதா, தாங்கள் இதில் அமரவேண்டும்'' என்று பணிவுடன் கேட்டுக்கொண்டார். பலர் முன்னிலையில், உலகம்போற்றும் விவேகானந்தர் கீழே உட்கார்ந்திருக்கத் தாம் ஆசனத்தில் அமருவதாவது என்று சட்டோபாத்தியாயரும் தயங்கினுர். ஆனுல் சுவாமிஜி விடவில்லை. பிடிவாதமாக ராம்லால் தாதாவை உட்

Koviloor Digital Library

காரச் செய்தார். பிறகு ''குருவத்குருபுத்ரேஷ்'' — குருவின் புத்திரரைக் குருவாகவே மதிக்கவேண்டும் என்று கூறியபடி அறையைச் சுற்றிவந்தார்.

இன்னொரு நாள் வேட்கைகள் மனிதனை எப்படிப் படாத பாடு படுத்துகின்றன என்பதுபற்றி சுவாமிஜி உபந்நியசித்தார். அடக்கமுடியாமல் கிழ்த்தர எண்ணங்கள் எழுவதைக்கூறி, ''என் இளமையில் ஒருமுறை சிந்தனைகள் தீவிரமாக எழுவதைக் கண்டு என்மீதே எரிச்சலும் அலுப்பும் கொண்டேன். அப் போது ஏற்பட்ட புண் ஆற எத்தனையோ நாட்கள் பிடித்தன'' என்றார்.

இச்சமயத்தில் பலர் சுவாமிஜியைப் பேட்டிகண்டு தங்கள் சந்தேகங்களுக்கு நிவர்த்தி பெறுவார்கள்.

ஒருவர் ''அவதார புருஷருக்கும் ஜீவன் முக்தருக்கும் என்ன வித்தியாசம்?'' எனக் கேட்டார்.

அதற்கு சுவாமிஜி நேராகப் பதில் கூறவில்லை.

''என்னுடைய சாதனை வாழ்வின்போது நான் நாடெங்கும் சுற்றித்திரிந்தேன் அல்லவா? அப்போது முக்திநிலையைப் பெற முடியவில்லை என்பதனால் — பெறவேண்டும் என்பதனால் — பல முறை உண்ணாவிரதம் இருந்து உயிரைவிட்டுவிடுவதென்று சங் கல்பம் செய்துகொண்டு ஏகாந்தமான குகைகளை அடைந்து தியானம் புரிவேன். இப்போது எனக்கு முக்தியில் விருப்பம் இல்லை. பிரபஞ்சத்திலுள்ள கடைசி ஆத்மா முக்திபெறும்வரை யில் என் முக்தியைப்பற்றி எனக்கு அக்கறையில்லை'' என்றார்.

கோரக்ஷண சங்கத் தலைவர் ஒருவர் இச்சமயத்தில் சுவாமி ஜியைச் சந்தித்தார். தமது சங்கம் பசுமாடுகளின் பராமரிப்புக்குச் செய்யும் சேவைகளை அவர் சுவாமிஜிக்கு எடுத்துக் கூறினார். சங்கத்துக்கு நல்ல நிதி வசதியிருப்பதாகவும் தெரிவித்தார்.

''சரி, மத்திய இந்தியாவில் பயங்கரமான பஞ்சம் ஏற்பட்டு ஒன்பது லக்ஷம் மக்கள் மடிந்திருப்பதாக இந்திய சர்க்கார்அறிக்கை விட்டிருக்கிறதே. பஞ்சத்தால் கஷ்டத்துக்கு ஆளானவர்களின் கஷ்டநிவாரணத்துக்காக உங்கள் சங்கம் ஏதேனும் உதவிசெய் துள்ளதா?'' என்று வினவினார் சுவாமிஜி.

''இல்லை. இதுபோன்ற காரியங்களுக்கு நாங்கள் உதவுவ தில்லை. கோமாதாவை ரக்ஷிப்பதொன்றுதான் எங்கள் லக்ஷியம். பஞ்சம் ஏற்பட்டு மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்றால் அது அவர்களுடைய கர்மம். தாங்கள் செய்த பாபத்துக்கு அவர்கள் அநுபவித்துத்தானேயாகவேண்டும்'' என்றார் சங்கப் பிரசாரகர் சிறிதும் நெஞ்சிரம் இல்லாமல்.

Koviloor Digital Library

சுவாமிஜிக்கு எரிச்சல் வந்தது. ''கர்மநியதியைப்பற்றி நீங்கள் இப்படி நினைப்பீர்களாயின் உங்கள் சங்கத்தின் லக்ஷியத்துக்கும் தானே அது பொருந்தும்? பசுக்கள் கசாப்புக் கடைக்காரர்களிடம் சிக்கிக்கொள்கின்றன என்றால் அதற்குக்காரணம் அவற்றின் கர்மம்தான் என்று ஏன் சொல்லக்கூடாது. உங்கள் நியாயப்படி சேவை என்பதற்கு யாருக்குமே எதற்குமே அவசியமில்லையே!'' என்றார்.

பிரசாரகருக்குத் தக்க பதில் அளிக்கத் தெரியவில்லை.

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. நமது சாஸ்திரங்கள் 'பசு நமது தாய்; அதை ரக்ஷிக்கவேண்டும்' என்கிறது. அதன்படி நாங்கள் பணி செய்கிறோம்'' என்று கூறினார்.

சுவாமிஜி சிரித்தார்.

''ஆமாம், ஆமாம்; பசு நமது தாய்தான். அது எனக்குப் பிரத்யக்ஷமாகத் தெரிகிறது. பசுவைப்போன்ற ஒரு விலங்கின்றி வேறுயார் நம்மைப்போன்ற புத்திசாலிப் பிள்ளைகளைப் பெற்றெடுக்க முடியும்?'' என்று கேட்டார்.

சுவாமிஜி தமது பிறவிப் பணியைப்பற்றிப் பிரிய சிஷ்யர்களிடம் உள்ளது உள்ளபடி சொல்லிக்கொள்வார். அகம்பாவம் என்பது கலக்காமல், வேறொரு மகானை மதிப்பிட்டுப் பேசினால் எப்படி அவரது பெருமையை எடுத்துச் சொல்வாரோ, அதே போல் தம்மிலிருந்து தாம் விலகியிருந்து தமது மாபெரும் சாதனையைக் கூறுவார். ஒரு நாள் சிஷ்யர் ஒருவரிடம் அவர் உணர்ச்சிப் பிரவாகமாகக் கூறினார்:

''எனக்கு என்னிடம் எவ்வளவு நம்பிக்கை உள்ளதோ அவ்வளவு நம்பிக்கை உனக்கு உன்னிடம் இருந்தால் — அனந்தமான ஆற்றலும், கட்டுக்கடங்காத ஞானமும், வெல்லவொண்ணாத வலிமையும் உன்னிடம் உள்ளது என்று உணர்ந்து அதனை உசுப்பிக்கொள்வாயானால் — நீயும் என்னைப்போல் ஆவாய்; அற்புதங்கள் புரிவாய்! 'அப்படி நம்புவதற்கான பலம் நமக்கு எங்கு இருக்கிறது? மாந்தரின் பலவீனத்தையே எடுத்துக்கூறும் குருமார்களிடையே பலத்தை எடுத்துச்சொல்லி நம்பிக்கையை ஊட்டக்கூடிய ஆசாரியன் எங்கே?' என்று நீ கேட்பாய். அதற்காகவே தான் நான் வந்திருக்கிறேன். பலத்தைப் போதிக்கத்தான் நான் உங்களிடையே வந்திருக்கிறேன். உங்களுக்கு வழிகாட்டுவதற்காகவே வாழ்கிறேன். என்னிடமிருந்து இந்த உண்மையை நீங்கள் கற்றுணரவேண்டும். பிறகு நகரம் நகரமாக, நாடு நாடாக, வீடு வீடாகச் சென்று இந்தக் கருத்தைப் பரப்ப வேண்டும். கிளம்புங்கள்! ஒவ்வோர் இந்தியனிடமும் சென்று,

Koviloor Digital Library

'எழுவாய், விழிப்பாய், கனவுகாணுதே! உன்னேயே நீ உசுப்பிக் கொண்டு உன்னில் உள்ள தெய்விகத்தை வெளிப்படுத்திக் கொள் வாய்!' என்று முழக்குங்கள். அந்தராத்மாவின் ஆற்றலே உணர்ந்தபின் உங்களால் நீக்கமுடியாத தேவையும், துன்பமும் எதுவும் கிடையாது.''

ஸியால் தோட்டத்திலும் அலம்பஜார் மடத்திலும் பல பண்டிதர்கள் சுவாமிஜியைக்காண வருவதுண்டு. ஆத்ம ஞானம் என்பது அநுபவத்தில் உள்ளது என்று நினையாமல், அது புலமை யில் இருப்பதாக எண்ணி சாஸ்திரங்களேக் கரைத்துக் குடித்தவர் கள். அவர்கள் சுவாமிஜியிடம் படாடோபமாக சம்ஸ்கிருதத்தில் பேசலானுர்கள். சுவாமிஜியும் அமைதியுடன் சம்ஸ்கிருதத்தி லேயே மறுமொழி கூறிவந்தார். ஒரே ஒரு முறை 'ஸ்வஸ்தி' என்பதற்குப் பதில் 'அஸ்தி' என்று கூறிவிட்டார். உடனே அப்பண்டிதர்கள் இடி இடியெனச் சிரித்தார்கள். சுவாமிஜியோ சாந்திகுலேயவே இல்லே. தாமே தவற்றைத் திருத்திக்கொண்டு, மிகவும் பவ்யமாக, ''நான் கற்ருேரின் பணியாள், என் அபரா தத்தை அவர்கள் க்ஷமிக்கவேணும்'' என்று கேட்டுக்கொண் டார்.

கர்மத்தை முக்கியமாகக்கொண்ட பூர்வமீமாம்ஸை, ஞானத்தை முக்கியமாகக்கொண்ட உத்தரமீமாம்ஸை இவை குறித்து வாத விவாதங்கள் நடைபெற்றன. சுவாமிஜி ஞானத் தைத்தானே பெரிதாகக் கூறுவார்? உத்தரமீமாம்ஸையின் உயர்வை அவர் வெகு ஆணித்தரமாக எடுத்துரைத்தார். சுவாமி ஜியின் மொழிப்புலமையை ஒரு மாற்றுத் தாழ்வாக மதிப்பிட்ட பண்டிதர்களும் சாஸ்திர கருத்துக்களில் அவர் பெற்றிருந்த சிறப்பைப் புகழ்ந்து கூறினர்.

அவர்கள் போனபின் சுவாமிஜி நம் நாட்டுப் பண்டிதர்களின் விநயமற்ற தன்மையை நினைத்து வருத்தப்பட்டார். மேல்நாட்டில் கற்ருேர் இவ்வாறு இல்லே என்று கூறி, ''நம் நாட்டுப் பண்டி தர்கள் தானியமணிகளேப் பாராமல் தவிட்டையே பார்க்கிருர் கள்'' என்று மணிமொழி கூறினுர்.

இந்த விவாதம் நடைபெறும்போது குருபாயிக்கள் கொண் டிருந்த மன எழுச்சியை விவரிக்கமுடியாது. தங்கள் தலேவர் இந்தப் படாடோபப் பண்டிதர்களே வென்று நல்லபடியாக மீண்டு வரவேண்டுமே என அவர்கள் தவித்தனர். சுவாமிஜி ராம கிருஷ்ணனந்தரோ சுவாமிஜியின் வெற்றிக்காகத் தியானமே புரியத் தொடங்கிவிட்டார். ஸ்ரீராமகிருஷ்ண மடங்களின் மூல தனம் இந்த நட்புணர்ச்சிதான்.

Koviloor Digital Library

வேறொரு நாள் சுவாமிஜி தம்மிடம் ராஜயோகம்பற்றிக் கேட்கவந்த இருவரிடம் அவர்கள் ஏதும் கேட்குமுன்னரே அந்த சாஸ்திரத்தை விவரிக்கலானார். மணிக்கணக்கில் காலம் சென்று கொண்டிருந்தது. பிற்பகல் மூன்று மணியிலிருந்து மாலை ஏழு மணிவரை சண்டப்பிரசண்டமாக ராஜயோகத்தைப்பற்றியும், அதன் விஞ்ஞான உண்மைபற்றியும் விளக்கினார் சுவாமிஜி. அவர் தமது 'ராஜயோகம்' என்ற நூலில் எழுதியதற்கு மேலாக பல புதுக் கருத்துக்களை அப்போது சொரிந்தார்.

வந்தவர்கள் தங்கள் வாயைத்திறக்காதபோதே சுவாமிஜிக்கு எப்படி அவர்களின் உள்ளத்திலிருந்த சங்கை தெரிந்தது என்று சிஷ்யர் ஒருவர் கேட்டார். இதற்கு நேராக விடைகாணாத சுவாமிஜி, இதேபோல் மேல்நாடுகளிலும் பலமுறை பிறர் உள் ளத்திலிருந்ததைத் தாமாகப் புரிந்துகொண்டு சந்தேகத்தைத் தீர்த்ததுண்டு என்று தெரிவித்தார். இதெல்லாம் யோகசக்திதான் என்று கூறினார்.

''அப்படியானால் சுவாமிஜி, யோகசக்தியால் தாங்கள் தங்களின் பூர்வஜன்மங்களை அறிவீர்களா?'' என்று கேட்டார் ஒருவர்.

''ஓ, அறிவேனே!'' என்றார் சுவாமிஜி.

ஆனால் திரையை விலக்கி அந்தப் பூர்வீகக் காட்சியை மற்றவர்களுக்குக் காட்ட அவர் விரும்பவில்லை.

அப்படியானால் சுவாமிஜி முற்பிறப்பு உள்ள சாதாரண ஜீவர்தாமே? அவர் அவதார புருஷர் இல்லையா? அவதார புருஷர்தான். இந்தப் பிறப்பில் எப்படி அவர், 'நான் மோக்ஷத்தில் கரையாமல் உலகமக்களுக்காக மீண்டும் மீண்டும் பிறப்பேன்' என்று கூறித் தாமாகவே ஜனன-மரணத்துக்குத் தம்மை ஆட்படுத்திக் கொண்டாரோ, இப்படியே முற்பிறப்பிலும் செய்த மகா புருஷர் அவர். தியானசித்தர் ஒருவரே நரேந்திரராகப் பிறந்திருக்கிறார் என்று குருமஹராஜ் கூறியது வாசகர்களுக்கு நினைவிருக்கக்கூடும். இன்னும் சிறிது நினைவைக் கிண்டிக்கொண்டு பார்த்தால் அவர் ஸப்தரிஷிகளில் ஒருவர் என்பதும், நரநாராயணர்களில் ஒருவரான நரன் என்பதும் ஞாபகம் வரும்.

பிறிதொருநாள் மாலை. சுவாமி பிரேமானந்தருடன் ஸியால் மாளிகையில் ஓர் அறையில் உரையாடிக்கொண்டிருந்தார் ஸ்ரீமத் விவேகானந்தர். பேசிக்கொண்டேயிருந்தவர் திடீரென மௌனமானார். சிறிது போதுக்குப் பின்பு, ''நீ இப்போது எதையேனும் கண்டாயா?'' என்று பிரேமானந்தரைக் கேட்டார். ''இல்லை'' என்றார் பிரேமானந்தர். ''நான் கண்டேன். ஆவியொன்றை

Koviloor Digital Library

இப்போது இங்கு கண்டேன். உடம்பிலிருந்து துண்டிக்கப்பட்ட தியுடன் அந்த ஆவி என்னிடம் தன்னைப் காப்பாற்றச் சொல்லிப் பரிதாபமான பார்வையுடன் முறையிட்டது என்றார்.

பிறகு விசாரித்துப் பார்த்ததில், அந்த மாளிகையில் முன்பு கடுமையாக வட்டி விதித்து லேவாதேவி செய்த ஒரு பிராமணன் வசித்துவந்ததாகவும், அவனைக் கடனாளி ஒருவன் கழுத்தை முறித்துக் கங்கையில் போட்டுவிட்டதாகவும் தெரிந்தது.

உயிருடலுள்ள மக்கள் மட்டுமின்றி, பிசாசுகளும் சுவாமிஜியின் கருணையை நம்பி அவரிடம் காப்புபெற வந்தன என்பதை அவரது பரிவிராஜக வாழ்க்கையின்போதே சென்னையில் கண்டிருக்கிறோம். இதேபோல் பலமுறை நிகழ்ந்ததுண்டு. சுவாமிஜி 'ஆவிகளின் குறைகளை அறிந்தபின் அவற்றுக்காக மனமுருகிப் பிரார்த்திப்பார். அந்த ஆவிகளும் விமோசனம் பெறும்.

அலம்பஜார் மடத்தில் சுவாமிஜி இன்னொரு ஸ்ரீராமகிருஷ்ணராக விளங்க அங்கு பக்தியும் ஞானமும் ஆனந்தமும் பெருக்கெடுத்தோடின. தமது உள்நாட்டு, வெளிநாட்டு, அநுபவங்களை அவர் சுவைப்படக் கதை கதையாகக் கூற குருபாயிக்கள் அவற்றைக்கேட்டுப் பேரானந்தமடைவார்கள். உலகத்துக்கே உரிய சுவாமிஜிக்கு ஆலம்பஜார் மடம்தான் பிறந்தகமாயிருந்தது.

குருபாயிக்களிடம் விசால மனப்பான்மையைத் தோற்றுவிப்பதே சுவாமிஜியின் முதல் பணியாயிருந்தது. தம்மை நம்பி உடன்வந்த மேல்நாட்டுச் சிடர்களை குருபாயிக்கள் தங்களவராக மதிக்கச் செய்தார்.

ஆத்ம மோக்ஷத்தைவிட சமூக சேவையே சாதுக்களின் லக்ஷியம் என்பதை சுவாமிஜி குருபாயிக்களின் மனத்தில் பதிவு செய்வது அவ்வளவு எளிதாக இல்லை. அவர்கள் பாரமார்த்திக தியானத்துக்காகத்தான் வீடு வாசலைத் துறந்து குருமஹராஜை அண்டியிருந்தார்களேயன்றி மக்களுக்குச் சேவை புரிவதற்காக அல்ல. ஸ்ரீராமகிருஷ்ண பகவான் சமூக சேவையைப் பிரதானமாகச் சொல்லவில்லை என்றே குருபாயிக்கள் கருதினர். சுவாமிஜியின் பிரசாரமுறை, பிரசங்கங்கள், பொதுத்தொண்டு இவை மேற்கத்திய பாணியில் இருப்பதாகவும், குருமஹராஜின் உபதேசத்துக்கு அவ்வளவு இசைவாக இல்லை என்றும் குருபாயி ஒருவர் வியத்தமாகவே சொல்லிவிட்டார். உடனே சுவாமிஜியின் ஆத்மா கனன்றுகொண்டு எழுச்சிபெற்றது. அக்னிபோல் ஜ்வலிக்கும் வாசகங்கள் அவரது நாவிலிருந்து புறப்பட்டன.

" இவையெல்லாம் ஸ்ரீராமகிருஷ்ணரின் எண்ணத்துக்கு இசைவானவையல்ல என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? அந்த

Koviloor Digital Library

மில்லாத எண்ணப் பெருக்கினை உடைய குருநாதரை உங்களுடைய சிறிய எல்லைக்குள்ளாகவா அடக்கப் பார்க்கிறீர்கள்? நான் இந்த எல்லைகளைத் தகர்த்தெறிந்து அவரது எண்ணங்களை உலக முழுவதும் வாரித் தெளிப்பேன். தம்மை வழிபாட்டுமூர்த்தியாக்க வேண்டும் என்பதுபோல் அவர் எனக்கு ஒருபோதும் கட்டளை யிட்டது இல்லை. ஆத்ம சாதனைகள், தியானம், தாரணை ஆகிய எந்த உயர்ந்த தத்துவங்களை அவர் உபதேசித்தாரோ அவற்றை நாம் உணர்வதோடு மன்பதைக்கும் எடுத்துரைக்கவேண்டும். ஏராளமான பிரிவுகள் உள்ள இவ்வுலகில் புதிதாக ஒரு மதப் பிரிவை உண்டாக்க நான் பிறக்கவில்லை. நமது குருமஹராஜின் சரணங்களைச் சரண் அடைந்த நாம் பாக்கியசாலிகள். அவர் நம்மிடம் ஒப்பித்த கருத்துக்களை நாம் உலகமுழுவதற்கும் பிரதி எதிர்பாராது வழங்கவேண்டியது நமது கடமையாகும்......''

குருநாதரின் அருளை நினைந்து சுவாமிஜி மேலும் கூறுவார்:

''அவரது கருணையின் முத்திரையை நான் மீண்டும் மீண்டும் பெற்றிருக்கிறேன். அவர் எப்போதும் என் பின்னணியில் இருக் கிறார். என்னை இவ்வழிகளில் வேலைபுரியச் செய்பவரும் அவரே......''

மேல்நாடுகளில் தாம் சாதித்ததெல்லாம் தமது ஆசாரியனின் சாதனையே என்றும் முன்பும் சுவாமிஜி கூறியிருக்கிறார் அல்லவா? தமது எல்லா எண்ணங்களும், செயல்களுமே குருவினுடையது தான் என அவர் நம்பினார். பரமஹம்ஸர் எப்படித் தம்மை பவதாரிணியிடம் பூரணமாக ஒப்புக்கொடுத்துக்கொண்டு தமக் கெனச் சிந்தனையும் செயலும் அற்றிருந்தாரோ அதேபோல் பரம ஹம்ஸரிடம் தம்மை அர்ப்பித்துக்கொண்டிருந்தார் சுவாமி விவே கானந்தர். எனவே அவர் தற்போது சமூக சேவைபற்றியும், ஸ்தாபனரீதியில் செயல்படுவது பற்றியும் சிந்தித்தார் எனில் அதுவும் குருநாதரின் சித்தமே எனக்கருதினார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் — ஸ்ரீவிவேகானந்தர் என்ற இரட்டை யராக அவதாரம் நிகழ்ந்ததன் பொருளே இதில்தான் இருக்கிறது. ஸ்ரீராமகிருஷ்ணரே தமது அநுபவங்களை உலகுக்கு விளக்கியிருக்க லாம்; அல்லது உலகுக்கு விளக்கமளித்த ஸ்ரீவிவேகானந்தரே அவற்றை அநுபவித்திருக்கலாம். இவ்வாறு இன்றி அநுபவங்களை ஒருவர் நீண்ட நெடுங்கால சாதனைகளால் பெற்றார். பிறகு அவற்றை இன்னொருவருக்கு வெகு லகுவாக அளித்தார். அந்த இன்னொருவர் அவற்றைப் பிரசாரம் செய்தார். அப்படியானால் ஓர் அவதார புருஷரால் போதாமல் இரண்டுபேர் தேவைப் பட்டனர் என்று பொருளா? இப்படிக் கூறுவது அவதாரத்தையே

Koviloor Digital Library

குறைத்துச் சொல்வதற்குச் சமம் அல்லவா? அளவு . கடந்த ஆற்றல்பெற்ற பிரம்பொருள் உலகை உய்விக்க அவ்வளவு பிரயாசை எடுத்துக்கொள்ளவேண்டுமா, என்ன? அல்ல. இரண்டு தனி அவதாரங்களாக நாம் ஸ்ரீராமகிருஷ்ண — ஸ்ரீவிவேகானந் தர்களைக் கருதக்கூடாது. இருவரும் சேர்ந்தே, ஓர் அவதாரம் தான். சக்தியும் சிவமும்போல் ஒன்றைவிட்டு மற்றவர் பிரியாத இருவர் அவர்கள். எனவே ஸ்ரீராமகிருஷ்ணர் பூதஉடலை நீத்தார் எனினும் அதன்பின் சுவாமிஜியின் உள்ளத்திலிருந்து சிந்தித்தார், பேசினர், செயல் புரிந்தார். எனவே பரமஹம்ஸர் தமது வாழ்நாளில் அவ்வளவு அதிகமாகக்கூருத மக்கள் தொண்டில் இப்போது சுவாமிஜி தீவிரமாக ஈடுபட்டிருந்தார் எனில் அதுவும் பரமஹம்ஸர் அவரை அவ்வாறு ஈடுபடுத்தியதால்தான் என்றே கூறலாம்.

இவ்வாறு ஏன் இரு மகான்களாக ஒரே அவதாரம் நிகழ வேண்டும் — ஒருவரே ஏன் அவதாரப் பணியைச் சாதித்திருக்கக் கூடாது என்ற வினு எழலாம். காலத்தின் தேவைதான் இப்படி இருவர் ஏற்படக் காரணமாயிருந்தது எனலாம். அறிவாராய்ச்சி யில் முன்னேறிய நிகழ்காலத்தில் நவீனக்கல்வி பெருத ஒருவர் மூலம், நவயுக வாழ்க்கை வாழாத ஒருவர் மூலம் ஆத்மிகத்தைப் பரப்பி அறிவைவிட அநுபவமே முக்கியம் என்பதை மெய்ப்பிக்க வேண்டியிருந்த சூழ்நிலை இது. இதனுலேயே எளியவரில் எளியவ ராக, பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் அவதரித்தார். ஆனுல் நவீனக் கல்வி பெருத இவர் எப்படி அகில உலகுக்கும் தமது அநுபவத்தை விளக்கமுடியும்? அதற்காகத்தான் இன்னெருவரும் வேண்டி யிருந்தார். சுவாமிஜியின் அவதாரம் இதற்காகவே நிகழ்ந்தது.

பரமஹம்ஸர் தன்னில் கரைந்ததைச் சொல்லாமல் தன்னை எப்போதும் அவர் தூண்டி வருவதாகவும் ரக்ஷித்து வருவதாகவும் சொன்னுர் சுவாமிஜி.

''களைத்துப்போய், பசிக்கொடுமை தாங்காமல், நான் மரத் தடியே சுருண்ட காலங்களிலும், கௌபீனத்தை முடியக்கூடத் துணியில்லாமல் நான் தவித்தபோதுகளிலும் கையில் கால்காசு இன்றி நான் உலகெல்லாம் சஞ்சரித்த சமயங்களிலும் அப்போ தெல்லாம் குருமஹராஜின் கிருபையாலேயே நான் உதவியும், காப்பும் பெற்றுவந்தேன். இதேபோல் இந்த விவேகானந்தரை ஒருமுறை காணவேணுமென்று இடித்து மோதிக்கொண்டுசிகாகோ விதிகளில் கும்பல் நெரிந்தபோதும் அவரது ஆசியாலேயே நான் அத்தனை கௌரவத்தையும் — அதில் நூற்றில் ஒரு பங்குகூட சாமானிய மனிதனை தலைக்கொழுப்படையச் செய்யும் — சிரம

Koviloor Digital Library

மின்றி சகஜமாக ஏற்கமுடிந்தது. ஈசுவரனின் திருவுள்ளம் காரணமாக எங்கு சென்ருலும் எனக்கு வெற்றியே கிடைத்தது. இப்போது நான் தாய்நாட்டுக்காக ஏதோ சிறிது செய்யவேண்டும் என எண்ணியிருக்கிறேன். நீங்கள் யாவரும் ஐயங்களேயும், தப்பபிப்பிராயங்களேயும் விட்டுவிட்டு என் பணியில் கைகொடுத்து உதவுங்கள் ! அப்படிச் செய்தீர்களாஞல் அவன் அருளில் அதிசயங் கள் நிகழக் காண்பீர்கள்.''

சுவாமிஜி இப்படிக் கூறியது அவரது சமூகப் பணித் திட்டத்தை ஆட்சேபித்த குருபாயியின் உள்ளத்தையும் தொட்டு விட்டது.

''உங்கள் சித்தப்படி நடப்போம். நீங்கள் காட்டும் வழியி லேயே என்றும் நாங்கள் செல்வோம். குருமஹராஜ் உங்கள் மூலம் செயல்புரிவதை நான் தெளிவாகக் காண்கிறேன்.'' என்று அவர் சொல்லிக்கொண்டே போனுர்.

சுவாமிஜி மீண்டும் பேசலாஞர்: ''விஷயம் இதுதான்: ஸ்ரீராமகிருஷ்ணர் அவரது சிஷ்யர்கள் அவரை எப்படிப் புரிந்து கொண்டார்களோ அதைவிட மிகவும் விரிந்து பரந்தவர். அனந்த மான வழிகளில் வளரக்கூடிய அனந்தமான ஆத்மிக தத்துவங் களின் உருவம் அவர். பிரம்ம ஞானத்துக்கு ஒருவர் எல்லே கண்டாலும் காணலாம்; குருமஹராஜின் ஆழங்காணமுடியாத உள்ளத்தை யாரும் அளவிடமுடியாது. அவரது நயனங்களின் ஒரு அருள்நோக்கு நொடிப்போதில் நூருயிரம் விவேகானந்தர் களேச் சிருஷ்டித்துவிடும் ! அப்படியிருந்தும் என் ஒருவன் வழியே அவர் செயல்பட எண்ணம்கொண்டார் எனில், என்னேத் தமது கருவியாகத் தேர்வு செய்தார் எனில், நான் அவரது திரு உள்ளக்கருத்துக்கு வணங்குவதன்றி வேறென்ன செய்ய முடியும் ?''

'ஆண்டவனே லக்ஷியம்; உலகம் அதன் பின்பே — ஏன், உலகம், என்பது வெறுத்து ஒதுக்கவேண்டியது' என்ற பொது வான சந்நியாசக் கருத்தை மாற்றுவது எளிதல்ல. அதுவும் தம்மையே சாரிய புருஷனுக சொல்லிக்கொள்ளாமல் பரம ஹம்ஸரின்பேரில் ஸ்தாபனம் எழுப்ப முனேந்த சுவாமிஜி இந்தக் கருத்தை நடைமுறைக்குக் கொண்டுவர குருபாயிக்களுடன்மிகவும் உத்வேகத்துடன் பேசவேண்டியதாயிருந்தது. நாடு முழுவதும் திரிந்தவர் அவர். நாட்டில் கோடி, கோடி, கோடானுகோடி மக்கள் கல்வியும், பொருளாதார வசதியும், ஆத்மிக உணர்வும் இன்றி இழிநிலேயுற்றதைக் கண்கள் புண்ணுகும்வரை கண்டு கசிந் தவர் அவர். அதே கண்களால் மேல்நாட்டு மக்கள் அறிவுத்

Koviloor Digital Library

துறையில் எவ்வளவு முன்னேறியிருக்கிறார்கள், பொருளாதாரத் தில் எவ்வளவு சிறப்பாக இருக்கிறார்கள் என்பதையும் அவர் கண்டிருந்தார். அதன் பின்னும் தாயகத்துத் தாழ்நிலை மக்களை உயர்த்தாமலிருக்க அந்த அன்பு இதயத்தால் எப்படி முடியும்? தமது கொள்கைக்கு குருமஹராஜின் ஒப்புதல் நிச்சயமாக உண்டு என்பதைச் சில உதாரணங்களால் விளக்கினார் அவர்.

'கடவுளைக்காணக் கண்களை மூடிக்கொள்ள வேண்டியதில்லை. கண்களைத் திறந்துகொண்டே கடவுளுடன் சேர்ந்திரு' என்று தம்மை ஒருமுறை குரு பாலித்ததை நினைவுகொண்டார். கண்ணுக்கு முன் தெரியும் மாந்தரைத் தெய்வமாக எண்ணி சேவை செய்வதுதான் இதன் பொருள் என்று நிச்சயம் கொண்டார்.

''மதம் என்பது வயிறுகாய்ந்தவர்களுக்கு ஏற்பட்டதல்ல'' என்று குருநாதர் வியக்தமாகக் கூறியிருக்கிறாரே! மக்களுக்குத் தத்துவங்களைமட்டும் தந்தால் போதாது; முதலில் அவர்களுக்கு உணவும் உடையும் இருக்கையும் அளிக்கவேண்டும் என்ற ஆக்ஞை தானே இது? 'மக்களுக்காக உன் மோக்ஷத்தைத் தியாகம் செய்' என்று பரமஹம்ஸர் ஆணையிட்டபோது 'மக்களுக்கு உபதேசிப்பதற்காக' என்பதைமட்டுமா அவர் நினைத்திருப்பார். அவர்களை எல்லா முறையிலும் மேம்படுத்தவேண்டும் என்பது தானே ஆசானின் கட்டளையாயிருக்கவேண்டும்? ஏழை எளியவர்களையும், தாழ்த்தப்பட்டவர்களையும், நசுக்கப்பட்டவர்களையும் கண்டு அவர் எவ்வளவு கண்ணீர் வடித்திருக்கிறார். எல்லாரும் நாராயணர்கள் என்று கூறியவராயிற்றே அவர். அப்படிப் பட்டவர் சமூகத் தொண்டுக்குத் தங்களைப் பணிக்கவில்லை, என்று ஏன் குருபாயிக்கள் நினைக்கவேண்டும். சின்னஞ்சிறு 'நான்', அந்த 'நானை'ச் சேர்ந்த உறவினர்கள் இவர்களிடம் பாசத்தை அறுத்து, ஆண்டவனிடம் அன்புசெலுத்துவது, பிறகு எல்லாரையும் ஆண்டவனாகக்கண்டு, அவர்களுக்குப் பணிபுரியத்தான் — இதுவேயல்லவா ஸ்ரீராமகிருஷ்ணரின் தலையான சித்தாந்தம்?

பரமஹம்ஸரை ஆத்மஞானியாகக் கண்டு நாம் வழிபடுகிறோம். அவரை அப்படி வழிபட்டதோடு மனிதாபிமானியாகவும் கண்டு மேலும் பக்தியுடன் பஜித்தார் சுவாமிஜி. மற்றவர்களும் அவரை அப்படிப் பார்க்குமாறு செய்தார். ஆத்மஞானம் பெறுவதற்குச் சாதனை புரியுமாறு அவர் சீடர்களைப் பணித்தார். வெற்றி பின்? வனாந்தரத்துக்கா செல்லச் சொன்னார்? அல்லவே! ஆத்மஞானம் பெற்று மனசு தூய்மையாகப் பெற்றபின் அவர்கள் மக்கட்குலத்தை மகாதேவனாகக் கண்டு தொண்டுபுரியவேண்டுமென்பதுதான் அவரது உட்கிடக்கை. ஆத்மஞானம் பெறாதவனால்

Koviloor Digital Library

உண்மையான தொண்டுபுரிய முடியாது. மனத்தூய்மையில்லாமல் பந்தபாசங்களுக்கு ஆட்பட்ட ஒருவன் எப்படி பாரபட்சமின்றி, சமதரிசனத்துடன் சகலருக்கும் தொண்டுபுரிய முடியும்?

இதை சுவாமிஜி எவ்வளவு விளக்கியும் சில குருபாயிக் களுக்கு மீண்டும் மீண்டும் உள்ளம் குழம்பிக்கொண்டேதான் இருந்தது. பரமஹம்ஸருக்காகத் தங்கள் வீடுவாசல், சொத்து சுதந்திரம், பட்டம் பதவி யாவற்றையும் புறக்கணித்துவந்த அவர்களுக்குத் தாங்கள் குருமஹராஜின் விருப்பப்படி நடக்கி ருேமா என்பதில் உண்மையாகவே சந்தேகம் தோன்றியது. 'ஸ்தாபனமாக அமைந்து சமூகசேவை செய்யுங்கள்' என்று அவர் ஐயம்திரிபற மொழிந்ததில்லையே என அவர்கள் எண்ணு வார்கள்.

ஒரு நாள் பலராம் போஸின் இல்லத்தில் சுவாமிஜி இருந்த போது சுவாமி யோகானந்தர் அவரை வெளிப்படையாகவே கேட்டுவிட்டார்: ''குருமஹராஜ் எங்களையெல்லாம் பக்தி புரியச் சொன்னுர்; சாதனைகள் செய்யச் சொன்னுர்; சமூகத் தொண் டுக்குப் பணிக்கவில்லையே. நீங்களானுல் என்ருர்.

முதலில் நகைச்சுவையுடன் இந்த ஆட்சேபணைக்குப் பதி லளிக்கத் தொடங்கிய விவேகானந்தர் போகப் போக ஆவேசமய மானுர்.

''என்னைவிட நீங்களெல்லாம் ஸ்ரீராமகிருஷ்ணரை நன்ருக உணர்ந்திருப்பதாக நினைக்கின்றீர்களா? ஞானம் என்பது ஒரு பாலைவனம் — இருதயத்தின் மிருதுவான அம்சங்களையெல்லாம் கொல்லவேண்டிய மார்க்கம் அது என்பது உங்கள் அபிப்பிராயம். உங்களுடைய பக்தி என்பதும் அர்த்தமற்ற நரம்புக் கிளர்ச்சி தான்; அது ஒருவனை ஆண்மையற்றவனுக்குவதோடு சரி. நீங்கள் ஸ்ரீராமகிருஷ்ணரைப்பற்றி ஏதோ அல்பமாகத் தெரிந்துகொண்டு, அதுவே முழுவதும் என்று எண்ணி உபதேசம் செய்ய விரும்பு கிறீர்கள்! உங்களுடைய ஸ்ரீராமகிருஷ்ணரைப்பற்றி இங்கு யாருக்கு அக்கறை? உங்களுடைய பக்தியும் முக்தியும் இங்கு யாருக்குப் பொருட்டு? உங்களுடைய சாஸ்திரங்கள் என்ன சொல்கின்றன என்பதைப்பற்றி யார் கவலைப்பட்டார்கள்? என் னுடைய நாட்டு மக்களை உயர்த்துவதற்காக நான் ஆயிரம்முறை வேண்டுமானுலும் நரகத்துக்குச் செல்லத்தயார். தமஸில் மூழ்கிய அவர்களுக்குக் கர்மயோகத்தால் பிரபோதம் அளித்து, தங்கள் பலத்திலேயே மனிதர்களாக நிற்கச் செய்வதற்காக நான் ஆயிரம் முறை நரகம் செல்வேன். நான் ஸ்ரீராமகிருஷ்ணரைப் பின் பற்றுபவன் அல்ல; யாரையுமே பின்பற்றுபவனல்ல. என்

Koviloor Digital Library

திட்டத்தை யார் நிறைவேற்றித் தருகிறுர்களோ அவர்களையே நான் பின்பற்றுகிறேன். நான் ஸ்ரீராமகிருஷ்ணருடைய ஊழியன் அல்ல; நான் யாருடைய ஊழியனும் அல்ல. தனது முக்தியைப் பற்றி எண்ணுமல் பிறருக்கு உதவிபுரிந்து பணிசெய்பவனுக்கே நான் பணியாள்.''

தம்மைப் பரமஹம்ஸரின் ஜன்ம ஜன்மாந்தரத்து அடிமை என்று சொல்லிக்கொண்ட சுவாமிஜியா இப்படிப் பேசினுர் என்று அதிசயிக்காதீர்கள். பேச்சு இங்கு முக்கியமல்ல. அந்தப் பேச்சுக்குக் காரணமான மனிதாபிமானம்தான் முக்கியம்.

'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற உயரிய கருத்தில் ஊறி, அதற்கு மாற்ருகத் தோன்றும் எதனையும் மீறும் ஆவேசத்துடன் சுவாமிஜி பேசிக்கொண்டே போனுர். பேச்சு என்பதுதான் எவ்வளவுக்குத்தான் உணர்வுகளுக்கு உருவம் தரமுடியும். மொழிகள் தடைபட்டன. விழிகள் தடையருமல் பொழியத் தொடங்கின. விரிந்து பரந்த சுவாமிஜியின் முக மண்டலத்தில் தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்தது. மின்னல் இடம் பெயர்வது போல சுவாமிஜி தமது அறைக்கு ஓடினுர்.

குருபாயிக்கள் வேதனைப்பட்டார்கள்; விக்கித்துப் போனுர்கள்; வெட்கியும் போயினர். சில நிமிஷங்களுக்குப் பின் அவர்களில் சிலர் சுவாமிஜியின் அறைக்குத் தயக்கத்துடன் சென்றனர்.

சாந்தியே ஓர் உருவமெடுத்து வந்து தவம் புரிவதுபோல் சுவாமிஜி அங்கு தியான நிலையில் அமர்ந்திருந்தார். ஓர் ஆட்டம் அசைவு கிடையாது. பாதி திறந்திருந்த நயனங்களிலிருந்து மட்டும் நீர் வழிந்துகொண்டிருந்தது. ஆனுல் அதுவும் துக்கத்தில் அதிர்ந்து குபுகுபு என்று பெருகவில்லை. அமைதியாக, ஒரு சீராகவே வழிந்துகொண்டிருந்தது.

இப்படியே ஒரு மணிக் காலம் பரப்பிரம்மத்தின் கருணையென்ற கருப்பஞ்சாற்றில் ஆழ்ந்திருந்தார் சுவாமிஜி.

சடேரென்று சமாதி கலைந்தது. சுறுசுறுப்புடன் எழுந்திருந்துசென்று முகத்தைக் கழுவிக்கொண்டார். நண்பர்களைப் பேரன்புடன் மிருதுவாகப் பார்த்தார். உணர்வுகள் அடர்ந்த அந்தச் சூழ்நிலையில் அவர்களால் ஏதும் பேசமுடியவில்லை. மன்னிப்புக் கோரவேண்டும் என்பதையும் மறந்து அமர்ந்திருந்தனர். சுவாமிஜியேதான் தேறல்போல பேசத் தொடங்கினுர்:

ஒருவனுக்கு உண்மையான பக்தி உண்டாகும்போது அவனது இதயமும் நரம்புகளும் பஞ்சாக நைந்துவிடுகின்றன. மிகவும் மிருதுவாக, நுட்பமாக ஆகிவிடுகின்றன. ஒரு புஷ்பத்தின் ஸ்பரிசத்தைக்கூட அப்போது தாங்கமுடியாமல் போகிறது.

Koviloor Digital Library

இப்போதெல்லாம் என்னுல் கதைப் புத்தகங்கள்கூடப் படிக்க முடியவில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா? உணர்ச்சி வசப் படாமல் ஸ்ரீராமகிருஷ்ணரைப்பற்றி எண்ணவோ பேசவோ என்னுல் இப்போது இயலவில்லை. எனவே என்னில் பக்தி ஊறுவதை அடக்கிவைக்க நான் முயன்று முயன்று பார்க்கிறேன். என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும்; ஞானத்தினுல் என்னைக் கட்டிவைத்துக் கொள்ளவேண்டும் என்று முயல்கிறேன். ஏனென்ருல் என்னுல் தாய்நாட்டுக்குக் கிடைக்கவேண்டிய பணி இன்னும் பூர்த்தியாகவில்லை; நான் உலகுக்கு அளிக்கவேண்டிய உபதேசம் பூரணமாகவில்லை. ஆஹா, நான் இன்னும் வேலைசெய்தாக வேண்டியிருக்கிறது! நான் ஸ்ரீராமகிருஷ்ணரின் அடிமை. அவர் தமது பணியை நான் செய்யவேண்டுமென்று எனக்காக விட்டுச் சென்றிருக்கிருர்! அதை நான் செய்துமுடிக்குமளவுக்கும் அவர் எனக்கு ஓய்வு தரமாட்டார்! ஆஹா, அவரைப்பற்றி நான் எப்படிப் பேசமுடியும்? ஆஹா, அவர் என்மேல் வைத்திருந்த அன்பு?''

'எனக்கு ஸ்ரீராமகிருஷ்ணரைப்பற்றிக் கவலையில்லை 'என்று சற்றுமுன் உணர்ச்சிவசப்பட்டுக் கூறிய அதே சுவாமிஜிதான் இப்போது தமது இதய அந்தரங்கத்திலிருந்து வெளியிட்டார்.

சுவாமிஜியின் கருணை இவ்வளவு அவ்வளவு என்று அளவிட முடியாமல் வெள்ளக்காடாகப் பிரவகிக்கிறது என்பதை அறிந்து கொண்டவுடன் குருபாயிக்கள் பயந்தே போய்விட்டனர். ஆம், பயந்துதான் போய்விட்டனர். ஏனெனில் அவர் அப்படியே நிர்விகல்ப சமாதியில் ஆழ்ந்துவிடுவாரோ என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டது. இனி சுவாமிஜி ஒருபோதும் இவ்வாறு மன எழுச்சிகொள்ளத் தாங்கள் இடமளிக்கலாகாது என குருபாயிக்களெல்லாம் முடிவு செய்துகொண்டனர். மழை பெய்தபின் தூசி தும்புகள் எல்லாம் பூமியில் படிந்து சூரிய ஒளி ஸ்வச்சமாக வீசுவதுபோல் சுவாமிஜியின் உணர்ச்சிப் பொழிவில் குருபாயிக்கள் சம்சயங்கள் எல்லாம் விலகி, அன்பொளிமட்டும் பிரகாசித்தது.

''குருமஹராஜ் எங்களை இவ்வுலகுக்குக் கொண்டுவந்தது சுவாமிஜியின் மனத்தை வெகு உன்னத நிலைகளிலிருந்து திருப்பிச் செயல் திட்டங்களில் செலுத்துவதற்காகத்தான் என்று உணர்ந்தோம். அப்போதுதான் அவர் குருமஹராஜின் ஆணையை நிறைவேற்ற முடியும். இல்லாவிடில் எந்த நிமிஷமும் நிர்விகல்ப சமாதிநிலைக்குப் பறந்துவிடக்கூடும் என்று உணர்ந்தோம்'' என்று குருபாயி ஒருவர் கூறினுர்.

Koviloor Digital Library

குருவேதான் ஸ்ரீமத் விவேகானந்தரின்மூலம் சிந்திக்கிறார், சொல்கிறார், செயல்புரிகிறார் என்ற நம்பிக்கை குருபாயிக்களுக்கு ஏற்பட்டுவிட்டது. அதன்பின் அவர்களில் எவரும் சுவாமிஜியின் திட்டங்களைப்பற்றிச் சந்தேகம் கொள்ளவில்லை. அவர் இட்ட பணிக்குத் தங்களை அப்படியே அர்ப்பணித்துக்கொண்டனர்.

இச்சம்பவம் நிகழ்ந்து சிறிதுகாலத்துக்குப் பிறகே குருபாயிக்கள் எப்படி சமூகப்பணியில் ஈடுபட்டனர் என்பதற்கு சுவாமிஜியே சான்று கூறுகிறார். 1897-ம் ஆண்டு ஜூலை 9-ந் தேதி மேரி ஹேலுக்கு எழுதிய கடிதத்தில்: ''எனது குழந்தைகள் எப்படிப் பஞ்சம், பிணி, வறுமை இவற்றுக்கிடையே உழைக்கிறார்கள் என்பதை நீ பார்த்தாயானால் உன் இதயம் மகிழும்'' என்கிறார்!

இதே கடிதத்தில் தமது முடிவைக்குறித்தும் அவர் எழுதினார்: ''என்னுடைய வேலை முடிந்துவிட்டது என உணர்கிறேன். மிகவும் அதிகமானால் என் வாழ்வில் இன்னும் மூன்று நான்கு வருடங்களே மீதி. என்னுடைய கருவி திறமாக இயங்குகிறது என்பதை நான் நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டும். மக்கள்குலத்தின் நன்மைக்காக — அல்லது குறைந்தபட்சம் இந்திய மக்களின் நன்மைக்காகவேனும் — ஒரு நெம்புகோலை நான் செயல்படுத்திவிட்டேன் — அதனை எந்தச் சக்தியும் தடுத்து நிறுத்தமுடியாது — என்று நிச்சயம் பெற்றவுடன், அதன்பின் என்ன என்பதைச் சிறிதும் கருதாமல் நான் துயிலச் செல்வேன்.

''நான் மீண்டும் மீண்டும் பிறப்பேனாக! ஆயிரமாயிரம் இன்னல்களை அநுபவிப்பேனாக! உண்மையில் இருக்கும் ஒரே கடவுளை, நான் நம்புகிற ஒரே கடவுளை, எல்லா ஜீவர்களின் கூட்டுத்தொகையுமான கடவுளை வழிபடுவதற்காக நான் மீண்டும் மீண்டும் பிறந்து ஆயிரமாயிரம் இன்னல்களை அனுபவிப்பேனாக! தீயோனான என் கடவுளை, துக்கமுற்ற என் கடவுளை, உலகெல்லாம் ஏழைகளாக நிற்கும் என் கடவுளை — அவனையே முக்கியமாக நான் வழிபடுகிறேன்.''

* * *

ஜூலை மாதத்தில் சுவாமிஜி இவ்வாறு எழுதினார். அதற்கு முன்பே குருபாயிக்களின் தொண்டு வாழ்க்கை தொடங்கி விட்டது. சாரதானந்தரும், அபேதானந்தரும் மேல்நாடுகளுக்குச் சென்றதை நாம் முன்பே அறிவோம். அகண்டானந்தர் மூர்ஷிதாபாத் மாவட்டத்துக்குச் சென்று பஞ்சத்தில் அடிபட்டவர்களுக்குக் கஷ்டநிவாரணப் பணி புரிந்துவந்தார். பூஜ்ய ராமகிருஷ்ணானந்த சுவாமி தமிழகத்துக்குச் சென்று வேதாந்த பிரசா

Koviloor Digital Library

ரத்துக்கு ஒரு கேந்திரம் அமைக்கும் காரியத்தில் ஈடுபட்டிருந்தார். வித்யைக்கும் ஆசாரத்துக்கும் பெயரெடுத்த சென்னைக்கு வித்யையும் ஆசாரமுமிக்க ஒருவரை அளிப்பதாக வாக்குத்தந்த சுவாமிஜி அதன்படியே ராமகிருஷ்ணனந்தரை அங்கு அனுப்பியிருந்தார். பன்னிரு ஆண்டுகளாக குருநாதரின் பூஜையிலேயே கரைந்திருந்த சிலர் ராமகிருஷ்ணனந்தர் இப்போது முதன் முறையாகத் தமது அருமை மடத்தையும், தாம் தாயாக இருந்துப் பேணிய குரு பாயிக்களையும் பிரிந்து, தக்ஷிணதேசத்தில் தக்ஷிணேசுவரத் துறவியின் உபதேசங்களைப் பரப்புவதற்காகச் சென்றுவிட்டார்! ஆக, சுவாமிஜி விரும்பிய தியாக உணர்வு எல்லாரையும் பற்றிக் கொண்டுவிட்டது. சேவா ஆசிரமங்கள் மெல்ல மெல்லத் தோன்றத் தொடங்கின. பரமனையும் பாமரரையும் இணைத்த புது மதம் உருவாகத் தொடங்கியது.

* * *

கடும் உழைப்பு காரணமாக சுவாமிஜியின் உடல்நலம்குன்றத் தொடங்கியது. ஹிமாலயத்துக்கு அவரது உள்ளம் ஏங்கத் தொடங்கியது. கங்கைக்கரையிலே ராமகிருஷ்ண சங்கம் என்ற பெயரில் கட்டுக்கோப்பான ஒரு நிறுவனத்தை அமைத்து குரு பாயிக்களிடம் கொடுத்துவிட்டுத் தாம் ஹிமாலயம் சென்று அங்கு ஒரு மடம் ஸ்தாபித்துக்கொள்ளவேண்டும் என்று சுவாமிஜிஎண்ணலானர். வைத்தியர்களும் சுவாமிஜியிடம் சமவெளியின் உஷ்ணத்திலிருந்து மேட்டுப்பாங்கான இடத்துக்குச் செல்வது சிலாக்கியம் எனக் கூறினர்.

எனவே சுவாமிஜி ஸேவியர் தம்பதியை முதலில் டார்ஜிலிங்குக்கு அனுப்பிவிட்டுத் தாமும் அவர்களைத் தொடர்ந்தார். சுவாமி பிரம்மானந்தர், சுவாமி திரிகுணனந்தர், சுவாமி ஞானனந்தர், கிரிஷ்சந்திரகோஷ், குட்வின், டாக்டர் டர்ன்புல் ஆகியோரும் சுவாமிஜியுடன் சேர்ந்துகொண்டனர். சுவாமிஜியிடம் அளப்பரிய பிரேமை வைத்திருந்த தமிழகத்து அடியார்களான அழசிங்கப்பெருமாள், ஜி. ஜி. நரஸிம்மாசாரியர், சிங்காரவேலு முதலியார் இவர்கள் கல்கத்தா மடத்துக்கும் அவரைப் பின் தொடர்ந்தார்கள். இப்போது இவர்களும் டார்ஜிலிங்குக்குச் சென்றூர்கள். இவர்கள் யாவரும் எம். என். பானர்ஜி என்பவரின் விருந்தினராகத் தங்கினூர்கள். சுவாமிஜியிடம் பெருமதிப்புபூண்ட பர்த்வான் மன்னரின் ரோஜாக்கரை என்ற மாளிகையும் சிறிது காலத்துக்கு சுவாமிஜியின் உபயோகத்துக்கு விடப்பட்டிருந்தது.

மலைப்பாதைகளில் உலவுவது, அருகேயுள்ள புத்தவிஹாரத்துக்குச் செல்வது, மௌனத் தியானம் புரிவது இப்படியாக

Koviloor Digital Library

சுவாமிஜி களை தீர்த்துக்கொண்டார். இச்சமயத்தில் அவர் இரு முறை தமது யோக சக்தியை வெளிப்படுத்தினர்.

பானர்ஜி குடும்பத்தில் மோதிலால் முகர்ஜி என்று ஒருவர். அவருக்கு ஜுரம் உண்டாகி ஜன்னி கண்டுவிட்டது. காய்ச்சலில் அவர் வறுபடுவதைக்கண்டு கருணைசுரந்த சுவாமிஜி அவரது சிரஸைத் தமது விரலால் தீண்டினர். உடனே ஜுரம் மளமள வென்று இறங்கத் தொடங்கியது.

முகர்ஜி மிகவும் உணர்ச்சிவசப்பட்டவர். பகவந்நாம சங் கீர்த்தனம் நடக்கும்போது அவர் கண்ணீர்விட்டுக் கதறியபடி தரையிலெல்லாம் விழுந்து புரளுவார். ஒரு நாள் சுவாமிஜி அவரது இதய பாகத்தை ஸ்பரிசித்தார். அன்றிலிருந்து அவருடைய உணர்ச்சிவேகங்கள் எவ்வாறே சமனமாகத் தொடங் கின. விரைவிலேயே அவர் ஞானயோகத்தில் ஈடுபட்டு அத்வைதி யாகிவிட்டார்.

சுவாமிஜியிடம் தேவதா விசுவாசம்கொண்ட கேத்ரி அரசர், மேல்நாடுகளில் வெற்றிப் பாவட்டா விசித்திரும்பிய தமதுஅருமை குருநாதனைக் காண்பதற்காகக் கல்கத்தாவுக்கு விஜயம் செய்தார். இதனைக் கேள்வியுற்ற சுவாமிஜி டார்ஜிலிங்கிலிருந்து கல்கத்தா சென்று தமது அற்புதச் சிடரைச் சந்தித்து மகிழ்ந்தார்.

ஆண்டியாகத் திரிந்த நாளில் தமக்கு ஆசார உபசாரம் செய்த அரசருக்கு அலம்பஜார் மடத்தில் ராஜபோகமாக ஒரு விருந்தளித்தார் சுவாமி விவேகானந்தர். கேத்ரி மன்னரும் வேறு சில சம்ஸ்தானதிபதிகளும் இங்கிலாந்து செல்வதாக உத் தேசித்திருந்தார்கள். எனவே அவர் சுவாமிஜியையும் தன்னுடன் வருமாறு மிகவும் கேட்டுக்கொண்டார். இதேபோதில் அமெரிக் காவிலும், இங்கிலாந்திலும் இருந்த குருபாயிக்களும் அங்கெல் லாம் வேதாந்தத்தின் வேர் நன்ருகப் பிடிக்கத் தொடங்கிவிட்டது என்றும் எனவே சுவாமிஜி மீண்டும் ஒருமுறை விஜயம் செய்தால் நற்பலன் விளையும் என்றும் எழுதிவந்தனர்.

எனினும் வைத்தியர்கள் சுவாமிஜிக்கு ஓய்வு மிகவும் தேவை என்று கூறிவிட்டதால் அவர் கேத்ரி மன்னரின் அழைப்பை எற்க முடியவில்லை.

'ஓய்வு ஓய்வு' என்று வைத்தியர்கள் சொன்னலும் சுவாமி ஜிக்கு ஓய்வுகொள்ள முடியவில்லை. சும்மா இருப்பது சாவதற்குச் சமானம் என்றே அவர் கருதினர். எப்படியும் இந்த உடலில் தமது குடியிருப்பு இன்னும் சிறிதுகாலம்தான் என்பதை அவர் அறிந்திருந் தார். அதற்குள் எவ்வளவுதான் உழைக்கமுடியுமோ அவ்வளவும் உழைத்துவிடுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்தார்.

Koviloor Digital Library

டார்ஜிலிங்கிலிருந்து கல்கத்தாவுக்கு மீண்டும் வந்து சேர்ந்தார் சுவாமிஜி. முக்கியமான சில காரியங்களை இரண்டு வாரத்தில் கவனித்துவிட்டு ஹிமாசலத்தில் அல்மோராவுக்குச் சென்று தங்குவது என உத்தேசித்திருந்தார்.

கல்கத்தாவில் கல்வியிற்சிறந்த இளைஞர்கள் சிலர் இப்போது மடத்தில் சேர ஆர்வமாக வந்தனர். சுவாமிஜியின் அறைகூவலுக்கு இணங்க ஆத்மிகத்துக்கும், சமூக சேவைக்கும் தங்களை அர்ப்பணித்துக்கொள்ள இளைஞர்கள் உத்வேகம் கொண்டனர்.

சுவாமிஜி பகவத்கீதை, உபநிஷதம் இவைகளில் பாடம் சொல்லிப் படிப்பாளிகளையெல்லாம் இழுத்துக்கொள்ளத் தொடங்கினர். சுவாமிஜி மடத்திலிருந்து பிரிந்திருந்த பத்தாண்டுகளில் அங்குவந்து சேர்ந்திருந்த நாலு இளைஞர்கள் — இதுவரை பிரம்மசாரிகளாக இருந்து வந்தவர்கள் — இப்போது சந்நியாசம் பெற விரும்பினர். அந்த நால்வரில் ஒருவர் பூர்வத்தில் நடத்தை தவறிவிட்டதாகக்கூறி மற்ற குருபாயிக்கள் அவருக்குத் துறவளிப்பதை ஆட்சேபித்தனர்.

சுவாமிஜி பொங்கி எழுந்தார். ''இது என்ன பிதற்றல்! நாமே பாபிகளிடமிருந்து விலகினல் அவர்களை யார்தான் காப்பார்? எப்போது தவறுதலாக நடந்த ஒருவர் இந்த மடத்தில் சேர்ந்து சந்நியாசியாக விரும்புகிருரோ அப்போதே அவர் திருந்த உத்தேசித்துவிட்டார் என்றுதானே பொருள்? அவருக்கு இவ் விஷயத்தில் மேலும் உதவவேண்டியதே நமது கடமை. இன்னென்று சொல்கிறேன்: நம்மை வந்தடைந்த ஒருவரை நாம் அவ்வளவுபெரும் திருத்தமுடியாது என்ருல் நாம் காஷாயம்தரித்து உலகசேவை என்று புறப்படுவதற்கு என்ன அர்த்தம்?'' என்று கேட்டார்.

சுவாமிஜி தமது சிஷ்யர்களைத் தேர்ந்தெடுப்பதில் போதிய கண்டிப்பு காட்டுவதில்லை என குருபாயிக்கள் பலமுறை நினைத்ததுண்டு. ஒரு சமயம் சுவாமிஜி 'குபுகுபு' என்று ரத்தம்பாயும் திருமுகத்துடன் அவர்களிடம் சொன்னர்: ''எனக்கா மனித இயல்புகளை மதிப்பிடத் தெரியவில்லை என்று நினைக்கிறீர்கள்? இப்போது மக்கள் என்னவாயிருக்கிருர்களோ, அதோடு முற்பிறவிகளில் அவர்கள் என்னவாயிருந்தார்கள் என்பதையும் நான் அறிவேன்: இனிமேல் அவர்கள் என்னவாகப் போகிருர்கள் என்பதும் எனக்குத் தெரியும். பின் நான் ஏன் அவர்களுக்குத் தயை காட்டுகிறேன்? இந்த துர்பாக்கிய ஜீவன்கள் எத்தனையோ கதவுகளை இடித்திருக்கிருர்கள். அந்தக் கதவுகள் ஏதும் அவர்களுக்காகத் திறக்கப்படவில்லை. அவர்கள் விரட்டியடிக்கப்பட்டார்

Koviloor Digital Library

கள். இப்போது அவர்கள் என்னை நம்பிவந்திருக்கிறார்கள். நானும் அவர்களை ஏற்க மறுத்தால் அவர்களுக்குப் புகலிடம் ஏது?'' என்றார்.

'களிம்பு தோய் செம் பனைய' இயல்புகளையும் 'பத்து மாற்றுத் தங்கமாக்கியே பணிகொள்ள' அறிந்திருந்தார் ஆத்மிக ரஸவாதியான சுவாமிஜி. அவரிடம் வந்தபின் மாசு நீங்கப் பெறாதார் யார் உண்டு?

நாலு இளைஞர்களுக்கும் துறவு அளிப்பதற்கு முதல் நாள் சுவாமிஜி தியாகத்தின் மாண்புகளைப்பற்றி விரித்துக் கூறினார். ''பிறருக்காகச் சுயவாழ்வைத் தியாகம் புரிவதற்காக, ஆகாயத்தைக் கதறலால் பிளக்கும் ஆயிரமாயிரம் தீனர்களின் துயரத்தைத் தீர்ப்பதற்காக, கைம்பெண்ணின் கண்ணீரைத் துடைப்பதற்காக மகனை இழந்த தாயின் இதயத்துக்கு ஆறுதல் அளிப்பதற்காக, அறியாதவர்களும் அடிமைபட்டவர்களும் வாழ்க்கைப் போராட்டத்தில் தங்கள் பலத்தில் நிற்பதற்கான உபகரணங்களை அளிப்பதற்காக, எவ்வித வேறுபாடும் பாராமல் சாஸ்திர உபதேசங்களை சகலருக்கும் பரப்புவதற்காக, மக்களின் லௌகிக, ஆத்மிக நலன்களுக்குப் பாடுபடுவதற்காக, ஞானதீபத்தின் ஒளியைப் பரப்பி எல்லா இதயங்களிலும் உறங்கும் பரம்பொருள் என்ற சிம்மத்தை எழுப்புவதற்காக — இவை யெல்லாவற்றையும் செய்யவே சந்நியாசியானவன் உலகில் பிறக்கிறான்!'' என்றார்.

தமது குருபாயிக்களை நோக்கி... இந்த நோக்கத்தை நிறைவேற்றவே நாம் பிறப்பெடுத்திருக்கிறோம். அதற்காகவே நாம் நமது உயிரையும் விடுவோம். எழுந்திருங்கள், விழிப்புறுங்கள்! எழுப்புங்கள், விழிப்புறச் செய்யுங்கள்! பிறவிப் பணியைப் பூர்த்தி செய்யுங்கள். இதனால் உயர்ந்தவற்றிலெல்லாம் உயர்ந்த லக்ஷியத்தை அடைவீர்கள்'' என்று மொழிந்தார்.

மறுநாள் நால்வரும் சந்நியாச தர்மத்தைத் தழுவினர். இந்நால்வரே விரஜானந்தர், நிர்பயானந்தர், பிரகாசானந்தர், நித்யானந்தர் என்ற சந்நியாச நாமம் பூண்டனர். ''எனக்கு இவ்வளவு நாள் நாடுசூட்டிய பாராட்டைவிட இந்த நாலுபேர் துறவு பூண்டதையே பெரிதாகக் கருதுகிறேன்'' என்றார் சுவாமிஜி.

சிறிது நாட்களுக்குப்பின் சரத்சந்திர சக்கரவர்த்திக்கும், இன்னொரு பிரம்மசாரிக்கும் சுவாமிஜி மந்திரோபதேசம் செய்தார். சரத்திடம் சிரத்தையைப்பற்றி உணர்ச்சியுடன் பேசிய சுவாமிஜி, ''சத்தியத்தைத் தெளிவதற்காக நசிகேதனைப்போல் யமதர்மராஜனையும் சென்றடைவாய் துறவற மந்திர உப

Koviloor Digital Library

தேசம் ஆன பிற்பாடும் உடம்பை உலக நன்மைக்குத் துறக்காவிடில் பயன் என்ன? தமது எலும்பை இந்திரனுடைய ஆயுதத்துக்காக ஈந்த ததிசி மாமுனிவரைப்போல ஆவாயாக'' என ஆசிர்வாதம் செய்தார்.

Koviloor Digital Library

அத்தியாயம்—26

பண்புப் பண்ணைக்குப் பிறந்த நாள்

1897-ம். ஆண்டு மே மாதம் முதல் தேதி. தர்மப் பயிருக்கு வித்தூன்றிய நாள் அது. அன்று பிற்பகல் சுவாமிஜியின் விருப்பப் படி ஸ்ரீராமகிருஷ்ணரின் துறவி சிஷ்யர்களும், இல்லற சிஷ்யர் களும் பக் பஜாரிலுள்ள பலராம பாபுவின் வீட்டில் கூடினர்.

சுவாமிஜி மிகவும் முக்கியமான ஏதோ விஷயத்தைச் சொல்லப்போகிறார் என்ற ஆர்வம் எல்லாரிடமும் ஏற்பட்டது. சுவாமிஜியும் தமது பணிகளுக்கு மையக்கருவான ஒரு செயலைப் புரியப்போகும் துடிப்போடு விளங்கினார். கூடியமட்டும் துடிப்பை அடக்கிக்கொண்டு வங்காளி மொழியில் பேசலானார்:

''பலநாடுகளில் நான் சுற்றிப்பார்த்ததிலிருந்து, ஸ்தாபனம் என்று ஒன்று இல்லாமல் மகத்தான எதையும், நிரந்தரமான எதையும் சாதிக்கமுடியாது என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன். என்றாலும் இந்தியாவைப்போல் தற்போது வளர்ச்சி பெற்றிராத ஒரு நாட்டில், எல்லா அங்கத்தினர்களும் சம உரிமைபெற்று, பெரும்பான்மை அங்கத்தினர்களின் முடிவுப்படி தீர்மானங்கள் செய்கிற ஜனநாயக அடிப்படையிலான ஸ்தாபனத்தைத் தொடங்குவது விவேகமாகாது என்றே எனக்குத் தோன்றுகிறது. மேல்நாடுகளில் நிலவரம் வித்தியாசமானது. நம்மிடையே யும் கல்வி நன்றாகப் பரவி நாம் தியாகம்செய்ய அறியும்போது சமூகம், தேசம் இவற்றுக்காக நமது பிரத்யேக நலன்களையும் விசாரங்களையும் காக்க நாம் அறியும்போது ஜனநாயக அடிப் படையில் செயல்புரிவது சாத்தியமாகக்கூடும். இதைக் கவனத்தில் கொண்டு பார்க்கும்போது, நிகழ்காலத்துக்கு நமது ஸ்தாபனம் ஒரு சர்வாதிகாரியின் கீழ்தான் நடக்கவேண்டும்; அவருடைய உத்தரவுகளுக்கு ஒவ்வொருவரும் அடங்கி நடக்கவேண்டும்; பிறகு உரியகாலம் பூரிக்கும்போது, ஸ்தாபனம் அங்கத்தினர்களின் கருத் துக்கும் இணக்கத்துக்கும் இசைய நடக்கும்.

''யாருடைய பேரில் நாங்கள் சந்நியாசிகளாகி யிருக்கிறோ மோ, எவரை ஆதரிசமாகக்கொண்டு நீங்கள் இந்த சம்சார காரியத்தில் கிருகஸ்த வாழ்க்கையை நடத்துகிறீர்களோ, யாருடைய புனித நாமாவும் யாருடைய இணையற்ற வாழ்வு உபதேசங்கள் இவற்றின் சக்தி அவர் மறைந்து பன்னிரண்டு ஆண்டுகளுக்குள் உலகின் கிழக்கு மேற்கு இரு பாகங்களிலும் சற்றும் எதிர்பார்க்கமுடியாத அளவில் பரவியுள்ளதோ அப்பேர்ப்

Koviloor Digital Library

பட்டவருடைய பெயரை இந்த ஸ்தாபனம் தாங்கும். இந்த சங்கத்துக்கு ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கம் என்று பெயர் ஏற்படுமாக! நாம் யாவரும் குருமஹராஜின் பணியாட்கள்தான். நீங்கள் யாவரும் இந்தக் காரியத்தில் உதவுவீர்களாக!''

கூடியிருந்த யாவருக்கும் உற்சாகம் பொங்கிற்று. உள்ளுக்குள்ளே குருபக்தி பொருமிக்கொண்டிருந்த அவர்கள் அதனை வடித்துக்காட்ட ஒரு நல்ல வாய்ப்பு பிறந்துவிட்டதே என்பதில் உவகை கொண்டனர்.

ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் காரியக்கிரமம் இன்னவாக இருக்கவேண்டும் என்று எல்லாரும் விவாதித்தனர். தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சங்கத்தின் கொள்கைகளும் நோக்கங்களும் வரையறை செய்யப்பட்டன. அவை வருமாறு:

> இந்தச் சங்கம் ஸ்ரீராமகிருஷ்ண சங்கம் எனப்படும். மனிதக் குலத்தின் நன்மைக்காக ஸ்ரீராமகிருஷ்ணர் எந்த உண்மைகளை உபதேசம் செய்து, தமது வாழ்விலும் நிதரிசனமாக மேற்கொண்டு நிரூபித்துக் காட்டினாரோ அவற்றைப் பரப்புவதும், இந்த உண்மைகளை மக்கள் தமது வாழ்க்கையில் அநுஷ்டித்து லௌகிகத்திலும் மனநிலையிலும், ஆத்மிகத்திலும் முன்னேறுவதற்கு உதவுவதும் சங்கத்தின் நோக்கமாகும்.

> எல்லா மதங்களும் அமரத்துவம் வாய்ந்த ஒரே நிரந்தர மதத்தின் பல வடிவங்களே என்றுணர்ந்து, மாறுபட்ட பல சமயத்தவர்களிடையும் கூட்டுறவை நிலை நாட்டுவதற்காக ஸ்ரீராமகிருஷ்ணர் அங்குரார்ப்பணம் செய்த இயக்கத்தைச் சீரான முறையில் நடத்தித்தருவது சங்கத்தின் கடமையாகும்.

சங்கத்தின் வேலை முறையாவது:

(அ) பொதுமக்களின் லௌகிக, ஆத்மிக நலன்களுக்கு உகந்தவாறு ஞானமும், விஞ்ஞானமும் புகட்டுவதற்குத் தகுதிபெறுமாறு சிலருக்குப் பயிற்சி அளிக்கவேண்டும்.

(ஆ) கலைகளையும் தொழில்களையும் வளர்க்கவும் ஊக்கவும் வேண்டும்.

Koviloor Digital Library

(இ) ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்க்கையில் வேதாந்தத் தத்துவங்களும் வேறு சமயக் கருத்துக்களும் எவ்வாறு தெளிவுப்படுத்தப் பெற்றனவோ அம்முறையில் அவற்றைப் பொதுமக்களிடையே புகுத்திப் பரப்பவேண்டும்.

இந்தியப் பணிப் பிரிவு:

சந்நியாசிகளையும், பிறருக்குப் போதிப்பதற்காகத் தங்கள் வாழ்வைச் சுயேச்சையாக அளிக்கவரும் கிருஹஸ்தர் களையும் பயிலுவிப்பதற்காக இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் மடங்களும் ஆசிரமங்களும் நிறுவுவதில் சங்கத்தை ஈடுபடுத்தவேண்டும். அவர்கள் மாகாணந் தோறும் சென்று மக்களுக்குப் போதிப்பதற்கான உபாயங்களைக் கண்டுபிடிக்கவேண்டும்.

வெளி நாட்டுப் பகுதி:

இந்தியாவுக்கும் இதர நாடுகளுக்கும் இடையே நெருக்க மான உறவும், கருத்து இணக்கமும் காண்பதற்காக, சங்கத்தின் தேர்ந்த அங்கத்தினர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வேதாந்தத்தைப் பிரசாரம் செய்விக்க வேண்டும்.

ஆத்மிகமாகவும், மனிதாபிமானமாகவும் பணியாற்று வதுமட்டுமே சங்கத்தின் லக்ஷியமும் அபிலாஷையுமான படியால் அது அரசியலுடன் எவ்விதத்திலும் தொடர்பு கொள்ளக்கூடாது.

ஸ்ரீராமகிருஷ்ணரின் பிறவிப் பணியில் நம்பிக்கை கொண் டவர் எவரும், சங்கத்தின் மேற்சொன்ன லக்ஷியங் கள் நோக்கங்கள் இவற்றில் இசைவுகொண்டு ஒத் துழைக்க விரும்பும் எவரும் அங்கத்தினராகத் தகுதி பெற்றவராவர்.

தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபின் நிர்வாகஸ்தர்கள் நியமிக்கப்பட்டனர். சுவாமிஜி பொதுத் தலைவரானார். எனினும் அவர் பெயரளவிலேயே அதிகாரம் செலுத்த எண்ணி, சுவாமி பிரம்மானந்தரைத் தலைவராக்கினார். பணியே உருவான ராகாவாக இருந்து ஸ்ரீராமகிருஷ்ணரால் புத்திரராகவே மதிக்கப்பட்ட

Koviloor Digital Library

பிரம்மானந்தரைவிட ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் முதல் தலைவராக இருக்க வேறுயாருக்குத் தகுதி உண்டு? சுவாமி யோகானந்தர் உபதலைவராக நியமிக்கப்பட்டார்.

பலராம பாபுவின் இல்லத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை பிற்பகலிலும் கூடவேண்டும்; கீதை, உபநிஷதம், மற்றும் வேதாந்த நூல்களைப் பாராயணம் செய்யவேண்டும்; அவற்றுக்குப் பொருள் விளக்கம் பெறவேண்டும்; தலைவர் தேர்ந்தெடுக்கும் பொருள்பற்றிப் பிரசங்கங்கள் புரியவேண்டும்; ஆராய்ச்சிக் கட்டுரைகள் படிக்கவேண்டும் — என்றெல்லாம் முடிவாயின.

சுவாமி பிரம்மானந்தாஜி மஹராஜின் தலைமையில் ஸ்ரீராமகிருஷ்ண சங்க அங்கத்தினர்களின் முதல் பொதுக்கூட்டம் மே மாதம் ஒன்பதாம் தேதி நடைபெற்றது. பாரதப் பண்புக்கு ஒரு பெரும் பண்ணை பிறந்தேவிட்டது.

அடுத்த மூன்றுண்டுகளுக்கு அதே பலராம் பாபுவின் இல்லத்தில்தான் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தினர் கூடினர். சுவாமிஜி கல்கத்தாவிலிருந்தபோதெல்லாம் அவர் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசியிருக்கிறுர்; பாடியிருக்கிறுர்.

ஆரம்பத்தில் சமூகநலத் திட்டங்கள், வேதாந்தப் பிரசாரம், இரண்டையும் சங்கம் கவனித்து வந்தது. பிறகு, 1899-ம் ஆண்டில் சுவாமிஜி பேலூரில் ஒரு மடம் ஸ்தாபித்தார். 1901-ல் அதன் நிர்வாகத்தைத் தர்மகர்த்தர் அமைப்பு ஒன்றுக்கு அளித்தார். ஆத்மாநுபவம்பெற்று, அதன்பின் ஆத்மிகமாகவோ சமூக நலத்திட்டங்களிலோ லோகசேவை புரியக்கூடிய சந்நியாசிகளைப் பயிலுவிக்கும் ஸ்தாபனமாகவே மடத்தை அவர் நிர்மாணித்தார். சிறிது காலத்துக்குப்பின் இந்த மடமே எல்லாப் பணிகளிலும் ஈடுபடுவதென ஏற்பாடாக முன்பு அமைக்கப்பட்டிருந்த சங்கத்தின் காரியங்களையும் மடமே ஏற்றுக்கொண்டது. எனினும் காலக்கிரமத்தில், ஆத்மிகப்பணி, சமூகநலப்பணி இவை ஒவ்வொன்றும் மிகவும் விரிந்தவை என்றும் ஒரே ஸ்தாபனம் இரண்டையும் கவனித்துக்கொள்வது சிரமமாயிருக்கும் என்றும் கருதப்பட்டது. எனவேதான் 1909-ம் ஆண்டில் ஸ்ரீராமகிருஷ்ண மடம் என்றும் ஸ்ரீராமகிருஷ்ண சங்கம் என்றும் இரண்டு பிரிவுகள் தோன்றின.

தற்போது தேசமெங்கிலும் நற்பணி ஆற்றிவரும் ஸ்ரீராமகிருஷ்ண மடங்களும், ஸ்ரீராமகிருஷ்ண சங்கங்களும் தனித்தனி உறுப்புக்கள் எனினும் இரண்டின் நிர்வாகக் குழுவும் ஒன்றேதான். அவை மிகவும் இணக்கமான முறையில்தான் பணியாற்றுகின்றன. ஆத்மிகத்தையும், சமூகச் சேவையையும் தனித்தனியாகப் பிரித்து விடக்கூடாது என்பதுதானே குருநாதரின் ஆக்ஞை?

Koviloor Digital Library

ஸ்தாபனம் வேண்டுமா, வேண்டாமா என்றெல்லாம் பல வாறு சிந்தித்துப்பின் குருமஹராஜின் நினைவுக்காகவும் மக்களின் ஆத்மிக நிறைவுக்காகவும் ஸ்தாபனம் வேண்டியதுதான் என்று தீர்மானித்து அவ்வாறே நிறுவியும் விட்டார் ஸ்ரீமத் விவேகானந்தர். ஆதிசங்கரரின் திருப்பெரும் வாழ்வில் மடஸ்தாபனத்துக்கு எவ்வளவு முக்கியத்துவம் உண்டோ அதேபோல் சுவாமிஜியின் வாழ்வில் மடஸ்தாபனம் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். தமது பணி தம்மோடு போகாமல் எதிர்காலத்துக்கும் வாழ்ந்து வருவதற்கு அவர் செய்த ஏற்பாடு இது.

இப்படித் தமது வாழ்வில் முக்கியம் பொருந்தியதொரு ஸ்தாபனத்தை நிறுவிய சுவாமிஜி தாமே அதன் தலைவராகயிருந்து அதிகாரம் செலுத்தாததுதான் அதிசயம். மகான்களுக்குத்தான் அப்படிச் சமயம் பார்த்து விலகத்தெரியும்.

சுவாமிஜி எப்படித் தலைவருக்கு அடங்கிய அங்கத்தினராக நடந்துகொண்டார் என்பதைக்கூறும் ஒரு நெஞ்சுருக்கும் நிகழ்ச்சியுண்டு.

அமெரிக்காவில் சுவாமிஜி திரட்டியிருந்த அவ்வளவு நிதியத்தையும் அவர் சுவாமி பிரம்மானந்தரிடம் ஒப்படைத்தார்.

''குட்டிகளைத்தான் சாப்பிடவேண்டும்; தாய் ஆடுகளைத் தின்னக்கூடாது'' என்று சிரித்துக்கொண்டே கூறினார் சுவாமிஜி. மூலதனத்தைத் தொடக்கூடாது, வட்டியிலிருந்தேதான் ஸ்தாபனத்தை நடத்தவேண்டும் என்று இதன் பொருள்.

சில நிமிஷங்கள் கழித்து சுவாமிஜி கல்கத்தா பட்டணத்துக்குச் செல்லவேண்டியிருந்தது. சிஷ்யரொருவரை அழைத்து சுவாமிஜி ''கங்கையைப் படகில் கடக்கவேண்டியிருக்கிறதே. பிரம்மானந்தரிடம்போய் சில்லரை வாங்கிக்கொண்டுவா; அதற்கும் கணக்குவைத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்'' என்றார்.

தமக்கென செல்லாக்காசுகூட வைத்துக்கொள்ளாமல் அவ்வளவையும் வாரி வழங்கியிருக்கிறார்! காசைத் தொட்டாலே உடல்பதறியவரின் பரமசிஷ்யரல்லவா!

சுவாமி பிரம்மானந்தர் ஸ்ரீமத் விவேகானந்தரின் கோரிக்கையைக் கேட்டுக் கலங்கிவிட்டார். அவரிடம் ஓடோடிவந்து, ''இதென்ன சுவாமி? அவ்வளவு பணமும் தங்களுடையதே அல்லவா?'' என்றார்.

''இல்லை. எல்லாம் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தினுடையது. நான் அதன் ஓர் அங்கத்தினன்தான். என்னையும் மற்ற எல்லா அங்கத்தினர்போல்தான் நடத்தவேண்டும்'' என்றார்.

சந்நியாசம் என்பது அதுதான்!

Koviloor Digital Library

அத்தியாயம் —27

வட இந்தியாவில்

சுவாமிஜியின் தேகம் தளர்ந்து வந்தது. வைத்தியர்களின் ஆலோசனைப்படி, இமயத்தில் அல்மோராவில் தங்கியிருக்கப் புறப் பட்டார். இங்கிலாந்திலிருந்து குமாரி முல்லர் வந்து அல்மோ ராவில் சுவாமிஜிக்காகக் காத்திருந்தாள். எழுத்தர் குட்வின்னும் அல்மோரா சென்றுவிட்டார்.

அல்மோராவுக்கு அருகேயுள்ள லோடியா சுவாமிஜி செல் லும் வழியில் அவருக்குச் சிறப்பான வரவேற்பு அளித்தது. லோடியா மக்களின் விருப்பத்துக்கிணங்க சுவாமிஜி ஒரு புரவியின் மீது ஆரோகணித்து ஊர்வலம் வந்தார். வீட்டு மாடிகளிலிருந்து பெண்கள் அட்சதையும், மலரும் அவர்மீது தூவினுர்கள். கடை வீதியில் சுவாமிஜிக்கு வரவேற்புரை அளிக்கப்பட்டது. சுவாமிஜி பேசுகையில் ஹிமாலயமானது இந்திய சிந்தனையை எப்படியெல் லாம் மலர்த்தியிருக்கிறது என்பதைக்கூறி, இளமையிலிருந்தே தாம் ஹிமாலய வாஸத்துக்கு எவ்வளவு ஆசைப்பட்டதுண்டு என்பதை விளக்கினுர். ஹிமாசலத்திலேயே தவயோகியாக வாழ வேண்டுமென்ற தமது ஆசை நிறைவேருது என்று தெரிந்திருப் பினும் புராதன முனிவர்களின் மௌனமும், உலகம் அறியாமல் அவர்கள் வாழ்ந்த வாழ்வும் தமக்குக் கிட்டவேண்டும் என்று இப்போதும் பிரார்த்திப்பதாகவும், தியான சாந்தியிலேயே தமது இறுதி மூச்சைவிட விரும்புவதாகவும் சுவாமிஜி கூறினுர். ஹிமால யத்தைக் கண்டவுடனேயே, வேலைசெய்யவேண்டும் என்ற துடிப்பு அடங்கி, அந்த மாமலைத்தொடர் உருவகிக்கும் தியாக தத்துவத்தில் கரைய மனது விழைகிறது என்றும் கூறினுர்.

சுவாமிஜி தியான சாந்திகொள்ளப் பராசக்தி அநுமதிக்க வில்லை. இச்சமயத்தில், இந்தியாவிலும் அமெரிக்காவிலும் இருந்த பல கிறிஸ்துவப் பிரசாரகர்கள் சுவாமிஜி ஹிந்து மதத்துக்கு மீண்டும் ஈட்டித்தந்த மாபெரும் வெற்றியைத் தாங்கமுடியாமல் அவரைப்பற்றி அவதூறுகளைப் பரப்பலானுர்கள். அமெரிக் காவில் சுவாமிஜிக்கு நல்ல நண்பராக இருந்தவரும், சர்வமத மகாசபையின் முக்கியஸ்தருமான டாக்டர் பார்ரோஸூம் இந்த நிந்தனை இயக்கத்தில் கலந்துகொண்டார். முன்பே நாம் கூறிய படி சர்வமத சம்மதம் என்ற பெயரில் மகாசபை கூட்டப் பட்டாலும், அதன் நிர்வாகிகளுக்குக் கிறிஸ்துவ சமயத்தையே உலகப் பெருமதமாக நிரூபித்துக் காட்டவேண்டும் என்ற ஆசை

Koviloor Digital Library

யும் இதயத்தின் அடியில் இருந்தது. அப்படிச் செய்யமுடியாமல் சுவாமிஜி, உலகுக்கெல்லாம் பொதுவான ஒரே மதம் வேதாந்தம்தான் என ஆணித்தரமாக நிலைநாட்டியிருந்தார் அல்லவா? இதனால் அவரை ஆரம்பகாலத்தில் ஆதரித்த அமெரிக்கப் பெருமக்களில் சிலர்கூட நாளாவட்டத்தில் அவரிடம் அதிருப்தி கொண்டனர்.

டாக்டர் பார்ரோஸ் இந்தியாவுக்கு வந்து கிறிஸ்துவ மதப் பிரசாரம் செய்தார். வெற்றிவீரர் விவேகானந்தர் சென்னையில் தங்கியிருந்தபோதுதான் பார்ரோஸும் அங்குவந்து சேர்ந்தார். சென்னையில் சுவாமிஜிக்கு ஓயாமல் ஒழியாமல் வேலை இருந்ததை நாம் அறிவோம். எனவே அவர் பார்ரோஸை சந்திக்க முடியவில்லை. பார்ரோஸ் சென்னைக்கு வந்த மறுநாளே சுவாமிஜி பழைய திட்டத்தின்படி கிளம்பிவிட்டார். இதற்கு ஒரு புது அர்த்தம் கற்பித்து டாக்டர் பார்ரோஸ் பத்திரிகைகளில் எழுதினர்.

சுவாமிஜி இந்தியாவில் அமெரிக்கர்களைப்பற்றி — முக்கியமாக அமெரிக்கப் பெண்களைப்பற்றி — மிகவும் இழிவாகப் பேசி வருவதாகவும், அமெரிக்காவில் தாம் பெரும் சாதனைகள் புரிந்ததாகப் பிரசாரம் செய்துகொள்வதாகவும், இக்காரணங்களாலேயே தம்மைக்காண வெட்கி அவர் அவசர அவசரமாகச் சென்னையிலிருந்து வங்காளத்துக்குப் புறப்பட்டதாகவும், எழுதியிருந்தார் பார்ரோஸ் என்ற சத்திய சந்தர்! இந்தியாவில் சுவாமிஜிக்கு ஒரு செல்வாக்கும் இல்லை என்றும் அந்த உண்மைக்காகப் போராடிய புண்ணியாத்மா கூசாமல் எழுதினர்!

பாசியை விலக்குவதுபோல் இகழ்ச்சி, புகழ்ச்சி இரண்டையும் விலக்கிய சுவாமிஜியும் இந்த அபாண்டத்தைக் கேட்டு சிறிது மனம் கலங்கத்தான் செய்தார்.

பார்ரோஸை இந்தியா நல்லமுறையில்தான் வரவேற்றது என்றும் அதற்குத் தாமே காரணம் என்றும் சுவாமிஜி ஒரு கடிதத்தில் குறிப்பிட்டார். தொடர்ந்து, ''என்றாலும் அவர் பேசியதை யாரும் கேட்கவில்லை. நான் அவரை வரவேற்கச் சொல்லி கடிதம் வேண்டுமானல் எழுதலாம். ஆனல் அவருக்குள் புத்திசாலித்தனத்தைப் புகுத்த என்னல் முடியாதல்லவா?'' என்று காரமாக எழுதினர்.

அமெரிக்காவையும், அமெரிக்கர்களையும்பற்றி மிகவும் நல்லெண்ணம்கொண்டு அப்படியே அமெரிக்கப் பெண்களை லக்ஷ்மி என்றும் சரஸ்வதி என்றும் புகழ்ந்துவந்த சுவாமிஜி அவர்களுடைய குறைபாடுகள் சிலவற்றையும் ஆங்காங்கு கூறியதைத்தான் பார்

Koviloor Digital Library

ரோஸ் தமது விஷமப்பிரசாரத்துக்குப் பயன்படுத்திக்கொண்டார். சுவாமிஜி தமது உள்ளத்துக்குக் கள்ளமாக பொய்பேசத் தமக்கு வராது என்றும், மனத்தில் தோன்றியதைத்தான் தாம் சொல்ல முடியும் என்றும் எழுதினுர். அமெரிக்காவில் தமது ஸ்தானத்தையும் இந்தியாவில் தமது ஸ்தானத்தையும் ஒப்பிட்டு அவர் கூறுவார்:

''அமெரிக்காவில் நான் மிகவும் எதிர்க்கப்பட்ட ஒரு பிரசாரகனுக இருந்தேன். இங்கோ மன்னர்கள் என் வாகனத்தை இழுக்கிருர்கள். என்னுடைய மக்களிடம் நான் அவர்களின் நன்மைக்கானவற்றை உள்ளது உள்ளபடிதான் சொல்லவேண்டும். அவை என் நண்பர்களுக்கு எவ்வளவு அருசியாகத் தோன்றினுலும் பரவாயில்லே. அந்தரங்க சுத்தமான, நேர்மையான எதற்கும் அன்புகாட்டவேண்டும். ஆனுல் போலித்தனத்திடம் அன்போ, சகிப்பு மனப்பான்மையோ காட்டக்கூடாது.''

தம்மைக்குறித்து யார் என்ன பிரசாரம் செய்தாலும் தமது பிறவிப்பணி ஈடேறிவிடும் என்று நம்பிய சுவாமிஜி ''நான் இன்னும் சில ஆண்டுகள் வாழ்ந்தாலும், வாழாவிட்டாலும் இந்தியா ஸ்ரீராமகிருஷ்ணருடையதாக ஆகியாயிற்று. அது தூய்மை பெற்ற ஹிந்து மதத்தினுடையதாக ஆகிவிட்டது'' என்று எழுதினுர்.

அல்மோரா சூழ்நிலே சுவாமிஜியை சமனப்படுத்தியது. தூஷணைகளெல்லாம் தூசியாகப் பறந்தன.

''என்னைப் பொறுத்தமட்டில் நான் திருப்தியுடன் இருக்கிறேன். என் மக்களில் பலரைத் தட்டி எழுப்பவே நான் விரும்பினேன் — அதனைச் செய்துவிட்டேன். இனிச் சம்பவங்கள் தம் வழிப்படி நடக்கட்டும். கர்மவிதிப்படி நடக்கட்டும். இங்கே எனக்கு எந்தக் கட்டும் இல்லே. நான் வாழ்க்கையை முழுதும் பார்த்தாயிற்று, அது தன்னைத் தவிர வேறெதற்காகவும் இல்லே. வாழ்க்கை தனக்காகத்தான்; அன்பு தனக்காகத்தான்; அந்தஸ்து தனக்காகத்தான்; எல்லாம் தனக்காகத்தான். இப்படிப்பட்ட இந்த உலகத்தில் என் வாழ்க்கையைப் பார்க்கும்போது நான் தனக்காக எதுவும் செய்துகொள்ளவில்லே என்று காண்கிறேன். என்னுடைய தீய செயல்களைக்கூட நான் என்பொருட்டுச் செய்துகொள்ளவில்லே. எனவே நான் மனத்திருப்தி கொள்கிறேன்'' என்று அல்மோராவிலிருந்து எழுதினுர் சுவாமிஜி.

அலே அடங்கிய கடல் மீண்டும் ஆர்ப்பரித்துப் பொங்குவது போல், இப்படி எழுதிய சுவாமிஜியே 1897 ஜூலே 9-ந் தேதியன்று குமாரி மேரி ஹேலுக்குக் கொதிப்புடன் எழுதினுர்:

Koviloor Digital Library

''இங்கே மிஷனரிகள் அநாமதேயமாகத்தான் இருக்கிறுர் கள். அவர்களுடைய தோற்றுவாயைப்பற்றி நான் பேசியபோது குறிப்பிட்ட சில விஷயங்களேயே அவர்கள் நான் அமெரிக்க மாதரைத் தூற்றியதாகப் பறைசாற்றி வருகிறுர்கள் — இதன் மூலம் அமெரிக்காவில் நான் செய்துள்ள காரியத்தை நாசமாக்கப் பார்க்கிறுர்கள். என் அன்பான மேரி! அப்படி நான் 'யாங்க்' (அமெரிக்கர்)களேப் பற்றிப் பயங்கரமாகப் பல விஷயங் களேக் கூறினேன் என்று வைத்துக்கொண்டாலும், அவையெல் லாம் எனது தாய்மார்களேயும், சோதரிகளேயும்பற்றி அமெரிக் கர்கள் கூறுவதில் கோடியில் ஒரு பங்கு ஆகுமா? பிறர் தங்களேக் கண்டிக்கும்போது யாங்குகள் பொறுமையாக இருக்கக் கற்கட்டும்; அதன்பின் மற்றவர்களேக் கண்டிக்கட்டும் மரணத்தின் வாயிலில் வந்து நிற்கும்வரை உழைக்கவேண்டியுள்ள நான் என்னுடைய சிறந்த சக்திகள் அவ்வளவையும் அமெரிக்காவி லேயே செலவிட்டேன். எதற்காக? அமெரிக்கர்கள் விசால மனப்பான்மை பெறவேண்டும், ஆத்மிகம் அடையவேண்டும் என்ப தற்காக

''அன்பு மிகுந்த மேரி! என்பொருட்டு அஞ்சாதே!

''இந்த உலகம் பெரியது, மிகவும் பெரியது. யாங்கிகள் வெகுண்டெழுந்தாலும் எனக்கென்று சிறிது இடம் எங்கோ இருக் கத்தான் வேண்டும். எது எப்படியானுலும் நான் என் பணியில் திருப்தி கண்டுவிட்டேன். நான் எதையும் திட்டமிட்டுச் செய்த தில்லே. எதெது எப்படி நேர்ந்ததோ அப்படியே அவற்றை ஏற்றுக்கொண்டிருக்கிறேன். ஒரு கருத்துமட்டும் என் புத்தியில் ஊன்றுகொண்டிருந்தது — இந்திய மக்களே உயர்த்த ஒரு கருவியை இயக்கவேண்டும் என்பதே அது. அதனே நிறைவேற்று வதில் ஓரளவுக்கு வெற்றி பெற்றுவிட்டேன்.

''என்னுடைய காலம் குறைவானது. அதற்குள் நான் சொல்லவேண்டியதை யெல்லாம் வெளியிட்டாக வேண்டியிருக் கிறது. எனவே நான் எது யாரை வருத்தும், யாருக்கு எரிச்ச லூட்டும் என்றெல்லாம் விசாரப்பட்டுப் பேசமுடியாது. எனவே, என் பிரிய மேரி, என் உதட்டிலிருந்து எது உதிர்ந்தாலும் அதைக் கண்டு பயப்படாதே. என் பின்னுலுள்ள சக்தி விவேகானந்த ருடையதல்ல; அது சர்வேசுவரனுடையது. அவனுக்கே உயர் நலன் எது என்பது தெரியும். உலகத்துக்கு ரஞ்சகமாக நான் பேசவேண்டுமெனில் அது உலகுக்குத் தீங்கு விளேவிப்பதேயாகும். பெரும்பான்மையானவர்களின் குரல் தவறுனது. அவர்கள்தான் உலகின் பரிதாபநிலேக்குக் காரணம்......''

Koviloor Digital Library

பிரிதொரு சமயத்தில் சுவாமிஜி புராதன தெய்வங்களை யெல்லாம் விட்டுவிட்டு ஜனநாயகம் என்ற புதுத் தெய்வத்திடம் மோகித்திருப்பவர்களைக் கேலி செய்திருக்கிறார்! ஸ்ரீராமகிருஷ்ண சங்க ஸ்தாபனத்திலும் ஜனநாயகமுறை செல்லுபடியாகாது என்றே அவர் கருதியதை முன்பு கண்டோம். எல்லாரும் கல்வியும், ஞானமும் பெற்றபின்தான் எல்லாரும் பொறுப்புபெறும் ஜனநாயகம் சிரியதாக அமையும் என்பது அவரது கருத்தாகும்.

தாக்குதல்களுக்கு ஆளானபோதிலும் சுவாமிஜி அல்மோராவில் ஆரோக்கியமடையத் தொடங்கினார். காலையிலும் மாலையிலும் குதிரைச்சவாரி செய்தார். உடம்பு இருப்பதே ஓர் ஆனந்தம் என்றுகூட அவர் இந்த சமயத்தில் எழுதினார்! ''உடம்பின் ஒவ்வோர் அசைவும் என் பலத்தை நான் உணரும்படிச் செய்கின்றன. தசைகளின் ஒவ்வோர் அசைவும் ஓர் ஆனந்தமாயிருக்கிறது. 'யோக அக்னி நிரம்பிய உடலை அடைந்தவனுக்குப் பிணியில்லை, தேய்வில்லை, சாவில்லை என்ற உபநிஷத மந்திரத்தை ஜபித்துக்கொண்டு நான் அழகிய பனிச்சிகரங்களுக்கு முன்னால் தியானம் செய்யும்போது என்னைப் பார்க்கவேண்டுமே'' என்று தம்மிலேயே களித்தவராக சுவாமிஜி எழுதுகிறார்.

ஒரு புறம் உள்ளத்துக்கு வேதனைதரும் துஷ்பிரசாரம் நடைபெற்றாலும், உள்ளம் தெம்புபெறும் சத்காரியமும் அதேசமயத்தில் நடைபெற்றுவந்தது. 'இந்திய மக்களை உயர்த்தும் இயக்கத்தை அமைப்பதில் ஓரளவு வெற்றிகண்டு விட்டேன்' என்று அவர் நியாயமான பெருமிதம் அடையும்வகையில் குருபாயிக்கள்உத்தமப் பணிபுரிந்து வந்தார்கள். வங்காளத்தில் மூர்ஷிதாபாத் பஞ்சத்தில் அடிபட்டவர்களுக்கு அகண்டானந்தரும், நித்யானந்தரும், பிரம்மசாரி சுரேசுவரானந்தரும் புரிந்த தொண்டு சுவாமிஜியை மகிழ்வித்தது. கல்கத்தா, காசி, சென்னை இங்கெல்லாம் நிதி திரட்டி மகாபோதி சங்கத்தின் சகாயத்துடன் அங்கு குருபாயிக்கள் துயர் துடைத்துவந்தனர். ''சுவாமி அகண்டானந்தர் கவனித்துக்கொள்ளும் கிராமங்களைப் பொறுத்தமட்டில் நான் என் பொறுப்புக்கள் எல்லாவற்றையும் கழித்துவிட்டு நிம்மதியாக இருக்கமுடிகிறது'' என்று மூர்ஷிதாபாத்தின் கலெக்டர் கூறினார்!

குருபாயிக்கள் ஆத்மிகப் பணியையும் சிறப்புறப் புரிவார்கள் என்று சுவாமிஜியைப் பெருமைகொள்ளச் செய்தார் ஸ்ரீராமகிருஷ்ணானந்தர். 'ஞானத் தபோதனரை வாவென்றழைக்கும்' சென்னையில் அவர் ராமகிருஷ்ண தீபத்தை ஏற்றிவைக்க, அந்த ஒளியில் தமிழ்ப் பெருமக்கள் குளிர்காயலானார்கள். மகான்களின் வாழ்க்கை குறித்தும், வேதாந்தம், கீதை, உபநிஷதம் இவற்றைப்

Koviloor Digital Library

பற்றியும் ஸ்ரீராமகிருஷ்ணர் புரிந்துவந்த பிரசங்கங்களைப் பலர் கேட்டுப் பயன் பெற்றார்கள். அவர் பேசியது ஒருபுறமிருக்க, அவர் வாழ்ந்துகாட்டிய சீலம் மக்களை அதிகமாக ஈர்த்தது.

சுவாமிஜி அல்மோராவிலிருந்து கிளம்ப எண்ணியபோது அவ்வூர் அன்பர்கள் அவரை ஒரு பிரசங்கம்புரியுமாறு கேட்டுக் கொண்டனர். சுவாமிஜி இரண்டு உரைகள் நிகழ்த்தினார். இவற்றில் ஒன்று ஹிந்தி மொழியில் அமைந்தது. ஹிந்தி மொழியில் அதிக பரிசயமற்ற சுவாமிஜி அம்மொழியை வெகு லாகவமாகக் கையாண்டு பாராட்டுப் பெற்றார். ஆங்கில சங்கத்தில் அவர் நிகழ்த்திய ஆங்கில உரையைக்கேட்டுப் பல ஆங்கிலேயரும் சொக்கிப்போனார்கள். இந்த உரையைக் கேட்ட ஒருவர், ''உபதேசகர், அவரது உபதேச உரை, உபதேசம், கேட்கவந்தவர்கள் — இவையாவற்றையும் தழுவும் பாவம், அவ்வளவும் ஒன்றே என்று தோன்றியது. 'நான்', 'நீ', 'இது', 'அது' என்ற உணர்வே இல்லை'' என்று எழுதியிருக்கிறார். பேச்சின்மூலம், மோனானந்த அத்வைதத்தை இப்படி அலைப்பாய்ச்சும் அதிசயத்தைச் செய்துவிட்டார் சுவாமிஜி!

உடம்பு தேறிவந்தபின் சுவாமிஜியால் அல்மோராவில் பொருந்தியிருக்க முடியவில்லை. சேவை உணர்ச்சி அவரை உந்தித் தள்ளியது. இரண்டு மாதங்கள் அல்மோராவில் ஓய்வு எடுத்துக் கொண்ட அவர் மீண்டும் புறப்பட்டுவிட்டார். உத்தரபாரதம் முழுவதிலும் புயல்காற்றாக விசத் தொடங்கினார்.

ஆகஸ்ட் மாதம் 9-ந் தேதியன்று அவர் சமவெளியிலுள்ள பரெய்லியில் காலை வைத்தாரோ இல்லையோ அவருக்குக் காய்ச்சல் கண்டுவிட்டது. நான்கு நாட்கள் அங்கேயே தங்கினார். மெய் வருத்தம் பாராமல் அந்நிலையிலும் பெரும்பாலானபொழுது உபதேசம் செய்தார். ஆர்ய சமாஜத்தின் அநாதை ஆசிரமம் ஒன்றுக்கு விஜயம் செய்தார். ஆத்மஞானப் பிரசாரத்துக்கும், லௌகிக சமூக நலன்களுக்காகவும் மாணவர்கள் சங்கம் தேவை என்று சுவாமிஜி உணர்ச்சியுடன் பிரசங்கம் புரிந்ததன்விளைவாக மறுநாளே பரெய்லியில் அப்படி ஒரு கழகம் உருப்பெற்றுவிட்டது.

பன்னிரண்டாம் தேதி இரவு பரெய்லியிலிருந்து புறப்பட்டு அம்பாலாவை அடைந்தார் சுவாமிஜி. ரயில் நிலையத்தில் அவரை வரவேற்க வந்த பெருங்கூட்டத்தில், சிம்லாவில் சிறிதுகாலம் கழித்த ஸேவியர் தம்பதியும் இருந்தனர்.

பிரம்மசமாஜிகள், ஆர்யசமாஜிகள், முகம்மதியர்கள் ஆகியோருடன் அம்பாலாவில் சுவாமிஜி நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தார். அங்கிருந்த ஹிந்து-முகம்மதியப் பள்ளியைத் தாம்

Koviloor Digital Library

மிகவும் விரும்பிய இருமத ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாகக் கருதி, அதற்கு விஜயம் செய்தார். இதற்குச் சிலகாலத்துக்குப் பின்னல் அவர் எழுதிய கடிதமொன்றில் அத்வைதம் கூறும் சம பாவத்தை நடைமுறையில் பெருமளவுக்குக் கடைபிடிப்பது இஸ் லாம்தான் என்றும் வேதம், குர்ஆன், பைபிள் இவையாவும் இசைந்த ஒரு மதத்தை நிர்மாணிக்கவேண்டும் என்றும் எழுதினர். ஹிந்துமதம் இஸ்லாம் இரண்டும் — வேதாந்த அறிவும் இஸ் லாமிய உடலும் — ஒன்றுகூடுவதில்தான் நம் தேசத்தின் எதிர் கால நம்பிக்கை உள்ளது'' என இக்கடிதத்தில் சுவாமிஜி கூறினர்.

அம்பாலாவில் தமது உடல்நிலையையும் பொருட்படுத்தாமல் ஒன்றரை மணிநேர உரை ஒன்றும் நிகழ்த்தி, மக்களின் மனத்தில் பாரதத்தின் எழுச்சிக்காகப் பாடுபடும் பான்மையைப் பதிவு செய்தார்.

பலவீனம் காரணமாகப் பல அழைப்புக்களை நிராகரித்து சுவாமிஜி இருபதாம் தேதியன்று அமிருதசரஸை அடைந்தார். அங்கு ஊரே திரண்டுவந்து அவரை வரவேற்றது. ஆனல் சுவாமிஜி மிகவும் உடல்நலம் குன்றியிருந்ததால் சுமார் நான்கு ஐந்து மணி அவகாசமே பாரிஸ்டர் தோடர்மால் என்பவரின் இல்லத்தில் தங்கியிருந்துவிட்டு தர்மசாலை என்ற ரமணீயமான மலைவாசஸ் தலத்துக்கு ஸேவியர் தம்பதியுடன் புறப்பட்டுவிட்டார். அங்கு பத்து நாட்களுக்குமேல் ஓய்வு கொண்டார். மீண்டும் அமிருத சரஸுக்கு வந்து இரண்டு நாட்கள் தங்கினர். ஏகாந்தத்துக்கு அழைக்கிற ஆத்மா, ஓய்வை நாடுகிற உடம்பு இரண்டையும் மீண்டும் மீண்டும் அடக்கி சுவாமிஜி சேவைக்குப் புறப்பட்டதை எண்ணினல் கண்கலங்குகிறது. மக்களுக்காகத் தமது உள்ளம், உடல் இரண்டையும் பொருட்படுத்தாமல் இருக்கும் அத்தகைய ஓர் அன்பு எப்படி உதயமாகும்? நமக்கு அது புரியாத விஷயமே!

அமிருதசரஸில் ராய்முல்ராஜ் முதலிய ஆர்யசமாஜப் பிரமு கர்களுடன் சுவாமிஜி சம்பாஷித்தார். அங்கிருந்து ராவல் பிண்டியை அடைந்தார். உடல்நிலை மிகவும் சீர்கேடுற்றது — அலைச்சல், பேச்சு, தீவிர தியானம் இவற்றோடு உடம்பால் தாக்குப் பிடிக்கவே இயலவில்லை. பெரிய சரீரம் தொய்ந்துபோகத்தொடங் கியது. முர்ரீ என்ற ஆரோக்கிய ஸ்தலத்துக்குச் சென்றார். ஹன்ஸ்ராஜ் என்ற பிரபல வக்கீலின் வீட்டில் தங்கினர். பிரசங் கங்கள் புரிய தேகநிலை சிறிதும் அநுமதிக்கவில்லை. ஆனல் காண வந்தவர்களுடன் சுவாமிஜி நிகழ்த்திய உரையாடல்களே பிரசங் கங்களாயின.

Koviloor Digital Library

ஸெப்டம்பர் ஆரும் தேதி சுவாமிஜி காச்மீரத்துக்குக் கிளம்பினர். அவருடன் செல்ல இருந்த ஸேவியர் தம்பதியில் கணவனுருக்குக் காய்ச்சல் கண்டுவிட்டது. ஸேவியர் முர்ரீயில் தாம் தங்கியிருந்த இடத்திலிருந்து சுவாமிஜிக்கு எண்ணூறு ரூபாய்களைக் கொடுத்தனுப்பினர். சகலத்தையும் சுவாமிஜிக்குச் சமர்ப்பித்த சிஷ்ய ரத்தினமல்லவா அவர்?

''இவ்வளவு பணத்தை வைத்துக்கொண்டு நான் என்ன செய்ய? இதில் பாதி போதுமே!'' என்று கூறிய சுவாமிஜி ஸேவியரின் இருப்பிடம் சென்று நானூறு ரூபாய்களை அவரிடமே மீண்டும் அளித்தார்.

ஸெப்டம்பர் எட்டாந்தேதியன்று சுவாமிஜியும் அவருடன் சென்ற குருபாயிக்களும் டோங்காமூலம் பாரமுல்லாவை அடைந்தனர். அங்கிருந்து படகிலே காச்மீரத் தலைநகரான ஸ்ரீநகருக்குப் பயணம் தொடர்ந்தது. காச்மீரம் என்றால் நீர்ப்பரப்பும் படகும் தானே முதலில் நினைவு வருகின்றன?

ஸ்ரீநகரத்தில் ரிஷிபர் முகோபாத்தியாயர் என்ற நீதிபதியின் இல்லத்தில் சுவாமிஜி தங்கினர். அப்போது காச்மீரத்து மாமன்னர் ஜம்முவுக்குச் சென்றிருந்ததால் சுவாமிஜியால்அவரைச் சந்திக்க முடியவில்லை. எனினும் அரண்மனையின் உயர் உத்தியோகஸ்தர்கள் அவரைக் கோமகன் மாளிகையில் வரவேற்று உபசரித்தனர்.

யுவராஜா ராம்சிங்கையும் சுவாமிஜி சந்தித்தார். சுவாமிஜியை ஆசனத்தில் அமர்த்தி, தாம் பவ்யமாகத் தரையில் அமர்ந்துகொண்ட ராம்சிங் இரண்டு மணி நேரத்துக்கும் அதிகமாக சுவாமிஜியுடன் சம்பாஷித்தார். அவர் உத்தேசித்திருந்த பணிக்குத் தமது சகாயத்தை அளிக்க முன்வந்தார்.

சாதுக்கள், பண்டிதர்கள், வித்யார்த்திகள், உத்தியோகஸ்தர்கள், பொதுமக்கள், என்பதாகப் பலரும் சுவாமிஜியை ஸ்ரீநகரில் அனவரதமும் சூழ்ந்துகொண்டிருந்தனர். அன்று, பல நூற்றாண்டுகளுக்குமுன், பாரதம் முழுவதையும் பாதத்தால் பாவனம்செய்த ஆதிசங்கரர் காச்மீரத்தில் வேதாந்தத்துக்கு வைஜந்திக் கொடி நாட்டியதுபோலவே, இன்று சுவாமிஜியும் தமது அகிலபாரத யாத்திரையில் இந்தியாவின் வடகோடியில் மத மறுமலர்ச்சியை ஏற்படுத்திக்கொண்டிருந்தார்.

அவகாசம் கிடைத்தபோதெல்லாம், அமைச்சரின் படகில் உல்லாஸப் பயணம் செய்வார் சுவாமிஜி. படகிலேயே வீடும் அமைந்ததுபோன்று அமைப்பது காச்மீரத்து வழக்கமல்லவா? இப்படிப்பட்ட ஒரு படகைத்தான் சுவாமிஜிக்கென அளித்திருந்

Koviloor Digital Library

தார் அமைச்சர். ஸ்ரீநகரத்தின் கடைத் தெருக்களையெல்லாம் சுவாமிஜி சென்று பார்த்தார். காச்மீரிகளின் தனித்தன்மை பெற்ற சங்கீதத்தைக்கேட்டு ரசித்தார். அனந்தநாக் முதலிய இடங்களுக்குப் படகுவீட்டில் பயணம்செய்து, ஆலயங்களில் வழி பட்டார். மார்த்தாண்டா, அச்சாபல் முதலிய இடங்களுக்கும் சென்றார். அச்சாபல்லுக்குப் போகும்வழியில் பாண்டவர்காலத் தைச் சேர்ந்ததாகக் கருதப்படும் ஒரு தேவாலயத்தின் நுட்பக்கலை அழகை வெகுவாக வியந்து, 'இது நிச்சயமாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது' என்று கூறினார். உஹலர் ஏரியில் படகுப் பயணம்செய்து பாரமுல்லாவுக்கு வந்துசேர்ந்தார் சுவாமிஜி. பிரகிருதி சுந்தரி, தனது சௌந்தரியத்தையெல்லாம் அள்ளித் தெளிக்கும் காச்மீரத்தில் சுவாமிஜி அந்த சௌந்தரி யத்தைத் தேடிச்சென்று தமது உடலுக்குப் புதுத் தெம்பு பெற்றார்.

மீண்டும் முர்ரீவந்து சேர்ந்த சுவாமிஜியின்ஆரோக்கியத்தைக் கண்டு ஸேவியர் தம்பதி மகிழ்ச்சி கொண்டனர். முர்ரீயில் நிபாரண்பாபு என்பவரின் இல்லத்தில் சுவாமிஜி தங்கியிருந்த போது அவரைபலர் வந்து கண்டனர். அக்டோபர் பதிநாலாம் தேதி முர்ரீயிலிருந்த வங்காளியரும், பஞ்சாபியரும் ஒன்றுசேர்ந்து சுவாமிஜிக்கு வரவேற்பு உபசாரம் நடத்தினர்.

மறுநாள் சுவாமிஜி ராவல்பிண்டிக்குப் புறப்பட்டார். அங்கு ஹன்ஸ்ராஜின் விருந்தினராகத் தங்கிய சுவாமிஜி ஸுஜன்ஸிங் என்பவரின் அழகிய பூங்காவில் ஓர் அற்புதமான உரை நிகழ்த் தினர். அன்று சுவாமிஜியின் பிரசங்கத்தைச் செவிமடுத்த ஓர் ஆங்கிலேய சீடர் பின்வருமாறு எழுதுகிறார்: ''தலையிலே ஒரு பூவளையமும், கழுத்திலே புஷ்பஹாரமுமாக சுவாமிஜி தமது வழக்கப்படியே உலாவிக்கொண்டும், தழைகளாலும் மலர்களாலும் அலங்கரிக்கப்பட்ட ஒரு தூணில் சாய்ந்துகொண்டும் பிரசங்கம் புரிந்தபோது, காஷாய உடை அணிந்திருந்த அவர் கிரேக்க புராணத்துக் கடவுள் ஒருவரைப்போல் காணப்பட்டார். இதற்குப் பின்னணியாக புல்தரையில் டர்பன் அணிந்து, சப்பணம் கட்டிக் கொண்டு அமர்ந்திருந்த சுரோதாக்களும், தூரத்தே அஸ்தமன மாகிக்கொண்டிருந்த சூரியனும் ஒரு சித்திர விசித்திரமான காட்சி யாக இருந்தது.''

ஜம்முவில் இருந்த காச்மீர மகாராஜாவின் அழைப்புக் கிணங்கி சுவாமிஜி அக்டோபர் இருபதாம்தேதி ஜம்முவுக்குப் புறப்பட்டார். அரசாங்க விருந்தினராக அங்கு தங்கியிருந்த சுவாமிஜி மன்னரின் நூல்நிலயத்தைப் பார்வையிட்டார். காச்

Koviloor Digital Library

மீரத்தில் ஒரு மடம் நிறுவுவது குறித்து பாபு மஹேஷ்சந்திர பட்டாசாரியர் என்ற அதிகாரியுடன் ஆலோசனை நடத்தினுர்.

இருபத்திமூன்றும் தேதியன்று மஹாராஜாவுக்கும் சுவாமிஜிக்குமிடையே சந்திப்பு நிகழ்ந்தது. நீண்டநேரம் உரையாடல் நடந்தது. மன்னரின் இரு சகோதரர்களும், ராஜ்யத்தின் முக்கியமான அதிகாரிகளும் சம்பாஷணையில் கலந்துகொண்டனர். அர்த்தமில்லாத பழக்க வழக்கங்களையும், புறச் சடங்குகளையும் அளவுக்கு மீறிப் பின்பற்றுவதை சுவாமிஜி வன்மையாகக் கண்டித்தார். ''விபசாரம்போன்ற குற்றங்களுக்கு இந்த நாட்களில் ஒருவன் ஜாதிப்ரஷ்டம் செய்யப்படுவதில்லை. ஆனுல் பிறர் தொட்டோ, பார்த்தோ சாப்பிட்டால் அதுவே பெரிய பாபமாகக் கருதப்படுகிறது!'' என்றுர். தாம் கடல்கடந்து சென்றுவந்ததில் எத்தகைய தவறும் இல்லை என்று அழுத்தமாகக் கூறினுர். ''என்னுடைய நாட்டின் நன்மைக்காக நான் நரகத்துக்குப்போக வேண்டியிருந்தால் அதையும் ஒரு மகாபாக்கியமாகவே கருதுகிறேன்'' என்றுர்.

சுமார் நான்கு மணிநேரம் நடந்த இந்தச் சம்பாஷணையால் மன்னரும் மற்றவரும் மிகவும் கவரப்பட்டனர்.

மறுநாள் சுவாமிஜி ஒரு மேடைப் பிரசங்கம் புரிந்தார். அதனை மிகவும் ரசித்த மன்னர், சுவாமிஜி மேலும் சில நாட்கள் அங்கு தங்கியிருந்து பல உரைகள் நிகழ்த்துமாறு கேட்டுக்கொண்டார்.

அக்டோபர் இருபத்தைந்தாம் தேதியன்று சுவாமிஜி ஆரிய சமாஜத் தலைவர் அச்யுதானந்த சுவாமிஜியுடன் இந்தியாவின் மறுமலர்ச்சிபற்றி விவாதித்தார். ஆரியசமாஜத்தில் தாம் காணும் குறைகளையும் அவரிடம் ஒளிக்காமல் எடுத்துக் கூறினுர். அன்று பிற்பகல் சுவாமிஜி மஹாராஜாவின் விருப்பத்துக்கிணங்கி வேத சாஸ்திர புராணங்களைப்பற்றி இரண்டு மணி பிரசங்கம் புரிந்தார்.

மாலையில் தீபாவளிவிழாவை முன்னிட்டு தீபாலங்காரம் பெற்றுத் திகழ்ந்த நகரத்தைச் சுற்றிப்பார்த்து மகிழ்ந்தார்.

அக்டோபர் 29-ந் தேதியன்று மஹாராஜாவிடமிருந்து பிரியா விடைபெற்று ஸியால்கோட்டுக்குப் புறப்பட்டார் சுவாமிஜி.

சுவாமிஜி இப்போதெல்லாம் ஹிந்தி மொழியிலேயே நன்கு உரையாற்றப் பயின்றுவிட்டார். சரியாக உருவம் பெற்றிராத அம்மொழி சுவாமிஜியின் நாவில் புது மெருகு பெற்றது.

ஹிந்தி மொழியை சுவாமிஜி கையாளும் லாகவத்தை சிலாகித்த காச்மீர் மன்னர் அவர் அம்மொழியிலேயே பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுதவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

Koviloor Digital Library

அதேபோல் சுவாமிஜி எழுதிய கட்டுரைகள் பெரிதும் ரசித்துப் படிக்கப்பட்டன.

ஸியால்கோட்டில் தொடங்கி சுவாமிஜியின் பஞ்சாப் ராஜ்யச் சுற்றுப்பிரயாணம் நடைபெற்றது. ஸியால்கோட்டில் பெண் கல்வியை சுவாமிஜி உத்வேகத்துடன் பேசியதன் காரணமாக பெண்கள் பாடசாலை ஒன்று நிறுவும் நோக்கத்துடன் உடனே ஒரு பெருமக்கள் குழு அமைக்கப்பட்டது. இச்சமயத்தில் சுவாமிஜி தத்துவார்த்தங்களைப் போதிப்பதைவிட நடைமுறையில், கண்ணுக்கு மெய்யாக, ஸ்தூலமாகச் செய்யவேண்டிய பணிகளையே அதிகம் வலியுறுத்தியதாக குட்வின் கூறுகிறார்.

லாகூருக்கு அடுத்தப்படியாகச் சென்றார் சுவாமிஜி. வழக்கம் போல் விமரிசையான வரவேற்பு உபசாரம் வழங்கப்பட்டது. ஊர்வலம் சிறப்பாக நடைபெற்றது.

லாகூரில், 'நம்முன் உள்ள பிரச்னை' பற்றி சுவாமிஜி முதல் சொற்பொழிவு ஆற்றினார். சொல்லிமுடியாத கூட்டம் சாய்ந்தது. மன்றத்துக்குள் இடம்பெறமுடியாமல் வெளியே திரண்டிருந்தவர்கள் தங்கள் ஏமாற்றத்தில் பிரசங்கத்தையே நிறுத்திவிட முயன்றனர்.

பக்தியைப்பற்றி இரண்டாம்நாள் உரை நிகழ்த்திய சுவாமிஜி, மூன்றும்நாள் ''வேதாந்தம்'' என்ற பிரசித்திபெற்ற பேருரையைப் பொழிந்தார். ஹிந்துமத ஸாரமாகவே அந்த உரையைக் கருதலாம். மனோதத்துவம், பிரபஞ்சதத்வம் இவற்றின்மீது பாரத சமயம் எப்படி நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பதில் தொடங்கிய சுவாமிஜி அத்வைத வேதாந்தமானது எப்படி விஞ்ஞானம், பௌத்தம் இவற்றுக்கு மட்டுமின்றி நாஸ்திகத்துக்கும் விடைசொல்கிறது என்பதையெல்லாம் வெள்ளிடைமலையாக விளக்கினார். ஒவ்வொரு சொல்லிலும் சக்தி ததும்பி வழிந்த சுவாமிஜியின் இப்பிரசங்கம் மீண்டும் மீண்டும் சக்தி-பலம் இவற்றையே வலியுறுத்தியது. இந்த மகத்தான பிரசங்கத்தைக்கேட்டு ஆவேசம் பெற்ற பல இளைஞர்கள் சுவாமிஜியின் பணியை நிறைவேற்ற முன்வந்தனர். ஜாதி, மதம், கட்சி முதலிய எந்தப் பிரிவுக்கும் உட்படாத மாணவர் கழகம் ஒன்று லாகூரில் சுவாமிஜியின் முன்னரே உருவாகி ஏழை எளியவர்களுக்குப் பிணி போக்கவும், படிப்பு அளிக்கவும் தொடங்கிற்று.

ஆரியசமாஜத்தினரைக் கண்டித்துப் பேசவேண்டும் என்று லாகூரில் சிலர் சுவாமிஜியைக் கேட்டுக்கொண்டனர். சுவாமிஜி இதற்கு இணங்கவில்லை. என்றாலும் ஆரியசமாஜிகள் கண்டிக்கும் சிராத்த கர்மத்தைச் சிலாகித்து அவர் ஓர் உரை நிகழ்த்தினார்.

Koviloor Digital Library

அப்போது கண்ணியமானமுறையில் ஆரியசமாஜிகளுக்குப் பதில் கூறினர்.

பஞ்சாபில் அப்போது வலுப்பெற்றுவந்த ஆரியசமாஜத்துக்கும், சநாதன ஹிந்து தர்மத்துக்குமிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவேண்டுமென்பதே சுவாமிஜியின் விருப்பமாக இருந்தது. இருசாராரும் போட்டி போட்டுக்கொண்டு அவருக்கு வரவேற்பு அளித்து வாழ்த்தி வணங்கினர். ஆரியசமாஜத்தினர் அவரையே தங்கள் சமாஜத்தின் தலைமைப் பதவியை ஏற்குமாறுகூட வேண்டினர். ஆனால் சுவாமிஜி அதற்கு இணங்கவில்லை.

பஞ்சாபியர்களுக்குப் போதுமான அளவு பக்தி உணர்ச்சி இல்லை எனக்கருதிய சுவாமிஜி அங்கு ஸ்ரீசைதன்ய ஸங்கீர்த்தன சம்பிரதாயத்தைப் பரப்ப எண்ணினர். பஞ்சாபிச் சீமான் ஒருவர் சங்கீர்த்தன ஊர்வலம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்தார். ஆனால் எதிர்பாராத காரணங்களால் அந்த ஏற்பாடு நிறைவேறவில்லை.

சுவாமி ராமதீர்த்தர் என்று பிற்காலத்தில் பெயர்பெற்ற பெரியார் அப்போது தீர்த்தராம் கோஸ்வாமி என்ற பெயரில் லாகூரில்தான் கணிதப் பேராசிரியராக இருந்தார். அவர் சுவாமிஜியைச் சந்தித்து அளவளாவினர். லாகூர் மாணவர்கள் சுவாமிஜியிடம் ஈடுபாடுகொண்டதற்கு தீர்த்தராம்தான் முக்கியமான காரணம். சுவாமிஜி, குட்வின், மற்றும் அவருடன் சென்ற சிஷ்யர்கள் யாவரும் ஒரு நாள் தீர்த்தராமின் வீட்டில் விருந்து உண்டனர். அதன்பின் சுவாமிஜி

ஜஹாம் ராம் வஹாம் காம் நஹி;
ஜஹாம் காம் நஹிராம்.

(எங்கு ராமன் இருக்கிருனே அங்கு காமன் இருப்பதில்லை; எங்கு காமன் இருக்கிருனே அங்கு ராமன் இருப்பதில்லை.)

என்ற பாடலை உணர்ச்சியுடன் பாடினர். ''அவரது மதுரமான சாரீரமானது பாடலின் பொருளைக் கூடியிருந்தோர் இதயத்தினூடே புல்லரித்துப் பரவுமாறு செய்தது'' என்று தீர்த்தராம் குறிப்பிடுகிறுர்.

ஒரு நாள் சுவாமிஜி, தீர்த்தராம், குருபாயிக்கள், மற்றும் பல வாலிபர்கள் லாகூர் சாலைகளில் உலவி வந்தனர். அவர்கள் சிறு சிறு பிரிவுகளாகப் பிரிந்து உரையாடிக்கொண்டிருந்தனர். சுவாமிஜி இருந்த பிரிவில் மௌனம் நிலவியபோது, அருகே வேறு சிலருடன் சென்றுகொண்டிருந்த தீர்த்தராம், ''உண்மை மகாத்மா என்பவன் தனக்கென ஓர் உருவம் இருக்கும் உணர்வை இழந்து அனைவரின் ஆத்மாவாகவும் வாழ்கிருன். சூரியகிரணத்

Koviloor Digital Library

தில் சூடேறிப்போகும் வாயுப் பகுதி லேசாகி உயரச் செல்கிறது. உடனே மற்ற பகுதிகளிலுள்ள வாயு அந்த சூனியத்துக்குப் பாய்ந்தோடிவந்து நிரப்புகிறது. இதனுல்தான் பிரபஞ்சச் சூழல் இப்போதுபோல் இயங்க முடிகிறது. இப்படியேதான் மகாத்மாவும் தன்னைச் சீர்திருத்திக்கொண்டு ஒரு நாட்டுக்கு உயிரும் உணர்ச்சியும் ஊட்டிவிடுகிருன்'' என்று சொல்லிக்கொண்டே போனுர்.

தீர்த்தராம் கூறியதற்குச் செவிசாய்த்துவந்த சுவாமிஜி, ''என் குருநாதர், பரமஹம்ஸ ஸ்ரீராமகிருஷ்ண தேவர் அப்படிப்பட்ட ஒரு மகாத்மாதான்'' என்று ஆர்ப்பரித்தார்!

சுவாமிஜி லாகூரிலிருந்து புறப்படும்போது தீர்த்தராம் அவருக்கு தங்கத்தாலான ஒரு பாக்கட் கடிகாரத்தைப் பரிசளித்தார். அதைப்பெற்றுக்கொண்ட சுவாமிஜி தீர்த்தராமின் சட்டைப்பையிலேயே அதைப்போட்டு, ''அச்சா, நண்பரே! அதோ அந்தச் சட்டைப்பையிலேயே கடிகாரத்தை நான் அணிகிறேன்'' என்று அன்போடு கூறினுர். அன்பும் அத்வைதமும் மிக மிக நெருக்கமானவைதானே!

லாகூரில் சுவாமிஜியின் எளிமையையும், நேச உள்ளத்தையும் விளக்கும் இன்னெரு சம்பவம் நிகழ்ந்தது. ஆதியில் சுவாமிஜியுடன் பள்ளியில் படித்த மோதிலால் போஸ் என்பவர் அப்போது லாகூரில் வசித்து வந்தார். அவருடைய 'வங்காள வட்டத்'தில் சுவாமிஜியின் பிரசங்கம் ஒன்றும் நிகழ்ந்தது. தமது பாலிய நண்பர் இப்போது ஜகத்குருவாக விளங்குவதைக் கண்டதும் அவரிடம் எப்படிப் பழகுவது என்றே மோதிலால் போஸுக்குப் புரியவில்லை.

தயங்கித் தயங்கி சுவாமிஜியை அணுகிய அவர் ''உன்னை இல்லை. உங்களை எப்படி அழைப்பது?

நரேன் என்ரு, சுவாமிஜி என்ரு?'' என்று குழறினுர்.

அவரைக் கண்டவுடனே சுவாமிஜிக்கு சிநேகஸ்வாதீன உணர்ச்சி பொங்கியது. ''மோதி உனக்கு என்ன பைத்தியம் பிடித்துவிட்டதா? நான் அதே பழைய நரேன்தான், நீ அதே பழைய மோதிதான் என்பது உனக்குத் தெரியவில்லையா?'' என்று வாஞ்சையுடன் கூறினுர்.

இப்படியேதான் தமது இதர இளம்நாள் நண்பர்களிடமும் சுவாமிஜி நரேந்திரநாதனுகவே இருந்து தமது சௌலப்பியத்தை வெளிப்படுத்தியிருக்கிருர்!

பத்து நாட்கள் லாகூரில் கடுமையாக உழைத்ததால் சுவாமிஜியின் தேகதிடம் மீண்டும் தளர்ந்தது. இதுகாரணமாகவே அவர் டேராடூனுக்குப் புறப்பட்டார். அங்கே ஒரு பத்து நாட்கள்

Koviloor Digital Library

ஆர அமரக் காலம் கடத்தினுர். சிஷ்யர்களுக்குப் பல சிக்கலான சாஸ்திரங்களை விச்ரியாந்தியாக விளக்கினுர். முக்கியமாக ஸ்ரீமத் ராமாநுஜாசாரியரின் பிரம்ம சூத்திர பாஷியங்களில் பாடம் நடத்தினுர்.

சம்ஸ்கிருதத்தில் நல்ல தேர்ச்சிபெற்றிருந்த சுவாமி அச்யுதானந்தரைக்கொண்டு சாங்கிய தரிசனத்தில் பாடம் நடத்தினுர். அந்த சம்ஸ்கிருதப் புலவரால் தெளிவுபடுத்தமுடியாத விஷயங்களை சுவாமிஜி அநாயாசமாக விளக்கிவிடுவார் !

சுவாமிஜி டேராடுனிலிருந்தபோது அவரது பிரிய சிஷ்யரான கேத்ரி மன்னரிடமிருந்து அவருக்கு அழைப்புவந்தது. தாமும் தமது மக்களும் சுவாமிஜியின் தரிசனத்தைப் பெறவும் அவரது உபதேசத்தைப் பெறவும் துடிப்பதாக அவர் எழுதியிருந்தார். சுவாமிஜி 'அன்பென்னும் பிடியில் அகப்படும் மலை' அல்லவா ? கேத்ரிக்குப் புறப்பட்டார் — தில்லி, ஆல்வார், ஜெய்ப்பூர் மார்க்கமாக.

கண்ணபெருமான் ஹஸ்தினபுரத்து அரசமாளிகைகளை ஒதுக்கி விதுரன் வீட்டில் விருந்துகொண்டதுபோல், தில்லிக்குச் சென்ற சுவாமிஜி தமது பரிவிராஜக நாட்களில் தம்மிடம் நேயம் பூண்ட நடகிருஷ்ணர் என்ற ஏழையின் இல்லத்தில் தங்கினுர். தில்லியில் பல பிரமுகர்கள் அவரைக்கண்டு உரையாடினர். தில்லியிலும், தில்லியைச் சுற்றியுள்ள சரித்திரச் சின்னங்களை ஸேவியர் தம்பதிக்கும், மற்றும் உடன்வந்தோருக்கும் காண்பித்து விளக்கங்கள் அளித்தார் சுவாமிஜி.

ஆல்வாரில் சுவாமிஜிக்குக் கோலாகல வரவேற்பு கிடைத்தது. இங்கும் அவர் தமது பரவிராஜக வாழ்க்கையில் கண்ட பலருடன் நட்பைப் புதுப்பித்துக்கொண்டார். ஆல்வார் ரயில் நிலையத்தில் அவர் வந்து இறங்கியவுடனேயே இந்த அன்பு அத்தியாயமும் தொடங்கிவிட்டது. கூடியிருந்த பல முகங்களுக்கிடையே ஒரு தெரிந்த முகத்தைக் கண்டதும் சுவாமிஜியின் முகம் மலர்ந்தது. ''ராமஸ்நேஹி ! ராமஸ்நேஹி'' என்று சுவாமிஜி உரக்கக் கூப்பிட்டவுடன் அந்த மனிதர் அதிசயித்தே விட்டார். 'என்னையும் வரச்சொன்னுரோ ?' என்று ஒரு பாடல் உண்டே. அந்த பாவத்தில் அந்த ஏழை தனது கந்தல் உடையுடன் சுவாமிஜியை வரவேற்க வந்திருந்த பிரபுக்களுக்கு முன்னதாக வந்து நின்ருர்.

ஆல்வாரில் சுவாமிஜியைப் பல தனிகர்கள் விருந்துண்ண அழைத்தார்கள். சுவாமிஜியோ தாமாகவே ஒரு வீட்டுக்குத் தம்மை அழைத்துக்கொண்டார். பல ஆண்டுகளுக்கு முன்பு

Koviloor Digital Library

அவர் ஆண்டியாகத் திரிந்தபோது அவரை அன்போடு உபசரித்த ஓர் ஏழைக் கிழவியின் வீடு அது. ''முன்பு எனக்குத் தடி தடியாகச் சப்பாத்திசெய்து போட்டாயே அம்மா! அதே போன்ற சப்பாத்தியை உன் கையால் பெற ஆவலாயிருக்கிறேன்'' என்று அவளுக்குச் சேதிசொல்லி அனுப்பினுர். அன்பு கல்லையும் களிப்பிக்குமே! தடித்த சப்பாத்திகளைத்தானு மெதுவாக்காது?

சுவாமிஜியை மீண்டும் உபசரிக்கக் கொடுத்துவைத்ததில் அவளுக்கு ஏகப் பெருமை. அவருக்குச் சப்பாத்திகளைப் பரிமாறும்போது, ''உங்களுக்கு நெய்யும் பாலும் கலந்து மிருது மிருதுவாகப் பணியாரங்கள் செய்துவரப் பாவி நான் கொடுத்துவைக்கவில்லையே!'' என்று அரற்றினுள். ''உங்களுடைய இந்தச் சப்பாத்திக்கு தேவாமிருதமும் ஈடாகாது தாயே'' என்று கூறிய சுவாமிஜி தம்முடன் வந்திருந்தோரை நோக்கி, ''இவளுடைய தாயன்பையும் பக்தியையும் பாருங்கள். ''இவள் தன்கையால் சுட்ட இந்தச் சப்பாத்தியைவிட சாத்விக உணவு எதுவும் கிடையாது'' என்று கூறி அந்த வறட்டுச் சப்பாத்திகளை ரசித்து ருசித்துச் சாப்பிட்டார். விருந்துண்டு புறப்படும்போது அவளுடைய வீட்டில் ஆண்துணையாக இருந்தவர் கையில் ஒரு நூறு ரூபாய் நோட்டை ரகசியமாக அழுத்திவிட்டுத்தான் வெளியே வந்தார் சுவாமிஜி.

கேத்ரி மகாராஜா சுவாமிஜியிடம் கொண்டிருந்த எல்லையற்ற பக்தி வாசகர்களுக்குத் தெரியும். தமது பக்தியைத் திரவியத்தின்மூலம் வெளிப்படுத்திக்கொள்ள அவருக்கு எவ்வளவு வசதிகளும் வாய்ப்புக்களும் இருந்தன என்பதும் இதைப் படிப்பவர்களுக்குத் தெரியும். ஆனபடியால் கேத்ரி மன்னர் சுவாமிஜிக்கு அளித்த வரவேற்பை வாசகர்களே மானஸிகமாகக் கற்பனை செய்து பார்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சுவாமிஜி கேத்ரிக்கு விஜயம்செய்த சமயத்தில்தான் மன்னரும் இங்கிலாந்து சென்று திரும்பி வந்திருந்தார். எனவே நாட்டு வேந்தர், ஞானவேந்தர் இருவரையுமாகச் சேர்த்து மக்கள் இரட்டிப்பு உற்சாகத்துடன் வரவேற்பளித்தனர்.

டிஸம்பர் 11-ந் தேதியன்று கேத்ரி பள்ளிக்கூடத்தில் சுவாமிஜிக்கும் கேத்ரி மன்னருக்கும் பல வாழ்த்துரைகள் வாசித்தளிக்கப்பட்டன. அரசர் தலைமைவகித்த இந்தப் பள்ளி விழாவில்சுவாமிஜி மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினுர். அதன்பின் அவர் நிகழ்த்திய உரையில் தமது மேனுட்டு யாத்திரைக்குக் கேத்ரி மன்னர் எவ்வளவு பேருதவி புரிந்துள்ளார் என்பதை எடுத்துக் கூறி அவருக்கு நன்றி தெரிவித்தார்.

Koviloor Digital Library

சம்ஸ்தானத்து வழக்கப்படி வரவேற்பின்போது, மக்கள் தங்களது மன்னருக்குக் காணிக்கையாக ஐந்து தட்டு தங்க மோஹராக்களைச் சமர்ப்பித்தனர். அவ்வளவையும் மகாராஜா தமது ராஜ்யத்திலுள்ள கல்விநிலையங்களுக்கு அளித்துவிட்டார். விழா முடிவில் ராஜாங்க உத்தியோகஸ்தர்களும், பொதுமக்களும் வரிசையாக வந்து சுவாமிஜியை வணங்கி ஆளுக்கு இரண்டு ரூபாய்விதம் அவருக்கு கையுறை செலுத்தினர். அப்படி அவர்கள் சுவாமிஜியை வந்து வணங்கிப்போக இரண்டு மணிகள் ஆயின. இது தவிர சுவாமிஜி விடைபெற்றுக் கொள்ளும்போது மன்னர் அவருக்கு மூவாயிரம் ரூபாய்கள் காணிக்கை செலுத்தினர். எல்லாத் தொகையையும் சுவாமிஜி, சதானந்தரும் இளைய சச்சிதானந்தரும் நிர்வகித்துவந்த மடத்துக்கே சேர்ப்பித்தார்.

1897-ம் வருஷம் டிஸம்பர் மாதம் இருபதாம் தேதியன்று சுவாமிஜி கேத்ரி அரண்மனையில் 'வேதாந்த தத்துவம்' என்பது குறித்து ஓர் அரிய பிரசங்கம் நிகழ்த்தினர். அரசாங்க அதிகாரிகள் பலரும், ஐரோப்பிய ஆடவரும் பெண்டிரும் இந்தப் பேருரையைக்கேட்டு மகிழ்ந்தனர். பல விஷயங்களை எடுத்துக்கூறிய சுவாமிஜி, தற்காலத்தில் ஹிந்துக்கள் வேதாந்திகளாக எவ்வுயிரினையும் தாமாகக் காணவில்லை என்றும், தீண்டாமைபோன்ற கோட்பாடுகளை மிகவும் கடினமாகப் பின்பற்றி, 'மதத்தை ஒரு சமயலறைச் சித்தாந்தமாகச் செய்துவிட்டார்கள்' என்றும், குறைபட்டுக் கொண்டார். சமபாவத்தை மையமாகக்கொண்ட வேதாந்த வாழ்க்கைக்குத் திரும்புமாறு மக்களுக்கு அறைகூவல் விடுத்தார்.

உள்ளத்து உணர்ச்சி, உடல்தளர்ச்சி இரண்டும் சேர்ந்து கொள்ளவே சுவாமிஜி பிரசங்கத்தைச் சிறிதுநேரம் நிறுத்தவேண்டியதாயிற்று. ஒருபுறம் அவரது உடல்நிலையில் கவலையும், மறுபுறம் அவரது உரையை அப்படி அரைகுறையாக இழந்துவிடக் கூடாதே என்ற கவலையுமாகக் கூடியிருந்தோர் நிசப்தமாயிருந்தனர். சுவாமிஜி சுதாரித்துக்கொண்டு மீண்டும் பேசி பிரசங்கத்தை நிறைவுசெய்தார்.

கேத்ரியில் சுவாமிஜிக்கு வேலையே ஒய்வின் சுகத்தையும் அளித்தது. அவ்வளவு ஆர்வமாக அவரிடம் உபதேசம்பெறப் பலர் அவரிடம் விழைந்தனர். எஞ்சிய போதில் சுவாமிஜி குதிரை மீதேறி சுற்றுப்புறக் காட்சிகளையெல்லாம் ரசித்து வந்தார்.

ஒருநாள் மன்னரும் அவரும் குதிரைச்சவாரி செய்தபோது மரக்கிளைகள் தாழ்ந்து பாதையில் குறுக்கிடும் ஒரு பகுதியைக் கடக்கவேண்டியிருந்தது. மன்னர் இந்தக் கிளைகளைத் தூக்கிப்

Koviloor Digital Library

பிடித்து சுவாமிஜி முன்னேற வழி செய்தார். ஆனால் அந்த ஒரு கணத்தில் சுவாமிஜியின் ஆண்மை தலைதூக்கியிருந்ததால் அவர் மகாராஜாவிடம் இந்தச் சிறு உதவிபெற விரும்பவில்லை.

''கிளையை விட்டுவிடுங்கள்; நானே சமாளித்துக்கொள் கிறேன்'' என்றார் சுவாமிஜி.

''நான் உதவுவதில் தவறொன்றுமில்லை. தர்மத்தைக் காப் பது எப்போதுமே க்ஷத்திரியர்களின் கடமையாகத்தானே இருந்து வந்திருக்கிறது?'' என்றார் மன்னர்.

சிறிதுநேரம் யோசித்த சுவாமிஜி, ''நீங்கள் சொல்வது சரியே'' என்றார்.

கேத்ரியிலிருந்து கிளம்பிய சுவாமிஜி காண்ட்வாவுக்குச் செல்லும் வழியில் ஜோத்பூரில் பிரதம மந்திரி ராஜா ஸர் பிரதாப ஸிங்கின் இல்லத்தில் பத்து நாட்கள் தங்கியிருந்தார்.

காண்ட்வாவில் பாபுஹரிதாஸ் சட்டர்ஜியின் வீட்டைச் சென்றடைந்தபோது சுவாமிஜிக்குக் கடும் ஜுரம் கண்டிருந்தது. உடல் ஒன்றைத் தாங்கியதற்காகப் படவேண்டிய கஷ்டங்களை யெல்லாம் பட்டார் சுவாமிஜி. ஒரு வாரத்துக்குப்பின் கல்கத்தா வுக்கே புறப்பட்டார்.

அவர் புறப்படுவதற்கு முதல் நாள் இரவு ஹரிதாஸ் சட்டர்ஜி அவரைத் தமக்கு மந்திரோபதேசம் செய்யுமாறு கேட்டுக்கொண் டார். ''எனக்கு சிஷ்யர்கள் யாரும் தேவையில்லை; நான் குரு பதவிக்கு ஆசைப்படவில்லை'' என்று கூறி சுவாமிஜி உபதேசம் செய்ய மறுத்துவிட்டார். ஹரிதாஸர் அவரது காலைப்பற்றிக் கொண்டு கெஞ்சியும் பயனில்லை. ''மனிதனின் அமைப்பு தெய்வீக சர்வவல்லமையை உள்ளடக்கியது என்பதை எப்போதும் நினைவில் வைத்திருங்கள். இதை அநுபவத்தில்கொண்டு பிறருக்கும் வழி காட்டுவதே மகா மந்திரம்'' என்று கூறினார் சுவாமிஜி.

சிஷ்யர்களுக்காகத் தவித்து அவர்களிடம் பொறுப்பை ஒப்பு வித்துவிட்டு உலகிலிருந்தும் உடலிலிருந்தும் விடைபெறத் தவித்த சுவாமிஜி ''எனக்கு சிஷ்யர்கள் தேவையில்லை'' என்று கூறியதும், காலைப்பிடித்துக்கொண்டு கெஞ்சியவருக்கு மந்திரம் வழங்க மறுத் ததும் நமக்கு வியப்பாக இருக்கலாம். ஆனால் சுவாமிஜி தாம் கண்ட வியக்திகளின் இதய அடிவாரம்வரை புகும் ஆற்றல்பெற் றிருந்ததால் அங்கு என்னென்ன கண்டாரோ? நோயாளிக்கு என்ன வியாதி என்பதையும், அந்த வியாதிக்கு என்ன மருந்து தரவேண்டும் என்பதையும் வைத்தியர்தானே அறியமுடியும். எல்லாருக்கும் அவர் தந்த சர்வரோக நிவாரணியான பெனி ஸிலின்தான் சமூகத்தைத் தெய்வமாகப் பாவித்து சேவை

Koviloor Digital Library

செய்வது. இது தவிர ஸ்ரீராமகிருஷ்ண பகவான்போலவே அவர் தம்மை அடைந்தவரை தரவாரியாகப் பகுத்து இன்னின்னார் இன்னின்ன மார்க்கத்தில்தான் செல்லலாம் என்று கண்டு அவ்வாறே அறிவுரை வழங்கிவந்தார்.

நாடெங்கும் ஞான-சேவை மின்சாரம் பாயவேண்டும் என்று விரும்பிய சுவாமிஜி அந்த மின்சாரத்தை ஒருவாறு கன்னிமுனையிலிருந்து காஷ்மீரம்வரை பாய்ச்சிவிட்டார்.

இனி, எதிர்காலத்தை உருவாக்கவேண்டிய சிஷ்ய ரத்தினங்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டுமெனக் கருதி கல்கத்தாவுக்குத் திரும்பினார் சுவாமிஜி.

Koviloor Digital Library

அத்தியாயம்—28

இந்தியர் ஆக்குகிருர்!

1898-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ஸ்ரீராமகிருஷ்ண மடம் அலம்பஜாரிலிருந்து பேலூரிலிருந்த நீலாம்பர் முகர்ஜியின் வீட்டுக்கு மாறியது. வட இந்திய சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பிய சுவாமி விவேகானந்தர் மடத்தில் இல்லாதபோதில் பலராம் போஸின் இல்லத்தில் வசித்துவந்தார். எண்ணற்ற அடியார்களைக் காண்பதும், கணக்கற்ற கடிதங்களை எழுதுவதுமாக நாள்முழுவதையும் உழைப்பிலேயே செலவிட்டார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் எப்படி அடுத்த வாரிசைத் தயாரிப்பதி லேயே தமது அந்திம காலத்தைச் செலவிட்டாரோ அதேபோல் சுவாமிஜியும் இச்சமயத்தில் சிஷ்யர்களைப் பக்குவம் செய்வதி லேயே பெருத்த கவனம் செலுத்தினர். மத கிரந்தங்களில் வகுப்பு நடத்தியும், சிஷ்யர்களைச் சாதனைகள் மேற்கொள்ளச் செய்தும் வந்தார் சுவாமிஜி. சந்நியாசிகளும் பிரம்மசாரிகளுமாக ஓர் ஒப்பற்ற புனித பரம்பரை உருப்பெற்று வந்தது.

இச்சமயத்தில் பல மேனுட்டு சீடர்கள் தங்கள் தாயகத்தைத் துறந்து ஆயிரமாயிரம் காதங்கள் கடந்து சுவாமிஜியை வந்து அண்டியிருந்தார்கள். ஸேவியர் தம்பதியும், குட்வினும் சுவாமிஜி யுடனேயே வந்ததை நாம் அறிவோம். குட்வின் சுவாமிஜியின் எழுத்தராகப் பணிசெய்தார். அவரால்தான் இன்று சுவாமிஜியின் பல பேருரைகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. ஸேவியர் தம்பதியர் மாயாவதியில் அத்வைத ஆசிரமம் அமைப்பதிலேயே தங்களது உடல் பொருள் ஆவியை ஈடுபடுத்தியிருந்தார்கள். சுவாமிஜியின் அமெரிக்க வாழ்வின்போது நாம் சந்தித்த ஸ்ரீமதி ஒலிபுல்லை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். பிரசித்திபெற்ற நார்வே நாட்டு வயலின் வித்வானெருவரின் மனைவியான ஸ்ரீமதி ஒலிபுல்லும் இப்போது இந்தியாவுக்கு வந்துவிட்டாள். சுவாமிஜி இங்கிலாந்தில் தங்கியிருந்தபோது ஸேவியர் தம்பதி, ஸ்டர்டி அவர்களுடன் அவரது செலவுகளை ஏற்றுக்கொண்ட குமாரி முல்லர் இந்தியப் பெண்களின் கல்விப் பணிக்காக இந்தியாவுக்குவந்து சேர்ந்தாள். செல்வச் செழிப்பு பெற்றவளாயினும் குமாரி முல்லர் துறவறத்திலேயே இயல்பான பற்றுதல் கொண்டிருந் தாள். உலகைத் துறந்துவிட்டு, தான் சந்நியாசினியாகப் போக விரும்புவதாகவும் ஒருமுறை அவள் சுவாமிஜியிடம் கூறியிருக் கிருள். ஆனல் அவர் உலகிலிருந்துகொண்டு உலகுக்கு அன்பு

Koviloor Digital Library

செய்வதன்மூலமே அவள் சந்நியாச லக்ஷியத்தை அடையமுடியும் என்று கூறி அவளைத் தடுத்துவிட்டார்.

இந்தியாவுக்கு உழைக்கவேண்டுமென கண்காணாத நாட்டிலிருந்து வந்தவர்களில் சுவாமிஜி நியூயார்க்கில் வகுப்பு நடத்தி வந்தபோது அமுததாரையைப் பருகிவந்த குமாரி மாக்லியாடு இன்னொருத்தி. மிகவும் சுதந்திர சிந்தனைபடைத்த அவள் அநேக விஷயங்களில் சுவாமிஜி கூறுவதை ஒப்புக்கொள்ளமாட்டாள். அந்த 'அடங்காப்பிடாரி'க்கு, சுவாமிஜியும் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்குடன் உணர்வுகளை அளித்துவந்தார். சுவாமிஜி அவளை ஒரு வாரம் பிரணவஜபம் புரியுமாறு பணித்தார். அவளும் அவ்வாறே செய்து, ''என் இதயத்தில் ஓர் ஒளி தெரிந்தது'' என்றாள். ''நல்லது இப்படியே செய்துவா'' என்றார் சுவாமிஜி. இதன் பயனாகத்தான் அமரதத்துவத்திலேயே திளைத்து வாழ்ந்ததாகப் பிற்காலத்தில் குமாரி மாக்லியாடு கூறினாள். ''ஜோ ஜோ'' (குமாரி மாக்லியாடின் செல்லப் பெயர்) ஒரு ராஜ்யத்தையே ஆளக்கூடியவள். அவளுடையதைப்போன்ற வலுவான, ஆனால் நல்ல பகுத்தறிவை நான் வேறெங்கும் கண்டதில்லை'' என்று சுவாமிஜி அவளைப்பற்றி சிலாகித்திருக்கிறார்.

இந்தியாவுக்கு வரவேண்டும் என்று குமாரி மாக்லியாடு விருப்பம் தெரிவித்து சுவாமிஜிக்கு எழுதியதற்குப் பதிலாக அவர், ''அவசியம் வா ! ஆனால் ஒன்றை நினைவில்கொள். இங்கே நாங்கள் கோவணாண்டிகளாகக் காலம் தள்ளுவோம். எல்லாரும் கருநிறத்தவராகவும், எங்கும் அழுக்கும் அசுத்தமுமாகவே காணும். ஆனால் தத்துவங்கள் பேச உனக்குப் பலர் கிடைப்பார்கள்'' என்று எழுதினார். இந்திய வாழ்முறையை 'திருத்த' வேண்டும் என்ற எண்ணத்தில் அவள் இங்கு வரக்கூடாது என்பதையும் தெளிவு செய்தார். அப்படி அவர் சொல்லியிருந்தும் பின்னால் ஒரு சமயத்தில் அவள் சுவாமிஜியுடன் காஷ்மீரத்தில் பயணம் செய்யும்போது சென்னைச் சிடர் அழகியசிங்கர் திருமண் இட்டுக்கொண்டிருப்பதைக் கண்டு பரிகாசமாகப் பேசினாள். சுவாமிஜி சிம்மத்தைப்போல் அவளைப் பார்த்துக் கதிகலங்கச் செய்தார். ''எங்கள் விஷயத்தில் இப்படிப் பேச நீ யார் ?'' என்று கோபமாகக் கேட்டார்.

இந்தியாவுக்கு வந்தவுடன் அவள் சுவாமிஜியிடம், 'நான் உங்களுக்கு எப்படி உதவிபுரியட்டும் ?'' என்று வினவினாள்.

''இந்தியாவை நேசி. அதுவே எனக்கு உதவி'' என்றார் சுவாமிஜி.

Koviloor Digital Library

ஆம், இந்தியாவை நேசித்து, இந்தியாவுக்குப் பணிபுரிவதே சுவாமிஜிக்குப்புரியும் பணியாகும். தம்மையே இறுகிய இந்தியா என்று அவர் கருதினுர் அன்ருே ?

ஒரு நாள் சுவாமிஜி குமாரி மாக்லியாடிடம் வேடிக்கையாக, ''இந்தியாவுக்கு வந்ததிலிருந்து எனக்குச் சொந்தப் பணம் எதுவுமே இல்லே'' என்ருர். இருந்ததையெல்லாம்தான் ஸ்ரீராம கிருஷ்ண சங்கத் தலேவர் பிரம்மானந்த சுவாமியிடம் ஒப்பித்து விட்டு அவரிடம் பிடிவாதமாகக் கணக்குக் காட்டிக்கொண்டிருந் தாரே !

மாக்லியாடு வேடிக்கையைப் புரிந்துகொள்ளாமல் ''சரி, நான் உங்களுக்கு மாதம் ஐம்பது டாலர் தருகிறேன். முன்பண மாக இப்போதே முந்நூறு டாலர் தருகிறேன்'' என்று கூறி சுவாமிஜிக்குத் தனது காணிக்கையை அளித்தாள்.

''இதுபோதுமோ ?'' என்ருர் சுவாமிஜி குறும்புடன்.

''தினம் பாலாடையாகத் தின்றுவந்தால் போதாதுதான்'' என்ருள் அவள் அதே குறும்புடன்.

சுவாமிஜி பணத்தை வாங்கிக்கொண்டார். ஆனுல் மனிதர் தாம் சொன்ன சொல்லேக் காப்பாற்றவேண்டாமோ ? சொந்தச் செலவுக்குப் பொருள்வேண்டும் என்று கேட்டுப் பெற்றவர் அதை அப்படியே சுவாமி திரிகுணுதிதருக்கு அளித்து, அப்போது புதி தாகத் தொடங்கியிருந்த ''உத்போதன்'' என்ற வங்காளிப் பத்திரிகைக்கு அதனேப் பயன்படுத்துமாறு கூறினுர்.

எவ்வளவுதான் சிஷ்யர்கள் மேனுட்டிலிருந்து வந்துசேர்ந் தாலும் அவர்களெல்லாம் சகோதரி நிவேதிதைக்கு ஈடாக முடியுமா ?

ஸ்ரீராமகிருஷ்ண தேவருக்கு விவேகானந்த சுவாமிபோல், விவேகானந்தருக்குக் கிடைத்த ஒப்பற்ற சிஷ்யை, நிவேதிதை. லண்டனில் சுவாமிஜியிடம் பரிசயமாகி அவரது பரிவைப் பருகி அதிலேயே உருகமுழுந்த மார்கரெட் ஈ நோபிள்தான் நிவேதிதை யானுள் என்பதை முன்பே சொல்லியிருக்கிருேம். இந்தியாவுக்கு வந்து, பாரதப் பெண்களின் பெருவாழ்வுக்குத் தன்னே நிவேதனம் செய்துகொள்ள விரும்புவதாக அவள் தெரிவித்தபோது சுவாமிஜி இவ்வாறு எழுதினுர்: ''இந்தியாவுக்கு ஓர் ஆண் தேவைப்பட வில்லே; பெண்ணே தேவைப்படுகிருள். இந்தியர்களுக்காக, முக்கியமாக இந்தியப் பெண்களுக்காக உழைக்க ஒரு பெண் சிம்மம் தேவைப்படுகிறது. இப்போது இந்தியாவால் அப்படி ஒருத்தியைப் பிறப்பிக்க இயலவில்லே. அவளே வேறுநாடுகளி லிருந்தே கடன்வாங்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. உன்னு

Koviloor Digital Library

டைய கல்வி, உண்மையான ஈடுபாடு, தூய்மை, அளவிறந்த அன்பு, திடசங்கல்பம், இவற்றுக்குமேலாக உனது கெல்ட் இன ரத்தம், இவை உன்னையே இந்தியாவுக்குத் தேவைப்படும் பெண்ணாகச் செய்கின்றன.''

இவளுக்கும் சுவாமிஜி எச்சரிக்கை செய்தார். இந்தியாவின் ஏழைமையும், இந்திய மக்களின் பழக்க வழக்கங்களும் வெளி நாட்டவருக்கு ஏற்கமுடியாதவையாயிருக்கும் என்பதை உடைத்துச் சொன்னார். வெள்ளையர் இந்தியரின் அநுதாபத்தைப் பெறுதவர் என்றும், இந்தியருக்காகப் பாடுபட வருகிற வெள்ளையர் மற்ற வெள்ளையர்களின் அநுதாபத்தையும் இழந்துவிடுவர் என்பதையும் விண்டுகூறினார். இந்தியாவின் வெப்பதட்ப நிலைகள் மேனாட்டுச் சீதோஷ்ணத்துக்கு எவ்வளவு மாறுபட்டது என்பதையும் தெவித்தார். ஆக தமது காரியம் ஆகவேண்டும் என்பதற்காக அவர் எதையுமே ஒளித்துவைக்கவில்லை.

''இவ்வளவையும் பொருள்செய்யாமல் நீ இங்குவந்து சேவை செய்யத் துணிவாயானால் உன்னை வரவேற்கிறேன்; நூறுமடங்கு வரவேற்கிறேன். என்னைப் பொருத்தமட்டில் நான் எங்கும் போல்தான் இங்கும் ஓர் அநாமதேயன். எனினும் எனக்குள்ள சிறிய சக்தியை உன்சேவைக்கு அளிப்பேன்'' என்று சிஷ்யர் குருவுக்கு எழுதும் பாணியில் கூறினார்.

''காரியத்தில் குதிக்குமுன் நீ நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். பிறகு நீ தோற்றுப்போனாலும் சரி, அலுத்துப் போனாலும் சரி, நான் சாகும்வரையில் உன் பக்கம் நிற்பேன் என வாக்களிக்கிறேன். நீ இந்தியாவுக்கு உழைத்தாலும்சரி, இல்லாவிட்டாலும்சரி, வேதாந்தத்தை அப்பியசித்தாலும்சரி, அப்பியசிக்காவிட்டாலும்சரி — நான் சாகும்வரையில் உன் பங்கில் நிற்பேன். யானையின் தந்தம் வெளியேவந்தபின் மீண்டும் உள்ளே செல்வதில்லை. இப்படியே மனிதன் வெளியே சொன்ன சொல்லை மீண்டும் உள்ளே இழுத்து ஒளிப்பதில்லை'' என்று சுவாமிஜி நிவேதிதைக்கு எழுதியதைப் படிக்கும்போது விபீஷணனுக்கு அடைக்கலம் அளித்துப்பேசிய ராகவனின் குரலும் அர்ஜுனனுக்குத் தனது சரணாகத ரக்ஷணத்தை எடுத்தியம்பிய பரந்தாமனின் குரலும் கேட்கின்றன அல்லவா ?

குமாரி முல்லருடன் சேர்ந்து இந்தியப் பெண்களுக்குக் கல்விப் பணிபுரியும் முக்கிய நோக்கத்துடன் குமாரி நோபிள் 1898-ம் ஆண்டு ஜனவரி 28-ந் தேதி இந்தியாவில் காலடி எடுத்துவைத்தாள். அவளைக் கல்கத்தா மக்களுக்கு சுவாமிஜி, ''இவள் இங்கிலாந்து இந்தியாவுக்கு அளித்த பரிசுச் செல்வம்''

Koviloor Digital Library

என்று அறிமுகம் செய்தார். மார்ச் மாதத்தில் அவளுக்கு தீக்ஷைதந்து, 'நிவேதிதா' என்ற பொருத்தமான பெயரையும் அளித்தார். இந்த விழாவின்போது சிவ வழிபாட்டுமுறையை அவளுக்குக் கற்பித்துவிட்டு, விழாவின் முடிவாக புத்தரை வணங் கச் சொன்னார்.

இதிலிருந்து சுவாமிஜி தம்மை அண்டிவந்த மேல்நாட்டுச் சீடர்களை இந்தியராக்கும் பணியைத் தொடங்கினார். அவருக்கும் சரி, அவரது சிஷ்யர்களுக்கும்சரி, இது சிரமசாத்தியமான சாதனை யாகவே இருந்தது. 'குளவி தன் நிறமாக்கும்' என்பார்களே அதுபோல் அவர்களைக் கொட்டிக் கொட்டியே அவர் மாற்ற வேண்டியிருந்தது. குளவி கொட்டும்போது விஷத்தை உட் செலுத்துமெனில், இவரோ அமுதத்தைச் செலுத்தினார். எனினும் கொட்டுகிறபோது வலி இருக்கத்தான் செய்தது. இந்தியாவைப் புரிந்துகொண்டு, இந்திய வேதாந்தத்தைப் பயின்று, இந்தியர் களுக்குப் பணிபுரியவேண்டுமானால், தமது மேனாட்டு சிஷ்யர்கள் நடை, உடை, பாவனை, உணர்வு எல்லாவற்றிலும் இந்திய ராகவே மாறவேண்டும் — இந்திய வாழ்முறையைத் தங்களில் அவர்கள் கொள்ளவேண்டும்; வேற்றுமனிதராக இருந்து விமரி சிக்க அவர்களுக்குத் தகுதி கிடையாது என்ற கொள்கையை மிகவும் பிடிவாதமாகக் கடைப்பிடித்தார் சுவாமிஜி. தாங்கள் நீண்டநாட்களாகப் பின்பற்றிவந்த கொள்கைகளைக் கழற்றி எறி வது அவர்களுக்கு எவ்வளவு கடினமாக இருந்ததோ, அதைவிடக் கடினமாயிருந்தது இந்திய வாழ்முறையையும், சித்தாந்தத்தையும் ஏற்பது. இருந்தாலும் அவர்கள் சுவாமிஜியை விடவில்லை; சுவாமிஜியும் அவர்களை விடவில்லை. இத்தனை கொட்டுக்களையும் பொறுத்துக்கொண்டு, எப்படியேனும் புழுப்பிறவியைத் தொலைத்து, குளவியாகிப் பறக்கவேண்டும் என்ற ஆர்வம் அந்த அற்புத சிஷ்யர்களுக்கு இருந்தது. இதனால் தங்களது கண்ணுக்கு முன்பே தமது பூர்விக நம்பிக்கைகள் சிதலமாகி விழுவதையும் பொறுத்துக்கொண்டு, புது நம்பிக்கைகளை எழுப்பிக்கொண்டனர். அவர் கொட்டுவதும் தங்கள் நன்மைக்கே; சாகும்வரை தங்க ளுடன் நிற்க உறுதிபூண்ட அன்பு மனத்தவர் என்ற ஆறுதல் அவர்களுக்கு இருந்தது.

பெருத்த சிரமங்களிடையே சுவாமிஜி தமது மேல்நாட்டுச் சீடரை இந்தியராக்கி வந்தார் எனில், இதற்கு இந்தியாவில் எதிர்ப்பு வேறு இருந்தது. 'ஆங்கிலேயர்களும் அமெரிக்கர்களும் சாஸ்திரம் பயிலுவதாவது, சாதனைகளை அநுஷ்டிப்பதாவது? மிலேச்சர்கள் ஹிந்துவாக முடியுமா?' என்றெல்லாம் எதிர்ப்பு

Koviloor Digital Library

கிளம்பிற்று. ஆனால் சுவாமிஜி இதையெல்லாம் பொருட்படுத்தாமல் மத்தகஜம்போல் தமது மனத்தின் வழிப்படி சென்றார். ஆசார சீலரான தூய அன்னையார் சாரதையுடன் தமது மேல் நாட்டுச் சிஷ்யைகளைச் சேர்த்துவிட்டார். அவரும் அவர்களுடைய ஆர்வத்தையும் அன்பையும் உடனே புரிந்துகொண்டு அவர்களைத் தனது குழந்தைகளாக ஸ்வீகரித்துக் கொண்டார். அவர்களுடன் அமர்ந்து சமபந்தியாக உண்ணவும் அவர் தயங்கவில்லை.

இந்தியாவின் கன்னி விதவைகளைக் குறித்துக் கண்ணீர் விடாதாரில்லை. துயரம் செறிந்த சோகக் கதைதான் அவர்களுடைய வாழ்க்கை. என்றாலும் அந்தத் துயரத்தையும் மறைக்கும் ஒரு தூய்மை, துயரத்திலேயே பிறந்த ஒரு தூய்மையும் அவர்களுடைய வாழ்க்கையில் கலந்திருக்கிறது. விதி வசத்தால் தாம்பத்திய சுகம் அநுபவிக்க முடியாமல்போன அவர்கள், அதன்பின் அந்த இன்பத்தைச் சிறிதுகூட நாடாமல் வாழும் சந்நியாச வாழ்வு ஒரு அற்புதமாகும். சந்நியாசத்துக்காக அவர்கள் துடிக்காத போதில் நேர்ந்த ஒரு கொடுமைகாரணமாக எவ்வாறோ அவர்கள் புனித சந்நியாசிகளாக வாழத் தொடங்கி விடுவார்கள். உணவு, உடை எல்லாவற்றிலும் கட்டுப்பாடு செய்துகொண்டுவிடுவார்கள். பரமனிடம் பக்திபூண்டு,பிறவியைக் கழித்துக்கொள்வதே அதன்பின் அந்த இளம் கைம்பெண்களின் லட்சியமாகிவிடுகிறது. தமது ஐரோப்பிய, அமெரிக்க சிஷ்யைகள் இந்த விதவைகளின் வாழ்வைத்தான் பின்பற்றவேண்டும் என ஸ்ரீவிவேகானந்தர் விதித்திருந்தார். தூய அன்னையிடமிருந்து இந்த வாழ்வின் சாரத்தை அவர்களும் கிரகித்துக் கொண்டனர்.

நிலாம்பர் முகர்ஜியின் தோட்டமாளிகையில்தான் சுவாமிஜி தமது மேல்நாட்டுச் சிடர்களை இந்தியராக்கும் ரஸவாதத்தைப் புரிந்துவந்தார். இந்திய மக்களின் சமூக அமைப்பு, பழக்க வழக்கங்கள், புராணக் கதைகள், நம்பிக்கைகள் எல்லாவற்றையும் அவர்களுக்கு விரித்துக் கூறினார். ஆதரிச ஹிந்து வாழ்க்கை என்ன என்பதையும் விளக்கினார். அந்த ஆதரிச நிலையிலிருந்து பிரத்தியக்ஷ நிலை எவ்வளவு மாறுபட்டிருக்கிறது என்பதை ஒளிக்காமல் கூறினார். எனினும் இந்தியா நிகழ்காலத்தில் எப்படியிருக்கிறதோ, அத்தனை குறைகளுடனும், — அதனுடைய ஏழ்மை, அறியாமை, மூடநம்பிக்கைகள் இவற்றுடனேயே — அதனைத் தமது சிஷ்யர்கள் நேசிக்கவேண்டும் என்று வலியுறுத்தி வந்தார். அவர்களும் அப்படி முயன்றுதான் வந்தார்கள். இருந்த போதிலும் அவர்களது பூர்விக உணர்வுகள் சிலசமயம் பீறிக்

Koviloor Digital Library

கொண்டு வந்துவிடும். முக்கியமாக, சுவாமிஜிக்கு ஜீவாதாரமான காளிதத்துவமே அவர்களுக்குப் புரியாமல் போய்விடும். நன்மை தீமை இரண்டும் ஆண்டவன் லீலே; நன்மை தீமை இரண்டுமற்ற உயர்நிலேயே ஆண்டவனின் தன்மை என்பதைப் புரிந்துகொள்வது அவர்களுக்கு இயலாத ஒன்ருக இருந்தது. நன்மை மட்டுமே ஆண்டவனிடமிருந்து பிறந்தது; தீமைக்குக் காரணம் சாத்தான் என்பதல்லவா அவர்களது நம்பிக்கை? எனவே இவர்கள் காளியின் கோரத்தையோ, அவளுக்கு உயிர் பலி கொடுக்கப்படுவதையோ ஏற்கமுடியாமல் தத்தளித்திருக்கிருர்கள். சர்வதேசப்பிரஜை என்ற முறையில் தங்கள் நாடுகளில் உபதேசம் புரிந்த சுவாமிஜி, இப்போது இப்படி ஒரேயடியாக சுதேச பக்தராகித் தங்களேயும் ஹிந்துக்களாகச் சொல்வதை நினேத்து ஆச்சரியப்பட்டார்கள். ஆனல் சுவாமிஜியோ இந்தியாவில் அவர்கள் சேவைசெய்யுமளவும் அவர்கள் இந்தியர்களேவிட உயர்ந்தவர்களாகத் தங்களே லவலேசமும் எண்ணக்கூடாது என்பதால், அவர்களேயும் இந்தியராகவே ஆக்கிவந்தார். இருந்தபோதிலும் இதெல்லாம் புறத்தே நிகழும் தோற்ற மாறுதல்தான் என்பதையும், அகத்தின் அடி ஆழத்தில் ஒவ்வொருவரும் உலகப் பிரஜைகள் என்ற ஞானத்தையும் போதித்துவந்தார். ஜீவராசிகள் யாவுமே ஒரே ஆனந்தவஸ்துவின் பல தோற்றங்களே என்ற உபநிஷத வேதாந்தத்தை அவர்களுக்குப் புகட்டினர்.

இந்தியாவை அவர்கள் உள்ளபடி புரிந்துகொள்ளவேண்டும், — தற்போது அது எவ்வாறு உள்ளதோ அதைப் புரிந்துகொள்ள வேண்டும்; அதனுடைய வேதாந்த, இதிஹாஸ, புராண, சாஸ்திர லக்ஷியம் எதுவோ அதையும் புரிந்துகொள்ளவேண்டும் — என்ற நோக்கத்துடன் சுவாமிஜி தாம் செல்லுமிடங்களுக்கெல்லாம் அவர்களேயும் அழைத்துச் சென்ருர். வாரணுசியின் பக்திப் பாவனத்தையும், ராஜஸ்தானத்தின் வீரத்தையும், தில்லியின் கலேயையும், அல்மோராவின் பாரமார்த்திகத் தூய்மையையும், அவர்கள் காணுமாறு செய்தார். குடியானவர்களின் வாழ்க்கையையும், குடும்ப ஸ்திரீயின் தர்மத்தையும், குழந்தைகளின் விளேயாட்டையும், கிழவர்களின் அபிலாஷைகளேயும் அவர்கள் காணுமாறு செய்தார். படிக்காத மக்களின் எளிமையையும், படித்த பண்டிதர்களின் செருக்கையும் காண்பித்துக் கொடுத்தார். இந்திய மக்களிடமிருந்து பிரித்துப் பார்க்கமுடியாத இந்தியாதேசத்தின் வன வனந்தரங்களேயும், மலேத்தொடர்களேயும் சிகரக் கொடுமுடிகளேயும் எந்தப் பக்கத்தையும் மறைக்கும் வரைகளேயும் 'பாடி நகர்ந்துவரும்' நதிகளேயும், அவர்களுக்குத் தரிசனம் செய்து

Koviloor Digital Library

வைத்தார். அவர்களும் சிறிது சிறிதாக இந்தியாவைப் புரிந்து கொள்ளலானுர்கள்; இந்திய மக்களைப் புரிந்துகொள்ளலானுர் கள்; இந்திய நூல்களைப் புரிந்துகொள்ளலானுர்கள்; இந்தியத் தெய்வங்களைப் புரிந்துகொள்ளலானுர்கள். வெறும் அறிவினுல் மட்டும் புரிந்துகொள்ளாமல் தங்களது இதயத்தாலேயே புரிந்து கொள்ளலானுர்கள் — தங்கள் இரத்தத். துடிப்பால் உணர்ந்து கொள்ளலானுர்கள்.

தங்களது தேசத்தைவிட்டு, மக்களைவிட்டு இதுவே தேசம், இவர்களே மக்கள் என்று இந்தியாவுக்கு வந்துவிட்ட அந்த மேனுட்டினரை விட்டகுறை வந்து தொட்டு, பற்றிக்கொண்டு, அப்படியே விழுங்கியும்விட்டது. அவர்கள் இந்தியரே ஆனுர்கள்.

இந்தியா என்னவென்று அவர்கள் தெரிந்து கொண்டார் கள். இந்தியர் என்று பெயர்பெற்ற நாம்கூடத் தெரிந்து கொள்ளாத அளவுக்குத் தெரிந்துகொண்டார்கள் என்பது மேல் நாட்டுச் சிடர்கள் எழுதிய விவேகானந்த சுவாமியின் வரலாற்றில் காணும் ஒரு சில வாக்கியங்களிலிருந்து தெரிகிறது:

> இந்தியா ஏழ்மையான நாடு; ஆனுலும் தூயநாடு. அந்த ஏழ்மையையும் மதிக்கத் தெரிந்த நாடு அது. ஏனெனில் அங்கு மதம் என்பதே தியாகமாகத்தான் கருதப்படுகிறது. இங்கு ஏழ்மை என்பது மேல் நாடுகளில் போல் தீமையுடன் சேர்ந்திருக்கவில்லை.

என்று அவர்கள் உணர்ந்தார்களாம்!

இந்த உணர்ச்சி ஏற்பட்டபின் அவர்கள் நடுவில் உற்ற உள்ளச் சிக்கல்களைக்கூட மறந்தேவிட்டார்கள். ஆனந்தம் ஒன் றையே தாங்கள் அதுகாறும் கண்டதாக நினைத்தார்கள்.

''ஆகா இந்த ஆண்டுக்காலம் முழுவதும் ஆனந்தமாகச் சென்றது. லக்ஷியம் என்பது பிரத்தியக்ஷமான நாட்கள் அவை. முதலில் பேலூர் நதிப்படுகைக் குடில்; பிறகு ஹிமாலயத்தில் நைனிடாலும் அல்மோராவும்; அதன்பின் காஷ்மீரமெங்கணும் சுற்றுப்பயணம் — எல்லா இடங்களிலும் மறக்கவொண்ணு ஜாமங்கள் பலவற்றைக் கழித்தோம்; என்றும் எங்கள் வாழ் நாளில் எதிரொலிக்கும் பல வாசகங்களைக் கேட்டோம்; குறைந்த பட்சம் ஒருமுறையாவது ஆனந்த அழகு தரிசனத்தைக் கண் டோம்.

''எளியவர்களில் எளியவருடனும், அறியாதவர்களில் மிகவும் அறியாதவர்களுடனும் ஒன்றிவிடும் ஓர் அன்பைக் கண்டோம் எங்கள் எல்லாருக்கும் துன்ப நோவு வந்ததுண்டு

Koviloor Digital Library

ஆனல் துயரம் என்பது ஒரு பொன்னெளியாக உயர்த்தப் பட்டது.

''புதிய மதங்கள் தோன்றுகிற சூழல் எப்படிப்பட்டது, புதிய மதங்களை மலர்விக்கும் மகான்களில் பாவனை எத்தகையது என்பதையெல்லாம் தெரிந்துகொண்டோம். ஏனெனில் அப்படித் தம்மிடம் எல்லா மக்களையும் ஈர்த்துக்கொள்ளும் ஒருவருடன் — யாவர் சொல்வதையும் கேட்டு, யாவருடைய உணர்ச்சியையும் பகிர்ந்துகொண்டு, யாரையும் தம்மிடமிருந்து நீக்காத ஒருவருடன் நாங்கள் காலம் கழித்தோம். சிறுமைகளையெல்லாம் துடைத்துத்தள்ளும் ஓர் எளிமையை, நசுக்கப்பட்டவர்களிடம் கொண்ட பரிதாபத்துக்காகச் சாகவும் மனம்கொண்ட ஒரு தியாகத்தை, சித்திரவதை செய்ய வருகிற காலையும் காலனின் காலையும் கூட ஆசீர்வதிக்கும் ஓர் அன்பை நாங்கள் அறிந்துவிட்டோம்......

''அவரை அறியாதவர்கள் அன்பு செய்தார்கள்; அறிஞர்களும் அரசியல்வாதிகளும் அன்பு செய்தார்கள். அவர்கள் ஆண்டவனுடனேயே விளையாடினுர்கள்; அதை உள்ளுணர்ச்சியின்மூலம் அறிந்துமிருந்தார்கள்.

''......இப்படிப்பட்ட பல ஜாமங்களைக் கண்டவர்களின் வாழ்க்கை நிரம்பிவிடுகிறது; மதுரமாகிவிடுகிறது. நீண்ட இரவுகளில் பனைமரத்தில் பாயும் காற்றும்கூட அவர்கள் காதுகளில் ''மஹாதேவா, மஹாதேவா, மஹாதேவா!' என்றே முணமுணக்கிறது.''

சுவாமிஜியின்மூலம் சிவஸாலோக்கியத்தை அடைந்தவளான நிவேதிதை இப்படியெல்லாம் எழுதியிருக்கிருள். இவள்தான் இந்தியப்பெண் ஆவதற்குள் மற்றவர்களைவிட வெல்லாம் படாத பாடுபட்டவள். மேற்கத்தியப் பண்பில் ஊறியிருந்த இவளிடமிருந்து அந்தப் பான்மை பிரிவதற்கு, உயிர் உடலிலிருந்து பிரியுமுன் எத்தனை நரகவேதனைகளை அநுபவித்தாகவேண்டுமோ அத்தனைவேதனைகளை அவள் ஏற்கவேண்டியிருந்தது.

ஹிமாலயச் சாரலில் சுவாமிஜியும் சிடர்களும் தங்கியிருக்கும் போது இப்படித்தான் அவள் துடிதுடித்துக்கொண்டிருந்தாள். அதனைக் காணச் சகியாமல் அவளது சகி மக்லியாட் சுவாமிஜியிடம் அவளுக்காகப் பரிந்து பேசினுள். ''நிவேதிதாவால் இந்தப் பிகுவைத் தாங்கமுடியாது. அவளை விட்டுவிடுங்கள்'' என்ருள். சுவாமிஜி மௌனமாக வெளியேறிவிட்டார். பின்பு மாலையில் தான் திரும்பினுர்.

குமாரி மக்லியாடை நோக்கி, ''நீ சொன்னது சரிதான். இப்போது ஒரு மாறுதல் தேவை. நான் ஏகாந்தமாக வனத்துக்

Koviloor Digital Library

குள் செல்லப்போகிறேன், திரும்பிவரும்போது சாந்தியைக் கொண்டுவருவேன்'' என்ருர்.

ஓர் அற்புத சிஷ்யையைக் கைவிடுவதற்கு அவரும் என்ன பாடுபட்டிருக்கிருர் பாருங்கள்!

வனமையத்துக்குத் தனியாகச் செல்வதற்காகத் திரும்பினுர். அப்போது சட்டென்று வானத்தில் மிதந்த நிலா அவர் கண்ணில்பட்டது. சந்திரசேகரனின் தலையில் தங்கியிருக்கும் பிறை வடிவத்தில் ஒளிர்ந்தும் ஒளிராமல் மௌனமாக மிதந்து கொண்டிருந்தது மதியம். அறிவின் மூலமும், அநுபவத்தின் மூலமும் மட்டுமின்றி அழகின்மூலமும் ஆத்மிகத்தை உணர்ந்தவரல்லவா சுவாமிஜி! கானகத்துக்குச் செல்லவேண்டிய அவசியமில்லாமல் அப்பொழுதே அவர் உள்ளம் சாந்தியில் நிரம்பியது.

பரவசம் ததும்பும் குரலில், ''பிறையைப் பார்த்தீர்களா! முகம்மதியர்கள் இதைத்தான் போற்றி வழிபடுகிருர்கள். நாமும் தான் இந்தப் பிறையின் வளர்ச்சியுடன் நம் வாழ்வுப் பிறையையும் நிறைவு செய்துகொள்ளத் தொடங்குவோமே!'' என்று ஆர்ப்பரித்தார்.

புரட்சி சிஷ்யை இப்போது அவரது பாதங்களில் மண்டியிட்டு அமர்ந்தாள். சுவாமிஜி தமது பரிபூரண ஆசியைப் பரிவொழுக அவளுக்கு அளித்தார்.

நிவேதிதை தியானத்துக்கு அமர்ந்தாள். எல்லையற்ற நன்மையினுள் தான் புகுந்து சென்றுகொண்டிருப்பதையும், அந்த நன்மையின் திவ்விய தரிசனம் தனக்குக் கிட்டுவதையும் உணர்ந்தாள். தனது கொள்கை, மதம், வழக்க பழக்கம் என்பனவெல்லாம் அவளிடமிருந்து கழன்றேபோயின. சுவாமிஜி அன்று உள்ளம் நிரம்பி ஆசிகூறியதன் பயனே இது என்று புரிந்து கொண்டாள். 'ஆகா, என்னுடைய 'நான்' என்கிற இந்த அல்ப எண்ணத்தைத் துடைத்து, நான் அகம்பாவம் முழுவதுமின்றி ஆனந்தத்தைக் காண்பதற்கு அல்லவோ அவர் அவ்வளவு பாடுபட்டிருக்கிருர்' என்பதை உணர்ந்தாள் நிவேதிதை.

'வம்பே பழுத்த பழம்' என்று தமிழ்நாட்டு மெய்யடியார்கள் அடிக்கடிப் பாடுவார்கள். காய் தாகை முதிர்ந்து பழுக்க வேண்டிய காலத்திலன்றி அதற்கு முன்பாகவே அதனைப் பழுக்க வைப்பதுபோல் இறைவன் அடியார்களை வலுவில் வந்து பக்குவம் செய்வதையே இப்படிக் குறிப்பிடுகிருர்கள். மகான்களும் அப்படிப் பலரை வலுக்கட்டாயமாகப் பழுக்கச் செய்வதுண்டு. அவர்களில் மிகவும் கனிந்த கனியானவளே கன்னி நிவேதிதை. பொருட்களின் புவிஈர்ப்புத் தானத்தையே மாற்றி அமைத்துவிட்டார்

Koviloor Digital Library

சுவாமிஜி. அவளுடைய உணர்வுகள்மீது படைஎடுத்துத் தாக்கி அவற்றை வென்றுவிட்டார். அதே சமயத்தில், சிஷ்யர்களை வாயடைக்கச்செய்து வென்றவரும் அல்ல சுவாமிஜி. அவரது சிந்தனைப் பட்சி சிறகடித்து உயர உயரப் பறக்கும்போதும் அவர்கள் குறுக்கிட்டுச் சந்தேகங்களைக் கிளப்புவார்கள்; ஆட்சேபணை தெரிவிப்பார்கள். ஆனால் அவர் கோபியாமல் ஐயம்தீர்க்க முனைவார்; ஆட்சேபணைகளைத் தெளிவிக்க முற்படுவார். கடைசியில் ஐயமும் ஆட்சேபணையும் மடிந்து விழுந்தன.

* * *

மேல்நாட்டுச் சிஷ்யர்களை மேலான அநுபவத்துக்கு சுவாமிஜி தயார்ப்படுத்திய இந்தக் காலக்கட்டத்தில் வேறுபல சுவையான சம்பவங்களும் நிகழ்ந்தன.

சுவாமிஜி வட இந்திய சுற்றுப்பயணத்தைமுடித்துக்கொண்டு 1898-ம் ஆண்டு ஜனவரி மத்தியில் காண்ட்வாவிலிருந்து கல்கத்தா வந்து சேர்ந்தாரல்லவா? இச்சமயத்தில் அவர் ஸ்ரீராமகிருஷ்ண மடத்துக்குச் சொந்தமாக ஒரு கட்டிடம் எழுப்புவதுபற்றி தீர்க்கமான யோசனையில் இருந்தார். அமைதி தவழும் சூழல் ஒன்றில் மடம் அமையவேண்டுமென்பது அவரது விருப்பம். வரநகர ஸ்நான கட்டத்துக்கு நேர் எதிரே பேலூரில் கங்கைக்கரையில் அமைந்த ஒரு பகுதி அவரது மனத்தை அள்ளிக்கொண்டு போயிற்று. ஏழு ஏக்கர் பரப்புள்ள அந்த நிலத்தை வாங்கத் தீர்மானித்தார். இதற்கான திரவியத்தை குமாரி முல்லர் மனமுவந்து அளித்தாள்.

சுவாமிஜியும் நிலத்தை வாங்கினார். வெகுகாலத்துக்கு முன்பிருந்தே அவருக்கு இந்த இடத்தில்தான் மடம் அமையும் என்று ஏதோ ஒன்று உணர்த்தி வந்தது. ஸ்ரீராமகிருஷ்ண தேவர் யாக்கையை உகுத்தவுடன் அவரது சீடர்கள் வரநகரத்தில்தானே கூடி வாழ்ந்தார்கள்? அந்த நாளிலேயே சுவாமிஜி சொல்வார்: 'இந்த இடத்துக்கு அருகில்தான் எங்கோ குருமஹராஜின் பெயரில் நிரந்தரமாக மடம் அமையப்போகிறது' என்று.

ஸ்ரீராமகிருஷ்ண பக்தர்களுக்குத் தில்லையும், திருவரங்கமுமான பேலூரில் நிலம் வாங்கியாகிவிட்டது. எனினும் ஓராண்டுக்குப் பின்தான் அது மடமாக ஆயிற்று. நிலத்தையெல்லாம் சமன் செய்யவேண்டியிருந்தது. அங்கு ஏற்கனவே அமைந்திருந்த கிலமான மாளிகையைப் புதுப்பித்து அதற்கு மேல்மாடி கட்ட வேண்டியிருந்தது. புதிதாக ஒரு கட்டிடமும், இவற்றுக்கெல்லாம் இதயமாக ஸ்ரீராமகிருஷ்ணருக்கு ஓர் ஆலயமும் எழுப்பவேண்டி

Koviloor Digital Library

யிருந்தது. இவற்றுக்கெல்லாம் தேவைப்பட்ட நிதியத்தைப் பெரும்பாலும் சுவாமிஜியின் மேல்நாட்டுச் சிடர்களே அளித்திருந்தார்கள். ஸ்ரீமதி ஒல்புல் அளித்திருந்த காணிக்கையில் ஸ்ரீராமகிருஷ்ணர் ஆலயத்தை நிறுவி, மடத்துக்கு மூலதனமும் ஏற்படுத்தினர் சுவாமிஜி. லண்டன் சிஷ்யர்களின் காணிக்கை இதர கட்டிடங்களுக்கும், செப்பம் செய்கிற செலவுகளுக்கும் பயனுயிற்று. இந்திய வாழ்முறை மாறுவதற்கு மேல்நாட்டினர் பெரிதும் காரணமாயிருந்தார்கள் என்பதற்குப் பிரதியாகவே, அந்த வாழ்முறையைச் செம்மை செய்வதற்குத் தோன்றிய மகானின் நினைவு ஸ்தாபனத்தையும் அவர்களே ஏற்படுத்தவேண்டியிருந்தது போலும்!

வட இந்தியப் பயணமாகி சுவாமிஜி கல்கத்தாவுக்குத் திரும்பியபின் நிகழ்ந்த சம்பவங்களில் மிக முக்கியமான ஒன்று பாபு நவகோபால கோஷ் என்பவரின் இல்லத்துப் பூஜையில் ஸ்ரீராமகிருஷ்ணரது பிரதிமையை பிரதிஷ்டை செய்தது ஆகும்.

அந்த நன்னாளாகிய 1898-ம் வருஷத்து பிப்ரவரி மாதம் 6-ந் தேதி பூர்ணிமைத்தினமாகும். நவகோபாலரின் இல்லம் இருந்த ராமகிருஷ்ணபூருக்கு சுவாமிஜியும் குருபாயிக்களும் படகுகளில் வந்து சேர்ந்தனர். ஆற்றங்கரையிலிருந்து அவர்கள் தங்களை மறந்து திவ்விய நாம சங்கீர்த்தனம் செய்தவாறு சென்றனர். அமெரிக்கா, ஐரோப்பாவையெல்லாம் ஒரு கலக்குக் கலக்கித் திரும்பிய சுவாமிஜி சாதாரண ஆண்டிபோல் காஷாயம் உடுத்தி, கழுத்தில் மத்தளத்தைக்கட்டித் தொங்கவிட்டுக்கொண்டு ஆடிப்பாடி வந்ததைக்கண்டு மக்கள் கண்கசிந்தனர்.

மரியாளையும் இயேசுவையும் சேர்த்துத் தொழுவதுபோல் சந்திரமணியையும் ஸ்ரீராமகிருஷ்ணரையும் இணைத்து கிரிஷ்சந்திர கோஷ் ஓர் அற்புதப் பாடல் இயற்றியிருந்தார். அதற்கு விவேகானந்த சுவாமியின் இன்குரல் உயிரூட்ட அந்த உயிருக்குப் பிரதிபிம்பமாக மற்றவர்களும் கோஷ்டி நடனம் செய்தார்கள்.

ஏழை அந்தணப் பெண்மடியில் தவழ்
ஏந்தலே நீ யாரோ?
திகம்பரனுயிந்தக் குடிசைக்கு வந்திட்ட
தேவனே நீ யாரோ?
மன்பதைக் கிறங்கி மனது கசிந்திடத்
துன்பங்கள் தீர்க்கவே வந்தாயோ?

என்று மெய்யடியார்கள் மெய்மறந்து பாட நூற்றுக்கணக்கான மக்கள் அவர்களுடன் சேர்ந்துகொண்டனர்.

Koviloor Digital Library

சங்கம் முழங்க, சோமக்கலம் ஒலிக்க பக்தர்குழாம் நவ கோபாலர் வீட்டில் பிரவேசித்தது.

சலவைக்கல் பரவிய பூஜையறையில், ஆராதனைக்கான எல்லா திரவியங்களும் சித்தம் செய்யப்பட்டிருந்த அழகிய சூழலில் ஒரு சிம்மாசனத்தில் ஸ்ரீராமகிருஷ்ணரது உருவம் வைக்கப்பட்டிருந்தது. சுவாமிஜியின் உள்ளம் நிரம்பி வழிந்தது.

''ஆண்டவனைச் சகல உபசாரங்களுடனும் வழிபட நாங்கள் வழியில்லாதவர்கள். அவர் இங்குவந்திருக்குமாறு நீங்கள்தான் எங்களுக்கு அருளவேண்டும்'' என்றாள் அந்த இல்லத்துக்குரிய மாதரசி.

என் அன்புத்தாயே நம் ஆண்டவன் இதுபோன்ற சலவைக்கல் தரையில் நடந்து பழகியவன் அல்ல. குக்கிராமத்துக் குடில் ஒன்றில் பிறந்து மிக மிக எளிமையாய் வளர்ந்தவன் அவன். உங்களுடைய பக்தி இதயம்தரும் பூஜையில் அவன் வாழாவிடில் வேறெங்குதான் வாழ்வான்?'' என்றார் சுவாமிஜி.

கட்டுக்கட்டாக விபூதியைக் குழைத்துப் போட்டுக்கொண்டு சிம்மாசனத்தின் எதிரே அமர்ந்தார் சுவாமிஜி. சுவாமி பிரகாசானந்தர் மந்திரங்கள் ஓத சுவாமிஜி பிரதிமையில் குருநாதனை ஆவாஹனம் செய்தார். ஸ்ரீராமகிருஷ்ணருக்கென ஒரு விசேஷ வழிபாட்டு முறையை அப்போதுதான் சுவாமிஜி தொடங்கி வைத்தார்.

குருவின் உருவத்தின் எதிரே, 'தெளிவு குரு உரு சிந்தித்தல் தானே' என்றவாறு தியானம் புரிந்தார் சுவாமிஜி. பிறகு ஸ்ரீராமகிருஷ்ண மகாமந்திரமாக இன்று எண்ணற்றவர்களுக்கு ஆத்மசாந்தி அளித்துவரும் சுலோகத்தை இயற்றி குரு நாதருக்குச் சமர்ப்பணம் செய்தார்:

ஸ்தாபகாய ச தர்மஸ்ய ஸர்வ தர்ம ஸ்வரூபிணே
அவதார வரிஷ்டாய ராமகிருஷ்ணாய தே நம:

'சமயத்தை நிலைநாட்டிய குருவே! எல்லாச் சமயங்களும் ஓர் உருவானவரே! அவதாரங்களில் எல்லாம் தலைசிறந்தவரே! ஸ்ரீராமகிருஷ்ண தேவே! அஞ்சலி!''

அந்த ஆண்டு சிவராத்திரி விரதம் நீலாம்பர் முகர்ஜியின் தோட்டவீட்டுக்கு மாறிவிட்ட ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் அநுஷ்டிக்கப்பட்டது. அதில் எல்லா குருபாயிக்களும் கலந்துகொண்டது தனிச்சிறப்பாகும். அமெரிக்காவிலிருந்து சுவாமி சாரதானந்தரும், இலங்கையிலிருந்து சுவாமி சிவானந்தரும்கூட அப்போது மடத்துக்கு வந்திருந்தனர். சுவாமிஜி அவர்களது நற்பணியைப் பாராட்டினார். மடத்துத்தலைவரான பிரம்மானந்தரையும் அவரது

Koviloor Digital Library

நிர்வாகத் திறனுக்காகச் சிலாகித்துக் கொண்டார். அன்று எல்லா சுவாமிஜிகளுக்கும் நன்றிதெரிவித்துப் பத்திரங்கள் வழங் கப்பட்டன. அவர்களும் அதற்குத் தக்கமுறையில் பதில் அளித் தனர். சுவாமி விவேகானந்தர் பேசும்போது, ''பெருங்கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் — விஷயத்திலேயே உரையாளர் தம்மை மறக்கமுடிகிறது. கேட்போரைத் தம்முடன் அழைத்துச் செல்ல முடிகிறது. ஆனால் இதுபோன்ற சிறிய கூட்டத்தில் அது சாத்தியமாக இல்லை. இருந்தாலும் முயன்று பார்க்கிறேன்'' என்றார். குருபாயிக்கள் எத்தகைய வாழ்வைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை விளக்கினார்.

சிவராத்திரியை ஒட்டி குருமஹராஜின் ஜன்மதினம் நிகழ்ந் தது. அன்று க்ஷத்திரிய வைசிய வகுப்புக்களைச் சேர்ந்த பிரம்மசாரி சீடர்களுக்கும், கிருஹஸ்த சிஷ்யர்களுக்கும் உபநயனம் அணிவிக்க சுவாமிஜி ஏற்பாடு செய்தார். சந்தியா உபாஸனைக்கு அருகதை உள்ளவர்கள் எக்காரணத்தாலோ அதனைவிட்டிருப்பது தவறு என்று கருதி உபநயனச் சடங்குக்கு ஏற்பாடு செய்தார். சரத் சந்திர சக்கரவர்த்தி என்ற பிராம்மண சிஷ்யர்தான் அன்று மற்றவர்களுக்கு யக்ஞோபவிதம் அணிவித்தார்.

இன்று ஸ்ரீராமகிருஷ்ண ஜயந்தி. அவரது நாமத்தை ஜபிக்கும் யாவரும் சுத்தர்கள். எனவே இதுவே, இடைக்காலத் தில் விராத்தியராகிவிட்டவர்களை மீண்டும் பழைய நிலைக்கு இட் டுச்செல்ல உகந்த நாளாகும். யாரையும் நாம் பிராம்மணர் நிலைக்கு உயர்த்தவேண்டும். ஹிந்துக்களாகிய நாம் யாவரும் சகோதரர்கள். நம்மில் சில சகோதரர்களை தாழ்த்திவைக்க, 'உங்களைத் தீண்டமாட்டோம்' என்று நாம் பல நூற்றாண்டுகளாக கத்திக்கொண்டிருக்கிறோம். இப்படி நாம் செய்யும்போது தேச மானது சிறுமை, கோழைத்தனம், மடமை இவற்றின் விளிம்பில் நிற்பதில் அதிசயமே இல்லை. நம்பிக்கை, மகிழ்ச்சி இவற்றை அவர்களுக்கு நீங்கள் ஊட்டவேண்டும். 'நீங்களும் எங்களைப் போன்றவர்களே; எங்களுக்குள்ள எல்லா உரிமைகளும் உங்க ளுக்கும் உண்டு' என்று அவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள்'' என்று சுவாமிஜி பேசினார்.

அன்றைக்கு த்விஜர்கள் — அதாவது இருபிறப்பாளர் என்ற அங்கீகாரம்பெற்ற ஐம்பது வைசிய, க்ஷத்திரிய சீடர்கள் கங்கை நீராடி, ஸ்ரீராமகிருஷ்ணரின் திருஉருவத்தை வணங்கி, புனிதப் பூணூல் தரித்து இரண்டாம் முறை பிறந்தார்கள்.

எதிர்ப்புக்களைச் சற்றும் பொருட்படுத்தாமலே சுவாமிஜி இதனைச்செய்து முடித்தார். வேதகால சம்பிரதாயத்துக்கு

Koviloor Digital Library

விரோதமாக சுவாமிஜி என்றுமே சென்றதில்லை. இடைக்கால சம்பிரதாயங்கள் மூலமரபுக்கு விரோதமாயிருப்பதாக அவர் கருதும்போதே மூலத்தை நிலைநாட்டுவதற்கு இடைக்கால ஏற்பாடு களைத் தயங்காமல் மாற்றுவார். பொதுவாக சம்பிரதாய ஆசார அநுஷ்டானங்களைப் போற்றியவரே சுவாமிஜி. உதாரணமாக, குருமஹராஜ் ஜயந்திக்குச் சில தினங்களுக்கு முன்பு நிகழ்ந்த சிவராத்திரியின்போது மடத்தைச் சேர்ந்த பலர் உபவாஸம் இல்லாததைக்கண்டு அவர் மெத்த வருந்தினுர்.

உபநயனச் சடங்கு ஆனதும் ஒரே கோலாகலம் பெருகிற்று. குருபாயிக்களுக்கு என்ன தோன்றியதோ, அவர்கள் சுவாமிஜியைப் பிடித்துக்கொண்டு அவருக்கு சிவபெருமானைப்போல அலங்காரம் செய்யத் தொடங்கினர். அவரது செவிகளில் சங்க குண்டலங்களை அணிவித்து, அவரது திவ்விய மேனி முழுவதும் மந்திரமாகும் திருநீற்றினைப் பூசி அவரது சிரஸிலும் ஜடாமகுடம் ஒன்றைப் பொருத்தினர். ருத்ரராக பாவிக்கப்பட்ட அவரது கழுத்தில் ஒரு பெரிய ருத்ராக்ஷமாலையை மூன்ருக மடித்துப்போட்டு அவரது கரங்களிலும் ருத்ராக்ஷங்களை கங்கணம்போலக் கட்டினர். சிவத் தோற்றத்துக்கு ஒரு குறையும் கூடாது என்று சூலாயுதம் ஒன்றைக் கூட அவரது இடதுகையில் அளித்தனர்.

அன்பே சிவமாவதொரு மறிந்த பின்
அன்பே சிவமாயமர்ந்திருந்தாரே

என்ற ஆப்தர்மொழிக்கொப்ப மெய்யாகவே சுவாமிஜி சிவமாகி யிருந்தவரல்லவா? குருமஹராஜும் அவரைச் சிவமாகவும் தம்மைச் சக்தியாகவும்தானே கருதினுர்? சுவாமிஜி சிவமாகவே விளங்கினுர். மற்ற குருபாயிக்களும் நிறையத் திருநீற்றைத் தரித்துக்கொண்டு அவரைச்சுற்றி அமர்ந்திருந்தது ஈசுவரனைச்சுற்றி பைரவகணங்கள் அமர்ந்தாற்போலிருந்தது; கைலாஸத்தின் மகோன்னதமே மடத்தில் உயிர்வாழ்ந்தது என்கிருர் இக்காட்சியை நேரில்கண்ட சரத் சக்கரவர்த்தி.

நாம் தெய்வமாகக் கொண்டாடும் கடவுளுக்குத் தானும் பக்தனுயிருப்பதில்தான் பிரியம். சிவபிரான் ஸ்ரீராமனின் பக்தன் என்பதும் தேவிக்கு ராமநாமத்தை உபதேசித்தவன் என்பதும் வாசகர்களுக்குத் தெரிந்திருக்கலாம். சுவாமிஜி 'ராமா ராமா, ஸ்ரீராமா ராமா' என்று கானம்செய்யத் தொடங்கினுர். மற்ற வர்களும் அவரோடு சேர்ந்துகொண்டனர். சூலம் பிடித்திருந்த கையில் தம்பூராவைப் பிடித்துக்கொண்டு சுருதியுடன் இழைந்து சுருதிப் பொருளில் இசைந்து கொண்டிருந்தார் சுவாமிஜி. அப்

Koviloor Digital Library

போது அங்கு பரவியிருக்கக்கூடிய நாத அலையையும், பக்தி அலையையும் இங்கு எப்படி வருணிக்க இயலும்? அவரவர்கள் கண்களை மூடிக்கொண்டு தாமே தியானித்துப் பார்க்கவேண்டிய காட்சி தான் அது.

அரைமணி நேரம் இப்படி ராமஜபம் ஆனபின்பு ஒரு பாடலை இசைத்தார் சுவாமிஜி. பிறகு சுவாமிஜி இயற்றிய சிருஷ்டி கீதத்தை சாரதானந்தர் பாடினார். சுவாமிஜி அதற்கு மத்தளம் வாசித்தார். பரமஹம்ஸருக்குப் பிரியமான பல பாடல்கள் அதன்பின் பாடப்பட்டன.

பாட்டுக்கள் முடிந்தவுடன் சுவாமிஜி திடுமெனத் தமது அலங்காரங்களைக் களைந்தார். அவற்றை கிரிஷ்சந்திர கோஷுக்கு அணிவித்தார். காஷாய வஸ்திரத்தையும் அவர்மீது போர்த்தினார். ''பரமஹம்ஸ தேவர் கிரிஷ்பாபுவிடம் பைரவ அம்சம் உள்ளது என்பாரே! அவருக்கும் நமக்குமிடையே ஏது பேதம்?'' என்றார் குருபாயிக்களை நோக்கி.

நாடக ஆசிரியராகயிருந்து செல்லாத வழியெல்லாம் சென்ற பின் பரமஹம்ஸரின் அருட்பிரசாதத்தைப் பெற்றதில் பாக்கியப் பூரிப்புப்பெற்ற கிரிஷ் அன்று சுவாமிஜி தம்மையும் அந்த சீலம் செறிந்த சாதுக்களில் ஒருவராகக் கூறியபோது தம்மைக் கட்டுப் படுத்திக்கொள்ள முடியாமல் விம்மியழத் தொடங்கினார். ''காமினி — காஞ்சனத்தைத் துறந்த உங்களுக்குச் சமதையாக நானும் உட்கார்ந்திருக்கிறேன் என்றால் ஆண்டவன் கருணையை என்னென்பது?'' என்று திணறித் திணறிக் கூறினார்.

* * *

ஸ்ரீமதி ஒல்புல் அப்போது புதிதாக வாங்கப்பட்டிருந்த மடத்துக்கான மனைக்கட்டில் ஒரு குடிலில் வசித்துவந்தாள். அவளைக் காண்பதற்காகவந்த தர்மபாலர் என்ற புத்த பிக்ஷு சுவாமிஜியிடம் வழிகேட்டார். சுவாமிஜி தாமே அவரை அழைத்துக்கொண்டு ஒல்புல்லின் குடிலுக்குச் சென்றார். வழியில் சரியான மழை பிடித்துக்கொண்டது. பாதையெல்லாம் ஒரே சேறும் சகதியுமாயிருந்தது. சுவாமிஜிக்குக் குஷி தாங்கவில்லை. மழையில் சொட்டச் சொட்ட நனைந்துகொண்டு, சேற்றில் வேணுமென்றே 'சருக்காமலை' ஆடிக்கொண்டு கும்மாளமாகச் சென்றார் அவர். ஈசனின் கருணையை விளக்க மழையைவிட ஏதுண்டு? அந்த உணர்வுதான் சுவாமிஜியை இப்படி ஆனந்தமயமாக்கிற்று. தர்மபாலருக்கு சுவாமிஜியைப்போல அந்த சேற்றில் சகஜமாக நடக்க முடியவில்லை. மேலும் அவர் பாதரட்சை வேறு அணிந்திருந்தார்.

Koviloor Digital Library

ஓரிடத்தில் பாதரட்சையின் கனத்தில் அவரது கணுக்கால் வரையில் புதைந்துவிட்டது. சுவாமிஜிதான் அவரை அதிலிருந்து விடுவித்தார். அதன் பின் இருவரும் ஒருவரையொருவர் அணைத்து கைகளைக் கோத்துக்கொண்டவாறே 'தத்தக்க பித்தக்க' என்று நடக்கலாயினர். ஒரே சிரிப்பும் மகிழ்ச்சியும்தான்.

குடிலை அடைந்தவுடன் தர்மபாலர் காலைக்கழுவிக்கொள்ளப் போனார். வாளியை அவரிடமிருந்து பிடுங்கிக்கொண்டார் சுவாமிஜி. ''நீங்கள் என் விருந்தாளி. உங்களுக்கு ஸத்காரம் செய்யும் பாக்கியத்தை நான் பெறவேண்டும்'' என்று சொல்லித் தாமே அவருடைய கால்களைக் கழுவினார். ராஜசூய யாகத்தில் அதிதிகளுக்குப் பாதம் அலம்பும் பணியை வாசுதேவனேயல்லவா ஏற்றுக்கொண்டான்? இயேசுவும் தாம் மறையும் முன்பு அடியாருக்குக் கைகழுவ நீர் வார்த்ததாகக் காண்கிறோம் அல்லவா?

மார்ச் மாதம் 29-ந் தேதியன்று ஸ்வரூபானந்தர், ஸுரேசுவரானந்தர் இருவரும் சந்நியாச தீக்ஷை பெற்றனர். சுவாமிஜியை மூன்று நான்குமுறை கண்டு அவரது உரையாடலைக்கேட்டதிலேயே மனப்பக்குவம் பெற்று துறவுக்குத் துடித்தவர் ஸ்வரூபானந்தர். ''மடத்திலிருந்து வீட்டுக்குத் திரும்பமாட்டேன்'' என்று அவர் வைராக்கியத்துடன் அமர்ந்துவிட்டதைக் கண்டு உடன்வந்தவர்கள் அதிசயித்துப் போய்விட்டார்கள். ஸ்வரூபானந்தரை ஒரு நிதியமாகவே கருதினார் சுவாமிஜி. இவ்வளவு குறுகிய காலத்தில் அவர் யாரிடமுமே திருப்தியடைந்து துறவறம் அளித்ததில்லை.

இளமையிலேயே ஆத்ம முதிர்ச்சிபெற்று 'பிரபுத்த பாரதம்' என்ற சஞ்சிகையை சுவாமிஜியின் ஆணையின்கீழ் சென்னையில் நடத்திவந்த பெருமகன் ஸ்ரீ.பி. ஆர். ராஜம் அய்யர் அவர்கள் மறைந்தபின் பிரபுத்த பாரதம் மாயாவதியின் அத்வைத ஆசிரமத்துக்கு மாற்றப்பட்டது. அப்போது ஸ்வரூபானந்தரே அதன் ஆசிரியரானார். ஸ்வரூபானந்தர் துறவறம்பூண்ட மறு வருஷம் அத்வைத ஆசிரமம் நிறுவப்பட்டது. அதற்கு ஸ்வரூபானந்தரே முதல் தலைவரானார்.

இந்தக் காலகட்டத்தில் சுவாமிஜி கல்கத்தா பொதுமேடைகளில் மிகச் சொற்பமாகவே தோன்றிப் பேசினார். அவற்றில் ஒன்றாக, மார்ச் பதினொன்றும் தேதி சகோதரி நிவேதிதை இந்தியாவின் ஆத்மிக சிந்தனை இங்கிலாந்தில் எப்படிப் பரவியுள்ளது என்பது குறித்துப்பேசிய கூட்டமொன்றில் சுவாமிஜி கலந்துகொண்டார். அன்று ஸ்ரீமதி பெஸண்ட் அம்மையார் குமாரி முல்லர் ஆகியோரும் பேசினர். இவர்களெல்லாம் இந்தியர்களைத்

Koviloor Digital Library

தங்கள் உடன்பிறந்தோராகவும், இந்தியாவைத் தமது மாத்ரு பூமியாகவுமே கருதினர்.

மார்ச் முப்பதாம் தேதியன்று சுவாமிஜி டார்ஜிலிங்குக்குப் புறப்பட்டார். அவர் தீவிரமாக சிந்திக்கக்கூடக்கூடாது என்று வைத்தியர்கள் கூறியிருந்த அளவுக்கு அப்போது உடல்நலம் குன்றி யிருந்தார். இம்முறை அதிசயத்திலும் அதிசயமாக சுவாமிஜியுமே மருத்துவ ஆலோசனைப்படி நடக்கலானார். அது இயற்கைக்கே பொறுக்கவில்லைபோலும்! கல்கத்தாவில் வைசூரி நோய் திடீ ரெனத் தலைவிரித்தாடத் தொடங்கியது. சுவாமிஜிக்கு மனது கேட்குமா? தமது சௌக்கியத்தை மறந்து, கல்கத்தாவுக்கு ஓடோடியும் வந்தார்.

கல்கத்தாவிலிருந்து மக்கள் கூட்டம் கூட்டமாக வெளி யூர்களுக்குச் சென்றபோது ஆபத்தைத் தேடிவந்தார் சுவாமிஜி. 'ஆபத்திலே வந்து பக்கத்திலே நின்று அதனை விலக்குவது அன்றோ ஆன்றோரின் தனிப்பெருமை? மக்களுக்கு அபயம் ஊட்டும் அறிக் கைகளை விடுத்தார். வெறும் வாய் வார்த்தையோடு நின்று விடுவதல்லவே அவரது பணி? கஷ்டநிவாரணத்துக்காகத் தொண்டர்படை நிறுவி நோயாளிகளுக்குச் சிகித்ஸைசெய்ய தொடங்க உத்தேசித்தார்.

''சுவாமிஜி, பெரிய வேலையை இழுத்துப்போட்டுக்கொண் டிருக்கிறீர்களே! பணத்துக்கு எங்கே போவது?'' என்றனர் குருபாயிக்கள்.

''என்ன சொன்னீர்கள்! பணமா? அவசியம் நேர்ந்தால் மடத்து மனைக்கட்டை விற்றுவிடுவது'' என்று உடனே உறுதி யுடன் கூறினார் சுவாமிஜி. மடம் என்பதில்கூடச் சற்றுச் சுயநலம் கலந்துதான் இருக்கிறது என்று கருதி அதையும் அவசியம் நேரும் போது சமூகத்துக்குத் தியாகம்செய்ய அவர் தயாராய் இருந்தார். உத்தமர்களின் செல்வம் ஊருணிக் கிணறுபோல் என்று அற நூல்கள் கூறுவதற்கு விளக்கமாக வாழ்ந்தவர் அன்றோ சுவாமி விவேகானந்தர்?

''ஆம், மக்கள் வைசூரியால் தவிக்கிறார்கள் என்றால் நாம் நமது சுகங்களை எல்லாம் தயங்காமல் தியாகம் செய்யவேண்டியது தானே? நாம் எல்லாரும் துறவிகள். நினைவிருக்கிறதல்லவா? நமக்குத் தங்க மடமும், அங்கே உண்ண வசதியும் தேவையில்லை. நாம் தங்கத்தருநிழல் என்றைக்கும் உண்டு. நமக்குப் பிச்சை போட மக்கள் எங்கும் உண்டு. நம் கண்முன் துயருறும் ஆயிரக் கணக்கானவர்களின் அல்லலைத் தீர்க்கவேண்டும் எனும்போது சந்நி யாசிகளாகிய நாம் சொத்தைப்பற்றியா சிந்திப்பது'' என்று

Koviloor Digital Library

தியாகம் என்று ஒரு மடை திறந்தாற்போல் மனம் திறந்து பேசினுர் சுவாமிஜி.

ஆனுல் இவ்வாறு சுவாமிஜி மடத்து நிலத்தைவிற்கவேண்டிய அவசியம் நேரவில்லே. அவர் கஷ்டநிவாரணப் பணி தொடங்கிய வுடனேயே பலர் ஆர்வத்துடன் நிதியம் அளித்தனர்.

பெரியதொரு மைதானம் வாடகைக்கு அமர்த்தப்பட்டது. அங்கு சுகாதார விதிப்படி வைசூரி வியாதியஸ்தர் ஒவ்வொரு வரையும் பிரித்துவைத்து சிகித்ஸை செய்யச் சின்னஞ்சிறு கூடாரங் கள் அடிக்கப்பட்டன. சர்க்காரின் வைசூரிக் கட்டுப்பாடு விதிக் கிணங்கவும், அதே சமயத்தில் ஹிந்துக்களின் நம்பிக்கைக்குக் குந்தகமில்லாத முறையிலும் நோய் தீர்க்கும் பணி தொடங்கியது — சம்ஸார் நோயை தீர்க்கக்கூடிய சுவாமிஜியின் நன் முயற் சியில்.

சுவாமிஜி காட்டிய வழியில் குருபாயிக்கள் தெருச் சாக்கடை யெல்லாம் சுத்தம் செய்தனர். தாங்கள் சென்ற பகுதியிலுள்ள வீடுகளிலெல்லாம் வேலேக்காரர்கள்போல் துப்புரவு செய்தனர்.

மக்களுக்கு வைசூரி வியாதியைவிடப் பெரிய வியாதியாகப் பிடித்த பயப்பிராந்தியை இந்தத் தொண்டர் குழாத்தின் இன் முகமும் இன்சொல்லும் தீர்த்துவைத்தன. கொள்ளேநோயிலிருந்து கல்கத்தாவுக்கு எப்படியும் விடுதலே உண்டு என்ற நம்பிக்கை அவர்களுக்குப் பிறந்தது. வேதாந்திகளுக்கும் இதயம் உண்டு என்று மக்கள் புரிந்துகொண்டனர். கிறிஸ்துவ மதத்தில் மட்டு மின்றி நம் மதத்திலும் அன்பைத்தான் சொல்லியிருக்கிறது என்று அவர்கள் உணர்ந்து பிறந்த மதத்தை மதிக்கக் கற்கவும் இது ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது.

கோரமான நோய் மெல்ல மெல்லக் கட்டுப்பட்டு வரலா யிற்று. சர்க்காரின் கட்டுப்பாட்டுச் சட்டங்களும் நீக்கப்பட்டன.

சுவாமிஜி தமது மேல்நாட்டுச் சிடர்களுடன் ஹிமாலயத் துக்குப் புறப்பட ஆயத்தமானுர். தங்களது நீண்டநாள் விருப்பப் படி அல்மோராவில் குடியேறிவிட்ட ஸேவியர் தம்பதியர் சுவாமிஜி தங்களிடம் வருமாறு அழைத்தபடி யிருந்தனர். எனவே அல்மோ ராவுக்கு சுவாமிஜி மே மாதம் 11-ந் தேதி பயணம் தொடங்கினுர். நிவேதிதை, ஒல்புல், கல்கத்தாவில் அமெரிக்க ஸ்தானிகராக யிருந்த பாட்டர்ஸன் என்பாரின் மனேவியாகிய ஸ்ரீமதி பாட்டர் ஸன், குமாரி ஜோஸஃபின் மக்லியாட், ஆகியோருடன் ஸ்வரூபா னந்தர், துரியானந்தர், நிரஞ்ஜனுனந்தர், சதானந்தர் முதலிய சுவாமியார்களும் சுவாமிஜியோடு சென்றனர். கருப்பரை வழி படுவதால் ஸ்ரீமதி பாட்டர்ஸனே 'ஜாதி' பிரஷ்டம் செய்யு

Koviloor Digital Library

மளவுக்கு எதிர்ப்பு இருந்தும் அவள் அதைப் பொருட்படுத்தாமல், தனது கணவரின் பெரும் பதவி தோரணையையும் மறந்து மாணவியாக சுவாமிஜியுடன் சென்றதைச் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். சுவாமிஜியோடு பிரயாணம் செய்யும்போது பிரயாணம் நடக்கும் சூழலிலேயே அவர் உடன்வருவோரை முழுகவைத்து விடுவதோடு, அங்குள்ள மக்களின் இயல்புகளிலும் அவர்களைத் தோய்த்து, அந்த இடத்தில் முன்பு நடந்த சரித்திர சம்பவங்களிலும் அவர்களைத் திளைக்கவைத்துவிடுவார். ஒரு யானையைக் கண்டுவிட்டால் போதும், உடனே ராஜபுதனத்து வீரத்தைக் கதை கதையாகச் சொல்வார்; ஓர் ஒட்டைக்கூட்டத்தைக் கண்டுவிட்டால் போதும், உடனே மொகலாயர்களின் ரஸனையைக் கவிதை கவிதையாகச் சொல்வார். ஓர் ஓடையைப் பார்த்துவிட்டால் போதும்; உடனே சாதுக்களின் வாழ்க்கைகளைத் தன்மயமாக விவரிக்கத் தொடங்கி விடுவார். தங்களுடைய ஏழ்மையிலும் உள்ளத்தாழ்மையடையாமல் இந்நாட்டின் எளிய மக்கள் அந்தச் சாதுக்களை உபசரிப்பதைப்பற்றிக் கூறும்போதுமட்டும் நாவன்மைபெற்ற விவேகானந்தர் சொற்கள்வராமல் தடுமாறுவார். அவரது குரல் தொண்டையிலேயே சிக்கிக்கொள்ளும். அவரது கண்கள் நீரில் தளதளக்கும். தம்முடைய பரிவிராஜக நாட்களின் நினைவில் — அப்போது தமக்கு அன்னபானம் அளித்த ஏதவர்களின் நினைவில் — அவரது நெஞ்சு பஞ்சாகப் பிய்ந்துபோய்விடும்.

மலைகளையும், மாநதிகளையும், கானகங்களையும் மட்டுமின்றி வறண்டு பிளந்த நரம்பு நிலமும், மண் அலைகள் நெருப்பாக அலை வீசும் பாலைவனங்களும்கூட அந்த வேதாந்த கவியின் அழகுணர்ச்சிக்கு அருவிருந்து படைத்த அதிசயத்தை உடன்வந்தோர் கண்டனர். இந்தப் பயணத்தின்போது அவர் மீண்டும் முன்பே அவர் பலமுறை கூறிய ஒரு வாசகத்தை வாழ்க்கையில் வடித்துக் காட்டினர். ''நான் அமெரிக்காவுக்குப் புறப்படுமுன் இந்தியாவை நேசித்தேன். இப்போதோ இந்தியாவின் ஒவ்வொரு மண்ணும் எனக்குப் புனிதமாகிவிட்டது. அங்கு பட்ட காற்றே புனிதமாகிவிடடது. அது புனிதம் செறிந்த பூமி. அது முழுவதுமே க்ஷேத்திரமும், தீர்த்தமும் ஆகும்'' என்று முன்பு அவர் கூறியிருந்தார் அல்லவா ?

அல்மோரா செல்லும் மார்க்கத்தில் நைனிதாலில் சுவாமிஜி கேத்ரி மன்னரைச் சந்தித்துத் தமது மற்ற சீடர்களை அவருக்கு அறிமுகம் செய்து அவரை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தி அன்புக் குடும்பத்தில் இன்னொரு அங்கத்தினர் சேரும் இன்பத்தை ஏற்படுத்தினர். நைனிதாலில் சுவாமிஜி அத்வைத வேதாந்தியான

Koviloor Digital Library

ஒரு முகமதிய கனவானுடன் பரிசயம் கொண்டார். அவர் சுவாமிஜியிடம் எல்லையற்ற பக்திகொண்டார். ''சுவாமிஜி, இனி வரப்போகும் காலத்தில் தங்களை யாரேனும் ஆண்டவனின் அவதாரம் என்று போற்றினால், முஸ்லீமான நான்தான் முதன் முதலில் அந்த உண்மையைப் புரிந்துகொண்டவன் என்பதை நினைத்துக்கொள்ளுங்கள்'' என்று சுவாமிஜியின் அவதார ரகசியத் துக்கு உரிமை கோரினார் அவர். தம்மை சுவாமிஜியின் சிஷ்யர் என்றே கருதி 'முகம்தானந்தர்' என்றும் அவர் தமக்குப் பெயர் சூட்டிக்கொண்டார்.

நைனிதாலில் ஒரு நாள் உரையாடிக்கொண்டிருக்கும்போது இந்தியர்களைப்போல் மேல்நாட்டினர் மத உணர்வு பெற்றிருக்க வில்லை என்றும், தத்தம் மதத்தைபற்றிக்கூட அவர்கள் ஹிந்துக்கள் போல அறிந்திருக்கவில்லை என்றும் கூறினார். மேல்நாட்டுச் சீடர் களிடமே அவர்களுடைய மக்களின் மத அறிவின்மையைக் கேலி செய்து ஒரு கதை சொன்னார் அந்தத் துணிச்சல்காரர்.

''பாதிரி ஒருவர் சுரங்கம் ஒன்றுக்குச் சென்றாராம்'' என்று கதையைத் தொடங்கினார். ''சுரங்கத் தொழிலாளிகளிடம் விவி லிய நூலை விவரித்துக் கூறினார். சொல்லவேண்டியதையெல்லாம் சொல்லி முடித்தபின் 'கிறிஸ்துவைத் தெரிந்துகொண்டீர்களா?' என்று கேட்டார். எல்லாத் தொழிலாளிகளும் பேந்தப் பேந்த விழித்தார்கள். ஒருவன்மட்டும் தைரியமாக, 'கிறிஸ்துவின் இலக்கத்தைச் சொல்லுங்கள். அவரைத் தெரிந்துகொண்டுவிடு வேன்' என்றான். பாவம்! கிறிஸ்துவையும் தங்கள் சுரங்கத்தில் வேலைசெய்யும் ஒரு தொழிலாளி என்று நினைத்துக்கொண்டு தங்களுக்கெல்லாம் ஓர் இலக்கமிருப்பதுபோல் அவருக்கும் ஒன்று இருக்கும் என்று நினைத்துவிட்டான் அந்தப் பேதை'' என்று கதையை முடித்தார் சுவாமிஜி.

தமது பள்ளி நண்பராகிய ஜோகேஷ் சந்திர தத்தாவை நைனிதாலில் சுவாமிஜி சந்தித்தார்.

''இந்திய இளைஞர்கள் ஐ.ஸி.எஸ். தேறி இங்கு உத்தி யோகத்தில் அமர்ந்தால் நாட்டுக்கு நல்லது செய்யமுடியும். அவ் வாறு தகுதியுள்ளவர்களை இங்கிலாந்தில் ஐ.ஸி.எஸ்ஸுக்குப்படிக்க அனுப்புவதற்கு நிதி திரட்டினால் என்ன?'' என்று கேட்டார் யோகேசர்.

''வேண்டவே வேண்டாம்'' என்றார் சுவாமிஜி. ''இங்கி லாந்து செல்லும் இளைஞர்கள் இந்தியர்களாகத் திரும்பிவந்தால் தானே அவர்கள் தாய்நாட்டிற்கு அன்புப் பணி செய்யமுடியும்? அவர்களோ அந்நியர்களாக, ஆங்கிலேயர்களாக, ஐரோப்பியர்

Koviloor Digital Library

ளாகவே திரும்புவார்கள். நடை, உடை, பாவனைகளில் மேநாட்டினராகவே வாழவிரும்பி, இங்கு திரும்பிவந்த பின்னும் இங்குள்ள ஐரோப்பியர்களுடனேயே பழகுவார்கள். தங்கள் தேசத்தின் பிரச்னைகளையே அவர்கள் மறந்துவிடுவார்கள். இதைப்பற்றிச் சந்தேகமேயில்லை'' என்றார்.

இதைத் தொடர்ந்து, இந்தியர்கள் தொழில்துறையில் சிரத்தையில்லாமல் சோம்பித்திரிவதை நினைந்து, விறுகொண்ட நாடு இப்படி அடிமையாகிவிட்டதே என்று நெஞ்சு வெடித்துக் கண்ணீர் பெருக்கினார் சுவாமிஜி. ஜோகேஷ் பாபு எழுதுகிறார்:

''அந்தக் காட்சியை என் உயிருள்ளவரை நான் மறக்க மாட்டேன். அவர் ஒரு தியாகி; உலகைத் துறந்தவர். எனினும் இந்தியா அவரது ஆத்மாவின் அடி ஆழத்தில் புதைந்திருந்தது. இந்தியாவே அவரது அன்பு, அவர் இந்தியாவுக்காகவே வருந்தினார்; விம்மினார்; இந்தியாவுக்காகவே இன்னுயிரைவிட்டார். இந்தியா அவரது இதயத்தில் துடித்தது; நாடியில் அதிர்ந்தது; சுருங்கச் சொன்னால் அவரது வாழ்க்கையுடனேயே பிரிக்கமுடியாமல் பிணைந்திருந்தது.''

நைனிதாலிலிருந்து அல்மோராவைச் சென்று சேர்ந்தனர் சுவாமிஜியும் அவரது சிடர்களும். அவரும், குருபாயிக்களும் ஸேவியர் தம்பதியின் விருந்தினராகத் தங்கினர். மேல்நாட்டுச் சிடர்கள் அருகில் ஒரு விடு அமர்த்திக்கொண்டனர். இங்குதான் அவர்களை சுவாமிஜி இந்தியராக்கும் அப்பியாசம் தீவிரமாக நடைபெற்றது. முக்கியமாக நிவேதிதையை பாரத தர்மத்துக்கு நிவேதனமாக்கியது இப்போதே. 'நிவேதிதையைப் பயிற்றுவித்தது தவிர இந்த ஆண்டில் சுவாமிஜி வேறெதுவுமே செய்யாதிருந்தாலும்கூட அந்த ஆண்டில் அவரது வாழ்வு பயனற்றது என்று சொல்லமுடியாது' என்று இரட்டை எதிர்மறைப் பதங்களைப்போட்டு இந்தப் பயிற்சியைப் புகழ்கின்றனர் மேல்நாட்டுச் சிடர்கள்.

சுவாமிஜியுடன் தான் சுற்றித்திரிந்தபோது ஏற்பட்ட அநுபவங்களையும் நிகழ்ந்த சம்பவங்களையும் ''சுவாமி விவேகானந்தருடன் சுற்றிய அநுபவக்குறிப்பு'' என்ற அற்புதமான நூலில் உலகுக்கு ஆக்கித் தருகிறாள் நிவேதிதை.

அல்மோராவில் சுவாமிஜி தங்கியிருந்தபோது அன்னி பெஸண்ட் அம்மையை இரண்டுமுறை சந்தித்து நீண்டநேரம் ஆனந்தமாக அளவளாவிக்கொண்டிருந்தார். அம்மையார் அப்போது ஜி. என். சக்கரவர்த்தியின் இல்லத்தில் தங்கியிருந்தார். ஸ்ரீமதி சக்கரவர்த்திக்கு சிறுவயதிலிருந்தே சுவாமிஜியுடன் பரி

Koviloor Digital Library

சயம் உண்டு. அவளது அழைப்பின்மீது சுவாமிஜி முதலில் அவளுடைய வீட்டுக்குச்சென்று அன்னிபெஸண்டைச் சந்தித்தார். இரண்டாவதுமுறை அம்மையாரைத் தாம் தங்கியிருந்த இடத்தில் தேநீர் உபசரிப்புக்கு அழைத்து உரையாடினுர்.

இந்நாட்களில் சுவாமிஜி வேடிக்கை விநோதங்களில் மிகவும் ஊறியிருந்தார் எனினும் அவ்வப்போது வாழ்க்கையின் கொடுமைகளைப்பற்றி விஸ்தரிக்கத் தொடங்கிவிடுவார். அச்சமயங்களில் பேசப் பிடிக்காமல் தியானத்துக்குச் சென்றுவிடுவார். ஒரு சமயம் உடன்வந்தோர் எல்லாரையும் பிரிந்து, அல்மோராவுக்கு அருகேயிருந்த ஷியா தேவிக்கு சுவாமிஜிமட்டும் ஏகாந்தத் தியானம் புரியச் சென்ருர். அங்கே வனந்தரத்தின் மௌனத்தில் தினமும் பத்து மணி தியானம் புரிந்துவிட்டுத் தமது கூடாரத்துக்குத் திரும்புவார். அங்கேயும் மலைவாசிகள் அவரது ஏகாந்தத்தைக் குலைக்கக் கூட்டம் கூட்டமாக கூடலானுர்கள். ஈசுவரன் தம்மைச் சமூகத்துக்காகவே படைத்திருக்கிருன்; தனிமையின் இனிமையைத் தனக்கு அவன் தரமாட்டான் என்று அறிந்த சுவாமிஜி நாலே நாளில் அல்மோராவுக்குத் திரும்பிவிட்டார்.

அவர் சந்நியாசியாகவே காணப்பட்டார். ''நான் உத்தேசித்ததுபோல் தனிமையில் தவமிருக்க முடியவில்லை. அதனுல் என்ன? தனிமை கிடைத்தால் இப்போதும் என்னுல் தவமிருக்க முடியும் என்பதைத் தெரிந்துகொண்டுவிட்டேன். நான் இன்னமும் அந்த நாள் சந்நியாசியாக வாழமுடியும். பாதரட்சையில்லாமல் என்னுல் நடக்கமுடியும். வெயிலையும் மழையையும், பசி தாகத்தையும் பொருட்படுத்தாமலிருக்க முடியும்'' என்று கூறிவந்த சுவாமிஜி மேநாட்டுச் சீடர்களை நோக்கிக் குறும்புக் குரலில் ''உங்களுடைய மேற்குதேசம் என்னைக் குட்டிசுவராக்கவில்லை'' என்று முடித்தார்.

நடுவில் நான்கைந்து தினம் ஸேவியர் தம்பதியருடன் சுவாமிஜி மடத்துக்கு உகந்த ஓரிடம் தேடுவதில் அல்மோராவின் அண்டைப்பகுதிகளில் சஞ்சாரம் செய்தார்.

ஜூன் மாதம் ஐந்தாம் தேதி அவர் திரும்பியபோது அதிர்ச்சி தரும் இரண்டு சேதிகள் அவருக்குக் காத்திருந்தன. சுவாமிஜியின் குருஸ்தானத்திலிருந்த பாவாஹாரி பாபாவும், அவரது அருமை சிஷ்யரான குட்வினும் காலகதிக்கு ஆளாகிவிட்டிருந்தார்கள்.

பாவாஹாரி பாபா நீண்டநாட்களாகப் பூமிக்கடியில் நிஷ்டைசெய்து வருவதைமட்டுமே மக்கள் அறிந்தார்கள். ஒரு நாள் அவரது ஆசிரமத்திலிருந்து புகை வெளிவருவதைக்கண்டே தமது புனித உடலை அவர் அக்னிக்கு ஆஹுதி செய்துவிட்டார்

Koviloor Digital Library

என்று தெரிந்துகொண்டார்கள். 'ஸ்ரீராமகிருஷ்ணருக்கு அடுத்த படியாக நான் நேசித்தது பாவாஹாரி பாபாவைத்தான்' என்று சுவாமிஜி கூறியதுண்டு.

மேல்நாடுகளில் மட்டுமின்றி, சுவாமிஜி பாரதம் வந்த பின்னும் அவரது எழுத்தராகயிருந்து, அவரது அமுதவாக்குகளை உலகத்துக்கு அழியாச்செல்வமாக எழுத்தில் தந்த குட்வின் சமீபத்தில்தான் சென்னையில் 'மெயில்' பத்திரிகையில் ஒரு உத்தியோகத்தில் அமர்ந்திருந்தார். அவர் உதகமண்டலம் சென்றிருந்தபோது கபவாதஜுரம்கண்டு காலபாசத்தில் சிக்கிக்கொண்டார்.

குட்வினுடைய மரணச்செய்தி சுவாமிஜிக்கு அறிவிக்கப்பட்டபோது அவர் மிகவும் சாந்தமாகவே அந்தச் செய்தியை வாங்கிக்கொண்டார். அமைதியாக அமர்ந்து பக்தி, தியாகம் இவற்றைப் பற்றி ஒரு நாழிகை பேசிக்கொண்டே போனுர்.

'அவர் பேசிக்கொண்டிருக்கும்போது, மகத்தான ஆத்ம வெற்றியை பெற்றபின் வீசும் ஜயக்கொடிதான் துறவறம் என்று தெரிந்தது. நித்தியகல்யாணுனை ஈசுவரனை மணப்பதற்குச் செய்கிற ஜீவாத்மாவின் ஆடை அலங்காரம்தான் வறுமையும், தன்னடக்கமும் என்று தெரிந்தது' என்று அழகுபட வர்ணிக்கிருள் நிவேதிதை.

சுவாமிஜி இப்படி ஏதேதோ விஷயங்களைப்பற்றிப் பேசுவதாகத் தோன்றிலும் அவற்றுக்கெல்லாம் ஊற்றுக்கண்ணுக குட்வினின் நினைவுதான் அவரது நெஞ்சில் கொந்தளித்தது.

''மரணமடைந்தவர்கள் நம்மிடமிருந்து மறைந்துவிடவில்லை; அவர்கள் உயிரோடிருப்பவர்களைப்போலவே உடனிருக்கத்தான் செய்கிறுர்கள்'' என்று தம்மைத்தாமே தேற்றிக்கொண்டார்.

குட்வினை இழந்து எங்கோ கண்காணுத இடத்தில் தவித்த அன்னைக்கு உள்ளமுருகி ஒரு மடல் எழுதினுர் சுவாமிஜி. ''அவருக்கு நான் பட்ட கடனை என்றும் தீர்க்கமுடியாது. என்னுடைய ஏதேனுமொரு சிந்தனையால் பயன்பெற்றதாக யாரேனும் எண்ணினுல், அந்தச் சிந்தனையை எழுத்தில் தந்தது குட்வினுடைய அயர்வற்ற, தன்னலமற்ற தொண்டுதான் என்பதை அவர்கள் நினைவுகொள்ளவேண்டும். இரும்பைப்போல் உறுதியான ஒரு நண்பரை, என்றும் தளராத பக்திகொண்ட சீடரை, அலுப்பு என்றுல் இன்னதென்று அறியாத ஒரு தொண்டரை அவரது மறைவில் நான் இழந்துவிட்டேன்'' என்று எழுதி, குட்வினின் ஆத்மசாந்திக்காக ஒரு கவிதையும் யாத்து அவரது தாய்க்கு

Koviloor Digital Library

அனுப்பினுர் சுவாமிஜி. மரணமும் வாழ்க்கையுமாக எது வருகிறதோ அதனில் ஒன்றிவிட்ட குட்வின் இனியும் தனது அன்பால் உலகுக்கு உதவிசெய்வார் என்று அந்தச் சரமகவியில் சுவாமிஜி கூறினுர்.

ஆங்கிலத்திலும் நாட்டுமொழிகளிலும் ஆத்மிக சஞ்சிகைகளும் அவசியமானுல் தினசரியும்கூடத் தொடங்கவேண்டும் என்று நீண்டகாலமாகவே எண்ணிவந்த சுவாமிஜி, அல்மோராவை விட்டுக்கிளம்புமுன், சென்னையில் ஸ்ரீ.பி. ஆர். ராஜம் அய்யரவர்களை ஆசிரியராகக்கொண்டு நடந்த 'பிரபுத்த பாரத' (விழிப்புற்ற இந்தியா) என்ற பத்திரிகையை அல்மோராவுக்கு மாற்ற ஏற்பாடுகளைச் செய்து முடித்தார். ஸ்ரீராஜம் அய்யர் அவர்கள் அல்பாயுளில் காலமாகிவிட்டதால், அல்மோராவுக்குப் பத்திரிகை மாறியவுடன் ஸ்வரூபானந்தாவை அதன் ஆசிரியராக நியமித்தார். ஸேவியர் மானேஜரானுர். அச்சகத்துக்கான செலவையும் ஸேவியர் ஏற்ருர். சுவாமிஜி அல்மோராவிலிருந்து புறப்பட்டு ஸ்ரீநகரத்தை அடைந்தபின்தான் 'பிரபுத்த பாரத'த்தின் முதல் இதழ் வெளியாயிற்று. புதுப்புது அற்புதங்களைப் புரிவதற்காக — சத்தியம், கலப்பற்ற சத்தியம் அதன் முழுப்பெருமையும் பொலிவதற்காக — இந்தியாவை விழிப்புறுமாறு தட்டி எழுப்பும் ஒரு கவிதையை இந்த முதல் இதழுக்கு சுவாமிஜி விஷயதானம் செய்தார்.

அல்மோராவிலிருந்து புறப்படுமுன் சுவாமிஜி அங்கு அசுவினி குமார் தத்தா என்ற தேசபக்தரைச் சந்தித்தார்.

அசுவினி பாபு தமது சுற்றுப்பயணத்தில் அல்மோராவை வந்தடைந்தார். அங்கு குதிரைமேல் சவாரிசெய்கிற ஒரு சாதுவைப்பற்றி — வீர செளந்தரியம்கூடிய ஒரு விந்தை சாதுவைப் பற்றி மலைநாட்டு மக்கள் பேசக் கேட்டார். விவேகானந்த சுவாமி அப்போது அல்மோராவிலிருந்ததாகச் செய்தித்தாள்கள் கூறியதால், மக்கள் குறிப்பிட்ட குதிரைச்சவாரி சாது யார் என்பதை எளிதில் ஊகித்துக்கொண்டார் அசுவினி குமார். விவேகானந்தர் தங்கியிருந்த வீட்டை வந்தடைந்தார்.

அங்கு வாசலில் இருந்த ஒரு சாதுவிடம், ''நரேன் தத்தா இங்கேதானே இருக்கிருர்?'' என்று கேட்டார் அசுவினி பாபு.

அந்தச் சாது இதனை மரியாதைக்குறைவாகக் கருதி எரிச்சலுடன், ''இங்கே நரேன் தத்தா இல்லை. அவர் மரணமடைந்து எத்தனையோ காலமாகிவிட்டது. இங்கே சுவாமி விவேகானந்தர் தான் இருக்கிருர்'' என்ருர்.

Koviloor Digital Library

''எனக்கு விவேகானந்தர் தேவையில்லை. பரமஹம்ஸ தேவரின் நரேந்திரன்தான்வேண்டும்'' என்றார்.

உள்ளே இருந்த சுவாமிஜியின் காதுக்கு அது எட்டியது.

உடனே அவர், ''அவரை உள்ளே அழைத்துவாருங்கள்'' என்று உத்தரவிட்டார்.

அசுவினி பாபு உள்ளே வந்ததும் சுவாமிஜி சாய்மான நாற்காலியிலிருந்து எழுந்து அவருக்கு முகமன் கூறினர்.

அசுவினி பாபு சொன்னர்: ''குருமஹராஜ் என்னிடம் அவரது அருமை நரேந்திரனைக்கண்டு பேசும்படி பணித்தார். ஆனல் அப்போது நரேந்திரனுல் என்னிடம் அதிகம் பேசமுடியவில்லை. பதினுலாண்டுகள் கழிந்துவிட்டன. நரேந்திரனை மீண்டும் இப்போதுதான் காணமுடிகிறது. குருமஹராஜின் வார்த்தைகள் வீணுகா.''

சுவாமிஜி தாங்கள் இருவரும் முன்பு சந்தித்ததை நினைவுகூர்ந்து தம்மால் அவருடன் அதிகம் பேசமுடியாததற்குக் காரணம் கூறி, வருத்தம் தெரிவித்தார். பதினுலாண்டுகளுக்குமுன் ஒரு சில நிமிஷங்கள் தம்மைக் கண்டதை அவர் இன்னமும் — தினே தினே நூற்றுக்கணக்கானவர்களுக்குப் பேட்டியளித்துவரும் அவர் இன்னமும் — நினைவு வைத்திருக்கிறதைக்கண்டு அசுவினி குமார் அதிசயித்தார்.

அறிமுகப் படலமானபின் அசுவினி பாபு ஸ்ரீமத் விவேகானந்தரை சுவாமிஜி என்று விளிக்கலானர்.

உடனே சுவாமிஜி குறுக்கிட்டு, ''அதென்ன, 'சுவாமிஜி'? உங்களுக்கும் நான் 'சுவாமிஜி'யானது எப்போது? நான் இன்னமும் பழைய நரேந்திரநாதன்தான். குருநாதன் என்னை எந்தப்பெயரில் அழைத்துவந்தாரோ அது என்றும் எனக்கு அரும் செல்வமாகும். என்னை அந்தப் பெயரிட்டே அழையுங்கள்'' என்றார்.

இந்தியாவின் விமோசனம் அதன் மக்களின் மத உணர்வை வளர்ப்பதில்தான் உள்ளது என்று அசுவினி குமாரிடம்கூறிய சுவாமிஜி, ''மதம் என்பதுதான் நமது ஜீவனசாரம். மக்கள் சீர்திருத்தங்களை ஏற்கவேண்டுமெனில் அவை மதத்தின் மூலமே வந்தாகவேண்டும். இதனை மாற்ற முற்படுவது, கங்கையை மீண்டும் அதன் ஹிமாலய உற்பத்திஸ்தானத்துக்குத்தள்ளி அதனை வேறு மார்க்கத்தில் பிரவகிக்க செய்வதுபோல் அசாத்தியமான காரியமேயாகும்'' என்றார். ''குருமஹராஜும் இதைத்தானே கூறினர்?'' என்று கேட்டு தமது கருத்து அவரிடமிருந்து பிறந்தது எனத் தெளிவுபடுத்தினர்.

Koviloor Digital Library

''அப்படியானுல் காங்கிரஸின் சீர்திருத்தத்தில் உங்களுக்கு நம்பிக்கை யில்லையா ?'' என்று கேட்டார் அசுவினி பாபு.

அப்போது காங்கிரஸ் ஸ்தாபனமானது பொதுமக்களுடன், அதிகத் தொடர்பின்றி அறிவாளிகளின் அவையாகவே இருந்து வந்தது. எனவே சுவாமிஜி, ''எனக்கு நம்பிக்கையில்லை. என்ருலும் ஏதும் செய்யாமலிருப்பதைவிட எதையேனும் செய்வது சிலாக்கியமானதுதான். தூங்குகிற தேசத்தை தட்டி எழுப்புவதற்காகச் செய்யும் எல்லாக் காரியங்களும் நல்லதுதான். ஆனுல் மக்களுக்குக் காங்கிரஸ் என்ன செய்கிறது ? ஏதோ சிலர் கூடி தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டால் விடுதலை கிடைத்துவிடும் என்று நினைக்கிறீர்களா ! எனக்கு இதில் நம்பிக்கை இல்லை. முதலில் மக்களை விழிப்புறச் செய்யவேண்டும். அவர்களுக்குப் போதிய உணவு கிடைக்கச் செய்யவேண்டும். அதன்பின் அவர்கள் தாங்களே விடுதலைக்காகப் போராடுவார்கள். மக்களுக்காகக் காங்கிரஸ் ஏதேனும் செய்யுமாயின் அதற்கு எனது ஆதரவு உண்டு. ஆங்கிலேயர்களின் நல்ல இயல்புகளை ஸ்வீகரித்துக் கொள்ள அது தயங்கக்கூடாது'' என்ருர்.

''மதம் என்று நீங்கள் சொல்லும்போது எந்தத் தனியொரு சம்பிரதாயத்தையும் குறிப்பிடுகிறீர்களா ?'' என்று வினவினுர் அசுவினி பாபு.

''அல்ல. குருமஹராஜ் ஏதோ ஒரு சம்பிரதாயம்தான் உண்மை மதம் என்று சொன்னுரா, என்ன ? என்ருலும் வேதாந்தம்தான் மற்ற எல்லாப் பிரிவுகளையும் பிணைக்கிறது என்று அவர் கூறினுர். இதனுல்தான் நான் உபநிஷதங்களை உபதேசிக்கிறேன். என் மதத்தின் சாரம் பலம். உபநிஷதத்தையோ கீதையையோ, பாகவதத்தையோ போதித்தபோதிலும் இதயத்துக்குப் பலம் ஊட்டாத மதம் என்னைப் பொறுத்தமட்டில் மதமே அல்ல.

''பலமே மதம்; பலத்தில் பெரியது எதுவுமில்லை''. சுவாமிஜி 'பலம் பலம்' என்று வலியுறுத்தியது வெறும் உடற்பலத்தையோ மிருகபலத்தையோ அல்ல என்பதையும், எதற்கும் அயராத ஆன்மிக பலத்தோடு இணைந்த ஆக்கத்திறனுக்கு உதவும் தேகபலம் தான் அவர் விரும்பியது என்பதையும் நாம் சொல்லவும் வேண்டுமா ?

''நான் என்ன பணி புரியவேண்டும் என்பதைப் பணியுங்கள்'' என்று கேட்டுக்கொண்டார் அசுவினி குமார்.

மனிதனை மனிதனுக்குகிற — அதாவது மனிதன் நன்னடத்தையில் உயரச்செய்கிற — கல்வியைப் பரப்புமாறு அசுவினி பாபு

Koviloor Digital Library

வுக்குக் கூறினர் சுவாமிஜி. கல்வியின்மூலம் வங்காள இளைஞர்களின் எலும்பானது இடியால் செய்தது போலாகவேண்டும்; இந்த வஜ்ராயுதத்தால்இந்தியாவின் அடிமைத்தனத்தைநொறுக்கவேண்டும் என்று ஆவேசமாகப் பேசினர் தேசபக்தராகிய சுவாமிஜி.

''தீண்டாதாரிடம் செல்லுங்கள்; சக்கிலியரிடம் செல்லுங்கள்; தோட்டிகளிடம் செல்லுங்கள்; இவர்கள்போன்ற எல்லாரிடமும் செல்லுங்கள். 'நீங்கள் இந்த நாட்டின் ஆத்மா. உங்களுக்குள் உலகத்தையே புரட்டக்கூடிய அநந்தமான சக்தி உள்ளது. நிமிர்ந்தெழுங்கள்! தளைகளை முறித்துத் தள்ளுங்கள்! உலகம் முழுவதும் உங்களைக் கண்டு அதிசயிக்கும்!' என்று அவர்களிடம் கூறி உசுப்புங்கள், அவர்களுக்காகப் பள்ளிகள் பல திறவுங்கள்'' என்று பேசிக்கொண்டேபோனர் சுவாமிஜி.

சுவாமிஜியிடமிருந்து விடைபெறுமுன் அசுவினி பாபு தமது துணிவையெல்லாம் வரவழைத்துக்கொண்டு அவரிடம் கேட்டார் — ''சென்னையில் சில பிராம்மணர்கள் உங்களை நான்காம் வருணத்தவர் என எண்ணி உங்களுக்கு வேதம் போதிக்க அருகதையில்லை என்று கூறினர்களாமே! அப்போது நீங்கள் 'நான் நாலாம் வருணத்தவன் நீங்கள் பஞ்சமரிலும் தாழ்ந்தவர்கள்' என்று சினந்து கூறினர்களாமே! இது வாஸ்தவமா?'' என்று.

''ஆம்'' என்றார் சுவாமிஜி.

''அது சரி, கோப தாபங்களையெல்லாம் அடக்கவேண்டிய மதகுருவாகிய தாங்கள் இப்படிச் சீற்றம் கொண்டிருக்கலாமா?''

''நான் செய்தது சரி என்று யார் சொன்னது? நான் அப்படிச் சொல்லவே இல்லையே! அவர்களுடைய திமிர்பிடித்த போக்கு என் சமநிலையைக் குலைத்துவிட்டது. அப்போது வாயில் வந்ததை அப்படியே கொட்டிவிட்டேன். ஆனல் அது நியாயமானதுதான் என்று நான் வாதிடவில்லை.''

அசுவினி குமார் சுவாமிஜியை ஆரத் தழுவிக்கொண்டார். ''இன்றைக்கு நீங்கள் என்றையும்விட என் மதிப்பில் உயர்ந்துவிட்டீர்கள். நீங்கள் உலகைவென்ற வீரராயிருப்பது எப்படி, குருமஹராஜ் உங்களை அப்படி நேசித்தது ஏன் என்பதெல்லாம் இப்போதுதான் எனக்குப் புரிகின்றன'' என்றார்.

சால்பிற்குக் கட்டளை யாதரை எனின் தோல்வி
துலை அல்லார் கண்ணும் கொளல்

என்ற தமிழ் மறையைத்தான் சுவாமிஜி நிரூபித்துவிட்டார். தம் குற்றம்கண்டு அதை ஒப்புக்கொள்ளும் மனநிலை எளிதில் கிடைக்கக்கூடியதா?

Koviloor Digital Library

அத்தியாயம்—29

சிவசக்தியுடன் சகவாழ்வு

அல்மோராவிலிருந்து சுவாமிஜியும் அன்பர்களும் காஷ்மீரத்துக்குப் புறப்பட்டார்கள். பாதி மனிதனும் பாதி குதிரையும், பாதி மனிதனும் பாதி ஆடுமான பல விசித்திரப் பிறவிகள் வாழ்வதாகச் சொல்லப்படும் விநோதப் பகுதிகளைக் கடந்துவந்தனர். தாமே அங்கு ஆவிபோன்ற உருவங்களைப் பார்த்திருப்பதாக சுவாமிஜி தெரிவித்தார்.

அழகுப் பொழிலான பிம்தாஸ் என்ற ஏரிக்கரையில் தங்கியிருந்தபோது சுவாமிஜி வேதத்திலுள்ள துதிப்பகுதிகள் சிலவற்றையும், ஸுர்தாஸ் முதலிய பக்தர்களின் பாடல்களையும் ஆங்கிலத்தில் ஆக்கினர். மூலக்கிரந்தத்தைத் தமக்கே உரிய உணர்ச்சியுடன், அவற்றின் ரஸம் வெளிப்படுமாறு வரி வரியாக கானம் செய்துவிட்டு அவ்வப்போது அவற்றுக்கு ஆங்கில உருவம் தந்தார் சுவாமிஜி. சுவாமிஜியின் காவிய உள்ளத்துக்கும், புலமைக்கும் அவை சான்ருக விளங்குகின்றன.

தேவதாரு வனங்கள் பின்தங்கின. பாஞ்சாலம் முன் வந்தது.

ராவல்பிண்டி, முர்ரீ மார்க்கமாக ஸ்ரீநகரத்துக்குப் பயணம் தொடங்கிற்று. செல்கிற வழியில் சுவாமிஜி ஹிந்து மதத்தில் புகுந்துவிட்ட பல அநாகரிகச் சடங்குகளை மேநாட்டுச் சிடர்களுக்கு எடுத்துச் சொல்லிக் கண்டனம் செய்துவந்தார். முன்பு அவர்கள் ஹிந்துக்களாகத் தயங்கியபோது அம்மதத்தின் பெருமைகளையேகூறி, அவர்கள் கூறும் கண்டனங்களுக்கும் ஆத்திரத்தோடு விடைகூறிவந்தார். இப்போதோ அவர்கள் ஹிந்துக்களாகிவிட்டார்கள் என நம்பியதேபோல் அவர்களிடம் எதையும் ஒளிக்கலாகாது என்ற விசுவாசத்துடன் மதத்தின் இருட்பகுதிகளையும் அவர்கள் முன் விரித்தார்.

ஜீலம் பள்ளத்தாக்கில் பிரயாணம் நடக்கும்போது சுவாமிஜி பிரம்மவித்தையும் பிரேமையும் எப்படி இணைந்திருக்கின்றன என்பதை விளக்கிவந்தார். அவருடைய பள்ளித்தோழர் ஒருவர் வைத்தியர்களுக்குப் புரிபடாத ஏதோ ஒரு நோயில் துன்பப்பட்டுக்கொண்டிருந்தாராம். துன்பம் தீர மதத்துக்குத் திரும்பி வைராக்கியத்தைப் பயில ஆரம்பித்தார் அவர். சுவாமிஜி யோகியாகி யிருக்கிருர் என அறிந்து அவருக்கு அழைப்பு விடுத்தார். சுவாமிஜி சென்ருர். அன்புடன் அவரது படுக்கையருகே அமர்ந்தார். ''எவன் தன்னைப் பிராமணனிடமிருந்து பிரிதாக நினைக்

Koviloor Digital Library

கிருனே அவனையே பிராமணன் வெல்கிறன்; எவன் தன்னை க்ஷத்திரியனிடமிருந்து பிரிதாக நினைக்கிருனே அவனையே உலகம் வெல்கிறது'', என்ற உபநிஷத மந்திரத்தைக் கூறினர்.

எந்த மருந்தும் செய்யாததை அந்த மந்திரம் செய்தது. உடனேயே நோயாளி தன்னுள் ஏதோ ஒரு சக்தி புகுந்து கொண்டதுபோல் உணர்ந்தார். தம்மைவிட்டு நோய் ஓடிவிட்டது போன்ற தெம்புடன் தெளிவுபெற்ருர். அது பிரம்ம சக்தியா, சுவாமிஜியின் பிரேமை சக்தியா?

இந்தச் சம்பவத்தைக்கூறிய சுவாமிஜி, ''நான் ஏதேதோ விசித்திரமாகப் பேசுவதாக உங்களுக்குத் தோன்றலாம். கோபத்துடன் பேசுவதாகத் தோன்றலாம். ஆனல் என் இதயத்தில் அன்பைத் தவிர வேறெதையும் பேச நான் நினைப்பதில்லை என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்'' என்று கூறினர்.

அன்பும் சிவமும் ஒன்று என்பதுதானே சாஸ்திரம்? அன்பைப்பற்றிப் பேசிய சுவாமிஜி அதன்பின் சில நாட்களுக்கு ஓயாமல் சிவத்தைப்பற்றியே பேசி வந்தார். பிள்ளைப் பிராயத்திலிருந்தே அவன் அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டிருந்தான். வயதாக ஆக பக்தியும் அதிகரித்தது. இப்போது பரமேசுவரனுக்கு உரிய ஹிமாலயத்திலே பக்தியும் ஹிமயபர்வதமாக ஓங்கி நின்றது. ஈசுவரனைப்பற்றிய கதைகளையும், தத்துவங்களையும் தமது சிடர்களுக்கு விளக்கினர். அன்பு, துறவு என்ற இரு மகத்தான லக்ஷியங்களும் இணைந்திருக்கும் இடமே அர்த்தநாரிசுவரன் என்ற அம்மையப்பன் என்று அழகாகக்கூறினர். ''சமவெளியில் பாயுமுன் கங்கை ஈசனின் ஜடாமகுடத்தில் சுழன்று சுழன்று வருகிருள் என்பதை இந்த இமயமலைச்சாரலில்தான் புரிந்துகொண்டேன். எல்லா நதிகளும் அருவிகளுமே மலைகளில் பெருகும்போது என்ன கோஷிக்கின்றன என்பது இப்போதுதான் எனக்குப் புரிகிறது. அவை 'ஹர ஹர' என்றே கூறிக்கொண்டிருக்கின்றன'' என்ருர்.

''என்ன இப்படியெல்லாம் பேசுகிறேன் என்று பார்க்கிறீர்களா? சிவபெருமான்தான் தெய்வங்களில் பெரிய மகாதேவன். சாந்தன்; சுத்தன்; மௌனி. மகாதேவனின் மகாபக்தன் நான்'' என்று பெருமை பெருமையாகச் சொல்லிக்கொண்டார்.

பலமுல்லா வழியாக, சுற்றி சுழன்றுவரும் கணவாய்களையும், புராதன நினைவுச்சின்னங்களையும் கடந்துவரும்போது ரம்மியமான பல அநுபவங்கள் அவர்களுக்குக் கிடைத்தன. கூட்டம் கூட்டமாகப் பாடிக்கொண்டே வேலைசெய்யும் விவசாயிகள், காட்டிலும் மேட்டிலும் கடுந்துயரைப் பொருட்படுத்தாது செல்லும் யாத்ரீகர்

Koviloor Digital Library

கள் இவர்களைக்கண்டு சாந்தி நிறைந்தனர். இயற்கை அழகுக்குத் தான் அங்கு சொல்லவே வேண்டாமே!

எந்நாட்டில் இருந்தாலும் அந்நாட்டவராகிற பான்மை சுவாமிஜிக்கு உண்டல்லவா? இப்போது அவர் காஷ்மீரியாகவே மாறி அந்த ராஜ்யத்துக்கே பிரசித்திபெற்ற தேநீர் குடுவையி லிருந்து தேனீரைப் பருகினுர்; பழக் கூழை ரசித்துச் சாப் பிட்டார். பணியாள் யாரையும் அழைத்துவராததால் சுவாமிஜி யே தம் காரியங்கள் அனைத்தையும் செய்துகொள்ளவேண்டியிருந் தது. மிகவும் 'குஷி'யுடன் இந்தக் காரியத்தைச் செய்து கொண்டே சுவாமிஜி தமது கோஷ்டியில் மற்றவர்களின் சௌகரி யத்தையும் பார்த்து சுசுரூஷை செய்தார்.

டுங்கா எனப்படும் படகுவீடுகளில் பிரயாணம்செய்து ஸ்ரீநக ரத்தை அடைந்தனர். மறுநாள் தமது சீடர்களை ஜிலம் நதி மார்க்கமாக வெகுதூரம் அழைத்துச் சென்ருர். மிகவும் முக்கி யத்துவம் வாய்ந்த ஒருவரைக் காண்பதற்காக. அவர் யோகியோ, சாதுவோ, அரசரோ, தனிகரோ, வித்துவானே அல்ல. குடியான ஸ்திரீ ஒருத்திதான். இவளை சுவாமிஜி முந்திய ஆண்டு இமய மலைப் பகுதியில் திரிந்தபோது கண்டதுண்டு. அவளைப்பற்றிப் பலமுறை குறிப்பிட்டுள்ள அவர், கல்கத்தாவில் பொதுமேடைப் பிரசங்கம் ஒன்றில்கூட அவளைப் புகழ்ந்திருக்கிருர்.

அப்படி அவள் என்ன அரிய சாதனை புரிந்திருந்தாள்?

சுவாமிஜி சென்ற வருடம் அவளிடம் நீர் வாங்கிப் பருகினுர்.

''நீ எந்த மதம் தாயே?'' என்று கேட்டார்.

''ஆண்டவன் புண்ணியத்தில் நான் ஒரு முஸல்மான்'' என்று அவள் பெருமிதத்தோடு கூறினுள்.

''நான் மஹாதேவனின் மஹா பக்தன்'' என்று சொல்லும் போது எவ்வளவு பெருமிதப்பட்டாரோ அத்தனை பெருமிதம் அந்த மாதின் வார்த்தையிலும் செறிந்திருந்தது.

தனது மதத்தைப்பற்றி இப்படிப் பெருமைப்பட்ட இன் ஞெருவரை சுவாமிஜி கண்டதில்லை. அதனுல்தான் நம்பிக்கைக்கு ஓர் எடுத்துக்காட்டாக அவளைக் கூறிவந்தார்.

கம்பத்தக் கொல்லையில் மரமொன்றின் கீழமர்ந்து அவள் கம்பளி நெய்துகொண்டிருந்தாள். அவளுடைய மாற்றுப் பெண் களும் குழந்தைகளும் அவளுக்கு உதவிபுரிந்துகொண்டிருந்தார் கள். அந்தக் காட்சியே ஒரு காஷ்மீரச் சித்திரமாகத்தானிருந்தது.

தனது தொழிலில் முயன்றுகொண்டே தெய்வத்தை மறவா திருந்த அந்த முஸ்லீம் மாதரசி சுவாமிஜியையும் அவரது சீடர் களையும் அன்போடு வரவேற்று உபசரித்தாள்.

Koviloor Digital Library

1898-ம் ஆண்டு ஜூன் 21-ந் தேதியிலிருந்து ஜூலை 25-ந் தேதிவரை ஸ்ரீநகரத்தை சுற்றியும்; ஜீலம் நதியிலும் சஞ்சரிக்கும் போது சமயம், சரித்திரம், இலக்கியம் எல்லாம் அற்றுப்படி யாயின. இப்படி ஒருவாரம் ஆனபின் தனிமையின் சாரத்தைக் காண சுவாமிஜி விரும்பினார்.

அப்படி ஏகாந்தத்தில் ஏக வஸ்துவுடன்ஒன்றியிருந்துவிட்டுத் திரும்பும்போது அவர் பேசுவதிலே ஒரு தனி கம்பீரம் இருக்கும். ''உடம்பைப்பற்றி நினைப்பதுகூட பாபம்'' என்பதுபோலப் பேசுவார். சமூக வாழ்வு என்பது தாங்கமுடியாத ஒன்றாக அவருக்குத் தோன்றும். ''காமினியைப்பற்றிக் காந்தன் நினைத்துக்கொண் டிருப்பதுபோல் அவர் பஸ்மம் பூசித் தனித்துத் திரியும் பரிவி ராஜகரைப்பற்றியும், குகையில் வாழும் யோகியைப் பற்றியும் நினைத்துக்கொண்டிருந்தார்'' என்கிறாள் நிவேதிதை. எந்த நிமிஷமும் அவர் தங்களைவிட்டு நிரந்தரமாகப் பிரிந்து எங்கேனும் சென்றுவிடக்கூடும் என்று அவளும் அவளுடன்வந்தவர்களும்கருதிய சமயமாம் அது. ''அவரும், அவரைச் சார்ந்திருந்த முறையில் நாங்களும் பரம்பொருளின் திருஉள்ளக்கருத்து என்ற கங்கையில் வைக்கோலாக மிதந்தோம். அது எந்த நிமிஷமும் அவருக்கு மோனமாக சாக்ஷாத்காரமளிக்கும் என்பதுபோன்ற சமயம் அது. அவருக்கு உலகவாழ்க்கை என்பது எந்தக் கணமும் முடிவடைந் திருக்கக்கூடும்'' என்கிறாள் நிவேதிதை.

திட்டம் ஏதுமில்லாமல் திவ்யமாதாவின் சங்கல்பத்திலேயே மிதந்துகொண்டிருந்தார் சுவாமிஜி. 'திட்டம் என்பது இருக்கு மிடத்தில் மதமே இருக்கமுடியாது' என்றுகூட ஒருமுறை அவளிடம் எரிச்சலுடன் கூறினார் அவர். அவதாரம் அது, இது என்பதெல்லாவற்றையும் அவரே மறந்து, அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்ற நம்பிக்கையில் ஆழ்ந்துவிட்டார் சுவாமிஜி. தனிமை, மௌனம் இவையே சுவாமிஜியின் கருத்தைக் கொள்ளை கொண்டிருந்தன. ''ஒரு மனிதன் இருபதாண்டுகள் தனியாக வாழ்ந்தால் புத்தி பேதலியாமல் இருக்கமுடியாது என்று நீங்கள் நினைக்கிறீர்கள். நாங்களோ ஒருவன் அவ்வாறு இருபதாண்டுகள் ஏகாங்கியாய் இருந்தாலொழிய பூரணமானவனாக முடியாது என நினைக்கிறோம்'' என்று தமது மேல்நாட்டுச் சீடர்களிடம் கூறினார் சுவாமிஜி.

* * *

பிருகிருதியின் சௌந்தரியம் அலைமோதும் சூழலில் அமைந் துள்ள தக்த்-இ-ஸுலைமான் ஆலயத்துக்கு சுவாமிஜி தமது சீடர் களை அழைத்துச் சென்றார். ''ஆலயம் எழுப்புவதில் ஹிந்துவுக்கு

Koviloor Digital Library

உள்ள ரஸனையைப் பாருங்கள்! என்ன மகத்தான இயற்கைக் காட்சி! இரண்டாயிரம் அடி உயரமுள்ள முகட்டின் உச்சியில் ஒரு கோயில்! காஷ்மீரம் முழுவதையும் தக்த் ஆளுகிறது. முடிசூடிய ஒரு சிம்மம் படுத்திருப்பதுபோல் ஹரி பர்வதம் நீல நீர்ப் பரப்பனின்று உயர்ந்து நிற்கிறது. தனது பாதத்தில் ஒரு பள்ளத்தாக்குடன் மார்த்தாண்டர் ஆலயம் விளங்குகிறது'' என்றெல்லாம் ஆர்ப்பரித்தார்.

ஜூலை மாதம் மூன்றும் தேதி. அமெரிக்கரல்லாத ஒரு சீடரைமட்டும் அழைத்துக்கொண்டு சுவாமிஜி எங்கோ ரகசியமாகச் சென்றார். பிராம்மண குலத்தைச் சேர்ந்த ஒரு தையற்காரரிடம் அமெரிக்க கொடியின் அமைப்பை விளக்குமாறு அந்தச் சீடரைக் கேட்டுக்கொண்டார். அதன்மீது அந்தத் தையல்காரர் ஏதோ தம்மால் முடிந்த அளவுக்குப் பட்டைகளும் நட்சத்திரமும் கொண்ட அமெரிக்கக் கொடியொன்றைத் தயாரித்தார். படகு ஒன்றில் கொடியேற்றம் நடைபெற்றது.

மறுநாள் காலை அந்தப் படகில்தான் தமது அமெரிக்க சிஷ்யர்களுக்குத் தேநீர் விருந்து நடத்தினர்.

ஜூலை நாலாம் தேதி அமெரிக்க சுதந்திர தினமல்லவா?

இவ்வளவு நினைவாக, தங்களிடமே சொல்லாமல் சுவாமிஜி தாய்நாட்டை நினைவூட்டியதைக்கண்டு அந்தச் சீடர்கள் உள்ளம் உருகிப்போனார்கள். ஆகா, சுவாமிஜியைப்போல் மரியாதை தெரிந்தவர் யார் இருக்கப்போகிறார்கள்?

அமெரிக்க சுதந்திர தினத்தைக்குறித்து ஓர் அருமையான ஆங்கில கவிதையையும் சுவாமிஜி இயற்றிப் பாடினர். விடுதலை நாள் என்றவுடன் இயற்கை முழுவதிலும் சோபை பொலிவதைக் கூறும் இப்பாடலில் ''உனை அன்புடன் காண ஏரியும் தனது ஆயிரமாயிரம் அல்லிக் கண்களை அயர்த்திக்கொண்டது'' என்பது போன்ற அற்புதமான உத்பிரேக்ஷைகளைக் காணலாம். சுதந்திரம் சிந்தும் சூரியனை நோக்கி ''நண்பகலாக நீ ஒளி விடு. மக்கள் தமது தளை தீர்ந்து, கொப்புளிக்கும் களிப்புடன் தங்கள் வாழ்க்கையைப் புதுப்பித்துக்கொள்ளட்டும்'' என்று கானம் செய்தார்.

அமெரிக்க அரசியல் சுதந்தரத்தைமட்டும் அவர் மனத்தில் கொண்டிருக்கவில்லை. சம்சாரத்திலிருந்து விடுதலைபெற்று வீடு பேறு பெறுவதே உள்ளுறை பொருளாகப் பாடினர்.

சரியாக நான்கு ஆண்டுகளுக்குப்பின் அதே ஜூலை நான்காம் நாள்தான் சுவாமிஜி 'கொப்புளிக்கும் களிப்புடன்' உடலிலிருந்து விடுதலை பெற்றார்!

Koviloor Digital Library

ஸ்ரீநகரிலிருந்து யாத்திரை கோஷ்டி புறப்பட்டது. போகிற வழியில் சந்நியாசத்தைப்பற்றி வெகுவாகப் புகழ்ந்து பேசிவந்தார் சுவாமிஜி. ''மின்மினிக்கும் கதிரவனுக்கும் எவ்வளவு வித்தியாசமோ அவ்வளவு வித்தியாசம் கிருஹஸ்தனுக்கும் சந்நியாசிக்கும்'' என்ற ரீதியிலேயே பேசிவந்தார்.

ஜூலை பத்தாம் தேதி யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் கையில் கால்காசு இல்லாமல் அமரநாதம் என்ற புண்ணியம் பொருந்திய சிவஸ்தலத்துக்குக் கிளம்பிவிட்டார் சுவாமிஜி. ஆனால் அப்போது வெயில் அதிகமாயிருந்து ஹிமாலயப் பனி முகடுகள் உருகிக் காட்டாருகப் பெருகியபடி யிருந்தபடியால் சுவாமிஜியால் அமரநாதத்தை அடைய முடியவில்லை. ஐந்து நாட்களில் திரும்பிவிட்டார் அவர்.

மறுநாள் பக்தியைப்பற்றியும், சிவபெருமான் — உமையன்னை, ராதா-கிருஷ்ணன் பற்றியும் நேரம் பொழுது தெரியாமல் பேசிக்கொண்டேயிருந்தார். அவருக்கு மீண்டும் மீண்டும் உணவு வேளை தாண்டிப்போவதை நினைவுறுத்தவேண்டியிருந்தது. ''ஒருவனுக்கு இவ்வளவு பக்தி இருக்கும்போது உணவினால் அவனுக்கு ஆகவேண்டியது என்ன ?'' என்று அலுத்துக்கொண்டே எழுந்துவந்தார் சுவாமிஜி.

ஜூலை பதினெட்டாம் தேதி இஸ்லாமாபாத் சென்று சேர்ந்தார்கள்.

மறுநாள், ஜீலம் நதிக்கரையருகே வனாந்தரத்தில் சேற்றுத் தடாகத்தில் அழுந்திக்கிடந்த பௌத்த ஆலயத்தைப் பார்வையிட்டார்கள். அங்கு ஒரு தொல் பொருள் நிபுணராகவே விளங்கிய சுவாமிஜி, ஆதிகாலம், பௌத்தகாலம், ஹிந்துகாலம் முஸ்லீம்காலம் என்று நான்காகப் பிரிந்த காஷ்மீர சரித்திரத்தின் அந்த நான்கு பகுதிகளுக்கும் இந்த ஆலயத்தில் உள்ள சான்றுகளை விளக்கினார்.

அங்கிருந்து படகில் திரும்பும்போது, வேத மதத்துக்கும் கத்தோலிக்கக் கிறிஸ்துவ மதத்துக்கும் பல ஒற்றுமைகள் இருப்பதாகவும், பௌத்த மதத்தின்மூலம் கிறிஸ்துவ சமயமானது ஹிந்துக் கருத்துக்களைப் பெற்றது என்றும் கூறினார். தொழுகை, நிவேதனம், பிரஸாதம் முதலிய கத்தோலிக்க சம்பிரதாயங்கள் வேதத்தின் வழி வந்தவையே என்று கூறினார். தலையை மழித்துக் கொள்வதென்பதும் பௌத்த காலத்துக்கு முற்பட்டது; இதுவும் கிறிஸ்துவத் துறவிகளால் மேற்கொள்ளப்பட்டது என்றார்.

கிரீட்டில் தாம் கண்ட கனவுக்குப்பின் இயேசுநாதர் உண்மையில் வாழ்ந்தவரா என்பதில் தமக்குச் சிறிதே ஐயம் ஏற்பட்டுள்ள

Koviloor Digital Library

தாகக் கூறினர். ''என்றாலும் அவரது வாழ்க்கையில் உயிருள்ள ஒருவரை நினைவூட்டும் உயிருள்ள இரு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. நெறி பிறழ்ந்த அந்த ஒருத்தி கருணைக்குப் பாத்திரமானது; அப்புறம் அந்த கிணற்றங்கரைப் பெண். பின்னவளைப்பற்றிய நிகழ்ச்சி இந்திய வாழ்க்கையோடு எவ்வளவு அற்புதமாகப் பொருந்தியுள்ளது! தண்ணீர் சேந்த ஒருத்தி கிணற்றடிக்கு வருகிறாள். அங்கு ஒரு சாது உட்கார்ந்திருப்பதைப் பார்க்கிறாள். அவர் நீர் கேட்கிறார். அவள் ஊற்றுகிறாள். பிறகு அவர் போதிக்கிறார். அவளது எண்ணங்களைச் சிறிது படிக்கிறார் ஆனால் ஒரு வித்தியாசம். அவள் கிராமத்தவரை எல்லாம் அழைத்துவரப் போகும்போது நம்முடைய இந்திய சாதுவானால் காத்துக்கொண்டிருக்கமாட்டார். நடுக்காட்டு நடைபோட்டிருப்பார்'' என்றார்.

புத்தரைப்பற்றி பேசிய சுவாமிஜி, ''உலகில் வாழ்ந்தவர்களில் அவரைவிடப் பெரியவர் கிடையாது. தமக்கென ஒரு மூச்சுக் காற்றையும்கூட அவர் இழுத்துக்கொண்டது கிடையாது. எல்லாவற்றுக்கும் மேலாக அவர் தமக்கு வழிபாடு கோரவில்லை. 'புத்தர் என்பது மனிதரல்ல; அது ஒரு நிலை. நான் கதவைக் கண்டு பிடித்துவிட்டேன், அதன் வழியே எல்லாரும் பிரவேசியுங்கள்' என்றார் அவர்'' எனப் பாராட்டினர்.

அவந்திப்பூர், விஜ் விஹாரா முதலிய புராதனப் புகழ் வாய்ந்த தலங்களைப் பார்த்துக்கொண்டு சுவாமிஜியும் சீடர்களும் ஜீலம் நதிக்கரையில் பிரயாணம் செய்துகொண்டிருந்தனர். மலைமாருதம்போன்ற திண்மையும், மலயமாருதம்போன்ற மென்மையுமாகப் பலப்பல விஷயங்களை சுவாமிஜி விளக்கிவந்தார். 'பாபத்தின் உருவகமான சாத்தான் ஈசுவர ஆக்ஞைக்கு வேறாகச் செயல்படும் ஒருவனாகக் கருதப்படுகிறான். ஹிந்துமதத்தில் அப்படிப்பட்ட இடுமை கிடையாது. இந்தியாவில் புண்ணியம் பாபம், வித்யை அவித்யை இரண்டையும் கடந்துதான் சத்தியத்தை அடையவேண்டும்'' என்றார்.

இந்திய மறுமலர்ச்சிபற்றிச் சிந்தித்து, ''பாரதத்தின் தேசிய வாழ்வுக்கு அடிப்படை தியாகம். அதன் லக்ஷியம் சேவையும் முக்தியும்'' என்றார்.

அவரது எண்ணக்கடலில் உதித்த நித்திலங்களை எல்லாம் இங்கு தரமுடியவில்லை. எத்தனையோ துறைகளைப்பற்றி அருள் மொழியால் கூறிவந்தார். தமது மேல்நாட்டுச் சிஷ்யர்களைப்பார்த்து, ''உங்கள் இனம் துயரத்தை வழிபடுகிறது. மேல்நாட்டில் சமூக வாழ்வு என்பது மேல் பரப்பில் சிரிப்பொலியாக இருக்கிறது. உள்ளே அது புலம்பலாக இருக்கிறது. அது தேம்பியழுவதிலேயே

Koviloor Digital Library

முடிகிறது இங்கோ வெளிப்பார்வைக்கு எல்லாம் துயரமாக வும், விசனமாகவும் இருக்கிறது'' என்ருர்.

தலைவனுக்கு இருக்கவேண்டிய குணங்களைப்பற்றிப் பேசும் போது, ''ஒரு மனித வாழ்வில் ஒருவனைத் தலைவனுக ஆக்க முடியாது. அவன் தலைமைக்காகவே பிறந்திருக்கவேண்டும். ஸ்தாபனம் அமைப்பதிலோ, திட்டம் தீட்டுவதிலோ சிரமம் ஏதும் இல்லை. மிகவும் பேதகமுள்ள பலதரப்பட்ட மக்களை அவர்களின் பொதுவான கருத்துக்களைக்கொண்டு ஒன்றுசேர்ப்பதிலேயே தலைவனுக்கான உண்மையான சோதனை உள்ளது. இதனைத் தானறியாமல் தன் இயல்பாகத்தான் செய்யமுடியுமே அன்றி, முயற்சியின்மீது செய்ய இயலாது'' என்ருர்.

விவேகானந்த சுவாமி அன்றி தலைவனைப்பற்றி இப்படி வேறு யார் பேசமுடியும்?

அவ்வப்போது சுவாமிஜி குறும்புத்தனமாகவும், குழந்தைத் தனமாகவும் நடந்துகொள்வதுண்டு. ''உலகுக்கெல்லாம் ஞானு சாரியனுக உள்ள நீங்கள் இப்படி நடந்துகொள்ளலாமா?'' என்று சிஷ்யர்கள் கேட்டால், '' நான்தான் சொன்னேனே ஹிந்துக்களின் அடிவாரத்தில் ஆனந்தமே உள்ளது என்று. நாங்கள் ஆனந் தத்தின் குழந்தைகள்; பிரகாசத்தின் குழந்தைகள்'' என்பார்.

இஸ்லாமாபாத்தில் ஆப்பிள் தோப்பு ஒன்றில் புல்தரையில் சுவாமிஜியும் சிடர்களும் அமர்ந்திருந்தார்கள். அப்போது சுவாமிஜி தமது வழக்கத்துக்கு விரோதமாகத் தம்முடைய மகிமையைத் தாமே திடீரென்று எடுத்தியம்பிவிட்டார்! இரண்டு கூழாங்கற்களை கையில் எடுத்து உருட்டிக்கொண்டே பேசினுர் அவர். ''சாவு என்னை நெருங்கிவரும்போது எல்லாம் பலவீனமும் மறைந்துவிடுகிறது. எனக்கு அச்சமில்லை; ஐயமில்லை; புறப் பொருட்களைப்பற்றிய எண்ணமும் இல்லை. சாவதற்கு என்னைச் சுறுசுறுப்புடன் தயார் படுத்திக்கொள்கிறேன்'' இப்படிப் பேசி வந்தவர் கூழாங்கற்களை ஒன்ருேடொன்று தட்டி, ''நான் இதைப் போலத் திடமாக இருக்கிறேன்; ஏனென்ருல் நான் ஆண்டவனின் பாதங்களை தொட்டேவிட்டேன்'' என்ருர்.

மரணத்தின் தலைவாயிலில் தாம் மகிழ்ச்சியுடன் நின்ற பல சம்பவங்களை சுவாமிஜி விரித்துக்கொண்டிருந்தார்.

அப்போது கிராமத்தினர், கையை வெட்டிக்கொண்ட ஒரு குழந்தையை சுவாமிஜியிடம் தூக்கி வந்தனர். அவர் எல்லா ருக்கும் உரியவராயிருந்தவராயிற்றே!

சுவாமிஜி மந்திரம், மாயம் செய்வார் என்று அவர்கள் எதிர்பார்த்தனரோ, என்னவோ! ஆனுல் அவர் அப்படியேதும்

Koviloor Digital Library

செய்யவில்லை. காயத்தைத் தாமே நீரால் கழுவினர், பிறகு துணியைக் கொளுத்திய சாம்பலை அதன்மீது தூவி ரத்தத்தை நிறுத்தி அவர்களை அனுப்பிவைத்தார்.

அவர் சீடர்களிடம் கடல்மடையாகப் பேசிவந்த விஷயம் இப்படித் தடைபட்டது.

ஜூலை இருபத்துமூன்றும் தேதி மார்த்தாண்டர் ஆலயத்தைத் தரிசித்துக் கொண்டு இருபத்தைந்தாம் தேதி அச்பல்லுக்குப் புறப்பட்டனர். வனதேவதைகளின் உல்லாஸ பவனமாக விளங்கியது அவர்கள் சென்ற வழி. அச்பல்லில் திறந்தவெளியில் அமர்ந்து எல்லாருமாக உண்டுகொண்டிருக்கும்போது சுவாமிஜி திடீரென்று சொன்னர்: ''இரண்டாயிரம் மூவாயிரம் யாத்ரீகர்கள் இப்போது அமரநாத்தில் சேர்வார்கள். அவர்களில் ஒருவனாக நானும் போக விரும்புகிறேன்'' என்றார்.

சிஷ்யர்களுக்கும் உடன்வர ஆசைதான். கடைசியில் சுவாமிஜி நிவேதிதையைமட்டும் அழைத்துச்செல்ல இணங்கினர். மற்ற ஐரோப்பிய சீடர்கள் பஹல்காம்வரையில் அவரோடுசென்று அவர் அமரநாதம் சென்றுவரும்வரையில் காத்திருப்பது என முடிவாயிற்று.

ஹிமாலயத் தொடரின் மேற்குப் பகுதியில் குன்றங்கள் சூழ்ந்து கொஞ்சும் பகுதியாக விளங்குவது அமரநாதம். இயற்கையின் எழிலும் இமயச் சிகரமாக உயர்ந்து நிற்கும் இடம் அது. 'இதய குகையில் வசிக்கும் சிம்மம் இருக்கப் பயமேன்' என்று ஆதிசங்கரர் பாடிய மஹாதேவன் அங்கு குகையில் எழுந்தருளியிருக்கிறான். அது காரணமாகவே பயம் என்பது இல்லாமல் ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் கரணம் தப்பினல் மரணம் என்கிற பனிப்பாறைகளைக் கடந்து அவனைக் காண வருகிறார்கள். அஷ்டபந்தனம்செய்த லிங்கம் அல்ல அங்கிருப்பது. பனியே இறுகி லிங்க ஆக்ருதியில் ஜ்வலித்துக்கொண்டிருக்கும் பரமபாவனமான க்ஷேத்திரம் அமரநாதம். சிவபக்தி சம்பன்னரான சுவாமிஜி தமது சீடருடன் அவ்விடத்துக்குப் புறப்பட்டுவிட்டார்.

நகரும் நகரம் எனச்சொல்லக்கூடிய அடியார்களின் கூட்டத்தோடு சுவாமிஜியின் கோஷ்டியும் சேர்ந்துகொண்டது. ஆம், 'நகரும் நகரம்தான்! நூற்றுக்கணக்கான யாத்ரீகர்கள் ஆங்காங்கே கூடாரம் அடித்துக்கொள்வார்கள். உடனே அந்த மலைப் பகுதியில் கடை, கண்ணி, சகலமும் முளைத்துவிடும். மறுநாள் காலை கூடாரமெல்லாம் இடம் பெயர்ந்துவிடும். கடைவீதியும் காணமல் போய்விடும். காணமல்போன கடைவீதி இடம் பெயர்ந்த கூடாரங்களிடை மீண்டும் முளைக்கும். காஷாயக்

Koviloor Digital Library

குடைபிடித்துச் செல்லும் சாதுக்கள், அவர்கள் மூட்டும் அக்கினி, மற்ற யாத்ரிகர்கள் சமையலுக்காக மூட்டும் தீ எல்லாமாகச் சேர்ந்து இமயமலைக்கே துவராடை பூணச்செய்ததுபோலத் தோன்றும். காலையில் தூய வெண்சங்கில் ஒலியை நிரப்பி அந்த மக்கள் சூரியனை எழுப்புவதிலிருந்து பக்தியும் அவர்கள் செல்கிற இடமெல்லாம் அவர்களைத் தொடர்ந்து செல்லும்.

ஸ்ரீராமகிருஷ்ண தேவரிடமிருந்து சுவாமிஜி பல பாடங்கள் கற்றிருந்தார். அவற்றில் ஒன்று ஆசாரம்.

மடத்தில் ஏதாவது சடங்கு என்றாலும் சாஸ்திரோக்தமாக சகல திரவியங்களையும் சேர்த்து, சின்னஞ்சிறு விஷயங்களில்கூட சம்பிரதாயத்தைக் கடைப்பிடிப்பார். மணையை எப்படிப்போடுவது, தீபத்தை எந்த திசைபார்த்து ஏற்றுவது, உண்ணும்போது எப்படி அமருவது என்பனவற்றையெல்லாம்கூட அணுவளவும் முறைதவறாது பின்பற்றுவார். கோயில் குளத்துக்குச் சென்றால் சகலவிதமான அநுஷ்டானங்களையும் முறைப்படி செய்வார்; எல்லா விரதங்களும் காப்பார். கிராமவாசியான ஒரு பெண் எப்படி நம்பிக்கையே உருவமாக நடந்துகொள்வாளோ அப்படி நடந்துகொள்வார். அறிவுவாதம், தத்துவவிசாரம் எல்லாம் அப்போது அவரைவிட்டுச் சென்றுவிடும். சிரத்தையே ஒரு மனித உருவம் தரிப்பதுபோல் புனித தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வார். நிவேதனப் பொருள்களைத் தவறாமல் வாங்கிச்சென்று செலுத்துவார். என்ன அவசரமானாலும் பிரதக்ஷிணம் புரியாமல் சந்நிதியில் பிரவேசிக்கமாட்டார். அக்ஷமாலையை உருட்டி ஜபம் புரிவது, சாஷ்டாங்க நமஸ்காரம் புரிவது இவையெல்லாம் அவரது க்ஷேத்திராடனத்தில் அவர் பின்பற்றும் அநுஷ்டானங்கள்.

புறவிஷயங்கள், என்றும் சடங்குகள் என்றும் நாம் பெரும்போக்காகச் சொல்பவற்றில் சுவாமிஜி எவ்வளவு ஈடுபாடு கொண்டிருந்தார் என்பது அவரது அமரநாத யாத்திரையின்போது நன்கு வெளியாயிற்று. அவர் ஆசாரமாகத் தயாரிக்கப்பட்ட உணவைத்தான் உண்டார்; அதுவும் ஒரேபோதுதான் உண்டார். முடிந்த மட்டில் மௌனமிருந்தார். இயன்றபோதெல்லாம் தனிமையை நாடி ஜபம் புரிந்தார்.

அமரநாதத்துக்குச் சென்ற நூற்றுக்கணக்கான யாத்ரிகர்களையெல்லாம் சுவாமிஜி மிகவும் கவர்ந்துவிட்டார். அவர்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் சாதுக்கள். முதலில் அவர்கள் சுவாமிஜியுடன் வந்துள்ள மேல்நாட்டவர்களை மிலேச்சர்களாகக் கருதி, அவர்கள் அமரநாதத்துக்கு வருவதை ஆட்சேபித்தனர். அவர்களது கூடாரத்துக்கு அருகிலே மேல்நாட்டவர்கள் கூடாரம்

Koviloor Digital Library

அமைத்துக்கொள்ளக்கூடாது என்று எதிர்ப்புத் தெரிவித்தனர். சுவாமிஜி அதைப் பொருட்படுத்தவில்லை. நாக சாது ஒருவர் சுவாமிஜியிடம் வந்து ''உங்கள் ஆற்றல் எங்களுக்குத் தெரியும்; ஆனால் அதை நீங்கள் வெளிப்படுத்துவது சரியல்ல'' என்றார். உடனே சுவாமிஜி மிகவும் அமெரிக்கையாகத் தமது கூடாரத்தை இடம் மாற்றிக்கொண்டார்.

அதிசயமாக, மறுநாளிலிருந்து மற்ற எல்லா சாதுக்களும் சுவாமிஜிக்கு முதலிடம் அளிக்கத் தொடங்கினார்கள். சுவாமிஜி யின் கூடாரம்தான், தினந்தோறும் ஒவ்வோரிடத்தில் முளைக்கும் அந்த சந்நியாச நகரத்தின் தலைமையான இடத்தில் இருக்கும்.

நாளாவட்டத்தில் மற்ற சாதுக்கள் சுவாமிஜியை மொய்த் துக்கொண்டு அவரோடு வாதித்தும், அவரிடமிருந்து உபதேசம் பெற்றும் அவருக்கு மிகவும் உற்றவராகிவிட்டனர். மற்ற சிஷ்யர் கள் பிரிந்த பின்னும் உடன்வந்த சகோதரி நிவேதிதை அவர்கள் எல்லாருடைய அன்பையும் பெறலானாள்.

யாத்திரை கோஷ்டியுடன் ராஜாங்கரீதியில் ஒரு அதிகாரி வருவதுண்டு. சுவாமிஜி சென்ற ஆண்டு முஸ்லீம் தாசில்தார் ஒருவர் அந்தப் பொறுப்பைப் பெற்றிருந்தார். அவரும் அவரது உதவியாளர்களும் சுவாமிஜியின் உரைகளைத் தவறாமல் கேட்டு வந்தனர். இம்மாதிரி முஸ்லீமைத் தம்மிடத்துக்கு அவர் அநு மதிப்பதும், அத்யாத்ம விஷயங்களைப் பேசுவதும்தான் மற்ற யாத்ரீகர்களுக்குப் புரியவில்லை.

புனித ஊற்றுக்கள் நிறைந்த பவானைத்தாண்டி ஆயர்கள் கிராமமாகிய பகல்காமை யாத்ரீகர்கள் அடைந்தனர். அம்பு போல் வடிவமுள்ள ஒரு மலைவாயின் அடிவாரத்தில், உறுமிக் கொண்டு புரண்டோடும் லிடார் ஆற்றங்கரையில் கூடாரப் பட் டணம் உருவாயிற்று. இங்கு ஏகாதசி விரதம் அநுஷ்டிக்கப் பட்டது.

சந்தனவரம் என்ற அடுத்த கிராமத்திலிருந்து பனிப்பாறை கள் தொடங்கின. ஆயிரமாயிரம் அடி உயரமுள்ள பனி முகடு களில் ஏறமுடியாமல் ஏறி, ஆடுகள் சென்ற வழியை பின்பற்றிச் சென்று பயங்கரமான விளிம்புகளைச் சில சமயங்களில் தடுமாற் றத்தில் அடைந்து, சுவாசத்துக்கும் சிரமப்பட்டு, பல்கிட்டுகிற குளிரில் பிரயாணத்தைத் தொடர்ந்தனர்.

பனி, பனி, பனி ஈசுவரனின் தூய்மையை அப்படியே உறைவித்துக்காட்டும் அந்தப் பனி நாற்புறமும் அடுக்கடுக்கான அரண்களாக அமைந்து ரஸிகக் கண்களையெல்லாம் பனித்துப் போகச் செய்தன. பதினெட்டாயிரம் அடி உயரத்துக்கு வந்தாகி

Koviloor Digital Library

விட்டது. அதோ ஐநூறு அடிகளுக்குக் கீழே அந்த வேதமலைக்கு அணிவித்த பூணூல்போல் தெரிந்தும் தெரியாமலும் ஓடுவது அன்று காட்டாருகக் கண்ட அதே விடார்தான்.

பஞ்சதரணி என்ற இடத்திலுள்ள ஐந்து ஓடைகளிலும் யாத்ரிகர்கள் முழுகினர். உள்ளத்தில் பக்திவெள்ளம் ஒரே தன்மையாக நிரம்பியபின் பனியைப்பற்றியும், பனி நதிகளைப் பற்றியும் என்ன கவலை? ஒரு ஆற்றில் குளித்துவிட்டு, ஈரத்துணி யுடனேயே — கனத்த பனிவாடை ஆடைகளை உடம்போடு உடம் பாகக் குளிரில் அழுத்துவதையும் பொருட்படுத்தாது பக்த ஜனங் கள் மற்ற ஆற்றுக்குச் செல்வர். இப்படியே வஸ்திரத்தை மாற்றாமல் ஐந்து ஆறுகளிலும் முழுகுவார்கள்.

அந்த பக்தியெல்லாம்தான் இன்றைக்கும் நாம் கஞ்சியோ கூழோ சாப்பிட்டுக்கொண்டு வாழ்வதற்குக் காரணம்.

சுவாமிஜியும், தமது ஆத்மிக மகள் என்று அவர் கூறிய நிவேதிதையின் கேலிக்குப் பயந்து, அவளுக்குத் தெரியாமலே ஒரு குறைவுமின்றி சம்பிரதாயங்களை அநுஷ்டித்தார்.

ஆகஸ்ட் இரண்டாம் தேதி!

ஆஹா, அதோ அமரநாதம்!

ஆனால் இதோ, எப்பேர்பட்ட செங்குத்தான பாறை! அதன் உச்சியை அடைந்தபின் கிடுகிடு பள்ளம். சிறிது சறுக்கி விட்டாலும் பிராணாபத்துத்தான்!

நதியொன்று குறுக்கிடுகிறது. அதில் ஸ்நானம் செய்தாகி விட்டது. இனி ஒரே ஒரு செங்குத்துப் பாறைதான். அப்புறம் குகை. நமக்குள்ளேயே நாம் அறியாமல் ஒளிந்து வாழ்பவன் அந்த குகையில்தான் வதிந்திருக்கிறான். குகனை மகனாகப்பெற்ற பரமசிவன் அந்தக் குகையில்தான் வாழ்கிறான். இன்னல் என்பதை மனம்விரும்பி ஏற்காவிடில் தேவதரிசனம் கிடைக்காது என்பதால் தான் யாத்ரிகர்கள் இத்தனை இன்னலை அநுபவித்த பின்னரே தன்னைக் காணவேண்டும் என்ற திருஉள்ளக் கருத்தில், ஜன சமூகத்தின் எட்டாக்கையில் எங்கோ ஏகாங்கியாக எழுந்தருளி யிருக்கிறான் ஐயன். அவனிடம் அன்பு கொண்டவர்களோ, இன்னலையும் இன்பமாக நினைத்தார்கள். அவனை நாடித் தேடி அடைந்தே விட்டார்கள்! ஐயனின் ஏகாந்தத்தையும் கலைத்து அவன் தங்களைநோக்கி அருள்கூற வைத்தார்கள்!

ஆனால் சுவாமிஜியோ அமரநாதத்தை அடைந்தவுடனேயே ஏகாந்தத்தில் முழுக விரும்பினார். வேண்டுமென்றதேபோல் மற்ற யாத்ரிகர்களுக்குப் பின்தங்கி, குகையைநோக்கி நடந்தார். பக்திவெள்ளத்தை உடலின் ஒவ்வோர் அணுவிலும் தேக்கியிருந்த

Koviloor Digital Library

அவர், எப்படித்தான் அந்தப் பளுவுடன் நடைபோட்டுச் செல்ல முடிந்ததோ, அதுவே அதிசயம்தான். அவரது உடல் முழுவதும் நடுங்கிற்று; குளிரினுல் அல்ல — அன்புப் பெருக்கம் நெருக்கிய தால்தான்.

அமரநாத குகை ஆலயமொன்றையே தன்னுள் அடக்கக் கூடியதாக அவ்வளவு விஸ்தாரமாயிருந்தது. அதில் முன்னேற முன்னேற — கால்கள் பதற, உள்ளம் கதற, கண்கள் நீர்சிந்த சிதற, முன்னேற முன்னேற — ஆழ்ந்த நிழல் அடர்ந்த கோடி யில், அந்த நிழலே சிம்மாதனமானுற்போல பனி லிங்கமாக ஆரோகணித்திருந்தான் ஐயன்.

தன்மீது வெயிலைப் பெய்துகொண்டு நிற்கும் விருட்சத்தின் நிழலே குளுமையாக இருக்கிறது. அப்படியானுல் பனியின் நிழலில் எழுந்தருளியுள்ள கருணுமூர்த்தியின் சந்நிதியில் சுவாமிஜி யின் அகம் சில்லிட்டுப்போனதில் அதிசயமென்ன? திவ்விய தீர்த்தத்தில் ஸ்நானம்செய்த திருமேனியுடன், திருநீற்றைக் கட் டுக்கட்டாகப் பூசிய திருமேனியுடன், பந்தமெல்லாம் பிடிக்காமல் உதறிவிட்டு கௌபீனத்தைமாத்திரம் தரித்து எளிமையுடன்விளங் கும் திருமேனியுடன் சுவாமிஜி அமரநாதத்தின் முன்பு நின்றதை இதயத் திரையில் க்ஷணகாலமேனும் பதிந்துகொள்வோமாக! தாபத்ரயங்களால் அநவரதமும் கொதிக்கும் நமது சித்தத்துக்குத் தண்மைகூட்ட இதைவிடக் குளிர்ந்த சம்பவமும் உண்டா?

பனித்தரையில் தமது பெரிய சரீரம் முழுவதும்பட விழுந்து தண்டனிட்டார் சுவாமிஜி. அவர் எழுந்திருந்தபோது அவரது மார்பில் ஒட்டிக்கொண்ட பனித்துணுக்குகள் உருகின. உள்ளே யும் ஏதோ ஒன்று உருகிக்கொண்டேயிருந்தது.

நூறு நூறு குரல்கள் குகையில் பெருமானின் திருப்பொலிந்த பெருமைகளைத் துதியாக அலைபாய்ச்சின. அவ்வளவு குரல்களும் சுவாமிஜியின் இதயகுகையிலும் எதிரொலித்தன.

பனிலிங்கம், ஸ்படிகலிங்கம்போல் ஜொலித்துக்கொண்டிருந் தது. எந்த வண்ணத்தைப் பின்னணியில் வைத்தாலும் அந்த வண்ணமாக மாறும் பளிங்குபோல் நாம் 'எது பாவித்திருப்பினும் அதுவாகி வந்தருள் செய்பவன்' அல்லவா ஆண்டவன். அமர நாதன் தான் ஞானமயமானவன், அறிவுக் கனலானவன் என் பதைக் காட்டுவதேபோல் வைரமாக ஜ்வலித்தான். ஆனுல் இந்தக் கனலிடம் வெப்பமில்லை. தான் கருணைவடிவானவன், அருட்புனலானவன் என்பதையும் அதேபோதில் மெய்ப்பிக்கும் பனியாக அல்லவா அவன் விளங்குகிருன்? ஆவியானது எப்படிக் குளிர்ச்சி அடைந்து பனியாக உறைகிறதோ, அப்படியே உருவ

Koviloor Digital Library

மற்ற பரம்பொருள் அன்பனின் பக்தியில் குளிர்ந்து லிங்கமாக உருப்பெறுகிறது என்பதை விளக்கிக்கொண்டிருந்தான் அமர நாதன்.

அவனைக் காணக்கான சுவாமிஜியின் உள்ளம் மென்மேலும் சில்லிட்டுக்கொண்டே வந்தது. உடம்பு சில்லிட்டால் எப்படி மரத்துப்போகிறதோ அப்படியே உள்ளமும் மரத்துப்போகத் தொடங்கியது. ஆம், வெளியுலகைப் பொறுத்தமட்டில் மரத்துப் போய்விட்டது. ஆனுல் உள்ளுலகிலோ மலர்ந்துகொண்டிருந்தது. அந்த மலர்ச்சியில், தேவியும் திருமாலும் அர்ச்சித்த மலர்கள் தங்கிய திருப்பாதத்திலிருந்து, கொன்றையும் உம்மத்தை மலரும் அணிந்த திருமுடி வரையிலும் ஐயனைப் பூரணமாகத் தரிசித்தார் சுவாமிஜி.

சாகாமையாகிய அமரத்துவத்தை அமரநாதன் தனக்கு அளித்துவிட்டான் என்று சுவாமிஜியின் உள்ளம் ஆர்ப்பரித்தது. 'உடலில் இருக்குமட்டும்தானே சாவு? உடலைவிட்டுச் சாகா மையை எய்தவேண்டியதுதான்' என்றும் அவர் துடித்திருக்க வேண்டும்!

சுவாமி விவேகானந்தர் தாம் யார் என்பதை ஐயமற உணர்ந்துவிட்டார். "நரேன் தான் யார் என்பதை அறிந்து விட்டானேயாகில் அதன்பின் அவனுல் உடலில் வசிக்கமுடியாது" என்று பரமஹம்ஸர் மொழிந்திருந்தார் அல்லவா? அப்படிப் பட்ட அநுபவம் அவருக்கு அமரநாதத்தில் கிடைத்துவிட்டது. அவரது உடல் எப்படிச் சாண்துணிபோக திகம்பரமாகயிருந்ததோ அதேபோலத் தமது உள் தன்மையையும் திகம்பரமாகக் கண்டு விட்டார் அவர். அதிலும் ஒரு சாண் துணி சுற்றியிருந்ததால் தான் அவர் அப்போதே உடலை உடைத்தெறியாமல் இருந் தார்!

குழந்தையாக இருந்தபோதிலிருந்தே அவருக்கு அடிக்கடி ஓர் எண்ணம் தோன்றும். மலைகள்சூழ்ந்த ஒரு சிவாலயத்திலேயே தாம் மரணத்தை மணக்கப் போகிறோம் என்பதாக அவருக்கு ஓர் உணர்வு உண்டு. இன்று அந்த உணர்வு பெரும்பாலும் உண்மையாகிவிட்டது! யாக்கையை அவர் ஒரேயடியாக நீத்து விடவில்லை எனினும் ஆத்மசாக்ஷாத்காரம்பெற்ற அந்தநிமிஷத்தில் அவருடைய சரீர உணர்வு பிரங்கிவைத்து வெடித்தாற்போல் பாளம் பாளமாகச் சரிந்து விழுந்தது. அந்த பயங்கரத்திலேயே அன்பின் அமைதிபிறந்து சுவாமிஜி சமாதியில் ஆழ்ந்துவிட்டார். மீண்டும் அவருக்கு உணர்வு வந்தது எப்படி என்பதை அமர நாதத்தில் வாழும் அமுதன்தான் அறிவான்!

Koviloor Digital Library

எண்ணிறந்த ஆத்மிக அநுபவங்களைப் பெற்றவர் சுவாமிஜி. எனினும் அமரநாதத்தில் அடைந்ததுபோல் அவ்வளவு இறுக்கமான, நெரிசலான, உன்னதமான உணர்வுகளை அவர் எப்போதுமே பெறவில்லை என்று சொல்லப்படுகிறது. மலைப் பாறை மேலே உருளுவதுபோல் இந்த அநுபவத்தினுல் மொத்துண்ட அவரது உடல் கல்லடிபட்ட கனியாகிவிட்டது. இதன் பின் அவரைப் பரிசோதித்துப்பார்த்த வைத்தியர் ஒருவர்: ''ஏறக்குறைய மரணத்தையே நீங்கள் அடைந்திருக்கிறீர்கள்! அப்போது உங்கள் இதயம்கூட இயற்கைப்படி நின்றிருந்திருக்கவேண்டும். அப்படி நடவாததால்தான் அது வீங்கிக்கொண்டிருக்கிறது'' என்ருர்.

இதயவீக்கம் இன்னொருவரைப் படுக்கையில் தள்ளிவிடும். ஆனுல் சுவாமிஜியின் பௌதிக இதயத்தைப் போலவே சூக்ஷ்மமான இதயமும் வீங்கி விசாலமானதால் அவர் படுக்கையில் விழவில்லை. இதயம் நிற்கும்வரையில் மூச்சைப் பிடித்துக்கொண்டு மனித சேவையில் இறங்கினுர். ராமேசுவரத்தில் ராமநாதனைக் கண்டபின் மக்களையே மகேசனுகக் கருதி வழிபடச் சொன்னவர் அமரநாதனைக் கண்டபின் அந்த உணர்வு மேலும் புஷ்டிபெற்றவராக ஆலயத்திலிருந்து வெளியேறினுர்!

நிவேதிதையை நோக்கிப் பனியிலும் குளிர்ந்த குரலில், ''சுவாமி தரிசனம் செய்தாயா? சுவாமி தரிசனம் என்ருல் சுவாமிதரிசனமேதான்! அந்த லிங்கம் பரமேசுவரனேதான்! அங்கே எல்லாமே வழிபாடுதான். இவ்வளவு அழகாக, உள்ளத்தை உயர்த்துவதாக நான் எதையுமே இந்நாள்வரை கண்டதில்லை'' என்ருர்.

கலைஞர் அல்லவா? அதனுல்தான் அழகைச் சொன்னுர். சாந்தம், சிவம், சுந்தரம் என்பதே ஆன்றோர் வாக்கும் அன்றோ? மகோன்னதமான மலைகளின் மடியில் வாழ்ந்த மகாதேவன், சுவாமிஜிக்கு மகத்தான உணர்வைத் தந்தபோதிலும் சுவாமிஜியோ அவனது மகிமையைவிட எளிமையையே பெரிதாக மதித்தார். அமரநாதனுக்கு விசேஷமான ஆடை, ஆபரண அலங்காராதிகள் கிடையாது. வருஷத்தில் பெரும்பாலான நாட்கள் அவன் நித்தியப்படி பூஜைகூட இல்லாமல் ஏழையாக வாழ்கிருன். அவனுக்கு மன்னர் யாரும் பிரம்மாண்டமாக ஆலயம் எடுக்கவில்லை. சித்தர்களும், வேதவித்தர்களும் அவனை ஆடம்பரமாக பிரதிஷ்டை செய்யவில்லை. இவ்விஷயங்கள்தான் சுவாமிஜியின் சிந்தனையில் நிறைந்திருந்தன.

Koviloor Digital Library

அமரநாத ஆலயத்தின் தோற்றுவாயைப்பற்றிக் கூற அவரே எளிமை நிரம்ப ஒரு கற்பனை செய்து பார்த்துக்கொண்டார். ''ஏதுமறியா இடையர் பலர் தங்களது மந்தைகளை இழந்து ஒரு வேனிற்பகலில் அவற்றைத் தேடிக்கொண்டு அலைந்தார்கள். அப்போது இந்தக் குகையை அடைந்து உள்ளே பிரவேசித்தார்கள். சற்றும் எதிர்பாராத விதத்தில் அங்கு பனியே கற்பூரப் பிண்டம் போல் லிங்காகாரமாக விளங்கியதைக் கண்டார்கள். பனிச் சுவரே உருகித் துளித்துளியாக லிங்கத்துக்கு அபிஷேகம் செய்வதைக் கண்டார்கள். நூற்றுண்டு, நூற்றுண்டுகளாக மனிதக் கண்ணில் படாமல் இங்கு வாழ்ந்து இப்படி அபிஷேகம்பெறும் ஐயனைக் கண்டதும் அவர்கள் எப்படியெல்லாம் உணர்ச்சி பெற்றிருப்பார்கள்! குகையிலிருந்து வெளியேறியபின் அவர்கள் தாங்கள் அகஸ்மாத்தாக மஹாதேவனைக் கண்டதைப் பள்ளத்தாக்கிலுள்ள மற்ற ஆயர்களுக்குச் சொல்லியிருப்பார்கள்! இப்படியே அமரநாதம் மக்களுக்குத் தெரியவந்திருக்கவேண்டும்'' என்றுர் சுவாமிஜி.

பசுவைத் தேடிவந்த எளியவர்கள் பசுபதியைத் தேடிவந்ததாகவும், உலகுக்கு அறிவித்ததாகவும் எண்ணவேண்டுமானுல் சுவாமிஜியின் உள்ளம் எப்படி எளிமைக்கு அவாவியிருக்கவேண்டும்? கோபாலன் ஆயர்களோடு ஆனிரை மேய்த்தபோது மந்தைகளைப் பிரம்மதேவன் குகையில்கொண்டு அடைத்த பாகவத வரலாறும் இதை எண்ணும்போது நினைவு வருகிறது.

சிவபெருமானை நேருக்குநேர் கண்டு, தம்முட்கொண்ட சுவாமிஜி அதன்பின் சில நாட்களுக்கு சிவம் சிவமென்றே பேசி வந்தார். சந்நியாசியான தக்ஷிணுமூர்த்தி சிவம், பிச்சையெடுக்கும் பிக்ஷாடன சிவம், தியாக உருவான தியாகராஜ சிவம் இப்படியே அவரது பேச்சு சுற்றிச்சுற்றி வந்தது. தாம் கண்ட அந்த தேவ தேவனின் விபூதியைத் தம்மிலேயே தரித்தவராக விளங்கினுர் சுவாமிஜி. அவரிடம் நெருங்கிப் பழகியவர்கள்கூட ஆண்டவனை அணுகுவதுபோல் இப்போது அச்சத்தோடுதான் அவரிடம் வர முடிந்தது. அச்சம் போக்கி அன்பு ஊட்டினுர் அவர்.

அமரநாதத்தில் யாத்திரைகோஷ்டி திரும்பிற்று. உடம்பு இருக்குமட்டும் அமரத்துவம் இல்லை; உடம்புபோன பின்புதான் நித்தியவாழ்வு அல்லவா? இதைக் குறிப்பதேபோல் திரும்பும் வழியில் மரணசரஸ் என்று ஒன்று உண்டு. முன்பு ஒரு சமயம் பக்தியில் சிறந்த யாத்ரிகர்கள் இங்கு பரமனைக் கூவிக் கூவிப் பாடி பரவியபடி சென்றபோது, அந்த ஆத்மநாதத்தில் அமரநாதனே உருகினுற்போல் பனிப்பாறைகள் ஒரேயடியாக உருகி, அந்த

Koviloor Digital Library

உருக்கத்திலேயே நகர்ந்துவந்தன. யாத்திரைகோஷ்டி மரண சரஸ்ஸில் மூழ்கி உண்மையிலேயே அமரத்துவத்தின் எல்லையில் எழுந்தது.

பஹல்காமில் சுவாமிஜியை மற்ற சீடர்கள் மீண்டும் கண்டனர். ஈசுவர தரிசனத்தைப்பற்றித் தன்மயமாக அவர்களிடம் பொழியத் தொடங்கிவிட்டார் சுவாமிஜி.

சுவாமிஜியும் சீடர்களும் ஸ்ரீநகரத்தைச் சென்று சேர்ந்தனர். அடிக்கடி சுவாமிஜி தனியாகப் படகில் நீண்ட நெடுந்தூரம்சென்று திரும்புவார். ஏகாந்தத்தில் அவரது நாட்டம் அதிகரித்தபோதிலும் சீடர்களுக்குப் போதனையும் செய்துவந்தாரவர். உயர்ந்த தியானயோகத்தையும், நடைமுறையில் உலகுக்காக உழைக்கும் கர்மயோகத்தையும் இணைக்கவேண்டியதுபற்றி நிறைய உபதேசித்தார். ''நாம் கடல்போல் ஆழமாயிருக்கவேண்டும்; வானம் போல் விரிந்திருக்கவேண்டும் — இதுவே குருநாதர் போதித்த லட்சியம்'' என்பார். ''ஸ்ரீராமகிருஷ்ணர் தமது ஆத்மாவின் அடியாழம்வரையில் முங்கியிருந்தார்; எனினும் வெளி உலகில் சுறுசுறுப்புடன் செயல்பட்டு வந்தார்''என்று அந்த லட்சியத்தின் லட்சணத்தை விளக்குவார்.

காச்மீர மன்னரும், அதிகாரிகளும் சுவாமிஜியை மிகவும் மரியாதையுடன் நடத்திவந்தனர். ஒரு மடமும் சம்ஸ்கிருத கலாசாலையும் அமைப்பதற்கு சுவாமிஜி தமக்கு விருப்பமான இடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேணும் என்று மன்னர் கேட்டுக்கொண்டார். அப்படியே சுவாமிஜி ரமணீயமான ஓரிடத்தைத் தேர்வு செய்தார். இவ்விடத்தில் சுவாமிஜியின் மேல்நாட்டு சிஷ்யைகள் மனம்குவிந்து தியானம் புரிந்து வந்தார்கள். கட்டிடம் இல்லாமலே அது ஒரு மாதர் மடமாகிவிட்டது என்று சுவாமிஜி கருதினர். ஆனல் இறுதியில் அங்கு மடம் அமைக்க முடியாமலே போயிற்று. சுதேச சம்ஸ்தானங்களில் ஆங்கில அரசினரின் பிரதிநிதியாக இருந்த ரெஸிடெண்ட் மேற்சொன்ன நிலத்தை வழங்க மறுத்ததே காரணம். முதலில் சுவாமிஜி இதனுல் சிறிதே கலங்கிவிட்டார் எனினும் பிற்பாடு, காச்மீரம் போன்ற எட்டாக்கையில் மட நிர்மாணம் செய்வது தேசசேவைக்கு அவ்வளவாகப் பயன்படாது என்று மனத்தைச் சமாதானம் செய்துகொண்டார்.

சிவ தரிசனத்தின் பெரும்பலன் சுவாமிஜிக்குக் கிட்டத் தொடங்கிற்று; அம்பிகையிடம் அவர் உள்ளம் திரும்பியது! சிவனுடைய வலப்பக்கத்திலிருந்து இடமாகத் தரிசனம் செய்து வரும்போது, அவனது கேசபாரமும், சர்ப்ப குண்டலம்பூண்ட வெண்செவியும், நிலவுச் சாற்ருல் செய்தாற்போன்ற கன்னப்

Koviloor Digital Library

பிரதேசமும், யோகத்தில் மிதக்கும் சாந்த விழியும் ஒன்றன்பின் ஒன்ருய் வரும். சட்டென்று வெண்மையை அழுத்திக்கொண்டு குளிர் நிலக்கதிர்கள் தோன்றும். வலப்பாகத்திலிருந்து பெயர்ந்து ஐயனின் நேரே நிற்கும்போது இந்த வெண்மையும் நீலமும் கலவாதிருக்கவென்றே சமைத்த அணையாக அவனது நாசிகை தோன்றும். மேலும் இடப்புறத்தில் செல்லச் செல்ல யோகத்தில் மிதக்கும் விழிக்குப் பதிலாகக் கருணையில் குவித்த ஒரு கருவிழி தெரியும். நிலவைத் தாங்கும் இரவைப் பிசைந்துசெய்ததுபோன்ற நீல கபோலம் தெரியும். சர்ப்ப குண்டலம் பூண்ட செவியை வலப்புறத்தில் கண்டோமெனில் இங்கோ பிரணவரூபமான ஓலையைத் தரித்த திருச் செவி தெரியும். பிறகு அந்த ஓலையைத் துழாவிப் பார்க்கும் சுகந்தமும் பளபளப்புங்கொண்டகுழல்கள் — வலதுபுறத்தில் போல சடைகள் அல்ல. ஈசுவர தரிசனம் அம்பிகையில்தான் முடியவேண்டும். அதேபோல் அம்பிகை தரிசனமும் ஈசுவரனில்தான் முடியும். அன்பில் தொடங்கினுல் அது அழகில்தானே முடியவேண்டும்? அழகில் தொடங்கினுல் அது அன்பில்தானே முடியவேண்டும்?

சக்தியைச் சித்தத்தில் தேக்கிக்கொண்டுவிட்டார் சுவாமிஜி. ராம பிரஸாத் என்ற பரமபக்தரின் தீஞ்சுவைப் பாடல்கள் அவரது நாவில் உலவின. சிவபெருமானை தியானித்து மலைபோல் விளங்கிய சுவாமிஜி, இப்போது மலையில் தவழும் கொடியான மலைமகளைப்பற்றி நினைக்கத்தொடங்கியவுடன் குழந்தையாகிவிட்டார். எல்லாம் அம்பிகையே, எல்லாரும் அம்பிகையே என்ற உணர்வு வெகுவாகப் பொங்கி எழுந்தது. முகம்மதியப் படகோட்டி ஒருவரின் நான்கு வயதுப் பெண் குழந்தையை உமையாகக் கருதிப் பூஜைசெய்தார் சுவாமிஜி. ''நான் எங்கு திரும்பினுலும் அம்பிகையைக் காண்கிறேன். இதோ இந்த அறையில் நம்மில் ஒருத்தியாக அவளும் இருப்பதுபோல் உணருகிறேன்'' என்று சுவாமிஜி சீடர்களிடம் கூறினர். ''என் விரல்களோடு ஐந்து பட்டுவிரல்கள் கோத்துக் கொண்டிருக்கின்றன. என்னை அந்தக் கை எங்கோ இட்டுச் செல்கிறது. தாயை நம்பிக் குழந்தை செல்வதுபோல் நான் செல்கிறேன். அந்தப் புஷ்பக்கரம் சர்வேசுவரியுடையது அல்லது என் குருநாதருடையது'' என்று இன்னெரு சமயம் கூறினர்.

ஆசாரியனும் அம்பிகையும் வேறு வேறல்ல என்பது சாஸ்திரமும், அநுபவமுமாகும்.

கொடிய வியாதிகள் 'தொத்திக்'கொள்ள முடியுமென்ருல் புனித சிந்தனைகள் தொத்திக்கொள்ள முடியாதா? சுவாமிஜியைப்

Koviloor Digital Library

போலவே அவரது சீடர்களும் ஜகன்மாதாவைப்பற்றிய ஜபத்தி லேயே ஆழ்ந்திருந்தார்கள்.

எல்லாவற்றையும் அம்பிகையிடம் அளித்துவிட்டு ஒரு பாரமும் இல்லாமல் ஸ்ரீராமகிருஷ்ணர் வாழ்ந்ததுபோல் தாமும் வாழவேண்டும் என்று விவேகானந்த சுவாமி விரும்பினர். சிந்திப் பது என்பதுகூட அவருக்குப் பாரமாயிருந்தது.

அமரநாதத்தில் சுவாமிஜிபெற்ற சைவாநுபவத்துக்கு ஈடாக இப்போது சாக்தாநுபவம் ஒன்று சித்தித்தது. பல ஆண்டுகளுக்கு முன் ஒரு மங்களவாரத்தில் குருநாதர் பணித்தபடி அவர் பவ தாரிணியிடம் தமது வறுமையைத் தீர்க்கவேண்டி மும்முறை சென்றதையும், சிலேயில் சர்வேசுவரியையே கண்டதையும் வாசகர் கள் நினைவு வைத்திருப்பார்கள். அன்றைக்கு அவர் பெற்ற தரிசனத்துக்கு ஈடாக இப்போது மீண்டும் திவ்விய மாதாவைக் கண்டு மகிழ்ந்தார்.

இந்தச் சமயத்தில் சுவாமிஜி தனிமையைநாடி மாலே வேளே களில் படகுப் பயணம் செய்துவந்தார். பிரம்ம சமாஜியான ஒரு வைத்தியர்மட்டும் அவருடன் மௌனமாகச் செல்வார். 'தன்னையறியாமல் தானே கெடுகிருன்' என்பது ஆப்தர் மொழி. ஆனுல் சுவாமிஜியோ தம்மை அறிந்துவிட்டால் உலகம் அவரை இழந்து கெட்டுவிடும் — அமரநாத அநுபவத்துக்குப் பின் சுவாமிஜி எப்போது தம்மை அறிந்து தாமாகிவிடுவாரோ என்ற அச்சம் சீடர்களுக்கு எழுந்திருக்கக்கூடும். இதனுல்தான் வைத் தியர் அவருடன் சென்றுவந்தார்போலும்! ஆனுல் அவர் சுவாமிஜி யின் தியானுநுபவத்துக்குமுன் என்ன செய்யமுடியும்? சுவாமிஜி யின் உள்ளம் அம்பிகைக்காகப் பொருமிப் பொருமி வீங்கிக் கொண்டிருந்தது. அதுவே துன்பமாகவும், இன்பமாகவும் இருந் தது; சோதனேயாயும் அநுக்கிரகமாயும் இருந்தது. திரை விலகி தீபாராதனம் காண்பதுபோல் சித்தம் அறுந்துவிழுந்து திவ்விய மாதாவின் தரிசனம் கிட்டித்தானுகவேண்டும் என்று சுவாமிஜி உறுதியாயிருந்தார்.

சித்தத்தை எப்படிச் செலுத்தினுல் அது தன்னேயே மாய்த்துக் கொள்ளும் என்று சோதித்துப் பார்த்தார். சூழலிலுள்ள அழகினே சிந்தித்தார்; அன்பினேச் சிந்தித்தார்; அழகையும் அன்பையும் செய்த அறிவை சிந்தித்தார். தரிசனம் கிட்டவில்லே.

அன்று மாலே சுவாமிஜி படகிலிருந்து இறங்கித் தனியிடத்தே அமர்ந்திருந்தபோது எண்ணத்தைப் புதிய பாதையில் செலுத் தினுர். உலகத்தில் அழகும், அன்பும் மட்டும்தானு இருக்கின்றன? கோரமும், பயங்கரமும் இல்லேயா? இன்பத்தைப் போலவே —

Koviloor Digital Library

அல்லது இன்பத்தையும்விட அதிகமாகவே — துன்பம் இல்லையா? நன்மையைவிட அதிகமாகத் தீமையில்லையா? இப்படி உலகத்தவர் காண்கிற நன்மை — தீமை, இன்பம் — துன்பம், அழகு — கோரம், அன்பு — பயங்கரம் எல்லாமே பொய்தான். ஆனால் இந்தப் பொய்யிலேயே நன்மை, இன்பம், அழகு, அன்பு இவற்றைக்கொண்டு மெய்ப்பொருளைப் பற்றிக்கொள்வதற்கு உலக மதங்கள் வகை செய்கின்றன. மெய்யைத் தொட்டபின் பொய்யும் மெய்யின் ஒரு தோற்றம் என்று காணமுடிகிறது. கண்டபின் தோற்றத்தைப் பிளந்து தள்ளிவிட்டு எங்கும் மெய்யை அநுபவிக்க முடிகிறது. நன்மைபோலவே தீமையிலும், இன்பம்போலவே துன்பத்திலும், அழகுபோலவே கோரத்திலும், அன்புபோலவே பயங்கரத்திலும் — எங்கும் சத்திய வஸ்துவை உணரமுடிகிறது. அப்போது துன்பமும் இன்பமாகிறது; தீமையும் நன்மையாகிறது; கோரமும் அழகாகிறது; பயங்கரமும் அன்பாகிறது.

ஆனால் தொடங்கும்போது இந்த உலகின் இருமைப் பொய்களில் ஏன் அழகையும், அன்பையும், இன்பத்தையும், நன்மையையும் கொண்டுமட்டும் சத்திய தரிசனத்துக்குப் பாடுபடவேண்டும்? ஏன் கோரத்தையும், பயங்கரத்தையும், துன்பத்தையும், தீமையையும் திவ்விய தரிசனத்துக்குச் சாதனங்களாக வைத்துக்கொள்ளக் கூடாது. ஜகன்மாதா தானே எல்லாமும் ஆகியிருக்கிறாள்? கிறிஸ்துவ சமயம்போல் இங்கு அழகுகள்மட்டுமே தெய்வ சிருஷ்டி; கோரங்கள் சாத்தான் சிருஷ்டி என்று நினைக்கப்படவில்லையே! அழகையும் உலகாயதமாகக் காணும்போது அது கோரமே; கோரத்தையும் அத்மிகமாகக் காணும்போது அது அழகே என்று போதிக்கும் ஹிந்து மதத்தில் — இதேபோல் உலக இன்பங்களும் துன்பமே என்றும், ஆத்மஞானிக்குத் துன்பமும் இன்பமே என்றும் கண்ட ஹிந்து மதத்தில் — கோரம், பயம், துன்பம், தீமை எல்லாமே அம்பிகையின் படைப்புத்தாமே! அப்படியிருக்க அவளை ஏன் கோரத்திலும், பயத்திலும், துன்பத்திலும், தீமையிலும் தியானித்துப் பார்க்கக்கூடாது?

இப்படிச் சிந்தித்தார் சுவாமிஜி. வெளியுலகம் அமைதி அழகில் சூழ்ந்திருந்த அந்த அந்திப்போதில் அவருடைய உள்ளம் புயலாயிருந்தது. அவர் அமைதியில் மட்டுமின்றி புயலிலும் தேவியை உணர முயன்றுகொண்டிருந்தார்.

ஆர்வமே உருவான அவரது முயற்சி சிந்திப்பதற்குக் கேட்பானேன்? இருளையும், இன்னலையும், அச்சத்தையும், நினைத்தே அம்பிகையிடம் பறந்துவிட்டார் அவர்! மின்சார உற்பத்தி யந்திரத்தில் சிக்கிக்கொண்டாற்போல அவரது உடல் துடிதுடித்

Koviloor Digital Library

தது ! மூலாதாரத்திலுள்ள குண்டலினி விடுவிடுவென்று மேலேறத் தொடங்கிவிட்டது.

திவ்விய தரிசனமும் கிட்டிவிட்டது !

அந்தத் தரிசனத்தைக்கண்டு உள்ளம் நிரம்பிக்கொண்டிருக்கும் போதே, அவருடைய இனிய உள்ளம், தான்பெற்ற இன்பத்தை இவ்வையமும் பெறவேண்டும் என்ற அருட்பான்மையும் எப்படியோ ஒரு மூலையில் வெளியேருமல் பிடிவாதமாக வைத்திருந்தது. அங்கியில் கையைவிட்டுத் துழாவினுர். காகிதமும், பென்ஸிலும் தட்டுப்பட்டன.

ஆவேச நிலையில் அவர் எழுதலானுர்.

உடு கணங்கள் அழிந்தன.
முகிலுக்கு முகில் மூடியிட
இருள் அதிர்கிறது ;
இருள் இறைகிறது.

காராகிருகக் கதவம் பிளந்து
வெறியர் கோடி வெளிப் பட்டாற்போல்
உருமிப் பொருமும் சூழற்காற்றுத்
தருக்கள் வேரைத் திருகிவிடப்
பாதை யெல்லாம் பாழாச்சு.

கடலும் சேர்ந்தது கொந்தளிப்பில் ;
மலையாய் அலைகளை மடித்துச் சுழற்றி
கருவான் முகட்டை நக்கிற்று!
மின்னல் கொடிகள் ஒளியினிலே
திக்குத் திகந்தம் முழுவதிலும்
காரிருள் கப்பிய மரணத்தின்
கோடி நிழல்கள் குதித்தன.

கொள்ளை நோய்கள் கொடுந் துன்பம்
அள்ளி இறைத்தே அன்னை நீ
ஆனந்த வெறியில் ஆடியே வா !
பயங்கரம் என்பதே உந்தன்பேர்
மரணம் என்பதே உன் மூச்சு
காலமே ! சர்வ நாசினியே!
காளி அன்னையே ! கடுகி நீ வா !

துயரை விரும்பும் தீரன் எவனே
சாவைத் தழுவும் சூரன் எவனே

Koviloor Digital Library

நாச நாட்டியத்தின் ரசிகன் எவனோ
அவனையே அன்னை அணுகி மகிழுவாள்.

வசனத்தில் கவிதையாக, கவிதையில் வசனமாக சுவாமிஜி தமது காளித்துதியை எழுதி முடித்தார். பயங்கரத்திலும், கோரத்திலும், துன்பத்திலும், தீமையிலும், தேவியைக்கண்டு சுவாமிஜி பாடியதை எண்ணும்போது மகாகவி பாரதியாரின் சில பாடல்வரிகளும் நினைவு வராமலிருக்காது.

வெடிபடு மண்டத் திடி பல தாளம்போட—வெறும்
வெளியிலிரத்தக் களியொடு பூதம்பாட—பாட்டின்
அடிபடு பொருளின் அடிபடு மொலியிற்கூட—களித்
தாடுங்காளீ! சாமுண்டீ கங்காளி!
அன்னை! அன்னை! ஆடுங் கூத்தை
நாடச் செய்தாய் என்னை
எத்திக்கினும் நின் விழியனல் போய் எட்டித்—தானே
எரியும் கோலம் கண்டே சாகும் காலம்
அன்னை! அன்னை! ஆடுங்கூத்தை
நாடச் செய்தாய் என்னை.

காளித் தத்துவம் இன்னது என்பதை சுவாமிஜி அற்புதமாகப் புரிந்துகொண்டுவிட்டார். மனத்துக்குப் பிடித்த ரம்மியமான விஷயங்களும் சரி, இன்னாத விஷயங்களும் சரி, ஒரேபோலப் பொய் என்ற உணர்வுதான் ஆத்மசிந்தனையின் அடிப்படை. இந்தச் சிந்தனையின் நிறைவில் இதேபோல் உலகத்தின் இனிய பொருட்கள், இன்னாத பொருட்கள் யாவுமே இன்பமான ஒன்றாக ஆகிவிடுகின்றன. இனிய பொருள்களைமட்டுமே ஆதாரமாகக் கொண்டு பக்தி புரிவதுபோல் இன்னாத பொருள்களையும் ஆதார மாகக்கொண்டு மக்கள் வழிபடவே காளி மாதாவாக பரப் பிரம்மம் தோன்றுகிறது.

ஹிந்து மதம் உலகத்தின் தீமையைமட்டுமின்றி, நன்மையை யும் விலக்கி, நாம் காண்கிற உலகத்தையே விலக்கி இதனைப் பிரம்மமாக உணரச்செய்யும் லக்ஷியத்தைக் கொண்டிருப்பதால் தான் இப்படி நன்மைக்குரிய அதே ஸ்தானத்தைத் தீமைக்கும் தரமுடிகிறது. ஹிந்து மதத்தின் இந்தத் தனிப்பெருமை அன்னை யாக அனைவற்றையும் ஆக்கும் அருள்தெய்வத்தையே அவ்வனைத் தையும் அழிக்கும் காளியாகக் காணும்போது தெற்றென வெளி யாகிறது. சர்வசமயங்களுடைய சம்பூரண அநுபூதி பெற்ற பரமஹம்ஸர் காளியிடம் அனன்யமான பக்திபூண்டிருந்ததற்கும்

Koviloor Digital Library

இப்போது காரணம் புரிகிறது அல்லவா ? குருநாதரின் பாவம் இப்போது அப்படியே சுவாமிஜியுடைய சொத்தாகிவிட்டது. ஆனால் குருநாதர் பயங்கரத்தையும், துன்பத்தையும் வழிபடும் பான்மை சாமான்ய மக்களுக்குப் புரியாது என்பதால் அம்பாளின் அருள் வடிவ வழிபாட்டையே வலியுறுத்தி வந்தார். தீமைகளைத் தொலைக்கமட்டுமே அவள் ஆயுதம் தாங்கியிருக்கிறாள் என்றும், அடியார்களுக்கு அபயமும் வரமுமே அளிக்கிறாள் என்றும் கூறி வந்தார். விவேகானந்த சுவாமிஜியோ தமது இந்த அநுபவத்துக்குப்பின் அவள் நன்மை தீமை இரண்டையும் கடந்த பிரம்ம ஸ்வரூபிணி என்கிற முறையில், தீமையை அழித்து நன்மையை நிலைநாட்டுவதும்கூடப் பொருத்தமில்லை எனக் கருதி, அவளை பயங்கரமாகவே கருதி வழிபடவேண்டுமென்று உலகுக்குச் சொன்னார் !

கவிதையின் கடைசிவரியை முடித்தானவுடன் பென்ஸில் அவரது கையிலிருந்து எங்கோ நழுவியது; காகிதமும் நழுவியது. உடல் இருந்த இடத்திலேயே கீழே சரிந்தது. காளி மாதாவுடன் ஒன்றியிருக்கும் சமாதிநிலையில் ஆழ்ந்துவிட்டார் சுவாமிஜி.

உடன்வந்த வைத்தியருக்கு அவரைக் கண்டதும் அச்சமாகி விட்டது. மேல்நாடுகளில் ஆயிரமாயிரம் அறிஞர்களைத் தட்டி எழுப்பிய தீரயோகி, தாய்நாட்டின் தூக்கத்தைக் கலைத்து அதனை வீறார்ந்த ஞானவீர நாடாக விழிப்புறச்செய்த தேசபக்த தியாகி காச்மீரத்தின் கண்காணாத பகுதியில் மண்ணில் கிடந்ததைக் காணும்போது வைத்தியரின் கண்கள் நனைந்தன. ஆனால் அவர் நினைத்ததுபோல் நடந்துவிடவில்லை. மஹாமாயையின் கிருபையினால் எவ்வாறோ சுவாமிஜி சமாதிநிலை கலைந்தெழுந்தார்.

இதன்பின் சில தினங்களுக்கு 'சக்தி சக்தி சக்தீ சக்தீ சக்தீ சக்தீ' என்றே ஓதிவந்தார் சுவாமிஜி.

''இன்பத்தைத் தேடவேதான் மனிதர்கள் பிறந்திருக்கிறார்கள் என்பது தவறு. துன்பத்தைத் தேடவென்றே பிறந்தோரும் உண்டு. சித்திரவதையிலும் ஆனந்தம் இருக்கமுடியும். நாம் பயங்கரத்தை வணங்குவோம்; பயங்கரத்துக்காகவே வணங்குவோம்'' என்பார்.

துன்பத்தைத் தந்து கொடுமைப்படுத்துவதற்காகவே தேவியை வணங்கவேண்டும் என்பார். ''நீ என்னைக் கத்தியால் குத்தினாலும் நான் உன்னை நம்பி நேசிப்பேன்'' என்ற கிறிஸ்துவத் துதியை அடிக்கடி கூறுவார். பார்க்கப்போனால் தேவி உலகத்து நன்மைகளை அளிக்கும்போதைவிடத் துன்பங்களை அளிக்கும்போதுதான் அதிக வைராக்கியமும், தெய்வ நினைவும் வருகிறது. அதைத்

Koviloor Digital Library

தொடர்ந்து அவளுமே வருகிறுள். இதைத்தான் குந்தி வாசுதேவனிடம், ''என் ஐயனே கண்ணு! எனக்கு எப்போதும் விபத்துக்கள் நேரட்டும். ஏனெனில் விபத்து நேரிடும்போதெல்லாம் நீ என் பக்கத்தே வந்து நிற்கிருய்'' என்ருள். ஆகையால் அன்னை கத்தியால் குத்துவதும் ஆத்திரத்தில் செய்வதல்ல. நம்முடைய நன்மைக்காகவே மருத்துவர் கத்தியால் கிழித்து ரண சிகிச்சை செய்வதுபோலத்தான் அவளும் செய்கிருள். கிறிஸ்துவத் துதியைவிட இதனை நன்ருக விளக்குகிருர் குலசேகராழ்வார்:

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல்

என்றல்லவா அவர் பாடுகிருர்!

''எப்படி இனிமையிலும், இன்பத்திலும், அம்பாளைக் காண வேண்டுமோ அப்படியே தீமையிலும், பயத்திலும், துயரத்திலும், சர்வநாசத்திலும் அவளைக் காணப் பழகுங்கள்'' என்று சீடர்களுக்கு உபதேசிக்கலானுர் சுவாமிஜி. ''பயங்கரத்தை உபாஸிப்பதால்தான் பயங்கரத்தைக் கடக்கமுடியும். மரணத்தைத் தியானியுங்கள்! மரணத்தைத் தியானியுங்கள்! பயங்கரம், பயங்கரம் — பயங்கரத்தைத் தியானியுங்கள். இப்படிப் பயங்கரமாக நிற்பவளேதான் பரம்பொருள். அவளுடைய சாபமும் வரமாகும். இதயத்தைச் சுடுகாடாக்கிக் கொள்ளுங்கள். செருக்கு, சுயநலம், ஆசைகள் இவற்றைச் சாம்பலாக எரிக்கும் சுடுகாடாக்கிக் கொள்ளுங்கள். அப்போது — அப்போதுமட்டுமே — அம்பிகை வருவாள்'' என்பார்.

ஈசுவரனை ஸ்மசானத்தில் இருத்திப் பார்ப்பதன் தத்துவம் இப்போது புரிகிறதல்லவா?

மனிதர்களில் நாம் ஒருவரின் நல்ல, தீய குணங்களைப் பார்த்து நல்ல குணங்களையே கொண்டாடுவதுபோல் ஒரு 'தயாள' மனப்பான்மையை ஆண்டவன் விஷயத்திலும் காட்டமுற்படுகிருேம். மாயாதத்துவம் மகாஞானியருக்குமே புரிபடாதபோது, அந்த மாயையில் அடங்கிய உலகில் நிகழும் சில நன்மைகளைமட்டும் கடவுள் செயலாகக் கருதி கடவுளின் கருணை குணத்தை மட்டும் வணங்குகிருேம். ஆனுல் பூகம்பமும், எரிமலை வெடிப்பும்கூட அதே ஆண்டவன் செயல்தான் என்று கருதி அதற்காகவும் அவனை வழிபடவேண்டும் என்ருர் சுவாமிஜி. ''வாழ்வைத் தேடவேண்டாம்; சாவைத்தேடுவோம். பயங்கரத்துடன் ஒன்றுவோம்'' என்று கோஷமிட்டார் சுவாமிஜி.

Koviloor Digital Library

இதன்பின் சுவாமிஜி கொடிய நோவுகளுக்கு ஆளாகும் சமயங்களில், ''நோவால் துயருறும் உறுப்பு அவள்தான். நோவும் அவள்தான். நோவைத் தந்தவளும் அவள்தான். காளி! காளி! காளி!'' என்று கூவுவார்.

''காளி அன்னையிடம் பிச்சை கேட்காதீர்கள்! பயம் என்பதே அவளிடம் வேண்டாம். உன்னதமான அநுபவத்தைத் தந்தேயாகவேண்டும் என்று அவளிடம் வலுக்கட்டாயமாகக் கோருங்கள். அன்னையின் உண்மை பக்தர்கள் கடினமான கல் போன்றவர்கள்; சிம்மத்தைப்போலப் பயமற்றவர்கள். பிரபஞ்சம் முழுவதும் வெடித்து அவர்களுடைய காலடியில் தூசியாகக் குவிந்தாலும் அவர்கள் சிறிதும் நிலைகுலையமாட்டார்கள். உங்கள் பேச்சை அவள் கேட்டேயாகுமாறு செய்யுங்கள். அவளிடம் ஒன்றும் கெஞ்சவேண்டாம்'' என்று சுவாமிஜி தமது சிஷ்யர்களுக்கு உபதேசித்தார்.

காளியின் தரிசனம்பெற்ற சில தினங்களுக்குப்பின், அதாவது ஸெப்டம்பர் முப்பதாம் தேதி சுவாமிஜிமட்டும் க்ஷீரபவானி என்ற மகிமைபொருந்திய சாக்த ஸ்தலத்துக்குப் புறப்பட்டார். வண்ண நீரூற்றுக்கள்கொண்ட க்ஷேத்திரம் அது.

அங்கே அம்பிகையின் ஆலயத்தில் அவர் தினமும் ஹவிஸ், பாதாம் பருப்பு இவை சேர்த்த க்ஷீரத்தால் தேவியின் பிரீதிக்கு ஹோமம் செய்தார். நீண்ட நாழிகை தேவி மந்திரங்களை ஜபம் செய்தார். பிரதி தினமும் காலையில் பிராம்மண பண்டிதர் ஒருவரின் சிறு பெண்ணை கன்யாகுமாரியாக பாவித்துப் பூஜை புரிந்தார். மிகவும் கடினமான சாதனைகளைப் புரியலானார். பலப்பல ஆண்டுகளாக உழைப்பின் மூலமும், சிந்தனையின் மூலமும் தம்மீது படிந்துவிட்ட ஆடைகளையெல்லாம் கிழித்தெறிந்துவிட்டு, குழந்தைபோல் பிறந்தமேனியாய் அம்பாளிடம் சென்றுவிடத் துடித்தார். தலைவராகவும், குருவாகவும், தொண்டராகவும் இருந்ததெல்லாம் போதும் போதும் என்றாகிவிட்டது. உலகுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற உணர்வையும் துறந்து, உண்மைத் துறவியாகி, நன்மை தீமை இரண்டுக்கும் மேம்பட்ட சர்வேசுவரியை சென்றடைய அவரது உள்ளம் விழைந்தது.

க்ஷீரபவானியில் சுவாமிஜிபெற்ற அநுபவங்கள் எல்லாம் பெரும்பாலும் உலகுக்கு ஊமையின் கானமாகவே உள்ளன. ஓரிரு குருபாயிக்களுக்குமட்டுமே அவர் அவற்றை வெளியிட்டார் ''அவை உலகுக்கு அறிவிக்கக்கூடாத அளவுக்குப் பரம புனிதமானவை'' என்றார் சுவாமிஜி.

Koviloor Digital Library

எவினும் க்ஷீரபவானியில் அவரும் தேவியும் சாமானிய மகனும் அன்னையும்போல் நெருங்கி வாழ்ந்தனர் என்பது நிச்சய மாகத் தெரிகிறது. சுவாமிஜியே குறிப்பிட்டுள்ள சில சம்பவங் களிலிருந்து, ஸ்ரீராமகிருஷ்ண தேவரிடம் எப்படி அன்னை பேசி வந்தாளோ அப்படியே சுவாமிஜியிடமும் திருவாய் திறந்து பேசி னள் என்பது ஐயமறத் தெரிகிறது.

க்ஷீரபவானி ஆலயம் அந்நியர் படையெடுப்பால் பழுதுற் றிருந்தது. 'இப்படி அநியாயம் நடக்க ஹிந்துக்கள் எப்படி அநுமதித்தார்கள்! என்னைப்போலப் பலர் இருந்தால் இப்படி ஒரு கொடுமை நடவாமல் நிச்சயமாகத் தடுத்திருப்பார்கள். ஆம், நான்மட்டும் முகம்மதியப் படையெடுப்பின்போது இங்கு இருந்திருந்தால் தேவிக்காக என் பிராணனையே விட்டிருப்பேன்' என்று சுவாமிஜி எண்ணமிட்டார்.

''என் குழந்தாய்'' என்று சர்வேசுவரி கூப்பிட்டது சுவாமிஜி யின் செவியில் விழுந்தது. தேவி பேசினாள்: ''குழந்தாய் மாற்றார் என் ஆலயத்தில் புகுந்ததாலோ, என் உருவங்களைச் சிதைத்ததாலோ எனக்கு என்ன வந்துவிட்டது? அதைப்பற்றி உனக்கென்ன? நீ என்னைக் காப்பாற்றுகிறாயா? நான் உன்னைக் காப்பற்றுகிறேனா?'' என்று கேட்டாள் பரமேசுவரி.

'அப்படியானால் ?' சுவாமிஜி சிந்திக்கலானார். 'இந்தியர்களெல்லாம் அம்பிகையின் நடமாடும் கோயில்கள்; அவர் களுக்காக உழைக்கவேண்டும் என்று எண்ணினேனே, அதுவும் தேவையே இல்லையே! நான் இல்லாவிட்டால் இன்னொருவர் மூலம் அவள் இந்தக் காரியத்தைச் செய்துகொள்வாள்! அப்படி என் மூலமே அவள் செய்துகொள்ள விரும்பினாலும் அது அவளது சங்கல்பம் ஒன்றினால்தான் நிகழவேண்டுமேயன்றி என்னுடைய முயற்சியால் அல்ல. இனி அசடன்போல் முயலமாட்டேன்'! என்று உறுதி பூண்டார் சுவாமிஜி.

மழித்த தலையும், துவராடையுமாக ஒருநாள் தமது சீடர் களின் முன்வந்து குதித்தார் சுவாமிஜி. அவரைப் பார்க்கவே கண்கள் கூசின. அவரைச்சுற்றி, சிந்தனைகளை எல்லாம் ஸ்தம்பனம் செய்யும் ஓர் அடர்ந்த அநுபவம் சூழ்ந்துகொண்டிருந்ததைச் சீடர் கள் உணர முடிந்தது. 'அன்னை காளி' என்ற தமது கவிதையை ஆர்ப்பரித்து உரைத்த சுவாமிஜி ''அது அவ்வளவும் உண்மை; ஒவ் வொரு வார்த்தையும் சத்தியம்'' என்று வாய்விட்டுப் பாடினார்:

சாவைத் தழுவும் சூரன் எவனோ?

''நான் அப்படிச் சாவைத் தழுவிவிட்டேன், தெரியுமோ'' ? என்று கம்பீரப் பெருமிதத்துடன் கேட்டார்.

Koviloor Digital Library

க்ஷீரபவானியில் தாம் அடைந்த ஒருசில அநுபவங்களைமட்டும் கூறினார்.

''தேசபக்தி அது இது எல்லாவற்றுக்கும் மங்களம் பாடி விட்டேன். இனிமேல் நான் அம்பாளின் குழந்தை, அவ்வளவு தான்!

''ஒரு நாள் நான் சிதிலமான க்ஷீரபவானி ஆலயத்தைப் பார்த்துப் பொருமி, இதனைப் புதுப்பிக்கமாட்டோமா, மற்றும் நாடெங்கும் அம்பிகை நாமம் விளங்க மடங்கள் ஸ்தாபிக்க மாட்டோமா என்று குமிறிக்கொண்டிருந்தேன். ஒலியாலேயே உள்ளத்தைத் தடவிக்கொடுக்கும் அம்பிகையின் குரல் அப்போது கேட்டது. 'வத்ஸ! நான் மனம்வைத்தால் எண்ணிலடங்கா ஆலயங்களும், பிரம்மாண்டமான மடங்களும் எழும்பாதா? இந்தக் கணமே, இதே இடத்தில் ஸ்வர்ணமயமான ஓர் ஏழடுக்கு ஆலயத்தை என்னல் எழுப்பிக்கொள்ள முடியாதா?' என்று கேட்டாள் தேவி. அதைக் கேட்டதிலிருந்து திட்டம்போடுவ தென்பதையே விட்டுவிட்டேன்'' என்றார் சுவாமிஜி.

நீண்டகாலத்துக்குப்பின் இதையே மீண்டும் கூறித் தம்மால் திட்டம் எதுவும் வகுக்க முடியாது எனக் கூறினார் சுவாமிஜி.

பராசக்தியின் பக்திவெறியிலேயே ஆழ்ந்திருந்தார் சுவாமிஜி. சீடர்களைப்பார்த்து 'ஹரி ஓம், ஹரி ஓம்' என்று பஜனை செய்த தெல்லாம் போதும். இனிமேல் 'அம்பா, அம்பா' என்று கூவுங்கள். அன்னையைத் தவிர இனி எனக்கு எதுவும் கிடையாது — தேசசேவைகூடக் கிடையாது'' என்றார்.

அது சாத்தியமா? சுவாமிஜியினால் தேசசேவை புரியா திருக்க முடியுமா? ஆனால் இவ்வளவு நாள் தமது திட்டமாக அதை வகுத்துச் செய்துவந்தவர் இனி அம்பிகையின் திருஉள்ளப் படியே தமது முயற்சியின்றி அதனைத் தொடரப் போகிறார். ஸ்ரீராமகிருஷ்ணர் சின்னஞ்சிறு விஷயங்களுக்கும்கூட, ''திவ்விய மாதாவைக் கேட்டுச் சொல்கிறேன்'' என்பார். சுவாமி விவேகானந்தர் அப்படி வெளிப்படக் கூறவில்லை. என்றாலும் க்ஷீரபவானி யாத்திரைக்குப்பின் அவர் செய்த ஒவ்வொரு செயலும் அம்பிகையின் ஒப்புதலைப்பெற்று அவர் செய்ததே என நாம் நம்பலாம்.

'என் வாழ்வில் ஏற்பட்ட ஒரு நெருக்கடி' என்று சுவாமிஜி கூறிய ஒரு சம்பவம் காச்மீரத்தில் நிகழ்ந்தது.

ஒரு முகம்மதிய பக்கிரியின் சீடனுக்கு சுவாமிஜியிடம் பெருத்த ஈடுபாடு உண்டாயிற்று. சுவாமிஜியும் தமது வற்றாத நேச நிதியத்தை அவனுக்கு அளித்தார். அவனுக்கு ஒரு நாள் தாங்கமுடியாத தலை வலியும், காய்ச்சலும் ஏற்பட்டுக் கஷ்டப் பட்டான். சுவாமிஜி அருள் மிகுதிகாரணமாக அவனது சிரஸை

Koviloor Digital Library

தமது விரல்களால் தொட்டார். உடனேயே மாயமந்திரம் போட்டதுபோல் அவனுடைய உபாதை பறந்துபோய்விட்டது. அதன்பின் அவன் சுவாமிஜியிடம் முன்னைவிட பக்திபூண்டு, அவரிடம் அடிக்கடி வரலானான். இதனால் அவனது பழைய குருவாகிய பக்கிரிக்கு அசூயை ஏற்பட்டது. அவன் தனக்கும் அமானுஷிக ஆற்றல்கள் உண்டு என்று சிடனுக்கு நிருபிக்க விரும்பி, சுவாமிஜிக்கு அடிக்கடி வாந்தி உண்டாகி அவர் தலைசுற்றல் மயக்கத்தால் அவதிப்படுவார் என்று சூள் உரைத்தான். அந்தப் பாவியின் வாக்கு ஏனோ பலித்தது. பிறனது உபாதையை சுவாமிஜி கருணையுடன் தணித்தார். ஆனால் ஏனோ அம்பிகை அவருக்கு அந்தக் கருணையைக் காட்டவில்லை. அடிக்கடி வாந்தியும் மயக்கமுமாக அவதிப்பட்ட சுவாமிக்கு எல்லையில்லாத சினம் மூண்டது — பக்கிரியிடமல்ல, அம்பிகையான தனது குருநாதரிடம்தான். ''ஸ்ரீராமகிருஷ்ணரால் எனக்கு என்ன பிரயோஜனம்? ஆத்மாவின் சர்வசக்தியைப்பற்றி உலகத்துக்கெல்லாம் தடபுடலாகச் சொன்னேனே? என்னால் ஏன் இப்படி ஒரு செப்படி வித்தைக்காரனின் சூனியத்திலிருந்து தப்பமுடியவில்லை?'' என்று நொந்துகொண்டார்.

மூன்று வாரங்களுக்குப்பின் கல்கத்தாவுக்குத் திரும்பியபோதும் சுவாமிஜியின் தேகநிலை சொஸ்தமடையவில்லை. தூய அன்னை சாரதையிடம் சென்றார். தமது மனத்திலிருந்ததை ஒளிக்காமல் அவளிடமும் கூறி நொந்துகொண்டார். அப்போதுதான் அவருக்கு ஆறுதல் உண்டாயிற்று!

காச்மீரத்திலிருந்து சமவெளிக்குவருவது என்று முடிவாயிற்று.

''அப்புறம் என்ன திட்டம்?'' என்று சிஷ்யர்கள் கேட்டார்கள்.

''திட்டமுமாச்சு, மண்ணாங்கட்டியுமாச்சு. சுவாமிஜி செத்துப்போய், அவர் இருந்த இடத்தில் புல் முளைத்துப் போச்சு, போங்கள்'' என்றார் ஸ்ரீமத் விவேகானந்தர்.

''ஆமாம், யார் இந்த சுவாமிஜி? நான் உலகுக்கெல்லாம் உபதேசிக்கப்போகிறேன் என்று கிளம்ப இவர் யார்? எல்லாம் வெறும் டம்பமும், ஜம்பமும்தான். அம்பிகைக்கு உங்கள் சுவாமிஜி ஒன்றும் தேவைப்படவில்லை. இவருக்குத்தான் அவள் தேவைப்படுகிறாள். கர்மம்புரிவது வெறும் மாயை'' என்று தொடர்ந்தார் சுவாமிஜி.

''ஆம், கர்மம் வெறும் மாயை. எனக்கு மௌனம்தான் வேண்டும். எல்லாரும் என்னை மறந்துபோகும் நிலைமைதான் வேண்டும்'' என்று முடித்தார்.

Koviloor Digital Library

மறப்பதா? சுவாமிஜியையா? உலகம் உள்ளவரைஅல்லவா அவருடைய நினைவும் உயிர் வாழப்போகிறது?

சுவாமிஜியை மறந்துபோகும் நிலையை, அவரது சீடர்களால் எண்ணவும் முடியவில்லை. ஆனால் இன்னொன்றை நினைத்து அவர்கள் கலங்கினார்கள். சுவாமிஜியைத் தாங்கள் மறந்து போகாவிடினும் அவர் தங்களைவிட்டு மறைந்துபோகும் நாள் எட்டத்திலில்லை என்று அவர்களுக்குத் தெரிந்துவிட்டது.

'மத்தகஜமாயிருந்த சுவாமிஜி அவ்வப்போது எப்படி ஒரே யடியாக ஆயாசத்தில் ஆழ்ந்து விடுகிறார்! இது சாமானியமான சோர்வாகப் படவில்லையே' என்று சீடர்கள் கலக்கமடைந்தார்கள்.

இதைப்பற்றி நிவேதிதை எழுதுகிறாள்: ''ஒரே உணர்வைத் தொடர்ந்து அநுபவிப்பதால் ஏற்படும் அலுப்பு காரணமாக, ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் துயரத்தைக்கூட அநுபவிக்க முடிவதில்லை. அதேபோல ஆத்மிக ஜீவனத்தின் அடர்த்திக்கு உடலால் ஓரளவுக்குமேல் இடமளிக்க முடியாது போலிருக்கிறது! அவரை நாங்கள் எவ்வளவு காலத்தில் பிரியப்போகிறோமோ என்பது தெரியாமல் இப்படி இருக்கிறோமே என்ற உணர்ச்சி எங்களுக்கு எழுந்தது.''

Koviloor Digital Library

அத்தியாயம்—30

அறத்துக்கோர் ஆலயம்!

சுவாமி விவேகானந்தரும் மற்றச் சீடர்களும் 1898-ம் ஆண்டு அக்டோபர் 11-ந் தேதியன்று காச்மீரத்தை விட்டுக் கிளம்பினர்கள். மேல்நாட்டுச் சீடர்கள் ஆக்ரா, தில்லி முதலிய இடங்களைப் பார்த்துவரச் சென்றனர்கள். சுவாமிஜி சதானந்தரோடு அக்டோபர் 18-ந் தேதியன்று பேலூருக்கு வந்துசேர்ந்தார்.

சுவாமிஜி வந்துவிட்டார் என்பதில் குருபாயிக்களின் உள்ளம் துள்ளிக்குதித்தது. ஆனல் சாம்பிய அவரது தோற்றத்தைக் கண்டதும் துள்ளிய உள்ளங்கள் துவண்டன. எப்படியிருந்த சுவாமிஜி எப்படி ஆகிவிட்டார்! உடம்பாலும், மனத்தாலும் ஓயாமல் ஒழியாமல் தாய்த்திரு நாட்டுக்காக உழைத்து உழைத்து மிகவும் தளர்ந்து காணப்பட்டார் அவர்.

சுவாமிஜி ஹிமாலய யாத்திரை செய்துவந்தபோது மடத்தில் பல புது சீடர்கள் சேர்ந்திருந்தனர். இவர்கள் பிற்பாடு விமலானந்தர், போதானந்தர், கல்யாணனந்தர், ஸோமானந்தர் என்று பெயர் பெற்றனர்.

உடல்நலக் குறைவையும் பொருட்படுத்தாது சுவாமிஜி தமது சீடர்களை முன்போலவே பயிற்றுவிக்கலானர். தாம் வந்த அன்றைக்கே போதனையைத் தொடங்கிவிட்டார். காச்மீரத்தில் தாம் இயற்றி இருந்த மூன்று கவிதைகளை அவர் உணர்ச்சி பொங்க கோஷித்தபோது குருபாயிக்கள் அவரது உள்ளத்து உத்வேகம் சிறிதும் மங்கவில்லை எனக்கண்டு ஆனந்தம் கொண்டனர்.

அது நவராத்திரி சமயமாதலால் மறுநாளிலிருந்தே விமரிசையானமுறையில் துர்கா பூஜையைத் தொடங்கிவிட்டார் சுவாமிஜி.

பேலூர் மடத்திலும், பலராம பாபுவின் இல்லத்திலுமாகத் தொடர்ந்துவரும் நாட்களைக் கழித்தார் சுவாமிஜி. காச்மீரத்தின் பிரதம மந்திரியாகிய நீலாம்பர் முகர்ஜியும், பிரதம நீதிபதி ரிஷிவர முகர்ஜியும் நவம்பர் ஐந்தாம் தேதியன்று பேலூர் மடத்துக்கு வருகைதந்தனர்.

நவம்பர் பன்னிரண்டாம் தேதியன்று — காளிபூஜைக்கு முதல் நாள் — தூய அன்னை மற்ற பல பெண் சீடர்களுடன் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் நிரந்தர தலைநகரமாகப்போகும் பேலூர் மடத்தின் மனைக்கட்டுக்கு வந்தாள். அன்று ஸ்ரீராமகிருஷ்ண தர்மத்தைச் சேர்ந்த துறவிகள் யாவரும் அங்கு குழுமியிருந்தனர். அவர்கள் தாங்கள் பூஜித்துவந்த குருநாதரின்

Koviloor Digital Library

திருஉருவப் படத்தை உடன் எடுத்துவந்திருந்தனர். சாரதாமணி தேவியும் தான் வழிபட்டுவந்த பதி தேவரின் பிரதிமையைக் கொண்டுவந்திருந்தாள். பேலூரில் மடம் நிர்மாணமாகிவந்த இடத்தில் தானே அந்தப் பிரதிமைக்கு விசேஷமான பூஜை புரிந்தாள். அன்று அந்தச் சூழலில் ஆத்மிகத்துக்கும் அறத் துக்கும் ஓர் ஆலயமாக விளங்குவதற்கு விதை விதைத்தாகி விட்டது. பகலுக்குமேல் யாவரும் கல்கத்தாவுக்குத் திரும்பினர்.

மறுநாள் காலையில், பக் பஜாரில் சகோதரி நிவேதிதை பெண்களுக்காக நிறுவியிருந்த பள்ளியை சாரதாதேவி திறந்து வைத்தாள். அன்று பள்ளியிலேயே குருமஹராஜுக்குப் பூஜை புரிந்தாள் தூய அன்னை. 'அகிலாண்ட நாயகியான திவ்ய மாதாவின் அநுக்கிரகம் இந்த வித்யாசாலைக்குக் கிட்டவேண்டும்; ஆதரிசப் பெண்மணிகளை இப்பள்ளி தோற்றுவிக்கவேண்டும்' என்று தனது நல்ல உள்ளத்தினுல் வேண்டிக்கொண்டாள்.

சகோதரி நிவேதிதை தான் தேசமெல்லாம் கடந்துவந்ததும், தனது கோட்பாடுகளையெல்லாம் படாத பாடுபட்டு மாற்றிக் கொண்டதும் வீணுகவில்லை என்று மகிழ்ந்தாள். ''எதிர்கால ஹிந்து சமுதாயத்திற்காக தூய அன்னை ஆசிகூறியதைவிடச் சிறந்த ஒரு சுபசகுனத்தை நான் எண்ணிப் பார்க்கவில்லை'' என்று அவள் எழுதியிருக்கிருள்.

பாரதத்தின் ஆண்குலத்துக்காகத் தாம் செய்யும் சேவையை நிவேதிதை பெண்குலத்துக்குச் செய்யவேண்டும் என்பதே சுவாமிஜி யின் அவா. அதற்குத் தொடக்கம்தான் இப்பள்ளி. அந்நாட் களில் பெண்கள் வீட்டைவிட்டு வெளியேறிப் பள்ளியில் படிப்ப தென்பது, இந்நாட்டில் அவர்கள் தனியாக அயல்நாடு செல்வதை விட விந்தையாகக் கருதப்பட்டது என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

தனியாக ஓர் இல்லத்தில் நிவேதிதை வசித்துவந்தாள் எனி னும் தூய அன்னையுடனேயே அதிகமாகப் பொழுதைக் கழித்து வரலானுள். ஸ்ரீராமகிருஷ்ணரின் அருகில் விவேகானந்தர் வளர்ந் ததுபோலவே சாரதையின் அருகில் நிவேதிதை வளர்ச்சிபெற்ருள். தூய அன்னையைக் காணவரும் பக்திநிறைந்த பெண்களிடம் பரி சயம் கொண்டதிலிருந்து பாரதத்தின் பெண் உள்ளத்தைத் நன் ருகப் புரிந்துகொண்டாள் நிவேதிதை. இதற்கு அநுசரணையாகப் பயிற்சி அளிக்கும் முறையிலேயே வித்யாசாலையைத்தொடங்கினுள் நிவேதிதை. ஆரம்பகாலத்தில் நிவேதிதையிடம் மிகவும் கடுமை யாக இருந்த சுவாமிஜி இப்போது, பரமஹம்ஸர் தம்மை எப்படி நம்பினுரோ அதேபோலத் தாம் நிவேதிதையை நம்பி, ''இந்த

Koviloor Digital Library

வித்யாசாலையை உனது உள்ளப்போக்குப்படியே சுதந்தரமாக நடத்திவா'' என்று அநுமதித்துவிட்டார் !

1898-ம் ஆண்டு மார்ச் மாதத்திலேயே பேலூரில் மட நிர்மாணத்துக்கு வாங்கியிருந்த மனையில் புண்யாஹவாசனம் நடத்தியாயிற்று. தொடர்ந்து கட்டட வேலைகள் நடைபெற்றன. அவை ஒரளவுக்குப் பூர்த்தியானவுடன் அந்த ஆண்டு டிஸம்பர் 9-ந் தேதியன்று சாஸ்திரப்படி அதில் பிரவேசிப்பதென முடிவாயிற்று.

ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் சரித்திரத்தில் மிகவும் முக்கிய மானதினம் அது. உலகெங்கும் பரவியுள்ள ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்துக்கு பேலூர் மடமே இதயமன்றோ !

டிஸம்பர் 9-ந் தேதியன்று சுவாமிஜி ஆசாரமே ஓர் உருக் கொண்டாற்போல் விளங்கினர். கங்கையில் ஸ்நானம் செய்து விட்டு, ஈரவஸ்திரத்துடன் தர்ப்பணங்கள் செய்துவிட்டுப் புதிய தொரு காஷாய வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டார் சுவாமிஜி. பூஜா கிருகத்துக்குச் சென்று அங்கு நீண்டநேரம் தியானம் புரிந்தார். அதன்பின் குருநாதரின் அஸ்திகளுக்கு மலரும் வில்வமு மாக அர்ச்சனைகள் செய்தார். மீண்டும் தியானம்.

தியானம் முடிந்தவுடன் ஊர்வலம் தொடங்கிற்று. நீலாம்பர் முகர்ஜியின் தோட்டமாளிகையிலிருந்து கங்கைக்கரை வழியாக பேலூரில் நிர்மாணமாகிவரும் மடத்துக்கு பக்தர்கள் ஊர்ந்தனர். ஸ்ரீராமனது பாதுகைகளை பரதாழ்வான் தலையில் தாங்கி நடந் ததை நினைவூட்டுவதுபோல், ஸ்ரீராமகிருஷ்ணரது அஸ்திகள் அடங்கிய பாண்டத்தை வலது தோளில் சுமந்துகொண்டு பக்தி மயமாக நடந்தார் சுவாமிஜி. சங்கொலியும் சேகண்டி நாதமும் அவர்களுக்கு முன்பாகச் சென்று புனிதத்தைப் பரப்பிக்கொண் டிருந்தன.

தழுதழுத்த குரலில் சுவாமிஜி அருகிலிருந்த ஒரு சீடரிடம் கூறினர்: ''முன்னொருமுறை குருமஹராஜ் என்னிடம், 'நீ என்னைத் தோளில் சுமந்துகொண்டு எங்கு கொண்டுபோனலும் — அது மரத்தடியாயினும் எளிய குடிலாயினும் — நீ விரும்பும் அந்த இடத்துக்கு நான் வந்து மகிழ்ச்சியுடன் வாழ்வேன்' என்று சொன்னர். அவரது மகத்தான அந்த வாக்கை நம்பி அவர் இனி பேலூரில் வாழ்வார் என்றே இப்போது அவரை நான் எடுத்துச் செல்கிறேன். தூய்மையும் புனிதமும், ஜீவதயையும் நிறைந்த அவரது லட்சியங்கள் பக்தர்களை எவ்வளவுகாலம் ஊக்குகின்றன வோ அவ்வளவுகாலத்துக்கு குருமஹராஜ் இவ்விடத்தில் வாழ்ந்து புனிதம் பரப்புவார். இதில் சிறிதும் சந்தேகமில்லை, குழந்தாய்'' என்று உறுதியாகக் கூறினர் சுவாமிஜி.

Koviloor Digital Library

புதிய மடம் நெருங்கிக்கொண்டிருந்தது. சுவாமிஜி உற்சாகத்துடன் பேசலானார்:

''ஸ்ரீராமகிருஷ்ணர் சகல சமயங்களின் இசைவுக்கும் ஓர் உருவமாக வாழ்ந்தார். அந்த இசைவுக்கு, அகில உலகுக்கும் பொருந்தும் பிரபஞ்ச மதத்துக்கு இந்த மடம் மையகேந்திரமாக விளங்கப்போகிறது. இங்கிருந்து நல்லெண்ணம், சாந்தி, ஒற்றுமை இவற்றின் ஒளி புறப்பட்டு உலகம் முழுவதையும் உபதேச வெள்ளத்தில் ஆழ்த்தப்போகிறது. இதற்கு முக்கியமாக வேண்டியது என்னவெனில் இந்த மடத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு போதும் உட்பூசலில் பிளவுபடக்கூடாது.''

மடத்து மண்ணை மிதித்தாகிவிட்டது. அந்த மனையில் அமைந்திருந்த ஒரு பீடத்தில் அஸ்தி கலசத்தை வைத்தார் சுவாமிஜி. இழுத்த இழுப்புக்கெல்லாம் வளைந்துகொடுக்கும் குழந்தைபோல் கடந்த பன்னிரண்டாண்டுகளில் தாம் நினைத்த இடங்களுக்கெல்லாம் அஸ்தி உருவில்வந்து, எப்படி பூஜைசெய் தாலும் அதை ஏற்று, குருநாதர் அருள்புரிந்ததை எண்ணி உருகினார் சுவாமிஜி. தாம் அந்த அஸ்தியையே மறந்து அமெரிக்கா சென்றபோதும், பூஜையே செய்யாதிருந்தபோதிலும் அதிகமாக அருள்புரிந்த குருநாதரின் அன்பை நினைந்து விதிர் விதிர்த்தார்.

''இனி உன்னை எங்கேயும் அலைக்கழிக்கமாட்டேன், என் ஐயா! இங்கேயே இருந்து காப்பாற்றிவா, என் சுவாமி'' என்று சுவாமிஜியின் உள்ளம் கலசத்திலிருந்த ஆசாரியனிடம் கதறிற்று.

பீடத்தில் அமர்த்தப்பட்ட கும்பத்தைக் கண்டதும் எல்லாருடைய கண்களும் நிரம்பின. உடலோடு அவர்களுடைய குருநாதர் அங்கு இருக்கலாகாதா?

கலசத்தின் முன்பு அனைவரும் தண்டனிட்டு எழுந்தனர்.

சிரத்தையுடன் குருபூஜை நடைபெற்றது. அதன்பின் சுவாமிஜி வேள்வித் தீ மூட்டி, சங்கத்து சாதுக்கள் மட்டுமே காணக்கூடிய விரஜா ஹோமத்தைச் செய்தார். தாமே குருபாயிக்களுடன் சேர்ந்து பாயஸான்னம் சமைத்து அதனை குருவுக்கு நிவேதனம் செய்தார்.

மட நிர்மாணம் சம்பிரதாய பூர்வமாக நிறைவு பெற்றுவிட்டது.

எதிர்காலத்துக்கு ஸ்ரீராமகிருஷ்ண தர்மமாகிய சர்வ சமய வேதாந்த தர்மத்தைக் காத்துத்தரும் அறக்கருவூலத்தை ஸ்தாபித்ததுடன் சுவாமிஜியின் அவதாரப் பணிக்குப் பட்டாபிஷேகம் ஆகிவிட்டது. தங்கள் காலத்தில் தர்மத்தைப் பரப்பியதுடன் எதிர்காலத்துக்காக, தாங்கள் கண்ணாலும் கண்டிராத மக்களின்

Koviloor Digital Library

க்ஷேமத்துக்காக, மடங்கள் அமைத்த மகான்கள் ஆதிசங்கர பகவத் பாதரிலிருந்து தொடங்கி வாழ்ந்திருக்கிறுர்கள். அவர்களில் ஒருவராக இன்று சுவாமிஜியும் இடம்பெற்றுவிட்டார்!

சுவாமிஜி பேசினுர்:

''என் சோதரர்காள்! அவதாரமாகவந்த ஐயன் இவ்விடத்தைத் தனது சாந்நித்தியத்தால் சாசுவதமாக அநுக்கிரகிக்க வேண்டும், இதனை எல்லா மதங்களும், மதப் பிரிவுகளும் இணைந்த ஈடிணையற்ற ஒரு மத கேந்திரமாக்கி — புண்ணிய க்ஷேத்திரமாக்கி — உலகுக்கெல்லாம் நன்மையும், இன்பமும் அளிக்கவேண்டும் என உங்களுடைய இதய அந்தரங்கத்திலிருந்து பிரார்த்தியுங்கள்.''

அவ்வாறே எல்லாரும் கையைத்குவித்து — மனத்தையும் குவித்து — பிரார்த்தனை புரிந்தனர்.

மீண்டும் ஊர்வலமாக அனைவரும் திரும்பினர். இப்போது சரத் சந்திரர் அஸ்திகலசத்தைத் தமது சிரஸில் தாங்கி எடுத்து வந்தார்.

சுவாமிஜி என்றுமில்லாத மன நிறைவை அன்று கண்டார். தாம் செய்யவேண்டிய மிகவும் முக்கியமான பணியைச் செய்தாகி விட்டது என்ற திருப்தி அவரிடம் பூரணமாகக் குடிகொண்டது.

''பிரபுவின் திருஉள்ளம் காரணமாக இன்று அவரது தர்ம க்ஷேத்திரம் ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது. பன்னிரண்டு நீண்ட ஆண்டுகளாக நான் சுமந்துவந்த பொறுப்பின் சுமையிலிருந்து இன்று தான் விடுபட்டேன். இன்று என் மனக்கண்முன் ஒரு காட்சி விரிகிறது. இந்த மடம் வித்யைக்கும் சாதனைக்கும் ஒரு பெரிய ஸ்தாபனமாக விளங்கப்போகிறது! சமய சர்வ கலாசாலையாக விளங்கப்போகும் இவ்விடத்தில் சந்நியாசிகளின் விடுதிகளை மையமாகக்கொண்டு அதனைச்சுற்றிலும் பக்திமிகுந்த கிருஹஸ்தர்கள் விடுகள் கட்டிக்கொண்டு வாழப்போகிறுர்கள்! தெற்குப் பகுதியில் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் என் பிரபுவிடம் ஈடுபடப்போகும் பக்தர்கள் வசிக்கப்போகிறுர்கள்!'' இப்படியெல்லாம் மகிழ்வுடன் கூறிவந்த சுவாமிஜி சிஷ்யர் ஒருவர் பக்கம் திரும்பி, ''நான் சொல்வதைப்பற்றி என்ன நினைக்கிறுய்?'' என்று கேட்டார்.

சத்தியம் தப்பாத அந்த சிஷ்யர், ''அதென்னமோ சுவாமி, இதெல்லாம் நேர்த்தியான கற்பனையாகத்தான் தோன்றுகிறது'' என்றுர்.

''என்ன சொன்னுய்? கற்பனையா? சிரத்தையில்லாததால் இப்படிச் சொல்கிறுய்! நான் எதிர்பார்ப்பதவ்வளவையும் காலம்

Koviloor Digital Library

பூர்த்திசெய்யும். இப்போது நான் வெறுமனே அஸ்திவாரம் இட்டிருக்கிறேன். அவ்வளவுதான்! மகத்தான செயல்கள் இனித்தான் நிகழப்போகின்றன! அதில் என் பங்கு எவ்வளவோ அதனை ஆற்றுவேன்'' என்றார் ஸ்ரீமத் விவேகானந்தர்.

சில தினங்களுக்குப்பின் மடத்தின் மனைக்கட்டில் சுவாமிஜி உலவும்போது அது எப்படியெல்லாம் உருவாகப்போகிறது என் பதை திர்க்கதரிசனத்தினால் மெல்லக் கூறிக்கொண்டே நடந்தார்.

''அதோ அங்குதான்சாதுக்களின் வாசஸ்தலம் அமையும். தெற்கே வித்யா ஆலயம் அமையும் வியாகரணம், தத்துவ சாஸ்திரம், கலைகள், விஞ்ஞானம், இலக்கியம், அணியிலக்கணம், ஹிந்து தர்ம சாஸ்திரங்கள், இதர சாஸ்திரங்கள் இவையும் ஆங்கிலமும் கற்பிக்கப்படும். அதோ அந்த இடத்தில் பிரம்ம சாரிகள் வசிப்பார்கள்; சாஸ்திரங்கள் பயிலுவார்கள். அவர் களுக்கு மடம் அன்னமும் வஸ்திரமும் அளிக்கும். ஐந்தாண்டுப் பயிற்சிக்குப்பின் பிரம்மசாரிகள் விரும்பினால் வீட்டுக்குத் திரும்பி கிருஹஸ்தராவதற்கு அநுமதிக்கப்படுவர். அல்லது அவர்கள் சுயேச்சைப்படி மடத்து முக்கியஸ்தர்களின் அநுமதியுடன் சந்நி யாச விரதம் பூணலாம். பிரம்மசாரிகள் ஒழுங்கீனமாக நடந்து கொண்டாலோ, துர்நடத்தையுடன் இருந்தாலோ அவர்களைக் கல்லூரியிலிருந்து நீக்க மடத்து ஆணைக்குழுவுக்கு அதிகாரமிருக் கும். இங்கு மாணவர்கள் ஜாதி மத வித்தியாசமில்லாமல் போதனை பெறுவர். ஆனால் குல ஆசாரப்படி ஒழுக விரும்புகிற வர்கள் தங்கள் உணவு முதலியவற்றுக்கு வெளியே ஏற்பாடு செய்துகொள்ளலாம். அதாவது நான் புராதன குருகுல முறையையே கடைப்பிடிக்க விரும்புகிறேன். நவீனக் கல்வி முறையில் பிர்ம்ம வித்யையை விரித்து விளக்கச் சிறிதும் இடம் கிடையாது

''இந்த மனைக்குத் தெற்கே உள்ள இடத்தையும் மடத்துக் காக வாங்கிவிடவேண்டியதுதான். ஸ்ரீராமகிருஷ்ணரின் பெயரில் மடத்தில் ஓர் அன்னசத்திரம் இருக்கவேண்டும். உண்மையான ஏழைகளுக்கும் சேவை தேவைப்படுகிறவர்களுக்கும் அன்னமளிக்கப் படவேண்டும். அவர்களை நாராயணர்களாக பாவித்து இப்பணி யைச் செய்யவேண்டும் இரண்டு மூன்றுபேருக்குஉணவளிப்ப தோடு தொடங்கினாலும் போதும். அன்ன சத்திரத்தை நடத்து வதற்கு பிரம்மசாரிகளைப் பயிற்றுவிக்கவேண்டும். அவர்கள் வீட்டுக்கு வீடு பிச்சையெடுத்தேனும் சத்திரத்துக்குத் திரவியம் தேடவேண்டும். இவ்வாறு சேவாசாதனத்தில் ஐந்தாண்டுகள் பயிற்சி பெற்றபின்தான் பிரம்மசாரிகளை வித்யாலயத்துக்கு அநு

Koviloor Digital Library

மதிக்கவேண்டும். அங்கு ஐந்தாண்டு கல்வி பெற்றபின்னரே விருப்பமுள்ளவர்கள் சந்நியாச திக்ஷைபெறலாம் விசேஷ ஆற்றல்பெற்ற பிரம்மசாரிகளின் விஷயத்தில் மடத்துத் தலைவர் இந்தப் பத்தாண்டு விதியைத் தளர்த்தலாம்......

''முதலில் பௌதிக வாழ்வுக்குத் தேவையான அன்ன தானம்; பிறகு அறிவுக்கான வித்யாதானம்; அதன்பின்பே ஆத்மாவுக்கான ஞானதானம். இம்மூன்றையும் இசைப்பது மனிதனை உருவாக்க உதவும். அன்னதானப் பணியினால் பிற ருக்காக ஸ்தூலமாக உழைக்கும் எண்ணமும், மனித சேவையை தெய்வப் பணியாகக் கருதும் பாவமும் பிரம்மசாரிகள் மனத்தில் ஆழப்பதியும். இதனால் அவர்கள் சித்த சுத்திபெறுவார்கள். அவர்களிடம் ஸாத்விகமான சிந்தனைகளும் நாட்டங்களும் உண் டாகும். இவர்களே லௌகிகமான அபரவித்யை, ஆத்மிகமான பரவித்யை இரண்டையும் கற்கவும் காக்கவும் முடியும்.

''அன்ன சத்திரத்தின் ஓர் அங்கமாக சேவாசிரமமொன்று இருக்கும். அங்கு நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்படும். காலக்கிரமத்தில் மடத்தின் மூலதனம் பெருகி, பசித்து வருகிற அவ்வளவு பேருக்கும் வயிறும் மனமும் நிரம்புமளவுக்கு உணவளிக்கப்படும். விஸ்தாரமான சமையற்கட்டில் வடித்த சாதக் கஞ்சி கழிவுகால் வழியாக கங்கையில் சேர்ந்து கங்கா நதியே வெள்ளை வெளேரென்று மாறும்! அடேயப்பா! அந்த மாதிரி இங்கே இந்த மடத்தில் பெரிய அன்னசத்திரம் நடை பெற்று நான் பார்ப்பேனானால் என் இதயம் எப்படிக் குதூ கலிக்கும்!''

சுவாமி விவேகானந்தரைப்போன்ற விசாலமான மனம் யாருக்கு வரும்? மக்களின் பசியைத் தீர்ப்பதில்தான் அவருக்கு எவ்வளவு ஆர்வம்?

பேசிக்கொண்டே கங்கை ஓரத்துக்குவந்த சுவாமிஜி நதி யையே நோக்கிக்கொண்டு நின்றார். நதியை நோக்கினாரா, அல்லது அந்த மடத்திலிருந்து ஸ்ரீராமகிருஷ்ண தர்மம் ஆறுகப் பிரவகிக்கப்போகும் எதிர்காலத்தை நோக்கினாரா? கங்கா நதி யின் ஆழத்தை அவர் அளந்தாரா, அல்லது எதிர்காலத்தையே துழாவி அளந்துகொண்டிருந்தாரா?

மோன சிந்தனை கலந்தது. பட்டுக் குரலில் சிஷ்யரை நோக்கிச் சொன்னார் புனிதர்:

''உங்களில் யாரொருவர் எப்போது விழித்தெழுந்த சிம்ம மாவீர்களோ? யார் சொல்ல முடியும்? ஜகன்மாதா உங்களில் ஒரே ஒருவரின் ஆத்மாவில் தனது திவ்விய சக்தியின் ஒரு பொறி

Koviloor Digital Library

யைக் கிளர்த்திவிட்டாலும் போதும் — இந்த நாடு முழுவதும் நூற்றுக்கணக்கான அன்னசத்திரங்கள் உதயமாகும். ஒன்று தெரிந்துகொள், அப்பனே! ஞானம், பக்தி, சக்தி எல்லாம் ஏற்கனவே ஒவ்வொரு ஜீவராசிக்குள்ளும் இருக்கின்றன. அவை வெளிப்படும் அளவிலுள்ள மாறுபாட்டால்தான் ஒருவர் பெரியவ ராகவும் இன்னொருவர் சிறியவராகவும் இருக்கிறார். நமக்கும் பூரணத்துவத்துக்கும் இடையே ஒரு திரை இழுத்துவிடப்பட் டிருக்கிறது. அதை விலக்கியவுடன் இயற்கை அப்படியே நம் காலடியில் வந்து விழுந்துவிடும். அப்போது நாம் நினைப்ப தெல்லாம் நடக்கும்.

''ஈசுவர சங்கல்பம் இருக்குமாயின் நாம் இந்த மடத்தை ஒற்றுமையின் சின்னமாக்குவோம். நமது ஐயன் எல்லா லட்சியங் களுக்குமுள்ள பூரண ஒற்றுமையை உடல்தரித்து விளக்கினவர். அந்த ஒற்றுமையை நாம் இங்கு வாழவைத்தால் ஐயனின் சிம்மா தனம் ஆத்மிக உலகில் என்றும் அசைக்கவொண்ணாததாக நிலை பெறும். பிராமணனிலிருந்து சண்டாளன்வரையில் யாரும், எந்த ஜாதி மதத்தைச் சேர்ந்த எவனொருவனும் இங்கு தனது லக்ஷியங்கள் நிறைவுற்று வெளியாவதைக் காண்பான் ஸ்ரீராமகிருஷ்ணரின் விசாலமான சிந்தனைகளை மக்களுக்குப் பரப்பு வதில் என் சக்திக்கு இயன்ற அவ்வளவையும் செய்வேன். நீங்களும் அப்படியே செய்யுங்கள் இத்துணைக்காலமாக அத் வைதம் வனங்களிலும் மலைக்குகைகளிலும் மறைந்து கிடந்தது. அதை அக்ஞாதவாசத்திலிருந்து மீட்டு நடைமுறை உலகுக்குப் பரப்பும் பணி எனக்கென்றே கிட்டிற்று. அத்வைத முரசத்தின் ஒலி ஒவ்வொரு வீட்டிலும் வாசலிலும், புல்வெளியிலும், சோலையிலும், மலையிலும், சமவெளியிலும் பிரதித்வனியிட வேண்டும். வாருங்கள்! நீங்கள் எல்லாரும் என் உதவிக்கு வாருங்கள். வந்து உங்களைப் பணிக்கு அர்ப்பணித்துக்கொள் ளுங்கள்.''

சுவாமிஜி இப்படி ஆவேசமாகக் கூறிவருகையில் சீடர் தமக்குத் தியானத்தின்மூலம் அத்வைதத்தை அநுபவிப்பதிலேயே மனம் செல்கிறதென்றும், செயலினால் அத்வைதாநுபவம் பெற இயலாது என்றும் கூறினார்.

''ஏன், தியானயோகியான சிவபெருமான் அத்வைதாநு பவம் உந்துவதால் ஆனந்த நடனமிடவில்லையா? அதுபோலும் நீயும் ஆட்டமிடு! இன்சுவைப் பண்டத்தை அதிகம் ரசிப்பவன் யார் — தானே அவ்வளவையும் உண்பவனா, பிறருடன் அதைப் பகிர்ந்து கொள்பவனா?'' என்று சுவாமிஜி கேட்டார்.

Koviloor Digital Library

1898-ம் ஆண்டு டிஸம்பர் எட்டாந் தேதியன்று ஸ்ரீராம கிருஷ்ணரின் திரு உருவச்சிலை பேலூர் மடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. எனினும் 1899-ம் ஆண்டு ஜனவரி இரண்டாம் தேதிதான் மடத்தினர் நிலாம்பர் முகர்ஜியின் தோட்டமாளிகையி லிருந்து பேலூர் மடத்துக்கு நிரந்தரமாகக் குடிபெயர்ந்தனர்.

Koviloor Digital Library

அத்தியாயம்—31

நலியும் உடலில் பொலியும் உயிர்

சுவாமிஜிக்குக் கொடிய ஆஸ்துமா கண்டது. ஆத்மாவை ஆஸ்துமா என்ன செய்யமுடியும் என்றெண்ணி சுவாமிஜி வழக்கம் போலவே சாதனைகள் புரிந்துவந்தார். ஆனால் வைத்திய நிபுணர்களோ தீவிரமான தியானமும் தவமும் அவரது தேகத்தைப் பாதிக்கும் எனக்கூறினர். அதிலிருந்து குருபாயிக்கள் சுவாமிஜி பரவசநிலைகளில் ஆழ்ந்துவிடாதவாறு அவரது உள்ளத்தைக் கீழே இழுக்க முயன்றனர். முடிகிற காரியமா அது ?

இப்படித்தான் ஒரு நாள் சுவாமிஜி நிஷ்டைக்கு அமர்ந்த போது அவர் சமாதியில் ஆழ்ந்துவிடாமல் செய்யவே சீடர் ஒருவர் அவரது அறைக்குள் வந்தார். கண்களை மூடிக் கனல் குன்றாக அமர்ந்திருந்தார் சுவாமிஜி. 'ஆஹா, அந்த கனலிலும் கனலாக அவரது இடது கண்ணில் காணும் செம்பொறி என்ன ?' சீடரின் பொறி கலங்கினாற்போலிருந்தது.

''சுவாமிஜி, இதென்ன கண்ணில் இரத்தத்துளி ?'' என்று அலறினார் அவர்.

சுவாமிஜி அமைதியாகவே பதில் சொன்னார். ''இரத்தத் துளியில்லை. இரத்தம் கட்டிப்போயிருக்கிறது. க்ஷீரபவானியில் அம்பாளைக் குறித்து மிகவும் தீவிரமாகத் தியானமிருந்தேனல்லவா ? கண்ணில் ரத்தக் குழாய் உடைத்துக் கொண்டிருக்க வேண்டும்.''

சுவாமிஜி தமது உடல்நிலையைப்பற்றி அவ்வளவு அலக்ஷியமாகப் பேசியது சீடருக்கு வியப்பாக இருந்தது.

அவர் மீண்டும் நிஷ்டையில் மூங்கிவிடக்கூடாது என்பதற்காகவே, ''உங்கள் அமரநாத யாத்திரைபற்றிச் சொல்லுங்களேன் !'' என்று கேட்டார்.

அப்படியே சுவாமிஜியும் விவரிக்கலானார். சீடர் எந்த உணர்வுகளிலிருந்து அவரை விடுவிக்க நினைத்தாரோ அதே உணர்வுகளில் முழுகத் தொடங்கினார். சடேரென்று அழுத்தம் திருத்தமான குரலில், ''நான் அமரநாதம் போனநாளாகசிவபெருமானே என் 'புத்திக்குள் புகுந்துவிட்டான். அவன் என்னை விட்டுப் போகவே மாட்டானும்'' என்று கோஷித்தார்.

* * *

விடியற்காலையிலிருந்து இரவு ஒன்பது மணிவரையில் தினந்தோறும் பக்தர்கள் சுவாமிஜியை நாடி வந்தபடியே இருப்பார்

Koviloor Digital Library

கள். அவர்களோடு உரையாடி உரையாடி சுவாமிஜி நாவுலர்ந்து போவது குருபாயிக்களுக்குச் சகிக்கமுடியாத ஒரு சித்திரவதையாக இருந்தது. வேளா வேளைக்கு சுவாமிஜியால் உண்ணவும் முடியாமல் அவரது உடல்நிலைக்கு ஊறு நேருவது காரணமாக அவரது அன்புச் சீடர்கள் சுவாமிஜியிடம் குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் மட்டுமே அடியார்கள் அவரைக்காண அநுமதிக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர். ஆனால் என்பும் பிறர்க்குரிய அன்புருவாம் சுவாமிஜியோ, ''என்னைப் பார்க்க அவர்கள் எங்கிருந்தெல்லாமோ அலைந்து திரிந்துகொண்டு வருகிறார்கள். நான் உட்கார்ந்த இடத்தைவிட்டசையாமல் அவர்களைப் பார்க்கமாட்டேன் என்று சொல்வது நியாயமாகுமா? என் உடம்பு சிறிது கஷ்டப்பட்டு விட்டுத்தான் போகட்டுமே!'' என்றார்.

''குருமஹராஜுக்கும் சுவாமிஜிக்கும் வித்தியாசம் எதுவுமே தெரியவில்லையே!'' என்றார் பிரேமானந்தர்.

அன்புமயமான சுவாமிஜியால் யாரையும் ஒதுக்கமுடியவில்லை. கோபுரத்தின்மேலும், வேசி வீட்டின் நிலாமுற்றத்திலும் ஒரே போல் சந்திரிகையைப் பொழியும் மதியமாக இருந்தார். ''இதென்ன, கண்டவர்களுக்கெல்லாம் இவர் மந்திரோபதேசம் செய்கிறாரே! இவர் மக்களை எடைபோடத் தெரிந்தவராகக் காணவில்லையே!'' என்றுகூடச் சீடர்கள் பேசிக்கொள்ள நேர்ந்தது.

''எனக்கா மக்களைச் சரியாக மதிப்பிடத் தெரியவில்லை?'' என மென்னகையுடன் கேட்டார் சுவாமிஜி. ''என்னிடம் வரும் ஒருவனுடைய மனத்திலிருப்பதை, அவனுக்கே தெரியாமல் அவனது உள் மனத்திலிருப்பதைக்கூட நான் அறிவேன். அவனது பூர்வஜன்மங்கள் உள்பட சகலமும் நான் அறிவேன். அதனால் நான் ஒருவனுக்கு அநுக்கிரகம் செய்யாமலிருக்கலாமா? பாவம் அந்தப் பேதைகள் சிறிது மனச் சாந்தி பெறுவதற்காக எத்தனையோ, கதவங்களைத் தட்டியிருக்கிறார்கள். அந்தக் கதவங்கள் திறக்கவில்லை. இப்போது கடைசி கடைசியாக என்னிடம் வந்திருக்கிறார்கள். நானும் அவர்களை நிராகரித்துவிட்டால் அவர்களுக்கு யார் துணை?'' என்றார் தயாமூர்த்தியாக விளங்கிய விவேகானந்த சுவாமி.

அதாவது நாளாக ஆக ஸ்ரீராமகிருஷ்ணராகவே மாறிக் கொண்டிருந்தார் ஸ்ரீமத் விவேகானந்தர்.

சகோதரி நிவேதிதையின் பள்ளியில் சுவாமிஜிக்கு அலாதியானதோர் ஈடுபாடு இருந்தது. நிவேதிதை இச்சமயத்தில் மிகவும் கடுமையான சாதனைகள் அநுஷ்டித்து வந்தாள். சிறிதளவு

Koviloor Digital Library

பாலும் பழமும் மட்டுமே உண்டுவந்தாள். வெறும் பலகையின் மீது படுத்துறங்கினுள். இதையெல்லாம் அறிந்த சுவாமிஜி ஒரு தாய் பெண்ணிடம் பரிவு கொள்வதுபோல் நிவேதிதையிடம் பரிவு கொண்டார். தாமே அறுசுவை உண்டி தயாரித்துத் தம்முடன் அவளையும் உண்ணச் செய்வார். அல்லது அவளைத் தமக்குச் சமைத்துப் போடச்சொல்கிற சாக்கில் அவளையும் உடன் சாப்பிடச் செய்வார். அவள் பக்குவம் செய்த உணவை மற்ற குருபாயிக்களும் பகிர்ந்துகொள்ளுமாறு செய்து, அவளையும் ஒரு ஹிந்துப் பெண்ணுகவே அவர்கள் கருதுமாறு செய்தார்.

ஒரு நாள் நிவேதிதை, யோகானந்தர், சரத் சந்திரர் ஆகியோருடன் சுவாமிஜி கல்கத்தா மிருகக்காட்சி சோலைக்குச் சென்ருர். குழந்தையாக அங்கு கும்மாளம் போட்டார் சுவாமிஜி.

சிம்மமும் புலியும் உண்பதைக்கண்டு ஞானசிம்மமும், நர சார்த்தூலருமான சுவாமிஜி குதூகலித்தார். அரவங்களைக் கண்டதும் ஊர்வனவாகிய இனத்தின் தோற்றுவாயைக் குறித்துப் பிரசங்கம் புரியத் தொடங்கிவிட்டார். குரங்குகள் இருந்த பகுதிதான் சுவாமிஜியின் 'குஷி'க்கு எல்லை நிலமாயிருந்தது. அவைகளை மனிதர்கள்போலவே கருதி, ''நல்லது உங்களுக்கு இந்த உடம்பு வந்தது எப்படி? என்ன கர்மம்செய்து இப்படியானீர்கள்?'' என்று கருணையுடன் வினவினுர்.

மிருகக்காட்சி சோலையின் சூப்பரிண்டெண்டான ராய் பகதூர் ராம பிரம்ம சந்யாலுடன் நீண்டநேரம் உரையாடினுர் சுவாமிஜி.

டார்வினின் பரிணுமக் கொள்கையைப்பற்றிப் பேசினுர் சூப்பரிண்டெண்ட். சுவாமிஜியோ அது கீழ்த்தரமானஜீவராசிகளுக்குத் தான் பொருந்தும் என்றும் மனிதனுக்குப் பொருந்தாது என்றும் கூறினுர். சூழ்நிலைக்கு ஏற்ப வாழ வசதியான பரிணுமத்தை ஜீவராசிகள் இயற்கையாகத் தேர்வு செய்துகொள்கின்றன என்ற டார்வினின் கொள்கையைவிட இயற்கையையே நிரப்புவதாகப் பதஞ்சலி கூறுவதுதான் சிறந்த கொள்கை என்ருர் சுவாமிஜி. ஜீவராசிகளெல்லாம் வாழ்க்கைக்காக போராட்டம் நடத்தி அவற்றில் எவை ஒரு சூழ்நிலையில் வாழ மிகவும் தகுதிபெற்றுள்ளனவோ அவை மட்டுமே வாழ்கின்றன என டார்வின் கூறுகிருர். ஆனுல் இந்தக் கொள்கையில் அடங்கியுள்ள போராட்டமும், போட்டியும் மனிதனின் முன்னேற்றத்துக்கு உதவாது, மாருக அவனைப் பின்தள்ளவே செய்யும் என்று சுவாமிஜி கூறினுர். மானசிகமான சில தடைகள்தான் மனிதனைப் பூரணத்துவத்திலிருந்து பிரிக்கின்றன என்றும் இந்தத் தடைகளைத் தகர்த்து

Koviloor Digital Library

முழுமை பெறுவதே ரிஷிகள்கூறிய மார்க்கம்; டார்வினின் பரிணாமத்தைவிட இந்த நிறைவு எவ்வளவோ மேம்பட்டது என்றும் சுவாமிஜி உரைத்தார். டார்வின் புற உலகச் சூழ்நிலையை வெல்வதுபற்றிக் கூறினார் எனில், ரிஷிகளோ கல்வி, பண்பு, தியானம், மன ஒருமைப்பாடு, துறவு, தியாகம் இவற்றின்மூலம் மானசிகத் தடைகளை வெல்வதற்கு வழி சொல்லியிருக்கிறார்கள் என்றார். ''பால் உணர்வு, உணவுத்தேவை இவை போன்ற காரணத்தால் ஜீவராசிகள் போராடியும் போட்டியிட்டும் முன்னேறின என்ற டார்வினின் கொள்கை மனிதனுக்குப் பொருந்தாது. நமது ரிஷிகள் பால் உணர்வு, பசி முதலிய இயற்கை வேகங்களையே வென்று அவற்றுக்கு மேல் சென்றவர்கள். ஜீவராசியாக முன்னேறுவது என்ற முன்னேற்ற ஆசைக்கும் அப்பால் சென்றவர்கள் அவர்கள். மானுட இயற்கையை அழித்து தெய்விகத்தில் ஒன்ற வழிகண்டவர்கள் அவர்கள்'' என்றார் சுவாமிஜி.

சூப்பரின்டெண்டுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. ''ஆஹா, சுவாமிஜி! தங்களைப்போல் மேல்நாட்டு சாஸ்திரம், கீழ்நாட்டு சாஸ்திரம் இரண்டும் கற்றவர்கள்தான் நமது தேசத்துக்கு இன்று தேவை. தங்களைப் போன்றவர்கள்தான் நமது படித்த மக்களின் ஒரு பக்ஷமான கருத்துக்களைத் திருத்தமுடியும்'' என்றார்:

புற இயற்கையுடன் போரிடுவதைவிட அக இயற்கையுடன் போரிட்டு வெல்வதே உண்மையான பரிணாமம் என்ற கருத்தை அன்று பலராம் பாபுவின் இல்லத்தில் கூடியிருந்த சில அன்பர்களுக்கும் விரித்துக் கூறினார் சுவாமிஜி.

நித்திராதேவி சுவாமிஜியை மிகவும் சோதிக்கலானாள். ஆஸ்துமா வியாதியஸ்தர்களுக்கே உரிய கொடுமைகளை இரவு முழுவதும் அநுபவித்தார் சுவாமிஜி. இருமல், குமட்டல், நுரையீரல்களில் உறுத்தல், மூச்சுத் திணறல் இப்படியாகப் புனித ஆத்மா உறைந்த அந்த திவ்விய தேகம் படாத பாடுபட்டது. புத்தியோ உடல்நலம் குன்றக் குன்ற மிகவும் விழிப்புற்று இயங்கிக் கொண்டிருந்தது. வியாதியைவிட இந்தப் புத்தி வேகத்தைத்தான் சுவாமிஜியால் தாங்கமுடியவில்லை. 'சிந்தனைகள் ஓயாதா?' என்று தவித்தார் சுவாமிஜி.

அன்று பகல் சுவாமிஜி பலராம பாபுவின் இல்லத்தில் சயனித்துக்கொண்டிருந்தார். தேசம் தேசமாய் அலைந்த அவரது பாதங்களைச் சீடரொருவர் பிடித்து விட்டுக்கொண்டிருந்தார். திடீரென சங்கொலியும், மணிநாதமும் எழும்பின.

''ஓ, இன்று சூரிய கிரகணம் அல்லவா? கிரகணம் பிடித்துவிட்டதைத்தான் இந்த ஓசை குறிக்கிறது. நல்லது!

Koviloor Digital Library

நான் தூங்குகிறேன்'' என்று கண்களை மூடிக்கொண்டார் சுவாமிஜி.

சிறிது நேரத்துக்குப்பின் அவர் எழுந்திருந்தார்.

''ஹூம்! கிரகணத்தின்போது ஒருவன் தனது விருப்பம் நூறுபங்கு நிறைவேறப் பெறுகிறுன். கிரகணத்தில் ஒரு காரியத்தைச் செய்தால் அதை நூறுபங்கு சிறப்பாகப் பின்னுல் முடிக்க முடியும் என்று சொல்வார்கள். நான் சிறிதுபோதேனும் ஆழ்ந்து உறங்கவேண்டும் என்று ஆசைப்பட்டேன். இதனுல் இனிமேலும் இரவுகளில் நித்திரை செய்யமுடியும் என்று நினைத்தேன். ஆனுல் தூக்கம் வந்தால்தானே! திவ்ய மாதா இந்த தேகத்துக்கு நல்ல நித்திரையைத்தந்து ஆசிர்வதிக்கவில்லை'' என்ருர் சுவாமிஜி மனத்தாங்கலுடன்.

இச்சமயத்தில் சுவாமிஜிக்கு வந்த ஏராளமான கடிதங்களில் பெரும் தனிகரும், அதைவிடப் பெரிய தர்மவானுமான ஜாம்ஷட்ஜி டாடாவின் கடிதத்தைக் குறிப்பிடவேண்டும்.

''தாங்கள் ஜப்பானிலிருந்து சிகாகோ சென்றபோது உடன் வந்த ஒரு சக பிரயாணியாக என்னை நீங்கள் நினைவு வைத்திருப்பீர்களென நம்புகிறேன். ஒருவர் சுயசுகத்தை மறந்து, ஆனுல் தனது சக்தியை அழித்துத் துறவியாகாமல், அதனை உபயோகமான முறையில் திருப்பிவிடும் இந்தியப் பண்புபற்றித் தாங்கள் கூறியதையெல்லாம் நான் இப்போது மிகவும் நினைத்துக் கொள்கிறேன்.

''இந்திய விஞ்ஞான ஆராய்ச்சி நிலையம் என்பதாக ஒன்றினை நான் நிறுவ உத்தேசிப்பதாகத் தாங்கள் அறிந்திருக்கலாம். இவ்விஷயமாகவே நான் தங்கள் வார்த்தைகளை நினைவு கொள்கிறேன். துறவு மனப்பான்மை கொண்டவர்கள் மடங்களிலோ, அல்லது இல்லங்களிலோ ஒன்றுகூடி விஞ்ஞானத்தை வளர்ப்பதற்கே தங்களை ஈடுபடுத்திக்கொள்வதைவிடத் துறவுப் பண்புக்குச் சிறந்த உபயோகம் இருக்கமுடியாது என்பது என் கருத்து. இப்படி ஓர் அமைப்பு ஏற்பட, தகுதிவாய்ந்த ஒரு தலைவர் இயக்கமொன்று நடத்திஞல், அதனுல் பற்றற்ற கடமையும், விஞ்ஞானமும், நம் நாட்டின் நற்பெயரும் வளர்ந்தோங்கும். இத்தகைய ஓர் இயக்கத்தின் தலைவராயிருப்பதற்கு விவேகானந்தரைவிடத் தகுதிவாய்ந்த ஒருவரை நான் அறிந்திருக்கவில்லை. இவ்விஷயத்தில் நமது புராதனப் பண்பை மக்களின் வாழ்வில் மின்சாரமாகப் பாய்ச்சும் பணியில் ஈடுபடத் தாங்கள் விரும்புகிறீர்களா? மக்களைத் தட்டி எழுப்பும் ஓர் உணர்ச்சி நிறைந்த குறுநூலுடன் தாங்கள் இயக்கத்தைத் தொடங்கலாம். அதன் வெளியீட்டுச் செலவு முழுவதையும் நான் மகிழ்ச்சியுடன் ஏற்பேன்.''

Koviloor Digital Library

— என்று சுவாமிஜிக்கு டாடா எழுதியிருந்தார்.

சுவாமிஜி இதற்கு எழுதிய பதில் துரதிருஷ்டவசமாக நமக்குக் கிடைக்கவில்லை.

டிஸம்பர் 16-ந் தேதியன்று சுவாமிஜி தாம் வைத்தியநாத க்ஷேத்திரத்துக்குப்போய் சில நாட்கள் ஓய்வு கொண்டு திரும்பப் போவதாகவும், பிறகு வேனில்காலத்தில் ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் மீண்டும் சென்று அங்கு வேதாந்தப்பணி எப்படி நடைபெறுகிறது என்பதைக் காண்பதோடு தமது உடலையும் தேற்றிக்கொண்டு வர உத்தேசித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

டிஸம்பர் 19-ந் தேதியன்று சுவாமிஜி ஹரீந்திரநாத் என்ற பிரம்மசாரி சிடருடன் வைத்தியநாதத்துக்குப் புறப்பட்டார். பாபு பிரியநாத் முகர்ஜி என்பவரின் இல்லத்தில் சுவாமிஜி தங்கினார். பெரும் பொழுதைத் தனிமையிலும் தியானத்திலுமே செலவிட்டார். தனிமை அவருக்கு நல்லது; ஆனால் தீவிரமான தியானம் உதவாது என்றல்லவா வைத்தியர்கள் சொல்லியிருந்தார்கள்? இரண்டையும் அவர் அநுபவித்ததால் ஆஸ்துமாவின் உக்கிரம் அதிகமாயிற்று. ஒரு நாள் அவர் ஆஸ்துமாவின் பயங்கர இருமலில் நீண்டநேரம் மூச்சுத்திணறியபோது நிகழக்கூடாதது நிகழ்ந்தேவிடும் என்று உடனிருந்தோர் அஞ்சவேண்டியதாயிற்று.

ஸ்ரீமதி மிருணாளினி போஸ் என்ற வங்காளி சிஷ்யைக்கு வைத்தியநாதத்திலிருந்து சுவாமிஜி எழுதிய ஒரு கடிதத்தில் அவரை ஒரு சிறந்த சமூக இயல் நிபுணராகச் சந்திக்கிறோம். அவர் எழுதுகிறார்:

''ரிஷி அல்லது முனிவர், ஏன் ஆண்டவனுமே, ஒருகுறிப்பிட்ட சமூக அமைப்பையோ இதர ஸ்தாபனத்தையோ வலுக்கட்டாயமாக உண்டுபண்ணமுடியாது. காலத்தின் தேவைகள் எப்படி நெரிக்கின்றனவோ அதற்கேற்பவே சமுதாயம் தன்னைக் காத்துக்கொள்வதற்காகச் சில வழக்கங்களைப் பின்பற்றத் தொடங்குகிறது. அந்த வழக்கங்களை ரிஷிகள் சாஸ்திரங்களாகப் பதிவு செய்திருக்கிறார்கள், அவ்வளவுதான். தனி மனிதனொருவன் தனது ரக்ஷணத்துக்காகத் தாற்காலிகமாக நன்மை பயக்கும் சில உபாயங்களைக் கடைப்பிடிப்பதையும், பிறகு இந்த உபாயங்களே பாதகமான விளைவுகளைத் தருவதையும் காண்கிறோம் அல்லவா? இவ்வாறே சமூகம் அவ்வப்போது உள்ள சூழலில் தன்னைக் காத்துக்கொள்ளப் பின்பற்றும் மார்க்கம் காலத்தின் போக்கில் பயங்கரமான விளைவை உண்டாக்குவதுண்டு

''(சமுதாயத்தில் தனி மனிதனின் சுதந்திரம் என்பது என்ன?) நீங்களும் நானும் பிறர்சொத்தைக் கையாடுவதற்குத்

Koviloor Digital Library

தடைகள் இல்லாமலிருப்பதுதான் சுதந்திரமா? அல்ல. சுதந்திரம் என்பது நமது இயற்கையான உரிமை. நம்முடைய உடலையும், அறிவையும், செல்வத்தையும், நமது விருப்பப்படி — ஆனால் பிறருக்கு எந்தத் தீங்கும் விளைவிக்காமல் — நாம் உபயோகிக்க அநுமதி பெற்றிருப்பதுதான் சுதந்திரம். செல்வத்தையும், கல்வியையும், அறிவையும் பெற சமுதாயத்தின் எல்லா மக்களும் ஒரே போன்ற வாய்ப்புக்களைப் பெற்றிருக்கவேண்டும்.

''உத்தரேத் ஆத்மனா த்மானம்!''

''தன்னைத் தன்னாலேயே உயர்த்திக்கொள்!''

''ஒவ்வொருவனும் தானே தனது விடுதலையை உழைத்துப் பெறட்டும். உடம்பு, உள்ளம், ஆத்மா இவை ஒவ்வொன்றுக்கும் விடுதலைதேடி முன்னேறுவது, பிறரும் இவ்வாறே சுதந்திரம்பெற உதவுவது — இதுவே மனிதனுகப் பிறந்ததன் மகத்தான பரிசு. இவ்வாறு சுதந்திரத்தை வழங்குவதற்கு இடையூறாக உள்ள சமூகச் சட்டங்கள்யாவும் தீமை பயப்பவை. அவற்றை அழிக்க விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும். மனிதன் சுதந்திரப்பாதையில் முன்னேற உதவும் ஸ்தாபனங்களுக்கு ஊக்கமளிக்கவேண்டும்.''

சுவாமிஜி வைத்தியநாதம் சென்றதற்கு மறுநாள், அதாவது டிஸம்பர் 20-ந் தேதி தூய அன்னை புதிய பேலூர் மடத்தைப் பார்வையிட்டாள். 1899-ம் ஆண்டு ஜனவரி இரண்டாந்தேதி மடம் நீலாம்பர் முகர்ஜியின் தோட்டமாளிகையிலிருந்து பேலூருக்கு இடம் பெயர்ந்தது. இன்றும் ஸ்ரீராமகிருஷ்ண ராஜதானியாக அந்த மடம்தான் விளங்குகிறது.

சகோதரி நிவேதிதை பிரம்மசாரிகளுக்கு உடற்கூறு இயல், தாவர இயல், சித்திரக்கலை, ஆகியவற்றில் பாடம் எடுத்தாள். ஏறக்குறைய தினந்தோறும் சுவாமிஜிக்கு மடத்து நிர்வாகம் நடவடிக்கைகள்பற்றி ஒரு கடிதம் வைத்தியநாதத்துக்கு அனுப்பப் பட்டது.

ஜனவரி மாதக் கடைசியில் சுவாமிஜி பேலூர் மடத்துக்குத் திரும்பினர். குருபாயிக்களுக்கும் சிஷ்யர்களுக்கும் அவர்களது நிரந்தர வாசஸ்தலத்தில் பயிற்சிகளும், உபதேசங்களும் அளித்தார் சுவாமிஜி.

பலவிதங்களில் பயிற்சி நடைபெற்றது. வாழ்க்கையின் அல்பமான அம்சங்களிலும் மக்கள் சிரத்தையுடன் ஈடுபடவேண்டும் — என்பதை பவஹாரி பாபாவிடமிருந்து கற்றிருந்த சுவாமிஜி

Koviloor Digital Library

இப்போது அதைத் தாம் நடைமுறையாக்கினர்; தமது சீடர்களையும் நடைமுறையாக்கச் செய்தார். 'புகையிலைக் குழலில் நன்ருகப் புகையிலையைக் கிட்டிக்க அறிந்தவன் முறையாகத் தியானம் செய்யவும் அறிவான்' என்பார் சுவாமிஜி.

சமையல் செய்வது முதலிய வேலைகளில் தாம் ஈடுபட்டு, சுச்சிதமாகவும் சுசிருசியாகவும் செய்வதுபோலவே மற்றவர்களையும் செய்ய வைத்தார். கட்டுப்பாட்டுக்குப் பிரதானமான இடமளித்தார்.

சமையல் பணிபோலவே சமூகப் பணி, சமயப்பிரசாரப் பணி இவற்றிலும் சீடர்களைச் செம்மையாக உருவாக்கினர் சுவாமிஜி. திடீரென ஒரு சீடரைக் கூப்பிட்டு இதர சந்நியாசிச் சீடர்களும், பிரம்மசாரிகளும், கிருஹஸ்தச் சீடர்களும் கூடியுள்ள இடத்தில் உரைநிகழ்த்தச் சொல்வார். சங்கோசப்படுபவர்களையும் ஊக்கிவைத்து அபாரமாகப் பேசச் செய்துவிடுவார். இப்போது அவர் கண்டிப்புக்காரராக இருக்கமாட்டார். அவர்கள் பேசும்போது தாராளமாக 'சபாஷ்' போடுவார். பேசி முடிந்ததும் 'அச்சா' என்று தட்டிக்கொடுப்பார். சிஷ்யர் ஒரு பணியைத் திறம்பட நடத்திவிட்டால் அவரை வாயாரப் புகழத் தயங்கமாட்டார் சுவாமிஜி. திறம்பட நடத்தவேண்டும் என்பது கூட இல்லை. சிரத்தையுடன் பணியாற்றி அது தோற்றுப் போனாலும்கூட சுவாமிஜி பாராட்டத் தயங்கமாட்டார்.

சுவாமிஜியின் மகத்தான சாதனை, தம்மைப்போலவே தமது சிஷ்யர்களையும் அஞ்சா நெஞ்சராக்கி எப்பணியையும் தீரத்துடன் ஏற்கச் செய்ததுதான். 'அஞ்சற்க, அஞ்சற்க' என்பதே அல்லவோ அவர் அனவரதமும் முழங்கிவந்த மந்திரம். அதேமந்திரத்தைச் சீடர்களின் ரத்த நாளங்களிலெல்லாம் பாயச் செய்துவிட்டார்.

''சீடர்கள் நீந்தக் கற்கவேண்டுமென்பதற்காக அவர்களின் உயரத்துக்கு அதிகமாக ஆழமுள்ள நீரில் அவர்களைத் தூக்கி எறிவார் சுவாமிஜி'' என்று கூறுகின்றனர் அவரது சரிதத்தைத் தரும் சீடர்கள்! அவர்களின் சக்தியில் அவருக்கு அவ்வளவு நம்பிக்கை!

அமெரிக்காவிலிருந்து சுவாமிஜி வரவழைத்திருந்த சுவாமி சாரதானந்தர் மடத்து நிர்வாகத்தை மிகவும் சிறப்பாக நடத்தி வந்தார். யந்திர கதியில் காரியங்கள் நடக்கும்; ஆனல் அப்படிக் காரியம் செய்பவர்கள்மட்டும் யந்திரமாகிவிடாமல் சைதன்யப் பிழம்புகளாக இருந்தனர். சுவாமி சாரதானந்தரும், சுவாமி துரியானந்தருமாக வினவிடை வகுப்புக்களும், சம்ஸ்கிருத மொழிப் போதனையும், கீழ்நாட்டு — மேல்நாட்டுத் தத்துவ

Koviloor Digital Library

சாஸ்திர பாடங்களும் நடத்திவந்தனர். தினந்தோறும் தியானத்துக்கென்றே ஒரு வகுப்பு உண்டு. மடத்தின் இளம் அங்கத்தினர்கள் பொறுப்புணர்ந்தவர்களாகவேண்டும் என்பதற்காக அவர்களிடமே நிர்வாக காரியங்களில் பெரும் பகுதி ஒப்படைக்கப் பட்டிருந்தது. அவர்கள் ஓர் அமைப்பாக அமைந்து தங்களிலேயே ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். மாதம் ஒரு முறை தலைவர் தேர்வு நடக்கும். ஆகையினால் எல்லாருமே முக்கியப் பொறுப்பைப் பெற்று ஆற்ற முடிந்தது. தபஸ்யைக்கென்றே சிலருக்கு முழுப்பொழுதையும் ஒதுக்கிவிட்டு, மற்றவர்களில் ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட வேலையை அளிப்பார் தலைவர். இம்மாதம் தபஸ்யை செய்பவர்கள் அடுத்த மாதம் கர்மத்தில் ஈடுபடுவர்.

மடம் சுத்தமாக நடைபெற்றது. நோயாளிகள் முறைப்படி பேணப்பட்டனர். ஆத்மிகப் பயிற்சியும் அறிவியல் போதனையும் செவ்வனே நடைபெற்றன.

மடத்து அங்கத்தினர்கள் சரியாகப் பயிற்றுவிக்கப்பட்டால் உலகையே அசைக்கமுடியும் என்ற நம்பிக்கை சுவாமிஜிக்கு இருந்தது. அவர் கூறினார்:

''உலகத்தின் சரித்திரம் என்பது, தங்களிலேயே நம்பிக்கை கொண்டிருந்த ஒரு சில மனிதர்களின் சரித்திரம்தான். இந்த நம்பிக்கையானது அந்தர்கதமாகவுள்ள தெய்விகத்தை வெளிப் படுத்துகிறது. நீங்கள் எதையும் சாதிக்கலாம். எல்லையற்ற உங்களது ஆற்றலை வெளிப்படுத்தப் போதுமான அளவுக்கு நீங்கள் பரிசிரமப்படாதபோதுதான் தோற்றுப் போகிறீர்கள்! ஒருவன் சுய நம்பிக்கையை எப்போது இழக்கிறானோ அப்போது மரணம் வந்துவிடுகிறது.

''முதலில் உங்களிடமே நம்பிக்கை கொள்ளுங்கள். அதன் பின் ஆண்டவனை நம்புங்கள்! விரல்விட்டெண்ணக்கூடிய இளைஞர்களால் உலகையே அசைத்துவிடமுடியும். உணர்வதற்கு ஓர் இதயமும், எண்ணுவதற்கு ஓர் அறிவும், உழைப்பதற்கு ஓர் உறுதியான உடலும் நமக்கு வேண்டும் இதயத்துக்கும் அறிவுக்கும் போராட்டம் மூளுமானால் இதயத்தையே பின்பற்றி நடவுங்கள்!''

சமரஸத்தை விசேஷமாகப் போதித்ததே — ஸ்ரீராமகிருஷ்ண — விவேகானந்தரின் விசேஷப் பெருமை. எனினும் சமரஸம் என்ற பெயரில் கொள்கைகளை விட்டுக்கொடுத்து 'ராஜி' செய்துகொள்வது தமது சீடர்களுக்குச் சிறிதும் தகாது என்று சுவாமிஜி அடிக்கடி எடுத்துக் கூறிவந்தார்.

Koviloor Digital Library

''எனது குழந்தைகள் தீரராயிருத்தல்வேண்டும். ஒருபோதும் அவர்கள் விட்டுக்கொடுத்து ராஜி செய்துகொள்ளலாகாது. பதினுன்கு ஆண்டுகள் சத்தியத்திலிருந்து சிறிதும் பிறழாமல் சத்திய சேவை புரிந்தீர்களாயின் நீங்கள் சொல்வதை மக்கள் நம்பி ஏற்றுக்கொள்வார்கள்'' என்பார் சுவாமிஜி.

பர்த்ருஹரியின் சுலோகமொன்றை அடிக்கடி கூறி விளக்கு வார்: ''ஞானிகள் உன்னைப் புகழட்டும்; அல்லது உலகம் உன்னை இகழட்டும். செல்வம்வந்து குவியட்டும்; அல்லது வறுமை உன்னை ஆட்கொள்ளட்டும். ஒரு நாள் வனத்துத் தழைகளைத் தின்று பசிதீர்த்துக்கொள்: மறுநாள் பஞ்சபக்ஷ்ய பரமான்னத்துடன் சாப்பிடு. இவற்றில் எது நேர்ந்தாலும் இடமோ வலமோ பாராமல் நேராகச் செல்வாய்.''

சந்நியாசிதான் உண்மைத் தொண்டனுக யிருக்கமுடியும் என்று திரும்பத்திரும்பக் கூறிவந்தார் சுவாமிஜி. உணர்ச்சி வசப்படாமலும், பற்று இல்லாமலும் இருப்பவர்களால்தான் உலகுக்கு அதிகபட்சமான நன்மையைச் செய்யமுடியும் என்பார். ''புத்தரையும், இயேசுநாதரையும்விடப் பெரிய தொண்டர் யார்?'' என்று கேட்பார். சுவாமிஜியின் கருத்துப்படி லௌகிக மான பணி என்பதே கிடையாது. எல்லாமே ஆத்மிகமான புனிதப் பணிதான். பணி என்பது பூஜையே என்று கருதினுர் அவர்.

ஏழைகளுக்கு உணவளிப்பது, வெள்ளம் முதலிய இயற்கைக் கொடுமைகளின்போது கஷ்டநிவாரண சேவை செய்வது, நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பது, கொள்ளைநோய் கண்ட ஊர்களில் சுகாதாரத்தை ஏற்படுத்துவது, அநாதாசிரமங்கள் நிறுவுவது, கல்விப் பணிபுரிவது — இவை சுவாமிஜி தமது சீடர் களுக்கு விதித்த தொண்டுகள். இவை யாவற்றையும் ஸ்ரீராம கிருஷ்ண மடங்கள் இன்றும் சிறப்புறப் புரிந்து உலகின் பாராட் டைப் பெற்றிருப்பது கண்கூடான உண்மை.

சங்கீதம், தோட்டக்கலை, மிருக வளர்ப்பு இவற்றையும் சுவாமிஜி சீடர்களுக்குக் கற்பித்து அறிவோடும், அன்போடும், அழகு சேருமாறு செய்தார். தேகாப்பியாசங்களும் சொல்லித் தருவார் சுவாமிஜி. ''சமய ராணுவம் ஒன்றுக்கு வீரர்களைத் தேடுகிறேன் நான். எனவே சேவகர்காள், இரும்புத் தசைகளும் உருக்கு நரம்புகளுமாக உடலை வலுவாக்கிக் கொள்ளுங்கள்! வனவாசியான துறவிதான் உடலை வறுத்திக்கொள்ளவேண்டும். நீங்கள் ஜனசேவை செய்யப் பிறந்தவர்களல்லவா?'' என்பார். சீடர்களை நிறையப் படிக்கச்செய்து கிழக்குக்கும் மேற்குக்கும்

Koviloor Digital Library

கருத்துப் பரிவர்த்தனை ஏற்படுத்துவதிலும் சுவாமிஜி பெருத்த கவனம் செலுத்தினுர்.

சிடர்கள் சிரத்தையோடு ஜபமும் தியானமும் புரிவதைக் காணும்போது சுவாமிஜிக்கு ஏற்படும் மகிழ்ச்சி இவ்வளவு அவ்வளவு அல்ல. தபஸ்யைதான் சித்தத்தைச் சுத்தப்படுத்தி சுயநல மற்ற சேவையில் ஒருவரைச் செலுத்தும் என்பதை மீண்டும் மீண்டும் அவர் வலியுறுத்தி வந்தார்.

ஆரம்பகாலத்தில் பிரம்மசாரிகள் உணவு விஷயத்தில் மிகவும் நியமத்துடன் இருக்கவேண்டும் என்பதில் கண்டிப்பாக இருந்தார் சுவாமிஜி. ''ஆகாரக் கட்டுப்பாடு இல்லாமல் மனத்தைக் கட்டுப் படுத்த முடியாது. மிகையாக உண்பதால் உடல் உள்ளம் இரண் டும் கெட்டுவிடும்'' என்பார் சுவாமிஜி. பிரம்மசாரிகள் அந்நிய மதத்தினர் புசித்தபின் அந்த உணவைச் சாப்பிடக்கூடாது என்று கூட சுவாமிஜி ஆசாரவிதி ஏற்படுத்தியிருந்தார்.

போலித்தனமாக சந்நியாசி வாழ்க்கை வாழ்வதைவிட, பிரம்மசாரிகள் வீடு திரும்பிவிடுவது, சிலாக்கியம் என சுவாமிஜி கருதி, இவ்வாறு அவர்கள் மடத்தைவிட்டுச் செல்ல அநுமதித்து ஒரு விதியே இயற்றியிருந்தார். பிரம்மசாரிகள் உண்மையான பிரம்மசாரிகளாக இருக்கவேண்டும். அதிகாலையில் எழுந்திருந்து சந்தியாவந்தனமும் இதர அநுஷ்டானங்களும் செய்யவேண்டும். வேளை தப்பாமல் நிர்ணயத்தோடு உண்ணவேண்டும். அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ளும்போதுகூட சமய சம்பந்தமான விஷயங்களுக்குப் புறம்பாகச் செல்லக்கூடாது. ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் அவர்கள் செய்தித்தாள்களைக்கூடப் படிக்கக்கூடாது. — இவ்வாறெல்லாம் கட்டுத்திட்டங்கள் செய்திருந்தார் சுவாமிஜி இத்தனைக் கட்டுத்திட்டங்களையும் தாங்கச்செய்யும் அன்பை அவர் கள்மீது பொழிந்தார்.

செல்வந்தரான கிருஹஸ்த சிஷ்யர்களை மடத்தினர் சுற்றிவர லாகாது என்பதில் மிகவும் கண்டிப்பாக இருந்தார் சுவாமிஜி.

''லௌகிக மக்களுக்கு மடத்து விவகாரத்தில் தலையிட உரிமை கிடையாது. சந்நியாசிகளுக்குத் தனிகர்களிடம் எந்த வேலையும் இருக்கக்கூடாது. அவர்களின் வேலையெல்லாம் ஏழை களுக்கே. இதை மீறும் சந்நியாசி விலைமகளுக்குச் சமானமே யாவான். காம — காஞ்சனம் எனப்படும் பெண்ணுசை — பொன்னுசைகளில் ஈடுபட்ட கிருஹஸ்தர்களோடு பேசும்போது ஸ்ரீராமகிருஷ்ணரின் உதடுகள் பற்றி எரிந்ததுண்டாம். உலக ஆசை நிரம்பியவர்களும், உள்ளத் தூய்மை அற்றவர்களும் அவரை ஸ்பரி சிக்கநேர்ந்தால் அதைத் தாங்கமுடியாமல் தவித்தார் குருமஹராஜ்.

Koviloor Digital Library

''அந்தத் துறவி வேந்தனை லௌகிக மக்களால் பிரசாரம் செய்யமுடியாது. துறவு இல்லாமல் மதம் நிலை நிற்கவே முடியாது'' என்பார் சுவாமிஜி.

கிருஹஸ்த சிஷ்யர்கள் சாதுக்களோடு நெருங்கிப் பழகக் கூடாது; அவர்களுடன் சேர்ந்து உண்ணக் கூடாது; அவர்களுடைய ஆசனங்களில் அமரக்கூடாது என்றெல்லாம் வைத்திய நாதத்துக்குச் சென்று திரும்பியபின் சில விதிகளை வகுத்தார் சுவாமிஜி.

''இல்லறத்தார் நெருங்கினாலே அவர்களின் உடலிலிருந்தும், உடையிலிருந்தும் காமத்தின் துர்கந்தம் வீசுவதை இப்போதெல்லாம் நான் உணருகிறேன். தூய்மையும் துறவும் உள்ளவர்கள் லௌகிகமானவர்களின் ஸ்பரிசத்தையோ சங்கத்தையோ தாங்க முடியாது என்று சாஸ்திரங்கள் கூறுவது எதனால் என்று இப்போது எனக்குத் தெரிகிறது. பெண்களோடு மட்டுமின்றி, பெண்களோடு தொடர்புகொள்பவர்களிடமிருந்தும் பிரம்மசாரிகள் விலகியிருக்க வேண்டும் என்று சாஸ்திரங்கள் கடுமையாகச் சொல்வது எவ்வளவு சரியானது, விவேகமானது என்று இப்போது காண்கிறேன். பிரம்மசாரிகள் சந்நியாசத்தில் ஊன்றி நின்றபின் அவர்கள் இல்லறத்தாருடன் நெருங்கிப் பழகுவதில் தவறில்லை'' என்றார் சுவாமிஜி.

மகான்களின் மனநிலைதான் எவ்வளவு விதங்களில் இயங்குகிறது? படுபாவிகளையும் பரமனாகக் கண்டு உடன் சேர்த்துக் கொள்கிற நிலையை ஸ்ரீராமகிருஷ்ணர், ஸ்ரீமத் விவேகானந்தர் ஆகியோரின் வாழ்வில் காண்கிறோம். அதேபோல் ஒரு சிறு தவறு புரிந்தவர்களையோ, தூய்மையில் சிறிது குறைந்தவர்களையோ காணமுடியாமல் அவர்களின் கண்கள் நொந்ததையும் காண்கிறோம்! முன்னது அத்வைத நிலை. பின்னது ஆசாரிய நிலை. உலகை உய்விக்கவேண்டுமெனில் இங்குள்ள தீமைகளைத் தீமையாகக் கண்டேயாகவேண்டும் அல்லவா?

சுவாமி விவேகானந்தர் கிருஹஸ்தர்களையோ, பெண்களையோ தாழ்வாக எண்ணினார் என்று யாரும் எண்ணிவிடக்கூடாது. ஸ்ரீராமகிருஷ்ணரை எப்படி அவர் வழிபட்டாரோ, அதேபோல சாரதையையும் வழிபட்டார். சாரதா தேவியும், பெண் சீடர்களும் கல்கத்தாவில் எவ்வளவு சீலத்துடன் வாழ்கிறார்கள் என்பதை சுவாமிஜி பெரிதும் மதித்து அந்த சீலம் மடத்தின் ஆண் அங்கத்தினர் அங்கு செல்வதால் பாதிக்கப்படும் என்ற அளவுக்கு எண்ணமிட்டார். தூய அன்னையை வணங்குவதற்காகக்கூட அங்கு ஆடவர் யாரும் செல்லவேண்டியதில்லை என்று அவர் கட்டுப்பாடு செய்ததும் உண்டு.

Koviloor Digital Library

இதேபோல் இல்லறத்தாராகிய சீடர்களை அவர் மிகவும் சிலாகித்த சந்தர்ப்பங்கள் பல. ''பிறரை ரக்ஷிக்கவேண்டும், பிறருக்கு சேவை செய்யவேண்டும், நல்லமுறையில் பொருள் ஈட்டவேண்டும், கருணையுடன் அதைச் செலவிடவேண்டும், ஆத்ம லக்ஷியத்தை அடையும் முறையிலேயே இல்லறத்தையும் நடத்த வேண்டும் — இப்படியெல்லாம் ஆர்வம்கொண்ட ஆதரிச கிரு ஹஸ்தனின் மகிமையை நான் உணர்கிறேன். சில ஆத்மாக் களுக்குத் திருமணம் ஒரு பாதையாக — திருமணம் ஒன்றே பாதையாக—இருக்கிறது'' என்று சுவாமிஜி சொல்லியிருக்கிறார்.

''வன விருட்சமொன்றின் அடியே களைத்துப்போன இரண்டு யாத்திரீகர்கள் வந்து தங்கினர். அப்போது அம்மரத்தில் வசித்த பட்சிகள் தங்களையே நெருப்பில் வாட்டிக்கொண்டு அவர்களுக்கு உணவாயின. 'இல்லறத்தாராகிய நாம் இந்த சாதுக்களுக்கு சத்காரம் செய்யவேண்டாமா?' என்ற உணர்விலேயே அவை இப்படிச் செய்தன. இந்த ஆதரிச இல்லற தர்மமே சந்நியாசி களின் சேவா நெறிக்கும் லட்சியமாகும்'' என்பார் அவர்.

''நான் எந்தத் தொண்டுக்கும் தயார். என் குருபாயிக்கள் இனி என் ஆயுட்காலம் முழுவதும் நான் மடத்துச் சாக்கடையைக் கழுவுவதிலேயே செலவிடவேண்டும் என்று சொன்னால் நான் இப்போதே அந்த உத்தரவுக்குக் கீழ்ப்படிவேன். பணியத் தெரிந் தவன்தான் பெரிய தலைவனாக முடியும்'' என்று கூறுவார் சுவாமிஜி.

விரல்விட்டு எண்ணக்கூடிய சீடர்களை வைத்துக்கொண்டு உலகையே புரட்டிவிடலாம் என்று நம்பிய சுவாமிஜியே சில சமயங்களில் மிகவும் மனத்தளர்ச்சி கொண்டதும் உண்டு. ''இந்த நாட்டுக்காகப் பிராணத்தியாகம் செய்ய ஈராயிரம் வாலிபச் சீடர்கள்கூட என்னைவந்து அடையவில்லையே! ஈராயிரம் இளைஞர்களும், முப்பது கோடி ரூபாயும் என்னிடம் இருந்தால் நான் இந்தியாவின் பிரச்னை அவ்வளவையும் தீர்த்து, பாரத மாதாவைச் சுயபலத்தில் செல்ல வைத்துவிடுவேனே'' என்பார். ''எனினும் இருப்பதை வைத்துக்கொண்டு என்னாலியன்ற அவ் வளவையும் செய்வேன். என் அந்த உணர்ச்சியை மற்றவர்க்கும் புகட்டுவேன். எனக்கு ஓய்வென்பதே கிடையாது. நான் நுகத்தடியில்பூட்டிய மாடாகவேதான் சாவேன். நான் வேலையை விரும்புகிறேன். வாழ்க்கை என்பது ஒரு போராட்டமெனில் மனிதன் போராடிக்கொண்டேதான் இருக்கவேண்டும். நான் போர்புரிந்தே வாழ்வேன்; போர்புரிந்தே மடிவேன்'' என்று கூறுவார் அந்த தியாகி.

Koviloor Digital Library

ஒரு நாள் மாலை மடத்திலே முன்னும் பின்னுமாக உலவிக் கொண்டிருந்த சுவாமிஜி திடீரெனக் கொந்தளிப்படைந்தார். அருகேயிருந்த ஒரு சந்நியாசிச் சிடரை நோக்கி, ''என் மகனே கேள்! உலகத்துக்காகவே பிறந்து உலகத்துக்காகவே தமது உயிரைத் தந்தார் ஸ்ரீராமகிருஷ்ணர். நானும் அப்படியே பிராணத்தியாகம் செய்வேன். நீயும், உங்களில் ஒவ்வொருவரும், அப்படியே செய்யவேண்டும். இப்போது நடந்துள்ள வேலைகள் எல்லாம் ஓர் ஆரம்பம்தான். நம்முடைய வாழ்வின் ரத்தத்தைச் சிந்துவதால் அதிலிருந்து மகத்தான தேவதூதர்களான வீரர் களும், சூரர்களும் தோன்றுவார்கள். அவர்கள் உலகத்தையே ஒரு புரட்டுப் புரட்டிவிடுவார்கள்'' என்றெல்லாம் பேசிக் கொண்டே போனுர் சுவாமிஜி. சந்நியாசிதான் நடமாடும் பிரத்தியட்ச தெய்வம்; வேத சிரஸின்மீது நிற்பவன்; மதம், மதநூல், கோவில் எல்லாவற்றுக்கும் மேம்பட்டவன் அவன் என்று பலபடித்தாகக் கூறி, ''தீர, சந்நியாசியாக உன்வழி செல்வாய். துறவு, சாந்தி, சுதந்திரம், அருள் இவற்றைக் கொடியாக ஏந்திச் செல்வாய்'' என்று சிடரைத் தூண்டினுர்.

வைத்தியநாதத்திலிருந்து திரும்பிவந்த மறுநாளே சுவாமிஜி, தமது குருபாயிக்களும் சிடர்களும் நாடெங்கும் சென்று ஸ்ரீராம கிருஷ்ணரின் உபதேசங்களைப் பரப்பத் தயாராக இருக்கவேண்டு மென ஆணையிட்டார். சுவாமிஜி விரஜானந்தரையும், பிரகாசா னந்தரையும் கூப்பிட்டு உடனே டாக்காவுக்குச் சென்று சமயப் பணி புரியுமாறு பணித்தார்.

''நான் என்ன பிரசாரம் செய்வேன்? எனக்கு ஏதும் தெரியாதே'' என்ருர் விரஜானந்தர்.

''அப்படியானுல் அதையே போய்ப் பிரசாரம் செய். ஒன் றும் தெரியாது என்று வெளிப்படக் கூறுவதே மகத்தான உப தேசம்தான்'' என்ருர் விடாக்கண்டரான சுவாமிஜி.

''இன்னும் நான் என் விடுதலைக்கே வழி தேடிக்கொள்ள வில்லையே. பிறருக்கு எப்படி என்னுல் வழிகாட்ட முடியும்?'' என்று மீண்டும் ஆட்சேபித்தார் விரஜானந்தர்.

உடனே சுவாமிஜி இடியேறுபோல், ''உன்னுடைய விடு தலையைமட்டும் நாடிப்போனுல் நீ நரகத்துக்குத்தான் போவாய்! பிறருடைய விடுதலைக்கு வழிதேடும்போது தலைசிறந்த தத்து வத்தை அடைவாய். சுயமுக்தியிலுள்ள ஆர்வத்தைக் கொல். அதுவே சாதனைகளிலெல்லாம் பெரிய சாதனை'' என்ருர்.

அவரது குரல் திடீரெனக் குழைந்தது. அன்புமயமாகி, ஈரம் சொட்டும் குரலில், ''பணி செய் பிள்ளாய்; பணி செய்.

Koviloor Digital Library

இதயபூர்வமாக, ஆத்ம பூர்வமாகப் பணி செய். பிறருக்காக உழைப்பதில் நரகம் சென்றால்தான் என்ன? தனக்காகப் பாடு பட்டு மோக்ஷம் பெறுவதைவிட அது சிலாக்கியமில்லையா?'' என்று கேட்டார்.

பிறகு அவ்விரு சிஷ்யர்களைமட்டும் தம்முடன் மடத்தின் பூஜா கிருஹத்துக்கு அழைத்துச் சென்றார்.

மூவரும் தியானம் புரியலானார்கள்.

சுவாமிஜி சமாதி நிலையில் ஆழ்ந்துவிட்டார்.

சடேரெனக் கண்திறந்து கம்பீரம் அடர்ந்த குரலில், ''இப் போது நான் எனது சக்தியை உங்களுக்குள் செலுத்தப்போகிறேன். ஆண்டவன் எப்போதும் உங்கள்பின் நிற்பான்'' எனக் கூறினார்.

அன்று முழுவதும் இவ்விரு சீடர்களையும் அன்புவெள்ளத்தில் ஆழ்த்தினார் சுவாமிஜி. அவர்கள் எப்படிப் பிரசாரம் புரிய வேண்டும், யார்யாருக்கு எந்தெந்த மந்திரங்களை உபதேசிக்க வேண்டும் என்பதையெல்லாம் சொல்லிக் கொடுத்தார்.

விரஜானந்தரும், பிரகாசானந்தரும் பிப்ரவரி நான்காம் தேதி டாக்காவுக்குப் புறப்பட்டனர்.

மூன்று நாட்களுக்குப்பின் சாரதானந்தரையும், துரியானந் தரையும் கூர்ஜரத்தில் பிரசாரம் புரிவதற்காக சுவாமிஜி அனுப்பி வைத்தார்.

சுவாமிஜி இச்சமயத்தில் சம்ஸ்கிருதத்திலுள்ள சமய நூல் களையும், இலக்கியத்தையும் ஆழ்ந்து படிக்கலானார். சம்ஸ்கிருதக் கல்வி நாட்டுக்கு மிகவும் அவசியம் என்று அவர் கருதினார். நீலாம்பர் முகர்ஜியின் தோட்டமாளிகைக்கு மடம் மாறிய நாளாக அவர் வேதம், உபநிஷதங்கள், பிரம்ம சூத்திரங்கள், கீதை, பாகவதம் முதலிய நூல்களில் வகுப்புகள் நடக்க ஏற்பாடு செய்தார். பாணினியின் அஷ்டாத்யாயி என்ற இலக்கண நூலைத் தாமே போதித்துவந்தார். தற்போது பிறருக்குப் போதிப்பதற் காகவே தாம் அதிகம் படிக்கத் தொடங்கினார். ஸ்ரீராமகிருஷ் ணரைக் குறித்து அவர் வடமொழியிலேயே சுலோகங்கள் இயற் றியது இப்போதுதான்.

பக்திர் பகஸ்ச பஜனம் பவ பேதகாரி
கச்சந்த்யலம் ஸுவிபுலம் கமனுயதத்வம்
வக்த்ரோத் ருதம் து ஹ்ருதி மே ந விபாதி கிஞ்சித்
தஸ்மாத் த்வமேவ சரணம் மம தீன பந்தோ

பெருமைவாய்ந்த தத்துவப் பொருளாகிய உன்னை அடைய
சம்சாரத் தளைகளை அழிக்கும் பக்தியும், வைராக்கிய

Koviloor Digital Library

மும், தியானமும் போதுமான துணைகளாக வழிகாட்டு கின்றன. எனினும் வாய்பேசும் இந்த உண்மை எனது இதயத்தில் சிறிதும் விளக்கமுறவில்லை. ஆகையால், எளியோர்க்கு அன்பனே! நீயே எனக்குப் புகல்.

இப்படியெல்லாம் சுவாமிஜி தமது குருநாதனை வழுத்தியது நாமெல்லோரும் உள்ளுருகிப் பிரார்த்தனை புரியத்தான்.

சுவாமிஜியைக் காண இச்சமயத்தில் வந்த அநேகரில் ஒருவர் நாகமஹாசயர். டாக்காவிலிருந்து வந்திருந்த அந்தப் பெரியார் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் ஈடுபாடு கொண்டு, ஆதரிச இல்லற வாழ்வு வாழ்ந்தவர்.

சுவாமிஜியை வணங்கி எழுந்த நாகமஹாசயர், ''ஜய சங்கர! உயிருடன் விளங்கும் சிவனை என் கண்முன் காணும் பேறுபெற்றேன்'' என்றார்.

சுவாமிஜி அவரது உடல்நலம்பற்றி விசாரித்தார்.

''ஒரு பயனுமற்ற சதையும் எலும்பும்கொண்ட குவியல் எப்படியிருந்தால் என்ன? நான் இதோ சிவனைக் காண்கிறேன். அதில் ஆனந்திக்கிறேன். அதுபோதும்'' என்றார் நாகமஹாசயர்.

மீண்டும் சுவாமிஜியின் அடியிணைகளில் விழுந்த நாகமஹா சயரை சுவாமிஜி தூக்கி எடுத்தார்.

அப்போது மடத்தில் உபநிஷத வகுப்பு நடந்துகொண்டிருந் தது. சுவாமிஜி அதை நிறுத்திவிட்டு நாகமஹாசயரைக் காண வருமாறு எல்லா மாணவரையும் பணித்தார்.

அவர்களிடம், ''இதோ இவரைப் பாருங்கள்! இவர் ஒரு குடும்பி. என்றாலும் இவருக்கு உடல் உள்ளதா இல்லையா, உலகமே உள்ளதா இல்லையா என்பதைப்பற்றிக்கூடச் சிந்தனை யில்லை. இவர் எப்போதும் ஆண்டவன் நினைவிலேயே அழுந்திக் கிடப்பவர். மனிதன் பரபக்தி பெற்றவுடன் எப்படியாவான் என்பதற்கு இவர் ஓர் உதாரணம்'' என்றார்.

நாகமஹாசயரின் பக்கம் திரும்பி, ''எங்களுக்கெல்லாம் ஸ்ரீராமகிருஷ்ணரைப்பற்றி ஏதேனும் சொல்லுங்களேன்'' என்று கேட்டுக்கொண்டார் விவேகானந்த சுவாமி.

''ஆஹா! அவரைப்பற்றிப் பேச எனக்கு ஏது தகுதி? ஆண்டவனின் ராமகிருஷ்ண அவதாரத்தை நிறைவிக்கவந்த மஹா வீரரைக் காணவே அல்லவா நான் இங்கு வந்தேன்?'' என்றார் நாகர்.

''தாங்கள் அப்படிச் சொல்லலாகாது! குருமஹராஜ் யார் என்பதை அறிந்தவர் தாங்கள்தான். நாங்கள் எங்கேயோ சுற்றிச்சுற்றி வந்துகொண்டிருக்கிறோம்'' என்றார் சுவாமிஜி.

Koviloor Digital Library

''இப்படியெல்லாம் பேசாதீர்கள் சுவாமிஜி! தாங்கள் ஸ்ரீராமகிருஷ்ணரின் நிழல். ஒரு நாணயத்தின் இரண்டு புறங்களைப் போன்றவர்கள் தாங்களும் குருமஹராஜும். கண் உள்ளவர்கள் எல்லாம் இதைக் காண்பார்கள்'' என்றார் நாகமஹாசயர்.

''தாங்கள் இங்குவந்து மடத்திலேயே வசித்தால் பையன்களுக்கு நல்ல வழிகாட்டியதாக இருக்கும்'' என்றார் சுவாமிஜி.

''ஆனால் குருமஹராஜ் அதை அங்கீகரிக்கவில்லை'' என்று கூறினார் நாகமஹாசயர். ''நான் முன்பே அவரிடம் துறவறம் கேட்டதுண்டு. அவரோ 'நீ உலகத்தில்தான் வாழவேண்டும்' என்று விதித்துவிட்டார். அதனால்தான் நான் எப்போதேனும் ஒரு பொழுதுமட்டும் உங்களையெல்லாம் வந்து பார்த்து அநுக்கிரகம் பெறுகிறேன்.''

சுவாமிஜி சொன்னார்: ''என்னுடைய ஒரே ஆசை இந்த நாட்டை விழிப்புறச் செய்வதுதான். மஹாபலிஷ்டையான பாரததேவி தனது சக்தியையே மறந்து தூங்குகிறாள். வெளிப்பார்வைக்கு உயிரே அற்றவளாகத் தூங்குகிறாள். சநாதன தர்மம் என்ற பெயரில் அவளுக்குள் இருக்கும் அபரிமிதமான ஆற்றலை அவள் அறியுமாறு நாம் செய்யக்கூடுமானால் நமது ஜன்மம் வீணாகாது. இந்த ஒரு ஆசைமட்டும் என்னைவிட்டு நீங்கவில்லை. இதன் முன்பு முக்தியும்கூட அற்பமாகவே படுகிறது. என் ஆசை வெற்றிபெறவேண்டுமென ஆசி கூறுங்கள், மஹாசய!''

''ஆசியா? நான் கூறவா? நம் பிரபு தங்களை எப்போதும் ஆசிர்வதிக்கிறான்! தங்கள் சித்தத்தை யார் தடுக்கமுடியும்? தங்கள் சித்தமும் பிரபுவின் சித்தமும் ஒன்றேயல்லவா? ஜய ராமகிருஷ்ண!''

''ஆனால் உழைக்கமுடியாமல் இந்த உடம்பு படுத்துகிறதே! அதுவும் பாருங்கள், இந்தியாவுக்கு வந்ததிலிருந்து என் தேக நலன் எப்படிக் குன்றிவிட்டது!''

''குருமஹராஜ் சொல்வாரே, 'உடம்பில் வசிப்பதற்காக ஆத்மா அதற்கு வியாதிகள் என்ற பெயரில் வாடகை செலுத்தித் தானாகவேண்டும்'! என்று. அதைத்தான் நினைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் தங்கள் உடல் ஒரு தங்கக் கருவூலம். அதை சர்வஜாக்கிரதையாக யாரேனும் காப்பாற்றவேண்டும். ஆனால் யார் அப்படிச் செய்யமுடியும்? அது உலகுக்கு எவ்வளவு பொருள் தரும் என்பதை யார் அறியமுடியும்?''

வரப்போகிற விபரீதத்தை அறிந்தவர்போலவே பேசினார் நாகமஹாசயர்.

Koviloor Digital Library

''ஏன், மடத்திலுள்ளவர்களெல்லாம் என்னை நன்ருகப் பேணி வருகிருர்களே!'' என்ருர் சுவாமிஜி.

''ஆஹா, அவர்களே பாக்கியசாலிகள். அதனுல் அவர்கள் தங்களுக்குமட்டுமின்றி உலகுக்கே நன்மை புரிகிருர்கள்'' என்ருர் மஹாசயர்.

நாகமஹாசயர் பேசியுள்ளதைப் படிக்கும்போது நாடக மேடை வசனமாகத் தோன்றலாம். ஆனுல் அவரது அந்தரங்க சுத்தத்தையும், எளிமையாகப் பேசும்போதே தமது சத்திய உணர்வின் காரணமாகப் பிறர் மனத்தில் அதைப் பசுமரத்தாணியாக அவர் பதிவிப்பதையும் நேரில் கண்டோர்தான் அறியமுடியும் என்கின்றனர் சுவாமிஜியின் சரிதையைத்தரும் சீடர்கள்.

சுவாமிஜி அனுப்பிவைத்த சீடர்கள் சென்ற இடங்களிலெல்லாம் சேவா தர்மத்தையும், சநாதன தர்மத்தையும் சிறப்புற நிலைநாட்டினர். வெளிநாடுகளிலும் சுவாமிஜி செய்த பணியைத் தொடர்ந்து கொண்டிருந்தனர் அங்கு அவருக்குக்கிட்டிய அரும் சீடர்கள்.

இலங்கையில் ஸ்ரீராமகிருஷ்ண தர்மத்தைப் பரப்பிக்கொண்டிருந்த சுவாமி சிவானந்தர் ஸ்ரீமதி பிக்கெட் என்பவளைச் சிறப்பாகப் பயிற்றுவித்து 'ஹரிப்ரியா' வாக்கினுர். அவள் ஆஸ்திரேலியா, நியூஸிலந்து முதலிய நாடுகளுக்குச் சென்று அடிலெய்ட், ஸவுத் விச்டோரியா, நெல்ஸன் முதலிய இடங்களில் வேதாந்த வகுப்புகள் தொடங்கினுள். பிறமதத்து மாது ஒருத்திக்கு பாரத தத்துவத்தில் இத்தகைய ஆர்வம் ஏற்பட்டு அவள் நாடு விட்டு நாடு சென்று — ஏன், கண்டம் விட்டுக் கண்டம் சென்று — சமயப் பிரசாரம் புரிந்தாள் எனில் அதை அன்புசாதித்த அற்புதம் என்றல்லாமல் வேறெப்படி வர்ணிப்பது?

சுவாமிஜியின் முதல் அந்நியநாட்டுத் துறவி சிஷ்யையான அபயானந்தை (மேரி லூயிஸி) நான்கு ஆண்டுகளாக சிகாகோவிலும் சுற்றுவட்டாரத்திலும் வேதாந்தப் பிரசாரம் செய்துவிட்டு 1899-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் சுவாமிஜி பிறந்த திருமண்ணுக்கு வந்து சேர்ந்தாள். சென்னை, பம்பாய், கல்கத்தா, டாக்கா முதலிய இடங்களில் ஹிந்துக்களுக்கு ஹிந்து மதத்தின் மகிமையை விளக்கினுள் அந்த பிரெஞ்சுக்காரி!

சிந்தனைச் செல்வத்துக்கு ஹிமாலயமாக விளங்கும் அத்வைத வேதாந்தத்துக்கு ஹிமாலயத்தில் ஓர் ஆசிரமம் அமைக்கவேண்டும் என மனிதரில் ஹிமாலயமான சுவாமிஜி ஸ்விட்ஜர்லாந்து சென்ற நாட்களாக விரும்பினுரென முன்பே பலமுறை கூறியிருக்கிருேம். காச்மீரப் பயணத்தின்போது அவர் பல ஸ்தலங்களை இந்த நோக்

Koviloor Digital Library

கத்துடனேயே கண்டும், தக்க இடம் கிடைக்கவில்லை. ஸேவியர் தம்பதியரிடம் பொறுப்பை ஒப்படைத்தார் சுவாமிஜி. அவர்கள் சுவாமி ஸ்வரூபானந்தருடன் அல்மோரா மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்தார்கள். ஆறுயிரத்து எண்ணூறு அடி உயரத்தில், அடர்ந்த கானகங்களின் மடியில் வளர்ந்த மாயாவதி என்ற இடத்தை அடைந்ததும் அவர்கள் உள்ளம் உவகைகொண்டது. மாயையை மாய்க்கும் அத்வைதத்துக்கு இருப்பிடம் அமைக்க மாயாவதியே ஏற்றது என அவர்கள் தேர்வு செய்தார்கள். இருபத்துஐந்தாயிரம் அடிக்குமேல் உயர்ந்த நந்தாதேவி என்ற சிகரத்துடன் மாயாவதியை நோக்கிக்கொண்டு வைரமலையாக விளங்கிய மலைத்தொடர் உன்னத அத்வைத தத்துவமே உருப் பெற்று மாயாவதியைப் பாலிப்பதாகத் தோன்றிற்று.

ரஸிகரான சுவாமிஜியும் மாயாவதியில் அத்வைத ஆசிரமம் அளிக்க மகிழ்ச்சியுடன் ஒப்புதல் அளித்தார். 1899-ம் ஆண்டு மார்ச் 19-ந் தேதியன்று அத்வைத ஆசிரமம் மாயாவதியில் தொடங்கியது. அன்று பரமஹம்ஸரின் ஜன்ம தினமாகும்! 'பிரபுத்த பாரத'ப் பத்திரிகையின் காரியாலயமும் மாயாவதிக்கு மாற்றப்பட்டது.

ஆசிரமத்தை ஸ்தாபித்த வள்ளல்களாகிய ஸேவியர் தம்பதிக்கு சுவாமிஜி எழுதினர்:

''எவனில் பிரபஞ்சம் உள்ளதோ, எவன் பிரபஞ்சத்தில் உள்ளானே, எவன் பிரபஞ்சமோ; எவனில் ஆத்மா உள்ளதோ, எவன் ஆத்மாவில் உள்ளானே, எவன் ஆத்மாவோ — அவனை அறிந்து, அதன்மூலம் பிரபஞ்சத்தைத் தான் என அறிவதொன்றே பயத்தைப் போக்கும். அதுவே துன்பங்களுக்கு முடிவுதரும்; அந்தமற்ற விடுதலைக்கு வழிசெய்யும். எங்கெல்லாம் அன்பு விருத்தியாகியுள்ளதோ, தனி மனிதர் அல்லது சமுதாயத்தின் க்ஷேமத்தில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதோ அது எல்லாப் பொருட்களும் ஒன்றே என்ற நித்திய சத்தியத்தின் காட்சியாலும், உணர்வாலும், அந்த உணர்வைக் காரியத்தில் ஆக்குவதாலும் தான் நடைபெற்றிருக்கிறது அத்வைத சித்தாந்தம் ஒன்று தான் ஒருவனைத் தனது பூரண உடைமையாக்குகிறது

''இந்த உன்னத அத்வைத சத்தியத்தைத் துன்பத்துக்குரிய பலவீனங்களிலிருந்து முற்றிலும் விடுவித்துப் பிரசாரம்செய்வது இயலாததாக இருந்தது. இதனால்தான் மனிதகுலம் பெரிய பயன்களை அடையமுடியவில்லை.''

''இப்போது இந்த ஒரு சத்தியத்துக்கு (அத்வைதத்துக்கு) முழுவளர்ச்சியும் அளித்து தனி மனிதர்களின் வாழ்வை உயர்த்

Koviloor Digital Library

தவும், மனிதகுலத்தை வளர்க்கவுமே ஹிமாலய உச்சத்திலே அத்வைத ஆசிரமத்தை ஸ்தாபிக்கிறோம். இங்கு சுத்தமான தனி அத்வைதம் அன்றி வேறெதும் போதிக்கவோ பயிலவோ கூடாது.''

அல்மோரா அத்வைத ஆசிரமத்தில் பிரதிமை, படம், வேறு தெய்விகச் சின்னம் எதுவுமே கிடையாது. மற்ற மடங்களின் மைய அம்சமாகிய குருமஹராஜ் வழிபாடும்கூட அங்கு கிடையாது. விரஜா ஹோமம் தவிர அங்கு எந்தச் சடங்கும் இல்லை. அகப்பொருளை அந்தர்முகமாக உபாஸிப்பதற்கே அந்த ஆசிரமம் நிறுவப்பட்டது.

மூத்த சச்சிதானந்தர், விரஜானந்தர், விமலானந்தர், பிரம்மசாரி ஹரீந்திரநாத் ஆகியோர் அத்வைத ஆசிரமத்துக்கு அனுப்பப்பட்டனர். மலைகளிடையே பாதை உண்டாக்குதல், ஆசிரமத்தில் விடுதிகள் கட்டுதல் இந்தப் பணிகளோடு 'பிரபுத்த பாரத'ப் பத்திரிகைக்காகவும் அவர்கள் உற்சாகத்துடன் உழைத்தனர்.

'பிரபுத்த பாரதம்' தவிர, சென்னையில் 'பிரம்மவாதின்' என்ற சஞ்சிகையும், கல்கத்தாவில் 'உத்போதன்' ஏடும் ஸ்ரீராமகிருஷ்ணரின் அவதாரப் பணியைப் பரப்பிவந்தன.

கல்கத்தாவில் 1899-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் மீண்டும் வைசூரிநோய் படை எடுத்தது. மார்ச் முப்பதாம் தேதி ஸ்ரீராம கிருஷ்ண சங்கத்தின் சேவாதளம் அமைக்கப்பட்டது. சுவாமிஜி இந்நாட்களில் சேரிகளிலேயே வாழ்ந்து மக்கள் மனம் தளர்ந்து விடாமல் அவர்களை ஊக்கிவந்தார். சகோதரி நிவேதிதையைக் காரியதரிசியாகவும், சுவாமி சதானந்தரைப் பிரதான அதிகாரி யாகவும், சிவானந்தர், நித்யானந்தர், ஆத்மானந்தர் ஆகியோரை அவருக்கு உதவியாளராகவும்கொண்டு சேவாதளம் சீரியமுறையில் செயலாற்றியது. நகரத்தின் நான்கு வட்டங்களிலுள்ள ஏழைகள் வாழும் பகுதிகளிலிருந்து வண்டி வண்டியாக அசுத்தங்களைஅகற்றி னர் சுவாமிஜியும், மற்ற சாதுக்களும், பிரம்மசாரிகளும்.

ஏப்ரல் மாதம் இருபத்தியோராம் தேதி நிவேதிதை ''வைசூரியும் மாணவர் கடமையும்'' என்பதுபற்றி ஓர் உணர்ச்சி மயமான உரை நிகழ்த்தினாள். அன்று சுவாமிஜி வெகு உற்சாக மாகப் பேசினார். இதன் விளைவாக மாணவர்கள் ஒரு குழுவாக அமைந்து விட்டுக்கு விடு சென்று சுகாதாரக் குறிப்புக்களை உதவி னர். பிணியுற்றவருக்குப் பணி செய்தனர். நோய் கல்கத்தாவை விட்டு விலகும்வரை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் ஆதரவில் சிறப் பான சேவை நடைபெற்றது.

Koviloor Digital Library

சுவாமிஜி மேல்நாடுகளிலிருந்து திரும்பியநாளாக ஸ்ரீராம கிருஷ்ண மடம் கல்கத்தாவுக்கு ஒரு புதிய உற்சவத்தை அளித்து வந்தது. பரமஹம்ஸரின் ஜயந்திதான் அது. சாஸ்திரீயமான முறையில் அன்று சடங்குகள் அநுஷ்டிக்கப்பட்டதோடு ஆயிரக் கணக்கான ஏழைகளுக்கு அன்று அன்னம் வழங்கப்பட்டுவந்தது. பேலூர் மடத்தில் மட்டுமின்றி ஸ்ரீராமகிருஷ்ண மடங்கள் எங் கெல்லாம் இருந்தனவோ அங்கெல்லாம் இந்த ஜயந்தி விழா கொண்டாடப்பட்டுவந்தது.

சுவாமிஜி வைத்தியநாதத்துக்குச் செல்லுமுன்பே தாம் மீண் டும் மேல்நாடுகள் செல்ல விரும்பியதாகக் கண்டோம் அல்லவா? இப்போது அந்த எண்ணம் அவரிடம் மேலோங்கி நின்றது. உடல்நலத்தைச் சீர்செய்துகொள்ளவே முக்கியமாக அவர் மேல் நாடு செல்ல நினைத்தார். ஏப்ரல் மாதத்தில் அவர் அமெரிக்க சிஷ்யரொருவருக்கு எழுதினார்: ''இரண்டு ஆண்டுகள் உடல் உபாதிப்பட்டது என் ஆயுளில் இருபதாண்டுகளை எடுத்துக் கொண்டுவிட்டது. நல்லது, ஆனால் ஆத்மா ஒருபோதும் மாறாது. என்ன, மாறாதுதானே? இந்தப் பைத்தியங்கொள்ளி ஆத்மா அப்படியேதான் இருக்கிறது. ஒரே கருத்தில் முனைப்பாக, தீவிர மாக, பைத்தியமாக இருக்கிறது!''

ஜூன் இருபதாம் தேதி சுவாமிஜி மேல்நாடுகளுக்குப் புறப் படுவதென்றும் அவரோடு துரியானந்தரும், சகோதரி நிவேதிதை யும் செல்வதெனவும் ஏற்பாடாயிற்று. நிவேதிதை தனது பெண் பள்ளியின் அபிவிருத்தி விஷயமாக இங்கிலாந்து செல்வதென்று முன்பே உத்தேசித்திருந்தாள்.

வடமொழியில் வல்லுநரான துரியானந்தர் அந்த மொழி அடக்கி இருந்த ஆத்மிகச் செல்வத்தையும் அநுஷ்டானத்தால் உணர்ந்தவர். தவம், யோகம் இவற்றிலேயே மனத்தைச் செலுத்திய துரியானந்தர் பொதுவாழ்வில் ஈடுபட விரும்பவில்லை. சுவாமிஜி எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் அவர் நெகிழ வில்லை. டார்ஜிலிங்கில் அப்போது இருவரும் இருந்தார்கள். தமது வாக்குவாதம் எல்லாம் பயனற்றுப்போனதும் சுவாமிஜி மனமுடைந்து போய்விட்டார். துரியானந்தரின் கழுத்தைத் தம் இரண்டு கைகளாலும் கட்டிக்கொண்டு அவருடைய மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டு குழந்தைபோல் விம்மி விம்மி அழத்தொடங்கிவிட்டார் சுவாமிஜி.

''ஹரிபாயி! குருமஹராஜின் ஆக்ஞையை நிறைவேற்று வதற்காக நான் அங்குலம் அங்குலமாகப் பிராணனைவிட்டு சாவின் விளிம்புவரை வந்திருக்கிறேனே, நீ பார்க்கவில்லையா? நான்

Koviloor Digital Library

தாங்கியிருக்கிற பெரும்சுமையில் உன்னால் முடிந்ததைச் சுமந்து என் பாரத்தைக் குறைக்கவேண்டும் என்று உனக்குத் தோன்ற வில்லையா?'' என்று தினமாகத் துரியானந்தரை வினவினார் சுவாமிஜி.

துரியானந்தர் அனலிலிட்ட மெழுகாக உருகிப்போய்விட்டார். ''நீங்கள் என்ன கட்டளையிட்டாலும் இனி அதைத் தலையால் தாங்கிமுடிப்பேன்'' என்று சுவாமிஜியிடம் பிரதிக்ஞை செய்தார்.

அமெரிக்கா செல்வதற்கு ஆயத்தங்கள் தொடங்கின. துரியானந்தர் ஏராளமான வேதாந்த நூல்களை எடுத்து வைத்துக் கொண்டார்.

சுவாமிஜி சொன்னார்: ''நூல்களைப் பற்றியெல்லாம் நான் அவர்களுக்கு வேண்டியதைச் சொல்லியாயிற்று. அவர்கள் க்ஷத்திரிய சக்தியை நிறையப் பார்த்துவிட்டார்கள். இப்போது நான் அவர்களுக்கு பிராமண சக்தியைத்தான் காட்ட விரும்புகிறேன்'' என்றார்.

ஆம், சென்றமுறை அவர் வேதாந்தத்தின் காவலராக, சேனாதிபதிபோல் அமெரிக்காவுக்குச் சென்றார். வேதாந்த நூல்களில் உள்ள உண்மைகளை அம்புகளாகப் பொழிந்து அந்நாட்டாரின் தவறான கருத்துக்களைத் துவம்சம் செய்தார். இம்முறை அந்த நூல்களின் பயனான அநுபவத்தின் சாந்தியையே அவர்களுக்கு அன்போடு அளிக்க விரும்பினார். முன்பு வாதத்தை எடுத்துக்கொண்டு சினத்துடன் சென்றார். இப்போது அநுபவத்தை எடுத்துக்கொண்டு அன்போடு செல்ல விரும்பினார். அதனால் தான் 'பிராமணனாகச் செல்லப்போகிறேன்' என்று குறிப்பிட்டார்.

அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டு ஒழுகலான்

எனத் தமிழ்வேதம் விதித்தபடி அந்தண இலக்கணத்துக்கு விளக்கம் கண்டிருந்தார் சுவாமிஜி!

ஜூன் மாதம் 19-ந் தேதி மடத்தில் முறைப்படி பிரிவுபசாரம் வழங்கப்பட்டது. அன்று சுவாமிஜி, ''சந்நியாசம்: அதன் லட்சியமும், அநுஷ்டானமும்'' என்பதுபற்றிப் பேசினார்.

மிகவும் உயர்ந்தலட்சிய உலகை நடைமுறைக்குக் கொண்டு வர சந்நியாசி முயலலாகாது. இப்படி முயன்றதுதான் பௌத்த, ஜைனர்கள் செய்த தவறு. அதே சமயத்தில் நடைமுறைக்கு உதவாது என்று லட்சியங்களையெல்லாம் ஒதுக்குவதும் சரியாகாது — இவ்வாறு உபதேசித்தார் சுவாமிஜி. ''இந்த விநாடி தியான

Koviloor Digital Library

யோகத்தில் அமிழவேண்டும்; அடுத்த விநாடியே அதோ அந்த நிலங்களை உழுவதற்குத் தயாராக இருக்கவேண்டும்'' என்றார்.

உத்வேகத்துடன் பேசிக்கொண்டுபோன சுவாமிஜி, ''இந்த மடத்தின் லட்சியம் உண்மையான மனிதனை சிருஷ்டிப்பது. பலம் என்ற தத்துவத்துக்கு எவ்வளவு பலம் உண்டோ அவ்வளவு பலம் பொருந்தியவனாகவும், அதே சமயத்தில் பெண்ணின் இதயம் கொண்டவனாகவும் எவன் இருக்கிறானோ அவனே உண்மையான மனிதன்'' என்றார்.

ஒற்றுமையோடு ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தை அவர்கள் பேண வேண்டும் என்று கேட்டுக்கொண்ட சுவாமிஜி அவர்களுக்குத் தமது அருள்நிறைந்த ஆசிகளை அளித்தார்.

மறுநாள், 1899-ம் ஆண்டு ஜுன் இருபதாம் தேதி, சுவாமிஜி புறப்படும் தினம். அன்று தூய அன்னை சுவாமிஜிக்கும் மற்ற சாதுக்களுக்கும் தனது விடுதியில் விருந்தளித்தாள். சுவாமிஜிக்கு உள்ளம் நிறைய ஆசிகூறினாள்.

அன்று பிற்பகல் பிரின்ஸெப் கட்டத்தில் புறப்பட்ட 'கோல்கொண்டா' என்ற கப்பலின் பிரயாணிகளில் சுவாமிஜியும், துரியானந்தரும், நிவேதிதையும் இடம் பெற்றனர்.

வழியனுப்ப வந்திருந்தவர்களின் நெஞ்சு கலங்கிற்று. ஆனால் உடல்நலம் குன்றிப்போன தங்கள் தலைவர் அதனைச் சீர்செய்து கொள்ளவே மேல்நாடு செல்கிறார் என்பதில் அவர்களுக்கு ஒரு நிம்மதி ஏற்பட்டது. இந்தியா அவரது உயிரைத்தான் குடிக்கும். மேல்நாடு சென்றால்தான் அவர் உண்மையான ஓய்வு பெறமுடியும் என்று திருப்திகொண்டனர்.

அலையில் மிதந்தது கப்பல்.

அலைவீசும் ஆனந்தத்திலும் பிரிவுத்துயரிலும் மிதந்துகொண்டு பேலூர் திரும்பினர் அவரை வழியனுப்பச்சென்ற அன்பர்கள்.

Koviloor Digital Library

அத்தியாயம் —32

மீண்டும் அமெரிக்கா!

வங்காளக்குடாக் கடல் கொந்தளித்துக்கொண்டிருந்தது. சென்னை மக்களின் உள்ளம் அதைவிடக் கொந்தளித்துக்கொண்டிருந்தது — சுவாமிஜி அமெரிக்கா போகும் மார்க்கமாகச் சென்னைக்கு மீண்டும் வருகை தந்தருளப்போகிறார் என்பதால்.

ஆனால் சென்னைக்கு அந்த பாக்கியம் கிடைக்கவேயில்லை. சமீபத்தில் கல்கத்தாவில் வைசூரி பரவலாக இருந்தபடியால் சுவாமிஜி சென்னையில் இறங்க அநுமதி கிடைக்கவில்லை.

ஸ்ரீஅனந்தாசார்லுவின் தலைமையில், சுவாமிஜி முன்பு தங்கியிருந்த காஸில் கெர்னனில் ஒரு கூட்டம் நடைபெற்றது. சுவாமிஜியின் விஷயத்தில் விதியைத் தளர்த்தவேண்டும் என்று கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால் அரசாங்கம் இணங்கவில்லை. சென்னை மக்கள் சொல்லொணா ஏமாற்றம் அடைந்தனர்.

1899-ம் ஆண்டு ஜூன் 24-ந் தேதி 'கோல்கொண்டா' கப்பல் சென்னையை அடைந்தது. துறைமுகத்திலிருந்து எட்டத்தில், கடலில் நிறுத்தப்பட்டது கப்பல். துறைமுகத்தில் குழுமியிருந்த ஏராளமான மக்கள் மீண்டும் ஏமாறிப்போயினர். சுவாமிஜியின் சேவைக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட திருத்தொண்டர் குழாம் — அழகியசிங்கப்பெருமாள், பாலாஜி ராவ், பிலிகிரி ஐயங்கார், நரசிம்மாச்சாரியார், டாக்டர் எம். ஸி. நஞ்சுண்டராவ், சிங்காரவேலு முதலியார் (கிடி), சாமா ஐயர், ஸி. ராமஸ்வாமி ஐயங்கார், ஸி. ராமாநுஜாச்சாரியார், ஆகியோர் அடங்கிய திருத்தொண்டர் குழாம் — சென்னை மடத்துத் தலைவரான சுவாமி ராமகிருஷ்ணானந்தரின் தலைமையில் ஏராளமான படகுகள் அமர்த்திக்கொண்டு கப்பலை அடைந்தனர். வெண்ணெயாகக் கரைந்த உள்ளத்துடன் சுவாமிஜி கப்பல் தளத்தின் விளிம்பில் வந்து நின்றார்! 'ஆகா, இந்தத் தமிழ்நாட்டுக்குத்தான் நம்மிடம் என்ன இப்படி ஒரு பக்தி!' என்று அவரது உள்ளம் உருகிற்று.

அன்பர்களால் அவரது பாதத்தைத் தீண்ட முடியவில்லை. தாங்கள் கொண்டுவந்திருந்த கையுறையை அவரிடம் அளிக்க முடியவில்லை. ஆனாலும் புனிதரின் தரிசனம் அவர்களுக்குக் கிடைத்தது. அலை ஓசைக்கு மீதாக அவரது திருவாய் மொழியைக் கேட்கமுடிந்தது. களைத்துப்போகுமளவும் சுவாமிஜி பேசித் தீர்த்தார்!

Koviloor Digital Library

படகுகள் மீண்டும் கரைக்குப் புறப்பட்டன.

''கப்பலை வலமாகச் செல்லுங்கள்'' என்று ராமகிருஷ்ணுனந்த சுவாமி பணித்தார்.

படகுகள் கப்பலைப் பிரதக்ஷிணம் செய்துகொண்டு கரை திரும்பின.

அதில் ஓர் ஆள் குறைவாகயிருந்தார்! சுவாமிஜியிடம் தம்மைப் பூரணமாக அளித்துக்கொண்டிருந்த அழகியசிங்கர்தான் அவர். 'பிரம்மவாதின்' பத்திரிகை நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டிருந்த அழகியசிங்கர், அதே கப்பலில் கொழும்புக்கு டிக்கெட் எடுத்து சுவாமிஜியுடன் சேர்ந்துகொண்டுவிட்டார்! ''குருபக்தியில் நம் அளசிங்கரைப்போல் இன்னெருவரைக் காண்பது அரிது'' என்று சுவாமிஜியால் பாராட்டப்பட்டவர் அல்லவா அவர்?

கொழும்புவிலும் பழைய அன்பர்களைக் கண்டு மகிழ்ந்தார் சுவாமி விவேகானந்தர்.

பருவ மழைக்காலம் தொடங்கிவிட்டதால், அதன் பின் பிரயாணம் மிகவும் தாமதமாயிற்று. கீழேயுள்ள கருங்கடலைப் போலவே, மேலே கருமேகங்கள் கவிந்திருக்க, பெருமழையிடையே அந்தக் கப்பல் மெல்ல மெல்லச் சென்றுகொண்டிருந்தது. ஆறு நாட்களில் அடையவேண்டிய ஏடனைப் பத்து நாட்களில் அடைந்தது. செங்கடல், சூயஸ்கால்வாய் வழியாகச் சென்று நேபிள்ஸையும், மார்ஸெய்ல்ஸையும் தொட்டு ஜூலை 31-ந் தேதியன்று இங்கிலாந்தை அடைந்தது.

இந்தப் பிரயாணத்தின்போது சுவாமிஜியின் நானுவித மன நிலைகளை சகோதரி நிவேதிதை நமக்கு அற்புதமாக வடித்துத் தந்திருக்கிருள். அதிலிருந்து சில பகுதிகளை இங்கு சுவைப்போம்:

''(முதலில் கங்காநதியில் பிரயாணம் தொடங்கியபோது ஒரு நாள்) சுவாமிஜி திடீரென்று, ''ஆமாம், எனக்கு வயது ஏற ஏற ஆண்மையில்தான் எல்லாமே அடக்கம் என்று தோன்றுகிறது. இதுவே எனது புதிய மகா உபதேசம். தீமையானுலும் ஆண்மையோடு செய்யுங்கள். துஷ்டராகத்தான் இருக்கவேண்டுமெனில் மகத்தான முறையில் துஷ்டராயிருங்கள்'' என்ருர். இந்த வார்த்தைகள் என்னைப் பிரிதொரு நாளின் நினைவில் பிணைத்தது. அன்று நான் சுவாமிஜியிடம் இந்தியாவில் குற்றங்கள் எவ்வளவு குறைவாகக் காணப்படுகின்றன என்பதைக் குறிப்பிட்டேன். சுவாமிஜி வேதனைகூடிய முகத்துடன் என்னிடம் ஆட்சேபிக்கலானுர். ''ஆண்டவன் இச்சையில் என் நாட்டின் நிலை வேறுவிதமாயிருந்திருக்கக்கூடாதா? ஏனெனில் இங்கு

Koviloor Digital Library

குற்றங்கள் இல்லை என்பது செத்தபின் பாபம் செய்யமுடியாத தைப் போன்றதுதான், என்றார்

''மத உந்தல்பற்றி பேசினார். 'காதல், படைப்பு இவை தான் பெரும்பாலான மதங்களுக்கு வேராக உள்ளன. இந்தியா வில் இவையே வைஷ்ணவமாயின. மேல்நாடுகளில் கிறிஸ்துவ மதமாயிற்று. காளி அல்லது மரணத்தை வழிபடத் துணிந்தவர் கள் எவ்வளவு குறைவு! நாம் மரணத்தை வழிபடுவோமாக! பயங்கரத்தைத் தழுவிக்கொள்வோமாக! துன்பத்தைத் துன்பத்துக்காக வரவேற்போமாக' என்றார்.

''நதி கடலைச் சந்திக்குமிடத்தைக் கப்பல் அடைந்தது. கடலிலும் ஹிந்துக்களுக்குள்ள மகத்தான பக்திகாரணமாகத்தான் அவர்கள் கடல் கடந்து அதனை மாசுபடுத்தக்கூடாது என்று விதித்தனர் என்றார் சுவாமிஜி. கப்பல் கடலை ஸ்பரிசித்தபோது சுவாமிஜி, 'நம: சிவாய, நம: சிவாய' என்று ஜபிக்கலானார்.

''இன்னொரு நாள் காலை உணவுகொள்ளும் முன்பு அவர் சொன்னார்: 'பழைமையைப் பாதுகாக்க விரும்புபவர்களின் (கன்ஸர்வேடிவ்கள்) லட்சியம் கீழ்ப்படிந்து இருப்பது. உங்கள் (புரட்சிக்காரர்) லட்சியம் போராடுவது. கன்ஸர்வேடிவ்களாகிய நாங்கள்தான் வாழ்க்கையை இன்பமாக ரசிக்கிறோம். ஒரு போதும் நீங்கள் அல்ல. நீங்கள் எப்போதுமே இன்னும் முன்னேற வேண்டும், மாறவேண்டும் என்று முயன்றுகொண்டிருக்கிறீர்கள். அந்த மாற்றத்தில் கோடியில் ஒரு பங்கு நிறைவேறுமுன் கால கதிக்கு ஆளாகிறீர்கள் மனிதனின் மனோசக்தி மாறுதலினால் பலமடையாது. அது மாறுதலினால் பலவீனமடைந்து அதற்கு அடிமைப்பட்டே விடுகிறது. (மாறவிரும்பாமல்) எதையுமே உறிஞ்சிக்கொள்பவர்களாக நாம் ஆகவேண்டும். இப்படி உட்கிர கிப்பதால் மனோசக்திக்குப் பலம் கூடுகிறது. ஹிந்து மதம் என்பது உட்கிரகிப்பதில் விசேஷ மேதையைப் பெற்றது. நாங்கள் எப்போதுமே சண்டையிடுவதில் சிரத்தை காட்டியதில்லை. தற் காப்புக்காகமட்டுமே நாங்கள் எப்போதோ ஒருபோது சண்டை யிட்டிருக்கிறோம். அவ்வளவுதான்'

''நாங்கள் ஸிஸிலியை நெருங்கும்போது இருட்டிவிட்டது. அஸ்தமனமான வானத்துக்கு எதிராக எட்னா எரிமலை சிறிதே குமிறிக்கொண்டிருந்தது. மெஸ்ஸினா ஜலசந்தியில் கப்பல் புகும் போது சந்திரோதயமாயிற்று. சுவாமிஜியோடு நான் கப்பல் தளத்தில் மேலும் கீழுமாக உலாவிக்கொண்டிருந்தேன். அழகு என்பது புறத்தேயிருப்பதில்லை; அது அதற்கு முன்பாகவே

Koviloor Digital Library

மனத்திலுள்ளது என்று சுவாமிஜி விவரித்துவந்தார். ஒருபுறத்தில் இத்தாலியக் கடற்கரையின் கரும்பாறைகள் சீற்றத்துடன் நோக்கின. மறுபுறத்தில் நிலவை வெள்ளி ஒளி தீண்டிக்கொண்டிருந்தது. 'மெஸ்ஸினு எனக்கு நன்றி தெரிவிக்கவேண்டும். நானல்லவோ அவளுக்கு இத்தனை எழிலையும் அளித்தேன்?' என்ருர் சுவாமிஜி.

''பிறகு, சிறுவயதிலிருந்தே கடவுளைக் காணவேண்டும் என்று தாம் தபாஜ்வரம்கொண்டவர்போல் தவித்ததைப்பற்றிப் பேசலானுர். 'சூரியோதயத்துக்கு முன்பு ஒரு சூத்திரத்தையோ, தோத்திரத்தையோ சொல்ல ஆரம்பித்தேனுயின், ஆடாமல் அசையாமல் அன்றையபோது முடியும்வரை அதையே திருப்பிச் சொல்லிக்கொண்டிருப்பேன்' என்ருர். தபஸ்யைபற்றி விளக்க முயன்ற சுவாமிஜி பஞ்சாக்கினி மத்தியில் தியானிப்பதைக் குறித்துச் சொன்னுர். முடிவாக, 'பயங்கரத்தைப் பூஜியுங்கள், மரணத்தை வழிபடுங்கள். மற்ற எல்லாம் வீண். இதுவே கடைசிப் பாடம். என்ருலும், இது கோழையானவன் மரணத்தை விரும்புவது போன்றதல்ல. பலவீனமானவர்களின் தற்கொலை ஆசையல்ல இது. எல்லாவற்றையும் நன்கு ஆழம் கண்டுவிட்டு, வேறு வழி கிடையாது என்று உணர்ந்து மரணத்தை வரவேற்கும் பலசாலியைப்பற்றியே நான் பேசுகிறேன்' என்ருர்.

"தாம் நேரில் கண்டறிந்த மகாத்மாக்களையெல்லாம் குறித்துப் பயணத்தின்போது பேசிவந்தார் சுவாமிஜி. அவர்களில் உச்சஸ்தானத்திலுள்ளவர் ஸ்ரீராமகிருஷ்ணரே என்று கூறினுர். ஒரே ஸ்பரிசத்தால் அவரால் உன்னத ஞானத்தைப் புகட்ட முடிந்தது. இப்படித் தொடப்பட்ட ஒரு இளைஞன் அப்புறம் பத்தாண்டுகளுக்கு ''என் பிராணேசா, என் பிராணேசா'' என்பது தவிர வேறெதையும் கூற முடியவில்லை. மாது ஒருத்தியை அவர் அம்பிகையாகக் கருதி வணங்கினுர். அவள் பாதத்தில் பூக்கள் தூவி, தூபதீபம்காட்டி வணங்கினுர். அவள் அந்த க்ஷணமே சமாதியில் ஆழ்ந்துவிட்டாள். அதன்பின் இரண்டு மூன்று மணியாகும் வரையில் அவளுடைய சமாதிநிலையைக் கலைக்க முடியவில்லை. அவள் விடைபெறுகிறமட்டும் அவளுடைய பெயரையோ, விலாசத்தையோ கேட்டுக்கொள்ளவேண்டும் என்ற எண்ணமே எவருக்கும் எழவில்லை. அவளுடைய நினைவு ஒரு அழகிய கதையாயிற்று என்ருர்.''

நிவேதிதை தனது நினைவுக் குறிப்பில் மேலும் எழுதுகிருள்:

''அவர் சொன்னுர்: 'சந்நியாசி இரண்டு பிரதிக்ஞைகள் எடுத்துக்கொள்கிருன். சத்தியத்தை சாக்ஷாத்கரிக்கவேண்டும் என்பது ஒன்று. உலகுக்கு உதவவேண்டும் என்பது இன்னென்று.

Koviloor Digital Library

அவனுக்குள்ள மிக மிகக் கடுமையான நிபந்தனை அவன் மேலுலகைப்பற்றிய எண்ணத்தைக்கூடத் துறக்கவேண்டும் என்பது தான்' என்று

''அவருடைய குரல் மௌனத்தில் மூழ்கிவிட்டது. நட்சத்திர ஒளியில் தெரியும் கடலைப் பார்த்தவண்ணம் அமர்ந்திருந்தோம். அவர் மீண்டும் பேசலானார். 'எனக்குப் பிராயம் வளர வளர நான் சிறிய வஸ்துக்களிலுள்ள பெருமைகளை அதிகமாக நாடுகிறேன். மகான் ஒருவர் என்ன உண்பார், என்ன உடுப்பார், தன் பணியாட்களிடம் எப்படிப் பேசுவார் என்றெல்லாம் அறிய விரும்புகிறேன். தான் சாகிற சமயத்திலும் பிறனது தாகத்தை உணர்ந்து தனக்கு வந்த தண்ணீரை மற்றவனுக்கு அளித்த ஸர் ஃபிலிப் ஸிட்னியின் பெருமையைப் பார்க்க விரும்புகிறேன். ஆனால் பெரிய ஸ்தானத்திலுள்ள யாருமே பெரியவராக இருக்க முடியும். எனக்கோ வர வர புழுவிடமுள்ள பெருமைதான் உண்மைப் பெருமையாகத் தெரிகிறது. தன் கடமையை அது எவ்வளவு மௌனமாக, சீராக, கணத்துக்கு கணம், மணிக்கு மணி செய்கிறது!'

''(இன்னொரு சமயம்) சுவாமிஜி கூறினார்: 'இந்தியாவின் பழைய சிறப்பு அம்சங்களையெல்லாம் கண்டு இன்றைய காலத்தின் சிறப்பு அம்சங்களால் அவற்றை இயல்பான முறையில் வலியுறுத்தமுடியும் என்று நான் நம்புகிறேன். இந்தப் புது மாறுபாடு இந்தியாவின் அகத்திலிருந்து ஏற்படும் வளர்ச்சியாக இருக்க வேண்டும். இதனால்தான் நான் உபநிஷதங்களைப் பிரசாரம் செய்கிறேன். உபநிஷதங்களிலும் பலம் என்ற ஒரு கருத்தையே வலியுறுத்துகிறேன். பலம் பயமின்மை இவையே என் லட்சியம். சிப்பாய் கலகத்தின்போது, தம்மைக் கத்தியால் இதயத்தில் குத்தியவனிடம் 'நீயும் அவனே யல்லவா?' என்று கூறிய முனிவர்தான் என் ஆதரிச புருஷர். 'அது சரி, இதில் ஸ்ரீராமகிருஷ்ணருக்கு இடம் ஏது?' என்று நீ கேட்கலாம். ஆனால் அவர்தான் மார்க்கம். சித்தமறியாதபடி சித்தத்தில் நின்றிலகும் அற்புத மார்க்கம் அவர். அவர் தம்மையே புரிந்து கொள்ளவில்லை. அவருக்கு இங்கிலாந்தைத் தெரியாது. ஆங்கிலம் தெரியாது. ஆனால் அவர்தான் மகத்தான வாழ்வை வாழ்ந்தார். அதன் பொருளை நான் படித்தேன்.'

''(இப்படியே பேச்சு செல்ல), சுவாமிஜி 'இதுகாறும் 'துறவு-முக்தி' என்ற இரண்டு வார்த்தைகளை இணைத்தே வைத்திருந்ததுதான் ஹிந்து மதத்தின் பெரும் தவறு. இல்லறத்தான் விஷயம் என்ன? இவனுக்குத்தான் நான் உதவிபுரிய விரும்பு

Koviloor Digital Library

கிறேன். எல்லா உயிர்களும் ஒரே தன்மை வாய்ந்தன அல்லவா? எல்லாருடைய லட்சியமும் ஒன்றேயல்லவா?'

''தனி மனிதர்களின் தன்மையைக் காப்பது என்பதுபற்றிய தமது கருத்தை அவர் வெகு தெளிவாகக் கூறினர். 'இந்தியர்களாகிய நாங்கள் மனிதனை வழிபடுபவர்கள். மனிதனே எங்கள் கடவுள் பிச்சைக்காரர்களின் பாதங்களைப் பூஜிக்கும் வழக்கத்தை நிலைநாட்டுக' என்றார்.'

''விக்ரக ஆராதனம்பற்றியும் அவர் மிகத் தெளிவாக இருந்தார். 'விக்ரகம் கடவுளே என்று நீ சொல்லலாம். கடவுள் விக்ரகம்தான் என்று எண்ணும் தவற்றைமட்டும் தவிர்ப்பாய்' எனக் கூறினர் 'குழந்தை எங்கும் உயிருள்ள வியக்திகளைக் காண்கிறது. குழந்தையின் அந்த திருஷ்டியை அறிவு நம்மிடமிருந்து பறித்துவிடுகிறது. ஆனல் பிறகு பேரறிவுமூலம் அந்தக் கருத்தையே நாம் அடைகிறோம். பேரறிவு பெற்றவன் பாறை, மரம், மட்டை எல்லாவற்றோடும் ஓர் உயிர் சக்தியைப் பிணைத்துப் பார்க்கிறான்' என்றார்.''

* * *

சுவாமிஜி கடல் பயணத்தை நன்றாக ரசித்தார். 'உத்போதன்' ஆசிரியருக்கு வாக்குக் கொடுத்ததற்கிணங்க வங்காளிக் கட்டுரைகள் எழுதினர். லௌகிகம், வேதாந்தம் இரண்டிலும் உன்னதமான தத்துவங்களை ஹாஸ்ய ரஸத்தோடு இந்தக் கட்டுரைகளில் அள்ளித் தெளித்திருந்தார் சுவாமிஜி. 'விரும்பியிருந்தால் சுவாமிஜி வங்காளி இலக்கியத்தின் மார்க் ட்வெயினக இருந்திருக்கலாம் என்பதை இந்தக் கட்டுரைகள் காட்டுகின்றன' என்று சரிதமெழுதிய சிஷ்யர்கள் கூறுகிறார்கள்.

லண்டன் டில்பரி டாக்கில் சுவாமிஜியை எதிர்கொண்டழைக்கப் பழைய அன்பர்கள் குழுமியிருந்தார்கள். அமெரிக்காவிலிருந்து ஸ்ரீமதி ஃபங்கும், இன்னொருத்தியும் லண்டனுக்கு அவரை வரவேற்க வந்திருந்ததைக் கண்ட சுவாமிஜி அதிசயத்தோடு ஆனந்தமுமடைந்தார். சுவாமிஜி மிகவும் மெலிந்துபோயிருந்ததைக் கண்டு வருந்தினள் ஸ்ரீமதி ஃபங்க்.

லண்டனின் புறநகரங்களில் ஒன்றாகிய விம்பிள்டனில் விசாலமான ஓரிடத்தில் சுவாமிஜி தங்கினர். இம்முறை சுவாமிஜி இங்கிலாந்தில் பொதுப்பணி எதுவுமே புரியவில்லை. தம்மைக் காணவரும் அன்பர்களோடு அளவளாவினர். மீதிப்பொழுதில் ஓய்வு எடுத்துக்கொண்டார்.

ஆகஸ்ட் பதினாறும் தேதி துரியானந்தரோடும் அமெரிக்க சிஷ்யைகளோடும் அமெரிக்காவுக்குப் புறப்பட்டார். கடற்

Koviloor Digital Library

பிரயாணத்தின்போது ஒரு நாள் சந்திரிகையை ரசித்த சுவாமிஜி, ''மாயையான இதெல்லாம் இவ்வளவு அழகாக இருக்கிறதெனில், அதன் பின்னுலுள்ள சத்தியம் எத்தகைய அற்புத எழிலுடன் விளங்கும் என்பதை எண்ணிப்பாருங்கள்'' என்ருர். இன்னொரு நாள் பூர்ணிமையின் சௌந்தரியத்தைச் சுவைத்துக்கொண்டிருந்த சுவாமிஜி, ஸ்ரீமதி ஃபங்கின் பக்கம் திரும்பி, ''எதற்காகக் கவிதைகளைப் பாடிக்கொண்டு இருக்கிறீர்கள்? இதோ கவிதையின் சாரமே இருக்கிறது!'' என்று கூறி மதியத்தையும் கடலையும் காட்டினர்.

நியூயார்க்கை அடைந்த தினத்தின் பிற்பகலிலேயே சுவாமிஜி அங்கிருந்து நூற்றுஐம்பது மைலில் ஸ்டோன்ரிட்ஜ் என்ற இடத்தில் லெக்கெட் தம்பதிக்குச் சொந்தமாயிருந்த 'ரிட்ஜ்லிமேனர்' என்ற இல்லத்தை அடைந்தார். நாட்டுப்புறத்தின் அழகுகள் அவ்வளவும் நிரம்பிய அந்த இடம் சுவாமிஜியின் உடலுக்குத் தெம்பூட்டுவதாக இருந்தது. தம்முடைய அடுத்த முயற்சிக்குத் திருவருள் துணைகாட்டும் என்று நம்பியபடி சுவாமிஜி அங்கு துரியானந்தருடன் வாழ்ந்துவந்தார். 'ஆஸ்டியோபதி' என்கிற முறையில் உடலைப் பிடித்துவிட்டும் தேய்த்தும் நோவைச் சரிப்படுத்தும் நிபுணர் ஒருவரைக்கொண்டு சுவாமிஜிக்குச் சிகிச்சை அளித்தனர் லெக்கெட் தம்பதியர்.

சுவாமிஜி வந்த ஒரு மாதத்துக்குப்பின் சகோதரி நிவைதிதையும் ஸ்டோன்ரிட்ஜுக்கு வந்து சேர்ந்தாள். ஸெப்டம்பர் 21-ந் தேதியன்று அவள் தான் துறவியாக ஆடை பூணப்போவதாகத் தெரிவித்தாள். சுவாமிஜி பெருமகிழ்ச்சி கொண்டார். அந்த மகிழ்ச்சியில் முகிழ்த்த ஒரு கவிதையை, வெளியே சென்று திரும்பிய நிவேதிதையிடம் பரிசாக அளித்தார் சுவாமிஜி.

சாந்தி

இருளில் வாழும் இன்னெளியாயும்
ஒளியில் வாழும் நிழலதாயும்
சக்தி யில்லாத சக்தியு மானது
வல்லமையோ டிங்கு வருகுது காணீர்!

உரையில் வாராத இன்பம் அதுவே
உணர்வில் வாராத இன்னலும் அதுவே
வாழப்படாத அமர வாழ்வதுவே!
சோகித்திராத சாசுவத சாவது!

Koviloor Digital Library

ஆனந்தம் அல்ல; அல்லலும் அல்ல:
இரண்டின் இடையில் இருப்பதுவே அது.
காலேயும் அல்ல; கங்குலும் அல்ல;
இரண்டையும் இணைக்கும் இடைவெளியே அது.

இசை யிடைத் தோன்றும் இனிய அமைதி அது
சுந்தரக் கலேயின் அந்தரம் அதுவே.
மொழியினிலே வரும் மௌனம் அது காண்
உணர்வுகள் ஓங்கி உலுக்கிடும் போது
இதயத் தமைதியாய் இலங்குவதே அது.

அன்பு செய்யப்படா அழகுகள் அதுதான்
அநுபவித் தறியா அன்பும் அதுவே
பாடப் பெருதப் பாடல் அதுதான்
அறியப் படாத அறிவாவதும் அது.

இருவாழ்வுக் கிடை இறப்பாவது அது
இருபுயலுக் கிடை அமைதியும் அதுவே
சிருஷ்டிகள் தோன்றிய சூனியம் அதுதான்
சிருஷ்டிகள் முடியும் சூனியமும் அது.

துன்பக் கண்ணீர் தனதின்ப வடிவினே
துலக்கிக் கொள்ளும் துறையும் அதுதான்;
அதுவே இலட்சியம் உயிர் வாழ்வதற்கு
அமைதியா மொன்றே அதனுடை இருப்பிடம்.

லெக்கெட் தம்பதியின் கிராமாந்தர மாளிகையில் நவம்பர் ஐந்தாம் தேதிவரை இருந்தார் சுவாமிஜி. இதனிடையில் சுவாமி அபேதானந்தர் சுவாமிஜியை அங்கு வந்து சந்தித்து அமெரிக்கா வில் வேதாந்தப் பிரசாரம் எப்படி நடைபெற்று வருகிறது என் பதை எடுத்துக்கூறினர். சுவாமிஜி பெருத்த திருப்திகொண்டார். துரியானந்தரும் இப்போது அப்பணியில் அபேதானந்தருக்குக் கை கொடுக்கத் தொடங்கிவிட்டார்.

சுவாமிஜி நவம்பர் எட்டாம் தேதியன்று நியூயார்க்கை அடைந்தார். பத்தாம் தேதியன்று அவருக்கு வேதாந்தசங்கத்தின் நூல் நிலேயத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பழைய முகங்களோடு புது முகங்களும் பல அந்தக் கூட்டத்தில் காணப் பட்டன. சுவாமிஜி தம்மை உலகம் எவ்வளவுக்கு எதிர்பார்க்கிறது என்பதை உணர்ந்தார். எனினும் தம் முடிவு நெருங்கி வருகிறது என்பதை அவர் நன்கு உணர்ந்திருந்தார்.

Koviloor Digital Library

சுவாமிஜி அபேதானந்தரிடம், ''நல்லது சோதரா! நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறேன். அதிகபட்சமாக மூன்று அல்லது நாலு ஆண்டுகளுக்குமேல் வாழமாட்டேன்'' என்றார்.

''இப்படிப் பேசலாகாது சுவாமிஜி! இழந்த உடல் நலத்தைத்தான் தாங்கள் விரைவில் பெற்றுவருகிறீர்களே! இன்னும் சிறிதுகாலம் இங்கேயே தாங்கள் இருந்தால் பூரணமாகக் குணம் அடைந்துவிடுவீர்கள். நாம் செய்யவேண்டிய காரியம் எவ்வளவோ கிடக்கிறது. இப்போதுதானே வேலை தொடங்கியிருக்கிறது?'' என்றார் அபேதானந்தர்.

''சோதரா, நீ என்னைப் புரிந்துகொள்ளவில்லை. நான் பெரிதாகிக்கொண்டே வருகிறேன். என்னுடைய உயிர் மிகவும் வளர்ந்துகொண்டே வருகிறது. இனி உடலால் அதைத் தரிக்கவே முடியாது என்று பல சமயங்களில் தோன்றுகிறது. நான் வெடித்துப்போகும் தறுவாயில் இருக்கிறேன். சதையாலும் இரத்தத்தாலும் ஆன இந்தக் கூண்டு இன்னும் அதிகநாள் என்னை வைத்துக்கொள்ளமுடியாது'' என்றார் சுவாமிஜி.

குமாரி மக்லியாடின் ஒரே சகோதரன் அமெரிக்காவின் மேற்குக் கடற்கரையில் லாஸ் ஏஞ்ஜெல்ஸில் படுத்தபடுக்கையாயிருந்து காலமாகிவிட்டான். சுவாமிஜி சர்வமத மகாசபையில் நிகழ்த்திய உரையினைக் கேட்டு, 'இந்தப் புவியில் ஒரு கடவுள் இருக்கமுடியுமானால் அந்தக் கடவுள் இவரே' என்று கருதிய ஸ்ரீமதி ப்ளாட்கெட் என்பவளுடைய இல்லத்தில், சுவாமிஜியின் புகைப்படத்துக்கருகே அவன் உயிரை விட்டான். நியூயார்க்கிலிருந்த சுவாமிஜி லாஸ் ஏஞ்ஜெல்ஸுக்குப் புறப்பட்டார். சிகாகோவில் பயணத்தை முறித்து பழைய நண்பர்களைக் கண்டு பிறகு மேற்குக் கடற்கரையை அடைந்தார். ஸ்ரீமதி ப்ளாட்கெட்டின் இல்லத்தில் அவர் எவ்வளவு சர்வ சுதந்திரமாக வாழ்ந்தார் என்பதைக் கடிதங்கள் தெரிவிக்கின்றன.

அவர் பிரசங்கம் முடிந்தபின் அன்பர்கள் அவரைச் சூழ்ந்து நெருங்கிக் கொள்வார்கள். ஆனால் அவரோ பள்ளிக்கூடம் விட்டதும் ஒரே ஓட்டமாக வீட்டை அடையும் பிள்ளைபோல், கூட்டத்தையெல்லாம் விலக்கிக்கொண்டு ப்ளாட்கெட்டின்வீட்டை அடைவாராம். நேரே சமையற்கட்டுக்குப்போய், 'சமைக்கப் போகிறேன்' என்று தொடங்குவாராம். 1899-ம் ஆண்டு டிஸம்பரிலும், நாம் வாழும் இந்த நூற்றாண்டைப் பிறப்பித்த 1900-ம் ஆண்டின் ஜனவரி மாதத்திலும் கலிஃபோர்னியாவின் பல பகுதிகளில் சுவாமிஜி பிரசங்கங்கள் புரிந்தார். அநுமனைப் போன்ற குட்வின் காலமாகிவிட்டபடியால் இந்த உரைகள்

Koviloor Digital Library

நமக்குக் கிடைக்கவில்லை. பாஸடேனுவில் இயேசுநாதரைப்பற்றி சுவாமிஜி ஓர் உரை நிகழ்த்துகையில் அவரைச்சுற்றி ஜோதிப்ரபை தெரிந்ததைத் தன் கண்ணுல் கண்டதாக குமாரி மக்லியாட் கூறுகிறுள்.

இந்தப் பிரசங்கம் முடிந்து அவர் இருக்கைக்குத் திரும்புகையில் ஏதோ தீர்க்கமாகச் சிந்தித்துக்கொண்டிருந்தார். திடீரென்று ''நான் கண்டுபிடித்துவிட்டேன்'' என்று கூவினுர். ''என்ன கண்டுபிடித்தீர்கள் ?'' எனக் கேட்டாள் குமாரி மக்லியாட். அவர் இயேசுநாதரைப் போன்ற மகான்களைப்பற்றி ஏதோ புதிய உண்மைகளை ஆராய்ந்து அறிந்திருக்கவேண்டும் என ஆவலோடு எதிர்பார்த்தாள் அவள். ஆனுல் சுவாமிஜியோ, ''மிளகுத் தண்ணீர் எப்படிச் செய்கிறுர்கள் என்று கண்டுபிடித்துவிட்டேன்'' என்றுர். அதைப்பற்றித்தான் அவ்வளவு ஆழ்ந்த யோசனை !

லாஸ் ஏஞ்ஜெல்ஸில் குமாரி ஸ்பென்ஸர் என்பவள் சுவாமிஜியிடம் மிகவும் ஈடுபாடு கொண்டாள். சுவாமிஜியோ சாகக்கிடந்த அவளுடைய அன்னையிடம் ஈடுபாடுகொண்டிருந்தார் ! ''அம்மாவின் உடல்நிலையில் உங்களைக் கவரும்படியாக அப்படி என்ன இருக்கிறது ?'' என்று கேட்டாள் குமாரி ஸ்பென்ஸர்.

''பிறப்பு எப்படி ஒரு புதிரோ அப்படியே மரணமும் புதிராகும். இந்திரிய வியாபாரங்கள் சிறிது சிறிதாக ஒய்ந்து ஆத்மாவானது வெளியேறுகிறது. வெளித்தோற்றங்களால் கட்டுப்பட்டவர்களுக்கு இது பயங்கரமாகவும் துயரமாகவும் தோன்றுகிறது. எனக்கோ இதில் ஆத்மிக உண்மைகளைக் காணமுடிகிறது'' என்றுர் சுவாமிஜி.

'மரணத்தைத் தொழுக; கோரத்தைத் தொழுக; சோகத்தைத் தொழுக' என்றவரல்லவா அவர் ?

லாஸ் ஏஞ்ஜெல்ஸில் சுவாமிஜி புரிந்த வேதாந்தப் பணியைப் பாராட்டிய 'யூனிடி' என்ற ஏடு, ''சுவாமி விவேகானந்தரிடம் கல்லூரித் தலைவரின் கல்வியும், ஆர்ச்பிஷப்பின் கௌரவமும், குழந்தையின் நளின எழிலோடுகிற மோகனமும் கலந்துள்ளன'' என்று எழுதிற்று.

லாஸ் ஏஞ்ஜெல்ஸில் சத்திய கிருகம் என்ற சங்கத்தில் சுவாமிஜி வகுப்புக்கள் நடத்தினுர். அங்கு ஒரு வேடிக்கை நிகழ்ந்தது. தூய்மையை மிகக் கடுமையாகக் கடைப்பிடித்த சத்திய கிருகத்தினர் புகை பிடிப்பதும் கிடையாது. விஷயம் தெரியாத சுவாமிஜி சங்கத்தில் ஒரு நாள் உணவுகொண்டபின் புகைப் பிடித்தார். உணவளித்த மாதுக்கு ஆத்திரம் வந்துவிட்டது.

Koviloor Digital Library

''மனிதன் புகைப்பிடிக்க வேண்டும் என்று கடவுள் விரும்பி யிருந்தால் அவனுடைய தலையில் ஒரு புகைப்போக்கி வைத்திருக்க மாட்டாரா ?'' என்று கேட்டாள். சுவாமிஜியோ புன்னகை யுடன், ''புகைக்குழாயைக் கண்டு பிடிக்கவேண்டும் என்று மனிதனுக்குப் புத்தியைக் கொடுத்தவனும் அதே ஆண்டவன் தானே ?'' என்றார்.

சத்திய கிருகத்தின் விதி சுவாமிஜி விஷயத்தில்மட்டும் தளர்த்தப்பட்டது. அவர் புகைப்பிடிக்க அநுமதிக்கப்பட்டார்.

லாஸ் ஏஞ்ஜெல்ஸிலிருந்து புறப்பட்ட சுவாமிஜி ஒக்லந்து என்ற இடத்தில் பாதிரியாரின் விருந்தினராகத் தங்கியிருந்து எட்டுப் பிரசங்கங்கள் நிகழ்த்தினார். அந்த ஊர் சஞ்சிகைக ளெல்லாம் சுவாமிஜியின் புகழையே பாடின. உள்ளூர் சமய மகா சபைத் தலைவரான டாக்டர் மில்ஸ் என்பவர் சுவாமிஜியின் பேரறிவைப் பாராட்டுகையில், ''இவர் முன்னே நமது சர்வகலா சாலையின் மாபெரும் பேராசிரியர்களும் பச்சைக் குழந்தைகளே'' என்றார்.

பிப்ரவரியிலிருந்து மே மாதம்வரையில் கலிஃபோர்னியாவின் தலைநகரான ஸான்ஃபிரான்ஸிஸ்கோவில் சுவாமிஜி உரைகள் ஆற்றியதோடு, ராஜயோகத்தில் வகுப்புக்களும் நடத்தினார்.

ஏப்ரல் மாதத்தில் அலமேடாவில் சுவாமிஜி மூன்று பிரசங் கங்கள் நிகழ்த்தினார்.

நதிக்கரையில் அமைந்த ஓர் ஊர். கோழிமுட்டை ஓடுகளைக் கோத்து நதி நீரில் மிதக்கவிட்டு அவற்றைச் சுடுவதற்குத் துப் பாக்கிப் பயிற்சி செய்துகொண்டிருந்தனர் சில வாலிபர்கள். அவர்களுடைய முயற்சிகள் பலிதமாகவில்லை. சுவாமிஜி சிரித் தார்.

''பார்த்தால் சுலபமாகத் தோன்றும். ஆனால் இது எளிதில் முடிகிற காரியமில்லை. நீங்கள்தான் சற்று முயன்று பாருங் களேன் !'' என்று கூறித் துப்பாக்கியை சுவாமிஜியிடம் கொடுத் தனர் அந்த இளைஞர்கள். என்ன ஆச்சரியம் ! சுவாமிஜி குறிதப்பாமல் அடுத்தடுத்து ஆறு முட்டைகளைச் சுட்டார்.

''சுடுவதில் நீங்கள் மிகவும் தேர்ச்சிபெற்றவர்போலிருக் கிறதே !'' என்றனர் வாலிபர்கள்.

''அல்ல தம்பிமார்களே ! இன்றுதான் நான் முதல்முறை யாகத் துப்பாக்கியைத் தொடுகிறேன். எல்லாம் மனத்தின் ஒருமைப்பாட்டில்தான் இருக்கிறது'' என்றார் சுவாமிஜி.

ஸான்ஃபிரான்ஸிஸ்கோ, ஒக்லாண்ட், அலமேடா முதலிய பகுதிகளில் பல வேதாந்த கேந்திரங்கள் முளைத்துத் தழைத்தன.

Koviloor Digital Library

சுவாமிஜிக்கு மன நிறைவு ஏற்படும்வகையில் பிரசாரம் பலன் தந்தது. ஸ்ரீமதி ஹான்ஸ்பரோ, டாக்டர் எம். ஹெச். லோகன், ஸ்ரீமதி ஸி. எஃப். பாட்டர்ஸன், ஏ. எஸ். வோல்பெர்க் ஆகியோர் சுவாமிஜியின் முக்கிய சிஷ்யர்களாகி மெய்ஞ்ஞானப் பிரசாரத்துக்கு அரும்தொண்டு செய்தனர்.

சுவாமிஜி கலிஃபோர்னியாவிலிருந்து புறப்படுமுன்னர் குமாரி மின்னி ஸி. பூக் என்பவள் ஸாண்ட கிளாரா என்ற மாவட்டத்தில் ஸான் அண்டோன் என்ற பள்ளத்தாக்கில் வனமும் மலையும் சூழ்ந்த 'கன்னி நாட்டில்' நூற்றறுபது ஏக்கர் நிலத்தை சுவாமிஜிக்குக் காணிக்கையாக அளித்தாள். ஏர்முனையையும் மாந்தரையும் கண்டிராத அந்தப் பூமியில் 'சாந்தி ஆசிரமம்' தோன்றியது.

ஓய்வெடுக்க அமெரிக்கா வந்தவர் மீண்டும் பொதுப்பணியில் தீவிரமாக ஈடுபட்டதால் உடல்நலம் குன்றிப்போனார். 1900-ம் ஆண்டு வஸந்தகாலத்தில் காம்ப் டேய்லர் என்ற இடத்தில் மூன்று வாரம் பூரண ஓய்வு எடுத்துக்கொண்டு ஸான்ஃபிரான்ஸிஸ்கோவுக்குத் திரும்பினார். டாக்டர் வில்லியம் ஃபார்ஸ்டர் என்பவரிடம் சிகித்ஸை செய்துகொண்டார்.

கமாம்ப் டேய்லரிலும், பிறகு ஃபிரிஸ்கோவிலுமே சுவாமிஜி உல்லாஸ பயணம் முதலியவற்றில் நிறையப் பொழுது செலவிட்டார். ஸ்ரீமதி ஹான்ஸ்பரோவும் அவளது சகோதரிகளும் சுவாமிஜியின் சிஷ்யைகளாயினர். அவர்களுக்கு வேதாந்தத்தை மட்டுமின்றி இந்திய புராணக் கதைகளையும் அழகுபட எடுத்துக் கூறுவதில் சுவாமிஜிக்கு தனிப்பட்டதொரு சந்தோஷம்.

இந்த சமயத்தில் சுவாமிஜியின் அந்தரங்கம் எவ்வளவு உச்சத்தில் சிறகடித்துக்கொண்டிருந்தது என்பதை 1900-ம் ஆண்டு ஏப்ரல் 18-ந் தேதியன்று அவர் குமாரி மக்லியாடுக்கு எழுதிய கடிதம் ஒன்று தெளிவாக்குகிறது. இந்த உலகில் ஆத்மிகம் வாழ்வதற்கு, விவேகானந்த சுவாமிஜியின் திவ்விய நாமம் வாழ்வதற்கு, இந்த ஒரு கடிதமே போதும். எழுதுகிறார் சுவாமிஜி:

''கர்மம் புரிவது எப்போதுமே ரொம்பக் கடினமானது. எனக்காக வேண்டிக்கொள். என் வேலைகள் நிரந்தரமாக ஓய வேண்டும் என்றும் அம்பிகை என் ஆத்மாவைப் பூரணமாகத் தன்னுள் கொள்ளவேண்டும் என்றும் பிரார்த்தித்துக்கொள். எல்லாம் அவளுடைய வேலை; அவள் அறிவாள்

''நான் சௌக்கியமாக இருக்கிறேன்; உள்ளத்தில் பரம சௌக்கியமாக இருக்கிறேன். உடம்பின் ஓய்வைவிட உள்ளத்து ஓய்வை அதிகமாக உணர்கிறேன். எத்தனையோ போராடி

Koviloor Digital Library

தோல்வியும் கண்டாயிற்று; வெற்றியும் கண்டாயிற்று! என் பொருட்களையெல்லாம் திரட்டி மூட்டைகட்டி வைத்துக்கொண் டிருக்கிறேன். எல்லாவற்றையும் பட்டுவாடா செய்கிற மகா பெரியவனுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறேன். சிவா, பரம சிவா! என் படகை, அக்கரைக்கு ஓட்டிப்போடா, அப்பனே!

''பார்க்கப்போனால் நான் யார்? தக்ஷிணேசுவரத்திலே, ஆலமரத்தடியிலே ஸ்ரீராமகிருஷ்ணர் கூறிய அற்புத வாக்குகளை அதிசயத்தோடு மெய்ம்மறந்துகேட்டுக்கொண்டிருந்த இளம் பிள்ளை யாகத்தான் நான் இன்னும் இருக்கிறேன். அதுவே என் உண்மை யான இயல்பு. வேலைகளும், நல்லதுசெய்வதென்பதும் — இதெல்லாம் என் உண்மை இயல்பின்மேல் சுமத்திய போர்வைகள் தான்.

''இப்போது அவருடைய குரல் மீண்டும் கேட்கிறது. அதே பழையகுரல். அதேபோல் என் ஆத்மாவைப் புல்லரிக்கச் செய் கிறது. தளைகள் தகர்கின்றன. பாசம் சாகிறது. வேலை என்பது சப்பிட்டுவிட்டது. வாழ்க்கை என்பது வசிகரங்களிலிருந்து விடு பட்டுவிட்டது. இனி குருநாதன் கூப்பிடும் குரல் ஒன்றுதான்! 'வருகிறேன், பிரபு! வருகிறேன்'. 'சாகப்போகிறவர்கள் அதே போல் சாகிறவர்களைப் புதைக்கட்டும் நீ என் பின்னேவா!' என்கிறாய்! 'வந்தேன், என் அன்பான ஐயனே, வந்தேவிட் டேன்!'

''ஆம், நான் குருநாதனிடம் வந்துவிட்டேன்! முக்திநிலை எனக்கு முன்னே நிற்கிறது. அதனை அநேக சமயங்களில் அநுபவிக் கிறேன் — அதே அனந்தமான சாந்த சாகரமாக, ஒருசிற்றலைகூட இல்லாத, ஒரு சுவாசம்கூட விடாத சாகரமாகத்தான் அது இருக்கிறது.

''நான் பிறந்தேனே என்று மகிழ்கிறேன். எவ்வளவோ துன்புற்றேனே என்று மகிழ்கிறேன். மகத்தான தவறுகள் செய் தேனே என்று மகிழ்கிறேன். சாந்தியில் புகப்போகிறேனே என்று மகிழ்கிறேன். நான் யாரையும் பந்தத்துக்கு ஆளாக்கவில்லை; நான் எந்த பந்தத்தையும் என்னுடன் எடுத்துச் செல்லவில்லை. இந்த உடல்விழுந்து என்னை விடுவிக்குமோ, அல்லது உடலிலேயே நான் விட்டை அடைவேனோ — அந்தப் பழைய விவேகானந்தர் போயாச்சு; நிரந்தரமாகப் போயாச்சு; மீண்டும் அவர் வரவே மாட்டார்.

''வழிகாட்டியாகவும், குருவாகவும், தலைவராகவும், போதக ராகவும் இருந்தவர் போய்விட்டார். பையனாக, மாணவனாக, பணியாளாக இருந்தவர்தான் இப்போது பின்தங்கியிருக்கிறார்.

Koviloor Digital Library

...... தலைவன் என்ற என் ஹோதாவை நான் எப்போதோ விட்டுவிட்டேன். என் குரலை எழுப்பவே எனக்கு உரிமையில்லை என்று உணர்கிறேன். இந்த வருஷ ஆரம்பத்திலிருந்து இந்தியாவில் நான் யாருக்கும் எந்த உத்தரவும் போடவில்லை உனக்குத் தெரியும் என் வாழ்வின் அதிமதுரமான பொழுதுகள் நான் மிதக்கிற வேளைகள்தான். நான் இப்போது மிதந்துகொண்டுதான் இருக்கிறேன். எனக்குமேல் பிரகாசமான சூரியன். என்னைச் சுற்றிலும் நெருக்கமான பயிர்பச்சைகள் வெப்பத்தில் எல்லாமே அமைதியாக, சாந்தமாக இருக்கின்றன. நான் மிதந்துகொண்டிருக்கிறேன், நதியின் மித வெப்பமான இதயத்தில் மந்தமாக மிதந்துகொண்டிருக்கிறேன்! என்கையாலோ காலாலோ தண்ணீரை அடித்து வாரியடிக்க நான் துணியமாட்டேன். அப்படிச் செய்தேனுயின் எல்லாம் மாயை என்று உணர்த்தும் அமைதி, பேரமைதி குலைந்துவிடுமே என்று அஞ்சுகிறேன்.

''என்னுடைய வேலைகளுக்குப் பின்னுல் பேராசை இருந்தது; என்னுடைய அன்புக்குப் பின்னுல் 'நான்' என்கிற உணர்வு இருந்தது; என்னுடைய தூய்மைக்குப் பின்னுல் பயம் இருந்தது; என்னுடைய தலைமைக்குப் பின்னுல் அதிகாரவேட்கை இருந்தது! இப்போது அவையெல்லாம் மறைந்துவிட்டன; நான் மிதக்கிறேன். நான் வருகிறேன் அம்பிகே! குளிரடக்கமான உன் கதகதக்கும் மார்பகத்துக்கு வருகிறேன். மொழியில்லாத, பழக்கமில்லாத, அற்புதமான உலகில் நீ எங்கெல்லாம் செலுத்துகிருயோ அங்கெல்லாம் மிதந்துகொண்டு உன்னிடம் வருகிறேன்! பார்வையாளனுக வருகிறேன், நடிப்பவனுக அல்ல!

''ஆஹா, எப்பேர்ப்பட்ட சாந்தம்! என்னுடைய இதய அந்தரங்கத்திலிருந்து வரும் எண்ணங்களே எங்கிருந்தோ தொலை தூரத்திலிருந்து வருவதுபோல் தோன்றுகின்றன. தூரத்திலிருந்து கேட்கும் மெலிந்த ரகசியங்களாகவே அவை தோன்றுகின்றன. எங்குபார்த்தாலும் சாந்தி — இனியசாந்தி, தித்திக்கும் சாந்தி! தூங்குவதற்கு முதல் விநாடிகளில் எல்லாவற்றையும் பயமோ, அன்போ, வேறெந்த உணர்ச்சியோ இல்லாமல் நிழலாகப் பார்ப்போமே, அநுபவிப்போமே — அதைப்போல் எல்லாம் சாந்தமயமாயிருக்கிறது. சிலைகளும், சித்திரங்களும் நிறைந்த இடத்தில் தனியொருவனுக நிற்பவனின் சாந்தியைக் காண்கிறேன். நான் வருகிறேன், பிரபு வருகிறேன்

''உலகம் இருக்கவே செய்கிறது; ஆனுல் அது அழகாகவும் இல்லை; கோரமாகவும் இல்லை. ஒருவித கிளர்ச்சியும் ஏற்படுத்தாத உணர்வுகளாகவே உலகம் தெரிகிறது. ஆஹா! எவ்வளவு

Koviloor Digital Library

மங்களமாயிருக்கிறது! எல்லாம் நல்லனவாக, எல்லாம் எழிலாக இருக்கின்றன. ஏனென்றால் பொருள்களின் நானுதரமான அளவைகள் எல்லாம் என்னைப் பொறுத்தமட்டில் மாய்ந்துவிட்டன. இவற்றில் முதலில் என் உடம்பு என்கிற பொருள் மாயவேண்டும். ஓம் தத் ஸத் ''

அமெரிக்காவின் மேற்கு பாகத்தில் கலிஃபோர்னியோ முதலிய ராஜ்யங்களில் நூற்றுக்கு மேற்பட்ட பிரசங்கங்கள் செய்ததாலும், அது தவிர நூற்றுக்கணக்கான பேட்டிகள் அளித்ததாலும் சுவாமிஜி மிகவும் சோர்வடைந்துவிட்டார். ஆனாலும் தமக்கு இந்தச் சமயத்தில் போல் மனம் ஒருபோதும் தெளிந்திருந்ததில்லை என்று அவர் கூறியிருக்கிறார்.

பாரிஸில் அந்த ஆண்டு சமயசரித்திர மகாசபை ஒன்று நடக்கவிருந்தது. அதற்கு வருமாறு சுவாமிஜிக்கு அயல்நாட்டுப் பிரதிநிதிகள் குழுவிலிருந்து அழைப்பு வந்திருந்தது. சர்வமத மகாசபைக்குப் பின்னர் சர்வதேச அரங்கில் மீண்டும் பாரத தத்துவத்தின் மாண்பினைப் பிரகடனம்செய்ய ஒரு வாய்ப்புக் கிட்டிற்று. பாரிஸுக்குவந்து சுவாமிஜி தமது உடலைத் தேற்றிக் கொள்ளவேணுமென்று அப்போது அங்கு சென்றிருந்த லெக்கெட் தம்பதியரிடமிருந்தும் அன்பான வேண்டுகோள் வந்திருந்தது. சுவாமிஜியும் பாரிஸுக்குச் செல்வதென்று முடிவுசெய்தார்.

மே மாதக் கடைசியில் ஸான்ஃபிரான்ஸிஸ்கோ, அலமேடா, ஒக்லாண்டு பக்தர்களிடம் விடைபெற்றுக்கொண்டு நியூயார்க்குக்குப் புறப்பட்டார். வழியில் டெட்ராய்ட்டில் இறங்கி பழைய நேசங்களைப் புதுப்பித்துக் கொண்டார். சிகாகோவில் தமது பிறந்த வீட்டுக்குச் சமமான ஹேல் இல்லத்துக்குச் சென்றார். பழைய நினைவுகளை அக்குடும்பத்து அன்பு அங்கத்தினரோடு கொட்டி அளந்தார்.

சுவாமிஜி அங்கிருந்து கிளம்பவேண்டிய நாள் காலை.

அவரது அறைக்குள் சோகமாக வந்தாள் மேரி. அவளைவிட சோகமாக சுவாமிஜி வீற்றிருந்தார்.

அவருக்காகப் போட்டிருந்த மெத்தையின் விரிப்பில் ஒரு மடிப்புக்கூடக் கலையாமல் அப்படியே இருந்ததைக் கண்டாள் மேரி.

''சுவாமிஜி, ராத்திரி நீங்கள் படுத்துக்கொள்ளவே இல்லையா?'' என்றாள்.

''இல்லை. படுக்கவே தோன்றவில்லை. உட்கார்ந்துகொண்டும், உலவிக்கொண்டுமே இராமுழுவதையும் கழித்தேன்'' என்று கூறிய சுவாமிஜியின் குரல் கம்மிற்று. ''ஆகா! மனிதத்தன்மை

Koviloor Digital Library

நிரம்பிய பந்தங்களை விலக்குவது எவ்வளவு சிரமமாயிருக்கிறது !'' என்றார்.

ஹேல் குடும்பத்தினரின் விருந்தினராகத் தாம் தங்குவது இதுவே கடைசிமுறை என்பதை அவர் அறிந்திருப்பார் அல்லவா ?

சுவாமிஜி எவ்வளவு மானுடப்பண்புகள் நிறைந்து அன்புருவமாயிருந்தார் என்பதற்கு இக்காலத்தில் அவர் நிவேதிதைக்கு எழுதிய ஒரு கடிதமும் சான்றுபகர்கிறது.

''அன்புசெய்து துன்புறவேண்டுமென்றே சிலர் படைக்கப் பட்டிருக்கிறார்கள். நான் யாரிடையே பிறந்தேனோ அந்த மக்களுக்காக என் இதயத்தை நொறுக்கிக் கொண்டிராவிடில், வேறு யாருக்கேனும் என் இதயத்தை நொறுக்கிக்கொண்டுதான் இருப்பேன். இது என் திடமான கருத்து. சிலர் துன்பமுறுவதிலேயேதான் இன்பம் காண்கிறார்கள் — வேடிக்கையாய் இல்லை ?'' என்று தம்மைக் குறித்தே அக்கடிதத்தில் எழுதிக்கொண்டார்.

இன்னொரு நண்பருக்கு எழுதினார்: ''பல்லாண்டுகளுக்கு முன் நான் ஹிமாலயம் சென்றேன் — திரும்புவதேயில்லை என்ற உத்தேசத்துடன். என் தங்கை தற்கொலை செய்துகொண்டதாக அங்கே என்னைச் செய்தி தேடிவந்தது. சாந்தியைத் தேடும் முயற்சியிலிருந்து என்னை தூரத்தள்ளிவிட்டது என் இதய பலவீனம். என்னுடைய பலவீன இதயம்தான் என்னை என் நாட்டவர்க்கு உதவிபுரியத் தூண்டி இந்தியாவிலிருந்து இங்கு விரட்டியடித்தது. இதோ நான் அமெரிக்காவிலிருக்கிறேன். நான் சாந்தியைத் தேடினேன். ஆனால் பக்தியின் பீடமாகிய இதயம் என்னை சாந்தி கொள்ளவிடாது. போராட்டம், சித்திரவதை ! சித்திரவதை, போராட்டம் ! நல்லது. இதுவே என் விதியென்றால் இப்படியே ஆகட்டும். இது எவ்வளவு சீக்கிரத்தில் முடிகிறதோ, அவ்வளவுக்கு நல்லது !''

* * *

நியூயார்க்கை அடைந்த சுவாமிஜி வேதாந்த சங்கத்தில் தங்கி உபதேசங்கள் புரிந்தார். சங்கத்தின் வளர்ச்சியைக்கண்டு மிக்க திருப்திகொண்டார். லெக்கெட் ஐரோப்பா சென்றிருந்தார் என்று முன்பே கண்டோமல்லவா ? அவருக்குப் பதில் சங்கத்தின் தலைவராக கொலம்பியா கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் ஹெர்ஸ்செல் ஸி. பார்க்கர் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். பாதிரியாரான ஹேபர் நியூடனும், ஹார்வர்ட் சர்வகலாசாலையின் சம்ஸ்கிருதப் பேராசிரியரான சார்லஸ் ஆர். லன்மனும் சங்கத்தில் சேர்ந்து அதற்குக் கௌரவம் அளித்தனர்.

Koviloor Digital Library

கலிஃபோர்னியாவில் நிறுவப்பட்ட சாந்தி ஆசிரமத்தை நிர்வகிப்பதற்காக அங்கு செல்லுமாறு துரியானந்தரைப் பணித்தார் சுவாமிஜி. அவருக்கு அது அவ்வளவு சம்மதமாக இல்லை.

''இது அம்பாளின் சங்கல்பம். நீதான் இந்த வேலையை எடுத்துக்கொள்ளவேண்டும்'' என்றார் சுவாமிஜி.

துரியானந்தர் சிரித்தபடியே, ''உங்கள் சங்கல்பம் என்று சொன்னாலே போதுமே! அம்பாளின் பேச்சை நாம் எங்கே கேட்கமுடியும்?'' என்று கூறிவிட்டார்.

சுவாமிஜியின் உணர்ச்சி கரைபுரண்டுவிட்டது.

''தம்பி! நீயுமா இப்படிச் சொல்கிறாய்! அம்பிகையின் வார்த்தைகளை நாம் ஏன் கேட்கமுடியாது? இப்போது நம்மில் ஒருவர் பேசுவதை இன்னொருவர் கேட்பதுபோல் அவள் பேசியும் கேட்கமுடியும். தேவியின் திருவாக்கைக் கேட்கத் தனி நரம்பு ஒன்று தேவை. ''அவ்வளவுதான்'' என்றார்.

சுமார் இருபதாண்டுகளுக்கு முன்பு இதே விவேகானந்த சுவாமி நரேந்திரராயிருந்ததும், அப்போது சந்தேகமயமாக பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரை அடைந்து, 'மஹாசய, கடவுளைக் காணமுடியுமா?' என்று கேட்டதும் அதற்கு பகவான், 'காண முடியும் குழந்தாய். நாம் ஒருவரை ஒருவர் எப்படிக் காண்கிறோமோ அதேபோல் — இல்லை அதைவிட அடர்ந்த உணர்வுடன் கடவுளைக் காணமுடியும், கடவுளோடு பேசமுடியும்' என்று மொழிந்ததும் நினைவுவருகின்றன அல்லவா?

சுவாமிஜியின் உணர்ச்சி செறிந்த வார்த்தைகள் துரியானந்தரை உலுக்கிவிட்டன. அம்பிகையின் ஆணையை நேருக்கு நேர் கேட்டுத்தான் சுவாமிஜி தம்மை சாந்தி ஆசிரமத்துக்கு அனுப்புகிறார் என்று கருதி, அந்த உத்தரவுக்குக் கீழ்ப்படிந்தார். ஜூலை மூன்றாம் தேதியன்று துரியானந்தர் சாந்தி ஆசிரமத்துக்குப் புறப்பட்டார்.

''கலிஃபோர்னியாவில் வேதாந்தக் கொடியினை ஏற்றுவாய்! இந்த வினாடியிலிருந்து இந்தியா என்ற நினைவைக்கூட ஒழிப்பாய்! எல்லாவற்றுக்கும் மேலாக, உண்மையான வாழ்க்கையை வாழ்வாய்! மற்றவற்றை யெல்லாம் அம்பிகை பார்த்துக்கொள்வாள்'' என்று துரியானந்தருக்கு ஆசி கூறினார் சுவாமிஜி.

துரியானந்தருக்கு இப்படிச் சொன்னபோதிலும் சுவாமிஜி எங்கிருந்தாலும் இந்தியாதான் அவரது நினைவிலேயே இருந்தது. இந்தியாவின் இன்னல்கள் தீரவேதான் அவர் அந்நியநாடுகளுக்குச் சென்றதுவும். இம்முறை அவருக்கு அதிகமாக திரவிய சகாயம் கிடைக்கவில்லை. 'ராஜயோகம்' புத்தகப் பதிப்பிலும், கேத்ரி

Koviloor Digital Library

மன்னர் அளித்த காணிக்கையிலுமாக சுமார் ஆயிரம் டாலர்கள் லெக்கெட்டிடம் இருப்பதாகவும், தமக்கு முடிவு நேர்ந்துவிட்டால் அதனைத் தமது தாயிடம் சேர்த்துவிடுமாறும் 'திரமாதா' வாகிய ஸ்ரீமதி ஒலிபுல்லுக்கு 1899-ம் ஆண்டுக் கடைசியில் சுவாமிஜி எழுதினர்.

தமது தாயைப்பற்றி மீண்டும் 1900-ம் ஆண்டு ஜனவரி 17-ந் தேதி ஸ்ரீமதி புல்லுக்கு நெஞ்சுருகி எழுதினர்:

''எஞ்சிய என் ஆயுட்காலத்தை, கங்கையில் ஒரு குடில் வேய்ந்துகொண்டு அதில் என் அன்னையுடன் கழிக்க விரும்புகிறேன். என் காரணமாக அவள் ரொம்பவும் கஷ்டப்பட்டு விட்டாள். அவளது கடைசி நாட்களை நான் சுகமாக்கித்தரமுயல வேண்டும். உங்களுக்குத் தெரியுமோ? மகானுகிய சங்கராசாரியரும் இப்படியேதான் செய்யவேண்டியிருந்தது. அவரது அன்னையின் இறுதிநாட்களில் அவர் அவளிடம் திரும்பவேண்டியிருந்தது.''

அமெரிக்காவில் வேதாந்தப்பணி வெகு அற்புதமாக நடந்து, ஏராளமான ஆதரவாளர்களைப் பெற்றது. கொலம்பியா சர்வ கலாசாலைத் தலைவர் ஸேத் லோ, கொலம்பியா கல்லூரிப் பேராசிரியர் ஜாக்ஸன், நியூயார்க் கல்லூரிப் பேராசிரியர்களான தாமஸ் பிரைஸ், எங்கல்ஸ்மான், நியூயார்க் சர்வகலாசாலையைச் சேர்ந்த கோஹன், கால்வின் தாமஸ், ஸிஹலர், மக்லூத், பட்லர், ரிச்சர்ட் போத்தியல் ஆகியோர் சுவாமிஜியின் சீடர்களானது குறிப்பிடவேண்டிய விஷயம். இந்தியாவில் பிறந்து, இந்திய தத்துவ சாஸ்திரங்களில் ஈடுபாடுகொண்டிருந்த ஸ்ரீமதி அன்னி ஸ்மித் முன்பே சுவாமிஜியை அறிந்திருந்தபோதிலும் இப்போது அவரால் பெரிதும் கவரப்பெற்று, அமெரிக்காவில் கீழ்நாட்டுத் தத்துவ ஆசிரியையாகப் பெரும் புகழ் எடுத்தாள்.

''முன்பு அமெரிக்காவுக்கு க்ஷத்திரியனுகப் போனேன்; இப்போது பிராமணனுகப் போகப்போகிறேன்'' என்று அவர் சொன்னதற்கேற்ப இம்முறை அமெரிக்கர்களை அதிக அன்புடனும், அநுதாபத்துடனும் அணுகினுரேயன்றி வாதப் போரிடவில்லை. பக்தர்களும் பெருகினுர்கள். இதனுல் அவரது உத்வேகம் குறைந்துவிட்டது என்று எண்ணவேண்டாம்! கொள்கைகளையும் அவர் விட்டுக்கொடுக்கவில்லை. பாவம், பச்சாத்தாபம் என்ற கிறிஸ்துவர்களின் அடிப்படைக் கொள்கைகளை அடியோடு கண்டித்து மானுடனின் புனிதத்துவத்தை ஓதினுர். தாமே சொல்லிக் கொண்டதுபோல பல வெடிகுண்டுகளை வார்த்தைகளில் எறிந்தார். ''கூடியிருந்தவர்கள் தமது பாரம்பரியச் சுவட்டிலிருந்து குலுக்கப்பட்டு வெளியேறினர்'' என்கிறுர் ஒரு சீடர்.

Koviloor Digital Library

இப்படியெல்லாம் அமோக வெற்றிகண்டபோதிலும் இம்முறை சுவாமிஜிக்கு மன உறுத்தல்தரும் சம்பவங்களும் நிகழ்ந்தன. சுவாமிஜி விரதங்களைப் போதிய அளவுக்கு அநுஷ்டிக்கவில்லை என்று கருதிய ஸ்டர்டி — அவரது அருமையான ஆங்கிலேய சிஷ்யர் — அவரிடமிருந்து விலகிவிட்டார். ஆத்மஞானி ஒருவருக்கு இப்படி உடல் உபாதி வருவதுண்டா என்று தவருக எண்ணிய குமாரி ஹென்ரியாட்டா முல்லர் — பேலூர் மட நிர்மாணத்தில் பேருதவி புரிந்தவள் — அவரிடமிருந்து பிரிந்து விட்டாள். சிகாகோவைச் சேர்ந்த அருமை நண்பர் ஜார்ஜ் ஹேல் மரணமுற்றது வேறு இளகிய உள்ளம்பெற்ற சுவாமிஜியைப் பெரிதும் பாதித்துவிட்டது.

தம் வேலையெல்லாம் முடிந்து கண்ணைமூடிக்கொண்டு போய்ச் சேரமாட்டோமா என்ற ஆவல் அவரிடம் வலுத்தது. ஸ்ரீமதி புல்லுக்கு எழுதினர்:

''நான் ஒரு குழந்தை. எனக்கு என்ன வேலை இருக்கிறது? என் சக்திகளையெல்லாம் உங்களுக்கு அளித்துவிட்டேன். இனி நான் எந்த மேடையிலிருந்தும் எதுவுமே சொல்ல முடியாது. இதை யாரிடமும் சொல்லாதீர்கள். நான் இதில் சந்தோஷமே கொள்கிறேன். இனி என் வாயால் ஒன்றுமில்லை. ஸ்ரீராம கிருஷ்ணர்போல் மாந்திரிக ஸ்பரிசத்தால் தான் இனி என் காரியத்தைச் செய்யவேண்டும். என்னுடைய பேச்செல்லாம் உங்களிடம் சென்றுவிட்டது. என்னுடைய சிஷ்யர்கள் எல்லாரும் மர்காடிடம் (சகோதரி நிவேதிதை) சென்றுவிட்டார்கள்.''

1900-ம் ஆண்டு ஏப்ரல் ஏழாம் தேதி மன உளைச்சல் தீர்ந்து மகிழ்ச்சியுடனே எழுதினர்: ''என் படகு அமைதியான துறைமுகத்தை நெருங்கிக்கொண்டிருக்கிறது. அந்தத் துறைமுகத்திலிருந்து அதை யாரும் துரத்தமுடியாது. ஜய ஜய மாதா! எனக்கு ஓர் ஆசையுமில்லை; ஓர் அபிலாஷையுமில்லை. வாழ்க அன்னைத் தெய்வம்! நான் ஸ்ரீராமகிருஷ்ணரின் சேவகன். நான் வெறும் கருவிதான். எனக்காக எதுவும் தெரியாது. தெரிந்துகொள்ள நான் விரும்பவும் இல்லை.''

மறுவாரம் இப்படி எழுதினர் சுவாமிஜி: ''கர்மம் என்பது அதனுடன் புழுதியையும் கொண்டுவருகிறது. இப்படிப் புழுதியைச் சேகரித்துக் கொண்டதற்காக நான் வியாதியைக் கூலியாகக் கொடுக்கிறேன்.''

ஆம், சுவாமிஜியின் உடல் நிலைமையிலும் விசேஷமான மாறுதல் எதுவும் இல்லை. ஆஸ்டியோபதி வைத்தியம் செய்து கொண்டார். காந்த சிகித்ஸை பெற்றார். குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கிடைக்கவில்லை.

Koviloor Digital Library

யாரோ எப்போதோ எய்த அம்பு, அப்போதைய விசையின் பேரில் சென்றுகொண்டிருப்பதுபோலவே சுவாமிஜியின் வாழ்க்கை சென்றுகொண்டிருந்தது; அந்த அம்பு தரையில் விழவேண்டிய தருணம் வந்துவிட்டது — என்று அம்பு பொத்திய நெஞ்சுடன் அன்போடு கூறுகிறுர் நிகிலானந்தர்.

யாரோ செலுத்திய அம்பா? அம்பாளே உலக காரியத்துக்காக எய்த அம்பு அல்லவா அவர்? ஸ்ரீராமகிருஷ்ணராகவந்து அவளே அல்லவா அவரை இயக்கினுள்?

''நான் வெறும் கருவிதான்'' எனக்கூறும் சுவாமி இந்த உண்மைகளையும் எப்படிக் கூருமல் கூறுகிறுர் பாருங்கள்:

''ஜகன்மாதா தன் காரியத்தைச் செய்துகொண்டேதான் இருக்கிறுள். நான் எதைப்பற்றியும் இப்போது உழப்பிக்கொள்வதில்லை. ஒவ்வொரு நிமிஷமும் என்னைப்போல் ஆயிரமாயிரம் கிருமிகள் செத்துக்கொண்டே யிருக்கின்றன. அது ஒரு பொருளே யாகாமல் திவ்ய மாதாவின் திருச்செயல் நடைபெற்றுக்கொண்டேதான் இருக்கிறது. அம்பிகையின் எண்ண அலைகளில் மிதந்துகொண்டிருப்பதேதான் என் வாழ்க்கையாயிருக்கிறது. அவளுடைய எண்ணப்படியேதான் நடக்கும். நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன், என்னிடமே சாந்தி காண்கிறேன். எப்போதையும்விட உண்மை சந்நியாசியாக இருக்கிறேன். உற்றம், சுற்றம் இந்த நினைவுகள் தினந்தோறும் குறைகின்றன. திவ்விய மாதாவின் நினைவு தினந்தோறும் விருத்தியாகிறது. தக்ஷிணேசுவரத்தில் பஞ்சவடி அடியில் இரவெல்லாம் கண்விழித்து விரதம் காத்த நினைவுகள் கிளர்ந்து வருகின்றன.

''காரியமாவது காரியம்! காரியம் என்ருல் என்ன? யாருடைய காரியம்? யாருக்காகக் காரியம்? நான் சுதந்திரன், நான் அம்பிகையின் பிள்ளை. அவள்தான் காரியம் செய்கிறுள்; திருவிளையாடல் புரிகிறுள். நான் எதற்காகத் திட்டம் போட வேண்டும்? என்ன திட்டம்தான் என்னுல் வகுத்துவிடமுடியும்? நான் திட்டமிடாமலும், அல்லது நான் திட்டமிட்டபோதிலும் அவள் விரும்பியபடிதான் விஷயங்கள் நடந்தன, நடந்துமுடிந்தன. நாம் அவளுடைய கருவிகள். அவளே சூத்திரத்தை இழுத்து நம்மை ஆட்டுபவள்.''

அமீயந்த்ர; தூமீ யந்த்ரீ என்று இதைத்தான் பரமஹம்ஸர் கூறுவார்.

அம்பிகையின் திருவிளையாடல் உலகம் என்றுர் சுவாமிஜி. ஆனுல் ஜீவர்கள் இதை விளையாட்டாகவும், தங்களை விளையாடுபவர்களாகவும் காண்பதில்லை. இதனை அவர் அழகுபடக் கூறுவதைக் கேளுங்கள்:

Koviloor Digital Library

''நமக்கெல்லாம் இது விளையாட்டு என்று தெரிந்துவிட்டால் இந்த விளையாட்டுப் பொம்மையான உலகம் இங்கு இராது. இந்த விளையாட்டும் நடைபெருது. நாம் கண்ணைக் கட்டிக் கொண்டுதான் விளையாடவேண்டும். விளையாட்டில் சிலர் துஷ்ட ராக நடிக்கிருேம்; சிலர் கதாநாயகர்களாக நடிக்கிருேம். இதை யெல்லாம் பொருட்படுத்த வேண்டாம். எல்லாம் விளையாட்டுத் தானே?''

இந்த விளையாட்டைத் தாம் புரிந்துகொண்டுவிட்டதால் விடுதலையில் ஊன்றிவிட்டதையும் சுவாமிஜி திடமாக உணர்ந்த சமயங்கள் உண்டு. 1900-ம் ஆண்டு மார்ச் 26-ந் தேதியன்று அவர், 'அபஸ்வரமும் குழப்பமும் மிகுந்த தன் வாழ்க்கையின் மிக இனிய பண்ணுக அமைந்தவள்' என்று கருதிய மேரி ஹேலுக்கு இப்படி எழுதினுர்:

''நான் அடையக்கூடிய மிகப்பெரிய பொருள் ஆத்மா. நான் சுதந்திரன் — ஆனபடியால் எனது இன்பத்துக்கு வேறு யாரும் தேவையில்லை. நான் சுதந்திரமாயிருந்தவன், சுதந்திரமா யிருப்பவன், என்றென்றும் சுதந்திரமாயிருக்கப் போகிறவன். எனவே தனி ஒன்ருகி அமரதத்துவமாக இருக்கவேண்டும். இதுவே வேதாந்த தத்துவம். இந்தத் தத்துவத்தை நான் எத்தனையோ நாட்களாக உபதேசித்திருக்கிறேன். ஆனுலும், ஆகா! என்ன ஆனந்தம்! மேரி, என் அருமை சகோதரி மேரி, இப்போதுதான் வேதாந்தத்தை நான் அநுதினமும் அநுபவிக்கிறேன். ஆம், நான் வாழ்வாக இருக்கிறேன். நான் நித்ய முக்தன். நான் தனி யொன்று. நான் இரண்டாவது பொருளற்ற அத்விதியன்.''

இப்படியெல்லாம் எழுதிய சுவாமிஜி எவ்வளவோ குறும்புத் தனமாயிருந்த சமயங்களும் உண்டு.

ஆவிகளைப்பற்றி அறிவதே மதம் என்று குழம்பிய சில அமெரிக்க இளைஞர்கள் ஒருமுறை சுவாமிஜியிடம், ''நீங்கள் ஆவியை எப்போதேனும் கண்டதுண்டோ?'' என்று கேட்டனர்.

''எப்போதேனுமா? இந்தியாவில் தினமும் காலை உணவுக்கு ஆவிகளைத்தான் சாப்பிட்டு வருகிருேம்'' என்ருர் சுவாமிஜி.

கலைக்காட்சி ஒன்றை ஒரு நாள் பார்வையிட்டுக்கொண் டிருந்தார் சுவாமிஜி. இரட்டை நாடியான சாதுக்களைச் சித் திரித்த ஓர் ஓவியத்தைக் கண்டவுடன், ''ஆத்மிக மனிதர்களே 'கொழு கொழு' என்றுதான் இருப்பார்கள்போலும், இதோ நான் இல்லையா?'' என்று கூறிச் சிரித்தார்.

உலகத்தின் எல்லா தத்துவ நூல்களையும் அறிந்திருந்த சுவாமிஜி வயதில் இவ்வளவு சிறியவராகக் காண்கிருரே என்பதில்

Koviloor Digital Library

அமெரிக்கர்களுக்குப் பேராச்சரியம். உண்மையில் பிராயம் முதிர்ந்தும் யோகசக்தியால் அவர் ஒருவேளை இளமையாய் இருக்கிருரோ என்றும் அவர்களில் பலருக்குச் சந்தேகமுண்டு. ஆனல் சுவாமிஜியோ தமது வயதை வெளியிடவே மாட்டார். ஒரே யடியாக வெளியிடாமலும் இருக்கமாட்டார். வெளியிடுவதுபோல் பேச்சைக் கொண்டுவந்து சபையோரை ஏமாற்றுவதில் அவருக்கு ஒரு குழந்தையின் திருப்தி.

இப்படித்தான் ஒருமுறை எதையோ பேசிக்கொண்டேவந்து, தமது வயது விஷயத்துக்குவந்துவிட்ட சுவாமிஜி, ''எனக்கு வயது'' என்று கூறி நிறுத்திஞர்.

கூடியிருந்தோர் மூச்சை இறுகப் பிடித்துக்கொண்டு உன்னிப் பாகக் கேட்கலாயினர்.

விஷமச் சிரிப்புடன் சுவாமிஜி, ''எனக்கு வயது ஏதோ கொஞ்சம்தான்,'' என்று கூறிவிட்டு அந்த ஹாஸ்யத் துக்காக 'அப்பளாஸை' எதிர்பார்த்தார். ஏமாறிப்போனவர் களும் கரகோஷம் செய்தனர்.

சுவாமிஜி பற்பல நிலைகளில் சஞ்சரித்துக்கொண்டிருந்தார். தலையும் வேஷமுமாக ஒரு நிமிஷம் இருப்பார். மறுநிமிஷமே எவ்வாருே கச்சிதமாக உடுத்திக்கொண்டு, பணிக்காகச் சீவிய முடியுடன் காட்சி அளிப்பார். ஒருசமயத்தில் ஒரே வேகம் அவசரமாகக் காட்சி அளிப்பார். இன்னெருபொழுதிலோ யாராலும் அசைக்கமுடியாமல் நிதானமாக இருப்பார். பிரசங்கம் முடிந்தபின் வண்டிகிளம்பச் சிறிதுபோதுதான் இருக்கும். சுவாமிஜி நிதானமாக வருவார். ''வண்டிக்கு நேரமாகிறது'' என்று நினைவுபடுத்திஞலும் அதேவேகத்தில் — அதாவது வேக மில்லாமல் — தான் நடப்பார். ''அடுத்த வண்டியில் போனல் போச்சு'' என்று அலட்சியமாகக் கூறுவார்.

ஆசாரிய புருஷர்களின் முக்கியமான பணி அவர்கள் பேசி மக்கள் கேட்பதுமட்டுமல்ல; மக்களைச் சாதனைகள் புரியுமாறு செய்வதே அவர்களுடைய பிரதானமான காரியம். சுவாமிஜி இதில் அடைந்த வெற்றிக்குச்சான்றே அவரது யோக வகுப்புக் களில் சேர்ந்து அப்பியாசங்களைப் பழகிய ஏராளமான மாணவர் கள். துறவியின் துவராடையில் அவர் பத்மாஸனமிட்டு, அரைக் கண்களை மூடிச் சிலையாக அமர்ந்திருக்க, அவர் படிப்படியாகக் கையைப் பிடித்து அழைத்துவந்த அமெரிக்க சிஷ்யர்களும் தியான யோகத்திலிருந்தது நம் நெஞ்சில் தீட்டிக்கொள்ளவேண்டிய நிர் மல சித்திரமாகும் !

* * *

Koviloor Digital Library

துரியானந்தர் சாந்தி ஆசிரமத்துக்குப் புறப்பட்ட அன்றே சுவாமி விவேகானந்தர் டெட்ராய்ட்டுக்குப் புறப்பட்டார். ஒரு வாரம் ஸ்ரீமதி கிரின்ஸ்டிடல் என்பவளின் வீட்டில் ஓய்வுகொண்டு விட்டு ஜூலை பத்தாம் தேதி நியூயார்க் வேதாந்த சங்கத்துக்குத் திரும்பினர். அடுத்த பத்து நாட்களும் பொது அலுவல்களில் அதிகம் ஈடுபடாமல் சிஷ்யர்களிடமே அன்பைப் பொழிந்தார்.

1900-ம் ஆண்டு ஜூலை இருபதாம் தேதி பாரிஸுக்குக் கப்பலேறிய சுவாமிஜி தமது அமெரிக்க அன்பர்களிடம் நிரந்தர மாக விடைபெற்றுக்கொண்டார்!

Koviloor Digital Library

அத்தியாயம்—33

ஐரோப்பாவில்......

1900-ம். ஆண்டு ஆகஸ்ட் முதல் தேதியிலிருந்து டிஸம்பர் மத்திவரையில் அநேகமாக சுவாமிஜி பாரிஸில்தான் காலம் கழித்தார்.

பாரிஸில் முதலில் அவர் ஃப்ரான்ஸில் லெக்கெட் தம்பதியின் மாளிகையில் அவர்களுடைய விருந்தினராகத் தங்கியிருந்தார். அப்போது, கவிகளும், தத்துவ நிபுணர்களும், பேராசிரியர்களும், சிற்பிகளும், சைத்திரிகர்களும், விஞ்ஞானிகளும், இசைக் கலைஞர்களும், நடிகர்களும் சமயப் பிரசாரகர்களுமாகப் பலர் சுவாமிஜியைக்கண்டு சம்பாஷித்து, அவரது மேதையை வியந்தனர்.

முன்பே கூறியதுபோல் பாரிஸில் அப்போது நடைபெற்ற உலக மகாநாடு ஒன்றின் அங்கமாக சமயசரித்திர மகாசபை கூட்டப்பட்டது. இதனை சிகாகோ சர்வமத மகாசபைபோலவே நடத்தவேண்டும் என்றுதான் நிர்வாகிகள் விரும்பினர். ஆனால் கத்தோலிக்கத் தலைவர்கள் அதனை எதிர்த்தார்கள். கிறிஸ்துவ சமயத்தைவிடக் கீழ்நாட்டுச் சமயங்கள் — முக்கியமாக சுவாமி விவேகானந்தர் விளக்கிய வேதாந்த மதம் — சிறந்தவை என்பது போன்ற கருத்து, சிகாகோ மகாசபையின் விளைவாகக் கிறிஸ்துவ உலகிலேயே உண்டாகிவிட்டதென்றும் எனவே எல்லா மதங்களின் கோட்பாடுகளையும் விளக்கும் மகாசபை நடத்தலாகாது என்றும் கத்தோலிக்கர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனபடியால் எல்லாச் சமயங்களின் சரித்திரத்தைமட்டும் பிரதிநிதிகளைக் கொண்டு விளக்குவதற்காக மகாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. இதனால் சமயத்தலைவர்கள் என்பதைவிட சரித்திர நிபுணர்கள் என்ற முறையிலேயே முக்கியமாகக் குறிப்பிடத்தக்க பிரதிநிதிகள் தான் மகாசபையில் கலந்துகொண்டனர். சமயத் தலைவராகவும், சரித்திர நிபுணராகவும் விளங்கிய சகலகலாவல்லபம் பொருந்திய சுவாமிஜி ஹிந்து மதத்தின் பிரதிநிதியானார்.

இரண்டே மாத காலத்தில் பிரெஞ்சு மொழியைக் கசடறக் கற்று, சூக்ஷ்மமான தத்துவங்களைக்கூட அம்மொழியிலேயே விளக்குமளவுக்கு ஆற்றல் பெற்றார் சுவாமிஜி.

உடல்நலம் சரியாக இல்லாததால் சுவாமிஜி மகாசபையில் இரண்டு முறைதான் பேச முடிந்தது. ஆனால் இந்த இரண்டு உரைகளிலும் பல அரிய கருத்துக்களை அவர் அள்ளித் தெளித்துவிட்டார்.

Koviloor Digital Library

முதன் முறை அவர் குஸ்டாவ் ஆப்பர்ட் என்ற ஜெர்மானிய பிரதிநிதியை ஆட்சேபித்துப் பேசினுர். லிங்க வழிபாடு, சாளக்ராம வழிபாடு இவை பால் உணர்ச்சியின்மீது தோன்றியவை என்று பேசினுர் ஆப்பர்ட். இதனை வன்மையாக கண்டித்த சுவாமிஜி அதர்வ வேத ஸம்ஹிதையிலிருந்து பல சான்றுகள் காட்டி, யாகத்தில் நாட்டப்படும் யூபஸ்தம்பமே லிங்கமாகப் பரிணமித்தது என்று கூறினுர். 'வேள்வித் தீ சிவபெருமானின் பொன்னுர்மேனி ஆயிற்று. புகை அவனது ஜடையாயிற்று. சாம்பல் அவனது கருத்த கண்டமாயிற்று. யக்ஞசாமக்கிரிகளைக் கொண்டுவரும் பசு அவனுடைய வாகனமாயிற்று. இதேபோலத் தான் யூபஸ்தம்பம் சிவலிங்கமாயிற்று' என்ருர். பிற்காலத்தில் பௌத்த மகான்களின் அஸ்திகளின்மீது எழுப்பப்பட்ட ஸ்தூபங்களும் லிங்காகாரமாக அமைக்கப்பட்டதை சுவாமிஜி சுட்டிக் காட்டினுர். இவ்வாறே பௌத்தர்களின் தாதுகர்ப்பங்களுக்கும் (டகோபா) சாளக்ராமத்தின் இயற்கையான அமைப்புக்கும் உள்ள ஒற்றுமையையும் சுவாமிஜி விளக்கினுர். லிங்கம் சைவத்துக்கும் சாளக்ராமம் வைஷ்ணவத்துக்கும் சின்னமாயின என்று கூறி, இவற்றை மனித அங்கங்களுடன் தொடர்புறுத்துவது கிறிஸ்தவர்களின் புனித சங்கத்தை நரமாமிச பட்சிணிகளின் சேர்க்கையோடு சம்பந்தப்படுத்துவது போன்றதாகும் என்று கூறினுர்.

சமயசரித்திர மகாசபையில் சுவாமிஜி நிகழ்த்திய இரண்டாவது விரிவுரையில் வேதங்களே ஹிந்துமதம் பௌத்தமதம் இவற்றுக்கு ஆதாரமென்றும், கண்ணபெருமான் புத்தருக்கு முற்காலத்தவரே என்றும் ஆணித்தரமாக வாதம் புரிந்தார் சுவாமிஜி. ஸ்ரீமத் பகவத்கிதைக்கும் மஹாபாரத மொழிக்கும் உள்ள ஒற்றுமையைச் சுட்டிக்காட்டி, கிதை புத்தருக்குப் பிற்பட்டதல்ல என்று விளக்கினுர். அவ்வாறு கிதை பிற்காலத்தில் தோன்றியிருப்பின், அது பௌத்த மதத்தையோ, தத்துவத்தையோபற்றிக் குறிப்பிடாமல் இருந்திராது என்று கூறினுர். புத்தருக்குப் பலகாலத்துக்கு முன்பிருந்தே கிருஷ்ணனின் வழிபாடு இருந்துவந்திருக்கிறது என்பதற்கு ஆதாரங்கள் காட்டினுர்.

இந்திய இலக்கியம், சிற்ப-சித்திரம், ஜோதிஷ வானசாஸ்திரம், கணிதம் எல்லாவற்றுமே கிரேக்க சாஸ்திரங்கள்தான் ஆதாரம் என்பதையும் சுவாமிஜி ஆட்சேபித்தார். ஒரளவுக்கு இந்தியா அலெக்ஸாந்தர் படையெடுப்பால் இத்துறைகளில் பயன் அடைந்தது என்பது உண்மை. என்ருலும் மொழி இயல்வல்லுநர்கள் எல்லா வேர்ச்சொற்களையும் சுற்றிவளைத்துக்கொண்டாவது கிரேக்க மொழியுடன் தொடர்புறுத்தித் தங்கள் சித்தாந்தத்தை

Koviloor Digital Library

ஸ்தாபிக்கிறார்கள் என்றும், நேரடியாகப் புலனாகிற சம்ஸ்கிருத தாதுக்களைக்கூட அவர்கள் புறக்கணிக்கிறார்கள் என்றும் சுவாமிஜி தைரியமாக எடுத்தியம்பினார். சம்ஸ்கிருத நாடகத்துக்கு கிரேக்க ஆதாரம் காட்டுவது விபரீதமானது; நாடக இலக்கியத்தின் அமைப்பிலும், அரங்க நிர்மாணங்களிலும், இரண்டுக்கும் பெருத்த மாறுபாடு உண்டு என்றார் சுவாமிஜி. கிரேக்க மொழிபயின்ற ஒரு ஹிந்துவின் கருத்துக்கள்தான் இவ்விஷயத்தில் முடிவாக இருக்கமுடியும் என்று அவர் கருதினார். கீழ்நாட்டுப் பண்புகளைப் பயிலும் மேல்நாட்டினருக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார் சுவாமிஜி. 'கிரேக்க மொழியிலுள்ள ஒவ்வொரு வார்த்தையைக் குறித்தும் எவ்வளவோ பொழுதைக் கழிக்கும் நீங்கள் அப்படியே சம்ஸ்கிருத மொழியையும் ஆராய்ச்சி செய்துபாருங்கள். அப்போதுதான் பற்பல சரித்திர காலங்களில் கிழக்குக்கும் மேற்குக்கும் இடையே நடைபெற்ற கருத்துப் பரிவர்த்தனையைப்பற்றிச் சிறிதேனும் உண்மைகிடைக்கும். புகழ்வாய்ந்த கிரேக்கரான பைத்த கோரஸ்ஸை, பிராமணர்களின் சீடன் என்று அலெக்ஸாந்திரியாவின் க்ளெமண்ட் தயங்காமல் கூறினார். நீங்களும் அவ்வாறே இந்தியாவுக்குவந்து சீடராகிப் படிக்கலாம்' என்றார்.

சம்ஸ்கிருதத்தில் புலமைபெற்ற பல ஐரோப்பியர்கள் சுவாமிஜியின் கருத்துக்கு ஆதரவு தெரிவித்தனர். இந்தியப் புராணங்கள் பல சரித்திரபூர்வமாக உண்மையானவை என்றும் அவர்கள் ஒப்புக்கொண்டனர். எனினும் சபைத் தலைவர், கீதை பௌத்தத்துக்கு முற்பட்டது என்பதை ஏற்கவில்லை.

பிரெஞ்சுப் பண்பாட்டை அறிவதில் சுவாமிஜி மிகவும் ஈடுபாடுகாட்டினார். 'கிழக்கும் மேற்கும்' என்ற வியாஸத்தில் தமது கருத்துக்களை உள்ளடக்கினார். பாரிஸ் மகாநாட்டில் நடைபெற்ற கண்காட்சி அவருக்கு இவ்விஷயமாகப் பல உண்மைகளை விளக்கிற்று.

பாரிஸில் சுவாமிஜி சந்தித்த பிரபலஸ்தர்களில் ரிச்செலூ கோமகன் ஒருவர். சுவாமிஜியை அடிக்கடி சந்தித்து அவருடைய அறிவை வியந்தார் கோமகன். பாரிஸிலிருந்து புறப்படுவதற்கு முதல் நாள் சுவாமிஜி அவரை சந்நியாசம் வாங்கிக்கொண்டு தமது சீடராகுமாறு சொன்னார். ''இந்தத் துறவுக்கு ஈடாக நீங்கள் என்ன தருவீர்கள் ?'' என்று கேட்டார் கோமகன்.

''மரணத்தை விரும்பும் ஆசையைத் தருவேன். அதாவது மரணம் நெருங்கும்போது நீங்கள் அஞ்சாமல் அதனைச் சிரித்து வரவேற்கும் பான்மையைத் தருவேன்'' என்றார் சுவாமிஜி.

கோமகன் சிறிது நேரம் யோசித்தார்.

Koviloor Digital Library

''மன்னியுங்கள், என்றால் உலகைவிட்டு வரமுடியவில்லை'' என்றார்.

சுவாமிஜியிடம் ரிச்செலூ கோமகனுக்கிருந்த பக்தி என்றுமே தணியவில்லை.

ஸ்ரீமதி ஓல்புல் அப்போது பிரிட்டனில் இருந்தாள். ஸ்ரீராம கிருஷ்ண தர்மத்துக்கு இணையற்ற பணிபுரிந்த அவருடைய இல்லத்தில் சிறிதுகாலம் தங்கினார் சுவாமிஜி. இங்கு நிவேதிதையும் அமெரிக்காவிலிருந்து வந்து சேர்ந்துகொண்டாள். சுவாமிஜி புத்தரைப்பற்றியே மிக அதிகமாகச் சிந்தித்துக்கொண்டிருந்த காலம் அது. ''புத்த மதத்துக்கும் ஹிந்து மதத்துக்குமுள்ள பெருத்த வித்தியாசம் இதுதான்: 'இதெல்லாம் மாயை என உணர்க' என்கிறது பௌத்தம். 'இந்த எல்லா மாயைக்கும் உள்ளே சத்தியவஸ்து இருக்கிறது என உணர்க' என்கிறது ஹிந்து மதம்'' என்பார். ஹிந்துமதத்துக்குள்ளேயே பௌத்தமும் இருக்கிறது; ஹிந்து தெய்வங்களில் புத்தரும் ஒருவராகிவிட்டார் என்பார். ''புத்தரின் இதயமும் சங்கரரின் அறிவும் சேர்ந்த வியக்தியே மனிதகுலம் அளிக்கக்கூடிய மகோன்னதமான இலட்சியம். உலகநாடுகளின் எல்லா குரவர்களிலும் என் குருமஹராஜ் ஒருவரை அப்படியிருக்கக் கண்டேன்'' என்பார்.

பிரிட்டனிலிருந்து ஸ்ரீமதி புல்லுடனும் மற்றும் சிலருடனும் மாண்ட்ஸெயிண்ட் மைகேல் என்ற இடத்துக்குச் சென்றசுவாமிஜி, ''என்னை எதிர்க்கும் சக்திகளும் இறுதியில் என்னிடம்தான் இருக்க வேண்டும். நான் அவளுடைய படைவீரன் அல்லவா?'' என்றார்.

நிவேதிதைக்கு அவள் பணியில் சுதந்திரமளித்து இங்கிலாந்துக்கு அனுப்பியபின் சுவாமிஜி பாரிஸுக்குத் திரும்பினார். எழுத்தாளரும், சமய நிபுணருமான ஜுல்ஸ் பாயிஸ் என்பவர் வீட்டில் இப்போது சுவாமிஜி தங்கினார். அங்கு சுவாமிஜியால் கவரப்பட்டவர்களில் எடின்பரோ பல்கலைக்கழகப் பேராசிரியரான பாட்ரிக் கெட்டிஸ் ஒருவர். பல இனங்களின் தோற்றுவாயையும், வளர்ச்சியையும் குறித்து அவருடன் சுவாமிஜி நிரம்ப விவாதிப்பார்.

மனிதகுலம் முழுவதன் சிந்தனையிலும் இந்தியா செலுத்தியிருக்கும் சக்தியைப்பற்றி சுவாமிஜி நிறையக் கூறினார். ஸுமத்ரா, ஜாவா, போர்னியோ, ஸெலிபிஸ், முதலிய இடங்களில்மட்டுமின்றி ஆஸ்திரேலியா, அமெரிக்கக் கடற்கரைப் பகுதிகளில் சிலவற்றிலும்கூட ஹிந்து சமயத்தின் எதிரொலிகளைக் காணலாம் என்பார் சுவாமிஜி. எகிப்து, மாஸிடோனியா இவற்றின்வழியாக ஐரோப்பாவிலும், ஹிந்துமத சிந்தனைகள் ஊடுருவியதைக் கூறுவார்.

Koviloor Digital Library

இவற்றைக்கேட்டு ரஸித்தவர்களில் ஹியாஸிந்தி என்பவரை முக்கியமாகச் சொல்லவேண்டும். கத்தோலிக்க சந்நியாசியாக இருந்து அம்மதத்தவர் எல்லாராலும் பெரிதும் போற்றப்பட்டவர் ஹியாஸிந்தி. பிறகு, போப்பாண்டவர் ஒருகாலும் பிழைசெய்ய முடியாது என்பதுபோன்ற கொள்கைகளை அவர் எதிர்த்து மடத்தி லிருந்து வெளியேறினர். அமெரிக்கப் பெண்மணி ஒருத்தியை மணந்துகொண்டு மேல்நாடுகளைத் தமது புரட்சி மனப்பான்மை யால் அதிசயிக்கவைத்தார் அவர். வயதான பிறகு கிறிஸ்துவ மதத்துக்குள்ளேயே கத்தோலிக்கர், பிராடெஸ்டெண்ட் ஆகி யோருக்கிடையே இருந்த கருத்து மாறுபாடுகளை நீக்க முயன்று கொண்டிருந்தார். இச்சமயத்தில்தான் அவர் சுவாமிஜியால் கவரப்பட்டார். சுவாமிஜி அவரைக் குறித்து, ''அவர் மிகவும் இனிய இயல்பு படைத்தவர், அடக்கமானவர், பக்த குணம் பொருந்தியவர்'' என்பார். துறவறத்திலிருந்துவிட்டு இல்லறத் துக்குத் திரும்பிய ஹியாஸிந்தியிடம் சுவாமிஜி அடிக்கடித் துற வறத்தின் பெருமையை எடுத்துச் சொல்வார். சுவாமிஜி பாரிஸை விட்டுப் புறப்பட்டு கான்ஸ்டாண்டிநோபிள் செல்லும்வரையில் ஹியாஸிந்தி தமது மனைவியுடன் அவரைப் பின்தொடர்ந்தார் என்பதிலிருந்தே சுவாமிஜியிடம் அவருக்கு ஏற்பட்டிருந்த பற்றினைப் புரிந்துகொள்ளலாம்.

இயந்திரத் துப்பாக்கியைக் கண்டுபிடித்த ஹிராம் மாக்ஸிம் மதவிஷயங்களிலும் பற்றுக்கொண்டு கட்டுரைகள் எழுதியவர். இந்தியாவிடமும், சைனுவிடமும் அவர் கொண்டிருந்த நேசம் சுவாமிஜியின் பரிச்சயத்தால் விருத்தியடைந்தது. சீனத்துத் தத்துவ தரிசியான கன்ஃபூஷியஸின் மதத்தில் மிகவும் ஈடுபாடு கொண் டவர் மாக்ஸிம். ஆனபடியால் சீனுவில் மத மாற்றம் செய்வதற் காகக் கிறிஸ்துவ மிஷனரிகள் செய்துவந்த பிரசாரத்தைத் தாக்கி அவர் பல புனைப்பெயர்களில் பத்திரிகைகளுக்கு எழுதுவாராம்.

'தெய்விக ஸாரா' என்று பாராட்டப்பட்டவளும், மேல் நாடுகளின் தலைசிறந்த நடிகையுமான ஸாரா பெர்ன்ஹார்ட் என்பவளை சுவாமிஜி பல ஆண்டுகளுக்கு முன்பே அமெரிக்காவில் சந்தித்ததுண்டு. இப்போது பாரிஸில் அவள் மீண்டும் சுவாமிஜி யைச் சந்தித்தாள். 'மிகவும் புராதனமானது, மிகவும் பண் பட்டது' என்று அவள் இந்தியாவைக் கொண்டாடுவாள். ஒரு மாதம் முழுவதும் மியுஸியங்கள் பலவற்றைச் சுற்றிப்பார்த்து இந்தியாவில் வழங்கும் பொருள்களைப்பற்றித் தெரிந்துகொண்ட அவள், தத்ரூபமாக இந்தியாவிலேயே ஒரு துண்டைப் பிய்த்துக் கொண்டுவந்ததுபோல் காட்சி ஜோடனைசெய்து இந்தியாவைப்

Koviloor Digital Library

பற்றிய ஒரு கதையை நாடகமாக நடித்துக்காட்டினுள். பிற்பாடு ஏழாவது எட்வர்ட் சக்கரவர்த்தியாகவிருந்த வேல்ஸ் இளவரசர் அவள் இந்தியாவுக்குச் சென்றுவருவதற்கான செலவுகளை ஏற்றுக் கொள்வதாக வாக்களித்தாராம். ஆனுலும் அவள் தன் குழு முழுவதையுமே அழைத்துச்செல்ல விரும்பியதால் மிகவும் பொருட் செலவாகும் எனக்கருதி மன்னர்மகனின் வாக்கை நிறைவேற்றிக் கொள்ள முயலவில்லை.

அமெரிக்காவில் கொதிக்கும் தனது மனத்தை சுவாமிஜியின் உபதேசத்தினுல் குளிர்வித்துக்கொண்ட பிரசித்திபெற்ற பாடகி கால்வியும் பாரிஸில் சுவாமிஜியிடம் தன் பக்தியை மறுபடி உயர்த்திக்கொண்டாள். அவளைப்பற்றி எழுதுகையில் சுவாமிஜி, ''துயரத்தையும் வறுமையையும்விடச் சிறந்த குரு எங்குமே கிடையாது. கால்வி தனது இளமைக் காலத்தில் வறுமையுடனும், துயரத்துடனும், கஷ்டங்களுடனும் போராடி அவற்றை வெற்றி கண்டிருப்பதால்தான் இவ்வளவு இணையற்ற அநுதாப சிந்தையும், ஆழ்ந்த எண்ணங்களும், விசால மனப்பான்மையும் பெற்றிருக் கிருள்'' என்று குறிப்பிட்டிருக்கிருர். சுவாமிஜி விதேக கைவல் யம் பெற்றபின் கால்வி பேலூருக்கு வந்து அவரது சமாதியைப் பணிந்து கண்ணீர்விட்டாள். அவள் தனது விருத்தாப்ய தசையில் கத்தோலிக்க மதத்தில் பேரார்வம்கொண்டு வேதாந்த மதத்தி லிருந்து விலகினுர். ஆனுல் அவள் இதயத்திலிருந்து சுவாமிஜியை மட்டும் விலக்கவில்லை.

பாரிஸில் சுவாமிஜியிடம் பக்திகொண்டவர்களில் இளவரசி டெமிடாஃப் என்பவளும் ஒருத்தி.

வங்காளம் உலகுக்குத் தந்த ஒப்பற்ற புதல்வர்களில்சுவாமிஜி யின் சமகாலத்தவரான இன்னெருவர் தாவர விஞ்ஞானி ஜகதீச சந்திர போஸ். தாவரங்களின் உயிர்த்துடிப்பைக் கண்டிபிடித்து உலகுக்கு ஓதியவர் அவர். இவரும் பாரிஸ் மகாநாட்டில் விஞ்ஞானப் பகுதியில் கலந்துகொள்வதற்காக வந்திருந்தார். சுவாமிஜியும் அவரும் ஒருவரை மற்றவர் கண்டு பரஸ்பரம் அளப்பரும் பெருமிதம் கொண்டனர். ஒரு நாள் கௌரவமும் கண்ணியமும் வாய்ந்த பலர் கூடியிருந்தபோது, ஆங்கில விஞ்ஞானி யொருவரின் மாணவி, ''எங்கள் ஆசிரியர் வளர்ச்சிகுன்றிய லில்லியை வளர்ச்சிபெறச் செய்யச் சோதனை செய்துகொண் டிருக்கிருர்'' என்ருள். சுவாமிஜி பெருமைச் சிரிப்புடன், ''எங்கள் போஸ் லில்லி வளருகிற சட்டியையே வளரச் செய் வாரே'' என்ருர் !

பாரிஸில் சுவாமிஜியின் கூடவேஇருந்து, அவருக்குச்சுசுருஷை புரிந்து, அவரைப் பார்க்கவேண்டிய இடங்களுக்கெல்லாம் அழைத்

Koviloor Digital Library

துச் சென்று மிகச்சிறப்பாக பணிவிடை புரிந்தவள் குமாரி ஜோஸஃபின் மக்லியாட்தான். சுவாமிஜிக்கு ஓய்வு மிகவும் அவசியம் என்பதை உணர்ந்து, அவர் ஆழ்ந்து சிந்திப்பதைக்கூட அவ்வப்போது தவிர்க்கச் செய்துவந்தாள் அவள். பிறரைப்போல் அவரை வினக்கள் கேட்டுத் துளைக்கமாட்டாள் அவள். இயேசு நாதரின் ஆத்மாவைத் தரித்து சுவாமிஜி வந்திருக்கிறார் என்று நம்பிப் பணிவிடை செய்துவந்தாள் அவள். உற்சாகமே உருவான அவளிடம் சுவாமிஜிக்கு மிகவும் வாத்ஸல்யமுண்டு. அவள் கேள்வி கேட்காவிட்டாலும் அவளிடம் கருத்துச்செறிந்த தமது பல எண்ணங்களை சுவாமிஜி கூறுவார்.

குமாரி மக்லியாட், லாய்ஸன் தம்பதி, ஜூல்ஸ் பாயிஸ், கால்வி இவர்களுடன் சுவாமிஜி அக்டோபர் 24-ந் தேதியன்று பாரிஸிலிருந்து புறப்பட்டார். கால்வி எகிப்தில் ஓய்வுகொள்ள உத்தேசித்திருந்தாள். அவளுடைய விருந்தினராகத்தான் சுவாமிஜி சென்றார்.

போகும் மார்க்கத்தில் பற்பல ஐரோப்பிய நாடுகளைக் கண்டு மகிழ்ந்தார் சுவாமிஜி. வியன்னாவில் மூன்று நாட்கள் தங்கினார். அங்கு சுவாமிஜியை மிகவும் கவர்ந்தது நெப்போலியனுடைய மகன் மனமுடைந்து மாண்ட ஸ்கோன்ப்ருன் அரண்மனைதான். இந்தக் கதையைச் சமீபத்தில்தான் அவர் ஸாரா அரங்கேற்றிய ஒரு நாடகத்தில் பார்த்து மனம் உருகியிருந்தார்.

ஸ்கோன்ப்ருன் அரண்மனையில் இந்தியா உள்படப் பலதேசத்துக் கலைச்செல்வங்கள் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன.

இதையெல்லாம் சுவாமிஜி ரஸித்தாலும், பாரிஸைக் கண்ட பின் வேறெந்த நகரமும் அவருக்குச் சிறந்ததாகத் தோன்றவில்லை. ஆனால் பாரிஸின் அழகை சுவாமிஜி ரஸித்தாலும், பிரெஞ்சு மக்களின் லௌகிக வெறியைக் கண்டு மனம் வருந்தினார் அவர்.

ஆஸ்திரியா சுவாமிஜியைச் சிறிதும் கவரவில்லை. "துருக்கியை ஐரோப்பாவின் நோயாளி மனிதன் என்பார்களே! ஆஸ்திரியாவை ஐரோப்பாவின் நோயாளி ஸ்திரீ என்று சொல்லலாம்" என்றார்.

ஹங்கேரி, ஸெர்பியா, ருமேனியா, பல்கேரியா, முதலிய நாடுகளின் வழியாகப் பயணம்செய்து அக்டோபர் முப்பதாம் தேதியன்று கான்ஸ்டாண்டிநோபிளை அடைந்தனர். சுங்கக்காரர்கள் அவர்களிடமிருந்த பொருள்களையெல்லாம் பறிமுதல் செய்துவிட்டனர். கால்வியும், ஜூல்ஸ் பாயிஸூம் அவர்களுடன் வாக்கு வாதம் செய்தனர். பலனளிக்காமல் போகவே 'பெரிய இடத்தை'ப் பிடித்து ஒருவாறு சுங்க அதிகாரிகளை மசியவைத்

Koviloor Digital Library

தனர். இரண்டு புத்தகங்கள் நீங்கலாக பாக்கிப் பொருள்கள் திருப்பப்பட்டன.

மறுநாள் சுவாமிஜியும் குமாரி மக்லியாடும் ஸ்குடாரிக்குச் சென்றனர். ஐரோப்பாவையும் ஆசியாவையும் பிரிக்கும் ஆற்றின் நடுவே அமைந்த அழகிய இடம் அது. சுவாமிஜி, குமாரி மக்லியாட் இருவருக்குமே துருக்கி மொழியோ, அரபு மொழியோ தெரியாது. படகோட்டிகளுக்கோ ஆங்கிலம் தெரியாது. இதனுல் பல வேடிக்கைகளையும், சில்லுண்டி உபத்திரவங்களையும் அவர்கள் அடைந்தனர். ஸ்குடாரிக்கு ஹியாஸிந்தும் அப்போது வந்திருந்தார். எல்லாரும் சந்தித்தனர். ஸ்குடாரியிலிருந்து திரும்பும் போது பாஷைதெரியாத காரணத்தால் பல தாறுமாறுகள் நேர்ந்தன. கான்ஸ்டாண்டிநோபிளில் அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்குத் தொலைவில் எதிர்புறக்கரையிலே அவர்கள் இறக்கிவிடப் பட்டனர்.

கான்ஸ்டாண்டிநோபிளில் சுவாமிஜியின் கலை ஆர்வத்துக்கும், சரித்திர ஞானத்துக்கும் நல்விருந்து கிடைத்தது. கலைப்பொருட் காட்சி, புராதன சவ அடக்கப் பெட்டிகள் இவற்றை சுவாமிஜி பார்வையிட்டார்.

மாக்ஸிம் சுவாமிஜிக்கு அறிமுகக் கடிதம் கொடுத்திருந்ததால் பல பிரமுகர்களை அவர் சந்திக்க முடிந்தது. கான்ஸ்டாண்டிநோபிளில் இருந்த பிரெஞ்சு ஸ்தானிகருடன் ஒருநாள் அவர் போஜனம் செய்தார். கிரேக்க பாஷா ஒருவருடனும் சுவாமிஜிக்குப் பரிச்சயம் ஏற்பட்டது. என்றுலும் சுவாமிஜி துருக்கியில் பொது மேடைப்பேச்சு நிகழ்த்த அநுமதிக்கப்படவில்லை. காரணம் அவருடன் வந்திருந்த புரட்சிமதக்காரரான ஹியாஸிந்த் அவ்வாறு பேச அநுமதிக்கப்படாததுதான்.

ஏதென்ஸுக்குச் சென்று காணவேண்டியதை யெல்லாம் கண்டார் சுவாமிஜி. நினைவுச் சின்னங்களைக்கொண்டு புராதன கிரேக்க நாகரிகத்தை நிர்மாணித்துப் பார்த்துக்கொண்டார். அங்கே ஒரு தீவில் பேராசிரியர் லெப்பல் என்பவரைக் கண்டு பெரிதும் மகிழ்ந்தார். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியராக இருந்த லெப்பல் சுவாமிஜிக்குச் சென்னையில் முன்பே அறிமுகமானவராவார்.

முதல் உலக மகாயுத்தம் மூள இன்னும் பதினுலாண்டுகளிருந்தன. ஆனுல் சுவாமிஜி அப்போதே போரின் நெடியை உணரத் தொடங்கிவிட்டார். ''ஐரோப்பா பெரிய ராணுவ முகாமாகிவிட்டது'' என்று கூறினுர்.

ஏதென்ஸிலிருந்து சுவாமிஜி ருஷியக்கப்பல் ஒன்றின்மூலம் எகிப்து நாட்டை அடைந்தார். கெய்ரோவின் பொருள்காட்சி

Koviloor Digital Library

சாலையைப் பார்வையிடும்போது ஃபாராவோக்களின் காலத்திலிருந்து எகிப்தின் நீண்ட நெடிய சரித்திரம் முழுவதையும் கண்டார். 'ஆகா, எல்லாம் மாயையாகிவிட்டன அல்லவா? பிரமிட்களும், ஸ்ஃபிங்க்ஸும் எல்லாம் மாயை வசப்பட்ட காலத்துக்கு ஒரு நினைவுதானே?' என்றே அந்த அத்வைத சந்நியாசியின் எண்ணங்கள் படர்ந்தன. நைல் நதியும், அதனை அடுத்திருந்த புராதன ஆலயங்களும்கூட அதன்பின் அவர் மனத்தில் பதியவில்லை. வெளித்தோற்றங்கள் எல்லாமே வெறும் பொய்யாகத்தான் அவருக்குத் தோன்றின. அகப்பொருளிலேயே முழுகத்தான் அவர் உள்ளம் விரும்பியது.

இம்முறை அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் சுவாமிஜி வாழ்ந்தபோது அவரிடம் தெற்றெனத் தெரிந்தது தமது சூழலைப் பற்றி அவர் காட்டிய பெருத்த அலட்சியம்தான் என்று நிவேதிதை எழுதியிருக்கிறாள். வெளி உலகம் அவருக்கு ஓரளவு பிடிக்காமலே போய்விட்டதாகக்கூடத் தோன்றியது. அதே போல் உலகத்து மக்களிடமும் அவருக்கு அலுப்பு ஏற்பட்ட பொழுதுகளும் உண்டு. ''நான் நம்பிக்கைவைக்கக்கூடியஒருவர் கூட இவ்வுலகில் இல்லை'' என்று அவர் துரியானந்தருக்கு எழுத நேர்ந்தது என்பதிலிருந்து, தித்திக்கும் அவரது உள்ளம் எப்படிக் கசந்து கிடந்தது என்பது தெரியும். எல்லாவற்றையும் உதறித் தள்ளத் துடித்தார் அவர். பேலூர் மடத்தில் தமது பெயரிலிருந்த சொத்துக்களையெல்லாம் தர்மகர்த்தர்களிடம் மாற்றச் செய்தார். பெயரளவில் தாம் தரித்துவந்த 'பொதுத் தலைவர்' என்ற பதவியையும் நீத்து, பிரம்மானந்தரையே ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் தனிப்பெரும் தலைவராக்கினார். ''என்னைத்தவிர ஸ்ரீராமகிருஷ்ணரின் மற்ற எல்லா சிஷ்யர்களுக்கும் மடம் உடைமையாகிறது'' என்று எழுதினார்.

சுவாமிஜி நிவேதிதைக்கு எழுதிய கடிதம் ஒன்றில், ''மித்திரராயினும், சத்துருவாயினும் எல்லாரும் அவளுடைய கையிலுள்ள கருவிகள். நம்முடைய கர்மத்தை நாம் கழிப்பதற்காகவே அவர்கள் உதவுகிறார்கள். ஆனபடியால், ஜகன்மாதா அவர்கள் யாவருக்கும் அருள்புரிவாளாக!'' என்று கூறுகிறார்.

'சத்துரு'வைப்பற்றிக் கூறுவதிலிருந்தே, சுவாமிஜி மனித குலத்திடம் அடைந்திருந்த சலிப்பும் தெரிகிறதல்லவா? ஆம், இந்த மனிதகுலம்தானாகட்டும், எத்தனை அவதாரம் நிகழ்ந்தாலும் திருந்திவிடுகிறதா என்ன?

கெய்ரோவில் ஒரு நாள் சுவாமிஜியும் அவரது சிஷ்யைகளும் வழி தவறி வேசியர் வீதியொன்றுக்குள் நுழைந்துவிட்டனர்.

Koviloor Digital Library

'இது இன்ன இடம்' என்று புரிந்தவுடன் சுவாமிஜியின் சிஷ்யைகள் அவரை விரைவுபடுத்தினர். சுவாமிஜியோ அவ்விடத்தை விட்டு நகர மறுத்துவிட்டார். சிஷ்யைகள் பரக்கப்பரக்க அங்கிருந்து அகன்றனர். தூரத்திலிருந்து அவர்கள் கண்ட காட்சி அவர்களுடைய கண்களில் கண்ணீரைத் தருவித்துவிட்டது. சுவாமிஜியைச் சுற்றி அந்த விலைமாதர்கள் மண்டியிட்டு வணங்கி அவரது அங்கியின் நுனியைப் பக்தியுடன் முத்தமிட்டுக் கொண்டனர்.

தாஸியிலும் தேவியைக் கண்ட மகாத்மாவின் சிஷ்யரல்லவா சுவாமிஜி ?

சுவாமிஜியின் மேல்நாட்டுச் சிடர்களில் ஸேவியர் தம்பதிக்குத் தனி இடம் உண்டு. தமது நாட்டையும் வீட்டையும்விட்டு சுவாமிஜியுடன் இந்தியா வந்து ஹிமாலயத்தில் அத்வைதஆசிரமம் அமைத்து அங்கு வானப்பிரஸ்தராக வாழ்ந்தவர்கள் அவர்கள். அவ்வாறு தமது தாளுக்கே தலைப்பட்ட ஸேவியர் இவ்வுலகை விட்டுப் புறப்பட்டுவிட்டார் என்பது எகிப்திலிருந்தபோது சுவாமிஜியின் உள்ளுணர்ச்சிக்குத் தெரிந்துவிட்டது. அவர் மிகவும் கலக்கமடைந்தார். இந்தியாவுக்குப் புறப்படவேண்டியதுதான் என்று தவித்தார்.

திடுதிப்பென்று சுவாமிஜி கிளம்ப ஆயத்தமானதும் உடன் வந்தவர்கள் சொல்லொணு வேதனை அடைந்தனர். கால்வியும் குமாரி மக்லியாடும் அவரிடம் வைத்திருந்த பக்தி, கொஞ்சமா, நஞ்சமா? மனிதர்கள் விடைகேட்டால் விடைகொடுத்தனுப்பி விடலாம். தெய்வத்துக்கு அப்படி விடைகொடுத்துவிட முடியுமா ?

இந்தியாவில் யாரும் எதிர்பார்த்திராத சமயத்தில் பம்பாயில் வந்து குதித்தார் சுவாமிஜி. 'யாதும் சுவடுபடாமலே' அங்கிருந்து கல்கத்தாவுக்குப் பயணமானுர். வழியில், கேரளத்திலும் சென்னையிலும் பரிச்யமாயிருந்த மன்மதநாத பட்டாசாரியரைச் சந்தித்தார். ஒரு விநாடி இருவரும் பிரமித்துப் போனுர்கள். பிறகு ஆனந்தமாக அளவளாவத் தொடங்கினர்.

1900-ம் ஆண்டு டிஸம்பர் ஒன்பதாம் தேதி இரவு. பேலூர் மடத்திலே சாதுக்களும் பிரம்மசாரிகளும் உணவு உண்டுகொண்டிருந்தனர். தோட்டக்காரன் உள்ளேவந்து ''யாரோ சீமைக்கார ஐயா வந்திருக்காரு !'' என்ருன்.

இந்த நேரத்தில் தங்களைத் தேடிவரக்கூடிய 'சீமைக்கார ஐயா' யாராயிருக்குமோ என்று அவர்கள் யோசித்துக்கொண்டிருக்கும்போதே சுவாமிஜி அவர்களிடையே பிரஸன்னமானுர்.

Koviloor Digital Library

அப்புறம் என்ன? ஒரே ஆரவாரம்தான். நீண்டநாட்களுக்குப்பின், தாலம் நிறைய பரிமாறியிருந்த கிச்சடியை ரசித்து உண்டபடி ஐரோப்பிய அநுபவங்களை குருபாயிக்களுக்கும் பிரம்மசாரிகளுக்கும் அளித்தார் சுவாமிஜி.

''முன் முறை நான் மேல்நாடுகளுக்குப் போனபோது அவர்களுடைய சக்தியையும், ஸ்தாபன அமைப்பையும், மேலுக்குத் தெரிகிற ஜனநாயகத்தையும் கண்டு அதிசயித்தேன். ஆனல் இப்போது மேல்நாட்டின் வியாபார புத்திதான் எனக்கு அதிகமாகத் தெரிகிறது. பேராசை, சுயநலம், அதிகார ஆசை இவையே அம்மக்களுடைய வியாபார புத்திக்குக் காரணம். சிறிய தொழில்களைப் பெரிய இணைப்புக்கள் விழுங்குவதை நான் வெறுக்கிறேன். இது கொடுங்கோன்மையாகும். நல்லதொரு முறையில் சக்திகள் ஒன்றுசேர்ந்தால் நான் அதை வரவேற்கத் தான் செய்வேன். ஆனல் ஓநாய்க் கூட்டம் ஒன்று சேர்ந்திருப்பதில் என்ன அழகைக் காணமுடியும்?'' என்று கேட்டார் சுவாமிஜி.

இன்று நம் நாட்டில் இந்தக் கேள்வியை ஒவ்வொருவரும் கேட்டுப் பார்த்துக்கொள்ள அவசியம் நேர்ந்துவிட்டதல்லவா?

Koviloor Digital Library

அத்தியாயம்—34

விடுதலை

ஸேவியரின் மறைவுபற்றி சுவாமிஜி உள்ளுணர்ச்சியால் அறிந்தது உண்மையே. அக்டோபர் இருபத்தெட்டாம் தேதி அவர் காலமாகிவிட்டிருந்தார். இதை அறிந்து சுவாமிஜி ஆற்றொணுத் துயரமடைந்தார். ஸ்ரீமதி ஸேவியரைக் காண மாயாவதிக்குச் சென்ருர்.

சுவாமிஜிக்கு அப்போது தேகாரோக்கியம் மிகவும் குன்றியிருந்தது. மலைநாட்டில் பயணம் செய்வது அவருக்கு மிகவும் சிரமமாக இருந்தது. அதோடு அந்த ஆண்டு பனிவீச்சும் குளிரும் வெகு கடுமையாக இருந்தன. எப்படியோ தாக்குப் பிடித்து, 1901-ம் ஆண்டு ஜனவரி மூன்ருந் தேதியன்று சுவாமிஜி மாயாவதியை அடைந்தார். நதிப்பள்ளத்தாக்கிலிருந்து அத்வைத ஆசிரமத்தின் காட்சி அவரது கண்ணுக்குப் பட்டது. ஆசிரமத்து மணி பன்னிரண்டு அடித்த நாதம் அவர் செவிகளில் விழுந்தது. உடனே சுவாமிஜி, ஒரு குதிரையில் ஆரோகணித்து அதனை அதிவேகமாகச் செலுத்தி ஆசிரமத்தை அடைந்தார்.

ஸ்ரீமதி ஸேவியரை அவர் துக்கம் விசாரிப்பதா, அவரை ஸ்ரீமதி ஸேவியர் துக்கம் விசாரிப்பதா என்பதுபோன்ற நிலைமை நிலவிற்று.

* * *

மலைப்பிரதேசங்களில் பயணம் செய்வதில் சுவாமிஜிக்கு உள்ள ஆர்வத்தைப் பூர்த்திசெய்துகொள்ள இடையூருக நின்றது அந்த ஆண்டின் தட்பநிலை. மாயாவதி பனிப்போர்வையிலேயே முடங்கிக்கிடந்த அந்த நாட்களில் சுவாமிஜியும் மடத்துக்குள்ளேயே முடங்கிக்கிடக்க வேண்டியதாயிற்று.

ஒரு நாள் சுவாமிஜி ஆசிரமவாசிகளுடன் பேசிக்கொண்டேயிருக்கையில் திடுமென உணர்ச்சி வசப்பட்டார். முன்னும் பின்னுமாக உலவிக்கொண்டே, மகத்தான ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுவதுபோல் குரலை உயர்த்தி சேவாதர்மத்தைப் பற்றியும், தமக்காக அந்தரங்க சுத்தத்துடன் அயராது சேவைசெய்யும் மேல்நாட்டு சிஷ்யர்கள் பற்றியும் உணர்ச்சியுடன் பேசினுர். ''காப்டன் ஸேவியரைப் பாருங்கள்! எங்கிருந்தோ இந்த மாயாவதிக்கு வந்து சேவையிலே உயிரைவிட்ட அந்தப் பிராணத் தியாகியை நினைத்துப் பாருங்கள்'' என்று இதயபூர்வமாக உருகிக் கூறினுர்.

Koviloor Digital Library

அத்வைத ஆசிரமத்தின் பணியை எப்படியெல்லாம் விருத்தி செய்யவேண்டும் என்பதுபற்றி ஒரு நாள் ஸ்வரூபானந்தரிடம் பேசிக்கொண்டிருந்தார். ஆசிரமத்துக்கு வருபவர்கள் குறைந்தது மூன்றுண்டுகளாவது அங்கேயே தங்கியிருக்க மனமொப்பினு லொழிய அபிவிருத்திப்பணி சிறக்காது என்று ஸ்வரூபானந்தர் தெரிவித்தார். இதிலிருந்து சுவாமிஜி ஒருவாறு ஆசிரமவாசிகளின் மனப்போக்கைப் புரிந்துகொண்டு அவர்களுக்கு உருக்கமாக உபதேசித்தார். சுவாமி விரஜானந்தர் தவிர மற்றவர்கள் மூன்றுண்டுகளுக்கு அத்வைத ஆசிரமத் தொண்டிலேயே ஈடுபடுவதாக உறுதி கூறினர். விரஜானந்தர் தாம் கடும் சாதனைகள் புரியவும், மதுகரி பிக்ஷை எடுத்து உண்ணவும் விரும்புவதாகத் தெரிவித்தார். அப்படியெல்லாம் செய்தால் தம்மைப்போல் விரஜானந்தரும் உடல்நலம் குன்றிப்போவார் என்றும், எளிய சாதனையுடன் எளியவருக்குப் பணிபுரிவதே ஆத்ம க்ஷேமம் என்றும் சுவாமிஜி புத்திமதி கூறினர். விரஜானந்தரோ, கடும் சாதனை புரிந்தாலன்றி உள்ளத் தூய்மை ஏற்படாது என்றும், அத்தகைய தூய்மை கூடியபின்பே மக்கள் பணியைச் சுயநலமின்றிப் புரியமுடியும் என்றும் விளம்பினர். அந்தரங்கத்தில் விரஜானந்தர் கூறுவதற்கே தாம் ஒப்புதல் அளிப்பதாக சுவாமிஜி கூறினர். தாம் ஆண்டியாகத் திரிந்தும், ஏகாந்தத் தவமிருந்தும் காலங்கழித்த நாட்களுக்கு ஈடாக வேறெதையும் கருதமுடியாது என்ருர். எனினும் லோகசங்கிரகம் என்பதை முன்னிட்டு மக்கள் சேவையே தெய்வபூஜை என்று தாம் பேசவேண்டியிருப்பதாகக் குறிப்பிட்டார்.

மாயாவதியில் தரம்கர் என்ற இடத்தில் ஒப்பற்ற ரமணீயமான காட்சி கண்முன் விரியும். அங்கு ஒருபோது தம் சீடர்களுடன் ஆனந்தமாகக் கழித்த சுவாமிஜி அங்கேயே ஓர் ஆசிரமம் அமைத்துக்கொண்டு தனித்து வாழ விரும்புவதாகக் கூறினர். ஸ்ரீமதி ஸேவியரிடம், ''என் வாழ்வின் பிற்பகுதியில் நான் பொது வேலை யாவற்றையும் விட்டுவிடுவேன். இங்குதான் வந்து புத்தகங்கள் எழுதுவேன். குழந்தைபோல் சுதந்திரத்துடன் இந்த ஏரிக்கரையில் ஆனந்தமான ராகங்களைச் சீழ்க்கை அடித்துக்கொண்டு வாழ்க்கை நடத்துவேன்'' என்ருர் !

அது நிறைவேருத மனோரதமாகவே போயிற்று. பிள்ளையில்லாமல் தனது மடி வெறித்துக் கிடப்பதை சர்வேசுவரி எத்தனை நாள்தான் தாங்குவாள் ?

அத்வைத ஆசிரமத்தில் உருவ வழிபாடு இருக்கக்கூடாதென சுவாமிஜி விரும்பினுர் அல்லவா ? ஆனுலும் இப்போது அங்கேயும் சிலர் பூஜாகிருகம் அமைத்து ஸ்ரீராமகிருஷ்ணரின் திருஉருவத்துக்கு

Koviloor Digital Library

சாஸ்திரோக்தமாகப் பூஜைசெய்து வந்தனர். சுவாமிஜி இதனைக் காண நேர்ந்தது. அப்போது ஒன்றும் சொல்லவில்லை அவர். பிறகு மாலை வேளையில் பேசுகையில் அதனை மிகவும் கண்டித்தார். இந்த ஓர் இடத்தில்மட்டும் பாஹ்யமான சடங்குகள் எதுவும் கூடாது என்பதுதான் தமது கருத்து என்று அடித்துச் சொன்னார். சுத்த அத்வைதத்தின் நிலைக்களனாகவே அத்வைத ஆசிரமம் கருதப் படவேண்டும் என்றார். என்றாலும் தாம் ஏதும் உத்தரவு பிறப்பித்து நிர்ப்பந்தத்தின்மீது அத்வைத ஆசிரமப் பூஜையை நிறுத்த விரும்பவில்லை என்றும், ஆசிரமவாசிகளின் சுயேச்சைக்கே இவ்விஷயத்தை விட்டுவிடுவதாகவும் கூறினார்.

அப்படியானால் துவைதமதச் சார்புள்ளவர்கள் அந்த மடத்தில் இடம்பெறலாகாதா என்று ஐயமுற்ற ஒரு சீடர் தூய அன்னைக்கே எழுதிக்கேட்டார். அதற்கு சாரதை, ''ஸ்ரீராம கிருஷ்ணர் அத்வைதமே பூரணமாக நிரம்பப்பெற்றவர். அவர் அத்வைதத்தையே உபதேசித்தார். நீயும் ஏன் அத்வைதத்தைப் பின்பற்றக்கூடாது? அவருடைய சீடர்கள் யாவருமே அத்வைதி கள்தான்'' என்று பதில் எழுதினாள்.

சுவாமிஜி பேலூருக்குத் திரும்பியபின் ஒரு நாள், ''ஒரு கேந்திரத்திலாவது புறச்சடங்கு இல்லாதிருக்கவேண்டும் என்று நினைத்தேன். அங்கே சென்று பார்த்தால் இந்தக் கிழவர் அங்கேயும் தம்மை நன்றாக நிலைநாட்டிக் கொண்டிருக்கிறார்!'' என்றார்.

சுவாமிஜி மாயாவதியில் இருந்தபோது ஆசிரமவாசிகளுக்கு உபதேசத்துடன், 'பிரபுத்த பாரதா'வுக்கு மூன்று வியாசங்கள் எழுதினார். மாயவதிச் சீடர்கள் அவரைத் தெய்வமாகவே மதித்துத் தொழும்பு செய்தார்கள். இதைப்பற்றி சுவாமிஜி தமது அமெரிக்க சீடர் ஒருவரிடம் பின்வருமாறு கூறினார்: ''இவர்களுடைய சேவை ஏதோ அடிமை தனது யஜமானனுக்குச் செய்வதுபோல் உங்களுக்குத் தோன்றலாம். நான் ஆட்சேபிக் காமல் இத்தனை உபசரணையும் பெறுவது உங்களுக்கு அதிர்ச்சியா யிருக்கலாம். ஆனால் இந்தியாவில் குருவுக்கு அளிக்கப்படும் ஸ்தானத்தை நீங்கள் உணரவேண்டும். சிஷ்யர்கள் சுயமாகவே பக்தி பிறிட்டு இப்படி ஆசானுக்குக் கைங்கரியம் செய்வார்கள். ஆத்மஞானத்துக்கு இந்தப் பணிவிடையே ஒரு மார்க்க மாகும்.''

ஆசிரமத்துக்குள்ளேயே அடைபட்டுக்கிடப்பதை சுவாமிஜி யால் நீண்டநாட்களுக்குத் தாங்கமுடியவில்லை. பேலூருக்குப் புறப்பட்டுவிட்டார். போகிற வழியில் சம்பாவத் என்ற இடத்துச்

Koviloor Digital Library

சத்திரத்தில் குருநாதரை நினைந்து வாயார அவரது பெருமையைப் பேசினுர். முக்கியமாக, அவர் எப்படி மக்களை எல்லாம் உள்ளபடி எடைபோட்டார் என்பதைக்கூறி அதிசயித்தார். அவரே ஆர்வத்துடன் எதிர்பார்த்து, பெருமையுடன் பேசியவர்களல்லவா தமது குருபாயிக்கள் என்பதை எண்ணிப்பார்த்தார். முக்கியமாக ஸ்ரீராமகிருஷ்ண பகவான் ஈசுவரகோடியைச் சேர்ந்ததாக மதித்த சிடர்களைத் தாமும் அவ்வாறே மதிக்கவேண்டும் என நினைத்தார். தாம் அவர்களுக்குத் தலைவன் என்ற முறையில் யதேச்சாதிகாரம் செய்யாமல் அவர்களுக்கு உரிய மதிப்பை என்றும் அளித்து வந்ததை எண்ணித் திருப்திகொண்டார். ''ஆம், நான் குரு நாதருக்கு விசுவாசம் மாறவில்லை; மாறவேயில்லை. என் இதயத்து ஆழம்வரை அவருக்கு விசுவாசத்துடன் இருக்கிறேன்'' என்று கூறித் திருப்திப் பட்டுக்கொண்டார்.

பிலிபிட்டில் சுவாமிஜி தாம் மற்றவர்களைப் பிரிந்து செல்லப் போவதாகவும், போகிற வழிகளில் பேலூர் மடத்தின் விஸ்தரிப்புக்கும், பராமரிப்புக்கும் பணம் திரட்டப்போவதாகவும் கூறினுர். மடத்தின் ஒவ்வோர் அங்கத்தினரும் இந்தியா முழுவதும் சுற்றி, தலைக்கு இரண்டாயிரம் ரூபாயாவது திரட்டிவரவேண்டும் என்றும் சொன்னுர்.

இச்சமயத்தில் ஸ்ரீராமகிருஷ்ண தர்மத்துக்கு ஒரு கல்பக விருட்சமாக இருந்த கேத்ரி மன்னர் இவ்வுலகிலிருந்து மறைந்து விட்டார். ஆக்ராவில் அக்பர் பாதுஷாவின் கல்லறை ஸ்தூபியைத் தமது செலவில் பழுதுபார்த்துவந்த கேத்ரி மன்னர், ஒரு நாள் வேலைகளைப் பார்வையிடும்போது கால்சறுக்கி உச்சியிலிருந்து பல நூறு அடிகள் கிழே விழுந்து, பயங்கரமான முறையில் உயிரை விட்டார். ஆனுல் சுவாமிஜியின் அருளால் சம்ஸாரத்தில் ஒரேயடியாகச் சறுக்கிவிடாமல் காப்பாற்றப்பட்ட அவர் அமரவாழ்வில் எழுந்திருப்பார் அல்லவா ?

பழம்பொருள்களில் கேத்ரி மன்னருக்கு இருந்த உற்சாகம் எப்படி அவர் உயிருக்கே உலைவைத்துவிட்டது என்பதை மேரி ஹேலுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் குறிப்பிட்ட சுவாமிஜி, ''நீயும் இப்படித்தான் பாரதத்தின் ஒரு பழம்பொருளிடம் ரொம்பவும் உற்சாகமாயிருக்கிருய், ஜாக்கிரதையாய் இருந்துகொள்'' என்று எழுதினுர்.

அந்தப் பழம்பொருள் சுவாமிஜிதான் என்று சொல்லவும் வேண்டுமா ? யுக யுகாந்தரங்களுக்கு முற்பட்ட ஞானவாழ்வை வாழ்ந்துகாட்டி நவீன விஞ்ஞானத்துடன் அதை இணைக்க முயன்றவர் அல்லவா சுவாமிஜி ?

Koviloor Digital Library

முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே!

* * *

1901-ம் ஆண்டு ஜனவரி **24**-ந் தேதி சுவாமிஜி மீண்டும் பேலூர் மடத்துக்கு உயிர் ஊட்டவந்தார். ஆம், தமது உயிர் போகும்வரை அம்மடத்துக்கு அவர் உயிரூட்டி வந்தார். அந்த உயிர் எவ்வளவு விரைவில் நீங்கப்போகிறது என்பதைக் கடைசி மட்டும் தெரிந்து கொள்ளாதவர்களாக மடத்து வாசிகள் அவருடன் கோலாகலமாக வாழ்ந்தனர். அவரது தேக நலன் மிகவும் க்ஷீணித்துப்போன சமயங்களிலும்கூட, எல்லாம் சரி போகும் என்றே எண்ணி, நேரவிருக்கும் ஆபத்தை உணராதவர்களாகவே, களிப்புடன் வாழ்ந்தார்கள் அவர்கள். அவரும் தமது முடிவை அறியாதவர்போலவே அவர்களோடு ஆடிப்பாடிப் பேசி வந்தார்.

மாயாவதியிலிருந்து பேலூர் திரும்பிச் சுமார் இரண்டு மாதங்களாயின. சுவாமிஜியின் தெம்பு நாளுக்கு நாள் தேய்ந்து கொண்டேவந்தது. இடம் மாறியிருக்கப் பிரியப்பட்டார். இச் சமயத்தில் தமது அன்னைக்கு ஆற்றவேண்டிய கடமைகளையும் அடிக்கடி நினைத்துப் பார்க்கலானார். ஆதிசங்கரர் தமது அன்னையின் இறுதிக்காலத்தில் அவளுக்குப் பணிவிடை செய்ததை முன்பே நினைத்துப் பார்த்திருந்தார் அல்லவா? தமது விஷயத்திலோ, இறுதிக்காலம் அன்னையை நெருங்கவில்லை, தம்மையே நெருங்குகிறது என்று கண்டார். எனவே விரைவில் அவளுக்குத் தம்மாலியன்ற சௌக்கியத்தை அளிக்க விழைந்தார்.

பாரத தர்மத்தில் பிறந்து வளர்ந்து பழுத்துப்போன ஒரு முதாட்டிக்கு எதில் சௌக்கியமிருக்கும்? க்ஷேத்திராடனம் செய்வதில்தானே? எனவே அன்னையைக் கிழக்கு வங்காளத்திலும், அஸ்ஸாமிலும் உள்ள புண்யஸ்தலங்களுக்கு அழைத்துச் செல்லவேண்டும் எனக் கருதினார்.

மார்ச் பதினெட்டாம் தேதி அவ்வாறே யாத்திரைகோஷ்டி ஒன்று புறப்பட்டது. சுவாமிஜியோடு சந்நியாசிச் சீடர்கள் சேர்ந்துகொண்டனர். புவனேசுவரியுடன் வேறுபல பெண்டிரும் சேர்ந்தனர்.

டாக்கா ரயில் நிலையத்தில் சுவாமிஜிக்கு அமோகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது. பாபு மோஹினி மோஹன்தாஸ் என்ற ஜமீன்தாரின் மாளிகையில் சுவாமிஜி தங்கியிருந்தார். ஏராளமான அன்பர்கள்

Koviloor Digital Library

அவரது ஜாகையை அல்லும் பகலும் முற்றுகையிட்டபடி இருந்தனர். டாக்காவில் சுவாமிஜி இரண்டு உரைகள் நிகழ்த்தினுர்.

புதாஷ்டமி என்ற புண்ணிய தினத்தன்று லங்கல்பந்த், என்ற ஸ்தலத்தில் சுவாமிஜியும், அவரது அன்னையும் பிரம்மபுத்திரா நதியில் ஸ்நானம் செய்தனர். படகுப் பிரயாணமும் லங்கல்பந்தில் திரண்டிருந்த பிரயாணிகளின் பகவந்நாம பஜனைகளும் சுவாமிஜியைப் பரவசப்படுத்தின.

சுவாமிஜி டாக்காவுக்குத் திரும்பியபின் ஒருநாள். ஆடை ஆபரணங்களெல்லாம் ஜொலிக்க விலைமாது ஒருத்தி தன் தாயுடன் சுவாமிஜியைக் காணவந்தாள். சுவாமிஜிக்கு ஸத்காரம் செய்து வந்த யதின் பாபு அவளை உள்ளேவிடுவதற்குத் தயங்கினுர். சுவாமிஜிக்கு விஷயம் தெரிவிக்கப்பட்டது. ''எல்லாரையும்போல் நானும் இழிந்தவர்களென்று சிலரை ஒதுக்கிவிட்டால் அவர்கள் எங்குதான் போவார்கள்?'' என்று கேட்டவரல்லவா சுவாமிஜி? வேசையர் இருவரையும் அநுமதிக்குமாறு உத்தரவிட்டார். அவர்கள் சற்றும் எதிர்பார்த்திராத கனிவுக்குப் பாத்திரமாகிக் கண்ணீர் உகுத்தார்கள். இளையவள், தான் ஆஸ்துமாவால் மிகவும் உபாதிப்படுவதாக சுவாமிஜியிடம்கூறி தன்னை ரக்ஷிக்குமாறு வேண்டிக்கொண்டாள். சுவாமிஜி குளிர்ச்சியாகச் சொன்ஞர்: ''தாயே, இங்கே என்னைப்பார்! நானும் உன்போல்தான் ஆஸ்துமாவினுல் அவதிப்படுகிறேன். என்னையே என்ஞல் குணப்படுத்திக்கொள்ள முடியவில்லையே! உனக்கு என்ஞல் பரிகாரம் தேடித்தர முடியுமாஞல் எவ்வளவோ மகிழ்வேன்!''

மனம் நிறைந்து சுவாமிஜிகூறிய இந்த எளிய வார்த்தைகள் அந்தப் பெண்மணியைமட்டுமன்றி கூடியிருந்த எல்லாரையுமே கண்கலங்கச் செய்துவிட்டது.

டாக்காவில் சுவாமிஜியைக்கண்ட ஓர் இளைஞன் தன் கையிலிருந்த ஒரு புகைப்படத்தைக்காட்டி அதிலிருப்பவர் அவதார புருஷரா என்று சுவாமிஜியை வினவினுன். ''நான் எப்படிச் சொல்லமுடியும்?'' என்ருர் சுவாமிஜி. அவன் விடுகிற வழியாக இல்லை. கடைசியில் சுவாமிஜி, ''என் மகனே, நல்ல ஆகாரத்தாலும், தேகாப்பியாசத்தாலும் உன்னுடைய தசையையும் அறிவையும் வலுப்படுத்திக்கொள். அதன்பின் உனக்கே சிந்தித்து முடிவுகளுக்கு வரமுடியும். இப்போது சிறிதே பலவீனமாகக் காண்கிருய்!'' என்ருர்.

அந்தப் பையனுக்கு ரொம்பவும் அதிருப்தியாகிவிட்டது!

பிற்பாடு இவ்விஷயத்தைக் குறிப்பிட்டு சுவாமிஜி கூறினுர்: ''குரு யாராக இருப்பினும் அவரை அவதாரமாக மதிப்பது

Koviloor Digital Library

சரியே! என்றாலும் ஆண்டவன் அவதாரமாக இந்த உலகில் தோன்றுவது எப்போதோ ஒரு போதுதான். ஆனால் டாக்கா வுக்குச் சென்றிருந்தபோது அந்த ஓர் ஊரிலேயே குறைந்தது மூன்று நாலு 'அவதாரங்கள்' முளைத்திருப்பதாகத் தெரிந்து கொண்டேன். இப்போதெல்லாம் அவதாரங்களைக் கண்டுபிடிப் பதில் ஒரு வெறியே இருப்பதுபோல் தெரிகிறது.''

நாகமகாசயரை வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள். அவர் இப்போது நில உலகில் இல்லை. ஆனால் அவர் வாழ்ந்த வீடு டாக்காவுக்கு ஏழு மைல்களில்தான் இருந்தது. அந்தப் பரம பக்தரின் வீட்டைப் புண்ணிய க்ஷேத்திரமாகக் கருதி அங்கு சென்றார் சுவாமிஜி, தமது உடல் நலிவையும் பொருட்படுத் தாமல். நாகமகாசயரின் மனைவி தாய்மை பொங்க அவருக்கு விருந்துபசாரமளித்து மகிழ்ந்தாள். அருகே ஓர் ஏரியில் நீச்ச லடித்துக் குளித்து சுவாமிஜி நீண்டநேரம் நித்திரையில் ஆழ்ந் திருந்தார். அப்படி அவர் நிம்மதியாகத் தூங்கி எவ்வளவோ காலமாகிவிட்டிருந்தது. சுவாமிஜி புறப்படுமுன் நாகமகாசயரின் மனைவி அவருக்கு ஒரு வஸ்திரமும் காணிக்கையாக அளித்தாள். நாகமகாசயரின் படம் மக்களால் வணங்கப்படுவதைக் கண்டு சுவாமிஜி களிப்படைந்தார். அதோடு நின்றுவிடாமல் அவருக்குக் கிழக்கு வங்காள மக்கள் தக்க நினைவுச்சின்னம் எழுப்பவேண்டு மென்றும் அவர் விரும்பினார்.

டாக்காவிலிருந்து சந்திரநாத், காமாக்ய (ஸ்ரீ காமாக்ஷியின் ஸ்தலம்), கௌஹாத்தி முதலிய இடங்களுக்குச் சென்றார் சுவாமிஜி. சுவாமிஜியின் தேகஸ்திதி மிகவும் பழுதுற்றதால் மலைவாசஸ்தலமாகிய ஷில்லாங்குக்குச் சென்றார். அங்கு பிரதம கமிஷனராக இருந்த ஸர் ஹென்றி காட்டன் இந்தியர் நலனில் உண்மையான அக்கறை உள்ள ஓர் அதிசய அதிகாரி. அவர் தமது ஸிவில் ஸர்ஜனிடம் சுவாமிஜிக்குத் தேவையான சகல மருத்துவ வசதிகளையும் அளிக்குமாறு பணித்தார். ஆனால் மருந்துகளால் சுவாமிஜி தேறுகிற வழியாக இல்லை. ஆஸ்துமாவோடு நீரிழிவும் சேர்ந்துகொண்டதால் அவரது திருமேனி தாங்கொணாத் துன் பம் அநுபவித்தது. ஆஸ்துமா மிகவும் பயங்கரமாகிவிட்ட தருணத்தில் ஒரு நாள் சுவாமிஜி, தம்மையறியாமலே முண முணத்துக்கொண்டார்: ''இதனால் என்ன? மக்களுக்குப் பதி னைந்து நூற்றாண்டுகளுக்குப் போதுமான அளவுக்குக் கொடுத்து விட்டேன்!''

பதினைந்து நூற்றாண்டுகள் என்ன? என்றுமே அழியாத நிரந்தரச் செல்வத்தை அல்லவா சுவாமிஜி வழங்கிவிட்டார்!

Koviloor Digital Library

சுவாமிஜிக்கே தம் பணியில் திருப்தி ஏற்பட்டுவிட்டது. அப்புறம்? அப்புறமுமா உடலைக் கட்டிக்கொண்டு அவஸ்தைப்பட வேண்டும் ?

மே மாதம் இரண்டாவது வாரத்தில் சுவாமிஜி கல்கத்தா வுக்குத் திரும்பினர். வாடிப்போய் வந்த அவரைக் கண்டதும் குருபாயிக்களுக்குச் சொரேல் என்றது. மேரு பர்வதமாக, ராஜ சிம்மமாக இருந்த சுவாமிஜியா இவர் ?

''சுவாமி, தாங்கள் இப்படி உடலை அலட்டிக்கொள்ளக் கூடாது. பூரண ஓய்வு எடுத்துக்கொண்டு, மருந்துக்களைச் சாப் பிட்டுக்கொண்டு இங்கேயேதான் இருக்கவேண்டும்'' என்று அழமாட்டாக் குறையாக அவரிடம் பிரார்த்தித்துக்கொண்டனர் பேலூர் மடவாசிகள்.

சுவாமிஜியால் அந்த அன்புக் கட்டளையை மீற முடியவில்லை. 'எல்லாம் அம்பாள் செயல்; இனி நான் திட்டமேதும் வகுக்கப் போவதில்லை' என்று சிலகாலத்துக்கு முன்பே கூறியிருந்த சுவாமிஜி இப்போது தமது திட்டங்களையெல்லாம் பரிபூரணமாக விட்டு விட்டார். அடுத்த ஏழு மாதங்களை ஓய்விலேயே செலவிட்டார். உடம்புக்கு ஓய்வு அளித்துவிடலாம். ஆனால் மகா சமுத்திரமான அவரது மதியில் கோடானுகோடி அலைகளாக வீசிக்கொண்டிருக் கும் சிந்தனைகளை எப்படி அமைதியுறச் செய்யமுடியும் ?

ஓரளவுக்கு சுவாமிஜி மடத்துக்குள்ளேயே உபதேசங்கள் நிகழ்த்தி, வகுப்புக்களும் நடத்தித்தான் வந்தார். அந்நிய நாடுகளிலும், உள்நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள ஸ்ரீராம கிருஷ்ண மடங்களின் அபிவிருத்தி குறித்தும் அக்கறையுடன் அறிந்து வந்தார்.

இச்சமயத்தில் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் சுவாமிஜியின் ஆசியை நாடி பேலூருக்கு வரத்தொடங்கினர்கள். பக்தர்கள் சுவாமிஜியைக் கிடைத்தற்கரிய மகானாக மதித்து ஏவல் செய்தார்கள். பேலூர் மடத்து வேலைக்காரர்களோ கைலாஸ கிரியில் பரமேசுவரனுக்குக் கணங்கள் பணி புரிவதுபோல் சுவாமி ஜிக்குக் கைங்கரியம் செய்தார்கள்.

சுவாமிஜி மிகவும் சுயேச்சையாக வாழ்ந்த காலம் இது. அப்படி அவர் சிறிதுகாலம்கூட வாழாமல் மறைந்திருப்பா ராகில் இந்திய மக்கள் தங்களை மன்னித்துக்கொள்ளவே முடியாது. ஒருபோதில் அவர் நீண்ட காஷாய அங்கி அணிந்து சந்நியாசி யாகத் திகழ்வார். இன்னொருபோதில் கௌபீனதாரியாக மடத் துத் தோட்டங்களில் மெல்ல மெல்லச் சுற்றிவருவார். அப்படியே சிந்தனை வசமாகி அருகிலுள்ள கிராமங்களுக்கும் சென்று வருவார்.

Koviloor Digital Library

கங்கா நதிக்கரையில் ஏதேனும் ஒரு மரத்தடியில் அமர்ந்து தியானம் புரிவார். அப்படி அவர் விரும்பித் தியானம் செய்த மரங்களில் ஒன்று பேலூர் மடத்திலுள்ள ஒரு வில்வமரம்.


சிவாம்சமாகிய சுவாமிஜி அந்த விருட்சத்தினடியே தவ மிருக்கும்போது வில்வ பத்திரங்கள் தாமாகவே கழன்று அவரை அர்ச்சிக்கும். அவை உடம்பில் குறுகுறுக்கும்போது சுவாமிஜி இந்த உடல் என்ற இலை ஆத்ம விருட்சத்திலிருந்து என்று இப்படி விழுமோ என்று ஆசை ஆசையாக எண்ணிப் பார்த்துக்கொள் வார். சுவாமிஜியின் திவ்ய தேகத் துகள்கள் இந்த மரத்து நிழலில் எழுப்பப்பட்ட ஆலயத்தில்தான் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

ஓய்வு, படிப்பு, தவம், உலாவுதல் இவையெல்லாவற்றையும் விட சுவாமிஜிக்கு மிகவும் இதமளித்தது இசைதான். கூண்டி லிருந்து வெளியேற விரும்பும் பட்சியின் தீனக்குரலில், தீங்குரலில் கானம் செய்வார். கேட்கிறவர்கள் கரைந்துபோவார்கள்! விழாக் காலங்களில் சங்கித வாத்தியங்கள் பலவற்றை அவர் வாசித்துப் பாட மற்றவர்களும் கோஷ்டிகானமாகக் கலந்துகொள்வார்கள். கானத்தினுல் ஞானத்தைத் தொடுகிற அற்புதமாகவே அந்தக் காலங்கள் விளங்கும்.

வெளியே எங்கும் செல்லாமல் தமது அறையிலேயே அவர் புத்தகங்களைப் படித்துக்கொண்டு பொழுதைப் போக்கியதும் உண்டு.

மடத்தின் இரண்டாவது அடுக்கில் தென்கிழக்கு மூலையில் சுவாமிஜியின் விசாலமான அறை இருந்தது. நான்கு ஜன்னல் களும் மூன்று கதவுகளும்கொண்ட அறை அது. உள்ளே பிரவே சிக்கும் கதவுக்கு வலப்புற ஓரத்தில் ஐந்தடி உயரமுள்ள ஒரு நிலைக்கண்ணுடியும், அதற்குச் சிறிது அப்பால் காஷாயத் துணிகள் அடங்கிய பீரோவும் இருக்கும். அறையின் மத்தியில் இரும்புக் கட்டில் ஒன்றில் ஸ்பிரிங் மெத்தை விரித்திருக்கும். மேல்நாட்டுச் சிடர்களின் பரிசு அது. எனினும் சுவாமிஜி அந்தக் கட்டிலையும் மெத்தையையும்விடத் தரையில் ஜமுக்காளம் போட்டுப் படுப் பதைத்தான் விரும்புவார். அறையில் ஒரு சாய்மான நாற் காலியும் அதன் எதிரே மேஜையும் போட்டிருக்கும். சிறிய மேஜை ஒன்றில் பிங்கான் தட்டுக்களும் கோப்பைகளும் இருக்கும். இவையும் புஷ்பங்கள் சொருகுகிற குடுவை ஒன்றும் பக்தர்கள் அளித்த காணிக்கைகள்தான். ஜபம் புரிவதற்காக மான்தோல் ஒன்றும் அந்த அறையில் உண்டு. எல்லாவற்றையும்விட முக்கிய மாக, சுவாமிஜி தினமும் தொழுத ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ ரின் புகைப்படமொன்று அந்த அறையை ஆலயமாக்கிற்று.

Koviloor Digital Library



பேலூர் மடத்திலே சுவாமி விவேகானந்தர் வசித்த அறை

Koviloor Digital Library



பேலூர் மடத்திலே புண்ணிய கங்கை நதிக்கரையிலே
நிறுவப்பட்டுள்ள சுவாமி விவேகானந்தர் ஆலயம்

Koviloor Digital Library

இன்றைக்கும் அதே அறையைப் பார்த்தால் இப்போது தான் சுவாமிஜி எதையோ எழுதிவிட்டு, நாற்காலியிலிருந்து எழுந்து வெளியே போயிருக்கிருர் என்று தோன்றும் என்கின்றனர் அவரது சரிதமெழுதிய சீடர்கள். இன்றைக்கும் அந்த அறைச் சுவரில் தொங்குகிற காலண்டர் அந்தத் தேதியைத்தான் — ஜூலை 4, 1902 என்ற அந்தத் தேதியைத்தான் காட்டி நம்மை சோகத்திலாழ்த்தும்.

ஆகா, இந்த அறையிலே அவர் எவ்வளவு படித்திருப்பார், எழுதியிருப்பார், பேசியிருப்பார், சிந்தித்திருப்பார், படிப்புக்கும் எழுத்துக்கும் பேச்சுக்கும் சிந்தனைக்கும் வராத அநுபவங்களை நுகர்ந்திருப்பார்! அந்த அநுபவத்தில் அவர் நிரந்தரமாக ஆழ்ந்ததும் இங்குதான். அதன்பின் மரத்திலிருந்து விழுந்த இலையைக்கண்டு வணங்கச் சாரி சாரியாக மக்கள் வந்ததும் இந்த அறைக்குத்தான்.

அதையெல்லாம் இப்போதே நினைத்து முன்கூட்டி ஏன் துயருறவேண்டும்?

சுவாமிஜிக்குத் தமதறையிடம் ஒரு தனிப்பிரியம் உண்டு. மேல்நாடுகளிலெல்லாம் சுற்றித்திரிந்துவிட்டு வந்த சுவாமிஜி, ''இப்போது நான் கங்கை கரையிலே, மடத்திலே என் அறையிலே அமர்ந்து எழுதிக்கொண்டிருக்கிறேன். எல்லாம் ஒரே அமைதியாகவும், மோனமாகவும் இருக்கிறது. பளிச்சென்ற சூரிய வெளிச்சத்தில் அகன்ற ஆறு நடனமாடுகிறது. எப்போதோ ஒருபோது நதியில் செல்கிற படகின் துடுப்புக்கள் பிரவாகத்தை அடித்துக் கலக்குவதொன்றுதான் மௌனத்தைக் கலைக்கிறது'' என்று ரஸித்து எழுதினுர்.

சில சமயங்களில் கல்கத்தாவுக்குச் சென்று ஒரு முழு நாளையும் அங்கேயே கழிப்பார் சுவாமிஜி. அவர் கங்கையைக் கடந்து போகும்போதும் வரும்போதும் படகோட்டிகள் அவரிடம் காட்டிய பக்தி ஓர் அன்புக் கவிதையாகும்.

அருகிலிருந்தவர்களிடம் மட்டுமின்றி கடல்கடந்து வாழ்ந்த அடியார்கள்மீதும் சுவாமிஜியின் அன்பு தவழ்ந்துகொண்டிருந்தது. 1901-ம் ஆண்டு ஜுன் 14-ந் தேதி குமாரி மக்லியாடுக்கு, ''வாழ்க்கையில் நாம் வேண்டியதைப் பார்த்தாகிவிட்டது. அதன் குமிழிகளைப்பற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை. சரிதானே, ஜோ? எல்லா உணர்ச்சிகளையும் விரட்டவேண்டுமெனச் சில மாதங்களாக முயன்றுவருகிறேன். எனவே இதோடு நிறுத்திக் கொள்கிறேன். இப்போது விடை பெறுகிறேன்'' என்று எழுதினுர். நிரந்தரமாக விடைபெறுவதைச் சொல்லாமல்

Koviloor Digital Library

தொடர்கிறார்: ''அம்பிகையின் ஆணை நாம் இருவரும் சேர்ந்து பணிபுரிய வேண்டுமென்று இருந்திருக்கிறது. இதனால் ஏற்கனவே பலர் நன்மை பெற்றிருக்கிறார்கள்; இன்னும் பலர் நன்மை பெறுவார்கள். அப்படியே இருக்கட்டும். அவசியமில்லாத உச்சிகளுக்குப் பறக்கவேணுமென்று திட்டம் தீட்டுவதில் பயனே இல்லை. ஸ்ரீமாதா தன் வழியை நடத்திக்கொள்வாள்.''

ஆகஸ்ட் இருபத்தேழாம் தேதி தமது அருமைச் சகோதரி மேரி ஹேலுக்கு மிகவும் கரிசனத்துடன் ஒரு மடல் எழுதினார் சுவாமிஜி. ''என்னுடைய உள்ளுணர்ச்சிகள், பெண்மையான வையாக இருக்கலாம். ஆனால் இப்போது இக்கணத்தில் என் ஈடுபாடு நீ சிறிது ஆண்மைபெற வேண்டுமென்பதில்தான் இருக்கிறது. ஆகா, மேரி! உன் புத்தி, பலம், அழகு, மற்ற எல்லாமே, உனக்கெனத் தனித்தன்மை ஒன்று இல்லாததால் வீணாகப்போகின்றன நான் செத்துக்கொண்டேயிருக்கிற ஒரு மனிதன். விளையாட எனக்குப்போதில்லை. எழுந்திரு பெண்ணே! சவுக்காக விறுகிற கடிதங்களை உன்னிடமிருந்து எதிர்பார்க்கிறேன். அவற்றை விசையாக எறி. எனக்கு ரொம்பவும் உசும்பல் தேவையாயிருக்கிறது.''

முதலில் அவளை ஆண்மையுடன் எழும்பச்சொல்லிவிட்டுப் பிறகு தம்மையே அவள் எழுப்பவேண்டுமென்கிறார்!

சாமானிய விஷயங்களிலேயே சுவாமிஜியின் மனத்தை இழுத்துச் செலுத்தவேண்டும் என்று சிடர்கள் முயன்றபோதெல்லாம் தியான யோகத்தின் எல்லை நிலத்தில் மிதந்த அதே சுவாமிஜி அவ்வப்போது தாமாகவே அற்பமான காரியங்களில் ஈடுபட்டுக் களிப்பார். சமயலறையில் அவர் செய்யும் அமர்க்களம் சொல்லி முடியாது. உணவு வகைகளுக்குப் பணிக்குச்சொல்லி அவற்றுக்கு அவர் ருசிகாட்டியதைக் காணும்போது, வேதாந்த வேந்தர், பக்த சிகாமணி, தேசத்தலைவர், என்பதையெல்லாம்விட சிறந்த சமையல்காரராகவே அவரைச் சொல்லலாமோ என்று தோன்றும். எப்பேர்ப்பட்ட வியாதியுடன் போராடுபவர் எப்படியெல்லாம் சிறிய விஷயங்களில் சந்தோஷப்படுகிறார் என்பதை எண்ணி அழுகையே சிரிப்பாகவும், சிரிப்பே அழுகையாகவும் உணர்ச்சி வசப்படுவர் அவரது பக்தர்கள். இப்படிச் சிறிய விஷயங்களில் சிரத்தை காட்டுபவர் திடீரென யோகத்தில் முழுகிவிடுவார். குருபாயிக்கள் அச்சமயங்களில் குருமஹராஜின் வார்த்தைகளை நினைத்து அச்சமுறுவார்கள். ''நரேன் தன்னை இன்னாரென்று அறிந்துவிட்டால் அதன்பின் அவனால் இந்த உடம்பில் அடைபட்டுக் கிடக்கமுடியாது!'' என்றல்லவா ஸ்ரீராமகிருஷ்ணர்

Koviloor Digital Library

கூறியிருந்தார்? யோகத்து இருக்கையில் சுவாமிஜி தம்மைத் தெரிந்துகொண்டுவிடுவாரோ? அமரநாதத்தில் உடலால் மட்டுமின்றி உள்ளத்தாலும் சிவத்தை நெருங்கியபோது மின் அதிர்ச்சியினுற்போல் உடல் விழ்த்தப்பட்ட சுவாமிஜி இப்போது தாமே சிவத்தின் சாயல் என்று அறிந்துவிடுவாராளுல்? கட உபநிஷதம் கூறுவதுபோல் அப்புறம் மாயை விலகி, நிழலும் ஒளியும் ஒன்ருகிவிடவேண்டியதுதானே? அப்படியும் நேர்ந்து விடுமோ என்று மடத்தினர் கதிகலங்குவார்கள். ''நல்லவேளையாக இந்த உலக வாழ்க்கை என்பது சாசுவதமாக இல்லையே. அந்த மட்டும் நாம் கடவுளுக்கு நன்றிசெலுத்தத்தான் வேண்டும்'' என்று அவர் ஹாஸ்யமாகச் சொன்னதை எண்ணிக் கண் கலங்கு வார்கள். என்ருலும் சுவாமிஜி விரைவிலேயே சாமானிய நிலைக்கு வந்துவிடுவாராதலால் அவர்களின் கலக்கம் தீரும். கடைசியில் அவர்களை ஏமாற்றிவிட்டு

அவர் போகவேண்டிய இடத்துக்கு அடிமேல் அடிவைத்துச் சென்றுகொண்டேதான் இருந்தார். அதை நினைவுக்குத் தந்து கொள்வதுபோல் மடத்தின் மாடி வராந்தாவிலிருந்து எட்டத்தில் திருஷ்டியைச் செலுத்துவார். அங்கே தோப்பு ஒன்று தெரியும். எத்தனையோ ஆயிரம் நினைவுகள் அடங்கிய சிந்தனைத் தோப்புக்கு நிலைக்களனுக இருந்த தக்ஷிணேசுவரத்துத் தோப்புதான் அது. சிந்தனைத் தோப்புக்கு விதைகள் இட்ட மகாத்மாவையும், அந்த மகாத்மாவின் ஆத்மாவாக இருந்த மகேசுவரியையும் நினைத்துக் கொள்வார் சுவாமிஜி. நனைந்த கண்களால் தோப்புக்கு மேலாகத் துழாவுவார். அங்கே பவதாரிணியின் ஆலய மாடங்கள் அவரை மனேலயமடையச் செய்யும். 'உடம்பை சக்கையாகப் பிழிந்து உழைத்தாகிவிட்டது. உள்ளத்தையும் கடைந்து கடைந்து இருக்கிற வெண்ணெயை எல்லாம் எடுத்து உலகத்துக்குத் தந்தாகி விட்டது. எப்போது விச்ராந்தியாக உன் மடியிலேபோய் விழப் போகிறேன் தாயே?'

அவள் விட்ட வழியாகட்டும் என்று மனத்தைத் தேற்றிக் கொள்வார். தம்முடைய வாஞ்சைகளின் வயலாக விளங்கிய பேலூர் மடத்தைச் சுற்றிச் சுற்றி வருவார்.

பிரிகிற தருணத்தில் பாலிய ஆசை அபிலாஷைகள் மீண்டும் தோன்றும் என்று சொல்வார்கள். பசுவோடும், குரங்கோடும், தோகை மயிலோடும், மாடப்புருவோடும், சீமைப் பெருச்சாளி யோடும் தோழமை பூண்டு விளையாடியவனல்லவா குழந்தை நரேன்? அதே மனப்பாங்கு இப்போது சுவாமிஜியிடம் திரும் பிற்று. மடத்தைச் சேர்ந்த வாயில்லா ஜீவன்களிடம் அவருக்கு

Koviloor Digital Library

அபாரமான வாத்ஸல்யம் பெருகலாயிற்று. மாடுகளின் மேய்ச்சல் பூமியில் மடத்து நந்தவனம் 'ஊடுருவல்' செய்துவிட்டால், ஆக்கிரமிப்புச் செய்துவிட்டதாக பிரம்மானந்தரிடம் சண்டையிடுவார் சுவாமிஜி.

பாகா என்ற நாயிடம் தனியானதொரு வாஞ்சை அவருக்கு. பாகாதான் மற்ற எல்லாப் பிராணிகளுக்கும் தலைவன் என்று சொல்லலாம். ஒருமுறை அது ஏதோ போக்கிரித்தனம் செய்துவிட்டது என்பதால் அதை கங்கையின் அக்கறையில் கொண்டு விட்டார்கள். அன்று இரவு அது பேலூருக்குச்செல்லும் ஒரு படகில் தாவிக்குதித்தது. அது பார்த்த பார்வையையும், உறுமலையும் கண்டு பயந்த படகுக்காரனும், பிரயாணிகளும் அதனை வெளியேற்றத் துணியவில்லை. மடத்துக்குத்திரும்பிய பாகா நேரே சுவாமிஜியின் அறைவாசலில் போய்ப் படுத்துக்கொண்டு விட்டது. அதற்குத் தெரியும் அவருக்கு மேல் அங்கே 'அப்பீல்' கிடையாது என்று. மறுநாள் காலை வெளியேவந்த சுவாமிஜி பாகாமீதுதான் தடுக்கிக் கொண்டார். அது வாலைக் குழைத்தது. அதன்பின் சுவாமிஜி எந்தக் காரணத்தை முன்னிட்டும் அந்த நாயை விரட்டக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்தார். கிரகணம் போன்ற புண்ணிய காலங்களில் சங்குகளும், சேகண்டிகளும் ஒலிக்கத் தொடங்கியவுடனேயே பாகா கங்காநதிக்குச் சென்று மக்களோடு ஒருவர்போல் நீராடுமாம்! சுவாமிஜியின் மறைவுக்குப் பின்தான் பாகாவுக்கு முடிவுநேரிட்டது. கங்கை அதன் உடலைத்தள்ளிய இடத்தில் அது புதைக்கப்பட்டது. நினைவுச் சின்னமும் எழுப்பப்பட்டது.

சகல ஜீவராசிகளுக்கும் உரிய சுவாமிஜியின் — சகல ஜீவ ராசிகளையும் ஒன்றுகவே கண்ட சுவாமிஜியின் — அன்புக்குப் பாத்திரமான பிராணிகளில் 'ஹம்ஸி' என்ற ஆடு ஒன்று. சுவாமிஜி தமது தேநீருக்கு ஆட்டுப்பால்தான் சேர்ப்பது வழக்கம். பால் கறந்துகொள்ளுமுன், ''ஹம்ஸி ஹம்ஸி! எனக்குக் கொஞ்சம் பால் தருவாயா?'' என்று தாயிடம் குழந்தைபோல் அதனிடம் கெஞ்சிக் கேட்பார். 'மாத்ரு' என்று அவர் பெயரிட்டிருந்த ஆட்டுக்குட்டி அவருக்கு மிகவும் செல்லம். அதை சந்தோஷப்படுத்துவதற்காக அவர் தள்ளாத உடம்பைத் தூக்கிக் கொண்டு ஓடியாடுவதைப் பார்க்கும்போது இவரா சர்வமத மகாசபையிலும், சமய சரித்திர மகாநாட்டிலும் மகத்தான பிரசங்கங்கள் புரிந்த தத்துவஞானி என்று அதிசயமாயிருக்கும். மாத்ருவுக்கு மடத்தில் சர்வ சுதந்திரமும் உண்டு. சுவாமிஜி அதன் கழுத்தில் கட்டியிருந்த சலங்கைப்பட்டை குலுங்க அது

Koviloor Digital Library

சுவாமிஜியின் அறைக்குள்ளேயே தன்னிச்சையுடன் சென்றுஅவரது சோபாவில் படுத்துத் தூங்கும். மாத்ரு சுவாமிஜியின் முன்னேயே தன் கண்ணை மூடிவிட்டது. அப்போது அவர் ஆற்றெணுத் துயரம் அடைந்தார். ''சரத்சந்திரா! நான் அன்பு செய்கிறவர்கள் அல்பாயுளில் போய்விடுகிருர்கள்'' என்று துயரத்துடன் கூறினர். ஆண்டவன் யாரிடம் அன்புகொண்டிருக்கிருனே அவர்கள் அல்பாயுளில் போய்விடுவார்கள் என்று ஆங்கிலத்தில் பழமொழி உண்டு. சுவாமிஜியே இதன் உண்மையை நிரூபிக்கப் போகிருரே!

பல பசுக்களும், செம்மறியாடுகளும், வாத்துக்களும், நாரைகளும், ஒரு மானும் சுவாமிஜியின், 'வாசுதேவகுடும்பத்து' அங்கத்தினர் ஆவர். இந்தக் குடும்பத்தைப்பற்றி 1901-ம் ஆண்டு ஸெப்டம்பர் ஏழாந்தேதி அமெரிக்க சிஷ்யை ஒருத்திக்கு சுவாமிஜி குதூகலத்துடன் எழுதுவதைப் பாருங்கள்:

''பரமசிரத்தையுடன் மழை இறங்கிவந்திருக்கிறது. பெய்கிறதோ, பெய்கிறதோ அப்படிப் பெய்து இங்கே ஒரே வெள்ளக்காடாக ஆக்கியிருக்கிறது. நதி மட்டம் உயர்ந்துகொண்டே வருகிறது. கரையெல்லாம் நீர் பெருகுகிறது. ஏரிகளும் குட்டைகளும் வழிகின்றன. மடத்தில் தேங்கியுள்ள தண்ணீருக்கு வடிகால் வெட்டுவதில் இவ்வளவு நாழி ஈடுபட்டுவிட்டு இப்போது தான் திரும்பினேன். சில இடங்களில் பல அடிகள் ஆழத்துக்கு நீர் தேங்கியிருக்கிறது. என் பெரிய நாரை இருக்கிறதே அதற்கு ஏகக் கொண்டாட்டம். வாத்துக்களுக்கும் அப்படியேதான். என் பயந்தாங்கொள்ளி மான்தான் மடத்திலிருந்தே ஓடிப்போய், சில நாட்களுக்கு எங்களையெல்லாம் ரொம்ப விசாரப்படுத்தி விட்டது. என் வாத்துக்களில் ஒன்று நேற்று துரதிருஷ்டவசமாக மாண்டுபோய்விட்டது. ஒரு வாரமாகவே மூச்சுவிட முடியாமல் அது தவித்துக்கொண்டிருந்தது. குறும்பு நிறைந்த என் குருபாயி ஒருவர், 'இந்தக் கலிகாலத்தில் காலம்தள்ளுவது ரொம்பவும் சிரமம் சுவாமிகளே! சீதம் அதிகமாகிவிட்டதற்காக வாத்துக்களுக்கு ஜலதோஷம் பிடிப்பதாயும், தவளைகள் மூக்கைச் சிந்திப் போடுவதாகவும் அல்லவா ஆகிவிட்டது!'' என்கிருர்''

இந்தக் கடிதத்தில் குறிப்பாக ஒரு விஷயத்தைக் கவனித்திருப்பீர்கள்: ஆஸ்துமாவுடன் அல்லல்பட்ட சுவாமிஜி மழைநீர் தேங்கிய மடத்தில் அந்த நீருக்குக் கால்வாய் வெட்டிவிடும் வேலையில் ஈடுபட்டிருந்திருக்கிருர்! காலில் செருப்புக்கூட அணியாமல் இப்படியெல்லாம் அவர் ஈரத்தில் திரிவார். மேல்நாடுகளில் எதற்கெடுத்தாலும் சம்பிரதாயம் பார்த்துப் பார்த்துக்

Koviloor Digital Library

அபாரமான வாத்ஸல்யம் பெருகலாயிற்று. மாடுகளின் மேய்ச்சல் பூமியில் மடத்து நந்தவனம் 'ஊடுருவல்' செய்துவிட்டால், ஆக்கிரமிப்புச் செய்துவிட்டதாக பிரம்மானந்தரிடம் சண்டையிடுவார் சுவாமிஜி.

பாகா என்ற நாயிடம் தனியானதொரு வாஞ்சை அவருக்கு. பாகாதான் மற்ற எல்லாப் பிராணிகளுக்கும் தலைவன் என்று சொல்லலாம். ஒருமுறை அது ஏதோ போக்கிரித்தனம் செய்துவிட்டது என்பதால் அதை கங்கையின் அக்கறையில் கொண்டு விட்டார்கள். அன்று இரவு அது பேலூருக்குச்செல்லும் ஒரு படகில் தாவிக்குதித்தது. அது பார்த்த பார்வையையும், உறுமலையும் கண்டு பயந்த படகுக்காரனும், பிரயாணிகளும் அதனை வெளியேற்றத் துணியவில்லை. மடத்துக்குத்திரும்பிய பாகா நேரே சுவாமிஜியின் அறைவாசலில் போய்ப் படுத்துக்கொண்டு விட்டது. அதற்குத் தெரியும் அவருக்கு மேல் அங்கே 'அப்பீல்' கிடையாது என்று. மறுநாள் காலை வெளியேவந்த சுவாமிஜி பாகாமீதுதான் தடுக்கிக் கொண்டார். அது வாலைக் குழைத்தது. அதன்பின் சுவாமிஜி எந்தக் காரணத்தை முன்னிட்டும் அந்த நாயை விரட்டக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்தார். கிரகணம் போன்ற புண்ணிய காலங்களில் சங்குகளும், சேகண்டிகளும் ஒலிக்கத் தொடங்கியவுடனேயே பாகா கங்காநதிக்குச் சென்று மக்களோடு ஒருவர்போல் நீராடுமாம்! சுவாமிஜியின் மறைவுக்குப் பின்தான் பாகாவுக்கு முடிவுநேரிட்டது. கங்கை அதன் உடலைத்தள்ளிய இடத்தில் அது புதைக்கப்பட்டது. நினைவுச் சின்னமும் எழுப்பப்பட்டது.

சகல ஜீவராசிகளுக்கும் உரிய சுவாமிஜியின் — சகல ஜீவராசிகளையும் ஒன்றுகவே கண்ட சுவாமிஜியின் — அன்புக்குப் பாத்திரமான பிராணிகளில் 'ஹம்ஸி' என்ற ஆடு ஒன்று. சுவாமிஜி தமது தேநீருக்கு ஆட்டுப்பால்தான் சேர்ப்பது வழக்கம். பால் கறந்துகொள்ளுமுன், ''ஹம்ஸி ஹம்ஸி! எனக்குக் கொஞ்சம் பால் தருவாயா?'' என்று தாயிடம் குழந்தைபோல் அதனிடம் கெஞ்சிக் கேட்பார். 'மாத்ரு' என்று அவர் பெயரிட்டிருந்த ஆட்டுக்குட்டி அவருக்கு மிகவும் செல்லம். அதை சந்தோஷப்படுத்துவதற்காக அவர் தள்ளாத உடம்பைத் தூக்கிக் கொண்டு ஓடியாடுவதைப் பார்க்கும்போது இவரா சர்வமத மகாசபையிலும், சமய சரித்திர மகாநாட்டிலும் மகத்தான பிரசங்கங்கள் புரிந்த தத்துவஞானி என்று அதிசயமாயிருக்கும். மாத்ருவுக்கு மடத்தில் சர்வ சுதந்திரமும் உண்டு. சுவாமிஜி அதன் கழுத்தில் கட்டியிருந்த சலங்கைப்பட்டை குலுங்க அது

Koviloor Digital Library

சுவாமிஜியின் அறைக்குள்ளேயே தன்னிச்சையுடன் சென்றுஅவரது சோபாவில் படுத்துத் தூங்கும். மாத்ரு சுவாமிஜியின் முன்னேயே தன் கண்ணை மூடிவிட்டது. அப்போது அவர் ஆற்ருெணுத் துயரம் அடைந்தார். ''சரத்சந்திரா! நான் அன்பு செய்கிறவர்கள் அல்பாயுளில் போய்விடுகிருர்கள்'' என்று துயரத்துடன் கூறினுர். ஆண்டவன் யாரிடம் அன்புகொண்டிருக்கிருனே அவர்கள் அல்பாயுளில் போய்விடுவார்கள் என்று ஆங்கிலத்தில் பழமொழி உண்டு. சுவாமிஜியே இதன் உண்மையை நிரூபிக்கப் போகிருரே!

பல பசுக்களும், செம்மறியாடுகளும், வாத்துக்களும், நாரைகளும், ஒரு மானும் சுவாமிஜியின், 'வாசுதேவகுடும்பத்து' அங்கத்தினர் ஆவர். இந்தக் குடும்பத்தைப்பற்றி 1901-ம் ஆண்டு ஸெப்டம்பர் ஏழாந்தேதி அமெரிக்க சிஷ்யை ஒருத்திக்கு சுவாமிஜி குதூகலத்துடன் எழுதுவதைப் பாருங்கள்:

''பரமசிரத்தையுடன் மழை இறங்கிவந்திருக்கிறது. பெய்கிறதோ, பெய்கிறதோ அப்படிப் பெய்து இங்கே ஒரே வெள்ளக்காடாக ஆக்கியிருக்கிறது. நதி மட்டம் உயர்ந்துகொண்டே வருகிறது. கரையெல்லாம் நீர் பெருகுகிறது. ஏரிகளும் குட்டைகளும் வழிகின்றன. மடத்தில் தேங்கியுள்ள தண்ணீருக்கு வடிகால் வெட்டுவதில் இவ்வளவு நாழி ஈடுபட்டுவிட்டு இப்போது தான் திரும்பினேன். சில இடங்களில் பல அடிகள் ஆழத்துக்கு நீர் தேங்கியிருக்கிறது. என் பெரிய நாரை இருக்கிறதே அதற்கு ஏகக் கொண்டாட்டம். வாத்துக்களுக்கும் அப்படியேதான். என் பயந்தாங்கொள்ளி மான்தான் மடத்திலிருந்தே ஓடிப்போய், சில நாட்களுக்கு எங்களையெல்லாம் ரொம்ப விசாரப்படுத்தி விட்டது. என் வாத்துக்களில் ஒன்று நேற்று துரதிருஷ்டவசமாக மாண்டுபோய்விட்டது. ஒரு வாரமாகவே மூச்சுவிட முடியாமல் அது தவித்துக்கொண்டிருந்தது. குறும்பு நிறைந்த என் குருபாயி ஒருவர், 'இந்தக் கலிகாலத்தில் காலம்தள்ளுவது ரொம்பவும் சிரமம் சுவாமிகளே! சீதம் அதிகமாகிவிட்டதற்காக வாத்துக்களுக்கு ஜலதோஷம் பிடிப்பதாயும், தவளைகள் மூக்கைச் சிந்திப் போடுவதாகவும் அல்லவா ஆகிவிட்டது!'' என்கிருர்''

இந்தக் கடிதத்தில் குறிப்பாக ஒரு விஷயத்தைக் கவனித்திருப்பீர்கள்: ஆஸ்துமாவுடன் அல்லல்பட்ட சுவாமிஜி மழைநீர் தேங்கிய மடத்தில் அந்த நீருக்குக் கால்வாய் வெட்டிவிடும் வேலையில் ஈடுபட்டிருந்திருக்கிருர்! காலில் செருப்புக்கூட அணியாமல் இப்படியெல்லாம் அவர் ஈரத்தில் திரிவார். மேல்நாடுகளில் எதற்கெடுத்தாலும் சம்பிரதாயம் பார்த்துப் பார்த்துக்

Koviloor Digital Library

கட்டுப்பட்டுப் பழகவேண்டியதற்கு மாருக மடத்துச் சூழ்நிலையில் தம்மிஷ்டப்படி இப்படி எல்லாம் செய்துவந்தார். ஆனுல் இப்போதும் கட்டுப்பட்டு நடக்கவேண்டிய ஆசரணைகள் எதிலும் அவர் தவறிவிடவில்லை. அதேபோல் மடத்துச் சிஷ்யர்களிடமும் மிகவும் கண்டிப்பாக தின சரியைகளைக் கவனிக்கவேண்டுமென்று உத்தரவிட்டு, மேற்பார்த்து வந்தார். புறத்தூய்மையையும் அகத்தூய்மையையும் மிக மிக வலியுறுத்தி வந்தார். வேத, புராணப் பாடங்கள் செவ்வனே நடைபெறவேண்டும் என்பதில் பெருத்த சிரத்தை காட்டினுர். மடத்துப் பூஜை முறையை முடிந்த அளவு எளிதாக்கி, படாடோபத்தைக் குறைக்கவேண்டும் என்ருர். மடத்தினரின் காரியக்கிரமங்களுக்குத் திட்டம் வகுத்தார். உண்பது, ஒய்வெடுத்துக்கொள்வது, ஓதுவது, அநுஷ்டானம் புரிவது எல்லாம் அந்தந்தக் காலத்தில் நடக்கவேண்டுமென விதித்தார். ஸ்ரீராமகிருஷ்ணர் கூறியதுபோல் காலை, மாலை சந்திகளில் யாவரும் ஜபம் புரியவேண்டுமெனக் கூறி, தாமும் அவர்களுடனேயே ஜபம் புரிவார். அவர் ஜபம் முடித்தபின்தான் அவர்கள் எழுவார்கள். ''சிவ சிவா'' என்று கோஷித்து, பரமஹம்ஸரை மீண்டும் வணங்குவார்கள். அதன்பின் சுவாமிஜி நடந்தவாறே ஈசனைக் குறித்தோ தேவியைக் குறித்தோ கானம் செய்வார். உரியகாலத்தில் தியானம் புரியாத சிலரை — ஸ்ரீராமகிருஷ்ணரின் அன்புக்கு உகந்தவர்களும், எனவே தமது மரியாதைக்கு உரியவர்களாக சுவாமிஜி கருதிய சிலரைக்கூட — அவர் தண்டித்திருக்கிருர். அவர்கள் அன்று முன்பின் தெரியாதவர்களிடம் பிட்சை எடுத்து உண்ணவேண்டும் என்பதுதான் தண்டனை. தலைவரின் உத்தரவுப்படி அவர்கள் கையில் கப்பரையுடன் மடத்தைவிட்டு வெளியேறும்போது சுவாமிஜி விம்மினுர். மறுநாள் அவர்கள் திரும்பியபோது பச்சாதாபத்தில் உருகுகிருர் சுவாமிஜி! ''ரொம்பவும் வருத்தப்பட்டுவிடாதீர்கள் சுவாமிஜி! நேற்று எங்களுக்கு வழக்கத்தைவிட அருமையான விருந்து கிடைத்தது. ஸால்கியாவைச் சேர்ந்த மார்வாரி வியாபாரிகள் எங்களுக்கு அறுசுவை உண்டி அளித்தனர்'' என்று கூறி அவர்கள் சுவாமிஜியை சமாதானம் செய்தனர். கண்டிப்புக்கு ஈடுசெய்துவிடும் அவரது கரிசனம். தமது பணக்காரச் சிடர்கள் அன்போடு அனுப்பிவைத்த இன்சுவைப் பண்டங்களை மற்றவர்களோடு பகிர்ந்துகொண்டு இன்புறுவார் அவர். வேடிக்கைப் பேச்சுக்கள் அப்போது வெகு அதிகமாக இருக்கும்.

''கட்டளையிடுவதன்மூலம் ஒருவன் பிறரது பணிவையும், மரியாதையையும் பெறமுடியாது. நிர்ப்பந்தத்தின்மூலம் கீழ்ப்

Koviloor Digital Library

படிதலைப் பெறமுடியாது. தலைவனின் அன்பான இயல்பையும், உன்னதமான நடத்தையையும் பொறுத்ததுதான் மற்றவர்களின் நடவடிக்கை. உண்மையான அன்பு, மகிமை, இவற்றின் சக்தியை யாராலும் தடுக்கமுடியாது'' என்று ஒரு சமயம் சுவாமி விவேகானந்தர் கூறியிருக்கிறார். அதையே அவர் வாழ்ந்துகாட்டி ருசுப்பித்தார் என்று சொல்லலாம். இவ்விஷயத்தில் பக்தர் ஒருவரின் வார்த்தைகளைக் கேளுங்கள்:

''மழைக்காலத்தில் மௌனமாகவே உலகை வெள்ளத்தில் ஆழ்த்தும் மேகம்போல், அவர் இப்போது மௌனமாகச் செயல் புரிந்தே, உலக மக்கள் யாவரும் சோதரர் என்பதை உணர்ந்த உண்மையான தொண்டர் தாம் என்பதைச் சீடர்களுக்கு நிரூபித்து வந்தார். அவர் அதிகம் பேசவில்லை. ஆனால் அவரது செயல்களும், திரு உருவமும், அங்க அசைவுகளும், பாவனைகளும், அதாவது அவரது வாழ்வின் சகல அம்சங்களும் மனிதகுலத்தின் சோதரத்துவத்தை வெளிப்படுத்தின; உலகம் தழுவும் அன்பையும் அநுதாபத்தையும் வெளிப்படுத்தின.''

தக்ஷிணேசுவரத்துத் தபஸ்வியின் கீழ் நரேந்திரரும் மற்ற குருபாயிக்களும் வாழ்ந்த நாட்களையே இப்போது மீண்டும் நிகழ்த்திவந்தார் சுவாமி விவேகானந்தர்.

சுவாமிஜி உடலில்பட்ட ஹிம்ஸையைப்பற்றி மீண்டும் மீண்டும் நினைப்பதும் எழுதுவதுமே ஹிம்ஸையாகத்தான் இருக்கிறது. ஆனாலும் சொல்லாமல் விடுவதற்கில்லை. கம்பீரமான அவரது தோற்றம் நடுவில் நலிவுகண்டது ஒரு விதத்தில் வேதனையளித்ததெனில், இப்போது நீர் சுரந்து அவருடைய உடல் உப்பியது அதைவிட வேதனையாயிருந்தது. எவ்வளவோ நடையாய் நடந்து பழகிய அவரது திருப்பாதங்கள் இப்போது அவர் ஓய்வுகொண்டிருக்கும்போதே வீங்கிப்போயின. ஒரு சிறிய ஸ்பரிசம்கூட அவரது உடலைத் துன்புறுத்திற்று. தூக்கம் என்பதை அவர்கண்டு ஆன நாட்கள் எத்தனையோ? ஆனாலும் அவர் சர்வேசுவரியிடம் உடம்பை ஒப்பித்துவிட்டு, தாம் இன்பமாகவே இருக்க முயன்றார் — குருமஹராஜ்போலவே. இயன்றமட்டும், மடத்துக்கு வருபவர்களையெல்லாம் பார்த்துப் பேசி அனுப்பினார். இது மடத்தினருக்கு மிகவும் கிலேசமளித்தது. அவர்கள் யாரையேனும் தடுத்தாலும் கேளாமல் சுவாமிஜி தரிசனம் அளித்துவந்தார். சரத் சந்திரரிடம் சுவாமிஜி சொன்னார்: ''மகனே, என் ஆரோக்கியத்தைப்பற்றி ஏன் இன்னமும் கேட்டுக்கொண்டிருக்கிறாய்! நாளுக்கு நாள் உடம்பு மோசமாகி வருகிறது. வங்காளத்தில் பிறந்துவிட்டு வியாதியில்லாமலிருக்கவேண்டுமென விரும்ப முடியு

Koviloor Digital Library

மா? தேகாரோக்கியத்துக்கு இந்த மாகாணம் உகந்ததே அல்ல. வேலைசெய்யத் தொடங்கிய உடனேயே உடம்பினால் தாங்கமுடியாமல்போய், அது கட்டுக்குலைகிறது. இந்த உடம்பு இன்னும் ஏதோ கொஞ்சம் நாளிருக்கும். அதுவரையில் உங்கள் எல்லாருக்காகவும் உழைத்துவிட்டு, வண்டியில் பூட்டிய குதிரையாகவே உயிரைவிடுவேன்.''

அப்படி சுவாமிஜி உழைக்கக்கூடாது; பரிபூரண ஓய்வு கொண்டால்தான் தங்களுக்கு மனம்கேட்கும் என்று குருபாயிக்களும், சிடர்களும் வேண்டிக்கொண்டார்கள்.

''அதெப்படி முடியும்? எனக்கு ஓய்வு என்பதே கிடையாது'' என்றார் சுவாமிஜி. ''ஸ்ரீராமகிருஷ்ணர் 'காளி' 'காளி' என்று சொல்லி வந்தாரே அது அவரது மறைவுக்கு மூன்று அல்லது நாலு நாளைக்கு முன்பு என் உடலையும் உயிரையும் பிடித்துக்கொண்டுவிட்டது. அதுதான் என்னை ஓயாமல் வேலை வாங்குகிறது. நான் அமைதியாக இருக்கவோ, என் சொந்த சுகங்களைத் தேடவோ அது என்னை விடுவதே இல்லை''

பழைய நினைவுகளில் முழுகினார் சுவாமிஜி.

''குருமஹராஜ் காலமாவதற்கு மூன்று அல்லது நாலு நாட்களுக்கு முன்பு நானும் அவரும் தனியாக இருந்தபோது அவர் என்னைத் தம் அருகே அழைத்தார். நான் அவர் முன் அமர்ந்தேன். அவர் என்னுடைய கண்களையே உற்றுநோக்கிக் கொண்டிருந்தார். அப்படியே சமாதிநிலை அடைந்தார். அப்போது, மின்சாரம்போன்ற ஒரு சூக்ஷ்மமான சக்தி ஆற்றல்வாய்ந்த அலைகளாக அவரது உடலிலிருந்து புறப்பட்டு என் உடம்புக்குள் புகுவதை நான் நேரடியாக உணர்ந்தேன். சிறிதுபோதுக்குப்பின் எனக்கும் வெளியுலகப் பிரக்ஞை அற்றுப்போயிற்று. சமாதியில் ஆழ்ந்துவிட்டேன். அந்த நிலையில் எவ்வளவுகாலம் இருந்தேனோ நான் அறியேன். நான் உணர்வுகளைத் திரும்பப் பெற்றபோது குருமஹராஜ் கண்ணீர் பெருக்கிக்கொண்டிருப்பதைக் கண்டேன். 'ஏன் அழுகிறீர்கள்?' என்று கேட்டேன். அவர் மிகவும் மிருதுவான குரலில், ''என் நரேன், என்னிடமிருந்த சகலத்தையும் — ஒன்று மீதமின்றி யாவற்றையும் — உனக்குக் கொடுத்துவிட்டு நான் பக்கிரியாகிவிட்டேன். இந்தச் சக்தியினால் நீ உலகில் மகத்தான காரியங்களைச் சாதிப்பாய், அதன்பின்தான் திரும்புவாய்!'' என்றார்.

''அந்தச் சக்திதான் என்னை ஓயாமல் ஒழியாமல் வேலைபுரியச் செய்கிறது. அதனுடைய சுழலிலே என்னைச் சுழற்றிச் சுழற்றி ஆட்டிவைக்கிறது. இந்த உடம்பு இருக்கிறதே, இது சும்மா உட்காருவதற்காகப் படைக்கப்படவில்லை.''

Koviloor Digital Library

அக்கினிக் கொழுந்தை ஏந்தும் விளக்கின் அடிப்பாகம்மட்டும் நிழலில்தானே இருக்கிறது? இதுபோல அயல்நாடுகளெல்லாம் உணர்ந்திருந்த சுவாமிஜியின் பெருமையை உள்ளூர்க்காரர்கள் சிலர் அறிந்திருக்கவில்லை — என்கிறார் நிகிலானந்த சுவாமி. இவர்கள் சுவாமிஜி ஆசாரங்களை மிகவும் பழுதுபடுத்திவிட்டதாகக் கருதினார்கள். பேலூர் மடத்துச் செயல்முறைகள் சநாதன தர்மங்களுக்குப் புறம்பானவை என்று கருதினார்கள். சுவாமிஜி இதைப் பொருட்டாகக் கருதவில்லை. ''யானை கடைத்தெருவில் செல்லும்போது அதன்பின் நாய்கள் குலைப்பது சகஜம்தானே?'' என்பார். அல்லது ''நவீனமான எதையாவது பிரசாரம் செய்யும் போது பழமைவாதிகள் அதனை எதிர்ப்பது இயல்புதானே? இவ்விதமான தடை இல்லாமல் உயர்ந்த எண்ணங்கள் சமூகத்தின்இதயத் துக்குள் புக முடியாது'' என்பார். நல்லதுசெய்பவன் ஒருபோதும் துர்க்கதி அடையமாட்டான் என்ற கீதா வாக்கியத்தைக்கூறிச் சீடர்களைத் தங்கள் வழியிலேயே செல்லுமாறு கூறுவார்.

சுவாமிஜியின் பெருமையை மதிக்கத் தெரியாதவர்களும் அவருக்கு அருகிலேயே இருந்தார்கள் என்ற இழுக்கு அவரது காலத்திலேயே மறையலாயிற்று. காரணம் 1901-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நவராத்திரி நிகழ்ந்தபோது சுவாமிஜி மிகவும் சாஸ்திரோக்தமான முறையில் துர்கா பூஜை நடைபெற ஏற்பாடு செய்ததுதான். பல மாதங்களுக்கு முன்பிருந்தே ரகுநந்தன ஸ்மிருதியைப் படித்து விதிமுறைகளை பழுதற அறிந்தார் சுவாமிஜி. எனினும் பூஜை செய்கிற உத்தேசத்தை, நவராத்திரிக்குப் பத்து நாட்கள் முன்புதான் அவர் வெளியிட்டார். இச்சமயத்தில் குருபாயி ஒருவரின் கனவில் தசபுஜம்கொண்ட மஹாகாளி தோன்றினாள். அவர் கனவை வெளியிட்டவுடன் சுவாமிஜியும் தமது உத்தேசத்தை வெளியிட்டார். சுவாமி பிரேமானந்தர் கல்கத்தாவுக்குச் சென்று தூய அன்னையின் ஆமோதனத்தைப் பெற்றுவந்தார்.

ஆராதனை சிறப்புற நிகழ்வதில் சந்நியாசச் சீடர்களுக்கு உதவிபுரிய இல்லறச் சீடர்கள் ஆர்வமுடன் முன்வந்தனர்.

தேவியின் பிரதிமை உருவாக்கப்பட்டது. மடத்து மைதானத்தின் வடபகுதியில் பூஜா கிருகம் அமைக்கப்பட்டது. சாரதையும், மற்றப் பெண் பக்தைகளும் கல்கத்தாவிலிருந்து பேலூருக்கு வந்து, மடத்தை அடுத்திருந்த நீலாம்பர் முகர்ஜியின் தோட்ட மாளிகையில் தங்கினர்.

பக்தியே உருவமான சுவாமி பிரம்மானந்தரின் சிரத்தையான மேற்பார்வையிலும், ராமகிருஷ்ணானந்தரின் பூர்வாசிரமத்துத்

Koviloor Digital Library

தகப்பனாரும், மந்திர சாஸ்திர விற்பன்னருமான ஈசுவர சந்திர பட்டாசாரியரின் தலைமையிலும் தேவி பராசக்தி முறைப்படி பூஜை பெற்றாள்.

பேலூரிலிருந்தும் தக்ஷிணேசுவரத்திலிருந்தும் நிறைய பிராமணர்களை வரவழைத்துச் சிறப்பாக வெகுமானம் செய்தார் சுவாமிஜி. பிரசாதங்கள் ஏராளமாக நிவேதனம் செய்யப்பட்டு, ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு அளிக்கப்பட்டன.

ஸப்தமியன்று இரவு சுவாமிஜிக்குக் காய்ச்சல் கண்டுவிட்டது. மறுநாள் காலை அவரால் பூஜையைக் கண்ணால்பார்க்கக்கூட இயலவில்லை. தேவி மகிஷாசுரமர்த்தினி ஆவிர்பாவமான அஷ்டமியும் நவமியும்கூடுகிற சந்தியில்செய்கிற உத்கிருஷ்டமான பூஜைக்கு அவர் தத்தித் தள்ளாடிக்கொண்டு வந்து சேர்ந்துவிட்டார். ''ஓர் ஆசையும் என்னிடம் இருக்கக்கூடாது; உன்னைப் பூஜித்துப் பார்க்கக்கூட நான் ஆசைப்படலாகாது என நினைக்கிறாயா, தேவி ?'' என்று எண்ணியபடியே ஜகன்மாதாவின் பாதகமலங்களுக்கு மும்முறை புஷ்பாஞ்சாலி செலுத்தினார்.

மறுநாள் அவரது உடல்நிலை சிறிது தேறிற்று. அன்றிரவு அம்பிகையின் முன்னால் அமர்ந்துகொண்டு பக்தி புஞ்சிதமாக அவர் கானம் செய்தார் — ஆதியில் ஸ்ரீராமகிருஷ்ணர் உள்ளுருகிப்பாடிய அதே பாடல்களைத்தான். அவரது அந்திம காலத்தைத் தானே இப்போது இவரும் வாழ்ந்துவந்தார் ?

விஜயதசமி அன்று மாலை மங்கும்போது தேவியின் பிரதிமை கங்கையில் விஸர்ஜனமாயிற்று. விக்கினங்களில்லாமல் விழா நிறைவேறியதில் சுவாமிஜி மனம் நிறைந்தார். சாரதாமணி தேவியும் பரமதிருப்தியுடன் சுவாமிஜியையும், மற்றவர்களையும் ஆசிர்வதித்துவிட்டுக் கல்கத்தாவுக்கு ஏகினாள்.

இதே ஆண்டில் சுவாமிஜி லக்ஷ்மி பூஜை, காளி பூஜை இவற்றையும் செய்வித்தார். காளிபூஜை ஆனபின் அவரது அன்னை புவனேசுவரி அவருக்குச் சேதிசொல்லி அனுப்பினாள் — குழந்தையாக இருந்தபோது நரேனுக்குக் கடுமையான காய்ச்சல் கண்டதாம். அப்போது உடல் நலம்பெற்றால் குழந்தையைக் காளியின் சந்நிதியில் அங்கப் பிரதக்ஷிணம் செய்யவைப்பதாக புவனேசுவரி பிரார்த்தித்துக்கொண்டாளாம். நரேனுக்கு நோவு தீர்ந்தது. ஆனால் தாய் வேண்டுதல் விஷயத்தை மறந்தே விட்டாள். இத்தனை ஆண்டுகளுக்கு அப்புறம் தன்பிள்ளை நோய் வாய்ப்பட்டிருக்கும்போது காளிபூஜை செய்தபின்தான் அவளுக்கு அது நினைவுக்கு வந்தது.

சுவாமிஜிக்கு அன்னையிடமிருந்து தகவல் வந்தபோது இலேசாக ஜுரம் கண்டிருந்தது. நடக்கப்போவதென்ன என்

Koviloor Digital Library

பதும் அவருக்குத் தெரியும். என்ருலும் தாயின் திருப்திக்காகக் காளிகட்டத்துக்குச் சென்ருர். கங்கையில் முழுகினுர். கல்கத்தாவுக்கே பெயரளித்திருந்த காளிமாதாவின் ஆலயத்துக்கு ஈர வஸ்திரத்துடன் சென்ருர். சந்நிதியில் மும்முறை அங்கப் பிரதக்ஷிணம் செய்தார். அம்பிகையை வணங்கி எழுந்துவிட்டு, ஏழுமுறை கோயிலை வலம் வந்தார். தேவிக்குத் தாமே ஹோமமும் செய்தார். இவை எல்லாம் நற்செயல்கள்தாமே? இவற்றுக்காக சுவாமிஜி தமது தீர்க்காயுள் என்ற வேறு ஒரு பலனை எதிர்பார்ப்பாரா என்ன?

பேலூருக்குத் திரும்பிய சுவாமிஜி காளிகட்டத்துப் பூஜாரிகளை மிகவும் பாராட்டினுர். தாம் கடல்கடந்து திரும்பியவராயினும் தம்மிடம் அவர்கள் மிகவும் பிரீதியுடன் நடந்துகொண்டதாகக் கூறினுர்.

சுவாமிஜியின் சரிதத்தைச் சொல்லும் கீழ்நாட்டு — மேல்நாட்டுச் சீடர்கள் இவ்விடத்தில் சொல்கிருர்கள்:

''முழுக்க முழுக்க சுவாமிஜி அத்வைதியானபோதிலும் மகான் சங்கராசாரியரைப் போலவே அவர் பரம்பொருளின் சகுண பாவங்களிடமும் பெருத்த பக்திபூண்டிருந்தார். மாலை வானத்துக் கதிரவன் ஒளியில் நாளு அளவுள்ள மேகங்கள் வரும்போது, அது அனந்தமான வண்ண ஜாலங்களைப் புரிவதுபோல், சுவாமிஜியின் ஞானப்பிரகாசம் மிகுந்த ஆத்மா, அவரது குருநாதரின் ஆத்மாபோலவே பலவித சமய உணர்வுகளை ஒட்டிப் பிறருக்கு நாளுவிதமான தெய்வதரிசனங்களைக் காட்டிக் கொடுத்தது. ஆனுல் இந்தப் பலவற்றையும் அனந்தமான ஒன்றின் லீலையாகவே அவர்கள் கண்டார்கள்.''

1901-ம் ஆண்டு அக்டோபரில் சுவாமிஜியின் நோய் தீவிரமாயிற்று. பிரசித்திபெற்ற டாக்டர் ஸாண்டர்ஸ் அவரைப் பரிசோதித்தார். பரிபூரண ஓய்வுகொண்டாலன்றி எந்தச் சிகித்ஸையும் பலனளிக்காது எனக் கூறிவிட்டார். கூட்டிலடைபட்ட வானம்பாடியாக சுவாமிஜியும் படுக்கையைவிட்டெழாமல் அடைபட்டுக் கிடக்கவேண்டியதாயிற்று. இருந்தாலும் உடம்பில் சிறிது உற்சாகம் தோன்றினுலும்கூட சுவாமிஜி கையில் ஒரு மண்வெட்டியை எடுத்துக்கொண்டு தோட்டத்தைக் கொத்தப் புறப்பட்டுவிடுவார். அல்லது பூச்செடிகளையும், பழச்செடிகளையும் பிடுங்கி நடுவார்.

இந்தக் காலகட்டத்தில் சுவாமி நிர்பயானந்தருக்குப் பயங்கரமான ஜுரம் கண்டு நூற்றியேழு டிகிரிவரை சென்றுவிட்டது. அவருக்கு ஜன்னி கண்டுவிட்டது. அப்போது சுவாமிஜிக்கு என்ன

Koviloor Digital Library

தோன்றிற்றோ என்னவோ, ஸ்ரீராமகிருஷ்ணரின் ஆலயத்துக்குச் சென்றார். அவரது அஸ்தி கலசத்துக்கு அபிஷேகம் செய்தார். அபிஷேக தீர்த்தத்தை நிர்பயானந்தருக்குப் புகட்டினார். ஆகா, என்ன விந்தை! உடனேயே ஜுரம் விறுவிறுவென்று இறங்கத் தொடங்கிற்று. ஸ்ரீராமகிருஷ்ணர் உண்மையாகவே பேலூர் மடத்தில் வாழ்கிறார் — தாம் நிர்ணயித்த இடத்தில் தமது குரு வந்து வசிக்கிறார் — என்று ஆனந்தமடைந்தார் சுவாமிஜி.

சுவாமிஜிக்கு இப்படியே மந்திர தீர்த்தம் அளித்து உயிரை மீட்க யார் இருந்தார்கள்?

1901-ம் ஆண்டு டிஸம்பர் பிற்பகுதியில் கல்கத்தாவில் இந்திய தேசிய காங்கிரஸ் மகாநாடு நடைபெற்றது. அதற்கு நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர். அவர்களில் பலர் பேலூருக்கு விஜயம்செய்து தேசபக்த ஞானியாகிய சுவாமிஜியைப் பணிந்து சென்றனர்.

அவர்களோடு பாரதத்தின் புனர்வாழ்வுபற்றிப் பல திட்டங்களை ஆராய்ந்த சுவாமிஜி, வேதகலாசாலை ஒன்று நிறுவவும், ஆரிய நாகரிகத்தையும், சம்ஸ்கிருதக் கல்வியையும் வளர்க்கவும் காங்கிரஸ் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று யோசனை கூறினார்.

வேதத்தைப் பிரசாரம் செய்யவேண்டும் என்பதில் சுவாமிஜி இறுதிவரை — வாஸ்தவமாகவே அவர் உடலை உதிர்த்த அன்றைய தினம் உள்பட — ஈடுபாடு கொண்டிருந்தார்.

இந்த ஆண்டு இறுதியில் சமூகப்பிரஷ்டமான சந்தல வகுப்பைச் சேர்ந்த சில தொழிலாளர்கள் மடத்துத் தோட்டத்தில் வேலைசெய்து வந்தனர். அவர்களுடைய துயரக் கதைகளையெல்லாம் சுவாமிஜி அநுதாபத்துடன் கேட்பார். ஒருமுறை தம்மைக் காணத் தனிகர்கள் சிலர் வந்திருந்தபோது, "நான் இந்தச் சந்தலர்களுடனேயே மகிழ்ச்சியாக இருக்கிறேன்" என்று சொல்லிவிட்டார் சுவாமிஜி.

சந்தலர்களில் கேஷ்டா என்பானிடம் சுவாமிஜிக்கு விசேஷமான வாத்ஸல்யமுண்டு. அவன் அவரிடம் சற்றுத் தைரியமாகவே பேசுவான். "சாமியாரே! நீங்கள் எங்களோடு பேசுவதால் எங்கள் வேலை கெட்டுப்போகிறது என்று மேஸ்திரி சாமியார் கோபித்துக்கொள்கிறார்" என்றான் அவன் ஒரு நாள். மேஸ்திரி சாமியாரான அத்வைதானந்தரை சுவாமிஜி கண்டித்து அந்த எளிய மக்களிடம் முடிந்தமட்டும் தயை காட்டவேண்டும் என்று கூறினார்.

அவர்களின் துயரங்களைக் கேட்கும்போது சுவாமிஜிக்கு கண்களில் நீர் முட்டும். "சாமியாரே, இனிமேல் நீங்கள் போகு

Koviloor Digital Library

வேண்டியதுதான். உங்களை அழவைத்து எங்கள் கஷ்டத்தைச் சொல்லமாட்டோம்'' என்பான் கேஷ்டா அன்போடு.

ஒரு நாள் ''உங்களுக்கெல்லாம் ஒரு விருந்தளிக்கிறேனே !'' என்றார் சுவாமிஜி. ''உஹூம் ! நீங்கள் தந்து நாங்கள் உப்பு போட்ட பண்டத்தைச் சாப்பிட்டுவிட்டால் எங்கள் சாதி போய் விடுமே'' என்றனர் அந்தத் தொழிலாளிகள்.

அத்தனை ஜாதி அபிமானம் அவர்களுக்கு ! இதில் விந்தை, உயர் ஜாதியினர் பஞ்சமர் பார்த்து உண்ணக்கூடாது என்று கருதினர் என்றால் அந்தப் பஞ்சமரோ இந்த 'உயர்ஜாதி'யினர் அளித்த உணவை உண்பது தகாது என்று சுயமரியாதை பாராட்டி னார்கள் !

''உப்புத்தானே உணவில் சேர்க்கக்கூடாது ? நான் உப்புப் பொடியைத் தனியாக உங்களுக்கு அளிக்கிறேன்'' என்று பிடி வாதம் பிடித்தார் சுவாமிஜி.

சந்தலத் தொழிலாளரும் ஒப்புக்கொண்டனர்.

இனிப்புக்களும், பூரியும், தயிருமாக தடபுடலாகச் சந்த லருக்கு விருந்து நடைபெற்றது பேலூர் மடத்திலே. சுவாமிஜியே அக்கறையுடன் மேற்பார்வையிட்டு வந்தார். ''சாமியாரே, இந்தப் பலகாரமெல்லாம் எங்கிருந்து கொண்டுவந்தீர்கள் ? நாங் கள் கனவில்கூட இப்படிக் கண்டதில்லை'' என்று கூறி வயிராற உண்டு வாழ்த்தினர் அந்த ஏழைமக்கள்.

விருந்து முடிந்ததும் சுவாமிஜி உள்ளம் உருகி அவர்களிடம், ''நீங்கள் எல்லாரும் நாராயணர்கள். உங்களுக்கு உணவிட்டு இன்று நான் ஆண்டவனுக்கே விருந்தளித்துவிட்டேன்'' என்றார். பிற்பாடு தம் சீடர் ஒருவரிடம் ''நான் விளையாட்டுக்குச் சொல்ல வில்லை. வாஸ்தவமாகவே பிரபுவை அவர்களில் பார்த்தேன். குற்றமற்ற இந்த எளிய இதயத்தவரிடமின்றி ஐயனை எங்கு காண முடியும் ?'' என்று கேட்டார்.

சந்நியாசிகள் பிரம்மசாரிகள் யாவரையும் கூட்டி மக்கள் சேவையைப்பற்றிப் பிரவாகமாகப் பேசினார். ''எழுத்தறிவில்லாத ஏழையரின் இன்னலைச் சிறிதேனும் தீர்க்காவிடில் காஷாயம் பூண்டு பயன் என்ன ? நமக்கு மடமும் மாடமும் எதற்கு ? மரத்து நிழல் போதாதோ ? இந்த மடத்தையெல்லாம்கூட விற்று ஏழைகளுக்கு அளித்துவிட்டால் என்ன என்று நான் எண்ணுவ துண்டு. உண்ணவும் உடுக்கவும் இல்லாமல் நமது சொந்த நாட்டு மக்கள் அவதிப்படும்போது ஒரு பிடி உணவை நாம் வாயில்போட்டுக்கொள்ள இதயம் எப்படி அனுமதிக்கும் ? நமது நன்னடத்தையின் சக்தியாலும், ஆத்மிகத்தாலும், எளிய

Koviloor Digital Library

வாழ்க்கையாலும் தனிகர்களின் கடமை தங்கள் தனத்தை ஏழையருக்கு அளிப்பதே என்பதை உணர்த்துவோம். ஐயோ! நமது நாட்டின் முதுகெலும்பான இந்த ஏழைகளைப்பற்றி எண்ணுவாரே இல்லையே! ஜாதி ஹிந்துக்களுக்கு அநுதாப உணர்ச்சி இல்லாத காரணத்தால் சென்னை ராஜதானியில் ஆயிரக்கணக்கான பஞ்சமர்கள் கிறிஸ்துவராகி யிருக்கிறார்கள். இப்போது நாட்டில் ஒத்த உணர்வும், தர்மப் பிரக்ஞையும் சிறிதாவது எஞ்சியிருக்கிறதா? 'என்னைத் தொடாதே' கொள்கைதான் இருக்கிறது'' இப்படிப் பேசிக்கொண்டேபோனார் சுவாமிஜி.

1901-ம் ஆண்டு முடியும் சமயத்தில் சுவாமிஜிக்கு உடம்பு சிறிது சுமாராகவிருந்தது. அப்போது பூஜ்யஓடா, ஒகாகுரா என்ற இரு ஜப்பானிய சமயக் கல்விமான்கள் சுவாமிஜியைக் காணவந்தனர். ஜப்பானில் ஒரு சர்வசமய மகாநாடு நடத்தத் திட்டமிடப்பட்டு வந்தது. அதில் சுவாமிஜி கலந்து கொள்ளவேணுமென்று அவர்கள் மிகவும் கேட்டுக்கொண்டனர். அவர்களின் அந்தரங்க சுத்தமான ஆசையை மதித்து சுவாமிஜியும் தமது தேக ஸ்திதியை மறந்து இணக்கம் தெரிவித்தார். இறைவன் திருவுள்ளம் வேறுவிதமாயிருந்தது!

ஹரி என்ற பையன் அவர்களுடன் வந்திருந்தான். சுவாமிஜி அவனைத் தன் நண்பனாக்கிக்கொண்டு விளையாடி மகிழ்ந்தார். ஒகாகுரா சுவாமிஜியைத் தம்மோடு புத்தகயைக்கு வருமாறு அழைத்தார். சுவாமிஜி இச்சமயத்தில் வாரணாசி செல்லவேண்டும் என்று உள்ளூற விரும்பிக்கொண்டிருந்தார். கயையில் போதம் பெற்ற புத்தர் தமது முதல் உபதேசத்தை நிகழ்த்தியது வாரணாசியில்தானே? எனவே இரண்டு க்ஷேத்திரங்களை தரிசிக்க இது ஒரு சந்தர்ப்பம் என்று மகிழ்ந்தார் சுவாமிஜி. இதை வெளியிட்ட சுவாமிஜி, ''வாரணாசியில் எனக்கு ஒரு தனி ஆகர்ஷணம் இருக்கிறது'' என்றார்.

அங்கு வதியும் விரேசுவரனுக்கு புவநேசுவரி நோன்பு நோற்றுப் பெற்ற பிள்ளைதானே அவர்? தம்மை இந்த உலகுக்குக் கொண்டுவந்தவனைத் தாம் இந்த உலகைவிட்டு நீங்கவும் உத்தரவு கேட்க விரும்பினாரோ, என்னவோ?

முன்பு பல ஆண்டுகளுக்குமுன் சுவாமிஜி விசுவநாதனை வணங்கித் திரும்புகையில், ''நான் சமூகத்தின்மீது இடியேறுபோல் விழுகிற நாள் வந்தபின்தான் இந்த க்ஷேத்திரத்துக்குத் திரும்புவேன்'' என்று பிரதிக்ஞை செய்துகொண்டிருந்தார். இன்று சமூகத்தை ஒரு கலக்குக் கலக்கியபின் அவ்வாறே காசிக்குச்சென்று விசுவேசுவரனை நன்றியுடன்நமஸ்கரிக்க அவர் எண்ணியிருக்கலாம்!

Koviloor Digital Library

ஒகாகுராவுடன் புத்தகயைக்குச் சென்ருர் சுவாமிஜி. அங்கிருந்து அவரைப்பிரிந்து காசிக்குச் சென்ருர். 1902-ம் ஆண்டுத் தொடக்கத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் இவை. காசியில் பிங்கா மகாராஜாவைச் சந்தித்தார் சுவாமிஜி. மன்னர் அவரைக் காசியில் ஒரு மடம் நிர்மாணிக்குமாறு கோரி, அதற்குத் தாம் பொருளுதவி புரிவதாகக் கூறினர். பிற்பாடு சுவாமிஜி சிவானந்தரை வாரணுசிக்கு அனுப்பி ஆசிரமம் ஒன்றை அமைத்தார்.

காசியில் தமக்கு உடம்பு சற்றேனும் இடம்கொடுத்தாலும் போதும், சுவாமிஜி கங்கையில் ஸ்நானம் செய்வார். சாமானிய யாத்திரிகர்கள்போல விசுவநாதன் ஆலயத்துக்குச் சென்று தொழுவார்.

வேத வித்தையின் கேந்திர ஸ்தானமாகிய காசியிலேயே பௌத்த பிரசாரமும் முதலில் வேர் விட்டதை சுவாமிஜி எண்ணிப்பார்த்தார். இதிலிருந்து இரு மதங்களின் தொடர்புகுறித்து அவருக்குப் பல கருத்துக்கள் தோன்றின. ''அவற்றை விஸ்தாரப் படுத்திப் பார்க்க நான் இருக்கமாட்டேன். ஆனல் வெளிக் கோடுகளை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன். நீங்கள் பூர்த்தி செய்துகொள்ளுங்கள்'' என்று ஸ்வரூபானந்தருக்கு எழுதினர் சுவாமிஜி.

காசியில் சுவாமிஜியிடம் பக்திகொண்ட பல இளைஞர்கள் ஒன்றுசேர்ந்து பிணியுற்ற யாத்திரீகர்களுக்கும், அநாதைகளுக்கும் சேவை புரிந்தனர். அவர்களின் பணியை சுவாமிஜி மிகவும் மெச்சினர்.

காசியில் சாதுக்களின் சங்கமும், ஆலயங்கள் தரிசனமும், கங்கா ஸ்நானமும் சுவாமிஜிக்கு ஆத்மசாம்ராஜ்யத்தில் வசிப்பதே போன்ற ஆனந்தத்தை அளித்தது. காசியின் வறட்சியான சூழலில் அவரது ஆஸ்துமாவும்கூடக் கட்டுப்பட்டாற்போலத் தோன்றியது. எனினும் சுவாமிஜி பேலூருக்குத் திரும்பிவிட்டார்.

1902-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நிவேதிதைக்கு இப்படி எழுதினர்: ''உனக்கு எல்லாச் சக்திகளும் சித்திக்குமாக! ஸ்ரீமாதாவே உனது கைகளும், கருத்துமாக இருக்கட்டும்! யாரும் தடுக்கவொண்ணுத அதிதமான சக்தியும், கூடுமானல் அதோடு எல்லையற்ற சாந்தியும் உனக்குக் கிட்டவேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்

''ஸ்ரீராமகிருஷ்ணரிடம் ஏதேனும் சத்தியம் இருக்குமாயின் அவர் உன்னைத் தன் தலைமையின்கிழ் எடுத்துக்கொள்ளட்டும் — என்னைச் செய்தாரே, அதுபோல! அல்ல அதைக்காட்டிலும் ஆயிரம் மடங்கு!''

Koviloor Digital Library

பரமஹம்ஸர் தமது சக்திகளை சுவாமிஜியிடம் அளித்துச் சென்றதுபோல, விவேகானந்த சுவாமிஜியும் தமது சக்திகளையெல்லாம் சீடர்களுக்கு அளித்துவிட்டுக் கிளம்புவதற்கு ஆயத்தமானுர் என்பது புரிகிறதல்லவா ?

மூவாயிரம் லட்சம் மக்கள்கொண்ட பாரத தேசத்திலே லட்சத்துக்கொரு சாதுவைக்கூடப் படைக்காமல் போகிறேமே என்று சுவாமிஜிக்கு அவ்வப்போது ஆதங்கம் ஏற்படும். ஆனுல் மனத்தைத் தேற்றிக்கொள்வார். நசிகேதனைப்போல் ஆர்வமுள்ள பத்துப் பன்னிரண்டு சீடர்கள் இருந்தாலும் உலக உத்தாரணத்துக்குப் போதும்; அப்படிப்பட்ட ஒரு சிலர் தம்மிடம் வராமல் போகவில்லை என்று ஆறுதல் அடைவார்.

ஒரு நாள் சரத் சந்திரரிடம், 'மகாவீரனுகிய ஹநுமந்தனே ஞானம், பக்தி, புத்தி, புலனடக்கம், சேவை எல்லாவற்றுக்கும் லட்சியம்' என்பதை விளக்கினுர் சுவாமிஜி. விளக்கியபடியே மாடியிலிருந்து இறங்கி, முன்வாயிலில் மாமரத்தடியேபோட்டிருந்த கட்டிலில் வந்து அமர்ந்துகொண்டார். அவரது கண்கள் பள பளத்தன. உடல் முழுதும் ஆத்மிக சக்தி ஜ்வலித்தது.

''பிரம்மத்தை நீ எங்கே தேடுகிருய் ? எல்லாவற்றிலுமே அல்லவா அது உள்ளுறைகிறது ? இதோ இங்கே பிரத்தியட்சமாக பிரம்மம் இருக்கிறது. கண்ணில் தெரிகிற பிரம்மத்தைவிட்டு எதெதிலோ மனத்தைச் செலுத்துகிறுர்களே, வெட்கம் வெட்கம் ! இதோ உன் கண்முன்னுல் உள்ளங்கை நெல்லிக்கனியாக பிரம்மம் இருக்கிறது. உனக்குத் தெரியவில்லை ? இங்கே — இங்கே — இங்கேயே பிரம்மம் இருக்கிறது.''

உணர்ச்சியின் உன்னத சிகரத்திலிருந்தபடி பத்துகோடி வோல்ட் மின்சாரச் சுமை ஏறினுற்போன்ற வார்த்தைகளை வெளியிட்டார் சுவாமிஜி. அந்த மின்சாரத்தின் அழுத்தத்தில் அந்தச் சூழல் முழுவதும் பிரம்மஞானம் பாய்ந்தது. தினப்படி அலுவல்களில் ஈடுபட்டிருந்த சந்நியாசிகளும் பிரம்மசாரிகளும் அப்படியே ஸ்தம்பித்துப்போய்விட்டார்கள். தியான சமாதியில் ஆழ்ந்துவிட்டார்கள் ! பெரிய விளக்குமாற்ருல் வராந்தாவைப் பெருக்கிக்கொண்டிருந்த தோட்டியின் கையிலிருந்து விளக்குமாறு விழுந்தது. கங்கையில் ஸ்நானம் செய்துவிட்டு, பூஜை புரிவதற்காக ஆலயப் படிகளில் ஏறிக்கொண்டிருந்த பிரேமானந்தர், படியேறும் நிலையிலேயே பரவசமாகிச் சிலையாக நின்ருர்.

கால்மணி நேரத்துக்கு பேலூர் மடத்தின் அந்தப் பகுதியிலே யாரும் இந்த உலகில் இருக்கவில்லை. அவர்களை இந்த உலகுக்கு சுவாமிஜியேதான் மீட்டுவந்தார். பிரேமானந்தரைப் பார்த்து,

Koviloor Digital Library

''இப்போது பூஜைக்குப் போ'' என்று அவர் பிறப்பித்த உத்தரவுதான் மோன அலைகளைக் கலைத்து மற்றவருக்குச் சுய உணர்வை ஊட்டியது.

சுவாமி விவேகானந்தர் எய்தியிருந்த சத்திய சாக்ஷாத்காரத் துக்கு இந்த ஒரு சம்பவம் போதும்! இப்படியும் ஒரு சக்தி உண்டா என்று நமக்கு வியப்பாக இருக்கிறதல்லவா?

சீடர் ஒருவர் சுவாமிஜியிடம் ஒரு நாள் பல மதத்தினரையும் ஒற்றுமைப்படுத்துவது மிகவும் சிரமமான காரியம் என்று கூறினர்.

அப்போது சுவாமிஜி தாம் யுக புருஷர் என்பதைச் சொல் லாமல் சொன்னர்:

''ஏற்கனவே இருப்பதை அழிப்பதல்ல என் பணி. அதனைப் புனர் நிர்மாணிப்பதே என் பணி. உலகநாடுகளின் சரித்திரங் களைப் படித்துப்பார். ஒரு குறிப்பிட்ட சமயத்தில் ஒரு மகா புருஷன் அதன் தேசிய வாழ்வின் கேந்திரமாக விளங்குவான். அவனது கருத்துக்கள் மக்கள் யாவர்மீதும் சக்தியுடன் பாய் கின்றன. நீங்கள் யாவரும் புத்திசாலிப் பிள்ளைகள். என் சீடர் கள் என்று சொல்லிக்கொள்கிறீர்கள். நீங்கள் காரியத்தில் என்ன செய்திருக்கிறீர்கள் என்று சொல்லுங்கள். உங்களுடைய ஒரு வாழ்வை மற்ற பலர் வாழ்வுக்காக நீங்கள் அளிக்கக்கூடாதா? வேதாந்தம் படிப்பதும், தியானம் பயில்வதும், இன்னேரன்ன பிறவும் அடுத்த ஜன்மத்தில் வைத்துக்கொள்ளக்கூடாதா? பிற ருக்குச் சேவை செய்வதிலேயே இந்த உடல் அழியட்டும். அப்படி யாகுமானுல் நீங்கள் என்னிடம் வந்தது வீண்போகவில்லை என்று அறிந்துகொள்வேன்'' என்ருர்.

* * *

சுவாமிஜி வாரணுசியிலிருந்து திரும்பிய சிலநாட்களில் ஸ்ரீராமகிருஷ்ண ஜயந்தி நிகழ்ந்தது.

அன்று அவரால் அறையைவிட்டு வெளிவரவே முடியாமல் பலவீனமாயிருந்தது. வடிந்திருந்த வீக்கம் இப்போது மீண்டும் கண்டு அவரது பாதங்கள் உப்பிக்கிடந்தன.

விழாவை இருள் கப்பிக்கொண்டிருந்தது. மடத்தினருக்கு இனம்தெரியாத திகிலாக இருந்தது. வைபவத்தில் கலந்து கொள்ள வந்தவர்களுக்கு சுவாமிஜியைக் காணமுடியாததும், அவரது இன்னுரையைக் கேட்க முடியாததும் பெருத்த ஏமாற்ற மாயிற்று. சுவாமிஜி அவர்களை முன்னிட்டு தரிசனம் தர எவ் வளவோ விரும்பியும் உடல் அதற்குச் சிறிதும் இடம் கொடுப்ப தாக இல்லை. சுவாமிஜிக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்த சீடர் கண்கலங்கிவிட்டார்.

Koviloor Digital Library

"வருந்திப் பயனென்ன, என் புதல்வா ! எப்போது இந்த உடல் பிறப்பு எடுத்ததோ அப்போது சாகவும் வேண்டியது தானே ? உங்களில் என் கருத்துக்களைச் சிறிதேனும் செலுத்தி யிருந்தேனாயினும் நான் வாழ்ந்தது வியர்த்தமல்ல என்று மகிழு வேன் !'' என்றார் சுவாமிஜி.

பாலியம், யௌவனம், விருத்தாப்பியம்போல் சாவும் உட லுக்கு உரிய ஒன்றே தவிர ஆத்மாவுக்கு உரியதல்ல — என்ற கீதோபதேசம் சுவாமிஜியின் உதிரத்தில் உயிர்வாழ்ந்த நாட்கள் அவை.

ஸங்கீர்த்தன கோஷ்டியானது பூஜா மண்டபத்திலிருந்து வெளியேறிவந்தது. ஆவல் மீதூற சுவாமிஜி படுக்கையிலிருந்து எழுந்து ஊர்ந்தபடியே வந்து ஜன்னல் கம்பியில் சாய்ந்துகொண்டு கீழே பார்த்தார். கருணைபொழிகிற அந்த முகத்தைக் கீழே இருந்து கண்டவர்கள் தெய்வமே தங்களை நோக்குவதாகத்தான் எண்ணினர்.

சிறிது போதுக்குமேல் நிற்கமுடியாமல் சுவாமிஜி தமது படுக்கையில் வந்து சாய்ந்தார். பிறகு தமது சீடர்களுக்குமட்டும் மெல்லிய குரலில் அவதாரங்களைப்பற்றி எடுத்துரைத்தார்.

''ஆத்மாவை அநுபவித்தவன் மஹாசக்தியின் தேக்கமாகி றான். அவனை மையமாகக்கொண்டு ஒரு குறிப்பிட்ட எல்லை வரையில் ஆத்ம சக்தி பாய்கிறது. அந்த வட்டத்துக்குள் வருபவர் யாவரும் அவனது கருத்துக்களில் ஊறிப்போகிறார்கள். அதிகமாக சாதனை எதுவும் பயிலாமலே அவர்கள் அவனது அற்புதமான ஆத்மிகச் செல்வத்தைப் பெறுகிறார்கள். இதுதான் கருணை என்பது.

''ஸ்ரீராமகிருஷ்ணரைக் காணக் கிடைத்தவர்கள் பாக்கிய சாலிகள். உங்கள் எல்லாருக்குமே அவரது தரிசனம் கிடைக்கும். நீங்கள் இங்கு வந்துவிட்டபடியால் அவருக்கு அருகில் வந்து விட்டீர்கள். ஸ்ரீராமகிருஷ்ணராக இவ்வுலகில் வந்தது யார் என்பதை அறிந்தவர் யாருமில்லை. அவரது வெகு சிறந்த பக்தர்களும்கூட இவ்விஷயமாக ஊகிப்பதற்கில்லை. சிலருக்கு மட்டுமே ஓர் இம்மி தெரியும். எல்லாருமே அதை காலப்போக்கில் உணர்வார்கள்'' என்றார்.

* * *

குருபாயிக்களின் வேண்டுகோளுக்கிணங்கி, கவிராஜ மஹா நந்த ஸென்குப்தா என்ற ஆயுர்வேத நிபுணரிடம் வைத்தியம் செய்துகொள்ள சுவாமிஜி இணங்கினார். அவர் விதித்த மிகக் கடுமையான பத்தியங்களையும் வழுவாது பின்பற்றினார்.

Koviloor Digital Library

உப்பு சேர்த்துக்கொள்ளக்கூடாது என்பதோடு நீரே பருகக் கூடாது என்று வைத்தியர் விதித்தார். எவ்வளவுதான் நாவுலர்ந்த போதிலும் சுவாமிஜி இதற்குக் கட்டுப்பட்டதற்குக் காரணம் அவருக்குத் தம் சீடர்கள்பாலிருந்த பரிவுமட்டுமே என்று சொல்லி விடமுடியாது. தமது உடலின்மேல் உள்ளத்துக்கு உள்ள ஆதிக் கத்தையும் பரிட்சை பார்க்க இதை ஒரு வாய்ப்பாக அவர் கருதினர் எனலாம்.

உலகுக்கெல்லாம் அமிருததாரை பொழிந்தவர், தொண்டை வறண்டபோதிலும் ஒரு துளி நீர்கூடப் பருகமுடியாத நிலையைக் கண்டு துக்கித்த ஒருவர், ''ஐயோ, இப்படியும் ஓர் அவஸ் தையா?'' என்று அவரிடம் கேட்டார்.

''அவஸ்தையாவது? என் குருபாயிக்கள் இட்ட கட்டளைக் குப் பூரணமாக அடிபணிந்து நடக்கிறேன். அவர்களுக்கு என் மீதுள்ள அன்பு உங்களுக்குத் தெரியுமா?'' என்ருர் சுவாமிஜி.

''மணிக்கு ஒருமுறை நீர் பருகும் பழக்கமுள்ள நீங்கள் இந்தக் கடுவேனிற்காலத்தில் எப்படித் தண்ணீரை நாவில் தெளிக் காமல் இருக்கிறீர்கள்?'' என்று கேட்டார் ஒரு சீடர்.

சுவாமிஜி சொன்ஞர்: ''ஆயுர்வேத சிகித்ஸைக்கு இணங்கிய நான் அதற்குக் கட்டுப்படுவதை ஒரு பிரதிக்ஞையாகவே எடுத்துக் கொண்டேன். இப்போது நான் விரும்பினுல்கூட என் தொண் டையில் நீர் இறங்க மறுக்கிறது. இருபத்தியோரு நாட்களுக்கு நான் நீர் பருகாமலிருந்தேன். பிறகு வாய்கொப்புளிப்பதற்காக நீரை வார்த்துக்கொண்டபோதுகூட தொண்டையின் தசை நார் கள் தாமாகவே இறுகிக்கொண்டு ஒரு துளி நீரும் அன்னக்குழலில் இறங்காமல் செய்தன. உடம்பு என்பது மனத்தின் பணியாள் தானே?''

பரமஹம்ஸரின் உடல் அணுக்கள் உள்ளத்துக்குப் பணிந்து பணத்தின் ஸ்பரிசம் பட்டாலும் பற்றி எரிந்தது நினைவு வருகிற தல்லவா?

சில நாட்களுக்குப்பின் சுவாமிஜி தமது சீடர்களிடம் ''இப்போது எனக்கு நீரின் நினைவுகூட ஏற்படுவதில்லை'' என்ருர்.

கடுமையான பத்தியம், மிகவும் அல்பமான ஆகாரம், தூக்க மின்மை இவற்றிடையேயும் சுவாமிஜியின் முகத்தெளிவும், கண் களின் பிரகாசமும் குன்றவில்லை. அவரது அறிவு எப்போதும் போல் தீட்சண்யமாகவே இருந்தது.

'என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிக்கா' என்ற அறிவுக் களஞ்சியத்தின் இருபத்தைந்து பாகங்களை சுவாமிஜியின் அறையில் கண்ட சரத் சந்திரர், ''ஒரு வாழ்நாள் போதுமோ இவற்றைப் படித்து முடிக்க?'' என்று கேட்டார்.

Koviloor Digital Library

''நீ என்ன சொல்கிறுய் ? நான் இந்தச் சிறிது காலத்துக்குள் பத்துப் பகுதிகளேப் படித்துவிட்டேன். படித்த அவ்வளவையும் என்ருல் கூறமுடியும்'' என்ருர் சுவாமிஜி.

சரத்சந்திரருக்கு ஒரு குதூகலம் ஏற்பட்டது.

அந்தப் பத்துப் பகுதிகளேயும் எடுத்துவைத்துக்கொண்டு ஒவ்வொரு புத்தகத்திலிருந்தும் சுவாமிஜியைக் கேள்விகள் கேட்டார். அவ்வளவுக்கும் — நுணுக்கமான, சிக்கலான விஷயங்கள் உள்பட — சுவாமிஜி அற்புதமாக விடைபகர்ந்தார் !

பிரம்மசரியத்தின் சக்தி அது. வீரியமானது அறிவுமயமாகப் பரிணமித்து விடுகிறது !

பிரம்மசரியத்தைப்பற்றி சரத்சந்திரருக்கு விளக்கலானுர் சுவாமிஜி.

இச்சமயத்தில் அங்குவந்த பிரம்மானந்த சுவாமி சரத்சந்திர ரிடம், ''உனக்கு கொஞ்சமேனும் ஈவு இரக்கம் இருக்கிறதா ? சுவாமிஜியை எவ்வளவு பேச வைத்துவிட்டாய் ! அதோடு சிக்கல்களில் அவர் சிந்தனேயைச் செலுத்துகிருயே. அவருடைய சிகித்ஸை முறையை மறந்துவிட்டாயா ?'' என்று சினந்து கொண்டார்.

உடனே சுவாமிஜி, ''உங்கள் சிகித்ஸை இங்கு யாருக்கு வேண்டிக் கிடந்தது ! இவர்கள் என் மைந்தர்கள். எனவே இவர்களுக்கு உபதேசிப்பதில் என் உடலம் அழிந்துபோனுலும் எனக்கு அது ஒரு பொருட்டு இல்லே'' என்ருர்.

இந்தக் கருணே காரணமாகத்தான் கடைசிவரையில் தம்மைக் காணவருபவர்களுக்குத் தாம் தரிசனமளித்து அவர்களுடன் உரை யாடி வந்தார் சுவாமிஜி.

* * *

1902-ம் ஆண்டு மே மாதம் பிறந்தது.

ஒவ்வொரு விஞடியும் பொருள் நிறைந்ததாகக் கழிந்தது.

ஆனுல் அந்தப் பொருளேத்தான் உடனிருந்தவர் ஒருவரும் புரிந்துகொள்ளவில்லே.

பொருளே நாட்களுக்கு ஊட்டிக்கொண்டிருந்த சுவாமிஜி சிரித்துச் சிரித்துப் பேசியே அந்தப் பொருளே மூடிமறைத்தும் வந்தார். இந்த நாட்களில் அவரது நகைச்சுவை மிகவும் அதிக மாக இருந்தது. தமது செல்லப் பிராணிகளுடன் விளேயாடுவதும், தோட்டக்கலேயில் 'பரிட்சை'கள் செய்து குதூகலிப்பதும் அதிக மாயின. உடல்நிலேகூட அபிவிருத்தி அடைவதாகத் தோன்றிற்று. இச்சமயத்தில் ஏதோ ஓர் ஒளிப்பிம்பத்தின் சாயை அவர் என்றே தோன்றியது என்கிருள் நிவேதிதை.

Koviloor Digital Library

மீளாத பயணத்துக்குத் தயார் செய்துகொண்டிருந்தார் சுவாமிஜி.

தமது சந்நியாசிச் சீடர்கள் யாவருக்கும் கடிதம் எழுதித் தம்மிடம் வரவழைத்துக்கொண்டார் சுவாமிஜி. கடல்கடந்து வாழ்ந்த சிஷ்யர்கள்மட்டும் சுவாமிஜியை வந்து காணமுடியவில்லை. சிறிது காலத்துக்கேனும் உள்நாட்டிலிருந்த தமது சீடர்களை உடன்வைத்துக்கொண்டிருந்துவிட்டு அனுப்பிவைத்தார் சுவாமிஜி. அவர் விடை கொடுத்தபோது தங்களை அவர் எதற்கு வரவழைத்தார் என்று அவர்கள் அறிந்திருப்பார்களா? அவர் அழைப்பை ஏற்கமுடியாத சீடர்கள் தங்களுக்கு எத்துணைப் பெரிய விசனம் காத்துக்கிடந்தது என்று அறிந்திருப்பார்களா?

இப்போதெல்லாம் சுவாமிஜி மடத்தின் விவகாரங்களில்கூட ஈடுபடாமல் ஒதுங்கி நிற்கலானார். ஆம், எப்படியும் மற்றவர்களே அதனை நடத்தவேண்டிய தருணம் நெருங்கிக்கொண்டிருக்கிறதே!' ''எப்போதும் சிஷ்யர்களுடன் இருப்பதால் ஒரு குரு அவர்களை எப்படிக் குட்டிசுவராக்கிவிடுகிறார்! சிஷ்யன் பயிற்சி பெற்றுவிட்டால் அதன்பின் குரு விலகவேண்டியதுதான். இல்லாவிடில் அவர்கள் வளரமுடியாது'' என்பார் சுவாமிஜி.

இப்படி அவர் பேசும்போது சீடர்களுக்கு நெஞ்சை வலிக்கும். அவர் இல்லாமலா? அப்படியும் ஒரு நிலைமை ஏற்படுமா?

வேலை என்பது சுவாமிஜியைவிட்டு விலகிவிட்டது. எழுந்திருக்காத தூக்கம் வேணுமென்று விரும்பினார் அவர். தியானமயமானார். அம்பாளையும் ஆசாரியனையுமே அனவரதமும் சிந்தித்து வந்தார். இப்படி அவர் தீவிரமாகச் சிந்திப்பது சரியல்லவே என்று மடத்தினர் பயந்தனர். குருமஹராஜ் சொன்னாற்போல் சுவாமிஜி தாம் யார் என்று அறிந்துவிடுவாரோ? அறிந்து அதுவாகவே ஆகிவிடுவாரோ?

ஒரு நாள் சுவாமிஜியுடன் தக்ஷிணேசுவரத்து நாட்களின் நினைவுகளைக் கொட்டி அளந்துகொண்டிருந்தார்கள். யாரோ ஒருவர் சட்டென்று, ''சுவாமிஜி, தாங்கள் யார் என்பதைத் தெரிந்துகொண்டு விட்டீர்களா?'' என்று கேட்டார். சுவாமிஜி பளிச்சென்று, 'ஓ, இப்போது தெரிந்துகொண்டுவிட்டேன்' என்றார். கனத்த மேகம்போல் அங்கு மௌனம் சூழ்ந்தது.

ஜூன் மாதம் ஒவ்வொரு நாளாகச் சுமந்து தள்ளிக்கொண்டிருந்தது. மாதக்கடைசியில் ஒரு நாள் சுவாமிஜி சுத்தானந்தரைக் கூப்பிட்டு, ''பஞ்சாங்கம் கொண்டுவா'' என்றார்.

அவர் அப்படியே செய்தார்.

சுவாமிஜி ஒவ்வொரு நாளாகப் பார்த்துச் சிந்திக்கலானார்.

Koviloor Digital Library

எதற்கு நாள் பார்த்தார் என்று அப்போது யார் அறிந்தார்கள் ?

தக்ஷிணாயனம் பிறந்துவிடக்கூடாது என்று நாள் பார்த்திருக்கிறார்; ஜகன்மாதாவுக்கு உகந்த சுக்கிரவாரமாகவும் பார்த்துக்கொண்டுவிட்டார் ! அந்த நாள் அவரது பெருமையைப் பாருக்குப் பரப்பிய அமெரிக்காவின் விடுதலை நாளாகவும் அமைந்ததில் ஒரு பொருத்தமுண்டல்லவா ?

ஜூன் மாதம் இருபத்தொன்பதாம் தேதி, ஞாயிற்றுக் கிழமையன்று சுவாமிஜி ஒரு சிஷ்யரிடம், ''கர்மம் செய்வது என்னுடைய பலவீனம். அது முடிந்துவிடுமே என்று எண்ணும் போதுதான் நான் சிதறிப்போகிறேன்'' என்றார்.

அப்படியிருந்தும் ஏன் அவர் கர்மத்தை முடிக்கத் திருஉளம் கொண்டார் ? நாற்பதாண்டு நிறையுமுன் அப்படி என்ன அவருக்கு அவசரம் வந்துவிட்டது ?

ஜூலை முதல் தேதி சுவாமி பிரேமானந்தருடன் உலவிக் கொண்டிருந்த ஸ்ரீமத் விவேகானந்தர் கங்கைக்கரையில் ஓரிடத்தை அவருக்குச் சுட்டிக்காட்டினார். ''இந்த உடல் அங்கு தகனமாகட்டும்'' என்று அவர் கூறியது பிரேமானந்தருக்குத் தம் மீதே அனலை வாரிக் கொட்டுவதுபோலிருந்தது. இன்று அந்த இடத்தில்தான் சுவாமிஜியின் ஆலயம் நிற்கிறது.

ஜூலை இரண்டாம் தேதி, புதன்கிழமையன்று சீடர் ஒருவரிடம் சுவாமிஜி சொன்னார்: ''மகத்தான தபஸும் தியானமும் என்னை ஆட்கொண்டுவிட்டன. மரணத்துக்கு நான் ஆயத்தமாகி வருகிறேன்.''

லௌகிகமான எந்த விஷயத்தையும் சுவாமிஜியினால் கேட்கக் கூட முடியவில்லை. மழையே இல்லையே என்று எல்லாரும் அவரிடம் குறைப்பட்டுக் கொண்டார்கள். அவரோ, ''உங்கள் கவலை நியாயமானதுதான். ஆனால் இவ்விஷயங்களில் என்னால் பிரவேசிக்க முடியவில்லை. நான் மரணத்துக்குள் முழுகிக்கொண்டிருக்கிறேன்'' என்றார்.

அன்றைக்கு ஏகாதசி. சுவாமிஜி விரதமிருந்தார்.

சகோதரி நிவேதிதை தனது பள்ளி விஷயமாக அவரிடம் ஏதோ ஆலோசனை கேட்கவந்தாள். ''குருபாயிக்களைக் கேட்டுக் கொள்'' என்று கூறிய சுவாமிஜி, தாம் உபவாஸமிருந்த போதிலும் அவளை உண்ணச்சொன்னார். அதோடு தாமே பரிமாறவும் செய்தார். வேகவைத்த பலா விதைகளையும், உருளைக் கிழங்கையும், சாதத்தையும் குளிர்ந்த பாலையும் தமது கரத்தாலேயே நிவேதிதைக்கு அளித்தார்.

Koviloor Digital Library

அவள் உண்டு முடிந்ததும் அவரே அவள் கைகழுவுவதற்கு நீர் வார்த்தார்; அவளது கையைத் துடைத்துக்கொள்ளத் துவாலையை நீட்டினர்.

ராஜஸூய யாகத்தில் வாசுதேவன் விருந்தினரின் பாதங்களைக் கழுவிய எளிமையின் பெருமை நினைவு வருகிறதல்லவா ?

''சுவாமிஜி, நான் தங்களுக்குச் செய்யவேண்டிய உபசரணையைத் தாங்கள் எனக்குச் செய்கிறீர்களே !'' என்ருள் நிவேதிதை.

''ஏன், இயேசுநாதன் தனது சீடர்களின் பாதங்களையும் கழுவவில்லையா ?'' என்று கேட்டார் சுவாமிஜி.

'ஆனல் ஆனல் அது அவர் இறுதியில் செய்த காரியமல்லவா ?' என்ற வார்த்தைகள் நிவேதிதையின் தொண்டையில் முட்டித் துயரத்தில் கரைந்தன.

அந்த நாளும் வந்துவிட்டது !

1902-ம் ஆண்டு ஜூலை மாதம் நாலாந்தேதி !

புண்ணியம் நிறைந்த வெள்ளிக்கிழமை.

வழக்கத்தைவிட முன்னதாகவே எழுந்திருந்தார் சுவாமிஜி.

சிறிது தேநீர் உட்கொண்டுவிட்டு பூஜாக்கிருகத்துக்குச் சென்ருர்.

புழுக்கமான இடத்தில் தியானம் செய்து வழக்கமில்லாத சுவாமிஜி அன்று ஏனே பூஜாக்கிருகத்தின் கதவுகளை எல்லாம் அடைக்கச்சொல்லி ஏகாந்த தியானத்தில் அமர்ந்தார்.

வழக்கத்தைவிட வெகு நீண்டகாலம் தியான சமாதியில் ஆழ்ந்திருந்தார் சுவாமிஜி.

தியானத்தைவிடத் தியாகம் பெரிது எனக்கருதியிருந்த நாட்களெல்லாம் முடிந்து போகப்போகும் தினமல்லவா அது ?

அன்று தியானத்தில் அவர் என்னவெல்லாம் கண்டாரோ, யார் அறியமுடியும் ? தேவியையும், குருநாதரையும் சம்மதம் கேட்டிருப்பாரோ ?

தேவியின் நினைவாகவேதான் அவர் தியானத்திலிருந்து கலைந்த பின்னும் இருந்தார்.

பூஜாக்கிருகத்தின் படிகளில் இறங்கும்போது அவரையும் அறியாமல் அம்பிகையின்மீது அமைந்த கமலாகாந்தரின் ஓர் அற்புதமான பாடலை அவரது அமுதமான குரல் இசைத்தது.

காளி என் அன்னை கரு நிறத்தவளா?
மனக் கமலங்களை மலர்ந்திடச் செய்யும்
திவ்விய ஒளியாய்த் திகழும் திகம்பரி
கரு நிறத்தாள் போல் காணினும் மெய்யாய்
காளி என் அன்னை கரு நிறம் தானு?

Koviloor Digital Library

கரியவள் என்றே காசினி கூறினும்
நம்புவதில்லை இந் நாயேன் நெஞ்சகம்
வெண்மையாய் விளங்கும் விழுப்பொருள் அவளே.
செம்மையாய், நீலமாய் சொக்கத் தங்கமாய்
பலப்பல நிறத்தில் பலவாய் வருவாய்.

காளி என் அன்னை கரு நிறத்தவளா?

காளி என் அன்னை யாரென அறியேன்
ஆயுள் எல்லாம் இதை ஓர்ந்து அயர்ந்தேன்.
புருஷன் அவளே; பிரகிருதி அவளே
பரவெளியான பராசக்தி அவளே
சிற்றறிவால் இதைச் சிந்தனை செய்தால்
குழம்புகிறான் ஏழை கமலாகாந்தன்.

ஒரே ஒளி ஏழுவண்ணங்களும் ஆவதுபோல் ஒரே பொருள் தான் எல்லாமாகியிருக்கின்றன. எட்ட இருந்து காணும் ஆகாய நீலமும், கடல் நீலமும் அண்மையை அடைந்தால் நிறமற்றுப் போவதுபோல் காளியின் நீலமும் அவளை அண்டினவருக்கு நிற மற்ற நிர்க்குணமாகும். வண்ணமற்ற பரம்பொருளே கருப் பாகும்போது காளியாகிறது; வெண்மையாகும்போது கௌரி யாகிறது; செம்மையாகும்போது அருணையாகிறது; மஞ்சளாகும் போது ஹேமாவதியாகிறது.

அபிராமி பட்டரும் பாடினார்:

குயிலாயிருக்கும் கடம் பாடவியிடைக் கோலவியன்
மயிலாயிருக்கும் இமயாசலத்திடை வந்துதித்த
வெயிலாயிருக்கும் விசும்பிற் கமலத்தின் மீதன்னமாம்
கயிலாயருக் கன்றிமவான் அளித்த கணங்குழையே

அம்பிகை என்ற ஒரு தெய்வத்துக்கே இப்படிப் பல வண் ணங்களிருப்பது, அவளே பிரம்மவித்யை; அவளே 'கடவுளர் தெய்வம்' என்பதைக் குறிக்கிறதோ?

சிற்றறிவால் சிந்தனை செய்தால் காளிதத்துவம் குழப்பத் தான் செய்யும். ஆனால் அதைத் தூக்கி எறிந்துவிட்டு அநுப விக்கத் தொடங்கினால் குழப்பமெல்லாம் தெளியும். அப்படித் தெளிந்துவிட்டார் சுவாமிஜி; அம்பிகையைத் தெரிந்துவிட்டார். காளியைப் பயங்கரமாகக் கண்டு வழிபடத் தம்மை பழக்கிக் கொண்டவர் இன்று பயங்கரமேதான் ஆனந்தமும், கருப்பேதான் வெளுப்பும் என்று புரிந்துகொண்டுவிட்டார். ஒளிந்து விளையாடும்

Koviloor Digital Library

அன்னையைக் கண்டுபிடித்துவிட்ட பெருமையுடன் இன்று கானம் செய்தார்.

பேலூர் மடம் அந்தத் தீங்குரலைக் கேட்டது அதுவே கடைசி முறை.

தம்மையறியாமலே பாடியதுபோல், பாடி முடிந்ததும் தம்மையறியாமலே பேசிக்கொண்டார்: ''காளியைமட்டும்தானு? இந்த விவேகானந்தனையும் யார் புரிந்துகொண்டார்கள்? அவன் என்ன செய்தான் என்று யார் அறிந்தார்கள்? இன்னொரு விவேகானந்தன் இருந்தால் அவனுல்தான் புரிந்துகொள்ளமுடியும். இன்னும் ஒரு விவேகானந்தன் என்ன? எத்தனையோ விவேகானந்தர்கள் காலவெள்ளத்தில் தோன்றத்தான் போகிறுர்கள்!''

பலகாலமாகத் தனித்தே உண்டுவந்த சுவாமிஜி அன்று குருபாயிக்களுடனும், மற்றச் சீடர்களுடனுமாகச் சேர்ந்து போஜனம்செய்து களித்தார். பலகாலத்துக்குப்பின் அன்றைக்கு மிகவும் ரசித்துச் சாப்பிட்டார். அநுபவிக்கவேண்டியதையெல்லாம் அநுபவித்துத் தீர்த்தாகவேண்டுமல்லவா? ''இன்றுபோல் நான் என்றும் இருந்ததில்லை'' என்ருர் சுவாமிஜி சுவைத்து உண்டபடியே.

சுத்தானந்தரிடம் சுக்லயஜுர்வேத புத்தகம் கொண்டுவரும்படி கூறினுர் சுவாமிஜி. அவர் மடத்தின் நூல் நிலையத்திலிருந்து அந்தப் புத்தகத்தை எடுத்துவந்தார். வாஜஸநேயி ஸம்ஹிதையில் உள்ள ஸுஷீம்ன: ஸூர்யாச்மி: என்ற மந்திரத்தையும், அதற்கான விளக்க உரையையும் படிக்கச் சொன்னுர் சுவாமிஜி.

ஸுஷீம்ண: ஸூர்ய ரச்மி: சந்த்ரமா
கந்தர்வஸ்தஸ்ய நக்ஷத் ராண்யப் ஸரஸோ
பேகுரயோ நாம!
ஸ ந இதம் ப்ரஹ்ம க்ஷத்ரம் பாது தஸ்மை
ஸ்வாஹா வாட் தாப்ய: ஸ்வாஹா

''ஸுஷும்நையாக கந்தர்வ வடிவில் திகழ்பவனும், யக்ஞம் செய்பவருக்கு மேலான இன்பத்தைத் தருபவனும், கதிரவனின் கதிர்போல் கிரணம்கொண்டவனுமான சந்திரன் ஞானியரையும் வீரரையும் காப்பானுக! அவனுக்கு ஆஹுதிகள் அளிக்கிறேம். ஒளிதரும் தாராகணங்களை அப்ஸரஸுகளாகக் கொண்டவன் அவன். அவற்றுக்கும் எங்கள் ஆஹுதிகளை அளிக்கிறேம்'' — என்பது இம்மந்திரத்துக்கு மஹீதரரின் வியாக்கியானம். இதிலுள்ள 'ஸுஷும்ன' என்ற பதம் பிறகு தந்திர சாஸ்திரங்களில்

Koviloor Digital Library

காணும் சுழுமுனை நாடியையே குறிப்பதாகத் தாம் கருதுவதைத் தெரிவித்தார். ''வியாக்யாதா இப்படி அபிப்ராயப்படவில்லை. ஆனாலும் என் சிடர்களாகிய நீங்கள் மந்திரங்களைக்குறித்துச் சுயமாகச் சிந்தித்துப் புது விளக்கங்களையும் தரலாம்'' என்றார்.

''சுழுமுனை கபாலமும் காட்டி'' என்று அவ்வை பாடியிருக்கிறாள். சிரஸிலுள்ள பிரம்மரந்திரத்தின் வழியாகஆத்மாவை வெளியிட எண்ணினாரோ சுவாமிஜி? வேதோக்தமாகக் கர்மம் செய்யவேண்டுமென்ற விதிக்கிணங்க உயிரை உகுப்பதற்கும் வேதத்தில் ஆதாரம்காண விரும்பினாரோ? தந்திர சாதகர்கள் சிரஸில்தான் தேவி சந்திர ரூபமாகக் காணப்படுகிறாள் என்று கூறியிருப்பதையும் இங்கு ஒப்பு நோக்கலாம்.

* * *

பிற்பகல் ஒரு மணி. சுவாமிஜி பிரம்மசாரிகளுக்கு லகு கௌமுதி என்ற நூலைப்பின்பற்றி சம்ஸ்கிருத வியாகரணம் போதித்தார். மூன்று மணிநேரம் நெருடலான பொருளை அவர் போதித்தும் சிறிதுகூட அலுப்புத்தட்டவில்லை என்று எழுதுகிறார் சுவாமிஜி நடத்திய அக்கடைசிப் பாடத்தைக்கேட்ட ஒரு பாக்கிய சாலி. வேடிக்கைக் கதைகள், விகடத் துணுக்குகள் இவற்றின் மூலமே சூத்திரங்களை நினைவுகொள்ளப் புதுப் புது வழிகளைச் சொல்லிக்கொடுத்தார் சுவாமிஜி. இதேவிதத்தில் தாம் தாசரதி ஸந்யால் என்ற கல்லூரி நண்பருக்கு ஒரே இரவில் ஆங்கில சரித்திரத்தைக் கற்பித்ததாகக் கூறினார்.

பாடம் முடிந்தபின் சிறிதே சோர்ந்து காணப்பட்டார் ஸ்ரீமத் விவேகானந்தர். காளிமாதா காலத்தை அளந்து போட்டுக் கொண்டேயிருந்தாள். ஒரு புனித வாழ்வுக்குக் கடைசி கஜக் கோலைப் போட்டுக்கொண்டிருந்தாள்.

சுவாமிஜி பிரேமானந்தருடன் உலாவப் புறப்பட்டார். இன்று உடலில் அசாதாரணமான தெம்பு இருந்ததுபோலும். மடத்தைத் தாண்டி பேலூர் கடைத்தெருவரையில் சென்றார். பலவிஷயங்களைப்பற்றிப் பேசினார். முக்கியமாக வேதத்தைப் பிரசாரம் செய்யவேண்டியது குறித்து நிறையச் சொன்னார். வேதத்துக்காக ஒரு கல்லூரி தொடங்கவேண்டும் என்ற தமது விருப்பத்தைப்பற்றியும் ஆர்வமுடன் குறிப்பிட்டார்.

''வேதத்தைப் பயிலுவதால் என்ன விசேஷ நலம் கிடைக்கும் சுவாமிஜி?'' என்று கேட்டார் பிரேமானந்தர்.

''மூடநம்பிக்கைகள் அழியும்'' என்றார் சுவாமிஜி பளிச் சென்று.

Koviloor Digital Library

மடத்துக்குத் திரும்பியபின் சாதுக்களிடம் சிறிதுபோது பேசிக்கொண்டிருந்தார். தேசங்கள் பல உன்னதமாக எழுந்ததையும் வீழ்ந்ததையும்பற்றிப் பேசினர். ''ஆனல் இந்தியா அமரத்துவம் பெற்றது. ஆண்டவனைத் தேடுவதிலேயே ஈடுபட்டால் இந்தியா என்றும் வாழும். ஆனல் அரசியலையும், சமூகச் சச்சரவுகளையும் தேடிப்போனல் இந்தியா செத்துவிடும்'' என்ருர்.

இதுதான் அவரது இறுதி போதனை.

மாலை என்ற மாலையைக் கையிலேந்தி இரவை எதிர்பார்த்து நின்றது உலகம். பேலூர் மடத்துப் பூஜாகிருகத்தில் மணிகள் ஒலித்தன. அந்த ஒலியில் விளக்கம்பெற்ற நிசப்தத்தில் கரைய விரும்பிய சுவாமிஜி தமதறைக்குச் சென்ருர். ''நான் கூப்பிடும் வரை யாரும் வரவேண்டாம்'' என்று கூறிவிட்டுக் கங்கையை நோக்கி அமர்ந்தார். தியானம் புரியலானர்.

உள்ளுக்குள்ளேயே புரண்டுகொண்டிருந்த கங்கை சமுத்திரத்தில் பூரணமாகக்கலந்து தன் உருவை இழக்கத் துடித்துக்கொண்டிருந்தது. கங்கா நதி அனவரதமும் கடலில் கலந்துகொண்டேதான் இருக்கிருள். அதேபோதில் உலகிலும் ஓடி மக்களுக்கு வளமை காட்டுகிருள்.

இப்படியே அம்பிகையை இடைவிடாது பற்றியபடியே உலக சேவையும் புரிந்தாயிற்று. இனி அம்பிகையைமட்டும் பற்றிக் கொள்ள வேண்டியதுதான்! எத்தனை எத்தனை அலைகளை வீசியாயிற்று! எத்தனை எத்தனை சுழல்களைச் சுழற்றியாயிற்று! சர்வேசுவரீ! போதும், போதும்!

ஏழு மணியிலிருந்து எட்டுமணிவரை நிஷ்டை புரிந்தார் சுவாமிஜி.

சீடர் ஒருவரைக் கூப்பிட்டார். ''எல்லாக் கதவுகளையும் திறந்துவிடு. என் தலைக்குக் கொஞ்சம் விசிறு'' என்ருர்!

உடம்புக்கு நோவுவந்து தீர்ந்துபோகும் சமயத்தில் வேர்த்துவிடும். உடம்பையே நோவாகக் கருதிய ஞானிக்கும் அந்த நோவு முடியப்போகிறது என்பதற்காகவே அப்படி வேர்த்துவிட்டதோ?

சுவாமிஜி தமது படுக்கையில் மிகவும் நிதானமாகச் சாய்ந்தார்.

சிறிது நேரத்துக்குப்பின், ''விசிறியது போதுமப்பா! என் காலைக் கொஞ்சம் தேய்த்துவிடுவாயா?'' என்ருர் சுவாமிஜி.

சீடர் அப்படியே செய்தார்.

ஒரே அமைதி.

அவர் உறங்குவதாகவே எண்ணினர் சீடர்.

Koviloor Digital Library

ஒன்பது மணிக்கு சுவாமிஜியின் கைகள் சிறிதே நடுங்கின. ஆழ்ந்த பெருமூச்சுவிட்டார் அவர்.

ஓரிரு நிமிஷங்கள் சென்றபின் இந்த மண்ணுலகத்தில் வீசும் காற்றைக் கடைசி முறையாக உள்ளுக்கிழுத்துக் கொண்டார்.

சென்னையிலே ஸ்ரீராமகிருஷ்ணானந்த சுவாமிகள் அப்போது ஜபம் புரிந்துகொண்டிருந்தார். ''அன்பா! நான் போய் வருகிறேன்'' என்ற விவேகானந்தரின் இனிய குரல் அவரது தியானத்தைக் கலைத்தது.

ஆம் சுவாமிஜி உள்ளுக்கு இழுத்த அந்த நீண்ட மூச்சு வெளியேகும்போது

தெய்வ மனிதரின் திவ்விய உயிர் உடலிலிருந்து வெளியே ஏகிவிட்டது.

முப்பத்தொன்பதாண்டுகளும், ஐந்து மாதமும், இருபத்து நாலு நாட்களும் உடலாலும் உள்ளத்தாலும் உழைத்து உழைத்துக் களைத்துப்போன சுவாமி விவேகானந்தர் அன்னையின் மடியில் குழந்தையாகத் தூங்கிவிட்டார்!

*　　　*　　　*

பேலூர் மடமே இடிந்து தலையில் விழுந்திருந்தால்கூட குருபாயிகளும் சீடர்களும் அப்படி அதிர்ந்துபோயிருக்கமாட்டார்கள்! சுவாமிஜி இந்த உலகில் இன்று இல்லை என்பதை நன்கறிந்து இச்சரிதத்தைத் தொடர்ந்துவரும் நமக்கே அவருடைய மறைவு தாங்கொண்ணாத துயரமாயிருக்கும்போது, அன்புமயமான அவருடனேயே வாழ்ந்தவர்களால் இந்த எதிர்பாராத நிகழ்ச்சியை எப்படித் தாங்கமுடியும்?

'சுவாமிஜி மறைந்துவிட்டாரா? மெய்யாகவே மறைந்துவிட்டாரா? தாம் பேரன்புகொண்டிருந்த இந்த உலகைவிட்டு அவரால் மறையக்கூட முடியுமா?'

வைத்தியர்களை வரவழைத்தார்கள்.

சுவாமிஜியின் கண்களிலும், நாசி நுனியிலும், திருவாயிலும் குருதி துளித்திருந்ததைக்கண்டு அவர்கள் ஏதோதோ காரணம் கூறினார்கள்.

ஆனால் குருபாயிகளுக்கு புரிந்துவிட்டது — அன்று பகல் ஸுஷும்னை பற்றியும் தந்திரசாஸ்திரம் பற்றியும் பேசிக்கொண்டிருந்த சுவாமிஜி யோகாப்பியாசத்தினால் கபாலத்தின் வழியே பிராணனை வெளியே செலுத்திவிட்டார் என்று. 'தம்மைப் புரிந்துகொண்டபின் அவரால் உடலில் வாழமுடியாது' என்று குருமஹராஜ் கூறியிருந்தது பொய்க்குமா?

Koviloor Digital Library

''எல்லா இந்திரிய வாயில்களையும் அடைத்து மனத்தை இதயத்தில் இருத்திப் பிராணனை சிரஸின் உச்சியில்வைத்து, யோக தாரணையில் நிலைத்தவனாய், பிரணவமாகிய பிரம்மவாசகத்தை உச்சரித்துக்கொண்டு என்னைச் சிந்தித்தவாறு உடலைவிட்டு எவன் செல்கிறானோ அவன் அப்பாலுக்கு அப்பாற்பட்ட கதியை அடைகிறான்'' என்ற வாசுதேவனின் வாக்கை சுவாமிஜி நிரூபித்து விட்டார் எனப் புரிந்துகொண்டார்கள்.

இருந்தபோதிலும் மடத்தினருக்குச் சிறிது சந்தேகமாகத் தான் இருந்தது. மீண்டும் இந்த உடலில் உயிர்புகுமோஎன்னவோ என்ற ஆசையும் அவர்களுக்கு ஏற்பட்டது. எனவே நீண்டநேரம் உடலத்தை எடுக்காமலே யிருந்தார்கள். ஆனால் நேரம் போகப் போக அந்தத் திவ்விய உருவில் காளிமாதாவுடையதேபோல் நீலச்சாயை தோய்ந்துவந்தது.

நிகழக்கூடாதது நிகழ்ந்தேவிட்டது என்று புரிந்துகொண்டு கதறினர் சுவாமிஜியின் தண் நிழலில் தங்கியிருந்த சீடர்கள்.

வெளியுலகில் சேதி பறந்தது. வங்கத்து மக்கள் தங்கள் நாடுதந்த ஒப்பற்ற தவச்செல்வரைக்காணக் கூட்டம் கூட்டமாக வந்தார்கள். தரிசித்தார்கள்.

தரிசித்தார்களா ? கண்ணீர் பார்வையை மறைக்கும்போது தரிசனம் எப்படிச் செய்யமுடியும் ?

இரண்டு மணிக்கு சுவாமிஜியின் உடலம், அவர் புனிதம் பரப்பிய அறையிலிருந்து திரும்பிவராத பிரயாணத்துக்குப் புறப்பாடு செய்யப்பட்டது.

மாடியிலிருந்து கீழே எடுத்துவந்த தேகத்துக்குக் காஷாயம் உடுத்தப்பட்டது. ஞானத்தீயின் நிறமாகவும், கருணைப் புது வெள்ளத்தின் வண்ணமாயும்மட்டும் அது தோன்றவில்லை. சுவாமிஜி அல்லும் பகலும் அநுதாபம் செலுத்திய ஏழையர்களின் ஏழைமைக்கு ஒரு சின்னமாகவே தோன்றியது அந்தக் காஷாயம். உலகுக்கு மாபெரும் நிதியத்தை அளித்த உடல் ஏழையாகக் கிளம்பத் தயாராகிவிட்டது. இந்த நாடுமுழுவதும் சுற்றித் திரிந்த பொற்பாதத்தில் செங்குழம்பு பூசி அதனைப் பலர் பூஜைக்காக ஒத்தி எடுத்துக்கொண்டனர்.

சுவாமிஜிக்குத் தீபாராதனம் செய்தார்கள்.

அந்த ஒளி கூடிநின்றவர்களின் கண்ணீரில் பிரதிபலித்து மணிகளாகச் சொட்டிற்று.

மங்கள ஹாரதி எடுத்தார்கள். அவரைப் பொறுத்தமட்டில் அது மங்களம்தானே ? உடற்கூண்டிலிருந்து, உலகக்கூண்டிலிருந்து

Koviloor Digital Library

விடுபட்ட அவரது ஆத்மப் பறவை பரம் பொருளை நோக்கி அல்லவா பறந்துகொண்டிருந்தது?

மந்திரகோஷமும் விம்மல் ஒலியும் கலந்து கம்பீர சோகம் அந்தச் சூழலில் செறிந்தது.

சங்கும் சேகண்டியும் ஒலித்தன; தூபப்புகை மணம் பரப்பியது.

தடதடவென்று எல்லாரும் சுவாமிஜியின் உடல்முன் விழுந்து வணங்கினர்.

இறுதி ஊர்வலம் தொடங்கிற்று.

ஜெய் ஸ்ரீ குரு மஹராஜ்கி ஜெய்!
ஜெய் ஸ்ரீ சுவாமிஜி மஹராஜ் கி ஜெய்!

என்று கோஷிக்கமாட்டாமல் கோஷித்தனர் அடியார்.

ஆம், குருமஹராஜ் முதலில் ஸ்ரீராமகிருஷ்ணராக வாழ்ந்தார். ஸ்ரீராமகிருஷ்ணர் என்ற வியக்தி மறைந்தபின் சுவாமி விவேகானந்தராக அவரே வாழ்ந்தார்.

இன்று விவேகானந்த சுவாமிமட்டும் மறையவில்லை. அவருள் மறைந்து வாழ்ந்த ஸ்ரீராமகிருஷ்ண தேவரும் மறைந்துவிட்டார்!

இந்த இரட்டை இழப்பை எப்படித் தாங்குவது? சிவாம்சமான சுவாமிஜியின் 'அபிமான'த் தருவும், சிவபெருமானுக்குப் பிரிதிவாய்ந்ததுமான வில்வமரத்தருகே அறிவும் அருளும் குடிபுகுந்திருந்த உடலம் அக்கினிக்கு அளிக்கப்பட்டது!

பதினாறாண்டுகளுக்குமுன் புனித பாகீரதியின் அக்கரையில் தான் பரமஹம்ஸரின் பவித்திர மேனியை அக்கினித் தேவன் அணைந்து கொண்டான்.

தீ நாக்குகள் சுற்றிச்சுற்றி வீசும் ஒளி ஞானபக்தர்களின் உள்ளத்தில் உபநிஷத மந்திரங்களைக் கூறிற்று:

வாயு-ரனில-மம்ருத-ம தே தம் பஸ்மாந்தம் சரீரம்!
ஓம் க்ரதோ ஸ்மர க்ருதப் ஸ்மர க்ரதோ ஸ்மர ஸ்மர!

'ஓங்காரரூபியான அக்கினி பகவான்! சுவாஸக்காற்று அமரமான வாயுவை அடையட்டும். சரீரம் பஸ்மமாகட்டும். சரீரத்துக்குரியவனை நினைப்பாய்! அவன் செய்த செயல்களை நினைப்பாய்!'

அவர் செய்த செயல்களை நினைக்கத்தான் இந்தச் சரிதம். ஆனால் அதன் முழுப்பொருளையும் புரிந்துகொள்ள இன்னொரு விவேகானந்தர் அல்லவா வரவேண்டும்? எப்போது வரப் போகிறார்?

Koviloor Digital Library

அறிவுக்கனலுக்கு அக்கினிமட்டும் அஞ்சலி செலுத்தினுல் போதுமா? அந்த அருட்புனலுக்குக் கங்கையின் நுண் துளிகள் செறிந்த காற்றும் அபிஷேகம் செய்தது. சிதையில் எரியாதிருந்த காஷாயம் காற்றின் வேகத்தில் பறந்துவந்து நிவேதிதையைச் சுற்றிக்கொண்டது! அவளைப் பூரண சந்நியாசினியாக்கிவிட்டார் சுவாமிஜி!

வானமெல்லாம் பற்றி எரிவதுபோன்ற சாயங்காலம் மெல்ல மெல்லத் தேய்ந்தது. இங்கும் தீ அடங்கிற்று.

நிசியன்னை உலகைத் தழுவும்போது இனம்தெரியாத ஒரு நிம்மதி பக்தர்களின் உள்ளத்தைத் தழுவியது.

''கிழிந்த ஆடையைக் களைவதுபோல் இந்த உடலை எறிந்து விட்டு வெளிக்கிளம்புவது நல்லது என்று எனக்குத் தோன்றக் கூடும். ஆனுல் உடலுக்கு வெளியே சென்றுலும் நான் சேவை செய்வதை நிறுத்தமாட்டேன். எங்கெங்குமுள்ள மக்களை நான் ஆத்மிகத்தில் தூண்டிக்கொண்டே யிருப்பேன். நான் ஆண்டவ ேைடு ஒன்றுபட்டிருப்பதாக உலகம் அறியும்வரை நான் சேவை செய்வேன்''

என்றும்,

''நான் உயிர்வாழ்கிற ஒரே கடவுளும், நான் நம்புகிற ஒரே கடவுளுமான, சகல ஜீவராசிகளும் ஒன்றுசேர்ந்த அந்தக் கடவுளை வழிபடுவதற்காக நான் மீண்டும் மீண்டும் ஜன்மம் எடுப்பேனுக! ஆயிரமாயிரம் துயரங்களை அநுபவிப்பேனுக!''

என்றும்

சுவாமிஜி கூறியிருந்தது அவர்களின் இதயச் செவியில் ஒலித்தது; சாந்தியின் சுகந்தத்தை நிரப்பியது.

|| ஓம் தத் ஸத் ||

Koviloor Digital Library

இச் சரிதம் எழுதுவதில் பெரிதும் பயனுள்ள நூல்கள்:

The Life of Swami Vivekananda
By HIS EASTERN AND WESTERN DISCIPLES

Vivekananda: A Biography
By SWAMI NIKHILANANDA

The Life of Vivekananda and the Universal Gospel
By ROMAIN ROLLAND

Sri Ramakrishna, the Great Master
By SWAMI SARADANANDA

Letters of Swami Vivekananda

Reminiscences of Swami Vivekananda
By HIS EASTERN AND WESTERN ADMIRERS

Swami Vivekananda in America: New Discoveries
By MARIE LOUISE BURKE

Koviloor Digital Library

பொருட் குறிப்பகராதி

அகண்டானந்தர் 260. பூர்வாசிரமப் பெயர் கங்காதரர். திபெத்துக்கு யாத்திரை தொடங்கல் 310.
அந்த: சாக்தர் 328. ஆதிசங்கரருக்குப் பெயர்.
அபயானந்தர் 572. சுவாமிஜியின் அமெரிக்க சிஷ்யை. மேதாம் லூயி என்று பெயர்.
அபேதானந்தர் 260. பூர்வாசிரமப் பெயர் பழைய காளி. ஜகந்நாதபுரிக்கு யாத்திரை தொடங்கல்.
அம்பிகை வழிபாடு 327. சுவாமிஜியின் தவிப்பு.
அம்பாதத்தர் தோட்டம் 310.
அயோத்தி 307.
அல்மோரா 308, 310. துக்கச் செய்தி. சுவாமிஜியின் சகோதரி ஒருத்தி தற்கொலை செய்துகொண்டது.
அழகியசிங்கப்பெருமாள் 435.
அன்னை சாரதை 239. பிருந்தாவன யாத்திரை.
அன்னிஸ்க்வாம் 461. பேராசிரியர் ரைட்டின் விருந்தினராக சுவாமிஜி தங்கிய இடம்.

ஆகஸ்டு ஏழாந்தேதி 572. ஒரு சம்பவம்.
ஆக்டர்லோனி நினைவுச்சின்னம் 35.
ஆவேச வாக்கு 307. காசியில் சுவாமிஜி.
ஆபு 347.
ஆயிரம் தீவுப் பூங்கா 564, 565, 566, 567, 568, 569, 570.
ஆல்வார் மன்னர் 330.
ஆல்வார் மன்னரும் விக்கிரக வணக்கமும் 332.
ஆஸ்திரிய இசைக்கலைஞரும் சுவாமிஜியும் 389.
ஆஜ்மீர் 347.

ககன்சந்திரர் 289.
கதாதரன் 62. ஸ்ரீராமகிருஷ்ணரின் பிள்ளைத் திருநாமம்.
கதாதரர் 65. அம்பிகையை நேருக்கு நேர் கண்டார்.
கதாதரர் 69. திருமணத்துக்கு இசைதல்.
கட்ச்சில் தோன்றிய காட்சி 363.
கணேச பிரயாகை 313. கங்கையோடு விலங்கனு நதி சேருமிடம்.
கமார்ப்புகூர் 61. ஸ்ரீராமகிருஷ்ணர் அவதரித்த இடம்.
கல்கத்தா 1.
காயெஸ்த 1. விவேகானந்தர் அவதரித்த குலம். க்ஷத்திரிய குலம்.
காளிகாட் 1.
காளிபிரசாத் 2. ராம்மோகன் தத்தரின் மூத்த புதல்வர்.
காண்டன் 451. நகர வர்ணனை.

கிருபானந்தர் 572. லியான் லாண்ட்ஸ்பெர்க்.
கிரிசசந்திர கோஷ் 195. பிரபல வங்க நாடகாசிரியர்—குருமகராஜிடம் அன்பு பூண்டவர்.
கிர்நார் மலை 358. ஜுனகாத்துக்கு அருகில் உள்ள மலை—இந்துக்களுக்கும், சமணர்களுக்கும், பௌத்தர்களுக்கும் புனிதமானது.

குட்டி பிசாசு 27. நரேனின் சகபாடிகள் இட்ட பெயர்.
குருட்டு நம்பிக்கை 169. ஸ்ரீராமகிருஷ்ணரின் விளக்கம்.
குமாரி வால்டோ 546, 570.
குமாரி ஹென்றியாட்டா முல்லர் 577.
குருமகராஜ் 232. நரேந்திரருக்கு உபதேசித்தல்—தமது சாதனை சக்திகளை எல்லாம் அவருக்களித்தல்.
குருசரணலஸ்கர் 323. ஆல்வார் சமஸ்தான மருத்துவநிலைய டாக்டர்.

கேசவ சந்திரசேனர் 57.
கேத்ரி மன்னர் 350, 351.
கேத்ரி மன்னரின் கேள்வி 353.

கொலம்பஸ் ஹால் 469. சர்வமத மகாசபை கூடிய இடம்.
கௌர் மோகன் முகர்ஜி தெரு 2. சுவாமி விவேகானந்தர் அவதரித்த இல்லம் இத்தெருவில் இருந்தது.

சகோதரி தேவமாதா 548.
சங்கரசுப்பையர் 395. திருவாங்கூர் திவானக இருந்தவர்.
சங்கர பாண்டுரங்கர் 363. போர்பந்தர் திவான்.
சங்கீதம் 39. நரேந்திரரின் கருத்து.
சந்நியாசி கீதம் 574.
சந்திரமணி 62. ஸ்ரீராமகிருஷ்ணரின் தாய்.
சரத்சந்திரர் 276. ஹத்ராஸ் ஸ்டேஷன் மாஸ்டர்—சந்நியாசியாகி சுவாமி விவேகானந்தரைத் தொடர்ந்தார்.
சரத்சந்திரர் 279. ஸ்டேஷன் மாஸ்டர்

—துறவு ஏற்று சதானந்த ரானுர்.

சரத்சந்திர குப்தா 274. வங்காளி—ஹத்ராஸில் ஸ்டேஷன் மாஸ்டராயிருந்தவர். சுவாமி விவேகானந்தரிடம் அன்பு கொண்டவர்.

சர்வமத மகாசபை 468.

சர்வமத மகாசபையில் இடம் பெறல் 467.

சர்தார் ஹரி சிங் 345.

சத்ருஞ்ஜயகிரி 369. சமணர்களின் புனித ஸ்தலம்.

சாரதானந்தர் 260. பூர்வாசிரமப் பெயர் சரத். ஜகந்நாத பூரிக்கு யாத்திரை புறப்படல்.

சாரதானந்தர் 310.

சாமராவ் 396. திருவாங்கூரில் கல்வி டைரக்டராக இருந்தவர்.

சிங்காரவேலு முதலியார் 425. 'கிடி' கிறிஸ்தவக் கல்லூரியில் உதவிப் பேராசிரியர் 'பிரபுத்த பாரதம்' பத்திரிகையின் கௌரவ நிர்வாகஸ்தராக இருந்தவர்.

சுரேந்திரநாத் மித்ரா 242. ஸ்ரீராமகிருஷ்ணரிடம் அன்பு கொண்டவர்—இவரது கனவில் பரமஹம்ஸர் தோன்றி "அந்த குழந்தைகளுக்கு உதவிசெய்" எனல்.

சுரேந்திரநாத் மித்ரா 60. இவரது இல்லத்தில்தான் முதன் முதலாக நரேன் ஸ்ரீராமகிருஷ்ணரைக் கண்டார். அதாவது 1881-ம் ஆண்டு நவம்பர் மாதம்.

சேஷாத்ரி ஐயர் 387. மைசூரில் திவானாக இருந்தவர்.

சுவாமிஜி 263. நரேந்திரர் காசிக்குப் போதல். அங்கே குரங்குகள் விரட்டுதல். சுவாமிஜி ஓடுதல். 'அந்தக் குரங்குகளை எதிர்த்து வெல்' என்று ஒரு குரல் கேட்டு அவ்வாறே செய்தல். குரங்குகள் திரும்பி ஓடுதல் 266. அயோத்திக்குப் போதல் 271. ராதா குண்டத்தில் எற்பட்ட அநுபவம் 270. கோவர்த்தனகிரியில் பசியால் வாடியபோது உணவு கிடைத்த அதிசயம் 272. தாரிகாட் என்ற இடத்தில் ராமன் திருவருளால் உணவு கிடைத்தது. ரயிலில் தாகத்தால் தவித்தது. தன வணிகர் ஒருவர் நடந்துகொண்ட விதம் 278. சரத்துக்குப் பணிவிடை செய்தல். 279. மலேரிய சுரத்தால் பிடிக்கப்படுதல் 315. ஹிருஷிகேசத்தில் நோய்வாய் படல். மவுலவியின் சிகிச்சை 320. தில்லியில் சுவாமிஜி 324. மௌல்வி சாகிபின் பக்தி 325. ஆல்வாரில் சுவாமிஜி 326. காவி உடைக்குக் காரணம் கூறியது 331. ஆல்வார் மன்னரும் சுவாமிஜியும் 338. கிழவரும் சுவாமிஜியும் 341. பிராமணச் சிறுவனும் சுவாமிஜியும் 347. ஆங்கிலேயரும் சுவாமிஜியும், ராஜபுதனத்தில் 347, 348, 349. ஆபுவில் சுவாமிஜி 351, 352. கேத்ரி மன்னரும் சுவாமிஜியும் 353. கேத்ரி மன்னருருக்கு உபதேசம் 354, 355. கேத்ரியில் 356. அகமதாபாத்தில் 357. லிம்ப்டி சமஸ்தானத்தில் 361. ஸோமநாத்தில் 372, 373. திலகரும் சுவாமிஜியும் 375, 376, 377, 378, 379, 380, 381, 382, 383, 384. பெல்காமில் 387. பெங்களூரில் 387, 388, 389, 390, 391. மைசூர் மகாராஜாவுடன் 393. நாராயண மேனனும் சுவாமிஜியும் 394. பேராசிரியர் சுந்தரம் பிள்ளைபற்றி சுவாமிஜி. பேராசிரியர் சுந்தரராம ஐயரும் சுவாமிஜியும். பிராமணர்பற்றிய கருத்து வேற்றுமை 394, 395. இளவரசர் மார்த்தாண்ட வர்மர் சந்திப்பு 395, 396. விஞ்ஞானம்பற்றி சுவாமிஜி 396. சுவாமிஜியின் சொல் சித்திரம் 400. தமிழில் பேசினுர் 401. தேசப்பற்று பற்றி சுவாமிஜி 402. பாஸ்கர சேதுபதியும் சுவாமிஜியும் 403. ராமேசுவரத்தில் 404, 405, 406, கன்னியாகுமரியில் 415. புலியும் சுவாமிஜியும் 418. திபெத்திய குடும்பத்தில் 420. புதுச்சேரியில் சநாதனி ஒருவருடன் வாக்கு வாதம் 423. சென்னையில் 423. பண்டிதரும் சந்தியாவந்தனமும் 425. திருவல்லிக்கேணி இலக்கிய சங்கத்தில் 431. ஹைதராபாத்தில் 433. சுவாமிஜியின் முதல் மேடைப் பிரசங்கம் மேல்நாட்டுக்கு என் தூதுப்பணி 436. அன்னையின் ஆசி 437. கேத்ரி விஜயம் 438. விவேகானந்தர் என்று நிரந்தரமாகப் பெயர் பூண்டது 439. ஜயப்பூர் சம்பவம். நாட்டியப் பெண்ணின் உள்ளம் 440. ஆபுசாலே ரயில் நிலையத்தில் டிக்கட் பரிசோதகரும் சுவாமிஜியும் 444. பம்பாய் துறைமுகத்தில் சுவாமிஜியின் அமெரிக்க யாத்திரை 31-5-1893 451. ஜப்பானைப்பற்றி 453. சீன ஆலயத்

Koviloor Digital Library

தில் ஒரு நிகழ்ச்சி 455, 456. சிகா கோவில் 461. முதல் அமெரிக்கப் பிரசங்கம் 465. மீண்டும் சோதனை 470, 471, 472, 473, 474. சர்வமத மகாசபையில் 475. சுவாமிஜிபற்றி ரோமெய்ன் ரோலண்ட் 490. லயன் இல்லத்தில் பட்டு மெத்தையில் படுக்காது இரவு முழுவதும் இந்திய ஏழைகளை நினைத்துக் கண்ணீர்விட்டது 493. லெக்சர் பிரோக்கள் சுவாமிஜியை ஏமாற்றியது 493. அமெரிக்க நாணயங்கள்பற்றி ஸ்ரீமதி லயன் சுவாமிஜிக்குச் சொல்லிக்கொடுத்தது 495. மிசிகன் ஏரிக்கரையில் சுவாமிஜி முன் ஸ்ரீராமகிருஷ்ணர் உருவம் தோன்றுதல் 498. மின்னியாபோலிஸ் நகரில் அமெரிக்கரைக் கண்டித்தது 499. டெஸ்மாயின்ஸ் பிரசங்கம்பற்றி ஐயோவா ஸ்டேட் ரிஜிஸ்டர் 503. டெட்ராயிட்டில் சிம்மத்தின் சக்தியும் ஆட்டுக்குட்டியின் மென்மையும் இணையவேண்டும் என்றார் 507. டெட்ராயிட்டில் விருந்துக்குக் அழைத்து விஷமிடுதல். குருமகராஜ் அருளால் தப்பிப் பிழைத்தல் 510. எம்மா கால்வி என்ற நாடக நட்சத்திரத்தைத் தடுத்தாட்கொண்டது 513. சுவாமிஜியிடம் ராக்பெல்லர் வருகை 515.சுவாமிஜி பற்றி மார்தா ப்ரௌன் 516. பிரதாபசந்திர மஜூம்தாரின் துஷ்பிரசாரம் 519. போஸ்டனில் இந்தியப் பெண்கள்பற்றிப் பேசியது 529. கிரீனேக்கரில் பைன் மரத்தடியில் சாதனை 531. ஸ்ரீமதி ஒல்புல்லின் விருந்தினர். டாக்டர் வில்லியம் ஜேம்ஸ் அறிமுகமாதல் 532. சமாதிபற்றி வில்லியம் ஜேம்ஸ் கேட்டதும் சுவாமிஜி சமாதியில் ஆழ்ந்ததும் 538. கேம்பிரிட்ஜில் சுவாமிஜி. ஹார்வர்ட் சர்வகலாசாலைப் பேராசிரியர் பதவி 539. ப்ரூக்லின் நன்னெறிச் சங்கத்தில் சொற்பொழிவு 540. டால்மேஜ் பாதிரியின் பிரசாரம் 541. ரமாபாய் சங்கத்தின் சீற்றம் 564. ஆயிரம் தீவுப் பூங்காவில் சிஷ்யர்களுக்கு போதித்தது 572. ஆயிரம் தீவுப் பூங்காவில் ஆகஸ்டு 7-ந் தேதி நியானத்தில் அமர்ந்தது 582. குமாரி மார்கரெட் நோபில் சுவாமிஜியைச் சந்தித்தது 583. இஸபெல் சிமோட்டி இல்லம் 588. மீண்டும் அமெரிக்கா திரும்புதல். கர்மயோகச் சொற்பொழிவு 587. லண்டனில் வேதாந்தப்பணி 589. போஸ்டனில் சுவாமிஜி 594. ஹார்வர்ட் சர்வகலாசாலைச் சொற்பொழிவு 595. நியூயார்க்கில் வேதாந்த சங்கம் நிறுவுதல் 604. மீண்டும் லண்டன் செல்கை 606. பேராசிரியர் மாக்ஸ் முல்லரைக் காணல் 609. வெறிகொண்ட காளையும் சுவாமிஜியும் 613. ஸேவியர் தம்பதிகளைச் சீடராக்கியது 614. ஜினீவாவில் சுவாமிஜி 616. லூஸெர்னில் 615. ஸெயின்ட் பெர்னார்டில் ஏற்பட இருந்த விபத்து. தப்பிப் பிழைத்தல் 617. பால் தாஸனைக் காணல் 619. விம்பிள்டனில் சொற்பொழிவு 622. தாயகம் திரும்ப விரும்புதல். பிரிவுபசாரம். ஸேவியர் தம்பதிகள் உடன் வருதல் 628. இத்தாலியில் 629. ரோமில் நேபிள்ஸ் துறைமுகத்தில் கப்பலேறுதல். க்ரீட் தீவுக்கருகே அதிசயக் கனவு 631. கப்பலில் கிறிஸ்தவப் பிரசாரகர் பட்டபாடு 632. ஏடனில் சுவாமிஜி ஹுக்கா பிடித்தது 637. கொழும்பு துறைமுகத்தில் வரவேற்பு 636. செல்லையா வீட்டில் 636. கொழும்பு பொதுமன்றத்தில் சொற்பொழிவு. கண்டிக்குச் செல்கை. அநுராதபுரத்தில். புத்தபிக்ஷுக்களின் வெறி 637. யாழ்ப்பாணத்தில் 639. பாம்பனில் வரவேற்பு. சுவாமிஜியின் சாரட்டை ராமநாதபுரம் ராஜாவே இழுத்தார். ராமேசுவர விஜயம். திருப்புல்லாணி. இராமநாதபுரம் 641. ராமநாதபுரத்து அரசருக்கு ராஜரிஷி என்ற விருதளித்தல். மதுரையில் சொற்பொழிவு. திருச்சியில். கும்பகோணத்தில் 645. சென்னையில் மகத்தான வரவேற்பு 648. திருவல்லிக்கேணி இலக்கிய சங்கத்தில் சொற்பொழிவு 648. காஸில்கெர்னனில் சுவாமிஜி 649. சுவாமிஜி பற்றி சுந்தரராமய்யர். சுவாமிஜியும் திருப்பத்தூர் சைவ கோஷ்டியும் 650. விக்டோரியா பப்ளிக் ஹாலில் கூட்டம். மக்கள் மகிழ்ச்சி 656. ஐரோப்பிய மங்கையின் வருகை. மாத்வ இளைஞரின் கேள்வி. வைஷ்ணவ பண்டிதரின் கேள்வி 657. பச்சையப்பன் கல்லூரியில் சொற்பொழிவு 670. கல்கத்தாவுக்குப் புறப்படுதல் 673. கல்கத்தாவில் வரவேற்பு 674. தக்ஷிணேசுவரத்தில் சுவாமிஜி 679. சுவாமிஜியும் பேராசிரியரும். ராம்

Koviloor Digital Library

லால் சட்டோபாத்தியார் வருகை 689. சுவாமிஜியும் கோரக்ஷா சங்கத்தினரும் 682. சுவாமிஜியும் சம்ஸ்கிருத பண்டிதரும் 683. 684. சுவாமிஜியும், ஆலியும் 689. சுவாமி ஜியும் குருபாயிக்களும் 694. கேத்ரி மன்னருக்கு விருந்தளித்தல் 699. ஸ்ரீராமகிருஷ்ண சங்கஸ்தாபனம் 708. அல்மோராவில் சுவாமிஜி 708, 709. அம்பாலா விஜயம். சொற்பொழிவு. அமிர்தசரஸில் ஆரிய சமாஜிகளுடன். உடல்நலன் கெடல். முர்ரி செல்கை 710. காஷ்மீர் விஜயம் 711. ராவல் பிண்டிக்குத் திரும்புதல். ஹன்ஸ் ராஜின் விருந்தினர் 711, 712. ஜம்முவில் மகாராஜாவுடன் சந்திப்பு 713. பஞ்சாபில் சுற்றுப் பிரயாணம் 714. லாகூரில். தீர்த்த ராம் கோஸ்வாமி விருந்தளித்தல் 715. சுவாமிஜியும் பள்ளித் தோழரும் 716. தில்லியில் சுவாமிஜி. ஆல்வாரில் வரவேற்பு. ஏழைக் கிழவியிடம் சப்பாத்தி உண்டது 717. கேத்ரியில் வரவேற்பு 718. கேத்ரி மன்னரும் சுவாமிஜியும் 722. சுவாமிஜியும் குமாரி மாக்லியாடும் 723, 724. சுவாமிஜியும் சகோதரி நிவேதிதையும் 726. நீலாம்பர முகர்ஜியின் தோட்ட மாளிகையில் 721. ஸ்ரீராமகிருஷ்ண மடத்துக்கு நிலம் வாங்குதல் 732. நவகோபால் கோஷ் இல்லத்தில் 738. கல்கத்தாவில் வைசூரி நோய். சுவாமிஜியின் சேவை 740. நைனிதாலில் முகம்மதியரின் பக்தி 742. அல்மோராவில் சுவாமிஜி 745. சுவாமிஜியும் அசுவனி குமார தத்தரும் 749. காஷ்மீரில் சுவாமிஜி 753. காஷ்மீரில் சுவாமிஜி அமெரிக்க சுதந்திர தினத்தைக் கொண்டாடுதல் 754. ஜீலம் நதிக்கரையில் 755. புத்தரைப் பற்றி 757. அமரநாத் யாத்திரை 760. பஞ்சதரணியில் 761. அமரநாத் ஆலயத்தில் 768, 769, 770. ஸ்ரீநகரில் காளிமாதாவுடன் ஒன்றிய நிலை 773. க்ஷீரபவானியில் சர்வேசுவரி பேசியது 778. கல்கத்தாவுக்குத் திரும்புதல் 780. பேலூர் மட நிர்மாணம். ஸ்ரீராமகிருஷ்ணரைப் பிரதிஷ்டை செய்தல் 787. உடல் நலிவு 789. மிருகக்காட்சி சாலையில் 789, 790. பரிணமம் பற்றி 792. வைத்தியநாதம் சென்றார் 802. நாகமகாசயரும் சுவாமிஜியும் 805. மாயாவதி அத்வைத ஆசிரமம் 810. மீண்டும் அமெரிக்கப் பயணம் 819. சத்தியகிருக நிகழ்ச்சி 820. தண்ணீரில் மிதந்த கோழி முட்டையைத் துப்பாக்கி கொண்டு சுட்டது 825. நியூயார்க்கில் 833. பாரிஸ் சமய வரலாற்றுப் பேரவையில் 835. ரிச்லூ கோமகனைத் துறவேற்கச் சொன்னது 841. கெய்ரோ தாசிகள் தெருவில் 843. இந்தியா திரும்புதல் 848. அன்னையுடன் யாத்திரை 852. சுவாமிஜியின் அறை 856. சுவாமிஜி அன்பு செலுத்திய பிராணிகள் 878, 879. இறுதி நாட்கள் 864. சுவாமிஜியும் சந்தலர்களும் 866. ஜப்பானிய சமயக் கல்விமான்கள் வருகை 867. காசியில் சுவாமிஜி 880. முக்தி. சுவாமிஜியுடன் 'எனது இரண்டாம் நவராத்திரி 399. பேராசிரியர் சுந்தரராம ஐயர் எழுதிய கட்டுரை.

சுவாமிஜியின் சினம் 399. பேராசிரியர் சுந்தரராம ஐயரை உலுக்கியது.

சுவாமிஜியுடன் எனது முதல் நவராத்ரி 399. பேராசிரியர் சுந்தரராம ஐயர் எழுதிய கட்டுரை.

சிமுலியா 1. சிம்லா. கல்கத்தாவின் வடபகுதியில் உள்ளது.
சியாமளதாஸ் 322.

சீனத்துத் தாய் 450.

டாக்டர் ரைட் 566.
டாக்டர் பர்ரோஸ் 471. சர்வமத மகாசபைத் தலைவர்.
டாக்டர் த்ரைலோக்கியநாத கோஷ் 314. மீரட்டில் அகண்டானந்தருக்கு சிகிச்சை அளித்தவர்.
டாக்டர் விரஜேந்திரநாத சீலர் 132. நரேந்திரர் மாணவராயிருந்த போது ஓர் 'உல்லாச புருஷர் பொஹீமியன் என்கிறார்.

டிக்ஸன் சொஸைட்டி 561.

டேராடூன் 314.
டோக்கியோ 452.

தத்தர் குடும்பம் 1. விவேகானந்தர் அவதரித்த குடும்பம்.

திரிகுணாதீதர் 260. பூர்வாசிரமப் பெயர் சாரதா. பிருந்தாவனம் செல்லல்.

துர்காசரணர் 2. விவேகானந்தரின் பாட்டனார். சம்ஸ்கிருதம், பார

Koviloor Digital Library

சிகம் ஆகிய இரு மொழிகளில் வல்லவர். தமது இருபத்தைந்தாவது வயதில் துறவியானார்.

துர்காசரணர் 4. கல்கத்தாவில் நண்பர் ஒருவர் வீட்டுக்கு வருதல்—உறவினர் வற்புறுத்தல்—பட்சி பறந்து போதல்.

துவாரகையில் 368, 369.

துவாரகாதாஸ் 263. சுவாமி விவேகானந்தர் காசியில் இவரது ஆசிரமத்தில் தங்கியிருந்தார்.

தேரி 312, 313.

தேவேந்திரநாத தாகூர் 57.

தோதாபுரி 72. சந்நியாசி, ஸ்ரீராமகிருஷ்ணருக்கு வேதாந்தம் போதித்தவர். சந்நியாசம் அளித்தவர்.

த்ரைலங்க சுவாமி 254. எப்போதும் தவத்தில் ஆழ்ந்து காசியில் வாழ்ந்த பெரியார்.

நரேன் 12. குழந்தை விஷமம். தலையில் தாய் தண்ணீரைக் கொட்டுதல். காதில் ஈசுவர நாமத்தை ஓதல். விஷமம் அடங்கி விடுதல். 13. விளையாட்டுத் தோழர். பசு, குரங்கு, ஆடு, மயில், புறா, சிமைப் பெருச்சாளி முதலியன 14. சந்நியாசிக்கு வஸ்திரமளித்தல். அறையில் போட்டுப் பூட்டி விடுதல்—கையிலகப்பட்டதை ஜன்னல் வழியே எறிதல் 14. நரேனும் கோச்மேனும். பிஞ்சு உள்ளத்தில் தோன்றிய கருத்து 15. ராமர் வணக்கம். அறைக்குள் தியானத்தில் அமர்ந்திருத்தல். வீட்டார் தேடல் 16. ராமர் பொம்மையை எறிதல் 17. தாயிடம் அலறல். தாய் கைலாசநாதரின் பதுமையைக் கொடுத்தல் 18. ஆஞ்சநேயரைக் காண முயன்றது 19. உறங்கும் விதம். புருவ மத்தியில் ஓர் ஒளிப் பந்து தோன்றுதல் 20. விந்தையான துயிலுக்கு விளக்கம். பரமஹம்ஸரின் அநுபவம். தியான விளையாட்டு. நல்ல பாம்பு வருதல் 21. ஆறாவது வயதில் பாடசாலைக்குப் போதல். பள்ளி படிப்புக்கு முற்றுப்புள்ளி. வீட்டிலே படித்தல். ஏழாவது வயதில் முக்தபோதம் என்ற சம்ஸ்கிருத இலக்கண நூலை மனப்பாடம் செய்தல். பரதேசிகள் பிழையுடன் பாடியதைத் திருத்தல் 22. ராஜா விளையாட்டு 23. ஹுக்கா பிடித்தது. முகம்மதியருக்கு என்று வைக்கப்பட்டிருந்த குழாயிலும் பிடித்தது. வித்தியாசமில்லை என்றது 25. சிறுவயதில் நண்பருடன் சண்டை. கீழே விழுந்து கல்லின்மீது முட்டிக்கொண்டது 26. தியானம். கேசம் வளர்ந்து பூமியை நோக்கிச் செல்கிறதா என்று தொட்டுப் பார்த்தல். தியானத்தில் புத்தரைக் காணல் 27. பண்டித ஈசுவரசந்திர வித்தியாசாகர் கல்வி நிலையத்தில் சேர்தல் 27. கோலி விளையாட்டு. குஸ்தி. சோடா கம்பெனி வைத்தல். இடைவேளையில் வகுப்புக் கலைந்ததும் விளையாட்டு மைதானத்தில் முதலாவதாக நிற்றல் 28. வகுப்பில் கதை பேசியது. ஆசிரியர் தண்டனை. நரேன் பிதாமடிவாக நின்றது 29. ஆங்கிலம் படிக்க மறுத்தது. பெற்றோர் வற்புறுத்தல். சிலநாளில் தேர்ச்சி பெற்றது 30. தந்தையும் தாயும் கூறிய மொழிகள் 31. ஈசுவரசந்திர வித்தியாசாகர் கல்வி நிலையத்தில் ஓர் ஆசிரியர் நரேனின் காதைத் திருகியது. நரேன் ஈசுவரசந்திரரிடம் முறையிட்டது. வீட்டுக்கு வந்தது 32. மரத்தின்மீது ஏறி விளையாடியது. குட்டிக்கரணம் போட்டது 33. நாடகம் அரங்கேற்றியது. பூஜைமன்றம் நாடக மேடையானது. உறவினர் ஒருவர் அதைத் தகர்த்தது. வீட்டிலே உடற்பயிற்சிசாலை தொடங்கியது. உறவினர் குழந்தை கையை முறித்துக் கொண்டது. நவகோபால் மித்ராவின் உடற்பயிற்சிக் கூடத்தில் சேர்ந்தது 34. சமைக்கக் கற்றுக்கொண்டது. எல்லாருக்கும் உணவளித்தது 35. படகோட்டிகளை வென்றது 36. தோழர்களுடன் யுத்தக் கப்பல் காணச் சென்றது. ஆங்கில அதிகாரியிடம் அனுமதி பெற்றது. வாயில்காப்பவனை ஏமாற்றிவிட்டுச் சென்றது 37. நவகோபால் மித்ராவின் உடற்பயிற்சி சாலையில் ஆங்கில மாலுமியின் தலையில் பளு விழுந்தது. கூட்டத்தினர் ஓடியது. ஆங்கில மாலுமிக்கு நரேன் சிகிச்சை செய்தது. அவன் குணமடைந்ததும் பணம் கொடுத்து அனுப்பியது 39. கட்டை வண்டியில் ராய்ப்பூருக்குச் செல்லுதல். இயற்கையில் ஒன்றித் தன் நினைவு இழத்தல் 44. சர்வகலாசாலை அநுமதிப் பரீட்சையில் முதல் வகுப்பில் தேறுதல். இருபத்துநான்கு மணி நேரத்தில் க்ஷேத்திர கணிதம் பயின்றது 45. கல்லூரியில் படித்தல். ஸ்ரீராமகிருஷ்

Koviloor Digital Library

ணரைப் பற்றிப் பேராசிரியர் ஹேஸ்டி கூறக் கேட்டல். 1881-ம் ஆண்டு 47. பி.ஏ. பரிட்சைக்கு முதல் நாள் நரேனின் உள்ளத்தில் எழுந்த விரு 48. ஒரு நாள் கல்லூரியில் ஆசிரியர் வாரதபோது பாடியது 58. பிரம்ம சமாஜத்தில் தீவிரமாக ஈடுபடுதல் 59. கடவுளை நேரில் கண்டதுண்டா ? என்று மகரிஷி தேவேந்திரநாத தாகூரை வினவுதல் 79. ஸ்ரீராமகிருஷ்ணரைச் சந்தித்தல் 83. கடவுளைக் கண்டதுண்டா ? என்று ஸ்ரீராமகிருஷ்ணரை வினவுதல் 100. ஸ்ரீராமகிருஷ்ணரைக் கடிந்துகொண்டது 117. ஸ்ரீராமகிருஷ்ணரின் படுக்கை அடியில் ஒரு நாணயத்தை வைத்துச் சோதித்தது 124. காரன் வாலிஸ் சதுக்கத்தில் இருந்த இரும்புக் கிராதிகளில் தலையை முட்டிக் கொண்டது 135. பரமஹம்ஸரிடம் போகக்கூடாது என்று நண்பர்கள் தடுத்தல் 140. வறுமையின் பிடியில் அகப்படுதல். நடந்தே கல்லூரிக்குப் போதல். பட்டினி கிடத்தல். வேலை தேடி அலைதல். 157. பவதாரிணி தரிசனம். குருமகராஜ் மகிழ்ச்சி 158. ஸ்ரீராமகிருஷ்ணரின் கரத்திலிருந்து புகை பிடித்தல் 177. நரேனின் ஐயம். பரமஹம்ஸர் விளக்கம் 176. பிரம்ம சமாஜத்திலிருந்து விலகல் 181. பரமஹம்ஸரையே ராதையாகக் காணல் 182. தியானம் செய்யும் போது தன்னைப்போல் இன்னுமொரு உருவங் காணல் 182. தமக்கு ஆவேசம் வரவில்லையே என்று வருந்தியபோது குருநாதர் கூறியது 183. நண்பர் வலை விச்சு. நிய வழியில் செலுத்தல். குருநாதர் தடுத்து ஆட்கொள்ளல் 187. குருமகராஜ் கண்ணீர் வடித்தல் 211. குருநாதர் கோப்பையில் துப்பியதை எடுத்து விழுங்குதல் 213. சிவராத்ரி உபவாசம். தியானத்தில் அமர்ந்தது. காளிக்கு ஏற்பட்ட அநுபவம் 203. துனி எனும் நெருப்பு மூட்டி வணங்கியது 222. தாரக், காளி, இவர்களுடன் புத்த கயா சென்று போதி மரத்தடியில் தவமிருந்தது. தியானம். உடம்பு எங்கே ? என்று கூவுதல், சமாதிநிலை 231. கிரீச பாபுவுடன் தியானத்தில் அமர்தல், கொசு உபத்திரவம். கம்பளிப் போர்வை போல நரேனின் உடம்பில் கொசு மொய்த்தல். அதை உணராது நரேன் தியானத்தில் இருத்தல் 233. குருநாதர் அவதாரமா ? என்பதுபற்றி ஐயம். எவன் ராமனுகவும் கிருஷ்ணனுகவும் இருந்தானே அவனே இந்த உடம்பில் இருக்கிறான் என்று குருநாதர் உறுதி கூறல் 242. சிஷ்யர்கள் வீடு திரும்பாதிருக்க நரேன் பட்ட பாடு 243. கல்கத்தாவுக்கும் தக்ஷிணேசுவரத்துக்கும் இடையே இருந்த வரநகரத்தில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்தல் 268. பிருந்தாவனம் போதல். தோட்டியிடம் புகை பிடித்தல்.

நடகிருஷ்ணு 275. சுவாமி விவேகானந்தரிடம் அன்பு கொண்டவர்.

நவகோபால் மித்ரா 33. இவரது உடற்பயிற்சி சாலையில்தான் நரேந்திரர் சிலம்பம், மல்யுத்தம், நீச்சல் முதலியன கற்றூர்.

நள்ளிரவில் குரல் 567.

நாகஸாகி 451.

நாராயணதாஸ் 352. ராஜஸ்தானத்தின் தலைசிறந்த வியாகரண பண்டிதர்.

நித்யானந்தா சின்ஹா 302. பகல்பூரில் வசித்தவர். சுவாமி விவேகானந்தரிடம் ஈடுபட்டவர். இவர் வீட்டில் சுவாமிஜி தங்கினூர்.

நிமாயிசரண போஸ் 135. புகழ் பெற்ற வழக்கறிஞர்—இவரிடம் பயிற்சி பெறுவதற்காக நரேனை அனுப்பினூர் விசுவநாத தத்தர்.

நிவேதிதை 582. குமாரி மார்கரெட் நோபில்.

நைனிதால் 308.

பகல்பூர் 306.

பஞ்சவடி 164. தக்ஷிணேசுவரத்துத் தோப்பில் ஒரு பகுதி.

பகுத்தறிவு 97. மாடிப்படிக்கட்டைப் போல மேலிடத்திற்குச் செல்லும் உபாயம்.

பண்டித சசிதர தர்க்க சூடாமணி 211. தர்க்கத்தில் நன்கு தேர்ந்தவர். ஸ்ரீராமகிருஷ்ணரிடம் அன்பு கொண்டவர்.

பண்டித சம்புநாதஜி 329.

பண்டித ஆனந்த நாராயணர் 314. வக்கீல்—காச்மீரப் பிராம்மணர்—மீரட்டில் அகண்டானந்தருக்கு இடமளித்தவர்.

பண்டிட் ஸிராஜ் நாராயணர் 346.

பத்ரிதத் ஜோஷி 311. கார்வால் வட்டத்து அமீன். சுவாமிஜிக்கும்

Koviloor Digital Library

அகண்டானந்தருக்கும் நோய்க்குச் சிகிச்சை செய்தவர்.
பயில்வான் சுவாமி 427.
பரமஹம்ஸர் 123. நரேந்திரரைத் தொட்டு அத்வைத நிலையில் ஆழ்த்தியது.
பரமஹம்ஸர் 117. நரேந்திரரின் தேகத்தைப் பரீட்சை செய்து கூறியது. இன்னும் பலசோதனைகள்.
பரமஹம்ஸர் 231. நரேன் மற்றவர்களுக்கு உபதேசிப்பான் என்று காகிதத்தில் எழுதியது.
பலராம் பாபு 698.
பலராம் போஸ் 298. ஸ்ரீராமகிருஷ்ணரிடம் பேரன்பு கொண்டவர். மரித்தல்.
பவஹாரி பாபா 287. காஸிப்பூரில் வசித்த சாது. இவர்பால் சுவாமி விவேகானந்தர் பெரிதும் ஈடுபட்டார்.
பள்ளி ஆசிரியர் 312. மீண்டும் ஹிந்துவாதல்.

பாடேயின் வீட்டில் 376, 377. இன் ஜினியருடன் விவாதம்.
பாபு காளிசரண் சட்டர்ஜி 431.
பாபு பிரமததாஸ் மித்ரா 282.
பாபு ரகுநாத பட்டாசாரியா 313. தேரி ராஜ்ய திவான்.
பாபு ராமின் அன்னை 246. அந்தப் பூருக்கு வருமாறு இளந்துறவிகளை அழைத்தல்.
பாபு ராஜ நாராயண போஸ் 306. பிரம்மசமாஜப் பெரியார்.
பாபு மதுரநாத சின்ஹா 302. வழக்கறிஞர்—சுவாமி விவேகானந்தரிடம் ஈடுபட்டவர்.
பாபு மதுசூதன் சட்டர்ஜி 431.
பாபு சதீஷ் சந்திர முகர்ஜி 288. காஸிப்பூரில் இவருடன் தங்கினுர் சுவாமி விவேகானந்தர்.
பாபு ஹரிதாஸ் விஹர்தாஸ் 357. ஜுனகாத் திவான்.
பாஸ்கரானந்தர் 264.

பிரதாப சந்திர மஜும்தார் 470.
பிரதாப சந்திர ஹஸ்ரா 108.
பிரமததாஸ் மித்ரா 266. சம்ஸ்கிருத பண்டிதர். காசியில் வாழ்ந்தவர். இவரிடம் தமது சந்தேகங்களை நீக்கிக்கொண்டார் சுவாமி விவேகானந்தர்.
பிரமததாஸர் 307.
பிரம்மசமாஜம் 56.

புத்தர் 225. நரேந்திரர் தந்த விளக்கம்.
புத்தர் 224. ஸ்ரீராமகிருஷ்ணரது விளக்கம்.
புலால் உணவு 397. சுவாமிஜியும் பேராசிரியர் சுந்தரராம ஐயரும்.
புவனேசுவரி 8. விசுவநாத தத்தரின் மனைவி; விவேகானந்தரின் தாய்; பண்டைய மரபுகளைப் பின்பற்றிய மாதரசி; ஆண்டவனிடம் அளவற்ற பக்தி பூண்டவள்; மனிதாபிமானம் மிக்கவள்; ஏழைகளின் புகலிடம், ராமாயண பாரதப் பாடல்களைப் பாடியவாறே சமையலில் ஈடுபடுவாள்.
புவனேசுவரியின் கனவு 10. தவநிலையில் பரமேசுவரனைக் கண்டாள். சிவம் சிசுவாதல். புவனேசுவரி அதை வாரியணைத்தல், துயில் நீங்குதல்.
புவனேசுவரி தேவி வரம் வேண்டுதல் 10. காசி சென்று விசுவேசுவரனுகிய விரேசுவர சிவனுக்கு கங்காஸ்நானம் செய்வித்தல்.
புவனேசுவரி 142. கடவுள்மீது சீற்றம். நரேந்திரரின் மாற்றம்.

பூர்ணனந்தர் 311.

பெவின்சுவர் 443. சுவாமிஜி அமெரிக்காவுக்குச் சென்ற கப்பல்.
பென்னிங்டன் 295. காஸிப்பூர் மாவட்ட நீதிபதி. சுவாமி விவேகானந்தர் இங்கிலாந்து செல்லவேண்டும் என்று கூறியவர்.

பேராசிரியர் ரைட் 463.
பேராசிரியர் ரைட் 461. ஹார்வர்ட் சர்வகலாசாலையில் கிரேக்க மொழிப் பேராசிரியர்.
பேராசிரியர் ஜி.எஸ். பாடே 375.
பேராசிரியர் சுந்தராம ஐயர் 392.

பைரவிப் பெருமாள் பிள்ளை 397. சோதிக்க வந்ததும்சரணடைந்ததும்.
பைரவிப் பிராம்மணி 70. சந்நியாசினி. தந்திர சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்றவள். ஸ்ரீராமகிருஷ்ணருக்கு தந்திர மார்க்கத்தை உபதேசித்த குரு.

பொஹிமியன் 132. உல்லாஸ புருஷன்.

போர்பந்தர் 363.
போதி விருட்சத்தடியில் 308.

மங்கள சிங்ஜி 330. ஆல்வார் சமஸ்தான மன்னர்.

Koviloor Digital Library

மணிபாய் 369. பரோடா மஹாராஜாவுக்கு மந்திரியாக இருந்தவர். மதுகரி பிக்ஷை 312.
மதுரநாத விசுவாஸர் 68. ஸ்ரீராமகிருஷ்ணரைச் சோதித்து அறிதல்.
மன்மதநாத சௌத்ரி 302. பிரம்ம சமாஜி—பகல்பூரில் இவரது இல்லத்தில் தங்கினர் சுவாமி விவேகானந்தர். மன்மதநாதர் சுவாமிஜி சகல கலா வல்லபர் என்பதைக் கண்டு கொண்டது.
மன்மதரைக் கவர்ந்த கருத்து 305.
மன்மதநாத பட்டாசாரியா 397.
மஹேந்திரலால் சர்க்கார் 194. நரேந்திரர் மீது அன்பு கொண்டவர்.

மாதவசந்திர பானர்ஜி 370. காண்ட்வாயில் சிவில் ஜட்ஜாக இருந்தவர்.

மிஸ் கேட் 459. அமெரிக்காவில் முதன் முதலாக சுவாமிஜியை ஏற்று ஆதரித்த ஆசிரியை.
மிஸ் டட்சர் 564. சுவாமிஜியின் அமெரிக்க சிஷ்யை.

முன்ஷி ஜகன்மோகன்லால் 349.
முல்ஜோரி 314.

மெட்காஃப் மாதர் மன்றம் 461. அமெரிக்காவில் முதன்முதலாக சுவாமி ஜி பேசிய இடம் இது.

மேரி கிறிஸ்டைன் 571.
மேஜர் ராமச்சந்திரஜி 330. ஆல்வார் சமஸ்தான திவான். மௌல்வி சாகிபின் ஆசை 329.

ராகால் சந்திர கோஷ் 113. பிரும்மானந்தர். ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் முதல் தலைவர்.
ராம குமார் 63. கதாதரின் சகோதரர்.
ராமகிருஷ்ணானந்தர் 256. வரநகர மடத்தின் அன்னை எனத் தக்கவர். ராமபிரசன்ன பட்டாசார்யா 308. ராமதாஸ் சபில்தாஸ் 372. பம்பாயில் பிரபல வழக்கறிஞர்.
ராமமோகன தத்தர்—வழக்கறிஞர். இவரது கொள்பேரரே சுவாமி விவேகானந்தர்.
ராமஸ்வாமி சாஸ்திரிகள் 400. சுவாமிஜியிடம் குமார சம்பவம் கற்றது.
ராமாபாய் 459. கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய இந்து பெண்மணி. ராமாபாய் வட்டம் 542.
ராணி ராஸமணி 63. தக்ஷிணேசுவரத்தில் காளி கோவில் எடுத்த சீமாட்டி.
ராதாகிருஷ்ண சரிதம் 114. நரேன் கருத்து. பரமஹம்ஸர் கூறிய சமாதானம்.
ராய் பசுபதிநாத போஸ் 295.
ராஸ் 295.
ராஜம் அய்யர் 426.
ராஜராம் மோகன் ராய் 57.

லயன் தம்பதிகள் 492. சிகாகோவில் சுவாமிஜியை விருந்தினராக ஏற்று உபசரித்தவர்கள்.

லாலா பத்ரிஷா 310. அல்மோராவில் சுவாமிஜியை விருந்தினராக ஏற்றவர்.

லியன் லான்ஸ்பெர்க் 552. கிருபானந்த சுவாமிகள்.

வரநகர வீடு 243. பேயுலவும் பங்களா—ஜனசஞ்சாரமற்ற இடம். மிகவும் பழைய கட்டடம், காலி வீடு—பாம்பு, பல்லி, எலி, பெருச்சாளி எல்லாம் வாசம்.
வரநகர வாழ்க்கை 252. விவேகானந்தர் வருணனை.
வரநகர நாட்கள் 253. சுவாமி சதானந்தர் கூறுவது.

விசுவநாதன் 2. துர்காசரணரின் பிள்ளை. விவேகானந்தரின் தந்தை. மூன்று வயதாயிருந்த பொழுது கங்கை வெள்ளத்தில் விழுந்துவிட்ட இக்குழந்தை காப்பாற்றப்பட்டது. கல்லத்தாவிலிருந்து காசிக்குப் படகில் சென்றபோது நடந்த சம்பவம் இது.
விசுவநாதனின் தாய் 3. காசியில் விசுவநாதர் கோயிலுக்குச் சென்று கொண்டிருந்தபோது சாலையில் தடுக்கி விழுந்து மயங்கினள்—துர்க்காசானர் தூக்கினர். மயக்கம் தெளிவித்தார்—பிறகு சென்று விட்டார்.
விசுவநாத தத்தர் 5. வழக்கறிஞராதல்—செல்வம் சேர்த்தல்—அவரது ஈகை.
விசுவநாத தத்தர் 22. நரேன் அடங்கி நடப்பதற்கு விசுவநாதர் கையாண்ட உபாயம் நரேன் தனது தாயிடம் நாறுமாறுகப் பேசியது. நரேனின் அறைக் கதவின்மீது தந்தையார் எழுதிவைத்தது.
விசுவநாதர் தந்தை 138. மாரடைப்பால் இறந்துவிடுதல்.

Koviloor Digital Library

விசுவநாதரின் கொள்கை 6. இந்த உலக வாழ்க்கையை ரம்யமாக நடத்த வேண்டும்; நியநெறியில் செல்லாது உலகில் இன்பமாக வாழவேண்டும்.
விசுவநாதரும் இசையும் 6. இனிய சாரீரம். நன்ருகப் பாடுவார். ஒருவருக்கும் தீங்கு செய்யாமல் இன்பம் அனுபவிப்பது இசைவழியே என்று அறிந்திருந்தார்.
விசுவநாதரும் சமையலும் 7. சமையல் கலையில் தேர்ந்தவர்—பல அபூர்வ உணவு வகைகளைத் தயாரித்து நண்பர்களுடன் உண்பதில் பிரியம்.
விவேகானந்தரின் ஆரம்பக்கல்வி 14. அன்னை புவனேசுவரி அளித்த ராமாயண மஹாபாரதப் பாடல்களே.
விவேகானந்த சுவாமிகள் 1.
வியாசராவ் 428. சுவாமிஜிபற்றி எழுதியுள்ளது.
விரஜேன் பாபு 275. சுவாமி விவேகானந்தரின் பால்ய நண்பர்.
விவிதிசானந்தர் 321.
விஜயகிருஷ்ண கோஸ்வாமி 196. பிரம்மசமாஜ முக்கியஸ்தர்.
விரேசுவரன் 12. சுவாமி விவேகானந்தருக்கு புவனேசுவரி பூட்டிய குழந்தைத் திருநாமம்.

வாமாசாரம் 180. சாக்கடை வழியாக வீட்டுக்கு வருதல்—ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் விளக்கம்.

வேணி குப்தா 48. நரேந்திரருக்கு சங்கீதம் கற்பித்தவர்.

வைகுண்டநாதர் 310.
வைகுண்டநாத ஸான்யால் 104. நரேந்திரரைக் காணுமல் ஸ்ரீராமகிருஷ்ணர் வெதும்பியது பற்றிக் கூறுதல்.
வைத்தியநாதம் 306.

ஹரிதாஸ் சாட்டர்ஜி 370. காண்ட்வாவில் ஒரு வக்கீல்.
ஹரிபாத மித்ரா 377. பெல்காமில் வன இலாகா அதிகாரியாயிருந்தவர்.
ஹரிபாத மித்ரா 379. சுவாமிஜி பற்றிய கருத்து.
ஹரிபாதர் வியப்பு 378, 379.
ஹரிபாதர் உபதேசம் பெற்றது 386.

ஹாங்காங் பற்றிய வர்ணனை 450.
ஹிருஷீகேசம் 314, 315.

ஹேமசந்திர ஸேன் 322.

ஹேல் ஸ்ரீமதி 466, 467. சிகாகோவில் சுவாமிஜியை ஆதரித்தவர்.

ஜயப்பூர் 344.
ஜயராம்பாடி 69. சாரதாதேவியின் அவதார ஸ்தலம்.
ஜப்பான் 451.
ஜப்பானியர் கோயில் 452.
ஜப்பானில் தீப்பெட்டி தொழிற்சாலை 452.

ஜானகிவர சரணர் 307. காசி மஹந்து—சமஸ்கிருத பாரசிக பண்டிதர்.

ஸரடோகாஸ் பிரிங்ஸ் 465.
ஸரகுர்ஷித்ஜா 432.
ஸஹரன்பூர் 314.
ஸர்ஜான்லுப்பக் 318.

ஸாரா பெர்ன்ஹார்ட் 561.

ஸிலேம் கிளப் 583.

ஸுப்ரமணிய அய்யர் 426.

ஸேலம் 463.
ஸேத் மோதிலால் 433.

ஸ்ரீகிருஷ்ண ஜோஷி 310. சிரஸ்ததார்—அல்மோராவில் சுவாமிஜியுடன் சம்பாஷித்தவர்.
ஸ்ரீநகர் 312.
ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் 1.
ஸ்ரீராமகிருஷ்ணர் 100. நரேந்திரரைப் புகழ்தல்.
ஸ்ரீராமகிருஷ்ணர் 87. நரேந்திரனுடைய உடலில் தமது வலது பாதத்தைப் பதித்தல்.
ஸ்ரீராமகிருஷ்ணர் 82. நரேனைக் கண்டு உளம் மகிழ்தல். இனிய தின்பண்டங்கள் வழங்குதல்.
ஸ்ரீராமகிருஷ்ணர் 104. நரேந்திரரைக் காணுமையால் துன்புற்று வருந்தியது.
ஸ்ரீராமகிருஷ்ணர் 106. ஸ்ரீராமகிருஷ்ணர் நரேனைக் காணவேண்டி பிரம்மசமாஜம் போதல்.
ஸ்ரீராமகிருஷ்ணர் 109. நரேனைத் தேடி அவர் வீட்டுக்குப் போதல்.
ஸ்ரீ ராமகிருஷ்ணர் 137. பிரம்மசரியம் பற்றி நரேனுக்கு உபதேசித்தல். பாட்டியின் பயம், புவனேசுவரியின் பயம், விவாக ஏற்பாடு, விவாகப் பேச்சு முறிதல்.
ஸ்ரீராமகிருஷ்ணர் 171. குருநாதர்

Koviloor Digital Library

உபதேசம்—பணிபுரிதல், நரேந்திரர் விளக்கம்.
ஸ்ரீராமகிருஷ்ணர் 191. நோய்வாய்ப் படுதல். நரேந்திரர் அச்சம்.
ஸ்ரீராமகிருஷ்ணர் 152. அம்பிகை யிடம் பிரார்த்திக்குமாறு நரேனுக் குக் கூறுதல்.
ஸ்ரீராமகிருஷ்ணர் 292. சுவாமி விவேகானந்தர் பவஹாரி பாபா விடம் ஈடுபட்டபோது அவர்முன் ஸ்ரீராமகிருஷ்ணரின் உருவம் தோன்றுதல்.
ஸ்ரீராமகிருஷ்ணர் 194. குருமஹா ராஜ்பற்றிய நரேந்திரர் கருத்து.
ஸ்ரீராமகிருஷ்ணர் 220. அவதாரம் என்பதை நரேந்திரர் ஏற்றுக் கொண்டது.
ஸ்ரீராமகிருஷ்ணர் 219. துறவுபற்றி நரேனுக்கு விளக்கியது.
ஸ்ரீராமகிருஷ்ணர் 209. தம் அடியார் களையெல்லாம் நரேன் மேற் பார்வையில் ஒப்படைத்தது.
ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் 204. ஸ்ரீராம மந்திரத்தை நரேந்திரருக்கு உபதேசித்தல்.
ஸ்ரீராமகிருஷ்ணர் 20. சிஷ்யர்களை பிக்ஷை எடுத்து வரச்செய்தது.
ஸ்ரீராமகிருஷ்ணர் 238. மறைந்த ஒருவாரத்திற்குப் பின் ஓர் இரவில் நரேன் கண்ட காட்சி.
ஸ்ரீராமகிருஷ்ணர் 236. முக்தியடை தல்.

KOVILOOR ANDAVAR
A. No. 43256
LIBRARY, KOVILOOR